உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானசுவாமிபாடல்.

இது

சில வித்வான்களைக்கொண்டு எழுதிவித்த

உரையுடன்.



சென்னை, இட்டா

சக்கரபாணி நாயுடு அன் பிரதர்ஸ்

அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1923.

Registered Copy Right.

இதன் விலை ரூபாய் 3-4-0.

1-முதல் 64-பாரங்கள்வரை சென்னை ஸன் ஆப் இந்தியா பிரஸிலும், மற்றைய பாரங்கள் மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸிலும் பதிப்பிக்கப் பெற்றன.

1 5 4

இப்புத்தகமும் இன்னும் இதரபுத்தகங்களும் மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரிகளும், இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனரிடமும், சென்னை இட்டா சக்கரபாணி நாயுடு அன் பிரதர்ஸ் இடமும் சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

கடவுள் துணை.

தாயுமானசுவாமிகளது

சரித்திரம்.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே, தென்னாடுகள் பலவற்றினுஞ்சிறந்து நிலவிய சோழமண்டலத்திலே, வேதாரணியமென்னும் வடமொழிப் பெயரையுடைய திருமறைக் காடாகிய சிவஸ்தலத்திலே, சற்றேறக்குறை-200-வருஷங்களுக்கு முன் வேளாண் குலத்திலே, குருலிங்க சங்கமபத்தியிலே சிறந்த வராய், கேடிலியப்பிள்ளையென்பவர் ஒருவர் இருந்தார். அவராலே அந்தச சிவஸ்தலவிசாரணை நடத்தப்பட்டுவந்தது. அக்காலத்திலே திருச்சிராபுரத்திலே செங்கோல் நடாத்திய விஜயரகுநாத சொக்கலிங்க நாயகர் என்பவர் கேடிலியப்பப்பிள்ளையுடைய நற்குணங்களையும் கணக்குவல்லமையையும் கேள்விப்பட்டு, அவரைவரவழைத்துப் பரிக்ஷித்து அவருக்குத் தமதரண்மனையில் பெரிய சம்பிரதியுத்தியோகம் கொடுத்தனர். அக்கேடிலியப்பப் பிள்ளையானவர் சந்ததியில்லாதவராயிருந்த தமையனாருக்குத் தம்முடைய ஒரே புத்திரனாகிய சிவசிதம்பரப் பிள்ளையென்னும் குமாரனைக் கொடுத்து விட்டிருந்தபடியால் தமக்குச சந்ததியுண்டாக அருள்செய்யும் படிக்கு அந்தத்திருச்சிராபுரத்தில் எழுந்தருளியிராநின்ற தாயுமானேசுவரரைத் தெரிசித்துக்கொண்டு வந்தனர். அக்கடவுளின் திருவருளினாலே ஓராண் பிள்ளை பிறந்தது. அதுகண்டு தந்தை மகிழ்ந்து, அக்கடவுளுக்குக் காணிக்கை முதலானவைசெலுத்தி, குமாரனுக்குத் தாயுமானவர் என்கின்ற அக்கடவுளது திருநாமத்தையே கொடுத்தனர். அந்தத் தாயுமானவர் தம் தகப்பன் மிகவும் மகிழும்வண்ணம் அவர்செய்யு முயற்சியளவிற்கு அதிகமாகக் கீர்வாணம் தமிழ், முதலிய கல்விப்பயிற்சியிலே சிறந்தவரானார். உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் இவை முதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுகூடவே வளர்ந்தன. ஓர் அஞ்ஞானியினது மனமானது நிலையில்லாத செல்வப்பொருளை எப்படி விரும்புமோ அப்படியே இவரது மனமானது தத்துவப்பொருளையே விரும்பினதது, அப்படியிருக்கையில் திருமூலநாயனார் மரபிலே எழுந்தருளிய மௌனதேசிகர் தாயுமானவரைச் சந்தித்து; அவரது அதி தீவிரபக்குவத்தைக் கண்டு, சிவதாகமங்களின் முடிவான தத்துவப்பொருளை உபதேசித்தருளினார். அது முதலாகத் தாயுமானவர் தமது ஞானாசாரியரிடத்தே பிருந்த பத்தியுடையவராய் அவ்வுபதேசப் பொருளைச் சிந்திதது தெளிந்து

தினந்தோறும் தக்ஷிணமூர்த்தி சந்நிதியிலே நிஷ்டைசெய்துகொண்டு வந்தனர். சிலகாலஞ் சென்ற பின்பு கேடிலியப்பப்பிள்ளை தேக விசேஷமடைந்தார். அதனாலே தாயுமானவர் தந்தையினது லௌகிகத் தொழிலை மாபடார்ந்த அதில் விருப்பமில்லாதவராக இருந்தும் அரச னது வேலையை மனமாலை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. அரசன் அவரை நாளொன்று முதலிலே யறிந்திலனாயினும் கேடிலியப்பப் பிள்ளையினும் இவர் யோக்கியரென்று நன்குமதித்து மிகவுஞ் சிறப்புச செய்து வைத்திருந்தனன். ஆயினும் கழைக்கூத்தனுடையகருத்து உடற் காப்பிலும் அவனது செய்கை கூத்திலும் எப்படி வைக்கப் பட்டிருக் குமோ அப்படியே தாயுமானவரது கருத்துசிவத்திலும் அவரது செய்கை லௌகிகத்திலும் வைக்கப்பட்டிருந்தன. இப்படியே சிலநாட்கள் கழிந் தன. மேல் விவேகியாகிய அரசன் அவரிடத்தே விளங்கிய அபூர்வமான சில செய்கைகளைக் கண்டு உடனே அச்சமும் அன்பும் உடையவனாய், அவரை அழைப்பித்து உயர்ந்ததோர் ஆசனத்தின்மேல் இருந்தருளச் செய்து, "சுவாமீ! அடியேன் இதுவரையினும் உமது மகிமையைக் கண் டறிய மாட்டாதவனாய் உமக்கு ஊழியம் செய்யத் தக்கவனாகிய நான் உம்மை ஒன்றுக்கும் பற்றாத எனது ஊழியத்திலே வைத்திருந்த பெருங் குற்றத்தைக் கிருபாமூர்த்தியாகிய தேவரீர் பொறுத்தருளி, இன்று முத லாக அடியேனால் ஆகவேண்டியவற்றைசெய்வித்துக்கொண்டு நிஷ்டைக் குக்குறைவுபடாமலிருந்தருளலாம்" என்று வேண்டிக்கொண்டனன். அது கேட்டுத் திருவுளமகிழ்ந்து தாயுமானவர் அன்றுமுதலாக அலைவற்றஞான யோகத்திலே அறிவைசெலுத்திச சிவபெருமானையும் ஞானசிரியரையும் அற்புத சின்மய மதுரமான தமிழ்ச செம்பாடல்களாற் பாடித் துதிசெய்து வந்தனர். இப்படி யிருக்கையில் அரசன் சிவபதமடைந்தனன். அவ்வர சன் மனைவி தாயுமானவரது திருமேனியின் பொலிவைப்பலரால் பல முறை கேள்விப்பட்டு, அவரை அழைப்பித்துக் கண்களிகூரநோக்கி, கேள்விப்பட்ட வளவினும் அதிகமாய் விளங்கக் கண்டு உளமருண்டு, அவரைத் தன்னரசாட்சிக்குத் தலைவராக்கவும், தன்னுள் விரும்பப்பட்ட தகாசசெய்கைக்கு உடன்படுத்தவும், தான்கொண்டகருத்தை அவருக்குக் குறிப்பித்தாள். அக்கருத்தை யறிந்த தாயுமானவர் உடனே ஒருபாய வழியினாலே அங்கிருந்து தம்மைவிடுவித்துக்கொண்டு, அவள் அரசாட்சியி னெல்லையைக் கடந்து, இராமநாதபுரத்துக் கெழுந்தருளினர். இது செய்தி சிவசிதம்பரப் பிள்ளையின் செவியை அடைந்தவுடனே அவரு தன் சிறியதாய் குமாரராகிய அருணாசலப்பிள்ளையும் தேடிக்கண்டு பிடி, துச் சந்ததி விளங்கவேண்டுமென்னும் கருத்துக்கொண்டு திருக்கலியா ணஞ் செய்யும்படி முயற்சி செய்தார்கள். தாயுமான சுவாமிகளுக்கு அத காரியத்திலே சிறிதும் திருவுளமில்லாதிருந்தும் சமையநாதர் வேண்டு, வின் மிகுதியினாலே உடன்பட்டனர். உடனே பத்தினியார் ஓராண்பி ளையைப்பெற்றுவைத்தசு சிவபதம் அடைந்தார். அந்தப்பிள்ளைக்குக் கண-

சபாபதிப்பிள்ளையென்று பெயரிடப்பட்டது. அது முதலாகத் தாயுமான சுவாமிகள் கௌபீனததோடு பரிசுத்த சிவஸ்தலந்தோறும் சஞ்சரித்துக் கொண்டு, இவ்வுலகத்திலுள்ளமனிதாகனெல்லாம் மெய்ஞ்ஞான ஒளியைப் பெற்று அஞ்ஞான விருளினின்று நீங்கி உய்யும்பொருட்டுப் பலவகைப் பட்ட அற்புதமானபாடல்களைத் திருவாய்மலர்ந்தருளினர். அருளையரென் பவரும் அவரிடத்தே தத்துவோபதேசம் பெற்று அவரைவிட்டு நீங்காமல் பணிவிடை செய்துக்கொண்டு வந்தனர்.

தாயுமான சுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமா கிய சிவத்திலே கலந்தபின்பு அருளைய சுவாமிகள் அகவற்பாவினுலே குரு வைத் துதித்துச சிவயோகத்திலே யிருந்து தமகருப்பின் பக்குவப்பட்டு வரும் அடியார்களுக்கு அனுகிரகஞ் செய்யம்விதம மேற்படி கனகசபாப திப் பிள்ளைக்கு அபிஷேகம் செய்தருளினர்.

இக்குரு பரம்பரையில் தஞ்சைமாநகரத்துக்குக் கீழ்பால் அன்னப்பன் பேட்டையிலுள்ள மடத்திலிருந்த அம்பலவாண சுவாமிகளுடைய அடி யார்கூட்டத்திலே ஒருவராகியும் அந்தஸ்தானத்துக்கு உரியவராகியும் உள்ள எடுத்துக்காட்டி அருணசலசுவாமிகளிடத்திலிருந்த ஞானபுஸ்தகத்தையும் மற்றும் சில புஸ்தகங்களையும்அழைப்பித்து ஒப்பிட்டு இப்புத்தகத்திலுள்ள பாடல்கள் ஆதியில் அசரிடப்பட்டனவாய்த் தெரியவருகின்றது.

தாயுமானசுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

நூலினுட்பிரிவு

பதிகம்.	பக்கம்.	பதிகம்	பக்கம்.
திருவருள்விலாசப்பரசிவ வணக்கம்	1	கற்புறுசிந்தை	417
பரிபூரணானந்தம்	6	மலைவளர்காதலி	420
பொருளவணக்கம்	21	அகிலாண்டநாயகி	431
சின்மயானந்தகுரு	31	பெரியநாயகி	433
மௌனகுருவணக்கம்	48	தருணதாய்	434
கருணாகரக்கடவுள்	64	பெற்றவட்கே	436
சித்தர்க்கணம்	80	கல்லாலின்	440
ஆனந்தமானபரம்	94	பராபரக்கண்ணி	450
சுகவாரி	106	பைங்கிளிக்கண்ணி	509
எவருமிறைஞ்சின்றபொருள்	121	எக்காட்கண்ணி.	
சசிதாநந்தசிவம்	134	தெய்வவணக்கம்	518
தேசோமயானந்தம்	148	குருமாபின்வணக்கம்	520
சிற்சுகோதயவிலாசம்	161	அடியார்வணக்கம	523
ஆகாரபுவனம்	175	யாக்கையைப்பழித்தல்	525
தேன்முகம்	201	மாதரைப்பழித்தல்	527
பன்மாலை	210	தத்துவமுறைமை	529
நினைவொன்று	219	தன்னுண்மை	534
பொன்னேமாதரை	226	அருளியல்பு	535
ஆரணம்	258	பொருளியல்பு	537
சொல்லற்கரிய	266	ஆனந்தவியல்பு	540
வம்பனேன்	272	அன்புநிலைமை	542
சிவன்செயல்	279	அன்பர்செறி	545
தன்னையொருவர்	285	அறிஞருரை	547
ஆசையெனும்	292	நிற்குநிலை	549
எனக்கெனசெயல்	320	நிலைபிரிந்தோர்கூடுதற்குபாயம்	553
மண்டலத்தின்	334	காண்பேனெவென்கண்ணி	556
பாயப்புலி	340	ஆகாதோவென்கண்ணி	562
உடல்பொய்யுறவு	369	இல்லையோவென்கண்ணி	565
ஏசற்றவந்நிலை	403	வேண்டாவோவென்கண்ணி	566
காடுகரையும்	407	கல்லறிவேயென்கண்ணி	56
எடுத்ததேகம்	409	பலவகைக்கண்ணி	568
முகமெலாம	411	நின்றநிலை	572
திடமுறவே	411	பாடுகின்றபனுவல்	57
தன்னை	416	ஆனந்தக்களிப்பு	57
ஆக்குறவு	416	அகவல்	58
		வண்ணம்	58

சிவமயம்

தாயுமானசுவாமிகள்

திருப்பாடலகராதி.

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அ					
அகண்ட	243	அத்தனே	240	அருள்பழு	180
அகத்தூ	187	அத்தனேச	342	அருள்வடி	316
அகமேவு	509	அத்தாகின்	562	அல்லலாக்	207
அகரவு	30	அததாவி	560	அல்லலெல்	501
அகுகமே	484	அத்துவா	545	அல்லும்பக	385
அங்கிங்	1	அத்துவிதமா	496	அல்லும்பக	566
அங்குமிங்	567	அத்துவிதவ	5	அல்லும்பக	466
அங்கை	31	அத்துவிதம்	300	அல்லும்பக	362
அஞ்சலஞ்	471	அத்துவித்வ	337	அவனன்றி	121
அஞ்சுமுக	519	அத்துவித	554	அவனே	394
அஞ்செழு	555	அந்தகனு	532	அவ்வுயிர்	555
அடக்கிப்புல	575	அந்தகாரத்	15	அழுககாற்	497
அடிகளடி	531	அந்தக்கர	534	அழுக்கார்ந்த	357
அடிமுடிகா	539	அந்தக்கர	467	அளியுங்கனி	367
அடிமுடியு	224	அந்தக்கர	491	அள்ளக்குறை	566
அடியெனு	263	அந்தமுட	509	அறிந்தவறி	400
அடித்தவி	486	அந்தணர	209	அறியாதறி	552
அடையார்	367	அந்தரத்	543	அறியாதவெ	355
அண்டபகி	11	அந்தோவீத	183	அறியாநா	477
அண்டபகி	500	அப்பனென்	495	அறியாமைசா	378
அண்டபகி	561	அப்பாவென்	455	அறியாமையீ	507
அண்டபிண்	494	அப்புமுப்பு	475	அறியாமைமே	371
அண்டம	470	அப்பொருளு	375	அறியாயோ	383
அண்டமுடி	118	அம்மாவீ	449	அறியாவறி	548
அண்டமுமா	302	அரசேகின்	435	அறியுக்தர	287
அண்டரண்ட	541	அருமறையின்	27	அறிவாகி	189
அண்டரண்ட	573	அருமபொ	114	அறிவாரு	581
அண்டருக்கு	38	அருவுருவ	539	அறிவிப்பா	490
அண்டனே	567	அருவென்பன	585	அறிவினறி	382
அண்ணலே	242	அருளாகி	491	அறிவிற்	267
அதுவென்ரு	192	அருளாலெ	245	அறிவையறி	548
அதுவென்று	237	அருளெலா	245	அறிவோட	549
அத்தனென்	573	அருளோடியா	406	அற்பமன	374

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அற்றவர்	547	ஆடுங்கறங்கு	368	ஆலம்படை	357
அனந்தபத	176	ஆடுவதும்	414	ஆவாவென்ற	437
அனேத்து	465	ஆணவத்தை	538	ஆவிக்குளாவி	510
அன்பருக்	576	ஆணவத்தோ	553	ஆவித்துணை	570
அன்பரெல்	491	ஆணிலே	88	ஆவியேயுனை	227
அன்பர்பணி	476	ஆண்டநின்	500	ஆழாழிகரை	18
அன்பாற்	467	ஆண்டான்	553	ஆழாழியென்	529
அன்பின்	108	ஆதிகால	491	ஆழித்தரும்	457
அன்பைப்	453	ஆதிக்க	56	ஆழ்ந்தா	488
அன்றந்த	495	ஆதிப்பி	563	ஆழ்த்துனினை	526
அன்றுநால்	284	ஆதியந்தநீ	489	ஆறுனகண்	510
அன்றுமுத	197	ஆதியந்தம்	535	ஆறுசமய	519
அன்றெனைச	255	ஆதியநதம்	30	ஆறுளொன்	522
அன்றென்று	582	ஆதியந்தம்	519	ஆறுதலிலங்	345
அன்றேவா	440	ஆதியந்தமி	548	ஆற்றப்படா	478
அன்னேய	122	ஆதியந்தமி	541	ஆனந்தங்கதி	249
அன்னேயப்	236	ஆதியந்தமெ	178	ஆனந்தமான	484
அன்னேயிலா	461	ஆதியுறதி	574	ஆனந்தமோ	598
		ஆதியாய்நடு	281	ஆனபுற	531
ஆ		ஆதியாம்வா	564	ஆனமான	237
ஆகத்தை	517	ஆத்திரம்வந்	369	ஆனலும்	443
ஆகார	175	ஆயிரஞ்சொ	482	இ	
ஆகியசற்	186	ஆயுங்கலே	361		
ஆக்கியளி	579	ஆயுமறி	193	இகபரமு	24
ஆக்குவை	416	ஆரணங்	374	இகமுழுது	373
ஆக்கை	33	ஆரணமாக	352	இக்காயம்	491
ஆங்காரம	464	ஆரணமார்க்	258	இங்கற்றபடி	78
ஆங்காரமா	61	ஆரணமு	589	இடத்தைக்	311
ஆங்காரமெ	531	ஆரறிவா	451	இடமொரு	259
ஆங்கென்று	579	ஆராமைகண்	412	இடம்பெறு	348
ஆசனமூர்த்த	555	ஆராயும்	9	இடம்பொரு	221
ஆசைகோ	19	ஆரார்ென	155	இடங்கான	397
ஆசைசுழ	563	ஆராரு	550	இடைத்திடை	280
ஆசையுன்	489	ஆராவமி	291	இத்தரா	459
ஆசைநிகள	48	ஆராவமுத	572	இத்தரிரு	394
ஆசையெனு	292	ஆராவமுதெ	850	இத்தவெளி	493
ஆடலேயே	552	ஆராவமுதே	451	இத்திர	26
ஆடாமலோய்	152	ஆரிருந்தென்	470	இப்பிறவி	149
ஆடியோய்	484	ஆருடனே	547	இம்மாநில	551
ஆடுகழங்கா	559	ஆருமறி	510	இமையள	138

பாட்டு	பக்கம்
இயல்பென்ற	183
இரக்கமொடு	450
இரப்பா	295
இரவுபக	462
இருக்காதி	572
இருகிலமா	274
இருகிலஞ்	547
இருப்பா	404
இரும்பை	286
இருவரே	256
இல்லாத	482
இல்லையில்லை	190
இல்லேயு	232
இல்லேயென்	209
இல்வுடம்பு	560
இறப்பும்பிறப்	577
இற்றைவரை	488
இனியகருணை	389
இனியகருப்பு	400
இனியேதெம	139
இன்பக்கட்	268
இன்பகிட்டை	495
இன்பகிரு	501
இன்பமய	405
இன்பருள	510
இன்றுபுதி	459
இன்றுன	234
இன்றென	208
இன்றே	477
இன்னமுது	106
இன்னமபிற	144
ஈ	
ஈருக	507
ஈனந்தருகா	535
ஈனந்தருமு	454
ஈனமில்லா	537
உ	
உடம்பறியு	534
உடலைப்பழி	383
உடல்குழைய	76
உடல்பொய்யு	369
உணர்த்துமு	494
உண்டவர்க்	254
உண்டுத்து	474
உண்டுபோ	494
உண்டோக	580
உண்டோசீ	444
உண்ணின்று	559
உத்திசுழி	528
உத்துபிற	530
உய்யும்படிக்கு	259
உருவிருப்ப	527
உருவெளி	505
உரையிறந்து	196
உரையிறந்து	247
உரையிறந்த	452
உரையுணர்வி	304
உலகெறி	515
உலகமாயை	299
உளவறிந்தெ	320
உள்ளக்கொதி	506
உள்ளங்குழை	505
உள்ளதுணரா	502
உள்ளதுமி	576
உள்ளத்தி	412
உள்ளத்தி	517
உள்ளத்தி	541
உள்ளத்தை	360
உள்ளபடியா	401
உள்ளபடியெ	223
உள்ளபடி	486
உள்ளபொரு	488
உள்ளமறியா	486
உள்ளமறிவா	457
உள்ளமே	261
உள்ளும்புற	557
உறவுடலே	338
உற்றதுணே	216
உற்றவேளை	257
உற்றறிபும்	455
உற்றுணர்	338
உற்றுநினை	461
உற்றுற்று	459
உனக்குகா	275
உனக்குவமை	504
உன்மனிக்கு	241
உன்னவுன்ன	572
உன்னுமை	510
உன்னுவெவளி	506
உன்னிலு	547
உன்னிலெய	133
உன்னுமன	492
உன்னைநினை	462
உன்னையுட	398
ஊ	
ஊனாணந்த	3
ஊருமிலார்	510
ஊரைப்பா	510
ஊழுக	566
ஊனிருந்த	561
ஊனென்றி	526
ஊன்பற்று	553
எ	
எக்கணுமா	537
எக்கலெய	475
எக்காலமு	105
எங்கணுசீ	500
எங்குஞ்சில	596
எங்குமென்னை	254
எங்கும்வியா	366
எங்கெங்கு	539
எங்கெங்கே	465
எங்கேயெங்	442
எங்ஙனே	238
எச்சிலென்று	466
எடுத்தமேக	253
எடுத்தமேகம்	409

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
எட்டத்தொ	550	எல்லாமறிந	158	என்னறிவுக்	563
எட்டுத்திசை	502	எல்லாமிறந்த	237	என்னறிவு	469
எட்டுத்திசை	535	எல்லாமுதவு	355	என்றிவை	522
எண்டிசை	473	எல்லாமு	67	என்னுடைய	547
எண்ணமறி	461	எல்லாமே	399	என்னுடைய	319
எண்ணமு	477	எல்லாருயின்பு	486	என்னேனான்	449
எண்ணரிய	84	எல்லேபி	541	என்னைக்கெடு	477
எண்ணரிய	524	எவவடிவும்	555	என்னைத்தா	320
எண்ணுதெதெ	346	எவ்வாறிங்	540	என்னைநான்	434
எண்ணுதெவெ	457	எவ்விடத்து	507	என்னைப்புர	506
எண்ணியவே	418	எவ்வுயிருந்	546	என்னையறிய	562
எண்ணில்பல	494	எவவுயிருமெ	462	என்னையின்ன	477
எண்ணிறை	567	எவ்வுயிர்த்திர	170	என்னையுந்தன்	577
எத்தனைதா	449	எள்ளத்தனைபு	558	என்னையுன்ற	471
எத்தனைப்பிற	317	எள்ளளவுகின்	459	என்னையுன்னை	398
எத்தனையோ	465	எள்ளுக்குளெ	539	ஏ	
எத்தனையோ	495	எறிதிரைக்கட	168	ஏகமானவுரு	166
எத்தனையோ	570	எக்கினியா	494	ஏங்கியிடை	500
எத்தனைவித	104	எனக்குணீ	548	ஏசற்ற	403
எத்தன்மை	465	எனக்குமுனைக்	398	ஏடார்மலர்	511
எத்தாறபி	460	எனக்குளே	232	ஏதமற்ற	330
எத்திக்குந்	452	எனக்கெனச்	320	ஏதமின்றி	321
எந்தசமய	540	எனக்கென்	291	ஏதுக்குசசும்	371
எந்தகாலை	248	எனக்கோர்	348	ஏதுக்குஞ்சும்	401
எந்தநாள்	119	எனதென்பது	288	ஏதுக்குடற்சு	384
எந்தப்படி	471	என்செயலின்	264	ஏதுக்குமுன்	484
எந்தம	511	என்செயினு	558	ஏதுந்திரு	375
எந்தவு	479	என்பருகி	455	ஏதுந்தெரியா	565
எந்தெந்த	471	என்பெலா	1 0	ஏதுந்தெரியா	503
எந்தைசன	521	என்போலெ	470	ஏதுவந்து	482
எந்நாளுமு	120	என்றுங்கரு	474	ஏதேதுசெய்	543
எந்தநாளுன	218	என்றுமடை	493	ஏதேதுசொ	503
எந்நெஞ்சமே	482	என்றுமழி	580	ஏதைசசுமை	480
எப்பொருளு	463	என்றுமிரு	473	ஏய்ந்தகல்லரு	382
எம்பராப	328	என்றுமுன்னை	229	ஏரின்சிவபோ	523
எம்மாலறி	565	என்றுவிடி	511	ஏழைக்குரு	529
எம்மைவினை	233	என்றுஷாகி	44	ஏறுமயிர்	479
எல்லாஞ்சிவ	362	என்னதியா	554	ஏறுவாம்பரி	276
எல்லாநினது	502	என்னதி	485	ஐ	
எல்லாந்தெ	561	என்னரசே	568	ஐந்தபூத	164

பாட்டு	பக்கம்
ஐந்துவ	47
ஐந்துவ	49
ஐம்பூதத்தா	529
ஐயமற்றவதி	238
ஐயனேயுனே	244
ஐயாதனே	312
ஐயாவருணகி	880
ஐயோவுனே	458
ஐவகையெனு	36
ஐவரென்றபுல	165
ஐவரொடு	491

ஒ

ஒட்டிடன்	524
ஒப்பிலா	571
ஒப்புயர்	470
ஒருமைமன	128
ஒருமொழி	220
ஒருவரென்னு	234
ஒருவனவன்	196
ஒளியே	363
ஒன்றதாய்	325
ஒன்றனேயு	539
ஒன்றுகிப்	179
ஒன்றும்	570
ஒன்றியொன்	215
ஒன்றிரண்டா	334
ஒன்றிரண்டு	551
ஒன்றிரண்	496
ஒன்றுந்தெரி	356
ஒன்றுமறகில்	377
ஒன்றுமறியா	497
ஒன்றேபல	470
ஒனவறகினை	466

ஓ

ஓகோவுனே	456
ஓங்கருத்	560
ஓடுமிரு	454
ஓதரிய	199
ஓயாதோ	456

பாட்டு	பக்கம்
ஓயாவுள்	564
ஓராமலெல்	503
ஓராமலே	393
ஓராமன்	552
ஓருரை	493
ஓவென்ற	435

ஔ

ஔவிய	34

க

கங்குல்பக	475
கங்கைகில	519
கச்சிருச்சும்	528
கடத்தைமண்	318
கடலமுதே	456
கடலின்மடை	575
கடலின்ம	544
கடலெத்தனே	359
கட்கெங்கணமு	495
கட்கெமன்	536
கணமதேனு	323
கண்களில்	528
கண்டகண்ணு	252
கண்டதனே	511
கண்டதுபொ	524
கண்டவடி	495
கண்டவடி	566
கண்டனவல்ல	206
கண்டவறி	202
கண்டவிட	546
கண்டறியேன்	415
கண்டனவே	568
கண்டாருள்	342
கண்டார்கண்	271
கண்டார்நகை	578
கண்டிலே	447
கண்டுகண்டு	532
கண்டுமொழி	527
கண்டுயிலா	487
கண்டேனினை	353
கண்டேனி	435
கண்ணகன்ற	249
கண்ணுடி	564
கண்ணுரக்	451
கண்ணுரசீர்	126
கண்ணுவாரே	460
கண்ணிறைந்	560
கண்ணிற்கா	239
கண்ணினுணு	331
கண்ணுனின்ற	257
கண்ணுணு	511
கண்ணே	453
கண்ணெனியே	377
கண்மூடி	467
கந்தரனுபூதி	524
கந்தகம	157
கருணைமொழி	211
கருதரிய	195
கருதமடி	496
கருத்தினுட்	222
கருப்புவட்	550
கருமருவு	40
கருமுகங்கா	518
கரைந்துகரை	385
கரையினின்ப	241
கலக்கமுற	501
கலங்காத	447
கலந்தமுத்தி	241
கல்லாதெனு	562
கல்லாதபேர்	92
கல்லாதவறிவு	56
கல்லாதேனு	508
கல்லாவடி	563
கல்லாலெறிந்	351
கல்லாலினீழ	440
கல்லெறிய	485
கல்லேறு	575
கல்லேனு	109
கல்லேன்	511
கல்லையுற்ற	245

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
களவுவஞ்சனை	329	காட்டுகின்ற	557	குருவிங்க	378
கள்ளத்தலைவ	518	காட்டுந்திரு	538	குருவிங்க	556
கள்ளம்பொரு	360	காட்டியவந்த	364	குருவாகி	400
கள்ளனிவ	543	காணரிய	188	குருவுருவாகி	265
கள்ளாதுகட்	498	காணுத	511	குலபிலான்	313
கற்கண்டா	515	காணுங்கண்	228	குறிகளோடு	162
கற்கண்டோ	372	காண்டல்	185	குறித்தவித	532
கற்குணத்தை	544	காண்பானு	552	குறியுங்குண	401
கற்குநிலை	504	காதலால்	512	குறைவிலரு	521
கற்குமதி	500	காதற்று	380	குறைவிலா	273
கற்பதெல்லா	569	காதிலோலை	302	குற்றங்குறை	498
கற்புறுதிக்	417	காந்தமதை	207	குற்றசமய	549
கற்பனை	503	காந்தமிரு	511	குன்றதமூ	216
கற்றகலை	467	காமனைவா	528	குன்றிடாத	253
கற்றதுங்கே	572	காயநிலை	475	கூ	
கற்றவறி	457	காயாதமர	143	கூடியநின்	414
கற்றுமென்ப	240	காயிலை	97	கூடுதலுடன்	42
கற்றும்பலபல	368	காரகமா	487	கூர்த்தவறி	456
கற்றூலுங்கே	495	காராரு	101	கூர்த்தவறிவா	493
கன்மநெறி	558	காரிட்ட	39	கூருகின்ற	272
கன்மமென்ப	486	காலமூன்று	251	கூரிய	441
கன்மமே	246	காலமேகா	446	கூறுங்குணமு	512
கன்றினுக்கு	457	காலமொடு	200	கே	
கன்றுமன	586	காலமொரு	481	கேசதூச	87
கன்னங்கரிய	493	காலர்பய	488	கேடுத்தே	545
கன்னலமு	90	காலன்றனை	386	கேட்டவழி	476
கன்னலுடன்	541	காலாலவழி	571	கேட்டியென்	464
கன்னறரும்	490	காலையி	534		
கன்னன்முக்	324	கால்பிடித்	476	கே	
கா		காற்றைப்	433	கேடில்பசு	538
காகமானவை	127	கானகமிலங்கு	57	கேட்டதை	484
காகமுறவு	409	கானற்சலம்	542	கேட்டலுடன்	372
காகமொடுகழு	161	கானற்சோறெ	567	கேட்டன்	554
காக்குநின்ன	249			கேவல	304
காக்கைநரி	525	கி		கேவலத்தி	556
காசசச	504	கிட்டிக்கொ	512		
காடிங்கரைய	407	கிட்டோய்	512	கை	
காட்சியெல்	502	கு		கைத்தலம்	145
காட்டத்திலங்	499	குடக்கொடு	136	கையிறற்	250
காட்டிலரு	464	குத்திரமெய்	548	கையுங்கு	265

பாட்டு	பக்கம்
கையுமெய்யு	229
கைவிளக்கி	587
கோ	
கொடியவெ	251
கொடுக்கின்	298
கொடுத்தே	386
கொந்தவி	147
கொலைகளவு	496
கொல்லாமை	94
கொல்லா	460
கொல்லா	482
கொழுந்தா	343
கொழுந்தில்	466
கொழுந்து	269
கொள்ளித்தே	479
கொள்ளெவெ	485
கோ	
கோட்டாலெ	545
கோலமின்றி	227
ச	
சகத்தின	250
சகமனைத்தும்	371
சகமெலாந்	331
சக்ரவர்த்தி	524
சஞ்சலமற்	508
சஞ்சிதமே	532
சடத்துளுயிர்	537
சட்டை	561
சத்தமுதலா	633
சத்தமுதலா	530
சத்தாகினின்	496
சத்தொடுசித்	539
சந்ததமு	12
சந்ததமு	491
சந்ததமும்	73
சந்திரனெ	542
சருகுசல	59
சன்மார்க்க	184
சன்னல்பின்	533
சா	
சாக்கிரமா	310
சாட்டையி	296
சாட்டையிலா	558
சாதனெ	497
சாதிகுலம்	25
சாலக்கபாட	536
சாலோக	541
சாற்றரிய	564
சி	
சிட்டர்க்கெ	559
சித்தகிருவி	490
சித்தகினெவு	454
சித்தந்தெளி	475
சித்தந்தெளி	540
சித்தமெனும்	531
சித்தமவுனெ	494
சித்தமவுனி	353
சித்தான	567
சித்துஞ்சட	402
சித்திதெறி	493
சிந்தனெ	473
சிந்திக்குந்	498
சிந்திக்குந்	556
சிந்திதத	555
சிந்திததெவெ	451
சிந்தைதத்	289
சிந்தைசி	493
சிந்தைபிற	579
சிந்தைமயக்	501
சிந்தைமறந்	38
சிந்தைம	512
சிந்தைய	464
சிந்தையன்	573
சிந்தையி	529
சிந்தையுமெ	501
சிவபாதி	345
சிவன்செய	279
சிற்பரமே	490
சிற்றம்பல	521
சிற்றரும்	315
சிற்றறிவு	551
சிற்றின்ப	540
சினமிறக்க	478
சின்னஞ்சி	481
சின்னஞசி	512
சீ	
சீராருந்தெய்	450
சு	
சுகமாகு	314
சுக்கிலமு	525
சுட்டழகா	562
சுட்டியுண	472
சுத்தமு	99
சுத்தவறி	455
சுத்தவித்தை	531
சும்மாவிருக்	390
சும்மாவிருக்	358
சும்மாவிருப்	463
சுருதியே	306
சுழுத்தி	310
சூ	
சூட்டியென	272
சூதாடுவார்	478
சூதானமென்	535
சூதென்று	472
சூரியர்கள்	535
செ	
செகத்தை	436
செங்கதிரின்	549
செங்கிருமி	525
செப்பரிய	549
செப்பரிய	182
செப்புவ	470
செம்பொன்	280
செம்மையறி	534
செய்யுஞ்செ	231
செய்யுந்தவ	341

பாட்டு	பக்கம்
சென்றவிட	499
சென்று	548
சே	
சேராமற்	438
சேராமற்சே	564
சை	
சைவசமய	408
சொ	
சொல்லற்கரிய	266
சொல்லாடா	464
சொல்லாய	447
சொல்லாலட	456
சொல்லாலும்	309
சொல்லாலே	436
சொல்லாற்	354
சொல்லான்	549
சொல்லான்	352
சொல்லான	125
சொல்லிறந்	512
சொல்லிறப்	508
சொல்லிற்ப	497
சொல்லுக்கட	379
சொல்லுஞ்	498
சொல்லும்	460
சொல்லும்	487
சொல்லெயுன்	229
சொன்னசொ	574
சொன்னத்	459
சொன்னத்தை	477
சொன்னவா	394
சோ	
சோதியாதெ	248
சோதியா	448
சோதியே	563
சோதியே	235
சோற்றுத்	486
ஞா	
ஞாலத்தை	480
ஞானநெறி	402
ஞானநெறி	553
ஞானமே	282
த	
தக்ககேள்	236
தக்கநின்	332
தக்கரவி	542
தட்டுவை	528
தத்துவ	381
தத்துவமா	534
தத்துவமெ	506
தத்துவர்	525
தந்திர	551
தந்தேதனே	473
தந்தையி	520
தந்தைதாயு	301
தந்தைதாய்	151
தந்தைதாய்	324
தந்தைதாய்	434
தப்பித	568
தம்முயிர்	475
தர்க்கமி	546
தற்பர	541
தற்பரமா	341
தற்போத	513
தனியிரு	326
தனிவளர்	278
தன்செய	496
தன்மய	314
தன்மயமா	500
தன்னய	361
தன்னதென்	226
தன்னரசு	571
தன்னிலே	338
தன்னெஞ்	296
தன்னேத்	472
தன்னேயறி	336
தன்னேயறி	513
தன்னேயறி	416
தன்னேயறி	496
தன்னேயறி	467
தன்னேயறி	467
தன்னேயறி	566
தன்னேயொ	285
தா	
தாகமறிந்	455
தாக்குநல்	579
தாங்கரிய	518
தாங்கிய	555
தாயர்கர்	473
தாயான	449
தாயிருந்	504
தாயினு	558
தாயினு	419
தாயுந்த	307
தாராதவரு	43
தாராவரு	489
தாவிய	513
தானந்த	501
தானந்தவஞ்	347
தானந்தவ	397
தானந்தவ	477
தாண்மூந்	277
தானவனுந்	551
தானுக	489
தானுதல்	492
தானுனதன்	191
தானுனதன்	393
தானென்னெ	547
தானேசுபா	517
தானேயகண்	269
தானேயா	506
தானேயு	225
தி	
திசையாதோ	439
திக்கெட்டுதி	80
திக்கெட்டு	452
திங்களுமு	571
திடமுற	411
திண்ணிய	527

பாட்டு	பக்கம்
திருந்து	327
திருவருட்	245
திருவருண்	583
திரையற்ற	548
திரையில்லா	217
தினமேசெல	358
தினையத்தினை	561
தீ	
தீங்கரும்	542
தீதணையா	550
தீதெதலா	418
தீதெனவு	507
தீரத்திறற்	493
தீராக்கரு	513
தீராதவென்	340
து	
துங்கமழு	388
துசசப்புல	550
துசசனென	460
துட்டனை	544
துய்யன்	325
துய்யகர	520
துரியங்	556
துள்ளுமறி	75
துன்பக்கட	384
துன்பக்கண்	458
துன்பமெ	561
துன்மார்க்க	582
தூ	
தூங்காம	557
தூங்கிவிழி	513
தூயபனித்	529
தூயவறி	550
தூயதான	243
தூளோ	429
தெ	
தெட்டிலே	421
தெய்வம்	257
தெரிவாக	7
தெருளாகி	95
தெளிவொ	331
தே	
தேகசெய	390
தேகமியா	515
தேகமிறு	480
தேகமுத	533
தேகாதி	497
தேக்கியின்	237
தேஞ்சிகர்	556
தேடாததே	488
தேடினேன்	483
தேடுந்திர	483
தேடுவார்	570
தேடுவேனின்	505
தேவரெல்	444
தேவர்தோ	198
தேன்முகம்	201
தொ	
தொல்லைக்	513
தொல்லைப்	559
தொல்லை	381
தோ	
தோற்பா	480
ந	
நடக்கினு	346
நடத்தியிவ்	277
நலமேது	578
நன்றறி	458
நன்றெனை	442
நன்னெஞ்ச	514
நா	
நாட்டமுன்	318
நாட்டா	461
நாட்பட்ட	443
நாட்பட்	492
நாடுநகரு	488
நாதகீத	246
நாதமே	439
நாதனை	418
நாம்பிரம	554
நாய்க்குங	565
நாவழுத்துஞ்	490
நாளவங்க	522
நாளவங்க	395
நாளும்பொ	530
நாற்றசடல	349
நாற்றமிகக்	527
நானைதன்	487
நானைதன்	538
நானைநீங	214
நானைனைனக்	491
நானைன	207
நானைனவு	314
நானைன்றோ	347
நானைன்னு	187
நானேகருதி	514
நான்றானைனு	401
நி	
நித்தமா	560
நித்தியமாய்	21
நித்தியமொ	480
நித்திரையா	499
நித்திரையா	533
நித்திரையிற்	482
நித்திரையு	509
நியமலஷ்ண	167
நிர்க்குணநி	64
நில்லாதவா	220
நில்லாது	129
நில்லாப்	391
நில்லாமனின்	522
நிறைகுடங்	388
நிற்குண	228
நினையுநி	286
நினையுநினை	359
நினைப்பற	547
நினைப்பு	540
நினைவொன்	219
நின்போதத்	465
நின்றதிலை	572
நின்னிற்ற	492

பாட்டு	பக்கம்
நின்னேசசர	492
நின்னேயுணா	485
நீ	
நீக்கப்பிரி	538
நீங்கிமலக	519
நீங்காதுயி	344
நீட்கிருறு	499
நீதியாய்	339
நீதியெகுகே	143
நீயற்றவர்	390
நீயன்றி	484
நீயெனா	368
நீயேநா	507
நீயேயிங	137
நீராய்க்	488
நீர்குழிழி	483
நீர்க்குழிழி	514
நீர்குழிழி	525
நீர்ப்புற்	483
நீர்பூத்த	518
நூ	
நூலேனி	481
நே	
நெஞ்சகத்தில்	514
நெஞ்சகமே	476
நெஞ்சகம்	569
நெஞ்சத்தி	414
நெஞ்சுகந்து	233
நெறிகடாம்	322
நெறிபார்	441
நே	
நேசஞ்சிறி	563
நேசத்தா	493
நேசகிரு	430
நேசிக்குஞ்	382
நேராய	374
நேரேதா	194
நேரேகின	167
நேற்றுளா	305
நோ	
நோக்கற்கரி	376
நோயும்வெகு	410
ப	
பசிசன்ற	528
பசைசகண்	514
பசைசறிற	519
பஞ்சப்	534
பஞ்சரிதது	465
பஞ்சாய்	559
பஞ்சுசுத்தி	476
படிப்பறறு	489
பட்டப்	505
பட்டப்	68
பணியற்று	565
பண்டுங்கா	543
பண்டொரு	568
பண்ணி	549
பண்ணே	71
பதமூன்று	335
பதியுண்டு	420
பத்திநீ	419
பத்திநெறி	46
பத்தரரு	493
பத்தர்	508
பந்தமயக்	502
பந்தமறு	191
பந்தமெலா	501
பரமாப்	515
பரமுனக்	462
பரம்பர	262
பரவரிய	337
பவம்புரிந்	333
பழுதுண்டு	336
பள்ளங்க	569
பற்றிபற்	574
பற்றினதை	571
பற்றும்	466
பற்றுவன	113
பற்றுவெகு	62
பற்றலாம்	258
பற்றொழிந்து	505
பற்றற்றிரு	489
பன்மார்க்க	553
பன்மாலத்	210
பன்முசச	171
பன்முத்திரை	514
பா	
பாகததி	137
பாகமோ	428
பாகியங்க	546
பாசசாலங்	479
பாசங்க	563
பாசபந்த	515
பாசமகலா	551
பாசம்போய்	458
பாடாது	153
பாடிப்படி	459
பாடியாடி	329
பாடுகின்ற	573
பாட்டளி	82
பாட்டுக்கோ	506
பாதிவிருத்த	521
பாயப்புலி	340
பாரகமும்	468
பாரறியா	469
பாரினத்து	392
பாராசை	512
பாராதி	222
பாராதிநீ	468
பாராதபூ	576
பாராதிபூத	370
பாராதிக	134
பாராதியண்	115
பாராதிவி	193
பாராதே	567
பாராயோ	437
பாராயோ	456
பாரொடு	83
பார்க்கி	506
பார்க்கினண்	470
பார்த்தவி	453

பாட்டு	பக்கம்
பார்த்தன	445
பாலரொடு	474
பாவமென்னு	504
பாவிபடுங	492
பாவியே	281
பாழாகி	463
பி	
பிடித்தசை	498
பித்தரினா	525
பித்தனேயே	473
பினாமதி	387
பிறிதொண்	548
பிறியாத	154
பிறியாது	512
பின்னுமே	327
பின்னுமுட	384
பு	
புகலரிய	450
புகழுங்கல்	256
புண்ணிய	542
புண்ணீர்மை	544
புத்தமிர்த	160
புத்திகெறி	415
புத்தியெனு	530
புத்தியினு	513
புரக்தோர்	487
டலாகதேன்	544
புலனேந்து	388
புலியினத	379
புன்புலான்	231
புன்மலத்	532
பூ	
பூங்காவன	396
பூட்டற்றுத்	497
பூட்டிவைத்	509
பூதமுதலாக	423
பூசமுதலு	508
பூதமொடு	480
பூதலயமா	14
பூரணி	426
பூரயமா	478
பெ	
பெண்ணு	540
பெரியவண்ட	322
பெருமைக்	241
பெருவெளி	23
பெற்றவட்	436
பெற்றவர்	283
பெற்றாலு	507
பெற்றேம்பிர	316
பே	
பேசாத	495
பேசாவணு	267
பேசாவிடும்	575
பேசசாகா	464
பேசசூழ்ச	540
பேதித்தசம	116
பேதைப்	515
பேறனேதது	177
பை	
பைக்கூழ்	532
பைம்பயி	515
பொ	
பொகுகிய	474
பொங்கேத	543
பொய்கண்	521
பொய்குவித்	496
பொய்க்கா	535
பொய்க்கூடு	545
பொய்திக	85
பொய்ப்ப	515
பொய்மூட	544
பொய்ம்மய	562
பொய்யகல	499
பொய்யனிவ	461
பொய்யாருல	349
பொய்யி	103
பொய்யுலக	481
பொய்யுல	557
பொய்யு	509
பொய்வெல்	480
பொயவெய	558
பொய்யைப்	468
பொருந்து	446
பொருளாகக்	26
பொருளே	414
பொருளேப்பு	290
பொல்லாத	364
பொல்லாத	531
பொறியிற	303
பொறிவழி	479
பொற்பி	91
பொற்ப	308
பொன்னு	518
பொன்னே	226
போ	
போக்குவர	551
போதமா	45
போதமென்	305
போதவுர்	529
போதாந்த	454
போற்றே	544
போனக	54
போனாட்	442
ம	
மடமை	483
மட்டிலா	562
மட்டிப்படா	516
மண்டலத்தி	324
மண்ணுதி	597
மண்ணுதி	65
மண்ணுன	502
மண்ணீர்மை	503
மண்ணுமறி	509
மண்ணும்	474
மண்ணுறை	515
மண்ணுறி	542
மண்ணெறி	465
மதியுக	255
மதுரமத	140
மத்தர்	171

பாட்டு	பக்கம்
மந்தவறி	483
மந்திரத்	499
மயக்கு	315
மயக்குற	448
மரபைக்	575
மரவுரி	130
மருமலர்ச	148
மலைமலையா	187
மறக்கின்ற	363
மறமலி	283
மறைமுழக்	206
மற்றுன	247
மனதேகல்	577
மனத்தாலும்	377
மனமான	530
மன்றுடும்	558
மா	
மாசற்ற	156
மாசான	568
மாடுமக்கள்	429
மாதத்தி	365
மாயமயக்	482
மாயாஜகத்	378
மாயாசக	469
மாயாவிகார	533
மாயாவிகார	577
மாயைமுத	469
மார்க்கண்	472
மாலேவளர்	516
மால்காட்டி	463
மால்வைத்த	501
மாறுத	492
மாறுவனு	45
மாறுபடு	96
மி	
மிடியிட்ட	424
மின்போ	159
மின்னனைய	48
மின்னனைய	52
மின்னெப்	306
மின்னேயு	328
மு	
முகமெ	411
முக்குணத்	478
முக்குணத்	534
முசசகமெ	551
முத்தனைய	132
முத்காத்த	454
முத்தாத்த	506
முத்திக்கு	509
முதகியிலு	448
முத்தேப	452
மும்மலச	527
முருத்திள	417
முற்றுமோ	445
முன்னள	569
முன்னெண்	486
முன்னிலைச்	351
முன்னிலை	299
முன்னினை	569
முன்னெடி	463
மூ	
மூசசற்று	545
மூர்த்திதலச்	476
மூர்த்தியெ	487
மூலவிருள்	564
மூன்றுகண்	382
மெ	
மெய்த்தகுல	545
மெய்யான	370
மெய்யிற்சிவ	529
மெய்யினேய்	516
மெய்யைப்	396
மெய்லிடா	70
மெய்யிசு	527
மெல்லிய	562
மே	
மேலொடுதி	552
மேவுபசுத	516
மேற்கொண்	374
மை	
மைகாட்டி	501
மையுலரம்விழி	242
மைவண்ண	463
மோ	
மோனகுரு	399
மோனந்தரு	503
யா	
யாதுமன	22
யானெனல்	285
யான்றுனென	395
யோ	
யோகியற்கே	466
வ	
வஞ்சகத்து	558
வஞ்சகமன்	471
வஞ்சமோ	404
வஞ்சனைய	274
வஞ்சனையு	458
வடிவனே	212
வடிவிலா	265
வடிவெலா	259
வட்டமிட்	431
வண்டாய்த்	469
வந்தனை	479
வந்தவர	405
வந்தவரவை	581
வந்தவாறி	308
வந்தித்து	462
வந்தெனு	188
வம்பனேன்	272
வரும்போ	224
வருமோ	287
வருவான்	469
வல்லமை	478
வல்லாளா	569
வழியிதெ	392
வளம்பெறு	260
வன்பொன்று	503
வன்மையி	508
வா	
வாக்காதி	580
வாக்குய்ய	458

பாட்டு	பக்கம்
வாககாண	560
வாகசுமன	523
வாகசுமன	508
வாக்சுமன	570
வாசகஞான	431
வாசாசுயி	6
வாடாதே	552
வாடுமுகங	503
வாட்டப	516
வாதபு	557
வாதனைப	312
வாதனை	566
வாதனைமி	568
வாதுசெய்து	478
வாதைதப்பி	536
வாயாரசோ	405
வாயாற்சி	504
வாயிலோரை	281
வாயினற்பே	401
வாயுணவி	350
வாயினன்	472
வாய்க்குரு	243
வாய்திறவா	510
வாய்பேசா	471
வாராதெலா	16
வாராய்நெஞ்	365
வாராவர	405
வாராவர	517
வாரிக்கொ	248
வாரியேழு	233
வாலற்ற	557
வாவாவென்	391
வாவிக்கமல	413
வாழாதுவா	412
வாழிசோ	197
வாழத்துதி	284
வாழவேண்டு	335
வாழவேன	213
வாழ்வென	275
வாழ்வென	442
வாளாருங	559
வாளாருங	581
வாணநாயக	380
வானந்த	453
வானமுகில்	542
வானமெல்லாம்	453
வாறுதித்தது	499
வாறுதிரி	469
வாறுதிரிபுத	102
வானூடகுரு	549
வாவேழுத	271
வாவேப்	235
வான்காண	468
வான்கெடு	534
வான்பொரு	318
வி	
விஞ்சுலப்	493
விண்சுருவே	500
விண்டு	529
விண்ணரசி	287
விண்ணவரிக்	191
விண்ணவர்	517
விண்ணவன்	536
விண்ணடர்	543
விண்ணதி	28
விண்ணரக்	564
விண்ணர்	517
விண்ணறு	413
விண்ணிறைக்	29
விண்ணுகரும்	176
விண்ணுள்வளி	517
விதிகரும்	581
விதியையும்	252
விதன்றி	463
விதிபாகத்	541
விமலமுக	179
விரிக்தமன	473
விரும்புந்	476
விசுகருக	155
விசுகவினை	216
விளங்கவென	439
விளயஞ்சி	578
வீ	
வீங்கித்	528
வீணைபிறக்	560
வீறியவே	546
வெ	
வெஞ்சேலை	519
வெட்டவெளி	162
வெங்கு	535
வெங்கோ	111
வெம்பக்த	523
வெய்யபிற	536
வெய்யபுலி	536
வெள்ளக்கரு	439
வெள்ளங்	380
வெளியா	481
வெளியான	343
வெளியினின்ற	244
வே	
வேண்டா	530
வேண்டிய	389
வேணுகிஞ்	232
வேண்டுக	252
வேண்டுவப்	262
வேட்டைப்	580
வேதமுத	576
வேதமுட	123
வேதமெத்த	321
வேதாந்த	184
வேதாவை	145
வேலையிலா	526
வேறுபடு	448
வை	
வைகிகமாஞ்	522
வைத்தசுவ	496
வைத்த	280
வைத்தபொரு	138
வைத்திவ	438
வையகமா	360

சிவமயம்.

அறிஞரை என்னும் கண்ணிகளுள்ள

மேற்கோட்செய்யுட்கள்

தேவாரம்.

1 இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனெறியுங்காற்றுமாகி
யருவிலையிருசுடராய்நாயிறிங்களாகாசமாயட்டமூர்த்தியாகிப் [யாகி
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணுமபிறருருவுந்தம்முருவுந்தாமே
தெருநலையாயின்றிநானேயாகிநின்மிர்புனசடையடிகணின்றவாறே.

இரு-பெரிய. நிலன்-பூமி. இயமானன்-உயிர். எறியும்-வீசுகின்ற. இருசுகள்-சந்திரன். நாயிறு-சூரியன். மூர்த்தி-உருவம். தெருநல்-தேற்று. அடிகள்-கடவுள்.

இருபாவிருபஃது.

2 உற்றவர்பெற்றவ ரற்றவர்முற்றும், அற்றவர்க்கற்றவ னல்லவர்க்கல்ல
வன், அந்தமாதி யில்லவன்வந்து, குரக்குமனத்துக் கொடியேன் பரக்கும்,
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட், டிருள்வெளியாகு மருளினை
யறுத்து, வந்துபுகுதலுஞ் சென்றுநீங்கலும், இன்றியொன்றுய் நின்றவந்
நிலையில், ஒன்றுகாமலிரண்டாகாமல், ஒன்று மிரண்டுமின்றுகாமல், தன்
னது பெருமைதாக்காஞையினும், என்னது பெருமை யெல்லாமெய்திக்,
தன்னை யெனக்குத் தருவதையன்றியும், என்னையுமெனக்கே தந்துதன்
னது, பேராநந்தப் பெருங்கடலதனுள், ஆராவின்ப மளித்துத்தீரா, உள்
ளும்புறமபு மொழிவின்றி நின்ற, வள்ளன்மை காட்டிமலரடி யருளிய,
மன்னனெங்கோன்வார் புனற்பெண்ணை, வெண்ணெய்க்காவலன் மெய்
கண்டதேவன், அண்ணலருளாலயத தனணணிய, மலமுதலாயின மாய்க்
கும், உலகவுயிர்க்கெல்லா மொருகண்ணை.

குரக்கு-குரங்கு. வெளி-ஒளி எய்தி-அடைந்து ஆரா-தெவிட்டாத. வள்ளன்மை-கொடைத்தன்மை. வார்-ஒழுகுகின்ற. பெண்ணை-ஓர்நதி. அண்ணல்-கடவுள்.

தேவாரம்.

3 தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனெண்ணப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தாரெடுத்தான்மலையுத்தமனே.

அந்தோ-அதிசயவிரக்கசொல். படுத்தும்-படுத்தும் பொருட்டு. மத்தயானை - மத யானை. புரிந்து - செய்து. எடுத்தான் மலை - ஓர் திருப்பதி.

4 ஏழிசையாயிசைப்பயனேயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுநகருடனேகி
மாழையொண்கணபரவையைத்தந்தாண்டாயேமதியிலா
ஏழையேன்பிரிந்திருக்கேனென்னுரிறைவனேயே

துரிசு-குற்றம். மாழை-மாவடுவகிர். மதி-அறிவு.

6 பன்னிலாறும்பழுத்திலுயின்சுவை
யென்னிலாறியெனைகேகளிசரும்
உன்னிலுனமுனுவிடில்விட்டிடும்
என்னுசினிருத்தியறகையே

பன்னில்-சொல்லின். உன்னில் - நினைத்தால். உன்னும்-நினைப்பன். உன்னுவிடில்-நினையாவிடின். இயற்கை-சுபாவம்.

திருவாசகம்

7 8 இன்றெனக்கருளியிருளகடிகதிர்வள்ளத்தெழுகின்றஞாயிறேபோன்று,
ஒன்றினறன்மைநினைப்பறநினைக்தேனியலாற்பிறிதுமற்றின்மை
செனறுசென்றுனுவாய்சதேயகதுதேய்க்தொன்றுநதிருப்பெருந்
துறையுறைசிவனே, ஒன்றுநீயல்லையன்றியொன்றில்லையா
ருனனையறியகிற்பாரே.

கடிந்து-அறுத்து ஞாயிறு-சூரியன். சிவன் - மங்களகரன்.

9 ஆதியுமத்தமுமிலலாவரும்பெருந்
சோதியையாமபாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவனருதியோவனசெலியோனசெவிதான்
மாதேவன்வாகமுல்கள்வாழுகதியலாதுத்தானேபோய,
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெயமறது
போதாரமனியின்மேனிபுபுரண்டிழிதரான்,
ஏதேனுமாகன்குடந்தாளென்னேயென்னே
ஈதேயமக்தோழிபரிசேலோரெம்பாவாய.

தடம்-விசாலம். வளர்தல் - கண்ணவளாதல். (ஆரகல்) வாய் - இடம். விம்மிவிம்மி-அழுது அழுது. மெய்மறநது-உடம்பைமறநது. அமளி-சயநம். ஏது ஏனும் - யாதாயினும். பரிசு-நன்மை.

திருப்புகழ்.

14 சூரமகருபரகுணதாரிசிகார்
திரிதினகரசரவணபவகிரி
குமரிகுதபகிரதிசுதசுரர்பதி, குலமானும்
குறவர்சிறுமியும்மருவியதிரள்புய
முருகசரவெனறுவருகுதல்சிறுமில்
கொடியவினையபினைஅவலனேயசடனே, அதிமோகக்
கமரில்விழுவிடம்அழுகுடையரிவையர்
கனவிலுனைபெறுகுள்ளவறருளிய
கலவிஅவிழிடைஉழலுமெய்வெளிறனே, இனிதான

கருணைபழியெராடருங்காயில்ஒருவிசை
சருதிபுடைதரவருமிருபரிபுர
கமலமலரடிகனவிற்றுமருளவினும், மறவேனே

தமரமிருதிரைஎறிவளைகடல்குடர்
மறுகிஅலைபடவிடநதிஉமிழ்வன
சமுகணபணபணிபதியதுஒடி, வடமாகச

சகலபுவனமுற்றிலுமெறதிறுவிய
கனகசிரிதிரிதரவெருகரமலர
களரினியதாஅமுதினைஒருதனி, கடையாகின்

றமரர்பதிகெடஉதவியகருபைமுகில்
அகிலஉலகமும்அளவிடுகுறியவன்
அளவுகெடியவன்அளவிடஅரியவன மருகோனே

அரவுபுனைதருபுனிதரும்வழிபட
மழலைமொழிகொடுதெளிதரஒளிதிகழ்
அறிவைஅறிவதுபொருளெனஅருளிய. பெருமாளே.

குணதரன் - மங்கள குணங்களே ஆபரணமாகப்பூண்டவன். நிசிசரா-இராக்கதர், (நிசி-இரவு; சரர் - சஞ்சரிப்பவர்,) திமிரம்-இருள். தினகரன்-சூரியன். சரவணபவன் - சரவணப் பொய்கையில் அவதரித்தவன். (சர வணம் - நாணல், பவம்-பிறப்பு,) கிரிகுமரி - (இமய) மலைகுப் புதல்வி, (பார்வதி) சுதன் - புதல்வன். பகிரதி கங்கை-சுரர்பதிகுலமான் - தேவேந் திரனது மேன்மையாகிய புதல்வி, (தெய்வயானை) சிறுமி - புதல்வி, மரு வியசழுவிய, முருகன்-இளமை கட்டழகு இவைகளையுடையவன், (முருகு-இளமை, கட்டழகு.) சரண் - அடைக்கலம். கமர் - நிலப்பிளப்பு. அறிவை யர்-மாதர்கள். கலவி - புணர்ச்சி. அளறு,நரகம், வெளிறினை - அறிவின்மை யையுடையவனே, அருணை, திருவண்ணாமலை, ஒருவிசை - ஒருதரம், சுருதி-வேதம். பரிபுரம் - காற்சிலம்பு, நனவு - சாக்கிராவஸ்தை, தமரம் - ஒலி; திரை - அலை, வளை - வளைந்த, (வளை-பெயராகக்கொள்ளின், சங்கு)குடர்-குடல். மறுகி-சுழன்று. விடம் - நஞ்சு, சமூகம் கணம் - பெருங்கூட்டம்; பணம்-படம், பணிபதி-நாகராஜன், (வாசுகி,) வடம் - பெருங்கயிறு. புவ னம் - உலகம். நிறுவிய - நிலைபெறசெய்த. கனககிரி-பொன்மலை (மேரு) திரிதர சுழல, கரம் - கை, கடையாகின்று - கடைந்து; அமரர் - தேவர், (இறவாதவர்) உதவிய - கொடுத்த, முகில் - மேகம், அகிலம் - எல்லாம், குறியவன் - வாமனன், நெடியவன் - திரிவிக்கிரமன், மருகோன்-மருகர், அரவு - பாம்பு. புனைதரு - அணிந்த, புனிதர்-பரிசுத்தர், (சிவபெருமான்) வழிபட-வணங்க, மழலைமொழி-குதலைசசொல்,கொடு-கொண்டு, தெளிதர-தெளிய, திகழ் விளங்குகின்ற, பொருள்-உண்மைநிலை.

5, 10, 11, 12, 13, இந்த ஐந்துகண்ணிகளிலுள்ள அறிஞருரை அகப் படாமையால், இவற்றையொழித்து மற்றையவற்றை அரும்பத விளக்க வுரையுடன் அசசிட்டனம்.

கடவுள்துணை

தாயுமான சுவாமிகள்

திருவாயமலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு,

மூலமும் - உரையும்.



திருவருளவிலாசப் பரசிவவகாசம்.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

1 அங்கிங் கெனுதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோடி களெலாங
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு மூள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்தததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங
கருதியஞ் சலிசெய்குவாம்.

இதன்பொருள்.

அங்கு இங்கு என்னுதபடி - அவ்விடத்துள்ளது இவ்விடத்துள்ளது என்று சுட்டிச் சொல்லாத வண்ணம், எங்கும் ப்ரகாசமாய் பெயரிடத்தும் விளங்குகின்றதாகி, ஆனந்தபூர்த்தியாகி - ஆனந்தமயமானதாகி, அருளொடு நிறைந்தது எது - திருவருட் சத்தியோடு வியாபித்திருப்பது எது வென்றால்

தன் அருள்வெளிக்குள்ளே - தனது கருணைவடிவாகிய ஆகாயத்திலே, அகிலாண்டகோடி-அனைத்துலகும், எல்லாம் - அவற்றிலுள்ள சராசரங்களும், தங்கும்படிக்கு - நிலைத்திருக்கும்படி, இசைவைத்து - விருப்பம் வைத்து, உயிர்க்கு உயிராய் தழைத்தது எது - உயிருக் குயிராய்ச் செழித்திருப்பது எந்தவஸ்து, மனவாக்கினில் தட்டாமல் நின்றது எது - மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாமல் நின்றது எந்தவஸ்து, சமயகோடிகள் எல்லாம்-சமயத்தொகுதிகள் யாவும், தம்தெய்வம் எம்தெய்வம் என்று-தங்கள் தெய்வம் எங்கள் தெய்வம் என்று வேதாகமபுராணங்களைப் பிரமாணங்களாக எடுத்துக்காட்டி, எங்கும் தொடர்ந்து-எவ்விடத்தும் விடாதுபற்றி, எதிர்வழக்கு இடவும்-ஒன்றுக்கொன்று நேர்நின்று வாதிக்கவும், நின்றது எது-இடமாய்நின்றது எந்தவஸ்து, எங்கணும் பெருவழக்காய் - எவ்விடத்தும் அறுதியிடக்கூடாத பெருவழக்காகி, யாதினும் வல்ல ஒருசித்து ஆகி-எதினும் வலிய ஒப்பற்ற ஞானவடிவாகி, இன்பம் ஆய்-சுகவடிவாகி, என்றைக்கும் உள்ளது எது - எந்நாளும் ஒருதன்மையாய் உள்ளதாகிய சத்து எந்தவஸ்து, மேல்-பின்னும், கங்குல் பகல் அற நின்ற - இராப்பகல் இல்லாது நின்ற, எல்லை உள்ளது எது - இடத்திலுள்ளது எந்தவஸ்து, அது-அந்த வஸ்துவே, கருத்திற்கு இசைந்தது - எமதுகருத்துக் கிணங்கினது, (ஆதலால்) அதுவே - அந்த வஸ்துவையே, கண்டன எல்லாம் (ஆகவும்) - பார்த்தபொருள்களெல்லாமாகவும், மோனவுரு வெளியதாகவும் - மோனவுரு வெளிப்பாடாகவும், கருதி - நினைத்து, அஞ்சலிசெய்குவாம் - (யாம்) கை கூப்பிவணங்குவோம். என்றவாறு.

சச்சிதானந்த இலக்கணமுடைய இறைவனே யாம்வணங்குவோமென்பது கருத்து. இதில் அங்கிங்கெனைதபடி என்று சத்தினையும், எங்கும் ப்ரகாசமாய் என்று சித்தினையும், ஆநந்தபூர்த்தியாகி என்று ஆநந்தத்தையும் கூறி, அந்தச சச்சிதாநந்த சொரூபமுடைய பரம்பொருளே தமக்கு எவ்விடத்தும் இடையீடின்றித் தோன்றுதலால் ஒரு சித்தாகி இன்பமாய் என்றைக்குமுள்ளது என அநுவதித்தார். அநுவதித்தல்-முற்கூறிய ஒன்றைப் பயன் தருதல் கருதிப் பின்னுஞ்சொல்லல்.

மனம், வாக்கு என்பன சடமாதலால் அவை சித்தாகிய சிவத்தை யறியா என்பதுகருதி, மனவாக்கினிற்றட்டாமனின்றதெது என்றார். இது கருதியே 'மனுதிதனக்கெய்தாதவொருவ னெங்குநிறையிறைவன்' என்றார் பிறரும்.

இறைவன் சச்சிதானந்த இலக்கண முடைமையை, "பூவண்ணம் பூவின்மணம்போல" என்னும் திருவிளையாடற் புராணச்செய்யுளில் 'மெய்ப் போதவின்பமாவண்ண மெய்கொண்டவன், என்பதனுனும் அறிக. அருள் என்றது சத்தியை. இக்கருத்தேபற்றி 'அருளது சத்தியாகும் அரன் றனக் கருளையின்றித், தெருள்சிவமில்லை யத்தசிவமின்றிச சத்தியில்லை' என்றார்

பிறரும். சத்தென்றது உண்மை, சித்தென்றது அறிவு, ஆனந்தமென்றது சுகம். கங்குல்பக லறநின்ற வெல்லையுளதென்பதனை 'இராப்பக லற்ற விடத்தேயிருக்கை யெளிதல்ல' என்பதனுற்காண்க. இராப்பகலற்ற விடத்தினை, வடநூலார சதோதயமென்பார். இராப்பகலென்றது சகலகேவலங்களை சகலம்-நினைப்பு, கேவலம்-மறப்பு. கண்டனவெலாமோன வருவெளி என்றது 'பார்த்தவிட மெல்லாம் பரமன்காண், எனவும்; 'எங்குஞ்சிவ மொழிய இல்லை' எனவும் கூறுவதனுற்காண்க. மோனவருவெளியதாகவு மென்றது கருவிகள் முப்பத்தாறனையுங் கடந்து நின்றதோர் நிலைமையை. இதனை 'சும்மாவிரு சொல்லறவென்றலுமே, அம்மாபொருளொன்று மறிந்திலனே' எனவும், 'சும்மாவிருக்கசுக முதயமாகுமே' எனவும் அதனை யறிந்த ஆன்கூறிய திருவாக்குக்களானுமுணர்க.

2 ஊரனந் தம்பெற்ற பேரனந்தஞ் சுற்று
முறவனந் தம்வினையினுல்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத ஞன்ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந்தேக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலேநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின்வைப்பைப்
பேசருமை னந்தபத ஞானவா னந்தமாம்
பெரியபொரு ளைப்பணிகுவாம்.

இ-ள். ஊர் அநந்தம்-(பிறந்த) ஊர்களனேகம், பெற்றபேர் அநந்தம்-அவ்வப் பிறவிகளிலடைந்த கர்மங்க ளனேகம், சுற்றும் உறவு அநந்தம்-சூழ்ந்துவருகின்ற உறவு அனேகம், வினையினுல்-(தத்தம்) இருவினை வேறு பாட்டால் (உண்டாகிற), உடல் அநந்தம்-சரீரங்களனேகம், செய்யும்வினை அநந்தம்-செய்தொழில்களனேகம், கருத்தோ அநந்தம்-நினைப்போ அனேகம், பெற்ற பேர் சீர் அநந்தம் - அடைந்த பெருஞ்சிறப்புகள் அனேகம், சொர்க்க நரகமும் அநந்தம்-சொர்க்கநரகங்களு மனேகம், நல் தெய்வமும அநந்தபேதம்-சிறந்ததெய்வங்களும் அனேகவகை, திகழ்கின்ற சமயமும அநந்தம்-விளங்காநின்ற சமயங்களும் அனேகம், அதனுல்-ஆதலால், ஞான

சிற்சத்தியால் உணர்ந்து - ஞானசிற்சத்தியின் அருளால் அறிந்துகொண்டு, அநந்தங்கோடி கார் வருஷித்தது என - அநேககோடி மேகங்கள் ஒருசேர மழையைப் பொழிந்ததுபோல, அன்பர்கண்ணும் விண்ணும் தேங்க-அடியார்களுடைய கண்ணும் இதயாகாயமும் நிறையும்படி, கருது அரிய-நினைத்தல் அருமையாகிய, ஆநந்தமழை பொழியும் முகில-இன்ப மழையைப் பொழிகின்ற மேகத்தை, நம் கடவுள-நமது தெய்வத்தை, துரிய வடிவை-துரியரூபத்தை, மறை-வேதங்கள், அநந்தம் பேர் பேசி சொல்லலும் - அநேகம் போகளச சொல்லி புகழ்கின்ற, பெரிய மௌனத்தின் வைப்பை-பெரிதாகிய மௌனநிலையென்னும அஞ்சனத்தால வெளிப்படுகின்ற புதையல, பேசு அரும் - சொல்லுதற்கரிய, அநந்தபதம்-முடிவறற பதமாகிய, ஞான ஆநந்தம் ஆம்-ஞானாநந்தமயமாகிய, பெரியபொருள - பெரிய வஸ்துவை, பணிகுவாம்-(யாம்) வணங்குவோம் எ-று.

விண்என்பது பரவெளி யெனினுமாம். ஒருவன் அஞ்சனததால் **மறைந்துகிடக்கும்** நிதியையறிவதுபோல, மோனநிலையைக்கொண்டு உணரப்படுதலால், பெரியமௌனத்தின்வைப்பை என்றார். காரனந்தங்கோடி வருஷித்தது என்பது பன்மையி னொருமைவந்த பால்வழுவமைதி, இரண்டுகண்ணுஞ் சிவந்தது என்புழிப்போல. ஞானசிற்சத்தியா லுணர்ந்து என்றார், 'தாயினேசசென்று பின்தாதையைக்கூடி' எனப்பிறருங்கூறுதலானென்க. வினைப்போகமே ஒரு தேகமென்றாகலின் வினையாற் பல வுடலெடுத்தலும், அவ்வுடலெடுத்தற் கிடமும், அவ்வுடற்குப் பெயரும் பலவாகலும், அவ்வுடம்பினோகதி உபாதானகாரணமாய் வந்தியையும் சுற்றமும் வந்துசேர்வதுபிராரத்த வினையினால் ஆதலின், ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று முறவனந்த மென்றும்; அவவுடம்பொடு கூடி நின்ற விடத்துச செய்யும்வினைகள் பலவாதலால், செயும்வினை யனந்தமென்றும அவவினைசெய்யக் கருத்துகளும் பலவாதலின், கருத்தோவனந்தம் என்றும், அவ்வுடலெடுக்குந்தோறும் பெறும்புகழ்களும் பலவாதலால், பெற்ற பேர் சீரனந்த மென்றும்; அவர்செய்யு மிருவினைக் கீடாய்வருஞ் சொர்க்க நரகவிசேடங்கள் பலவாதலின், சொர்க்கநரகமுமனந்தமென்றும்; அவர் கருதி வழிபடுந் தெய்வம் பலவாதலின், நற்றெய்வமுமனந்த பேதமென்றும்; அத்தெய்வங்களோப்பற்றிய சமயமும் பலவாதலின், திகழ்கின்ற சமயமு மனந்தமென்றும் கூறினர். இவைகளையும் இறைவனது திருவருட் சத்தியா லுணரவேண்டு மென்பார், ஞான சிற்சத்தியாலுணர்ந்து என்றார். சமயங்களனேகம் என்றது அகசசமயம், புறசசமயம், அகப்புறசசமயம், புறப்புறசசமய மென்பனவாம. சொர்க்கநரகபேதம்பல என்பதனேச சிவதருமோத்தரத்தில் சொர்க்கநரக விசேடவியலிற்காண்க. வேதம் பலப்படப்பக்குவத்திற் கிணங்கக்கடவுணிலை கூறுதலினால், பேரனந்தம்பேசி மறையனந்தஞ் சொலும் பெரிய மௌனத்தின்வைப்பென்றார். துரிய மென்றது நியானத்தையுமற நிற்பதாகிய சிவயோகசமாதியை

3 அத்துவித வத்துவைச் சொப்ரகா சத்தனியை
அருமறைகண் முரசறையவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
ஆதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம் மதம்பெரும்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலிசெய்வாம்.

இ - ள் அத்துவித வத்துவை-இரண்டற்றபொருளை, சொப்ரகாசத் தனியை - தானேயாய்ப் பிரகாசித்தலையுடைய தனிமைப்பொருளை, அரு மறைகள் முரசு அறைய - அருமையாகிய வேதங்கள் முரசறைந்து நிற்க, அறிவினுக்கு அறிவு ஆகி-உணர்வுக்குணர்வாகி, ஆனந்தமயமான - ஆநந்த ரூபமான, ஆதியை-முதற்பொருளை, அநாதி - பழையதாகிய, ஏகதத்துவ சொரூபத்தை - ஒருபொருட் டன்மையையுடைய வடிவை, மதசம்மதம் பெரு-மதசம்மதமடையாமல், சாலம்ப ரகிதமான-சாலம்ப நீக்கமான, சாசு வத புட்கல நிராலம்ப ஆலம்ப சாந்தபத வ்யோம நிலையை - சாசுவதம், புட்கலம், நிராலம்பம், ஆலம்பம், சாந்தபதம் என்னும் பெயர்களுக்குரிய பரம வ்யோம நிலையை, நித்த நிர்மல சகித-அழியாதமல நீக்கங்களோடு கூடிய, நிஷ்ப்ரபஞ்சப்பொருளை - நிஷ்ப்ரபஞ்சவஸ்துவை, நிர்விஷய சுத்த மான - விஷய ரகிதமாகிய சுத்தமமைந்த, நிர்விகாரத்தை - விகாரமின் மையை, தடத்தம் ஆய்நின்று ஒளிர் - நேராகி நிலைபெற்று விளங்குகின்ற, நிரஞ்சன நிராமயத்தை - நிரஞ்சன நிராமயங்களையுடையதை, சித்தம் அறி யாதபடி-கருத்தறியாதவகை, சித்தத்தில்நின்று இலகு - கருத்தில் நின்று பிரகாசிக்கின்ற, திவ்ய தேசோமயத்தை-தெய்விகமான தேஜோராசியை, சிற்பர வெளிக்குள் வளர்-மேலான சிதாகாயத்தில் விருத்தியடைகின்ற, தற்பரமதான-தனக்குப்பரமாகிய, பரதேவதையை-மேலானதெய்வத்தை; அஞ்சலி செய்வாம் (யாம்) - கைகூப்பி வணங்குவோம், எ று.

அத்துவிதம். இரண்டன்மை. இரண்டின்மை என்பாருமுளர். சாலம்பம்-பற்றுக்கோடு, சாசுவதம்-கேடின்மை, புஷ்கலம்-நிறைவு, நிராலம்பம்-ஆதாரமின்மை, ஆலம்பம் - ஆதாரம், சாந்தபதம் - ஒடுக்கநிலை, வியோமம் ஆகாயம், நிஷ்ப்ரபஞ்சம்-பிரபஞ்சநீக்கம், நிரஞ்சனம்-தோஷமின்மை, நிராமயம்-நோயின்மை, தற்பரமென்பதில்-தன் என்றது ஆன்மாவை. சாலம்பவாலம்ப முதலியன சிவயோகமுறை.

"ஆரணங்கள் முடிந்தபதத் தானந்த வொளி" என்பவாகலின், சிற்பர வெளிக்குள்வளர் தேவதையை எனக் கூறினர், உமை இறைவனோடு அபேதமாய் நீக்கமின்றி நிற்றலைக்கி என்க. இறைவன் காட்டுஞ்சித்தும், ஆன்மா காணுஞ் சித்துமாதலால் 'அறிவினுக் கறிவாகி என்றார். இதனை அறிவினலறிந்து' என்றதனு ணுணர்க.

அத்துவிதவஸ்துவென்றது 'அருமறைகளொன்றென்னுது அத்துவித மென்றதுநோக்கி, சிவஞானமுனிவரும்.'அது, வேதங்கள் ஏகமென்னுது பிரமம் அத்துவிதமென்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்குமென்னும் பொருட்டாதலால், அஃது ஏகமென்பதனோடு முரணுமாறில்லை' யென்பர்.

பரிபூரணானந்தம்.

4 வாசாக யிங்கரிய மன்றியொரு சாதன
மனோவாயு நிற்கும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன்றுறவு
மார்க்கத்தி னிச்சைபோல
நேசானு சாரியாய் விவகரிப் பேனந்த
நினைவையு மறந்தபோது
நித்திரைகொள் வேன்றேக நீங்குமென வெண்ணிலோ
நெஞ்சந் துடித்தயருவேன்
பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கரும் வெகுதூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய
பேரின்ப நிட்டையருள்வாய்
பாசா டவிக்குளே செல்லா தவர்க்கருள்
பழுத்தெதாழுகு தேவதருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

இ-ள். வாசாகயிங்கரியம் அன்றி - வாசிகமாகிய கயிங்கரியத்தி லல்லது, மனோவாயுநிற்கும்வண்ணம்-மனமும வாயுவும் அலைவற நிற்கும்வகை;

ஒருசாதகம-ஒருபழககத்தை, வாலாயமாகவும பழகி அறியேன்-தடையறப் பயின்று மறியேன். தூறவுமார்ககத்தின் இசைபோல - தூறவுநெறிக்கண் விருப்பமுடைமைபோல, நேசா சாரியாய் விவகரிபபேன்-அடியார்க் கநு சரணையுடையாருைய் விவகரித்துநிற்பேன்,அந்த நினைவையும் மறந்தபோது-அந்த நினைப்பையும் மறந்தகாலத்தில், நித்திரைகொள்வேன்-தூஙகுவேன், தேகம் நீங்கும் என எண்ணிலோ - சரீரம் நீஙகுமென்று நினைத்தாலோ, நெஞ்சம் துடித்து அயருவேன்-மனம் பதைத்து வாடுவேன், பேசாத ஆநந் தம்-சொல்லக்கூடாத இன்பத்தைத் தருகின்ற, நிட்டைக்கும்-நிஷ்டைக் கும, அறிவு இல்லா பேதைக்கும்-சேதனப் பொருளிது அசேதனப் பொரு ளிது என்னும் விவேகமில்லாத பேதையேற்கும், வெருதூரமே - நெநிந் தூரமே, (ஆயினும்) பேய் குணம் அறிந்து-பேதைமைகுணத்தை யறிந்து, இந்தநாய்க்கும் - இந்தநாயினேனுக்கும், ஒருவழி - ஒப்பற்ற நெறியாகிய, பெரியபேரின்ப நிட்டை யருள்வாய்-மிகப்பெரிய ஆநந்தத்தைத் தருதற் குரிய சகச நிஷ்டையை அருள்செய்வாய், பாசாடவிக்குளே செல்லாத வர்க்கு-ஆசையாகிய காட்டில் பிரவேசியாதவர்க்கு, அருள் பழுத்து ஒழுகு-அருட்கனி பழுத்து (ஆநந்தத்தேன்) ஒழுகப்பெற்ற, தேவதருவே-கற்பகத் தருவே, பார்க்கும் இடம் எங்கும்-நோக்கு மிடந்தோறும், ஒருநீக்கம் அற நிறைகின்ற - சிறிதும் நீக்கமில்லாமல் நிறைந்து நிற்கின்ற, பரிபூரணாநந் தமே-பரிபூரண சுகமே. எ-று.

வாசிக கைஙகர்யம்-சொன்மாலை சூட்டல். மநோவாயு நிற்கும் வண் ணம் ஒருசாதகம் என்றது-இயமம், நியமம், ஆதகம், பிராணயாமம், பிரத்தி யாகாரம், தியானம், தாரணை, சமாதி என்னும் எண்வகை யுறுப்பு களோடுகூடிய யோகாப்யாசத்தை. இதன் விரிவெல்லாம் யோகநூல்களில் காண்க. இவ்வாறே 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்' என்னுமிக்குறட் குப் பரிமேலழகர் கூறுவதனாலு முணர்க. பழுத்து என்றமையால் அருள் கனியாக்கி யுரைக்கப்பட்டது. ஒழுகு என்றமையால் அவ்வொழுக்குக்கு நினைமுதலாகிய தேன்வருவித் துரைக்கப்பட்டது. மநோவாயுவென்றது 'மன மெங்குண்டு வாயுவங்குண்டு' என்பவாதலினென்க. காற்றின மிசமே மனமாகலின் மநோவாயுவென்றார். தூறவென்பது புறமாகிய செல் வத்தின் கண்ணும், அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாய்பற்றினை அவற்றது நிலையாமை நோகதி விதலை இதனையே கருதி 'நிலையாமை நோய் மூப்புச சாக்காடென்றெண்ணித் - தலையாயார் தங்கருமஞ் செய் வார்' என்றார் பிறரும்.

5 தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பனமுதல்
தேகங்க ளத்தனையு மோகன்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாஙகிலகுமம

விரிவாய பூதங்க ளொன்றொடொன் றுயழியு
மேற்கொண்ட சேடமதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்ய முபசாந்த
வேதவே தாந்தஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருளருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை யென்றைக்கு பிறவாமை யாயவந்து
பேசாமை யாகுமெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

இ-ள். தெரிவாக-தெளிவோடுகூடி, ஊர்வன-ஊர்வனவும், நடப்பன-நடப்பனவும், பறப்பன-பறப்பனவும், செயல்கொண்டு இருப்பன-செய்கையைக் கொண்டிருப்பனவும், முதல்-முதலாகிய, தேகங்கள் அத்தனையும்-எல்லாச்சரீரங்களும், மோகங்கொள் பௌதிகம் - மயக்கத்தைக்கொண்ட பௌதிகமென்று சொல்லப்பட்டு, சென்மித்த ஆங்கு இறக்கும்-உற்பத்தியானதுபோலவே நாசத்தையடையும், விரிவாய பூதங்கள்-பரவியிருக்கிற ஐம்பெரும்பூதங்கள், ஒன்றொடு ஒன்றுய் அழியும்-ஒன்றுக்குள் ஒன்றுய் ஒடுங்கும், மேற்கொண்ட சேடம் அதுவே-அவற்றுக்கு மேற்பட்டிருக்கிற அந்த வஸ்துவே, வெறுவெளி (என)-வெட்டவெளியெனவும், நிராலம்பம் (என)-ஆதாரமற்றதெனவும், நிறைசூன்யம் (என) - பெரும்பாழெனவும், உபசாந்தம்-உபசாந்தத்தை யுண்டாக்குகிற, வேதவேதாந்த ஞானம் (என)-வேத வேதாந்தங்கள் தணிந்துசொல்லும் ஞானமெனவும், பிரியாத பேரொளி பிறக்கின்ற அருள் (என)-நீங்காதபெருஞ் சோதியிலுதிக்கின்ற அருளெனவும், அருள்பெற்றோர்கள் பெற்றபெருமை (என)-அருளைப் பெற்றோர்கள் பெற்ற பெருமை யெனவும், பிறவாமை என்றைக்கும் இறவாமையாய் வந்து பேசாமை ஆகும் என - பிறப்பின்மையும் என்றும் இறப்பின்மையுமாய் வந்து மோகங்கொள்ளுமாகுமெனவும், எனக்கு-அடியேனுக்கு, அறிவிக்க-அறிவுறுத்தற்பொருட்டு, நீபரிவாய்வந்தது-நீ அன்பாக எழுந்தருளியதற்குக் காரணம், பரிபாக காலம் அலவோ-எனபரிபகுவ கால மல்லவோ, பார்க்குமிடம்.—எ-று.

ஊர்வன-எறும்புமுதலியன, நடப்பன - விலங்குமுதலியன. பறப்பன-சருடன் முதலியன. இருப்பன - மரமுதலியன, இவற்றிற்குக காற்றிஞல் அசைதல் முதலியவை செயலாதலால், செயற்கொண்டிருப்பன என்றார். பௌதிகம்-பூதங்களாலாக்கப்பட்டது.

தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன செயற்கொண் டிருப்பன மூதற் றேகங்கள் என்றது வினேவயத்தாற் பிறக்கும் பிறப்பேழென வினக் கற்பொருட்டென்க. இதனே 'ஊர்வதி லெனன்ரு மொன்பது மானுடம்' நீர்பறவை நாற்கா லோர்பப்பத்தாம்-சீரிய, பத்தமாந்தேவர் பதினலயன் படைத்த, அந்தமில்சீர்த்தாவரமாலைந்து'—என்னுஞ் செய்யுளானுமுணர்க.

தோன்றி நின்றழியும் எப்பொருளும் பூதபௌதிகமாதலானும் அவை தோன்றியவழியே மீட்டுமொடுங்கலானும் 'தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன செயற்கொண்டிருப்பன மூதற்றேகங்களத்தனேயுமோகங்கொள் பௌதிகஞ் சென்மிதத வாங்கிறக்கும்' என்றும், அங்ஙனந் தோன்றி நின் றழியும் பூதகங்களைக் காரியப்படுத்துமவன் கருத்தா ஒருவனுதலின் 'மேற் கொண்ட சேடமதுவே' என்றும், அவனேயறிவது திருவருண் ஞானத்தா லாவதே என அதன் இலக்கணந்தோன்ற, 'வெறுவெளி நிராலம்பநிறை சூன்ய முபசாந்த வேதவேதாந்தஞானம்' என்றும், அதுவும் அவனருளாற் பெறுவதாதலின் 'பிரியாத பேரருள்' என்றும், அதைப்பெற்றோர் இரும் புண்ட நீரிற்றிரும்பாத மூத்தியடைவராதலின் 'பெற்றோர்கள் பெற்ற பெருமைபிறவாமை' என்றும், அது மானைக்காட்டி மான் பிடிப்பார்போல் மான் இடனுக வடிவுகொள்ளாது மானிடனுக வடிவங்கொண்டுவந்து காட்டியது என்பரிபாகநோக்கி என்பார் 'எனகு நீயறிவிக்கவந்ததே பரி பாக காலமலவோ, என்றுங் கூறினர். பேசாமையென்றது அனுபூதி நிலையை. அற்றுகலின் 'பேசாவனுபூதி பிறந்ததுவே' என்றார் பிறரும்.

6 ஆராயும் வேளையிற் பிரமாதி யாலுமை
யவொரு செயலுமில்லை
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென விருந்தபேரும்
நேராக வொருகோப மொருவேளை வ்ரவந்த
நிறைவொன்று மில்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளமு வார்வசன
நிர்வாக ரென்றபேரும்
பூராய மாயொன்று பேசுமிடமொன்றைப்
புலம்புவார் சிவராத்திரிப்
போதுதுயி லோமென்ற விரதியரு மறிதுயிற்
போலே யிருந்துதுயில்வார்
பாராதி தனிலுள்ள செயலெலா முடிவிலே
பார்க்கினின் செயலல்லவோ

பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

இ-ள். ஆராயும் வேளையில்-ஆராய்ந்துபார்க்கும் சமயத்தில், பிரமாதி ஆனலும்-பிரமன் முதலானவர்களுக்காயினும், ஐய ஐயனே, ஒரு செயலும் இல்லை - ஒருசெய்கையும் இல்லை, அமைதியொடு - நிறைவொடு, பேசாத பெருமைபெறு-பேசாமையாகிய பெருமையை யடைந்த, குணசந்தர் ஆம் எனை இருந்தபேரும்-குணத்தில் சந்திரனை ஒத்தவர் இவரென்று பிறர்சொல் லும்படியாய் இருந்தவர்களும், நேராக-செவ்வையாக, ஒருவேளை-ஒரு சமயத்தில், ஒருகோபம் வர-ஒரு கோபம் வந்தால், அந்த நிறைவு ஒன்றும் இல்லாமலே-அந்த அமைவு சிறிதுமின்றியே, நெட்டியிர்த்து - பெருமூச செறிந்து, தட்டு அழிந்து உளறுவார்-தடைகெட்டுக் குழறுவார்கள், வசன நிர்வாகர் என்றபேரும்-வார்த்தைசொல்வதில் நிர்வாகராகிய சமாத்தர்கள் என்று சொல்லப்பட்டவர்களும், பூராயமாய் - ஆத்யந்தமாய், ஒன்றுபேசு மிடம்-ஒருவிஷயத்தைப் பேசுமிடத்தில், ஒன்றை புலம்புவார் - வேறொரு விஷயத்தைப் புலம்பாநிற்பர், சிவராத்திரிபோது-சிவராத்திரி காலத்தில், துயிலோம் என்ற விரதியரும்-உறங்கோம் என்றுசொல்லுகிற சிவராத்திரி விரதம்பூண்டவரும், அறிதுயில்போலே இருந்து துயில்வார் - அறிவோடு கூடிய நித்திரைபோல இருந்து உறங்குவார்கள், (ஆதலால்) பாராதிதனில் உள்ள செயல் எல்லாம் - பூமிமுதலான இடங்களிலுள்ள செய்கைகளெல் லாம், முடிவிலே பார்க்கின் - முடிவிலே ஆலோசித்துப்பார்த்தால், நின் செயல் அல்லவோ - உன் செய்கையாய் இருக்கின்றதல்லவோ, பாரத மிடம்:—எ-று.

குணம் தட்பத்தால் சந்திரனுக்கு உவமைப்பொருளாயிற்று. எப் பொருளையும் அசைப்பிப்பவ னிறைவுகளின் 'பாராதி தனிலுள்ள செய லெலா முடிவிலே பார்க்கினின் செயலல்லவோ' என்றார்.

பிரமாதியானலும் எனசிறுவ்டியைக் கூறினமையால் ஸ்த்திதி சங் காரங்களும் அமையும். ஒருகோபம் ஒருவேளைவர என்றது, அவர்கொண்ட கோபம் ஒவ்வோர் காலத்தில் சிறிதுபோதே நிகழும் என்றற்கு "குண மென்னும் குன்றேறி நின்றூர் வெகுளி கணமேயுங் காத்தலரிது" என்பத னானும், அவர் வெகுளி சிறிதுபோதே நிகழுமென்பதறிக "மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய-பிறதத லதனென் வரும்" என்பவாகலின், நெட்டியிர்த் துத்தட் டழிந்துளறுவார் என்றும், கணனடங்கக் கற்றனு மில்லையாதலால் ஒன்று பேசுமிடமொன்றைப் புலம்புவார் என்றுங் கூறி னர். அறிதுயில்போலே யிருந்து துயில்வார் என்றது விழித்திருப்பது போல் பாவனைகாட்டி அந்தகரணங்கள் சோர்வடைய உறங்குதலே.

குணன் - குற்றம்

7 அண்டபகி ரண்டமும மாயாவிகாரமே
யம்மாயை யில்லாமையே
ஆமெனவு மறிமூண் டப்பாலு மறிகின்ற
வறிவினை யறிந்துபார்க்கின்
எண்டிசை விளக்குமொரு தெய்வவரு ளலலாம
லில்லையெனு நினைவுமூண்டிங்
கியானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே
யின்பமெனு மன்புமூண்டு
கண்டன வெலாமல்ல வொன்றுகண் டுனைசெய்து
கருவிகா ணங்களோயக்
கண்மூடி யொருகண மிருக்கவென் ழுற்பாழ்த்த
கர்மங்கள் போராடுதே
பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
பகுதிகா னிச்சிப்பலே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

இ-ள். அண்டபகி ரண்டமும் - அண்டபகிரண்டங்களும், மாயாவிகாரமே-மாயாவிகாரத்தின் வடிவேயாகும், அம்மாயை - அந்த மாயையென்னும் பொருளானது, இல்லாமையே ஆம் எனவும் - பொய்யேயாகுமென்றும், அறிவும் உண்டு - உணர்ச்சியும் உண்டு, அப்பாலும் - அதற்குமேலும், அறிகின்ற - உணர்கின்ற, அறிவினை - உணர்ச்சியை, அறிந்து பார்க்கின்-உணர்ந்து பார்க்குமிடத்து, எண்டிசைவிளக்கும் - அஷ்ட திசைகளையும் விளங்கசெய்கின்ற, ஒருதெய்வ அருள் அல்லாமல்-ஒருகடவுளின் கிருபையில்லாமல், இல்லை என்னும்-இல்லையென்கின்ற, நினைவும் உண்டு-நினைப்பும் உண்டு, இங்கு-இப்படியே, யான் எனது அற-யான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் இல்லாமல் நீங்கும்படி, துரியம் நிறைவு ஆகி நிற்பதே - துரியபதத்தில் நிறைந்து நிற்பதே, இன்பம் என்னும் அன்பும் உண்டு-சுகம் என்கிற விருப்பமும் உண்டு, கண்டன எலாம் - பார்க்கப்பட்டன யாவும், அல்ல என்று உண்மைப்பொருள் அல்லவென்று, கண்டனை செய்து-கண்டித்து, கருவிகரணங்களோய - கருவிகளும் கரணங்களும் அடங்கும்படி, ஒருகணம்-ஒரு க்ஷணகாலம், கண்மூடி இருக்க என்றால் - கண்ணிதழுகளை மூடிக்கொண்டு (நிஷ்டையில்) இருப்போமென்றால், பாழ்த்த கர்மங்கள் போராடுதே-பாழான கர்மங்கள் போராடுகின்றனவே, (அவை யாவையென்றால்) பண்டை உள்ள கர்மமே - பூர்வமே அமைந்துள்ளனவாகிய கர்மமே, கர்த்தாவெனும் பெயர் பகுதி - காத்தா என்கிற பெயரினது பகுதியாக, நான் இசிப்பபலே நான விருமபுவேனோ, பார்க்குமிடம்—எ-று.

அண்டம்-திருவசக்கரத்துக்குட் பட்டது. பகிரண்டம் - வெளி அண்டம். அது திருவசக்கரத்துக்கு வெளிப்பட்டது. துரியம்-சீவன்முத்தர்க் குரியபதம். கண்டன எல்லாம் அல்ல என்று கண்டனைசெய்தலாவது நேதிவாக்கியத்தாற் களைதல், அது. "அல்லவீ தல்லை யீதென மறைகளு மன்மைச் சொல்லினுற் றுதித்திளைகும்" என்பதனானு முணர்க. கருவி-அகக்கருவி புறகருவிகள். கரணங்கள் மனம் முதலிய அந்தக்கரணங்கள். தனுகரணபுவனபோகங்கள் மாயாகாரியமாகலின் 'அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே' என்றார்.

காணப்பட்ட பௌதிகங்கள் அதனையும் அழியும் இயல்பின ஆயினும் காண்கின்றமையால் மெய்யே என்பாரைமறுக, கண்டனவெல்லாம் அல்லவென்று கண்டனைசெய்து என்றார்: கருவிகரணங்கள் ஓய்வதற்குக் கண்மூடியிருத்தல் ஓர் காரணமாதலால் 'கண்மூடியென்றும்' அவ்வாறு நிற்கினும், கருவிகரணங்கள் ஓய்தல் அருமைநோக்கி ஒருகணமிருக்க வென்றால் என்றும், அவ்வாறு நில்லாமைக்குக் காரணம் ஊழ்வினையென் பார் 'பாழ்த்த கர்மங்கள் போராடுதே' என்றும் கூறினர்.

8 சந்ததமு மெனதுசெய னினதுசெய லியானெனுந்
தன்மைநீ யன்றியில்லாத்
தன்மையாவ் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே
இந்தநிலைதெளியாத னெக்குருகி வாடிய
வியற்கைதிரு வுளமறியுமே
இந்நிலையி லேசற் றிருக்கவென் றன்மடமை
யிதசத்ரு வாகவந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மந்
திரும்புமோ தொடுவழக்காய்ச்
சென்மம்வரு மோவெனவும் யோசிக்கு தேமனது
சிரத்தையெனும் வாளுமுதவிப்
பந்தமற மெஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத் தருள்செய்குவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

இ-ள். சந்ததமும்-சதாகாலமும், எனதுசெயல்-என்செய்கை, நினது செயல்-உன்செய்கையே, யான் என்னும் தன்மை-நான் என்கிற தன்மை, நின்னை அன்றி இல்லாத் தன்மையால் - உன்னையன்றி இல்லாததன்மையினால், வேறு அல்லேன்-நான் உன்னினின்றும் வேறல்லாதவனாய் இருக்கிறேன், இதுவே - இந்த நிலையே, வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம் -

வேதாந்த சித்தாந்த சமரச இயற்கை ஆகும, இந்நிலே தெளிய-இந்த நிலேயை அறிய, நான் நெக்கு உருகி வாடிய இயற்கை - நான்மனம் நெகிழ்ந்து உருகிவாடினதன்மையை, திருஉளம் அறியுமே-தேவரீரது திருவுளம் அறிந்திருக்குமே, இந்நிலேயிலே-இந்நிலேயிற்றானே, சற்று இருக்கவென்றல் சிறிதுநேரம் இருக்கவேண்டுமென்றல், மடமை - அறியாமையானது, இதசத்ருவாகவந்து-இதத்தைசெய்கின்ற பகைவனேப்போல வந்து, சிந்தைகுடி கொள்ளுதே - என் மனத்தில் குடிகொள்ளா நின்றதே, மலம் மாயை கன்மம்-மலமாயாகன்மங்கள், திரும்புமோ எனவும்-மீட்டும் வருமோ வென்றும், தொடுவழக்காய் - தொடர்வழக்காகி, சென்மம் வருமோ எனவும்-பிறவி உண்டாமோ என்றும், மனது யோசிக்குதே-என் மனமானது ஆலோசிக்கின்றதே, (ஆதலால்) சிரத்தை என்னும் - சிரத்தை யென்று சொல்லப்பட்ட, வாளும் உதவி-வாளேயும்கொடுத்து, பந்தம் அற-பிறவிக் கட்டு ஒழிய, மெய்ஞ்ஞானதீரமும் தந்து-மெய்ஞ்ஞான தைரியத்தையும் கொடுத்து, என்னேப்பாதுகாத்து அருள்செய்குவாய் - என்னே இரகூழித் தருள்வாய், பார்க்குமிடம்:—எ-று.

எல்லாம் இறைவன் செய்விக்கச செய்வதனுல் சந்ததமு மெனது செயனினது செயலென்றும், அவன் பரிபூரணவியாபகத்தில் உயிர்கள் வியாப்பியமாகலின் யானெனுந்தன்மை நினேயன்றியில்லாத் தன்மையால் வேறலேன் என்றும், இதுவே வேதாகமங்களின் துணிபாதலால் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே என்றும், இந்நிலேயைக்கேட்டுச் சிக்திக்துத் தெளியப்பழகியது திருவருள்துணேயாயாதலின் இந்த நிலேதெளிய நானெக்குருகிவாடிய வியற்கை திருவுளமறியுமே என்றும், இந்நிலேயிலே பழகிவருகையில் பழயவாசனேப்பழக்கத்தால் அறியாமைவந்து தாக்கலின் இந்நிலேயிலே சறறிருக்கவென்றல் மடமை இதசத்ருவாக வந்து சிந்தை குடிகொள்ளுதே என்றும், அறியாமை காரணமாக மலமாயாகன்மங்கள் அடர்தலின் மலமாயாகன்மம் திரும்புமோ தொடுவழக்காய் என்றும், மாயைகாரணமாகப் பிறவிதோன்றுதலின் சன்மம்வருமோ வெனவும் யோசிக்குதே என்றும், அது கேள்விசெல்வத்தாலாகிய சிரத்தை யென்னும் வாளினுலல்லது களேயப்படாதென்பார் சிரத்தையெனும் வாளுமுதவிப் பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனேப் பாதுகாத் தருள்செய்குவாய் என்றும் கூறினர்.

மலமாயை கன்மமென்பன மூவகைப் பாசவிசேடங்களே. இவ்வாறு கூறுது ஐவகையென்பாருமுளர். வாளிருப்பினும் தீரமில்லாதவர்க்கு அது பயன்படாதாதலால் சிரத்தையெனும வாளுமுதவிப் பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந்தந்து என்றார். இதசத்ரு - புறத்தில் நட்புள்ளவன்போல் நடித்து அகத்தில் விரோதமுள்ள பகைவன். தொடுவழக்கு - தீராவழக்கு. சிரத்தை-சமாதிஷ்டாக சம்பத்திலொன்று. (அது சாஸ்திரார்த்தங்களேக்

என்பர்-சிலபோ சொல்லுமிடத்துத் திருவருளே பொருளென்பார்கள், சிலா பின்னுமுன்னும்கெட்ட சூனியம் என்பர்-சிலபேர் அந்தமும் ஆதியு மில்லாத பாழே பொருளென்பார்கள், (சிலர்) பிறவும் மொழிவர்-சிலர் வேறுசிலகளையும் பொருளென்பார்கள், இவையால்-இவைகளால், மனது பாதரசமாய் சஞ்சலப்படுதலால்-மனமானது பாதரசம்போலச சலித்தலை யடையுமேயன்றி, பரமசுக நிஷ்டடை பெறுமோ-மேலான ஆநந்த நிஷ்டடையை அடையுமோ, பார்க்குமிடம் —எ-று.

பொறி-மெய், வாய, கண், மூகு, செவி என்பன. புலன்-ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம் என்பன. கரணம்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. முக்குணம் - ராஜசம் தாமஸம், சாத்துவிகம் என் பன. பாதரசம் சூதம்.

10. அந்தகா ரத்தையோ ரகமாக்கி மின்போலென்
னறிவைச் சுருக்கினவரார்
அவ்வறிவு தானுமே பற்றினது பற்று
யழுந்தவுந் தலைமீதிலே
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான
சுகநிஷ்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவி மூண்டுண்டு
தூங்கவைத் தவரார்கொலோ
கருதைதாய் முதலான வகிலப்ர பஞ்சந்
தனைத்தந்த தெனதாசையோ
தன்னையே நோவனே பிறரையே நோவனே
தற்கால மதைநோவனே
பந்தமா னதுதந்த வினையையே நோவனே
பரமார்த்த மேதுமறியேன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(இ-ள்.) அந்தகாரத்தை-அஞ்ஞானமாகிய இருளை, ஒரு அகம் ஆக்கி-ஒரு இருப்பிடமாக்கி, மின்போல்-மின்னலைப்போல, என் அறிவை சுருக் கினவர் ஆர்-என்னறிவைச சுருங்கசசெய்து அதனிடத்து வைத்தவர் யார், அவ்வறிவுதானும்-அந்த அறிவும், பறறினது பற்றுய் அழுந்தவும் தான் பிடித்ததையே ஆதாரமாய்க்கொண்டு அதில் மூழ்கவும், தலைமீதிலே-என் சிரத்தின்மீது, சொந்தமாய் எழுத - சுவதந்திரமாய் எழுதிவைப்பதற்கு, படித்தது ஆர்-கற்றது யார், மெய்ஞ்ஞான சுகநிஷ்டைசேராமல்- உண்மை யாகிய ஞானானந்தங்களுக் கேதுவாகிய நிஷ்டையைப் பொருந்தாமல், சோற்றுத் துருத்தியை-சோற்றுத் துருத்தியாகிய சரீரத்தை, சதம் என

வும்-நிலையென்று நினைத்தும், உண்டு உண்டு-பலகாலுண்டு, தூங்கவைத்தவர் ஆர்-உறங்குவித்தவர் யார், தந்தை தாய் முதலான-தகப்பன் தாய் முதலாகிய, அகிலப்ரபஞ்சம்தனை - பிரபஞ்சமுழுவதையும், தந்தது - உண்டாக்கினதற்குக்காரணம், எனது ஆசையோ-என் விருப்பமோ, தன்னையே நோவனே-என்னை நானே நொந்துகொள்வேனே, பிறரையே நோவனே-அன்னியரையே நொந்துகொள்வேனே, தற்காலமதைநோவனே-(இவை களெல்லாம் நிகழுதற்கிடமாகிய) தற்காலததை நொந்துகொள்வேனே, பந்தமானதுதந்த வினையையே நோவனே-பிறவித்தனையை யுண்டாக்கின பூர்வகன்மங்களைத் தான் நொந்துகொள்வேனே, பரமார்த்தம் ஏதும் அறியேன்-மேலான அர்த்தம் சிறிதும் உணர்ந்திலேன், பார்க்குமிடம்:—எ-று.

உடையானை உணரவொட்டாமல், உயிரை மறைத்து நிற்றலின் அஞ்ஞானத்தை யறிவுக்கிடமாக்கி 'அந்தகாரத்தையோ ரகமாக்கி மின்போல் என்னறிவைச சுருக்கினவர்யார், என்றும், அவவறிவுதானுமே அவவஞ்ஞானத்தையே ஆதரவாகப் பற்றி உடையானை மறக்கசெய்ததென்பார், அவவறிவுதானுமே பற்றினது பற்று யழுந்தவுந் தலைமீதிலே சொந்தமா யெழுதப்படித்ததார், என்றும்,அவவஞ்ஞானத்தைக் கெடுக்க ஞானசமாதி கூடாமல், உடம்பைப் பாதுகாத்தலிலேயே காலங்கழித்தேன் என்பார் 'மெய்ஞ்ஞான சுகநிஷ்டை சேராமலே' சோற்றுத்துருத்தியைச் சதமெனவு மூண்டு' தூங்கவைத்தவரார், என்றும கூறினர். 'அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்-தவாப்பிறப் பீனும் வித்து', என்றபடி அவாவின் காரணமாகத் தந்தைதாயர் முதலிய சகல பிரபஞ்சங்களும் தோன்றலின் 'தந்தைதாய் முதலான வகிலப்ரபஞ்சந் தனைத்தந்த தெனதாசையோ' என்றும் இவ்வாறு அவாவினால் இடர்படுகின்றவர் அநுதாபத்தால் தான், பிறர், காலம், வினையாகிய இவற்றுள் யாரை நோவேனென்பார் தன்னையே நோவனே பிறரையே நோவனே முதலியனவாகப் பலபடக் கூறினர்.

11 வாரா தெலாமொழிய வருவன வெலாமெய்த
மனதுசாட் சியதாகவே
மருவுநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த
மரபுசம ரசமாகவே
பூராய மாயுனரு ஹ்கமது தந்ததும்
பொய்யுடலை நிலையன்றெனப்
போதகெறி தந்ததுஞ் சாசுவத வானந்த
போகமே வீடென்னவே
நீராள மாயுருக வுள்ளன்பு தந்ததும்
நின்னதரு ளின்னுமின் னும்

நின்னையே துணையென்ற வென்னையே காக்குவொரு
நினைவுசற் றுண்டாகிலோ
பாராதி யறியாத மோனமே யிடைவிடாப்
பற்றுக நிற்கவருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே.

இ - ள். வாராதெலாம் ஒழிய - வாராதவை யெல்லாம் வாராமலே யொழிக, வருவன எல்லாம் எய்த-வருவன எல்லாம் வந்தே தீர்க, (என்று) மனதுசாட்சியதாக மருவ-மனமானது நடுவுநிலைமையான சாட்சியாய் நிற்கப்பொருந்தும்படி, நிலைதந்ததும்-(உண்மை) நிலையைக்கொடுத்ததும், வேதாந்தசித்தாந்த மரபுசம ரசமாக-வேதாந்தமரபு சித்தாந்தமரபு என்பன சமரசமாயிருக்கிறதாக, பூரணமாயுணர-ஆத்யந்தமாய் யறியும்படி, ஊகமது தந்ததும்-ஊகத்தைக் கொடுத்ததும், பொய் உடலை நிலை அன்று என-பொய்யாகிய சரீரத்தைச சாசுவதமல்லவென்று தீர்மானிக்க, போதமெறி தந்ததும்-ஞானமார்க்கததைக் கொடுத்ததும், சாசுவத ஆநந்த போகமே வீடு என்ன - நித்தியாநந்தானுபவமே முத்தியென்று, நோளமாய் உருக-நீரின் றண்மையா யுருகும்படி, உள்ளன்பு தந்ததும்-உள்ளன்பைக் கொடுத்ததும், நின்னது அருள்-உனது திருவருளே, இன்னும் இன்னும் - மேலுமேலும், நின்னையே துணை என்ற - உன்னையே துணையாகப்பற்றின, என்னையே காக்க-என்னையேபாதுகாத்தற்கு, ஒருநினைவு - ஒப்பற்றதிருவுளம், சற்று உண்டாகிலோ - சிறிது உண்டானால், பாராதி அறியாதமோனமே - நிலமுதல் நாதமிறுதியாகக கிடந்த தத்துவங்களால் அறியப்படாத மௌன நிலையே, இடைவிடா பற்று ஆக நிற்க - இடையறாத பற்றுக்கோடாகக் கொண்டு நான் அந்த நிலையில் நழுவாது நிற்கும்படி, அருள்வாய்-கிருபை புரிவாய், பார்க்குமிடம்:—எ-று.

"வருந்தி யழைத்தாலும் வாராத வாசா, பொருந்துவன போலினென்றுற் போசா" என்று நாகலின், வாராதெலாமொழிய வருவனவெலாமெய்த என்றும், இத்தனையும் துணிவதற்கு மனமிடமாதலின் மனது சாகஷியநாகவே என்றும தான் பெறவேண்டுவது சிவானுபவச செல்வமாதலின் மருவநிலைதந்ததும் என்றும், அவ்வுண்மைநிலை வேதாந்த சித்தாந்த சமரசமாகலின், வேதாந்த சித்தாந்த மரபுசமரசமாகவே என்றும, அது மெய்யுணாவாற் பெறப்படுவதாலின் பூரணமாயுணர ஆகமது தந்தது மென்றும், அவவுண்மைநிலை தோன்றியகாலத்தில் யாக்கைநிலையாமை யென்பது பெறப்படலான் பொய்யுடலை மெய்யன்றெனப் போதமெறித்ததும் என்றும, நேகாதிப் பிரபஞ்சம் நிலையாமை யெனத் தோன்றிய வீடத்து முத்தி கைவருதலான். சாசுவத ஆனந்த போகமே வீடென்ன

என்றும். அது கைவரலால் மெய்யன்பே யுருவமாகக் கரைதலின். நீராளமா யுருக வுள்ளன்பு தந்தருள் என்றும் இரண்டினையும் இறைவனது திருவருட் பிரோகமாதலின். நின்னதருளென்றும். இன்னும் என்னைப் பிரவிவாரா மற் காக்கவேண்டுமாயுல் தத்துவாதீதமான மௌனநிலை வாய்க்கவேண்டு மென்பார் இன்னமின்னம் பாராதியறியாத மோனமே யிடைவிடாப் பற் ருக நிற்கவருள்வாய் என்றுங் கூறினர். நீராளமாய் - நீரின்றன்மைபோல ஊடகம்-யக்தி.

12 ஆழாழி கரைபின்றி நிற்கவிலே யோகொடிய
ஆலமமு தாகவிலையோ
அக்கடலின் மீதுவட வனனிற்க வில்லையோ
வந்தரத் தகிலகோடி
தாழாம னிலைநிற்க வில்லையோ மேருவுக
தனுவாக வலையவிலையோ
சப்தமே கங்களும் வச்சிரதர ஞணையிற்
சஞ்சரித் திடவில்லையோ
வாழாது வாழவே யிராமனடி யாற்சிலையு
மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ
பாழான வெண்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண னந்தமே.

இ - ள். ஆழ் ஆழி கரையின்றி நிற்க இல்லையோ-ஆழ்ந்த கடலானது கரையில்லாமலே தன்னெல்லைகடவாது அடங்கி நிற்கவில்லையோ, கொடிய ஆலம் அமுது ஆக இல்லையோ-கொடிய விஷமானது (சிவனுக்கு) உண வாகியமையவில்லையோ, அக்கடலின்மீது - அந்தக்கடலின் நடுவில், வடவ னல்நிற்க இல்லையோ - வடவைதீயானது அவியாமல் நிலைபெற்றிருக்க வில்லையோ, அந்தரத்து - ஆகாயத்தில், அகிலகோடி - அண்டகோடிகள், தாழாமல் நிலைநிற்க இல்லையோ-கவிழாமல் நிலைபெற்றிருக்க வில்லையோ, மேருவும் தனு ஆக வளைய இல்லையோ - மேருமலையம் சிவருல் வில்லாக வளைக்கப்படவில்லையோ. சப்தமேகங்களும்-மேகங்களேழும், வசரதரன் ஆணையில்-வசிராயுதத்தைத் தரித்த இந்திரனது ஆக்கினையிலடங்கி, சஞ் சரித்திட இல்லையோ வசிக்கவில்லையோ, வாழாது வாழ-வாழாமல் வாழும் படி, இராமன் அடியால்-ஸ்ரீராமனது ஸ்ரீபாதரேணுவால், சிலையும்-கல்லும், மடமங்கை ஆக இல்லையோ-இளம்பெண்ணாகிய அகலிகை யாகவில்லையோ.

மணிமந்த்ரம் ஆதியால்-மணிமந்த்ரம் முதலானவைகளால், வேண்டுசித்தி கள்-அவரவர்விரும்பின சித்திகள், உலகமார்க்கத்தில் வைக்க இல்லையோ-லௌகிகநெறியில் ஸ்த்தாபிக்கப்பட்டிருக்க வில்லையோ, பாழ் ஆன என் மனம் குவிய-பாழாகிய என்மனது அத்தாமுகமாய்க் குவியும்படி, ஒரு தந் திரம் பண்ணுவது - ஒரு உபாயஞ் செயவது, உனக்கு அருமையோ-மேற் குறித்த எல்லாவற்றிற்கும் தலைவனுகிய உனக்கு அருமையாகுமோ, பார் கருமிடம் :—எ-று.

ஆலம் அமுதானது பாற்கடலிற்றோன்றிய நஞ்சு தேவர்கள் பிரார்த் தனையால் சிவபிரானுக்கு அமுதுபோல நல்லுணவானது. வடவை-பெட் டைக குதிரையின் வடிவாய் கடவுளால் பக்கப்பட்டுக் கடலினடியில் நீரானது தன்னைல்லகடவா தமைத்துநிற்கும்படி யமைத்துவைக்கப்பட்ட தோர் நெருப்பு. மேருதனுவாக வளைந்தது-சிவனுல் திரிபுரதகனஞ் செய் யப்பட்ட காலத்தில். சப்தமேகங்கள்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலா வர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்னம் என்பன. இவை முறையே மணியையும், நீரையும், பொன்னையும், பூவையும், மண்ணையும், கல்லையும், நெருப்பையும் பொழிவனவாம். வாழாது வாழ்தலாவது - பூத வுடம்பு நசித்தும் புகழுடம்பு நசியாதிருத்தல். மணி-குளிகை.

'அலையுமனத்தை யகத்தடக்குமவனே சரிதைகடந்தோனும் - அலையு மனத்தை யகத்தடக்குமவனே கிரியை முடிந்தோனும் - அலையுமனத்தை யகத்தடக்குமவனே யோகதற்பரனும் - அலையுமனத்தை யகத்தடக்கு மவனே ஞானியதிசூரன், என்று பெரியோர் கூறுதலான் அம்மனமொடுங் காமையான், அதைபபலபட ஆழாழி கரையின்றி கிற்கவிலையோ என் பது முதலியவாக விதந்தும் அது ஒடுங்குலல்லது முதநியின்பம் பெறு வதற் கரிதென்பார் பாழானவென்மனங் குவியவொருதந்திரம் பண்ணுவ தனக் கருமையோ என்றும் கூறினர்.

13 ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்பீதிலே
யாணைசெல வேகினவ ரளகேச னிகராக
வமபொன்மிக வைததபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்க லைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலபாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவரெல்லாம
யோசிக்கும் வேளையிற் பசிதிர வுண்பதும்
உறங்குவது மாமுடியுமே

உள்ளதே போதுநா னுனைனைக் குளறியே
பொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணா னந்தமே.

இ - ள். ஆசைக்கு ஓர் அளவு இல்லை - ஆசைக்கு ஒரு வரம்பு இல்லை, (ஏனெனின்) அகிலம் எல்லாம் - உலகங்கள் எல்லாம், கட்டி ஆளினும் - (ஒருவர்) கட்டி ஆண்டாலும், கடல்மீதில் ஆணைசெல்ல நினைவர்-கடல் மீதும் தமது ஆக்கினை செல்லும்படியாக விரும்புவார்கள், அளகேசன் நிகர் ஆக-குபேரனுக்குச சமமாக, மிக அம் பொன் வைத்தபேரும்-மிகுதி யாகச சிறந்த பொன்னைத் தம்மிடத்தில் வைத்திருக்கிறவர்களும், ரசவாத வித்தைக்கு நேசித்து அலைந்திடுவர்-ரசவாத வித்தையை விரும்பித் திரி வார், நெடுநாள் இருந்தபேரும்-(இவ்வுலகத்தில்) நெடுங்காலம் இகலோக சுகத்தை அநுபவித்து வெறுக்கத்தக்கதசையை யடைந்தபேர்களும், இன் னும் நிலையாக-மேலும் (இவ்வுடம்பு) நிலைத்திருக்கும்படி, காயகற்பம் தேடி-காயசித்திக்குரிய கற்பமுறைகளைத் தேடி, (அவை கிடைக்கப்பெறுமை யால்) நெஞ்சு புண் ஆவர்-மனம் புண்படுவார்கள், எல்லாம் - இவைகளை யெல்லாம், யோசிக்கும் வேளையில்-ஆலோசிக்குங் காலத்தில், பசிதீர உண் பதும்-பசி அடங்கப் புசிப்பதும், உறங்குவதும் ஆக - தூங்குவதுமாகவே, முடியும்-முடிவுபெறும், (ஆதலால்) உள்ளதேபோதும்-(எனக்குத்தற்காலம்) உள்ளதே அமையும், நான் நான் எனக்குளறி-கான் நான் என்று அகங் கரித்துப் புலம்பி, ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி - ஒன்றைவிட்டு ஒன்றைத் தொட்டு, பாசக்கடற்குளே-ஆசையாகிய கடலில், வீழாமல்-வீழ்ந்தழுந்தா மல், மனது அற்ற-மனமிறந்த, பரிசுத்த நிலையை-பரிசுத்தமாகிய மௌன நிலையாகிய (மரக்கலத்தை), அருள்வாய் - கிருபை செய்வாய், பார்க்கு மிடம்:—எ-து.

கட்டி - கைக்கொண்டு. கடல்மீதில் ஆணைசெலுத்தினது ஸ்ரீராம பிரான் முதலியவரிடத்துக்காண்க.

அவாவே பிறவிக்குக் காரணமாகலானும் உயிர்க் குணமாகலானும் ஆசைக்கோரளவில்லை என்றும், நிலம் பொன் பெண் என்னுமாசை மூன்ற னுள் ஒருவன் ஒரு குடைநிழலில் உலகமுழுதுமாண்டாலும் பின்னு மாளக் கருதுவானுகலின் அகிலமெல்லாங்கட்டி யாளினும் கடன்மீதிலே யாணை செலவே நினைவனென்றும், பொற்குவியலை யிருநிதிக்கிழவனுகப் பெற்று ளாரும் இன்னும் பெறவிழைவதலின் அம்பொன்மிக வைத்தபேரும் நேசி த்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர் என்றும், அவாவைக்கொண்டிழலும்

தேகம் நிலையாகவிருக்கவருந்தி முயல்வாரென்பார், நெடுநாளிருந்தபேரும் காயகற்பந்தேடி நெஞ்சு புண்ணுவரென்றும், எல்லாம் முடிவாக யோசிக்கும்போது உண்பது முறங்குவதுமாக முடிதலான், பகிரீர உண்பது முறங்குவதுமாக முடியுமென்றும், கிடைத்தவரையினும் திருப்தியடைய வேண்டுமென்பார் உள்ளதே போதுமென்றும், ஆங்காரமேலீட்டால் ஒன்றைவிட்டொன்றை நாடிப்பாசத்திலாழாதுதன்னையும் இறைவனையும் காணுஞ்செல்வம் வேண்டுமென்பார், பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையையருள்வாயென்றும் கூறினர்.

பொருள்வணக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

1 நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச் [யைச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளி
சிந்தைசெய்வாம்.

(இ-ள்) நித்தியமாய்-சாசுவதமாகி, நிர்மலமாய்-மலரஹிதமாகி, நிஷ்களமாய்-உருவற்றதாகி, நிராமயமாய்-நோயற்றதாகி, நிறைவாய்-நிறைவாகி, நீங்கா சுத்தமுமாய்-நிறையுருத பரிசுத்தமுடையதாகி, தூரமும் ஆய்-தூரமும் ஆகி, சமீபமும் ஆய்-சமீபமும் ஆகி, துரிய நிறை சுடர் ஆய்-துரியபதத்தில் நிறைந்திருக்கின்ற சோதியாகி, எல்லாம் வைத்திருந்த தாரகம் ஆய்-எல்லாப்பொருளையும் தன்னிடத்தில் அடக்கியிருந்த ஆதாரப் பொருளாகி, ஆநந்த மயம் ஆகி-சுகரூபமாகி, மனவாக்கு எட்டாசித்து உருவாய்-மனோவாக்குகளால் எட்டப்படாத ஞானரூபமாகி; நின்ற-(என்றும் நாசரஹிதமாய்) நிலைபெற்றிருந்த, ஒன்றை-ஒப்பற்ற பொருளை, சுகாரம்பப் பெருவெளியை-ஆநந்தத் தொடக்கத்தையுடைய பேராகாயத்தை, சிந்தை செய்வாம்-சிந்திப்போம் (யாம்) எ-று.

மெய்யுணர்வாற் காணப்படுவதாகலின் நித்தியமா யென்றும், அஞ்ஞானியே மலநீக்கமுடையதாதலின் நிர்மலமாயென்றும், மலநீக்கமுடையாராற் காணப்படுவதாகலின் நிட்களமாயென்றும், ஜராமரணங்களற்ற தாகலின் நிராமயமாய் என்றும், யாண்டும் பரிபூரணமாதலின் நிறைவாய் என்றும்; என்றுந் தூய்மையுடையதாதலின் நீங்காச சுத்தமுமா யென்றும், மெய்

யன்பிலார்க்கெட்டாததாகலின் தூரமுமாயென்றும், மெய்யன்புடையார்க்குக் கிட்டப்படுவாதலின் சமீபமுமாயென்றும், துரியநிலையில் விளங்குவதாதலின் துரியநிறை சுடராயென்றும், சகலசேதனங்கட்குமிடமாதலின் எல்லாமவைத்திருந்த ரகமாய் என்றும், அடைந்தார்க்குச சுகரூபமாய்த் தோன்றுதலின் ஆநந்தமயமாகி என்றும், அதுமனவாக்கிறந்ததாகலின் மனவாக்கெட்டா என்றும் அறிவேவடிவாதலின் சித்துருவாயென்றும், அதனை இன்னதென்று சுட்டப்படாமையின் ஒன்றை என்றும், அது இன்பப்பெருவெளியாகலின் சுகாரம்பப்பெருவெளியென்றும், அதனைச சிந்திததாலல்லது பேறெய்த லரிதாகலின் சிநதைசெய்வாமென்றுங் கூறினர். சுகாரம்பம்-சுகோதயம.

2 யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரா னந்தக்
கோதிலமு தூற்றருமபிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
கொடுத்துக் காட்டுங்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்.

(இ-ள்) மனம் யாது நினையும்.- மனமானது எந்த வஸ்துவை நினைக்குமோ, அந்த நினைவுக்கு நினைவு ஆகி-அந்த எண்ணத்துக்கு எண்ணமாகி, யாதின்பாலும் எந்தப் பொருளினிடத்தும், பேதம் அற நின்று-வேறுபாடு இல்லாமல் ஒன்றி நின்று, உயிருக்கு உயிராகி-ஜீவான்மாவுக்கு உள்ளீடாகிய பரமாத்மாவாகி, அன்பருககு-தன்னிடத்தில் அன்பையுடைய அடியார்களுக்கு, கோது இல்-குற்றமில்லாத, பேரானந்த அமுது-பேரின்பத்தைத தருகின்ற அமிர்தமானது, ஊற்று அரும்பி - ஊற்றுருகசுரந்து, குணம் குறி ஒன்று அற-குணம் குறிகள் சிறிதும் இல்லாதொழிய, தன்னைக் கொடுத்துக்காட்டும்-அறப்பெரும் பொருளாகிய தன்னை அளித்து அகக்கண்ணுகருப்புலப்படும்படி காட்டாநிற்கிற, தீது இல்-தீது இல்லாத, பராபரம் ஆன-பராபரமாகிய, சிததாந்தப்பேரொளியை (வேதவேதாந்தங்களால் பூரணபட்சத்தைக் கண்டித்து இதுவே பரம்பொருளென்று) சித்தாந்தப்படுத்தப்பட்ட பெருஞ்சோதியை, சிந்தைசெய்வாம் சிந்திப்போம், (யாம்) எ-று.

அன்பருக்கே பேரானந்தக் கோதிலமு தூற்றரும்பி என்றதனால் பிறாக்கு துக்கஹேதுவா யிருப்பதென்பது கருத்து.

மனமெதனையும் நினைக்குங் கருவியாகலின் அதனை நினைப்பிப்பவன் இறைவனே என்பார் யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகியென்றும்,

யாண்மை அவன் பரிபூரணஞானின் அவவவ்வுயிரையு மியங்குவிப்பவ னவனே யென்பார் யாதின்பாலும் பேதமறகின்று உயிருக்கு உயிராகி என் றும், இவ்வாறிருக்கு மிறைவன் தன்னை வழிபடு மெய்யன்பினரைக கவர் ந்து தன்னைக் காட்டிக்கொண்டு பிற்றவினை அன்பருக்கே பேரானந்தக் கோதிலமு ஞற்றரும்பிக குணகுறியொன் றறத்தன்னைக கொடுத்துக காட்டும் என்றும், இவவகை விளங்கிநிற்பான் வேதசிவாகமங்களி னுசசி யிற் கிடந்த சிவபரஞ்சுடரேயாகலின் தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியென்றும், அவனது திருவடிதொழுவதே பெரும் பேறுகலின் சிந்தைசெய்வா மென்றுங் கூறினர்.

3 பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத் தறவிழுங்கிக்
கொண்டப் பாலுந் [யாஞ்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப் பொருளினை
சிந்தை செய்வாம்.

இ-ள். பெருவெளியாய்-பெரிய ஆகாயமாகி, ஐம்பூதம் பிறப்பு இட மாய்-பஞ்சமஹா பூதங்களுக்கும் பிறப்பிடமாகி, பேசாதபெரிய மோனம் வரும இடமாய்-சொல்லுதறகரிய பெரிதான மௌநநிலை யுண்டாதற்குரிய இடமாகி, மனமாதிக்கு எட்டாத-மனாதிகளுக்குக் கோசரியாத, பேரின்ப மாய்-பேரானந்தவடிவாகி, ஞானகுரு - ஞானசாரியா, அருளால் காட்டிட வும்-தமது பெருங்கருணையாற் காட்டிடவும் அன்பரைகோத்து-தன்னிடத் தன்புசெய்வோரை மூடி, அற - அவர்களுடைய சிவபோதங் கெடும்படி, விழுங்கிக்கொண்டு-விழுங்கா நின்றகொண்டு, அப்பாலும்-அதன்மேலும், தெரிவு அரிது ஆய் கலந்தது - அறிதற்கரிதாகிக கலந்து நின்றது, எந்தப பொருள்-எத்தவஸ்து, அந்தப் பொருளினை-அந்தவஸ்துவை, யாம் சிந்தை செய்வாம்-நாம் மனனம்பண்ணுவோம் .—எ-று.

“ குட்டித் திரட்கரடி யாரெழுகக் கோன்குதித்துக்
கட்டிப் புதைந்த கதையாகும—துட்டமலப்
பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க்குப்
புத்திபோற் காட்டும் பொருளா ”— என்பவாகலின், ஞானகுரு அருளால் காட்டிடவும் என்றார்.

பரமாகாச சொரூபியாதலின் பெருவெளியாயென்றும், நிலநீர் தீகால் வெளியென்னு மைம்பூதங்கட் கிடமாகலின் ஐம்பூதம் பிறப்பிடமா யென் றும், சிவானுபூதிச செல்வர் பெறும்பேறுகிய மோனநிலையே தோன்று

மிடமாதலின் பேசாத பெரியமோனம் வருமிடமாயென்றும, அது மன வாக்கிறந்த தாதலின் மனமாதிக்கெட்டாத பேரின்ப மயமா யென்றும்; அது ஞாஞசிரியர் திருவருளாற் காட்டப்பட்டும் அவரையுந் தான் வீழுங்கி நிற்பதாகலின் ஞானக்குருவருளாற் காட்டிடவு மன்பரைக் கோத்தற வீழுங்கிகொண் டப்பாலுந் தெரிவரிதாய்க் கலந்ததென்றும், அப்பொ ருளே பரம்பொரு ளாகலின் அதனைச சிந்தித்தாலல்லது இறுதியில் வீடு கிட்டுவ தரிதாகலின் அது துணிதற்பொருட்டு எந்தப்பொரு ளந்தப்பொரு ளினை யாஞ் சிந்தைசெய்வாமென்று கடாவிடைகளானுங் கூறினர்.

4 இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை
யெந்த நாளுஞ்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்
துரிய வாழ்வை
யகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
யமிர்தை நாடி
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கண்
முகிழ்த்து நிற்பாம்.

இ - ள். இகபரமும்-இகத்திலும் பரத்திலுமுள்ள, உயிர்க்கு உயிரை-உயிர்களுக்குயிராயிருப்பதை, யான் எனது அற்றவர் உறவை - அகங்கார மமகாரங்களே யொழித்தவர்களுக்கு உறவாயிருப்பதை, எந்தநாளும்-எக் காலமும், சுகபரிபூரணமான - இன்பநிறைவாகிய, நிராலம்பகோசரத்தை-பற்றுக்கோடில்லாததாய்த் தோன்றுவதை, துரியவாழ்வை - துரியபதத் தில வாழ்வதை, அகம் மகிழ வரும் தேனை - மனமகிழும்படி வருகின்ற தேனை, முக்கனியை-முக்கனிபோன் றினித்திருப்பதை, கற்கண்டை-கற் கண்டுபோலச சுவையுடைப்பொருளை, அமிர்தை - அமிர்தத்தை, நாடி-மனத்தினல் தியானித்து, இருவிழி-இரண்டுகண்களும், மொகு மொகு என-மொகுமொகென்று, நீர்முத்து இறைப்ப - நீர்த்துளிகளாகிய முததுகளே யுதிர்க்க, கரமலாகள் முகிழ்த்து நிற்பாம் - கைமமலர்களைக் குவித்து நிற் போம் (யாம்) எ-று.

இகபரமும் உயிர்க்கு உயிரை என்பதற்கு இகதினும் பரத்தினும் என தாயிக்குயிராயிருக்கும் பொருளையெனினு மமையும். நிராலம்பா கோசரத்தை எனப் பாடமோதி, பற்றுக்கோடில்லாததாகவும் முக்காணங் களாலு மறியப்படாததாயு மிருப்பதை எனப்பொருளுரைப்பாருமுளர். நாவிற்குச சுவையபயக்குந் தேனையொழிததற்கு அகமகிழவருந்தேனை என் றார். முக்கனி-வாழை, மா, பலா என்பன. அமிர்து-இறததலையொழிப்பது. எனவே இறவாது ஒருதன்மையாய் நீடுவாழ்விப்பதென்றாயிற்று மொகு மொகு-ஒலிகுறிப்பு. இத்தன்மைத்தாகிய பொருளைகுறித்து முகிழ்க்கப் படுதலால் தம்கைகளைக் கரமலர்கள் என்றார்

இம்மையினும் மறுமையினும் உயிர்க்குயிராய் யாவும் இயக்கலின் இகபரமுமுயிர்க்குயிரை' யென்றும், அநுபவனகண்டார்க்குசசுகபரிபூரண மாக விளங்கலின், 'சுகபரிபூரணமான நிராலம்பகோசரததை, யென்றும், அது துரிய நிலையதாகலின், 'துரிய வாழ்வை' யென்றும், அது கண்டார் க்கு என்று மினிப்பதாய் உவட்டாத சுகப்பேருக நிகழ்தலின், அதனைப் பலபடவியந்து, "அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை யமிர் தை" யென்றும், அவர்கள் சுகப்பேற்றைக்கண்டு ஆனந்தக் கண்ணீர்வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருகைகளையும்குவித்து வணங்கலின் "காடி மொகு மொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கண் முகிழ்த்து நிற்பாம்" என்றுங் கூறினர்.

5 சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ் செய்யும்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம்

இ - ள். சாதி - சாதியும், குலம் குலமும், பிறப்பு இறப்பு-உற்பத்தி நாசங்களும், பந்தம்முத்தி-பந்தமோக்ஷங்களும், அரு உருவத்தன்மை - அருவமாந்தன்மை உருவமாந்தன்மைகளும், நாமம்-பேரும், (ஆகிய) ஏதும் இன்றி-எதுவுமில்லாமல், எப்பொருட்கும்-எத்தப்பொருளுக்கும், எவ்விடத் தும்-எவ்விடத்திலும், பிரிவு அறநின்று-நீக்கமின்றி நிலைபெற்று, இயக்கம் செய்யும்-இயங்குவிக்கின்ற, சோதியை-தேஜோராசியை, மாதூவெளியை-மிகவும் பரிசுத்தமான ஆகாயத்தை, மனது அவிழ நிறைவு ஆன துரிய வாழ்வை - அன்பருடைய மனக்கமலம் விரியும்படி நிறைந்த துரியவாழ் வினை, தீது இல் பரம் ஆம் பொருளை-குற்றமற்ற மேலாகிய வஸ்துவை, திருவருளே நினைவு ஆக - திருவருளையே நினைத்தற்குக் கருவியாகக் கொண்டு, சிந்தை செய்வாம்-சிந்தனை பண்ணுவோம் .—எ-று.

சாதிகுலம் பிறப்பிறப்புப்பந்த முத்தியருவுருவ முதலிய எவற்றையும் நாடாது யாண்டு மெப்போதும் பிரிவறவதுதவிதமாய் நிற்றலின், பரஞ்சுட ர்த்தனிமுதல 'சாதிகுலம பிறப்பிறப்புப் பந்தமுத்தியருவுருவத் தன்மை நாமமேதுமின்றி யெப்பொருட்கு மெவவிடத்தும பிரிவறநின் றியக்கஞ் செய்யுஞ் சோதியை" என்றும், அதுபரமாகாய சொரூபமாதலின் 'தூவெ ளியை' என்றும், அது அகத்தும் புறத்தும பரிபூரணமாய்நிறைந்த துரியங் கிடந்த தனி முதலாதலின். அதனைப் பலபடவியந்து "மனதவிழ நிறை

வான தரியவாழ்வை யென்றும், அது நிர்தோஷமாய் மேம்படுபொரு ளாதலின்; "நீதில் பரமாம்பொருளே" யென்றும், அது திருவருளே துணை யாகப் பெற வேண்டுதலின் "திருவருளே நினைவாகச சிந்தைசெய்வாம" என்றும் கூறினர்.

6 இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலக
மெமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க
புந்திமகி முறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளே யதுதினமும்
வழுத்தல் செய்வாம்.

இ-ள். உலகம்-இவ்வுலகமானது, இந்திரசாலம் (என)-இந்திர சாலம் போலவும், கனவு (என)-கனவுபோலவும், கானலின் நீர் என-கானற் சலத் தைப்போலவும், எமக்குத் தோன்ற - எமக்குத் தோன்றும்படியாக, சந்தத மும்-சதாகாலமும், சிற்பரத்தால் - ஞானபகூர்த்திஞல், அழியாத தற்பர த்தை-நாசரகிதமான தற்பரவஸ்துவை, சார்ந்துவாழ்க-பொருந்தி வாழக் கடவை, புந்தி மகிழுற-மனமகிழுமாறு, நாளும்-நாள்தோறும், தடை அற-தடையில்லாமல், ஆநந்தவெள்ளம் பொலிக என்று-இன்பப்பெருக்கானது பெருகுகவென்று, வந்தருளும்-என்னேயொரு பொருளாக மதித்து நாணி ருக்குமிடந்தேடி வந்து கிருபைசெய்கின்ற, குருமௌனி - மௌன குருவி னது, மலர் தாளே-தாமரை மலர்போன்ற திருவடிகளே, அதுதினமும்-நாள் தோறும், வழுத்தல் செய்வாம்-துதிசெய்வோம், (யாம்.)

உலகம் மாயாகாரியமாதலானும் மாயையின் காரியமாகிய அது இல் பொருள் என்பதுதோன்ற 'இந்திரசாலங்கனவு கானலினீரெனவுலக மெம க்குத் தோன்ற' என்றும், சிவத்தையடையும் பெருவாழ்வினும் பேறின்றுக லின் 'சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச சார்ந்துவாழ்க' என் றும், அசசிவத்தை யடைவதனல் ஆனந்த வுதிப்பும், ஆனந்தா தீதமும் கைவரலான் புந்திமகிழுற நாளுந் தடையற வானந்தவெள்ளம் பொலிக வென்றும், இத்தனேயும் அடையப்பெற்றது குருவருளாலுதலின் 'வந்தரு ளுங் குருமௌனி மலர்த்தாளே யதுதினமும் வழுத்தல்செய்வாம், எற்றும் கூறினர். இந்திரஜாலம்-அற்புதங்களேக்காட்டும் வித்தை.

7 பொருளாகக் கண்டபொரு ளெவைக்குமுதற் பொருளா
போத மாகித் [கிப்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னூறி

யருளாளனைர்க் ககம்புறமென் றுன்னுத பூரணவா
னந்த மாகி
யிருளுர விளங்குபொரு ளியாதநதப் பொருளினையா
மிறைஞ்சி நிற்பாம்.

இ - ள். பொருளாகக் கண்டபொருள் எவைக்கும் - வஸ்துக்களாகக் காணப்பட்ட வஸ்துக்களெல்லாவற்றுகும், முதற்பொருள் ஆகி - முதன்மையான வஸ்துவாகி, போதம் ஆகி-அறிவாகி, தெருள் ஆகி-(அவ்வறிவினால் தெளிவிக்கப்பட்ட) சாரமாகி, கருதும் அன்பர் மிடிதீர பருகவந்தநினைக்கின்ற அன்பரது வறுமை நீங்க அனுபவிக்கவந்த, செழுந்தேன் ஆகி-செழுமையான தேனாகி, அருள் ஆளனைர்க்கு-தன் அருள்பெற்ற அன்பருக்கு, அகம் புறம் என்று உன்னுத-உள்ளென்றும் வெளியென்றும் நினையாமைக்குக் காரணமாகிய, பூரண ஆநந்தம் ஆகி-நிறைவாகிய சுகரூபமாகி, இருள் நீர- அஞ்ஞான இருள் நீங்கும்படி, விளங்கு பொருள் யாது-பிரகாசிக்கின்ற பொருள் எது, அந்தப்பொருளினை - அந்தப்பொருளை, யாம் இறைஞ்சி நிற்பாம்-நாம் வணங்கி நிற்போம்:—எ-று.

முதற்பொருளாகி என்றதனால் சத்தினிலக்கணத்தையும், போதமாகி என்றதனால் சித்தினிலக்கணத்தையும், ஆநந்தமாகி என்றதனால் ஆநந்தத்தின் இலக்கணத்தையு முடைய பரம்பொருள் வணக்கங் கூறினமையால் இது சொரூபவணக்கம் என்றறிக. இங்கு மிடி என்றது அவன் அருட்செல்வம் பெறுதகாலத்தை.

8 அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர் மாமுனிவர்
சித்தராதி யாளனைர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ யுடலுயிர்போற்
கலந்தெந் நாளும்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம்.

இ - ள். அருமறையின் சிரப்பொருளாய்-அரிய வேதத்தின் முடிமீது விளங்கும் பொருளாகி, விண்ணவர்மா முனிவர்சித்தர் ஆதி ஆளனைர்-தேவர்கள் பெருமைபொருந்திய முனிவர்கள் சித்தர்கள் முதலானவர்களால், தெரிவு அரிய பூரணம் ஆய்-தெரிந்துகொள்ளுதல் அருமையாகிய நிறைவாகி, காரணம் கற்பனைகடந்த் செல்வம் ஆகி-தனக்கு ஆதியாகிய வஸ்துவையும் கற்பனையையுங் கடந்து நின்ற ஐசுவரியமாகி, கருது அரிய-நினைத்தற் கரிய, மலரின் மணம் (போல்) மலரின் மணம்போலவும், எள்

ளில் எண்ணெய் (போல்) - எள்ளில் எண்ணெய் போலவும், உடல் உயிர் போல்-உடலில் உயிர்போலவும், கலந்து-கலந்திருந்து, எந்நாளும்-எக்காலத்திலும், துரியநடுவூடு இருந்த - துரியபதத்தின் இடையிலிருக்கின்ற, பெரியபொருள் யாது - பெரியவஸ்து எது, அதனை - அந்த வஸ்துவை, தொழுதல் செய்வாம்-வணங்குவோம். (யாம்) எ-று.

வேதாந்தத்திற் கூறப்படும் முடிந்தபொருள். பரம்பொருளே யாகலின் "அருமறையின் சிறப்பொருளாய்" என்றார். முனிவர் - கடவுளே மனனஞ் செய்வோர் சித்தர்-அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசிதை, வசிதை என்னும் அட்டசித்திகளும் கைவந்தபெரியோர். சித்தர் யோகாப்பியாசமுடையவரா என்னலுமாம். தனக்கு முதலும், உவமிக்கப்படும் பொருளும் இல்லாததென்பார் "காரணம் கற்பனைகடந்த செல்வமாகி" என்றும், கட்புலனுக்குத் தோன்றுது இடையீடு இன்றிச் சாவத்திலும் வியாபகமாய் உள்ளது என்பார் "மலரினமணம் எள்ளிலெண்ணெய் உடலுயிர்போற் கலந்து" என்றுங் கூறினர். காரணம்-ஆதி. கற்பனை-இல்லாததை யுண்டாக்குதல்.

9 விண்ணுதி பூதமெல்லாந் தன்னகத்தி லடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணுரக் கண்டவன்பர் கண்ணூடே யானந்தக்
கடலாய் வேறொன்
றெண்ணுத படிக்கிரங்கித் தானுகச் செய்தருளு
மிறையே யுன்றன்
றண்ணருஞ் சாந்தவரு ணினிணைந்து கரமலர்க
டலைமேற் கொள்வாம்.

இ-ள். விண்ணுதி பூதம் எல்லாம்-ஆகாயம் முதலான பூதங்களையெல்லாம், தன் அகத்தில் அடக்கி-தனக்குள்ளே யொடுக்கி, வெறுவெளி ஆய்-வெட்டவெளியாகி, ஞானக்கண் ஆர - ஞானக்கண் நிறையும்படி, கண்ட அன்பர்-தரிசித்த அன்பர்களுடைய, கண்ணூடு - (அந்த) ஞானக்கண்ணினிடத்து, ஆனந்தக்கடலாய்-இன்பசாகரமாகி, வேறு ஒன்று எண்ணுதபடிக்கு இரங்கி - (அந்த அன்பர்கள்) மற்றொன்றையும் நினையாத வண்ணம் (அவர்களிடத்தில்) மனமிரங்கி, தானுகச்செய்தருளும் இறையே-தானுகச செய்தருளாநின்ற தலைவனே, உன்றன் - உனது, தண் ஆரும் - குளிர்ச்சி நிறைந்த, சாந்த அருள் தனை நினைந்து - சாந்த ரூபமான கருணையை யெண்ணி, கரமலர்கள்-கைம்மலர்களை, தலைமேல்கொள்வாம் - சிரத்தின் மீது கொள்வோம் (யாம்) எ-று.

விண்ணுதி பூதமெல்லாந் தன்னகத்திலடக்கி என்றது மூலப்பிரகிருதியிலடக்கி யென்றபடி. தனக்குக காரணம் ஒன்றுமின்றிச் சுயம்புவாய்த்

தன்னிடத்தே விண்முதலிய எல்லாப் பூதங்களையும் அடக்கி யுள்ளது என் பார் ''விண்ணுதி பூதமெல்லாம் தன்னகத்திலடக்கி வெறுவெளியாய்'' என்றார் பூதங்கள் அடங்குதற்கு இடம் தாளுகவின் அவைகளின் தோற் றத்திற்கும் இடம் தானே என்றுணர்க. மாயாபாசத்தில் கட்டுண்டு வருந் தும் ஆன்மகோடிகளுக்கு இறைவன் பரிபாக காலமறிந்து தாளுகவந்து அருள்செய்யுமென்பார் ''வேறொன்றெண்ணுதபடிக் கிரங்கித் தாளுகச செய்தருளு மிறையே'' என்றார். இறை-எல்லாப்பொருளுக்குந் தலைவன்.

10 விண்ணிறைந்த வெளியாயென் மனவெளியிற் கலந்தறிவா
வெளியி னூடும் [ம்
தண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பால்
உண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி மொழிகுழறி
யுவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம்.

இ-ள். விண்ணிறைந்த வெளி ஆய்-பூதாகாயம் நிறைதற்குரிய பரமா காயமாகி, என்மனவெளியில்கலந்து - எனது இதயாகாயத்திற் சேர்ந்து, அறிவு ஆம் வெளியினூடும்-ஞானகாயதத்திலும், தன்நிறைந்த பேரமுதாய்-குளிர்சசியுடைய பெரிய அமிர்தமாகி, சதானந்தமான பெருந்தகையே-இடையறுத இன்பமயமான பெருமையுடையோனே, நின்பால்-உன்னிடத் தில், உள் நிறைந்த பேரன்பால் - தனக்குள்ளே நிறைந்த பேரன்பினால், உள் உருகி-மனங்கரைந்து, மொழிகுழறி - சொல்தடுமாறி, உவகை ஆகி-சந்தோஷமடைந்து, கண்-விழிகள், நிறைந்த புனல் உகுப்ப-தம்மிடத்து நிறைந்த நீரைசசிந்த, கரம் முகிழ்ப்ப - கைகள் குவிய, நின் அருளை கருத் தில் வைப்பாம் - உன் கருணையை எமது கருதது லிருத்துவோம். (யாம்) எ-று.

பரமாகாயமாகிய இறைவன் ஆன்மகோடிகளின் அந்தக்கரணங்களிற் கலந்து சதானந்தமயமாய் இருக்கின்றான் என்பார் ''விண் ணிறைந்தவெளி யாய் என்மனவெளியிற் கலந்து அறிவாம் வெளியினூடும் தண்ணிறைந்த பேரமுதாய்ச சதானந்தபெருந் தகையே'' என்றார். அவவாறு ஞானகாயத தினும் குளிர்சசி நிறைந்த அமுதம்போ லினிதையாய், விளங்கும் சதானந் தப் பரம்பொருளை மனம், மொழி, மெய்களால் வணங்க அவனிறைவனது திருவருளை நாடுவேன் என்பது கருத்து.

மொழிகுழறி என்றது உவகையால் மனம் விழுங்கப்பட்டு மொழி தழுதழுத்தல்.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

11 ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னை போல
நீதிபெறுங் குருவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியையென் னுயிர்த்துணையை நாடிக் கண்ணீர்
சொரியவிரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்.

இ-ள். ஆதி அந்தம் காட்டாத முதல் ஆய்-தோற்றக்கேடுகளையடைய தல்லாத முதற்பொருளாகி, எம்மை-எங்களை, அடிமைக்கா-தனது திருத் தொண்டுக்காக, வளர்த்தெடுத்த அன்னைபோல - வளர்த்தெடுத்த தாய் போல, நீதிபெறுங் குரு ஆகி-நீதியையுடைய ஆசாரியனுகி, மனவாக்கு எட்டா - மனோவாக்குக்களுக்குத் தட்டுப்படாத, நிச்சயம் ஆய் - சாசுவதப் பொருளாகி, சொச்சமது ஆய்-களங்கரஹிதமாகி, நிமலமது ஆம்-மலரஹித மாகி, வாதம் இடும் - தர்க்கவாதஞ் செய்கின்ற, சமயநெறிக்கு அரியதாகி-சமயமார்க்கங்களுக்கு அறிவரிதாகி, மௌனத்தோர்பால் - மௌனநிலையை யுடையோரிடத்து, வெளி ஆய் வயங்கா நின்ற - வெளிப்பட்டு விளங்கு கின்ற, சோதியை-தேஜோராசியை, என் உயிர்த்துணையை - என்னுயிர்க் குதவியாயிருப்பதை, நாடி - குறித்து, கண் நீர் சொரிய - கண்கள் நீரைச் சிந்த, இருகரம் குவித்து-இருகைகளையுங் குவித்து, தொழுதல் செய்வாம்-வணங்குவோம். எ-று.

பிறப்பும் இறப்பும் இல்லாத முதற்பொருளாகிய பரம்பொருள் ஆத்ம கோடிகளை அடிமைகொள்ளவென்றே உயிர்களுக்குத் தாய்போல் அன்பு மிகுந்து சற்குருவடிவங் கொண்டுவந்து சமயாதீதப்பட்ட மௌனநிலையு டைய ஞானியர்பால் விளங்கும் என்பது கருத்து. நீதி பெறுங் குரு-சதா சாரியன்.

12 அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேரு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத வறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியாவை பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம்.

இ - ள். அகர உயிர் - அகரவுயிரானது, எழுத்து அனைத்தும் ஆகி - எல்லா வெழுத்துக்களுந் தானேயாகி, வேறு ஆய் அமர்ந்தது என-அவற் றிற்கு வேறாகி யமைந்துநிற்பதுபோல, அகிலாண்டம் அனைத்தும் ஆகி-சகலாண்ட சராசரங்களும் தானே ஆகி, பகர்வன எல்லாம் ஆகி-சொல்லப் படுவனவாகிய பொருள்களெல்லாமாகி, அல்லது ஆகி-அவையல்லாததாகி, பரம் ஆகி - எல்லாப் பொருள்களுக்கும் மேலான பொருளாகி, சொல் அரிய பான்மை ஆகி-சொல்லுதற்கரிய தன்மையதாகி, துகள் அறுசங்கற்ப விகற்பங்கள் எல்லாம்-குற்றமற்ற சங்கற்பமும் விகற்பமுமாகிய எல்லாவற் றிலும், தோயாத அறிவு ஆகி-படியாத ஞானவடிவாகி, சுத்தம் ஆகி-புனித மாகி, நிகர் இல் பசு பதி ஆனபொருளே-ஒப்பற்ற ஆண்மாக்களுக்கு இறைவ னாகிய வஸ்துவை, நாடி-உத்தேசித்து, நெட்டுயிர்த்து-பெருமூச்செறிந்து, பேரன்பால்-பெரிதான அன்போடு, நினைதல் செய்வாம் - தியானிப்போம் (யாம்) எ-று.

நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறக்கும் அகரவொலி எழுத்துக்கள் அனைத்தினுங் கலந்தும், வேறுய்த் தனித்தும் நிற்பதுபோல். பரம்பொ ருள் அண்ட சமூகங்களும், அவ்வண்ட சமூகங்களிலுள்ள ஒவ்வொரு தனிப் பொருளும் தானே யென்று சொல்லவும் ஆம் என்பார் "அணுவுயி ரெழுத்தனைத்துமாகி" முதலியவாகக் கூறினர். பிரபஞ்சத் தோற்றக் கேடு களில் தனக்கு விருப்பும் வெறுப்பும் இல்லே என்பார், "துகளறு சங்கற்ப விகற்பங்களெல்லாந் தோயாத அறிவாகி" என்றார்.

துகளறுசங்கற்பம் - சுத்தசங்கற்பம். விகற்பம் - வேறுபாடு. "அகர வுயிர்போ லறிவாகியெங்கும் நிகரி லிறைநிற்கு நிறைந்து" என்றார்பிறரும்.

பன்னிருசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

சி ன் ம யா னை நீ த து ந.

1 அங்கைகொடு மலர்தூவிய யங்கமது புளகிப்ப
வன்பினு ளுருகிவிழிநீர்
ஆறுக வாராத முத்தியின தாவேச
வாசைக் கடற்குண்மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத் திடவணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்

சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ - ள். அங்கைகொடு மலர்தூவி - அழகிய கைகளால் மலர்களைச சொரிந்து, அங்கமது புளகிப்ப-சரீரமானது புளகங்கொள்ள, அன்பினுல் உருகி-அன்பினுல் மனங்கரைந்து, விழிநீர் ஆறு ஆக-கண்ணீர் ஆறுகிப் பெருக, ஆராத - தெவிட்டாத, முத்தியினது ஆவேச ஆசை கடற்குள் மூழ்கி-மோக்ஷாவேசத்தோடு கூடிய ஆசையாகிய சமுத்திரத்தில் முழுகி, சங்கர-சங்கரனே, சுயம்புவே - சுயம்புவாயிருப்பவனே, சம்புவே-சம்புவா யிருப்பவனே, எனவும்-என்று துதித்தும், மொழிதழுத்திட-மொழிகுழறும் படி, வணங்கும் - தொழுகின்ற, சன்மார்க்க நெறி இல்லா - நன்னெறி யொழுக்கமில்லாத, துன்மார்க்க னேனையும் - துன்மார்க்கனுகிய என்னை யும், தூண் அருள் கொடுத்து ஆள்வையோ-குளிர்ச்சியாகிய கருணைசெய்து ஆண்டருள்வாயோ. துங்கம் மிகுபக்குவம்-பரிசுத்தமிகுந்த பக்குவத்தை யுடைய, சனகன்முதல் முனிவோர்கள் - சனகன்முதலாகிய முனிவர்கள் நால்வரும், தொழுது அருகில் வீற்றிருப்ப-வணங்கிச சமீபத்தில் வீற்றி ருக்க, சொல் அரிய நெறியை-சொல்லுதல் அருமையாகிய ஒப்பற்ற ஞான மார்க்கத்தை, ஒருசொல்லால் உணர்த்தி-ஒருமொழியா லறிவுறுத்தி, சொரூ பானுபூதிகாட்டி - சொரூபானுபவத்தைக்காட்டி, செங்கமல பீடம் மேல்-செவ்விய பத்மாசனத்தின்மீது, கல்லால் அடிக்குள்வளர் - கல்லாலின்கீழ் எழுந்தருளியிருக்கின்ற, சித்தாந்தம் முத்தி முதலே-முடிவு செய்யப்பட்ட மோட்சப்ரதமான முதற்பொருளே, சிரகிரி விளங்கவரு - சிகிரியின்கண் ஆன்மாக்கள் பிரகாசிக்க எழுந்தருளிய, தக்ஷிணை மூர்த்தியே-தக்ஷிணைமூர்த் தியே, சின்மயம் ஆனந்தம் குருவே - ஞானானந்தங்களைக்கொடுக்கிற சதா சாரியனே, எ-று.

மலர்தூவப் பெற்றமையால் அங்கையென்றார். இவ்வாறன்றி அகங் கை என்பது-அங்கை என நின்றது என்றலுமொன்று. ஆவேசம் - முத்தி தில் விரைவு. துங்கரன் - சுகத்தைக்கொடுப்போன். சுயம்பு - தானேயுண் டானவன். சம்பு - சுகமுண்டாதற் கிடமாயிருப்பவன். ஆதியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் தாபத்ரயத்தால் தபிக்கப்பட்டவ ராதலால், அத்தாபந் தணியத் தண்ணிய அருள்வேண்டு மென்பார் "தண்ணருள் கொடுத் தாள்வையோ" என்றார். "தவனமூன் றடைந்து வெய்யில் சகித்திடாப் புழுப்போல் வெம்பி" என்றார் பிறரும். நான்கு

மிகுபக்குவம் என்றது மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் பக்குவம் நான்கனுள் தீவிரதரத்தை, சனகன்முதன் முனிவோர்கள் நால்வராவார் :—சனகன், சனந்தனன், சனற்குமாரன், சனத்ஸுஜாதன் என்பவர், இந்நால்வரும் பிரமபுத்திரர். ஒருசொல் என்பது குருமுகத்தாலறியத்தருவ தாதலால் அதின் விவரம் இவ்விடத்துக் காட்டப்படவில்லை. சிரகிரி விளங்கவரு என்பதற்குச, சிரகிரியானது பிரகாசிக்கும்படி எழுந்தருளிய என்றுரைத்தலுமொன்று. சிரகிரி-சிராமலை. அது பூவனதலிற் திரிசிரனால் ஆளப்பட்டது. பதுமாசனமாவது இரு தொடைமேலும் இரண்டுள்ளங்காலையும் மாறித் தோன்றவைத்தல். பக்குவநான்கனுள் தீவிரதரபக்குவமுடைய ராதலால் "துங்கமிருபக்குவம்" என்றும், அவர் இன்னரென்பதுபட "சனகன்முதல் முனிவோர்கள்" என்றும், அவர்கள் வணங்கிநிற்பக்குருமொழிவைத்தானென்பார் "தொழுதருகில் வீற்றிருப்ப ஒரு சொல்லாலுணர்த்தி" என்றும், அக்கெறி பிறரடைவதற்கரிதாகலின் 'சொல்லரிய நெறியை' என்றும், அக்கெறி யடைந்தார் பெறும்பேற்றை "சொரூபானுபூதிகாட்டி" என்றும், அதனை இறைவன் பதுமாசனத்திலிருந்துகொண்டு கல்லாலின்கீழிருந் துபதேசித்தமையான் "செங்கமலபீட மேற்கல்லாலடிக்குள் வளர்" என்றும், அவன் சைவசித்தாந்தத்திற் கூறும் பரமுத்திச செல்வம்தரு மிறைவனென்பது தோன்ற "சித்தாந்த முத்தி முதலே" என்றுங் கூறினர்.

2 ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிகா
னத்துவித வாஞ்சையாதல்
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி
யாகுமறி வவிழுவின்பம்
தாக்கும்வகை யேதிகாட் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்ததெல்லாம்
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள்
சாராத பேரறிவதாய்
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்குபாயம்
வருவித் தவட்டாத பேரின்ப மானசுக
வாரியினை வாய்மடுத்துத்
தேக்கித் திளைக்கவே முன்னிற்ப தென்றுகாண்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தகுஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ-ள். ஆக்கையென்னும் இடிகரையை - சரீரமென்கிற இடிகரையை, மெய்யென்ற பாவிநான் - உண்மையென்றெண்ணியிருக்கிற பாவியாகிய நான், அத்துவித வாஞ்சை ஆதல் - அத்துவிதப்பொருளின்மேல் இசைவைத்தல், அரியகொம்பில் தேனை-எட்டுதற்கரிய கொம்பிற்கட்டப்பட்டிருக்கின்ற தேனை (உண்ண), முடவன் இசித்தபடி ஆகும் - முடவன் விரும்பினவிதமாகும், (இவ்வாறனபின்) அறிவு அவிழ - (எனது) அறிவானது விகசிக்கும்படி, இன்பம் தாக்கும் வகை எது - சுகமுண்டாகும் வகையாது, இந்நாள்-இந்நாளளவும், சரியை கிரியா யோகசாதகம் விடித்தது எல்லாம்-சரியை கிரியை யோகம் என்பவற்றின் பழக்கத்தை விட்டுவிட்டதெல்லாம், சன்மார்க்கம் அல்ல-நல்லநெறியன்று, இவைநிற்க-இவைகிற்கட்டும், என்மார்க்கங்கள் சாராதபேரறிவுதாய்-எத்தன்மையாகிய மார்க்கங்களும் அணுகாத பெரிய அறிவுருவாகி, வாக்குமனம் அணுகாத - வாக்கும் மனமும் பொருந்தாத, பூரணப்பொருள்-பூரணவஸ்துவானது, வந்து வாய்க்கும்படிக்கு - வந்துகிடைக்கும்படிக்கு, உபாயம்வருவித்து - உபாயத்தையுண்டாக்கி, உவட்டாத-தெவிட்டாத, பேரின்பமான-பேராநந்தமான, சுகவாரியினை-இன்பசாகரத்தை, வாய்மடித்து-வாய்வைத்து, தேக்கித்திளைக்க-நிறைய அநுபவிக்க, நீமுன் நிற்பது என்று-நீ எனக்குப் பிரத்தியகூமாவது எக்காலம், சித்தாந்த முத்தி முதலே. எ-று.

இடிகரை-ஆற்றோரத்தில் வெள்ளத்தால் கீழறுக்கப்பட்டுநின்ற கரை. பொய்யாகிய உடலை மெய் என்பது மங்கலவழக்கு. இதுகாறும் தேகாதிப் பிரபஞ்சமே மெய்யென்றெண்ணி யிருந்தேனுதலால் "ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்றபாவி நான்" என்றும், நான் ஒன்றிரண்டென்னுத வுண்மைநெறியை விரும்பியது முடவன்கொம்புத்தேனுக் கிசைத்தபடியாமென்பார் "அரியகொம்பிற்றேனை முடவனிசைத்தபடி யாகும்" என்றும், அஃதிவ்வாறெனின் இன்பநிலைகிடைப்ப தெவ்வாறென்பார். "அறிவு விழுவின்பந் தாக்கும்வகையேது" என்றும், அது கைவரச சரியை கிரியா யோகங்களைச செய்துவந்தும் கிட்டாமையால் "சரியை கிரியா யோக சாதனம் விடித்தவெல்லாம் சன்மார்க்கமல்ல" என்றும், அச்சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய அந்தமிலின்பத்தழிவில் வீடுபேற்றை அருள்செய்யவேண்டும் என்பார் "நீமுன்னிற்பதென்று காண்" என்றுங் கூறினர்.

3 ஒளவிய மிருக்கநா னென்கின்ற வாணவ
மடைந்திட் டிருக்கலோபம்
அருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமே
லாசாபி சாசமுதலாம்
வெவ்விய குணம்பல விருக்குமென் னறிவுடு
மெய்யுணீ வீற்றிருக்க

விதியில்லை யென்னிலோ பூரண னெனும்பெயர்
விரித்திலுரை வேறுமுளதோ
கவ்வுமல மாகின்ற நாகபா சத்தினுற்
கட்டுண்ட வுயிர்கண்மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே
கதியான பூமிநடுவுள்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்வியகுண மேருவே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே

இ-ள். ஔவியம் இருக்க-பொறாமையானது இருக்கவும், நான் என்கின்ற ஆணவம்-நான் என்கிற ஆணவமானது, அடைந்திட்டிருக்க-சேர்ந்திருக்கவும், லோபம்-லோபகுணமும், அருள் இன்மை கூட - அருளில்லாமையும், கலந்து உள் இருக்க-கலந்து உள்ளே இருக்கவும், மேல்-பின்னும், ஆசாபிசாசம் முதல் ஆம் - ஆசையென்னும் பேய் முதலாகிய, வெவ்விய குணம்-கொடிய குணங்கள், பல இருக்கும்-அனேகம் தங்கியிருக்கின்ற, என் அறிவூடு-என் னறிவினிடத்தில், மெய்யன் - மெய்யனாகிய, நீ வீற்றிருக்க-நீ எழுந்தருளியிருக்க, விதியில்லை என்னில் - விதியில்லையென்று சொல்வாயாயின், பூரணன் என்னும் பெயர்-பூரணன் என்கிற (உன்) திருநாமத்தை, விரிகில்-விரித்தால், உரை - அதின்பொருளானது, வேறும் உளதோ-வேறுயும் இருக்குமோ, கவ்வும் மலம் ஆகின்ற-பற்றுகின்ற மும்மலமாகிய, நாகபாசத்தினுல்-நாகபாசத்தால், கட்டு உண்ட-பிணிப்புண்ட, உயிர்கள்-உயிர்களுடைய, மூர்சசை - மூர்சசித்துக்கிடக்கிற நிலை, கடிது அகல-விரைவாக நீங்கும்படி, வலியவரும்-பிரார்த்தியாமலே வந்த, ஞான சஞ்சீவியே-ஞான சஞ்சீவினியே, கதி ஆன பூமி நடு உள்-மோக்ஷமென்கிற நிலத்தினிடையில், செவ்விதின் வளர்ந்து ஓங்கு - செவ்வையாக வளர்ந்துயர்ந்த, திவயம்-தெய்வீகமான, குணமேருவே-குணமலையே, சித்தாந்த முததி முதலே. எ-று.

ஔவிய முதலான தீக்குணத் தொகுதியோடு மெய்யனாகிய நீ வீற்றிருப்பது தருதியன்றுயினும் பூரணநாமப்பொருள் விரிக்குமிடத்து நீவீற்றிருந்தே தீரவேண்டு மென்றுராயிற்று. சலிதநூலின்மையால் குணமேரு என்றார். "குணமென்னுங் குன்று" என்றார் பிறரும். ஆன்மாக்கள் மும்மலங்களால் அனுதியே கட்டுண்டிருத்தலால் அதனை உருவகப்படுத்தி "கவ்வுமலமாகின்ற நாகபாசத்தினுற் கட்டுண்ட வுயிர்கள்" என்றும், அந்நாகபாசம் சஞ்சீவியாலல்லது நீங்காதென்பார் அம்மலமாயாகன்மங்களை நீக்கும் இறைவனை "கடிதகல வலியவரு ஞானசஞ்சீவி" என்றுங்கூறினார்.

4 ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்தநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூ லையும்வகுத்துச்
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநா னணுகவுந்
தண்ணருள் வகுக்க வில்லையோ
பொய்வளவு நெஞ்சினர்கள் காணுத காட்சியே
பொய்யிலா மெய்யறிவில்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரசிரி விளங்கவரு தக்ஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ-ள். ஐவகையெனும்-ஐந்துவகையென்று சொல்லப்படுகிற, பூதம் ஆதியை வகுத்து - பூதங்கள் முதலான பிரபஞ்சத்தைப் படைத்து, அதனுள் - அதனிடத்தில், அசரம் சரம் பேதம் ஆன - அசரம் சரம் என்று வேறுபட்டிருக்கிற, யாவையும் வகுத்து-உயிர்களெல்லாவற்றையும் படைத்து, நல் அறிவையும் வகுத்து-(அவைகளுக்கு) நல் உணர்வையும் படைத்து, மறை ஆதி நூலையும் வகுத்து-வேதம்முதலான நூல்களையும் படைத்து, சைவம்முதல் ஆம்-சைவம் முதலாகிய, அளவு இல் சமயமும் வகுத்து-அளவில்லாத சமயங்களையும் படைத்து, மேல் - அதற்குமேல், சமயம் கடந்த - சமயாதீதமான, மோனசமரசம் வகுத்த நீ - மோனமாகிய சமரச நிலையைப் படைத்த நீ, உன்னை நான் அணுகவும்-உன்னையான் அடையவும், தண் அருள் வகுக்க இலையோ-குளிர்ந்தகிருபையைப் படைக்கவில்லையோ, பொய்வளரும் நெஞ்சினர்கள் - பொய்யானது விருத்தியடைகின்ற மனத்தை யுடையவர்களாகிய அஞ்ஞானிகள், காணுத காட்சியே - காணக் கூடாத காட்சியே, பொய் இல்லா மெய்யர் அறிவில் - பொய்யில்லாத மெய்யரது அறிவினிடத்து, போதபரி பூரண அகண்டித ஆகாரமாய்-ஞான பரிபூரண அகண்டித ரூபமாகி, போக்குவரவுஅற்ற பொருளே - போக்கு வரவுகள் இல்லாதிருக்கிற வஸ்துவே, தெய்வமறை முடிவு ஆன-தெய்விகமான வேதத்தின் முடிவாகிய, பிரணவ சொரூபியே-ஓங்கார சொரூபனே, சித்தாந்த முத்திமுதலே. எ-று.

பஞ்சபூதாதிகளே வருத்த நீ, உன்னைநான் அணுகுமாறு வருத்திலை யாதலால் உனது சர்வ சக்திக்குப் பங்கம் நேரிடுமென் றையுற் றிரங்கா கின்றே னென்பது கருத்து.

பிரபஞ்சமே மாயாகாரியமாகலின் "ஐவகையெனும் பூதமாதியை வருத்து" என்றும், அப்பஞ்சபூதங்களிலும் சரம்அசரமாகிய யாவுந்தோன்ற லின் "அதனு ளசரசரபேதமான யாவையும்வருத்து" என்றும், அவ்வாறு வருத்து நல்லுணர்வு கைகூடாதவிடத்துப் பதிஞானந்தோன்று தாகலின் "நல்லறிவையும் வருத்து" என்றும், அவ்வறிவுகருவியாக வேதாகமமுதலி யன பயிலவேண்டலின் "மறையாதி நூலையும் வருத்து" என்றும், அம்ம றையாதி கலைகளால் அவரவர்பக்குவத்துக்கேடாகப் பேதவாதமுதல் பாடாண சைவமீறுகச சமயநூல்களைக்கற்று அவற்றையே மெய்யெனத் துணிதலின் "சைவமீறுகச சமயநூல்களைக்கற்று அவற்றையே மெய் யெனத் துணிதலின் "சைவ முதலாமளவில் சமயமும் வருத்து" என்றும், திருவருளே துணையாக அவை மெய்யன்றெனக் கடப்பதோர் நெறி யெய் தலின் அவைகளைக் கடந்த துணையானே சுத்தாத்துவித வைதிக சைவ நெறியிற்செல்ல வருத்தமையான் அவ்விறைவனை "மேற்சமயங்கடந்த மோனசமரசம்வருத்த நீ" என்றும், தேவரீரையானடையத் திருவருளே தாரகமாகச செய்யாதிருத்தல் நன்றன்றென்பார் "உன்னை நானணுகவுந் தண்ணருள் வருக்கவில்லையோ" என்றும், தன்னையடையாதார்க்கு எளிய னன்றென்பார் "பொய்வளரு நெஞ்சினர்கள் காணுதகாட்சியே" என்றும், தன்னையடைந்தார்க் கெளியனென்பார் "பொய்யிலா மெய்யரறிவிற் போத பரிபூரண வகண்டிதாகாரமாய்ப் போக்குவரவற்ற பொருளே" என்றும், அவனின்னனென்பார் "தெய்வமறை முடிவான பிரணவசொரூபியே" என்றுங் கூறினர். போதபரிபூரண வகண்டிதகாரம்-ஞானத்திலுல் நிறை வுடையதாகியும் குறைவற்றதாகியு முள்ளரூபம். போக்குவரவற்றபொருள்- நித்தியமாயும் நிசசலமாயும் நிர்விகாரமாயுமுள்ள பிரமப்பொருள்.

5 ஐந்துவகை யாகின்ற பூதபே தத்திலை
லாகின்ற வாக்கைநீர்மேல்
அமிர்கின்ற குமிருயென நிற்கின்ற தென்னைநா
னறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போதநெறி யென்றிருந்தேன்
பூராய மாகநின் தருள்வந் துணர்த்தவிவை
போனவழி தெரியவில்லை
எந்தநில பேசினு மிணங்கவில் லல்லா
லிறப்பொடு பிறப்பையுள்ளே

எண்ணினை னெஞ்சது பகீரெனுக் துயிலுறு
திருவிழியு மிரவுபகலாய்ச்
செந்தழலின் மெழுகான தங்கமிவை யென்கொலோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணை மூர்த்தியே
சின்மபா னந்தகுருவே.

இ-ள். ஐந்து வகை ஆகின்ற - ஐந்துவகையாயிருக்கிற, பூதபேதத்தி னுல்-பூதங்களின் வேறுபாட்டால், ஆகின்ற ஆக்கை-உண்டாகப்படுகிற சரீரமானது, நீர்மேல் அமர்கின்ற-நீரின்மீது அமைந்த, குமிழி என-மொக் குள்போல, நிற்கின்றது என்ன-நிற்கிறதென்று, நான் அறியாதகால மெல் லாம்-நான் உணராத காலமுழுதும், புந்தி மகிழ உற - மனமகிழ்ச்சி மிகும் படி, உண்டு உதித்து இன்பம் ஆவதே - உண்டு உதித்து இன்பம் அநுபவிப் பதே, போந்த நெறி என்று இருந்தேன் - கைவந்த நல்ல மார்க்கமென்று நினைந்திருந்தேன், நினது அருள் வந்து-உன் திருவருள்வந்து, பூராயமாக உணர்ந்த-ஆத்யந்தமாக அறிவிக்க, இவை-இவைகள், போனவழி தெரிய இல்லை-போனவழி தோற்றவில்லை, எந்தநிலை பேசினும்-எந்தநிலையை எடுத் துப் பேசினுலும், இணங்க இல்லை-சம்மதிக்க இல்லை, அல்லால் - அல்லாம லும், இறப்பொடு பிறப்பை-மரணத்தோடு ஜனனத்தையும், உள்ளே எண் ணினுல்-மனதில் நினைத்தால் - நெஞ்சது-மனமானது, பகீர் என்னும் - பகீ ரென்கின்றது, இருவிழியும் - இரண்டு கண்களும், துயில் உறு-நித்திரை செய்யாது, அங்கம் சரீரமானது, இரவுபகலாய்-இரவுபகலாக, செந்தழலில்-செந்தீயில் இட்ட, மெழுகு போனது-மெழுகா யுருகுகின்றது இவை என்-இந்தன்மைகள் என்னிடத் துண்டாவதற்குக் காரணம் யாது, சித்தாந்த முத்தி முதலே. எ-று

ஐந்துவகையாகின்ற பூதபேதத்தினுலாகின் ஆக்கை என்றது பூதபஞ் சீகரணத்தா லாக்கப்படுகின்ற சரீரமென்றபடி.

சரீரமானது நிலமுதலிய பஞ்சபூதபரிணாமமாகையால் "ஐந்துவகை யாகின்ற பூதபேதத்தினுலாகின்ற வாக்கை" என்றும், அதுநிலையின்மை யென்பதனைப் பெரியோர்சொல்லக்கேளாமற் காலங்கழித்தே னென்பார் "நீர்மேலமர்கின்ற குமிழியென நிற்கின்றதென்ன நானறியாத காலமெல் லாம் புந்திமகிழுறவுண் டுதித்தின்பமாவதே போந்தநெறி யென்றிருந் தேன்" என்றும், இவ்வாறுகக காலங்கழித்த வெனகருச சத்திநிபாதம் வருவித்து என்னையும் உன்னையும் உணர்த்த அமலமாயா கன்மங்களி னியல்பும் என்னியல்பும் உன்னியல்பு முணர்ந்த காலத்தில் மலவாசனை யொழிந்தது தெரியாதென்பார் "நினதருள்வந்துணர்த்த வவைபோன வழி தெரியவில்லை" என்றும், இனிப் பிறப் பிறப்புக்களான் வருந்துன்பங் கள் இல்லையாதலால் அவற்றை நோகுகின நெஞ்சத் துணுகுறலால் "இறப்

பொடி பிறப்பையுள்ளே எண்ணிலை செஞ்சது பரிரொறும் தயிலுறு திரு விழியும்" என்றும் இதனுல் உடல் குழம்ப வருந்துகின்றேன் அதற்குக் காரணமென்னவென்பார் "செந்தமிழின் மெழுகான நங்கிலையென்" என்றும் கூறினர்.

6 காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட்ட தற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலங்கவிளே யழுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்கு வரவுறுகின்ற
பெரியவிளே யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனேவிட்
டிடருற வுறுக்கிபிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதுயில் கொண்மினென்று
சீரிட்ட வுலகன்னே வடிவான வெந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ - ள். கார் இட்ட-கருமையாகிய, ஆணவக் கரு அறையில்-ஆணவ மலத்தால் உளதாகின்ற கருவாகிய சிறுவீட்டில், அறிவு அற்ற - உணர்ச்சி யில்லாத, கண் இல்லா - கண்ணற்ற, குழவியைப்போல் - குழந்தையைப் போல, கட்டுண்டு இருந்த எம்மை-கட்டுப்பட்டிருந்த எங்களே, வெளியில் விட்டு-வெளியில்வரச்செய்து, அல்லல் ஆம் காப்பு இட்டு - துன்பமாகிய காவலே அமைத்து, அதற்கு இசைந்தபேர் இட்டு-அதற்குப் பொருத்தமான பெயரமைத்து, மெய்யென்றுபேசு-உண்மையென்று பேசப்படுகின்ற, பாழ் பொய் உடல்-பாழாகிய நிலையற்ற சரீரமானது, பெலக்க - வலிமைபெறும் படி, வினே அழுதம் ஊட்டி - வினேகின்ற (பலவகை) உணவுகளே உண் பித்து, பெரிய புவனத்தினிடை - பெரிதாகிய உலகத்தின்கண், போக்கு வரவு உறுகின்ற-இறப்புப் பிறப்புகளாகப் பொருந்துகின்ற, பெரிய வினே யாட்டு அமைத்திட்டு-பெரிதாகிய லீலையை அமைத்துவைத்து, ஏர்இட்ட-அழகுபொருந்திய, தன் மொழி-தன் சொல்லாகிய, சுருதி-வேதமார்க்கத் தில், தப்பில் - தவறினால், (அப்படித் தவறின வுயிர்களே) கமனேவிட்டு-யமனே அனுப்பி, இடர் உற உறுக்கி-துன்பம் மிகும்படி தண்டித்து, இடர் தீர்த்து-அத்துன்பத்தையும் நீக்கி, இரவு பகல் இல்லாத - இராப்பகல்தன்

அற்ற, பேரின்பவீட்டினில் இசைந்து - போனந்தவீட்டில் பொருந்தி, துயில்கொண்மின் என்று-தூங்குங்கள் என்று, சீரிட்ட - (எங்களுக்கு எல்லாச்சிறப்புக்களையும்) அமைத்துவைத்த, உலகு அன்னைவடிவு ஆன எந்தையே-லோகமாதாவின் ரூபமான எமது தந்தையே, சித்தாந்த முத்தி முதலே எ-று.

இரவுபகலில்லாத பேரின்பவீடு என்றது இருளொளிகளின்றி எப்பொழுதும் தேஜோராசியாய் விளங்குமோர் ஒளிப்பிழம்பு. இதனைச் சுயஞ்சோதி யென்பர். "இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே" என்னூர் பிறரும்.

இறைவனை உலகன்னையைப்போ லுருவகஞ்செய்ததற்கேற்ப அஞ்தியிலேயே ஆணவமலத்திலே கட்டுப்பட்டிருந்த உயிர்களுக்குத் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்தானென்பார் "காரிட்டவானவக் கருவறையில்நிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்தமெமை வெளியில்விட்டு" என்றும், பின்பு வாலேப்பருவத்தி லறியாமை முதலியவற்றாலும், வனேப்பருவத்தும் அவ்வப்பருவத்தும் நிகழுமவற்றாலும் தன்பங்களாகையால் அவற்றையே "காப்பிட்டு" என்றும், அவற்றிற்குப்பொருந்த அவ்வான்மாக்களுக்குச் சிவனென்று "பெயரிட்டு" என்றும், பின்னர் அவன் எடுத்துக்கொண்ட சரீரத்தைப்பாதுகாப்பதுகருதி அதுபெலக்கப் போகங்களைக்கொடுத்தான் என்பார் "பெலக்கவிளையமுதமூட்டி" என்றும் இவ்வாறுகக் காக்கப்பட்ட உயிரைப் பிறப்பிறப்புக்களால் பொருந்தச்செய்தலின், "போக்குவரவுறுகின்ற பெரியவிளையாட் டமைத்திட்டு என்றும், அவ்வுயிர் தன்னுணைகடவாதிருக்க வேதமுதலிய கலைகளை அனுட்டியாமையான் நமனைவிட்டுவருத்துதலின் "எரிட்டதன்கருதி மொழிதப்பின் நமனைவிட்டிடருற வுறுக்கியிடர்தீர்த்து" என்றும். அவ்வாறுசெல்லாமல் வேதத்திற்கூறிய அறத்தின்வழி நடந்தாரைச் சகலகேவலமில்லாத தனிவீட்டில் சும்மாவிருந்து ஆனந்தநித்திரைசெய்வித்தலின் "இரவுபகலில்லாத பேரின்பவீட்டினிலிருந்து துயில்கொண்மின்" என்றும் கூறினர்.

7 கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்பனையயான்
காண்டக விருக்கநீ ஞானவனன் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பகுத்தை யென்சொல்லுகேன்

அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதியா மந்தமீதும்
அத்துவித நிலையாய் என்னையாண் டென்னடிமை
யானவர்க ளறிவினூடும்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிகரிரி விளங்கவரு தகஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ-ள். கருமருவு குகை அனைய - கருப்பையிற்பொருந்திய குகை யையொத்த, காயத்தின் நடு உள் - சரீரத்தினிடையில், களிம்புதோய் செம்பு அனைய - களிம்புபற்றிய தாமிரத்தையொத்த, யான் - நான், காண் தக இருக்க - காணலாம்படி இருக்க, நீ ஞான அனல் மூட்டி - நீ ஞான நெருப்பை மூள்வித்து, கனிவுபெற - இளகும்படி, உன் உருக்கி-உள்ளே தானே உருகப்பண்ணி, பருவமது அறிந்து - பக்குவமுணர்ந்து, நின் அருள் ஆன - உன் திருவருளாகிய, குளிகைகொடு பரிசித்து - குளிகை யினால் தீண்டி, வேதிசெய்து - வேதித்து, பத்துமாற்றுத் தங்கம் ஆக்கி-பத்துமாற்றுப் பசும்பொன்னாகச் செய்து, பணிகொண்ட - (என்னை) அடி மைகொண்ட, பட்சத்தை - உனதுபெருங் கருணையை, என்சொல்லு வேன் - என்னசொல்வேன், அருமைபெறு - அருமையைக் கொண்ட, புகழ்பெற்ற-கீர்த்தியையடைந்த, வேதாந்தசித்தாந்தம்-வேதாந்த சித்தாந் தங்களாகிய, ஆதியாம் அந்தமீதும் - ஆதியந்தங்களின்மேலும், அத்துவித நிலையாய் - அத்துவிதநிலையை யடையாராகி, என்னை ஆண்டு - என்னை ஆட்கொண்டு, உன் அடிமை ஞானவர்கள் - உனக்கு அடிமைப்பட்டவர்க ளுடைய, அறிவின் னூடும் - அறிவினிடத்தும், திருமருவு - அழகுபொருந் திய, கலலால் அடியீழும் - கல்லாலமரத்தின் அடியிலும், வளர்கின்ற - விருத்தியடையாநின்ற, சித்தாந்த முத்திமுதலே. எ-று.

தான் மாயாசம்பந்தபரியந்தம் நிற்கையால், தன்னைக் களிம்பொடு கூடிய செம்பாகவுவமித்தும், அவ்வாறுகிய தன்னைக் களிம்பை நெருப்பி லிடுவதுபோல ஞானாக்கினியில் தகிப்பித்தானென்பார் " நீ ஞானவனல் மூட்டியே கனிவுபெற வுள்ளுருக்கி" என்றும், பின்பு அச்செம்பினைப் பக் குவமறிந்து குளிகையால் வேதிப்பதுபோல, அருளானகுளிகையாற் பரி சித்துவேதிசெய்தலால், அருளானகுளிகைகொடு பரிசித்து வேதிசெய்து, என்றும், பின்பு அதுபத்துமாற்றுப் பசும்பொன்னாவதுபோல, ஸ்ரீகேவலி யாக்கியாண்டமுறைமைநோக்கி "யத்துமாற்றுத் தங்கமாக்கியேபணிகொ ண்டபட்சத்தை யென்சொல்லுவேன்" என்றும், வேதமுடிவாகிய உப நிடதப்பொருளும் ஆகமாந்தமாகிய சித்தாந்தப்பொருளுமே யல்லாதவை

னிட மென்பார், வேதாந்த சித்தாந்த மாதியா மந்தமீதும் என்றும், அவன் மெய்யுணர்ந்தா ருள்ளத்தும் கல்லாலடியினு மிருந்தானென்பார் 'அத்துவித நிலையரா யென்னையான் தன்னடிமை யாணவர்க ளறிவினு மும் திருமருவு கல்லாலடிக்கீழும் வளர்கின்ற' என்றும், இவ்வாறுதன்னை யடிமைகொண்ட முறைமையைக் கூறியவாறென்க. இனி வேதாந்த சித்தாந்த மாதியா மந்தமீது மென்பதற்கு, வேதாந்தம், சித்தாந்தம் நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்னும் சடந்தங்களினிட த்து மென்றுரைப்பினு மமையும். இதனை 'வீறியவே தாந்தமுதன் மிக்க கலாந்தவரை - யாறுமுணர்ந் தோருணர்வுக் கன்புவைப்ப தெதுநாளோ' என் றிவ்வாசிரியர் கூறுவதனினு முணர்க.

தங்கம் ஆக்குதல் பணிசெய்தற் காதலால் தங்கமாக்கிப் பணி கொண்ட என வேறுமொருபொருள் தோன்றுமாறு கூறினர்.

8 கூடுத லுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று வரவினெடு போக்கற்று நிலையான
குறியற்று மலமுமற்று
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்றுவிந்து
நாதமற் றைவகைப் பூதமே தமுமற்று
ஞாதருவின் ஞானமற்று
வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமுமற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ-ள். கூடுதலுடன் பிரிதல் அற்று-கூடுதலோடு பிரிதலும் இல்லாத தாகி, நிர்த்தொந்தம் ஆய்- தொந்தமில்லாததாகி, குவிதலுடன் விரிதல் அற்று - கூம்புதலும் மலர்தலும் இல்லாததாகி, குணம்அற்று - குணரகித மாகி, வரவினெடு போக்கு அற்று - வருதலும் போகுதலும் இல்லாத தாகி, நிலையான குறி அற்று நிலையாகிய அடையாளம் இல்லாததாகி, மலமும் அற்று - மலரகிதமாகி, நாடுதலும் அற்று - நினைத்தலும் இல்லாத தாகி, மேல் கீழ் நடு பக்கம என - மேல்கீழ் நடு பக்கமென்று, நண்ணுத லும் அற்று - சொல்லப் பொருந்துதலும இல்லாததாகி, விந்து நாதம்

அற்று-வித்தாதங்கள் இல்லாததாகி, ஐவகை பூதபேதமும் அற்று-பஞ்ச பூத வேறுபாடுகளும் இல்லாததாகி, ஞாதுருவின்-ஞாதுருவோடு, ஞானம் அற்று-ஞானமும் இல்லாததாகி, வாடுதலும் அற்று - வாட்டமடைதலும் இல்லாததாகி, மேல்-மேலும்.ஒன்று அற்று-ஒன்றுந்தன்மை இல்லாததாகி, இரண்டு அற்று - இரண்டாந்தன்மை இல்லாததாகி, வாக்கு அற்று - வார்த்தை யில்லாததாகி, மனமும் அற்றுமனமும் இல்லாததாகி, மன்னு-நிலை பெற்ற, பரிபூரணம்-பரிபூரணமாகிய, சுகவாரி தன்னில்-இன்பசாகரத்தில், வாய்மடித்து உண்டு-வாய்மடித்தருந்தி, அவசமாய்-பரவசமாகி, தேடுதலும் அற்ற இடம்-தேடுதலும் இல்லாத இடம், நிலை என்ற-உண்மைநிலையென்று உபதேசித்த, மௌனியே - மௌனகுருவே, சிதாகாச முத்தி முதலே. எ-று, ஞாதுரு-காண்பவன். ஞானம்-காணும் கருவியாகிய அறிவு.

'கூடுதலுடன் பிரிதலற்று' என்றது எல்லாப் பொருள்களிலும் ஒட்டியும் ஒட்டாதிருத்தலை. 'நிர்த்தொந்தமாய்' என்றது சுகதுக்கங்களில்லாமையை. 'குவிதலுடன் விரிதலற்று' என்றது விருத்தி க்ஷயமில்லாமையை. 'வரவிலொடு போக்கற்று' என்றது பிறப்பிறப்பின்மையை' 'நிலையான குறியற்று' என்றது நாமரூப மின்மையை. 'வித்து நாதமற்று' என்றது சுத்தமாயையின் நீக்கத்தை. இதை ''நாதவித்து களாதீத நமோ நம'' என்றதனை மறிக. 'சுகவாரி' என்றது நிரதிசய சுகரூபியாகிய கடவுளை. 'ஆநந்தமாக்கடல்' என்றார் மேலோரும். 'வாக்கற்று மனமுமற்று' என்பதை 'வாசகாதீத மனோலய பஞ்சரன்' என்றதனை மறிக.

9 தாராத வருளெலாந் தருதருள மௌனியாய்த்
தாயனைய கருணைகாட்டித
தாளிணையென் முடிசூட்டி யறிவிற் சமாதியே
சாசுவத சமபரதாபம்
ஓராமன் மந்திரமு முன்னுமன் முத்திநிலை
யொன்றே டிரண்டெனுமல
ஒளியெனவும் வெளியெனவு முருவெனவு நாதமா
மொலியெனவு முணாவுறுமல்
பாராது பார்ப்பதே யேதுசா தனமற்ற
பரமவனு பூதிவாய்க்கும்
பண்பென் றுணர்த்தியது பாராம லந்நிலை
பதித்தகின் பழவடியர்தம

சீரா யிருக்கினை தருள்வேண்டு மையனே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சினமயா னந்தகுருவே.

இ-ள். சாராத அருள் எல்லாம் - தரக்கூடாத உனது திருவருள் முழுதும், தந்து அருள்-தந்தருளும்படி, மௌனி ஆய்-மௌனகுருவாகி, தாய் அனைய-தாயையொத்த, கருணை காட்டி-கிருபைசெய்து, தாள் இணை-இரண்டு திருவடிகளை, என் முடி சூட்டி-என் சிரசில் தரித்து, அறிவில சமாதியே-அறிவினிடத்துக் கூடும் நிஷ்டையே, சாசுவத சம்பிரதாயம் (என்று)-நிலையாகிய சம்பிரதாயமென்றும், ஓராமல்-பகுத்துணராமலும், மந்திரமும் உன்னுமல்-மந்திரத்தை நினைக்காமலும், முத்திநிலை - மோக்ஷநிலையானது, ஒன்றோடு இரண்டு என்னுமல் - ஒன்று இரண்டு என்று சொல்லாமலும், ஒளி என்னவும்-ஒளி யென்றும், வெளி எனவும் - வெளியென்றும், உரு எனவும் - உரு என்றும், நாதம் ஆம் ஒலியெனவும்-நாதமாகிய ஒலியென்றும், உணர்வு உறாமல்-அறியாமல், பாராது பார்ப்பதே-காணுமற் காண்பதே, எது சாதனம் அற்ற-எவ்வகைப்பட்ட சாதனங்களும் இல்லாத, பரம அநுபூதி வாயக்கும் பண்பு என்று - மேலான அநுபூதி கிடைத்தற்குரிய உபாயமென்று, உணர்ந்தியது-நீ அறிவுறுத்தினதை, பாராமல் - பகுத்தறியாமல், அநிலை பற்றி-அந்த நிலையிற்றவறி, நின் பழ அடியர் தம் - உனது பழைய அடியார்களுடைய, சீர் ஆய் இருக்க - சிறப்பை யடைந்திருக்க, நினது அருள் வேண்டும்-உன் திருவருள்வேண்டும், ஐயனே-கடவுளே, சித்தாந்த முத்தி முதலே. எ-று.

பாராது பார்ப்பது-தற்போதத்தை முன்னிட்டுப்பாராமல் திருவருளை முன்னிட்டுப்பார்ப்பது. ''வாலேழுகமாய் மதயானையேறிஞேன், போலேயுன் போதமோ போய்நீண்டிலே'' என்றார் பிறரும்.

நின்திருவருள் ஞானம்பெற மானைக்காட்டி மானைப் பிடிப்பார்போல் மௌனகுருவாகிய திருவுருவங்கொண் டெழுந்தருளிவந்தாய் என்பார். 'தாராதவருளெலாந் தந்தருள மௌனியாய்ந்த தாயனைய கருணைகாட்டி' என்றும், அங்ஙனம் காட்டியதுமன்றித் திருவடிதீக்ஷைசெய்தாளென்பதுந் தோன்ற' தாளிணையென்முடிசூட்டி என்றும், அறிவிடதுதக் கூடும் சமாதியேவேண்டுமென்பதை யறியாமலிருந்தேன் என்பார் 'அறிவில்சமாதியே சாசுவத சம்பிரதாயம்'என்றும்,அதன்றி மந்திரமுன்னுமலும் முத்திநிலையை ஒன்றென்றும் இரண்டென்றும சொல்லாமலும இன்னம் பலபடக்கொள்ளாமலும் பாராமற பார்க்குநெறியே சிவாநுபூதிச செல்லுமென்பார் 'எது சாதனமற்ற பரமானுபூதி வாயக்கும பண்பென்றுஅதனை அறுவுறுத்தியும்,

தனக்கு அவனருள் வேண்டும் என்பார், 'உனதருள்வேண்டும்' என்றும் கூறினார்.

10 போதமா யாதிநடு வந்தமு நிலாததாய்ப்
புனிதமா யவிகாரமாய்ப்ப
போக்குவர வில்லாத வின்பமாய் நின்றநின்
பூரணம் புகலிடமதா
ஆதரவு வையாம லறிவினை மறைப்பதுநி
னருள்நின்று மறிவின்மைதீரத்
தறிவித்து நிற்பதுநி னருளாகிய லெளியனேற்
கறிவாவ தேதறிவிலா
ஏதம்வரு வகையேது வினையேது வினைதனக்
கீடான காயமேதென்
இச்சாசு தந்தரஞ் சிறிதுமிலை யிகபர
மிரண்டினுண் மலைவுதீரத்
தீதிலருள் கொண்டினி யுணர்த்தியெனை யாள்வையோ
சித்தாந்த முத்திமுதலே
சிகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ - ள். போதமாய்-ஞானவடிவாகி, ஆதி நடு அந்தமும் இல்லாதது ஆய்-ஆசிமத்யாந்த ரஹிதமாகி, புனிதமாய்-பரிசுத்தமாகி, அவிகாரம் ஆய்-நிர்விகாரமாகி, போக்கு வரவு இல்லாத இனபம் ஆய்-போக்குவரவற்ற சுகவடிவாகி, நின்ற-நிலைபெற்ற, நின் பூரணம் - உன்னுடைய பரிபூர்ண நிலையையே, புகல் இடமது ஆ-அடைக்கலத் தானமாகக் கொண்டு, ஆதரவு வையாமல்-அதனிடத்து விருப்பம் வைக்காதவகை, அறிவினை மறைப்பதும்-என்னறிவைத் தடுப்பதும், நின் அருள் - உன திருவருளே, பின்னும்-மேலும், அறிவு இன்மை தீர்த்து - அறியாமையை நீக்கி, அறிவித்து நிற்பதும் - (என்னுள்ளிருந்து) உணர்த்தி நிற்பதும், நின் அருள் - உன் திருவருளே, ஆகில்-ஆனால், எளியனேற்கு-எளியேனுக்கு, அறிவு ஆவது ஏது-அறிவாவது யாது, அறிவு இலா ஏதம் வருவகை ஏது - அறிவில்லாத குற்றம் உண்டாகும்வகை யாது, வினை ஏது-(அறிவறி பாமைகட்குக் காரணமான) வினை யாது, வினைதனக்கு ஈடான காயம் ஏது-வினைக்கு இடமான சரீரம் யாது, என் இசசாசுதந்தரம்-என்னுடைய இசசாசுதந்தரங்கள், சிறிதும் இல்லை-கொஞ்சமும் இல்லை, இகபரம் இரண்டினுள்-இகபரம் என்னும் இரண்டிடத்தும், மலைவு தீர - எனது பிராந்தி நீங்கும்படியாக, தீது இல் அருள் கொண்டு-குற்றமற்ற திருவருளைக்கொண்டு, இனி உணர்த்தி-இனியேனும் அறிவுறுத்தி, என்னை ஆள்வையோ-என்னை அடிமை கொள்வையோ, சித்தாந்த முத்தி முதலே. ஈ ஊ.

திரோபவாதுகரஹ காரணன் நீயேயென்பார் அறிவினை மறைப்பது நின்னருள், அறிவின்மை தீர்த்த தறிவித்து நிற்பது நின்னருள் என்றார்.

இறைவனது பூரணநிலையி னிலக்கணம் ஞானசொரூபமே யென்பார் 'போதமாய்' என்றும், அதற் கடி நடு முடி யென்பன வொன்றுமில்லை யென்பார் 'ஆதிநடு வந்தமு மிலாததாய்' என்றும், அது தூயதென்பார் 'புனிதமாய்' என்றும், நிர்விகாரத்ததென்பார் 'அவிகாரமாய்' என்றும், இவ் வகை இலக்கணமுடையதனைச் சிறிதேனும் புகலிடமாகக் கொள்ளாவகை, அறிவை மறைப்பதும் அறிவை விளக்குவதும் நின் திருவருளே யென்பார் 'ஆதரவுவையாம லறிவினை மறைப்பதுநி னருள்பின்னும் அறிவின்மை தீர்த்து அறிவித்து நிற்பதும் நினருள்' என்றும், அஃதாயின், யான் சுதந்தர ஹீனனுதலால் எனக்கெனச் சுதந்தர வறிவில்லை யென்பார், எளியனேற் கறிவாவதேது' என்றும், அவ்வறிவின்மையால் 'ஏதம்வரு வகையேது' அவ் வறிவறியாமைகட்குக் காரணமான 'வினையேது' அவ் வினைப்போக மாகிய 'காயமேது' என்றும், எனக்கெனச் செயலொன் றில்லையாதலால், 'என்னிச்சாசுதந்தரஞ் சிறிதுமிலை' என்றும், எல்லாம் உன் திருவருட் பார மென்பார் 'தீதிலருள்கொண்டினி யுணாத்தியெனை யாள்வையோ' என்றுங் கூறினர்.

11 பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந்தும்
பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்து
மவுனத் திருந்துமுயர் மலைதுழை தனிற்புக்கு
மனனுதச நாடிமுற்றும்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டுங்கியைச்
சோமவட் டத்தடைத்தும்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோறுநிலை நிற்கவீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தகூஷிணை மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

இ - ள். பத்திநெறி நிலைநின்றும் - பத்திமார்க்கத்தில் நிலையாய் நின்றும், நவகண்ட பூமிப்பரப்பை ஒன்பது கண்டங்களோடு கூடிய பூமியின் விஸ்தீர்ணத்தை, வலமாக வந்தும்-பிரதக்ஷிணஞ்செய்தும், பரவை இடை

மூழ்கியும்-கடலில் ஸ்நானம்பண்ணியும், நதிகள் இடைமூழ்கியும்- நதிகளில் ஸ்நானம்பண்ணியும், பசி ராகம இன்றி - பசிதாகமங்க ளில்லாமல், எழுகா மத்தி இடை நின்றும-மெருப்பில் நடுவினின்றும், உதிரசருகு-உதிர்கின்ற சருகுகளையும், புனல்வாயுவினை-ஜலத்தையும் வாயுவையும், வன்பசி தனக் கடைத்து-வலியபசிகெடு நிரப்பி, மவுனமது இருந்தும் - மௌனநிலையில் இருந்தும், உயர் மூலநுழை தனில்புக்கும்-உயர்ந்த மூலக்குகையில் பிரவே சித்தும், மன்னு - நிலைபெற்ற, தசநாடிமுற்றும்-தசநாடி முழுதையும், சுத்தி செய்தும்-சுத்தப்படுத்தியும், மூலப்ராணனோடு - மூலாதாரத்திலுள்ள ப்ரா ணவாயுவுடன், அங்கியை-அக்கினியை, சோமவட்டத்து அடைத்தும்-சந் திரமண்டலத்தில் சேர்த்தும், சொல் அரிய-சொல்லுதற்கரிதாகிய, அமுது உண்டும்-அமிர்தத்தைப் புசித்தும், அற்ப உடல்-அற்ப சரீரம், கற்பங்கள் தோறும் நிலைநிற்க-ஊழிகள்தோறும் நிலைநிற்கும்படி, வீறு-மேலான, சித்தி செய்தும்-சித்தியையடைந்தும், ஞானம் அலது-ஞானமுண்டானாலல்லது, கதி கூடுமோ - மோக்ஷம் சித்திக்குமோ, சித்தாந்த முத்தி முதலே. எ-று. முத்தடைதீர்ந்த ஞான முதிப்பினன்றி ஒருவற்கு முத்தி சித்தியாதென் பது இதனாற் கூறப்பட்டது. முத்தடை- அஞ்ஞானசந்தேக விபரீதங்கள்.

நவகண்டங்களாவன:—கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பர தம், மத்திமகண்டம் என்பன. தசநாடிகளாவன:—கழுமுனை, இடை, பிங் கலை, காந்தாரி, அத்தி, சிருவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி, என் பன. தீக்கடவுளுக்கு நாக்க ளேழாதலால், நீ எழு நாவெனப்பட்டது, தச நாடி சுத்திசெய்தலாவது-சற்பங்களுண்டு நாடிகளின் மலிந மகற்றல்.

'ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்லவாகமஞ் சொல்லவல்லவாம்' என்றபடி, ஞானம் வாயிலாக முத்தியெய்தற்பாலதாக லான், பூப்பிரதக்கணம் செய்தும, தீர்த்தஸ்நானஞ்செய்தும், பஞ்சாக்கினி மத்தியில் நின்றும், சருதருந்தியும், சலபக்ஷணம், வாயுபக்ஷணம் செய்தும், எண்வகை யோகவுறுப்பினைப் பயின்றும், மதியமுதமுண்டும், எண்வகைச சித்திபெற்றும் முத்தியில்லையென்பார், 'ஞானமலது கதிகூடுமோ' என் றார், 'மூலப்ராணனோடங்கியைச சோமவட்டத்து அடைத்தும்' என்பதை, மூல நிலத்தி லதோமுகமாய் முகிழ்த்து விழியின் பொடியுயிலு - மூளிப் பாம்பைக் காலனலை மூட்டி யெழுப்பி நிலமாறும்-சீலமொடும்போயத் தெரி சித்தச செழுமாமதியி னமுதட்டல் தேக்கி நிலைதது' என்பதனு ணர்க.

மோனகுரு வணக்கம்.

1 ஆசைநிக ளத்தினை யிர்த்தூளி படவுதறி
யாங்கார முளையையெற்றி
அத்துவித மதமாகி மதமாறு மாறுக
வங்கையின் விலாழியாக்கிப்
பாசவிரு டன்னிழ லெனச்சுவித் தார்த்துமேற்
பார்த்துப் பரந்தமனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயைநூறித்
தேசுபெற நீவைத்த சின்முத் திராங்குசச்
செங்கைக்கு ளேயடங்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்தநின்
றிருவருட் பூர்த்தியான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
மத்தகஜ மெனவளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மெய்ஞானகுருவே.

இ - ள். ஆசைநிகளத்தினை - ஆசைபாகிய விலங்கை, நிர்த்தூளிபட - தூறி-நிர்த்தூளியாம்படி உதறி, ஆங்கார முளையையெற்றி-ஆங்காரமாகிய முளையைப் பிடுங்கி யெறிந்து, அத்துவித மதம் ஆகி-அத்துவித மென்கிற மதத்தைகொண்டு, மதம் ஆறும்-ஆறுமார்க்கமும், ஆறு ஆக - நதிகளாக, அங்கையின் விலாழியாக்கி - தன்கையின் விலாழியாகச செய்து, பாச இருள்-பாசமாகிய இருளை, தன் நிழல் என - தன் நிழலென்று நினைத்து, சுவித்து-கோபித்து, ஆர்த்து-ஆரவாரித்து, மேல்-மேலே, பார்த்து பரந்த-நோக்கிப்பரவிய, மனதை-மனத்தை, பாரித்த கவளமாய் - பெருங்கவள மாய், பூரிக்க உண்டு-நிறைய உண்டு, முகபடாம் அன்ன - தெற்றிப்பட்டத்தைபொத்த, மாயை நூறி - மாயையை அழைத்து, தேசுபெற - ஒளி பெற, நீவைத்த - நீ அமைத்த, சின்முத்திராங்குசம் - சின்முத்திரையாகிய அங்குசத்தைத் தரித்த, செங்கைக்குளே அடங்கி - செங்கையில் அடங்கி, சின்மயானந்தசுக வெள்ளம்படிந்து - ஞானமயமாகிய பேரானந்த வெள்ளத்தில் முழுகி, நின் திரு அருள் பூர்த்தியான - உனது திருவருளின் நிறைவாகிய, வாசம் உறு சற்சாரம் ஈது - வசித்தல் பொருந்திய கூடத்தில், என்னை - அடியேனை, ஞானமத்தகஜம் என வளர்த்தாய் - ஞான மதயானையைபோல வளர்த்தனை, மந்த்ரகுருவே-மந்த்ராசாரியனே, யோகதந்த்ரகுருவே-யோக தந்த்ராசாரியனே,

மூலன் மரபில்வரும்-திருமூலரது மரபில்வந்த, மௌனகுருவே - மௌன குருவே. எ-று.

யோகதந்த்ரம்-யோகநூல். திருமூலர், பூர்வம் சித்தராயிருந்து, பிறகு அணிமா முதலிய அஷ்டசித்திகளு முடையராய், மூவாயிரவருடம் நிஷ்டைகூடி, அந்த நிஷ்டானுபவத்தை மூவாயிரம்பாடலாகத் திருமந்திரம் என்றொரு நூல்செய்தவர். ஆசையை விலங்கெனக் கூறினமையை, 'ஆசாநிகளந் துகளாயினபின்' என்பதனுணர்க.

தன்னே யானேயாகவுருவகஞ் செய்தற்கேற்பப்பிறவிக்கு இடமாக்கும் ஆசையையே சங்கிலியாகவும், தன்னைத் தருகிக்கெடுப்பதாகிய ஆங்காரத்தை மூளையாகவும், ஒன்றிரண்டென்னு நிலையையே மதமாகவும், எனேச் சமயங்களே விலராழியாகவும், பாசவிருளே சுளிப்பதையே தன்னிழலேச் சுளிப்பதாகவும், மனத்தையே கவளமாகவும், மாயையையே முகபடாமாகவும், சின்முத்திரையாகிய ஞானமுத்திரையே அங்குசமாகவும் இயை புருவகமென்னு மணிநலம்படக் கூறியவாறென்க.

இங்கு மதம் ஆறு என்றது புறசசமயங்களாகிய உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டசாரியம் என்பன. விலாழி-குதிரை தன் வாயாலும், யானே தன் துதிக்கையாலும் உட்கொண்டு உமிழும் நீர். அது இங்கு அறுமதங்களின் கருத்துணர்ந்து நிராகரித்தலுக்கு உவமை யாயிற்று.

2 ஐந்துவகை யாகின்ற பூதமுத லைதழு
மடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதீ பிரிவாக வறிவார்க
ளறிவாக நின்றநிலையில்
சிந்தையற நில்லென்று சும்மா விருத்திமேற்
சின்மயா னந்தவெள்ளம்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்
எந்தவடவாற் பரம குருவாழ்க வாழவரு
ளியநந்தி மரபுவாழ்க
என்றடியார் மனமகிழ வேதாகமத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்தி நெறி
மௌனேப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். ஐந்துவகை ஆகின்ற - ஐவகையாகிய, பூதம் முதல் - பூதங்கள் முதலாக, நாதமும் அடங்க - நாததத்துவமும் ஆகியமுழுதும், வெளியாக வெளிசெய்து- பஹிரங்கமாக வெளிப்படுத்தி, அறியாமை அறிவு ஆதி-அறியாமை அறிவுமுதலியவைகளே, பிரிவு ஆக அறிவார்கள்-வேறு பிரித்தறியவல்லார், அறிவாக நின்றநிலையில்-அறிவுருவாகநின்றநிலையின்கண், சிந்தை அற நில் என்று - மனமற நிற்பாயென்று, சும்மா இருத்தி - சும்மா இருக்கும்படி செய்து, மேல் - அதன்மேலும், சின்மயாநந்த வெள்ளம-ஞானரூபமாகிய ஆநந்தப் பிரவாகத்தில், தேக்கி திளைத்து - நிறைய அநுபவித்து, நான் அது ஆய் இருக்க - நான் அதுவா யிருக்கும் படி, நீ செய் சிதரம் - நீ செய்த விசித்திரம், மிக நன்று-மிகவும் நன்று, எந்தை - எமது தந்தையாகிய, வடவால்-வடவாளிழற்கீ ழமுர்ந்தருளிய, பரமகுருவாழ்க-பரமாசாரியர்வாழ்க, வாழ அருளிய-அப்படிவாழும்படி அருளிசெய்த, நந்தி மரபு வாழ்க என்று - நந்திமரபு வாழ்கவென்று, அடியர்-அன்பர்கள், மனமகிழ-மனமகிழும்படி, வேதாகமத் துணிபு-வேதாகம நிசயம், இரண்டு இல்லை-இரண்டாயிருக்கவில்லை, ஒன்று என்னவே-ஒன்றென்று அருளிசெய்தற்காகவே, வந்த குருவே-வந்த ஆசாரியனே, வீறு-விஞ்சிய, சிவஞான சித்தி நெறி - சிவஞான சித்தியடைதற்குரிய நெறியையுடைய, மௌனோபதேச குருவே - மௌனோபதேசம்பண்ண வந்த ஆசாரியனே, மந்த்ர குருவே. ஈ-று.

பூதமுத லைந்தா மென்றது ப்ருதிவ்யாதி நாதாந்தமான மூப்பத்தாறுதத்துவத்தை. " ஆறுறையுநீத் ததன்மே னிலையை" என்னூர் பிறரும். அவை ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு, வித்யாதத்துவம் ஏழு, சிவதத்துவம் ஐந்து என்பனவாம.

நிலமுதல் நாதமிறுதியாகக்கிடந்த தத்துவமுப்பத்தாறையுங் கடந்த பகுத்தறிவுடைய பெரியோர் தன்னையுந் தலைவனையுங் காண்டற்கருகராகலின், அவர்தம் சிந்தையிலே சும்மாவிருந்து அறியும்வண்ணம், ஐந்துவகையாகின்ற பூதமுதல் நாதமு மடங்கவெளியாக வெளிசெய்து அறியாமை அறிவாதி பிரிவாக வறிவார்கள் அறிவாக நின்றநிலையில் சிந்தையறநில்லென்று சும்மாவிருத்தி, என்றும் அநுபவம் சும்மாவிருந்தறியும் காலத்தில் தோன்றும் சுகாநந்தவெள்ளத்தில் மூழ்குகான் அதுவாயிருக்க நீ கருணை செய்வதோ சொல்லுந்தரமல்ல வென்பார் 'மேல் சின்மயானந்த வெள்ளந் தேக்கித்திளைத்து நானதுவாயிருக்கநீ செய்சித்ரமிகநன்றுகாண்' என்றும் கூறினர்.

3 ஆதிக்க ணல்கினவ ராரிந்த மாயைக்கெ
னறிவன்றி யிடமில்லையோ
அந்தரப் புஷ்பமுங் கானலின் னீருமோ
ரவசரத் துபயோகமோ

போதித்த நிலையையு மயக்குதே யபயநான்
புக்கவரு டோற்றிடாமல்
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்கு ளிந்த்ரசாலம
சாதிக்குதே யிதனை வெல்லவு முபாயநீ
தந்தருள்வ தென்றுபுகல்வாய்
சண்மத ஸ்தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்
மாதிக்கொ டண்டப் பரப்பெலா மறியவே
வந்தருளு ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். இந்த மாயைக்கு-(ஜந்மபரம்பரையை விருத்திசெய்கிற) இந்த மாயைக்கு, ஆதிக்கம் நல்கினவர் யார்-(இத்தனை) ஏற்றம் கொடுத்தவர் யார், என் அறிவு அன்றி இடம் இல்லையோ-(இதற்கு) என்னறிவல்லது வேறிடமில்லையோ, அந்தரப் புஷ்பமும்-ஆகாயத்தாமரையும், கானலின் நீரும்-கானற்சலமும், ஓர் அவசரத்து உபயோகமோ-ஒரு அவசரகாரியத்துக்கு உபயோகமாமோ, போதித்த நிலையையும்-நீ எனக்குப்போதித்த நிலையையும், மயக்குதே - மயங்கப்பண்ணுகின்றதே, நான் அபயம்புக்க-நான் அபயமாக அடைந்த, அருள்தோற்றிடாமல் - திருவருள் சிறிதுந் தோற்றுவகை, பொய்யான உலகத்தை - பொய்யாகிய பிரபஞ்சத்தை, மெய்யாநிறுத்தி-உண்மையாகஸ்தாபித்து, என் புந்திக்குள்-என் அறிவினிடத்தில், இந்த்ரசாலம்-இந்தரஜாலத்தை, சாதிக்குதே-வினையாடிக்காட்டுகின்றதே, இதனை வெல்லவும்-இதை வெல்லுதற்காகவும், உபாயம்-(ஒரு) உபாயத்தை, நீ தந்தருள்வது-நீபோதித்தருள்வது, என்றுஎன்னான், புகல் வாய்-சொல்வாய், சண்மதஸ்தாபனமும்-ஆறுமதங்களையும் நிலைப்படித்தும் பாண்டித்ய வகையையும், வேதாந்த சித்தாந்த சமரசநிர்வாக நிலையும்-வேதாந்த சித்தாந்தங்களை சமரசமாக நிர்வஹிக்கத்தக்க அநுபூதி நிலையையும், மாதிக்கொடி-பெரியதிசைகளுடன் கூடிய, அண்டப்பரப்பு எல்லாம்-லோகவிஸ்தாரமெல்லாம், அறிய-அறியும்படி, வந்தருளும்-வந்து அடியேனுக்கு அருளிச்செய்த, ஞானகுருவே - ஞானாசாரியனே, மந்த்ர குருவே. எ-று

பொய்யை மெய்யாக்கிக் காட்டுதல் மாயையின் தொழிலாதலால், "பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென் புந்திக்கு ளிந்த்ரசாலம்

சாதிக்குதே" என்றார். இங்குசசண்மதம் என்றது வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்னும் அகசசமயங்களை.

மாயை யாவரையும் மயக்குதலால் மிக்க வல்லமை யுடையதாதலின் அதற் கென்செஞ்சிடந் தந்தார் யார் என்பார் 'ஆதிக்க நல்கினவ ராரிந்த மாயைக்கென் னறிவன்றி யிடமில்லையோ' என்றும், அம்மாயாகாரியமா கிய உலகம் பொய்யாயிருக்க அதைமெய்யாக எண்ணிக் காலங்கழிக்க அமையுமோ என்பார் உவமைமுகத்தால் 'அந்தரப் புட்பமுங் கானலின் னீருமோ ரவசரத் துபயோகமோ' என்றும், அம்மாயையின் வசப்பட்டழி யும் அடியேனுக்கு உண்மை ஞானம்பெற வுபாயந்ரவேண்டுமென்பார் 'இதனை வெல்லவு முபாயம்நீ தந்தருள்வ தென்று புகல்வாய்' என்றும் கூறினர்.

4. மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு
விழிகொண்டு மையல்பூட்டும்
மின்னுக்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்கமென்றும்
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப்
பொய்வேட மிகுதிகாடடிப்
பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகாயதன்
சமயகடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவாணுபூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே
மாத்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். மின் அனைய-(தோற்ற வொடுக்கங்களால்) மின்னலை ஒத்த, பொய் உடலை-பொய்யாகிய உடம்பை, நிலையென்றும் - நிலையுள்ளதென் றும், மை இலகு விழிகொண்டு-அஞ்சனக்கீட்டப்பெற்று விளங்குகின்ற கண்களைகொண்டு, மையல் பூட்டும்-காமமயக்கமாகிய விலங்கை இடு கின்ற, மின்னுக்கள் இன்பமே-மாதர்சுகமே, மெய்யென்றும் - உண்மை யென்றும், வளர்மாடம்-உயர்ந்த மாளிகைகளின், மேல்வீடு-மேலுப்பரிகை கள், சொர்க்கம் என்றும்-சொர்க்கலோகம என்றும், பொன்னை - சுவர் ணத்தை, அழியாது வளர்பொருள் என்று - அழியாமல் வளர்கின்ற

பொருளென்றும், போற்றி-விரும்பி, இப்பொய்வேட மிருதிகாட்டி-இந்தப் பொய்வேஷத்தின் பெருமையை வெளிப்படுத்தி, பொறை-பொறுமை, அறிவு-ஞானம், துறவு-இருவகைப்பற்றையுந் துறத்தல், ஈதல் - கொடை, ஆதி - முதலாகிய, நல்குணம் எல்லாம் - நற்குணங்களெல்லாவற்றையும், போக்கிலே போகவிட்டு - (அவை) செல்லுமவழியில் செல்லவிட்டு, தன் நிகர் இல்-தனக்கொப்பிலாத, லோபாதி-உலோபகுணம் முதலாகிய, பாழ் பேய் பிடித்திட-பாழாகிய பிசாசம் பற்றிக்கொள்ள, தரணிமிசை-உலகில் லோகாயதன்-லோகாயதனது, சமயநடைசாராமல்-சமயவொழுக்கத்தைப் பொருந்தாமல், வேதாந்த சித்தாந்த சமரச சிவாநுபூதி மன்ன-வேதாந்த சித்தாந்த சமரச சிவாநுபூதியைப் பொருந்தும்படி, ஒருசொல்கொண்டு என்னைத் தடுத்து ஆண்டு-ஒருமொழியால் என்னைத் தடுத்தாட்கொண்டு, அன்பின் வாழ்வித்த - அன்பினால் வாழசெய்தருளின, ஞானகுருவே-ஞானசாரியனே, மந்த்ரகுருவே. எ-று.

"காய்சினவே லன்ன மின்னியல் கண்ணின் வலைகலக்து - வீசின போது" எனப்பிறர் கூறுதலான், இருவம் 'விழிகொண்டு மையல் பூட்டும்' என்றார். தன்னை உலோகாயத மதஞ் சாராவண்ணம் சிவாநுபூதிப் பெருஞ் செல்வம் வேண்டி யிரப்பவராதலின், மின்னோன்றி நின்றழிவது போன்ற தேகம நிலையாமையினை நோக்கி நிற்பதனால் 'மின்னனைய பொய்யுடலை நிலையென்றும்' என்றும், அவர்கள் மாதர்போகமே முத்தியென்பாராகலின் 'மையலகு வீழிகொண்டு மையல்பூட்டும் மின்னார்கள் இன்பமே மெய்யென்றும்' என்றும், அவர்கவிசெய்தற் கிடமாகிய மாடமாளிகையையே சொர்க்கலோகமாகக் கருதுவதனால் 'வளர்மாட மேல்வீடு சொர்க்கமென்றும்' என்றும், அப்போகத்துக்கு வேண்டும் உபகரணங்கள் பொன்னுதலால் 'பொன்னையழியாது வளர் பொருளென்றும்' என்றும், அதனையே போற்றி நின்று பொய்வேடங் காட்டியொழிதலின் 'போற்றி இப்பொய் வேட மிருதிகாட்டி' என்றும், அசசெய்கையால் பொறையுடமை, மெய் யுணர்ச்சி, துறவு, ஈகையுடைமை முதலிய நற்குணமெலாம் போக்கலின் 'பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலம் போக்கிலே போகவிட்டு' என்றும்,இத்துணைக்கொடுமை செய்யவல்ல உலோகாயதமதத்திற்சேர்வது பிறவிநோய்க்கிடமாகலின் 'தன்னிகரிலோபாதிபாழும் பேய்பிடித்திடத் தரணிமிசை லோகாயதன சமயநடை சாராமல்' என்றும், யானவேதாந்தம் ஆகமாந்தமாகிய சமரச நிலைபெற வேண்டுகின்றேற அது ஒருமொழியாகிய உபதேசவகையால் அன்றிக் கிட்டாதாகலான் 'வேதாந்தசித்தாந்த சமரசசிவாணுபூதி-மன்னவொருசொற்கொண்டு' என்றும், இறைவனல்லது என்னைத் தடுத்தாண்டு அன்பான் வாழுவிப்பவர் பிறரில்லை யாதலால் 'எனைத்தடுத்தாண்டன்பின் வாழவித்த ஞானகுருவே' என்றும் கூறினார். உலோகாயதன் தேகமே யான்மா, போகமே முத்தி என்பதனை, சித்தியார் ருள் பரபக்கத்து உலோகாயதமதத்துள்,

"வாசமார் குழலி னுர்கண் மணியல்குற் றடத்தே மூழ்கி
நேசமார் குமுதச செவ்வா யமுதினை நிறைய வுண்டு
தேசுலா மணிமென் முரண்மேற் சேர்ந்துவீற் றிருந்திடாதே
மாசுலா மனத்தோ ரெல்லா மறுமைகொண் டழிவர் மன்னே"—
என்றும்,

"மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றி லேறி
முதிர்நிலா வெறிப்பச செவ்வா யிளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கணம்மார் பகலழுகும்
புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே."— என்றும்,

ஊடுவ துணர்வ தற்ற கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி யித்தினின் முர்கள் முத்தர்." — என்றுங் கூறிய வாற்முனு மறிக.

5 போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்குமதுபோல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுட னுகமம்
புகலுமதி னுலாம்பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியன் மானமுத
னுனைவிதங்க டேர்ந்து
நானு னெனக்குழறு படைபுடை பெயர்த்திடவு
நான்குசா தனமுமோர்ந்திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற்
றணுபகூ சம்புபகூ சம்
ஆமிரு விகற்பமும் மாயாதி சேவையு
மறிந்திரண் டொன்றென்னுமோர்
மான தவிகற்பமற வென்றுநிற் பதுநமது
மரபென்ற பரமகுருவே
மந்திரகுரு வேயோக தந்திரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ - ள். போனகம் இருக்கின்ற சாலையிடை - அன்னசத்திரத்தில், புசித்தற்கு வேண்டுவ - உண்ணுதற்கு வேண்டிய பொருள்களெல்லாம், இருக்குமதுபோல் - இருத்தல்போல, புருஷர்பெறு - புருஷரால் அர்த்தி

க்கப்படுகின்ற, தர்மாதி-அறம்பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்த நான்கும், வேதமுடன் ஆகமம்-வேதத்துடன் ஆகமங்களும், புகலும் அதினால் ஆம்பயன்-சொல்லுகின்ற அதனாலுண்டாகும் பயனும், ஞானநெறி முக்யநெறி-ஞானநெறியாகியமுக்கியநெறியும், காட்சி அனுமானம்-காட்சி அனுமானம் என்கிற பிரமாணங்களும், முதல்-முதலாகிய, நாலுவிதங்கள் தேர்ந்து-பலவகைகளையு மாராய்ந்து, நான் நான் என-நான் நான் என்று, குழறுபடை-குழறுபாட்டை, புடைபெயர்த்திடவும் - தீர்த்தூளியாக்கவும், நான்கு சாதனமும் ஓர்ந்திட்டு சாதநசதுஷ்டயத்தையும் விசாரித்துணர்ந்து, ஆனநெறி ஆம்சரியை ஆதிசோபானம் உற்று-நல்ல நெறியாகிய சரியையுமுதலாகிய சௌபானங்களையடைந்து, அணுபக்ஷசம்புபக்ஷம் ஆம்இருவிகற்பமும்-அணுபக்ஷம் சம்புபக்ஷம் என்கிற இரண்டு வேறுபாடுகளையும், மாயாதி சேவையும்-மாயாதிகளுடைய தரிசனத்தையும், அறிந்து - ஐயந்திரிபறவுணர்ந்து, இரண்டு ஒன்று என்னும்-இரண்டு ஒன்று என்கின்ற, ஓர்-ஒப்பற்ற, மானத விகற்பம் அற-மநோவிகற்பம் அற்றொழிய, வென்று நிற்பது-ஜயித்து நிற்பதே, நமது மரபு என்ற-நமது மரபென்றுரைத்தருளிய, பரமகுருவே-பரமாசாரியனே, மந்த்ரகுருவே. எ-று.

சாதன சதுஷ்டயமாவன:—நித்யாநித்யவஸ்து விவேகம், இகமுக்தார்த்த பலபோகவிரசகம், சமாதிஷட்கசம்பத்தி, முமுக்ஷுத்வம் என்னும் நான்குமாம்.

சோபானம்-மேலிடத்தேற அமைத்தபடி. அணுபக்ஷம்-ஆன்மாக்கள் தாமே பக்குவப்பட்டடையும் நெறி. சம்புபக்ஷம்-இறைவன் திருத்தப்பக்குவப்பட்டடையும்நெறி. இனி அணுபக்ஷமென்பதற்குப் பிரோகப்படுபவையென்றும் அபரமென்றும், சம்புபக்ஷமென்பதற்குப் பிரோகக் கருவியென்றும் பரமென்றும் கூறினுமிழுக்காது.

மடைப்பள்ளியில் உண்டிக்குரிய பொருளனைத்து மொருங்கிருப்பது போல, வேதாகமங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அவ்வவ்வதிகாரிகள் அநுட்டித்துடக்கக்கூறலின் 'போனகமிருக்கின்ற சாலையிடவேண்டுவ புசித்தற் கிருக்கு மதுபோற் புருடர்பெறு தர்மாதி வேதமுடனாகமம் புகலும்' என்றும, இதனைக் காட்சி, அனுமானம், உவமானம் முதலிய அளவைகளால் நன்குதேறவேண்டுதலின் 'காட்சியனுமானமுதல் நாலுவிதங்களோர்ந்து' என்றும், அந்தஞானம்பெறுதற்குஆங்காரமுளையை யறக்களைந்துவிட்டசே சோபானங்களாகிய சரியை கிரியாயோகங்களையனுட்டிக்கவேண்டுமென்பார் 'நாலுனெனக்குழறு படைபுடை பெயர்த்திடவு நான்குசாதனமு மோர்ந்திட்டு' என்றும், அங்கே அணுபக்ஷ சம்புபக்ஷங்களை யறிந்து மாயாதிசேவைசெய்து இரண்டொன்றென்னுத சிவாணு

பூதிப் பெருஞ்செல்வ மெய்தவேண்டுதலின் 'அணுபக்ஷ சம்புபக்ஷமா மிரு விகற்பமு மாயாதி சேவையு மறிந்திரண்டொன் றென்னுமோர் மானத விகற்பமற' என்றும், இவ்வாறுபெற்று நிற்பதே நமது குருமரபு என்பார், 'வென்றுநிற்பது நமது மரபு' என்றுங் கூறினர்.

ஞானம் பெறுதற்குச சரியைகிரியா யோகங்கள் சோபானமென்ப தனை 'விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்-அரும்புமலர் காய் கனிபோ லன்றே' என்றிவ்வாசிரியர் கூறியவாற்றானு முணர்க. காட்சி யானுமானமுத லென்றமையை 'அளவை காண்டல் கருதலுரையபாவம் பொருளொப்பா றென்பர், அளவைமேலு மொழிபுண்மையை திகத்தோடி யல்பெனநான், களவைகாண்ப ரவையிற்றின் மேலுமறைவ ரவையெல் லாம், அளவைகாண்டல் கருதலுரையென் றிம்மூன்றி னடங்கிடுமே,' என்ற சுபக்கத்தளவைச சூத்திரத்தானு மறிக.

6 கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங்
கருணைசிறி தேதுமில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாக்
காதலித் திடுநெஞ்சமும்
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைகள்
பொருந்துகுண மேதுமறியேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்த மேதுமில்லேன்
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ண மும்வண்ணமோ
இருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு
மெனக்குநின் னருடாரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த
வஞ்சகனை யாளகினையாய்
மந்திரகுரு வேயோக தந்திரகுரு வேமூலன்
மாபில்வரு மௌனகுருவே.

இ - ள். கல்லாத அறிவும்-கல்லாமல் உண்டாகிற ஞானமும், மேல்-அதற்குமேல், கேளாத கேள்வியும் - சிரவணம் செய்யாத கேள்வியும், சிறிது ஏதும் கருணை இல்லா காட்சியும் - மிகசசிறிதும் தயையில்லாத அறிவும், கொலை களவு கள் காமம்-கொல்லுதல் திருடுதல் கள்ளுண்டல் பிறர்மனை நயத்தல் ஆகிய இவைகளை, மாட்சி ஆ-மேலான பொருள்க ளாகக் கொண்டு, காதலித்திடும் - அவற்றின்கண் விருப்பத்தைச் செய் கின்ற, நெஞ்சமும்-மனமும், பொல்லாத பொய்மொழியும்-முழுப்பொய் வார்த்தையும், அல்லாது-அல்லது, நன்மைகள் பொருந்துகுணம்-நன்மை

பொருந்திய குணங்கள், எதும் அறியேன் - சிறிதும் உணர்ந்திலேன், புருஷார்வடிவு ஆனதே அல்லாது-புருஷரூபம் கொண்டதேயன்றி, கனவிலும்-கனவிலும், புருஷார்த்தம்எதும் இல்லேன்-புருஷார்த்தம் சிறிதும் உடையனல்லேன், எல்லாம் அறிந்த நீ அறியாதது-அன்று (இது) சர்வஜ்ஞனான நீ அறியாதது அல்ல, எனக்கு - அடியேனுக்கு, எவ்வண்ணம் உய்வண்ணமோ-எந்தவகை உய்யும்வகையோ (அறிகிலேன்), இருளே இருள் என்ற வர்க்கு-இருளே இருளென்று கொண்டவர்களுக்கு, ஒளிதாரகம் - ஒளியானது ஆதாரமாயிருக்கும், (அதுபோல) பெறும் எனக்கு - (உன்னை) யடைந்த எனக்கு, நின் அருள் தாரகம்-உன் திருவருளே ஆதாரம் ஆகும், வல்லான் என்னும்பெயர்-சர்வசக்தன் என்னும் பெயரானது, உனக்கே உள்ளது-உனக்கே உண்டாயிருக்கின்றது, (ஆதலால்) இந்த வஞ்சகனே ஆளினையாய்-இந்த வஞ்சகனை ஆண்டருள வினைவாயாக, மந்த்ரகுருவே. எ-று.

புருஷார்த்தம் புருஷனால் அர்த்திக்கப்படுவது. அர்த்தித்தல்-வேண்டுதல். அப்புருஷார்த்தம்-தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என நால்வகைப்படும். இதனைப் புருஷார்த்த சதுஷ்டயம் என்பர்.

நூல்களைக் கல்லாதவரது ஞானம் ஞானமன்றென்பார் 'கல்லாதவறிவும், என்றும், அவ்வாறே அறிஞர்பாற் சென்று கேளாததோர் கேள்வி கேள்வியெனப்படுவ தன்றென்பார் 'மேற்கேளாத கேள்வியும்' என்றும், தயாமூல தன்மமே பெற்றிருப்பது அறிஞர்கள் தன்மையாதலின் அது பெற்றிராமையைக் 'கருணைசிறி தேது மில்லாக் காட்சியும்' என்றும் கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறன்மனை நயவாமை என்பனவாகிய இவைகளை மேற்கொண்டொழுகாமல், இவற்றின் மறுதலைகளை மேற்கொண் டொழுகினேனென்பார் 'கொலைகளவு கட்காம மாட்சியாக் காதலித்திடு நெஞ்சமும்' என்றும், பொய்ம்மையே யெப்பெருந்தீமைக்கு மிடமாகலின் 'பொல்லாதபொய்ம்மொழியும்' என்றும், இவையல்லது வேறுநன்மையை விரும்புந்தன்மையே னல்லேனென்பார் 'அல்லாமல் நன்மைகள் பொருந்துகுணமேது மறியேன்' என்றும், மானிடங் கொண்ட தன்றிப் புருடார்த்தமென்பது சிறிதுமில்லே னென்பார் 'கனவினும் புருடார்த்த மேதுமில்லேன்' என்றும், எல்லாமறிந்த நீ யறியாத தொன்று மில்லை என்பார் 'எல்லா மறிந்த நீ யறியாத தன்று' என்றும், நீயே யுய்வித்தாலன்றி யுய்கிலேன் என்பார், 'எனக்கெவ்வண்ண முய்வண்ணமோ' என்றும் கூறினர்.

7 கானக மிலங்குபுலி பசுவொடு குலாவுநின்
கண்காண மதுயானை நீ

கைகாட்ட வுங்கையா னெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே
போனக மமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்றுசொலுமே
புவிராஜர் கவிராஜர் தவராஜ னென்றுனைப்
போற்றிஜய போற்றியென்பார்
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களுமுன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதன்
ஞானிகளு மூனமெச்சுவார்
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன்
மகிமையது சொல்லவெளிதோ
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். கானகம் இலங்கு புலி-காட்டில் சஞ்சரிக்கின்ற புலியானது, பசுவொடு குலாவும்-பசுவோடு கூடி விளையாடும், நின்கண் காண-உன்கண் காணும்படி, மதயானை-மதயானையானது, நீ கைகாட்டவும்-நீகைகாட்டின அளவில், கையால்-துதிக்கையினால், நெகிடிக்கு என-நெகிடிக்காக, பெரிய கட்டை-பெருங்கட்டைகளை, மிக ஏந்திவரும்-மிகவும் சுமந்துவரும், அக் காமதேனு-அந்தக் காமதேனுவானது, நின் பொன் அடியில் நின்று-உன் திருவடியின்கீழ் நின்று, போனகம் அமைந்தது என சொல்லும்-உணவு சித்தமாயிருக்கிறது என்று சொல்லாநிற்கும், புவிராஜர்-பூலோகத்தரசரும், கவிராஜர்-வித்துவான்களும், உன்னை-தேவரீரை, தவராஜன்என்று-தபோ நிதியென்று, போற்றி-நமஸ்காரம், ஜய, ஜயவிஜயீபவ, போற்றி-நமஸ்கா ரம், என்பார்-என்று புகழ்ந்துரைப்பார்கள், ஞான கருணாகர முகம்-ஞான த்துக்கும் கருணைக்கும் பிறப்பிடமாயிருக்கிற (உனது) திருமுகத்தை, கண்டபோதிலே-கண்டபொழுதிற்றானே, நவநாத சித்தர்களும்-சத்திய நாதர்முதலிய ஒன்பது சித்தர்களும், உன் நட்பினை விரும்புவார்-உனது சினேகத்தை யிசைப்பார்கள், சுகர் வாமதேவர் முதல்ஞானிகளும் - சுகர் வாமதேவர் முதலாகிய ஞானவான்களும், உன்னை மெச்சுவார்-உன்னைக் கொண்டாடுவார்கள், வானகமும் மண்ணகமும் வந்து-விண்ணுலகத்தா ரும் மண்ணுலகத்தாரும் வந்து, எதிர் வணங்கிடும்-எதிரே நின்று தொழு கின்ற, உன் மகிமையது-உன் பெருமையாகிய அதனை, சொல்ல எளிதோ-புகழ்ந்து சொல்லுதற்கு எளிதாகுமோ, மந்த்ர குருவே. எ-று.

கானகமிலங்கு என்பதை, கால் நகம் இலங்கு எனப்பிரித்து காலில் நகங்கள் விளங்குகின்ற எனப் பொருளுரைத்தலும் ஒன்று. நெகிடி-தீ மூட்டம்.

ஆசாரியன் சந்நிதானத்தினதுபெருமை இன்னதென்று சொல்லவந்தவர் 'கானகமிலங்குபுலி பசுவொடு குலாவும்' என்றும், நெகிடியைக் கண்டஞ்சும் யானையும் அந்நெகிடிக்காகக் கட்டையை யேந்திவருமென்பார், 'மதயானை நீ கைகாட்டவுங்கையால் நெகிடிகெனப்பெரிய கட்டைமிக வேந்திவரும்' என்றும், உனக்கு எப்பொருளும்அமைந்துகடக்குமென்பார், 'போனக மமைந்தெதன வக்காம தேனுகின் பொன்னடியி னின்று சொலும்' என்றும், அரசச்செல்வமும் கல்விசெல்வமும் உடையாரும்உன் தவசசெல்வத்தின் பெருமையைக் கண்டு வணங்குவா ரென்பார், புவிராசர் கவிராசர் தவராச னென்றுனைப் போற்றிஜயபோறறி யென்பார்' என்றும், உன் திருமுகங் கண்டமாத்திரையே சத்தியநாதர் முதலிய ஒன்பது சித்தர்களும் உன் கட்பினே வேண்டுவார் என்பார், 'ஞானகருணாகர முகங் கண்ட போதிலே நவநாத சித்தர்களுமுன் னட்பினைவிரும்புவார்' என்றும், மெய்ஞ்ஞானிகளும் மகிழ்வாரென்பார் 'சுகர்வாமதேவர் முதல்ஞானிகளு முனை மெசசுவார்' என்றும், ஆதலால் வானும் வையமு முனைவந்து தாள்பணிவது சொல்லவேண்டுமோ வென்பார், வானகமும் மண்ணகமும் வந்தெதிர்வணங்கிடுமுன் மகிமையது சொல்லவெளிதோ' என்றுங் கூறினர். வானகமு மண்ணகமும் வந்தெதிர வணங்கு மென்பதை 'வானும் வையமும் வந்துதாள் வணங்கும்' என்றும், 'ஞாலமுண்டவன் றலைமிசைச சுமப்பன் மெய்ஞ்ஞானிவேண்டுவவெல்லாம், ஞாலமுண்டவ னவன்பினே திரிகுவன்' என்றுங கூறியதனாலு மறிக.

8 சருகுசல பக்ஷணிக ளொருகோடி யல்லாற்
சகோர பக்ஷிகள்போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மையர னந்தகோடி
இருவினை களற்றிகவு பகலென்ப தறியாத
வேகாந்த மோனஞான
இன்பதிஷ் டையர்கோடி மணிமந்த்ர சித்திநில
யெய்தினர்கள் கோடிசூழக்
குருமணி யிழைத்திட்ட சிங்காதனத்தின்மிசை
கொலுவீற் றிருக்குநின்னைக்
கும்பிட் டனந்தமுறை தெண்டனிட் டென்மனங்
குறையெலாம் தீருமவண்ணம்

மருமல ரெடுத்துனிரு தாளையர்ச் சிக்கவெனை
வாவென் றழைப்பதெந்நாள்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூல
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். சருகுசல பக்ஷணிகள் ஒருகோடி உலர்ந்த இலைகளையும் நீரையும் உண்டு உயிர்வாழ்வோர் ஒருகோடிபேர்களும், அல்லால் அல்லாமல், சகோரபட்சிகள்போல-சகோரப் பறவைகள்போல, தவள நிலவு ஒழுகு-வெண்மையாகிய சந்திரிகையோடு ஒழுகாநின்ற, அமிர்ததாரை உண்டு-அமிர்த வருஷதாரைகளைப்புசித்து, அழியாததன்மையர்-இறவாத தன்மையை யுடையவர்கள், அனந்தகோடி-அனேககோடி பேர்களும், இருவினைகள் அற்று-இருவினைகள்நீங்கி, இரவுபகல் என்பது அறியாத-இராப்பகல் என்பதை உணராத, ஏகாந்த மோனஞானம்-தனிமையும் மௌனமும ஞானமும் ஆகிய இவைகளையுடைய, இன்ப நிஷ்டையர்கோடி-சுக நிஷ்டையை யுடையவர்கள் கோடிபேர்களும், மணிமந்த்ர சித்திநிலை கய்தினர்கள் கோடி-மணிமந்த்ர சித்திநிலைகளை அடைந்தவர்கள் கோடிபேர்களும், சூழ-சுற்றிநிற்க, குருமணி இழைத்திட்ட-நிறமுள்ள ரத்நங்களைச செதுக்கிய, சிங்காதனத்தின்மிசை - சிம்ஹாசனத்தின்மீது, கொலு வீறிருக்கும் நின்னை திருவோலக்கமாக எழுந்தருளியிருக்கின்ற உன்னை, சூம்பிட்டு கைகுவித்து, அனந்தமுறை தெண்டனீட்டி அநேகநமஸ்காரம்பண்ணி, என் மனக்குறையெல்லாம்-என் மனத்தின் கண்ணவாகிய குறைகளெல்லாம், தீரும்வண்ணம் நீக்கும்படி, மருமலர் எடுத்து-வாசனை பொருந்திய மலர்களை (விதிப்படி) எடுத்து, உன்இருதாளை அர்சிக்க-உன் இரண்டு திருவடிகளையும் அருசசனை செய்யும்பொருட்டு, என்னை வாவென்று அழைப்பது-என்னை வாவென்று தேவரீர் அழைத்தருளுவது, எந்நாள்-எந்தக்காலம், மந்த்ரகுருவே. எ-று.

சகோரபக்ஷி-சந்திரகிரணத்தையுண்டு ஜீவிக்கும் பக்ஷிகளுள் ஒன்றாயத்திற்றானே சஞ்சரிப்பதோர் பறவை. மருமலர்-மொட்டு. "மொட்டுமலர் பறித்திறைஞ்சி" என்றார் பிறரும். விரிந்தபிறகு மணமிராதாதலால், மருமலர் என்றார். இவ்வாறு பொருள்கூறலாயிற்று. குருமணி-மாணிக்கமெனினுமாம்.

சருகுசல முண்டாலும் தேகம பாதுகாக்க வியலுமாகலின் அசருகு சலபக்ஷணஞ்செய் துயிர்காத்துத் தவஞ்செயவாரை முன்னும, அதனினும் மதியினமு துண்டு சுகிப்பாரை 'சகோரபக்ஷிகள் போலவே தவளநிலவொழுகுமுத தாரையுண் டழியாத பண்மைய ரனந்தகோடி' என அதன்பின்னும், இவர்கள் தேகவாஞ்சை யுடையராதலின் அவ்வாஞ்சையற்ற வரை 'இருவினைகளற்றிரவு பகலென்ப தறியாத வேகாந்த மோனஞானவின்பநிஷ்டையர்கோடி' என்று அதன்பின்னும், அதனினும் எண்வகைசித்திபெற்றோர் சிலராதலின 'மணிமந்த்ர சித்திநிலை யென்றினார்கள்

கோடி' என்றதன்பின்னும், இவ்வாறு அவர்கள் சூழக் கொலுவீற்றிருக்கும் உன்னை யருச்சிக்க என்குறையெலாந் தீரு மாதவின் வாவென்றென்னை யழைப்ப தென்றே என்பார் 'கும்பிட்டனக்தமுறை தெண்டனிட் டென்மனக் குறையெலாந் தீரும் வண்ணம் மருமல ரெடுத்துனிரு தாளையர்ச சிக்கவென்னை வாவென் றழைப்ப தெந்நாள், என்றுங் கூறினர். இருவினை யென்றது நல்வினை தீவினைகளை. இரவிபகல என்றது கேவலச கலங்களை.

9 ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
வாணவத் தினும்வலிதுகாண்
அறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாதி
யாதொன்று தொடினுமதுவாய்த்
தாங்காது மொழிபேசு மரிகரப் பிரமாதி
தம்மொடு சமானமென்னும்
தடையற்ற தேரிலுரு கருவாணி போலவே
தன்னிலசை யாதுநிற்கும
ஈங்கா ரெனக்குநிக ரென்னப்ர தாபித்
திராவணு காரமாகி
இதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்குமித னெடுநேரமும்
வாங்கா நிலாதடிமை போராட முடியுமோ
மௌனேப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். ஆங்காரம் ஆன - ஆங்காரமாகிய, குலவேட வெம்பேய் - குல வேடரை யொத்த வெவ்விய பேயானது, பாழ்த்த ஆணவத்தினும் வலிது - பாழாகிய ஆணவப்பேயினும் வலியது, (அது) அறிவினை மயக்கிடும - என்னறிவை மயக்கிவிடும், நடு அறிய வொட்டாது - நடுவுநிலைமையை அறிய வொட்டாது, யாதொன்று தொடினும் - எதொருபொருளைப்பற்றினும், அது ஆய் - அது தானேயாகி நின்று, தாங்காது மொழிபேசும் - சகிக்காமல் வார்த்தைசொல்லும், அரி அர பிரமாதி தம்மொடு சமானம் என்னும் - ஹரிஹர ப்ரஹ்மாதிகளோடு நான் சமமாவேனென்று சொல்லும், தடை அற்ற தேரில் தடையறச செலுத்துகின்ற தேரினிடத்தி, அஞ்சுரு ஆணிபோல - அசசாணிபோல, தன்னில் அசையா நிற்கும் - தன்னிடத்தசை வில்லாமலிருக்கும், ஈங்கு - இவ்வுலகத்தில், எனகரு நிகர் ஆர் என்னப் பிரதாபித்து - எனக்கொப்பு யாவரென்று ப்ரஸ்தாபித்து, இராவணுகாரம் ஆகி - இராவணரூபங்கொண்டு, இதயவெளி எங்கணும் - இதயாகாசமெல்லாம், தன்னரசு

நாடி செய்து இருக்கும்-தன்னைச் நாடாகசெய்து கொண்டிருக்கும், இதனை-இதனுடன், எந்நேரமும்-எப்போதும், வாங்கா நில்லாது-நீங்கி நில்லாமல், அடிமை - உனதடிமையாகிய நான், போராட முடியுமோ - போர் செய்யமுடியுமோ. மௌனோபதேசகுருவே மௌனநிலையை உபதேசித்தருளுகின்ற ஆசாரியனே, மந்திரகுருவே. எ-று

வாங்கா நில்லா வடிமையென்று பாடமோதி வாங்காது நின்று என்று பொருள்கூறலுமாம். இராவணகாரமாகி - இருளுருவாகி; அவனது நிறம் கருமையாதலால் இவ்வாறு கூறப்பட்டது. இது தமோகுணப்பெருமையை வெளியிடுகின்றது. முடியுமோ என்னும் ஓகாரம் எதிர்மறை.

ஆங்காரங் கெட்டவிடத்தே தற்போத வொழிவாகலால், 'ஆங்கார மானகுலை வேடவெம்பேய்பாழ்த்த வானவத்தினும் வலிதுகாண்' என்றும், அது இருக்குந்துணையும் மெய்யுணர்ச்சி தோன்றுமையின் 'அறிவினை மயக்கிடும் நடவெறிய வொட்டாது' என்றும், எதைக்குறித்துப் பேசினும் அது தானேயாகித் தருக்கலான் 'அதுவாய்த் தாங்காது மொழிபேசும்' என்றும், இதுமட்டோ, சிருட்டி திதி சங்காரகர்த்தாக்களையும் ஒரு அணுவாகக் கருதசெய்யுமென்பார் 'அரிகரப்பிரமாதி தன்னெதி சமானமென்னும்' என்றும், இதுவுமன்றி அஞ்சுருவாணி அசையாது நின்று தேரைசசெலுத்துவதுபோல, தான் சலியாமல் நின்று பொறிமுதலிய வியக்கலான் 'தடையற்ற தேரிலஞ் சுரு வாணிபோலவே தன்னிலசையாது நிற்கும்' என்றும், தன்னறிவு முழுதும் சூறையாடி இதயவெளி யெங்கும் தன் வயப்படுத்துதலின் 'இராவணகாரமாகி யிதயவெளி யெங்கணுந் தன்னசசு நாடு செய்திருக்கும்' என்றும், இதனெடுநேரமும் போராடமுடியாதென்பார் 'எந்நேரமும் வாங்கா நிலாதடிமை போராடமுடியுமோ' என்றுங் கூறினர். ஆங்காரமொடுங்கினலன்றி மெய்யுணர்ச்சி தோன்றுதென்பதனை 'ஆங்காரமு மடங்கா மொடுங்கார் பரமானந்தத்தே - தேங்கார் நினைப்பு மறப்பு மறார்' என்பதனாலறிக.

10 பற்றுவெகு விதமாகி யொன்றைவிட் டொன்றினைப்
பற்றியுழல் கிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தை பெற்றநான் வெளியாக நின்னருள்
பகர்ந்துமறி யேன்றுவிதமோ
சிற்றறிவ தன்றியு மெவரேனு மொருமொழி
திடுக்கென் றுரைத்தபோது
சிந்தை செவியாகவே பறையறைய வுதரவெந்
தீநெஞ்ச மளவளாவ
உற்றுணர வுணர்வற்றுன் மத்தவெறி யினர்போல
வுளமுவென் முத்திமார்க்கம்

உணர்வதெப் படியின்ப தன்பஞ்ச மானமா
யுறுவதெப் படியாயினும்
மற்றெனக் கையநீ சொன்னவொரு வார்த்தையினை
மலையிலக் கெனநம்பினேன்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

இ-ள். பற்று-பற்றுதற்குரிய இடம், வெகுவிதம் ஆகி-அநேக விதங்களாகக்கொண்டு, ஒன்றைவிட்டு ஒன்றினைப்பற்றி-ஒன்றைவிட்டு ஒன்றைப் பிடித்து, உழல்-சுழல்கின்ற, கிருமிபோல-புழுவைப்போல, பாழ்சிந்தை பெற்ற நான்-கொடுமையாகிய மனத்தைப்படைத்த நான், வெளியாக-வெளிப்படையாக, நின் அருள்-உன் திருவருளே, பகர்ந்தும் அறியேன்-புகழ்ந்தும்அறியேன்' துவிதமோ சிற்றறிவு - துவிதமிலையென்றாலோ அது சிற்றறிவாய் முடியும், அது அன்றியும்-அதையல்லாமலும், எவர் எனும்-யாவராயினும், ஒருமொழி-ஒருசொல்லே, திடுக்கென்று உரைத்தபோது-திடுக்கென்று சொன்னகாலத்தில், செவியே சிந்தையாக-காதே மனமாக, பறை அறைய-பறையறையவும், வெம்-வெவ்விதாகிய. உதரத்தீ-உதராக்கினியானது, நெஞ்சம் அளவளாவ-மனத்தைக் கலக்கும்படி, உற்று-பொருந்துவதனால், உணர உணர்வு அற்று அறிதற்குரிய அறிவும்அற்று, உன்மத்த வெறியினர்போல - உன்மத்தங்கொண்ட வெறியாளரைப்போல, உளறுவேன்-குழறுவேன், (இப்படிப்பட்ட நான்) முத்திமார்க்கம் உணர்வது எப்படி-முத்திநெறியை அறிவது எவ்வாறு, இன்பதுன்பம்-சுகதுக்கங்கள், சமானமாய் உறுவது எப்படி-சமானமாகப் பொருந்துவது எவ்வாறு, ஆயினும்-ஆனாலும், ஐய-ஐயனே, நீ எனக்கு சொன்ன-நீயெனகுசு சொல்லியருளிய, ஒருவார்த்தையினை-ஒருசொல்லே, மலை இலக்கு என நம்பினேன்-மலையைக் குறியாகக்கொண்டாறபோல நம்பியிருக்கின்றேன், மந்த்ரகுருவே. எ-று.

கிருமி யோரிடத்தே நில்லாது பலவிடங்களைப் பற்றுதலான் அதை மனத்துக்கு உவமையாகக்கொண்டு 'பற்றுவகு விதமாகியொன்றைவிட்டொன்றினைப் பற்றியுழல் கிருமிபோலப் பாழ்சிந்தை பெற்றநான்' என்றும், அவ்வாறு பெற்றநான் திருவருள் ஞானத்தால் வீடுபேறென்றறியாதிருந்தேனென்பார் 'வெளியாக நினதருட் பகர்ந்துமறியேன்' என்றும், துவிதஞானமானது அத்துவிதமாகிய இரண்டன்மைபோலச சிறந்ததன்றென்பார் 'துவிதமோ சிற்றறிவது' யாதேனும ஒருமொழி சொன்னவிடத்துச் சிந்தை செவியாய்ப் பறையறைய உதராக்கினி நெஞ்சங்கலக்க உணர்வற்று உன்மத்தனைப்போல உளறுவேன் என்பார் 'சிந்தை செவியாகவே பறையறைய வுதரவெங் தீநெஞ்ச மாவளாவ உற்றுணர வுணர்

வற்றுன்மத்தவெறியினர்போல வுளறுவேன்' என்றும், இருவினை யொப்பு உளதாயினன்றி முத்திநேறி யமையாதென்பார், 'இன்பதுன்பஞ் சமான மாயுறுவ தெப்படி, என்றும், நீ சொன்ன உபதேசமொழியை யன்றி வேறுன்னையுங் கருதேனென்பார் 'ஐயநீ சொன்னவொரு வார்த்தை யினை மலையிலக்கென நம்பினேன்' என்றுங்கூறினர்.

கருணாகரக் கடவுள்.

1 நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விஷய கைவல்யமா
நிஷ்கள வசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொடந்த நித்தமுக்த
தற்பரவிஸ் வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச வென்றுநான்
சர்வகாலமு நினைவனே
அற்புதவ கோசர நிவர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசா கூஷாத்கார
வனுபூதி யனுக்ரகமுக்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணுறை திருந்தகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். நிர்க்குண - குணரகிதனே, நிராமய - நோயற்றவனே, நிரஞ்சன-களங்கரகிதனே, நிராலம்ப - பற்றுக்கோடில்லாதவனே, நிர்விஷய-விஷயரகிதனே, கைவல்யமாம் நிஷ்கள - மோக்ஷரூபமான கலாரூக்யனே, அசங்க - சங்கரஹிதனே, சஞ்சலரகித-சஞ்சலமற்றவனே, நிர்வசந-வசந ரஹிதனே, நிர்த்தொடந்த - தொடக்கற்றவனே, நித்த-சாசுவதனே, முக்த-பாச விமுக்தனே தற்பர - தற்பரனே, விஸ்வாதீத - லோகாதீதனே, வ்யோமபரிபூரண - பரமாகாசத்தில் நிறைந்திருப்பவனே, சதாநந்த - சதாநந்ததையுடையவனே, ஞான - ஞானத்தை யுடையவனே, பகவ-பகவச்சப்தத்தின் பொருளாயிருப்பவனே, சம்பு-சம்புவே சிவ-சிவனே சங்கர - சங்கரனே, சர்வேச - சாவேசசுரனே, என்று - என்றுசொல்லி, நான் சர்வகாலமுநினைவனே-நான் சதாகாலமும் உன்னைத்யானிப்பேனே, அற்புத - ஆச்சர்யபூதனே, அகோசர - யாவராலும் அறியப்படாதவனே, நிவர்த்திபெறும் அன்பருக்கு - நிவ்ருத்திமார்க்கத்தை யடைந்த அடியார்

களுக்கு, ஆனந்தபூர்த்தி ஆன-சுகநிறைவாகிய, அத்துவிதநிச்சய-அத்துவித நிலையாகிய உண்மையை யுடையவனே, சொரூப சாக்ஷாத்கார அநுபூதி அநுசுதமும்-பரப்பிரம சொரூபத்தையும் அதன் பிரதிதிருஷ்டதையும் அத னது அநுபவசித்திரையும், கற்பனை அற-யதார்த்தமாக, ஞான-முகக்கண் ணால் சேவிக்கும்படி, முக்கண்ணுடன் மூன்று கண்களோடு, வடநிழற் கண்ணுடு இருந்த-கல்லாலவிரிழல் லெழுந்தருளியிருந்த, குருவே ஞான சிரியனே, கருது அரிய-நினைதற்கும் அரிதாகிய, சிற்சபையில் - சிற்றம் பலத்தில், ஆனந்தநிர்த்தம் இடு-ஆனந்தக் கூத்தாடுகின்ற, கருணைகரக் கட வுளே-கருணைக்குப் பிறப்பிடமாயிருக்கிற கடவுளே.

பகவன் என்பதற்கு, ஆறு மங்கள குணங்களையுடையவன் என்பது பொருள். அவையாவன சர்வஜ்ஞத்வம், சர்வேசுவரத்வம், சர்வநியந்திருத் வம், சர்வாந்தர்யாமித்வம், சர்வகற்பிதத்வம், சர்வசக்தித்வம் என்பன. இவ்வாறன்றி, ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னு மிவற்றைக் கூறுவதுமுண்டு. அநுஸ்யூதம் என்னும் வடமொழி அநுசுதமென நின்றது. கடவுள் என்பதற்கு, ப்ருதிவ்யாதி நாதாந்தமா யுள்ள தத்துவங்களைக்கடந்து நின்றவன் என்பதுபொருள். தற்பரன்-ஆன் மாகளிடத்தில் பிரியமுள்ளவன் முக்ததற்பரனென ஒருதொடராக்கி, முக்தர்களிடத்தில் பற்றுள்ளவன் என்னலுமாம். சம்பு - சுகத்தையுண் டாக்குவோன். அன்றிச சுகரூபியாயிருப்பவன். சிவன் - மங்களத்தோடு கூடியிருப்பவன் எனவும், சுபங்களைக் கொடுப்போன் எனவும், ஆனந்த ரூபி யும் நிர்விகாரியுமா யிருபபவனுதலால சமித்திருப்பவ னெனவும், சாதுக்க ளுடைய மனம் தன்னிடத்தில் நிலைக்கப்பெற்றவன் எனவும், சாதுக்களு டைய மனத்தில் சயனித்திருப்பவன் எனவும் பொருள்படும். சங்கரன்-சுகத் தைச செய்கிறவன். நிவ்ருதிமார்க்கம்-மோக்ஷநெறி. வடநிழற் கண்ணுடு, என்பதற்கு ஆலநீழலாகிய இடத்தில் என்றுரைப்பினுமாம். இது அடியார்க் கெளியனுதலை யுணர்த்துகின்றது.

2 மண்ணுதி யைந்தொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி சுரோத்ராதியும்
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதியுடனே
தொண்ணூற்றெ டாறுமற் றுள்ளனவு மெவனியாய்ச்
சொன்னவொரு சொற்கொண்டீ
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
தோற்றுமதை யென்சொல்லுவேண்
பண்ணுரு மிசையினெடு பாடிப் படித்தநட்
பாண்மைநெறி நின்றுதவுறப்

பக்குவ விசேஷராய் நெக்குநெக் குருகிப்
பணிந்தெதழுந் திருகைகூப்பிக்
கண்ணுறு கரைபுரள நின்றவன் பரையெலாங்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். மண் ஆதி ஐந்தொடு-மண்முதலாகிய பஞ்சபூதங்களுடன், புறத்தில் உள்ள கருவியும்-புறக்கருவிகளும், வாக்கு ஆதி சுரோத்ராதியும்-வாக்கு முதலான கர்மேந்திரிய மைந்தும சுரோத்திரம் முதலான ஞானேந்திரிய மைந்தும், வளர்கின்ற சப்தாதி - வருத்தியடையாநின்ற சப்தமுதலான விஷய மைந்தும், மனம் ஆதி - மனம்முதலான அந்தக்கரணம் நான்கும், கலை ஆதி - கலைமுதலான வித்தியாதத்துவங்களேழும், மன்னுசுத்தாதியுடனே-நிலைபெற்ற சுத்த தத்துவத்துடனே, தொண்ணூற்றிரண்டு ஆறும்-தொண்ணூற்றாறும், மற்று உள்ளனவும்-வேறுள்ளவைகளும், மௌனி ஆய்-மௌனகுருவாகி, (வந்து) சொன்ன-நீசொன்ன, ஒரு சொல்கொண்டதே-ஒரு மொழியை உட்கொண்டவளவிலே, நல் வெளியதாய் - பரிசுத்தமான ஆகாயமாகி, அகண்ட ஆனந்த சுகவாரி - இடையறாத இன்பசுக சாகரம், தோற்றுமதை என் சொல்லுவேன்-காணப்படுவதை யென்னென்று சொல்லுகேன், பண் ஆரும் இசையினொடுபாடி - பண்ணிறைந்த இராகத்தோடு பாடி, படித்த-படித்து, அருள்பான்மை நெறிநின்று - திருவருட்பான்மை வழிநின்று, தவறு-பிழையாத, பக்குவ விசேஷர் ஆய்-நீவிரதரபக்குவத்தையுடையவராகி, நாய, நெக்கு நெக்கு உருகி - நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி, பணிந்து எழுந்து-நிலமுதெதழுந்து, இருகை கூப்பி - இரண்டுகைகளுங் குவித்து, கண் ஆறு கரைபுரள நின்ற-கண்ணீராலாகிய நதியானது கரை புரணடோடநின்ற, அன்பரை எல்லாம்-அடியார்களே யெல்லாம், கைவிடா காட்சி உற-கைவிடாத சேவையை யடையும்படி, கருது அரிய சிற்சபையில். எ-று.

திருவருணெறிநின்ற அன்பர்கள் சேவிக்கச் சிற்சபையில் நடிக்கின்ற நீ என்னளவில் அகண்டாநந்த சுகவாரி தோற்றும்படி கிருபைபுரிந்ததைக் குறித்து என்னசொல்லிப் புகழ்வேன் என்பது கருத்து.

மண்ணுதி ஐந்தெனறது பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய மென்பனவாம். வாக்காதி யென்றது வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் எனபனவாம். இவற்றை கர்மேந்திரிய மென்பர். சுரோத்திராதி யென்பது சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்பனவாம், இவற்றை ஞானேந்திரியமென்பர். சப்தாதி யென்றது சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தமென்பனவாம், இவற்றை ஐம்புலனென்பர், மனம

மாதி யென்றது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவைகளே, இவற்றை அந்தக்கரணமென்பர். கலையாதி என்றது காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என்பவைகளே, இவற்றை வித்தியாதத்துவ மென்பர். சுத்தாதி என்பது சுத்தவித்தை, ஈசர், சதாசிவம், சத்தி, சிவம் என்பவைகளே. இவற்றைச சுத்ததத்துவமென்பர். இன்னும் விரிக்கிற பெருகுமாகலின் 'தொண்ணூற்றெரு டாறுமற் றுள்ளனவும்' என்று கூறினர். இவற்றை விரிந்தநூலிற் கண்டுகொள்க.

3 எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே
யெல்லாமு னுடையசெயலே
யெங்கணும் வியாபியீ யென்றுசொலு மியல்பென்
றிருக்காதி வேதமெல்லாம்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச்
சொல்லிறந் தவரும்விண்டு
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந்
தொகுத்தநெறி தானுமிவையே
அல்லாம லில்லையென நன்று வறிந்தே
னறிந்தபடி நின்றுசுகநான்
ஆகாத வண்ணமே யிவ்வண்ண மாயினே
னதுவுனை தருளென்னவே
கல்லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்தினை
கதிக்குவகை யேதுபுகலாய்
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். எல்லாம் உன் அடிமையே-எல்லாரும் உன்னடியாரகளே, எல்லாம் உன் உடைமையே - எல்லாவஸ்துக்களும் உன்பொருள்களே, எல்லாம் உன்னுடைய செயலே எல்லாசெயல்களும் உன்செயல்களே, எங்கணும் வியாபி நீ-எவ்விடத்தும் வியாபித்திருப்பவன் நீயே, எவ்று சொல்லும் இயல்பு என்று-என்றுகூறு மிபல்பையுடையதென்று, இருக்கு முதலி வேதம் எல்லாம் - இருக்குமுதலான வேதங்கள் முழுதும், சொல்லால் முழக்கியது-சொல்லினால் உச்சரிக்கியது, சொல்லிறந்தவரும் பேசுறந் தவர்களாகிய ஞானிகளும், மிக்க உபகாரம் ஆகிருந்த வுபகாரமாயென்னை விண்டுசொன்னவையும் இவை-விவரித்துச சொன்னவைகளு மிவைகளே. நல்ல குருவானபேரும் - சதாசாரியரானபேரும், தொகுத்தநெறிதானும் இவையே அல்லாமல்-தொகுத்துரைத்த மார்க்கங்களும் இவைகளேயன்றி, இல்லையென-வேறில்லையென்று, நன்று அறிந்தேன் நன்குணர்ந்தேன், அறிந்தபடி நின்று - உணர்ந்தவண்ணம் நினறு. நான் சுகம் பூகாதவண

ணம்-நான் இன்புறுமல், இவ்வண்ணம் ஆயினேன்-இப்படியானேன், அது வும்-அதுதானும், நினது அருள் என்ன-உன் திருவருளேயென்று, கல்லாத வறிஞனுக்கு உள்ளே உணர்த்தினை-கல்லாதவறியோனுக்குள்ளே யறிவித் தாய், கதிக்குவகை ஏதுபுகலாய்-மோக்ஷகதிக்குவழி யாது சொல்லாய், கருதரியசிற்சபையில். எ-று.

எப்பொருட்கு மிறைவனுகலின் 'எல்லாமுனடிமையே' என்றும், எல் லாமுடையானுகலின் 'எல்லாமுனுடைமையே' என்றும், அவனையாது அணுவசையா தென்றலின் 'எல்லாமுனுடைய செயலே, என்றும், எங்கும் பரிபூரணனுகலின 'எங்கணும் வியாபியே' என்றும், எவ்வாறு வேதமுதலிய ஆப்தகலைகள் கூறியதல்லது மெய்யுணர்சியுடையா ரனுபவமு மிதுவே என்பது நோக்கி 'இருக்காதி வேதமெல்லாம் சொல்லான முழுக்கியது பிரகடனகாரமாக சொல்லிறந்த தவரும விண்டு சொன்னவையு நிவை' என் றும், ஞானுசாரியரெல் லாரும் ஆசிரியபரம்பரையாக உபதேசித்த நெறி யிதுவே யென்பது பற்றி 'நல்லகுரு வானபேருந் தொகுத்தநெறி தானு மிவையே யல்லாம லில்லை' என்றும், இதனை நனருக வாராய்ந்து அறிந தும் அவ்வாறு சுகாரம்பரிலை பெறுது பாழிற்காலஞ் செலுத்தினேன் என பது பற்றி 'நன்று வறிந்தே னறிந்தபடி நின்றுசுகநா னுகாத வணணமே யிவ்வண்ண மாயினேன்' என்றும், அதுவு நின் னருளல்ல தில்லையென் றெனக்குணாத்தினை யெனபது கருதி 'அதுவு நின தருளென்னவே கல் லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்தினை' என்றும், எனக்குநின்னையல்லது பேரின்பமீ டெயதவளிப்பா ரெவர் என்பார், 'கதிக்குவகை யேதுபுகலாய்' என்றுங் கூறினர். எல்லாமுனுடையசெயலே என்றது 'சிவன்செயலாலே யாதும் வருமெனத் தேறேன்' என் றிவ்வாசிரியா கூறுவதனனு முணர்க. சொல்லிறந்தவர்-மௌனசிலையுடையோர்.

4 பட்டப் பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம்
பக்ஷமோ வெனதுபக்ஷம்
பார்த்தவிட மெங்கணுங் கோத்தசிலை குலையாது
பரமவெளி யாகவொருசொற்
றிட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சேராம லாராகநான்
சிறுவீடு கட்டியதி னடுசோறறை யுண்டுண்டு
தேக்குசிறி யார்கள்போல
நட்டணைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நன்னிலய மாகவுன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே
நடுவேமுளைத்த மனதைக்

கட்டவறி யாமலே வாடினே னெனபோது
கருணைக் குரித்தாவனே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். பட்டப்பகற்பொழுதை - கடும்பகற்காலத்தை, இருள் என்ற-இருட்காலமென்கிற, மருளர்தமபஷிமோ எனதுபஷிம்-மிலேசசுரதுபஷிக் தாளே எனதுபஷிம், பார்த்த இடம் எங்களும்-கண்ட இடங்களெல்லாம், கோத்தநிலை குலையாது-என்னே விழுங்கின நிலைகெடாமல், பரமவெளிஆக-பரமாகாயமாக, ஒருசொல்-ஒருமொழியை, மௌனி ஆய்-மௌனியாகி, திட்டமுடன் அருள்செய்திருக்கவும்-திருத்தமாயருள் செய்திருந்தும், சேராமல்-அதையடையாமல், நான் ஊர் ஆக, நான்யாராக வெண்ணி, சிறுவீடுகட்டி-சிறியமணல்வீடுகட்டி, அதின் அடுசோற்றை உண்டு உண்டு-அதில்சமைத்த மணற்சோற்றைப் பலகாலுண்டாற்போல நடித்து, தேக்கு சிறியார்கள் போல-தேக்கெறிகின்ற சிறுர்கள்போல, நட்டணையதாக்கற்ற-நடுவு நிலைமையாகக் கற்றுக்கொண்ட, கழவியும் - கல்வியையும், விவேகமும்-கேள்வியறிவையும், கல்நிலையமாகவுண்ணி-நல்லநிலையிடமாக நினைத்து, நான் என்று நீ என்று-நானென்றும் நீயென்றும், இரண்டு இல்லை யென்ன-இரண்டில்லையென்று துணிந்து, நடுவேமூளைத்த மனதை-நடுவிலுண்டான மனத்தை, கட்ட அறியாமல்-தடைப்படுத்தவறியாமல், வாடினேன் - மெலிந்தேன், எப்போது கருணைக்கு உரித்தாவனே - எக்காலத்தில் உன்கருணைக்குப் பாத்ரமாவேனே, கருதரியசிற்சபையில். எ-று.

தேக்கெறிதல்-எப்படிடுதல். மனத்தைக்கட்ட வறிந்தால் கருணைக் குரித்தாதல் திண்ணம், அதைகட்டவறியாமையால், எப்போதுகருணைக் குரித்தாவனே என்றார், இது. "வெள்ளத்தணையவற்றி யாங்குன் கருணைக் கடலினுள்ளம் விள்ளக்கிலேனே" என்றுற்போல்வது.

கடும்பகற்காலத்தை யிருளென்பார மதம் தான்கொண்ட மதமல்ல வென்பதனால் 'பட்டப்பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம் பஷிமோ வெனது பஷிம்' என்றும், இறைவன பலரையியாபகப்பட்டு யாண்மை பரிபூரணமாகிய நிலையைக் குருமௌனியாகவந் துபதேசித்திருக்கவும், தான் உண்டுடுத்துக் காலங்கழிக்குஞ் சிறியார்போனறு கல்வியும் கேள்வியுமாகக் கலக்குற்றமையால் 'பார்த்தவிட மெங்களும் கோத்தநிலைகுலையாது பரம வெளியாக வொருசொல-திட்டமுடன மௌனியா யருள்செய் திருப்பவுஞ் சேராம லாராகநான்-சிறுவீடு கட்டியதி னடுசோற்றை யுண்டுண்டு தேக்குசிறி யார்கள்போல-நட்டணைய தாககற்ற கல்வியும் விவேகமு நன்னிலையமாக வுன்னி' என்றும், நா னீ யென நினைற பேதங்க ளொழித்து நடுவே தோன்றிய மனத்தை என்வயப்படுதாமல் வருந்தினேன் என

பது கருதி 'நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவேகடவேமுளைத்த மனதைக் கட்டவறியாமலே வாடினேன்' என்றும், அப்படிப்பட்ட நான் உனது திருவருளைப் பெறுவது எந்நாளோ வென்பதுகருதி 'எப்போது கருணைக்குரித்தாவனே' என்றுங் கூறினர். மனத்தைக் கட்டினலன்றி ஆனந்தா தீதமாகிய முத்தி கைவராது ஆதலால் 'மனத்தைக்கட்ட வறி யாமலே வாடினேன்' என்றது 'கருத்தடங்கின் முத்தியது கையகலிற் கட்டாகும், என்று தேவிகாலோத்தரம் கூறியதனை மறிக.

5 மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்துநீ
மெய்யான மெய்யையெல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை
மெய்யேது மறியாவெறும்
பொய்விடாப் பொய்யினே னுள்ளத் திருந்துதான்
பொய்யான பொய்யைபெல்லாம்
பொய்யெனு வண்ணமே புகலவைத் தாயெனிற்
புன்மையே னென்செய்குவேன்
மைவிடா தெழுலீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கடொறு நின்றகுருவே
கைவிடா தேயென்ற வன்பருக் கன்பாய்க்
கருத்தா டுணர்த்துகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். மெய்விடாநா உள்ள-மெய்யை நீங்காத நாவினையுடைய, மெய் யர் உள் நீ இருந்து - மெய்யினரிடத்தில் நீ சந்நிதிசெய்திருந்து, மெய் ஆனமெய்யை எல்லாம்-உண்மையான உண்மைப் பொருள்களையெல்லாம், மெய் என உணர்த்தியது மெய் உண்மையாக விளக்கிக்காட்டினது சத் தியமே, இதற்கு ஐயம் இலலை - இதற்குச சந்தேகமில்லை, மெய் எதும் அறியா - உண்மையைச சிறிதுமுணராத, வெறும் பொய்விடா - வெறும் பொய்யை நீங்காத, பொய்யினேன் - பொய்யினையுடையவனுகிய எனது, உள்ளத்து இருந்து - மனத்தின்கண்ணிருந்து, பொய்யான பொய்யைஎல் லாம் - பொய்யாகிய பொய்ப்பொருள்களையெல்லாம், பொய் எனுவண் ணம் - பொய்யென்று சொல்லாதபடி, புகலவைத்தாய் எனின் - (மெய் யென்று) சொல்லும்படி (என்னை நியமித்து) வைத்தனையாயின், புன்மை யேன் என்செய்குவேன் - அற்பனுகிய நான் என்செய்யவல்லேன், மை விடாது எழும் நீலகண்டகுருவே-கருமை நீங்காதுவளர்கின்ற நீலகண்ட

ரூபமாகிய ஆசிரியனே, விஷ்ணுவடிவு ஆன ஞானகுருவே-திருமாலுரு வாகிய ஞாஞசிரியனே, மலர்மேவி-தாமரைமலரை (இடமாகப்) பொரு ந்தி, மறைஒதும் - வேதாத்யயநம் பண்ணுகிற, நான்முகக்குருவே-பிரம ணுருவாகிய ஆசிரியனே, மதங்கள்தொறும் நின்றகுருவே-எல்லாச சமயங் களிலும் (அவரவர் கருதியபடி) நின்ற ஆசிரியனே, கைவிடாதே என்ற அன்பருக்கு-கைவிடவேண்டாமென்று ப்ரார்த்தித்த அன்பர்கட்கு, அன்பு ஆய்-அன்புருவமாகி, கருத்தூடு-(அவரது) கருத்தினுள், (இருந்து) உணர் த்துகுருவே-(அறியவேண்டுவன யாவும்) அறிவித்த ஆசிரியனே, கருதரிய எ-று.

மெய்விடாநா உள்ளம் மெய்யருள் எனப் பதம்பிரித்து, மெய்நீங்காத நாவினையும் உள்ளத்தினையுமுடைய மெய்யரிடத்து என்றலு மொன்று. மெய்யானமெய்-பொய்கலவாதமெய், பொய்யான பொய்-மெய் கலவாத பொய். இதனால் ஆசிரியனே முத்தொழில் நடாத்து முதல்வராயிருப்பவ னென்பது கூறப்பட்டது "நரன்சுரன் ஞானியாமென்பது கன்றல, பிரம மே ஞானியாம் பேதமின்றென்பது" என்றார் பிறரும்.

மெய்ம்மையாளர் நெஞ்சினின்று மெய்ம்மையை யுணர்த்தியது மெய் யென்பதுகருதி 'மெய்விடாநாவுள்ள மெய்யருளிருந்தீ மெய்யானமெய் யை யெல்லாம் மெய்யென உணர்த்தியது மெய்' என்றும், இதற்கோரைய முமில்லை யென்பதுநோக்கி 'இதற்கையாமில்லை' என்றும், பொய்பொதிந்த என் மனத்தினின்றும் பொய்யென்பதே யறிவிப்பாயெனின் யான் செயக் கடவதென்னை யென்பது நோக்கி 'மெய்யேது மறியாவெறும் பொய் விடாப் பொய்யினே னுள்ளத்திருந்து தான் பொய்யான பொய்யை யெல் லாம் பொய்யெனு வண்ணமே புகலவைத்தாய்' என்றும், அதனால் யான் செயக்கடவது யாதென்பதுபற்றி 'புன்மையே னென்செய்குவேன்' என் றும், குருவே சிவபரம்பொருளும், திருமாலும், நான்முகனுமென்பதுபற்றி 'மைவிடா தெழுலகண்டகுரு வேவிஷ்ணு வடிவான ஞான குருவே மலர் மேவி மறையோது நான்முகக்குருவே' என்றும், எம்மதப்பொருளுமா யிருப்பதுபற்றி 'மதங்கடொறு நின்ற குருவே' என்றும், நீ மெய்யன்ப ராவார்க்குள்ளத்தினுணர்த்தி நிற்கின்றனையென்பது பற்றிக் 'கைவிடாதே யென்றவன்பருக் கன்பாய் கருத்தூடுணர்த்து குருவே' என்றுங் கூறினர்.

6 பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பணிமல ரெடுக்கமனமும்

நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனின்
நாணுமென் னுளநிற்றிநீ
நான்கும்பி டும்போ தலைக்குமபி டாதலா
னுன்பூசை செய்யன் முறையோ
விண்ணே விளைதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே யவித்தின்முளையே
கண்ணே கருத்தேயெ னெண்ணே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். உனக்கு ஆனபூசைபண்ணேன்-உனக்கபிமதமான பூசனையைச செய்யேன், ஒருவடிவிலேபாவித்து இறைஞ்ச-ஒருருவத்தில் (நீ யிருப்பதாக) பாவனைசெய்துவணங்க, ஆங்கே-அதற்காகவே, பார்க்கின்ற மலருடும்-பார்க்கிற மலர்களெல்லாவற்றுள்ளும், நீயே இருத்தி - நீயே நீக்கமின்றி நிறைந்திருக்கிறாய், (ஆதலால்) அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்-அந்தக் குளிர்ச்சியாகிய மலர்களைபபறிக்கவும் மனமபொருந்தேன், அல்லாமல்-அன்றியும், இருகை கூவிக்க எனின்-இருகை கூப்புகவெனின், நீ என் உள்ளம்நிற்றி-நீயென்மனத்தி லிருக்கிறாய, (ஆதலால்) நாணும்-என்மனம் நாணுகின்றது, (அப்படி மனவொருப்பாடின்றி) நான் கும்பிடும் போது-நான் நமஸ்காரிக்கும்போது, அலைக்கும்பிடி ஆதலால்-(அது) அரை நமஸ்காரமாகையால், நான் பூசைசெய்யல் முறையோ-நான் பூசனை புரிதல் கிரமமாகுமோ, விண்ணே-பரமாகாயமே, விண் ஆதி ஆம் பூதமே-விண்முதலாகிய பஞ்சபூதமே, நாதமே-நாததத்துவமே, வேதமே மறையே, வேதாந்தமே-மறைமுடிவே, மேதகுகேள்வியே-மேன்மைபொருந்திய கேள்வியே, கேள்வி ஆம பூமிக்குள் வித்தே-கேள்வியாகிய நிலத்தில் முளைக்கின்ற பீஜமே, அவவித்தின் முளையே-அந்தப் பீஜத்தினின்றுமுண்டாகிற அங்குரமே, கண்ணே-கண்களே, கருத்தே-மனமே. என் எண்ணே-என்தருக்கமே, எழுத்தே இலக்கணமே, கதிக்கு ஆன மோனவடிவே-மோக்ஷத்திற்கேதுவாகிய மௌனரூபமே, கருதரிய எ-று.

ஒருவடிவு-கல், மரம், செம்பு, மண் முதலியவற்றுற் செய்யப்பட்ட விக்ரஹங்களில் ஒன்று. பூதமே நாதமே என்றாரேனும் ப்ருதிவ்யாதி நாதாந்தமாகிய தத்துவத்தொகுதியாயிருப்பவனே யென்றதாகக்கொள்க. கண் என்றார் பதார்த்தசாதத்துக்கேதுவாய் நன்மைதீமைகளைப்பகுத்துணர்த்

தலின். கருத்துஎன்றுர் தீமைகளே யொழித்து நன்மைகளே எண்ணுதற் குக் கருவியாயிருத்தலின்.

சிவாகமமுறைப்படி செய்யும் பூசனே நான்செய்ய அறிகியன் என்பார் 'பண்ணேனுனக்கான பூசை' என்றும், அப்படிச செய்வதும் பாமகிவன து நவந்தருபேதங்களுள் ஒரு மூர்த்தியினுருவை பாவித்துப் பூசிக்கவேண்டு மென்பார் 'ஒருவடிவிலே பாவித்திறைஞ்ச' என்றும், அவன் சர்வபரிபூரண ஞகலின் யான் அருசிக்கு மலரிலும் இருகின்றுன் என்பார் 'ஆங்கேபார்க் கின்ற மலரூடு கீயேயிருத்தி என்றும், ஆதலால் அம்மலரினைக் கொண்டு அர்சசிப்ப தெவ்வாறென்பா, 'அப்பணிமலரெடுக்க மனமு நண்ணேன்' என்றும், புறத்தேயிருப்பதன்றி அகதது மிருததலின் அவனே வணங்குவ தெவவாறென்பார், 'நான் குமபிடுமபோ தரைக்கும்பிடாதலால்நான்பூசை செய்தல்முறையோ' என்றும் கூறினர். நவந்தருபேதமென்றது பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன், நாதம், விந்து, சத்தி, சிவ மென்பவற்றை, கண்ணே கருததே என்றது கட்புலனுக்குத் தோன்றும் பொருள்களிலும், மனததிற்கு விஷயமாகும் பொருள்களிலும் இருப்பது பற்றி. 'எணணே யெழுத்தே' என்றது வேதஙகளிற் கூறப்படும் எல்லாப் பொருள்களேயும ஒருவ னுணாதறகுத தருக்கமும, இலக்கணமுமாகிய கருவியன்றி யுணரப்படாமையின். நாதமெனல் சபதப்பிரமதனை.

7 சந்ததமும் வேதமொழி யாதென்று பற்றினது
தான்வநது முற்றுமெனலால்
சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை
சிந்தைதறி யார்க்கீது போதிப்ப தல்லவே
செப்பினும் வெருதர்க்கமம
திவ்யகுண மார்க்கண்டர் சுகாதி முனிவோர்கள்
சித்தாநத நித்யரலரோ
இந்ராதி தேவதைகள் பிரமாதி கடவுள
ரிருக்காதி வேதமுனிவர்
எண்ணரிய கணநாதர் நவகாத சித்தர்க
ளிரவிமதி யாதியோர்கள்
கந்தருவர் கின்னரர்கண் மற்றையர்க ளியாவரும்
கைகுவிந் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். வேதமொழி-வேதவாக்கியமானது, சந்ததமும்-சதா காலமும், யாதொன்றுபற்றின் யாதொன்றையாயினும் மனத்திலுற்பற்றிலுல், அது தான் வந்து முற்றும் எனலால்-அதுவாகவேவந்து முடிவுபெறு மென்று சொல்லுதலால், சகமீது இருந்தாலும் - உலகத்தி லிருப்பினும், மரணம் உண்டு என்பது-மரணமுளதென்பதை, சதாசிவ்டர் நினைவது இல்லை-ஸஹஜ நிஷ்டாபரர் நினைப்பதேயில்லை, ஈது-இது, சித்தை அறியார்க்கு-கருத்தறியாதவர்க்கு, போதிப்பது அல்ல அறிவுறுத்துவதன்று, செப்பினும்-அறிவுறுத்தினும், வெகுதர்க்கம் ஆம்-அநேகமாகியவாதுகள்விளையும், திவ்யகுணம்-தெய்வீகமான குணத்தையுடைய, மார்க்கண்டர்-மார்க்கண்டரும், சுகர் ஆதி முனிவோர்கள்-சுகர்முதலாகியமுனிவர்களும், சித்தாந்த நித்யர் அல்லரோ-முடிவுசெய்யப்பட்ட நித்யாத்மாக்களல்லரோ, இந்த்ராதி தேவதைகள்-இந்திரன்முதலான சாமான்ய தேவர்களும், பிரமாதி கடவுளர்-பிரமன்முதலான விசேஷதேவர்களும், இருக்கு ஆதிவேதம் முனிவர்-இருக்குமுதலிய வேதங்களை ஐயந்திரிபறவுணர்ந்த முனிவர்களும், எண்ணரிய கணநாதர்-எண்ணுதலருமையாகிய கணநாதர்களும், நவநாதசித்தர்கள்-சத்தியநாதர் முதலிய ஒன்பது சித்தர்களும், இரவிமதி ஆதியோர்கள்-சூரியன் சந்திரன்முதலானவர்களும், கந்தருவர்-கந்தருவரும், கிங்கரர்கள்-கிங்கரரும், மற்றையர்கள் யாவரும்-வேறுளோரெல்லோரும், கைகுவிதலிலே தெய்வமே-கைகூப்பித் தொழுதற்குரிய தெய்வமே, கருதிய. எ-று.

ஜகம்-தோன்றியழிதன் மாலையவாகிய வுலகங்கள். யாரொருவர் எப்பொருளே யிடைவிடாதுமநகம்பண்ணுகிறார்களோ அவரப்பொருளாகவே முடிவுரென்பது வேதநூற் றுணிபாதலாலும், மரணமுண் டென்னு நினைப்பே மரணத்தை யுண்டாகுமாதலாலும், சுகர்முதலாயினோர்பூததேஹத்தோடு சிதாகாயத்தை யடைந்ததனாலும், குமாரதேவர் முதலானோர் சுத்த சாதகம் முதலிய நூல்களில் இவ்வாறு கூறுதலாலும் மரணமுண்டென்பது சதாசிவ்டர் நினைவதில்லையென்றார்.

நான்குவேத மகாவாக்கியங்களில் எந்தவேத மகாவாக்கியத்தை யனுசந்திக்கினும் அதுவாகவே முடிவுபெறலால் 'சந்ததமும் வேதமொழியாதொன்று பற்றினது தான்வந்து முற்றுமெனலால்' எனறும், அதுபற்றியுலகின்கண் உடம்பொடு கூடியிருக்கினும் சீவன்முக்தி பெற்று மரணமுண்டெனப தறியாராகலின 'சகமீதிருந்தாலும் மரணமுண் டென்பது சதாசிவ்டர் நினைவதில்லை' எனறும், பிறர்க்குப்போதிப்பினும் தர்க்கிக்க விடந்தாலால் 'சிறுதையறி யாகதீது போதிப்ப தல்லவே செப்பினும் வெகுதர்க்கமாம்' எனறும். இங்ஙனறி கைவந்தார் மார்க்கண்டேயர் சுகர்

முதலிய முற்றத்துறந்த முனிவராதலின் 'திவ்யகுணமார்க்கண்டர்சுகராதி முனிவோர்கள் சித்தாந்த நித்ய சலரோ' என்றுங்கூறினர்.

8 துள்ளுமறி யாமனது பலிகொடுத்தேன்காம
துஷ்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பன் பரிஷேகநீர்
உள்ளுறையி லென்னுவி நைவேத்தி யம்ப்ராண
னேங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித்தேன் கருணைகூர
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசினியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத வானந்தமே
கள்ளறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க
கலக்கவரு நல்லவுறவே
கருதரிய சிற்சபைபி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே

இ-ள். அறியாமனது - சாராசாரங்களைப் பகுத்தறியாத மனமானது, துள்ளும்-துள்ளாநிற்கும், பலிகொடுத்தேன் -(ஆதலால் அதனைப்) பலியிட்டேன், கர்மதுஷ்ட தேவதைகள் இல்லை-பாபரூபமாகிய துஷ்டதேவதைகள் (இனி யென்னைவருத்த) உளவாவன அல்ல, துரியம் நிறை-துரிய பதத்தில் நிறைந்த, சாந்ததேவதை ஆம் உனக்கே-சாந்ததேவதையாகிய உனக்கே, தொழும்பன் அளபு-உனதிதாண்டனாகிய அடியேனது அன்பானது, அபிஷேக நீர்-திருவபிஷேக தீர்த்தமாகும், உள் உறையில்-தேவரீர் என்மனத்திற்றங்கினால், என் ஆவி-என்னுயிரானது, நைவேத்தியம்-நைவேத்யமாகும், ப்ராணன்-ப்ராணவாயுவும், ஓங்கும்மதி-உயர்ந்தஅறிவும், தூபதீபம் தூபதீபங்களாகும், இது-இவ்வாறு அடியேன் பூசனைபுரிவதாகிய இது, ஒருகாலம் அன்று-ஒருபொழுதில்மாத்திரமேயல்ல, சதாகாலபூசை ஆ ஒப்புவித்தேன் - சதாகால பூசனையா யொப்புவித்தேன் - (ஆதலால்) கருணைகூர்-மிகுந்த கிருபையைப்பண்ணு, மறைதெள்ளிவடியிட்ட-வேதங்களால் தெளிவித்து வடிக்கப்பட்ட, அமுதப்பிழம்பே-அமிர்தத தொகுதியே, தெளிந்ததேனே-தெளிந்ததேனே, சினியே-சினிசாக்கரையே, நவரசம்யாவும்-தெய்விகமான சுவைகளெல்லாம், திரண்டு ஒழுகுபாகே ஒருசேரக்கூடி யொழுகாநின்றபாகே, தெவிட்டாத ஆனந்தமே - வெறுக்கப்படாத இன்பமே, கள்ளன் அறிவூடும்-கள்வனையஒ என்னறிவினிடத்தும்

மெள்ள மெள்ள-பையப்பைய, வெளியாய்க்கலக்கவரும்-வெளிப்படக் கல க்கவருகின்ற, நல்லவுறவே-நன்மைபயக்குஞ் சுற்றமே, கருதரிய. எ று.

ப்ராணவாயு புகையுருவாதலால் அதனைத் தூபமாகவும், மதி ஒளியுரு வாதலால் அதனைத் தீபமாகவுங் கூறினர். கள்ளனறிவூடும் என்னும் உம் மை இறந்ததுதழீஇயது, கள்ளமற்றவர் அறிவூடு கலத்தலேயன்றி யெனப் பொருள் தருதலால். மனதுபலிகொடுத்தல்-மனதை நசிப்பித்தல்.

"சங்கற்ப நாசத்தா லெளிதாக மனநாசந் தானேயெய்தும்
அங்குற்ற மனமிரக்கிற் சனனமர ணங்களெனு மரமுமாயும் [ஞ்சம்
இங்கிப்பா லெனைத்திருடுங் கள்ளனைக்கண் டேனகண்டேனிவன்பேர்நெ
பொங்குற்ற விவனுலே நெடுநாளெஞ் தேனினறு பொன்றுவிப்பேன்."—
என்னூர் பிறரும்.

பிறவுயிர்களைகொன்று பலியிடல் துர்த்தேவதைகட்காதலால்இறை வன் மெய்யுணர்ந்தாருள்ளதே தோன்றுகின்றவ ஞதலின் மனத்தைப் பலியிட்டதாக 'துள்ளுமறி யாமனது பலிகொடுத்தேன்' என்றும், ஆத லால் இனி என்னைத துர்தேவதைகள் வருத்தா வென்பது பறறிக் 'கர்ம துஷ்டதேவதைக ளில்லை' என்றும், முன்னமே மனத்தைப் பலியிடும் பொருளாக உருவகஞ் செய்ததற் கேற்ப அபிடேகஞ் செய்வதற்குத துணிந்தவர் அன்பே யபிடேக நீராகக் கொண்டாரென்பார் 'நூரியநிறை சாந்த தேவதையாமுனக்கே தொழும்பனன் பபிஷேகநீர்' என்றும், அதற்கு நைவேதியமாக 'உள்ளுறையு மென்னுவி நைவேத்தியம்' என றும, தூப தீபம வேண்டலின் 'பிராண னெனுமதி தூப தீபம்' என்றும், நித சந்தாகாலபூசையாகச செய்துவருகினறேன் என்பார் 'ஒருகால மன் நிது சந்தாகால பூசையா ஒப்புவித்தேன்' என்றும், ஆதலால் நீயருள்செய்ய வேண்டு மென்பார் 'கருணைகூர்' என்றுங கூறினர்.

9 உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பியூற்ற
வூசிதாக தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னியுன்னிப
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதிமுகத்திலே நிலவணைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழ் மலரணைய கைவிரித் துக்கூப்பி
வானேய வானிலின்ப

மழையே மழைத்தாரை வெள்ளமே நீடுழி
வாழியென வாழ்த்தியேத்தும்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளிபபோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

இ-ள். உடல்குழைய-சரீரம்வாடவும், என்பு எல்லாம் நெக்கு உருக, எலும்புகளெல்லாம் நெகிழ்ந்துருகவும், விழிநீர்கள் ஊற்று எனவெதும்பி ஊறற-கண்ணீர மணற்கேணியென்னலாம்படி கொதித்தொழுகாநிற்கவும், ஊசிகாந்தத்தினைக்கண்டு அணுகல்போல-இருப்பூசியானது காந்தக்கல்லினைக் கண்டு (அதனிடத்துசென்று) பொருந்துதல்போல, ஓர் உறவும் உன்னி உன்னி-ஒப்பற்ற (ஆத்ம) பந்துவாகிய வுன்னையும் நினைத்து நினைத்து, நெஞ்சம் படபடென பதைத்து-மனம் படபடெனத் துடித்து, உள் நடுகுற-உள்ளே நடுக்கமடையவும், பாடி ஆடிருத்தி-பாடி ஆடித்துள்ளி, பனிமதிமுகத்திலே நிலவு அனைய - குளிர்ச்சியையுடைய சந்திரனிடத்திலுண்டாகும் சந்திரிகையையொத்த, புன்னகை பரப்பி-புன்சிரிப்பை விரித்து, ஆர்த்து ஆர்த்து எழுந்து-பலகா லாரவாரித்தெழுந்து, மடல் அவிழும மலர் அனைய கை-இதழ்கள் விரியாநின்ற தாமரைமலரையொத்தகைகளை, விரித்து கூப்பி விரித்துங் குவித்தும், வானே-சிதாகாயமே, அவ்வானில் இன்பமழையே-அவ்வாகாயத்தினின்றும் பொழிகின்ற ஆநந்தவருஷமே, மழைதாரைவெள்ளமே - அந்த மழைத்தாரைகளா லுண்டாகும் பெருகலே, நீடுழிவாழியெனவாழ்த்தியேத்தும்-நீடுழிகாலம் வாழ்கவென்று திருப்பல்லாண்டு பாடித்துதிக்கின்ற, கடல்மடை திறந்தனைய - கடலானது மடைதிறந்தாற்போன்ற, அன்பர் அன்புக்கு எளியை - அன்பரது அன்புக்கு எளியையா யிருக்கிறாய், கல்நெஞ்சனுக்கு எளியையோ-இக்கல்மனத்தினேற்கு எளியையாயிருப்பாயோ, கருதரிய. எ-று.

என்பெலாம் நெக்குருக எனறமையால், என்புருகுதற்குக் காரணம் இவரது அன்பென்றவாறாயிற்று. ஊற்று எனவெதும்பி என்றதனால், ஊற்றுநீரும் கண்ணீரும் வெதும்புதலியறகை யென்பதாயிற்று. மதிமுகத்துக்கும் நிலவு புன்னகைக்கும் உவமை. ஒருவரால் காரியங்கொள்வோர் அவரை வாழ்த்துதல் பெருவழக் காதலால், தமக்கெளியனுக்குகைக்கு நீடுழிவாழியென வாழ்த்துவா ராயினர். இதனை 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனநின்பால்-தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை யெலாந்தொழவேண்டி' என்பதனானுமறிக.

மெய்யன்பர் அன்புருவமாய்க் கரைந்து விரைந்து நிற்பவ ராதலின் அவரது நிலைமையைக் கூறவந்தவர், அவர்களுக்கு உடல் குழைந்து என்பு

கெக்குருகி யானக்ககண்ணீர் பொழிவதுகோக்கி 'உடல் குழையவென் பெலா கெக்குருக விழிநீர்கள் ஊற்றென வெதும்பி யூற்ற' என்றும், ஊசி காந்தத்தினைக் கண்டாற்போல இறைவனை நெஞ்சமுருகப் பாடி யாடி நிற்பாராதலின் ஊசிகாந் தத்தினைக் கண்ட ணுகல் போலவேயோருறவு முன்னி யுன்னிப்-படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப் பாடி யாடிக் குதித்து' என்றும், அவர்கள் முகத்தில் புன்னகை பரப்பி யாரவா ரித்து எழுந்து மலர்க்கை கூப்பி நிற்பாராதலின் 'பனிமதிமுகத்திலே நில வுனைய புன்னகை பரப்பியார்த் தார்தழுந்து மடலவிழுமலரனைய கை விரித்துக்கூப்பி' என்றும் அவர்கள் இறைவனைப் பலபடக்கூறி வாழ்த்து வாராதலால், அவரை 'வானேயவானிலின்ப மழையே மழைத்தாரைவெள் ளமே நீதிவாழியென வாழத்தியேத்தும் கடன்மடை திறந்தனைய வன் பர்' என்றும், அவர்க்கெளியையாயினை என்பார் 'அன்பரன் புக்கெளியை' என்றும், அவ்வகைப்பட்ட நீ யெனக் கிரங்குவையோ என்பார் 'கன் னெஞ்ச னுகெளியையோ' என்றுங் கூறினர்.

10 இங்கற்ற படியங்கு மெனவறியு நல்லறிஞ
ரெக்கால மும்முதவுவார்
இன்சொறவ ரூர்பொய்ம்மை யாமிழுக் குரையா
ரிரங்குவார் கொலைகள்பயிலார்
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை
சாக்ஷிநீ யிகபரத்தும்
சந்தான கற்பகத் தேவாயிருநேத
சமஸ்தவின் பமுமுதவுவாய்
சிங்கத்தை யொத்தினப் பாயவரு வினையினைச்
சேதிகசு வருசிம்புளே
சிந்தாகு லததிமிர மகலவரு பானுவே
தீனனேன் கரையேறவே
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளரருட்
ககனவட் டக்கப்பலே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கடக்கடவுளே.

இ-ள். இங்கு அற்றபடி-இம்மையில் அற்றுத்தீர்ந்தவண்ணம், அங்கு ம என அறியும்-மறுமையினு மாமென்றறிகின்ற, நல் அறிஞர்-பேரறி வினர், எக்காலமும் உதவுவார்-எக்காலத்திலும பிறருக்கு உதவிசெய்வார் கள், இன்சொல்தவறூர்-மதுரமொழி வழுவார்கள், பொய்ம்மை ஆம் இழு கு உரையார்-பொய்பாகிய வழுவுசசொற்களே வழங்கார், இரங்குவார்-ஜீவர்களிமேல் இரகசுஞ்செய்வார்கள். கொலைகள் பயிலார்-ஜீவஹிம்ஸை

யைப் பழகமாட்டார்கள், சங்கற்பசித்தர் - சங்கல்ப சித்தத்தை யுடையவ ராகிய, அவர்-அவரது, உள்ளக்கருத்தில்-மனக்கருத்தில், உறை வாசகம் பண்ணுகிற, சாகஷிநீ - சாகஷிபூதனாகியநீ, இகபரத்தும்-இம்மை மறுமைகளி லும், சந்தானம் கற்பகம் தேவு ஆய் இருந்து-சந்தான விருக்ஷம் போலவும் கற்பகவிருக்ஷம்போலவும் உள்ளதெய்வமாயிருந்து,சமஸ்தஇன்பமும் உதவு வாய்-எல்லாசுகங்களையும் கொடுப்பாய், சிங்கத்தை ஒத்து - சிங்கத்தை நிகர்த்து, எனை பாயவருவினையினை - என்னைப் பாயவருகின்ற வினைகளை; சேதிக்க வருசிமபுரி - கிழித்தெறிதற்காக வருகிற சரபமே. சிந்தா ஆகு லம் திமிரம் அகலவரு - மனக்கிலேசங்களாகிய இருள் நீங்கவருகின்ற, பானுவே சூரியனே, தீனனேன்-எளியேனாகிய நான், கரைஏற - (பிறவிக் கடலைக்கடந்து மோகதியாகிய) கரையில் ஏறும்படி, கங்கு அற்ற-வரம்பு கடந்த, பேராசை வெள்ளதிதின்வளர்-எனது பேரன்பாகிய பிரவாகத்தில் சஞ்சரிக்கிற, அருள் ககனம் வட்டம் - கிருபையுடைய ஆகாயவட்டத்தில் (உலாவுகிற), கப்பலே-மரக்கலமே, கருதிய. எ-று.

சங்கற்பசித்தர் என்றது-இங்கற்றபடி அங்கும் என அறிதலும் உதவுத லும் இன்சொல் தவறுமையும் பொய்யுரையாமையும் உயிர்கட் கிரங்குத லும் கொலைகள் பயிலாமையும் ஆகிய ஏற்பாட்டை மனத்தில் அமைத்துக் கோடலையுடையாரை சந்தானம் கற்பகம் என்பன பஞ்சதருக்களில் இர ண்டு. அவை அவ்விடத்துச் சென்றவர்க்கே எல்லா இன்பங்களையும் உதவு தற்கு உரியனவேயன்றி, கடவுள்போல இகத்தும் பரத்தும் எல்லா இன் பங்களையும் உதவுதற்குரியனவாகா என்பது தோன்ற இகபரத்தும் சமஸ்த இன்பமும் உதவுவாய்என்றார். சரபம் என்பது எட்டுகைகால்களையுடைய ஒரு பட்சி. அது சிங்கத்தை மிகவும் எளிதாகக் கவர்ந்துசென்று தன் குஞ்சுக ளுக்கு உண்பிப்பது. ஆகாய வட்டம-ஆகாயமண்டலம், பூமண்டலம் என் பது போல.

இம்மை மறுமை யின்பநுகர்ச்சி யுவாத்தமெய்யுணர்ச்சி யுடையோர் ஈகை, இன்சொல், பொய்யாமை, கீவகருணை, கொல்லாமை முதலிய நற் குணங்கள் கூடிவாழ விளங்குபவராதலின் 'இங்கறற படியஙகுமென வறியு நல்லறிஞ ரெக்கால மும்முதவுவார் இன்சொறவ ரூர்பொய்ம்மை யாமிழுக குரையார் இரங்குவார் கொலைகள் பயிலார்' என்றும், அவர்கள் இக்குணங் களையே சங்கற்பமாக வுடையராகலின் 'சங்கற்ப சித்தர்' என்றும, அவருள் ளத்தில் அவர் கினைத்த வடிவொடுஞ் சென் றெய்தலின் 'அவருள்ளக் கருத்திலுறை சாகஷிநீ' என்றும், அவர வேண்டிய வேண்டியாங கெய்த வுதவுகின்றனை யென்பார் 'சந்தான கற்பகத் தேவா யிருந்தே சமஸ்தவின் பமு முதவுவாய்' என்றும், அப்படிப்பட்ட யென் வினையை நீக்கவேண்டு மென்பதற் குருவகமாக்கி 'சிங்கத்தை யொத்தெனைப் பாயவரு வினையி

னைச சேதிக்க வருகிம்புளே' என்றும், மனக்கவலையை யகற்றவேண்டும் என்பார் 'சித்தா குலத்திமிர மகலவரு பானுவே' என்றும், யான் பிறவிக் கடல் கடப்பதற்கோர் புணையாயினை என்பார் 'தீனனேன் கரையேறவே கங்கற்ற போராசை வெள்ளத்தின் வளரருட் ககனவட்டக்கப்பலே' என்றும் கூறினார்.

சித்தர்கணம்.

1 திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடிவருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு வென்னவே
திகழ்துருவ மளவளாவி
யுக்ரமிகு சக்ரதர னென்னநிற் பீர்கையி
லுழுந்தமிழு மாசமனமா
வோரேழு கடலையும் பருகவல் லீரிரத
னுலகுமயி ராவதமுமே
கைக்கெளிய பந்தா வெடுத்துவிளை யாடுவீர்
ககனவட்டத்தை யெல்லாம்
கடுகிடை யிருத்தியே யஷ்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலுமேலும்
மிக்கசித தீகளெலாம் வல்லநீ ரடிமைமுன்
விளங்கவரு சித்தியிலிரோ
வேதாந்த சித்தாந்த சமரசசன் மார்கமெற்ற
சித்தருக சித்தர்கணமே.

இ-ள். திக்கொடு திக் அந்தமும் - திக்குகளிலும் திக்குகளின் முடிவிலும், மனவேகம் என்ன - மனோவேகம்போல, சென்று-விரைந்துசென்று, ஓடி ஆடி வருவீர் - ஓடியும் விளையாடியும் வருவீர்கள், செம்பொன் மக மேருவொடு - செம்பொன் மயமான மகமேரு மலையோடு, குணமேரு என்ன - நற்குணமாகிய மேருமலைபோல, திகழ் - விளங்குகின்ற, துருவம் அளவு அளாவி-துருவமண்டலத்தின் அளவும்போய், உக்ரம்மிகு - வேகம் மிகுந்த, சக்ரதரன் என்ன - சகராயுதத்தை ஏந்திய திருவிக்கிரமன்போல, நிற்பீர் - நிலைத்திருப்பீர், கையில் உழுந்து - கையில் உள்ள உழுந்தினளவாக, அமிழும் ஓரேழுகடலையும் - ஆழ்ந்த சப்த சமுத்திரங்களையும், ஆச மனமா பருகவல்லீர் - ஆசமனநீராக குடிக்கவல்லீர்கள், இந்திரன் உலகும் ஐராவதமும-இந்திரலோகத்தையும் அதிலுள்ள ஐராவதமென்னும் யானையையும், கைக்கு எளிய பந்தா எடுத்து-கைக்கு இலேசானபந்துபோல எடுத்து, விளையாடுவீர விளையாட்டுச்செய்வீர்கள், ககனவட்டத்தை எல்லாம்-

ஆகாய மண்டலங்களே யெல்லாம், கடுகிடை இருத்தி-கடுகைத்தொளைத்து (அதில்) புகட்டி, அஷ்டகுலவெற்பையும்-அஷ்டகுலகிரிகளையும், காட்டுவீர்-காண்பிப்பீர்கள், மேலுமேலும்-மேன்மேலும், மிக்க சித்திகளெலாம்-கிருத்த சித்திகளேயெலலாம், வல்லீர செய்துகாட்டவல்லீர்களர்,அடிமை முன் விளங்கவரு சித்தியிலிரோ-உங்கள் அடிமையாகிய எனக்கு எதிரில் பலருமறிய வராகின்ற சித்தியையுடையீர அல்லீரோ, வேதாந்த சித்தாந்த சமரசநல் நிலைபெற்ற-வேதாந்த சித்தாந்தங்களே சமரசமாகப் பாவித்தலாகிய சிறந்த நிலையை யடைந்ததனல் உண்டாகிய, வித்தகம்-ஞானத்தையுடைய, சித்தர்கணமே-சித்தர் கூட்டமே எ-று.

சக்ரதரன் எனப் பொதுப்படக் கூறினும் துருவம் அளவளாவி என்றதனல் திரிவிக்கிரமனே உணர்த்தி நின்றது. ஆசமனம் - சந்த்யாவந்தன காலத்தில் மூன்றுதரம் அள்ளிக்குடிப்பதாகிய நீர். இதை முக்குடிநீர் என்பர். சகளவட்டத்தை யெல்லாம் கடுகிடை யிருத்தி அஷ்டகுலவெற்பையுங் காட்டுவீர் என்றதனல் அண்டத்தை அணுவாகவும் அணுவை அண்டமாகவும் செய்யவல்லவர் என்றதாயிற்று.

இவ்வாசிரியர்களுப் பரமாசிரியராகிய திருமூலர், சித்தர் மரபினராதலால் இதனல் அசசித்தர்பெருமை கூறினர்

துருவமண்டலத்தின்செய்தி:—உத்தானபாதனென்னு மரசன் சுநீதியென்பவளே மணந்து பெற்ற துருவனென்பவன் தன்தந்தை மடிமீதேறித் தன் சரூதியென்னும் சிற்றன்னையின் மடிமீதேற, அவள் என்வயிற்றிற் பிறக்கும் பாக்கியம் பெறாது என் மாற்றவளுக்கு மகனயினே, என்மகனுதற்குத் தவஞ்செயது என்வயிற்றிற் பிறக்கவில்லே யென்றுசொல்லக்கேட்டுப்பொருது தன்தாயிடமே சென்று சொல்லி, தவஞ்செய்தற்குச செல்கின்றேனென்று விடைபெற்றுப் போகையில், நாரதமுனிவரைக்கண்டு அவரிடம் மந்திரோபதேசம பெற்று, தவம்செய்து யாவருமபெறுதற்கரிய துருவபதம் பெற்றனென்பது. அது,—'உகாதொரு ஞான்றும்வண்ணத் தோங்கிய பதங்கடம்மை, ககாவொளி கிளைத்துகின்ற கனத்தலே யுலகுக் கெல்லாம், சிகாமணி யென்னச சேணிற் சேயுயா பதம்' என்று கூறியதனுமுணர்க

எழுகடல்-உவாநீர், கன்னீர, பால், தயிர்,செய, கருப்பஞ்சாறு, தேன், என்பனவாம். ஐராவதம-பாற்கடலில் அமுதெடுபிறந்த வெள்ளையானை. இது கீழ்த்திசைக் களிறெனவும்படும். அட்டகுலவெற்பு-கயிலே, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பனவாம் வேதாந்த சித்தாந்த சமரசநிலையாவது-வேதாந்தத்தின் கருத்தையும் சித்தாந்தத்தின் கருத்தையும் ஒருநிகரனவாகக் கருதுதல். மிக்கசித்திகளென்றது அணிமா முதலிய எட்டுசு சித்திகளேயும்

2 பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் லீழலைப்
பாரினிடை வரவழைபபீர்
பத்மநிதி சங்கநிதி யிருபாரி பத்திலும்
பணிசெயுந் தொழிலாளர்போல்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போரையும்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடை குறுகவைப்பீர்
ஒட்டினை யெடுத்தாயி ரத்தெட்டு மாற்றுக
வொளிவிடும் பொன்னாக்குவீர்
உரகனும் இளைப்பாற யோகதண் டத்திலே
யுலகுசுமை யாகவருளான்
மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனன்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

இ-ள். பாட்டு அளி துதைந்து வளர்-இசைப்பாட்டையுடைய வண்டுகள் நெருங்கி வளர்கின்ற, கற்பக நல் நீழலை-கற்பக விருக்ஷத்தின் நல்ல நிழலை, பாரின் இடை வரவழைப்பீர்-உலகத்தில் வரும்படி செய்வீர்கள், பத்மநிதி சங்கநிதி-பத்மநிதியும் சங்கநிதியும், இருபாரிசதநிலும்-இரண்டுபக்கத்திலும், பணிசெயும் தொழிலாளர்போல்-வேலைசெய்கின்ற அடிமையாட்கள்போல, கேட்டது கொடுத்துவர கேட்டவர்களுக்கு கொடுத்துக்கொண்டுவருதற்காக, நிற்கவைப்பீர் நிற்கும்படி செய்வீர்கள், பிசசை கேட்டுப் பிழைப்போரையும் - பிசசைகேட்டுண்டு உயிர்வாழ்வோரையும், கிரீடபதி ஆக்குவீர்-முடிமன்னராகசெய்வீர்கள், கற்பாந்தவெள்ளம்-கற்ப முடிவில் உண்டாகிற பிரவாகஜலம், ஒரு கேணியிடை குறுகவைப்பீர்-ஒரு கிணற்றினிடத்தே சுருங்கி நிற்கவைப்பீர்கள், ஒட்டினை எடுத்து-மட்கலம் நிறைந்த ஓட்டை எடுத்து, ஆயிரத்தெட்டு மாற்றுக ஒளிவிடும் - ஆயிரத்தெட்டு மாற்றுள்ளதாகப் பிரகாசிக்கிற, பொன் ஆக்குவீர்-சுவர்ணமாக்குவீர்கள், உரகனும் இளைப்பாற-ஆதிசேஷனும் இளைப்பாறுமபடி, உலகு-உலகத்தை, யோகதண்டத்திலே சமையாக யோகதண்டத்தில் சுமையாய் நிற்க, அருளால் மீட்டிடவும் வல்ல நீ-கிருபையினால் மீட்கவும் வல்லீராகிய நீங்கள், என் மனக்கல்லை-என் மனமாகிய கற்பாறையை, அனல் மெழுகு ஆக்கிவைப்பது அரிதோ - நெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகும்படி செய்துவைப்பதாகிய இது உங்களுக்கு அரிதாமோ, வேதாந்த, எ-று.

பத்மநிதி - தாமரைவடிவினதாகிய நிதி. சங்கநிதி - சங்கின்வடிவின தாகிய நிதி. கற்பகநிழலைப் பாரினிடை வரவழைத்தல் முதலிய செயற் கரிய செயல்களைச் செய்யவல்ல வுங்களுக்கு என்மனம் குழையும்படி செய் தல் அருமையோ எனபதாம்

3. பாரொடுநண் ணீராதி யென்றிருடொன் றுகவே
பற்றிலய மாமபோ தினில்
பரவெளியின் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்
பரந்திடி னதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
நிற்பீர் விகற்பமாகி
நெடியமுகி லேழும் பரந்துவரு ஷிக்கிலோ
நிலவுமதி மண்டலமைதே
ஊரென விளங்குவீர் பிரமாதி முடிவில்விடை
யூர்தியரு ளாலுலவுவீர்
உலகங்கள் கீழ்மேல வாகப் பெருங்காற்
றுலாவினற் றுரணையினல்
மேருவென வசையாம னிற்கவல் லீருமது
மேதக்க சித்தியெளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

இ-ள். பாரொடு நல்நீர் ஆதி-பூமியோடு நீர்முதலியவைகளும், ஒன் றுடொன்றுகவே பற்றி ஒன்றை டொன்றுகத் தொடர்ந்து, லயம் ஆம் போதினில்-ஒடுங்குகிற காலத்தில், பரவெளியில் மருவுவீர் - பரமாகாயத் தில் பொருந்தியிருப்பீர்கள், கற்பாந்தவெள்ளம்பரந்திடின்-யுகாந்தகாலப் பிரளயம் பரவினல், அதற்குமீறு-அதற்குமேல், நீரில் உறை-நீரில் வாசம் பண்ணுகிற, வண்டு ஆய்த் துவண்டி-வண்டுபோலசசுழன்று, சிவயோக நிலைநிற்பீர்-சிவயோகநிலையில் நிற்பீர்கள், நெடிய முகில் ஏழும்-பெரிதான மேகங்கள் ஏழும், விகற்பமாகி வேறுபட்டு, பரந்-பரவி, வருஷிக்கில்-பெய்தால், நிலவு-சந்திரிகையையுடைய, மதிமண்டலமைதே - சந்திரமண்ட லமே, ஊரா என விளங்குவீர்-ஊராகக்கொண்டு பிரகாசிப்பீர்கள், பிரமாதி முடிவில்-பிரமன் முதலானோருடைய முடிவுக்காலத்தில், விடையூர்தி அரு ளால்-ரிஷபவாஹனனுகிய பரமசிவனது கருணையால், உலவுவீர்-சஞ்சரிப் பீர்கள், உலகங்கள் உலகங்களெலலாம், கீழ்மேலவாக கீழ்மேலாகும்படி, பெருங்காற்று உலாவின்-பிரசண்ட மாருதம் வீசினல், நல்தாரணையினல்-நல்லதாரணை யோகத்தினல், மேருவென அசையாமல் நிற்கவல்லீர்-மேரு மலைபோல சலிக்காமல் நிற்கவல்லீர், உமது-உம்முடைய. மேதக்க-மேன்

மை பொருந்திய, சித்தி-சித்தியானது, எளிதோ-சொல்லுதற்கெளிதாமோ, வேதாந்த. எ-று.

'பாரொடுநீரோ டியொன்றெடொன்றுகலே பற்றிலய மாம்போது' என்றது கற்பாந்தகாலத்தை. பார் நீரினும், நீர் அனலினும், அனல் காற்றினும், காற்று ஆகாயத்தினும் ஒடுங்குமுறைமை கற்பாந்தகாலத்திலென்க. பிரமாதி முடிவில் என்பது பிரமன்முதலானதேவர்கள் முடியுங்காலத்தை. இதனை 'நூறுகோடிபிர மருங்குளர்' எனற திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தானு மறிக. தாரணை-எண்வகையோக வுறுப்பினுள் ஒன்று. பிருதிவி ஆதி ஐம்பெரும் பூதங்களும் ஒன்றிலொன்று ஒடுங்குங்காலத்துக் கற்பாந்த வெள்ளத்தின்மீது வண்டாய் உலவுதல் முதலிய சித்திகளோச செய்யவல்ல வுமது பெருமையை யெம்மாற் சொல்லமுடியுமோ என்பது கருத்து.

4 எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினும் மரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேதுவருமோ வறிகிலேன்
கண்ணகனி லத்துநா னுள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தினின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மையிற் நிலைபதியு மட்டுமே
பதியாயிருந்த தேதகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவித னருளினாலே
விண்ணிலவு மதியமுத மொழிபாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைகான்
வேதாந்த சித்தாந்த சமரசசன் மார்கபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

இ-ள். எண்ணரிய பிறவிதனில்-எண்ணுதற்கரிதாகிய பிறவிகளுள், மானிடப்பிறவி - மனிதப்பிறப்பு, யாதினும - எல்லாப் பிறவிகளினும், அரிது அரிது-மிகவும் அரியது, இப்பிறவி தப்பினால்-இந்த ஜன்மந்தவறினால், எப்பிறவி வாய்க்குமோ-எந்தஜன்மம் கிடைக்குமோ, ஏதுவருமோ-என்ன அநர்த்தங்க ளுண்டாகுமோ, அறிகிலேன் - தெரிகிலேன், (ஆதலால்) கண்ணகல் நிலத்து-இடமகன்ற பூமியில், நான் உள்ளபொழுதே-நான் இருக்கும்பொழுதே, அருள்ககனவட்டத்தில் நின்று-திருவருளாகிய ஆகாய மண்டலத்தில் நின்றும், காலூன்றி நின்று ஆனந்தம் பொழி-

நிலத்து நின்று இன்பமழையைப் பொழியாநின்ற, முகிலொடு - மேகத்துடன், கலந்து-சேர்ந்து, மதி அவசம் உற பண்ணுவது நன்மை-என் அறிவானது பரவசப்படும்படி செய்வது நன்மையாகும், இந்நிலை பதியும் மட்டும்-இந்தநிலையில் அழுந்துகிறவரைக்கும், பதியாய் இருந்த-எனக்கு இடமாயிருந்த, தேகப்பவுரிகுலேயாமல்-தேகமாகிய பவுரிக்கூத்தாகலேயாமல், கௌரி-கௌரியாகிய, குண்டலி ஆயி-குண்டலிசத்தி என்கிற, பண்ணவிதன் அருளிலேலே-தேவியினது கிருபையினால், விண் நிலவும் மதி அமுதம்-சிதாகாசத்தில் நிலைபெற்றிருக்கிற சந்திரனிடத்துள்ள அமிர்தமானது, ஒழியாதுபொழிய-இடையறாது பெய்ய, உமது அடிமை நான் வேண்டுவேன்-உமதடிமையாகிய நான் விரும்புவேன், வேதாந்த. எ-று.

"எறியுங் கடலின் முகத்துளாயி னியாமைக் கமத்துப் புகுவதுபோல் பொறிவெம் பிறவி யதேகத்தாற் புருடன் விதேகி யெனப்பிறந்து" எனவும், "தடித்துமேலு மிவ்வுருவ மாயினும்பெறல் சற்றல" எனவும் கூறப்படுதலின், "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதானியாதினும் அரிதரிது" என்றார், குண்டலிசக்தி - மூலாதாரத்தில் பாம்புருவமாய் இருப்பதாகிய ஓர் சத்தி. பவுரி-ஓர்வகைக் கூத்து

நால்வகையோனி யெழுவகைத் தோற்றம எண்பத்துநான் கிலக்கம் ஜீவபேதத்தும் பிறந்திறந்தெய்த்து, புண்ணியமிருப்பினால் மானிடப்பிறவி வாய்த்ததமையால் 'எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதானியாதினும் மரிதரிதுகாண்' என்றும், இப்பிறவிபொழியின் இன்னபிறவி வருமென்று துணியப்படாமையையால், 'இப்பிறவி தப்பிஞலெப்பிறவி வாய்க்குமோ வேதுவருமோ வறிகிலேன்' என்றும், ஆகையால் இவ்வுடலொடு கூடியிருக்கையிலேயே இரண்டறக்கலக்கும் வொனுபூதிவாய்க்க வருள வேண்டலின் 'கண்ணகனிலத்துநா னுள்ளபொழுதேயருட் கனவட்டந் தினின்று காலூன்றி மழைபொழிய மானதமுழுதிலொடு கலக்குமியல்வச முறவே பண்ணுவதுநன்மை' என்றும், அவ்வனுபூதி வாய்ப்பதற்கு முன் இத்தேகம் நீங்கிவிடின் அதுபெறுதற்கரிதாதலின் 'இந்நிலைபதியிமட்டுமே பதியாயிருந்ததேகப் பவுரிகுலேயாமலே கவுரிகுண்டலியாயி பண்ணவிதனருளிலேலே விண்ணிலவு மதியமுத மொழியாதுபொழியவே வேண்டுமே னுமதடிமைநான்' என்றும் கூறினர். தேகநீங்கின் முத்தி கிட்டாதென்னும் ஒரு சாரார் மதம்பற்றி 'தேகப் பவுரிகுலேயாமலே கவுரிகுண்டலியாயி பண்ணவிதனருளிலேல், என்றதனைக் குமாரதேவா அருளிசெய்த சுத்த சாதகத்தும் பரகசுக் காண்க.

5 பொய்திகழு மூலகநடை யென்செலகே ணென்சொல்கே
பொழுதுபோக்கே தென்னிலோ [ன்

பொய்யுட னிமித்தம் புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவ மலாமலித செய் நவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும்வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ வதையறிகிலேன்
மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட
வரையினெடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டச்கோல்
வரைந்துசய விருதுகாட்டி
மெய்திகழு மஷ்டாங்க யோகபூ மிக்குள்வளர்
வேந்தரே குணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமரசஞன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

இ-ள். பொய் திகழும் உலகநடை-பொய்யே மிகுந்து விளங்குகின்ற உலக வொழுக்கத்தைப்பற்றி, என்சொல்கேன் என்சொல்கேன் - என்ன சொல்வேன் என்னசொல்லுவேன், (ஆயினும் ஒருவாறு சுருக்கிச்சொல்லு கின்றேன்) பொழுது போக்கு எது என்னிலோ-(இவ்வுலகத்தார்) காலங் கழித்தல் எப்படி யென்றாலோ, பொய் உடல் நிமித்தம் புசிப்புக்கு அலைந் திடல்-பொய்யுடம்பினைப் பாதுகாத்தற்பொருட்டு உணவுக்காகத் திரிதல், புசித்தபின் கண்ணுறங்கல் - உண்டபின் நித்திரைபோதல், (ஆகிய இவை களாலேயே) இது கைதவமலாமல்-இது பொய்யொழுக்கமேயன்றி, செய் தவம் அல்லவே-செய்தற்குரித்தாய் (உயிர்க்குறுதி தருவதாகிய) தவமல் லவே, கண்கெட்டபேர்களும் - குருடருக்கும், வெளியாய்க் கண்டது இது-வெளிப்படையாய்க் காணப்பட்டது இவ்வொழுக்கம், இதை கண்டித்து விண்டு நிற்றல் எக்காலமோ இக் குருட்டொழுக்கத்தைக் கண்டித்துவிட்டு நிற்றல் எந்தக்காலமோ, அதை அறிகிலேன்-அதனை யுணருமாற்ற லில் லேன், மை திகழும் முகிலினம் குடைநிழற்றிட - கருமைவிளங்குகின்ற மேகக்கூட்டம் குடைபோல் நிழலசெய்ய, அட்டவரையினெடு - அஷ்ட குலாசலங்களோடு, செம்பொன்மேரு மால்வரையின் முதுகூடும் - செம் பொன் மேருவாகிய பெரிய மலையின் புறத்தும், யோகதண்டக்கோல் வரைந்து-யோகதண்டமாகிய கோலை யெழுதி, ஜயவிருதுகாட்டி-வெற்றி விருதாகக்காட்டி, மெய்திகழும - உண்மைவிளங்குகின்ற, அஷ்டாங்க யோகபூமிக்குள்வளர்-அஷ்டாங்கங்களாயுடைய யோகநிலத்தில் விருத்தி யடையாநின்ற, வேந்தரே - அரசரே, குணசாந்தரே - சாந்தகுண சீலரே, வேதாந்த. எ-று.

என்சொல்லுகேன் என்சொல்லுகேன் என்ற அடிக்கு இரக்கப்பொரு ளது. அஷ்டகுலகிரிகள் மீதும் மேருவின் மீதும் யோகதண்டக்கோல் வரைந்து ஜயவிருதுகாட்டி என்றது அவ்விடங்களிலெல்லாம் யோகம் பயின்றன ரென்பதை யுணர்த்தியது.

அட்டாங்கயோகங்களேயே பூமியாகவுருவகஞ்செய்ததற்கேற்ப இவர் களை அவ்வரசாண்டுவரும வேந்தரென்றமையான, அரசன் வெண்கொற் றக்குடைநிழலி னிருக்கவேண்டுமாகலின் 'மைதிகழு முகிலினம் குடை நிழற்றிட' என்றும், அவன் ஆணையை மேருவிற்பொறித்து விருதுமேற் கொண்டிருக்குமாகலின 'அட்டவரையிலெழுதுசெமபொன்மேரு மால்வரை யின் முதுகூடும் யோகதண்டக்கோல் வரைந்துசயவிருதுகாட்டி' என்றும் கூறினர். அஷ்டாங்க யோகங்களை முன்னரே யெடுத்துக்காட்டினேம் அவ்விடத்துக் காண்க.

6 கெசதுரக முதலான சதுரங்க மனமாதி
கேள்வியி னிசைந்துநிற்பக்
கெடிகொண்ட தலமாறு மும்மண்ட லத்தினுங்
கிள்ளாக்குச் செல்லமிக்க
தெசவிதம தாய்நின்ற நாதங்க ளோலிடச்
சிங்காச னாதிபர்களாய்த்
திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை
திகழ்ந்திட வசந்தகாலம
இசையமலர் மீதுறை மணம்போல வானந்த
மிதயமேற் கொள்ளுமவண்ணம்
என்றைக்கு மழியாத சிவராச யோகரா
யிருத்ராதி தேவர்களெலாம்
விஜயஜய ஜயவென்ன வாகிசொல வேகொலு
விருக்குநும் பெருமைபெரிதே
வேதாந்த சித்தாந்த சமாசகன் னிலைபெற்ற
வித்தகச சிததர்கணமே.

கெசதுரக முதலான-யானைகுதிரைமுதலான, சதுரங்கம்-சதுரங்கங் களாக, மனமாதி-மனமுதலிய அந்தக்கரண நான்கும் கேள்வியின் இசை ந்து நிற்ப-பணிவிடைக்கு இணங்கி நிற்கவும், கெடிகொண்ட தலமாறும்-ஊரின் நன்மையமைந்த ஆறு ஆதாரங்களிலும், மும்மண்டலத்தினும-மூன்று மண்டலங்களினும், கிள்ளாக்கு செல்ல-கிள்ளாக்கு செல்லவும், மிக்கதெச விதமதாய் நின்ற நாதங்கள் ஒலிட-மேலாகிய பத்துவகைப் பட்டு நின்ற நாதங்கள் முழங்கவும், சிங்காசநாதிபர்களாய்-சிங்காசநாதி பதிகளாய், திக்கு திகந்தமும - திக்குகளிலும திக்குகளின் முடிவுவரை

யிலும், பூரணமதிக்குடை திகழ்ந்திட-பூர்ணசந்திரனுகிய குடையானது பிரகாசிக்கவும், வசந்தகாலம் இசைய-வசந்தகாலம்வர, மலர்மீது உறை மணம்போல-மலரிலிருக்கிற பரிமளம்போல, ஆநந்தம் இதயமேற்கொள் ளும்வண்ணம்-இன்பமானது இதயத்தில் குடிகொள்ளும்வகை, என்றைக் கும் அழியாத-எப்போதுங்கெடாத, சிவராஜயோகராய் - சிவராஜயோகத் தையுடையராகி, இந்த்ராதிதேவர்களெலாம்-இந்திரன் முதலான தேவர்க ளெல்லாம், விஜய ஜய ஜய என்ன ஆசிசொல்ல-விஜய ஜய ஜயவென்று மங்களாசாசனம் பண்ணவும், கொலு இருக்கும்-கொலுவீற்றிருக்கின்ற, நும் பெருமை எளிதோ-உமது பெருமையானது சொல்லுதற்கு எளிதாகு மோ, வேதாந்த. எ-று.

ராஜயோகத்திற் பிறந்தவனுக்கு யானைமுதலிய சதுரங்கங்களும்பணி கேட்டல், சுவர்க்கமுதலிய மூன்றுலகங்களினும் கிள்ளாக்குச செல்லுதல், பேரிகாகளமுதலான பத்துவாத்தியங்களும் முழங்குதல், சிங்காசநாதிபர் களாதல், திசையின் முடிவுவரையில் தன் பூர்ணசந்திரன்போன்ற வெண் கொற்றக் குடைநிழற்றல், ஆநந்தம் நிறைந்த இருதயத்தை யுடையராதல், இந்த்ராதியர் ஆசிகூறல் ஆகிய இவைகள் அமைந்திருத்தல்போல, நீங்க ளும் சிவராஜயோகிகளாதலால் மனமாதிகள் சதுரங்கங்களாகவும், ஆறு தா ங்களும் மும்மண்டலங்களும் கிள்ளாக்குச செல்லும் இடங்களாகவும் சிரத்திற்றோன்றும் தசவிதநாதங்கள் வாத்யங்கள் ஆகவும்,மதிமண்டலமே வெண்கொற்றக் குடையாகவும் கொண்டு, ஆனந்த நிறைந்தஹ்ருதயராய், என்றைக்கும் அழியாத இந்த்ராதிதேவர்களெல்லாம்விசயசயசயவென்ன, ஆசிசொல்ல, கொலு இருகின்றீர்கள் என்றராயிற்று. மனமாதிகள்- மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. மும்மண்டலங்கள்-சந்த்ர மண்டலம், சூர்யமண்டலம், அக்நிமண்டலம் என்பன. தசவிதநாதங்கள் சிணிசிணிநாதம், சிணிசிணிநாதம, கண்டாநாதம், சங்கநாதம, வீணைநாதம், தாளநாதம், முரளிநாதம், பேரிநாதம, மிருதங்கநாதம், மேகநாதம் என்ப வைவாம். பூர்ணமதி-நிறைந்த அறிவு என்னலுமாம். கெடிகொண்ட தலம் என்பது ராஜபரமாமபோது, அவர்க்குக காவலாயுள்ள படைகுடி கூழ் மைசுசுட்பரணுறையு மென்றுகொள்க அலை யவருணைசெல்லுமிடமாத லால். என்றைக்கும் அழியாமைகெகாலத்தும் தோற்றக்கேகெளில்லாமல் ஒருதன்மையாய் வாழ்தல். கிள்ளாக்கு-கிள்ளிலை. அதாவது, பூர்வகாலத் தில் கல்விகற்கும் பிள்ளைகளிர் தமவீடுகளில் இரவிற்படித்ததற் கறிகுறி யாக அவாகளுடைய மரியாதையர் கிள்ளிக்கொடுத்த வெற்றிலை. ஆக்கு- இலை. இது ஆந்திரபதம்.

7 ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை
யகிலத்தின் மிசையுள்ளதோ

ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தையை
யடக்கி யொரு கணமேனும்யான்
காணிலேன் றிருவருளை யல்லாது மௌனியாய்க்
கண்மூடி யோடுமூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை யெழுப்பினேனும்
பூணிலே னிற்றைநாட் கற்றதுங் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
பொய்யுலக னுயினே னுயினுங் கடையான
புன்மையே னின்னமின்னம்
வீணிலே யலையாமன் மலையிலக் காகநீர்
வெளிப்படத் தோற்றல்வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசஞ் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

இ-ள். ஆணிலே பெண்ணிலே-ஆண் பெண் இரண்டனுள்ளும், என் போல ஒருபேதை-என்னைப்போல ஒரு அறிவில்லாதவன், அகிலத்தின் மிசை உள்ள சீதா-உலகத்திலுண்டோ, ஆடியகறங்குபோல் - சுழலாநின்ற காற்றடிபோல, ஓடி உழல் சிந்தையை - (விஷயங்களின்மேல்) விரைந்து போய்வீழ்ந்து (ஆவற்றினிறனும் மீளமாட்டாது அவற்றின்கண்ணே) சுழ லாநின்ற மனத்தை, அடக்கி-(அவவாறு செல்லாது) தடுத்து, திருவருளை ஒருகணமேனும் யான் காணிலேன்-திருவருளை ஒருகணப்பொழுதாயினும் யான் கண்டிலேன், அல்லாது-அன்றி, மௌனியாய்-மௌனநிலையை யுடை யேனாகி, கண்மூடி-கண்ணிதழ்களைக்குவித்து, ஓடும் மூசசைகட்டி - ஓடும் இயற்கையுள்ள ப்ராணவாயுவைத தடுத்து, கலாமதியை முட்ட - கலைகள் நிறைந்த சந்திரனைத் தொடும்படி, மூலவெம்கனலினை எழுப்ப - மூலாக்கி னியை எழுப்புதற்குரிய, நினைவும் பூணிலேன்-கருத்தும் கொண்டிலேன், இற்றைநாள்-இத்தனை நாள்வரைக்கும, கற்றதும் கேட்டதும்-நான கற்ற கல்வியையும் கேட்ட கேள்வியையும், போக்கிலே போகவிட்டு - அவை செல்லும்வழியிற் செல்லவிட்டு. பொய் உலகன் ஆயினேன் - பொய்யுலக வாழ்க்கையன் ஆயினேன், நாயினும் கடையான புன்மையேன் - நாயினும் இழிந்த அற்பத்தன்மையை யுடையவனாகிய நான், இன்னம் இன்னம்- மேன்மேலும், வீணிலே அலையாமல் - வீணகாரியங்களிற் பிரவேகித்துத் திரியாமல், மலை இலகரு ஞக - மலைகருதிபோல, நீர்-நீங்கள், வெளிப்பட தோற்றல் வேண்டும் - பகிரங்கமாகக் காட்சிகொடுத்தருளவேண்டும், வேதாந்த. எ-று.

கறங்கு ஓலைசுருளென்றலுமாம். இதனைக் 'கறங்கோலைபோல்வது' என்ற திருவாசகத்தானு மறிக. போக்கிலே போகவிட்டு என்றது மறந்

தென்றபடி. உலகத்திலுள்ள ஆண் பெண் என்னும் இருபகுப்பினுள் என் போல ஒரு அவிவேகி யுண்டோ, சுழலாநின்ற காற்றடிபோல அலைகின்ற மனத்தையடக்கித் திருவருளே ஒருகணகாலமாயினும் கண்டிலேன் அன்றியும் மௌனியாகிக் கண்மூடி அலைகின்ற வாயுவைத் தடித்து சந்திர மண்டலத்தை முட்ட, மூலாக்கினியை யெழுப்பும் கருத்துமில்லேன், இதுவரையிற் கற்ற கல்வியையும் கேட்ட கேள்வியையும் மறந்து அசத்தியமாகிய உலகவாழ்வை யுடையேனாயினேன். நாயினும் கடையேனாகிய நான் மேலுமேலும் பயனற்ற காரியங்களில் பிரவேசியாமல் மலையிலக்குப்போல நினைக்குப் பிரத்தியக்ஷமாகவேண்டும் என்பதாம்.

சிந்தையை யடகக்கினலன்றித் திருவருள் கிட்டாதாகலின் 'ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தையை யடகக்கியொரு கணமேனும் யான் காணிலேன் திருவருளே' என்றார். கற்றதும் கேட்டதும் ஆயிரியர் கைகாட்டிய இன்பநிட்டை பெறுதவிடத்துப் பயனின்மையாய்ப் போதலின்' 'கற்றதுங் கேட்டதும் போகக்கிலே போகவிட்டு' என்றதென்க. இதனைக் 'கற்றதுங் கேட்டதுந்தானே யேதுக்காகக்-கடபடமென் றுருடுதறகோ' என்றிவ்வாசிரியர் கூறலானு மறிக. 'கற்றதனற் றெல்லாவினை கட்டறுமோ' எனப் பிறரும் கூறுதலானு மறிக.

8 கண்ணலமு தெனவுமுக் கனியெனவும் வாயூறு
கண்டெனவு மடியெடுத்துக்
கடவுளர் கடந்ததல வழுதழுது பேய்போற்
கருத்திலெழு கின்றதெல்லாம்
என்னதறி யாமைபறி வென்னுமிரு பகுதியா
லீட்டுதமி ழென்றமிழினுக்
கின்னல்பக ராதுலக மாராமை மேலிட்
டிருத்தலா லித்தமிழையே
சொன்னவனி யாவனவன முத்திசித் திகளெலாந்
தோய்ந்தநெறி யேபடித்தீர்
சொல்லுமென வவர்நீங்கள சொன்னவை யிற்சிறிது
தோய்ந்தகுண சாதனனவே
நின்னல்பெற வேசொல்ல வச்சொல்கேட் டடிமைமனம்
விகசிபப தெந்தநாளோ
வேதாந்த சித்தாந்த சமரசந் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே

இ-ள். கன்னல் அமுது எனவும்-கருப்பஞ்சாற்றின் சுவைபோலவும், முக்கனியெனவும் - முக்கனிகளின் சுவைபோலவும், வாய் ஊறு கண்டு

என்னும் - நாவூறுதற்குக் காரணமான கற்கண்டுபோலவும், அடி-(சுவையுள்ள) அடியானது, கடவுளர்கள் எடுத்துத் தந்தது அல்ல கடவுளரால் எடுத்துக்கொடுக்கப்பட்டதல்ல, பேய்போல் அழுது அழுது-பேய்போல பலகால் அழுது, ஈருதலில் எழுகின்றது எல்லாம்-என் மனத்தில் உண்டாவதாகிய எல்லாம், என்னது அறியாமை அறிவு என்னும்-எனது உணர்வின்மை உணர்வு என்கிற. இருபகுதியால்-இரண்டு பகுப்பினால், ஈட்டு தமிழ்-சொல்லிய தமிழ்மாலையாகும், என் தமிழினுக்கு-அப்படி என்னுற் சொல்லப்பட்ட தமிழ்மாலைக்கு, ஆராமை மேலிட்டிருத்தலால்-பேரன்பு அதிகப்பட்டிருத்தலால், உலகம் இன்னல் பகராது-உலகமானது குற்றங் கூறாது, (அதனிற்) முத்திசித்திகளெலாம் தோய்ந்த-முத்திசித்திகளெல்லாம் அமைந்த, நெறியே-மார்க்கத்தையே, படித்தீர்-படித்தவர்களே, இத் தமிழையே-இந்தத் தமிழ்மாலையையே, சொன்னவன் அவன் யாவன்-சொல்லினவனுகிய அவன் எவனென்று, அவர்-அவ்வுலகத்தார், சொல்லும் என-சொல்லுங்களென்றுவினவ, நீங்கள்சொன்ன அவையில்-நீங்கள் மறுமொழியாகசசொன்ன அவ்வார்த்தைகளினால், சிறிது தோய்ந்தருண சாந்தன் என சாந்தருணம் சிறிது அமைந்தவன் என்று, மின்னல்பெற சொல்ல-பிரகாசமஉண்டாகப்புகழ, அடிமை-அடியேன், அசசொல்கேட்டு-அந்த வார்த்தையைக்கேட்டு, மனம் விகசிப்பது-மனமகிழ்சி யடைவது, எந்தநாளோ-எந்தக்காலமோ, வேதாந்த. எ-று.

கடவுளர்கள் அடியெடுத்துத தந்தன. "உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்" என இறைவனு லடியெடுத்துக்கொடுக்கப்பட்ட பெரியபுராண முதலாயின. சித்தர்களே என் தமிழ்ப்பாடலின் வரலாற்றை உலகத்தார் உங்களோ வினவ, நீங்கள் சொல்லக்கேட்டு உலகத்தார் என்னேப்புகழ, அச் சொல்லே அடியேன்கேட்டு மனமகிழ்வது எந்தக்காலமோ என்பதாம்.

9 பொற்பிலெடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலாற்
போர்த்திடை யொடுக்கமுறலால்
பொலிவான வெண்ணீறு பூசியே யருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மையால்
எற்பட விளங்குக னத்திலிமை யாவிழி
யிசைதுமே லேக்கமுறலால்
இரவுபக லிருளான கனதரந் படநூறி
யிதயங் களித்திடுதலால்
பற்பல விதங்கொண்ட புலிகலேபி னரியது
படைத்தப்ர தாபமுறலால்
பனிவெயில்கள் புகுதாம னெடியவான் மிடர்செடிய
பருமர வனங்களாரும்

வெற்பினிடை யுறைதலாற் றவராஜ சிங்கமென
மிக்கோ ருமைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

இ-ள். பொற்பிலெருடு-அழகோடுகூடிய, கைகாலில் - கைகால்களில், வள் உகிர்படைததலால் - கூர்மையாகிய நகங்களைப் படைத்தலாலும், இடைபோந்து ஒடுக்கம் உறலால்-இடையானது சுருங்கிவந்து இருத்தலாலும், பொலிவு ஆனவெண்ணீறு பூசி-பிரகாசமுள்ள திருவெண்ணீறணைப் பூசி, அருள்கொண்டு பூரித்த-திருவருள்பெற்று இறுமாந்த, எண் நீர்மையால்-மதிக்கத்தக்க குணத்தினாலும், எல்பட விளங்கு ககனத்தில்-பிரகாசம் உண்டாக விளங்குகின்ற சிதாகாயத்தில், இமையாவிழி இசைந்து-இமையால் கண்கள் பொருந்தி, மேல்நோக்கம் உறலால்-ஊர்த்வத்ருஷ்டியைப் பொருந்துதலாலும், இரவுபகல்-இரவினும் பகலினும், இருள் ஆன-அஞ்ஞானந்தகாரமாகிய, கனதந்தி படஅறி-பெரிய யானையானது இறக்கும்படி அரைத்து, இதயம் களிததிதிதலால்-மனம் செருக்கடைந்திருத்தலாலும், பற்பல விதம்கொண்ட-பற்பலவிதமான, புலிகலையின் உரிபடைத்து-புலித்தோலையும் மான்தோலையும் ஆசனங்களாகப் படைத்து, ப்ரதாபம் உறலால்-மநோபல வைபவத்தைப் பெற்றிருத்தலாலும், பனிவெயில்கள் புகுதாமல்-பனிவெயில் முதலியவைகள் நுழையப்பெறுமல், நெடிய வான் தொடா-விசாலமான ஆகாயத்தை அளாவிய, நெடிய-உயரமான, பரு மரவனநகள ஆரும்-பருத்த மரங்கள் அடரப்பெற்ற காடுசிறைந்த, வெற்பின் இடை உறைதலால்-மலையினிடத்து வசிததலாலும், தவராச சிங்கம் என-தவராச சிங்கம் என்று, மிகுகோர்-மேலோர்கள், உமமை புகழ்வர்-உம்மைக்கொண்டாடுவார்கள், வேதாந்த. எ-று.

இதில் சுங்கததுக்கும் தவசிகட்கும் உவமைகூறப்பட்டிருத்தலால், மேல் தவசிகட்குக் கூறிய குணங்களெல்லாம் சிங்கத்துக்கும் பொருந்தக் கூறிக்கொள்க. எப்படியெனின், ஆகாயத்திற் பொருந்தும்படியானமேற் பார்வையை யுடையதாதலும், அல்லும்பகலும் இருள் நிறமுள்ள மேகம் போன்ற யானையிறக்கும்படி அதனைக்குமைத்தலும், அதனை யழிததவெற்றியால் மனங்களித்தலும், முகிய இக்குணங்கள் சிங்கத்துக்கு வேறுயுள்ளன; கை காலில் வள்ளுகிரபடைத்தல் முதலிய மற்றைக் குணங்கள் சித்தர்கட்கும் சிங்கத்துக்கும் சமமாயுள்ளன.

10 கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தை யென்சொல்கேன் மநியையென் சொல்லுகேன்
கைவல்ய ஞானநீதி

நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டிலு லோபழய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லா னெருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி முறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்று
வித்தகச் சித்தர்கணமே.

இ-ன். கல்லாதபேர்களே நல்லவாகள் நல்லவர்கள்-கல்வியைக் கல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றும்-கல்விகற்றும், அறிவு இல்லாத - ஞானமில்லாத, என் கர்மத்தை என் சொல்கேன் - என் கன்ம பலத்தை என்னசொல்லுவேன், மதியையென் சொல்லுகேன்-(மந்த) புத்தியை யென்னசொல்லுவேன், கைவல்ய ஞானநீதி - கைவல்யபதவியைக் கொடுக்கின்ற ஞானநீதியை, நல்லோர் உரைக்கில் - நல்லோர்கள் சொன்னால், கர்மம் முக்கியம் என்று நாட்டுவேன்-கர்மமே முதன்மையான தென்று கல்வி வலியால் நிலைநிறுத்துவேன், ஒருவன் கர்மம் நாட்டினால்-ஒருவன் கர்மத்தை நிலைநிறுத்தினால், பழயஞானம் முக்கியம் என்று நவிலுவேன்-முன்சொல்லிய ஞானமே முதன்மையானதென்று சாதித்துரைப்பேன், வடமொழியிலே வல்லான் ஒருத்தன் வரவும்-வடமொழியில் வலல வனுகிய வொருவன் வரினும், தாவிடத்திலே வந்ததாவிவகரிப்பேன்-தமிழ்ப் பாஷையில் கைவந்தவன்போல விவகரித்துப் பேசுவேன், வல்ல தமிழ் அறிஞர்வரின்-தமிழ் வல்லவராகிய அறிஞர்வந்தால், அங்ஙனே-தமிழ்வசனங்கள் சொன்னதுபோலவே, வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன்-வடமொழிவாக்கியங்கள் சிலவறறை யெடுத்துப் பேசுவேன், வெல்லாமல்-நியாயமாய் வெல்லாமல், எவரையும் மருட்டிவிட வகைவந்த-யாவரையும் மருளும்படி செய்ய வகையேற்பட்டதற்குக் காரணமான, வித்தை-வித்தையானது, என்-என்னபயன்தரும், முத்திதருமோ - முத்தியைக்கொடுக்குமோ, வேதாந்த. எ-று.

கல்லாதபேர்களே என்னும் ஏகாரம் பிரிநிலே. கற்றும் அறிவில்லாத என்றமையால் கல்வி அறிவை யுண்டாக்குமென்றதாயிற்று. சிறிது - சில.

கல்லாதவர்களே நல்லவர்கள் ஏனெனின், கற்றும் கற்றதற்குப் பயனடையாமல் ஞானநீதி நன்றென்பவர்களேக கர்மம் நன்றென்று மருட்ட

லும், கர்மம் நன்றென்பவர்களே ஞானம் நன்றென்று மருட்டலும், தமிழ் வல்லார்வரின், அவர்களே வடமொழியால் மருட்டலும், வடநூல் வல்லார் வரின், அவர்களைத் தமிழ்மொழியால் மருட்டலும், ஆகிய இசசெய்கைகளை மேற்கொண் டொழுகுதலாகிய இவ்வித்தை முத்தியைக் கொடுக்குமோ என்பதாம்.

ஆநந்தமானபரம்.

1 கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீகுமக்
குணமொன்று மொன்றிலேன்பால்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்களைத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்தவருளில்
செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ
செல்வதெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலன மிநத்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலா
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
பானே னிவைக்குமாளோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள் கொல்லாமை - கொல்லாமையாகிய குணம், எத்தனை குணக் கேட்டை நீகும் - எத்தனை தூர்க்குணங்களைப்போக்கும், அக்குணம் ஒன் றும் ஒன்றிலேன்பால் அக்குணமொன்றையும் பொருந்தாதவனாகிய என் னிடத்தில், கோரம் எத்தனை (அமைத்தனை)-கோரமான நடக்கைகளைத் தனை யமைத்தாய், பக்ஷபாதம் எத்தனை (அமைத்தனை) - பக்ஷபாதங்கள் எத்தனை யமைத்தாய், வன்குணங்கள் எத்தனை (அமைத்தனை) - வலிய குணங்கள் எத்தனை யமைத்தாய், கொடியபாழ் கல்லாமை எத்தனை (அமைத்தனை)-கொடியனவும் பாழ்படுதற்குக் காரணமாவனவுமாகிய கல் லாமைக்குணங்கள் எத்தனை யமைத்தாய், அகந்தை எத்தனை (அமைத்தனை) - அகங்காரகுணங்கள் எத்தனை யமைத்தாய், மனக்கள்ளம் எத்தனை (அமைத் தனை)-மனக்குற்றங்கள் எத்தனை யமைத்தாய், உள்ள சற்காரியம் சொல்

விடினும் அறியாமை எத்தனை (அமைத்தனை) உளதாகிய சற்காரியத்தைச சொன்னலும் அதை யறிந்துகொள்ளாமையாகியதுர்க்குணங்கள் எத்தனை யமைத்தாய், கதிக்கென்றமைத்த அருளில் செல்லாலம எத்தனை அமைத்தனை-மோக்ஷத்துக்கென் றமைக்கப்பட்ட அருட்குணங்களில் பிரவேசி யாமையாகிய குணங்கள் எத்தனை யமைத்தாய், வ்ருதாகோஷ்டி என்னில் செல்வது எத்தனை (அமைத்தனை) - பயனற்றகூட்டமென்றல் அதில் பிர வேசித்தற்குக் காரணமாகிய காரணங்கள் எத்தனை யமைத்தாய், முயற்சி சிந்தை எத்தனை (அமைத்தனை) - பயனில்லாத முயற்சியிற்செல்லுஞ் சிந் தைகள் எத்தனை யமைத்தாய், சலநம் இந்த்ரசாலம்போன்ற தேகத்தில்-கெடும்இயற்கையில் இந்த்ரஜாலத்தையொத்த சரீரத்தில், வாஞ்சைமுதலா அல்லாமை எத்தனை (அமைத்தனை)-விருப்பம் முதலியனவாகத்தகாமை யாகிய குணங்கள் எத்தனை யமைத்தாய், உனக்கு அடிமை ஆனேன்-தேவ ரீருக் கடிமையாயினேன், இவைக்கும் ஆளோ - (கோரம் முதலிய) இத்தீக் குணங்களுக்கும் நாஞளாகவோ, அண்டபகிரண்டமும்-இவ்வண்டங்களும் இவற்றின் புறத்திலுள்ள அண்டங்களும், அடங்க-குறுகியுள்ளடங்கும்படி, ஒரு நிறைவு ஆகி-ஒரு பரிபூர்ணமாகி, ஆநந்தம் ஆனபரமே - சுகரூபமான பரம்பொருளே. எ-று.

கோரம்-கொடுமை. பக்ஷபாதம் - ஒருபாற் பற்றுடைமை. கொல் லாமை ஒன்று இருப்பின் எல்லா நன்மைகளையுங் கொடுக்கும். அது இல் லாமையால் உண்டான கோரம்முதலான தீங்குகள் எத்தனை யென்பேன் உனக்கடிமையான நான் இவைகட்கும் அடிமையோ என்பதாம்.

2 தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகியச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்ரமாய்த்
திரமாகி நாஞவிதப்
பொருளாகி யப்பொருளே யறிவொறியு மாகியெம்
புலனுமா யெம்பூதமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி யொளியாகி நன்மைதீ மையுமாகி
யின்றுகி நாளையாகி
என்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா
யிவையல்ல வாயநின்னை
அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவ
ரறிவதற் கெளிதாகுமோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். தெருள் ஆகி-தெளிவாகி, மருள் ஆகி-மயக்கமாகி, உழலும் மனம் ஆய்-சுழலாநின்ற மனமாகி, மனம் சேர்ந்து வளர்சித்து ஆகி-மன மானது சேர்ந்துவளர்தற் கிடமாகிய அறிவாகி, அசரித்தெல்லாம் சூழ்ந்த சிவசித்தாய்-அந்தச சித்தெல்லாஞ் சூழப்பெற்ற சிவஞானமாகி, விசித்திர மாய் ஆசசர்யகரமாகி, திரமாகி-உறுதியாகி, ஞாலவிதப் பொருள் ஆகி-பல வகைப்பொருள்களாகி, அப்பொருளே அறிபொறியும் ஆகி-அப்பொருள் களே யறிகின்ற ஐம்பொறிகளுமாகி, ஐம்புலனும் ஆய் - (அவற்றுக்கு விட யங்களாகிய) ஐம்புலன்களுமாகி, ஐமபூதம ஆய்-பஞ்சபூதங்களாகி, புறமும் ஆய்-வெளியுமாகி, அகமும் ஆய்-உள்ளுமாகி, ஊரம் சமீபம் ஆய்-சேய்மை யண்மைகளாகி, போக்கொடு வரத்தும் ஆகி-செலவோடுவரவுமாகி, இருள் ஆகி-அந்தகாரமாகி, ஒளி ஆகி - தேஜஸ்ஸாகி, நன்மை தீமைகளுமாகி-நன்மை தீமைகளுமாகி, இன்றாகி-இன்றாகி, நாளே ஆகி-நாளையாகி, என் றும் ஆய்-என்றுமாகி, ஒன்றும் ஆய்-ஒன்றுமாகி, பலவும் ஆய்-பலவுமாகி, யாவும் ஆய்-எல்லாமாகி, இவை அல்ல ஆய நின்னே-இவைக ளல்லாதனவு மாகிய உன்னே, அருளாகி நின்றவர்கள்-உன் திருவருளுக் கிலக்காகி நின்ற அறிஞர்கள், அறிவது அல்லால்-அறிவதேயன்றி, ஒருவர் - வேறொருவர், அறிவதற்கு-உணர்வதற்கு.எளிது ஆகுமோ-(அவ்வுணர்ச்சி) எளிதாகுமோ, அண்டபகி. எ-று.

சிவசித்து-சிவஞானம். ஓகாரம் எதிர்மறை. தெருள் மருள் முதலி யனவாகியும் அவை யல்லனவாகியும் நிற்கின்ற உன்னே, உன் திருவருள் பெற்ற அறிஞரன்றி மற்றையர் உணர்தல் கூடுமோ என்பதாம்.

3 மாறுபடு தர்க்கந் தொடுக்கவறி வார்சாண்
வயிற்றின் பொருட்டதாக
மண்டலமும் விண்டலமு மொன்றுகி மனதுழல
மாலாகி நிற்கவறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
மெணமெணென் றகம்வேறதாம்
வித்தையறி வாரெமைப் போலவே சந்தைபோன்
மெய்ந்நூல் விரிக்கவறிவார்
சீறுபுலி போற்சீறி மூர்ச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்கவறிவார்
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு மூளறமறிவார்
ஆறுசம யங்களொறும் வேறுவே றுகிவிளை
யாடுமுனை யாவரறிவார்

அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். மாறுபடு தர்க்கம் தொடுக்க அறிவார்-மாறுபடுதற்குரிய தர்க்கந் தொடுக்க அறிவார்கள், சாண் வயிற்றின்பொருட்டாக-சாண்வயிற்றின் நிமித்தமாக, மண்தலமும் விண்தலமும் ஒன்றுபடி மனது உழல-மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒன்றுகப்பாவித்து மனஞ் சுழலாகிற்க, மால் ஆகி நிற்க அறிவார்-பேராசை கொண்டுநிற்க அறிவார்கள், வேறுபடுவேடங்கள் கொள்ள அறிவார்-வெவ்வேறுவகைப்பட்ட வேஷங்கள் பூண அறிவார்கள், ஒன்றை மெண மெண என்று-ஒரு மந்திரத்தை மெணமெண் என்று நாவினால் உச்சரியாநின்றே, அகம்வேறு ஆம்-மனம்வேறுதற்குரிய, வித்தை அறிவார்-வித்தையை யறிவார்கள், எம்மைப்போலவே-எங்களைப் போலவே, சந்தைபோல்-சந்தையில் பல பொருள்களைப் பரப்பிவைப்பது போல, மெய்நூல் விரிக்க அறிவார்-உண்மை நூற்பொருள்களைப் பரப்ப அறிவார்கள், சீறுபுலிபோல் சீறி-கோபிக்கின்ற புலியைப்போலச்சீறி, மூச்சைப் பிடித்து-மூசசைத்தடித்து, விழி செக்கச் சிவக்க அறிவார்-கண்கள் மிகவுஞ் சிவக்க அறிவார்கள், தம்தம் மதத்தையே திரமென்று-தங்கள்தங்கள் மதத்தையே திடமென்று, தாமதசசெய்கை கொடும் உளற அறிவார்-தாமசத்தொழிலை மேற்கொண்டு உளற அறிவார்கள், ஆறு சமயங்கள் தொறும்-ஆறு சமயங்களுள்ளும், வேறு வேறு ஆகி - வெவ்வேறருக்கொண்டு, விளையாடும் உன்னை-விளையாடுகின்ற வுன்னை, யாவர் அறிவார்-யாவர் அறியவல்லார், அண்டபகி. எ-று.

சீறுதற்கும் விழி சிவத்தற்கும் காரணம் மூசசடக்கலாதலால், "சீறு புலி போற்சீறி மூசசைப் பிடித்துவிழி செக்கச சிவக்க அறிவார்" என்றார். தர்க்கம்பேசல், வயிறுவளர்க்க அலைதல் முதலியவைசெய்ய அறிவார்களேயன்றி, ஆறுசமயங்களிலும் வெவவேறு வடிவுகொண்டுவிளையாடும் உன்னை யறிபவர்கள் யாவர் என்பதாம். ஆறு சமயங்களென்றது வைரவம் முதலிய அகச்சமயங்களை.

4 காயிலை யுதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடை வைகியுந் தோயமதின் மூழ்கியுந்
தேகங்க ளென்பெலும்பாய்த்
தெரியகின் றுஞ்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி
தெற்றவெயி லாடிருந்தும்

வாயுவை யடக்கியு மனதினை யடக்கியு
மௌனத்தி லேயிருந்தும்
மதிமண்ட லத்திலே கனல்செல்ல வமுதுண்டு
வனமூடிருந்து மறிஞர்
ஆயுமறை முடிவான வருணடி ஞரடி மை
யகிலத்தை நாடன்முறையோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். உதிர்ந்த காய் இலை கனி சருகு புனல்-உதிர்ந்தகாயையும்இலை யையும் கனியையும் சருகையும் நீரையும், மண்டிய கடும்பசி தனக்கு அடை த்தும்-மிகுந்த கடும்பசிக்கு உண்பித்தும், கார்வரையின் முழையில்-கருமை யாகிய மலைக்குகையில், கருங்கல்போல் அசையாது - கருங்கல்லைப்போல அசையாமல், நெடிது கண்மூடி இருந்தும், நெடுங்காலம் கண்மூடியிருந் தும், தியினிடை வைகியும்-பஞ்சாக்நி மத்தியிற் றங்கியும், தோயமதில்மூழ் கியும்-புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம்பண்ணியும், தேகங்கள் - சரீரங்கள், என்பு எலும்பு ஆய்த் தெரிய நின்றும்-எலும்பெலும்பாய்த்தெரியத்தவநிலை யில் நின்றும், சென்னிமயிர்கள்கூடு ஆ-தலைமயிர்களாகக் கூடாகக்கொண்டு, குருவி தெற்ற-குருவிக ளலைக்க, வெயிலூடு இருந்தும்-வெயிலினிடத்திருந் தும், வாயுவை அடக்கியும்-வாயுவைத் தடுத்தும், மனதினை அடக்கியும்-மனத்தைத் தடுத்தும், மௌனத்திலே இருந்தும்-மௌநநிலையிலிருந்தும், கனல் செல்ல மதிமண்டலத்திலே அமுது உண்டு வனமூடு இருந்தும்-முத் தாபத்தணியும்படி சந்திரமண்டலத்திலுள்ள அமிர்தத்தையுண்டு காட்டிற் றங்கியும், அறிஞர்-ஞானியர்கள், ஆயும் - ஆராயப்பட்ட, மறைமுடிவான பொருள் நாடினர்-வேதாந்தப்பொருளை விரும்பித்தேடினர்கள், அடிமை-அடிமையொருவனும், அகிலத்தைநாடன்முறையோ-உலகவாழ்வை விரும் புதல் முறைமையாமோ, அண்டபகி. எ-று.

உதிராத காய்முதலியவற்றை யுதிர்த்தல் தவத்தினைமேற்கொண்டார் க்கு அருளுடைமையன்றாய் முடியுமாதலால், "காயிலையுதிர்ந்தகனி சருகு புனல்" என்றார். அறிஞர் காயிலையுதிர்ந்த சருகு புனல் மண்டிய கடும் பசி தனக்கடைத்தல் முதலிய அருஞ் செயல்களைச்செய்து உன்திருவருள் பெற்றார்களாக, உன்னடியனை நான் ஒருவனும் பொய்யாகிய உலக வாழ்வை நம்பி நசித்தல் அழகாமோ என்பதாம்.

மேற்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்னும் நான்கு திசையினும் வளர்க்கப்பட்ட நெருப்போடு சூரியகிரணத்தியையுஞ்சேர்த்து, பஞ்சாக்நி யென்பர். குருவி யலைத்தல் என்பது காலாலிடறன் முதலியன. முத்த

பம்-ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பன, இவை முறையே தன்னாலும் பிறவுயிர்களாலும் தெய்வத்தாலும் உளவாந் துன்பங்கள். மதிமண்டலம் சிரசிலுள்ள மும்மண்டலங்களுள் ஒன்று. மதிமண்டலத்தமுதுண்டார்க்குப் பிறவியில்லையாதலும் அஃதின்றாகவே பிறவித்துன்பங்களென்று சொல்லப் படுவனவாகிய தாபத்திரயங்களில்லை யாதலும் காண்க.

5 சுத்தமு மசுத்தமுந் துக்கசுக பேதமுந்
தொந்தமுட னிர்த்தொந்தமும்
ஸ்தூலமொடு சூக்ஷ்மமு மாசையு நிராசையுஞ்
சொல்லுமொரு சொல்லின்முடிவும்
பெத்தமொடு முத்தியும் மாவமொ டபாவமும்
பேதமொ டபேதநிலையும்
பெருமையொடு சிறுமையு மருமையுட னெளிமையும்
பெண்ணினுட ணுணுமற்றும்
நித்தமு மனித்தமு மஞ்சன நிரஞ்சனமு
நிஷ்களமு நிகழ்சகளமும்
நீதியு மநீதியு மாதியொ டனாதியும்
நிர்விஷய விஷயவடிவும்
அத்தனையு நீயலத் தத்தனையு மில்லையெனின்
யாங்களுனை யன்றியுண்டோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். சுத்தமும் அசுத்தமும் - சுத்தாசுத்தங்களும், துக்கசுக பேதமும்-துக்க சுகபேதங்களும், தொந்தமுடன் நிர்த்தொந்தமும்-சம்பந்தாசம்பந்தங்களும், ஸ்தூலமொடு சூக்ஷ்மமும்-ஸ்தூல சூக்ஷ்மங்களும், ஆசையும் நிராசையும்-ஆசையும் ஆசையின்மையும், சொல்லும் ஒருசொல்லின் முடிவும்-வேதமும் வேதமுடிவும், பெத்தமொடு முத்தியும்-பந்தமோக்ஷங்களும், பாவமொடு அபாவமும்-நினைத்தலும் நினையாமையும், பேதமொடு அபேதநிலையும்-பேதாபேத நிலைகளும், பெருமையொடு சிறுமையும்-பெருமை சிறுமைகளும், அருமையுடன் எளிமையும்-அருமை எளிமைகளும், பெண்ணினுடன் ஆணும் பெண்மை யாண்மைகளும், மற்றும்-மேலும், நித்தமும் அநித்தமும்-நித்யா நித்யங்களும், அஞ்சன நிரஞ்சனமும்-தோஷமும் தோஷமின்மையும், நிஷ்களமும்-கலைகளுக்கு மேற்பட்டதும், நிகழ் சகளமும்-கலைகளோடு கூடினதும், நீதியும் அநீதியும்-நீதியநீதிகளும், ஆதியொடு அநாதியும்-ஆதி அநாதிகளும், நிர்விஷய விஷயவடிவும்-ஒருவாக்கு விஷய

மாகாமையும் ஆதலுமாகிய ரூபங்களும், அத்தனையும்-(ஆகிய) எல்லாமும், நீ அல்லது-நீயன்றி, எள் அத்தனையும இலலேயெனின்-எள்ளளவும் (வேறு நீ யில்லாப் பொருள்) இல்லேயாயின், யாங்கள் உன்னே அன்றி உண்டோ-நாங்கள் உன்னேயன்றி உளமாவோமோ. அண்டபகி. எ-று.

பந்தமென்பது பெத்தமென மருவிக்கிடக்கிறது. பேதம்-வேறுபாடு. சுத்தாசுத்தம் முதலிய எல்லாம் நீயன்றி இல்லனவாயின், நாங்கள் மாத்திரம் உன்னேயன்றி வேறுவோமோ என்பதாம்.

" நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றுன்
உலகே ழெனத்திசைபத் தெனத்தா னெருவனுமே
பலவாகி நின்றவா தோணேக்க மாடாமோ.—என்றார் திருவாத வூரடிகளும். பாவமும் அபாவமும் என்பதற்கு உண்மையின்மைகளும் எனப்பொருள் கூறினுமாம். தொந்தம் இரட்டைப்பொருள்கள் எனினு மமையும். அவைசீதோஷ்ணங்கள், சுகதுக்கங்கள் என்றற்றொடக்கத்தன.

சாக்கரம், சொப்பநம், சுழுத்தி, துரியம் என்னு நான்கும் ஒவ்வொன் றும் நந்நான்காகப் பிரிக்கப்பட்டுப் பதினறு ஆம் இவைகளேக் கலேக ளென்று கூறுவர். அவை:—சாக்கர சாக்கரம், சாக்கரசொப்பநம், சாக் கர சுழுத்தி, சாக்கர துரியம், சொப்பந சாக்கரம், சொப்பந சொப்பநம், சொப்பந சுழுத்தி, சொப்பநதுரியம், சுழுத்திசாக்கரம், சுழுத்தி சொப்ப நம், சுழுத்தி சுழுத்தி, சுழுத்தி துரியம், துரியசாக்கரம், துரியசொப்பநம், துரிய சுழுத்தி, துரியதுரியம் என்பன. ஓங்காரம்-பிரதிபாதகம், பிரமம்-பிரதிபாதயம், இந்தப்பிரணவம் அகாரம், உகாரம், மகாரம், அர்த்தமாத்ரு கை என நான்காகி, ஒவவொன்றும் நந்நான்காகப் பிரிக்கப்பட்டுப் பதினு றும். இவைகளும் கலேகளென்று சொல்லப்படும். ஸ்தூலம், சூக்ஷமம், காரு ணம், மகாகாரணம் இந்த நான்கு சரீரங்களும் அவ்வாறே நந்நான்காகப் பிரிக்கப்பட்டுப் பதினறுகிக் கலேகளெனப்படும். இந்தக் கலேகளுக்குமேற் பட்டதாகிய பரப்பிரமவஸ்து அவித்யாபாதம்,வித்யாபாதம்,ஆநந்தபாதம், துரியபாதம் என நான்கு பாதங்களேயுடையது. இப்பாதம் நான்கும் பசு வின் கால்போல்வதன்று. பொன் வெள்ளி நாணயங்களின் கால்பாகம் போல்வது கண்டங்களென்றபடி.

கலே கண்டம். இவற்றின் விரிவெல்லாம் யாம் எவ்வளவு விசதப் படுத்தினும் விளங்கலருமைநோக்கிச் சுருக்கினேமாதலால் வல்லார்வாய்க் கேட்டுணர்க, கலா என்னும் வடமொழி கலேயென்றுயது. இதுகலே யெனவும்படும். இதனே, "ஸ்ரீயோரபேதம்" என்பர் வடநூலார்.

6 காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காதவண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காண்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமூ மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். கார் ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து - இருள் நிறைந்த ஆணவக்காட்டை வேரறம் பறித்து, அறக்கண்டு-வெட்டவெளியாச்சி, அகங்காரம் என்னும் கல்லைப்பிளந்து-அகங்காரமென்கிற கல்லைப் பிளந்து தெறிந்து, நெஞ்சகமான பூமிவெளிகாண திருத்தி-மனமாகிய நிலமானது வெளியாய்த் தோன்றும்படி திருத்தி, மேன்மேல்-மேலுமேலும், பாராதி அறியாத மோனம் ஆம் வித்தை பதித்து-பூலோகத்தார் முதலானவர்கள் அறியாத மோகநிலை யென்கிற வித்தையை ஊன்றி, அன்பு நீராக பாய்ச்சி-அன்பாகிய நீரைப் பாயவிட்டு, அதுபயிர் ஆகுமட்டும்-அதுபயிராகுமளவும், மாமாயை வன்பறவை அணுகாதவண்ணம்-பெரிய மாயையாகிய வலிய பறவை சேர்ந்து அழிக்காதவகை, நேராக நின்று-தமது முயற்சியினளவிற் குறையாமல் செவ்வே நின்று அப்பயிரைக் காத்து, விளைபோகம் புசித்து உய்ந்த-விளைந்த சிவபோகத்தை யநுபவித்து உஜ்ஜீவித்த, நின் அன்பர் கூட்டம் எய்த-உன்னடியார் கூட்டத்தை நானடையும்படி, நினைவின்படிக்கு-என் எண்ணத்தின்படி, நீ முன்னின்று காப்பது-நீ எனக்குப் பிரத்யக்ஷமாகி நின்று காப்பாற்றுவது, நின் அருட்பாரம்-உன்திருவருட் குரியகடமையாம், என்றும் எப்பொழுதும், ஆராரும் அறியாத-எவ்வகைப் பட்ட மேலோரும் உணராத, சூது ஆனவெளியில் - ரஹஸ்யமான சிதாகாயத்தில், வெளி ஆகின்ற துரியமயமே - வெளிப்படத் தோன்றுகின்ற துரியவடிவே, அண்டபகி. எ-று.

உலகவின்பம் புசித்தற்கு நிலந்திருத்தும் பத்தாத்மாக்கள்போலசிவ போகம் புசித்தற்கு முக்தாத்மாக்களும் தம்மனநிலந் திருத்தவேண்டுந ராதலால் இவ்வாறு கூறப்பட்டது. துரியம்-சீவன்முத்தர்க்குரிய பூமி. அதுஸ்தூல சூக்ஷ்ம காரண மகாகாரணங்களாகிய நான்கு சரீரங்களென் னுங்காரணத்தின் காரியமாகிய சாக்கிர சொப்பநசுழுத்தி துரியங்களென் னும் நான்கனுள் இறுதியிலுள்ளது.

7 வானுதி பூதமா யகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகி யிரவியாய் மற்றுள வெலாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நானுகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடாதே
நானு னெனக்குளறி நானுவி காரியாய்
நானறிந் தறியாமையாய்ப்
போனு லதிட்டவலி வெல்லவெளி தோபகற்
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள் வான்றனை யெழுப்பவச மோவினிப்
போதிப்ப தெந்தநெறியை
ஆனலு மென்கொடுமை யனியாய மனியாய
மார்பா லெடுத்துமொழிவேன்
அண்டபகி ரண்டமு மடங்கலொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். வானுதி பூதமாய் - ஆகாயமுதலிய பஞ்சபூதங்களாகி, அகில அண்ட கோடியாய் - சமஸ்தமான அண்டகோடிகளாகி, மலை ஆகி-மலைக ளாகி, வளைகடலுமாய்-(உலகத்தைச) சூழ்ந்த கடல்களுமாகி, மதிஆகி-சந் திரனுகி, இரவியாய் - சூரியனுகி, மற்று உள்ள எல்லாம் ஆகி - வேறுள்ள பொருள்களெல்லாமாகி, வான்கருணை வெள்ளமாகி-மேலான கருணைப்ர வாஹமாகி, நான் ஆகி நின்றவனும்-நானுகி நின்றவனும், நீ ஆகி நின்றிட வும் - நீயாகி நிற்கசெய்தேயும், நான் என்பது அற்றிடாதே - நானென் பதை யொழியாமலே, நான் நான் என குளறி - நான் நான் என்று குளறி, நானு விகாரி ஆய்-பலவகை விகாரமுள்ளவனுகி, நான் அறிந்து அறியாமை ஆய் - நானறிந்தும் அறியாமை யுள்ளவனுகி, போனுல் - (மனம்போனபோக்கில்) போனுல், (அது) அதிட்டவலி-எனது அதிருஷ்ட பலமேயாகும், (அதனை) வெல்ல எளிதோ-வெல்லுதற்கு எளிதாகுமோ, பகற்பொழுது புகுமுன் - பகற்காலம் அஸ்தமிக்கு முன்னமே, கண்மூடி-கண்மூடிக்கொண்டு, பொய் துயில் கொள்வான்தனை - பொய்த் தூக்கங்

தங்குமவனே, எழுப்பவசமோ-துயிலொழிக்க (ஒருவர்க்கு) வசமாகுமோ, இனிபோதிப்பது எந்தநெறியை-இனி போதிப்பது எந்த மார்க்கத்தை, ஆனலும் - ஆயினும், என்கொடுமை - என்கொடுமையைப் பிறர் கேட்கச் சொல்லின், (அது) அநியாயம் அநியாயம் - அநியாயமே அநியாயமே, (அங்ஙனமாதலால்) ஆர்பால் எடுத்து மொழிவேன்-யாவரிடத்தில் எடுத் துசசொல்லுவேன் - (சொல்லேன்). அண்டபகி. எ-று.

என்கொடுமை என்னை இவ்வாறுக்கினதைக்கண்டு வைத்தும் பிறர்க் கெடுத்துரைத்து அவரையும் இவ்வாறுக்குதல் பாவமென்றஞ்சி ஆர்பாலெ டுத்துமொழிவேன் என்றூர்போலும். பொய்த்துயில் கொள்வான்றனை யெழுப்பவசமோ என்றது, ஞானமறிந்தறியாமையாய் என்றதைப் பற்ற. வானுதி பூதமா யகிலாண்டகோடியாய் என்றதனை 'ஒன்று யுலகனைத்து மானுர்தாமே' எனற திருவாக்கானு முணர்க.

8 பொய்யினேன் புலையினேன் கொலேயினே னின்னருள்
புலப்பட வறிந்துநிலேயாப்
புன்மையேன் கல்லாத தன்மையே னன்மைபோற்
பொருளலாப் பொருளேநாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
வினையினே னென்றென்னேநீ
விட்டுவிட நினேவேயேற் றட்டழிவ தல்லாது
வேறுகதி யேதுபுகலாய்
தய்யனே மெய்யனே யுயிரினுக் குயிரான
தூணவனே யிணேயொன்றிலாத்
துரியனே துரியமுங் காணு வதீதனே
சுருதிமுடி மீதிருந்த
ஐயனே யப்பனே யெனுமறிவு ரறிவைவிட்
டகலாத கருணேவடிவே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். பொய்யினேன்-பொய்யினேயுடையேன், புலையினேன் - புலா லுண்டலே யுடையேன், கொலையினேன்-கொல்லுந்தொழிலே யுடையேன், நின் அருள் புலப்பட அறிந்தும்-உன் திருவருளின் தன்மையை வெளிப் பட வுணர்ந்தும், நிலையா-நிலேததிராத, புன்மையேன்-புல்லிய தன்மையை யுடையேன், கல்லாததன்மையேன் - கல்லாத தன்மையை யடையேன், பொருள் அல்லா பொருளே-பொருட்டன்மையுடையதல்லாத பொய்ப் பொருளே, நன்மைபோல் நாடும் - நன்மையாயெண்ணி விரும்புகின்ற,

வெய்யனேன் - வெவ்வியகுணமுடையேன், வெகுளியேன் - கோவமுடையேன், வெறியனேன்-பைத்தியகுணமுடையேன், சிறியனேன்-சிறுமையையுடையேன், வீனையினேன் என்று-தீவினையையுடையேன் என்று, என்னை நீ விட்டுவிட நினைவையேல்-என்னை நீ கைவிட நினைப்பாயாஞல், தட்டழிவது அல்லாது-தடுமாறுவதே யன்றி, வேறுகதியேது-வேறுகதி (எனக்கு) யாது, புகலாய் - (நீயே) சொல்வாய், தூய்யனே-பரிசுத்தனே, மெய்யனே-மெய்யானவனே, உயிரினுக்கு உயிர் ஆன துணைவனே-உயிர்க்குயிராகிய சஹாயபூதனே, இணை ஒன்று இல்லா துரியனே-சமானமொன்று மில்லாத துரியஸ்வரூபனே, துரியமும் காணு அதீதனே - துரியநிலையும் காணக் கூடாத அதீதனே, சுருதி முடி மீது இருந்த ஐயனே-வேதத்தி னுச்சியிலிருந்த இறைவனே, அப்பனே-உபகாரனே, என்னும்-என்றிப்படி பல வகையாய்த்துதிக்கின்ற, அறிஞர்-அறிவுடையோரது, அறிவை-அறிவாகிய இடத்தை, விட்டகலாத-விட்டேநீங்காத, கருணைவடிவே - கருணைரூபியே. அண்டபகி. எ-று.

ஐயனே என்பதற்கு அழகனே என்றுரைப்பினு மமையும்.

9 எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
னிதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை
யாதினும் மபிமானமென்
சித்தமிசை குடிகொண்ட தீகையொ டிரக்கமென்
சென்மத்து ஞானறிகிலேன்
சிலமொடு தவவிரத மொருகனவி லாயினுங்
தெரிசனஞ் செய்தமறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை யுண்டோசொலாய்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இ-ள். எத்தனைவிதங்கள் கற்கினும் கேட்கினும்-எத்தனை விதங்களாகக் கற்றலும் கேட்டாலும், என் இதயமும் ஒடுங்கவில்லை-என் மனமு மடங்கவில்லை, யான் என்னும் அகந்தை எள்ளளவும் மாறவில்லை - யானென்கிற அகங்காரமானது எள்ளளவாயினும் நீங்கவில்லை, யாதினும் அபிமானம்-எல்லாப் பொருள்களின்மேலும் அபிமானமானது, என் சித்

தமிசை குடிகொண்டது-என் மனத்திற் குடிகொண்டிருக்கின்றது, ஈகை யொடு இரக்கம் - கொடையோடு இரக்கமென்பதை, என் சென்மத்தும் நான் அறிகிலேன்-என் ஜன்மகாலந்தொடங்கி இதுவரையிலும் நானறிந்திலேன், சீலமொடு தவவிரதம்-ஆசாரத்தோடு தவவிரதங்களே, ஒருகனவில் ஆயினும்-ஒரு ஸ்வப்நத்திலாயினும், தெரிசநம் செய்தும் அறியேன் - சேவித்துமறியேன், பொய்த்தமொழி அல்லால்-பொய்வார்த்தை பேசுவதன்றி, மருந்துக்கும்-மருந்துக்கெனினும், மெய்மொழி புகன்றிடேன்-மெய்யாகிய வார்த்தையைப் பேசமாட்டேன், பிறர் கேட்க-பிறர் கேட்கும்படி, போதிப்பது அல்லாது-போதிப்பதன்றி, சும்மா இருந்து-சும்மாவிருந்து, அருள் பொருந்திடா பேதை நானே-உன் திருவருளைப் பெறுத அறிவிலி நானே, அத்தனே குணக்கேடர் - (என்னைப்போன்ற) அவ்வளவு குணஹீநர்களே, அவனிமிசைகண்டதா கேட்டதா-உலகத்தின்மேல் கண்டதாகவாயினும் (இருக்கிறார்களென்று) கேள்விப்பட்டதாகவாயினும், உண்டோ-ஒரு பிரஸ்தாபம் உளதோ, சொலாய்-சொல்வாயாக, அண்டபகி. எ-று.

சும்மாவிருத்தல்-த்ரிகரணங்களும் அசைவறத் தூங்காத தீபசுடர் போலவும் அலையற்றகடல்போலவும் நிற்றல். "சும்மாவிருக்கச் சுகமுதய மாகுமே" எனவும், "சும்மாவிரு சொலலற" எனவும் பிறரு மிவ்வாறு கூறுதல் காண்க.

10 எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
வேழைநீ யென்றிருந்திட்
டெனதாவி யுடல்பொருளு மெளனியாய் வந்துகை
யேற்றுநம தென்றவன்றே
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலே மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும் பொய்யாகையான்
மக்கா லிருட்டினைய விருளில்லை யிருவினைகள்
வந்தேற வழியுமில்லை
மனமில்லை யம்மனத் தினைமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
அக்கால மிக்கால மென்பதிலை யெல்லா
மதீதமய மானதன்றே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

இள். மௌனியாய்வந்து-மௌனகுருவாகிவந்து, எக்காலமும் - எக்காலத்திலும், நீ தனக்கென்ன ஒருசெயல் இல்லா எழையென்று-நீ சுதந்தரமாக ஒரு செய்கையில்லாத அறிவிலியென்று போதித்து, இருந்திட்டு-எழுந்தருளியிருந்து, எனது ஆவி உடல்பொருளும்-என்னுடைய ப்ராணன் தேஹம் பொருள் ஆகிய மூன்றையும், கையேற்று - கையிலே லேற்றுக் கொண்டு, நமது என்ற அன்றே-நமது என்று தேவரீர் அருளிசெய்த அப் பொழுதே, பொய்க்கால தேசமும் - பொய்யாகிய காலமும் பொய்யாகிய தேசமும், பொய்ப்பொருளில் வாஞ்சையும் - பொய்ப்பொருளில் விருப்பமும், பொய்உடலே மெய் என்னலும்- பொய்யாகிய வுடம்பை மெய்யென்று கொள்ளுதலும், பொய் உறவு பற்றலும்-பொய்யுறவினரை (மெய்யுறவினராக மதித்து) பற்றுதலும், பொய் ஆகும்-பொய்யாய் முடியும், நான் என்னல்-நான் என்பது, பொய்யினும் பொய் ஆகையால் - பொய்யி னுள்ளும் பெரும் பொய்யாய் விடுதலால், கைக்கால் இருட்டு அனைய - மழைக்கால விருட்டையொத்த, இருள் இல்லே-அஞ்ஞானமாகிய இருளில்லே, இருவினைகள் வந்து ஏற வழியும் இல்லே - இருவினைகள் வந்து தொடர மார்க்கமுமில்லே, மனம் இல்லே-மனதுமென்பதில்லே, அம்மனத்து இனம் இல்லே-அந்தமனத்தின் இனமானதுமில்லே, வேறும் ஒரு வரவு இல்லே போக்கும் இல்லே-வேறுமொரு வரவு இல்லே செலவும் இல்லே, அக்காலம இக்காலம் என்பது இல்லே-அந்தக்காலம் இந்தக்காலம் என்பது மில்லே, எல்லாம்-சர்வமும், அதீதமயம் ஆனது அன்றே-இல்லாமைவழி வாயிற்றல்லவா, அண்டபகி. எ-று.

உபதேசகாலத்தில் உடல் பொருள் ஆவிகளோச டீடன் சமர்ப்பித்தலும், அவைகளே யேற்றுக்கொண்டு ஆசிரியன் உபதேசித்தலும் முறைமையாதலால், "எனதாவி யுடல்பொருளு மௌனியாய் வந்துகை யேற்று" என்றார். 'அன்றேயென்ற ஞவியுமுடலும் பொருளுமெல்லாமுங் - குன்றே யீனயா யென்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ' என்ற திருவாக்காலுங் காண்க. பொய்யினும் பொய் என்றது இப்பொய்யை நோக்குங்கால் முற்பொய்யானது மெய்யென்று தோற்றுவதை. இறைவன் மௌனியாய்வந்து என் உடல்பொருளாவி மூன்றினையுங் கைக்கொண்ட அப்பொழுதே அஞ்ஞான விருள்முதலியன அற்றொழிந்தன வென்பதாம்.

ஆகவரி.

1 இன்னமுது கனியாகு கற்கண்டு சினிதே
னெனருசித் திடவலியந்
தின்பங் கொடுத்தநினை யெங்நேர நின்னன்ப
ரிடையறு துருகி நாடி

உன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கு
மோய்தயர்ந் தவசமாகி
உணர்வரிய பேரின்ப வநுபூதி யுணர்விலே
யுணர்வார்க ளுள்ளபடிகாண்
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
கைக்கொள்வள் பக்குவத்தில்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
கருதிநகை யாவளதுபோல்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகாரம்பமாம்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

இ-ள். இன் அமுது (என)-இனிய அமிர்தம்போலவும், கனி (என)-முக்கனிகள்போலவும், பாகு (என)-சர்க்கரைப்பாகுபோலவும், கற்கண்டு (என) - கற்கண்டுபோலவும். தேனி (என) - தேனிபோலவும், தேன் (என)-தேன்போலவும், ருசித்திட - ருசிக்கும்படி, வலியவந்து இன்பங்கொடுத்த நின்னை-வலியவந்து சுகங்கொடுத்த வுன்னை, நின் அன்பர்-உன் அன்பர்கள், எந்நேரம் இடையறாது உருகிநாடி-சதாகாலமும் இடையறாமல் நாடியுருகி, உன்னிய கருத்து அவிழ-நினைத்த மனமும் நெகிழ்தலால், உரைகுளறி-மொழிகுளறி, உடல் எங்கும் ஓய்ந்து-உடம்பெல்லாம் எய்த்து, அயர்ந்து-அயர்வையடைந்து, அவசம் ஆகி-பரவசமாகி, உணர்வரிய - அறிதற்கரிய, பேரின்ப அநுபூதி யுணர்விலே-பேரின்ப அநுபவ வுணர்சியால், உணர்வார்கள்-அறிந்தநுபவிப்பார்கள், உள்ளபடி-(இது) யதார்த்தம், கன்னிகை ஒருத்தி-ஒரு கன்னிகையானவள், சிற்றின்பம் - சிற்றின்பமானது, வேம்பு என்னினும்-வேம்பென்று சொல்வாளாயினும், பக்குவத்தில் கைக்கொள்வள்-பருவகாலத்தில் (அச சிற்றின்பத்தையே பேரின்பமாக வண்ணி)கைக்கொள்வாள், கணவன் அருள் பெறின் - கணவனருளைப்பெற்று வாழ்வளாயின், முன்னே சொன்னவாறு என் என-முன்னே சொன்னவழி யாதாய் முடிந்ததென்று வினவ, கருதி-(அதை) நினைத்து, நகையாவள் - நகைப்பாள், அதுபோல்-அதுபோலவே, சொன்னபடி கேட்கும் - சொன்னபடி கேட்கின்ற, இப்பேதைக்கு-இவ்வறிவி லேற்கு, நின் கருணை தோற்றின்-உன் கருணை யுளதாயின், சுகாரம்பம் ஆம்-சுகோதயமாகும், சுத்தநிர்க்குண மான பரதெய்வமே-சுத்தநிர்க்குணமாகிய மேலான தெய்வமே, பரஞ்சோதியே-மேலான தேஜஸ்ஸே, சுகவாரியே-இன்பசாகரமே. எ-று.

கன்னிகை-சிறுபெண். சிற்றின்பம்-அற்பசுகம். கணவனருள் பெறுதல்-கணவது விருப்பத்திற்குப் பாதரட்சையாகி அவனோடின்புற்று வாழ

தல். கண்ணிகைக்குச சிற்றின்பங் கைததலும் பருவம்பெற்ற பெண்ணுக்கு இரதித்தலும் இயற்கையாதல்போல, உன் னருள்பெறுத எனக்கு உன் சுகானுபவம் கைப்பாகவும், பெற்ற அறிஞர்க்கு இனிப்பாகவு மிருக்கும் என்பதாம். திக்குஷன்-குணங்கடந்தவன்.

2 அன்பின்வழி யறியாத வென்னோத் தொடர்ந்தென்னே
யறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநா
னற்றே னலந்தேனென
என்புலன்ம யங்கவே பித்தேற்றி விட்டா
யிரங்கியொரு வழியாயினு
இன்பவள மாகவந் துள்ளங் களிக்கவே
யென்னீ கலந்ததுண்டோ
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்குமுண்டோ
தமியனேற் கிவ்வணந் திருவுள மிரங்காத
தன்மையாற் றனியிருந்து
துன்பமுறி னெங்ஙனே யழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்குமுரையாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இ-ள். அன்பின்வழி அறியாத - அன்பின் மார்க்கத்தை யுணராத, என்னே-அடியேனே, தொடர்ந்து - பற்றி, என்னே அறியாதபக்குவத்தே-என்னே உணராத பருவத்திற்றானே, ஆசைப்பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து - ஆசைவெள்ளத்தை பெருகப்பண்ணி, நான் அற்றேன் அலந் தேன் என - நான் கெட்டேன் வாடினேன் என்று சொல்லும்வண்ணம், என் புலன் மயங்க பித்து ஏற்றிவிட்டாய் - என்னறிவு மயங்கும்படி பித் தேற்றி விட்டனை, நீ - (இப்படிசெய்த) நீ, ஒருவழியாயினும் இரங்கி ஒருதரமாயினு மிரங்கி, இன்பவெள்ளமாக வந்து - ஆநந்த வெள்ளமாக வந்து, உள்ளம் களிக்க-மனங் களிக்கும்படி, என்னே கலந்தது உண்டோ-என்னைச சேர்ந்தது உண்டோ - தன்பருவ மலருக்கு - தன் பருவகால மலருக்கு, மணம் உண்டு-வாசனையுண்டு, வண்டு உண்டு-வண்டு மொய்த்த துண்டு,தன் முகைதனக்கும் உண்டோ-(அவைகள்) குளிர்ச்சியாகிய அரும் புகளுக்கும் உண்டாமோ, தமியனேற்கு - தனியேனுக்கு, இவ்வண்ணம்-இத்தப்பரகாரம், திருவுளம் இரங்காத தன்மையால்-தேவரீர் திருவுளங் கனி யாததன்மையால், தனி இருந்து துன்பம் உறின்-தனியாயிருந்து துன்பப்

பட்டால், அழியாத நின் அன்பர் சுகம்-நசிக்காத உன்னன்பர்க்குரிய சுக மானது, எங்ஙன் வந்துவாய்க்கும்-எப்படி வந்து கிடைக்கும, உரையாய்-சொல்லாய், சுத்தநிர்க்குணமான. எ-று,

அன்பின்வழி-அன்புசெய்யவேண்டியவழி. தன் பருவமலர் - தனக் குரிய பருவத்திண்டாகிய மலர். மணமுண்டாயினன்றே வண்டுமொய்ப் பது, அதைநோக்கி மணமுண்டி வண்டுண்டு என்றார். என்னைப் பார்த்த பிறர், உன் விஷயமாய் நான் வாடினேன் அயர்ந்தேன் என்று சொல்லும் வகை, என்னறிவு மயங்கப் பித்தேற்றிவிட்டீ ஒருகாலாயினும் சுகத்தைக் கொடுத்தாயில்லையே, அப்படி உன் கருணைக்குரிய ஞகாத எனக்கு என்ன சுகமுண்டி, பருவகாலமலருக்கு மணமும் வண்டுமுண்டு, அல்லாத மலரு க்கு ஒன்றுமில்லை யென்பதாம். இறைவனை வண்டாகவும், அறிஞரைப பருவகாலமலராகவும் கொள்க.

3 கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச மூருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க வொருகடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனிற் ருய்த்தள்ளல் நீதிமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னுவனங்தோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மாவிருக்க வருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இள். ஐய-ஐயனே, கல்லேனும் ஒருகாலத்தில உருகும்-கல்லாயினும் ஒருகால விசேடத்தில் உருகாநிற்கும், என் கல்நெஞ்சம் உருக இல்லையே-என் கல்மனமுருகவிலையே, (என்ன ஆசசரியம்) நான்முகன்-பிரமன், கரு ணைக்கு இணங்காதவன்மையையும் கற்பிக்க-திருவருட்கிணங்கியிராத மன

வன்மையையும் சிருட்டிக்க, ஒருகடவுளோ-ஒப்பற்றதெய்வமோ, வல்லான் வகுத்தே வாய்க்கால் என்னும்-வல்லான் வகுத்ததேவாய்க்கால் என்கிற, பெருவழக்குக்கு-பெருவழக்கத்துக்கு, இழுக்கும் உண்டோ-குற்றமுமுண்டாகுமோ, வானமாய் நின்று-பரமாகாயமாய் நின்று, இன்பமழையாய் இறங்கி-ஆனந்தவர்ஷமாயிறங்கி, என்னை வாழ்விப்பது-என்னை (நித்ய பதவியில்) வாழசெய்வது, உன்பரம்-உன் பாரமாகும், பொல்லாதசேய்எனில்-பொல்லாத குழந்தையாயிருந்தால், (அதனை) தாய்தள்ளல் நீதமோ-தாயானவள் தள்ளிவிடுதல்நீதியாகுமோ, (அவ்வாறுதள்ளிவிட்டால்) புகல்இடம் பிறிதும் உண்டோ - (அக்குழந்தைக்கு) அடைக்கலம்தானம் வேறும் உண்டோ, பொய்வார்த்தைசொல்லில்-பொய்மொழி பேசுவேனுனல்,திருவருட்கு அயலும் ஆய்-திருவருளுக்குப் புறமுமாகி, புன்மையேன் ஆவன்-அற்பனுமாவேன், அந்தோ-ஐயோ, சொல்லால் முழக்கில்-சொல்லாண்முழக்குதல் செய்தால், சுகம் இல்லை-இன்பமில்லை, மௌனி ஆய் மௌனியாகி, சும்மா இருக்க அருளாய்-சும்மா இருக்கும்படி க்ருபைபண்ணுவாய், சுத்த நிர்க்குணமான. எ று.

ஒரு பொருட்குணம் அதற்கினமான பொருளினு மிராவிடின் அஃ தொரு வியப்பன்றே, ஆதலால், 'கல்லேனும் உருகும் என் கல்நெஞ்சம் உருகவிலையே' என்றார். கருணைக்கிணங்காத வன்மையைக்கற்பித்தநான்முகன் ஒருகடவுளல்லனுயினும் வல்லான் ஆதலால் அதனையும் கற்பித்தான் என்றதற்கு "கருணைக்கிணங்காத வன்மையையும் நான்முகன் கற்பிக்க வொருகடவுளோ, வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும் பெருவழக்குக் கிழுக்குமுண்டோ" என்றார்.

4 என்பெலா நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுட
னீளகமன தழலின்மெழுகாய்
இடையறு திருகவரு மழைபோ லிரங்கியே
இருவிழிக ணீரிறைப்ப
அன்பினுன் மூர்ச்சித்த வன்பருக் கங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்பி லாதவெனை
ஆர்க்காக வடிமைகொண்டாய்
புன்புலான் மயிர்தோ னரம்பென்பு மொய்த்திடு
புலைக்குடிலி லுருவருப்புப்
பொய்யல்ல வேயிதனை மெய்யென்று நம்பியென்
புந்திசெலு மோபாழிலே

துன்பமா யலையவோ வுலகநடை யையவொரு
சொப்பனத் தினும்வேண்டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ
சோதியே சுகவாரியே.

இ-ள். என்பெலாம் நெக்கு உடைய-எலும்புகளெல்லாம் நெகிழ்ந்து உடையவும், ரோமம சிலிர்ப்ப-உரோமஞ் சிலிர்க்கவும், உடல் இளக-உடம்புகுழையவும், மனது-மனமானது, இடையறாது-இடையறாமல், அழலின் மெழுகாய் உருக-அக்கினியிலிட்ட மெழுகுபோலுருகவும், இருவிழிகள்-இரண்டுகண்களும், வரும் மழைபோல் இரங்கி நீர் இறைப்ப-வருகின்ற மழையைப்போல இரங்கிநீரைசொரியவும், அன்பிலுல்மூர்சசித்த அன்பருக்கு-அனபிலுல் மூர்சசையடைந்த அன்பர்களுக்கு, அங்ஙனே-அவ்விடத்தே, அமிர்தசஞ்சீவிபோல்வந்து - அமிர்தசஞ்சீவி மருந்துபோல எழுந்தருளி, ஆநந்தமழைபொழிவை-இன்பமழையைப் பொழிவாய், என்னை ஆர்க்காக அடிமைகொண்டாய்-என்னை யாவர்பொருட்டு அடிமைகொண்டனை, புன் புலால் மயிர் தோல் நரம்பு என்புமொய்த்திடி-இழிவாகிய மாமிசம்ரோமம் தோல் நரம்பு எலும்பு ஆகிய இவைகள் நெருங்கியிருக்கிற, புலைக்குடிலில்-புலால்நாற்றம் பொருந்திய குடிசையில், அருவருப்பு-அருவருப்பேயுள்ளது, பொய்யல்லவே-இது பொய்யாகாதே, என்புத்தி-என்புத்தியானது, இதனை மெய்யென்று நம்பி-இதைமெய்யென்று நம்பி, பாழிலே செல்லுமோ-பாழ் வழியிற்செல்லுமோ, துன்பமாய் அலையவோ - (அப்படி செல்வதனால்) துன்பங்கொண்டு திரியவோ, ஐய-ஐயனே, உலகநடை-உலகநடையை, ஒரு சொப்பநத்தினும் வேண்டிலேன்-ஒருகனவினும் விரும்பேன், சுத்த நிர்க்குண. எ-று.

மனது உருக என இயையும். அமிர்தசஞ்சீவி-மரணத்தைப்போக்கி வாழ்விப்பதாகிய சாவாமருந்து. என்பு நெக்குடைதல் முதலிய குணங்களுள்ள அன்பர்கட்கு நீ இரங்குதலியற்கையே, அவை யொன்றுமில்லாத என்னை யார்பொருட்டு அடிமைகொண்டாய் என்பதாம்.

5 வெநநீர் பொழுதெனுடல் காலின்மூட் டைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்
விழியிமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறொன்றை யொருவர்கொல்லின்
அந்நேர மையோவென் முகம்வாடி நிற்பதுவும்
ஐயகின் னருளறியுமே
ஆனலு மெத்தப் பயந்தவ னியானென்னை
யாண்டீ கைவிடாதே

இன்நேர மென்றிலை யுடற்சுமைய தாகவும்
எடுத்தா லிறக்கவென்றே
எங்கெங்கு மொருதீர்வை யாயமுண் டாயினும்
இறைஞ்சுக ராதியான
தொன்னீர்மை யாளாக்கு மானிடம் வகுத்தவருள்
தூணையென்று நம்புகின்றேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இ-ள். என் உடல்-என்னுடம்பானது, வெங்நீர் பொருது-வெங்நீரைப் பொறுக்கமாட்டாது, காலில் முள் தைக்கவும்-காலில் முள்ளானது தைத்துக்கொள்ளவும், வெடிக்கென்று அசைத்து எடுத்தால்-வெடுக்கென்றசைத்துப்பிடுங்குல், (அதற்குச் சகிக்காமல்) அங்நனே-அப்பொழுதே, விழி இமைத்து-கண்ணிமைத்து, தண் அருளே நாடுவேன்-தண்ணிய திருவருளே சிந்திப்பேன், ஒருவர் வேறொன்றை கொல்லின்-ஒருவர் வேறொரு ஜீவனைக்கொன்றால், அந்நேரம்-அப்பொழுது, ஐயோ-அந்தோ, என் முகம் வாடி நிற்பதுவும்-என் முகம்வாடி நான் நிற்கு நிலையையும், நின் அருள்அறியுமே-உன் திருவருளறியுமே, ஐய-ஐயனே, ஆலும்-ஆயினும, யான்மெத்தப்பயந்தவன்-நான் மிகப்பயந்தவன், (ஆதலால்) என்னை ஆண்ட நீ கை விடாதே-என்னை யாட்கொண்ட நீ கைநெகிழ விடாதே, உடல் சுமை-உடற்பாரம், இன்நேரம் என்றில்லை-இன்னகாலத்தில் விழுமென்னும் நியதியில்லை, அது ஆகவும்-அது அங்நனமாகவும், எடுத்தால் இறக்க என்றே-உடலெடுத்தால் இறக்க என்றே, எங்கெங்கும்-எவ்விடத்தும், ஒரு தீர்வை ஆயம் உண்டு-ஒரு தீர்ப்பும் ஆயமும் உண்டு, ஆயினும்-ஆலும், இறைஞ்சுவணங்காநின்ற, சுகர் ஆதி ஆன-சுகர் முதலான, தொல் நீர்மை யாளர்க்குபழமையாகிய குணவான்களுக்கு, மாநுடம் வகுத்த அருள்-மநுஷ்ய சரீரத்தைவகுத்த திருவருளே, தூணையென்று நம்புகின்றேன்-சஹாயமென்று நம்புகிறேன், சுத்தநிர்க்குணமான. எ-று.

தன்னே வருத்திடின் வருந்துவது உயிருக்கியற்கையாயிருக்க, இவர், "வேறொன்றை யொருவர்கொல்லின் அந்நேர மையோவென் முகம்வாடி நிற்பதுவும்" என்றார், இது இவரதுபேரருளுடைமையைவிளக்காநின்றது. சுகர் முதலாமேனோர்க்குத நீர்க்காயுள் வகுத்ததுபோல் தமக்கும் வகுப்பித்துக்கொள்ளவேண்டி, சுகராதியான 'தொன்னீர்மையாளர்க்கு மானிடம் வகுத்தவரு ணையென்று நம்புகின்றேன்' என்றார்.

தீர்வை தீர்மானம் ஆயம்-அத்தீர்மானத்தின்படி உடலெக்கொடுத்த லாகிய கடன்மை. தீர்வையாகிய ஆயம் என்றுரைப்பினு மமையும்.

6 பற்றுவன வற்றிடு கிராசையென் றொருபூமி
பற்றிப்பிடிக்கு மியோகப்
பாங்கிற் பிராணலய மென்னுமொரு பூமியிவை
பற்றின்மன மறுமென்னவே
கற்றையஞ் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்கவந்த கனிபோல்
கண்டதிங் நெறியெனத் திருவுளக் கனிவினொடு
கனிவாய் திறந்துமொன்றைப்
பெற்றவனு மல்லேன் பெறுதவனு மல்லேன்
பெருக்கத் தவித்துளறியே
பெண்ணீர்மை யென்னவிரு கண்ணீ ரிறைத்துநான்
பேய்போ லிருக்கவுலகஞ்
சுற்றிநகை செய்யவே யுலையவிட் டாயெனிற்
சொல்லலினி வாயுமுண்டோ
சுத்தநிர்க் குணபான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இ-ள். பற்றுவன-ஐம்பொறிகளாற் பற்றப்படுகிற விடயங்கள் யாவும், அற்றிடும்-அற்றொழிகைக்குக் காரணமாகிய, கிராசையென்று-அவாவின் மையென்று சொல்லப்பட்டு, ஒரு பூமி-ஒரு பூமியுண்டு, பற்றிப்பிடிக்கும்-(பொறிகளே விடயங்களிற் செல்லாது தடைப்படுத்த மனம் வசப்படுதற்கு அதற்குநட்பாகிய பிராணவாயுவைத்) தொடர்ந்துபிடித்து நிறுத்துகின்ற, யோகபாங்கின்-யோகாப்பியாசத்தாற் கைவருகின்ற, பிராணலயம் என்னும்-வாயு நிக்ரஹம் என்கிற, ஒருபூமி-ஒருபூமியுண்டு, இவைபற்றின்-இவற்றை ஆதாரமாகப் பிடித்தால். மனம் அறும் என்ன-மனம்நிறகுமென்று, கற்றை அம்சடை - திரட்சியாகிய அழகிய சடையையுடைய, மௌனி-மௌனகுரு, தானே-தானேகவே, கனிந்தகனி-முதிர்ந்தகாயை, கனிவிக்க-பழுப்பிக்க, வந்தகனிபோல்-உண்டாகியபழம்போல, (ஸஜாதியஞானவந்து) கண்டது-கண்கூடாகக் கண்டது, இதெறி என-இந்த மார்க்கமென்று, திருவுளக் கனிவினொடு - மனவிரக்கத்துடன், கனிவாய் திறந்தும்-கனிவாய் திறந்தாயினும், ஒன்றை ஒருமொழியை, பெற்றவனும் அல்லேன்-சொல்லப்பெற்றேனுமல்லேன், பெறுதவனும் அல்லேன்-பெறுதேனு மல்லேன், பெருக்கத்தவித்து உளறி-மிகவும் இளைத்தரற்றி, பெண்ணீர்மை என்ன - பெண்மைக்குணம் போல, இருகண்ணீர் இறைத்து - இரண்டு

கண்களினின்றும் நீரைச்சிந்தி, நான் பேய்போல் இருக்க-நான்பேய்போல அலங்கோலமாயிருக்க,(அந்த நிலையைக்கண்டு)உலகம்-உலகமானது, சுற்றி நகைசெய்ய - சூழ்ந்து நகைசெய்யும்படி, உலையவிட்டாய் என்னில்-அலைய விட்டனையாயின், இனிசொல்ல வாயும உண்டோ-இனிச சொல்லுதற்கு (எனக்கு) வாயுமுளதோ. சுத்தநிர்க்குணமான. எ-று.

கனி-வாழைக்கனி. அது ஒருகுலையில் தன்னினமாய் மூற்றிநின்ற காய்களைக் கனிவித்தற்கு ஒன்று முந்திக் கனிவதுபோல, மௌனகுரு வானவர், தம்மினமாய்ப் பக்குவப்பட்டுநின்ற என்னை யளித்தற்கு மானி டச்சட்டைசாததி யெழுந்தருளினரென்பதாம். நிராசையும் வாயுநிரோ தமும் மன நாசத்துக்குக் காரணமென்று இதனுற் கூறப்பட்டது.

7 அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான
அறிவேயெ னறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடிநாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யமே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னுலுமூனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுங்
கரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இ-ள். அரும்பொன்னே-அருமையாகிய சுவர்ணமே, மணியே-மாணிக்கமே, என் அன்பே-என் அன்புருவமே, என் அன்பு ஆன அறிவே-என் அன்பின்கண் உண்டான அறிவே, என் அறிவில்லூறும் ஆனந்தவெள்ள மே-என் அறிவினிடத்துச சுரக்கின்ற ஆனந்தப் பெருகலே, என்று என்று பாடினேன்-என்று பலகாற் சொல்லிப் பாடினேன், ஆடினேன்-கூத்தாடினேன், நாடி நாடி-தேடித்தேடி, விரும்பி - அபேட்சித்து, கூவினேன்-அழைத்தேனை, உலறினேன-(நீ வராமையால்) சினந்தேன், அலறினேன்-(அகோபமமாறி) வாய்விட்டரற்றினேன், மெய்சிலிர்த்து-உடல்சிலிர்த்து, இருகைகூப்பி-இரண்டு கைகளைக் குவித்து, விண்மாரியென-மேகத்தில் நின்றும் வீழ்கிற மழையைப்போல, என் இரு கண்மாரிபொழிய-என்

இரண்டு கண்கள் வருஷத்தைப் பொழியா நிற்க, யான் வேசற்று அயர்ந் தேன்-நான் மனம்நொந்து வாடினேன், இரும்புநேயர்-இரும்புக்குச்சமான மான, நெஞ்சகம்-(கடின) மனத்தையுடைய, கள்வன் ஆனலும்-சோரனு யினும், உனை இடைவிட்டு நின்றது உண்டோ - உன்னை மறந்திருந்தது உண்டோ, நீ என்று - நீ எப்பொழுது (இருந்தாய்), அன்று நான் - அன்று நானும் இருந்தேன், (ஆதலால் நான்) உன் அடிமை அல்லவோ-நான் உன் தொண்டன் அல்லவோ, யாதேனும் அறியா யாதொரு நற்காரியத்தையும் அறியாத, வெறும் தூரும்பனேன் என்னினும் - நிஷ்பிரயோசனமான தூரும்பை ஒத்தவனுயினும், கைவிடுதல் என்னைக் கைவிட்டுவிடுதல், நீதி யோ-உனக்கு நியாயமாமோ, தொண்டரொடு கூட்டு - உன்னடியாரோடு சேர்த்துவிடு, சுத்தகிர்க். எ-று.

கிடைத்தலருமையும் இருமையின்பம் பயத்தற் சிறப்பும் நோக்கி, அரும்பொன்னே என்றார். பொன்னுக்கு மணிக்கும் பொருத்தமுண்மை யின் பொன்னே மணியே என அடித்துக் கூறப்பட்டது. வஸ்துவைப் போல ஆன்மாவும் நித்தியம் என்பவாகையால், 'என்று நீயன்று நான் உன் னடிமையல்லவோ' என்றார். பொன் இருமையின்பம் பயக்குமென்பதை, "முனிவரு மன்னரு முன்னுவபொன்னுன் முடியும்" எனவும், பொன் னுக்கு மணிக்கும் பொருத்த முண்மையை, "பொன்னிற வல்குலுக்காமேர் மணிநிறப் பூந்தழையே" எனவும் கூறிய திருவாதவூரடிகள் திருவாக்கு முணர்க. ஈண்டுக்கூறிய பொன்முதலியன ஒன்றினொன்றுயர்பொருள்கள். பிறிதின்கிழமைப் பொருளினும் தற்கிழமைப்பொருள் சிறந்தமையால், பொன்மணிகளாகிய பிறிதின்கிழமைப் பொருள்களே முற்கூறி, அன்பு முதலிய தற்கிழமைப் பொருள்களைப் பிற்கூறினர். இரும்பினும் நெஞ்சு வலிதென்பது தோன்ற, இரும்பு என்பதை எழுவாயாகக் கொண்டுரைப்பி னுமமைம். அது "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டு கொண்ட செவ்வரை மேனியன்" எனவும், "கல்லை மென்கனியாக்கும விசையைகொண் டென்னைநின் கழற்கன்ப னாக்கினாய்" எனவும், திருகேதா வையாரினும் திருவாசகத்தினுமம் கூறப்படுதலானு முணர்க. என்றுநீயன்று நான் என்பதனை 'எஞ்ஞான்றுனீ யஞ்ஞான்றியாமே' எனப் பிறருங் கூறுவதனையு மறிக.

8 பாராதி யண்டங்க ளத்தனையும வைக்கின்ற
பரவெளியி னுண்மைகாட்டிப
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றேய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிஷ்டையெனவே
சகசநிலை காட்டின் சுகாதீத நிலையை
தனைக்காட்ட நாள்செலுமோ

காராத வெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றி மழைபொழிதல்போற்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கம்மியா நந்தவெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இ-ள். பார் ஆதி அண்டங்கள் அத்தனையும் - நிலவுலகம் முதலாகிய அண்டங்கள் எல்லாவற்றையும், வைகுகின்ற எழுதிவைத்தற்குரிய, பரவெளியின் உண்மைகாட்டி-பரமாகாயத்தின் உண்மையைக்காட்டி, பற்றும்-அதைத் தொடர்கின்ற, மனவெளிகாட்டி-மன ஆகாயத்தைக் காட்டி, மன வெளியினில் தோய்ந்த-மன ஆகாயத்தில் பதிந்த, பாவியேன் பரிசுகாட்டி-பாவியேனது தன்மையைக்காட்டி, தாராளமாய்நிற்க - தாராளமாய் நிலைத்திருக்க, நிசசிந்தைகாட்டி-மனம் இறத்தலையும் காட்டி, சதாகால திவ்டை என்ன-சதாகால திவ்டை யென்று, சகசநிலைகாட்டினே - சகசநிலையையும் காட்டியருளினும், சுகாதீத நிலயம் தனைக்காட்ட ஆனந்தாதீதமாகிய நிலையைக்காட்டியருற்கு, நாள் செல்லுமோ-காலஞ் செல்லுமோ, எண் அரும்-எண்ணுதற்கரிய, அனந்த கோடிகள்-முடிவற்ற கோடிகளாகிய, கார்-மேகங்கள், ஆர நின்று - நிறைந்து நின்று, கால் ஊன்றி மழைபொழிதல்போல்-காலூன்றி மழையைச சொரிதல்போல, கால் வீசி-காற்றுவீசி, மின்னி-மின்னலசெய்து, படர்ந்து-பரவி, பரவெளி எலாம்கம்மி-பரமாகாசமெங்கும் மூடிக்கொண்டு - ஆனந்த வெள்ளம் - ஆனந்தப்பெருக்கை, சோராது பொழியவே-இடையறாது பொழிதற்காக, கருணையின் முழங்கி - கருணையோடு சத்திதது, தொண்டரை-அடியார்களை, கூவும் - அழைக்கின்ற, முகிலே-மேகமே, சுததநிர்க். எ-று.

கால் வீசி என்பதற்கு காலக்ள விரித்து என்றலுமாம். 'பாராதியண்டங்களத்தனையும் வைக்கின்ற பரவெளி' என்றது, "உலகமெனு மோவியங்க டிகழ்த்து மொருபடமாகி" என்றத்தைப்பற்ற. சுகாதீத நிலயம்-மேலானசுகமுறைக்குமிடம்.

9 பேதித்த சமயமோ வொன்றுசொன படியொன்று
பேசாது துறவாகியே
பேசாத பெரியோர்க ணிருவிகற் பத்திலுற்
பேசார்கள் பரமகுருவாய்ப்

போதிக்கு முக்கணிறை நேர்மையாய்க் கைக்கொண்டு
போதிப்ப தாச்சறிவிலே
போக்குவர வறவின்ப நீக்கமற வசனமாய்
போதிப்ப தெவரையனே
சாதித்த சாதனமு மியோகியர்க ணமதென்று
சங்கிப்ப ராதலாலே
தன்னிலே தானு யயர்ந்துவிடு வோமெனத்
தனியிருந் திடினங்ஙனே
சோதிக்க மனமாயை தனையேவி னுலடிமை
சுகமாவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

இ - ள். பேதித்த சமயமோ - ஒன்றற்கொன்று வேறுபட்ட சமய நூல்களோ, ஒன்றுசொன்னபடி ஒன்று பேசாது - ஒன்று சொன்னபடி ஒன்று சொல்லாது, (ஆகையால்) துறவாகி-துறவடைந்து, பேசாத பெரி யோர்கள்-மௌனநிலையிலுள்ள மேலோர்கள், நிருவிகற்பதநிஞல் பேசார் கள்-நிருவிகற்ப சமாதி யநுபவதநிஞற் பேசாதமைந்திருப்பார்கள், போதி க்கும் முக்கண் இறை-போதித்தற்குரிய மூன்று கண்களையுடைய இறை வன், பரம குரு ஆய் - பரமகுருவாகிவந்து, நேர்மை ஆகைக்கொண்டு - செவ்வனே யென்னைத் தன் வயப்படுத்தி, அறிவில் போதிப்பது ஆசை - சின்மூத்திரையாற் போதித்தற் குரியதாயிற்று, போக்கு வரவு அற - போதலும் வருதலு மில்லையாகவும், இன்பம் நீக்கம் அற - ஆனந்தம் இடை யறு தண்டாகவும், எவர்-யாவர், வசனம் ஆ போதிப்பது - சொல்லாகப் போதித்தற் குரியதோ, ஐயனே-கடவுளே, சாதித்த சாதனமும்-அப்பியா சித்த அப்பியாசங்களையும், யோகியர்கள் - யோகப்பயிற்சியுள்ளோர், நமது என்று சங்கிப்பர் - (இசசாதனம்) எம்மதென்று ஆசேபிப்பர்கள், ஆத லாலே-ஆகையாலே, தன்னிலே தானுய் அயர்ந்துவிடுவோம என - தன் னிற் ரூனு யயர்ந்தடங்குவோமென்று, தனி இருந்திடின - தனித்திருந் தால், அங்ஙனே - அவ்விடத்திலே, சோதிக்க - எனது மன நிலையைச சோதனை செயயுமபொருட்டு, மன மாயைதனை எவிலைட்டால் - மனத்தின் கண் உண்டாவதாகிய மாயையை எவிவிட்டால், அடிமை - உண்ணடிமையாகிய நான், சுகம்ஆவது-ஆனந்த ரூபமாவது, எப்படி-எவவாறு, சொலாய் - நீயே சொல்வாயாக. எ-று.

சமய நூல்களெல்லாம், எககாலத்தும ஒன்றற்கொன்று தவிரா விரோதமுடையனவாதலால், பேதித்தசமயம்எனவும், அங்ஙனமாக ஒன்று சொன்னபடி மற்ரொன்று சொல்லாதென்பது, நிண்ணமாதலால், ஒன்று

சொன்னபடி ஒன்றுபேசாது எனவும் கூறினர் 'தவிராவிரோத சமய நூல்' என்றார் பிறரும். போக்குவரவு.சாதல் பிறப்புக்கள்.

இ-ள் அண்டமுடி தன்னிலோ - அண்டகடாகத்தின் முகட்டிலோ பகிரண்ட மதனிலோ-வெளியண்டத்திலோ, அலரிமண்டல நடுவிலோ-சூரியமண்டலத்தின் நடுவிலோ, அனல் நடுவிலோ - அக்நிமண்டலத்தின் நடுவிலோ, அமிர்தமதி நடுவிலோ-அமிர்தத்தையுடைய சந்த்ரமண்டலத்தின் நடுவிலோ, அன்பர்-அன்பர்கள், அகம் உருகி - மனமுருகி, மலர்கள் தூவி-மலர்களைசொரிந்து, தெண்டமிட வரும்-நமஸ்கரிக்க வெழுந்தருளிய, மூர்த்தி நிலையிலோ-அர்சசை நிலையிலோ, திக்குத்திகந்தத்திலோ - திக்கினும் திக்கின்முடிவிலுமோ, வெளியிலோ-பரவெளியிலோ, திகழ் - விளங்காநின்ற, விந்து நாத நிலைதன்னிலோ-விந்து நாதங்களின் நிலையிலோ, வேதாந்த சித்தாந்த நிலைதன்னிலோ-வேதாந்த சித்தாந்த நிலைகளிலோ, கண்டபல பொருளிலோ-காணப்பட்ட பல பொருள்களிலோ, காணுத நிலையெனக்கண்ட-காணப்படாத நிலையெனத் துணியப்பட்ட, சூனிய மதனிலோ-பாழிலோ, காலம் ஒரு மூன்றிலோ-முக்காலத்திலோ, பிறவிநிலை தன்னிலோ ஜன்மநிலையிலோ, கருவிகரணங்கள் ஓய்ந்த-கருவி கரணங்கள் ஒடுங்கப்பெற்ற, தொண்டர்களிடத்திலோ-அடியாரகளிடத்திலோ, நீ வீற்றிருப்பது - நீ வீற்றிருந்தருள்வது, தொழும்பனேற்கு-உன்தொண்டனுகிய எனக்கு, உளவு புகலாய்-யதார்த்தத்தைச சொல்வாயாக. சுத்தநிர்க். எ-று.

10 அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ
அலரிமண் டலநடுவிலோ
அனலடுவி லோவமிர்த மதிநடுவி லோவன்பர்
அகமுருகி மலர்கடுவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோவெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ
கண்டபல பொருளிலோ காணுத நிலையெனக்
கண்டசூ னியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்களோய்ந்த
தொண்டர்க ளிடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற் குளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ
சோதியே சுகவாரியே.

மண்டலம்-அனலுக்கும் மதிக்கும் கூட்டியுரைக்கப்பட்டது. அர்சனைகல் மரம் மண் முதலியவற்றுற் செய்யப்பட்ட விக்ரஹங்கள். அண்ட முடி முதலிய பலவிடங்களில் நீ வீற்றிருப்பது எவ்விடத்திலோ, அதனை நீயே யருளிசசெயல்வேண்டும் என்பதாம்

11 எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவு
மென்னிதய மெனைவாட்டுதே
ஏதென்று சொல்லுவேன் முன்னெடுபின் மலைவறவு
மிறறைவரை யாதுபெற்றேன்
பந்தமா னதிலிட்ட மெழுகாகு யுள்ளம்
பதைத்துப் பதைத்துருகவோ
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான
தெயவநீ யன்றியுளதோ
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாய்த்
திரையாழி யூடுசெலுமோ
சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே
துன்பத்தி லாழ்த்தன்முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

இ-ள். கருணைக்குரித்து ஆகும் நாள்-உன் கருணைக்கிலக்காதற் குரிய நாள், எந்தநாள் எனவும்-எந்தநாளோ வெனவும், என் இதயம் என்னை வாட்டுதே-என் ஹ்ருதயமான என்னை வாட்டா நின்றதே, ஏதென்று சொல்லுவேன்- யாதென்று சொல்லமாட்டுவேன், முன்னெடு பின் மலைவு அறவும்-முன்னுக்கும் பின்னுக்கும் விரோதம் நேரிடாதிருக்கவும், இற்றைவரை யாது பெற்றேன்-இந்நாளளவும எந்த நிலையையடைந்தேன், பந்தமானதில் இட்ட - பந்தத்தில்வைத்த, மெழுகு ஆகி - மெழுகுபோலுருகி, உள்ளம் பதைத்து பதைத்து உருகவோ-மனம் பதைதுதுப் பதைத்துருகினலோ, பரமசுகம் ஆவது - பேராநந்தமுண்டாவது, (அன்றி) பொறுப்பரியதுயரமாய் பொறுத்தற்கரிய துன்பமுற்று, பலகாலு மூர்ச்சிப்பதோ - பலதரமும் மூர்சசித்துக் கிடப்பதோ (அந்த பரமசுகத்துக்கு வேறது), சிந்தையான தும் அறிவை-என் கருத்தையு மறியாய, என் அறிவில் அறிவான தெய்வம்-என்னறிவி லறிவாயிருக்கிற தெய்வம், நீ அன்றி உள்ளதோ-நீயல்லது வேறெண்ணுண்டோ, தேகம் நிலை அல்லவே-சரீரம் ஸ்திரமல்லவே, உடைகப்பல் - உடைந்த கப்பலானது, கப்பல் ஆய் - நல்ல கப்பலாகி, திரை -

அலகளையுடைய, ஆழி யூடு செலுமோ-கடலில் நடக்குமோ, சொத்தமாய் ஆண்டநீ - சுதந்தரமாகவந்து என்னை யாண்டருளின நீ, அறியார்கள் போலவே-தெரியாதவர்கள் போலவே, துன்பத்தில் ஆழ்த்தல் முறையோ-துக்கசாகரத்தில் அமிழ்த்துதல் உனக்கு முறைமையாகுமோ, சுத்தநிர்க் குணமான. எ-று.

நெருப்பினும் பந்தம் உஷ்ணத்திற் சிறந்ததாகையால் "பந்தமா னதி லிட்ட மெழுகாகி" என்றார். சர்வஜ்ஞனை நீ யிப்படி செய்தல் தகுதியன் றென்பார் அறியார்கள்போலவே துன்பத்தி லாழ்த்தல் முறையோ என்றார்.

12 எந்நாளு முடலிலே யுயிரா முனைப்போ
லிருக்கவிலை யோமனதெனும்
இயானுமென் னட்பாம் பிராணனு மெமைச்சடம
தென்றுசோச் சித்தென்றுமே
அந்நாளி லெவனே பிரித்தா னதைக்கேட்ட
வன்றுமுத லின்றுவரையும்
அநியாய மாயெமை யடைக்கிக் குறுக்கே
யடர்ந்தரசு பண்ணியெங்கண்
முன்னுக நீயென்ன கோட்டைகொண் டாயென்று
மூடமன மிகவுமேச
மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகண்
முறையையோ பதினுபிரஞ்
சொன்னலு நின்னரு ளிரங்கவிலை யேயினிச்
சுகம்வருவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

இ-ள். எந்நாளும் - எக்காலத்திலும், உடலிலே உயிர் ஆம் உனைப் போல் - உடம்பினுள் உயிராயிருக்கிற உன்னைப்போல, மனம் என்னும் யானும் - மனமென்கிற நானும், என் நட்பு ஆம் பிராணனும் - என் நண்ப னாகிய பிராணனும், இருக்கவிலையோ - சரீரத்திலிருக்கவில்லையோ, (அப் படியிருக்க) எம்மை சடமதென்று - எங்களைச சடமென்றும், உன்னைச் சித்து என்றும் - உன்னைச சித்தென்றும், அந்நாளில் எவனே பிரித்தான்-அக்காலத்தில் எவனே வகுத்துவைத்தான், அதைக்கேட்ட அன்றுமுதல் இன்றுவரையும் - அதைக் கேள்விப்பட்ட அன்றுமுதல் இன்றுவரைக்கும், அநியாயமாய் எமை அடக்கி - அநியாயமா யெங்களை யொடக்கி, குறுக்கே அடர்ந்து அரசுபண்ணி - குறுக்கேவந்து நெருங்கி அரசாட்சிசெய்து, எம் கண் முன்னுக - எங்கள் கண்ணுக்கெதிரில், நீ என்ன கோட்டைகொண்

டாய் என்று-நீ எந்தக் கோட்டையைப் பிடித்தாயென்று, மூட மணம்மிக வும் எச-மூடமனமானது மிகவும் வைதலால், மூண்டு எரியும் அனல் இட்ட மெழுகு ஆய்-மூண்டெரியாநின்ற நெருப்பிலிட்ட மெழுகுபோல வருகி, உள்ளம்கருகல்முறை வாயோ-நான் உள்ளுருக்குன்னே புழுங்குதல்முறைமை யாமோ, பதினாயிரம் சொன்னாலும் பரிபூரணம் விண்ணப்பஞ் செய்து கொண்டாலும், நின் அருள் நோக்க இலேயே-உன் திருவருளினோக்கமிலையே, இனி சுகம்வருவது எப்படி-இனியெனக்கு இன்பமுண்டாவது எப்படி, சொல்லாய்-கூறாய். சுத்தசிற்சுகுணமான. எ-று.

சித்து-அறிவு. மனமானது என்னையெதிரிட்டு நின்று, ஓ ஆன்மாவே, எக்காலத்தும் உடலிலே உயிராயிருக்கின்ற உன்னைப்போல, மனம் என் கிற நானும் எனக்கு நட்பாகிய பிராணவாயுவும் இருக்கவில்லையோ, அப் படியிருக்க, முற்காலத்தில், எங்களோசடப்பொருள்களென்றும், உன்னைச் சித்துப்பொருளென்றும், எவனோ பிரித்துவிட்டான், அதைக்கேட்ட நீ, அன்றுமுதல் இன்றளவும் எங்களை யடக்கி யாண்டதனால் எந்தக்கோட் டையைக கைப்பற்றினை யென்று வையக் கேட்டுப் பொருமல் நான் உள் ளேதானே புழுங்கிக்கொண்டிருத்தல் முறைமையாகுமோ என்று ஆன்மா கடவுளைப் பிரார்த்தித்ததாக இசசெய்யுள் கூறப்பட்டது. இங்கு உயிர் என்றது ஆன்மாவை.

எங்குநிறைகின்றபொருள்.

1 அவனன்றி யோரணுவு மசையா தெதனும்பெரிய
வாப்தர்மொழி யொன்றுகண்டால்
அறிவாவ தேதுநில வறியாமை யேதினைவ
றிந்தார்க ளறியார்களார்
மௌனமொ டிருந்ததா ரென்போ ரடம்பலாம்
வாயாய்ப் பிதற்றுவரரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும்
வன்மையோ டிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தனிய மெவ்விடம்
பூதமே ஞங்களிடம்
பொய்மையித மதிரமேல் வருகன்மம் நிலையொடு
பொருந்துபொரு ளையமெவ்விடம்
நெறிய வெவர்பிரிவு செவ்வுறவு செவர்பகைஞர்
ஈதுமுதல் யன்றியுண்டோ
பிரண்டினிலு மூயிரிலுக் குயிராகி
யங்குநிறை கின்றபொருளே.

இ-ள். அவன் அன்றி-அந்தக் கடவுளைப்பித்தாலன்றி, ஓரணுவும் அசையாது என்னும்-ஓர் அணுவேனும் அசையாதென்று சொல்லுகிற, பெரிய ஆப்தர்மொழி ஒன்று கண்டால்-பெரியோர்களாகிய ஆப்தரது வாக்ய மொன்றன் சாரத்தை யாராய்ந்து பார்த்தால், அறிவு ஆவது எது. அறிவாவது எது, சில அறியாமை எது-சில அறியாமையாவது யாது, இவை-இவைகளே, அறிந்தார்கள் அறிபார்கள் யார்-அறிந்தவரும் அறியாதவரும் யாவர், மௌனமொடு இருந்தறி வூர்-மௌனநிலையோ டிருந்தவர் யாவர், என்போல்-என்னைப்போல், உடமபெலாம் வாய் ஆய் - சரீரமெல்லாம் வாயாகக்கொண்டு, மிதற்றுமவர் ஆர்-பிதற்றுவோர் யாவர், மனது எனவும் ஒருமாயை எங்கேயிருந்து வரும்-மனமென்னும் ஒருமாயையானது எவ்விடத்தினின்று உண்டாகும், வன்மையொடு இரக்கம் எங்கே-கடினத்வத்துடன் ம்ருதுத்வமெங்கே, புவனம் படைப்பது என்-லோகங்களைப் படைப்பதாவது யாது, கர்த்தவியம் எவ்விடம்-கர்த்தவ்யம் எவ்விடத்தினின் றுண்டாவது, பூதபேதங்கள் எவ்விடம்-பூதவேறுபாடுகள் எவ்விடத்திலுண்டாவது, பொய் மெய்-அசத்யாசத்யங்களும், இதம் அகிதம்-அநுகூல ப்ரதிகூலங்களும், மேல் மேலும், வரும்-உளவாகின்ற, நன்மைதீமையொடு-நன்மைதீமைகளுடன், பொறைபொருமையும் எவ்விடம்-பொறுமை பொருமைகளும் எவ்விடத்தி லுளவாவன, எவர் சிறியவர்-எவர் சிறியார், எவர் பெரியவர்-எவர் பெரியார், எவர் உறவர்-எவர் உறவினர், எவர் பகைஞர் எவர் பகைவர், யாதும் இன்னையன்றி உண்டோ-எல்லாம் உன்னையன்றி யுண்டாகுமோ, இகபரம் இரண்டினிலும்-இம்மை மறுமை என்னும் இரண்டிடத்தும், உயிரினுக்கு உயிர் ஆகி-உயிர்க்குயிராகி, எங்கும்நிறைகின்றபொருளே-எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற வஸ்துவே. எ-று.

ஆப்தர்-கடவுளருட்குரியர். கர்த்தவியம் - செய்கை. "உள்ளத்தானின் றுசரி யளவுகெஞ்சாய்" எனவும், "உடம்பெலாங் கண்ணுய்" எனவும் திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளினமையால் இவரும், உடம்பெலாம்வாயாய் என்றார். உயிர்க்குயிராகி என்றது ஆத்மாவுக் கந்தராத்மாவா யிருத்தலே. "அவனன்றி யோரணுவு மசையாது" என்று பெரியோர் வாக்கியம் உண்மையால் யாவும் அவன்செயலே என்பதுகருத்து.

2 அன்னே யனேயெனுஞ் சிலசமய நின்னேயே
ஐயாவே பாவென்னவே
அலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்றுமிலவாய்ப்
பின்னேது மறியாம லென்றைவிட் டொன்னை
பிதற்றிடுஞ் சிலசமயமேல்
பேசரிய வொளியென்றும் வெளியென்று ந
பிறவுமே நிலயமென்றும்

தன்னே நிலாததோ ரணுவென்று மூவிதத்
தன்மையாங் காலமென்றும்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
சதாஞான வாநந்தமாய்
என்னேயெ னேகருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ
இகபர பிரண்டினிலு முயிரினுக் குயிராகி
பெங்குதிறை கின்றபொருளே.

இ-ள். சில சமயம்-சிலசமயங்கள், அன்னே அன்னேயென்னும்-தாயே தாயே என்னும், நின்னேயே - உன்னேயே, சில சமயம் - சிலசமயங்கள், ஐயா ஐயா என்ன -. தந்தையே தந்தையே என்று, அலறிடும்-அலறு நிற்கும், அல்லாது - அவ்வாறன்றி, சில சமயம் - சிலசமயங்கள், பேய் போல அலறி-பிசாசம்போலக் கதறி, ஒன்றும் இலவாய்-சிறிதும் பயனற் றனவாய், பின் ஏதும் அறியாமல்-பின் விளேவதொன்றையு முணராமல், ஒன்றைவிட்டு ஒன்றைப்பிதற்றிடும்-ஒன்றைவிட்டுஒன்றைப்பிதற்றுநிற்கும், சிலசமயம்-சிலசமயங்கள், மேல்-மேலும், பேசஅரியஒளி என்றும்-சொல்லு தற்கரிய வொளியென்றும், வெளி என்றும்-ஆகாயமென்றும், நாதாதி பிற வுமே நிலயம் என்றும்-நாதம் முதலான பிறவற்றையே நிலேகளென்றும், தன் நேர் இலாதது ஓர் அணு என்றும் - (ருட்பத்தால்) தனக்குச சமாக மில்லாததாகிய ஒரு அணுவென்றும், மூவிந்த தன்மை ஆம் காலம் என் றும்-மூககாலமென்றும், சாற்றிடும்-சொல்லாநிறகும், இவை ஆகி-இவ்வக ளாகி, வேறது ஆய் - (இவற்றின்) வேறாகி, சதாஞான ஆனந்தமாய்-சதா ஞான வின்பமாகி, கருணைவிளையாட்டு இருந்தவாறு-திருவருள் விளேயா டல் இருந்தவண்ணம், எம்மனேர் புகல எளிதோ-எம்மையொத்தவர் சொல்லஎளிதாகுமோ, இகபரபிரண்டினிலும். எ-று.

சமயகோடிகள் இவ்வாறு புலம்பாநிறகும், உன்திருவருள்விளேயாடல் இருந்தவண்ணம் எங்களோ யொத்தவாசொலல எளிதாமோ என்பது கருத்து.

3 வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலேகளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா வெடித்துரைக்கும்

ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபண்ணு ஞானமாகும
ஊகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
தும்பரவா திகள்சம்மதம்
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்கலான்
அதுவாத வாலுண்ணு நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம்
ஏதுபா வித்திடினு மதுவாகி வந்தநுப
வெந்தைதீ குறையுமுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குபிரா கி
யெங்குநிறை கின்றபொருளே.

இ-ள். வேதமுடன்-வேதங்களோடு, ஆகமபுராணம் இதிகாசமுதல்-ஆகம புராண இதிகாசம் முதலாக, வேறும் உள்ள கலைகள் எல்லாம்-மற்று முள்ள நூல்கள் யாவும், மிக்காக-மிகுதியாக, அத்துவிதத்துவித மார்க்கத் தையே-அத்வைத த்வைத மார்க்கங்களையே, விரிவு ஆகத்துரைக்கும்-விஸ்தாரமாயெடுத்துச சொல்லா நிற்கும், ஓது அரிய-சொல்லற்கரிய, துவி தமே - த்வைதஞானமே, அத்துவித ஞானத்தை - அத்வைதமுானத்தை, உண்டுபண்ணு ஞானம் ஆகும்-உண்டாக்குகின்ற ஞானமாகும், ஈது-இந்த வார்த்தை, ஊகம்-யுக்தி, அநுபவம்-சுவாநுபவம், வசனம்-சுருதி, (ஆகிய) மூன்றுக்கும் ஒவ்வும்-மூன்றற்கும் ஒத்திருக்கும், (அன்றியும்) உ[illegible] வாதிகள் சம்மதம் ஆதலின்-த்வைதாத்தார்க்கும் சம்மதமாகையால், இன[illegible]க்கு-இனிமேல் எனக்கு, சரியை கிரியாதி-சரியாபாத முதலிய[illegible]களே யமையும், நான் யாதொன்று பாவிக்கலான்-நான் யாதொரு பொருளை[illegible]விக் கவும், அது காலால் - அப்பொருள்மயமே யாய்விடுதலால், உண்மை[illegible]ான் என்று பாவிகின்-உனை நானென்று பாவனைபண்ணினால், அத்[illegible]வித மார்க்கம் உறலாம்-அத்துவித நெறியை யடையலாம், ஈதே, ஏதுபாவி[illegible]டினும்-எப்பொருளாகப பாவித்தாலும், அது ஆகிவந்து - அப்பொருளாகி வந்து, அநுபவம் செய்- அநுபவம் செய்கின்ற, எந்தை-எந்தையாதலால், குறை யும் உண்டோ-உன்னை யடைந்த எனக்கு ஓர் குறைபாடு முளதோ. இகபர மிரண்டினிலு. எ-று.

வேதம் - இருக்குமுதலியன. ஆகமம் - காமிகம் முதலியன. புரா ணம் - மச்சியம் முதலியன. இதிகாசம் - பாரதம், இராமாயணம் என் பன. வேறுமுள கலைகள் - ஸ்மிருதி முதலியன. ஊகம் அநுபவம் வச னம் இம்மூன்றும் சுருதி யுக்தி அநுபவம் என்றிருத்தல் வேண்டியது இவ் விடத்தில் கிடக்கை முறைபிறழ்ந்துகிடக்கின்றது. சுருதி குருசுபாநுபவம்

என்றுஞ் சிலர் கூறலுண்டு. உபயவாதிகள் அத்துவித துவிதமெமியாளர். சரியையாதிகள்-சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. "சித்தின் முயல்வாற் சித்தாருஞ் சடத்தின் முயல்வாற் சடமாகும்" என மேலோர் பணித்தமைபற்றியும், அநுபவம் பற்றியும், யாதொன்று பாவிக்க காணுவதலால் என்றார்.

4 சொல்லா னதிற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டியாட்டித்
தொடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றில்
தொடுக்குந் தொடுத்தழிக்கும்
பொல்லாத வாதனை யெனுஞ்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றியாடும்
புருஷனி லடங்காத பூவைபோற் றானே
புறம்போந்து சஞ்சரிக்கும்
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடும்
காணுது கேட்டவெல்லாம்
கண்டதாக் காட்டியே யணுவாச் சுருக்கிடிங்
கபடநாடக சாலமோ
எல்லாமும் வல்லதிந்த மனமாயை யேனழ்ா
மென்ன லடக்கவ்சமோ
இகபர மிரண்டினிலு முயிரிதுத் துயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

இ-ள். சொல்லானதில்-சொல்லினால், சற்றும் வாராத பிள்ளைபை - சிறிதும் இணங்கி வராத குழந்தையை, (தாயானவள்) தொட்டில்வைத்து ஆட்டி ஆட்டி-தொட்டிலில் வைத்து அசைத்தசைத்து, தொடையினைக் கிள்ளல்போல்-தொடையைக் கிள்ளுதல்போல, ஒன்றில் சங்கற்பம் தொடுக்கும்-ஒன்றில்நினைப்பை யுண்டாக்கும், தொடுத்து அழிக்கும்-உண்டாகியழிக்கும், பொல்லாத வாதனை என்றும் - பொல்லாத வாசனை யென்று சொல்லப்படுகிற, சப்த பூமியிடை போந்து - அஞ்ஞான பூமிகளிலுலாவந்து; தலைசுற்றி யாடும-தலைசுழற்றி யாடாநிற்கும், புருஷனில் அடங்காத பூவைபோல் - கணவனிடத் தடங்கியிராத பெண்போல, தானே புறம் போந்து சஞ்சரிக்கும் - தானே வெளிவந்து சஞ்சரியாநிற்கும், கல்லோடு இரும்புக்குமிக வன்மை காட்டிடும்-கல்லுக்கும் இரும்புக்கும் மிக்கவன்மையைக்காட்டிக்கும், காணுது கேட்ட எல்லாம் - காணுமல் கேட்டவற்றை எல்லாம், கண்டதாக்காட்டி-தான் கண்டதாகக்காட்டி, அணுவாசருக்கிடிம்-அணுவாகசுருக்கிவிடும், கபடநாடக சாலம் எல்லாமும் வல்லது - கபடநாடக ஜாலங்களெல்லாவற்றையுமசெய்ய வல்லதாகிய, இந்த மனமாயை-

இந்த மனமாயையானது, எழை ஆம் என்னுல்-எளியனுகிய என்னுல், அடக்க-வென்றடக்க, வசமோ-வசமாகுமோ, இகபரமிரண்டினிலு. எ-று.

அஞ்ஞான பூமிகளேழாவன - விந்துசாக்கிரம், மேற்சாகிரம், மகாசாக்கிரம், சாக்கிரசொப்பனம், சொப்பனம், சொப்பன சாக்கிரம், சுழுத்தி, என்பன. பூவை உவமையாகுபெயர். இதுமொழியாற் பூவை போல்வாளென்னும் பொருளுள்ளது. பூவை-நாகணவாய்ப்புள். கல் இரும்புகளுக்குக் கடிநத்வம் இயற்கையாகவும், மிக வன்மைகாட்டிடும் என்றூர் அவற்றினும் வலிய தென்றற்கு. மனமாயையானது ஒன்றைப்பற்றுதல் விடுதல் முதலிய எல்லாவற்றையுஞ் செய்ய வல்லதென்பதாம்.

5 கண்ணீர நீர்மல்கி யுள்ளநெக் குருகாத
கள்ளனே னுனுமோ
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரைகாட்டி
அண்ணு பரஞ்சோதி யப்பா வுனக்கடிமை
யானெனவு மேலெழுந்த
அன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை
யகிலமுஞ் சிறிதறியுமேல்
தண்ணரு ணின்னதரு ளறியாத தல்லவே
சற்றேனு மினிதிரங்கிச்
சாசுவத முத்திநிலை யிதென் றுணர்த்தியே
சகசநிலை தந்துவெறுன்
றெண்ணும வுள்ளபடி சுகமா யிருக்கவே
யேழையேற் கருள்செய்கண்டாய்
இகபர மிண்டினிலு மூபிரினுக் குயிராகி
யெங்குநிறை வின்றபொருளே.

இ-ள். கண் ஆரநீர் மல்கி கண்கள் நிறைய நீர் தளும்பி, உள்ளம் நெக்கு உருகாத-மனநெகிழ்ந் தூருகாத, கள்ளனேன் ஆனேனும்-திருடனேனும், கை குவித்து - கைகூப்பி, ஆடியும் பாடியும் - ஆடுதல் பாடுதல்களைச் செய்தும், விடாமல் - இடையறுமல், கண் பனித்தாரை காட்டி - கண்களில் குளிர்ச்சியாகிய நீரொழுக்கை யுண்டாகி, அண்ணு - அண்ணு, பரஞ்சோதி - பரஞ்சோதி, அப்பா - அப்பனே, யான் உனக்கு அடிமையெனவும் - நான் உனக்கு அடிமை யென்றும், மேல் எழுந்த அன்பாகி-அதிகப்பட்ட அன்பையுடையவனுகி, நாடகம் நடித்ததோ குறைவு இல்லை - கூத்தாடினதோ குறைவில்லை, (அதனை) அகிலமும் சிறிது அறியும் எல் - உலகமுஞ் சற்று அறியும் ஆயின், தண் ஆரும் நின்னது அருள் அறியாதது

அல்லவே-சூனிர்சரி பொருந்திய உன் திருவருள் உணராததல்லவே, சற் றேனும்-கொஞ்சமாயினும், இனிது இரங்கி-இனிதாயிரங்கி, சாசுவதமுத்தி நிலை ஈது என்று உணர்த்தி அழியாத முத்தி நிலையிது வென்று தெறி வித்து, சகசநிலை தந்து சகச நிலையைக்கொடுத்து, வேறு ஒன்று எண்ணு மல்-வேறொன்றை நினையாமல், உள்ளபடி-பதார்த்தமாய், சுகமாய் இருக்க-ஆனந்தமாயிருக்கும் வகை, ஏழையேற்கு அருள்செய்-ஏழையாகிய அடியே னுக் கருள்புரிவாய், இகபர மிரண்டினிலு. எ று.

யதார்த்தமாகக் கண்ணீர நீர்மல்கி உள்ளம் நெக்கு உருகாவிடினும் புறத்துக்காயினும் கைகுவித்தாடல் பாடல் முதலியவை செய்தேனன்றே; அதற்காகவாயினும் சுகமாயிருக்க அருள்செய்யவேண்டு மென்றராயிற்று. ஏழையாதலால் யதார்த்தமான அன்பு செய்திலனென்பது பொருள். ஏழை-அறிவிலி.

6 காகமா னவைகோடி கூடிநின் றாலுமொரு
கல்லின்முன் னெதிர்நிற்குமோ
கர்மமா னவைகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப்ர வாகவருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லவோ
தமியனேற் கருட்டாகமோ
சற்றுமிலை யென்பதுவும் வெளியாச்சு வினையெலாம்
சங்கேத மாய்க்கூடியே
தேகமா னதைதமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராம லியோகமார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிஷ் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுதூரநான்
ஏகமாய் நின்னே டிருக்குநா ளெந்தநா
ளிந்நாளின் முற்றுருதோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

இள். கோடி காகமானவை கூடி நின்றாலும்-கோடிகாகங்கள் சேர்ந்து நிரண்டாலும், ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ-ஒரு கல்லுக்கு முன்னே எதிர்த்து நிற்க வல்லவை யாமோ, (ஆகா, அதுபோல) முன்னே கோடி கர்மம் ஆனவை செய்தாலும்-பூர்வத்தில் கோடி தீவினைகளைச செய்திருந் தாலும், (அவை) நின் கருணைப்ரவாக அருளை - உன் கிருபாவெள்ள ரூப மான திருவருளை, தாகமாய் நாடினரை-மோக்ஷ தாஹத்தோடு விரும்பின வர்களை, வாதிக்க வல்லவோ-வருத்த வல்லனவோ. தமியனேற்கு- தனி யேனுக்கு, அருள் தாகம் - அருள்மேல் விருப்பம், சற்றும் இல்லை என்பது

வும்-சிறிதுமில்லையென்னுஞ் செய்தியும், வெளி அசசு-வெளியாய்விட்டது, வினை எல்லாம் சங்கேதமாய் கூடி - வினைகளெல்லாம் கட்டுப்பாடாகத் திரணடுவந்து, தேகமாமலமும் மிகவும் வாட்டுமே - சரீரத்தை மிகவும் வருத்துகின்றதே, துன்பங்கள் சேராமல்-துன்பங்கள்வந்து பொருந்தாமல், யோக மார்க்க சித்தியோ வாவில்லை - யோகவழியே சித்தியோ கை கூடவில்லை, சகச நிஷ்டைக்கும் என் சிந்தைக்கும் பெருந்தூரம் - சகசநிஷ்டைக்கும் என்மனத்துக்கும் பெருந்தூரம், நான்-அடியேன், நின்னோடு ஏகமாய் இருக்கும் நாள் - உன்னோடு கூடிக்கலந்திருக்கு நாள், எந்தநாள் - எந்தக் காலமோ, (அது) இந்தாளில் முற்றுமுடிதோ - இந்தக்காலத்தில் முடிவு பெறுதோ, இகபர மிரண்டினிலு. எ-று.

தாகம் மிகுவிருப்பம். சங்கேதம் குழூஉக்குறி. துன்பங்கள் சேராமல் யோகமார்க்க சித்தி யோவரவில்லை யென்றதனால், துன்பங்களணுகாமைக்குக் காரணம் யோகமார்க்க சித்தி யென்றதாயிற்று. சகசநிஷ்டை - சதா நிஷ்டை. நின்னோடேகமாயிருக்குநாள் என்பதனை "நானு நீயுமாய் நீயு நானுமாய்" என்பதனுனு மறிக.

7 ஒருமைமன தாகியே யல்லலற நின்னருளி
லொருவனென் வந்திருக்கின்
உலகம் பொருததோ மாயா விசித்ரமென
வோயுமோ விடமில்லையோ
அருளுடைய நின்னன்பர் சங்கைசெய் திடுவரோ
வலதுகிர்த் தியகர்த்தராய்
அகிலம் படைத்தெம்மை யாள்கின்ற பேர்சில
ரடாதென்ப ரோவகன்ற
பெருமைபெறு பூரணக் குறையுமோ பூதங்கள்
பேய்க்கோல மாய்நிருண்டை
பேசுமோ வதுதான் பரிபாக காலம்
பிறகுவில்லை யோதொடக்கிலையாம்
திருமைபெறி சடவினை யெரித்தவாய் பேசுமோ
வேதளவு சிறிதுபுகலாய்
இகபர மிரண்டினிலு முரியிரா குயிராகி
யெங்குநிறை நின்றபொருளே.

இள். நான் ஒருவன் - சுயம்ஜ்ஞானமும், அல்லல் அற - துன்பமொழியும்படி, ஒருமை மனது ஆகி - ஒருமைப்பட்ட மனமுடையவனாய், நின் அருளில் வந்திருக்கின் - உன் திருவருள் வெளிக்குள் வந்திருந்தால், (அவ்விருத்தல்) உலகம்பொருததோ - உபர்ந்தோராற் பொறுக்கப்படாததோ, மாயாவிசித்ரம் - மாயாவிசித்ரமானது, என்ன ஓயுமோ - என்ன ஓய்ந்து

போமோ இடம் இல்லையோ, (அதற்கு என்னையன்றி) வேறுஇடமில்லையோ அருள்உடைய நின் அன்பா-உன்திருவருள பெறற உண்.அள்பர்கள்,சங்கை செய்திடுவரோ-ஆசேஷிப்பரோ, அலது-அன்றி, கிர்த்திய கர்த்தராய் முத் தொழிற் கிறைவராகி, அகிலம்படைத்து-உகைத்தைப் படைத்து, எம்மை ஆள்கின்றபேர்சிலர்-எம்மைக் காப்பவராகிய சிலபேர், அடாது என்பரோ-தகா தென்பர்களோ, அகன்றபெருமை பெறு பூரணம் குறையுமோ-விசாலித்த பெருமையைக் கொண்ட உன் பரிபூரண நிலையானது குறைந்து போமோ, பூதங்கள் பேய்க்கோலம் ஆய்-பூதங்கள் பேய் வடிவுகொண்டு, விதண்டை பேசுமோ-விதண்டாவாதம் பேசுமோ, அலது தான் பரிபாக காலம் பிறக்க இல்லையோ-அன்றிப் பரிபக்குவ காலமானது எனக்கு உண்டாகவில்லையோ, தொல்லை ஆம் - பழமையாகிய, இருமைசெறி - இரண்டென்னுமிலக்கத்தைப் பொருந்திய, சடவினை-அறிவில்லாத இருவினைகள், எதிர்த்து வாய்பேசுமோ - எதிரிட்டுவாய் பேசாகிற்குமோ, உளது எது-யதார்த்த மேது, சிறிது புகலாய்-சற்றுக்கூறுவாய், இகபர மிரண்டினிலு. எ-று.

கிர்த்திய கர்த்தர் - பிரமாதிகள். விதண்டை - தர்க்க பேதத்துள் ஒன்று. அது, தருக்க சங்கிரகத்தில், வாதசெற்ப விதண்டைகளும், சலம் சாதிகளும் என்னும் மொழித் தொடராலுணாக. என்னை உன் திருவருளுக் கிலக்காக்கிலை, அடக்குவியாகிய எனனிலையைப்பற்றி உண்ணன்பர் முதலாயினோர் ஆசேஷிப்பார்களோ, யாதுக்கு நீயெங்கள யாண்டருளாதிருக்கின்றனையெர்பது கருத்து

8 நில்லாது தேகமெனு நினையுண்டு தேகநில்லை
நின்றிடவு மெளனியாகி
நேரே யுபாயமென் றருளினையை யோசனிகினை
நின்றுழலு டிக்கவெண்ணல்
கல்லாத மவரோடு வொடுங்கியுப தேசமுறக்
கானவீலை யாகையாலே
கையேற்று ணும்புசிப் பொவ்வாதெ காருறவின்
காட்சியி லிருந்துகொண்டு
வல்லாள ராயியம நியமாதி பேற்கொண்டு
மாதவர்க் கேவல்செய்து
மனதின் படிக்கெலாஞ் சித்திபெறலா நானம்
வாய்க்குமொரு மனுவெனக்கின்

17

இல்லாமை யொன்றினையு மில்லாமை யாக்கவே
யிப்போ திரங்குகண்டாய்
இகபர மிண்டினிலு முயிரினுக குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

இ-ள். தேகம் நில்லாது என்னும் நினைவு உண்டு-சரீரம் நிலைத்திராது என்கிற எண்ணமுண்டு, தேகம் நிலை நின்றிடவும் - (அப்படிப்பட்ட) சரீரம் நிலைத்திருக்கும்படியாகவும், மெனதி யுதி-மௌனகுருவாகிவந்து, நேர் உபாயம் ஒன்று அருளினை-நேரான உபாயமொன்றை யருள்செய்தாய், ஐயோ-அந்தோ, இதனை இவ்வுபாயத்தை, நின்று அநுட்டிக்க என்றால்-நிலை நின்று அநுஷ்டிக்கலாமென்றால், கல்லாத மனமோ ஒடுங்கி உபாதி பெறக்காணவில்லை-கல்வி கல்லாத மனமோ ஒடுங்கி உபாதியை யடையப் பார்க்கவில்லை, ஆகையாலே-ஆதலாலே, கையேற்று உண்ணும் புசிப்பு ஒவ்வாது-கையாலேற்றுண்ணு முணவு ஒத்திராது, எந்நாளும் - எக்காலத்திலும், உன் காட்சியில் இருந்துகொண்டு-உன் சந்நிதியி லிருந்துகொண்டு, வல்லாளராய்-மனோதைரியமுள்ளவர்களாய், இயமநியமாதிமேற்கொண்ட-இயம நியமாதிகளைச செய்யத்தொடங்கின, மாதவர்க்கு - பெரிய தவசிகட்கு, ஏவல் செய்து-பணிவிடைசெய்து, மனதின்படிக்கு எல்லாம்-எண்ணத்தின்படிக்கெல்லாம், சித்திபெறலாம்-சித்தியையடையலாம், ஞானம் வாய்க்கும்-ஞானமும் உண்டாகும், (ஆனால்) ஒரு மனு - ஒரு விண்ணப்பமுண்டு, (கேட்டருள வேண்டும், என்னெனின்) எனக்கு-அடியேனுக்கு, இங்கு-இவ்விடத்தில், இல்லாமை ஒன்றினையும் உன் திருவருள் பெருமையாகிய வறுமையொன்றை மாத்திரம், இல்லாமை யாக்க-வறுமையாக்குதற்காக, இப்போது இரங்கு-இப்பொழுது இரங்கி யருளவேண்டும், இகபர மிரண்டினு. எ-று.

உபாதி-பிரபஞ்சத்தில் வெறுப்பு. இயமநியமாதிகள்-இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண்வகையோகவுறுப்புகள். இவற்றின் விரிவெல்லாம் யோக நூல்களிற்காண்க. ஞானமு வாய்க்கும் ஒருமனு எனக்கு இகபர இல்லாமை ஒன்றினையும் இல்லாமை யாக்க, என்பதற்கு, ஞானமுதித்தற் கேதுவாகிய ஒருமொழி கிடைக்கப் பெருமையாகிய வறுமையைப் போக்குக என உரைக்கினுமாம்

9. மரவுரி யுடுத்துமலை வனநெற் கொறித்துமுதிர்
வனசருகு வாயில்வைத்தால்
வன்பசி தவிர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூலவனலைச்
சிரமள வெழுப்பியு நீரினிடை மூழ்கியுந்
தேசகம தல்லவென்று

சிற்சக வபேகைஷயாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்திஞ நியாம்பாவியேம்
விரவுமறு சுவையினெடு வேண்டுவ புசித்தரையில்
வேண்டுவ வெலாமுடித்து
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறெருரு வருத்தமின்றி
இரவிபக லேழையர்கள் சையோக மாயினே
மெப்படி பிழைப்பதுரையாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

இ-ள். மாவுரி உடித்தும்-மரகார்ச சிரையை யுரித்தும், மலைகளை நெல் கொறுத்தும்-மலைநெல்லையும் வன நெல்லையுங் கொறித்தும், உதிர்வனசரு சுவாயில் வந்தால்-உதிர்வனவாகிய சருகுகள் தாமிருக்கும இடத்தின் மூற் றத்தில்வந்து விழுந்தால், (அவற்றையுண்டு) வன் பசிதவிர்த்தும் - மிக்க பசியை நீக்கியும, அனல் வெயிலாதியால்-அக்கினி வெயில் முதலான வைக ளாலும், மழையால் - மழையாலும், வருத்தியும் - துன்பப்பட்டும், மூல அனலை-மூலாதாரத்திலுள்ள மூலாக்கினை, சிரமளவு எழுப்பியும் - சிரத்தள வாக எழுப்பியும், நீரினிடை மூழ்கியும்-புண்ய தீர்த்த ஸ்நாநம்பண்ணியும், தேகம் நமது அல்ல என்று-சரீரம் நமதன்றென்று நிச்சயித்து, சிற்சக அபேகைஷயாய்-ஞானசுகத்தை யடைய விரும்புமடையவராய், நின் அன் பர்-உன் அன்பர், யோகம் செலுத்திஞர்-யோகத்தை நடத்திவந்தார்கள், யாம் பாவியேம் பாவிகளாகிய நாங்கள், விரவும் அறுசுவையினெடு-கலந்த ஆறு சுவைகளுடன், வேண்டுவ புசித்து-வேண்டி முணவுகளையுண்டு, அரை யில்-இடையில், வேண்டுவ எல்லாம் உடித்து-வேண்டிய ஆடைகளெல்லா வற்றையும் தரித்து, மேடைமாளிகை ஆதி-மேடைமாளிகை முதலியவாகச சொல்லப்பட்ட, வீட்டினிடைவைகி-வீடுகளில் நங்கி, வேறு ஒருவருத்தம் இன்றி-வேறெருரு துன்பமில்லாமல், இரவுபகல்-இரவும் பகலும், ஏழையர் கள்-மாதர்களுடைய, சையோகம் யாயினும்-கலவிசெய்யா நின்றோம, எப் படி பிழைப்பது-எப்படி உய்வது, உரையாய் சொல்வாய், இகபரமிரண்டி னிலு. எ-று.

மாவுரி-தாரிணஞ் செய்தசோை. கொறித்தல்-நெல் முதலியவற்றை ஒவ வொன்ருகப் பல்லினுல் கறித்தல். அறுசுவை-கைப்பு, இனிப்ப, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன. உன்னடியார்கள் ஞாஞானந்தமாகிய பேரின்பத்தையடைய விரும்பி மாவுரியுடித்தல் முதலிய துன்பச செய்கை களைச செய்து உய்ந்தார்கள், மாதரது சிற்றின்பத்தை விரும்பி, வேண்டி

முணவுகளே யுண்டும், வேண்டும் வஸ்திராதிகளைத் தரித்தும் சிறிதேனும் வருந்தாதிருக்கிறோம், நாங்கள் எப்படி உய்வோமென்பது கருத்து.

10 முத்தனைய மூரலும் பவளவா யின்சொலும்
முகத்திலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசங் னதமேற்ற விருகும்ப
முலையின்மணி மாலைகால
வைத்தெமை மயக்கியிரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிறறிடை
மடந்தையர்கள் சிற்றிண்டமோ
புத்தமிர்த போகம் புசித்துலழி யிமையாத
பொன்னுட்டும் வந்ததென்றல்
போராட்ட மல்லவோ போரின்ப முத்தியிப்
பூமியி லிருந்துகாண
எத்தனை விகாதமவரு மென்றுசுகர் சென்றதெறி
யிவ்வுலக மறியாததோ
இகபர மிண்டினு முபயினுக் குயிராகி
யெங்குநிறை நின்றபொருளே.

இ-ள். முத்தனைய மூரலும்-முத்தைபொத்த பற்களும், பவளவாய் இன்சொலலும் பவளத்தையொத்த வாயிலுள்ள இனிய சொற்களும், முகத்திலகு பசுமஞ்சளும்-முகத்தில் விளங்குகின்ற பசிய மஞ்சளும், மூர்சிக்க - மூர்சிக்கும்படி, விரகசங்கதம் ஏற்ற - விரஹ சங்கதத்தை யெழுப்ப, இருகும்ப முலையில்-இரண்டு குடங்களேயொத்த ஸ்தனங்களின் மேல், மணிமாலை கால - ரத்ன மாலைகள் தொங்க, வைத்து - எங்களே சடப் பொருள்போ லிருக்கும்படி ஸ்வாதீனமாக்கி, எம்மை மயக்கி-எங்களே மயங் கப்பண்ணி, இருகண் வலையை வீசி - இரண்டு கண்களாகிய வலையை யெறிந்து, மாயாவிலாச மோகவாரிதியில் ஆழ்த்திடும் - மாயையின் விளே யாட்டாகிய மோக சமுத்திரத்தில் அழுந்தப்பண்ணுகிற, பாழ் ஆன-பாழா கிய, சிறு இடை மடந்தையர்கள்-சிற்றிடையையுடைய மாதர்களது, சிற் றின்பமோ-சிற்றின்பமென்றலோ, புத்தமிர்த போகம் புசித்து-புதிய அமிர் தத்தை உண்ணுதலாகிய அநுபவத்தை யநுபவித்து, விறி இமையாத-கண் ணிமைக்காத, பொன்னுட்டும் வந்தது என்றல் பொன்னுலகத்திலும் வந்ததாலும், போராட்ட மல்லவோ - போராட்டமாய் முடியு மல்லவா, பூமியிலிருந்துகாண - இப்பூமியில் இருந்துகொண்டு இவையெல்லாம் பிரத்தியக்ஷமாய் அனுபவிக்கிறவர்களுக்கு, இப்பூமியில் இருந்துகாண-இவையெல்லாம் பிரத்தியக்ஷமாய் அனுபவிக்கிறவர்களுக்கு, எத்தனை விகாதமவரு மென்று-எத்தனை துக்கமுண்டாகுமென்று, சுகர்சென்றதெறி-

சுகமுனிவர் போன மார்க்கம். இவ்வுலகம் அறியாததோ - இவ்வுலகத்தாரால் அறியப்படாததோ, இகபரமிரண்டினிலு, எ-று.

சுந்தரம்-ஸுவேசம், சுந்தரமோ வலியாகக் கூறுதல் ஆடவரை யகப்படுத்தில் வலிபோன் றிருத்தலால் ஒக்கும். அது, "காய்சின வேனில் மின்னியல் கண்ணினின் வலைகலந்து வீசினபோது" என்னுஞ் சீகாவையார் திருப்பாட்டானு முணர்க.

சுகமுனிவர் மாதர் சிற்றின்பம் முத்திக்குத் தடையாகப் பொன்னுட்பம் வந்து வருத்துவதா யிருத்தலால், நான் இவ்வுலகத்திலிருந்துகொண்டு அதனை வென்று முத்தியடைதல ருமையாருமென்று நிசயித்து, பிறரோடே துறந்துசென்று நிடதமலைமே லேறின செய்தியை இவ்வுலகத்தார் அறியார்களோ, ஆதலால் நாமும் அவ்வாறு துறந்து சென்றலொழிய தியை யடையமாட்டோமென்பது கருத்து.

11 உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
துளறிடு மவத்தையாகி
உருவுதான் காட்டாத வாணவமு மொளிகண்
டொளிக்கின்ற விருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கவிரு வினையினற்
றுவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனற்
றடித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட வகண்டி தா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பிலெடு கீழ்மே னடுப்பக்க மென்னுமன்
முற்றுமா னந்தநிறைவே
என்னிலைமை யாய்நிற்க வியல்புகூ ரருள்வடிவ
மெந்நாளும் வாழிவாழி
இகபர மிண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.

இ - ள். உன் நிலையும் என் நிலையும் உனது நிலையும் எனது நிலையும், ஒரு நிலையெனக்கிடந்து உளறிடும் அவத்தையாகி - ஒரே நிலையென்று கொண்டு உளறிடும்படியான அவஸ்தையையடைந்து, உருவுதான் காட்டாத ஆணவமும்-தன் வடிவைப் புலப்படுத்தா, அகங்காரமும், ஒளிகண்டு ஒளிக்கின்ற இருள் என்ன - ஒளியைப்பாராத்து மறைகின்ற இருளைப் போல, தன்னிலைமைகாட்டாது ஒருங்க-தனது நிலைமையைப் புலப்படுத்தாமல் அடங்க, இருவினையினல் - இருவினைகளாகிய (அலகளோடு), தாவு-தாவுகின்ற, சுக துக்க வேலை - சுக துக்கங்களாகிய சமுத்திரங்கள்,

நட்டு அழியாதகிமாற, முற்றும் இல்லா மாயையதனால் - முழுதுமில்லாமை யாகிய மாயையினால், தடத்து உருக்கொண்டு, அகில பேதமான-அனேக வேறுபாடாகிய, முன்னிலை ஒழிந்திட-முன்னிலைச சுட்டொழிய, அகண்டிதாகாரமாய் - பிரிக்கப்படாத வடிவையுடையதாய, மூதறிவு-சேனது, மேல் உதிப்ப-மேலுமேலு முண்டாக, முன்பின்னெனு - முனேனு, கீழ் மேல் நடுப் பக்கம் என்றுமல் - கீழ்மேல் நடுப் பக்கம் சொல்லாதவகை, முற்றும்-முடிவுபெறுகின்ற ஆகத்த நிறைவே - நிறைவே, என் நிலைமையாய் நிற்க-எனது நிலைமையாகக்கொண்டு நிலைத்து நிற்கும்படி, இயல்புகூர்-எனக்கு நல்லியல்பருளிய, அருள் வம்-அருளுருவமானது, எக்காலமும் வாழி வாழி-எக்காலத்தும் வாழ்வது வாழக்கடவது, இதபர பிரண்டினிலு. எ-று.

மாயையை முற்றும் விசாரிக்குமிடத்தில் பொய்யாய்ப் போதல முற்றுமில்லா மாயையன்றோ. அருள்வடிவம் என்றது குருமூர்த்தத்தை இறைவனுடைய உனது நிலையையும் அடிமையாகிய எனது நிலையையும் அ யாது ஒரு நிலையென்று உறுதசெய்கின்ற ஆணவமும் தன்னுருக் காடாது ஒடுங்கவும், முற்றும் பொய்யாகிய மாயை காரணமாக வுண்டா உலக வேறுபாடுகளாகிய முன்னிலை யொழியவும், அகண்டா காரமா பேறறிவுதோன்ற அதனால் பேரானந்தமே எனது நிலைமையாகக்கொண்டு அதில்நிலைத்துநிற்கும்படி எனக்கு நல்லியற்கையருளிய குருமூர்த்தமானது எக்காலத்தும் வாழக்கடவது என்பது கருத்து.

சச்சிதானந்த சிவம்.

1 பாராதி ககனப் பரப்புமுண் டோவென்று
படர்வெளிய தாகியெழுநாப்
பரிதிமதி காணுச் சுயஞ்சோதி யாயண்ட
பகிரண்ட வுயிரெவைச்சும்
நேராக வறிவா யகண்டமா யேகமாய்
நித்தமாய் நிர்த்தொந்தமாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமன மறுகாத
நிர்மலா னந்தமயமாயப்
பேராது நிற்றிநீ சும்மா விருந்துதான்
பேரின்ப மெய்திடாமல்
பேய்மனதை யண்டியே தாயிலாப் பிள்ளைபோற்
பித்தாக வோமனதைதான்

சாராத படியறிவி னிருவிகற் பாங்கவாஞ்
சரசுவத நிஷ்டையருளாய்
சர்வபரி பூரணவகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ன். பார் ஆதி-பிருதிவி முதலான, ககனப்பரப்பும் - ஆகாயப்பரப்பும், உண்டோவென்று-உளதோவென்று (சொல்லும்படி), படர்வெளியதாகி-வியாபிக்கின்ற பரமாகாசமாகி, எழுகா-அக்கினியும், பரிதி-சூரியனும், மதி-சந்திரனும், காணை-காணக்கூடாத, சுயஞ்சோதியாய்-சுயம்பிரகாசமாகி, அண்டபகிரண்ட உயிர் எவைக்கும்-அண்டபகிரண்டங்களி லுள்ள வுயிர்களெல்லாவற்றுக்கும், நேராக அறிவாய் - செவ்வையாக அறிவுருவாய், அகண்டமாய் கண்டிக்கப்படாததாய், ஏகமாய்-ஒன்றாகி, நித்தமாய்-அழிவற்றதாய், நிரந்தொந்தமாய்-தொடர்பற்றதாய், நிர்க்குண விலாசமாய்-குணங்கடந்த லீலையாகி, வாக்குமனம் அணுகாத-வாக்குமனங்கள்பொருந்தாத, நிர்மலாநந்த மயமாய்-நிர்மலசுகரூபமாகி, நீ பேராதுற்றி-நீ அசையாது நிற்கிறாய், சும்மா இருந்து பேரின்பம் எய்திடாமல்-சும்மா இருந்து பேராநந்தத்தைப்பெறாமல், பேய்மனதை அண்டி-பேய்மனத்தைச சார்ந்து, தாய் இல்லா பிள்ளைபோல்-தாயற்ற குழந்தைபோல், பித்தாகவோ-பித்தேறவோ, மனதை நான் சாராதபடி-மனத்தை நான அணுகாதபடி, அறிவின்-அறிவோடுகூடிய, நிருவிகற்ப அங்கம் ஆம்-நிர்விகற்பமென்னும் உறுப்பையுடைய, சரசுவத நிஷ்டை அருளாய்-அழியாத சகசநிஷ்டையைக் கொடுத்தருளவேண்டும், சர்வபரிபூரண-சகலபதார்த்தங்களிலும் பரிபூர்ணமான, அகண்ட தத்துவம் ஆன - அகண்ட வஸ்துவாகிய, சச்சிதானந்த சிவமே-தத்துவத்திரய ரூபமாகிய மங்களவஸ்துவே. எ-று.

பூதாகாய முதலியன சிதாகாயத்தில் ஓர் துகள் போலக் காணப்படுமாதலால், பாராதிககனப் பரப்புமுண்டோவென்று படர்வெளியதாகிவென்றும், சூரியன் சந்திரன் அக்கி எனறும் ஒளி உடைப் பொருள்களாகும் ஒளியைத்தத்து தானே பிரகாசித்தலால். எழுகாப்பரிதிமதி காணை யசுசோதியாய் என்றும், உயிர்க ளெல்லாவற்றுக்கும அறிவுருவாகி யுள்ளே விளங்குதலால், அண்டபகிரண்ட வுயிரெவைக்கும் நேராகவறிவாய் என்றும், எங்கும பிரிவற வியாபித்திருத்தலால் அகண்டமாய் எனறும் எவ்வாறு எதுகும் வியாபித்திருத்தற்குபல வுருவுடையதோ வென்னும் ஐயமறுத்தற்கு ஏகமாய் என்றும், அழிவற்றதாதலால் நித்தமாய் என்றும், எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருந்தும் அவற்றோடு சம்பந்த மற்றிருத்தலால் நிர்த்தொந்தமாய் என்றும், குணமீத மாதலால் நிர்க்குணவிலாசமாய்

என்றும், வாக்குமனங்களுக் கெட்டாத சலங்கமற்ற பொருளாதலால், வாக்கு மனமணுகாத நிர்மலாநந்தமயமாய் என்றும் கூறினர்

2 குடக்கொடு குணக்காதி திக்கினை யுழக்கூடு
கொள்ளல்போ லலைந்தூதம்
கூடுஞ் சுருங்கிலைச் சாலேகமொன்பது
குலாவுநடை மனையைநாறும்
வடக்கயிறு வெண்ணரம் பாவென்பு தசையினுல்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர்செ நீர்கணீர
மலநீர்பு ணீரிறைக்கும்
விடக்குத் துருத்தியைக் கருமருந் துக்கூட்டை
வெட்டவெட் டத்தளிர்க்கும்
வேட்கைமர முறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ லிருந்துபொய்யாம்
சடகைகச் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானுகி நிற்பதென்றே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். குடக்கொடு குணக்காதி திக்கினை-மேற்கோடு கிழக்குமுதலிய திக்குகளை, உழக்கூடு கொள்ளல்போல்-உழக்கினிடத்திற் கொள்ளுதல் போல, ஐந்தூதம் கூடும் சுருங்கு இல்லை-பஞ்சபூதங்கள் சேர்கின்ற சிறு குடிலை, சாலேகம் ஒன்பது குலாவும்-ஒன்பது பலகணிகள் விளங்குகின்ற, நடை மனையை-நடைவீட்டை, நாறும்-காணப்படுகின்ற, வடக்கயிறு-வடக்கயிறு, வெள் நரம்பு ஆ-வெண்ணரம்பாக, என்புதசையினுல்-எலும்பு மாமிசங்களால், மதவேள்-மனமதனுனவன், விழாநடத்திவைக்கின்ற-திருவிழாநடத்திவைக்கின்ற, கைத்தேரை-சிறுதேரை, வெள்நீர்-வெண்ணீரும், செந்நீர்-செந்நீரும், கண்ணீர்-கண்ணீரும், மலநீர்-மலநீரும், புண்ணீர்-புண்ணீரும், (ஆகிய இவற்றை) இறைக்கும்-இறைக்கின்ற, விடகுத்துருத்தியை-மாமிசத்துருத்தியை, கருமருந்துக் கூட்டை-ஜந்மமாகிய மருந்து விளைகின்றகூட்டினை, வெட்ட வெட்டத்தளிர்க்கும்-வெட்ட வெட்டத் தளிர்க்கின்ற, வேட்கைமரம் உறுகின்ற-ஆசையாகியமரங்கள்படர்கின்ற, சுடுகாட்டை-மயானத்தை, முடிவிலே முடிவில் மெய்போலிருந்து-உண்மை போலவிருந்து, பொய்யாம்-பொய்யாய் விடுகின்ற, சடக்கை-சரீரத்தை, சடக்கு என-பொய்யென்ற, சின்மயம் சதமென்று-ஞானரூபமே மெய் யென்று, தானுகி நிற்பது என்றே-தானுகி நிற்பது எந்தக்காலமோ, சர்வ பரிபூரண, எ று.

வெண்ணீர்-கோசழ. செந்நீர்-உதிரம். மலநீர் - மூத்திரம். புண்ணீர்-மாமிசநீர். ஐம்பூதம் கூடுஞ்சிறுமீடு, நவத் துவாரங்களையுடைய நடை வீடு முதலியவாகச சொல்லப்பட்ட பொய்யுடலைப் பொய்யென்றறிந்து, சின்மயமே மெய்யென்று துணிந்து அதின்மயமாய் நிற்பது எக்காலமோ என்பதாம்.

3 பாகத்தி னுற்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லேவேத
பாராய னப்பவனுன் மூவர்செய் பனுவலதி
பகரவோ விசையுமில்லை
யோகத்தி லேசிறிது முயலவென் னுற்றேக
மொவ்வாதி வுண்வெறுத்தால்
உயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னுற்செய்யவோ
மோகத்தி லேசிறிது மொழியவில்லை மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்கவென்னுல்
முற்றுது பரிபாக சத்திக ளனேகமின்
மூதறிவி லேயெழுந்த
தாகத்தி லேவாய்க்கு மமிர்தப்ர வாகமே
தன்னைத் தனிப்பெருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். பாகத்தினுல்-பாகமாக, கவிதை பாடி படிக்கவோ - கவிகளைப் பாடிப்படிக்க வென்றுலோ, பத்திநெறி இல்லை - பக்திமார்க்கமில்லை, வேத பாராயணப் பனுவல் - தமிழ் வேதமாகிய பாராயணத்துக்குரிய (திருவாசகமென்னும்) நூலையும், மூவர் செய்பனுவல் - மூவராருளிசசெய்த (அடங்கல் முறையாகிய) நூலையும், பகரவோ - பாடவோ வென்றுலோ, இசையும் இல்லை - இசையுணர்சசியு மில்லை, யோகத்திலே சிறிது முயல என்றுல் - யோகமார்க்கத்தில் கொஞ்சம் முயல்வோ மென்றுல், தேகம் ஒவ்வாது - சரீரம் இனங்காது, இவ்வுண் வெறுத்தால் - இந்த வுணவை வெறுத்தால், உயிர் வெறுத்திடல் ஒகரும் - உயிரை வெறுத்தாற் போன் றிருக்கும், அல்லாது-அன்றி, கிரியைகள் - கிரியைகளை, உபாயத்தினுல் செய்யவோ - உபாயமாகச செய்பவென்றுலோ, மோகத்திலே சிறிதும் ஒழிய இல்லை - மோகத்தில் கொஞ்சமாயினும் நீங்கவில்லை, மெய்ஞ்ஞான மோனத்தில் நிற்க என்றுல் - மெய்ஞ்ஞான வரம்பாகிய மோனநிலையில், நிற்கவென்றுல், முற்றுது-முடிவு பெறுது, (அதற்குக் காரணம்) பரிபாக,

சத்திகள் அநேகம் - என்னைத் தடைசெய்யப் பக்குவப்பட்டுள்ள பரிபக்குவ சத்திகள் அநேகமாயுள்ளன, நின் மூதறிவிலே எழுந்த-உண்விஷயமான பேரறிவினிடத்துண்டாகிய, தாகத்திலே வாய்க்கும்-மோக்ஷ தாகத்தில் கிடைக்கப்பெறுகின்ற, அமிர்தப்பிரவாகமே - அமுதப்பெருக்கே, தன்னந் தனிப் பெருமையே-ஏகாந்தமாகியபெருமையே, சர்வபரிபூரண.எ-று.

மூவர்செய்பனுவல் - தேவாரத்தடங்கல்முறை அது திருநாவுக்கரசு நாயனார், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் இம்மூவரால் அருளிச செய்யப்பட்டது. இசை - இராகம். மோனமிலையே ஞானத்துக் கெல்லையென்பதை, "மோன மென்பது ஞான வரம்பு" என்னும் ஔவை வாக்கானு முணர்க. சத்திகள் தடைசெய்யும் என்பதை,

"தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைக டொடங்கின."—என்னுந் திருவாத வூரடிகள் திருவாக்கானு முணர்க.

4 இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
மிவ்வுலக மெவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற் றின்பமோ
வென்னின்மக மேருவாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாரு மாக்கிநாளும்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தியாவையுஞ்
சூறையிட் டிடுத்ரஜாலம்
அமையவொரு கூத்துஞ் சமைத்தாடு மனமாயை
யம்மம்ம வெல்லவெளிதோ
அருள்பெற்ற தேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
தருளோவ லாதுமருளோ
சமயநெறி காணுதை சாக்ஷிநீ சூக்ஷமமாத்
தமியனேற் குளவுபுகலாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ - ள். மன மாயை - மன மாயையானது, இமையளவுபோதை - இமைகொட்டு மளவினதாகிய காலத்தை, ஒரு கற்பகாலம் பண்ணும் - ஒரு கற்பகாலமாகசும், இவ்வுலகம் எவ்வுலகமோ என்ற எண்ணம் வருவிக்கும் - இவ்வுலகமானது எவ்வுலகமோ வென்கிற எண்ணத்தை யுண்டாக்

கும், மாதர் சிற்றின்பமோ என்னின் - மகளிர் சிற்றின்பமோ வென்றால், மகமேரு ஆக்கி - மகமேருவாகசசெய்து, சுமை எடுமின் என்று - சுமை யெடுங்களென்று, எமை-எங்களை, சும்மாடும் ஆய்-சும்மாடாசவுஞ் செய்து, சுமை ஆளும் ஆக்கி-சுமையாளாகவுஞ்செய்து, நாளும்-நாள்தோறும், தூய் புதநிபண்ணி-தூய்புத்தியை யுண்டாக்கி, உள்ள - உண்டாயிருக்கிற, ஈற புத்தியாவையும-நல்லபுத்திகளெல்லாவற்றையும், சூறையிட்டு-சூறையாடி, இந்த்ராஜாலம் அமைய - இந்திரசாலம்பொருந்த, ஒரு கூத்தும் சமைத்து ஆடும்-ஒருநாடகமும அமைத்து நடிக்கும், அம்மம்ம - ஆச்சரிய மாச்சரியம், வெல்ல எளிதோ - (இதனை) வெல்லுதற்கு எளிதாகுமோ, அருள் பெற்ற போக்கு எல்லாம் - உன் திருவருளைப் பெற்றபோக்கட் கெல்லாம், ஒளி பெற்று நிற்கும் ஈது-ஒளிவிளங்க நிற்கின்ற இது, அருளோ - அருட்டன் மையோ, அல்லாது மருளோ - அல்லது மருட்டன்மையோ, சமய நெறி காணாத-சமயமார்க்கங்களால் காணப்படாத, சாக்ஷீ - சாட்சிபூதஞுகிய நீ, சூக்ஷ்மம் ஆ-நுட்பமாக, தமியனேற்கு - தனியேனுகிய எனக்கு, உளவு புக லாய்-உளவுசொல்லாய், சர்வபரிபூரண. எ-று.

இமைப்பொழுதைக் கற்பகாலமாகச செய்தலும், இவ்வுலகம் சுவற்றல கமோ என்ற எண்ணத்தை யுண்டாக்கலும் முதலிய செய்யவல்ல மன மாயையானது என்னால் வெல்லவொண்ணுமோ, உன் திருவருள் பெற் றோர்க் கெல்லாம் ஒளியுருவாய் நிற்கின்ற இது அருளோ அல்லது மருளோ எனக்கு உளவுசொல்லாய் என்பது கருத்து.

5. இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அனியாய மாயிந்த வுடலோ டெனன்றுவரு
மந்தகற் காளாகவோ
ஆடித திரிந்துகான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன்றே
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தழூ லங்களேனும்
கனல்வாதை வருதெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி- மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். எமக்கு-எங்களுக்கு, இனி உன் அருள் எது-இனி உன்கிருபை கிடைப்பதேது. வருமோ-ஒருக்கால் உண்டாகுமோ, எனகருதி - என்று நினைத்து, நெஞ்சம் மகுதே - மனமானது எக்கங் கொள்ளா நின்றதே, ஐயோ-அந்தோ, இனறைக்கு இருந்தாரை - இன்று உயிர் வாழ்ந்திருந்த வரை, நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ - நாளைக்கு இருப்பார்க ளென்று நினைக்கவோ, திடம் இல்லையே-ஸ்திரமில்லையே, அநியாயமாய்-அநியாயமாய், இந்த வுடலை-இந்தசரீரத்தைக்குறித்து, நான் என்றுவரும்-நானென்று அகங்கரித்துக் கொண்டுவருகின்ற, அந்தகற்கு ஆளாகவோ-யமனுக்கு அடிமையாகவோ, நான் ஆடித்திரிந்து-நான் ஆடி உழன்று, கற்ற தும் கேட்டதும்-கற்றகல்வியும் கேட்டகேள்வியும், அவலமாயப் போதல் நன்றோ-நிஷ்பலமாய்ப் போவது நன்மையோ, கனிஎனும்-கனியையாயி னும், வறியசெங்காய் எனும்-வெறுமையான செங்காய்களேயாயினும். உதிர் சருகு கந்தமூலங்களேனும் - உதிர்ந்த சருகு கந்தமூலங்கள் இவற்றுள் ஒன்றையாயினும், கனல்வாதைவந்து எய்தின் - உதராக்கியின் உபத்ரவம் வந்து பொருந்தினால், அள்ளிப்புசித்து-வாரியுண்டு, நான்-அடியேன், கண் மூடி-கண்களே மூடிக்கொண்டு, மௌனியாகி - மௌனநிலையை யுடையே னாகி, தனியே இருப்பதற்கு எண்ணினேன்-தனியாயிருக்க நினைத்தேன், இது எண்ணம்-இந்த எண்ணமானது, சாமி நீ அறியாததோ-சர்வஸ்வாமி யாகிய நீ யறியாததோ, சர்வபரி பூரண. எ-று.

இனி உன் திருவருள் எனக்கு வாய்க்குமோ வென்று நினைத்து என் மனமிரங்காதின்றதே, இன்றிருந்தவர் நாளைக்கு இருப்பர் என்று எண் ணவோ திடமில்லையே, அநியாயமாய் அகங்கரித்தவரும் யமனுக்கு ஆளா கவோ, நான் அலைந்து வருந்திக் கற்ற கல்வியும் கேட்ட கேள்வியும் வீணாய்ப்போதல் நன்மையோ, பசிக்குச் காய் கனி கிழங்குகளேயுண்டு மௌனியாகித் தனியே யிருத்தற்கு எண்ணி யிருக்கிறேன், இவ்வெண்ணம் நீ யறியாத தல்லவே என்பது கருத்து. கந்தமூலங்கள-வேர்கிழங்குகள்.

6 மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகு
வாயிலுடன் மதியகடதோய்
மாடகூ டச்சிகர மொய்த்தசுர் திரகாந்த
மணிமேடை யுச்சிபீது
முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
முத்துமுத் தாய்க்குலாவி
மோகத் திருந்துமென் யோகத்தி னிலைநின்று
மூர்ச்சைப் பிடித்தடைதறக்
கைத்தல நகப்படை விரித்தபலி சிங்கமொடு
கூடி முழை நூழைகொண்ட

கானமலி யுச்சியிற் குகையு டிருந்துமென்
கரதலா மலகமென்னச்
சத்தமற மோனநிலை பெற்றவர்க ளுய்வர்காண்
சனகாதி தூ விதன்றே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். மத்தம்-உன்மத்தங் கொண்ட, மதகரி-மதயானைகள், முகில் குலம் என்ன-மேகக்கூட்டம்போல, நின்று இலகு-நின்று விளங்குகின்ற, வாயிலுடன்-முற்றத்தோடுகூடிய, மதி அகடு தோய்-சந்திரனது நடுப்பகுதியைத் தொடுகின்ற, மாட கூடச சிகரம் மொய்த்த-மாளிகைகள் வீடுகளின் சிகரங்கள் இவைகள் நெருங்கிய, சந்திரகாந்த மணிமேடை உச்சி மீது-சந்திரகாந்தக் கல்லினுற்சமைத்த ரத்ன கசிதமானமேடையின் உச்சியில், முத்தமிழ் முழக்கமுடன்-முத்தமிழ் முழக்கத்தோடு, முத்தநகையார் களொடு-முத்தையொத்த பற்களையுடைய மாதர்களோடு, முத்து முத்தாய் குலாவி-பிரியமாய் விளையாடி, மோகத்து இருந்தும் என்-மோகசாகரத்தில் முழுகிக் கிடந்தாலென்ன நஷ்டம், யோகத்தின் நிலை நின்று-யோக நிலையினின்று, மூசசை பிடித்து அடைத்து-வாயுவைத் தடித்து, கைத்தலம்-கைகளில், நகப்படைவிரித்த-நகமாகிய ஆயுதங்களைவிரித்த, புலி சிங்கமொடு கரடி நுழை - புலி சிங்கங்களுடன் கரடிகள் நுழையப்பெற்ற, நூழை கொண்ட-அடர்சசியைக்கொண்ட, கானம்-கானகத்திலும், மலை உசசியில்-மலைஉசசியிலும், குகையூடு-குகைகளிலும், இருந்தும் என் - இருந்தாலும் என்னலாபம், கரதலம்-கையிலுள்ள, ஆமலகம் என்ன-நெல்லிக்கனிபோல, (விசதமாய்) சத்தம் அற - பூரவாசங்களடங்க, மோநநிலை பெற்றவர்கள்-மௌநநிலையைப் பெற்றவர்கள், உய்வா - உஜ்ஜீவிப்பார்கள், சநகாதி தூணிவு இது அன்றே-சநகாதிகளுடைய நிசசயம் இதுவல்லவா, சர்வபரி பூரண. எ-று.

இல்லறம் நல்லறமென்னு பிரமாணமுள் எதிலிருப்பினும் நஷ்ட லாபங்களில்லை,மௌநநிலையைப் பெற்றவர்கள் உய்வார்களெனபதாயிற்று. நெல்லிக்கனியை உள்ளங்கையில் வைத்து உற்று நோக்கினால் உள்ளேயிருக்கிற வரைகளெல்லாம் எண்ணலாம்படி விளங்கித்தோன்றுமாதலால் கரதலாமலகம் என்ன என்றார்.

7 கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக்
கண்டவே தாகமத்தின்
காட்சிபுரு ஷார்த்தமதின் மாட்சிபெறு முத்தியது
கருதினனு மானமாற்

உத்திபல வாகிரு விகற்பமே வில்லையா
லொன்றே டிரண்டென்னவோ
உரையுமில நீயுமில நானுமில வென்பது
முபாயநீ யுண்டுநானும்
சித்தமுள னெனில்லை யெனும்வசன நீயறிவை
தெரியார்க டெரியவசமோ
செப்புகே வலநீதி யொப்புவமை யல்லவே
சின்முத்தி ராங்கமரபில்
சத்தமற வெனையாண்ட குருமௌனி கையினற்
றமியனேற் குதவுபொருளே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். கைத்தலம் விளங்கும்-உள்ளங் கையினிடத்து விளங்காநின்ற, ஒரு நெல்லிக்கனி யென-ஒரு நெல்லிப்பழம்போல, கண்ட-காணப்பட்ட, வேதாகமத்தின் காட்சி-வேதாகமத்திற் கண்டபொருள், புருஷார்த்தம்-சதுர்வித புருஷார்த்தமாம், அதில்-அந்தப் புருஷார்த்த சதுஷ்டயத்துள், முத்தி-வீடு எனப்படுவது, மாட்சிபெறும்-மேன்மையையடையும், அது-அந்த வீட்டை, கருதின்-நினைத்தால், அனுமானம் ஆதியுத்திபல ஆம்-அநுமானம் முதலிய ப்ரமாணங்களால் உளவாகின்ற யுக்திகள் அநேகமாகும், நிருவிகற்பமேல் இல்லை-நிர்விகற்ப சமாதி யநுபவத்தின்கண் இந்த யுக்திகள் பயன்படா தொழியுமாதலால், ஒன்றோடு இரண்டு என்னவோ-ஒன்றுடன் இரண்டு என்றுசொல்வோமென்றாலோ, உரையும் இல்லை-சொல்லுமில்லை, நீயும் இல்லை-நீயென்பதும் இல்லை, நானும் இல்லை-நான் எனபதுமில்லை, என்பதும் - என்றுசொல்லுவதும், உபாயம் - தந்திரமே, (ஏனெனின்) நீ உண்டு-நீ யென்பதும்உண்டு, நானும்-அடியேனும், சித்தம் உளன்-சித்தமாயிருக்கிறேன், (அப்படியிருக்க) நான் இல்லை என்னும வசனம்-நானென்பதொருபொருள் இல்லை எனறுந்சொற்பொருளோ, நீஅறிவையறிவாய், தெரியார்கள்-அறியாதவர்கள், தெரிய வசமோ-அறியவொண்ணுமோ, செப்பு (வேதாகமங்களாற்) சொல்லப்பட்ட, கேவலம்நிதி-முத்தி நெறியின் ஒழுங்குக்கு, ஒப்பு உவமைஅல்லவே - (வேறுபொருள்) ஒத்துக் கொள்ளத்தக்க உவமைப்பொருளாகாதே, சின்முத்திராங்க மரபின்-ஞான முத்திரையை யங்கமாகவுடைய மோன மரபினால், சத்தம் அற-சொல் லடங்க, என்னை ஆண்ட-என்னையாண்டருளின, குருமௌனி கையினல்-மௌனகுருவின் திருக்கரங்கொண்டு, தமியனேற்கு உதவுபொருளே - தனியேனுனை எனக்குக் கொடுக்கப்பட்ட வஸ்துவே. சர்வபரிபூரண. எ-று.

உள்ளங்கை நெல்லிப்பழம்போல விளங்கித்தோன்றுகின்ற வேதம் ஆகமம் என்பவற்றின் அர்த்தசாரமெல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகையான புருஷார்த்தங்களே. அவற்றுள் வீடு சிறந்தது, அதை நினைக்குமிடத்து, அந்நூற் அனுமானம் முதலிய பிரமாண யுக்திகள் பலவுள அந்தயுக்திகளோ நிருவிகற்ப சமாதி யநுபவத்தில் இல்லையாகும், ஆதலால், அந்த முத்திநிலையானது, ஒன்றெனவும்இரண்டெனவும்கூறுதற் குச சொல்லில்லை. நீயும் இல்லை நானும் இல்லை என்பதும் உபாயமேயாம். ஏனென்றால், நீயும் உண்டு நானும் உளேன் ஆனால், நான் இல்லையென் னுஞ் சொல்லின்பொருளே நீ யுணர்வாய், மோக்ஷமார்க்கத்துக்கு ஒப்பாக வேறுமொரு பொருளுண்டோ, சின்முத்திரையைக் காட்டி சொல்லிறக்க என்னே யாண்டருளின மௌனதேசிகனது கையினால் எனக்குத் தானமா கக் கொடுக்கப்பட்ட பொருளே என்பது கருத்து. வேதம் அறியப்படு வது என்னும் பொருளது. ஆகமம் பதி-பசு பாசம் என்னும்முப்பொருளே யும் விளக்கிக்காட்டுவது என்னும் பொருளது. ஆ-பசு. கம்-பதி. மம்-பாசம்.

8 காயாத மரமீது கல்லேறு செல்லுமோ
கடவுணீ யாங்களடியேம்
கர்மபந் தத்தினுற் சன்மபந் தம்பெறக்
கற்பித்த துன்னதருளே
வாயார வுண்டபேர் வாழ்த்துவது நொந்தபேர்
வைவதுவு மெங்களுலக
வாய்பாடு நிற்கதின் வைதிக வொழுங்குநீ
வாழ்த்தினுற் பெறுபேறுதான்
ஓயாது பெறுவரென முறையிட்ட தாற்பின்ன
ருளறுவது கருமமன்றும்
உபயநெறி யீதென்னி னுசிதவெறி யெந்தநெறி
யுலகிலே பிழைபொறுக்கும்
தாயான கருணையு முனக்குண் டெனக்கினிச்
சஞ்சலங் கெடவருள்செய்வாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். காயாத மரமீது காயாத மரத்தின்மேல். கல் ஏறுசெல்லுமோ-கல்லெறிதல் செல்லுமோ, நீகடவுள்-நீகடவுள், யாங்கள் அடியேம்-நாங்கள் அடிமைகள், கர்மபந்தத்தினுல்-கர்மப்பிணிப்பினுல், சன்மபந்தம்பெற-பிற விப் பிணிப்பை யடையும்படி, கற்பித்தது-கற்பித்துவைத்தது, உன்னது

அருளே-உன் கருணையே, வாயாரவுண்டபேர்வாழ்த்துவதும்-வாயார வுண் டவர்கள் மங்களாசாசநம்பண்ணுவதும், நொந்தபேர் வைவதுவும்-நொந்த வர்கள் நிந்திப்பதும், எங்கள்-எமதருமை, உலக வாய்ப்பாடு-உலகவழக் கம், நிற்க-இது நிற்க, நின்வைதிக ஒழுங்கு-உனது வைதிக வொழுக்கநூல் கள், நின்னே வாழ்த்திஞல்-உன்னே மங்களாசாசநம்பண்ணினுல், பெறு பேறு.பெறுதற்குரிய மோக்ஷலாபத்தை, ஓயாது பெறுவர் என-தவறுழு லடைவரென்று,முறையிட்டதால்-முழங்குவதஞல்,பின்னர்-அதற்குமேல், உளறுவது கருமம் அன்று ஆம்-உளறுதல் நற்கருமம் அன்றுகும், உபய நெறி ஈது என்னின்-இரண்டு மார்க்கங்கள் வைவதும் வாழ்த்துவதுமா யின், உசித நெறி எந்தநெறி-அநுகூலமார்க்கம் எத்தமார்க்கம், உலகிலே பிழை பொறுக்கும்-உலகத்தில்குற்றத்தைப்பொறுத்தருள்கின்ற, தாயான கருணையும்-தாயின் கருணைபோன்ற கருணையும், உனக்கு உண்டு-உனக்குள் ளது, இனி-இனி, எனக்கு-அடியேனுக்கு, சஞ்சலங்கெட - மநோதாக்கம் அறும்படி, அருள்செய்வாய்-கிருபைசெய்வாய், சர்வபரிபூரண. எ- று.

வைதிகம் - வேதசம்பந்தம். பேறு எனப் பொதுப்படக் கூறினும் நின்னே வாழ்த்திஞற் பெறு பேறு என்றமையால் மோக்ஷலாபம் என்று ரைக்கப்பட்டது.

9 இன்னம் பிறப்பதற் கிடமென்னி னிவ்வுடல
பிறவா திருப்பமூலத்
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண்ட லத்திலுற
வென்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
பேயேனே நல்கவேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டென்னி னிம்மையே
பேசுகர்ப் பூரதீபம்
மின்னும் படிக்ககண் டாகார வண்ணபால்
வினையேனே யொப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதன் மிகவுநன் றிவையன்றி
விவகார முண்டென்னிலோ
தன்னந் தனிச்சிறிய னற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே
சர்வபரி பூரண வகண்ட தத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். இன்னம் பிறப்பதற்கு இடம் என்னின் - இன்னமும் ஜந் மத்துக்கிட முண்டென்றுல், இவ்வுடலம் இறவாதிருப்ப - இத்தச்சரீரம்

இறவாதிருக்கும்படி, மூலத்து எழும் அங்கி - மூலாதாரத்தில் உண்டாகிற அக்கினியானது, அமிர்து ஒழுகும் - அமிர்த மொழுகாநின்ற, மதிமண்டலத்தில் உற-சந்திரமண்டலத்திற் பொருந்தும்படி, என் அம்மை - என் தாயாகிய, குண்டலினிபால்-குண்டலி சத்தியினிடத்தில், பிண்ணம் பிறக்காது பழுதுண்டாகாதபடி, சேய் என வளர்த்திட-குழந்தைபோல வளர்த்தற் பொருட்டு, பேயேனே நல்கவேண்டும்-பேயையொத்த அடியேனைக்கொடுத்தல் வேண்டும், பிறவாத நெறி எனக்கு உண்டு என்னின் - பிறவாவழி யெனக்குளதாயின், இம்மையே - இம்மையிற்றானே, பேசு - சொல்லப் பட்ட, கர்ப்பூரதீபம்-கர்ப்பூர தீபம்போல, மின்னும்படிக்கு - ஒளிவிடும் படிக்கு, அகண்டாகார அன்னைபால்-அகண்டரூப மென்கிற தாயினிடத்தில், வினையேனை ஒப்புவித்து-தீவினை யேனுகிய என்னை யொப்புவித்து, வீட்டு நெறி கூட்டிடுதல் - மோக்ஷ மார்க்கத்தில் சேர்த்திடுதல், மிகவும் நன்று-மிகவும் நன்மை, இவையன்றி-இவற்றையன்றி, விவகாரம் உண்டு என்னிலோ-வழக்கு இருக்கிறதென்றாலோ, தன்னந்தனி சிறியன்-தனியேனுகிய சிறியேன், ஆற்றிலேன் - பொறுத்திலேன், போற்றி - நமஸ்காரம், வளர் - விருத்தியடையா நிற்கிற, சங்மார்க்கம் - நன்னெறியையுடைய, முத்தி முதலே-முத்திக்கு முதல்வனே, சர்வபரிபூரண. எ-று.

அகண்டம்-கண்டிக்கப்படாதது. அகண்டாகாரம் - அகண்ட ரூபம். முத்தி முதல்-ஒரு சொல்.

இனிமேலும் எனக்குப் பிறவி யுண்டெனின், எடுத்த இத்தேகமே நிலைத்திருக்கும்படி வளர்க்க, குண்டலிசத்தியாகிய தாயினிடத்தில் என்னைக்கொடுத்தல்வேண்டும், பிறவியில்லையெனின், இம்மையிற்றானே கர்ப்பூரதீபம்போல விளங்கும்படிக்கு அகண்ட ரூபமென்கிற தாயின் கையில் என்னை யொப்புவித்து மோக்ஷநெறியில் சேர்த்தல் வேண்டும், இவ்விரண்டு வழியுமின்றி வேறு வழக்குண்டென்றால் துணையிலாச சிறியேன் பொறுத்திலேன் என்பதாம்.

10 வேதாவை யிவ்வணம் விதித்ததே தென்னினுன்
வினைப்பகுதி யென்பனந்த
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால்
விளைந்ததான் மனைதொடில்
போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
போதமு நினைல்விளக்கம்
பொய்பன்று தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவர வறநிகழ்த்தும்
ஆதார வாதேய மூழுதுநீ யாதலா
லகிலமீ தென்னையாட்டி.

ஆடல்கண் டவனுநீ யாகின்றவன்நீ
பருளுநீ மௌனஞான
காதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
தமருநீ யாவுநீகாண்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். வேதாவை - பிரமனேதோக்கி, இவ்வண்ணம் விதித்தது எது என்னின்-இந்தப்பிரகாரம் விதித்தது யாதினுக்கு என்று வினவினால், உன் வினைப்பகுதி என்பன் - உன் வினையின் கூறுபாடு என்று சொல்லுவான், அந்த வினை பேச அறியாது-அந்த வினையானது பேச அறியாது, நிற்க-அது நிற்க, நினை மனதால் வினைந்ததால் - இவைகள் மனத்தினால் வினைந்ததனால், மனதை நாடில் மனத்தை நாடுமிடத்தில், போதுமேநிற்கும் - அறிவே நிற்கின்றது, அப்போதத்தை நாடிலோ-அவ்வறிவை நாடினாலோ, போதமும்-அவ்வறிவும், நின்னால் விளக்கம் - உன்னால் விளக்கப்படுவது, பொய் அன்று-இது பொய்யல்ல, தெய்வமறை-தெய்விகமான வேதங்கள், யாவுமே நீ யென்று-எல்லாம் நீயே யென்று, போக்குவரவு அறநிகழ்த்தும்-போக்கு வரவொழியச சொல்லா நிற்கும், ஆதார ஆதேயம் முழுதும் நீ ஆதலால்-ஆதார ஆதேயங்களாகிய முழுமையும் நீயாகையால், அகிலமீது-உலகின்மேல், என்னை ஆட்டி-என்னையாடும்படி பண்ணி, ஆடல் கண்டவனும் நீ-அவ்வாடலைப் பார்த்தவனும் நீ, ஆகின்றவனும் நீ-ஆகிவானும் நீ, அருளும் நீ - திருவருளும் நீ, மௌன ஞான தாயும் நீ - மௌனஞானக் கொடையாளனும் நீ, பெற்ற தாய்தந்தை தாமும் நீ - பெற்ற தாய் தந்தைகளும் நீ, தமரும் நீ-உறவினரும் நீ, யாவும் நீ - மற்றும் எனக்கிதமான பொருள்களெல்லாம் நீயே, சர்வபரிபூரண. எ-று.

ஆதாரம்-இடம். ஆதேயம்-இடத்து நிகழ்பொருள். வினைசடமாதலால் பேசவறியாது என்றார்.

பிரமனை நோக்கி, இவ்வாறு வகுத்தது யாதுக்கென்று வினவினால், உன் கர்மப்பாகுபாடு என்பன், அந்தக் கர்மம் சடமாதலால் பேச அறிந்திலது, இது நிற்க, இந்தக் கர்மப்பாகுபாடுகள் மனதிலுள் உண்டானவை பாதலால் மனத்தை நோக்குமிடத்து அறிவும் அறிவுருவாய் நிற்கும், அவ்வறிவும் உன்னால் விளக்கப்படுவது, இது பொய்யல்ல, தெய்விகமான வேதங்கள் எல்லாம், எல்லாப்பொருள்களும் நீயென்று சொல்லும், உலகமும், உலகப்பொருள்களும் நீயாகையால், உலகத்தில் என்னை நடிப்பிப்பவன் முதல் எல்லாம் நீயேயென்பது கருத்து.

11 கொந்தவிழ் மலர்ச்சோலை கன்னீழல் வைகினுங்
குளிர்தீம் புனற்கையள்ளிக்
கொள்ளுகினு மந்தரிடைத்திரைத் தாடினுங்
குளிர்சந்த வாடைமடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும்வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலையமுதம
விந்தைபெற வறுசுவையில் வந்ததென் வழுதுண்ணும்
வேளையிலு மாலைகந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினும்
சந்ததமு நின்னருளே மறவா வரந்தரு
தமியேனை ரகூஉபுரிவாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

இ-ள். கொந்து அவிழ் - கொத்துக்கள் விரிகின்ற, மலர்ச்சோலை-பூஞ்சோலைகளின், கல்நீழல்வைகினும்-கல்லா நிழலிற்றங்கி யிருந்தாலும், குளிர்-குளிர்ந்த, தீ புனல் கை அள்ளி கொள்ளுகினும்-மதுரமாகிய நீரைக் கையினுலள்ளி உட்கொண்டாலும், அந்தரிடை - அந்தரினிடத்தில், திரைத்து ஆடினும்-மூழ்கி விளையாடினாலும், குளிர் சந்தவாடை - குளிர்ந்த சந்தனமணமுள்ளகாற்று, மடவார்-மாதர்கள், வந்துலவுகின்றது எனவந்துலாவுகிறதுபோல, முன்றிலிடை உலவ-முற்றத்தின்கண் உலாவும்படி, வசதிபெறுபோதும - (விசாலமான) வீதிகளை யுடையஞாங்காலத்திலும், வெள்ளை-வெண்மையாகிய, வட்டமதி - வட்டவடிவுள்ள, மதி - சந்திரன், பட்டப்பகல்போல - பட்டப் பகலைப்போல, நிலவுதர - சந்திரிகையை வீசலால், மகிழ்போதும்-மகிழ்ந்தாலுதும், வேலை அமுதம்-கடலமுதமானது, விந்தைபெற-ஆசரியமடைய, அறுசுவையில்-அறுசுவைப் பதார்த்தங்களில், வந்ததென-வந்ததென்னும்படி, அமுது உண்ணுட வேளையிலும்-உணவை யுண்ணுகிறகாலத்திலும், மாலைகந்தம் - பூமாலை சந்தனம், வெள்ளிலை அடைக்காய்-வெற்றிலைப்பாக்கு, (இவைகளை) விரும்பி - அபேக்ஷித்து உண்டு, வேண்டிய வண்ணம் விளையாடி-வேண்டியபடி விளையாடி, விழிதுயிலினும் - கண்ணுறங்கினாலும், சந்ததமும் - சதாகாலமும், நின் அருளே மறவாவரம்தந்து - உன்னருளே மறவாத வரத்தைக் கொடுத்து, தமியேனை ரகூஉபுரிவாய்-தனியேனைக் காத்தருள்வாய், சர்வபரி பூரண. எ-று.

கொத்து கொந்து என மெலித்தல் பெற்றது சந்தநவாடை - தென்றல். எத்தன்மையவாகிய போக போக்கியங்களே யநுபவிக்குங் காலத்திலும் உன் திருவருளே யான் மறவாதிருக்கத் திருவை செய்ய வேண்டும் என்பது கருத்து.

தேஜோமயாநந்தம்.

1 மருமலர்ச் சோலைசெறி நன்னீழன் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா லிகைசொல்லு மியமநிய மாதியா
மார்க்கத்தி னின்றுகொண்டு
கருவுமரு காயத்தை நிர்மலம தாகவே
கமலாச நாதிசேர்த்துக்
காலைப் பிடித்தனலை யம்மைகுண் டலியடிக்
கலைமதியி னூடுதாக்கி
உருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காம
லுணர்வான விழியைநாடி
ஒன்றே டிரண்டெனுச் சமரச சொரூபசுக
முற்றிடவென் மனதின்வண்ணம்
திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். மருமலர்சோலை செறி - பரிமளப பூஞ்சோலைகள் நெருங்கிய, நீழல்-நல்ல நிழலையுடைய, மலையாதி மன்னும்-மலை முதலான இடங்களில் நிலை பெற்றிருக்கிற, முனிவர்க்கு - முனிவரர்க்கு, எவலாய் - அடிமையாய், மந்த்ரமாலிகை சொல்லும்-மந்த்ர மாலிகையிற் சொல்லப்படுகின்ற, இயமநியமாதியாம்-இயம நியமாதிகளாகிற, மார்க்கத்தில் நின்றுகொண்டு-நெறியிலிருந்துகொண்டு, கருமருவு காயத்தை - கர்ப்பவேதனையை யநுபவித்த சரீரத்தை, நிர்மலம் ஆக-பரிசுத்தமாம்படி, கமலாசநாதி சேர்த்து-பத்மாசந முதலான ஆசந பேதங்களில் அமைத்து, காலைப்பிடித்து-ப்ராண வாயுவைத் தடித்து, அனலை - மூலாக்கினியை, அமைய குண்டலி அடி-தாயாகிய குண்டலி சத்தியின் திருவடியாகிய, கலைமதியினூடுதாக்கி - கலைகள்நிறைந்த சந்த்ரமண்டலத்தில் தாக்கவிட்டு, உருகிவரும் - (அதினின்றும்) உருகியொழுகாகின்ற, அமிர்தத்தை உண்டு உண்டு-அமுதத்தையிடையறாதருந்தி, உறங்காமல் - கேவல நிர்த்தைசெய்யாமல், உணர்வான விழியினை - ஞானக் கண்ணினைநன் பார்த்து, ஒன்றேடு இரண்டு என்னை-ஒன்றிரண்டென்று சொல்லப்படாத; சமரச சொரூபசுகம் - சமாசஸ்வ

ரூபாகந்தத்தை, உற்றிட-அடையும்படி, என்மனதின் வண்ணம்-என்கருத்தின் பிரகாரம், திருவருள் முடிக்க-திருவருளானது முடித்துக் கொடுக்க, இத் தேகமொடு காண்பனே-இந்தச சரீரத்தோடு நிருக்கும்போதே காணப், பெறுவேனே, தேடு அரிய தேடித லரிதான, சத்து ஆகி - உண்மையாகி, என் சித்தமிசை குடிகொண்ட-என் மனத்திற் குடிகொண்டிருக்கிற, அறிவு ஆன தெய்வமே - ஞான ரூபமாகிய கடவுளே, தேஜோமய ஆநந்தமே-தேஜோராசியாகிய இன்பமே. எ-று.

மந்த்ரமாலிகை - யோகநூல்களி லொன்று. கர்ப்பவேதனை ஐந்து வகைப்படும். அவை, கருப்பாசயத்திற் கட்டுப்பட்டிருத்தல், சலத்தி லமிழ்ந்திருத்தல், உதராக்நியாற் சுடப்படுதல், பிரசூதவாயுவினற் றள்ளப் படுதல், யோநித்வார நெருக்குண்டல் என்பன.

மலைமுதலான இடங்களில் வசிக்கும் முனிவர்களுக் கடிமைப்பட்டு, இயம நியமாதி மார்க்கத்தை யநுசரித்து, அவைகட்குரிய பதுமாசநம் முதலானவைகளில் இத் தேகத்தைசசேர்த்து. வாயுவை வசப்படுத்தி, மூலாக்நியை யெழுப்பிச் சந்திரமண்டலத்தில் தாக்கவிட்டு, அதினின்று மொழுகாகின்ற அமிர்தத்தைப் பருகி, ஞானக்கண்ணினால் பார்த்து, ஒன்றிரண்டென்று சொல்லப்படாத சமரச சொரூபாநந்தத்தை இத்தேகத்தோடு கூடியிருக்கும்பொழுதே என் எண்ணப்படி திருவருள் முடித்துக்கொடுக்கப் பார்ப்பேனே என்பதாம்.

2 இப்பிறவி யென்னுமொ ரிருட்கடலின் ழுழ்கிநா
னென்னுமொரு மகரவாய்பட்
டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டு புற்புத
மெனக்கொங்கை வரிசைகாட்டுங்
துப்பிதழ் மடைந்தையர் மயற்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்தடிப்பச்
சோராத வாசையாங் காணுறு வானதி
சுரந்தெதன மேலுமார்ப்பக்
கைப்பரிசு காரர்போ லறிவான வங்குழங்
கைவிட்டு மதிமயங்கிக்
கள்ளவங் கக்காலர் வருவதொன் றஞ்சியே
கண்ணருவி காட்டுமெளியே
செப்பெரிய முத்தியாங் கரைசேர் வங்கருணை
செய்வையோ சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். இப்பிறவி யென்னும் - இந்தப்பிறப்பென்கிற, ஒரு இருள் கடலில் மூழ்கி ஒரு கருங்கடலில் முழுகி, நான் என்னும் - நானென்கிற, ஒரு மகரவாய்பட்டு-ஒரு முதலேவாயிலகப்பட்டு, இருவினை யென்னும் இரு வினைகளென்கிற, திரையின்-அலைகளால், எற்றுண்டு - எறியப்பட்டு, புற் புதம் என-நீர்க்குமிழிபோல, கொங்கைவரிசை காட்டும்-கொங்கைகளின் ஒழுங்கைக்காட்டுகின்ற, துப்பு இதழ்-பவளத்துண்டுபோன்ற அதரத்தை யுடைய, மடந்தையர்-மாதர்களுடைய, மயல்-காமமயக்கமாகிய, சண்டமா ருதச்சுழல்-சுழற்சியையுடைய பெருங்காற்றினது, வந்து வந்து அடிப்ப-பலகாலும் வந்து தாக்க, சோராத ஆசை யும் நான் ஏறு-குறையாத ஆசை யாகிய காட்டாறு, வான் நதி சுரந்தது என - ஆகாயகங்கை பெருகினாற் போல, மேலும் ஆர்ப்ப-மேலுமேலும் வந்துமோத, கைப்பரிசுகாரர்போல்-கைப்புணர்க்காரர்போல, அறிவான வங்கமும் கைவிட்டு-ஞானமாகிய மரக் கலத்தையுங் கைவிட்டு, மதிமயங்கி - புத்திகலங்கி, கள்ளவங்கக்காலர் - திருட்டுக்கப்பலையொத்த யமபடர், வருவர் என்று அஞ்சி - வருவார்க ளென்று பயந்து, கண் அருவி காட்டும் எளியேன் - கண்ணீரருவியைக் காட்டுகின்ற எளியேன், செப்பு அரிய-சொல்லுதற் கரிய, முத்தி ஆம் கரை சேரவும் முத்தி என்கிற கரையை யடையவும், கருணைசெய்வையோ-ருபை செய்வையோ, சத்தாகி என் சித்தமிசை. எ-று.

- கள்ள அங்கக்காலர் எனப்பிரித்து கரிய சரீரத்தையுடைய யமபடர் எனினுமாம். பரிசு - முங்கில் அகணிகளால் கூடைபோல வட்டமாகப் பின்னி மேற்புறத்தில் தோலால் மூடப்பட்டிருப்பதாகிய ஒருவகைத்தெப் பம். இது இக்காலத்துத் தென்னாட்டில் காவேரி முதலிய நதிகளிலுண்டு.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றெறுன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின்வாய்ப் பட்டு." — என்று இவ்வாறு பிறவிமுதலியவற்றைக் கடல் முதலியவாக மேலோர் கூறுதலுங் காண்க.

இந்தப் பிறவியாகிய கடலில் முழுகி, அகங்காரமாகிய முதலேவாயிற் சிக்கி, திருவினைகளாகிய அலைகளால் எறியப்பட்டு, மாதர்களுடைய காம மயக்கமாகிய சுழற்காற்றடிக்க, பசையாகிய காட்டாறு மேன்மேலும் வந்துமோத, சிறு தோணிக்காரர்போல, ஞானமாகிய மரக்கலத்தையும் கைசோரவிட்டு, மதிமயங்கி, திருட்டுக்கப்பல்போன்ற யமதூதர் வருவரே யென்று அஞ்சி அருவிபாறுபோலக் கண்ணீரைப்பெருக்கி நிற்கு எளியேன் மோக்ஷமாகிய கரையைச் சேரும்படிக்குக் கருணைசெய்வாயோ என்பதாம்.

3. தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரஜா லக்கோலம்
வஞ்சனை பொருமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே
யெந்த நாளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். தந்தை-தகப்பன், தாய்-மாதா, தமர்-உறவோர், தாரம்-மனைவி, மகவு-குழந்தை, என்னும்-என்று சொல்லப்படுகிற, இவையெல்லாம்-இப் பொருள்களெல்லாம், சந்தையில் கூட்டம்-சந்தையில் கூடுங் கூட்டத்தை யொக்கும், இதிலோ சந்தேகம் இல்லை-இதனிடத்திலோ ஐயமில்லை, மணி மாடம்-ரத்நகசிதமான வீடுகள், மாளிகை-மாளிகைகள், மேடை-மேடை கள், சதுரங்க சேனையுடனே-சதுரங்கசேனைகள் ஆகிய இவற்றொடு, வந் தது-உண்டானதாகிய, ஓர் வாழ்வும்-ஒப்பற்ற வாழ்க்கையும், ஓர் இந்த்ர ஜாலக்கோலம்-ஓர் இந்த்ரஜாலத்தி னழகையொக்கும், வஞ்சனை-வஞ்சகம், பொருமை-பொறுக்காமை, லோபம்-உலோபகுணம், (ஆகிய இவைகள்) வைத்த-தன்னிடத்து வைக்கப்பட்ட, மனம்ஆம்கிருமி சேர்ந்த-மனமாகிய புழுசேர்ந்த, மலபாண்டமோ-மலபாண்டமாகிய தேகமோ, வாஞ்சனையி லாத கனவே-விருப்பஞ்செய்யப்படாத சொப்பனமே, (இவவிஷயமாகவே) எந்தாளும்-(பெருக்கம சருக்கம் என்கிற) எக்காலமும், சரியெனத் தேர் ந்து தேர்ந்து-சரியெனநிர்ணயித்து தெளிந்து, இரவு பகல் இல்லாவிடத்து-இராப்பகலற்றவிடத்தில், தேகமாய்நின்ற-உடலாயிருக்கின்ற, நின்அருள்வெள்ள மீதில்-உன் திருவருள் வெள்ளத்தில், யான் என்பது அறவும் மூழ்கி-யா னென்னுஞ் செருக்கற்றொழியமுழுகி, சிந்தை-மனமானது, தெளியாது-தெளியாமல், சுழலும்வகை எனைகொல்-சுழலும்விதம் யாது, தேடரிய சத் தாகி. எ-று.

மலபாண்டம் மலம் பொதிந்த பாத்திரம். ஒருகாலத்தில் ராஜாதிகாரத்தால் பலபொருள்களும் ஓரிடத்தில் வந்துசேர்தற்குரியசந்தையில்கொள்வோர் பலர்வந்து நெருங்குதல்போல, வினைவயத்தால் வந்து ஒருகுடும்பத்திற் கூடுவோராதலால், தந்தை தாய்தமர் தாரமக வென்னுமிவையெலாஞ் சந்தையிற் கூட்டமென்றார். சதுரங்கம் அரசர்க்குரிய நால்வகைப்படை. அவை, யானை, குதிரை, தேர், காலாள் என்பன.

தாய்தந்தை முதலானோர் சந்தையிற்கூடிய கூட்டம்போல்வார், மாட மாளிகை சதுரங்கசேனை என்பவற்றோடு கூடிய வாழ்வு இந்திரஜாலம் போல்வது, வஞ்சனை முதலானவைகளுக் கிடமாகிய சரீரமோ சொப்பநம் போல்வது, இவைகளை எக்காலத்தும் உயாவுதாழ்வு கருதாது ஒரு நிகரனவாகத் தெளிந்து, என்மனமானது ஒரு நிலையில் நில்லாமல் சுழலுதற்குக் காரணம் யாது என்பதாம்.

4 ஆடாம லோய்ந்திட்ட பம்பரம் போல்வினை
யடங்கிமனம் வீழுநேரே
யறியாமை யாகின்ற விருளகல விருளொளியு
மல்லா திருந்தவெளிபோற்
கோடா தெனைக்கண் டெனக்குணிறை சாந்தவெளி
கூடியின் பாதீதமுங்
கூடினே னேசரியை கிரியையின் முயன்றுநெறி
கூடினே னேவல்லனியா
னீடாக வேயாறு வீட்டினி னிரம்பியே
யிலகிவளர் பிராணனென்னு
மிருகதி யினைக்கட்டி யோகபர னாகாம
லேழைக்கு டும்பனெகித்
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ - ள். ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம்போல் - ஆடாமல் நின்று விட்ட பம்பரம்போல, மனம் விசை அடங்கி வீழ - மனமானது விசை யொடுங்கி விழவும், நேரே-நேராக, அறியாமையாகின்ற - அஞ்ஞானமாகிய, இருள் அகல - இருள் நீங்கவும், இருள் ஒளியும்-இருள் ஒளிக ளிரண்டும், அல்லாதிருந்த - அல்லாமலிருந்த, வெளிபோல் - பரமாகாயம் போல, கோடாது என்னைக்கண்டு-பிசகாம லென்னைப்பார்த்து, எனக் குள் நிறை-என்னுள்ளே நிறைந்த, சாந்தவெளி கூடி - உபசாந்தமென் னும் ஆகாயத்திற்சேர்ந்து, இன்ப அதீதமும் கூடினேனே-சுகாதீத நில

யத்தையு மடைந்தேனே, சரியை கிரியையில் முயன்று - சரியை கிரியை யில் முயற்சிசெய்து, நெறி-சன்மார்க்கத்தை, கூடினேனே - சேர்ந்தேனே, அல்லன் யான்-அப்படி யல்லாதவனாகிய நான், ஈடாக-பெருமையாக, ஆறு வீட்டினில் நிரம்பி-(ஆறு தாரகைகளாகிய) ஆறு வீதிகளில் நிறைந்து, இலகி வளர்-பிரகாசித்து வளர்கின்ற, ப்ராணன் என்னும்-பிராணவாய வென்கிற, இருதியினைக் கட்டி-பெரிய சிவியத்தைக கட்டி, யோகபரன் ஆகாமல்-யோகவானாகாமல், ஏழைக்குடும்பன் ஆகி - ஏழைக்குடியாகி, தேடாது அழிக்க-தேடாமல் செலவுசெய்ய, ஒரு மதிவந்தது-ஒரு புத்தியுண்டாயிற்று, என்-(இதற்குக் காரணம்) யாது, தேடரிய சத்தாகி. எ-று

இருவொளியு மல்லா திருந்தவெளி - சகோதயமாய் விளங்கும் பரமா காசம். யோகபரன் - யோகநிலை கைவந்தவனும் அத்ருஷ்டவானும். ஆடிக் கொண்டிருந்த பம்பரமானது ஆட்டந் தவிர்ந்து விழுந்து அசைவறக் கிடந் தாற்போல, மனம் புலன்வழியிற் சென்றலைபாமல் அசைவற் றிருக்கும்படி, அஞ்ஞானம் நீங்க, சகோதயமாய் விளங்கும் பரமாகாயத்தை அடைந்து சுகாநிசயத்தையு மடைந்தே னல்லன, சரியாதி பாகங்களும் கைவரப் பெற்றே னல்லன், ஆறுதாரகைகளிலும் வியாபித்து விளங்குகின்ற பிராண வாயு வென்கிற பெருஞ்செல்வத்தைக் கட்டிவைத்து யோகபரன் ஆகா மல், ஏழையாகி, தேடாமல் செலவுசெய்ய ஒருபுத்தி யனக்குண்டாயிற்று. இதற்குக்காரணம் என்னே என்பது கருத்து.

5 பாடாது பாடிப் படித்தளவில் சமயமும்
பஞ்சுபடு சொல்லனிவனைப்
பார்மினே பார்மினே வென்றுசபை கூடவும்
பரமார்த்த மிதுவென்னவே
ஆடாது மாடிநெஞ் சுருகிநெக் காடவே
யமலமே யேகமேயெம்
ஆதியே சோதியே யெங்குநிறை கடவுளே
யரசே யெனக்கூவிநான்
வாடாது வாடுமென் முகவாட்ட முங்கண்டு
வாடா வெனக்கருணைதீ
வைத்திடா வண்ணமே சங்கேத மாவிந்த
வன்மையை வளர்ப்பித்ததார்
தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். பாடாது பாடி படித்து - பாடாததெல்லாம் பாடிப்படித்து, அளவு இல்-அளவற்ற, சமயமும் - சமயங்களும், பஞ்சுபடு சொல்லன் இவனை-பஞ்சுபோல்பறக்கும் நொய்மையான சொற்களையுடைய இவனை, பார்மின் பார்மின்என்று-பாருங்கள் பாருங்கள் என்று சொல்லிக்கொண்டு, சபை கூடவும்-சபைசேரவும், இது பரமார்த்தம என்ன - இது மேலான பொருளென்று, ஆடாதும் ஆடி - ஆடாதவகையாய்க் கூத்தாடி, நெஞ்சு உருகிநெக்கு ஆட- மனமுருகி நெகிழ்ந்தாட, அமலமே-பரிசுத்த வஸ்துவே, எகமே-ஒன்றே, எம் ஆதியே-எமக்குக் காரணபூதனே, சோதியே-ஒளியே, எங்கும் நிறை கடவுளே-எல்லிடத்தும் நிறைந்திருக்கும் கடவுளே, அரசே-அரசனே, எனக் கூவி என்று பலவகையாக அழைத்து, நான் வாடாது வாடும்-நான் (ஒருவரும்) வாடாதவகையாய் வாடுகின்ற, என் முகவாட்டமும் கண்டு என் முகவாட்டத்தையும் பார்த்து, வாடாஎன-வாடாவென்று, நீ கருணைவைத்திடா வண்ணம் நீகருணை செய்யாதவகை, சங்கேதமா-நியமமாக, இந்த வன்மையை வளர்ப்பித்தது ஆர் - இந்தக் கடிநத்தன்மையை விருத்தியடைவித்தது யார், தேடாது தேடுவோர்-தேடாது தேடுவோராகிய அறிஞர்க்கும், தேட்டு அற்ற தேட்டமே-தேடுதல்லாத திரவியமே, தேடரிய சத்தாகி. எ-று.

தேடாது தேடுவோர்-தற்போதத்தை முன்னிடாது திருவருளே முன்னிட்டுத் தேடுவோர். அளவற்ற சமயத்தார் என்னை நோக்கி இவன்பஞ்சு போல மிகவும் நொய்தாய்ப் பறக்கும் சொற்களையுடைய ஏழை, இவனைப் பாருங்களென்று சபைகூடவும், அதைச சகியாமல் நான் வாடும் வாட்டத்தைக் கண்டும் இரங்காத மனவன்மையை உனக்குக் கற்பித்தது யார் என்பது கருத்து.

6 பிறியாத தண்ணருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்ப வுண்மையை யளித்தனையென் மனதுறப்
பேரம் பலக்கடவுளாய்
அறிவா யிருந்திடும் நாதவொலி காட்டியே
யமிர்தப்ர வாகசித்தி
அருளினை யலாதுதிரு வம்பலமு மாகியெனை
யாண்டனைபி னெய்தி நெறியாய்க்
குறிதா னளித்தனைநன் மரவுரிகொ ளத்தணைக்
கோலமா யசபாநலம்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா விருக்கநெறி
காட்டினை யெலாமிருக்கச்

சிறியேன் மயங்கிமிக வறிவின்மை யாவனே
தேடரிய சத்தாகியென்
சித்தநிலை சூடிகொண்ட வறிவான தெய்வமே
தேறிசை மயானத்தமே.

இ-ள். பிறியாத-நீங்காத, தண் அருள்-தண்ணிய அருளோயுடைய, சிவ ஞானியாய் வந்து-சிவஞானியாகிவந்து, பேசி அரிய வாசியால்-சொல்லு தற்கரிய வாயுதாரணியினால், பேரின்ப வுண்மையை - பேராநந்த வுண் மையை, அளித்தனை-கிருபைசெய்தாய், என் மனது அற-என்மனமிறக்க, பேரம்பலக்கடவுளாய்-பேரம்பலக்கடவுளாகி, அறிவா யிருத்திநிற்-அறிவுரு வாயிருக்கின்ற, நாதவொலி காட்டி-நாத வோசையைக்காட்டி, அமிர்தப்ர வாக வித்தி-அமிர்தப் பெருக்கின் பேற்றை, அருளினை-அருளசெய்தாய், அலாது-அன்றியும், திருவம்பலமும் ஆகி-திருவம்பலரூபமுமாகி, என்னை யாண்டனை - என்னையாட்கொண்டாய், பின் எய்தி-பிறகு வந்து, நெறி ஆய்-முறைமையாய, குறிதான் அளித்தனை-இலக்கையுமருள்செய்தாய், நல் மரவுரிகொள்-சிறந்த மரவுரியைத்தரித்த, அந்தணாக்கோலமாய்-அந்தண வடிவமாகி, அசபாநலம்கூறினபின்-அஜபாக்கியை எனக்குபதேசித்தபிறகு, மௌனி ஆய் சும்மா இருக்க-மௌனியாகிச சும்மாவிருக்கும்படி, நெறிகூட் டினை-கன்னெறிக்கட்சேர்த்தாய், எல்லாம்இருக்க-இவைகளெல்லாமிருக்க, சிறியேன்-சிறியேனுகிய நான், மயங்கி-மயக்கங்கொண்டு, மிக அறிவின்மை யாவனே-மிகுதியும் அஞ்ஞானியாய் விடுவேனே, தேடரியசத்தாகி. எ-று.

வாசி - குதிரை, அது இவ்விடத்துக் சுற்றையுணர்த்தி நின்றது. உண்மை - உளதாந தன்மை. பேரம்பலம் - சிற்சபை. அஜபம் - செபி யாது செபித்தல் வினைகளை நீறுபடுத்தலால் அஜபத்தை அந்நெறியென் றார். இது "பொன்னம் பலத்தாடியை யைந்தெழுத்தாற் செவியாது நீ செவித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே" என்னும் பட்டினத்தடிகள் திரு வாக்காலு முணர்க. சிவஞானி முதலாகிய பலவுருவங்களாய் வந்து நீ உபகரித்திருந்தும், சிறியேன மயங்கி அஞ்ஞானியாய் விடுவோ என் கருத்து.

7 ஆரா ரெனக்கென்ன போதித்து மென்னவெண்
ணறிவினை மயக்க வசமோ
அண்டகோ டிகளெலாங் கருப்பவறை போலவு
மடுக்கடுக் காவமைதனிற்
பேராம னின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவது லாதொன்றினும்
பின்னமுற மருவாது நன்னயத் தாலினிப்
பேரின்ப முத்திநிலையும்

தாராது தள்ளவும் போகாது ஒலது
தள்ளினும் போகேனியான்
தடையேது மில்லையாண் டவனடிமை யென்னுமிரு
தன்மையிலு மென்வழக்குத்
தீராது விடுவதிலை நடுவான கடவுளே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். எனக்கு-அடியேனுக்கு, ஆர் ஆர்-எவ்வெவருமு, என்னபோதித்தும-எதைப்போதிப்பினும், என்ன-என்ன லாபம், என் அறிவினை மயக்கவசமோ-என் புத்தியைப்பேதிக்கவசமாகுமோ, அண்டகோடிகள் எல்லாம்-அண்டகோடிகளேயெல்லாம், கருப்ப அறைபோலவும்-கர்ப்ப வீடுபோலவும், அடுக்கு அடுக்கா அமைத்து-வரிசை வரிசையாயமைத்து, பேராமல் நின்ற-நிலைபெறுது நின்ற, பரவெளியிலே-பரமாகாயத்தில், மனவெளி பிறங்குவது அல்லாது-மனுகாயம் பிரகாசிப்பதன்றி, ஒன்றினும்-மற்றொன்றினும், பின்னம் உற மருவாது-அழியும்படி பொருந்தாது, நல் நயத்தால்-நல்ல விருப்பத்தால், இனி-இனி, பேரின்ப முத்திநிலையும்-பேரானந்த ஹேதுவான மோக்ஷநிலையையும், தாராது-கொடாமல், தள்ளவும்போகாது-தள்ளவும்படாது, உன்னால் அதுதள்ளினும்-உன்னியமனத்தால் அதுதள்ளினாலும், யான் போகேன்-நான் போகமாட்டேன், தடையேதும் இல்லை-தடை சிறிது மில்லை, ஆனடவன் அடிமையென்னும்-ஆண்டான் அடிமையென்கிற, இருதன்மையிலும்-இருதன்மை யினாலு, என்வழக்கு தீராது-என் விவகாரம்தீர்ந்துமுடியாது, (முடியாவிடினும்) விடுவதுமில்லை, நாமே விடுதல் இல்லை. நடுவானகடவுளே-நடுவு நிலைமையுள்ள கடவுளே, தேடரிய சத்தாகி. எ-று

நடுவாதல் பஞ்சகிருத்தியங்களுக்கும் பொதுவாதல். பஞ்சகிருத்தியங்களாவன-சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்பன. யாரென்னசொன்னாலும் என் புத்தியை மயக்கவசமாகுமோ, பரவெளியில் என்மனம் பொருந்துவதன்றி வேறொன்றிற பொருந்தாது. இனி முத்தி நயத் தராமல் தள்ளினாலும் நான் போகமாட்டேன், நீயும் நானும் ஆண்டான் அடிமை எனுற வழக்கும் ஒழியாது. ஆதலால் உன்னை விடமாட்டேன் என்பதாம்.

8 கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணுமல குலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மிளமையொ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்
சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். கந்துக மதக்கரியை வசமா நடத்தல் ஆம் - குதிரைகளையும் மதயானைகளையும் வசப்படுத்தி நடத்தல் கூடும், கரடி வெம் புலிவாயையும் கட்டலாம்-கரடி வாயையும் வெம்புலிவாயையும் கட்டுதல் கூடும், ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம - ஒப்பற்ற சிங்கத்தின் முதுகிலேறி உட்கார்ந்திருத்தல் கூடும், கட்செவி எடுத்தாட்டலாம் - பாமபுகளைப் புற்றினின்றும் வெளிப்படுத்தி யாட்டுதல் கூடும், வெம் தழலின் - வெவ்விய நெருப்பில், இரதம்வைத்து - பாதரசத்தையிட்டு, ஐந்துலோகத்தையும்-பஞ்சலோஹங்களையும், வேதித்து-ஸ்பரிச மணிசெய்து, விற்று-விக்ரயித்து, உண்ணலாம் - (அப் பொருளைகொண்டு) உண்டு பிழைக்கலாம், வேறொருவர் காணுமல - வேறொருவர் பாராதிருக்க, உலகதது உலாவலாம் - உலகின்கண் சஞ்சரிக்கலாம், விணணவரை வேவல் கொளலாம் - தேவர்களை ஏவல்கேட்கப் பண்ணலாம், சந்ததமும் - சதாகாலமும், இளமையொடு இருக்கலாம - இளமைப்பருவத்துடனிருக்கலாம், மற்றொரு சரீரத்தினும் புகுதலாம் - வேறொரு சரீரத்தினும் பிரவேசிக்கலாம் - சலமேல் நடக்கலாம் - நீரின்மேல் நடக்கலாம், கனல்மேல் இருக்கலாம் - நெருப்பின்மேல் தங்கியிருக்கலாம், தனிகரில் சித்திபெறலாம்-தமக்கு சமானமில்லாத (பிற) சித்திகளையும் பெறலாம், சிந்தையை அடக்கி-மனத்தை யடக்கி, சும்மா இருக்கின்ற திறம் அரிது - சும்மா விருக்கும் வகை யருமையாகும், சித்தமிசை. 61

கந்துகம் - குறுநிலமன்னர் குதிரை. பஞ்சலோஹங்கள் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பன. ஸ்பரிசவேதிசெய்தல்-பொன் ஞக்குதல். மற்றொரு சரீரத்திற் புகுதலைப் பரகாயப்ரவேசமென்பர் வட நூலார். சலமேல் நடத்தலையும் கனன்மே லிருத்தலையும் முறையே, ஜல ஸ்தம்பநமெனவும் அக்நிஸ்தம்பநமெனவுங் கூறுவர். மிருகங்களுள் தனக் குச் சமாநமற்றதாதலால், சிங்கத்தை ஒரு சிங்கமென்றார். மதயானை சிங் கம் முதலியவற்றை அடக்கியாளலாம், மனத்தையடக்கிச சும்மாவிருத்தல் அரிது என்பதாம்.

9 எல்லா மறிந்தவரு மேதுமறி யாதவரு
மில்லையெனு மிவ்வுலகமீ
தேதுமறி யாதவ னெனப்பெயர் தரித்துமிக
வேழைக்கு ளேழையாகிக்
கல்லாத வறிவிற் கடைப்பட்ட நானன்று
கையிலு லுண்மைஞானம்
கற்பித்த நின்னருளி னுக்கென்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றேவலுன்
அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற்
றுபாச வடிவமான
அந்தகா நீயொரு பகட்டாற் பகட்டுவை
தடாதடா காசுகும்பால்
சொல்லாத டாவென்று பேசவா யதுதந்த
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே

இ-ள். எல்லாம் அறிந்தவரும் - எல்லாம் தெரிந்தவர்களும், ஏதும் அறியாதவரும் - ஒன்றுந் தெரியாதவராகிய, இல்லை என்னும - இல்லை யென்று சொல்லுதற்குரிய, இவ்வுலகமீ-இந்த வுலகத்தில், ஏதும் அறி யாதவன் என-ஒன்றுமறியாதவனென்று, பெயர்தரித்து-பெயர்படைத்து, மிக வழைக்குள் வழையாகி - மிகவும் அறிவில்லாதவர்களுக்குள் அறி வில்லா வனாய், கல்லாத அறிவின்-(கற்கவேண்டியவற்றைக) கல்லாத புல் லறிவினால, கடைப்பட்ட நான்-கடையாகிய நான், அன்று-அக்காலத்தில், கையிலுல் - கையமைபபால். உண்மைஞானம் கற்பித்த - மெய்ஞ்ஞான தை கற்பித்த, நின் - உனது, அருளினுக்கு - திருவருளுக்கு, குற்றேவல் நான்-சூற்றேவற்குரிய அடியனேன, என்னகைம்மாறு காட்டுவேன்-என்ன பிரதியுபகாரம் செய்யவல்லேன், அல ரார்ந்த மேனியொடு - இருள் நிறை ந்த வுடம்போடு, குண்டுகண்-ஆழ்ந்த கண்களோடும், பிறை எயிறு - பிறை

போன்ற கோரதங்களையுமுடைய, அபாசவடிவமான-பார்த்தோர் அஞ்சத்தக்க பயங்கரமான ரூபத்தைக்கூடிய, அந்தகா-யமனே, நீ ஒரு பகட்டால் பகட்டுவது-நீயொரு கடாவைக்கொண்டு மயக்குதல், அடாதடா-தகாதடா, காசுகம்பால் செல்லாகடா-உன் காசு நம்மிடத்தில் செல்லாதடா, என்றுபேச-என்று உரப்பிப் பேசுதற்கு, வாய்தந்த-வாக்குக்கொடுத்த, செல்வமே-என துநிதியே, சத்தாகியென் சித்தமிசை எ-று.

செய்தற் கிசையாவிடினும் என்பார், என்னகைம்மாறு காட்டுவேன் என்றார். கடவுளருள் பெற்றோர் இவ்வாறு கூறுதல், "பட்டிக்கடாவில் வருமந்தகா வுனைப் பாறிய-வெட்டிப் புறங்கண்டலாது விடேன் வெய்ய சூளினைப்போய்-முட்டிப்பொருத செவவேற பெருமாடிருமுன்பு நின்றேன்-கட்டிப் புறப்படடா சத்திவாளென்றன் கையதுவே" என்றற்றொடக்கத்தனவற்றிற் காண்க.

10 மின்போலு மிடையொடியு மொடியுமென மொழிதல்
மென்சிலம் பொலிகளார்ப்ப [போன்
வீங்கிப் புடைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னுர்கள் பின்னுவலாய்
என்போ லலைந்தவர்கள் கற்றூர்கள் கல்லார்க
ளிருவர்களி லொருவருண்டோ
என்செய்கே னம்மம்ம வென்பாவ மென்கொடுமை
யேதென் றெடுத்துமொழிவேன்
அன்பால் வியந்துருகி யடியற்ற மரமென்ன
வடியிலே வீழ்ந்துவீழ்ந்தெம்
அடிகளே யுமதடிமை யாங்களெனு நால்வருக்
கறமாதி பொருளுரைப்பத்
தென்பாலின் முகமாகி வடவா லிருக்கின்ற
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ-ள். மின்போலும் இடை-மின்னற் கொடியை யொத்த இடையானது, ஒடியும் ஒடியும் எனமொழிதல் போல்-ஒடியு ஒடியுமென்று சொல்லுதல்போல, மென்சிலம்பு ஒலிகள் ஆர்ப்ப-மெல்லிய காற்சிலம்போசைகள் ஆரவாரிக்க, வீங்கி-பருத்து, புடைத்து-புடைகொண்டு, விழு-(சிலநாளில்) தளர்ந் தொழியாநின்ற, சுமை அன்ன-பெரும்பாரத்தையொத்த, கொங்கை-ஸ்தனங்களையுடைய, மடமின்னுர்கள்பின்-இளமைபொருந்திய மாதர்களின்பின், ஆவலால்-(அவர்கள் மேல் வைத்த) விருப்பத்தால், என்போல் அலைந்தவர்கள்-என்னைப்போலத் திரிந்தவர்கள், கற்றூர்கள் கல்லார்கள்-

கற்றவர்கள் கல்லாதவர்கள் என்கிற, இருவர்களில் - இருநிறத்தாருள், ஒருவர் உண்டோ - ஒருவராயினுமுளரோ, என்செய்கேன்-என்ன செய் வேன், என்பாவம்-என்பாவத்தையும், என் கொடுமை என் கொடுமைகளை யும், ஏதென்று எடுத்துமொழிவேன் என்னென் றெடுத்துச சொல்வேன், அன்பால் வியந்து உருகி-அன்பிலால் நெகிழ்ந்து மனங்கரைந்து, அடி அற்ற மரம் என்ன-வேரற்றமரம்போல, அடியிலே வீழ்ந்து வீழ்ந்து-உனது திரு வடியில் விழுந்து விழுந்து, எம அடிகளோ எமது கடவுளே, யாங்கள் உமது அடிமை என்னும்-நாங்கள் உமது அடிமைகள் என்றுப்சார்த்தித்த, நால் வருக்கு-சநகாதிகளாகிய நால்வருக்கும, அறமாதி பொருள் உரைப்ப-தர் மாதிகளாகிய பொருள்களை உபதேசித்தற்காக, தென்பாலின் முகமாகி-தெற்குத்திசையின் முகமாகி, வடவால் இருக்கின்ற-கல்லாலின் நிழலில் எழுந்தருளியிருக்கின்ற, செல்வமே-(எமது) நிதியே, சத்தாகியென் சித்த மிசை.

அம்மம்ம என்பது உரையசையடுக்கு. அறமாதிபொருள்-தர்மார்த்த காம மோக்ஷங்கள். மடமின்னார்கள் பின்னேவலாய் என்றும் பாடம்.

11 புத்தமிர்த போகமுங் கற்பகந னீழலிற்
பொலிவுற விருக்குமியல்பும்
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்டல ஆதிக்கமும்
மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவுமெ
மாலுமொரு சுட்டுமறவே
வைக்கின்ற வைப்பாளன் மௌனதே சிகனென்ன
வந்தகின் னருள்வாழிகாண்
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே
சூருதிமுடி வானபொருளே
சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள்
சுரந்துபொழி கருணைமுகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சுத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

இ - ள். புத்தமிர்த போகமும் - தூதகமாகிய அமிர்தானுபவமும், கற்பகநல் நீழலில்-கற்பகவிருட்சத்தின் நல்ல நிழலில், பொலிவுற இருக் கும் இயல்பும் - ப்ரகாசமாக வீற்றிருக்கும் தன்மையும், பொன்னுலகில்-ஸ்வர்க்க லோகத்திலுள்ள, அயிராவதத்தேறு-ஐராவதமென்னும் யானை யின்மேலேறுகின்ற, வரிசையும - சிறப்பும், பூமண்டல ஆதிக்கமும் -

பூமண்டலத்தில் ஏற்றமும், மத்த வெறியினா வேண்டும் - பிரபஞ்சமாயை யாகிய உன்மத்தங்கொண்ட வெறியாளரால் விரும்பப்படுகின்ற, மால்-ஆசையின் விவகாரம், என்று-என்றுதுணிந்து, தள்ளவும்-நீக்கவும்; எம்மாலும்-எங்களாலும், ஒரு சுட்டு அறவும் ஒரு சுட்டுதல் அற்றொழியவும், வைக்கின்ற வைப்பாளன்-எம்மை (மௌன நிலையில்) வைக்கின்ற பெருமையாளன், மௌனதேசிகன் என்ன-மௌனகுருவென்று சொல்லும்படி, வந்து எனக்குக்கிடைத்த, நின் அருள்வாழி - உன் திருவருள்வாழ்க, சுத்தபரிபூரண அகண்டமே சுத்தமுடன்பிருபூர்த்தியுமுள்ள அகண்ட ரூபமே,ஏகமே-தனிப்பொருளே, சுருதிமுடிவு ஆனபொருளே - வேதாந்தமாகிய வஸ்துவே, சொல்அரிய-அளவிட்டுச சொல்லுதற்கரிய, உயிரினிடை - சீவர்களிடத்து, அங்கு அங்குநின்று - அவ்வவ்விடங்களில் வியாபித்து நின்று, அருள் சுரந்துபொழி-அருள்மழையைச சுரந்து பொழியா நின்ற கருணை முகிலே கருணையாகிய மேகமே, சித்திநிலை - சித்திநிலை, முத்திநிலை-முத்தி நிலைகளாகிய பயிர்கள், விளைகின்ற பூமியே-விளைகின்ற நன்னிலமே, தேடரிய சத்தாகி யென்சித்தமிசை. எ-று.

சுத்தபரிபூர்ணத்வம் முதலிய குணகண விபூஷிதனே, அபிர்தாநுபவம் முதலாகிய இந்திரபோகமும், பூமண்டலபோகமும், பித்தர் வேண்டுவன என்று அவற்றினியல்புகளை யறிவுறுத்தொழித்து, சுட்டற, மௌன நிலையில் என்னை நிறுத்தற்பொருட்டு மௌனதேசிக ரூபமாகிவந்த உன் பெருங்கருணை வாழக்கடவது என்பதாம்.

சிற்சுகோதயவிலாசம்.

பதினெண்குறள்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

1 காக மோடுகழு சலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு திருத்தியைக்
காலி ரண்டுநல வாசல் பெற்றுவளர்
காம வேணடன சாலையை
மோக வாசைமுழு யிட்ட பெட்டியைமு
மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தததி குமபியை
முடங்க லாகிடை சரக்கினை
மாக விந்தரதனு பின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனர்
வனைய வெய்யதடி கார னையமன்
வந்த டிக்குமொரு மட்கலத்

தேக மானபொ யைமெய்யெ னக்கருதி
யைய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேபமல
சித்சு கோதய விலாசமே.

இ-ள். காகமோடு-காகங்களுடன், கழுகு-கழுகுகளும், அலகை-பேய்களும், நாய்-நாய்களும், நரிகள்-நரிகளும், சுற்று - சுற்றுதற்கேதுவாகிய, சோறு இடு துருத்தியை-சோற்றைத் திணித்த தோற்பையை, இரண்டு கால்-இரண்டுகால்களையும், நவவாசல் - ஒன்பது வாயில்களையும், பெற்று வளர்-பெற்றுவிருத்தியடையா நிற்கிற, காமவேள் சடன சாலையை - மன்மதனது காட்டியசாலையை, மோகஆசை மூறி இட்ட பெட்டியை மோகம ஆசை என்னுமிவற்றை யெழுதிய முறிசீட்டைச சேமித்து வைத்திருக்கிற பெட்டியை, மும்மலம் மிகுந்து ஒழுகு கேணியை - மும்மலங்கள் அதிகரித் தொழுகாநின்ற கிணற்றை, வெம்கிருமி-வெவ்விய புழுக்கள், மொய்த்து-நெருங்கி, தத்து-நெளியாநின்ற, கும்பியை-நரகத்தை, மூடங்கல் ஊர்-குற்றம் நிறைந்த, கிடைசரக்கினை-கிடைச்சரக்கை, மாகம் - ஆகாயத்தில் காணப்படுகிற, இந்த தரு - இந்திரவில்லேபும், மின்னே - மின்னலேயும், ஒத்து-நிகர்த்து, நிலை-வீளங்கும்படி, வேதம் ஓதிய குலாலனுர் - வேதங்களோப்படித்த குயவர், வனேய-உண்டாக்க, யமன்ஆன-யமனுகிய, வெய்ய தடிகாரன்-வெவ்விய தடிகாரன், வந்து அடிக்கும் - வந்து உடைக்கின்ற, ஓருமட்கலம்-ஓருமட்கலம்போன்ற, தேகமான - உடம்பாகிய, பொய்யை-பொய்ப்பொருளே, மெய்எனக்கருதி-மெய்ப்பொருளென்று நினைத்து, ஐய-ஐயனே, வையமிசை வாடவோ - உலகின்மேல் வாடிநிற்கவோ, தெரிவ தற்கு அரிய-அறிதற்கரிதாகிய, பிரமமே - பிரமப்பொருளே, அமலம்-பரிசுத்தமாகிய, சித்சுகோதயவிலாசமே-ஞானசுகோதய லீலையே. எ-று.

மும்மலங்களாவன-ஆணவம், மாயை, காமியம் எனபன. வேதமோதிய குலாலனுர்-பிரமன். கிடைசசரக்கு-விலேப்படாத சரக்கு.

ஐயனே, காகம் முதலியவைகளுக்கு விருந்தாயும், இருகாலும் ஒன்பது வாயிலுமமைந்த மன்மதனுண்டிய சாலேயாயும், பிறவாயுமுள்ள தேகமாகிய பொய்ப்பொருளே மெய்ப்பொருளாயெண்ணி இவ்வுலகத்தில் வாட்ட மடைந்து திரியலாமா என்பதாம்.

2 குறிக ளோடுகுண மேது மின்றியன
லொழுக நின்றிடு மிருமபனல்
கூட லின்றியது வாயி ருந்தபடி
கொடிய வானவ வறைக்குளே

அறிவ தேதுமற வறிவி லாமைமய
மாயி ருட்டிலை யருளினுல்
அளவி லாததனு காண மாதியை
யளித்த போதுனை யறிந்துகான்
பிறவி லாதவணை நின்றி டாதபடி
பல நிறங்கவரு முபலமாய்ப்
பெரிய மாயையி லழுந்தி நின்னது
ப்ரசா தநல்லருண் மறந்திடும்
சிறிய னேனுமுனை வந்த னைந்துசுக
மாயி ருப்பதினி யென்றுகாண்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். குறிகளோடு - அடையாளங்களுடன், குணம் எதும் இன்றி-குணம் சிறிதுமில்லாமல், அனல் ஒழுக நின்றிடும் இருப்பு நெருப்புநிர நின்ற இரும்பானது, அனல்கூடலின்றி-நெருப்போடு சேராமல், அதுவா யிருந்தபடி-அவ்விரும்பாகவே யிருந்தவண்ணம், கொடிய - கொடிதாகிய, ஆணவ அறைக்குள்ளே-ஆணவமாகிய வீட்டுக்குள்ளே, அறிவது எதும் அற-அறிதற்றன்மை சிறிதுமில்லாமல், அறிவிலாமைமயமாய் இருக்கும்-அறிவின்மையேஉருவாயிருக்கிற, என்னை-அடியேனை, அருளினுல்-கிருபை யினுல், அளவு இல்லாத-எண்ணற்ற, தநுகரணமாதிபை-தநுகரணாதிகளை, அளித்தபோது-பிரசாதித்தபோது, உன்னை அறிந்து - உன்னைதெரிந்து கொண்டு, நான்-அடியேன், பிறிவு இல்லாதவண்ணம்-பிரியாதவகை, நின் றிடாதபடி-நிலைத்திராமல், பலநிறம் கவரும் உபலமாய - பலநிறங்களைக் கவருமியற்கைய தாகிய பளிங்குக்கல்லை யொத்து, பெரிய மாயையில் அழுந்தி-பெரிய மாயா சமுத்திரதிலாழ்ந்து, நின்னது ப்ரசாதம் உனது அநுக்கிரகமாகிய, கல் அருள் மறந்திடும்-சிறந்த அருளைமறந்துவிடுகின்ற. சிறியனேனும்-அற்பனுகியநானும், உன்னை வந்து அணைந்து-உன்னைவந்து சேர்ந்து, சுகமாயிருப்பது நின்ப ரூபமாயிருக்கிறது, இனி என்று நினை யெக்காலம், தெரிவதற்கரிய. எ-று

தநுகரணமாதி தநு, கரணம் புவனம், போகம் என்பன. உபலமு-கல். அது பலநிறங்கவரும் என்ற விசேஷணத்தால் பளிங்குக்கல்லை யுணர்த்திற்று.

குறிகுணங்களற்று, நெருப்புநிகர நின்றடிபட்டஇரும்பு, நெருப்பின் சம்பந்தத்தால் செம்மைநிறமடைந்து கொழுந்துவேயன்றி நெருப்பாகாத வாறுபோல, ஆணவமயமாயிருந்தேயன்றி ஆணவமாகிய அந்நினை மாறியே ஒழியாத என்னை யருள்செய்து, தநு கரண புவன போகங்களைக

கொடுத்துநின்றபோதும் உன்னையுணர்ந்து உன்னிலையிற்பிறவறநில்லாது, அடுத்தது காட்டுமபளிங்குபோல, அடுத்த விடயங்களின் மயமாய்ப்பெரிய மாயைக் கடலிலழுந்தி, உனது பேரருளாகிய பிரசாதத்தை மறந்த சிறியேனும், உன்னை வந்துபொருந்திச சுகமாயிருக்கும் நாள் இனியெந்நாள் என்பதாம்.

3 ஐந்து பூதமொரு கான லீரென
வடங்க வந்தபெரு வானமே
ஆதி யந்தநடு வேது மின்றியரு
ளாய்நி றைந்திலகு சோதியே
தொந்த ரூபமுட னரூப மாதிகுறி
குணமி றந்துவளர் வஸ்துவே
துரிய மேதுரிய வுயிரி னுக்குணர்வு
தோன்ற நின்றருள்சு பாவமே
எந்த நாளுநடு வாகி நின்றொளிரு
மாதியே கருணை நீதியே
எந்தை யேயென விடைந்தி டைந்துருகு
மெளிய னேன்கவலை தீரவும்
சிந்தை யானதை யறிந்து நீயுனருள்
செய்ய நானுமினி யுய்வனே
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். ஐந்துபூதம் - பஞ்சமஹாபூதங்களும், ஒருகானல் நீர் என அடங்க - ஒருகானல நீர்போல அடங்கும்படி, வந்த-உண்டாகிய, பெரு வானமே - பெரிய ஆகாயமே, ஆதி அந்தம் நடு எதும் இன்றி-முதலிடை கடைக ளொன்றுமில்லாமல், அருளாய் நிறைந்து இலகுசோதியே - அருளாய்நிறைந்து பிரகாசிக்கின்ற ஒளியே, தொந்த ரூபமுடன்-த்வந்த்வரூபத்துடன், அரூபமாதி - அரூபம முதலிய, குறிகுணம் இறந்து - அடையாளம் குணம் இவற்றைக்கடந்து, வளர்-வளர்கின்ற, வஸ்துவே-பொருளே, துரியமே-துரியபதமே. துரியம் - துரியமாயிய, உயிரினுக்கு - உயிருக்கு, உணர்வுதோன்ற-அறிவுதிக்கும்படி, நின்று அருள்-நின்றருள்கின்ற, சுபாவமே-ஸ்வாபாலிகமே, எந்தநாளும்-எக்காலமும், நடுவாகிநின்று-நடுவுநிலைமையாய் நின்று, ஒளிரும் - விளங்குகின்ற, ஆதியே - முதலே, கருணை-கருணையோடுகூடிய, நீதியே - நியாயசாதுரமே, எந்தையே - எமது தந்தையே, என-என்று, இடைந்து இடைந்து உருகும்-நெகிழ்ந்து நெகிழ்ந்துருகாநின்ற, எளியனேன் கவலைதீரவும்-எளியேனது கிலேசம்நீங்கவும், சிந்தையானதைஅறிந்து என்மனக்கருத்தைஅறிந்து, நீஉன்அருள்செய்ய-

நீஉன்னருளேப்புரிய, (அதைப்பெற்று) நானும்இனிஉய்வனே-நானும் இனி உஜ்ஜீவிப்பேனே, தெரிவதறகரிய. எ-று.

தொந்தம்-பற்று-ஏறுக்குங்காலத்து பிரக்க முன்டென்பார் கருணை நீதி யென்றார். வானகம, சோதியே, தொந்தரூப முதலிய கடந்து வளர் கின்ற வஸ்துவே, சுபாவமே, நீதியே, என்று பலபடியாகப் புகழ்ந்து, மனம் நைந்து வருந்துகின்ற எளியேனது கவலைநீங்க, என் கருத்தறிந்து நீ யருள்செய்யநானும் உய்வேனே என்பதாம்.

4 ஐவ ரென்றபுல வேடர் கொட்டம
தடங்க மர்க்கடவன் முட்டியாய்
அடவி நின்றுமலே யருகி னின்றுசரு
காதி தின்றுபனி வெயிலினல்
மெய்வ ருந்துதவ மில்லை நற்சரியை
கிரியை யோகமெனு மூன்றதாய்
மேவு கின்றசவு பாக நன்னெறி
விரும்ப வில்லையுல கத்திலே
பொய்மு டங்குதொழில் யாத தற்குநல
சார தித்தொழி னடத்திடும்
புத்தி யூகமறி வற்ற மூகமிலவை
பொருளெ னக்கருது மருளன்யான்
தெய்வ நல்லருள் படைத்த வன்பரொடு
சேர வுங்கருணை கூர்வையோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். ஐவர் என்ற-ஐவரென்று சொல்லப்படுகிற, புலம் - புலன்களாகிய, வேடர் - வேடர்களுடைய, கொட்டம அடங்க - ஒழுங்கற்ற நடையடங்க, மர்க்கடவன் முட்டியாய் - குரங்கினது வலிய பிடியைப்போன்ற பிடிப்பை யுடையேனுய், அடவி நின்று-காட்டில் தங்கியும், மலே அருகில் நின்று-மலையருகில் இருந்தும், சருகு ஆதி தின்று - சருகு முதலியவற்றை யுண்டும், பனிவெயிலினல் - பனிவெயில்களால், மெய்வருந்து - உடல் வருந்துதற்குரிய, தவம் இல்லை - தவஞ்செய்தல் இல்லை, நல் - சிறந்த, சரியை கிரியை யோகம் என்னும் - சரியை கிரியை யோகமென்கிற, மூன்றதாய் மேவுகின்ற - மூன்றுகப் பொருந்திய. சுவபாகம்-படிகளாகிய, நல்நெறி-நன்மார்க்கத்தை, விரும்பவில்லை-அபேக்ஷிக்க வில்லை, உலகத் திலே-உலகின்கண், பொய்முடங்கு தொழில் யாது பொய்யாகியதொழில் யாதோ, அதற்கு - அத்தொழிலுக்கு, நல்ல சாரதித்தொழில் நடத்திடும் புத்தி-நல்ல சாரதித்தொழிலை நடத்துகின்ற புத்தியும், யூகம் - யுக்தியும்,

அறிவு அற்ற மூகம்-அறிவில்லாத மூகத்தன்மையுமாகிய இவைகளையே, பொருள் எனக் கருதும்-மெய்ப்பொருள்களென்று நினைக்கின்ற, மருளன் யான் - மருளனாகிய நான், தெய்வம் - தெய்விகமான, நல் அருள் படைத்த - நல்ல அருளைப்பெற்ற, அன்பொடு சேரவும - உன் அன்பருடன் சேர்ந்து வாழவும், கருணை கூர்வையோ - கருணை புரிவையோ, தெரிவதற்கரிய. எ-று.

கொட்டம் - கொடுமை. மருளன் - பிறழவுணர்ந்தோன். ஐம்புல வேடராணவ மடங்கும்படியாக, மர்க்கடப்பிடியாக உறுதிப்பிடி பிடித்து, காட்டில்மலையில் தவம்புரிந்து சரீரம்வருந்துதற் கேதுவாகிய தவமும் செய்தலில்லை, சரியையாதி சதுபாதமார்க்கங்களையும் இச்சிக்கலில்லை, உலகத்தில் பொய்த்தொழில்களுக்கே யுரியனாய், அதற்குரியபுத்தியாதிகளே நற்பொருள்களாயெண்ணுகிற பித்தனாகிய நான், உன் திருவருள்பெற்ற அன்பருடன் சேரும்படிக்கு எனக்குக் கிருபை செய்வையோ என்பதாம்.

5. ஏக மானவரு வான நீயருளி
னால னேகவரு வாகியே
எந்த நாளகில கோடி சிர்ஷ்டி-செய
விசையு நாள்வரைய நாண்முத
லாக நாளது வரைக்கு முன்னடிமை
கூட வேசநந மானதோ
அநந்த முண்டுநல சநந பீதிதனு
ளறிய வேண்டுவன வறியலாம்
மோக மாதிதரு பாசமானவை த
யறிந்து விட்டுனைய டைந்துமே
முழுது ணர்ந்துபர மான வின்பவெள
ளமுழ்க வேண்டுமிது வின்றியே
தேக மேநழுவி நானு மோநழுவின்
பின்னை யுய்யும்வகை யுள்ளதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். ஏகமான அருவான நீ - ஒருபடிப்பட்டிருந்த நீ, அருளினால் - கருணையினால், அனேகவருவாகி - அனேக ரூபங்களாகி, அகிலகோடி - அண்டகோடிகளை, சிர்ஷ்டிசெய-சிருஷ்டிபண்ண, இசையும் நாள்வரை - இசைந்த காலெல்லை, எந்தநாள் எந்தநாளோ. அந்நாள்முதலாக - அந்த நாள்முதலாக, நாளதுவரைக்கும்-நாளதுவரையிலும், உன் அடிமை - உன் தொண்டனாகிய நான், கூடவே சநநமானதோ - கூடவே பிறந்த பிறவியோ அநந்தம் உண்டு முழுவற்றனவாகவுள்ளது, (ஆயினும்) நல்லசநநம்

ஈது - நல்லபிறவியிது, இதனுள் அறியவேண்டுவன அறியலாம் - இதில் அறியவேண்டும் புருஷார்த்தங்களே யறியலாம், மோகமாதிகளை-மோகாதிகளைக்கொடுக்கிற, பாசமானதை-பாசத்தை, அறிந்து-உள்ளவாறு உணர்ந்து, விட்டு-கைவிட்டு, உன்னையும் என்னையும்-ஆண்டாளுகிய உன்னையும் அடிமையாகிய என்னையும், முழுது உணர்ந்து-முற்றுமுணர்ந்து, பரம்ஆனமேலான, இன்பவெள்ளம்-ஆனந்த வெள்ளத்தில், மூழ்கவேண்டும்-மூழுக வேண்டும், இது இன்றியே இதரசெய்தலில்லாமலே, தேகம் நழுவி-தேகம் என்னைவிட்டு நழுவி, நானும் நழுவின்-நானும் அதனைவிட்டு நழுவுவேனுயின், பின்னை-பிறகு, உய்யும் வகையுள்ளதோ - உஜ்ஜீவிக்கும் வகையும் எனக்குண்டோ, தெரிவதற்கரிய. எ-று.

புருஷனுக்கு, தர்மார்த்த காமமோக்ஷங்களே யன்றி வேறு பரமலாபமாக விரும்பப் படுவதொன்றின்மையால், அறியவேண்டுவன என்றதற்கு அவை பொருளாக வுரைக்கப்பட்டன.

ஒரு பொருளாயிருந்த நீ, உயிர்த்தொகுதி மேல்வைத்த பெருங்கருணையால் அநேக வுருவம்படைத்து, சிர்ஷ்டி செய்யத்தொடங்கிய நாள்முதல் இன்றளவும், நான் எடுத்த பிறவிகளநேகம், அவற்றுள், இந்தச் சரீரம் நற்சரீரம், இதில் அறியவேண்டும் புருஷார்த்தங்களே யறியலாம், ஆதலால், மோகம் முதலியவற்றை யுண்டாக்குகிற பாசத்தைவிட்டு, உன்னையும் என்னையும் பாகு படுத்துணர்ந்து, மேலாகிய சுகக்கடலில் முழுகவேண்டும், இந்த எண்ணம் நிறைவேறுதற்குமுன்னே, நான் இத்தேகத்தைவிட்டு நீங்கினுல், அதன்பிறகு எனக்குப் பிழைக்கும் வழியுண்டோ என்பதாம்.

6 நியம லக்ஷணமு மியம லக்ஷணமு
மாச நாதிவித பேதமும்,
நெடிது ணர்ந்திதய பத்ம பீடமிசை
நின்றி லங்குமரு பாகலத்
தியல றிந்துவளர் மூல குண்டலியை
யினிதி றைஞ்சியவ ளருளினுல்
எல்லை யற்றுவளர் சோதி மூலவன
லெங்கண் மோகமறு முறையிலே
வயமி குந்துவரு மமிர்த மண்டல
மதிக்குளே மதியை வைத்துநாதன்
வாய்ம துத்தமிர்த வாரி யைப்பருகி
மன்னு மாரமிர்த வடிவமாய்ச்
செயமி குந்துவரு சித்தயோகநிலை
பெற்று ஞானநெறி யடைவனே.

தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். நியமலக்ஷணமும் - நியமத்தினிலக்கணத்தையும், இயமலக்ஷணமும்-இயமத்தி னிலக்கணத்தையும், ஆசநாதி விதபேதமும் - ஆசநம் முதலான வகைகளின் வேறுபாடுகளையும், நெடிது உணர்ந்து நன்று யுணர்ந்து, இதயபத்ம பீடமிசை நின்று இலங்கும் - இருதயகமலமாகிய பீடத்தின்மேல் நிலைபெற்று விளங்குகிற, அஜபாநலத்து இயல் அறிந்து-அஜபாக்கியின் இலக்கணத்தையுமறிந்து, வளர்மூல குண்டலியை வளர்கின்ற மூலகுண்டலி சத்தியை, இனிது இறைஞ்சி-இனிதாக வணங்கி, அவள் அருளினால் - அவளது கருணையால், எல்லை அற்றுவளர் - வரம்பற்று வளர்கின்ற, சோதி-ஜ்தஜஸ்ஸையுடைய, மூலஅனல்-மூலாக்கியோடு, எங்கள் மோக மறுமுறையிலே - எங்களுடைய மௌக மந்திரக்கிரமத்தினால் வயம்மிகுந்துவரும் - வெற்றிமிகுந்துவரும், அமிர்தமண்டலமதிக்குளே-அமிர்தத்தையுடைய சந்த்ரமண்டலத் துக்குள்ளே, மதியைவைத்து-அறிவைசெலுத்தி, நான் வாய்மடித்து - நான் வாய்வைத்து, அமிர்த வாரியை பருகி-அமிர்தப்ரவாஹத்தையுண்டு, மன்னும் ஓர் அமிர்தவடிவம் ஆய்-நிலைபெற்ற அரிய அமிர்தரூபமாய், ஜெயம் மிகுந்துவரு - வெற்றி மிகுந்துவருகின்ற, சித்தயோக நிலைபெற்று-சித்தர்களுடைய யோகநிலையை யடைந்து, ஞானநெறியடைவதே - ஞான மார்க்கத்தை யடைவதே, தெரிவதற்கரிய. எ-று.

நியமலக்ஷணமாவது:—தவம், தூய்மை, சத்தவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல். இயமலக்ஷணமாவது:—கொல்லாமை, மெய்ம்மைகூறல், கள்ளாமை, பிறர் பொளிசசியாமை, இந்திரியமடக்குதல்.

ஆசநாதி விதபேதமும் என்றது-ஆசநம் முதலாக ப்ராணயாமம், ப்ரத்யாஹாரம், த்யாநம், தாரணை, சமாதி என்பவைகளை. அபஜம் என்றது-ஜபியாது ஜபித்தலை. "செவியாமனீ செவித்தாற பிறவாமுத்தி சித்திக்குமே" என்றார் பிறரும். வினைகளை நீறுபடுத்தலால் அஜபாநலம் என்றார்.

நியமயிலக்கண முதலியவற்றையறிந்து, அசபையினியலறிந்து, குண்டலி சத்தியைவணங்கி, அவளருளினால் சந்திரமண்டலத்தினமிர்தத்தைப் பருகி, அமிர்தவுருவாகி, ஜெயம் மிகுத்தோங்கும் யோகநிலையையடைந்து, அதன் வழியாய் ஞானமார்க்கத்தையு மடைவதே என்பதாம்.

7 எறிதி ரைக்கட னிகர்த்த செல்வமிக
வல்ல லென்றொருவர் பின்செலா

நில்லை யென்றுமுரை பேசி டாதலகி
லெவரு மாமென மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்முதவி
நோய்க ளற்றுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவுமெந் நாளுமே
அறிவி னின்றுருவ வாயு ணர்த்தியது
மன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீரருளை
யைய வையவினி யென்சொல்கேன்
சிறிய னேழைநம தடிமை யென்றுனது
திருவு ளத்தினி லிருந்தவாறோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். எறிகடல்திரை நிகர்த்த-வீசுகின்ற கடலின் அலைகளையொத்த, செல்வம்-செல்வமானது, பிற அல்லல் என்ற-பிறகு துன்பத்தைத் தருவ தென்று, ஒருவர்பின் செல்லாது-ஒருவாபின் செல்லாதவும், இல்லையென் னும் உரைபேசிடாது - இரப்போர்களுக்கு இல்லையென்கிற சொல்லைச் சொல்லாமலும், உலகில் எவரும்-உலகிலுள்ளயாவரும், ஆம்எனமதிக்க-ஆமென்றுமதிக்கும்படி, நெறியின்வைகி-நன்மார்க்கத்தில் தங்கி, வளர்-விருத்தியடைதற்கேதுவாகிய, செல்வமும் உதவி-பாக்கியத்தையுங்கொடு த்து, நோய்கள் அற்றசுக வாழ்க்கையாய்-பிணிகளில்லாத சுகவாழ்க்கை யை யுடையோராகி, நியமமாதி நிலைநின்று-நியமமுதலாகிய நிலைகளில் நின்று, ஞானநெறி-ஞானமார்க்கத்தை யடைந்து, நிஷ்டைகூடவும்-நிஷ் டைகூடிசகசவாநுபூதியைப் பெறவும், எந்நாளுமே-எக்காலத்தும், அறிவில் நின்று-என்னறிவினிடத்தி நின்று, குருவாய்-குருமூர்த்தமாகி, உணர்த்தி யதுமன்றி-அறிவுறுத்தினது மல்லாமல், மோனகுருவாகி-மௌனகுருவாகி, அகிலமீதுவர-உலகின்மேல் வரும்படியாக, வந்தருளினை, சீரருளை-சிறந்தவுன் திருவருளின் தன்மையை, ஐய ஐய இனி என் சொல்கேன்-ஐயனே ஐயனே இனியென்னென்று புகழ்ந்துரைகேன், சிறியன் ஏழை-சிறியவனாகிய இந்த ஏழை, நமது அடிமையென்று - நமதுசித்தாண்ட னென்று, உனது திருவுளத்தினி லிருந்தவாறோ - உன்திருவுள்ளத்திற்கிடங் தவோ, தெரிவதற்கரிய. எ-து.

அறிவில் நின்றுகுருவாய் உணர்த்தியது அருவசா தாத்காரம். மோன குருவாகி யென்றது உருவசாதாகாரம். செல்வத்தை அலைகளுக்கு

நிகராகக் கூறுதல், "நிறைசெல்வம் நீரிற்சுருட்டு நெடுந்திரைகள்" என்றற் றொடக்கத் தனவற்றுற்காண்க.

உலகத்தின் செல்வ முதலியவை நிலையில்லனவென் றறிவுறுத்தி, மோக்ஷ மார்க்கத்துக் கேதுவாகிய நியமாதிகளின் நிலையில்நின்று ஞான நிஷ்டைகூடும்படி, எப்போதும், என்னறிவில் நின் றணர்த்தியதுமன்றி, கட்புலனும்படி, மோனகுருவாகி உலகின்மீதுவந்த உன்பெருகருணையை யென்சொல்லிப் புகழ்வேன், இவன் சிறியன், அறிவிலி யாயினும், நமது அடிமைதானேயென்று உன்திருவுள்ளத்தின் கட் கிடந்தபடி தா என்பதாம்.

8 எவ்வு யிர்த்திரளு முலகி லெண்ணுயி
ரெனக்கு ழைந்துருகி நன்மையாய்
இதமு ரைப்பவென தென்ற யாவையு
மெடுத்தெ றிந்தமத யானைபோல்
கவ்வை யற்றநடை பயில வன்பரடி
கண்ட தேயருளின் வடிவமாக்
கண்ட யாவையு மகண்ட மென்னவிரு
கைகு விக்குமலர் தூவியே
பவ்வ வெண்டிரை கொடுத்த தண்டரளம்
விழிய திர்ப்பமொழி குளறியே
பாடி யாடியு ளுடைந்து டைந்தெழுது
பாவை யொத்தசைத லின்றியே
திவ்ய வன்புருவ மாகி யன்பரொடு
மின்ப வீட்டினி லிருப்பனே
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சித்ச கோதய விலாசமே.

இ-ள். உலகில்-உலகத்திலுள்ள, எவ்வுயிர்த்திரளும்-எவ்வகைப்பட்ட ஜீவராசிகளும், என்ன யிர் என - என்னுயிர் என்று பாவித்து, குழைந்து உருகி-(அவைகட்கு ஒருவிபத்து நேரிட்டால் அதைக் குறித்து) மனங் குழைந்துருகி, நன்மையும் இதம் உரைப்ப-நன்மையாகிய ஹிதங்களைச சொல்லவும், எனது என்றபாவையுய-எனதென்று சொல்லப்படுகிற எல் லாப் பொருள்களையும், மதயானைபோல் எடுத்தெறிந்த - மதயானையெடுத் தெறிவது போல எடுத்தெறிந்து, கவ்வை அற்ற நடைபயில - துன்ப மறுகைக்குக் காரணமான நன்னடையைப் பயிலவும், அன்பர் அடிகண்ட தே அருளின் வடிவம் ஆ - அன்பரது திருவடியைக் கண்டதே திரு வருளைக் கண்டதாகப் பாவித்து, கண்ட யாவையும் - பார்த்த எல்லாப் பொருள்களையும், அகண்டம் என்ன - அகண்டரூப மென்று நிசயித்து, இருகைகுவித்து - இருகரங்கூப்பி, மலர்தூவி - மலர்களைச சிந்தி, பவ்வம்-

கடலினது, வெள்திரை-வெள்ளிய அலைகளால், கொடுத்த - எடுத்தெறியப் பட்ட, தண்தரளம்-குளிர்ந்த முத்துப்போன்ற நீர்த்துளிகளை, விழி உதிர்ப்ப கண்கள் உதிர்கையும், மொழிகுளறி - வாய்தடுமாறி, பாடி ஆடி-பாடியும் ஆடியும், உடை உடைத்து உடைந்து உள நெகிழ்ந்து நெகிழ்ந்து, எழுதுபாவை-எழுதிய சித்திரப்பாவை போன்ற யொத்து, அசைதல்-இன்றி-அசைவில்லாமல், நிலயம்-தெய்விகமான, அன்பு உருவமாகி-அன்பு உருவாகி அன்பரெடும்-உன அன்பர்களுடன், இன்ப வீட்டினில் இருப்பனே-ஆகந்தமேஷகுவான மோக்ஷத்திலிருக்கப்பெறுவேனே, தெரிவதற்கரிய. எ-று.

இதில், எவ்வுயிர்த்திரளும் என்னுயிர் என என்றதனால், ஜீவகாருண்யமும், 'அன்பர் அடிகண்டமே அருளின்வடிவமா' என்றதனால் ஈசுர பக்தியும், 'எனது என்ற யாவையும் மதயானைபோல் எடுத்தெறிது' என்றதனால், பாசவைராக்யமும், 'அன்புருவமாகி இன்பவீட்டினிலிருப்பனே' என்றதனால் ப்ரஹ்மஜ்ஞானமும் அதன்பேறும் கூறப்பட்டது.

எவ்வகைப்பட்ட உயிர்களும் என்னுயிர்களே யெனக்குழைந்துருகல் முதலியவற்றை யுடையோராகிய உன் அன்பரொடுகூடி இன்பவீட்டினில் இருக்கப் பெறுவேனே என்பதாம்.

9. மத்தர் பேயரொடு பாலர் தன்மையது
மருவி யேதுரிய வடிவமாய்
மன்னு மீதசமொடு கால மாதியை
மறந்து நின்னடிய ரடியிலே
பத்தி யாய்நெடிது நம்பு மெம்மனோர்யாரு
மையு றுந்தகில மாயையைப்
பாரு பாரென நடத்த வந்ததென
பார தத்தினுமி துள்ளதோ
சுத்த நித்தவியல் பாரு மோவுனது
விசுவ மாயைநடு வாகவே
சொல்ல வேயுறும்வகை நல்ல காதிகளை
சொல்லு மாயையினு மில்லையென்
சித்த மிப்படி மயங்கு மோவருளே
நம்பி னோர்கள்பெறு பேறிதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

இ-ள். மத்தர்பேயரொடு பாலர்தன்மையது மருவி - மத்தர் பேயர் பாலர் இவர்களுடைய குணத்தைப் பொருந்தி, துரியவடிவம் ஆய-துரிய

ரூபமாகி, மண்ணு-நிலைபெற்ற, தேசமொடு காலமாதியை மறந்து - தேச காலாதிகளை மறந்து, நின் அடியர் அடியிலே-உன் னடியார்களுடைய திரு வடிகளில், பத்தியுள்ளவனுய், தெரிது நம்பும் என்னை-மிகுதியும் நம்புகின்ற என்னை, ஒரு மையல் தந்து-ஒப்பற்ற மயக்கத்தைக் கொடுத்து, அகிலமாயையை - உலகமாயையை, பாருபார் என - பார் பார் என்று, நடத்த வந்தது என-நடத்தவந்ததுயாது, இது பாரதத்திலும் உள்ளதோ-இது பாரதத்தினுமுண்டோ, சுத்த நித்த நியல்பாகுமோ - இது உனது சுத்த நித்த இயற்கையாமோ, உனது விசுவமாயை நடுவாக - உன்லோக மாயையின் இடையில், வகை சொல்லவேணும் - வழிசொல்ல வேண்டும், நல்ல காதி கதை சொல்லும்-நன்மையாகிய காதிகதையில் சொல்லப்படு கிற, மாயையிலும்-மாயைபின்வைபவத்திலும், இல்லை - இவ்வாறில்லையே, என் சித்தம் இப்படி மயங்குமோ-என்மனமானது இப்படி மயங்கலாமோ, அருளை நம்பினேர்கள் - உன் திருவருளை நம்பினவர்கள், பெறு பேறு இதோ-பெறுவதாகிய லாபம் இதுதானே, தெரிவதற்கரிய. எ-று.

மத்தர் முதலியோரது குணத்தைப் பொருந்தி, தூரியவடிவாகி, தேச வர்த்தமானங்களை மறந்து, உன்னன்பரது திருவடியை மிகவும் நம்புகின்ற என்னை, ஒரு மயக்கமூட்டி, பிரபஞ்சமாயையைப் பார்பார் என்று என்னத் தூண்டினது என்ன, இம்மாயையின் விரிவைப்பேசுவதேலோ மஹாபாரத்தி னும் பெரிதாமே, இப்படி யென்னைவருத்துதல் உன் சுத்தசாசுவத இயற் கைக்குப் பொருத்தமோ, காதிகதையில் சொல்லப்படுகிற மாயாவிலாச மும் இதற்குப் பிரமிக்கமே, மற்ற மனம் இப்படி மயங்கலாமோ, உன் திரு வருளை நம்பிகவர்கள் அடையும் லாபம் இது தானே என்பதாம்.

மத்தர்-பிறழ்வுணர்வுடையோர். பேயர் - பெயர்க்கோட்பட்டார். தேசம்-தேசவியற்கை. காலம்-காலவியற்கை. காதி-ஓர்பிராமணன். இவன் சரித் திரம் வருமாறு:—

பூலோகத்தில் சோசலதேசத்தில் இருந்த காதி என்னும் பெயருள்ள ஒரு பிராமணன், ஒருசாரியத்தை மனத்தில் நினைத்து, உறவினரைவிட்டு நீங்கி, வனதிற்குசென்று, ஒரு தடாகநீரின் நடுவில், கழுத்தளவு முழுக நின்று, மேலாகிய தவத்தைசெய்யுமட்டில்தங்கள் கழிந்தபோது, விஷ் ணுமூர்த்தி, அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, உன் கருத்தென்ன, தெரிவித் தால் அதனைக் கொடுப்போமென்று சொன்னவுடனே, அந்தப் பிராம ணன், கரையேறிவந்து திருமாலைக்கைகுவித்து வணங்கி, சுவாமீ, உமது மாயா சொரூபத்தைத் தரிசிக்க விரும்புகின்றேன் என்றான். அதைக் கேட்ட பகவான், அப்படியே யென் மாயாசொரூபத்தைக் காணப்படவை, கண்டபிறகு அதனை நீக்கக்கடவையென்று அருகிருந்து மறைந்தவுடன் பகவானைச சேவித்த சந்தோஷத்தையுடைய அவனேதியன், அந்த வனத் தில் சிலகாள் தவஞ்செய்து கொண்டிருந்து ஒருகாள், முன்னே திருமால்

அருளிச்செய்த வாக்கியத்தைச சிந்தித்துக்கொண்டே ஒருதாமரைத் நடாகத்தில் முழுகினவுடன், செய்யவேண்டியவேலதாந்திரபடகும், தியாநம்முதலிய வற்றைமறந்தவிட்டு, உறவினரிருக்கிற தானவீட்டில், தான் வியாதியினால் இறந்தவதைத தன்னைகசுண்டான், மேலும் உறவினர், தன் மனைவி, தன் தாய் முதலியோர் தன்மேல விழுந்துகட்டிகொண்டு கதறவும்பார்த்தான், இதற்குமேல் தன்னை மயாநத்திற்கொண்டுபோய்ச சுட்டுச சாம்பலாக்கவும் பார்த்தான், அந்த நீரின் நடுவிலிருக்கிற அந்தணன், பின்னும், ஸாணதேசத்தின ஒருகரமுடிவில் இருகிற சேர்குலத்தில், ஒரு பெண்ணின் வயற்றில், வெந்த கரிக்கட்டைபோல ஆண்மகனுப்பிறந்து, அந்தக் குலத்துப்பெண்ணொருத்தியை மணம்புணர்ந்து, அவளோடு மலைகளிலும் வணங்களிலும், மனமும் பிராணவாயுவும்போல வொாற்றுமையாய்க் கலந்துவாழும் நாளில், தன்குலம் விளங்கச சில புத்திரரைப்பெற்றான். சிலநாளில் மூப்புவந்தடையவே தன் சேரிக்குச கொஞ்ச தூரத்தில் ஒரு சிறுதழைக்குடில்கட்டி அதில் வசித்துக்கொண்டிருக்கும்போது, தன்மக்களுக்கும் மூப்புவந்தடைந்தது. தன் மனைவி மக்களுக்கும் தனக்கும் ஒரு பிக்க, வார்த்திக்கியம் வந்ததைப்பார்த்து வருந்துங்காலத்தில், தன்னை யொழிய மற்றவரையெல்லாம் காலன் கொண்டுபோய்விட, தான் தனியே யிருந்து, வாய்விட்டரற்றி, சகிக்கமாட்டாமல், மனங்கலங்கி, நிராசையுள்ளவனுய், அநேகநாடுகளில் வெகுகாலம் திரிகின்றவன், ஒருநாள்கிரநாட்டின் ராஜதானியில் புகுந்து, சொர்க்கலோகத்தில் பொன்மயமாயிருக்கிற மீதியைப்போன்ற ஒரு மீதியிற் போம்போது, இந்தகரத்தரசன் மாண்டனன், பூமியைக் காக்க வேறொரு அரசனைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வாவெனறு சொல்லியனுப்பப்பட்ட பட்டத்து பானையான து, எதிரேவரக் கண்ட இவனைத் துரதிர்கையா லெடுத்து தன் பிடரி மேற்றிக்கொண்டு போயிற்று. அப்பட்டத்து யானையால் கொண்டுவரப்பட்டஇவனை, மாநாகள் அலங்கரித்தார்கள், பழய மந்திரிமார்கள் சேனுதிபதி முதலானுர்கள் இவனை அரசனுக முடிசூட்டி, இவனது ஆக்ஞையைச சிரசாக வகித்து நடத்திவந்தார்கள், இவனும் கவலன் எனறபெயரைபெற்றுகீரதேசத்தில் நீதியாகச செங்கோல்செலுத்தி, சிங்காதனத்தின்மேல் பொலிவாக வீற்றிருந்தான். இப்படி ஒருபெருடம கழியவே, ஒருநாள் தனியனுய், காலாலநடந்து, தன் அரண்மனையின் தெருப்புறத்தில், நீசவேடத்தோடு உலாவுஞ் சமயத்து, அவ்விடத்தில் முன் சொன்ன சண்டாளா கிலர் வர்தாகள். அவர்களுள் ஒரு முதியோனவந்து இவனைப் பார்த்தவுடன், வாசையோடு தழுவி, முன் பெயரைசசொல்லி, எமகருகருப் பழய சுற்றத்தாளுகிய நீ, எம்மைவிட்டு எஙகே போனுய்? இப்போது எவ்விடத்திருக்கின்றுய்? என்று இவனது பழய வரலாற்றை உள்ளபடிசொல்லி விசாரித்தான். அதைக்கேட்ட இவன், இங்குள்ளயாராயினும் நீதானைக் கேட்பாரயின் நமக்குப் பரியாய் முடியுமென்று, ஆசசண்டாள முதியோனை, உரத்த சத்தத்தோடு அதட்டித் துரதிவிட்டு, விரைவாகத தனது அந்தப்புரத்திற்

பிரவேகித்தலும், இவற்றையெல்லாம், சாளரவாயிலில் நின்று கண்டுங் கேட்டுமிருந்த ராஜஸ்திரீகள் மந்திரிமாராகள் முதலானபேர்களுக்கு அறிவிக்க, அவர்களும் இவன் பூரவத்தில் சனகாளன்போலும் என்றறிந்து தெரிந்துகொண்டு, மிகவும் மனவருத்தமடைந்தார்கள், இவ்வியாத்திரம மனங்கலங்காமல், அவைகளே அறியாதவன்போலப் பகையடிமைபங்கா தனத்திருந்தான். இவனே மாதர்கள் மந்திரியர் முதலானர்கள் தீண்டு தற்கு அஞ்சினவராய், பிரேதத்தை அருவருத்தல்போல அருவருத் திருந்தார்கள். இவன், அருகு கல்விசெல்வகுல வீரண்டுமில்லாத பிராணிகள் போன்றிருந்தான். அந்த நகரமாந்தரெல்லாரும், இவனுடைய சம்பந்தத் தால் நாமெல்லாரும் பதிதராவேம் இனி ஒரு பிராயசித்தத்தாலும் பரி சுத்தராகமாட்டோம், நாம் பரிசுத்தர் ஆகற்பொருட்டுத் தீப்பாய்வோ மென்று நிசயித்து, நெருப்பைவளர்த்து அதில் எல்லாரும் விழுந்துமடிந் தார்கள். இவன், அவர்கள்மடிந்ததைக்கண்டு, நமது தொடாபாலல்லவோ இத்தனைபேரும் நாசமடைந்தார்கள். இனிநாமும் மாண்டுபோவதே தக்க காரியமென்று நெருப்பு மூட்டி, அதில் விழுமபோது, அந்தத் தீயானது இளந்தளிரை யெரிப்பதுபோல இவன் சரீரத்தை யெரிக்க, நீரில் மூழ்கி யிருந்தகாதியென்னும் வேதியன் சரீரம் பதைத்தது, உடனே நீரைவிட்டு மேலெழுந்த காதியானவன் மஹாமாயையினின்று நீங்கி ஈசுவரனது சர்வ சக்தியைக்குறித்துப் புகழ்ந்து மனங்களிதிருந்தான்.

இக்கதை மேலுமபோம். இவவிடத்திற்கு வேண்டியது இவ்வளவே யாலால் இம்மட்டில் நிறுத்தப்பட்டது, கதை முழுதும் அறிய விரும்பு வோர் ஞானவாசிட்டம் 23-வது கதை பார்க்கக்காணலாம்.

10 பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படி முருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமமை
தரும னும்பகடு மேய்ங்கயாய்த்
தளியி ருப்பவட நீழ லாலிலைர்
சகக வுதிமுனி வோர்கடம்
கொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோக ஞாநம துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகர கிர்பாரூவாய்த்

தென் முகத்தின்முக மாயி ருந்தகொலு
வெம்மு கத்தினும்வ ணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயீ விலாசமே.

இ-ள். பல்முகம் - பலதுறைகளையுடைய, சமயநெறிபடைத்தவரும் - சமயமார்க்கங்களைப் படைத்தவர்களும், யாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவரும்-நாங்களே தெய்வமென்கிற பாவிகளும், வாததர்க்க மிடுபடிறரும்-தர்க்கவாதம் பண்ணுகிற வஞ்சகரும், தலைவணங்கிட - தலைவணங்கித் தொழவும், தன் முகத்தில்-தன்னிடத்தில், உயிர்-ஜீவராசிகளை, வர அழைக்கும்-வர அழைக்கின்ற, எமதருமனும் - யமதர்மராஜனும், பகடு மேய்க்கியாய்-எருமை மேய்ப்பவனாய், தனியிருப்ப - தனியேயிருக்கவும், வட நீழலூடுவளர்கல்லாலினிழலில் விருத்தியடையாநிற்கிற, சனகனாதி முனிவோர்கள்-சனகாதி முனிவர்களுடைய, சொல்மயக்கம் தீர-வார்த்தையிலுண்டான மயக்கமானது நீங்கும்வகை, அங்கைகொடு-அழகிய கைகளைக் கொண்டு, மோனஞானம் உணர்த்தி - மோன நிலையாகிய ஞானத்தை அறிவுறுத்தி, சுத்த நித்த அருள் - சுத்த நித்த அருளானது, இயல்பாகவுள - இயற்கையாகவுள்ள, சோமசேகர-சோமசேகரன் என்கிற, கிர்பாளுவாய்-கருணைநிதியாகி, தென்முகத்தில்-தென் திசையில், முகமாயிருந்தகொலு-அபிமுகமாயிருந்தகொலுவினை, எம்முகத்தினும் வணங்குவேன்-எத்திசையிலும் தொழுவேன், தெரிவதற்கரிய. எ-று.

சோமசேகரன்-சந்திரனைச் சிரத்திலணிந்தவன். நித்தம்-சாசுவதம்.

பல சமயிகள் முதலானவர்கள் பயனற்றவர்களாயொழிய,சனகாதியர்க்கு நீ தென்முகமாய் வடநிழலில் வீற்றிருந்து மோனஞானத்தை யறிவுறுத்தருளியதிருக்கோலத்தைஎக்காலத்தும்வணங்குகின்றேன்என்பதாம்.

ஆகாபுவனம்.

சிதம்பரரகசியம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

1 ஆகார புவனபின்பா காரமாக
வங்ஙனே யொருமெழியா லகண்டாகார
யோகாது பூதிபெற்ற வன்ப ராவிக்
குறுதுணையே யென்னளவு மூகாத நட்பே
வாகாரும் படிக்கிசைகிண் கிணிவா யென்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்குமா போல்
தேகாதி யுலகமெங்கும் கலந்து தானே
நிகழனாதா னந்தமயத் தெய்வக் குன்றே.

இ-ள். ஆகாரம்-உருவமாத்திரமாய்க் காணப்படுகிற, புவனம் - உலகமானது, இன்ப ஆகாரமாக-சுகவடிவமாக, அங்ஙனே - அவ்வாறே, ஒரு மொழியால் - ஒரு சொல்லால், அகண்ட ஆகார யோகானுபூதிபெற்ற - அகண்ட ரூபமான யோகானுபவம்பெற்ற, அன்பர் - அன்பரது, ஆவிக்கு-உயிருக்கு, உறுதுணையே-மிக்க துணையே, என் அளவும் - என்னளவிலும், உகந்த-விருப்பம்வைத்த, நட்பே-சிநேகமே, வாரு ஆரும்படிக்கு - அழகு பொருந்தும்படிக்கு, இசை - ஒலிக்கின்ற, கிண்கிணிவாய் என்ன - கிண்கிணிவாய் போல, மலர்ந்த-விரிந்த, மலர்ப்பிணை-மலரிணைத்தில், வாசம் வயங்குமாபோல்-மரிமளம் வீசுவதுபோல, நேகாதி உலகம் எங்கும் கலந்து-தழுவுதலாகிய உலகமெலலாங் கலந்து, தானேநிகழ் - தானேயாகி விளங்குகின்ற, அநந்தம்-முடிவற்ற, ஆனந்தமயம்-ஆநந்தரூபமான, தெய்வக்குன்றே-தெய்வத்தன்மையுள்ள மலையே. எ-று

ஆகாரபுவனம்-உருவமாத்திரையாய்க் காணப்படுவதன்றி உள்ளபடி விசாரித்தால் இல்லையாய் விடுமென்பது போதராநின்றது. அறப்பெரியராகிய யோகானுபூதிபெற்ற அன்பராவிக் குறுதுணையாதலன்றி யென்பது படநின்றமையான். என்னுமும்மை இழிவு சிறப்பு. என்னளவும் அன்பராவிக்கு உறுதுணை, என்னளவு முகந்தநட்பு என்றமையால், சமரசமாகிய க்ருபாத்ருஷ்டியுடையாரென்பதுவிளங்கும். கிண்கிணிவாய் என்னமலர்தலாவது கிண்கிணியின்இடை வெளிபோல இதழ்கள் முறுக்கவிழ்ந்து மலர்தல். "கிங்கிணிவாய்ச செய்தலர்ந்ததாமரைப்பூப்போலே" என்றார்பிறரும்.

உருவமாத்திரமாய்விளங்கும் பிரபஞ்சம் இன்ப ரூபமாகத்தோன்றுமாறு, ஒருமொழியால், சிவயோகானுபவம்பெற்ற அன்பரது உயிர்த்துணையே, அபரிமிதலாபமாகிய எண்ணளவிலும் உள்ள முகந்தருளிய நட்பே, தேகாதியுருவமான பிரபஞ்ச மெல்லாவற்றினுங்கலந்து பிரகாசிக்கிற முடிவில்லாத சுகரூபமாகிய தெய்வமலையே என்பதாம்.

2 அனந்தபத வுயிர்களொறு முயிரா யென்று
மாலயந்த நிலையாகி யளவைக் கெட்டாத்
தனந்தனித்தின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்
சதுரத்தா யருட்கோயிற் றழைத்த தேவே
இனம்பிரிந்த மான்போலு னிடையா வண்ணம்
நினைப்பறற வெப்போக்க நிருத்தி வைத்துக்
கனந்தருமா கனமேதண் ணருளிற் றூனே
கனிபழுத்த வானந்தக் கட்டிப் பேறே.

இ-ள். அநந்த பதம்-முடிவற்ற குறிகளையுடைய, உயிர்களெதோறும்-உயிர்களெதோறும், உயிராய் - உயிராகி, எண்ணும் ஆநந்த நிலை ஆகி -

எக்காலத்தும் சுகநிலையமாகி, அளவைக்கு எட்டா-காட்சி முதலிய பிரமாணங்கட்கு மெட்டாத, தன்னந்தனி - நிகத்தனிமையான, சிங்மாத்திரமாய் - சிற்சொரூபமாத்மாகி, கீழ்மேல் காட்டா-கீழெல்லை மேலெல்லை காணாக் காட்டாத; சதசத்தாய் சத்தும் சத்துமாகி, அருள்கோயில் - திருவருளாகிய கோயிலில், தழைத்த-செழித்த, தேவே - தெய்வமே, நான்-அடியேன், இளம்பிரிந்த மான்போல் [illegible] யாவண்ணம் தன் கூட்டத்தை விட்டு நீங்கின மானைப்போல வருந்தாமல், இன்பம் உற சுகவாழ்வையடைய, அன்பர்பக்கல்-உன்தொண்டாடி-த்து; இருத்திவைத்து - இருக்கச்செய்து, கணம் தரும்-சிறப்பைத் தருகின்ற, மாகணமே - பெருஞ்சிறப்பமைந்த வஸ்துவே, தண் அருளின்றி [illegible] ருளிர்சரி பொருந்திய அருளாகிய மரத்திற்றானே, கனிபலித்த - கனிபாகப்பழுத்த, ஆநந்தக்கட்டி-இன்பமாகிய சர்க்கரைக்கட்டி யென்று சொல்லப்படுகிற, பேறே - பரலாபமே. எ-று

"ஷேபேதங்களளவிலே" என்ற மேலோர் வாக்கியத்துக் கிணங்க, இவரும் "அநந்தபதவுயிர்கள்" என்றார். ஒருவர்க்குச சிறப்பைத தருபவர் தாம் பெருஞ் சிறப்பின ராயிருத்தலன்றிக் கூடாதாகையால், "கனந் தருமாகணமே" என்றார்.

"அருட்கோயில் தழைத்ததேவே,மாகணவே, ஆநந்தக்கட்டிப்பேறே, என்பனவினிசள். இனம் பிரிந்தமான்போல நான்வருந்தாவண்ணம்,இன்பமநுபவிக்க, அன்பரிடத்திருத்திவைத்து" என்றும் இவைகளி னீபோட்டிலல் விண்ணப்பிக்க வேண்டியவற்றை மறந்தனர்போலும்.

3 பேறனைத்து மனுவினவே யுதறித் தள்ளப்
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா
வீறனைத்து மிக்கெறிக்கே யென்ன வென்னே
மேலென்ற வரத்தேபாழ் வெய்ய மாயைக்
கூறனைத்தும் கடந்தவெல்லைச் சேட மாகிக்
குறைவறநின் றிடுநினதே குலவா நின்ற
ஆறனைத்து புருங்கடல்போற் சமய கோடி-
யத்தனையுக் தொடர்ந்துபுகு மாதி கட்பே

இ - ள். பேறு அனைத்தும் - எல்லாப் பேறுகளையும், அனு எனஉதறித்தள்ள - அணுவாக வுதறித்தள்ளும்படியாக, பேரின்பம் ஆகவந்த பெருக்கே-பேராநந்தமாக வந்தருளிய வென்னமே, பேசாதீறனைத்தும், பேசாத (மௌநநிலையாகிய) பெருமை யெல்லாம், இக்கொறிக்கே என்ன-இந்த நெறியின் பொருட்டே யெனறு, என்னை - அடியேனை நோக்கி, மேவு என்ற-இந்நெறியிற் பொருந்துவாய் என்று நியமித்த, வரத்தே - அழிவற்ற ஜநியமே, பாழ்-சூனியமாகிய, வெய்யமாயைக்கூறு அநேனத்

தும்-கொடியதாகிய மாயாபாசங்க ளெல்லாவற்றையும், கடந்த-தாண்டிய, எல்லை-எல்லையாகிய, சேடமாகி-சேஷமாகி, குறைவு அறநின்றிடும்-குறை வில்லாமல் நிலைபெற்றிருக்கின்ற, நிறைவே - பரிபூரணமே, குலவாநின்ற-விளங்காநின்ற, ஆறு அனைத்தும்-நதிகளெல்லாம், புகும்-புகப்பெறுகின்ற, கடல்போல் - சமுத்திரம்போல, சமயகோடி அத்தனையும் - சமயகோடிக ளெல்லாம், தொடர்ந்துபுகும் தொடர்ந்து புகுதற்கிடமாகிய, ஆதிநட்பே-மூதன்மையாகிய உறவே, எ-று.

"பேரின்பமாகவந்த பெருக்கே" என்பதனை "ஆற்றின்பவெள்ளமே" என்னும் திருவாதவூரடிகள் திருவாக்காலு முணர்க. பேரின்பமாக வந்த பெருக்கை நோக்க. மற்றெல்லாம் பேறுகளும் அணுவாயொழியு மாத லால், அணுவெனவே யுதறித்தள்ள என்றார். பேசாமீறு - மௌனநிலை. வரத்து-வரவு. நதிகளெல்லாவற்றுக்கும் புகுமிடம் கட லாதலைபோல, சமயகோடிகளெல்லா வற்றுகளும் புகுமிடம்பிரமம் என்றுயிற்று. பெரு க்கே, வரத்தே, நிறைவே, நட்பேஎன்பதாம். இதுவும்வேலையதுபோன்றது.

4 ஆதியந்த மெனுமெழுவா யீறற் றோங்கி
யருமறையின் வழுங்காணு தரற்ற காணு
பேதமதங் களுமலைய மலைபோல் வாதப்
பெற்றியரும் வாய்வாதப் பேய ராகச்
சாதகமோ னத்திவென்ன வடவா ழீழல்
தண்ணருட்சந் திரமௌலி தடக்கைக் கேற்க
வேதகுரின் மாத்திரமா யெம்ம னோர்க்கும்
வெளியாக வந்தவொன்றே விமல வாழ்வே.

இ - ள். ஆதி அந்தம என்னும் - அடிமுடிகளென்று சொல்லப்படு கிற. எழுவாய் ஈறு அற்று ஓடுகி-உத்பத்திநாசங்க ளில்லா தியர்ந்து, அரு மறை-அருமையாகிய வேதங்கள், இன்னமும் காணாது அரற்ற - இன்ன மும் காணப் பெறாமையால் அலறு கிற்க, காணுபேதம் மதங்-நூம் - பல வகைப்பட்ட வேறுபாடுள்ள மதங்களும், மலைய-ஒன்றுடனொன்று போர் செய்ய, மலைபோல் - (சலியாமையால்) மலையை நிகர்க்கின்ற, வாதப்பெற் றியரும் - வாதிக்குந் தன்மையுள்ளவரும், வாய்வாதப்பேயர் ஆக - வாக் வாதத்துக்குடைய பேயராயொழிய, சாதகம் மோனத்தில் என்ன - முத்தி யடைதற்குரிய பரதகம் மௌனநிலையி லுண்டென்ற எமக்கு வெ ளிட்ட ருளும்பொருட்டு, வடவால் தீழல-கல்லாலின் நீழலில் எழுந்தருளிய, தண் அருள் - தண்ணிய அருளையுடைய, சந்திர மௌலி - சந்திர சேகரனே, தடக்கைக்கு ஏற்க-விசாலமாகிய சித்முத்திரைக் கைகளுக்கிணங்க, வேதக சின்மாத்திரமாய் - எமது தன்மையை வேறுபடுக்கு மியல்பமைந்த சித் ரூபமாத்திரமேயாகி, எம் அன்னோர்க்கும் - எங்களோயொத்தவர்களுக்கும்,

வெளியாகவந்த வெளிப்படவந்த, ஒன்றே எகவஸ்துவே, விமலவாழ்வே நிர்மலவாழ்வே. எ-று.

சந்திரமௌலியீச்வ, ஒன்றே, விமலவாழ்வே என்பதாம். இதுவும் அது.

5 விமலமுதற் குணமாகி நூற்றெட் டாதி
வேதமெடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்க
அமையுமிலக் கணவடிவா யதுவும் போதா
தப்பாலுக் கப்பாலா யருட்கண் ணுகிச்
சமமுமுடன் கலப்புமவிழ் தலுமியாங் காணத்
தண்ணருடந் தெமைக்காருஞ் சாக்ஷிப் பேறே
இமையளவு முபகார மலலால் வேறுன்
றியக்காநிர்க் குணக்கடலா யிருந்த வொன்றே.

இ-ள். வேதம்-வேதங்கள், நூற்றெட்டு ஆதி - நூற்றெட்டுமுதலாக, எடுத்து எடுத்து உரைத்த-எடுத்தெடுத்துசசொல்லிய, விருத்திக்கு ஏற்க-லக்ஷண விரிவுக்கிணங்க, விமலம் முதல் குணம் ஆகி-நிர்மலம முதலிய குணங்களேயுடைய தாகி, அமையும்-அமைந்திருக்கின்ற, இலகண வடிவாய்-லக்ஷண சஹிதமான ரூபமாகி, அதுவும் போதாது-அதுவும்பற்றுமல், அப்பாலுக்கு அப்பால் ஏப் அப்புறதுக்குமும் அப்புறமாகி, சமமும்-சமாதமும், உடன்கலப்பும்-உடனகூட்டமும், அவிழ்தலும்-பிரிவும், யாமகாணநாகுகள் காணும்படி, தண அருள்தந்து-தண்ணிய அருள்புரிந்து, எம்மைக் காக்கும் சாக்ஷிப்பேறே-எகக்ஷ ரகஷிகின்ற சாக்ஷிபூதமான லாபமே, இமையளவும்-இமைக்குமளவாயினும், உபகாரம் அல்லால-பிறரதுதவிதஞ் செய்தலன்றி, வேறு ஒன்று இயக்கா - வேறொருன்னைச செய்யாத, நிர்க் குணக்கடலாய் இருந்த ஒன்றே - நிர்க்குண சமுத்திரமாயிருந்த ஒப்பறற பொருளே. எ-று.

தண்ணருடந்து எமைக்காருஞ் சாக்ஷிப்பேறே, உபகாரமல்லால் வேறொருன்னைச்செய்யாத நிர்க்குண சமுத்திரமாயிருந்த வொருபொருளே என்பதாம்.

6 ஒன்றுகிப் பலவாகிப் பலவாகக் கண்ட
வொளிபரவி வெளியாகி யுருவு மாகி
நன்றுகித் தீதாகி மற்று மாகி
நாதமுட னூற்பத்தி நண்ணு தாகி
இன்றுகி மாயைமாய் மேலு மான
வெருளைநீ யெம்மானே யென்றென் றேறங்கிக்
கன்றுகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்
கடி தினில்வந் தருள்கூரு கருணை வின்னே,

இ-ள். ஒன்று ஆகி-ஒருபொருளாகி, பலவுஆகி-பலபொருள்களாகி, பல வாக்கண்ட-பலவாகக்காணப்பட்ட, ஒளி ஆகி ஒளியுடைப்பொருள்களாகி, வெளி ஆகி-அவையிலவந்நற்கிடமாகிய ஆகாயமாகி, உருவம் ஆகி உருவமாகி, நலம் ஆகி-நன்மை ஆகி, தீது ஆகி-தீமையாகி, மற்றும்ஆகி-வேறுள்ளனவுமாகி, காசுமுதன் உற்பத்தி கண்ணுதாகி இறப்பும் பிறப்புமில்லாததாகி, இன்று ஆகி நாளையுமாய்-இன்றுமாகி நாளையுமாகி, மேலுமான-அதன் மேலுள்ள காலமுமான, எந்தையே-எமது தந்தையே-எமமரனே-எமபெருமானே, என்று என்று என்றுபலகாற்சொல்லி, ஏங்கி-ஏக்கமுற்று, கன்று ஆகி கதறினர்க்கு-கன்றுபோலக் கதறினவர்களுக்கு, சேதாஆகி நன்றுணி மையுடைய பசுப்போன்று, கடிதினில்வந்து-விரைவில்வந்து, அருள்கூரும்-அருள்புரியாநின்ற, கருணைவிண்ணே-கருணைவடிவாகிய ஆகாயமே. எ-று.

ஏங்கிக்கன்றுகிக் கதறினர்க்குச சேதாவாகிக் கடிதினில் வந்தருள் கூரும் என்றமையால், அவ்வாறு ஏங்குதல் முதலாயின செய்பாதார்க்கு அருள் கூர்தலிலன் என்று கூறியவாறுயிற்று, இது "மனவிலங் கறுமைத் தனைகற்பக மரங்களல் புனல் மூன்றுந்-தனையடைந்தவர் வறுமையுஞ்சீத முந்தாக முந்நவிர்த்தாளும்-அனைய சீசனுமடைந்தவர்க் கருள்செய்வான்" என்றபிறர் கூற்றுனும் விசதமாகும். விண்ணே என்பதாம்.

7 அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
யாரறிர்தே யென்கண்ணே யரிய வான
பொருளனைத்துங் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்தனுட்க ருத்தாய் மேவிக்
காலமுந்தே சமுமவருத்தக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பெரும்பே ரொன்செலும்விண் ணப்பங்கேளே.

இ-ள். அருள்பழுத்த சுவையே - அருளுருவாகப் பழுத்த பழத்தின் சுவையே, கரும்பே தேனே - கரும்பின் இரசமே, தேனே, ஆர் அறிர்தே - அரிய அறிர்தே, என்கண்ணே-என்விழியே, அரிய ஆன பொருள் அனைத்தும் - அரியனவாகிய பொருள்க ளெல்லாவற்றையும், தரும்பொருளே கொடுக்கிறவள்ளலே, கருணைநீங்கா-இருபைநீங்காத, பூரணமாய் நின்றவொன்றே-நிறைவாகிநின்ற வொப்பற்றவஸ்துவே, புனித வாழ்வே-பரிசுத்தமான வாழ்க்கையே, கருதரிய - நினைத்தலரிதான, கருத்தனுள்-நினைப்பினுள், கருத்தாய்-நினைப்பாகி, மேவி - பொருந்தி, காலமும் தேசமும்வகுத்து - காலதேசங்களாய் முண்டாக்கி, கருவி ஆதி-

கருவிகள் முதலான, விரிவினையும் கூட்டு-வினையுஞ் சேர்ந்து, உயிர்த் திரளை ஆட்டும் - உயிர்த்திரளாகுதியை ஏடிப்பிக்கின்ற, விழுப்பொருளே-மேலான பொருளே. யான் சொல்லும்-என்ன சொல்லுகின்ற, விண்ணப்பம் கேள-விண்ணப்பத்தைக் கேட்டருளுவாய். எ-று

சுவை மிருதிபற்றியும் மனத்துக் கினிமையைத் தருதல் பற்றியும் அருள்பழுத்த பழச்சுவையே என முற்கூறி, அம்மட்டில் தமக்குத் திருப்தி பிறவாமையால் காயிற் கினிமை பயக்கும் கருமபு தேன் முதலியவைக ளோப் பிற்கூறினர். கண் இன்றிப் பதார்த்த தரிசனங் கூடாதாதலால், கண்ணே, அரியவான பொருளினைத்துந் தரும்பொருளே என்றார். "கருவி யாதி விரிவினையுங் கூட்டி யுயிர்த்திரளை யாட்டும்" என்றது, "இருவினைப் பாசக் கயிற்றின்வழி ஆட்டுவிப்பானும் ஒருவனுண்டே" என்றதைப்பற்ற.

பழச்சுவை முதல் விழுப்பொருளே யென்னுமளவாகப் புகழ்ந்து ஒருவாறு தெளிவடைந்து விண்ணப்பிக்கத் தொடங்கினர் இப்பாட்டில்.

8 விண்ணவரிந் திரன்முதலோர் காரு காதி
விளங்குசுப்த ருஷிகள்கண வீணவல் லோர்
எண்ணரிய சித்தாமதி வாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவ ரெல்லா ரித்தக்
கண்ணைகள்ஞா லம்பரிக்கத் தாமோ யுள்ளங்
கையினெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணியகல் லறிவாலிச் சாயுட் டன்றே
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா சித்திமுத்திகளோ யடைந்தார்கள். எ-று.

இ-ள். விண்ணவர் சாமான்ய தேவர்கள், இந்திரன் முதலிய விசேஷ தேவர்கள், விளங்கு-விளங்குகின்ற காருகாதி-காருகர் முதலானோர், சுப்தருஷிகள் - திருடியா ஏறர், கணவீணவல்லோர் - பெரிய வீணை வல்லோராகிய ஆட்சருதத் தலைவர், எண் அரிய - எண்ணுதற்கரிய, சித்தர் - சித்தாதிகள், மாவாதிவேந்தர் - மருமுதலிய அரசாகள், இருக்காதி மறைமுனிவர்-இருக்கு முதலிய வேதங்களோதி அவற்றின் பொருளை யுணர்ந்த முனிவர்கள், எல்லாரும் - முதிய எல்லாரும், இந்த கண் அகல் ஞாலம் - இந்த இடமகன்ற உலகம், பரிக்கும்படி யாக, உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல - உள்ளங்கையில் நெல்லிப்பழம் போல, காட்சி ஆக - பிரத்தியக்ஷமாக, திண்ணிய - கலங்காத, கல அறிவால்-சிறந்த ஞானத்தைக்கொண்டு, இச்சமயத்தார் - இச்சமயத்தில் விருத்தி கொண்டவர், என்றும்-எக்காலத்தும், செப்பரிய - சொல்லுதற்கரிய, சித்தி முத்தி சேர்ந்தார் சித்திமுத்திகளோ யடைந்தார்கள். எ-று.

சப்தரிஷிகளாவார்:— அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமக்கி, பரத்வாஜன், வசிட்டன், விசுவாமித்திரன் என்பார். அன்றி, - அகத்தியன் ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்னு மிவர்களைக் கூறுதலு முண்டு. சித்தி - அணிமாமுதலிய - முத்தி க்ஷேமம். விண்ணவ ரிந்திரன் முதலோர் என்பதற்கு தேவர்களாகிய இந்திரன் முதலானோர் என்றுரைப்பினும் அமையும்.

9 செப்பரிய சமயநெறி யெல்லாந தந்தம்
தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கை யான
அப்பரிசா ளருமஃதே பிடிததா லிப்பால்
அடுத்தவருதூல் களும்விரித்தே யநுமா நாதி
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி.

இ-ள். செப்பு அரிய-சொல்லுதற்கரிய, சமயநெறி யெல்லாம் - சமய மார்க்கங்களெல்லாம், தம் தம் தெய்வமே தெய்வம் என்னும் தங்கள் தங்கள் தெய்வங்களேயே தெய்வங்களென்று சாதியாநிற்கும், செயற்கை ஆனஅந்தச செய்கைக்குள்ளான, அப்பரிசாளரும்-அந்தச சமயநெறியினரும், அஃதே பிடித்து - அதையேபற்றி, ஆதலிப்பால் - ஆதலாலத்தால், அடுத்தமக் கெடுத்தவாகிய, அந்நூலகளும் விரித்து - அந்தச சமயநூல்களே விரித்தும், அநுமாநாதி ஒப்ப விரித்துரைப்பர் - அநுமாந முதலிய பிரமாணங்களுக்கு ணங்க விரித்துப் பேசுவார்கள், இவ்வண்-இப்படி, பொய்மெய் என்ன ஒன்று பொய் ஒன்று மெய எனல், ஒன்று இலை ஒன்று (உண்டு) என-ஒன்று இல்லை ஒன்று உண்டு என்றும், பார்ப்பது - நோக்குவது, ஆர்க்கும் ஒவ்வாது-யார்க்கும் ஒத்திராது, இப்பரிசு ஆம் - இதன்மையாகிய, சமயமுமாய் - சமயமாகியும், அல்ல ஆகி - அவையல்லாதன வாகியும், யாது சமயமும்-எந்தச சமயமும், வணங்கும் - தொழும்படியான, இயல்பது ஆகி-இப்பிறமைகளையுமுடைய தாகி. எ-று.

அநுமாநம்-என்னுங்கை அளவைகளுள் ஒன்று. எண்வகை அளவைகளாவன,—அநுமாநம், உபமாநம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம் என்பன. காணவகாட்சி-புலைகளைப் பண்டு கொருப்புண்டெனல் அநுமாநம்-மலை பகுப்போல்வது என்றறி உவமாநம். பொய்யோ வாய்சசொல் ஆகபகலுணணுன பருத்திருப்பான் என்பது அருத்தாபத்தி. முன்னுண்ணிலை பினனுமிலை ஒன்றிலைஞன்றில்லை ஒருகாலத்துமிலை யெனல் அபாவம். இம்மாதத்தில் பேய் உளது எனல் ஐதிகம். ஆயிரதனில் நூறு உண்டெனல் சம்பவம்.

10 இயல்பென்றுந் திரியாம லியம மாதி
யெண்குணமும் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபாக பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிவக்ஷே சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வலற்சென் னியில்வைத்து ராஜாங் கத்தி
லமர்ந்தநுவை திகசைவ மழகி தன்றே.

இ ள். என்றும்-எக்காலத்தும், இயல்பு திரியாமல் - தன்னியற்கை கெடாமல், இயமம் ஆதி-இயமம் முதலாகிய, எண்குணமும் காட்டி-எட்டுக் குணங்களையுங்காட்டி, அன்பால்-அன்பினால், இன்பம்ஆகி - ஆனந்தமாகி, பயன் அருள-பயன் அளிக்க. பொருள்கள்-பொருள்களும், பரிவாரம்-பரிகரங்களும், ஆகி-ஆகி, பண்பு உறவும்-குணத்தைப்பொருந்தவும், சௌபாக பக்ஷம்காட்டி-சௌபாக பக்ஷத்தைக்காட்டி. மயல் அறு-மயக்கமறுதலைக் கேதுவான, மந்திரம்-மந்திரமும், சிவக்ஷே சிவத்தையும், சோதிடாதி சோதிடம் முதலாகிய, மற்று - வேறுள்ள, அங்கநூல் - உறுப்பு நூல்களும், வணங்க - தொழும்படி, மௌனமோலி - மௌன நிலையாகிய கிரீடத்தை, அயர்வு அற-சோர்வற, சென்னியில் வைத்து-சிரசில்வைத்து, ராஜாங்கத்தில்-ராஜரிகத்தில், அமர்ந்தநுவை-வீற்றிருத்தலை, வைதிக சைவம்-வேத சம்பந்தமாகியசைவசமயம், அழகிது-இனிது அழியாது அன்றோ-அன்னே எ-று.

மந்திரஞ்சிவக்ஷேசோதிடாதி என்றது-மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்னும் வேதாங்கங்களை. மௌன நிலையில் நிற்றலே முத்திநெறியென்பார் அந்நிலையை முத்தியிற்சேர்க்கும் சைவசமயத்திற்கு கிரீடமாக உருவகஞ்செய்தார். சைவசமயமே பல சமயங்களிலும் சிறந்த தென்பார் சைவம் அழகிது என்றார். வைதிக சைவம் என்றது வேதவிருத்தமான உலகாயதம் முதலிய புறச்சமயங்களை நீக்குதற்கு சௌபாகம்-படிகர். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

11 ஸ்ரீநாவீ தநிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லா ருவெறிய வணிமா வாதி
வந்தடிந தி நிரிபவர்க்கும் பேரா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்தாதி போகதலம் பெற்ற பேர்க்கு மை
இதுவன்றித் தாயசமமே றில்லை யில்லை

சந்தாந கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிதுநெறியே தான்சந் மார்க்கம்.

இள். அந்தோ-அன்னே, ஈது அதிசயம் - இது ஆச்சரியகரம், (ஆத லால்) இசசமயம்போல் இன்று-இந்த சமயம்போல் வேறொன்றுமில்லை, அறிஞர் எல்லாம்-ஞானிகளெல்லாம், நடு அறிய-நடுவு நிலைமையிலிருந்து உணருமிடத்து, அணிமா ஆதி-அணிமாமுதலியவைகள், வந்து கைகூடி, ஆடி திரிபவர்க்கும் - விளையாடிக் திரிபவர்க்கும், பேசாமோகம் வைத் திருந்த-பேசாத மௌனநிலையைத் தமக்குப்பற்றுக்கோடாக வைத்திருந்த, மாதவர்க்கும்-பெரிய தவத்தினை யுடையார்க்கும், மற்றும் மற்றும்-மேலு மேலும், இந்த்ராதி போகநலம் பெற்றபேர்க்கும்-இந்திரன்முதலிய இறை யவர் பதசுகங்களை யடைந்தவர்க்கும், இது அன்றி-இதையல்லது, தாய கம்-மாத்ருஸ்த்தானம், வேறு இல்லை இல்லை-மற்றொன்று மில்லை யில்லை, சந்தாந கற்பகம்போல் - சந்தானகற்பக விருக்ஷங்கள்போல, அருளைக் காட்ட--திருவருளைக்காட்டுதற்கு, தக்கநெறி-தகுதியாகிய மார்க்கம், இந் நெறியே - இந்த மார்க்கமே, சன்மார்க்கம் - (இதுவே) சன்மார்க்கமென்று சொல்லப்படும். வ-று.

சந்தானம் கற்பகம் என்பன பஞ்ச தருச்சுகளிற் வகை. பஞ்ச தருக்க ளாவன:—அரிசந்தம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன.

12 சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந தானுன் முகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம வெளியே யென்ன
எச்சமயத் தவர்களுமுன் சிறந்தநாதர் நிற்பர்
சன்மார்க்க நெஞ்சமுமே வினைதீர் தானே
கண்டபடி னானந்தக் காண்ட லாகும

இ-ள். சன்மார்க்க ஞானமதின் பொருளும்-சன்மார்க்கமென்கிற சைவ சமய ஞானப்பொருளும் வீறு-மேன்மையும் மேலானதாவதென்று இறுமாந் திருக்கின்றது, சமயம் - சமயநூல்களால் சுகமேதம் - நிர்ணயிக்கப்பட்ட, பொருளும்-அர்த்தமும் ஒன்று படுகுணபடுத்தி, பன்மார்க்க நெறி யினிலும்-பலசமயவழிகளிலும் கண்டது இல்லை-பார்த்ததில்லை, பகர்வு அரிய-சொல்லுதற்கரிய, தில்லை மன்றுள் - சிதம்பரம்பலத்தில். பார்த்த போது-கண்டபோது, அங்கு - அவ்விடத்தில், என்மார்க்கம் இருக்குது-என்னவழி யிருக்கின்றது, எல்லாம் வெளியே என்ன-யாவும் வெளியே யென்று, எசசமயத் தவர்களும்-எந்தச சமயத்தாரும், வந்து இறைஞ்சா

நிற்பர்-வந்து வணங்காநிற்பர், கல்மார்க்க நெஞ்சம் உள்ள-கல்லின தியற்கையுள்ள மனத்தையுடைய. எனக்கும்-அடியேனுக்கும், கண்டவுடன்-பார்த்தவுடன், ஆநந்தம் காண்டல் ஆகும்-இன்பம் காணலாயிருக்கும். எ-று.

சங்கேதம்-குழூஉக்குறி. நில்லை மன்று சிதாகாயமாகிய வெறுவெளியாதலால், "நில்லைமன்றுட் பார்த்தபோதங் கென்மார்க்க மிருக்கு தெல்லாம் வெளியே" என்றும், சமயாதீதப்பழம்பொருளைக் கைவந்திடவேமன்றுள்வெளி காட்டுவது சைவசமயமே யாதலால் எவ்வகைச சமயத்தாரும் வந்து வணங்காநிற்பார் என்பார், "எச்சமயத்தவர்களுமவந் திறைஞ்சாநிற்பர்" என்றும், இதனைக் கண்டால் அமிஞர்க்கு ஆநந்த முண்டாதலேயன்றிக் கன்னெஞ்சர்க்கும் இன்ப முதிக்குமென்பார், "கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந்தானே கண்டவுட னாநந்தங் காண்டலாகும்" என்றும் கூறினர்.

"வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னுதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினு லாண்டுகொண்ட"—என்றார் திருவாதவூரடிகளும்.

13 காண்டல்பெறப் புறத்தினுள்ள படியே யுள்ளும்
காட்சிமெய்ந்நூல் சொலும்பதியாங் கடவு ளேநீ
நீண்டநெடு மையுமகலக் குறுக்குங் காட்டா
நிறைபரிபூ ரணவறிவாய் நித்த மாகி
வெண்டிவிருப் பொடுவெறுப்புச் சமீபந் தூரம்
விலகலணு குதன்முதலாம் விவகாரங்கள்
பூண்டவள வைகண்மன வாக்காதி யெல்லாம்
பொருந்தாம லகம்புறமும் புணர்க்கை யாகி.

இ-ள். காண்டல்பெற-ப்ரத்யக்ஷ [illegible] புறத்தின்உள்ளபடியே-புறத்திலுள்ள வண்ணமே, உள்ளும்-உள்ளத்தும் [illegible] வென்று, மெய் - உண்மையாகிய, காட்சிநூல் சொல்லும்-அ[illegible]மை சொல்லாநிற்கும், பதி ஆம்-பதிப்பொருளாகிய, கடவுளே-[illegible]வே, நீ-நீ, நீண்ட நெடுமையும்-நீண்ட நீட்சியும், அகலக்குறுக்கும்-அ[illegible]குக்கங்களும், காட்டா-காட்டாத, நிறைபரிபூரண அறிவாய்-நிறைந்த பரிபூர்ண ஞானமாகி, நித்தம் ஆகி சாசுவதமாகி, வேண்டு விருப்பொடு-விரும்புகின்ற விருப்பத்துடன், வெறுப்பு-வெறுப்பும், சமீபம் தூரம்-சமீபதூரங்களும், விலகல் அணுகுதல்-நீங்குதல் சேர்தல்களும், முதல ஆம் விவகாரங்கள்-முதலாகிய விவகாரங்களும், பூண்ட அளவைகள்-பொருந்திய பிரமாணங்கள், மனவாக்காதி எல்லாம்-மனம் வாக்கு முதலாகிய யாவும், பொருந்தாமல்-அணுகப்பெறாமல், அகம் புறமும் புணர்க்கை ஆகி-உள்ளும் புறமும் பொருந்துவதாகி. எ-று.

"மனத்தான் கண்ணி னகத்தான்" எனவும், "உடலும்மென தூயிரும் புகுந்தொழியாவண்ண நிறைந்தால்" எனவும்மேலோர்கூறுதலால்,புறத்தி னுள்ளபடியே யுள்ளும் என்றும், "விண்ணேர் பெருமானே" என்பதனால் பதியாங்கடவுளே என்றும், நெடுமை குறுமைகளற எங்குமொருபடித்தாய் வியாபித்தலால், "நீண்டநெடு மையு மகலக் குறுக்குங் காட்டா நிறைபரி பூரணவறிவாய்" என்றும், என்று மழிவிலதாதலால். 'நித்தமாகி' என்றும், ராகத்வேஷங்களும் அண்மை சேய்மைகளும் பிரிவு பிரியாமைகளும்காட்சி, முதலிய அளவைகளும் மனோவாக்காயங்களும் ஆகிய விவகாரங்கள்என்று மில்லாததாதலால், "வேண்டு வீருப்பொடு வெறுப்புசசமீபத் தூரம் வில கலணி குதன் முதலாம் விவகாரங்கள் பூண்ட வளவைகள் மனவாக்காதி யெல்லாம் பொருந்தாமல்" என்றும் கூறினர்.

14 ஆகியசற் காதயவூ கத்துக் கேற்ற
வமலமாய் நடுவாகி யனந்த சத்தி
யோகமுறு மானந்த மயம தாகி
யுயிர்க்குயிரா யெந்நாளு மோங்கா நிற்ப
மோகவிருண் மாயைவினை யுயிர்கட் கெல்லா
மொய்த்த தென்கொ லுபகார முயற்சியாகப்
பாகமிக வருளவொரு சத்தி வந்து
பதிந்ததென்கொலெனலுமப்பான்மையொன்கொல்.

இ-ள். ஆகிய சதகாரிய உலகத்துககு ஏற்ற-உண்டாகிய சத்கிருத்யத் தூக் குரிய யுக்திக்கிணக்கின, அமலமாய்-மலவிமுக்தமாய், நடுவாகி-நடுவு நிலையுள்ளதாகி, அனந்த சத்தியோகம் உறும்-முடிவற்ற சகதிகளின் சேர்க் கையைப் பொருந்திய, ஆனந்த மயமதாகி-சுகரூபமாகி, உயிர்க்கு உயிர்-ஆய்-உயிர்க்குயிராகி, எந்நாளும்-எக்காலத்தும், ஓங்கா நிற்ப-உயராநிற்க, மோக இருள் அஞ்ஞான இருளும், மாயை-அதற்கடியான மாயையும், வினை-அத னால நிகழ்விக்கப்படுகிற வினைகளும், உயிர்கட்கு எல்லாம்-எல்லாவுயிர் களுக்கும் மொய்த்தது என்-வந்தடைந்ததற்குக் காரணம்யாது, உபகாரப் முயற்சி ஆக-என்னுல் செய்யப்படும் உபகாரமே உயிர்களின் பிரயத்தமாக, பாகம்-பரிபக்குவத்தை, மிக அருள-மிகவு மளித்ததற்பொருட்டு, ஒரு சத்தி வந்து பதிந்தது என்-ஒருசத்திவடிவு பதிந்ததற்குக் காரணம் யாது, நான் என்னும் அப்பான்மை என்-நான் என்று சொல்லுகின்ற அனந்தத் தன்மை யுண்டானதற்குக் காரணம் யாது. எ-று.

கிருத்தியம்-தொழில். விமுக்தம் நிக்கம். சத்தி பதிதலேச சத்திநி பாதம் என்பர். நானெனுமப்பான்மை அகங்காரம்.

15 காவெனன்று மோரகரதை யெவர்க்கும் வருது
கலிந்தவுடன் சகமாயை காளு வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார்
ஊனென்று முடலென்றுங் கரண மென்றும்
உள்ளென்றும் புறமென்று மொழியா நின்ற
வானென்றுங் காலென்றுந் தீநீ ரென்று
மண்ணென்று மலையென்றும் வனம தென்றும்.

இ-ள் காள் என்னும் ஓர் அகத்தை - காவெனன்கிற ஒரு அகம் பாவ மானது, எவர்க்கும் வந்து-யாவரிடத்து முண்டாகி, கலிந்தவுடன்-அவர் கூட வருத்தினவுடன், சகமாயை-லோகமாயையானது, காளு ஆகி-பல வகையாகி, வந்து தொடரும்-வந்து பற்றும், இத்தால் வளரும் இதனால் விருத்தியடைகின்ற, துன்பசாகரத்தின் பெருமை-துக்க சமுத்திரத்தின் பெருமையை, சாற்றவல்லார் எவர்-எடுத்துச சொல்லவல்லார் யாவர், ஊனென் என்றும்-மாமிசமென்றும், உடல் என்றும்-அதனாற் செய்யப்பட்டதாகிய உடம்பென்றும், கரணம் என்றும்-அதற்குள் விருக்கிற அந்தக் கரணங்க ளென்றும், உள் என்றும் புறம் என்றும் - அகமென்றும் புறமென்றும், ஒழியாநின்ற-ஒழியாதுநின்ற, வான் என்றும்-ஆகாயமென்றும், கால் என் றும்-காற்றென்றும், தீநீர் என்றும்-அக்னி ஜலங்களென்றும், மண்ணென்றும்-பிருதிவியென்றும், மலை எனறும் - மலைகளென்றும், வன மதென்றும்-காடென்றும். எ-று.

பெருமை விழுந்தோரா நீந்திக் கரையேறக்கூடாத பரப்பு.

16 மலைமலையாங் காட்சிகண்கா ணுமை யாதி
மறப்பென்று நினைப்பென்று மாயா வாரி
அலையலையா யடித்துநின்பத் துன்ப மென்று
மிலைதவிரா வருமவினைகளென்று மதனைத் தீர்க்கத்
தூலபவாளு சபமமென்றுந் தெய்வ மென்றுஞ்
சாதகமென் றுமமதற்குச் சாக்ஷி யாகக்
கலைபலவா நெறியென்றுந் தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும் போதும்.

இ-ள். மலை மலை ஆம் காட்சி-மலை மலையாகக் காணப்படுங் காட்சியும், கண்காணுமை ஆதி-கட்புலனுகாமை முதலாகிய, மறப்பு என்றும்-மறதி யென்றும், நினைப்பு என்றும் - நினைவு என்றும், மாயாவாரி-மாயைக்கட லுள், அலை அலை ஆய் அடிக்கும்-அலை யலையாய் மோதுகின்ற, இன்பம்

துன்பம் என்றும்-சுகதுக்கங்க ளென்றும், அவை விளைக்கும்-அவற்றை யுண்டாக்குகிற, வினைகள் என்றும்-கர்மங்க ளென்றும், அவறறைத் தீர்க்க-அவற்றை நீக்க, தலை பல ஆம் சமயம் என்றும்-பல காரணங்களாலுண்டா கிய சமயங்க ளென்றும், தெய்வம் என்றும்-அவைகட்கேற்ற தெய்வங்க ளென்றும், சாதகர் என்று ம-அப்பியாசி ளென்றும், அதற்கு சாக்ஷியாக-அந்த அப்பியாசத்துக்குச சாக்ஷிபூதமாக, பலகலை ஆம் நெறி என்றும்-பல நூல்களாலுரைக்கப்பட்ட மார்க்கங்களென்றும், தர்க்கம் என்றும்-நியாய சாத்திரமென்றும், கடல் உறும்-கட லேபொருந்திய, நூண்மணல்-நுண் ணியமணலே, எண்ணிக் காணும்போதும்-எண்ணிப்பார்த்து அளவு காணு மிடத்தும். எ-று.

17 காணரிய வல்லலெல்லாங காணே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கர்ப் பூரமலி படுதீப் பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
வுளனுறக்க மின்பதுன்பம் பேரு ராதி
யொவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிக்
கோணறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென வருண்மௌன குருவாய் வந்து.

இ-ள். காண் அரிய-அளவுகாண்டற்கரியவான, அல்லல் எல்லாம்-துன்பங்க ளெல்லாம, கட்டு கட்டு ஆக விளையும்-கூட்டங் கூட்டமாக உளவாகும், அதை-அவ்விளைவை, கட்டோடே-கட்டோடனே, வீணினில்-பயனிலதாக, கர்ப்பூரமலி-கர்ப்பூரமலியான து, படுதீப்பட்ட விந்தையென காண - மிக்க தீப்பட்டழிந்த ஆசசரியம் போலத் தோன்றும்படி, ஒரு விவேகம்காட்ட-ஒரு ஞானத்தை எனகுகறிவுறுத்தற்காக, உளண் உறக்கம்-ஆதாரசித்திரைகளும், இன்பதுன்பம்-சுகதுக்கங்களும், பேர் ஊர் ஆதி-நாமக்ராமாதிகளும், ஒவவிடவும்-ஒவ்வாநிற்கவும், என்னைப்போல உருவம் காட்டி-என்னைப்போல மாறுடச் சட்டைசாத்தி, கோண் அற-களங்கம் நீங்க, ஓர் மான்காட்டி-ஒரு மானைக்காட்டி, மானை ஈர்க்கும் கொள்கை என-மற்றொரு மானைப்பிடிப்பதுபோல, அருள்-அருளையுடைய, மௌன குருவாய்வந்து-மௌனகுருவாகி எழுந்தருளி. எ-று.

ஈர்த்தல்-இழுத்தல். அது இவ்விடத்துப் பிடித்தலுக்காயிற்று.

18 வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசனமெனவே யத்துவா மார்க்க நோக்கி
ஐந்துபுல னேம்பூதங் கரண மாதி
யடுத்தகுண மத்தனையு மல்லே யல்லே

இந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினதி னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்.

இ-ள். வந்து-வந்து, என் உடல் பொருள் ஆவி மூன்றும்-என் உடம்பும் பொருளும் உயிரும் ஆகிய மூன்றும், தன்னை வசம் என-தன்னை வசமானவை யென்று அங்கிகரித்துக்கொண்டு, அத்துவா மார்க்கம் நோக்கி-அத்துவாமார்க்கத்தைப் பார்த்து, ஐந்து புலன் - ஐந்து புலன்களும், ஐம்பூதம்-பஞ்சபூதங்களும், காரணம் ஆதி-அந்தக்காரணங்கள் மூதலாக, அடுத்த குணம் அத்தனையும் - பொருந்திய குணங்க ளெல்லாம், அல்லை அல்லை-நீயல்லை யல்லை, இந்த வுடல்-இந்தவுடம்பும், அறிவு அறியாமையும்-அறிவறியாமைகளும், நீ அல்லை-நீயல்லை, யாதொன்றுபற்றின் - யாதொரு பொருளாக கவரினும், அதன் இயல்பாய் நின்று-அதின் மயமாகி நின்றும், பந்தம் அறும் - அதன் தொடர்பு தனக்கில்லாத, பளிங்கு அனைய - படிகத்தையொத்த, சித்து நீ-சித்துப்பொருள் நீயா யிருக்கின்றனை, உன் பக்குவம் கண்டு-உன் பருவம் நோக்கி, அறிவிக்கும் பான்மையம் - அறிவுறுத்தும் தன்மையினையுடையேம், யாம்-நாமாகவிருக்கிறோம். எ-று.

சீவன், எதிரிட்ட நிறங்களைப்பற்றியும் தன்னியல்புகெடாத பளிங்குக் கல்லைப்போல, எதிரிட்ட விடயங்களின் மயமாய்த் தோன்றுவதே யன்றித் தன்னியல்பு கெடாதென்பார், யாதொன்று பற்றினதி னியல்பாய் நின்று பந்தமறும் பளிங்கனைய சித்து நீ என்றார். "சித்தின் மூயல்வாற் சித்தாகுஞ் சடத்தின் மூயல்வாற் சடமாகும்" என்றார் மேலோரும்.

19 அறிவாகி யானந்த மயமா யென்று
மழியாத நிலையாகிய யாதின் பாலும்
பிறியாமற் றண்ணருளே கோயி லான
பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளு
நிற்குணநிற் குளம்வாய்த்து நீடு வாழ்க
செறிவான வறியாமை யெல்லா நீங்கச்
சிற்சுகம்பெற் றிடுகபந்தத் தீர்க வென்றே.

இ-ள். அறிவாகி-சித்தாகி, ஆனந்த மயமாய் ஆனந்தவடிவாகி, என்றும் அழியாத நிலையாகி-சத்தாகி, யாதின்பாலும் - எதனிடத்தும், பிறியாமல்-

நீங்காமல், தன் அருளே கோயில் ஆன-தண்ணிய அருளே கோயிலாகப் பெற்ற, பெரிய பரம்பதியதனை-பெரிய மேலானபதிப்பொருளை, பெறவே வேண்டின்-பெறுதலையே விரும்பினையாயின், தெரியாகக் கூறுவன்-முறையாகச் சொல்லுவேன், கேள் - கேட்பாயாக, எந்தநாளும் - எக்காலத்தும், நிர்க்குணம் நிர்க்குணப்பொருள், நிற்கு - உனக்கு, உள்ளம்வாய்த்து-மனத்திற்பொருந்தப்பெற்று, நீடுவாழுக - நெடுங்காலம் வாழக் கடவை, செறிவான-மிகுதியான, அறியாமையெல்லாம் நீங்க - அஞ்ஞானம் முற்றுமொழிய, சிற்சுகம்பெற்றிடுக-ஞானானந்த சுகத்தைப் பெறக்கடவை, பந்தம் தீர்க-பிறவிக்கட்டு நீங்கக்கடவை, என்று-எனறுசொல்லி. எ-று.

20 பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பணிபுக் கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை
அந்தமில்லை யாதியில்லை நடுவு மில்லை
யகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை

இ-ள். பந்தம் அறும்-பந்தமறுதைக்குக் காரணமான, மெய்ஞ்ஞான மான-உண்மைபவற்றிலாகிய, மோனப்பணபு ஒன்றை அருளி-மோனநிலையாகிய ஒப்பற்றபொருளை யருள்செய்து, அந்த பண்புக்கு-அந்த நிலைக்கு, சிந்தை யில்லை-மனமில்லை, நான் என்னும் பான்மையில்லை - நானென்னுந் தன்மையில்லை, தேசம் இல்லை தேசமென்பதில்லை; காலம் இல்லை - காலமென்பதில்லை, திக்கும் இல்லை திசையுமில்லை, தொந்தம் இல்லை-தொடர்பு மில்லை, நீக்கம் இல்லை-பிரிவில்லை, பிரிதும் இல்லை - இவைகட்கபலாந்தன்மையுமில்லை, சொல்லும் இல்லை-வாக்குமில்லை, இராப்பகல் ஆம் தோற்றம் இல்லை-இராப்பகலாகாராய்ச்சி காட்சியில்லை, அந்தம் இல்லை-முடிவில்லை, ஆதியில்லை முதலில்லை, நடுவும் இல்லை-நடுவுமில்லை, அகமும் இல்லை-உள்ளுமில்லை, புறமும் இல்லை - வெளியுமில்லை, அனைத்தும் இல்லை - எலலாம் இல்லை. எ-று.

பண்பு-குணம். ஈது இவ்விடத்து நிலையை யுணர்த்திற்று

21 மல்லையில்லை யென்னினெஞ்சு மில்லா தல்ல
வியல்பாகி யென்னுமுள்ள வியற்கை யாகிச்
சொலலரிய தன்மைமதா யாவரு மெனனைத்
தோணருவ தில்லாமலிழுக்குஞ் சொரூப மாகி

அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னுகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்கு தானே.

இ-ள். இல்லே இல்லே என்னின்-இல்லே எல்லே யென்று சொன்னுல், ஒன்றும் இல்லாதல்ல-ஒன்றும் இல்லாதல்ல, இயல்பு ஆகி-(செயற்கையாய் இடையே வந்ததன்றி) இயற்கையதேயாகி, ன்றும் உள்ள இயற்கையாகி-(இவ்வியற்கையும்) எக்காலத்தும் உள்ள இயற்கையாகி, சொல்லரிய தன்மையதாய் - சொல்லுதற்கரிய குணத்தை யுடையதாய், யான் தான் என்ன தோன்றுது-யான் தான் என்று காணப்படாமல், எல்லாம் விழுங்கும் சொரூபமாகி - எல்லாவற்றையும் உட்கொள்ளுகின்ற பேருருவாகி, அல்லே உண்ட பகல்போல-இருளைக் கெடுக்கும் சூரியன்போல, அவித்தை எல்லாம்-அஞ்ஞானத்தையெல்லாம், தடையுண்டு - முழுதுங்கெடுத்து, தடையற-தடைகளற்றுப்போக, உன் அறிவைத்தானே - உன் அறிவை, வெல்ல-வென்று, உண்டு - விழுங்கி, இங்கு - இவ்விடத்து, (விவகரித்தற்கேதுவாகிய,) உன்னையும் தொம்பதப்பொருளாகிய வுன்னையும், தானுகக் கொண்டு-தற் பதப்பொருளாகிய தானுகக்கொண்டு, பேசாமை-மோகநிலையானது, வேதகமாய் விளக்கும் - உனது நிலேயை வேறுபடித்துவதாய் உனக்கு விளக்கிக்காட்டும். எ று.

தடைகள் - அஞ்ஞானம், சகதேகம், விபரீதம் என்பன. பிரமபாவனையை மறைத்து வேறுபடுவது அஞ்ஞானம், குருவின் வார்த்தையை நம்பாமல் கலங்குவது சந்தேகம். பிரபஞ்சம் உண்மையென்றும் தேகமே தானென்றும் மனத்திலுண்டாகிய மோகம் விபரீதம்.

"பிரமபா வனையைமூடப் பேதங்காட் டுவதஞ்ஞானம்
குருவன்வாக் கியநம்பாமற் குழம்புவ தாருசகதேகம்
திரமறு சகமெய்யென்றுந் தேகமே னையறுமுள்ளே
விரவிய மோகமதானே விபரீத மெனம்பர்மேலோர்." என்றுர் பிறரும்.

22 தானை தன்மயமே யல்லா லொன்றைத்
தலேயெடுக்க வொட்டாது தலேப்பட் டாங்கே
போலுலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது பலம்வே றின்றும்
ஞானசா தத்தினெடு நேய மற்ற
ஞாதுருவு நாழுவாய் னழுவி நிற்கும்

ஆனலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானு லதுவாவ ரதுவே சொல்லும்.

இ-ள். தான் ஆன-எல்லாப்பொருள்களுந் தானேயான, தன்மயமே அல்லால்-தன்மயமேயன்றி, ஒன்றை தலையெடுக்கவொட்டாது-வேறொன்றையுந்தலையெடுக்கவிடாது, தலைப்பட்டு ஆங்கேபோனலும்-தலையெடுத்து அவ்விடத்தே சென்றாலும், கர்ப்பூரதீபம்போல-கர்ப்பூரதீபத்தையொத்து, போய் ஒளிப்பது அல்லாது-ஒன்றுபட்டு மறைவதன்றி, புலம்வேறு இன்றாம்-(உன்) அறிவுவேறாய் (ஒன்று) இல்லையாகும், (மேலும்) ஞானகாரத்தினெடு-ஞானரூபத்தோடு, ஞேயம்-ஞேயமும், ஞாதிருவும்-ஞாதிருவும், கழுவாமல் கழுவி நிற்கும்-நீங்காமல் நீங்கி நிற்கும், ஆனலும்-ஆயினும், இதன் பெருமை-இதின் எற்றத்தை, எவர்க்கு ஆர் சொல்வார், எவர்க்கு எவர் சொல்லவல்லார், அது ஆனல் அதுவாகிவிட்டால், அது ஆவர் - (தாம்) முன்னிருந்த தன்மை தோன்றாமல் அதுவேயாகிவிடுவார், அதுவேசொல்லும்-அந்தப்பொருளே (அதினேற்றத்தை) அறிவிக்கும். எ-று.

ஞானம், ஞேயம், ஞாதிரு, என்பவற்றைத் திரிபுடி யென்பர்.

23 அதுவென்று லெதுவெனவென் றடுக்குஞ் சங்கை
யாதலினு லதுவெனலு மறவேவிட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சகக ணாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவு மென்னே யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ டிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

இ-ள். அது என்றல் - அதுவென்று சொன்னல், எது என - எது வென்று, சங்கை ஒன்று அடுக்கும்-ஆசங்கையொன் றுண்டாகும், ஆதலினல்-ஆகையால், அது எனலும் - அது வென்பதையும், அறவே விட்டு-முழுதுமே விட்டு, மது உண்ட வண்டு எனவும்-மதுபாநம் பண்ணின வண்டுபோலவும், சககன் ஆதி மன்னவர்கள் - ஜநகன்முதலிய மன்னவர்களும், சுகர் முதலோர்-சுகர்முதலிய மஹரிஷிகளும், வாழ்ந்தார் என்றும்-வாழ்ந்தனர் என்றும், இந்த நிலை-இந்நிலையில். பதி எனவும்-படிந்து நில்லென்று நியமித்தும், என்னே ஆண்டபடிகசு - என்னே யாண்டருளின படியே, நிருவிகற்பத்தால் - நிர்விகற்ப சமாதியால், பரம ஆநந்த கதி-மேலாகிய இன்பக்கதியை, கண்டு கொள்ளவும்-கண்டுகொள்ளும்படியாகவும், நின் அருள் கூர் உன் திருவை கூர்ந்தருளவேண்டும், இந்தக் கதி

அன்றி-இந்தக்கதியை யடைந்தன்றி, உறங்கேன்-தூங்கேன், மேல்கருமம் பாரேன்-மேல் நடக்கவேண்டிய காரியங்களையும் நோகேன்.

சககுலதி மன்னவர்கள் என்றது ஜநகன், சிகித்துவசன், பகீரதன், மாவலி, முதலியோரை. சுகமுனிவர்க்கு அநுபவத்தில் ஐயமறுத்தவர் ஜநகராஜராகையால் அத்தலைமைபற்றி சககுலதி மன்னவர்கள் என முற்கூறி, சுகர் முதலோர் எனப் பிற்கூறினர்.

24 பாராதி விண்ணனைத்து நீயாச் சிந்தை
பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ வெண்ப்ராண நாதா வென்பேன்.
வளைத்துவளைத் தெனைநீயா வைத்துக் கொண்டு
பூராய மாமேலொன் றறியா வண்ணம்
புண்ணுளர் போனெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறநாதோர் நிலையாய் நிற்பேன்

இள். பார் ஆதி விண் அனைத்தும்-மண்ணுதி விண்ணீறுயுள்ள பூதங்களும், அவற்றுளுளவாகிய இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் என்னும் இருவகைப் பௌதிகங்களும், நீ ஆ-நீயாகவே பாவித்து, சிந்தை-என்மனத்தை, பரியமடலா-பெரிய மடலாகக்கொண்டு, எழுதி-அவ்வேட்டில் நினையெழுதி, பார்த்து பார்த்து-பலகாலும் நோக்கி, என் ப்ராணநாதா-என் பிராண நாயகனே, வாராயோ என்பேன்-வந்தருளாயோ என்று சொல்வேன், என்னை வளைத்து வளைத்து-என்னைத் திதுத்துத் திதுத்து, நீ ஆ வைத்துக்கொண்டு-நீயாகவே வைத்துக் கொள்ளுகையால், மேல் ஒன்று-மேலே ஒரு காரியத்தையும், பூராயமா-ஆத்யந்தமாக, அறியாவண்ணம்-உணராதபடி, புண்ணுளர் போல்-புண்ணுடையர்கள் போல, நெஞ்சம் உள்ளே புலம்பி நீராளமாய் உருகி-மனமானது வருந்தி உள்விடத்திற்றானே மலப் பிராயமாய் உருகி, கண்ணீர் சோர கண்ணீராயொழுக, நெட்டுயிர்த்து-பெருமூச்செறிந்து, மெய் மறந்து-சரீரத்தை மறந்து, ஓர் நிலையாய் நிற்பேன்-ஒரு நிலைப்பட்டு நிற்பேன். எ-று.

உயிர்க்குயிராதலால் என் பிராண நாதா என்றார். இது, "என்னிலும் நினையானொருவன்னுளன்" என்னும் மேலோர் திருவாக்கானு மூணர்க.

25 ஆயுமறி வாகியுன்னைப் பிரியா வண்ண
மணைந்தசுகம் பெற்றுவன் பரையோ வென்னத்
தீயகொலைச் சமயத்துஞ் செல்லச் சிந்தை
தெளிந்திடவுஞ் சமாதானஞ் செய்வேன் வாழ்வான்
தாயிலுபுன் சருகாதி யருந்தக் கானம்
கடன் மலையெங் கேயுனவுங் கவலையாவென்

வாயில் கும்பம் போற்கிடந்து புரள்வேன் வானின்
மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே.

இ-ள். உன்னை அயும் அறிவு ஆகி-உன்னை ஆராய்கின்ற அறிவினை யுடையராகி, பிரியாவண்ணம் அணைந்து-நீங்காதபடி சேர்ந்து, சுகம்பெற்ற அன்பர்-இன்பமுற்ற உன் தொண்டர்கள், ஐயோ என்ன - ஐயோவென் றிரங்க, தீய-கொடிய, கொலை சமயத்தும் சிந்தை செல்ல-கொலை புரியும் சமய நெறிகளிலும் மனம் செல்ல, தெளிந்திடவும்-(அம்மனம் அசசமய நெறிகளிற் செல்லாது) தெளிவடையவும், சமாதானம் செய்வேன் சமா தானம் பண்ணுவேன், வாழ்வான்-உயிர்வாழும்பொருட்டு, காய் இலை புன் சருகாதி அருந்த-காய் இலை அற்பமாகிய சருகு முதலியவற்றை யுண்ணும் பொருட்டு, கானம்-காடும். கடல்-கடலும், மலை-மலையும், எங்கே எனவும்-எங்கே யுள்ளன வென்றும், கவலையாவேன்-கவலைப்படுவேன், வானில்-ஆகாயத்தில், மதி கதிரை-சந்திர சூரியர்களை, முன்னிலையாவைத்து-முன் னிலையாக வைத்துக்கொண்டு, நேரே-அவர்களுக்கெதிரே, வாயில் கும்பம் போல்-வாசலிற் குடம்புரள்வதுபோல, கிடந்து புரள்வேன்-விழுந்து புரள் வேன். எ-று.

முன்னிலை-சாட்சி. சிவேசுவர ஐக்யத்தில் சுகமுண்டா மென்பார் பிரியாவண்ணம் அணைந்து சுகம்பெற்ற என்றார். ஆதிசப்தத்தால் கிழங்கு நீர் முதலியவும் கொள்க.

26 நேரேதா னிரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர வுங்களையிக் நிலைக்கே வைத்தார்
ஆரேயங் கவர்பெருமை யென்னை யென்பே
னடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்ரு யென்பேன் வருது
பெய்கின்ற முகில்காளெம் பெருமா னும்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யுஞ்
சாதகமென் னேகருதிச் சாற்று மென்பேன்.

இ-ள். நேரே-நேராக, இரவுபகல்-இராப்பகல்கள், கோடாவண்ணம், வழுவாவகை. நித்தம் வர - நாள்தோறும் வரும்படி, உங்களை - சந்திர சூரியராகிய உங்களை, இந்நிலைக்கே வைத்தார்-இந்த நிலையிற்றானே நிலைபெறுத்தி வைத்தவர், ஆர் - யாவர், அங்கு அவர் பெருமை - அவ் விடத்து அவரது பெருமையை, என் என்பேன்-என்னென்று வியக்கக் கடவேன், அடிக்கின்ற காற்றே-வீசாகின்ற வாயுவே, நீ-நீ, யாரால்-யாவரு டைய கட்டளையினால், பேராதே-இடையறாமல், சுழல்கின்ரு - சுழலா நின்ரு, என்பேன - என்று சொல்லுவேன். வந்து பெய்கின்ற முகில் தாள்வந்து முழையைப் பொழிகின்ற மேகங்களை, நம்பெருமான் - எம்

மிறைவன், நும்போல் உங்களைப்போல, தாராளமா - மிகுதியாக, கருணை பொழிய-அருண்மழையைப் பொழியும்படி, செய்யும் - செய்யவேண்டிய, சாதகம்-அப்பியாசம், என்-யாது, கருதி - நீங்கள் ஆலோசித்து, சாற்றும் என்பேன்-சொல்லுங்கள் என்று கேட்பேன். எ-று.

இராப்பகல்களை யுண்டாக்குவோர் சந்திரசூரியர்களாதலால், இரவு பகல் கோடாவண்ணம் நித்தம் வர என்றார். இது பற்றியே இவ்விருவருக்கும் முறையே வடதாலா நிசாகரன், திவாகரன் என்று பெயரிட்டு வழங்குவா.

27 கருதரிய விண்ணேநீ யெங்கு மாகிக்
கலந்தனையே யுன்முடிவின் காட்சியாக
வருபொருளைப் படியிருக்குஞ் சொல்லா யென்பேன்
மண்ணையுன் முடிவிலெது வயங்கு மாங்கே
துரியவறி வுடைச்சேட னீற்றி னுண்மை
சொல்லாலே சொல்லென்பேன் சுருதி யேநீ
ஒருவனுரப்போ லனைவருக்கு முண்மை யாமுன்
னுரையன்றே வுன்முடிவை யுறைநீ யென்பேன்.

இ-ள். கருது அரிய-நினைத்தற் கருமையான, விண்ணே - ஆகாயமே, நீ-நீ, எங்கும் ஆகி கலந்தனையே - எவ்விடத்தும் பரவிக கலந்திருக்கின்றனையே, உன் முடிவின் - உன் முடிவாகிய எல்லையில், காட்சி ஆகி வரு பொருள்-காணப்படுவதாய் வரும் பொருளானது, எப்படியிருக்கும்-எவ்வாறுகிய லக்ஷணங்களோடு கூடியிருக்கும், சொல்லாய்-சொல்லுவாய், என்பேன்-என்று சொல்லுவேன். மண்ணே-பூமியே, உன் முடிவில் உன முடிவெல்லையில், எது வயங்கும்-எந்தப்பொருள் நின்று பிரகாசிக்கும், ஆங்கு-அவ்விடத்துள்ள, துரிய அறிவு உடைச்சேடன்-மேலான அறிவையுடைய, சேடனை-ஆதிசேஷன், ஈற்றின் உண்மை சொல்லாலே-முடிவான பொருளின் உண்மையைச சொல்லாட்டாலே, சொல் என்பேன - சொல்லுவாய் என்று கேட்பேன், சுருதியே - வேதமே, நீ-நீ, ஒருவரைப்போல் - ஒருவர்க்குப் போல, அனைவருக்கும் சொல்லாருகும், உணமை ஆம் - மெய்ப்பாய விளங்குகின்ற, முன் உரை அன்றே-முதலாலா யிருக்கினறாய் அல்லவோ, நீ உன முடிவை உரை-நீ புன முடிவான பொருளைச சொல்லாய், என்பேன்-என்று சொல்லுவேன். எ-று.

அவரோஹணகரமதத்தில் முதற்பூ மாதலாலும், வேய நான்முகனுக்கும் அவகாசம் கொடுக்கும் பெருமையுடைய தாதலாலு மகாபூதியை 'விண்' எனவும், சுருதி அநாதியாதலால் 'முன்னுரை' எனவும் சொலலாச சமயத்தாரும் தத்தமக் குறுதியாகிய பிரமாணமெனக் கோடற்குரிய தென்பா அனைவருக்கு முணமையா முன்னுரையென்னவு கூறினார்.

28 உரைபிறந்து பெருமைபெற்றுத் திரைக்கைநீட்டி
ஒலிக்கின்ற கடலேபின் வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னைவைத்தா ரியாரே யென்பேன்
கானகத்திற் பைங்கிளிகாள் கமல மேவும்
வரிசிறைவண் டினங்களோ திமகா டீது
மார்ப் மன்றே நீங்களிது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோவொருகாற் பேசு மென்றேன்.

இ-ள். உரை இறந்து - பேச்சற்று, பெருமைபெற்று - பெருமையை யடைந்து, திரை கை நீட்டி-அலைகளாகிய கைகளை நீட்டி, ஒலிக்கின்ற கடலே-சத்திக்கிற சமுத்திரமே, இவ்வுலகம் சூழ-இவ்வுலகத்தை வளைந் திருக்கும்படி, கரையும் இன்றி-கரையும் இல்லாமல், உன்னை வைத்தார்-உன்னை யமைத்துவைத்தவர், யாரே என்பேன் யாவரே என்று சொல்லு வேன், கானகத்தில்-காட்டிலுள்ள, பைங்கிளிகாள்-பசுமையாகிய கிள்ளை களே, கமலம் மேவும் - தாமரை மலரிற் பொருந்திய, வரிசிறை-நீண்ட சிறைகளையுடைய, வண்டு இனங்காள் - வண்டுக் கூட்டங்களே, ஓதிமங் காள்-அன்னங்களே, தூதுமார்க்கம் அன்றே - (நீங்கள் காலங்கழிப்பது) தூதுமார்க்கத்தி லல்லவா, நீங்கள் இதுவரையிலேயும்-நீங்கள் இதுவரைக் கும், பெரிய பரிபூரணம் ஆம்-பெரிதாகிய பரிபூரண மென்கிற, பொருளை-வஸ்துவை, கண்டு பேசியது உண்டோ - கண்டு வார்த்தை சொன்ன துண்டோ, ஒருகால்-ஒருதரம், பேசும் என்பேன்-பேசுங்கள் என்று சொல் வேன். எ-று.

வண்டு அன்னம் கிளி நாரை நெஞ்சு முதலியவும் தூதுக்குரியனவாத லால் 'தூதுமார்க்கமன்றே' என்றார். வரிசிறை யென்ற விசேடணம் தூது செல்லுதற் குரிமைதோன்ற நின்றது. இது "அஞ்சிறையமடநாராய்" என்ற மேலோர் திருவாக்கானு முணர்க.

29 ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
யோட்டுதல்போ னின்பேதை யுப்போ டப்பை
மருவவிட்டுங் கர்ப்பூர மதனிற் றீபம்
வயங்கவிட்டு மைக்கியமுன்னி வருந்தி நிற்பேன்
அருளுடைய பரமென்றே வன்று தானே
யாளுளனென் றும்மூனக்கே யாண வாதி
பெருகுவினைக் கட்டென்று மன்னுற் கட்டிப்
பேசியதன் றேயருணூல் பேசிற் றன்றே.

இ-ள். ஒரு வனவன்-ஒரு வேடனவன், யானைகெட - எதிர்நின்ற யானையானது மறைய, (அதைத் தேடுதற்பொருட்டு) குடத்துள்-குடத்துக்

குள்ளே, செங்கை ஒட்டுதல்போல்-செவ்ந்த கையையிட்டுத் தழாவுதல் போல, பேதை நான்-அறிவிலியாகிய நான், உப்போடு அப்பை மருவ இட்டும்-உப்புடன் நீரைப்பொருந்தும்படி கலக்கவிட்டும், கர்ப்பூரமதனில்-கர்ப்பூரத்தில், தீபம்-விளக்கை, வயங்க இட்டும் பிரகாசிக்கச சேர்த்தும், ஐக்கியம் உன்னி - (இன்னும்) ஒற்றுமையை நினைத்து, வருந்தி நிற்பேன்-துன்பமுற்றுநிற்பேன், அருள் உடைய பரம் என்றே-திருவருளைத் தனக்குத் துணைக்காரணமாக வுடைய பரம்பொருள் என்றுள்ளதோ, அன்றுதானே-அன்றே, யான் உளன் என்றும் - நானும் உளேன் எனவும், எனக்கே-எனக்கே, ஆணவாதி - ஆணவம் முதலியவைகள், பெருகு-அதிகரித்தற்கேதுவாகிய, வினைக்கட்டு என்றும்-வினைப்பிணிப் புள்ளதென்றும், என்னல் கட்டிபேசியது அன்று-என்னுற் கற்பித்துச சொல்லப்பட்டதன்று, அன்றே-பூர்வந்திற்றானே, அருள் நூல் - வீட்டு நூல்களால், பேசிற்று-சொல்லப்பட்டதே. எ-று.

உப்பும்அப்பும், கர்ப்பூரமும் தீபமும்,ஒன்றோடொன்றுசோந்தபோதே ஐக்கிய முண்டாயிருக்க, ஐக்கியம உன்னி வருந்தி நிற்றலால்பேதையென்றார். உப்பும் நீரும், கர்ப்பூரமும் தீபமும்போல நான்உன்னோடு சேர்ந்திருக்கசசெய்தேயும் வேறொரு ஐக்கியமுண்டென்று மயங்காநின்றேன்; என்னிலைமை எதிரில் நின்ற யானைமறைய, அதனை காணும் பொருட்டுக்குடத்திற் கையிட்டுத் தழாவுவோனது நிலைமையை நிகர்க்கும் என்பதாம்.

30 அன்றுமுத லின்றைவரைச் சன்ன கோடி
யடைந்தடைந்திங் கியாதுனையா லழிந்த தல்லால்
இன்றைவரை முத்தியின்றே யேடுத்த தேக
மெப்போதோ தெரியாதே யிப்போ தேதான்
அன்றுமனக் கவலைகெடப் புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழித் துரையே தூதே
சென்றிடவே பொருளைவைத்த நாவ லோய்நஞ
சிவனப்பா வென்றவருட் செல்வத் தேவே

இ-ள். அன்றுமுதல்-பண்டைப்புக் காலந்தொடங்கி, இன்றைவரை-இன்றளவும், சன்னகோடி அடைந்து அடைந்து.ஐம்பரம்பரைகளைப் பலகாலு மடைந்து, இங்கு-இந்தப் பொய்நிகழுமுலகில், யாதுனையால்-துன்பதினால், அழிந்தது அல்லால்-அழிந்ததேயன்றி, இன்றைவரை-இன்றளவும், முத்தி இன்றே - முத்தியையடைதலின்றி யியாழிந்தமை, எடுத்தநேகம்-வினைகளீடாக எடுக்கப்பட்ட வுடம்பு, எப்போதோ - (விடுப்பது) எந்தப் பொழுதோ, தெரியாதே-அறியப்படாதே,(நூலால்)இப்போதே-இன்றே, துன்று-அதிகரித்த, மனக்கவலைகெட - மனக்கிலேசங்களொழிய, புலைநீசத்தன்மையுள்ள, நாயேனை-நாயினேனை, தொழும்புகொள - தொண்டு

கொள்ள, சீகாழித்துரையே-சீகாழிக்கு தீர்வாஹகனே, தூதுசென்றிட-பரமசிவன் தூதுசெல்ல, பொருளைவைத்த - நிதிக்குவியலையிட்ட, நாவலோய்-திருநாவலூரனே, நம் சிவன்-நமது பரமசிவன், அப்பா என்ற-அப்பா என்றழைத்த, அருள்செல்வம்-திருவருளாகியசெல்வத்தையுடைய, தேவே-தெய்வமே. எ-று.

இங்கு அடைத்து என இயைப்பினும் பொருந்தும். இப்பொழுது, யாதனே என்பது நரகத்திற் கொல்லாது வருத்தும் நோய் எனக்கொள்க. சீகாழித்துரை - திருஞானசம்பந்தர்; திருநாவலூரன் - சுந்தரர்; சிவன் அப்பா வென்றழைக்கப் பெற்றவர்-வாகீசர்.

31 தேவர்தொழும் வாதவூர்த் தேவே யென்பேன்
திருமூலத் தேவேயிச் சகத்தோர் முத்திக்
காவலுறச் சிவவென்வாக் குடனே வந்த
வரசேசும் மாவிருந்துன் னருளைச் சாரப்
பூவுலகில் வளரருணை கிரியே மற்றைப்
புண்ணியர்கா ளோரவென்பேன் புரையொன் றில்லா
ஓவியம்போ லசையறவுந் தானே நிற்பே
னேதமிய தயர்கெடவே யுரைக்குமுன்னே.

இள். தேவர்தொழும் தேவர்கள் வணங்குகின்ற, வாதவூர்த்தேவே-திருவாதவூரடிகளே, என்பேன்-என்றுசொல்லுவேன், திருமூலத்தேவே-திருமூலர் என்ற திருப்பெயரையுடைய சுவாமீ. இச்சகத்தோர்-இந்தபுலகத்தோர், முத்திக்கு முயல் உறு-மோக்ஷமடைதற்பொருட்டு ஆசையதிகரிக்க, சிவ வென்வாகுடனேவந்த சிவவென்கிற வாக்கியத்தோடுபிறந்த, அரசேச-இறைவனே, சும்மா இருந்துன-சிவர்கள் சும்மா விருந்துகொண்டு, உன் அருளைசார-உன்னருளையடைதற்காக, பூவுலகில் - பூலோகத்தில், வளர்-விருத்தியடை பாதிக்கிற, அருணகிரியே-அருணகிரிசுவாமீ, மற்றைப் புண்ணியர்கள் மற்றமுமுள்ளபுண்ணியவான்களே, ஓரவென்பேன்-ஓவென்று முறையிடுவேன், புரை ஒன்று இல்லா-குற்றம் சிறிது மில்லாத, ஓவியம் போல்-சித்திரப்பாவைபோல, அசைவு அறம் நிற்பேன் சலனமற்றும் நிற்பேன், ஏது அறிய-சொல்லுதல் அருமையாகிய, தயர்கெட - துயரம்நசிக்கும்படி, உரைக்கும் முன்னே-சொல்லுமுன்னமே. எ-று.

திருவாதவூரடிகள்-மாணிக்கவாசக சுவாமிகள். திருமூலர்-மூவாயிரம் பாடல்களடங்கிய திருமந்திரம்எனுமநூல்செய்தவர். சிவபெருமாற்குடனே வந்த அரசு சிவமாகியர். இவர அவதாரகாலத்தில் சிவ என்பதடியாக்குடனே அவதரித்தமையால்இவர்க்குஇப்பெயருண்டாயிற்று. அருணகிரிநாதர்.

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா வீருசொல் லறவென் றலுமற்
றம்மா பொருளொன் றுமறிந் திலனே.''--என்னுந்திருப்பாடலை யருளிச செய்தவ ராதலால் அவர்க்கு அதனையே விசேடணமாக, "சும்மா வீருந் தன்னருளைசசாரப் பூவலகில் வளரருணகிரியே" என்றார். புரை யொன்றில்லா ஓவியம் என்றது நுண்டொழில் முற்றிய ஓவியத்தை.

32 ஓதரிய சுகர்போல வேனே னென்ன
வொருவரிலை யோவெனவு முரைப்பேன் ருனே
பேதமபே தங்கெடவு மொருபே சாமை
பிறவாதோ வாலடியிற் பெரிய மோன
நாதனெரு தரமுலகம் பார்க்க விச்சை
நண்ணனே வென்றென்றே நானு வாகிக்
காதண்மிகு மணியிழையா ரேனவா டுற்றேன்
கருத்தறிந்து புரப்பதன்மேற் கடன்முக் காலும்.

இ-ள். ஓதரிய-தபோமகிமையை யெடுத்துச சொல்லுதற்கரிய, சுகர் போல-சுகமுனிவர்போல, என் என் என்னை-என் என் என்று பிரதிதவனி கொடுக்க, ஒருவர் இல்லையோ எனவும் உரைப்பேன்-ஒருவர் இல்லையோ வென்றுஞ் சொல்லுவேன். தானே-தன்னிடையே, பேதம் அபேதம் கெட வும்-பேதாபேதங்கள் ஒழியவும், ஒரு-ஒப்பற்ற, பேசாமை-மௌன நிலையா னது, பிறவாதோ - உண்டாகாதோ, ஆல் அடியில் - வடவிருட்மூலத்தி லெழுந்தருளிய, பெரிய மோனநாதன் - பெரிய மௌன நிலையையுடைய இறைவன், ஒருதரம்-ஒரு முறை, உலகம் பார்க்க-உலகத்தைக் கடைக் கணிக்க, இசசை நண்ணனே - விருப்பங்கொள்ளானே, என்று என்று-என்று பலகாற்சொல்லி, நானு மி-பலவகையாய்க்கலங்கி, காதல்மிகும்-(பிரிந்துசென்ற தலைவர் நியமப்படி வராமையால், அவர்கள்மேல்) ஆசைமிகுந்த, அணியிழையார் எனை-மாதரைப்போல, வாடுற்றேன்-வாட்ட மடைந்தேன், கருதது அறிந்து - எனகருத்தையுணர்ந்து, புரப்பது-காத் தருள்வது, முக்காலும்-மூன்றுதரமும், உன்மேல்கடன்-உனக்குக் கடன் மை ஆகும். எ-று.

சுகமுனிவர் அவதரித்தவுடன் பிரபஞ்சமாயைக் கஞ்சியோட, அவர் தந்தையாராகிய வேதவியாச பகவானவர் அவரைப் பின்தொடர்ந்து ஓகோ மகனே யென்று அழைத்துக்கொண்டு போனபோது சுகர் பூதமய ரும் இறைவனைப்போலச சாவ வியாபகத்துவமுள்ளவரு மாதலால் அங் கிருந்த விருடிங்களெல்லாம் பிரதிதவனி செய்தனவென்பது தோற்றுணி யாதலால், "சுகர்போல் என்னன் என்ன வொருவரிலையோ" என்றார்,

இதனை அடியில்வரும் பாகவதபுராணச் சிறப்புப் பாயிரச் செய்யுளானு முணர்க. * தந்தையார் அழைக்குந்தோறும் பிரதித்வனி கொடுத்த சுக முனிவர்போல, நான் அழைக்குந்தோறும் பிரதித்வனி கொடுக்க ஒருவரு மில்லையோ; எனக்கு மௌனநிலை யுண்டாகாதோ; கல்லாலெம்மான் ஒரு தரம் உலகத்தைப் பார்க்க நினையானே, என்று பலபடியாகச் சொல்லி கணவர்பிரிவாற்றாது வருந்து மாதரைப்போல வருந்தாநின்றேன், என் கருத்தறிந்து என்னைப் பாதுகாத்தல் உனக்குக் கடன்மையாம் என்பதாம்.

33 காலமொடு தேசவர்த்த மான மாதி
கலந்துநின்ற நிலைவாழி கருணை வாழி
மாலறவுஞ் சைவமுதன் மதங்க ளாகி
மதாதீத மானவருண் மரபு வாழி
சாலமிகு மெளியேனிவ் வழக்குப் பேசத்
தயவுவைத்து வளர்த்தவருட் டன்மை வாழி
ஆலடியிற் பரமகுரு வாழி வாழி
யகண்டிதா காரவரு ளடியார் வாழி.

இ-ள். காலமொடு-கால தத்துவத்தோடும், தேசவர்த்தமானம் ஆதி-தேசவர்த்தமா நாதிகளோடும், கலந்து நின்ற நிலை-பிரிவறக்கலந்துநிற்கும் நிலையுடைப்பொருள், வாழி-வாழ்க. கருணை-(அப்பொருளிற் பிரிவறநின் றியங்கும்) திருவருள், வாழி-வாழ்க, மால் அறவும்-மயக்க மொழியவும், சைவம் முதல் மதங்கள் ஆகி-சைவம் முதலாகிய பல வேறுமதங்களாய் நின்றும், மத அதீதம் ஆன-மதங்களுக் கெட்டாத தான, அருள் மரபு-திருவருள் மரபான அது, வாழி-வாழ்க, சாலம் மிகும்-மாயா விகாரம் மிகுந்த, எளியேன்-ஏழையேன், இவ்வழக்குப்பேச - இந்த விகாரம் பேசும்படி, தயவுவைத்து வளர்த்த - திருவைவைத்து வளர்த்த, அருள் தன்மை-திருவருட்குணம், வாழி-வாழ்க, ஆல் அடியில்-வடமூலத்தி லெழுந்தருளிய, பரமகுரு-பரமாசாரியன், வாழி வாழி-வாழ்கவாழ்க, அகண்டிதம்-சேதிக்கப்படாத, ஆகாரம்-உருவத்தையுடைய, அருள்-உன் திருவருளுக்கு, அடியார்-தொண்டு பூண்டோர், வாழி-வாழ்க. எ-று.

---

* பிறந்தபொழுதேதுறந்து பிறைக்குழலி போனடிப்பப்பின்போய்த் தொன்னூல், அறைந்தபுகழ்வியாதமுனியாதரத்தான் மதலாயென்றழைப்ப செவவாய், திறந்தநறை பொழியுமலர்ச செழுந்தருவு மேனென்ன வுயிர்கள் யாவும், நிறைந்தநறையுஞ் சுகமுனிவ னிரையிதழ்த்தா முரைத்தாள்க ணினைதல் செய்வாம்.

மால் அறவும் என்பதற்கு இதுவோ அதுவோவென்னும் மயக்க மிகும் படியாகவும் எனவுரைத்தலும் பழம். 'சாத்தியேன்' என்றார் சால்பிருத்திக்கிடந்தியிருத்தலான். அடியிற் பரமகுரு-தாணிணைமூர்த்தி-

இது திருவடிகர்த்தாவாகிய பிரமனே நோக்கிக்
கூறியதாகக் கூறப்பட்டது.

தேன்முகம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

1 தேன்முகம் பிலிற்றும் பைந்தாட்
செய்யபங் கயத்தின மேவும்
நான்முகத் தேவே நின்னு
ளுட்டிய வகில மாயை
கான்முயற் கொம்பே யென்கோ
கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ
மற்றென்கோ விளம்பல் வேண்டும்.

இ-ள். தேன்-தேனை, முகம்-தன்னிடத்திலின்றும். பிலிற்றும்-துளிக்கின்ற, பைதாள்-பசிய நாளத்தை யுடைய. செய்ய - செவ்வந்தாதிய, பங்கயத்தில் - தாமரை மலரின்மேல், மேவும் - வீற்றிருக்கின்ற, நான்முகத் தேவே-நான்கு முகங்களையுடைய பிரமதேவனே, நின்னுள் நாட்டிய-உன்னுள் படைத்து நிலைபெறுத்தப்பட்ட, அகிலம் - பிரபஞ்சத்தைப் பற்றிய, மாயை-மாயை யானது. கான்-காட்டில் வாழ்கின்ற, முயல் - முயலினது. கொம்பே என்கோ-கொம்புதா னென்று சொல்லுவேனோ, கானல் புனலே என்கோ-கானல் நீர்தான் என்று சொல்வேனோ வான் முகம் - ஆகாயத்தினிடத்திலுள்ள, முளரி என்கோ தாமரைமலர் என்று சொல்லுவேனோ, மற்று என்கோ-இவற்றின் மேலுரைக்கிய பொருள் என்று சொல்லுவேனோ, விளம்பல் வேண்டும்-(அதை) நீயே சொல்லல வேண்டும். எ-று.

கான் முயற்கொம்பு முதலிய மூன்றும் இல்பொருளுவமை. மாயையை சுருதி குரு சுவானுபவங்களா னுறுறு நோகுமிடத்து மித்தையாய்ப் போமென்பார் இவ்வாறு கூறினார். கானலம் எனபதில் அம சாரியை. முயற் கொம்பும். கான னீரும், ஆகாயத் தாமரையும், தோற்றத்தாலன்றி விசாரத்தாற காணப்படாத மாயையின் மித்தியாபாவத்தைக் காட்டவந்த இல்பொ ளுவமைகள். ஒருபொருளி னுண்மையை வேத வேதாந்தங்களே யுணர்ந்தா லொருவன் கூறின், தனகு விளங்கு மாதலால், விளம்பல வேண்டும் என்று, திருவடி கர்த்தாவும் வேதாந்தஞ் மாகிய பிரமனே நோக்கித்

கூறினர். "வேத நஞ்சகன் மால் புரந்தரன்" என்றற் றொடக்கத்துச செய்யுள்க ளானும் இவன் வேதாதிகாரி யென்பது விசதம்.

2 வேண்டுவ படைத்தாய் நுந்தை
விதிப்படி புரந்தா னத்தைக்
காண்டக வழித்தான் முக்கட்
கடவுடா னினைய வாற்றல்
ஆண்டவ னெவனே வென்ன
வறிகிலா தகில நீயே
எண்டிய வல்ல நீர
வெம்மனோர்க் கியம்பு கண்டாய்.

இ-ள். வேண்டுவ-உலகத்தாரால் வேண்டப்படுவன வாகிய பொருள்களே, படைத்தாய்-நீ படைத்தனை, நுந்தை-உன்தந்தை யாகிய திருமால், விதிப்படி புரந்தான் - காக்க வேண்டிய முறைப்படி காத்தான், அத்தை-அதனை, முக்கண் கடவுள் - மூன்று கண்களையுடைய உருத்திர மூர்த்தி, காண்தக அழித்தான்-யாவருங் காணும்படி அழித்தொழித்தான், இனைய ஆற்றல்-இதப் பிரகாரத்தால். ஆண்டவன் எவன் என்ன-இறைவன் யாவனென்று, அகிலம் அறிகிலாது-உலகம் உணரமாட்டாது, (ஆதலால்) எண்டிய-மிகுந்த, அல்லல் நீர-சம்சேதகம் நீங்க, எம் அன்னோர்க்கு-எம்மை யொத்தவர்களுக்கு, நீயே இயம்ப நீயே சொல்வாய். எ று.

அத்தை யென்றது அவற்றை யென்படி. முக்கண் கடவுள்-சோமசூரியாக்கினிகளை மூன்று கண்களாகவுடைய தேவன். கடவுள் - ப்ருதிவியாதி சாதாரண்யமான தத்துவங்களைக் கடந்து நின்றோன். நீயும், உன் தந்தையும், முக்கட் கடவுளும் முறையே படைத்தல் காத்தல் அழித்தல்களைச செய்வதனால், நீங்கள் மூவரும் சமமாகவே உலகத்துக்குக காணப்படுகின்றீர்கள். உங்களுள் இறைவன் இன்னனென்று தெரியாமல் உலகம் மயங்குகின்றது, ஆதலால், அந்தச சந்தேகம் நீங்கும்படியாக எம்போல்வார்க்கு நீயே உண்மையை யறிவுறுத்த வேணடும் என்பதாம்.

3 கண்டன வல்ல வென்றே
சழித்திடு நிருதிக் கண்ணை
கொண்டது பரம னாதக்
கோதிலா முத்தி யத்தால்
பண்டையிற் படைப்புங் காப்பும
பறந்தன மாயை போடே
வெண்டலை விழிகை காலில்
விளங்கிட நின்றோன் யாவன்.

இ-ள். கண்டன காணப்பட்டன வாகிய பொருள்களெல்லாம், அல்ல என்று-பரம்பொருளல்லவென்று, கழித்திடும்-நேதிவாகயத்தாறகலோக்து செலலுகின்ற, இருதிககண் - முடிவிடததில், கொண்டது - பரம்பொரு ளென்று கொள்ளப்பட்டது யாது, (அது) பரமானந்தம-மேலான சுகத் தைத்தருகின்ற, கோது இல்லா-குற்றமற்ற, முத்தி-மோக்ஷமாகும், அத் தால்-அதனால், பணடையின-முன்ன தாகிய, படைப்பும-சிருட்டியும், காப் பும்-திதியம், மாயையோடே பறநதன-மாயையோடொழிநதன, வெள் தலை விழி-வெண்மையாகிய தலையும்கண்ணும், கைகாலில்-முறையேகையி னிடததும் காலினிடத்தும், விளஙகிட-பிரகாசிக்குமபடி, நின்றன்-சர்வ சங்கார காலத்தில் பேரிமதநாடியாப்ச சேடித்து நின்றவன், யாவன்-எவன். எ-று.

கண்டன அல்லவென்று கழித்தலாவது, காணப்பட்ட பொருள்க ளெல்லாவற்றையும் இது பரம்பொருளல்ல, என்று பொருள் தோன்று மளவும் கழித்துக்கொண்டே செல்லுதல். இது வாழையினுள்ளோடிய நண்டு தோன்றுமளவும் மட்டைகளைக் கழித்துக்கொண்டே செல்வது போல்வது. இதனை நேதி வாக்கியம என்பர் வடநூலார். நஇதிஎனப் பிரியும். இதற்கு, இது அல்ல என்பது பொருள். "அல்லயீதல்ல யீது" எனவும், இதன்றி தன்றெனச சேடித்தபின்" எனவும்மேலோர்கூறு வதனனு மறிக. வெண்டலைவிழி கைகாலில் என்றது நிரணிறை. வெண் டலை கையிலும், விழி காலிலும் விளஙக எனக்கூட்டுக. வெண்டலை பிரம கபாலம்; விழி-திருமாலின்கண்; "தலைமாலை தனக்கணிந்து" "பகுகய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்-தகுக ணிடந்தான் சேவடிமேற் சாதது லுமே" இத்தியாதிக ளானும் இது இனிதுவிளங்கும். சர்வசங்காரகாலம் இத்தன்மையதென்று, சங்கார சத்தியின் குணங்களையுரைக்கின்ற அடியில் காட்டும் ஞானவாசிட்டச செய்யுட்களால் விசதமாகும்.

சங்காரசத்தியின்நடனச்சிறப்புரைத்தல்.

படர்பூதந் தொலைத்திரதம் பயில்புவியாம் பானபாத் திரங்கை பற்றி
மடல்சூழற் பலங்கழுநீர் வனசமென புலகநிரை மாலை சூடி
விடுகோடை யிடிநகைக்கு நரவரியை விளையாட்டு விகநக மாக
நெடுநீளவன் புயமாம்பஞ் சரத்தினிடை யேந்துகின்ற நெறிய ளாகி.

இ-ள். மிகுந்த சீவர்களாகவொன்று, இரசம் பொருந்திய பூமியாகிய மதுபாத்திரத்தைக் கரத்திலேந்தி, மூன்றுலகமென்கிற இதழ்களையுடைய நீலோற்பலஞ் செங்கழுநீர் தாமரைமலர் (என்னு மிவைகளாற்றொடுத்த) அலங்கலைப்புனைந்து, எறியாநின்ற கோடை யிடியைப்போல மநதகாசஞ் செய்கின்ற நரசிங்கதத்தை விலகுதிய கிளிப்பிளையாக கொண்டு நிற்ற

பராகதிரமத்தையுடைய புஜமாகிய கூட்டில் எத்திக்கொண்டிருக்கின்ற தன்மையை யுடையவளாய். எ-று.

ஆகாயம் போன்ற வடிவம் தனக்கவயவமென்பது தோன்ற, புவியாம் பானபாத்திரங் கைப்பற்றி யுலகநிறை மாலகூடியென்றும், சகலத்தையுஞ் சங்கரிக்குங் கோரமுள்ள சத்தியென்பது தோன்ற நரவரியை விளையாட்டு விகங்கமாக வேந்துகின்ற என்றுங் கூறினர்.

மன்னுசரற் ககனம்போன் மாசின்றிச சுரவீனை மதுர மேவி
முன்னுயாகா லனைக்கேளீக்கோகிலகருஞ்சாய்க்கொண்டுமுழுதுயின்ம
யென்னுமடற் சிலதாங்கி யெழுதுயரா கியகணைக ளேந்தி யெங்கு
துன்னுநட னம்புரிந்து தன்வசமாய் விகவிளங்கிச சுற்று நிற்கும்.

இ-ள். நிலையான சாற்காலத் தாகாயத்தைப்போல (சரீரத்திற்களங்க மின்றி சுரவீனை (யினிசையையொத்த) மதுர வசனத்தைப் பொருந்தி (யிருக்கின்ற) பழய மகாகாலனை விளையாட்டின்பொருட்டு குயிற் பார்ப்பா ககைகைக்கொண்டு,சாவாபாவமென்கிறவெற்றிபொருந்தியவில்லத்தரித்து, உண்டாகின்ற துன்பங்களாகிய அம்புகளைத் தரித்துக்கொண்டு எவவிடத் திலும் தனதிசசைப்படிபொருந்திய நிருத்தஞ்செய்து விகவும்பிரகாசித்துச சுழன்றுகொண்டிருகிறாள். எ-று.

காலராத்திரி சாவத்தைபுந் சங்காரிக்கின்ற மகா காலனையுந் தனது விநோதகருவியாய் வைத்திருக்கு மென்பதாம்.

வெண்ணிலகு தரியணியாம் புணர்பாவ மெனுநூலாற் பூட்டிக் கட்டும்
பன்னரகச சிலம்புகளைப் பாதலமாம் பதத்தணியும் பாணுத்திங்கள்
என்னுமணி சேரிமவா னெனுமெலுப்பு மணிமேரு வென்னும் பொற்பூண்
டன்னிருகா நிணுந்தரிக்குஞ் சகரவெற் பணிகலையாய்த் தழுவ மன்றே.

இ-ள். சுவர்க்கம் (சிரத்தில்) தரிக்கும் ஆபரணமாம், பொருந்தின தேவிகளென்கிற தந்துகிஞல் கோத்துக் கட்டப்பட்ட பல நரகமென்னு நூபுரங்களைப் பாதாளமென்கிற பாதத்திற்றரிப்பள் சூரியசந்திரரென்கிற குண்டலாபரணங்களையும் சேர்ந்த இமயமலை யென்கிற அஸ்தி யாபரணத் தையும் மகாமேரு வென்கிற சொன்னபரணதையும் நன திரண்டு செவி யிலும் (சூழனி மேலணியாகத்) தரிப்பள். சக்ரவாளகிரியை (அரையில்) தரிக்கப்பட்ட மேகலையாக சங்காரசத்தியானவள் தரிப்பள். எ-று.

இ-ம். சங்காரசததி, சுவர்க்கமுதல் நரகபரியந்தங்களை விசித்திரமான வாபரணங்களாகத் தரிக்குமென்பதாம்.

பின்னுறத்தாழ்ந்த தலைத்திலங்கு முருகன்வா களமேடம் பிலி சூடி
முன்னையனப் பெருங்குழிகள் பயஞ்செய்யு மதிசசடைதாழ் முடிகள்பூணும்
கன்னியமை குழற்கவரி மலைகிகாபை ரவராடுங கவந்த மேவும்
பன்னயனக குழிவிளகுகு மிந்திரன் மேனியெனும் பலியோடேந்தும்.

இ-ள். பின்பக்கத்திற் முழ்ந்து அசைந்து விளங்காகின்ற சுப்பிரமணி யரது வாகனமென்கிற வருடையையும் மயிலையும் தரிப்பள். மூன்று கண்ணகளென்னும் பெரிய பள்ளங்களால் அசசஞ்செய்யப்பட்ட சந்திரனை (யணிந்த) சடிலதான்ற (உருத்திரர்களின்) சிரசைத்தரிப்பள். கன்னியாகிய பரமேசுவரியினுடைய கூந்தலென்னுஞ் சாமரத்தையும் பருப்பதத்துக் கொப்பான பைரவர்களின் துள்ளுகிற கவந்தங்களையும் தரிப்பள். ஆயிரம் கண்களென்கிற பள்ளங்கள் பிரகாசியாகின்ற தேவேந்திரனது சீர மென்கின்ற பிஷாபாத்திரதனை தரிப்பள். எ-று.

சங்காரகிருத்தியமுள்ள வுருத்திரையுஞ் சங்கரிப்பவ ளென்பார், மதிசசடை தாழ்முடிகள் பூணுமென்றார். கோரசததி உருத்திரன் முதலிய சகலரையுந் தன்வயமாக்கு மென்பதாம்.

மிகவுணங்கு சாரீர கட்வாங்கப் பங்குகளால் விளககத் துன்று [மாற்று
மகமுடைத்தாய்த் தனைதானே பயஞ்செய்து புவனமெலாங் தாலைத்து
மகிலமுமா மொருவடிவின் முடிவட்ட மெனுங்கமலத் தலங்க லோடு
நிகரினட னம்புரிந்து பெருங்கற்பக தனில்விளங்காநிற்கு மன்றே.

இ-ள். மிகவும்இளைத்த (சரீர சம்பந்தமான) நரம்புகளாற் கோக்கப் பட்ட சிரக்கபால மாலைகளால் பிரகாசமிகுந்த ஆகாயத்தை யுடையவ ளாய்த் தனக்குத்தானே பயங்கரமாய் உலகங்களனைத்தையும் நாசஞ்செய் வள். விசுவரூபங்கொண்ட விஷ்ணுவினது விருத்தமாகிய சிரங்களென் கின்ற தாமரை மலாகளாற் (மிரடித்த) மாலைகளுடன் ஒப்பற்ற நிருத்தஞ் செய்து சர்வசங்கார காலத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பள். எ-று.

மாகமி என்பது மகமி எனக் குறுகிநின்றது. முன்கவியில் உருத்திர கபாலமும் பின்னர் விஷ்ணு கபாலமும், சொல்லப்பட்டமையால், கட்வாங்க மென்பது - பிரமகபாலமென வமையும். பிரம விஷ்ணுக்களை சங்கரித்தாள் என்பார், கட்வாங்கமென்றும் முடிவட்டமென்றுங் கூறினர்.

சங்காரசத்தி கிருஷ்டி திதி கிருத்தியமுள்ள பிரம விஷ்ணுக்களையுந் தன்வயமாக்கிச சர்வ சூனிய மயானத்தில் நிருத்தஞ் செய்யும் பரமேசுவர சத்தியாம்.

4 விளங்கவெண் ணீறு பூசி
விரிசடைக் கங்கை தாங்கித்
துளங்குநன் னுதற்கண் டோன்றச்
சுழல்வளி நெடுமூச் சாகக்
களங்கமி லுருவந் தானே
ககனமாய்ப் பொலியப் பூமி
வளர்ந்ததா ளென்ன வுள்ள
மன்றென மறையொன் றின்றி.

இ-ள். விளங்க - பிரகாசிக்கும்படி, வெண்ணீறு பூசி - திருவெண் ணீற்றை யணிந்து, விரிசடை-பரந்த சடையினிடத்து, கங்கை தாங்கி-கங்கையைச சுமந்து, துளங்கு ஒளியைசசெய்கின்ற, நல்-அழகாகிய, நுதற் கண் தோன்ற-நெற்றிக்கண் காணப்படவும், சுழல் வளி-சுழலா நின்றகாற் றானது, நெடுமூசசு ஆக பெருமூசசாகவும், ககனமே-ஆகாயமே, களங்கம் இல்லாகுற்றமற்ற, உருவமாய்ப்பொலிய - வடிவாகப் பிரகாசிக்கவும், பூமி-பூமியே, வளர்ந்ததாள் என்ன-நீண்ட திருவடியாகவும், மன்று-சிற்சபை யானது, உள்ளம் என - இதயமாகவும் (கொண்டு), மற்றை ஒன்று இன்றி-சிறிதும் இரகசியமில்லாமல். எ று.

கங்கை யடங்கத்தக்க பெரும்பரப்பான தென்பார் விரிசடை யென் றார். "வெள்ளந்தாழ்விரிசடையாய்" என்றார்திருவாதவூரடிகளும். நெற்றி யிற் கண்ணிருப்பின். அழகாயிராதென்னும் நினைவொழித்தற்கு "நன்னு தற்கண்" எனக்கூறி, அதுவும் ஓர் அழகுடைத்தென்று வற்புறுத்தினர். இதனை "தில்லையோர் கொண்முக்கண்" என்னுந் திருவாதவூரடிகள் திரு வாககானு முணர்க. இறைவனுகுகுத தில்லையை இருதயபுண்டரிகமாகக் கூறுபவாதலால் 'உள்ளம மன்றென' எனக் கூறப்பட்டது.

5 மறைமுழக் கொலிப்பத் தானே
வரதமோ டபயக் கைகள்
முறைமையி னுலங்க நாத
மூரசெனக் கறங்க வெங்கும்
குறைவிலா வண நிறைந்து
கோதிலா நடனஞ் செய்வான்
இறையவ னெனலா மியார்க்கு
மிதயசம் மதமீ தல்லால்.

இ-ள். மறை முழக்கு ஒலிப்ப - வேதமுழகுகமானது சத்திக்கவும், வரதமொடு அபயக் கைகள் - வரதா பய ஹஸ்தங்கள், முறைமையின் ஓங்க-முறையாக மிக்கு விளங்கவும், நாதம் - நாததத்துவமானது, முரசு

என கறங்க - பேரிகைபோல வொலிக்கவும், எங்கும் - எவ்விடத்தும், குறைவு இல்லா வண்ணம்-குறைவில்லாதபடி. நிறைந்து - நிரம்பி, கோது இல்லா கடனஞ் செய்வான்-குற்றமற்ற கடனம் பணனுவோன் யாவன், (அவன்) இறைவன்-முதல்வன், எனலாம்-என்று சொல்லலாம், யார்க்கும்-எல்லார்க்கும், இதயசம்மதம்-இதயசம்மதமான காரியம், ஈது அல்லால்-இதுவாமன்றி, எ-று.

வரதக்கை-வரதகொடுக்குங் கை. அபயக்கை - பயமொழிக்குங் கை கோதிலாத கடநம் என்றது அன்பர் உடலுருக நடத்தலை அது "கூம்ப லுங் கைத்தலத் தன்பரென் பூருகக் குனிக்கும்-பாம்பலங் காரப்பரன்" என்னுந் திருகோவையார் வாயிலானும் விசதம்.

6 அல்லலாந் தொழில் படைத்தே
யடிக்கடி யுரு வெடுத்தே
மல்லனமா ஞாலங் காக்க
வருபவர் கடவு ளென்னில்
தொல்லையாம் பிறவி வேலை
தொலைந்திடா திருணீங் காது
நல்லது மாயை தானு
நானென வந்து நிற்கும்.

இ-ள். அல்லல் ஆம் தொழில் படைத்து துக்கரூபமாகிய தொழிலைப் பெற்று, அடிக்கடி உரு எடுத்து-அடிக்கடி சரீரம் எடுத்து, மல்லல் - வளம் பொருந்திய, மா-பெரிய, ஞாலம்-உலகதனை, காக்கவருபவர்-ரக்ஷிக்கவரு பவர், கடவுள் என்னின்-கடவுள் என்றால், தொல்லை ஆம்-பழமையாகிய, பிறவி வேலை-பிறவிக்கடலானது, தொலைந்திடாது - வற்றாது, இருள் நீங் காது அஞ்ஞான இருள் விலகாது, நல்லது மாயைதானும் - நன்மையாய்ச சீவர்களுக்குத் தோன்றுகின்ற மாயையும், நான் என வந்து நிற்கும் - நானென்று வந்து நிற்கும், எ-று.

துக்கரூபமாகிய தொழில்பெற்றிப் பலகாற்பிறந்து உலகைக் காக்க வருபவர் கடவுள ரென்றால், அவ்வாறு சொல்லுதலால் உண்டாகிற பிற விக்கடல் வற்றாது. அஞ்ஞானந்தகாரம் தொலையாது. மாயையும் எதிர் வந்து நிற்கும் என்பதாம்.

7 நானென நிற்கு ஞான
ஞானமன் றந்த ஞானம்
மோனமா யிருக்க வொட்டா
மோனமின் றுக வேதான்

தேனென ருசிகரு மன்பாற்
சிந்தைகைந் துருகு வண்ணம்
வானென நிறைநதா னந்த
மாகடல் வளைவ தின்றே.

இ-ள். நான் என நிற்கும் ஞானம் - நானென்று விவகரிகக நிற்கிற ஞானமானது; ஞானம் அன்று - ஞானமல்ல, (எனெனின்) அந்தஞானம்- அந்த ஞானமானது, மோனமாய இருக்கவொட்டா - மோனமாயிருக்க வொட்டாது, (ஆதலால்), மோநம் இன்றுகவே, மோநமில்லை யாயின போதே, தேன் என - தேன்போல, ருசிக்கும் அன்பால - இரதிக்கின்ற அன்பினால், சிந்தை - மனமானது, கைந்து உருகும் வண்ணம் - கைந்து கரையும்படி, ஆனந்தம் - சுகமாகிய, மா-பெரிய, கடல்-கடலானது. வான் என நிறைந்து-மேகங்கள்போல நிறைந்து, வளைவது இன்று - வளைதல் இல்லை. எ-று.

நான் என நிற்கும் ஞானம்-அகங்காரம். அதுவொன் றுளதாயின் மௌநநிலையும், அதனால் மனமுருகுமாறு வளைகின்ற ஆனந்தப்பெருக்கும் இல்லையென்பதாம்.

8 இன்றென விருப்போ மென்னி
னென்றுஞ்சு னியாமா முத்தி
நன்றெடு தீது மன்றி
நாமுன்னே பெறும வித்தை
சின்றது பெத்தந் தானே
நிரந்தர முத்தி யென்னி
னென்றெரு வரைநான் கேட்க
வுணர்வில்லை குருவு மில்லை.

இ-ள். இனறு என இருப்போம் என்னின்-இல்லை யென்றிருப்போ மென்றால்; என்றும்-எக்காலத்தும், முத்தி-முத்தியென்பது, சூனியம் ஆம்-சூனியமாய் முடியும், (அப்போது) நனறெடு தீதும் அன்றி - நன்மையுடன் தீமையமல்லாமல், நாம முன்னேபெறும அவிசதை நின்றது - நாம் முன் னமே யடைநதிருநத அவிசசை நிலைபெற்றது, பெத்தமதானே - அந்த அவிசசை நிலைபெற்றிருநத பெநதநிலையே, நிரநதரம் - சதாகாலமும், முத்தி என்னின்-முத்தி யென்று சொன்னால், ஒருவரை-ஒருத்தரை, நன் ஒன்றுகேட்க-நானென்னைக் கேட்பதற்கு, உணர்வு இல்லை - அறிவில்லை, குருவும் இல்லை-ஆசாரியனுமில்லை. எ-று.

அவிசசை - அஞ்ஞானம். இது உண்மையறிவைத்தடுப்பது. அறி விருந்தாலன்றே ஆசாரியவசநம்புள்ளபடியது, அவ்வசநதத்தையுட்கொள்ளு

முணர்வில்லையாகவே ஆசாரியவசநம் பயன்படா தென்பது தோன்ற, உணர்வில்லை குருவுமில்லை யென்றார்.

9 இல்லையென் றிடினிப் பூமி
பிருந்தவா றிருப்போ மென்னில்
நல்லவன் சாரு வாக
ஞனசொலு நெறிக்கு வீணில்
தொல்லையே ஞக மாதி
தொடுப்பதேன் மயக்க மேதிக்
கொல்லைவந் திருமி னென்ன
வுறவிசெய் திடுவ னன்தோ.

இ-ள். இல்லை யென்றிடின்-இல்லை யென்றுசொல்லின், இப்பூமி-இந்த வுலகம், இருந்தவாறு-இருந்த பிரகாரம், இருப்போம் என்னில்-இருப்போ மென்றால், நல்லவன் சாருவாகன்-நல்லவனுகிய சாருவாகன், நான் சொல் லும் நெறிக்கு-நான் சொல்லுகிற மார்க்கத்தை யநுஷ்டிப்பதற்கு,வீணின்-வீணுக, தொல்லை என்-பழமை யாதுக்கு, ஆகமாதி தொடுப்பது என்-ஆக மம் முதலியவைகளைத் தொடங்குவது யாதுக்கு, மயக்கம் எது-மயக்கம் யாதுக்கு, இங்கு-இவ்விடத்தில், ஒல்லை-விரைவில், வந்து இருமின் என்ன-வந்து என்னுடி கூடியிருங்களென்று, உறவு செய்திடுவன்-நட்புச்செய் வான். எ-று.

ஆகமாதி என்றது ஆகமம் முதலிய பிரமாணங்களை. தொடுப்பதுஎன் றது அவற்றைக்கொண்டு தர்க்கந் தொடுத்தலை. இங்குத் தர்க்கம் என்றது வாத செற்ப வித்தண்டைகளை. சாருவாகன்-நிரீசுரவாதி. நல்லன் என்றது இங்குத் தீயோன் என்றபடி. தொல்லை என் என்பதற்கு இந்தத் தொந் தரவுகள என் என்னலுமாம்.

10 அந்தணர் நால்வர் காண
வருட்குரு வாகி வந்த
எந்தையே யெல்லாந் தானென்
றியம்பின னெமைப் படைத்த
தந்தைநீ யெம்மைக் காக்குந்
தலைவனே நுந்தை யன்றே
பந்தமில் சித்தி முத்தி
படைக்கநின் னருள்பா லிப்பாய்.

இ-ள். அந்தணர் நால்வர் காண-வேதியர் நால்வர் காணும்படி, அருள் குரு ஆகிவந்த - அருளுருவாகிய ஆசாரிய மூர்த்தமா யெழுந்தரு ளின, எந்தையே-எமது பரம பிதாவாகிய சிவபெருமானே, எல்லாம் தான் என்று - எல்லாப் பொருள்களுந் தானே யென்று, இயம்பினன்-சொல்

லிஞன், (ஆயினும்) எம்மைப் படைத்த தந்தை நீ-எங்களைச் சிருட்டித்த பிதா நீ, எம்மை-எங்களை, காக்கும்-ரக்ஷிக்கிற, தலைவன் முதல்வன், நுந்தை அன்றே-உன் தந்தையாகிய திருமாலல்லவா, பந்தம் இல்-பிணிப்பற்ற, சித்தி முத்திபடைக்க-சித்தி முத்திகளைப் பெற்றுவாழ்தற்கு, நின் அருள் பாலிப்பாய்-உன் கிருபையைத் தந்தருள வேண்டும். எ-று.

அந்தணர் நால்வர்-சனகாதியர். சித்திமுத்திகள் இம்மையில் அணிமாதி முதலியவைகளும் மறுமையில் மோக்ஷமும்.

பன்மாலை.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

1 பன்மாலைத் திரளிருக்கத் தமை யுணர்ந்தோர்
பாமாலைக் கேதான் பக்ஷ மென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னர் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனே னெந்நாளுந் துதித்து நிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா வென்றே
யெனைக் கலப்பாய் திருக்கருணை யெம்பிரானே.

இ-ள். பன்மாலை திரள் இருக்க-பலவகையவாகிய பூமாலைத்தொகுதியிருக்கச செய்தே, (அவற்றில் விருப்பம் வையாது) தம்மை உணர்ந்தோர்-தம்மை யுணர்ந்தோர்களாகியஞானிகளுடைய, பாமாலைக்கே-கவிமாலைகளினிடத்தே, நீ நீ, பக்ஷம் என்று-விருப்பஞ் செய்வோனென்று, நல்மாலை ஆ-(பூமாலை பாமாலை யென்னு மிரண்டினுள் பாமாலையே) சிறந்த மாலையாக, எடுத்து தெரிந்தெடுத்து, நல்லோர்-முமுட்சுக்கள், சொன்னர்-உன் திருவடியிற் சூட்டினர்கள், நலம் அறிந்து-நன்மையாவதிதுவென்று பாகுபடுத்துணர்ந்து, கல்லாத-அந்நன்மையைத் தரும் வீட்டு நூல்களைக்கற்றறியாத, நானும்-அடியேனும், சொன்னேன்-பாமாலை சூட்டினேன், சொல்-சொல்லப்பட்ட, மாலை மாலை ஆ-தாரை தாரையாக, கண்ணீர்சோர - கண்ணீர் சொழுக, தொண்டனேன்-உன் தொழும்பு பூண்டவனுகிய நான், எந்நாளும் - (இன்றுபோலவே) எக்காலத்திலும், துதித்து நிற்பேன்-வழுத்தா நிற்பேன், திருக்கருணை எம்பிரானே நிறைந்த கருணையையுடைய எம்மிறைவனே, என் மாலை அறிந்து-என் விருப்பத்தை யுணர்ந்து, இங்கே வாவா என்றே-இங்கே வருவாய் வருவாய் என்று சொல்லிக்கொண்டே, என்னை கலப்பாய்-என்னைச் சேர்வாயாக. எ-று.

பன்மாலை - கோட்டுப்பூ, கொடிப்பூ, நிர்ப்பூ, நிலப்பூ என்னும் நால் வகை மலர்களாற் சமைத்தமாலை. தம்மையுணர்தல் - தம்மையிறைவனுக் கடிமை யென்றுணர்தல். நல்லோர் சொன்னதே யன்றியெனப் பொருடா லால் நானும் என்னும் உம்மை இறந்தது தழீஇயது வாவா வெனப்பலகா லழைக்கவும் பாசப்பிணிப்பின் திண்மையால் வரேனாயினும் மேல்விழுந்து கலக்க வேண்டு மென்பாராய், வாவா வென்றே யெனைக் கலப்பாய் என் றார். பூமாலை நால்வகையாகிய பன்மலராற் சமைக்கப் படுமாறுபோல, பாமாலையும் நால்வகையாகிய சொன்மலராற் சமைக்கப்படும் சொன்மலர்- சொல்லாகியமலர். அவை பெயர், வினை, இடை, உரி என்பன. இது, "பழு தகன்ற நால்வகைச சொன்மலரெடுத்து" எனப்பிறர் கூறுதலானு முணர்க. பன்மலர்மாலைக்கு, மணமறல், வாடல், தேன்பிலிற்றுமை முத லிய குணங்க ளுண்மையானும், சொன்மலர் மாலைக்கு அவையின்மையா னும் இதைச சிறந்ததாக நல்லோர் கொண்டா ரென்பது. இது, "என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்-நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மைய தாய்" என்னும் மேலோர் கூற்றினு முணர்க. நல்லோர் சொன்னார் என்ப தற்கு நல்லோர் உன் திருவடியிற் சூட்டினார்களென் றுரைத்தது, "வெறி யார் கழல்வீழ் சடைத் தீவண்ணன்" என மேலோர் கூறுதலையும் சூட்டு தற்கிடம் அதுவாதலையும் பற்றி. மாலை யென்றதனால், சொல்லுதல் ஈண் டெசசூட்டல் மேலது. வாவாவென் றழைக்கவும் வராத என்னைக் கலத்தற் குக் காரணம் இறைவனது பெருங்கருணை யென்பார், வாவா வென்றே யெனைக்கலப்பாய், என்றதை யடுத்துத் திருக்கருணை யெம்பிரான் என் றார். முற்றறிவற்கு, இவர் என்மாலை யறிந்து, என நியமித்தல் பிழைக யன்றே வெனின், அன்று, என்னை? தம்பத்திமை மேலீட்டாற கூறின மையான். முமுட்சுக்கள்-மோக்ஷத்தாக முளளவர்கள்.

2 கருணைமொழி சிறிதில்லே னீத லில்லேன்
கண்ணீர்கம் பலியென்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியே னென்னை யாளு
மொருவாவுன் னடிமைகொ ளுருத்த னுகேகோ
இருவினையு முக்குணமுங் கரண நானு
மிடர்செயுமைம புலனுங்கா மாதி யாயும
வர வரவு மேழைக்கோ ரெட்டா தான
மதத்தொடுமவர் தெதிர்த்தநவ வழிவ பன்றே.

இ-ள். கருணைமொழி சிறிது இல்லேன்-நான் தயையோடு கூடிய மொழி சிறிது மில்லாதவன், ஈதல் இல்லேன்-கை யில்லாதவன், என் றன் கருத்துக்கு ஏற்க-என்கருத்துக் கிணங்க, ஒருபொழுதும்-ஒரு காலத் தும், கண்ணீர் கம்பலை பெற்றறியேன்-கண்ணீர் கம்பலையைப் பெற்

யேன், என்னை ஆளும் ஒருவர்-என்னை ஆண்டருளாகின்ற ஒப்பற்றவனே உன் அடிமைதான் ஒருத்தனுக்கோ-உண்மையடிமையாகிய என் ஒருவனுக்குத் தானோ, இருவினையும்-இருவினைகளும், முக்குணமும்-முக்குணங்களும், கரணம் நான்கும்-நாற்கரணங்களும், இடர்செய்யும் ஐம்புலனும்-துன்பத்தைச் செய்கின்ற ஐம்புலன்களும், காமாதி ஆறும்-காமம் முதலாகிய அரிஷட் வர்க்கங்களும், வரவரவும்-வரவர, ஏழைக்கு-அறிவிலியாகிய எனக்கு, ஓர் எட்டதான-ஒரு எட்டாகிய, மதத்தொடும் - கர்வங்களுடன், வந்து எதிர்த்த-வந்து சமபவித்தன, நவவடிவம்-நவந்தரு பேதமாயுள்ள, மன்றே-நிதாகாயமே. எ-று.

கம்பலை-சரீர நடுக்கம். இருவினை-நல்வினை தீவினைகள். முக்குணம்-சாத்விக ராஜஸ தாமசங்கள். கரணம் நான்கு-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. ஐம்புலன்-சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன. காமாதி ஆறு-காமம், குரோதம், லோபம். மோஹம், மதம், மத்ஸரம் என்பன- அஷ்டமதங்களாவன,—குலம், ரூபம், யவ்வனம், வித்தை, தனம், பிரபுத்துவம், சகாயம், சஹஜம் என்பவற்றால் உண்டாகுஞ் செருக்கு. சஹஜம்-இயற்கையாகிய செருக்கு.

நவந்தருபேத மாவன,— பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரவரன், சதாசிவன், சத்தி, சிவம், நாதம், விந்து என்பன.

3 வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளே யெளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசக்கட்டிக் கொண்ட மோன
குருவேயென் றெய்வமே கோதி லாத
படியெனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படியெனக்குன் றிருக்கருணை பற்று மாறே
அடியெடுத்தென் முடியிலின்னம் வைக்க வேண்டு
மடிமுடியொன் றில்லாத வகண்ட வாழ்வே.

இ-ள். வடிவு அனைத்தும் தந்த - உருவங்களெல்லா வற்றையும் படைத்த, வடிவு இல்லா - ரூபமில்லாத, சுத்தம் - தூய்மையான, வான பொருளே - மேலான பொருளே, எளியனேன் - எளியேனது, மனம் ஆம் - மனத்திலுண்டாகிய, மாயை - மாயையின், குடிகெடுக்க-குடியைக் கெடுப்பதற்காக, துசம் கட்டிக்கொண்ட-கொடிகட்டிக் கொண்ட, மோன குருவே - மௌனகுருவே, என் தெய்வமே-என் கடவுளே, எனக்கு-அடியேனுக்கு, கோது இல்லாதபடி - குற்றமில்லாதபடி, ஆனந்த வெள்ளம்-சுகவாரியானது, வந்து தேக்கும்படி - வந்து நிறையவும், எனக்கு-அடியேனுக்கு, உன் திருக்கருணை பற்றுமாறு - உன் நிறைந்த அருள் பதியவும்,

இன்னம் - (முன்வைத்ததுபோல) இன்னமும், அடியெடுத்து-உன் திருவடியைத் தூக்கி, என்முடியில் வைக்கவேண்டும்-என் சிரசின்மீது வைத்தருளலே தகுதியாகும், அடிமுடி-முதலிறுதிகள், ஒன்று இல்லாத - சிறிதுமில்லாத, அகண்டவாழ்வே-அழியாத பெருவாழ்வே. எ-று.

கோது-தடையெனினுமாம். அகண்டம்-கண்டிக்கப்படாதது. உருவில்லாதிருந்தும் உருவங்களைப்படைக்கு மாற்றலுடையானே, எளியேனது மன மாயையை யழித்தற்கென்றே கொடிகட்டிக் கொண்டவனே, மௌனகுருவே, உற்பத்தி நாசங்களில்லாத அகண்டவாழ்வே, ஆனந்தப் பெருக்கு எனக்குத் தடையற வாய்க்கும்படியாகவும், உன் திருவருள் என்னிடத்துப் பதியும்படியாகவும், உன் திருவடியை இன்னு மொருக்கால்என் சிரமேற் பதிக்கவேண்டும் என்பதாம். அடிமுடியொன்றில்லாத வகண்டவாழ்வே என்றார் "ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்சோதி" எனமேலோர் கூறுதலால்.

4 வாஉவனைத்து யயக்கமெனத் தேர்ந்தேன் றெர்ந்த
வாறேநா னப்பாலோர் வழிபா ராமல்
தாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயந்
தடையுற்றுன் மேற்கதியுந் தடைய தாமே
ஊழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தாயின்னம்
பாழவதிப் படவெனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னேனே.

இ-ள். வாழ்வு அனைத்தும்-பிரபஞ்சவாழ்வுகளெல்லாம், மயக்கம்என-மயங்குதற்கேதுக்களேயென்று, தேர்ந்தேன்-தெளிந்தேன், தேர்ந்தவாறே-தெளிந்த வண்ணமே, நான்-அடியேன், அப்பால் ஓர்வழி பாராமல்-அப்பாலொரு நல்வழியை நோக்காமல், தாழ்வுபெற்று காமதித்து, இங்கு இருந்தேன்-இந்தப் பொய்யுலகிலிருந்தேன், ஈது என்ன மாயம்-இது என்ன மாயாகாரியம், தடை உற்றால்-தடைப்பட்டால், மேல்கதியும் தடைஆமே-மேலாகியமோக்ஷகதியும்தடைப்படுமே, (இதற்குக்காரணம்) ஊழ்வலியோ-ஊழினது வலிமையோ, அல்லது-அன்றி, உன்றன் திருக்கூத்தோ-உன் திருவிளையாட்டோ, இங்கு-இவ்விடத்தில், ஒருதமியேன் மேல்குறையோ-தமியேனிடத்துக் குறைபாடோ. (அறிந்திலேன்) உணர்த்தாய் (அதனை நீயே) அறிவிப்பாய், எல்லாம்-எல்லாப்பொருளுகளையும், படைத்து-சிருட்டித்து, அளித்து-காத்து, துடைக்கவல்ல-சங்கரிக்கவல்ல, பரிசினனே-குணத்தை யுடையவனே, இன்னம்-இன்னமும், பாழ்-பாழான, அவதிப்-துன்பப்பட, எனக்கு முடியாது-எனக்குக் கூடாது. எ-று.

பிரபஞ்ச வாழ்க்கை மயக்க வேதுவேயென்றறிந்தும், பிழைக்கும்கன் னெறியை நோக்காமல், தாமதித்திருந்தேன். இப்படி யிருத்தற்குக் காரணம் ஊழ்வலியோ, உன்திருவிளையாட்டோ என்னிடத்துப் பரிபாகமின்மையாகிய குறைபாடோ, அறிகிலேன், உள்ளவாறு நீயே யறிவுறுத்தல் வேண்டும், இதுவரையில் பட்டது அமையும், இனிமேலும் துன்பப்பட என்னுலியலாது என்பதாம். "ஈன்றளித்தழிக்குஞ் செய்கைக் கேதுவாமயனும் மாலாய், ஆன்ற வீசனுமாய்" எனவும், "அனைத்துலகும் ஆக்குவாய் காப்பா யழிப்பாய்" எனவும் மேலோர் கூறலால், இவரும், எல்லாம் "படைத்தளித்துத்துடைக்கவல்ல பரிசினனே" என்றார்.

5 நானெனிங் கெனுமகந்தை யெனக்கேன் வைத்தாய்
நல்வினை தீவினை யெனவே நடுவே நாட்டி
ஊனுரு முடற்சுமையென் மீதேன் வைத்தா
யுயிரெனவு மென்னையொன்று வுள்ளேன் வைத்தாய்
ஆனமை யாயகில நிகில பேத
மனைத்தி னுள்ளுந் தானுகி யறிவானந்தத்
தேனுகிப் பாலாகிக் கனியாய்க் கன்னற்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த வொன்றே.

இ-ள். ஆனமையாய் - நீங்காமையாகி, அகிலம் - பிரபஞ்சத்திலுள்ள, நிகிலபேதம் அனைத்தினுள்ளும்-பேதருபங்க ளெல்லாவற்றுள்ளும், தான் ஆகி-தானே நிறைந்து, அறிவு ஆனந்தத்தேன் ஆகி-ஞானானந்தத் தேனுகி, பால் ஆகி-பாலாகி, கனி ஆய்-பழமாகி, செழு-செழுமையாகிய, கன்னல் பாகு ஆய்-சர்க்கரைப் பாகாகி, கற்கண்டி ஆய் - கற்கண்டாகி, திகழ்ந்த ஒன்றே-பிரகாசிக்கிற ஒப்பற்ற பொருளே, இங்கு-இவ்விடத்தில், நான் நான் என்னும் அகந்தை-நான் நான் என்கிற அஹங்காரத்தை, எனக்கு என்வைத்தாய்-என்னிடத்தில் என் வைத்தனை, நல்வினை தீவினை என-நல்வினை தீவினையென்று, நடுவேநாட்டி-இடையில் நிறுத்தி, ஊன் ஆரும் உடல்சுமை-மாமிசம் நிறைந்த உடற்பாரத்தை, என்மீது என்வைத்தாய்-என்மேல் என் வைத்தனை, என்னை-அடியேனை, உயிர் எனவும்-உயிரென்று சொல்லவும், உள்-உடற்குள், ஒன்று ஆ-ஒருபொருளாக, என் வைத்தாய்-என் வைத்தனை. வ-று.

ஆனமையாய் * * * * * * * திகழ்ந்த வொன்றே; என்னிடத்துப் பெருங்கருணை யாலன்றே நீ யிவ்வாறெனக கிரதித்தது, அங்ஙனமாக, இவ்வுடற் பொறையை நீக்கியருளா தொழிவது அழகன்றே யென்பதாம். இறைவனைத் தன்முதலியவாகக கூறுதல் மரபென்பதனைப் "கற

ந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறிநின்ற" "தேனே யானையைக்கரும்பினின்றேறலே" "பாலு மமுத மூன்றேனுடனும் பராபரமாய்" "மாற்றே னெனவந்த காலனே யோலமிட வடர்த்த கோற்றேன்" இத்தியாதிகளா லுணர்க.

6 ஒன்றியொன்றி நின்றுநின்று மென்னே யென்னே
யுன்னி யுன்னும் பொருளலோ நீ யுன்பாலன்பால்
நின்றதன்மைக் கிரங்கும்வை ராக்கிய னல்லே
னிவர்த்தியவை வேண்டுமிந்த நீல னுக்கே
என்றுமென்று மிந்நெறியோர் குணமு மில்லே
யிடுக்குவார் கைப்பிள்ளோ யேதோ வேதோ
கன்றுமனத் துடனுடு தழைதின் றூற்போற்
கல்வியுங்கேள் வியுமாகிக் கலக்குற் றேனே.

இ-ள். ஒன்றி ஒன்றி - ஒவ்வொருவிடயத்தி லழுந்தி யழுந்தி, நின்று நின்றும்-அவ்வவ்விடயங்களிற் சிறிதுநேரம் நிலைத்தும், என்னே - என்ன பயன், நீ-நீ, என்னே உன்னி-என்னே மூன்னிட்டு, உன்னும்-நினைக்கப்படு கின்ற, பொருள் அல்லே-பொருளா யிருப்பாயல்லே, (ஆதலால்) உன் பால் அன்பால் நின்ற-உன்னிடத்தன்பு பூண்டுநின்ற, தன்மைக்கு-அன்பர்குணத் தைப் பெறும்பொருட்டு, இரங்கும் - உன்னே நோக்க யிரங்கும்படியான, வைராக்கியன் அல்லேன் - பிரபஞ்சமார்க்கத்தில் வெறுப்புடையே னல் லேன், இந்த நீலனுக்கு இந்தப் பொய்நடையை யுடையேனுக்கு, அவை நிவர்த்திவேண்டும் - அந்தப்பொய் நெறிகள் ஒழிதல் வேண்டும், என்றும் என்றும்-எக்காலத்தும், இந்நெறி-இந்த நன்னெறியை யடைதற்கு, ஓர் குணமும் இல்லே - சிறிது நற்குணமுமில்லே, (அங்ஙனமாக) இகழ்குவார் கைப்பிள்ளோ எதுவதோ - அறிவுப்பார் கைப்பிள்ளோ யாதற்குக் காரணம் யாதோ, கன்றும மனத்துடன்-வருந்துகின்ற மனத்துடன், ஆடு தழை தின்றூற்போல்-ஆடுதழை மேய்ந்தாற்போல, கல்வியும் கேள்வியும் ஆகி-பலவகைக் கல்விகேள்விகளோ யுடையேனாகி, கலக்குற்றேன்-கலங்கலுற் றேன், ஏ-இதென்ன கொடுமை, எ-று.

"சென்றுசென் றறுவாய்த் தேய்த்து தேய்த்தொன்றும் திருப்பெரும் துறையுறை சிவனே, ஒன்று நீயல்லே யன்றியொன்றில்லே யாருன்னையறிய கிற்பாரே" என்ற மேலோர் கூற்றுக்கிணங்க, 'ஒன்றி யொன்றி நின்று நின்று மென்னேயென்னே யுன்னி யுன்னும் பொருளலோ நீ' என்றார். 'என்னே யுன்னி யுன்னும் பொருளலோ நீ, என்றது சிற்போதத்தை முன்னிட்டுச சென்றால் பொருடோன்று தென்றற்கு. நீலன்-நீலி யென்னும் பெண்பாற் குரிய ஆண்பாற் பெயர். பாசாங்குக்காரன், பாசாங்குக்காரி என்பன பொருள். நற்குண மிருப்பினன்றே எல்லாரும் விருப்பா லெடுத்தணைப்பர்

அது தன்னிடத்தில்லை யென்பார், இந்நெறியோர் குணமுமில்லை யிடக்கு வார் கைப்பிள்ளை யேதோ யேதோ என்றார். ஆடு தழை தின்றுற்போல் என்ற வுவமை தகுதியற்ற கல்வி கேள்விகளால் கலங்கினமை யுணர நின்றது.

7 உற்றதுணை நீயல்லாற் பற்று வேறுண்
டுன்னேன்பன் ஞாலகத் தோடி யாடிக்
கற்றதுங்கேட் டதுமிதனுக் கேது வாகுங்
கற்பதுங்கேட் பதுமமையுங் காணு நீத
நற்றுணையே யருட்டாயே யின்ப மான
நாதாந்த பரம்பொருளே நாரணுதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சே யாகத்
தொழும்புகொள்ளுங் கருகனமே சோதிக குன்றே.

இ-ள். உற்றதுணை நீயல்லால்-பொருந்தியதுணை நீயேயன்றி, பற்று-ஆதாரமாக, வேறுஒன்று உன்னேன்-வேறுண்டறையுங்கருதேன், பல்நாள்-பலநாளும், உலகத்து-உலகில், ஓடிஆடி-ஓடியும் ஆடியும், கற்றதும் கேட்ட தும்-கற்றகல்வியும் கேட்ட கேள்வியும், இதனுக்கு ஏது ஆகும் இதற்குக் காரணமாகும், கற்பதும் கேட்பதும்-(இனி) கற்கப்படுவதும் கேட்கப்படுவ தும், அமையும்-பற்றும், காணு-யாவருங் காணக்கூடாத, நீதம்-நியதமுள்ள நல் துணையே-நிறைந்த துணையே, அருள்தாயே-கிருபையுள்ள அன்னையே, இன்பம் ஆன-ஆனந்தரூபமான நாதாந்தம்-நாதத்தவத்தின் முடிவிலுள்ள, பரம்பொருளே-மேலான பொருளே, நாரணுதி-நாரணன் முதலானோர், சுற்றமும் ஆய-உறவினராகவும், நல் அன்பர் தம்மை-நலலன்பரை, சேய் ஆக-புதல்வராகவும், தொழும்பு கொள்ளும்-அடிமை கொள்ளுகின்ற, கரு கனமே-மிகுக்கனத்த பொருளே, சோதிக குன்றே-சுடர்மலையே. எ-று.

நற்றுணையே, அருட்டாயே, பரம்பொருளே, கருகனமே, சோதிக் குன்றே, எனக்கு உற்ற துணை நீயன்றி வேறுருவுமிலர், ஆதலால் வேறுருபொருளோ நினையேன். இதுவரையும் உலகில் ஓடித்திரிந்து கற்ற தும கேட்டதும் இந்த நிலையுண்டாதற்கே, இனிக் கல்வி கேள்விகள் வேண்டா என்பதாம்.

8 குன்றுத மூவுருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்து மாடி
நின்றுபே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைபபோர் நெ
மன்றுக வின்பக்கூத் தாட வல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்

கன்மூலின் கீழிருந்து மோன ஞான
மமைத்த சின்முத் திரைக்கடலே யமரரேறே.

இ-ள். குன்றாத அழியாத, மூவுருவாய் - மூன்றுருவங்களாகி, அரு வாய்-அருவமாகி, ஞானக்கொழுந்து ஆகி ஞானமுடிவாகி, அறுசமயக்கூத் தும் ஆடி-அறுசமயக் கூத்தாடியும், நின்மூலே-நின்றனையே, மாயை யென் னும் திரையை நீக்கி மாயையென்கிற திரையை விலக்கி, நின்னை-உன்னை, அறியவல்லார் யார்-உணரவல்லவர் யாவர், நினைப்போர் நெஞ்சம்-நினைப் பவர்களுடைய மனமே, மன்றுளாக-நடராசபையாகக் கொண்டு, இன்பக் கூத்து ஆடவல்ல - ஆனந்தக் கூத்தாடவல்ல, மணியே - ரத்தமே, என் கண்ணே - என்விழியே, மா-பெரிய, மருந்தே - அமுதமே, நால்வர்க்கு-சனகாதி நால்வருக்கு, அன்று-அக்காலத்தில், ஆலின்கீழ் இருந்து-ஆலமரத் தின் கீழிருந்து, மோன ஞானம் அமைத்த-மௌனஞானத்தை யுணர்த்தின, சின்முத்திரைக் கடலே-சின்முத்திரா சாகரமே, அமரர் ஏறே-தேவர்களுக் குள் உத்தமனே. எ-று.

"சேணிற்பொலி செம்பொன் மாளிகைத் தில்லைச் சிற்றம்பலத்து, மாணிக்கக்கூத்தன்" என்னும் மாணிக்கக்கூற்றரதகூற்றுக் கனகணைக் கொண்டு, இவரும், "இன்பக்கூத்தாடவல்ல மணியே" என்றார். எறு என்பது தனக்குரிய பொருள்தராமல் ஈண்டு உத்தமன் என்றும் பொரு டந்து நின்றது. இது வடநூலார்மதம், என்னை? "நரசார்த்தூல" "புருஷ வ்யாக்ர" என்பவற்றிற்கு, அவர் நரோத்தமன், புருஷோத்தமன் எனப் பொருள் கோடலா னென்க. உத்தமன் என்பதற்கு, ப்ரக்ருஷ்டியாகிய இருளைக்கடந்து நின்றோன் என்பதுபொருள். "மலாதிசை யேகினை" எனவும், "என்சிந்தையுள்ளு முறைவான்" எனவும் கூறும் மேலோர் வாக் கியங்களோ டியையொற்றி, "நினைப்போர் நெஞ்சமன்றுக ளாடவல்ல" என்றார். மாயையைவென்று உனையே காண்பவர் யாவர் என்ப தாம்.

9 திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து
தெளிந்தூருஞ் பொன்போலச் செகத்தை யெல்லாம்
கரையாலே கனிந்தூருக்கு முகத்தி லேபோ
கனிந்தாய மனந்தன்னைக் கட்டி நிற்கும்
பரையிலே வடக்கணே னனையுஞ் சுட்டி
யார்த்தகொன்னூற் கதப்பருமை வருந்த னேனை
இரையிலே யிருத்திநிரு விகற்ப மான
வின்பநிஷ்டை சொடுப்பதையா வெந்த நாளோ.

இ-ள். திரையில்லாக கடல்போல - அலை அற்ற சமுத்ரம்போல- சலனம் தீர - அசைவற்று, தெளிந்து உருகும் பொன்போல-தெளிவாகி யுருகுகின்ற சுவர்ணம்போல, செகத்தை யெல்லாம்-பிரபஞ்சத்தை யெல்

லாம், கனிந்துகரைய-இளகிக்கரைய, உருக்கும் முகத்தில் உருக்குமிடத்தில், கனிந்த - நன்றுயுருகுகின்ற, பரமானந்தக்கட்டி - பரமசுகத்தைக் கொடுப்பதாகிய சுவர்ணக்கட்டி, நீ-நீயாயிருக்கிறாய், (ஆனால்) இந்நாள் வரையில் - இந்நாளளவும், வரக்காணேன் - நீவரக்கண்டிலேன், என்னுல கட்டி-என்னுல் நிர்ப்பந்தித்து, வார்த்தைசொன்னுல்-பேசினதனுல், சுகம் வருமோ-இன்பமுண்டாகுமோ, வஞ்சனேனை-வஞ்சகனுகிய என்னை, இரையிலே யிருத்தி சோற்றுத் துருத்தியாகிய உடம்பிலிருக்கசெய்து, நிருவிகற்பம் ஆன-விகற்பமில்லாத, இன்பம்-சுகத்தைத்தருகின்ற, நிஷ்டைகொடுப்பது-நிஷ்டையை அநுக்ரஹிப்பது, எந்நாளோ-எத்தக்காலமோ (அறிகிலேன்) ஐயா-ஐயனே. எ-று.

நீயேவந்து இன்பங் கொடுத்தாலன்றி என்வாசாஞானத்தால் இன்பமுண்டாமோ, இந்த அருவப்பான வுடம்போ டிருக்கப்பண்ணி நிருவிகற்பமான இன்ப நிஷ்டையைக் கொடுப்பது எந்நாளோ என்பதாம்.

10 எந்தநா ளுனக்கடிமை யாகு நாளோ
வெந்நாளோ கதிவருநா ளெளிய னேன்றன்
சிந்தைநா ளதுவரைக்கு மயங்கியற் றல்லால் [சொல்
தெளிந்ததுண்டோ மௌனியாயத் தெளிய வோர்
தந்தநாண் முதலின்பக் காற்சற் றல்லால்
தடையறவா நந்தவெள்ளந் தானே பொங்கி
வந்தநா ளில்லைமெத்த வலைந்தே னுன்னை
மறவாவின் பத்தாலே வாழ்கின் றேனே.

பி-ள். எந்நாள் - எத்தக்காலம், உனக்கு அடிமையாகும் நாளோ-உனக்கு அடிமைப்படுங் காலமோ, கதிவரும்நாள் - பரகதியுண்டாகுங் காலம், எந்நாளோ - எத்தக்காலமோ, எளியனேன்தன் - எளியேனது, சிந்தை மனமானது, நாளதுவரைக்கும்-இதுவரையிலும், மயங்கிற்று அல்லால்-மயங்கினதேயன்றி, தெளிந்தது உண்டோ - தெளிவடைந்ததுண்டோ; (இல்லையே) மௌனியாய் - மௌன குருவாகிவந்து, தெளிய - என் மனந்தெளியும வண்ணம், ஓர் சொல்தந்த நாள்முதல் - ஒருமொழியை அநுக்ரஹித்த நாள்முதலாக, இன்பக்கால் சற்று அல்லா ஆநந்தக்கால் கிறிது பெருகாநிற்பதன்றி, தடைஅற-தடையொழிய, ஆநந்தவெள்ளம்-ஆநந்தக்கடலானது, தானே பொங்கிவந்த நாள் இல்லை-தா பெருகி வந்தநாள் இன்று. (ஆதலால்) மெத்த அலைந்தேன்-மிகவும் திரிந்தேனன், (அவ்வருத்தத்தால் இறந்துபட் டிருப்பேன்) உன்னை மறவா பத்தால் வாழ்கின்றேன்-உன்னை மறவாமையாகிய ஆனந்தத்தினுல் வரையும் உயிர் வாழாநிற்கி

கதி-மோக்ஷம். கால் - வாய்க்கால். "பொசசாவாக்கருவி" என்பதற்குப் பொசசா வாமையாகிய கருவியெனவும், "பொய்யாவிளக்கு" என்பதற்குப் பொய்யாமையாகிய விளக்கு எனவும் பொருள் கொண்டாறபோல, "மறவாவின்பம்" என்பதற்கு மறவாமையாகிய வின்பம் எனப் பொருள் கொள்ளலாயிற்று. மறவாமை-இடையருது நினைத்தல்.

நினைவொன்று.

ஞானிகளிடம் பொருளேவல்.

1 நினைவொன்று நினையாம னிற்கினக மென்பார்
நிற்குமிட மேயருளா நிஷ்ட்டையரு ளாட்டும்
தனையென்று மறந்திருப்ப வருள்வடிவா னதுமேல்
தட்டியெழுந் திருக்குமின்பந் தன்மயமா யதுவாம
பினையொன்று மிலையந்த வினபமெனு நிலயம்
பெற்றுரே பிறவாமை பெற்றுர்மற் றுந்தான்
மனையென்று மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்த [டே.
வாதனையா மாசையொழி மன்னுருசொற் கொண்

இ ள். நினைவு ஒன்றும் நினையாமல் நின்கின் - சிறிதும் எண்ணமற்று நின்றால், அகம் என்பார் - (அப்படி நிற்றலே அழியாத) இடமென்பர் மேலோர், நிற்கும் இடமே (அவ்வாறு) நிற்கின்ற இடமே, அருளாம-அருளினிலையாம், நிஷ்ட்டை அருள் ஓட்டும் - நிஷ்ட்டையால் உள தாருமருளும் ஈத்திக்கும், தன்னை என்றும் மறந்திருப்ப-தன்னை யெங்காலத்தும் மறந்திருக்கின், அருள்வடிவானது- அருளுருவமானது, மேல்தட்டி எழுந்திருக்கும்-மேலே தட்டிக்கொண்டு எழாநிற்கும், இன்பம் தன்மயமே ஆம-தன்மயமாயிருப்பதே ஆனந்தமாகும், பின்னை ஒன்றும் இல்லை - வேறெதுவும் இல்லை, அந்த இன்பம் என்னும் நிலயம் பெற்றோரே - அந்த ஆனந்தமென்னும் நிலையை யடைந்தவர்களே, பிறவாமை பெற்றார் - பிறவாமையாகிய பெருஞ் செல்வத்தை யடைந்தவர்கள், மற்றும் - மீண்டும், மனை என்றும்-வீடென்றும், மகவு என்றும் புதல்வர்களென்றும், சுற்றம் என்றும் உறவினரென்றும், (சொல்லப்பட்ட) அசுத்தவாதனை என்னும் ஆசை - அசுத்தவாசனையென்கிறபற்றை, மன் ஒருசொல்கொண்டு-ஞானநிபானது ஒரு மொழியினால், ஒழி-நீக்கிவிடு. எ-று.

மன் ஒருசொல்-நிலைபெற்ற (ஆசாரியவசனமாகிய) ஒரு மொழியென்னலுமாம். தன்மயம்-அதன்மயம், அந்தப்பொருளி னுருவாயென்றபடி. தற்போதம் வொழிவில் அருளுருதானென்று மென்பார், தலையென்று மறந்திருப்ப அருள்வடிவானது மேற்றட்டி யெழுந்திருக்கும என்றார். எண்ணமற்று நிற்றலும், பிறவாமையும், ஆசாரியவசனமும் ஆகிய மூன்றும் ஞானிகளுக்கு முறையே இடமும், பொருளும், ஏவலும் ஆம்.

2 ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மதத
வொருமொழியே மலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த
குருமொழியே மலபிலக்கு மற்றைமொழி யெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதாக்குங் கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண் டுனைமேல்
தருமொழியிங் குனக்கில்லை யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யாநந்தப் பொற்பொதுவாய் நில்லே.

இ-ள். ஒருமொழியே-ஒருசொல்லே, பலமொழிக்கும் இடம் கொடுக்கும்- பலசொற்களுக்கும் இடந்தராநிற்கும், அந்த ஒருமொழியே - அந்த வொரு சொல்லே, மலம் ஒழிக்கும் ஒழிக்கும்-மலங்களைப் போக்கும் போக்கும், என மொழிந்த-என்றுசொன்ன, குருமொழியே - ஆசாரிய வசனமே; மலையிலகு-மலைக்குறிபோல்வது, மற்றை மொழியெல்லாம்-மற்றைய வசனங்களெல்லாம், கோடு இன்றி வட்டாடல் கொள்வது ஒக்கும் - வகுத்த இடமில்லாமல் வட்டாடலை யொத்திருப்பன, இங்கு உனக்கு-இவ்வாறாய உனக்கு, கரு மொழி இல்லை - காப்பவாசம் என்கிற சொல்லேயில்லை, மொழிகு மொழி ருசிக்கும்-கணுவுக்குக் கணு மதுரிக்கிற, கரும்பு அனைய-கரும்பை யொத்த, சொல் கொடு-(மொழிக்குமொழி மதுரிகிற) சொற்களைக்கொண்டு, உன்னைக் காட்டவும்-உன்னைக் காண்பிக்கவும், கண்டனை-நீயும் அபோ ! சாகத்காரமாகக் கண்டாய், இங்கு-இப்படியாயினபின், உனக்கு தரும் மொழி இல்லை-உனக்குப் போதித்தற்குரிய சொற்களில்லை, (ஆதலால், இனி) உன்னைவிட்டு நீங்கா - உன்னை விட்டு நீங்காத, தற்பரமாய்-தற்பரமாகவும், ஆநந்தப் பொற்பொதுவாய்-இன்பப் பொற்சபையாகவும், நில்-நில்லாய் வா-று.

இலகு-லக்ஷ்யம். தற்பரம்-அது என்கிற மேலான பொருள். அது நீ ஆனாய் என்றும் பொருட்டாகுவதாகிய, தத் துவம் அசி வாக்கிய விவரணம். ஆசாரியாநுகிரகமில்லாமல் கதிகூடாதென்பது இதனாற் கூறப்பட்டது. வட்டு-சொக்கட்டான்காய்.

3 நில்லாத வாக்கைநிலை யன்றெனவே கண்டாய்
நேயவருண் மெய்யன்றோ நிலையமதா நிற்கக்
கல்லாதே யென்படித்தாய் கற்றதெல்லா மூடம்
கற்றதெலா முரு மெண்ணே கண்டாயு மன்று
வெல்லலரி லேபயனில் என்புடிலவுத தானே
தொடர்ந்துதுபி மபோற் றொட்டதுபற்றுகில்
எல்லாரு மறிந்திட பறைகாண் டடிநீ
யிராப்பகலி மயெமக்கிடமென் றறிந்தேத.

இ-ள். நில்லாத ஆக்கை-நிலைத்திராத சரீரம், நிலை அன்றுஎனவேகண் டாய்-நிலையன்றென்றே பார்த்தாய், நேயம் அருள் மெய் ஆன்றோ - (சிவர் கள்மேல்) கிருபையுள்ள திருவருளானது உண்மை யல்லவா, அது நிலயம் ஆ நிற்க கல்லாது-அத் திருவருளே யிடமாகக்கொண்டு அதிற்படிந்து நிற் கக் கல்லாமல், என் படித்தாய்-வேறுகிய கல்விகளே யேன் கற்றாய், கற் றது எல்லாம் மூடம்-நீ கற்றகல்வியெல்லாம் மூடத்தனத்துக்கேதுவே, கற்றதெல்லாம் மூடமென்றே கண்டனையும் அன்று - (ஆனால்) கற்றதெல் லாம் மூடமென்றேகண்டநம்செய்வது மன்று, (மற்றென்னெனின்) சொல் லாலே பயன் இல்லை-சொற்களாலேயே பிரயோசனமில்லை, சொல் முடி வைத்தானே-சொற்களின் முடிவையே, தொடர்ந்து பிடி - தொடர்ந்து பற்று, மர்க்கடம்போல்-குரங்குபோல, தொட்டது-பிடித்ததையே, பற்று நில் - பற்றுகக்கொண்டு நிலைத்திரு, (அதன்பிறகு) இராப்பகல் இல்லா இடமே-இராப்பகல்க ளற்ற இடமே, எமக்கு இடம் என்று அறிந்து-எமக் கிடமாவதென் றுணர்ந்து, எல்லாரும் அறிந்திட - (அவ்வநுபவ விசே டத்தை) யாவரு முணருமாறு, நீ வாய்ப்பறை கொண்டு அடி-நீ வாயாகிய பறையைக்கொண்டு சாற்றி யறிவி. எ-று.

"நீரி லெழுத்தாகும் யாக்கை" என்னுது, நில்லாத ஆக்கை பென்ற மையான் இதனது நிலையாமையின் மிகுதி தோன்றுகின்றது. "நில்லாத வாக்கை நிலையன்றெனவே கண்டாய்" என்றது இதனது நிலையாமையைப் பிரத்தியக்ஷமாப்ப் பார்த்தாய் என்றற்கு. "நடலை வாழ்வுகண் டென்செய் திர் நாணிலீர்-சுடலை சேர்வது சொற்பிர மாணமே" என்றார் மேலோரும்.

4 இடம்பொருளே வலைக்குறித்து மடம்புகுநா யெனவே
யெங்கேநீ யகப்பட்டா யிங்கேநீ வாடா
மடம்பெறுபாழ் நெஞ்சாலே யஞ்சாதே நிராசை
மன்னிடமே யிடமந்த மாநிலத்தே பொருளுந்
திடம்பெறவே நிற்கினெல்லா வுலகமும்வந் தேவல்
செய்யுமிந்த நிலைநின்றோர் செகன்முதன் முனிவர்
கடம்பெறுமா மதயானை யென்னவுநீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழ்ப் பாரே

இ-ள். இடம் பொருள் ஏவலைக் குறித்து-இடம் பொருள் ஏவல்களே யடைய விரும்பி, மடம் புகுநாய் எனமடத்திற் பிரவேசிக்கும் நாய் போல, எங்கேநீ அகப்பட்டாய் எமக்கு நீ சிக்காயகொண்டாய, நீ இங்கே வாடா-நீ இவ்விடத்திற்கு வாடா, மடம் பெறு-அறியாமையை யுடைய, பாழ் நெஞ்சாலே-பாழு மனத்தாலே, அஞ்சாதே-பயப்படாதே, நிராசை மன் இடமே இடம்-அவாவறுதி நிலைத்த இடமே இடமாவது, அந்த மாநி லத்தே - அற்றப்பெரிய இடத்திற்கண்ணே, பொருளும் (சிலாது பூதிக

செல்வமென்கிற) எல்லாப்பொருள்களு முளவாம், திடம்பெறவேநிற்கின்-(இடமும்பொருளுமாகிய இவைகள்) ஸ்த்திரமாய் நிற்குமாயின், எல்லா உலகமும் வந்து-எல்லா லோகங்களும் வந்து, ஏவல்செய்யும்-பணிவிடை செய்யும், இந்த நிலை நின்றோர்-இந்நிலையி லூன்றி நின்றவர்கள் - சநகன் முதல் முனிவர்-சநகன் முதலான முநிவர்கள், கடம்பெறும் - மதத்தை யுடைய, மா-பெரிய, மதயானை யென்னவும் - மதயானைபோலவும், நீ நீ, பாசக்கட்டுஆன-பாசப்பிணிப்பாகிய, நிகளபந்தக்கட்டு, விலங்கினையொத்த பந்த ஹேதுவாகிய தளை, அவிழ-தானே யவிழ்ந்தொழியும்படி, பார்-உபாயந்தேடு. எ-று.

இடம்பொருளேவல்கள் கைகூடுதற் குபாயம் நிராசையே யென்பது இதனுற் போந்தபொருள். ''ஆசாநிகலந் தூகளாயினபின், பேசாவநுபூதி பிறந்ததுவே'' எனவும், ''நிமலஞானம துற்றூல் வானும் வையமும் வந்து தாள் வணங்கும்'' எனவும் பிறண்டு மிவ்வாறு கூறப்படுதல் காண்க. நீ நிராசையாகிய இந்நிலையில் நிற்பின், பந்தப் பிணிப்புத்தானே யவிழ்ந்தொழியுமென்பார், ''நிகளபந்தக் கட்டவிழப்பாரே'' என்றூர், இவ்வாசிரியர்தாமே, ''நிராசையின்றேற் றெய்வமுண்டோ'' என மேற் கூறலுங் காண்க.

5 பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போற்
பார்த்தனையே முடிவினின்று பாரெதுதா னின்ற
தாராலு மறியாத சத்தன்றே வதுவா
யங்கிருநீ யெங்கிருந்து மதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியை காட்டாதே
ஓராதே யொன்றையுநீ முன்னிலையை யாதே
யுள்ளபடி முடியுமெலா முள்ளபடி காணே.

இ-ள். பார் ஆதி அண்டம் எல்லாம் - மண் முதலியவற்றூலுளதாகிய பிரபஞ்சமெல்லாம், படர்-பரவிய, கானல் சலம்போல் - கானல் நீர் போலப் பொய்யாயொழிவதை, பார்த்தனையே கண்டாயன்றே, முடிவில் நின்று பார் - அந்தத்திலிருந்து நோக்கு, எது தான் நின்றது - அவ்விடத்தில் நின்றது யாது, (அது) ஆராலும் அறியாத சத்து அன்றே-யாவராலு முணரப்படாத சத்தல்லவா, நீ அது ஆய் அங்கு இரு - நீ அப்பொருளாகி அவ்விடத்தே யிரு, (அவ்வாறிருப்பாயாயின்) எங்கு இருந்தும் - எவ்விடத்திருப்பினும், அது ஆவை-அப்பொருளேயாவாய், நீ-நீ, பூராயம் ஆகவும்-ஆதியந்தமாகவும், மற்றொன்றை விரித்துப் புலம்பாதே - வேறொன்றை விஸ்தரித்துப் புலம்ப வேண்டா, மா புத்தியை - பேறறிவை, சஞ்சலம்

நாட்டாதே-சலநத்தில் அழுத்தாதே, நீ ஒன்றையும் ஓராதே-நீ ஒன்றையு மெதிரிட்டுணராதே, (நீ ஒன்றையும்) முன்னிலேவையாதே-நீ ஒன்றையும் சாட்சிவையாதே, எல்லாம் யாவும், உள்ளபடி முடியும்-உள்ளவாறேமுடியும், உள்ளபடி-(இது) யதார்த்தம். எ-று.

"எங்கே எங்கே மனமோடி யிளேயோசென்ன வீழ்ந்தழுந்தும்-அங்கே யங்கே நின்றெழுப்பி யகண்ட வறிவிலடைவிப்பாய்" என்னும் ஆன்ரோர் மொழியென்கின்ற ஆப்தவாக்கியத்துக்கிணங்க, 'எங்கிருந்து மதுவாவை' என்ரூர். ஒன்றையும் ஓராமை-த்ரிபுடி ராஹித்யம் த்ரிபுடி-காண்பான், காட்சி, காட்சிப்பொருள். ராஹித்யம் - இன்மை. இவற்றை வடநூலார் ஞாதரு, ஞாநம், ஜ்ஞேயம் என்பர். உள்ளபடி-மேல்வினேகட் கேடாகத் திரு வ்ருளாணமைந்து கிடந்தபடி

6 உள்ளபடி யென்னவுநீ மற்ரொன்றைத் தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டாநிஷ் களங்கமதி யாகிக்
கள்ளமனத் துறவைவிட்டெல் லாந்துறந்தறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பக லற்ற
வெள்ளிவெளிக் கடன்மூழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றிக்
கொள்ளாகொண்ட கண்ணீருங் கம்பலேயு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே.

இள். உள்ளபடி யென்னவும்-உள்ளபடி முடியுமென்று நான்சொல்ல வும், (அதை யநாதரித்து) நீ மற்ரொன்றைத் தொடர்ந்திட்டு-நீ வேரொன் றைப் பற்றிக்கொண்டு, உளம் கருதவேண்டா-மனமே நீ அதையேகருதிக் கவலேப்படவேண்டா, நிஷ்களங்க மதி ஆகி-களங்கமற்ற அறிவினே யுடை யையாய், கள்ளம்மனம்-வஞ்சகமனத்தோடுகூடிய, துறவைவிட்டு-பொய்த் துறவை யொழித்து, எல்லாம் துறந்த-(மெய்யாகவே) எல்லாவற்றையும் விட்ட, துறவோர்-மெய்த்துறவினர், கற்பித்தமொழிப்படியே - கற்பித்த சொற்படியே, கங்குல் பகல் அற்ற-இராப்பகல்களில்லாத, வெள்ளவெளிக் கடல்மூழ்கி-(சதோதயமாகிய) ஒளிக்கடலில் முழுகி, இன்பமயப் பொருள் ஆய் விரவி-சுகரூபமான பொருளாகி அதலேடு வேறுபாடின்றிக் கலந்து, எடுத்து எடுத்து எடுத்து விள்ளவும்-முக்காலும் எடுத்துச சொல்லுதற்கும், வாய் இன்றி வாயில்லாமல், கொள்ளாகொண்ட-பிருதியாகிய, கண்ணீரும் கம்பலேயும் ஆகி-கண்ணீரும் சரீரநடுக்கமுங்கொண்டு, கும்பிட்டு-முக்கர ணங்களேயும் குவித்து, சகம் பொய் என-பிரபஞ்சம் பொய்யென்று, தம் பட்டம் அடி-பறையறையாய். எ-று.

எல்லாம் துறத்தல்-சர்வசங்க பரித்யாகம். அதாவது-அகப்பற்றுப் புறப்பற்றுக்களே ஒருங்கொழிதல். இதனைத் தமிழ்நூலார் முற்றத்துறத்தல் எனவும், வடநூலார் ஸந்யாஸம் எனவும் கூறுப. ஸம்-முழுதும், ந்யாஸம்-துறத்தல். வெளியென்பது ஈண்டொளிக் காயிற்று, அது, "இருளினும் வெளியினும்" என மேலார் கூறுதலானு முணர்க.

7 அடிமுடியு நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டா
லத்துவித வாநந்த சித்தமுண்டா நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த
கோலமெல்லா நன்றுகும் குறைவுகிறை வறவே
விடியுமுத யம்போல வருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்
பாலருட னுன்மத்தர் பசாசர்குணம் வருமே.

இ-ள். அடிமுடியும் நடுவும் அற்ற-அடிமுடிகளும் நடுவுமில்லாத, பரவெளிமேற் கொண்டால்-பரமாகாசத்தை மேற்கொள்ளின், அத்துவிதம்-நிகரற்ற, ஆநந்தம்-இன்பத்தையுடைய, சித்தம் உண்டாம் - மனமுண்டாகும், நமதுகுடிமுழுதும் பிழைக்கும்-நமது குடும்பமெல்லாம் உஜ்ஜீவிக்கும், ஒரு குறையும் இல்லை-ஒரு தாழ்வுமில்லை, எடுத்த கோலம் எல்லாம் நன்றாகும்-கொண்டகோலமெல்லாம் நன்றாகவே முடியும், குறைவு நிறைவு அற-தாழ்வுமிகுதிகளற, விடியும் உதயம்போல-விடிகிற உதயகாலம்போல, அருள் உதயம் பெற்ற-அருளுதயத்தைத் தம்மிடத்துப்பெற்ற, வித்தகரோடும்-ஞானியரோடும், கூடிவிளையாடல் ஆகும்-சேர்ந்து விளையாடல் கூடும், படிமுழுதும் மண்ணுலக முழுதையும், விண்முழுதும்-விண்ணுலக முழுதையும், தந்தாலும் - கொடுத்தாலும், களியா - களிப்படையாத, பாலருடன் - பாலகரோடு, உன்மத்தர் - பிறழுவுணர்த்தார், பசாசர் - பேய்க்கோட்பட்டார், (அகிய இவர்களுடைய) குணம் வரும்-குண முண்டாகும் எ-று.

கோலம்-கொண்டவுரு.

8 வருமேபோமென் பனவுமின்றி யென்றுமொரு படித்தாய்
வாழுகி தத்துவத்தை வளர்ந்தருந்தி வெளியாம்
இருமேபோகல் லோமமேமே வென்னு நெஞ்சைக் கனன்மே
லிட்டமெழு காவுருக்கு மின்பவெள்ள மாகிக்
கருமம்போகன் டோசினி சருக்கரையோ தேனை[ணர்வார்
கனியமிர்தோ வெனருசிக்குங் கருத்தவிழ்ந்தோ ரு
அருமம்போகன் மணங்காட்டுங் காமரசங் கன்னி [ம்.
யறிவாளோ வபக்குவர்க்கோ வந்நலந்தான் விளங்கு

இ-ள். வரும்போம் என்பனவும் இன்றி-வரும் போம் என்பவைகளு மில்லாமல், என்றும்-எக்காலமும், ஒருபடித்தாய்-ஒருதன்மைத்தாகி, வான் ஆதி-ஆகாய முதலாகிய, தத்துவத்தை-தத்துவத்தொகுதியை, வளைந்து அருந்தி-வளைத்துஉட்கொண்டு, வெளிஆம்-புறப்படும்,இரும்போ (வன்மை யால்) இரும்புதானே, கல்லோ-சிலைதானே, மரமோ-மரந்தானே, என் னும்-என்று சொல்லப்படுகிற, நெஞ்சை-மனத்தை, சனல்மேல் இட்ட-நெருப்பின்மேல்வைத்த, மெழுகுஆ-மெழுகைப்போல, உருக்கும்-உருக்கா நிற்கும், இன்பவெள்ளம் ஆகி-ஆனந்த சாகரமாகி,கரும்போ (இனிமையால்) கருப்பஞ்சாறே, கண்டோ-கற்கண்டோ, சீனி சருக்கரையோ-சீனிச்சர்க் கரைதானே, தேனே-மதுவோ, கனியோ-முக்கனிகளோ, அமிர்தோ-அம் ருதமோ, என-என்று சொல்லும்படி, ருசிக்கும்-இரதிக்கும், (அதனை) கரு த்து அவிழ்ந்தோர் உணர்வார் - மனமலரப்பெற்றவர்கள் அறிவார்கள், அரும்போ-பூவரும்போ, நல் மணம் காட்டும்-நல்லமணத்தைக்காடுக்கும், கன்னி-கன்னிகையானவள், காமரசம் அறிவாளோ-காமசுவையை அறி வாளோ, அந்நலம்-அந்தப்பரமானந்தம், அபக்குவர்க்கோ விளங்கும்-பக்குவ மல்லாதார்க்கோ தெரியும். எ-று.

அமிர்தத்தைச சுவையிருதி பற்றியும் இறவாமையைத் தருதல் பற்றி யும் அசிறப்புநோக்கி யிறுதியில்வைத்தார். மூன்னைய வோகாரங்களொட் டும் ஐயம், பின்னைய மூன்றும் எதிர்மறை.

9 தானேயு மிவ்வுலக மொருமுதலு மாகாத்
தன்மையினற் படைத்தளிக்குந் தலைமையது வான
கோனுக வொருமுதலிங் குண்டெனவும் யுகங்
கூட்டியதுஞ் சகமுடிவிற் குலவுறுமெய்ஞ் ஞான
வானுக வம்முதலே நிற்குநிலை நம்மால்
மதிப்பரிதா மெனமோனம் வைத்ததுமுன் மனமே
ஆனலு மனஞ்சடமென் றாழுங்காதே யுண்மை
யறிவித்த விடங்குறுவா மருளிலதொன் றிலையே.

இ-ள். தானேயும்-தானுகவேயும், இவ்வுலகம்-இவ்வுலகமானது, ஒரு முதலும் ஆகாதன்மையினல் - ஒரு முதற்பொருளுமாகாத தன்மையால், படைத்து அளிக்கும்-இதனைப் படைத்துக்காக்கின்ற, தலைமையது ஆன-தலைமையையுடைததான, கோனுக-இறைவனுக, ஒருமுதல் - ஒருமுதற் பொருள், இங்குஉண்டு எனவும-இவ்விடத்துளதெனறும, யுகம்-யுகதியை, கூட்டியதும்-உண்டாகினதும், சகம்முடிவில்-உலகமுடிவில், குலவுறும்-விளங்காநின்ற, மெய்ஞ்ஞானவான் ஆக-உண்மையாகிய ஞானுகாயமாக, அம்முதலே-அந்த முதற்பொருளே, நிற்கும் நிலை-நிற்கின்ற நிலையானது,

நம்மால்மதிப்பு அரிதுஆம் என-நம்மால் மதிக்கப்படுவது அரிதாகுமென்று, மோகம்வைத்ததும்-மௌகநிலையையமைத்ததும், உன்மனமே-உன்மனதே, ஆனலும்-ஆயினும், மனம்-மனமானது, சடம் என்று அழுங்காதே - சட மென்று வருந்தாதே, உண்மை அறிவித்த இடம்-மெய்யை யுணர்த்தின இடத்தில், குரு ஆம்-அதுவே ஆசாரியனுகும், அருள்இலது-அருள் இல்லா தது ஆகிய, ஒன்று இல்லை-ஒருபொருளும் இல்லை. எ-று.

பொன்னைமாதரை.

கலிவிருத்தம்.

1 பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட் டெவெளி
தன்னை நாடுவன் தன்னைத் தனியனே.

இ-ள். பொன்னை - பொன்னையும், மாதரை - மாதரையும், பூமியை - பூமியையும், நாடிடேன் - விரும்பேன், என்னை நாடிய - என்னை விரும் பிய, என் உயிர் நாதனே-என்னுயிர்த்தலைவனே, உன்னை நாடுவன்-உன்னை விரும்புவேன், உன் அருள்-உன் அருளாகிய, தூவெளிதன்னை நாடுவன்-பரிசுத்தமான வெளியை விரும்புவேன், தன்னைத்தனியன்-தனியேனுகிய பான். எ-று.

"என்னிலும் மினியாரொருவன்னிலை" என்கிறபடியே உயிரினுஞ்சிற ந்தபொருள் உலகத்தில்லை யாதலாலும், அவவுயிர்க்கு நாதன் நீ யாதலா லும் உன்னைவிட்டு, பொன்னை மாதரைப் பூமியை நாடுவனே வென்பது கருத்து.

2 தன்ன தென்றுரை சாற்று வனவெலாம்
நின்ன தென்றனை நின்னிடத் தேதக்கேன்
இன்ன மென்னை யிடருறக் கூட்டினல்
பின்னை யுய்கிலன் பேதைய னுவியே.

இ-ள். தன்னது என்று-தனது என்று, உரை சாற்றுவன எல்லாம்-சொல்லாற் சொல்லப்படுவன வெல்லாம், நின்னது என்றனை - உனது என்று சொல்லினை, (ஆதலால்) நின்னிடத்தே தக்கேன்-அவைகளை உன் னிடத்திலே ஒப்புவித்தேன், என்னை-அடியேனை, இன்னம் - இன்னமும், இடர் உற கூட்டினல்-துகசம்வந்து பொருந்தும்படி பொருத்திவிட்டால், பின்னை-பிறகு, பேதையன்-அறிவிலியாகிய நான், ஆவி உய்கிலன்-உயிர் பிழைக்கும் ஆற்றலிலேன். எ-று.

நின்னதென்றனை என்றார் குருமூர்த்தமா யெழுந்தருளின காலத்தில் உடல் பொருளாவிகளைத் தன்னதென்று பேற்றுக் கொண்டமையான். பேதையன் ஆவியே என்பதைப் பேதையனையிரே எனப் பொருடரும் விளியாக்கி, உய்கிலன் என முடிப்பினு மமையும்.

3 ஆவி யேயுனை யானறி வாய்நின்று
சேவி யேன்கள ரிந்தை திறைகொடேன்
பாவி யேனுள பான்மையைக் கண்டுநீ
கூவி யாளெனை யாட்கொண்ட கோலமே.

இ-ள். ஆவியே-என்னுயிரே, உன்னை - (அறிவுக்கறிவாய் நிற்கின்ற) வுன்னை, யான் அறிவு ஆய் நின்று-நான் அறிவுருவாய் நின்று, சேவியேன்-வணங்கேன், கள்ளச் சிந்தை-வஞ்ச மனத்தை, திறை கொடேன்-பகுதி யாகக் கொடேன், பாவியேன் - பாவச் செய்கையையுடைய நான், உள்ள பான்மையைக் கண்டும்-இருக்கிற தன்மையைப் பார்த்தும், நீ கூவி ஆள்-நீயே யழைத்து ஆள்வாய், என்னை ஆட்கொண்ட கோலமே - என்னை யடிமைகொண்ட அருளிறையே. எ-று.

பாவியேன்-நினையேன் எனினுமாம். உயிருருவாய் நிற்றலால் அகக் கண்ணுலன்றி முகக்கண்ணுற் காணக் கூடாமையின், "ஆவியே யுனையா னறிவாய்நின்று சேவியேன்" என்றார். சிந்தை திறை கொடுத்தலாவது தற் போத மிழத்தல்.

4 கோல மின்றிக் குணமின்றி நின்னருட்
சீல மின்றிச் சிறியன் பிழைப்பனே
ஆல முண்டு மமிர்தரு வாய்வந்த
கால மெந்தை கதிநிலை காண்பதே.

இ-ள். எந்தை-என் தந்தையே, கோலம் இன்றி - உன்னுடைய சின் னங்க ளில்லாமலும், குணம் இன்றி - அவைகளைத் தரிக்கத்தக்க நற்குண மில்லாமலும், நின அருள்சீலம் இன்றி-உனனருளையடைதற்குரிய நல்லொ ழுக்க மில்லாமலும், சிறியன் பிழைப்பனே - சிறியேன உயவேனே, (இவைக ளொன்றுமின்றி நான் பிழைக்கவேண்டின்) ஆலம உண்டும-விஷத்தை யுண்ணினும், (அது) அமிர்து உருவாய் வந்த காலம் - அமிர்த ருபமாய்த் தோன்றின காலத்தில் தான், கதி நிலை காண்பது-உன் சிவகதி யினது நிலையை நான் காணப்பெறுவது. எ-று.

சிவவேடம் முதலியன இலலாமல் அடியேன் உயவது அருமை, அப் படி யுய்யவேண்டுமாயின், நான் நஞ்சுண்டாலும் அது அமிர்தாக எனகரு ருசிக்கும்படியான காலம் சேரிட்டால் உன் சிவகதியை யடைவேன் என்ப தாம்.

5 காணுங் கண்ணிற் கலந்தகண் ணேயுனைச்
சேணும் பாருந் திரிபவர் காண்பரோ
ஆணும் பெண்ணு மதுவெனும் பான்மையும்
பூணுங் கோலம் பொருந்தியு ணிற்கவே.

இ-ள். காணும் - நோக்குதற்குரிய, கண்ணில் - அறிவாகிய கண்ணினிடத்து, கலந்த-பொருந்திய, கண்ணே - பெருமையே, சேணும் பாரும் திரிபவர்-விண்ணிலும் மண்ணிலுந் திரிவோர், உன்னைக் காண்பரோ- உன்னைக் காண்பார்களோ, ஆணும் பெண்ணும் - ஆண்பாலும் பெண்பாலும், அது என்னும் பான்மையும்-அதுவென்னும் பகுதியும், (ஆகிய இவைகளை) பூணும் - கொண்ட, கோலம் - உன் திருக்கோலமானது, பொருந்தி உள் நிற்க - பொருந்தி அவர்களுடைய மனத்தின்கண் நிலைபெற்றிருக்கச் செய்தே. எ-று.

நிற்கக் காண்பரோ என வியையும். ஆணும் பெண்ணும் என உயர்திணை யிருபாலையும் அது என அஃறிணை யொருமைப்பாலையுங் குறிக்கவே உயர்திணைப் பலர்பாலும் அஃறிணைப் பலவின்பாலும் அடங்கும், ஆகவே, இவ்விருதிணை யைம்பாற் பொருள்களும் நீ நிறைந்து நிற்பதை ஒருவரு மறியா ரென்றாராயிற்று. இதை "அவனவ ளதுவெனும்" என்னுஞ் சிவஞானபோத முதற்சூத்திரத்தானு முணர்க.

6 நிக்கு நன்னிலை நிற்கப்பெற் றாரருள்
வர்க்க மன்றி மனிதரன் றேயையா
தூர்க்கு ணக்கடற் சோங்கன்ன பாவியேற்
கெற்கு ணங்கண் டெனபெயர் சொல்வதே.

இ-ள். நிற்கும்-நிற்றற்குரிய, நல்நிலை-நல்லநிலையாகிய உன் திருவருணிலையில், நிற்கப்பெற்றார்-அமைந்து நிறகப்பெற்றவர்கள், அருள் வர்க்கம் அன்றி - அருள்வர்க்கமென்று சொல்லப்படுவாரன்றி, மனிதர் அன்றே-(அவர்கள்) மனிதர் என்று சொல்லப்படார்களே, ஐயா - ஐயனே, தூர்க்குணக்கடல்-தீகுணமாகிய கடலிலகப்பட்ட, சோங்கு அன்ன-மரக்கலத்தையொத்த, பாவியேறகு - பாவியேனுககு, என் குணங்கண்டு - என்ன குணத்தைப்பார்த்து, என்ன பெயர் சொல்வது-என்ன பெயரிட்டழைப்பது. எ-று.

"நரன்சுரன் ஞானியா மென்பது நன்றல, பிரமமே ஞானியாம் பேதமின் றென்றது" என்பதற்கிணங்க, நிற்குநன்னிலை நிற்கப்பெற் றாரருள் வர்க்கமன்றி மனிதரன்றே என்றார்.

7 சொல்லே யுன்னித் துடித்தத லாலருள்
எல்லே யுன்னி யெனையங்கு வைத்திலேன்
வல்லே நீயென்னை வாவென் றிடாவிடின்
கல்லே யாமிக் கருமி நடக்கையே

இ-ள். சொல்லே உன்னி-நீசொன்ன சொல்லேநினைத்து, துடித்தது அல்லால்-பதைத்தமேதையன்றி, அருள் எல்லே உன்னி-அருளினெல்லையை நினைத்து, என்னை-என்னை, அங்கு-அவ்விடத்தில், வைத்திலேன்-அமைத் திலேன், வல்லே-விரைவில், நீ என்னை வாவென்றிடாவிடின்-நீயென்னை வாவென் றழையாவிட்டால், இக்கருமி நடக்கை - இத்திவினையேனது ஒழுக்கமானது, கல்லே ஆம்-பொய்யாகும். எ-று.

சுருதிகுரு அநுபவமேயன்றி, சுவாநுபவமில்லையென்பார், சொல்லே யுன்னித் துடித்ததல்லால் அருள் எல்லேயுன்னியெனையங்கு வைத்திலேன் என்றார். கல்லே என்பது கல்ல என்னும் ஆந்திரமொழித்திரிபு.

8 கையு மெய்யுங் கருத்துக் கிசையவே
ஐய தந்ததற் கையு மினியுண்டோ
பொய்ய னேன்சிந்தைப் பொய்கெடம் பூரண
மெய்ய தாமின்ப மென்று விளைவதே.

இ-ள். கையும் - கைகளையும், மெய்யும - சரீரத்தையும், கருத்துக்கு இசைய-கருத்திற்கிணங்க, ஐய ஐயனே, தந்ததற்கு-நான் கொடுத்ததற்கு, இனி ஐயம் உண்டோ-இனிச சந்தேகமுண்டோ, பொய்யனேன்-பொய்யி னேனது, சிந்தை-மனததிலுள்ள, பொய்கெட பொய்யொழிய, பூரணம்-நிறைவாகிய, மெய்யதாம் இன்பம்-உண்மையாகியசுகம், என்று விளைவது-எக்கால முண்டாவது. எ-று.

கைமெய்கருத்து என்பவற்றை உனக்கே யாக்கியும, பேரின்பபின்னு முண்டாக வில்லையே, இனியெக்காலமுண்டாருமென்பது கருத்து. கையு மெய்யுங் கருத்துக்கிசையத் தருதலாவது-கையிலுல அஞ்சலிசெய்தலும், காயத்திலுல் வலம்வருதலும், மனதிலுல் நினைத்தலும. இவற்றை, ''கை காள் கூப்பித் தொழீர்'' எனவும், ''ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து'' எனவும், ''நெஞ்சே நீ நினையாய்'' எனவும் மேலோர் கூறுத லாலுமுணர்க.

9 என்று முன்னை யிதய வெளிக்குளே
துன்ற வைத்தன னேயருட் சோதிநீ
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையாம்
நன்று தீதற வைத்த நடிவதே.

இள். நன்று தீது அற-நன்மை தீமைகள் இல்லாதொழிய, வைத்த-என்னே உன்திருவருணிலேயில் அமைத்துவைத்த, நடுவதே-பஞ்சகிருத்தி யங்களுக்கும் பொதுவாய் நிற்கும்பொருளே, என்றும் - எக்காலமும், உன்னே-உன்னே, இதயம்-இதயமாகிய, வெளிக்குள்ளே துன்ற-ஆகாயத் திற் பொருந்த, வைத்தனனே - வைத்தேனே, (அதற்கிணங்கி) அருள் சோதி-அருளொளியாகிய, நீ நின்ற தன்மைநிலைக்கு-(என்னிதயத்தில்) நீ நின்ற தன்மையாகிய நிலைமைக்கு, என்னே நேர்மை ஆம்-என்ன ஒப்பா கும். எ-று.

பஞ்சக்ருத்யங்களாவன-சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக் கிரகம் என்பன. அறப்பெரியனாகிய நீ, அறச்சிறியேனாகிய என்னிதயத் தில், உன்பெருமையையும் என்சிறுமையையும் நோக்காமல் எழுந்தருளின தற்கு அடியேன் என்ன பிரதிசெய்யக்கடவேன் என்பதாம். "சிறைவான் புனற்றில்லைச சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளும், உறைவான்" என்னுந் திருக்கோவையாரானும் பெருமை சிறுமை நோக்காமை யுணர்க.

10 வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்த னேனருள் பெற்றுந் திடமிலேன்
சித்த மோன சிவசின்ம யானந்தம்
வைத்த வைய வருட்செம்பொற் சோதியே.

இ-ள். சித்தம் - சித்தமான, மோன - மௌன நிலையை யுணர்த்து வோனே, சிவ-மங்களகரனே, சின்மயாநந்தம்வைத்த ஐய-ஞானசுகத்தை யெனக்கு அருள்செய்த ஐயனே, அருள்-கிருபையோடுகூடிய, செம்பொன் சோதியே-செம்பொன்னொளியே, வைத்ததேகம் வருந்த-அமைக்கப்பட்ட சரீரம் வருந்துதலால், வருந்திடும்-வருந்துகின்ற, பித்தன் - பித்தனாகிய, நான்-அடியேன், அருள்பெற்றும் - உன் திருவருளைப் பெற்றும், திடம் இலேன்-(அசைவறவிருக்கும்) திடமுடையே னல்லேன். எ-று.

நீரசைய நிழலசைதல்போலச சரீரம் வருந்தச் சரீரியாகிய நானுந் தேகாபிமானியாய் வருந்துகின்றேன், இப்படி வருந்துதல் உன்திருவருள் பெற்றவெனக்கு இயல்பல்ல வென்பது கருத்து. திருவருள் பெற்றுந்திட மின்மையால் பித்தனென்றார். இது "வெள்ளத்தனைய-தியாங்கு" என் பதனானு முணர்க.

11 செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரேமுழு
மைய னேனுனை வாழ்த்து மதியின்றி
இம்பர் வாழ்வினுக் கிச்சைவைத தேன்மனம்
நம்பி வாவெனி னெனென்கொல் செய்வதே.

இ-ள். செம்பொன் - செம்பொன் போன்ற, மேனி - நிறத்தையு டுதல், செழுஞ்சுடரே - செழுமையாகிய வொளியே, முழுவம்பனேன்

முழுமூடனாகிய நான், உன்னைவாழ்த்தும்-உன்னைத் துதித்தற்குரிய, மதி இன்றி-புத்தியில்லாமல், இம்பர்வாழ்வினுக்கு - இவ்வுலக வாழ்க்கையின் பொருட்டு, மனம் இச்சைவைத்தேன் - மனம் விரும்பினேன், நம்பி-பூர்ணனே, வா வெனின் - (என்னிடமே) வாவென்றழைத்திடில், நான் செய்வது என்-அடியேன் செய்யக்கிடந்ததுயாது, (ஒன்றுமில்லை) எ-று.

பூர்ணனாதலால் என் சுதந்திரத்தைக் கொடுத்து வலிந்தாட்கொள்ளின் உன்னைத்தடுப்பவரில்லை யென்பது கருத்து.

12 செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்
ஐய நின்னதென் றெண்ணு மறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யி லேசுழன் றேனென்ன புண்மையே.

இ-ள். செய்யும் செய்கையும்-செய்யுந்தொழிலும், சிந்திக்கும் சிந்தையும்-நினைக்கின்ற நினைப்பும், ஐய ஐயனே, நின்னதுஎன்றுஎண்ணும்-உன்னதென் றெண்ணுகிற, அறிவு இன்றி - ஞானமில்லாமல், வெய்ய - கொடிய, காம வெகுளிமயக்கம் ஆம் - காம வெகுளிமயக்கங்களாகிய, பொய்யிலே-பொய்யுடையில், உழன்றேன் - சுழன்றேன்; என்னபுண்மை-இது என்ன இழிவான காரியம். எ று.

செய்கையும் செய்யச்சிந்திக்குஞ் சிந்தையு முன்னதே யென்றுணரு முணர்வின்றிக் காமவெகுளி மயக்கங்களாகிய முக்குற்றங்களோடு கூடியுழலாநின்றேன் என்பதாம்.

13 புண்பு லானரம் பென்புடைப் பொய்யுடல்
அன்பர் யார்க்கு மருவருப் பல்லவோ
என்பொ லாமணி யேயிறை யேயித்தால்
துன்ப மன்றிச் சுகமொன்று மில்லையே.

இ-ள். புல்-இழிவான, புலால்-மாம்சத்தையும், நரம்பு - நரம்பையும், என்பு-எலும்பையும், உடை-உடைய, பொய் உடல் - பொய்யுடம்பானது, அன்பர் யார்க்கும் - அன்பரெல்லாருக்கும், அருவருப்பு அல்லவோ அருவருக்கத் தக்கபொருளல்லவோ, என் பொல்லாமணியே - என்னவப்பட்ட [illegible]ளைக்காத முழுமணியே, இறையே-தலைவனே, இத்தால்-இந்தவுடம்பி, துன்பம் அன்றி-துக்கமேயன்றி, சுகம ஒன்றும் இல்லை-சுகம்சிறிதும் ல. எ-று.

என்பொல்லாமணியே யென்றார் அன்பர்க்கெளியன் என்பதை த. மணி முன்றானையில் முடிந்தாளலாம்படி யிருத்தல்போல, இ[illegible]ன்பர்க்கெளியனாய், வில்லடி கல்லடிப்பட்டும், பரவைபா,

வருந்தாடந்தும், செருப்புதையேற்றும், வையை வரம்பு கட்டு மிடத்துப் பிரம்படிபட்டும், நரிபரியாக்கி விற்கவந்தும் செய்த எண்ணிறந்த செய்கை களோச செய்தாளுதலால் மணி இறைவனுக்கு உவமையாயிற்று.

14 இல்லை யுண்டென் றெவர்பக்க மாயினும்
சொல்ல வோவறி யாத தொழும்பன்யான்
செல்ல வேறொரு திக்கறி யேனெலாம்
வல்ல நீயெனை வாழ்விக்க வேண்டுமே.

இ-ள். இல்லை உண்டு என்று-இல்லையென்றும் உண்டென்றும், எவர் பக்கம் ஆயினும்-எவர்களுடைய இடத்திற்காயினும் போய், சொல்ல அறி யாத-கூற அறியாத, தொழும்பன்யான்-தொண்டனாகிய நான், செல்ல-போக, வேறு ஒருதிக்கு அறியேன்-மற்றொருகதி யறியேன், எல்லாம்வல்ல நீ-எல்லாம்செய்ய வல்லவனானீ, என்னை வாழ்விக்கவேண்டும்-அடியேனை வாழ்வித்தருளவேண்டும். எ-று.

திக்கு கதி என்பன புகலிடமென்னும் பொருளன.

15 வேண்டுஞ் சீரருண் மெய்யன்பர்க் கேயன்பு
பூண்ட நானென் புலமறி யாததோ
ஆண்ட நீயுன் னடியவ னெனன்று
தூண்டு வேனன்றித் தொண்டனென் சொல்வதே.

இ-ள். சீர் அருள்-உன்சிறந்த அருளானது, வேண்டும் - அடியேனால் விரும்பப்படும், மெய்யன்பர்க்கே-உன் மெய்யடியார்க்கே, அன்பு பூண்ட நான்-அன்புகொண்ட நான், என் புலம் அறியாதது - என்னுளவறியாமல், ஆண்டநீ-என்னை யாட்கொண்டநீ, உன் அடியவன்நான் என்று-உன்தொண் டன் நானென்று, தூண்டுவேன் அன்றி-எச்சரிப்பேனல்லது, தொண்டன்-தொழும்பனேன், என்சொல்வது-யாது சொல்லத்தக்கது.

மெய்யன்பர்க்கே யன்புபூண்ட நானுதலாலும், என்புல மறியாமல் ஆண்ட நீயாதலாலும், உன்னடியவன் நானென்று தூண்டுவேனன்றித் தொண்ட னென்சொல்வது என்பது கருத்து.

16 எனக்கு ளேயுயி ரென்ன விருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல் வழக்கன்றே
கனத்த சீரருட் காட்சிய லாலொன்றை
நினைக்க வோவறி யாதென்ற னெஞ்சமே.

இ-ள். எனக்கு உள்ளே - எனக்குள்ளே, உயிர் என்ன - உயிர்போ நீ - இருந்தநீ, மனக்கிலேசத்தை - மனவியாகுலத்தை, மாற்ற வழக்கு அன்றே - உனக்குக் கடன்மையல்லவா, கனத்

லான, சீர்-சிறப்பையுடைய, அருள்காட்சியல்லாது-திருவருட்டரிசனத்தை யன்றி, ஒன்றைநினைக்கவோ-வேறொன்றைநினைக்கவென்றுலோ, என்றன் நெஞ்சம்-என்மனமானது, அறியாது நினைக்க அறியாது. எ-று.

உயிர் என்ன என்பதற்கு உயிரென்று சொல்லும்படி யெனினுமாம். உன்றிருவருட் காட்சியையன்றி வேறொன்றை நினைக்கவுமறியாத என் மனத்தி லுறைகின்ற நீ அதனிடத்துள்ள வியாகுலங்களை நீக்குதல் உன் கடன்மை யல்லவோ வென்பது கருத்து.

17 நெஞ்சு கந்துனை நேசித்த மார்க்கண்டர்க்
கஞ்ச லென்ற வருளறிந் தேயையா.
தஞ்ச மென்றுன் சரணடைந் தேனெங்கும்
செஞ்செ வேநின்ற சிற்சுகவாரியே.

இ-ள். நெஞ்சு உகந்து-மனமுவந்து, உன்னைநேசித்த - உன்னை விசு வாசித்த, மார்க்கண்டர்கு-மார்க்கண்ட முனிக்கு, அஞ்சல் என்ற-பயப் படாதேயென்ற, அருள் அறிந்து - திருவருளையறிந்து, ஐயா - ஐயனே, தஞ்சம் என்று-அடைக்கலமென்று, உன்சரண் அடைந்தேன்-உன்றிருவடி களையடைந்தேன், எங்கும்-எவ்விடத்தும், செஞ்செவ்வே நின்ற-பரிபூரண மாய் நிறைந்துநின்ற, சிற்சுகவாரியே-ஞானசுகசமுத்திரமே. எ-று.

நேசிப்போரை அஞ்சல் என்றருள்வோன் நீயென்றறிந்த காலும் தஞ்சமென்று உனசரணடைந்தேனென்பதாம். மார்கண்டர்கு அஞ்சல் என்றதாவது அவருயிரைக கூற்றுங்கவராது கூற்றுயிரைக் கவர்ந்தது.

18 வாரி யேழு மலையும் பிறந்தான்
சீரி தானநின் சின்மயத் தேயென்றல்
ஆரி லேயுள தாவித் திரளைத
ஓரி லேனினை யாண்ட வொருவனே.

இ-ள். என்னை ஆண்ட ஒருவனே-என்னையாண்டருளின வொப்பற்ற வனே, வாரியேழும் - சப்தசமுத்திரங்களும், மலையும்-மலைகளும், பிறவும்- மற்றுள்ளனவும், (இருப்பது) நின சின்மயதீத்தி யென்றல்-உன் சிற்சொரூ பத்தி லென்றால், ஆவித் திரள்-ஜீவித்திரளாகி, ஆரிலே உளன-ஜீவிடத் துள்ளது, அதை-அந்தசெய்தியை, ஓரிலேன்- ஆராய்ந்திலேன். எ-று.

"உலகமெனு மோவியங்கடிகழ்த்த வொருபடமாகி" என்றமேலோர் கூற்றுக்கிணங்க, "வாரியேழுமலையும் பிறவுந்தான்-சீரிதான வுன்சின்மயத் தேயென்றல்" என்றார்.

19 ஒருவ ரென்னுளத் துள்குங் குறிப்பறிந்
தருள்வ ரோவெனை யாளுடை யண்ணலே
மருள னேன்பட்ட வாதை விரிக்கிலே
பெருகு நாளினிப் பேச விதியின்றே.

இ-ள். ஒருவர்-நீயேயன்றி வேறொருவர், என் உள்ளத்து-என் மனத்தில். உள்ளும்-நினைக்கின்ற, குறிப்பு அறிந்து-நினைப்பறிந்து, அருள்வரோ-அருளுவரோ, என்னை ஆள்உடை அண்ணலே-என்னையடிமையாகவுடைய பெரியோனே, மருளனேன் - மயக்கத்தையுடைய நான், பட்டவாதை-பட்டதுன்பத்தை, விரிக்கின் - பெருகசொன்னால், நாள்பெருகும்-நாள் அதிகரிக்கும், (ஆதலால்) இனிபேச விதியின்று-இனிப்பேசுதற்கு முறைமையில்லை. எ-று.

"உள்குவாருள்ளத் துள்ளுறை சோதியை" என்கிறபடியே, என்னுள்ளத்துள்ளுறைகின்றனை யாதலால், நீயன்றி வேறொருவர் என்னுள்ளக் குறிப்பறிந்து அக்குறிப்பின்படிவந்து அருள்வரோ என்பது கருத்து.

20 இன்று னக்கன் பிழைத்தில னெனன்றே
அன்று தொட்டெனை யாளர சேயென்று
நின்ற ரற்றிய நீலனைக் கைவிட்டால்
மன்ற மெப்படி நின்னருள் வாழ்த்துமே.

இ-ள். இன்று-இப்பொழுது, நான் உனக்கு அன்பு இழைத்திலன் என்று-நான் உனக் கன்புசெய்திலே னென்று, அன்று தொட்டு-அன்று தொடங்கி, அரசே-இறைவனே, என்னை ஆள் என்று - என்னையாள்வா யென்று, நின்று அரற்றிய-நின்று கதறின, நீலனை-வஞ்சகனுகிய என்னை, கைவிட்டால் - கைநெகிழ விடுவையாயின், மன்றம் - உலகமானது, நின் அருள்-உன்னருளை, எப்படி வாழ்த்தும்-எவ்வாறு துதிக்கும். (சொல்வா யாக) எ-று.

நீலன் என்பது வஞ்சகியென்னும் பொருளுள்ள நீலியென்னும் பெண் பாற் பெயர்க்குரிய ஆண்பாற் பெயர்.

21 வாழ்த்து நின்னருள் வாரம்வைத் தாலன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனு முய்வனே
சூழ்ந்து நின்ற தொழும்பரை யானந்தத்
தாழ்த்து முக்க ணருட்செம்பொற் சோதியே.

இ-ள். சூழ்ந்துநின்ற - வளைந்துநின்ற, தொழும்பரை - தொண்டரை, ஆனந்தத்து-ஆனந்தக்கடலில், ஆழ்த்தும் அமிழ்த்துகின்ற, முக்கண்-மூன்று கண்களையும், அருள்-கிருபையையுமுடைய, செம்பொன் சோதியே செம்

பொன் ஒளியுள்ளவனே, வாழ்த்தும்-யாவரும் வாழ்த்துதற்குரிய, நின் அருள்-உன்திருவருளானது, வாரமவைத்தால் அன்றி - என்பால் அன்பு வைத்தாலல்லது, பாழ்த்தசிறுதை-பாழ்மனத்தையுடைய, பதகனும்-பாவி யாகிய நானும், உய்வனே-பிழைப்பேனே, எ-று.

"கண்ணுக்கணிகலங் கண்ணேணோட்டம்" என்பவாகலின், முக்கணருள்; என்றார்.

22 சோதி யேசுட ரேசுக மேதுணை
நீதி யேநிச மேநிறை வேநிலை
ஆதி யேயுனை யானடைந் தேனகம்
வாதி யாதருள் வாயருள் வானையே.

இ-ள். சோதியே-ஒளியே, சுடரே (ஒளியைக்கொடுக்கின்ற) விளக்கே சுகமே - இன்பமே, துணை (எம்போலியர்க்கு) சகாயமாகிய, நீதியே-நீதி நெறியே, நிசமே-உண்மையே, நிறைவே-பூர்ணமே, நிலை-எக்காலும் நிலைத் திருக்கிற, ஆதியே - முதற்பொருளே, உன்னை - நின்னை, யான் அடைந் தேன்-நான் சரணமடைந்தேன், அகம்வாதியாது-மனம் என்னை வருத்தா திருக்கும்படி, அருள்வான்-அருள்வெளியில் விளங்குகிற, ஐயே-கடவுளே, அருள்வாய்-கிருபைபுரிவாயாக. எ-று

அருள்வானை என்பதற்கு அருள்வெளியை யென்றுரைப்பினுமாம்.

23 வானைப் போல வளைந்துகொண் டானந்தத்
தேனைத் தன்னினைச் சேர்ந்துல கைந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவ னென்னும்
ஈனப் பாழ்கெட வென்று மிருப்பனே.

இ-ள். வானைப்போல வளைந்து கொண்டு - மேகங்களைப் போலச சூழ்ந்துகொண்டு, ஆனந்தத் தேனைத்தந்து-ஆநந்தமாகிய தேனைச சொரிந்து, என்னைச சேர்ந்துகலந்த-என்னைசசேர்ந்து பிரிவறக்கலந்த, மெய் ஞானத்தெய்வத்தை - மெய்ஞ்ஞானத்தைத தருகின்ற பரதேவதையை, நாடுவன்-தியானிப்பேன், (அதனால்) நான் என்னும்-நான் என்றுவிவகரிக் கிற, ஈனம்-இழிவாகிய, பாழ்-பாழ்நெறி, கெட-அழிய, என்றும் இருப் பன்-எக்காலத்தும் ஒருபடிப் பட்டிருப்பேன். எ-று.

இறைவனை நாடுதலால் நானென்னும் அகம் பாவம் நீங்கி, என்று மொருதன்மைத்தாகிய மோக்ஷபூமியில் வாழ்வேன் என்பதாம். 'மலர் மிசையேகினான் மாணடிசேர்ந்தார்-நிலமிசை நீடுவாழ்வார்" என்றார் பெரு நாவலரும்.

24 இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமற் றிருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம்ப லெயலாம்
அரும்பச் செய்யென தன்னையொப் பாமனே.

இ-ள். இரும்பை-இரும்பை, காந்தம்-காந்தக்கல்லானது, இழுக்கின்ற ஆறு-கவர்கின்றவிதம், என்னை-அடியேனை, திரும்பிப்பார்க்க வொட்டா மல்-மீட்டும் இப்பிறக் கொள்ளையைத் திரும்பிப்பார்க்காத வண்ணம், திரு வடி-உன்திருவடிகளாகிய, கரும்பைத்தந்து-கரும்பைக்கொடுத்து, கண் ணீர்-கண்ணீரும், கம்பலை-மெய்நடுக்கமும் ஆகிய, எல்லாம் - மோக்ஷதாக முன்னோர் குறிகளெல்லாம், அரும்பசெய்-என்னிடத்துண்டாகச செய் வாய், எனது அன்னை ஒப்பு ஆம்-என்தாய்க்குச சமானமாகியே, மன்னே-இறைவனே. எ-று.

எதிரிட்ட இரும்பைக்காந்த மிழுத்துச் சலியாதடக்கு மாறுபோல, எதிரிட்டறியுமென்னைக் கவர்ந்துமீட்டும் வெளிப்படா தடக்கிக்கொள்ள வேண்டு மென்பதாம.

25 அன்னை யப்பனென் னுயித் துணையெனுந்
தன்னை யொப்பற்ற சற்குரு வென்பதென்
என்னைப் பூரண வின்ப வெளிக்குளே
துன்ன வைத்த சுடரெனத் தக்கதே.

இ-ள். அன்னை-தாய், அப்பன்-தந்தை, என் ஆவித்துணை-என்னுயிர்த் துணை, என்னும் என்று சொல்லப்படுகிற, தன்னை - தன்னை, ஒப்பற்ற-நிகரற்ற, சற்குரு என்பது என்-சதாசாரிய னென்று சொல்லுவதென்ன, என்னை-அடியேனை, பூரண இன்பம் - பூர்ணசுகமாகிய, வெளிக்குள்ளே-வெளியினிடதே, துன்னவைத்த-பொருந்தவைத்த, சுடர் எனத்தக்கது-சோதியென்று சொல்லத்தகுந்தது. எ-று.

சற்குருவைப் பரப்பிரமமாகக் கருதவேண்டு மென்பது கருத்து.

26 தக்க கேள்வியிற் சார்ந்தநற் பூமியின்
மிக்கதாக விளங்கு முதலொன்றே
எக்க ணுந்தொழ யாவையும் பூத்துக் காய்த்
தொக்க நின்றுமொன் றிறை வானதே.

இ - ள். தக்ககேள்வியின் - தகுதியாகிய கேள்வியென்னும் பெயரி னால், சார்ந்த - பொருந்திய, நல்பூமியில் - நல்ல நிலத்தில், மிக்கது ஆக விளங்கும் - மேலானதாக விளங்குகின்ற, முதல் ஒன்றே - பீஜம் ஒன்று மாத்திரமே, எக்கண்ணும்தொழ - எத்திசையும் வணங்க, யாவையும்-எல்

லாவற்றையும், பூத்துக் காய்த்து - பூவெடுத்துக்காய்த்து, ஒக்கநின்றும்- (அவைகளோடு தனிததனியே) கூடிநின்றும், ஒன்றிய நிறைவு ஆனது- ஒருபொருளாகியே எல்லாவற்றிலும் அகம்புற மென்னுதபடி நிறைவுற்றி ருக்கது. எ று.

"தக்க கேள்வியிற் சார்ந்த நற்பூமி" என்றது ஞானபூமிகளேழனுள் இரண்டாம் பூமியாகிய விசாரணையை.

27 ஆன மான சமயங்க ளாறுக்கும்
தான மாய்நின்று தன்மயங் காட்டிய
ஞான பூரண நாதனே நாடியே
தீன னேனின்பந் தேக்கித் திளைப்பனே.

இ-ள். ஆன-உண்டாகிய, மானம்-பெருமை பொருந்திய, சமயங்கள் ஆறுக்கும்-ஆறுசமயங்களுக்கும், தானம் ஆய்நின்று-இடமாய்நின்று, தன் மயம் காட்டிய-தன்னுருக்காட்டிய, ஞானபூரண நாதனே நாடி-ஞான நிறை வுள்ளவனுகிய தலைவனேநாடி, தீனனேன்-எளியனேன், இன்பம்-நிரதிசயா நந்தத்தை, தேக்கித்திளைப்பன்-பூர்ணமா யநுபவிப்பேன். எ-று.

நிரதிசயம்-தனக்கு மேற்பட்டதில்லாமை.

28 தேக்கி யின்பந் திளைக்கத் திளைக்கவே
யாக்க மாயெனக் கானந்த மாகியே
போக்கி னேடு வரவற்ற பூரணம்
தாக்கி நின்றவா தன்மய மாமதே.

இ-ள். இன்பம் தேக்கி-நிரதிசயாநந்தத்தை முற்றுமடைந்து, திளைக் கத்திளைக்க-அநுபவிக்குந்தோறும், ஆக்கம் அழிவு விருத்தியடைந்து, எனக்கு ஆநந்தம் அழி-எனக்கு இன்பமாகி, போக்கினேடு வரவு அற்ற-போக் கும் வரவுமில்லாத, பூரணம தாக்கிநின்றவா பூரணப்பொருளானது வந்து மேலிட்டு நின்றவாறு என்னே, அதே தன்மயம் ஆம் - அதுவே தன்மய மாம். எ-று.

போக்கினேடு வரவற்றபூரணம் என்றது, "போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே" என்றதைப்பற்ற.

29 அதுவென் றுன்னு மதுவு மறநின்ற
முதிய ஞானிகண் மோனப் பொருளது
எதுவெள் ளறிவி னிறைந்துவ னேழையேன்
மதியு ணின்றின்ப வாரி வழங்குமே.

இ-ள். அது என்று உன்னுமதுவும்- அதுவென்றெண்ணுமெண்ணமும், அறநின்ற-இல்லாமல்நின்ற, முதியஞானிகள்-பெரிய ஞானவான்களுடைய,

மோனப்பொருள் அது மௌன நிலையினைப் பலிக்கும் பொருளாகிய அது, எது என்று எண்ணி-எதுவென்ற மதித்து, இறைஞ்சுவன்-தொழுவேன், எழையேன்-எளியேனது, மகியுள்கின்றது-அறிவினின்று, இன்பவாரி வழங்கும்-ஆநந்தப் பெருகுகுப் பெருகாநிற்கும். எ-று.

என்னறிவுக் கறிவாயிருந்தின்பம் பயத்தலால் எதுவென்றெண்ணியிறைஞ்சுவன் என்றார்.

30 வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரிற் கண்டவை யாவும் பருகினே
ஓரிற் கண்டிடு மூமன் கனவென
யாருக் குஞ்சொல வாயிலை யையனே.

இ-ள். என்னை வாரிக்கொண்டு என்னைக்கவர்ந்துகொண்டு, வாய் மடுத்து-வாயிற்பெய்து, இன்பம் ஆய்-சுகரூபமாகி, பாரில்-உலகில், கண்டவை யாவும் பருகினை-காணப்பட்டபொருள்க ளெல்லாவற்றையும் விழுங்கிவிட்டனை, ஓரில் - ஆராயுமிடத்தில், ஊமன் கண்டிடும் கனவு என-ஊமன் காணுங் கனவுபோல, யாருகுகும் சொல்ல - யாருடனுஞ் சொல்லுதற்கு, வாயில்லை-வாக்கில்லை, ஐயனே-இறைவனே, எ-று.

"அரிந்த தலைவா யடங்குமவ்வள வேயன்றித்-தெரிந்திடுமோ நீயே தெளி" என்றதற் கேற்ப, 'ஊமன் கனவெனயாருக்குஞ் சொல்வாயிலை' என்றார்.

31 ஐய மற்ற வதிவரு ணர்க்கெலாங்
கையி லாமல கக்கனி யாகிய
மெய்ய னேயிந்த மேதினி மீதுழல்
பொய்ய னேனுக்குப் புகலிட மெங்குளதே.

இ-ள். ஐயம் அற்ற (தம் மநுபவத்தில்) சந்தேகம் நீங்கின, அதிவருணர்க்கு எல்லாம்-அதிவர்ணசிரமிகளாகிய ஞானியர்க்கெல்லாம், கையில்-உள்ளங்கையிலிருக்கிற, ஆமலகக் கனி ஆகிய-நெல்லிக்கனிபோன்ற, மெய்யனே-உண்மையானவனே, இந்த மேதினி மீது-இந்தப் பூமியின்மேல், உழல்-சுழலுகின்ற, பொய்யனேனுகு-பொய்யனாகிய எனக்கு, புகல் இடம் எங்குள்ளது. எ று.

அதிவருணர்க்குப்புலப்படுகிற நீ இப்பொய்யினேற்குப் புலப்படுதியோ வென்பதாம்.

32 எங்க னேயுப்ய யாவென தென்பதற்
றங்க னேயுன்ன ருண்மய மாகிலேன்
திங்கள் பாதி திகழப் பணியணி
கங்கை வார்சடைக் கண்ணுத லெந்தையே.

இ-ள். திங்கள் பாதி திகழ - சந்திரன் அரைப்பங்காகப் பிரகாசிக்க, பணி அணி-பாம்பையணிந்த, கங்கை-கங்கை தங்கிய, வார்-நீண்ட, சடை-சடாபாரத்தையுடைய, கண்ணுதல் எதையே - மூற்றிக்கண்ணேடு கூடிய எமது தந்தையே, யான் எனது என்பது அற்று - யான் என்னது என்பதாகிய அகங்கார மமகாரங்கள் நீங்கி, அங்ஙனே ஆப்படி யற்ற விடத்திற் ருனே, உன் அருள் மயம் ஆகிலேன்-உன் திருவருள் மயமாகினில்லை, எங்ஙன் உய்ய-அடியன் எப்படி பிழைக்க எ-று.

பாம்பைகண்டு சந்திரன் ஒளிமழுங்குமென்பார், திங்கள் பாதி திகழப் பணியணி யென்ருர். அன்றித் திங்கள்பாதி என்பதற்கு சந்திரகண்டம் எனப் பொருளுரைத்தலுமாம்.

33 கண்ணிற் காண்பதுன் காடசிகை யாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணெ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேயுன் னருள்வடி வாகுமே.

இ-ள். கண்ணின் காண்பது - கண்ணினல் பார்க்கப்படுவது, உன் காட்சி-உன் சேவையே, கையால் - என் கைகளால், தொழில் பண்ணல்-தொழில் செய்வது, பூசை-உன் பூசையே, பகர்வது - நான் சொல்லுவது-மந்திரம்-உன் மந்திரமே, மண்ணெடு-மண்ணேடு கூடி, ஐந்தும்-ஐந்தென்னும் தொகை பெற்றிருக்கிற பூதங்களாலும், வருகு - அவற்றினுலுண்டாகி பௌதிகங்களென்று வழங்கப்படுகிற, உயிர் யாவும் - உயிர்களெல்லாம், அண்ணலே - பெரியோனே, உன் அருள் வடிவு ஆகும் - உன்னருளுருவமாகும். எ-று.

"மொழிவ துன்செப முத்திரை பாணியின் முயல்வதெங்கு நடப்பன கோயில் சூழ், தொழில ருந்துவ முற்றுமு ணருதி துயில்வ ணங்கல்க ரிப்பன யாவுநீ, யொழிவ றுங்களி யென்செயல் யாவையு முனது நன்சபரிச செயலாகவே, யழிவ றும்பதம் வைத்தருள் பேரொளி யளிவி லுந்துக ளிப்பெழு நாதமே,—என்றிவ்வாறு பிறர் கூறுதலுங் காண்க.

34 வடிவெ லாநின் வடிவென வாழ்த்திடாக
கடிய னேனுமுன் காரணங் காண்பனே
நெடிய வானென வெங்கு நிறைந்தொளிர்
அடிக ளேயா சேயரு ளத்தனே.

இ-ள். வடிவு எல்லாம்-உருவங்களெல்லாம், நின் வடிவு எனே - உன்னுருவமென்று, வாழ்த்திடா-துதிக்காத, கடியனேனும்-கடிநசித்தத்தையுடையேனும், உன் காரணம் காண்பனே - உனது முதன்மையைக் காணவல்லேனே, நெடிய வான் என பெரிதாகிய ஆகாயம்போல, எங்கும் எவ்விடத

தும், நிறைந்து ஒளிர்-நிறைந்து விளங்குகின்ற, அடிகளே-சுவாமீ, அரசே-இறைவனே, அருள் அத்தனே-கிருபையுள்ள தந்தையே. எ-று.

எவ்விடத்தும் எல்லா வருவங்களு முன்னதே என்னும்படி நீக்கமற நிறைந்து நிற்கிற கடவுளே, உன் இறைமையைக் காண வல்லேனே, நீயே யருள்செய்யவேண்டும் என்பதாம்.

35 அத்த னேயகண் டானந்த னேயருட்
சுத்த னேயென வுன்னைத் தொடர்ந்திலேன்
மத்த னேன்பெறு மாமல மாயவான்
கத்த னேகல்வி யாதது கற்கவே.

இ-ள். அத்தனே-தந்தையே, அகண்ட ஆநந்தனே - பரிசசேதிக்கக் கூடாத ஆநந்தத்தையுடையவனே, அருள்-கிருபையுள்ள, சுத்தனே-தூய் மையுள்ளவனே, என என்று புகழ்ந்து, உன்னைத் தொடர்ந்திலேன்-உன் னைப் பற்றிலேன், மத்தனேன்-உன்மத்தனுகிய நான், பெறும் - அடைந் திருக்கிற, மாமலம்-பெரிய மலங்கள், மாய - அழியும்படி, வான்கத்தனே-மேலான சர்வசக்திமானே, யாது கல்வி கற்க - எந்தக் கல்வியைக் கற்கட் டும், (அருளிசசெய்வாய்) எ-று.

மலக்கேட்டுக்குக் காரணமாகிய உன்னை யடையாமல் வேறெந்தக்கல் விகற் றுய்யப்போகிறே னென்பதாம்.

36 கற்று மென்பலன் கற்றிடு நூன்முறை
சொற்ற சொற்கள் சுகாரம் மோகெறி
நிற்றல் வேண்டு நிருவிகற் பச்சுகம்
பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே.

இ-ள். நிருவிகறபசுகம் - நிர்விகற்ப சமாதி சுகத்தை, பெற்றபேர்-அடைந்தவர்கள், பெற்ற - அடைந்த, பேசா பெருமையே - பேசப்படாத பெரும்பொருளே, கற்றும்-பல கல்விகளைக்கற்றும், என் பலன்-என்ன பிர யோசனம், கற்றிடும் - கற்கப்படுகிற, நூல்முறை - சாத்திர முறைகள், சொற்ற சொற்கள் - சொன்னசொற்கள், சுகாரம்பமோ - சுகோதய காரணமோ, நெறி-அவை சொன்ன நெறியில், நிறறல் வேண்டும்-நிற்கவேண்டும். எ-று.

"கற்க கசடறக் கற்பவை கற்றபி - னிற்க வதற்குத் தக" எனவும், "கற்றதனலாய பயனென்கொல் வாலறிவ-னற்ற டொழா அ ரெனின்" எனவும் பெரியோர் பணித்ததற்கேற்ப, "கற்றுமென்பலன் கற்றிடு நூன் முறை-சொற்ற சொற்கள் சுகாரம்பமோ நெறி நிற்றல் வேண்டும்" என்றார்.

37 பெருமைக் கேயிறு மாந்து பிதற்றிய
கருமிக் கைய கதியுமுண் டாங்கொலோ
அருமைச் சீரன்பர்க் கன்னையொப் பாகவே
வருமப் பேரொளி யேயுன்ம னந்தமே.

இ-ள். அருமைசீர்-அருமையாகிய சிறப்பையுடைய, அன்பர்க்கு-அன்பர்களுக்கு, அன்னை ஒப்பு ஆகவரும்-தாய்க்குச சமானமாகவருகின்ற, அப்பேரொளியே-அந்தப் பெரிய சோதியே, உன்மனந்தமே-உன்மனி சத்திக்கும் முடிவான இடமே (அடங்குமிடமே), பெருமைக்கே - பெருமையின் பொருட்டே, இறுமாந்து பிதற்றிய-இறுமாந்துகுழறிய, கருமிக்கு-தீவினையேனுக்கு, ஐய - ஐயனே, கதியும் உண்டாமோ - நற்கதியும் உண்டாகுமோ. எ-று.

பெருமையை யடைய விரும்பித்திரியும் தீவினையேனுக்கு நற்கதியுண்டாமோ என்பதாம்.

38 உன்ம னிக்கு ளொளிர்பரஞ் சோதியாம்
சின்ம யப்பொரு ளேபழஞ் செல்வமே
புன்ம லத்துப் புழுவன்ன பாவியேன்
கன்ம மனத்தைக் கரைக்கக் கடவதே.

இ-ள். உன்மனிக்குள்-உன் மனிசத்திக்குள்ளே, ஒளிர்-விளங்குகின்ற, பரஞ்சோதி ஆம் - பேரொளியாகிய, சின்மயப்பொருளே - ஞானுகாரப் பொருளே, பழஞ்செல்வமே - தொன்மையான பாக்கியமே, புல் - அற்பமாகிய, மலத்து-மலத்திலுள்ள, புழு அன்ன-புழுவையொத்த, பாவியேன்-பாவியாகிய என்னுடைய, கல்மனத்தை-கல்லையொத்த நெஞ்சை. கரைக்கக்கடவது-உருக்கக்கடவை. எ-று.

"இறைவன் கல்லேமென் கனியாக்கும் விசசை வல்லோனுதலால் கன்மனத்தைக் கரைக்கக்கடவது" என்றார்.

39 கரையி லின்பக் கடலமு தேயித
வரையி னுனுனை வந்து கலந்திலேன்
உரையி லாவின்ப முள்ளவர் போலவித்
தரையி லேநடித் தேனென்ன தன்மையே.

இ-ள். கரையில்-கரையில்லாத, இன்பக்கடல் அமுதே-ஆனந்த சாகரத்திலுண்டாகிய அமிர்தமே, இதுவரையில்-இன்றளவும், நான்-அடியேன், உன்னைவந்து கலந்திலேன்-உன்னைவந்து சேர்ந்தேனில்லை, உரை இல்லா-பேசசிறந்த, இன்பம் உள்ளவர்போல - சுகத்தை யடைந்தவர்போல, இத்தரையிலே நடித்தேன்-இந்தப்பூமியிலே நடித்திருந்தேன், என்னதன்மை-இது என்னகுணம். எ-று.

"செய்யுஞ் சடங்குந் திகைப்புஞ் சிதம்பரத்தி லேயன் றனக்கறிய லாம்" என்றுமேலோர் கூறியதையுஞ் சிந்தியாமல், இவ்வண்ண மடிக்கின்றே னென்பார், உரையிலா வின்பமுள்ளவாபோல விதுதானேயிலே நடிததேன் என்றார்.

40 மையு லாம்விழி மாதர்க டோதகப்
பொய்யி லாழும் புலையினிப் பூரைகாண்
கையி லாமல கக்கனி போன்றவென்
னைய னேயெனை யாளுடை யண்ணலே.

இ-ள். மை உலாவிழி-மைதோய்ந்த கண்களையுடைய. மாதர்கள்-மங் கையர்களுடைய, தோதகம்-வஞ்சத்தோடு கூடிய, பொய்யில்-பொய்யின் பதில், ஆழும்-அழுந்துகின்ற, புலை - நீசத்தன்மை, இனிப்பூரை - இனிப் போதும், கையில் - கையிலிருக்கிற, ஆமலக்கனிபோன்ற - நெல்லிக்கனி போன்ற, என் ஐயனே-என்தந்தையே, என்னை ஆள் உடை அண்ணலே-என்னை யடிமையாகவுடைய பெரியோனே. எ-று.

வஞ்சனையுள்ளமாதரது பொய்யின்பத்தில் அழுந்துகின்ற நீசத் தன்மை இனியமையும் என்பதாம்.

41 அண்ண லேயுன் னடிபவர் போலநட்
கண்ணி னலினைக் காணவும் வாவெனப்
பண்ணி னலென் பசுத்துவம் போயுயும்
வண்ண மாக மனோலயம் வாய்க்குமே.

இ-ள். அண்ணலே-பெரியோனே. உன் அடியவர்போல்-உன் தொண் டரைப்போல, அருள்கண்ணினலல்-உன்திருவருளாகிய கண்ணைக்கொண்டு, உன்னைக்காணவும-உன்னைசேவிக்கவும், வா எனப்பண்ணினலல் - வருவா யாகவென்று நான் சொல்லும்படி செய்தனையாயின், என் பசுத்துவம் போய்-என் சீவதன்மை நீங்கி. உய்யும் வண்ணமாக-பிழைக்கும் விதமாக, மனோலயம் வாய்க்கும்-மனோநாசம் சித்திக்கும். எ-று.

உய்யும வண்ணம் - பிறப்பிறப்புக்களினின்று நீங்குதல். மனோநாச முண்டாகாதார்களுப் பிறப்பிறப்புக்க ளொழியாவென்பார். உய்யும் வண் ணமாக மனோலயம் வாய்க்கும் என்றார். "சங்கற்ப நாசத்தா லெளிதாக மன மாசந்தானேயெய்தும்-அங்குற்றமன மிறக்கிற் சகமரணங்களெனு மரமுமாயும் - இங்கிப்பாலெனைத திருவுங்களனைக் கண்டேன் கண்டே னிவன்பேர் நெஞ்சம் - பொங்குற்ற விவலுலே நெடுநாளெஞ்தேனின்று பொருந்து மிப்பேன்" என்றில்வாறுபிறர் கூறுதலுங்காண்க.

42 வாய்க்குங் கைக்கு மெளன மெளனமென்
றேய்க்குஞ் சொற்கொண் டிரரப்பக லற்றிடா
நாய்க்கு மின்பமுண் டோநல் லடியரைத்
தோய்க்கு மானந்தத் தூவெளி வெள்ளமே.

இ-ள். வாயக்கும் கைக்கும் - வாய்க்கும் கைக்கும், மெளனம் மெளனம் என்று-மெளனம் மெளனம் என்று, எய்க்கும் சொல்கொண்டு - எமாத்துஞ் சொல்லைகொண்டு, இராப்பகல் அற்றிடா - இராப்பகல் அற்றொழியாத, நாய்க்கும்-நாயினேனுக்கும், இன்பம் உண்டோ - சுகமுளதோ, நல் அடியாரை-நல்லன்பரை, தோய்க்கும்-முழுகுவிக்கின்ற, ஆநந்தம்-இன்பமாகிய, தூவெளி வெள்ளமே-பரிசுத்தமான ஆகாயத்தினின் றொழுகாகின்ற பிரவாகமே. எ-று.

வாய்க்கும் கைக்கும் என்றது அடிக்கடி யென்றபடி. எய்க்கும் என்பதற்குப் பொருத்தமான என்றுரைத்தலு மொன்று. சொற்கோடலாவது சொல்லின்படி யநுட்டித்தல்.

43 தூய தான தூரிய லறிவெனும்
தாயு நீயின்பத் தந்தையு நீயென்றுல்
சேய தாமிந்தச் சீவத் திரளன்றே
ஆயும் பேரொளி யான வகண்டமே.

இ-ள். ஆயும் (அறிஞரால்) ஆராயப்படுகின்ற, பேரொளி ஆன-பரஞ் சோதியாகிய, அகண்டமே - அபரிசிச்சின்னமே, தூயதான - பரிசுத்தமான, தூரிய அறிவு என்னும்-தூரியஞானமென்கிற, தாயும்நீ - அன்னையும்நீ, இனபத்தந்தையும் நீ என்றுல்-சுகத்தைக் கொடுக்கின்ற பிதாவும் நீ யெனறு சொன்னுல், இந்தச சீவத்திரள் அன்றே-இத்தவுயிர்த் தொகுதி யல்லவா, சேய் ஆம்-மக்களாகும், எ-று.

"விடையதூரிறை யேதாதை மற்றவன் பான் மின்னெமதன்னே" என்ற மேலோர் வாகுக் கநுரூபமாக, தாயுநீ யின்பதந்தையுநீ, என்றார்.

44 அகண்ட மென்ன வருமறை யாகமம்
புகன்ற நின்றன்மை போதத் தடங்குமோ
சேகங்க ளெங்குந் திரிந்துநன் மோனத்தை
உகந்த பேருளே யொன்று வரையனே.

இ-ள். அகண்டம் என்ன-அகண்டமென்று, அருமறை-அரிய வேதங்களும், ஆகமம்-ஆகமங்களும், புகன்ற-சொல்லிய, நின்தனமை-உனதியற்கையானது, போதத்து அடங்குமோ-தற்போதத்துக் குள்ளாமோ, சேகங்கள் எங்கும் திரிந்து - உலகங்களிலெலலாம் சஞ்சரித்து, நலமோனத்தை

உகந்தபேர்-சிறந்த மோநிலையை யடைந்தபேர்கள், உன்னை ஒன்றுவர்-உன்னை யடைவர்கள், ஐயனே-கடவுளே. எ-று.

மறையாகமங்கட்கு அருமையாவது நியாயம் முதலிய சாத்திரவிசாரத்தானன்றி யறியப்படாதிருத்தல். நின்தன்மை போதத் தடங்குமோ என்ற மையான் தற்போத விழவானன்றி யறியப்படா தென்பதாயிற்று. மோனத்தை யுகந்த பேருனை யொன்றுவா என்றது மோன மென்பது ஞான வரம்பு என்றதை விளக்கியவாறு.

45 ஐய னேயுனை யன்றி யொருதெய்வம்
கையி னிற்றொழு வுங்கரு தேன்கண்டாய்
பொய்ய னுகிலும் பொய்யுரை யேன்சுத்த
மெய்ய னுமுனக் கேவெளி யாகுமே.

இ-ள். ஐயனே-கடவுளே, உன்னை அன்றி-(மூக்காரணங்களாலும்) உன்னைத் தொழுவதற்குக் கருதுவதன்றி, ஒருதெய்வம் - வேறொரு தெய்வதத்தை, கையினல்-கையொன்றினாலும், தொழவும் - தொழுதற்கும், கருதேன் - நினைக்கமாட்டேன், பொய்யன் ஆகிலும் - பொய்யினேனாலும், பொய் உரையேன்-பொய் சொல்லேன், சுத்தமெய்யன் ஆம்-சுத்தமெய்யனாகிற, உனக்கே வெளியாகும் - உனக்கே விசத மாகும். எ-று.

கையினிற்றொழவும் கருதேன் என்றது மூக்காரணங்காளானே யன்றிக காயமொன்றினாலுந் தொழேன் என்றபடி. காகாயத்துக்கு உபலக்ஷணம். சுத்தமெய் - பொய்கலவாதமெய். உன்னையன்றி மற்றொரு தெய்வத்தை மூக்காரணத்தானும் வழிபடுகிலேன் என்பது சர்வஜ்ஞனாகிய உனக்கேவெளியாகும் என்பதாம்.

46 வெளியி னின்ற வெளியாய் விளங்கிய
ஒளியி னின்ற வொளியாமுன் றன்னைநான்
தெளிவு தந்தகல் லாலடித் தேவென்று
களிபொ ருந்தவன் சேர்கற்ற கல்வியே.

இ-ள். வெளியில் நின்ற-அன்பரது இதயாகாயத்தில் நிலைபெற்றிருந்த, வெளியாய் விளங்கிய-பரவெளியாய் பிரகாசித்த, ஒளியில் நின்ற-ஒளிக்குள் நிலைபெற்றிருந்த, ஒளி ஆம்-பரவொளியாகிய, உன் தன்னை-உன்னை, நான்-அடியேன், தெளிவுதந்த-எனக்குத் தெளிவைக்கொடுத்த, கல்லால் அடிதே என்று-கல்லாலின் மூலத்தி லெழுந்தருளி யிருந்த தெய்வமென்று, களி பொருந்த அன்றே-மனமகிழ்ச்சி யடைதற் கல்லவோ - கற்ற கல்வி - அடியேன் கற்ற கல்விகள். எ-று.

ஒளியினின்ற ஒளி யென்றது சோதியே சுடரே என்றதைப் பற்ற. (அறிவுக்கறிவு) என்றபடி. நான் கற்ற கல்வியெல்லாம் உன்னைப்பெற்று மகிழ்தற்கன்றே என்பதாம்.

47 கல்லை யுற்ற கருத்தினர் கார்நிறத்
தல்லை யொத்த குழலினை ராசையால்
எல்லை யற்ற மயல்கொள வோவெழில்
தில்லை யிற்றிக ழுந்திருப் பாதனே.

இ-ள். எழில்-அழகைக்கொண்ட, தில்லையில்-தில்லை நகரில், திகழும்-பிரகாசிக்கிற, திருப்பாதனே-திருவடிகளை யுடையவனே, கல்லை உற்ற கருத்தினர் - கல்லின் தன்மையை யடைந்த மனத்தையுடையவர்களும், கார்நிறத்து - கருமேகத்தின் நிறத்தைத் தன்னிடத்துக் கொண்டிருத்தலால், அல்லை ஒத்த-இரவையொத்த, குழலினர் - கூந்தலையுடைய வர்களுமாகிய மாதரது, ஆசையால்-ஆசையினால், எல்லை அற்ற - அளவுகடந்த, மயல் கொள்ளவோ - மயக்கங் கொண்டு நசிக்கவோ (அடியேன் பிறந்தது) எ-று.

வேதத்துசசியில் விளங்குந்திருவடி எம்மனோரை யுய்வித்தற்பொருட்டன்றே தில்லையிற் றிகழ்வது, அங்ஙனமாகவும், அடியேன் மாதர்மயக்கில் ஆதனையழிகையோ எனக்கியல்பாவது என்பார், தில்லையிற் றிகழும் திருப்பாதனே மயல் கொளவோ என்றார். கல்லின் தன்மை - காடிந்யம், (வன்மை). எ-று.

48 திரு வருட்டெய்வச செல்வி மலைமகள்
உருவி ருக்கின்ற மேனி யொருபரம்
குருவை முக்கணெங் கோவைப் பணிநெஞ்சே
கருவி ருக்கின்ற கன்மமிங் கில்லையே.

இ-ள். திருவருள்-திருவருளென்கிற, தெய்வசசெல்வி-தெய்வசசெல்வத்தை யுடையவளாகிய, மலைமகள்-பாவதிதேவியின, உரு-வடிவானது, இருக்கின்ற-அமைந்திருத்தற்குரிய. மேனி - திருமேனியையுடைய, ஒருஒப்பற்ற, பரம குருவை-பரமாசாரியனே, முக்கண் எம்கோவை - மூன்று கண்களையுடைய எம்பிறைவனே, நெஞ்சேபணி-மனமேவணங்கு,(வணங்குவையாயின்) கரு இருக்கின்ற கர்ப்பத்திற்றங்குதற்குரிய, கன்மம்-தீவினையானது, இங்கு இல்லை இவ்வுலகத்தில் (நமக்கு) உண்டாவதில்லை. எ-று.

மலைமகள்-பார்வதி என்னும் வடமொழிப் பொருளமைந்த சொல். எனையசெல்வங்கள்போன்று நிலையுறுதியுடைய தன்றென்பார், திருவருட் டெய்வச செல்வமென்றார். முக்கண் முத்தொழில் எனினுமாம்.

49 கன்ம மேது கடுகர கேதுமேற்
சென்ம மேதெனைத் தீண்டக் கடவதோ
என்ம னோரத மெய்தும் படிக்கருள்
நன்மை கூர்முக்க ணுத னிருக்கவே.

இ-ள். என்மனோரதம்-என்மனோரதங்களையெல்லாம், எய்தும்படிக்கு-நான் அடையும்படி, அருள்-கிருபைசெய்கிற, நன்மைகூர்-நன்மைமிகுந்த, முக்கண்ணாதன்-மூன்று கண்களையுடைய இறைவன், இருக்க - எனக்குள் னீடாயிருக்கும்போது, கன்மம் ஏது-தீவினையேது, கடுகரு ஏது-கொடிய நரகமேது, மேல்சென்மம் ஏது-மேல் உண்டாகும் பிறவி ஏது, (இவற்று ளொன்றுயினும்) என்னைத் தீண்டக் கடவதோ - என்னைப் பற்றக்கட வதோ. எ-று.

நரகிற்கேது தீவினையும், அந்த நரகானுபவத்தின்மேல் அத்தீவினைக் கீடான பிறப்பும் உளதாகுமுறைமை நோக்கி, "கன்மமேதுகடுநரகேது மேல் சென்மமேது" எனவும், முக்கணுதனது இருக்கையும் கன்மாதிகளும் ஒளியிருள்கள் போல்வனவாதலால், முக்கணுதனிருக்க, கன்மம் தீண்டக் கடவதோ எனவுங் கூறினர்.

50 நாத கீதனென் ஞதன்முக் கட்பிரான்
வேத வேதியன் வெள்விடை யூர்திமெய்ப்
போத மாய்கின்ற புண்ணியன் பூந்திருப்
பாத மேகதி மற்றிலை பாழ்நெஞ்சே,

இ-ள். நாதகீதன்-நாதகீதங்களையுடையவன், என்நாதன் - என்தலை வன், முக்கட்பிரான் - மூன்று கண்களையுடையபிரான், வேதவேதியன்-வேத முதல்வனுதலால் வேதியனென்னுந் திருநாம முள்ளவன், வெள் விடை ஊர்தி-வெள்ளிய ருஷபவாகனத்தை யேறி நடாத்துவோன், மெய் போதம் ஆய்கின்ற புண்ணியன் - உண்மை யறிவாகிகின்ற தருமமூர்த்தி, (அவனது) பூந்தாமரை மலர்போன்ற, திருப்பாதமே-திருவடிகளே, கதி-நமக்குப் புகலிடம், மற்று இல்லை - வேறில்லை, பாழ் நெஞ்சே - பாழ் மனமே. எ-று.

நாதகீதன் - நாதத்தால் துவமாகிய கீதத்தையுடையவன் எனினுமாம். பிரான்-உபகாரகன்.

51 மற்று னக்கு மயக்கமென் வன்னெஞ்சே
கற்றை வார்சடைக் கண்ணுத லோனருள்
பெற்ற பேரவ ரேபெரியோரெலாம்
முற்று மோர்ந்தவர் மூதுரை யர்த்தமே.

இ-ள். வல்நெஞ்சே-வலியமனமே, உனக்கு மற்றும் மயக்கம் என்-உனக்கின்னமும் மயக்க முளதாதற்குக்காரணமென்னே, கற்றைவார்சடை-திரட்சியாகிய நீண்டசடையையுடைய, கண்ணுதலோன்-நெற்றிக்கண்ணனது, அருள்பெற்றபேர் அவரே-அருளைப் பெற்றோராகிய அவரே, பெரியோர்-சீரியரும், மூதுரை அர்த்தம் எல்லாம்-வேதப்பொருள்களே யெல்லாம், முற்றும் ஓர்ந்தவர்-முழுது முணர்ந்தவரும் (ஆவர்). எ-று.

பெரியோரும் மூதுரை யர்த்தம் முற்றுமோர்ந் தோரும் யாவரென மயலுறு நெஞ்சிற்குக்கூறியதாக இத்திருவிருத்தங்கூறப்பட்டது. மூதுரை வேதம என்றுரைக்கப்பட்டது அது எல்லா நூல்களுக்கும் பழையதாத லேக்கி.

52 உரையி றந்துளத் துள்ள விகாரமாம்
திரைக டந்தவர் தேடுமுக் கட்பிரான்
பரைநி றைந்த பரப்பெங்ங னங்ஙனே
கரைக டந்தின்ப மாகக் கலப்பனே.

இ-ள். உரை இறந்து-சொல்லற்று, உள்ளது உள்ள-மனத்திலுள்ள, விகாரம் ஆம்-வேறுபாடாகிய, திரைகடந்தவர்-ஆவரணத்தைக் கடந்தவர்கள், தேடுமே-தேடுகின்ற, முக்கண்பிரான் மூன்றுகண்களையுடையபிரானது, பரைநிறைந்த-திருவருட்சத்தி நிறைந்த, பரப்பு எங்ஙன்-நிலம் எங்கு, அங்ஙனே-அவ்விடத்தே, கரைகடந்து-வரம்புகடந்து, இன்பம்ஆகக்கலப்பன்-சுகவடிவாகக் கலப்பேன். எ-று.

ஆவரணம்-மறைப்பு. திருவருட்சத்தி நிறைந்த பரப்பு-சிதாகாயம். இது "தினகரனேச செறிவருட மீரைஞ்ஞூற்றிற் றிரியொடு நெய்மாண்ட விந்ததீபம்போல, சிற்சுகனத்துற்ரன்" என்றற்றொடக்கத் தனவற்ரை யுணர்க.

53 கலந்த மூத்தி கருதினுங் கேட்பினும்
சிலங்க ளாதியு நின்றெமைப் போலவே
அலந்து போயின மென்னு மருமறை
மலர்ந்த வாய்முக்கண் மாணிக்கச் சோதியே.

இ-ள். அருமறை-அறியவேதங்களே, வாய்மலர்ந்த-திருவாய் மலர்ந்தருளிய, முக்கண் மாணிக்கசோதியே-முக்கண்மாணிக்கசுடரே, கலந்த மூத்தி-கலந்தமுத்திநிலையை, கருதினும்-நினைக்கப்புக்காலும், கேட்பினும்

கேட்கப்புக்காலும், நிலங்கள் ஆதியும்-பிருதுவி முதலானவைகளும், எம் மைப்போலவே நின்று - எம்மைப்போலவே திகைத்து நின்று, அலந்து போயினம் என்னும்-துன்பப்பட்டுப் போயிலேமென்னு நிற்கும். எ-று.

நிலங்களாதி-பிருதுவியாதி நாததத்துவ மீறுகிய தத்துவத்தொகுதி.

54 சோதி யாதெனைத் தொண்டருட் கூட்டியே
போதி யாதவெல் லாமெளப் போதிக்க
ஆதி காலத்தி லுன்னடிக் காந்தவம்
ஏது நான்முயன் றேன்முக்க ணெந்தையே.

இ-ள். முக்கண் எந்தையே-த்ரிணேத்ர தாரியாகிய எமதுதந்தையே, என்னை சோதியாது - என்னைப் பரீக்ஷியாமல், தொண்டருட்கூட்டி-உன் னடியார்களோடு சேர்த்து, போதியாத எல்லாம்-போதிக்கக்கூடாத அரிய பொருள்களை யெல்லாம், மெள்ளப்போதிக்க - மெல்லப் போதித்தற்கு, ஆதிகாலத்தில்-முற்காலத்தில், உன்அடிக்கு ஆம்-உன்திருவடித்தொண்டுக குரியனும்படியான, ஏதுதவம்-என்னதவத்தை. நான் முயன்றேன்-அடி யேன் முயன்று செய்தேன். எ-று.

சோதித்தல்-பக்குவியோ அபக்குவியோ வென்றாராய்தல். தொண் டருள் என்றமையால் தாம் தொண்டரல்லர் என்பதூஉம், கூட்டி என்ற மையால் கூடுதற்குரிமை யிலரென்பதூஉம், போதியாத எல்லாம் என்ற மையால் போதித்ததற்குரிய பக்குவம் தமக்கில்லை என்பதூஉம், மெளப் போதிக்க என்றமையால் தம்மதிகாராது குணமாக என்பதூஉம், ஆதி காலத்தில் என்றமையால் இசசநதத்தில் சாம் தவஞ்சிறிது முயன்றிலர் என்பதூஉம போதரும்.

55 எந்த நாளைக்கு மீன்றரு டாயென
வந்த சீராருள் வாழ்கவென் றுன்னுவேன்
சிந்தை நோக்கங் தெரிந்து குறிப்பெலாம்
தந்து காக்குந் தயாமுக்க ணுதியே.

இ-ள். சிந்தை நோககம் தெரிந்து-அடியவர் மனத்தினது நோக்கத் தையறிந்து, குறிப்பு எல்லாம்-அவாகள் கருதினவறறை யெல்லாம், தந்து காக்கும்-கொடுத்து ரகூஷிக்கிற, தயா-அருளையுடைய, முக்கண் ஆதியே-முக்கண்முதல்வனே, எந்த நாளைக்கும்-எக்காலததும், ஈன்று அருள்தாய் என-பெற்றருளிய தாயைப்போல, வந்த-வந்து என்னைக் காத்தருளிய, சீர் அருள்-சிறப்பையுடைய உன்திருவருளானது, வாழுக என்று-வாழக் கடவதென்று. உன்னுவேன்-நிரார்த்திப்பேன். எ-று.

இறைவன் பெருங்கருணையாளனுதலால் குறிப்பெலாந்தந்து காக்குந் தயாமுக்கணுதியே என்றார். சிந்தை நோக்கந்தெரிந்து என்றது அவனது சர்வ வியாபகத் வத்தையும் சர்வஜ்ஞத்வத்தையுந் தோற்றுவிக்க.

56 கண்ண கன்றவிக் காசினி யூடெங்கும்
பெண்ணெ டாண்முத லாமென் பிறவியை
எண்ண வோவரி தேதழை கதிபெறும்
வண்ண முக்கண் மணிவந்து காக்குமே.

இ-ள். கண் அகன்ற-இடமகன்ற, இக்காசினி யூடு எங்கும்-இவ்வுலகத்தி லெவ்விடத்தும், பெண்ணெடு ஆண்முதல் ஆம்-பெண்ணேடு ஆண் முதலாகப்பிறந்த, என் பிறவியை-என்சநநங்களை, எண்ணவோ அரிது-அளவிட வென்றலோ அருமையாகும், (இங்ஙனமாகவும்) எழை-அறிவிலி யாகிய நான், கதிபெறும்வண்ணம்-முத்தியை யடையுமாறு, முக்கண்மணி வந்துகாக்கும்-முக்கண் மாணிக்கம் வந்து காத்தருளுமே. எ-று.

மேலத்திருவிருத்தத்தில் தயா முக்கணுதி யெனத்தெளிந்து கூறினு ராதலால், அத்துணிவு பற்றி வந்துகாக்கும் என்றார். அன்றி, பெண் ணெடாண்முதலாகிய ஜந்ம பரம்பரையி லுழல்வேனை வந்து காப்பனே என ஏகாரத்தை வினவாக்கி யுரைப்பினு மமையும்.

57 காக்கு நின்னருட் காட்சியல் லாலொரு
போக்கு மில்லையென் புந்திக் கிலேசத்தை
நீக்கி யாளுகை நின்பர மன்பினர்.
ஆக்க மேமுக்க ணானந்த மூர்த்தியே

இ-ள். அன்பினர்-அன்பினர்களுக்கு, ஆக்கமே நிறை செல்வமே, முக் கண்-மூன்று கண்களையுடைய, ஆனந்த மூர்த்தியே - சுகவடிவை யுடைய வனே, காக்கும்-காப்பதே யியலா யமைந்த, நின் அருள்காட்சி அல்லால்-உனது திருவருட் டரிசநத்தையே யன்றி, ஒரு போக்கும் இல்லை-(அடி யேனுக்கு) வேறொரு புகலிடமில்லை, (ஆதலால்) என்புந்திக் கிலேசத்தை நீக்கி-என்மனவருத்தத்தைப்போக்கி, ஆளுகை-ஆண்டருளுதல், நின்பரம்-உனக்கே பாரமாகும். எ-று.

ஆக்கம் - மேன்மேலுயருந் செல்வம். உன்திருவருட் காட்சியன்றி வேறு புகலிடமில்லாத என் மனக்கிலேசத்தைநீக்கி யென்னை யாட்கொள் ளுதல் உன் கடன்மையா மென்பதாம்.

58 ஆனந் தங்கதி யென்னவென் னானந்த
மோனஞ் சொன்ன முறைபெற முக்கணெய்
கோனிங் கீந்த குறிப்பத னல்வெறுங்
கீனன் செய்கை திருவருட் செய்கையே.

இ-ள். ஆநந்தம்-ஆநந்தமே, கதி என்ன-புகலிடமென்று தெளியவும், என் ஆநந்த மோனம் சொன்ன - எனக்காநந்த ரூபமான மோன நிலையை யருளிச்செயத, முறைபெற-முறையைப் பெறவும், முக்கண்-மூன்று கண் களையுடைய, எம் கோன்-எம்மிறைவன், இங்கு ஈந்த-இவ்விடத் தருளிச் செய்த, குறிப்பதனால்-குறிப்பினால், வெறும்தீ நன்செய்கை-பிசவும் ஏழை யாகிய என்செய்கை, திருவருள் செய்கையே - திருவருட் செய்கையே யாம். எ-று.

மேல் 48-ம், திருவிருத்த முதல் இதுகாறும் வர, முக்கணெங்கோ, எனவும், முக்கணுதன் எனவும், முக்கட்பிரான் எனவும், கண்ணுதலோன் எனவும், முக்கண் மாணிக்கச சோதி எனவும், முக்கணெந்தை எனவும், முக்கணுதி எனவும், முக்கண்மணி எனவும், முக்கணுநந்தமூர்த்தி எனவும், பலகாலும் முக்கண்மேற் கண்வைத்தது "தில்லைவாழ் கொண் முக்கண் மன்" என்னுமாணிக்கக்கூற்றனது கூற்றின் வழிபற்றியும், அக்கண்ணழகு தம்மை யீடுபடுத்தினமை பற்றியும். ஆநந்தங் கதியென்று தெளியவும், மோன நிலையை முறைமையாகப் பெறவும் அருளிசசெய்த திருவருட்செய் கையே யன்றி எனக்கென ஒரு செய்கையிலே னென்பது கருத்து.

59 கையி னுற்றெழு தேத்திக் கசிந்துள
மெய்யி னுலுனைக் காண விரும்பினேன்
ஐய னேயர சேயரு ளேயருள்
தைய லோர்புறம் வாழ்சக நாதனே.

இ-ள். ஐயனே - கடவுளே, அரசே-அரசனே, அருளே-தயாவானே, அருள்தையல் - திருவருட்சத்தியாகிய உமாதேவி, ஒருபுறம்வாழ் - திரு மேனியி லொருபாகத்தில் வசித்தற்குரிய, சகநாதனே - லோகநாதனே, கையினால் தொழுது-கையினால் வணங்கி, ஏத்தி - வாயினால் துதித்து, உள்ளம் கசிந்து-மனமுருகி, மெய்யினால்-மெய்யன்பினால், உன்னைக்காண விரும்பினேன்-உன்னைத் தரிசிக்க ஆசைப்பட்டேன். எ-று.

மெய்யினால் என்பதற்கு உண்மையாகவென் றுரைத்தலுமாம். கையி னால் எனக் காயமும், வந்தி என வாக்கும், உள்ளம் என மனமுங் கூறப் பட்டது. முக்காரணங்களாலும் உன்னை வழிபட விரும்பினே னென்பது கருத்து.

60 சகத்தின் வாழ்வைச் சதமென வெண்ணியே
பிகுந்த தீமை விளைய விளைக்கின்றேன்
அகதது ளாரமு தாமைய நின்முத்திச்
சுகத்தி னுன்வந்து தோய்வதெக் காலமே.

இ-ள். சகத்தின் வாழ்வை-உலக வாழ்க்கையை, சதம் என எண்ணி-நிலையென்று நினைந்து, மிகுத்த தீமை விளைய-அதிகமான தீமைகளுண்டாகும்படி, வினைக்கின்றேன்-விளையாகின்றேன், அகத்துள் - அன்பரது மனத்தில், ஆர் அமுது ஆம்-அரிய அமிர்தம்போல ருசிக்கிற, ஐய-ஐயனே, நின்-உனது, முத்தி சுகத்தில்-மோக்ஷ சுகவாரிதியில், நான் வந்து தோய்வது-நான்வந்து படிவது, எக்காலம்-எந்தக்காலம். எ-று.

சகம்-தோன்றியழிதன்மையது. எண்ணியென்பதை எண்ணவெனத் திரித்து (அதனால்) மிகுத்த தீமை விளைய. வினைக்கின்றேன் எனப்பொருத்தி யுரைப்பினு மமையும்.

61 கால மூன்றுங் கடந்தொளி ராநின்ற
சீல மேநின் றிருவரு ளாலிந்த்ர
சால மாமிச் சகமென வெண்ணிநின்
கோல நாடுத லென்று கொடியனே.

இ-ள். காலம் மூன்றும் கடந்து ஒளிராநின்ற-முக்காலங்களையும் கடந்து விளங்குகின்ற, சீலமே-குணவானே, நின் திருவருளால்-உன் திருவருளினால், இசசகம்-இந்தவுலகமானது, இந்த்ரசாலம் ஆம் என எண்ணி-இந்த்ரஜாலமா மென்று நினைத்து, நின்கோலம்-உன்திருக் கோலத்தை, கொடியன்-கொடியேன், நாடுதல்-நாடுவது, என்று-எப்போது. எ-று.

காலாதீதமான வஸ்துவின் அருளாலன்றி இசசகம் மித்தையாய்த் தோன்றுதென்பது இதனாற் கூறப்பட்டது.

62 கொடிய வெவ்வினைக் கூற்றைத் துரந்திடும்
அடிக ளாம்பொரு ளேநினைக் கன்பின்றிப்
படியி லேழைமை பற்றுகின் றேன்வெறும்
மிடியி னேன்கதி மேவும் விதியின்றே.

இ-ள். கொடிய-கொடிதாகிய, வெவ்வினை-குரூரமான தீவினை யென்கிற, கூற்றை-யமனை, துரந்திடும-ஓட்டுகின்ற, அடிகள் ஆம்பொருளே-கடவுளென்று சொல்லப்படுகிறவஸ்துவே, வெறுமிடியினேன்-மிகவும் வறியனாகிய நான், கதிமேவும் விதி இன்று-நற்கதியை யடைதற்குக் காரணமாகிய ஆகூழ் இல்லாமையால், நினக்கு அன்பு இன்றி-உன்னிடத்தன்பில்லாமல், படியில்-இவ்வுலகத்தில், ஏழைமைபற்றுகின்றேன் அறிவில்லாமையையே ஆதாரமாகப் பற்றுகின்றேன். எ-று.

வினைக்கூற்றை என்பதற்கு, வினைப்பகுதியை யெனவும் வினைக்கு ஊற்றை எனவும், வினையென்னுஞ் சொல்லை யெனவு முரைப்பினுமாம். ஊற்று-சுரக்குமிடம்.

63 விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட
மதியை யுமவிதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருட்
கதியை யெப்படிக் கண்டு களிப்பதே.

இ-ள். விதியையும் விதித்து-விதியையும் வகுத்து, என்னைவிதித்து-அவ்விதிக்கிடனு மென்னையும் வகுத்து, இட்டமதியையும் விதித்து-எனக் கென்றமைத்த புத்தியையும்வகுத்து, அம்மதி-அந்தப்புத்தியானது, மாயையில் பதியவைத்த-மாயையி லழுந்தவைத்த, பசுபதி-பசுபதியே, (அப்படி மாயையி லழுந்திநிற்கும் நான்) நின்னருள்கதியை-உனனருளானுளதாகுங் கதியை, கண்டு களிப்பது எப்படி-கண்டு மகிழ்வது எவ்வாறு. எ-று.

பசு-சீவன். பதி-இறைவன். பசுபதியாதலால் விதியையும் விதித்து, என்னை விதித்து, இட்டமதியையும் விதித்து, அம்மதிமாயையிற் பதிய வைத்த என்றார்.

64 கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரெனப்
பண்டு மின்றுமென் பானின் றுணர்த்திடும்
அண்ட னேயுனக் கோர்பதி னாயிரம்
தெண்ட னென்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே.

இ-ள். கண்ட கண்ணுக்கு-பார்க்குங் கண்களுக்கு, காட்டும்-பதார்த் தங்களை விளக்கிக் காட்டுகின்ற, கதிர் என-சூரியன்போல, பண்டும் இன் றும்-முற்பொழுதினும் இப்பொழுதினும், என்பால் நின்று-என்னிடத்தி னின்று, உணர்த்திடும் - தன்பவினபக்கூறுபாகளை யுள்ளவாறுணர்த்து கின்ற, அண்டனே-தேவனே, உனக்கு ஒரு பதினாயிரம் தெண்டன் உனக் குப்பதினாயிரம் நமஸ்காரம்செய்கிறேன், என்பொய்ம்மைதீர்த்திடல்வேண் டும்-என் பொய்யொழுக்க முதலியவற்றை நீக்கியருளல் வேண்டும். எ று.

பண்டும் இன்றும் என்றமையால் இனிமேலும் என்பதும் பெறப்படும். தேவத்துவம் இன்னுயின் சீவரிடத்து நின்றுணர்த்து மாற்றலின்னு மென் பார் என்பானின் றுணர்த்திடும் அண்டனே என்றார்.

65 வேண்டும் யாவு மிறந்து வெளியிடைத்
தூண்டு வாரற்ற சோதிப் பிரானின்பால்
மூண்ட வன்பர்த்தம் பொற்பணி வாய்க்குமேல்
ஈண்டு சன்ம மெடுப்பன னத்தமே.

இ-ள். வேண்டும்யாவும் இறந்து விரும்பப் படுகின்ற எல்லாப்பொ ருள்களையுங் கடந்து, வெளி இடை - பரவெளியில், தூண்டுவார் அற்ற-தூண்டுவாரையில்லாத. சோதி - தேஜோமயமான, பிரான்-உபகார சீல

னே, நின்பால்பூண்ட அன்பர் - உன்னிடத்தன்பு பூண்ட அடியாரது, பொன்பணி வாயக்குமேல் - திருப்பணி கிடைப்பதாயின், மண்டு - நெருங்கிய, அநந்தசன்மம்-முடிவில்லாத சன்மங்களே, எடுப்பன்-எடுப்பேன்.எ-று.

முமுட்சுக்களெல்லாரும் சன்மம் வேண்டா வென்றுபிரார்த்தியாநிற்க இவர் "சன்மமெடுப்பன்" எனக் கூறுதல் அசங்கதமன்றே வெனின், அன்று, என்னை; "இறவிலெப்பதமும் பெறவேண்டிலே னென்றும் பிறவி வேண்டுவ னின்றிருப் பணிசெயப் பெறினே" என்னும் ஆப்தவாக்கியப் படியே பிறவிப்பயனுகிய அன்பா பணிசெய்யப் பெறுகையாலென்க.

66 எடுத்த தேக மிறக்குமு னேயெனைக்
கொடுத்து நின்னையுங் கூடவுங் காண்பனே
அடுத்த பேரறி வாயறி யாமையைக்
கெடுத்த வின்பக் கிளர்மணிக் குன்றமே.

இ-ள். அடுத்தபேர்-ஆசிரயித்தவர்களுடைய, அறிவாய்-அறிவுருவாய், அறியாமையை-அவரது அஞ்ஞானத்தை, கெடுத்த-அழித்த, இன்பம்-சுகத்தைத் தருகின்ற, கிளர்-விளங்குகின்ற, மணிக்குன்றமே-மாணிக்க மலையே, எடுத்த தேகம் இறக்கும் முன்னே-எடுத்தவுடனே இறந்தழிவதன் முன்பே, என்னைக்கொடுத்து-என்னையுனக் குணவாகக்கொடுத்து, நின்னையும் கூடவும் காண்பனே-உன்னையும் கூடப்பெறவும் காண்பேனே. எ-று.

என்னைக் கொடுத்து நின்னையுங்கூட என்றது முற்போதவிழப்பை. அதாவது சிவபோதமிறக்கச சிவபோத மேலிடுகை.

67 குன்றி டாத கொழுஞ்சுட ரேமணி
மன்று ளாடிய மாணிக்க மேயுனை
அன்றி யார்துணை யாருற வார்கதி
என்று நீயெனக் கின்னருள் செய்வதே.

இ-ள். குன்றிடாத-அழியாத, கொழுஞ்சுடரே-செழுஞ்சுடரே, மணி மன்றுள் ஆடிய மாணிக்கமே-ரத்ன சபையில் நடனஞ் செய்கின்ற மாணிக்கமே, உன்னை அன்றி-உன்னையல்லாமல், துணையார் - எனக்குத் துணையாவார் யாவர், உறவு யார்-உறவாவார் யாவர், கதி யார்-புகலிடமாவார் யாவர், (ஒருவருமில்லை யுண்மையால்) நீ எனக்கு இன் னருள் செயவது என்று-நீ எனக்கு இன்னருள் புரிவது எக்காலம். எ-று.

மணிமன்றுளாடிய மாணிக்கமே என்றார் மணிக்கும் மாணிக்கத்துக்கும் ஒற்றுமை யுண்மையான். மணிமன்று அழகிய சபையெனினுமாம்.

68 அருளெ லாந்திரண் டோர்வடி வாகிய
பொருளெ லாம்வல்ல பொற்பொது நாதவென்
மருளெ லாங்கெடுத் தேதுளு மன்னலால்
இருளெ லாமிரிந் தெங்கொளித் திட்டதே.

இ-ள். அருள் எல்லாம் திரண்டு ஒருவடிவு ஆகிய-அருள் முழுதுங்கூடி யொருவடிவு கொண்டிருக்கிற, பொருள் எல்லாம்வல்ல-எல்லாப் பொருள் களையும் படைத்தளித் தழிக்கவல்ல, பொன் பொதுநாத - கனகசபா பதியே, என்மருள் எல்லாம் கெடுத்து-என் மயக்க முழுதுங்கெடச செய்து, உள்ளம் மன்னலால் - என்னுள்ளத்தில் நீ நிலைபெற்றிருத்தலால், இருள் எல்லாம்-அஞ்ஞான விருள்முழுதும், இரிந்து-ஓடி, எங்கு ஒளித்திட்டது-எவ்விடத்தோ மறைந்து விட்டது. எ-று.

ஒளிக்குமுன் இருள் நில்லாதாதலால் கனகசபாபதிக்கு முன் இருள் நில்லாதொளித்த தென்றற்கு, பொற்பொதுநாத என் உள்ளம் மன்னலால் இருளெலாமிரிந் தெங்கொளித்திட்டதே, என்றார்.

69 எங்கு மென்னே யிகலுற வாட்டியே
பங்கஞ் செய்த பழவினை பற்றற்றுல்
அங்க ணுவுன் னடியினை யன்றியே
தங்க வேறிட முண்டோ சகத்திலே.

இ-ள். எங்கும்-எவ்விடத்தும், என்னை-அடியேனை, இகல் உறவாட்டி-பகை மிகவாடசெய்து, பங்கம்செய்த - பங்கப்படுத்தின, பழவினை - பழ வினையானது, பற்று அற்றுல்-தொடக் கற்றுப்போனுல், அங்கணு-கருணு நிதியே, உன் அடியினை அன்றி-உன்னிரு சீர்பாதங்க ளல்லாமல், சகத்தில்-இவ்வுலகத்தில், தங்க - யான் சென்றுதங்கி யிருத்தற்கு, வேறு இடம் உண்டோ-வேறிடமுளதோ. எ-று.

பழவினை பற்றற்றுல் அங்கணன் திருவடியிற் றங்குதல் கூடுமென் பது கருத்து. தங்குதல்-இளைப்பாறி யிருத்தல். பழவினை பற்றறுவளவும் பிராரப்தியாகிய சண்டமாருதத்தி லகப்பட்ட தூரும்புபோ லுழல்வது திண் ணமாதலால் இங்ஙனங்கூறினார். "தீராத சுழற்காற்றுற்ற செத்தைபோல்" என்றார் பிறரும்.

70 உண்ட வர்க்கன்றி யுட்பசி யோயுமோ
கண்ட வர்க்கன்றிக் காதல் விடுமோ
தொண்ட ருக்கெளி யானென்று தோன்றுவான்
வண்ட மிழ்க்கிசை வாக மதிக்கவே.

இ-ள். உண்டவர்க்கு அன்றி-புசித்தவர்களுக் கல்லது (மற்றையர்க்கு), உள்பசி தீருமோ - வயிற்றினுட் பசியடங்குமோ, கண்டவர்க்கு அன்றி -

கண்டார்க்கல்லது, காதல் அடங்குமோ-(அப்பொருள்மேலுள்ள) ஆசை தீருமோ, வண்தமிழ்க்கு - என்வளவிய தமிழ்ப்பாட்டலுக்கு, இசைவு ஆக-பொருத்தமாக, மதிக்க-யாவரும் மதிக்கும்படி, தொண்டருக்கு எளியான்-அடியார்க் கெளியவனுகிய எம்பிறைவன், என்று தோன்றுவான் - எப் பொழுது என்னுசை யடங்கும்படி வெளிப்படத் தோன்றுவான். எ-று.

வான்-மேலாகிய, வண்தமிழ்க்கு-(மூவர் முதலியோருடைய) வளவிய தமிழ் மாலைக்கு, இசை-(தரிக்க) இசைந்திருந்த, வாக-புயங்களையுடைய வனே. தொண்டருக்கு எளியா னென்று மதிக்க - அடியாராக் கெளியவ னென்று உன்னை யாவரும் மதிக்கும்படி, தோன்று-எனக்குப் பிரத்தியக்ஷ மாவாய், என்றுரைத்தலுமாம்.

71 மதியுங் கங்கையுங் கொன்றையு மத்தமும்
பொதியுஞ் சென்னிப் புனிதனின் பொன்னடிக்
கதியை விட்டிந்தக் காமத்தி லாழ்ந்தவென்
விதியை யெண்ணி விழிதுயி லாதன்றே.

இ-ள். மதியும்-சந்திரனும், கங்கையும்-கங்காநதியும், கொன்றையும்-கொன்றை மலர்மாலையும், மத்தமும் - மத்தமலர் மாலையும், பொதியும்-செறிந்திருக்கிற, சென்னி - சடாபாரத்தையுடைய, புனித-பரிசுத்தனே, நின்பொன் அடி-உன்திருவடியாகிய, கதியைவிட்டு - புகலிடத்தைவிட்டு, இந்தக்காமத்தில் ஆழ்ந்த - இந்தக் காமக்கடலி லழுந்திய, என்விதியை எண்ணி - என்போ கூழ்வினைத்து, விழி - என்கண், துயிலாது-உறங் காது. எ-று.

நின்பொன்னடிக் கதியைவிட்டிந்தக் காமக்கடலி லழுந்திக் கெடும் விதியை நினைத்து என் கண்ணுறங்கு கின்றனவில்லை, ஆதலால் என் கண் ணுறங்கும்படி கிருபை செய்வாய் என்பது கருத்து.

72 அன்றென னச்சொல வாமென வற்புதம்
நன்றென னசசொல நண்ணிய நன்மையை
ஒன்றென னச்சொன வொண்பொரு ளேயொளி
இன்றென னக்கருள் வாயிரு ளேகவே

இ-ள். அன்று என சொல்ல-அல்லவென்று சொல்லவும், ஆம் என-ஆம் என்று சொல்லவும், அற்புதம் நன்று எனசொல்ல - ஆசசரியம் நன்றுயிருக்கிறதென்று சொல்லவும், நண்ணிய-பொருந்தியிருந்த, நன்மை யை-கிதந்தபொருளே, ஒன்று, எனசொன்ன-(குருரூபமாகிவந்து) ஒன்றே யென்று என்னேயமறுத்தருளிய, ஒண்பொருளே - மேலான பொருளே, இருள் எக-அஞ்ஞான மிருளொழியும்படி, இன்று-இப்பொழுது, எனக்கு ஒளி அருள்வாய்-எனக்கு ஞானப்பிரகாசத்தைக் கிருபைசெய்வாய். எ-று.

இருள் எக ஒளி அருள்வாய் என்றது ஞாலஞ் ஞானங்களுக்குப்பகை யுண்மை நோக்கி.

73 இருவ ரேபுகழ்ந் தேத்தற் கினியராம்
ஒருவ ரேதுணை யென்றுண ராய்நெஞ்சே
வருவ ரேகொடுங் காலர்கள் வந்தெதிர்
பொருவ ரேயவர்க் கென்கொல் புகல்வதே.

இ-ள். இருவரே-பிரமவிஷ்ணுக்க ளென்பாரிருவரே, புகழ்ந்து ஏத்தற்கு இனியர் ஆம்-புகழ்ந்து துதித்தற் கினியராயிருந்த, ஒருவரே-ஒப்பற்றவரே, துணையென்று-நமக்குத்துணை யாவாரென்று, உணராய்-அறியாய், நெஞ்சே-மனமே, கொடுங்காலர்கள் வருவரே - கொடிய யமதூதர் வருவரே, எதிர்வந்து பொருவரே-எதிரில்வந்து நின்றுபோர் செய்வரே, அவர்க்கு என்புகல்வது-அவர்க்கு யாது சொல்லக்கடவது. எ-று.

இருவரே புகழ்ந்தேத்தற் கினியரா மொருவர் என்றது நெருப்புப் பொருப்பனே.

74 புகழுங் கல்வியும் போதமும் பொய்யிலா
அகமும் வாய்மையு மன்பு மளித்தவே
சுகவி லாசத் துணைப்பொரு டோற்றமாங்
ககன மேனியைக் கண்டன கண்களே.

இ-ள். சுகலிலாசம்-இன்பத்தைத்தருகின்ற லீலையையுடைய, துணைப் பொருள்-உயிர்த்துணைப் பொருளாகிய பரமனது, தோற்றம் ஆம்-சேவைக்குரிய, ககனமேனியை - செவ்வானம் போன்ற திருமேனியை, கண்டன கண்கள்-கண்டனவாகிய கண்கள், புகழும்-கீர்த்தியையும், கல்வியும்-கல்வியையும், போதமும் - அறிவையும், பொய் இல்லா அகமும் - பொய்ம்மை யொழிந்த மனத்தையும், வாய்மையும்-சத்தியத்தையும், அன்பும்-அன்பையும், அளித்தன-கொடுத்தன. எ-று.

புகழும் கல்வி-புகழ்ப்படுங் கல்வி யெனினுமாம். அன்பிலர்க்கு எவையிருப்பினும் பயனிலவென்பார் அன்னே யிறுதியிற் கூறினர். "அன்பகத்தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்-வற்றல் மரந்தளிர்த்தற்று." எனவும், "அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க் - கென்புதோல் போர்த்த வுடம்பு" எனவும் மேலோர் கூறுதலுங்காண்க. புகழ் முதலானவற்றை எனக் கருளிச்செய்த சுகவிலாசத் துணைப்பொருளின் திருமேனியை என் கண்கள் கண்டு களித்தன என இத்திருவிருத்தத்துக்குப் பொருளுரைத்தலுங் கூடும்.

75 கண்ணு ணின்ற வொளியைக் கருத்தினை
விண்ணு ணின்று விளங்கிய மெய்யினை
எண்ணி யெண்ணி யிரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றொழுந தெய்வமே.

இ-ள். கண்ணுள் நின்ற ஒளியை-கண்ணின்க ணின்ற பிரகாசத்தை, கருத்தினை-என் கருத் தாயிருப்பதை, விண ணுள் நின்றுவிளங்கிய மெய் யினை-பரவெளியினின்று விள ங்கியவுண்மைப்பொருளை, எண்ணிஎண்ணி-பலகாலுஞ் சிந்தித்து, இரவும பகலும் நண்ணுகின்றவர்-இரவினும் பகலி னும் இடையறாது அடைந்திருப்பவர், நான்தொழும் தெய்வம் - நான் வணங்கும்படியான தெய்வமாவர். எ-று.

இறைவனடியரே யாமிறைஞ்சுந் தெய்வம் என்றார் இவரையன்றி யவனை யெய்துத வருமை நோக்கி.

76 தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
கைவ ரென்பது நற்பர தற்பர
சைவ சிற்சிவனே யுனைச் சார்ந்தவர்
உய்வ ரென்பதும் யானுணர்ந் தேனுற்றே.

இ-ள். வேறு தெய்வம் உளது-வேறு தெய்வம் உண்டு, என்பவர்-என்று செல்லுவோர், சிந்தனைகவர் என்பதும்-மனம் வருந்துவர் என்ப தையும், நல்-சிறந்த, பரம-மேலாகிய, தற்பர-தற்பரனே, சைவசிற்சிவனே-சைவசமயப்ரதி பாத்யனன ஞானகுருத்தை யுதவுகின்ற மங்களகரனே, உன்னை சார்ந்தவர்-உன்னை யடைந்தவர்கள், உய்வர் என்பதும்-கடைத் தேறுவார்களென்பதையும், உற்று-ஆராய்ந்தமைந்து, யான் உணர்ந்தேன்-ஞானநிந்தேன். எ-று.

தேவத்துவ பூர்த்தியில்லாதவர்க ளாதலால் தெய்வம் வேறுள தென் பவர் சிந்தனை கைவர் எனவும், அஃதண்மையால் நற்பர தற்பர சைவ சிற் சிவனேயுனைசசார்ந்தவர் உய்வர்எனவும், இவற்றைஎனமொருங்கி யாராய் ந்தாலன்றித தேவன்றொழாரிலரை யாதுணர்ந்தேற்றே எனவும் கூறினார். சைவம்-சிவசம்பந்தமாகிய சமயம்.

77 உற்ற வேளைக் குறுதுணை யாயிந்தச்
சுற்றமோ நமைக்காக்குஞ் சொலாய் நெஞ்சே
கற்றை வார்சடைக் கண்ணுதல் பாதமே
பற்ற தாயிற் பரசுகம் பற்றுமே.

இ-ள். உற்றவேளைக்கு - ஒருவிபத்து நேரிட்டகாலத்தில், இந்தச் சுற்றமோ-இந்தவுறவோ, உறுதுணை ஆய்-உற்ற துணையாகி, நம்மைக் காக் கும்-நம்மைக்காப்பாற்றும், நெஞ்சே சொல்லாய் - மனமே சொல்வாய்,

கற்றை-திரட்சியாகிய, வார்-நீண்ட, சடை-சடாபாரத்தையும், கண்ணுதல்-நெற்றிக் கண்ணையுமுடைய பரமசிவனது, பாதமே-திருவடியே, பற்றது ஆயின்-நமக்கு ஆதாரமாகப் பெறுவோமாயின், பரசுகம பற்றும்-பரமாநந்தம் (நற்கதி) பற்றும். எ-று.

துணைவேண்டுவது விபத்துக் காலத்தாதலால் உற்றவேளை என்றதற்கு விபத்து நேரிட்டகாலத்தில் என்று பொருள் கூறலாயிற்று. சுற்றமோ என்னு மோகாரம் எதிர்மறை.

78 பற்ற லாம்பொரு ளேபரம் பற்றினால்
உற்ற மாதவர்க் குண்மையை நல்குமே
மற்றும் வேறுள மார்க்க மெலாமெடுத்
தெற்று வாய்மன மேகதி யெய்தவே.

இ-ள். பற்றினால் - ஆசிரயித்தால், உற்றமாதவர்க்கு - மிக்கதபோதர்க்கு, உண்மையை நல்கும்-உண்மைநிலையாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும், (ஆகலால்) பரம்-பரம்பொருளானது, பற்றலாம் பொருளே - ஆசிரயிக்கலாம பொருளே, மனமே-நெஞ்சமே, கதி-எய்த-மோக்ஷத்தை யடைதற்காக, மற்றும்வேறு உள்ளமார்க்கம் எல்லாம் - இதையன்றி வேறுயுள்ள பொய்ந்நெறிகளே யெல்லாம், எடுத்து எற்றுவாய்-எடுத்தெறியக்கடவாய். எ று

மேலைத் திருவிருத்தத்திற் பற்றதாயிற் பரசுகம் பற்றும்என்றார், அது பற்றப்படும் பொருளோ அன்றே என்னு மாசங்கையை நீக்குதற்கு இத் திருவிருத்தத்தில் பற்றலாம் பொருளே என்றார்.

ஆ ணவம்.

ஆணை மார்க்கத் தாகம வாசி
யற்புத மாய்நடந் தருளும்
காரண மூணர்த்துங் கையுநின் மெய்யும்
கண்கண் மூன்று முடையவென் கண்ணே
பூரண வறிவிற் கண்டில மதனற்
போற்றியிப் புகதியோ டிருந்து
காரணி யுள்ள மட்டுமே வணங்கக்
கதியனேன் வேண்டிடத் தகுமே.

இ-ள். கண்கள் மூன்று உடைய - மூக்கண்களையுடைய, என் கண்ணே-என் கண்ணே, ஆணைமார்க்கத்து - வேதவீதியில், ஆகமவாசி - ஆகமக்ருதிரை, அற்புதம ஆய் - ஆசசர்யகரமாய், நடந்தருளும் காரணம்-

கடந்தருள்கின்ற காரணத்தை, உணர்த்தும் - அறிவியாகின்ற, நின்கையும் மெய்யும்-உன்கையையும் மெய்யையும், பூரண அறிவின்-முற்றுணர்வினால், கண்டிலம் - காண்டலேயுடையே மல்லேம், அதனால் - ஆதலால், தாரணி உள்ளமட்டும்-உலகத்தி லுள்ளளவும், போற்றி - வாயினால புகழ்ந்து, இப் புத்தியோடி இருந்து-இத்தமன நிலையோடிருந்து சிந்தித்து, வணங்க-காயத் தினால் வணங்க, தமியனேன் வேண்டடத்தகும - தமியேன் விரும்பத் தகும். எ-று.

காரண மூனர்த்தாயகை - சிற்முத்திரைக்கை. மெய் - திவ்யதேஹம். இவற்றைப் பூர்ண ஞானசமாதியில் காண்ட லரிதாகலால். பூரண அறிவிற் கண்டிலம் எனவும், சகளமாய்க்கண்டு களிக்க விருப்பமுடைய தாதலால், போற்றியிப் புத்தியோடி இருந்து வணங்கத்தமியனேன் வேண்டடதகும் எனவும் கூறினர். போற்றியென்றதனால் வாக்கும், புத்தி என்றதனால் மன மும், வணங்க என்றதனால் காயமும் பெறப்பட்டன. ஆரணமார்க்கத்து ஆகமவாசி கடந்தருளும் என்றதனால் வேதநெறியில் ஆகமம் அமைந்து நடப்ப தென்பதூஉம், வேதத்தினும் ஆகமம் தமக்குசிறந்த பிரமாண மென்பதூஉம் போந்தவாறு காண்க. ஆகமம்-பசுபதிபாச லக்ஷணங்களைப் பிரதிபாதிப்பது என்னும் பொருளது. சகஸ்ரதாகத்தம் என்னும் தந்திரவித சித்தாந்த தத்துவத் திரயத்தையுடைய இவர் ஆகமம் என்னும் சைவசித் தாந்த தத்துவத்திரயத்தை யியலனஞ் சிறந்தோதுவது அசங்கதமன்றே வெனின், அன்று, என்னை, சகஸ்ரதாகத்தமும் ஆகமமும் சொல்வேறு பாட் டனவன்றிப் பொருள்வேறு பாட்டன அன்மையானும், இவர் பதிபோத் தும் சைவசமயாது குணமாகிய ஆகம சித்தாந்தத்தையே சிறக்கோதலானு மென்க. ஆரணம், காலு, அவை.— இருக்கு, தைத்திரியம், சாமம், அதர் வணம் என்பன. தைத்திரியம் என்பதை யஜுர் வேதமென்னாம் அதர வணம் என்பதை அதர்வரிரச என்றும் கூறுவர். ஆகமம், 28 - அவை— காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத் திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம, நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம், புரோற் கீதம், இலளிதம், சித்தம், சன்தான சருவோத்தம், பாரமேசுரம், கிரணம், பேதம், வாதுளம், என்பன.

2 இடமொரு மடவா லுலகினைக் கீந்திட்
டெவ்வுல கத்தையு மீன்றும்
தடமுறு மகில மடங்குரா ளம்மை
தன்னையு மொழிதரு விண் ணெனவே
படருறு சோதிக் கருணையங் கடலே
பாயிருட் படுகரிற் கிடக்கக்

கடனேதா நினைப்பு மறப்பெனுந் திரையைக்
கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே.

இ-ள். இடம் இடப்பாகத்தை, ஒருமடவாள் - ஒப்பற்ற மடப்பத்தை யுடையாளாகிய, உலகு அன்னைக்கு - லோகமாதாவாகிய உமாதேவிக்கு, ஈந்திட்டு-கொடுத்துவிட்டு, எவ்வுலகத்தையும் ஈன்றும்-எல்லா வுலகங்களை யும் படைத்தும், தடம் உறும் பெருமை பொருந்திய, அகிலம்-உலகங்கள், மடங்கும் நாள்-அழியுங்காலத்தில், அம்மை கண்ணையும் ஒழித்து-அவ்வுமா தேவியையும் லயப்படுத்திக் கொண்டு, விண் என - ஆகாயம்போல, படர் உறுசோதி - எங்கும் பரவியிருக்கிற பேரொளியாகிய, கருணை கடலே-கிருபா சமுத்திரமே, பாய்-பரவாநின்ற, இருள்-அஞ்ஞான இருளையுடைய, படுகரில்-பிறவிக்கடலில், கிடக்கக்கடனே-வீழ்ந்து வருந்தக்கடனே, நினைப்பு என்னும் திரையை-நினைப்பு மறப்பு என்னும் அலைகளை, கவர்ந்து உன்னிடத் தடக்கிக்கொண்டு, என்னை வளர்ப்பது - என்னும் வளர்த்தல், உன் கடன்-உன்கடன்மையாம். எ-று.

அகிலம் அடங்கும் எனப்பிரிப்பினு மிழுக்காது. ஒளியை யடுத்தோர்க்கு இருளிற்கிடத்தல தகாதென்பார, படருறுசோதிக் கருணையங்கடலே பாயிருட் படுகரிற கிடக்கக்கடனேதா என்றார். நினைப்பு மறப்பு-சகலகேவலங்கள், திரை எனமேல் வருதலால் படுகா கடலெயுணர்த்திற்று.

3 வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையுந் தெரியா
தளம்பெறுந் தருமும்பொத் தாவியோ டாக்கை
யானதை மாகவே யலக்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணுக்
காட்சியே சாக்ஷியே யறிஞர்
உளம்பெறுந் துணையே பொதுவினி னடிக்கு
முண்மையே யுள்ளவா றிதுவே.

இ-ள். வளம்பெறும் - வளம்பொருந்திய, ஞானவாரி - ஞானப்ரவாஹதை, வாய்மடுத்து-வாயாற்பருகி, மண்ணையும் விண்ணையும் தெரியாது-பூமியையும் ஆகாயத்தையு முணராமல், அளம்பெறும் தருமும்பு ஒத்து கடற்றுரும்பை யொத்து, ஆவியோடு ஆக்கை - உயிருடம்புகள், ஆகந்தமாக-இன்புருவாக, அலந்தேன் - வருந்தினேன், கள்ளம்பெறு - கள்ளங் கொண்ட, வஞ்ச செஞ்சினர்-வஞ்சக மனத்தினர், காணு-காணக்கூடாத, காட்சியே - திவ்ய சேவையே, சாட்சியே - சாக்ஷி பூதமே, அறிஞர் உள்ளம் பெறும் துணையே-ஞானிகள் நெஞ்சையிடமாகப் பெற்ற என்னுயிர்துணையே, பொதுவினில் நடிக்கும் - அம்பலத்தில் நடனஞ் செய்

கின்ற, உண்மையே-மெய்ப்பொருளே, உள்ள ஆறு இதுவே - உன்னிலை உள்ளபடி யிதுதான். எ-று.

வஞ்சகெஞ்சினர் காணுக்காட்சி என்றும், அறிஞர் உளம் பெறுத்துணை என்றும்கூறி, பொதுவினி னடிக்கு முண்மையே எனக்கூறினர், வஞ்ச கெஞ்சினர்க்கும் அறிஞர்க்கும் அங்ஙனமாயினும் தன்னளவிற் பொது நோக்குள்ளா ரென்பது தோன்ற. இது "வீட்டுக்கு வாயிலெனுந்தொடை சாத்து சொல்வேந்த பொது-வாட்டுக்கு வல்லனெருவற்கு ஞானவமுது தவி-காட்டுக்கிலாத குடர்நோய் நினக்கு முன்னல்கினுமென் - பாட்டுக்கு நீயுமவனு மொப்பீரெப்படி யினுமே" எனப்பிறர் கூறுதலானு முணர்க.

4 உள்ளமே நீங்கா வென்னெவா வாவென்
மூலப்பிலா வானந்த மான
வெள்ளமே பொழியுங் கருணைவான் முகிலே
வெப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே தூரக்குந் தூவெளிப் பரப்பே
கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்
பாலிப்ப துன்னருட் பரமே.

இ - ள். உள்ளமே - என்மனோரூபமா யிருப்பவனே, நீங்கா என்னை - உன்னை விட்டுப்பிரியாத என்னை, வாவாவென்று-வருவாய் வருவாயென் றழைத்து, உலப்பு இல்லா-கெடுதலில்லாத, ஆனந்தமான - இன்பமாகிய, வெள்ளமே-மழையையே, பொழியும் - சொரிகின்ற, வான் - மேலாகிய, கருணைமுகிலே-கிருபாமேகமே, வெப்பு இல்லா-சூடில்லாத, தண் - குளிர் சசி பொருந்திய, அருள் விளக்கே-அருட்டீபமே, கள்ளம்-வஞ்சனையாகிய விருளை, தூரக்கும்-ஓட்டுகின்ற, தூ-பரிசுத்தமாகிய, வெளிப்பரப்பே-ஒளிப் பரப்பே, கரு எனக்கிடந்த-கர்ப்பமென்று சொல்லக்கிடந்த, பாழ் - சூனி யத்தன்மையுள்ள, மாயப்பள்ளம் வீழாது-மாயைக் கடலில் விழுந்தழியா மல், என்னைக்கரை ஏற்றிப் பாலிப்பது - என்னை முத்திக் கரையிலேற விட்டுப் பாதுகாப்பது, உன் அருள்பரம்-உன் திருவருட்குப்பாமாம்.எ-று.

உள்ளமே நீங்கா என்பதற்கு, என் மனத்தைவிட்டுப் பிரியாதிருந்து கொண்டு என்றுரைத்தலும் கூடும். உலகவிளக்கை வேறுபடுத்த வெப்பி லாத் தண்ணருள் விளக்கே யென்றார். மாயப்பள்ளம் என்றது பிறவியை யாதலால், கரையென்றது முத்தியாதல் ,பெறப்பட்டது, முத்தி-வீடுகை. பிறவிச்சிறையை விட்டொழிதல் என்பதாம். மோக்ஷம், வீடு என்பனவும் இப்பொருளனவே.

5 பரம்பர மாகிப் பக்குவம் பழுத்த
பழவடி யார்க்கருள் பழுத்துச்
சுரந்தினி திரங்குந் தானகற் பகமே
சோதியே தொண்டனே னின்னை
யிரந்துநெஞ் சுடைந்து கண்டுயில் பெறுமை
லிருந்தது மென்கணி லிருட்டைக்
கரந்துநின் கண்ணுற் றுயில்பெறல் வேண்டிக்
கருதினேன் கருத்திது தானே.

இ-ள். பரம் பரம் ஆகி-மேன்மையினு மேன்மையாகி, பக்குவம் பழுத்த-பக்குவ முதிர்ந்த, பழ அடியார்க்கு - பழமையாகிய தொண்டர்க்கு, அருள் பழுத்து-அருட்கனி பழுத்து, சுரந்து இனிது இரங்கும் - இன்பத் தேன் சுரந்து இனிதாக இரங்குகின்ற, தான கற்பகமே-கொடையிற் சிறந்த கற்பகத்தருவே, சோதியே-ஒளியே, தொண்டனேன் - தொழும்பனாகிய நான், நின்னை இரந்து-உன்னைப் பிரார்த்தித்து, நெஞ்சு உடைந்து - (நீ என் பிரார்த்தனைக் கிரங்காமையால்) நெஞ்சங் கலங்கி, கண் துயில் பெறுமல் இருந்ததும் - கண்ணுறக்கங்கொள்ளா திருந்ததையும், என்கண்ணில் இருட்டைகரந்து-என்கண்ணிலுள்ள இருளையும்மறைத்து நின்கண்ணால்-உன் (திருவருட்) கண்கொண்டு, துயில்பெறல்-துயில்கோடலை, வேண்டி-விரும்பி, கருதினேன்-நினைத்தேன், கருத்து இதுதான் - என்னுள்ள கருத்திதுவே. எ று

மேல்கற்பகம் என வருதலைநோக்கி அருள் பழுத்து என்பதற்கு அருட்கனிபழுத்து என்றுரைக்கலாயிற்று. பக்குவம் பழுத்தமை யுணர்த்தற்கருவி சோதியாயிற்று. பழவடியார் என்றார், சீவாகளெல்லாம் அநாதியே இறைவற் கடிமைகள என்னுமுறைமை நோக்கி. பக்குவம்பழுத்தலாவது-தீவிரதர பகருவதையடைந்திருத்தல.

6 - கருத்திலுட் கருத்தா யிருந்துநீ யுணர்த்துங்
காரணங் கண்டுசும் மாதான்
வருத்தமற் றிருந்து சுகம்பெரு வண்ணம்
வருந்தினேன் மதியின்மை தீர்ப்பாய்
ஒருத்தரா ருளப்பா டுணர்பவர் யாவ
ருலகவர் பன்னெறி யெனக்குப்
பொருத்தமோ சொல்லாய் மௌனசற் குருவே
போற்றிநின் பொன்னடிப் போதே.

இ-ள். கருத்திலுள் கருத்தாய் இருந்து - அறிவுக்கறிவாயிருந்து, நீ உணர்த்தும் காரணம்கண்டு - நீயறிவிக்குங காரணத்தைநோக்கு, சும்மா

வருத்தம் அற்று இருந்து சும்மா வருத்த மில்லாமலிருந்து, சுகம் பெரு வண்.ணம் - இன்பமடையாத வகையாய், வருந்தினேன் - வருத்தமடைந் தேன், மதியின்மை-என அறிவின்மையை, தீர்ப்பார்-நீக்குவாராகிய, ஒருத் தர்-ஒப்பாறரேர், ஆர்-யார், உள்ளப்பாடு-என் சித்தாகுலததை, உணாபவர் யாவர்-அறிவாா யார், உலகவர்-லோகத்தாருடைய, பல்நெறி-பலமார்க்கங் கள், எனக்குப் பொருத்தமோ-எனக்குப் பொருத்தமாகுமோ, சொல்லாய்-சொல்லுவாய், மௌன சற்குருவே-மௌன நிலையையுடைய சதாசாரியனே, நின் பொன்னடிப்போது-நின் திருவடித் தாமரைகட்கு, போற்றி - நமஸ் காரம். எ-று.

உலகத்தாருடைய பலவழிகள் எனக்குப் பொருந்தவில்லை, என்னறி யாமையை நீகி யாள்வா ரொருவரு மிலர், ஆதலால், நமஸ்கரிக்கிறேன், என்னறியாமையை நீக்கியாளவேண்டு மென்பதாம்.

7 அடியெனு மதுவு மருளெனு மதுவு
மறிந்திடி னிர்க்குண நிறைவும்
முடியெனு மதுவும் பொருளெனு மதுவு
மொழிந்திடிற் சுகமன மாயைக்
குடிகெட வேண்டிற் பணியற நிற்றல்
குணமெனப் புன்னகை காட்டிப்
படிமிசை மௌனி யாகிநீ யாளப்
பாக்கிய மென்செய்தேன் பரனே.

இ-ள். அடியெனும் அதுவும் - ஆதியென்று சொல்லப்படுகிற அந்தப் பொருளும், அருள் என்னும் அதுவும்-அருளென்று சொல்லப்படுகிற அந்தப்பொருளும், அறிந்திடின்-அறியுமிடத்து, நிர்க்குண நிறைவும்-நிர்க்குண வஸ்துவின் பூர்ணதவமும், அடி எனும் அதுவும்-அந்தம் என்று சொல்லப் படுகிற அந்தப் பொருளும், பொருள் என்னும் அதுவும்-(இவைகளற்ற விடத்துக் கோசரிகிற) பரம்பொருள் என்று சொல்லப்படுகிற அந்தப் பொருளும், மொழிந்திடின் -சொல்லுமிடத்து, சுகம் மன்ன - இன்பம் பொருந்தவேயாம், மாயை குடிகெட வேண்டின்-மாயையானது குடிவிட் டோடவிரும்பினால், பணி அற நிறறல் தொழிலற நிற்பதே, குணம் என-குணமாமென்று சொல்லி, புன்னகை காட்டி-புன் முறுவல் செய்து, படி மிசை-உலகின்மேல், மௌனியாகி-மௌனகுருவாகிவந்து, நீ ஆள-நீ என்னைத் தடுத்தாட்கொள்ள, என்பாக்கியம் செய்தேன்-என்னபாக்கியம் பூர்வத்தில் பண்ணினேன், பரனே-மேலானவனே. எ-று.

அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறிந்திடின் நிர்க்குண நிறைவு, முடியெனு மதுவும் பொருள் எனு மதுவும் ஒழிந்திடின் சுகம், மனமாயைக் குடிகெடவேண்டின் பணி அற நிற்றல் குணம், என மூன்றுதொட்டாகப் பிரித்து, முறையே முதற்பொருளையும் அப்பொருளின் அருளையும் அறியின் நிர்க்குண நிறைவுண்டாம், அந்தத்தையும் அந்தத்திற் கிடைக்கும் அழியாப்பொருளையும் வேறுபடுத்த லொழியின் சுகமுண்டாம், மனத்தின் கட்குடி கொண்டிருக்கும் மாயையானது கெட்டொழிய வேண்டினால் தொழிலற நிற்பதே குணம், எனப்பொருளுரைத்தலுங்கூடும். பணி அற நிற்றல் என்றது சும்மாவிருத்தலே. என்செய்தேன் என இறந்தகாலத்தாற் கூறினமையால், பூர்வம் என்பது பெறப்பட்டது.

8 என்செய லின்றி யாவுநின் செயலென்
றெண்ணுவே னெஞ்வொரு காலம்
புன்செயன் மாயை மயக்கினென் செயலாப்
பொருந்துவே னஃதொரு காலம்
பின்செயல் யாது நினைவின்றிக் கிடப்பேன்
பித்தனே னன்னிலை பெறநின்
றன்செய லாக முடித்திடல் வேண்டுஞ்
சச்சிதா னந்தசற் குருவே.

இ-ள். என் செயல் இன்றி-என்செயலில்லாமல், யாவும்-எல்லாம், நின் செயல் என்று - உன்செயலாமென்று, ஒவ்வொரு காலம் எண்ணுவேன்-மாயா மயக்க மொழிய நின்ற ஒவ்வொருகாலம் சிந்தியாநிற்பேன், அஃது-அதனை, ஒருகாலம்-ஒருகாலத்தில், புன் செயல்-புன் செய்கையையுடைய, மாயை மயகினின்-மாயா மயக்கத்தால், என் செயல் ஆ பொருந்துவேன்-என்செயலாகக்கொணடு அமைந்திரா நிற்பேன், பின்-அதன்மேல், செயல்-நின்செயல் என்செயல்களோ, யாதும்-சிறிதாயினும், நினைவு இன்றி-நினைத்தலில்லாமல், கிடப்பேன்-அசைவறக்கிடவா நிற்பேன், பித்தனேன்-(இவ்வாறு ஒருகாலைக் கொருகால் மாறுபடா நிற்பதனால்) பித்தனென்று அறிவுடையோராற் சொல்லப் பட்டுளேன், (ஆதலால்) நல் நிலைபெற-(இப்பெயர் எனக்கின்றி யொழிதற்கு காரணமாகிய) மேலான நிலையைப் பொருந்த, நின் தன் செயல் ஆக - உனது செய்கையாகிய ஆட்கோடல் உண்டாக, முடித்திடல் வேண்டும்-முடிவு செய்யத் தகும், சசிசிதாநந்த சற் குருவே-சசிதாநந்த ரூபியாகிய சதாசாரியனே. எ-று.

எண்ணுவேன், பொருந்துவேன், கிடப்பேன் என்பன ஈண்டு எதிர்வு கருதாது நிகழ்வு கருதி நின்றன. வேண்டும் என்பது தகுதிப்பொருட்டு.

9 குருவுரு வாகி மௌனியாய் மௌனக்
கொள்கையை யுணர்த்தினே யதனுற்
கருவுரு வாவ தெனக்கிலை யிந்தக்
காயமோ பொய்யெனக் கண்ட
திருவுருவாள ரனுபவ நிலையுஞ்
சேருமோ வாவலோ மெத்த
அருவுரு வாகி யல்லவாய்ச் சமய
மளவிடா வானந்த வடிவே.

இ-ள். குரு வுருவாகி-ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி, மௌனி ஆய்-(அதிலும்) மௌனியாகி யிருந்து, மௌனக் கொள்கையை-மௌன நிலையின் மேலான தன்மையை, உணர்த்தினே-எனக் கறிவித்தாய், அதனுல்-அந்தக் காரணத்தால், எனக்கு-அடியேனுக்கு, கரு வுரு ஆவது இல்லை - கருப்பத் தில் உருக்கோடல் இனி யில்லை, (ஆயினும்) இந்தக் காயமோ - இந்தச சரீரமோ, பொய் யெனக் கண்ட-பொய் யெனப் பிரத்தியக்ஷமாகக்கண்ட, திருவுருவாளர்-சிவானுபூதிச செல்வமே யுருவாகக்கொண்ட அறிஞரது, அநுபவ நிலையும்-ஆநந்தபோக நிலையும், சேருமோ-எனக்குச சித்திக்குமோ, ஆவலோ மெத்த - (அவ்வநுபவநிலை சேருமோவென்கிற) பேராசையோ மிகுதியாயிருக்கின்றது, அரு உரு ஆகி-அருவுருவங்களாகி, அல்ல ஆய்-அவைக ளல்லவாகி, சமயம்-சமயநூல்களால், அளவு இடா - அளவுபடுத் துரைக்கக்கூடாத, ஆநந்தவடிவே-இன்ப வுருவே. எ-று.

குருவுருவாதல், மௌனி ஆதல், மௌனக்கொள்கையை யுணர்த்துதல் என்பன முறையே ஒன்றற்கொன்றேறற்ற முள்ளனவாதலால், இது சமய மளவிடா வானந்த வடிவாயிற்று.

10 வடிவிலா வடிவாய் மனநினை வுறைகா
மார்க்கமாய் நீக்கருஞ் சுகமாய்
முடிவிலா வீட்டின் வாழ்க்கைவேண் டிணர்க்குன்
மோனமல் லால்வழி யுண்டோ
படியிரு ளகலச சின்மயம் பூத்த
பசுங்கொம்பை யடக்கியோர் கல்லா
லடியிலே யிருந்த வானந்த வரசே
யன்பரைப் பருகுமா ரமுதே.

இ-ள். வடிவு இலா வடிவு ஆய் - உருவிலா வுருவாகி, மன நினைவு அணுகா மார்க்கம் ஆய்-மனக்கருத் தணுகபெறுத நெறியாகி, நீக்கு அரு சுகம் ஆய்-இடையீடில்லாத இன்பமாகி, முடிவு இலா-நாசம் இல்லாத,

வீட்டின் - மோக்ஷ நிலையின், வாழ்க்கை - வாழ்ச்சியை, வேண்டினர்க்கு-விரும்பினோர்க்கு, உன்மோனம் அல்லால்-உன் மௌன நிலையே வழியாவ தன்றி, வழி உண்டோ-(வேறு) மார்க்க முளதோ, படிஇருள் அகல-உல கத்திலுள்ள அஞ்ஞான விருள் ஒழிய, சின்மயம் பூத்த பசுங்கொம்பை அடக்கி-ஞான மயமாகிய மலர்களைப்பூத்த பசுமையாகிய கொடியை யுள் ளடக்கிக்கொண்டு, ஓர் கல்லால் அடியிலேயிருந்த-ஒருகல்லால மரநிழலில் தக்ஷிணமூர்த்தமாய் எழுந்தருளியிருந்த, ஆனந்தஅரசே-இன்பத்தையுரவும் அருள்வேந்தே, அன்பரை - பத்திசெய்வாரை - பருகும்-பருகுகின்ற, ஓர் அமுதே-அரிய அமுதமே. எ-று.

படி-படிந்த எனினுமாம். படியிருள் அகல சின்மயம் பூத்த பசுங் கொம்பு என்பதற்கு, அஞ்ஞானந்தகாரம் நீங்க, உலகங்களை, ஞானவடி விஞலுண்டாக்கிய பசும் பூங்கொம்பையொப்பாளாகிய வுமாதேவி என்று ரைப்பினுமாம். அடக்கி என்றது மறைத்தென்றவாறு. தக்ஷிணமூர்த்தி யாகிக்கல்லாலி னீழலிலெழுந்தருளியிருந்து சநகாதி நால்வர்க்குபதேசித்த காலத்துத தனித் திருந்தமை தோனற இவ்வாறு கூறினர். "சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதா, மிவள் பிரிந் திடினி யங்கு தற்குமரி தரிதெனுமறை" என்பதனால், அகற்றியென்னுது அடக்கி என்றார். அன்பரை - அன்பரால் எனவும், அன்பரை என்பதில் ஐசாரியையென் றெழுந்து அன்பர் பருகும் எனவும் கூறலாம். பருகுதல் தன்வயமாக்கிக்கோடல்.

சொல்லற்கரிய.

1 சொல்லற் கரிய பரம்பொருளே
சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலி லெனை
விட்டெங் கொளித்தாயா கெட்டேன்
கல்லிற் பசியகா ருரித்துக்
கடுகிற் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய வந்தகனுர்க்
காளாக் கினையோ வறியேனை.

இ-ள். சொல்லற்கு அரிய-(துறவறமாகிய காரணவகையாற் கூறப் படுவதன்றி) இலக்கண வகையாற் கூறுதற்கரிய, பரம்பொருளே-மேலா கிய பொருளே, சுகவாரிதியே - ஆநந்த சாகரமே, சுடர்க் கொழுந்தே-சோதிக் கொழுந்தே, வெல்லற்கு அரிய-(உன்னை யடையாதவர்களால்) வெல்லற்கரிதாகிய, மயலில்-மயக்கத்தில், என்னை விட்டு என்னை விடுத்து,

எங்கு ஒளித்தாய்-எவ்விடத்து மறைந்தனை, கல்வில்-கல்லினிடத்து, பகிய நார் உரித்து-பசுமையாகிய நாரை யுரித்து, கடுகில்-(சிறிய) கடுகினிடத்து, பெரியகடல் அடைக்கும்-பெரிய கடலை யடைத்தலில் வலனுன, அல்லின் கரிய-இரவினுங் கரியனுன, அந்தகனூர்க்கு-யமனூர்க்கு, ஆளாக்கினேயோ-அடிமையாக்கினையோ, அறியேன்-உணர்கிலேன். எ-று.

ஆ கெட்டேன் என்பது வியப்புப் பொருடருவதோ நிடைச்சொல் கல்வில்நார் உரித்தல் முதலியன சமர்த்தனென்பதை அறிவுறுத்தற்கெழுந்தன. அல்லின் என்பதில் இன் ஒப்புப்பொருளெனக் கோடலுமாம்.

2 அறிவிற் கறிவு தாரகமென்
றறிந்தே யறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய்
நின்ற நிலையுந் தெரியாது
குறியற் றகண்டா தீறமயக்
கோதி லமுதே யெனக்குருகிப்
பிறிவற் றிருக்க வேண்டாவோ
பேயேற் கினிநீ பேசாயே.

இ-ள். அறிவிற்கு - சிவபோதத்திற்கு, அறிவு - சிவபோதம், தாரகம் என்று அறிந்து-ஆதாரமென்று துணர்ந்து, அறிவோடு அறியாமை நெறியில் புகுதாது-அறிவறியாமைகளாகிய மார்க்கத்திற் பிரவேசியாமல், ஓர் படித்தாய்-ஒரு தன்மைத்தாகி, நின்ற நிலையும்-நின்ற நிலையையும், தெரியாது-உணர்கிலாது. குறி அற்று-அடையாளமற்று, அகண்ட அதீதமயம் அகண்டாதீதமயமாகிய, கோது இல்-குற்றமற்ற, அமுதே - அமிர்தமே, நின்னை குறுகி - உன்னையடைந்து, பிரிவு அற்று இருக்கவேண்டாவோ-ங்கமற்றிருக்க வேண்டாவோ, பேயேன் கு-பேயேனுக்கு, இனி-இனியாயினும், நீ பேசாய்-நீ சொல்லாய் எ-று.

இதுவரையில் சொல்லாதொழிந்தனையாயினும், உனக்காட்பட்ட இக்காலத்தாயினும் சொல்லாய் என்பது கருத்து. இனியென்றது நிகழ்வின் கண்ணது. இது "பண்டறியேனா கூறறென் பதனை யினிநி யறிந்தேன்-பெண்டகையாற் பேரமர்க் கட்டு" என்னுந் திருக்குற ளுரையால் விசதமாகும்.

3 பேசா வனுபூதியை யடியேன்
பெற்றுப் பிழைக்கப் பேரருளால்
தேசோ மயந்தந் தினியொருகால்
சித்தத் திருளைத் தீர்ப்பாயோ

பாசா டவியைக் கடந்தவன்பர்
பற்று மகண்டப் பரப்பான
ஈசா பொதுவில் நடமாடும்
இறைவா குறையா வின்னமுதே.

இ-ள். பாச அடவியை கடந்த-ஆசையாகிய காட்டைக் கடந்த, அன்பர்-பத்தர்கள், பற்றும் - பற்றுகின்ற, அகண்டப்பரப்பு ஆன - கண்டிக்கப் படாதபெரும் பரப்பாகிய, ஈசா-ஈசனே, பொதுவில்-அம்பலத்தில், நடம் ஆடும்-நடிக்கின்ற, இறைவா-தலைவனே, குறையா-(கொள்ளக்) குறையாத, இன் அமுதே-இனிய அமிர்தமே, பேசா அநுபூதியை-பேசாமைக் காரணமாகிய சிவானுபூதியை, அடியேன் பெற்று பிழைக்க - அடியேன் பெற்று உய்யுமாறு, பேரருளால் - பெருங்கருணையால், தேசோமயம் தந்து-உனது தேஜோமயத்தைக் கொடுத்து, இனி ஒருகால்-இனியோர் தரம், சித்தத்து இருளும் தீர்ப்பாயோ-என் மனவிருளையும் நீக்குவாயோ. எ-று.

"ஆசா நிகளந்துகளா யினபின்-பேசா வநுபூதிபிறந்ததுவே" என்றார் மேலோரும். இருளொழிவுக்கு ஒளிவேண்டப் படுதலால், தேசோமயந் தந்து 'சித்தத்திருளுந் தீர்ப்பாயோ' என்றார்.

4 இன்பக் கடலிற் புகுந்திடுவா
னிரவும் பகலுந் தோற்றுமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி
யண்ணு வரசே யெனக்கூவிப்
பின்புற் றழுஞ்சே யெனவிழிநீர்
பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட் டகல்வேனே
சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே.

இ-ள். சொரூபானந்தம் ஸ்வஸ்வரூபானந்தமாகிய, சுடர்க்கொழுந்தே-ஒளிசிகையே, இன்பக் கடலில் - ஆநந்த சாகரத்தில், புகுந்திடுவான்-பிரவேசித்ததற்பொருட்டு, இரவும் பகலும் தோற்றுமல்-அல்லும் பகலும் காணுமல், அன்பின்-அன்பினால், கரைந்து கரைந்து உருகி-சரீரந்தளர்ந்து மனமிளகி, அண்ணு அப்பா, அரசே-அரசனே, எனகூவி-என்றழைத்து, பின்பு உற்று அழும் - பின்னொடர்ந்தழாநின்ற, சேய் என-குழந்தையைப்போல, விழி நீர்-கண்ணீரை, பெருகி பெருக்கி-மிகவும் பெருகசெய்து, பித்து ஆகி பித்தனாகி, துன்பக் கடல்விட்டு-துன்பக்கடலிலிட்டு, அகல்வேனே. நீங்குவேனே. எ-று.

துன்பக கடல்விட்டு இன்பக்கடலிற் புகுவேனே என்பது கருத்து. இன்பக்கடலைப் பற்றுகின்று துன்பக்கடல்விட் டகல்வேனே வெனினு மாம்.

5 கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக்
கோவே மன்றிற் கூத்தாடற்
றெழுந்த சுடரே யிமயவரை
யென்றுய் கண்ணுக் கினியானே
தொழுந்தெய் வமுநீ குருவுநீ
துணைநீ தந்தை தாயுநீ
அழுந்தும் பவநீ நன்மையுநீ
யாவி யாக்கை நீதானே.

இ-ள். கொழுந்து திகழ்-கொழுந்துவிட்டு விளங்குகின்ற, வெள்பிறை-வெள்ளிய பிறையை யணிந்த, சடிலம் - சடாபாரத்தையுடைய, கோவே-இறைவனே, மன்றில்-அம்பலத்தில், கூத்தாடற்கு - நடஞ்செய்தற் பொருட்டு, எழுந்த (ஆநந்தக்கடலில்) தோற்றஞ்செய்த, சுடரே-ஞான சூரியனே, இமயவரை-இமயமலையிற் பிறந்த, என் தாய்-என் தாயாகிய வுமாதேவியின், கண்ணுக்கு-கண்களுக்கு, இனியானே - இனிமையா யிருப்பவனே, தொழும் தெய்வமும் நீ-அடியேனால் தொழப்படுகின்ற கடவுளும் நீயே, குருவும் நீ ஆசாரியனும் நீயே, துணை நீ-சகாயமும் நீயே, தந்தை தாயும் நீ-தந்தை தாய்மாரும் நீயே, அழுந்தும் பவம் நீ-அடியேன் அழுந்திக்கிடக்கிற பவரூபம நீயே, நன்மையும் நீ-நன்மையும் நீயே, ஆவி யாக்கை நீதான்-உயிருடம்புகளும் நீயே. எ-று.

"எழுந்த சுடரே என்றது" "இன்பப் புணரி யாதவனுய் நாளும் தோன்றிய விமலபோத சொரூபம்" எனப் பிறர் கூறுதலேக்கிலியன்க.

6 தானே யகண்டா காரமயந்
தன்னி லெழுந்து பொதுநடஞ்செய்
வானே மாயப் பிறப்பறுப்பான்
வந்துன் னடிக்கே கரங்கூப்பித
தேனே யென்னைப் பருக வல்ல
தெள்ளா ரமுதே சிவலோகக்
கோனே யெனுஞ்சொன் னினதுசெவி
கொள்ளா தென்னே கூறுயே.

இ-ள். தானே-தானுகவே, அகண்டாகார மயம தன்னில் எழுந்து-அகண்டாகாரரூபமாகத் தோன்றி, பொதுநடஞ் செய்வானே-ஐந்தொழிற் கும் பொதுவாகிய நடனஞ்செய்பவனே, மாயப்பிறப்பு அறுப்பான்-மாயப்

பிறவியை யறுத்துக்கொள்வதற்கு, வந்து-வந்து, உன் அடிக்கே,உன் திரு வடிகளுக்கே, கரம் கூப்பி-கைகுவித்து, தேனே - தேனே, என்னே பருக வல்ல-என்னைப் பருகவல்லதான, தெள் - தெளிந்த, ஆர் அமுதே-அரிய அமுதமே, சிவலோகக்கோனே-சிவபுரத்துக் கிறைவனே, என்னும்-என்று ஞானழைக்கிற, சொல்-சொல்லே, நினது செவி கொள்ளாது - உன் திருச் செவியி லேற்றுக்கொள்ளாதிருப்பது, என்னே-என்ன காரணத்தினாலோ, கூறாய்-சொல்லாய். எ-று.

பொதுநடஞ் செய்வானே, ஆரமுதே, சிவலோகக்கோனே என்றிவ் வாறு பலபடியாக ஞானழைக்கிற சொற்கள் உன் திருசெவியிற் புகப்பெரு மைக்குக் காரணம் என்னே வென்பதாம்.

7 கூறு நின்ற விடர்க்கவலைக்
குடும்பக் கூத்துட் டுளைந்துதடு
மாறு நின்ற பாவியைநீ
வாவென் றழைத்தா லாகாதோ
நீறூர் மேனி முக்கணுடை
நிலமா வடியார் நினைவினிடை
யாறாய்ப் பெருகும் பெருங்கருணை
அரசே யென்னை யாள்வானே.

இ-ள். நீறு ஆர் மேனி-திருவெண்ணீறு நிறைந்த திருமேனியையும், முக்கண்-மூன்று கண்களையும், உடை - உடைய, நிமலா - நிர்மலனே, அடி யார் நினைவின் இடை-அடியவர் மனத்தின்கண், யாறு ஆய் பெருகும்-ஆறு கிப் பெருகுகின்ற, பெரு கருணை - பெருங் கருணையையுடைய, அரசே-இறைவனே, என்னை ஆள்வானே - என்னை யாண்டருள்வோனே, கூறு நின்ற-பலவகையாகச சொல்லப்படுகின்ற,இடர்-பிறவித் துன்பத்திற் கேது வாகிய, கவலை-வியசனத்தைத் தருகின்ற, குடும்பம் - சம்சாரமாகிய, கூத் துள்-கூத்தாட்டில், துளைந்து - படிந்து, தடுமாறுகின்ற - தடுமாறுகின்ற, பாவியை பாபிஷ்டனாகிய வென்னை. நீ-நீயே, வாவென்று அழைத்தால்-வாவென்றழைத்தருளினால், ஆகாதோ-உனகடாததோ. எ-று.

பிறவித்துன்பங்கள் பலவகையானு முளவாதல்பற்றி, கூறுகின்ற என் பதற்கு, பலவகையாகச சொல்லப்படுகின்ற எனப் பொரு ளுரைக்கப்பட் டது. ஆகாதோ என்பதில் ஓகாரம் எதிர்மறை, ஆகும் எனப் பொருள் படுதலால்.

8 வானே முதலாம் பெரும்பூதம்
வகுத்துப் புரந்து மாற்றவல்ல
கோனே யென்னைப் புரக்குநெறி
குறித்தா யிலையே கொடியேனைத்
தானே படைத்திங் கென்னபலன்
றன்னைப் படைத்தா யுன்கருத்தை
நானே தென்றிங் கறியேனே
நம்பினேன் கண் டருள்வாயே.

இ-ள். வானே முதல் ஆம்-ஆகாயமே முதலான, பெரும் பூதம் வகுத்து-ஐம்பெரும் பூதங்களையும் படைத்து, புரந்து-காத்து, மாற்ற வல்ல-அழிக்கவல்ல, கோனே-தலைவனே, என்னைப் புரக்கும்நெறி-என்னைக்காக்கும் வழியை, குறித்தாய் இல்லையே-திருவுளம் பற்றினையில்லையே, கொடியேனைத்தானே படைத்து - கொடியேனைமாத்திரமே படைத்து, இங்கு என்னபலன் தன்னை படைத்தாய்-இவ்விடத் தென்னபலனைப்பெற்றாய், உன் கருத்தை-உன் திருவுள்ளக்கிடையை, நான்-அடியேன், ஏது என்றுயாதென்று, இங்கு அறியேன்-இங்குஅறிகிலேன், (ஆயினும்) நம்பினேன்-(என்னை உய்விக்கவல்லவன் நீயேயென்று) நம்பியிருக்கிறேன், கண்டு-(அந்த நம்பிக்கையை உன் முற்றறிவினால்) கண்டு-அருள்வாய்-கிருபை செய்யவேண்டும். எ-று.

வானே முதலாம் பெரும்பூதம் என்றது, அவற்றையும் அவற்றினுள வாக்கப்பட்ட, சராசர ஜீவராசிகளையுட்கொண்ட வுலகங்களையும், காரணத்தைக் கூறவே காரியமும் மடங்கு மாதலால் இவ்வாறு கூறினர்.

9 கண்டார் கண்ட காட்சியுநீ
காணுங் காணுக் கள்வனுநீ
பண்டா ருயிர்நீ யாக்கையுநீ
பலவாஞ் சமயப் பகுதியுநீ
எண்டோன் முக்கட் செம்மேனி
யெந்தாய் நினக்கே யெவ்வாறு
தொண்டாய்ப் பணிவ ரவர்பணிநீ
கூட்டிக் கொள்வ தெவ்வாறே.

இ-ள். கண்டார் - (யதார்த்தை யுள்ளவாறு) கண்ட அறிஞர்கள், கண்ட-கண்ட, காட்சியும நீ-காட்சிப்பொருளும் நீயே, காணுங்-அவ்வாறு காணுதவர்களாகிய பொய்யர், காணு-காணுத,கள்வனும் நீ-கள்வனும்நீயே, பண்டு-தொன்மையாக, ஆர்-பொருந்திய, உயிர் நீ-உயிரும்நீயே, யாக்கையும் நீ-உடலும் நீயே, பல ஆம்-பலவாகிய, சமயப் பகுதியும் நீ-சமயப்பாகு

பாகளும் நீயே, (ஆதலால்) எண்தோள்-எட்டுத்தோள்களையும், மூக்கண்-மூன்று கண்களையும், செம்மேனி-செம்மையாகிய திருமேனியையுமுடைய, எந்தாய்-எந்தையே, நினக்கு-உனக்கு, எவ்வாறு-எவ்விதம், தொண்டு ஆய் பணிவர்-தொண்டாய்ப்பணிவார் (பணிவது), எவ்வாறு-எவ்விதம், அவர் பணி-அவரது பணியை, நீ ஏற்றுக்கொள்வது-நீ ஏற்றுக்கொள்வது, எவ்வாறு-எவ்விதம். எ-று.

எல்லாம் நீயேயா யிருத்தலால், தொண்டர் உன்னைப் பணிவதெவ்வாறு, அவர் பணியை நீ யேற்றுக்கொள்வது எவ்வாறு என்பது கருத்து.

10 சூட்டி யெனதென் றிடுஞ்சுமையைச்
சுமத்தி யெனையுஞ் சுமையாளாக்
கூட்டிப் பிடித்து வினைவழியே
கூத்தாட் டினையே நினதருளால்
வீட்டைக் கருது மப்போது
வெளியா முலக வியப்பனைத்தும்
ஏட்டுக் கடங்காச் சொப்பனம்போ
லெந்தா யிருந்த தென்சொல்வேன்.

இ-ள். சூட்டி-ஏற்றுக்கொண்டு, எனது என்றிடும் சுமையை-எனது என்று மமகரித்திருக்கிற உடற்சுமையை, சுமத்தி-சுமக்கச்செய்து, எனையும்-அடியேனையும், சுமை ஆள் ஆ கூட்டிப்பிடித்து சுமையெடுக்குமாளாகச் சேர்த்துப் பிடித்து, வினைவழியே-திருவினையின் வழியாகவே, கூத்தாட்டினையே - கூத்தாடுவித்தனையே, நினது அருளால் - உன் திருவருளால், வீட்டை கருதும் அப்போது - மோக்ஷத்தை விரும்பும் அக்காலத்தில், வெளியாம் - வெளிப்படையாகத் தோன்றுகின்ற, உலக வியப்பு அனைத்தும் - உலக விவகார அதிசயங்களெல்லாம், ஏட்டுக்கு அடங்கா - ஏட்டிலெழுதுதற் கடங்காத, சொப்பனம்போல் இருந்தது-கனவையொத் திருந்ததை, எந்தாய்-எந்தையே, என்சொல்வேன-என்னென்று சொல்ல வல்லேன். எ-று.

"இருவினைப பாசக் கயிற்றின்வழி யாட்டுவிப்பானும்" என்ற அறிஞர் வாக்கியத்தையடியொற்றி, வினைவழியே கூத்தாட்டினை என்றார்.

வம்பனேன்.

1 வம்பனேன் சுவ்வளங் கண்டு
மன்னருள் வெள்ள நாய
உம்பர்பா லேவல் செய்யென்
றுணர்த்தினை யோகோ வானேர்

தம்பிரா னேநீ செய்த
தயவுக்குங் கைம்மா றுண்டோ
எம்பிரா னுய்ந்தே னுய்ந்தே
னினியொன் றுங் குறைவி லேனே.

இ-ள். வம்பனேன் - வம்பனேனது, கள்ளம் - கபடத்தை, கண்டும்-கண்டுவைத்தும், மன்-நிலைபேறுள்ள, அருள் வெள்ளர் ஆய-அருட் கடலினராகிய, உம்பர்பால்-தேவரிடத்தில், எவல் செய் என்று-ஏவல் செய்வாயாக வென்ற, உணர்த்தினை-அறிவுறுத்தினாய், ஓகோ-ஆசசரியம், வானோர் தம்பிரானே - தேவர்களுக் கிறைவனே, நீ செய்த தயவுக்கு-நீ செய்த கிருபாகாரியமாகிய உதவிகளும், கைம்மாறு உண்டோ-அடியேன் செய்யக்கிடந்ததாகிய பிரதியுபகாரமுளதோ, எம்பிரான் - எம்மிறைவனே, உய்ந்தேன் உய்ந்தேன்-பிழைத்தேன் பிழைத்தேன், இனி ஒன்றும் குறைவு இலேன்-இனிசசிறிதும் குறையற்றவ னானேன். எ-று.

கண்டும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. "பிரமமே ஞானியாம்" என்பதனை யுட்கொண்டு உம்பர் என்றார். தயவு என்றது அதன் காரியமாகிய வுதவிகளை யுணர்த்தி நின்றது. வானோர் தம்பிரானே யென்றவர் எம்பிரான் என மீட்டுங் கூறினது, வானோர்க்குத் தலைவராதலே யன்றி எமக்குத் தலைவராகார் எனப்பொருடருமோவென் றுசசங்கித்தென்க.

2 குறைவிலா நிறைவாய் ஞானக்
கோதிலா னந்த வெள்ளத்
துறையிலே படிந்து மூழ்கித
துளைந்துநான் றேன்று வாறுள்
ளுறையிலே யுணர்த்தி மோன
வொண்சுடர் வைவா டந்த
இறைவனே யுனைப் பிரிந்திங்
கிருக்கிலே னிருக்கி லேனே.

இ-ள். குறைவு இல்லாநிறைவு ஆய்-குறைவற்ற நிறைவாகி, கோது இல்-சூற்றமற்ற, ஞான ஆனந்தவெள்ளத்துறையிலே-ஞானானந்தப்பெருக்கின் வழியில், படிந்து மூழ்கி-முழுகிப்படிந்து, துளைந்து-அழுந்தி, நான் தோன்று ஆறு-நான் தோன்றுதவகை, உள்ளுறையிலே உணர்த்தி-உள்ளுறை வகையா லறிவுறுத்து, ஒள்-ஒள்ளிய, சுடர் - ஞானவொளிபாகிய, வை-கூர்மையையுடைய, மோனவாள் - மௌனநிலையாகிய வாளை, தந்து-கொடுத்தருளிய, இறைவனே-தலைவனே, உன்னை பிரிந்து-உன்னை நீங்கி, இங்கு - இவ்விருடரு மாஞாலத்தில், இருக்கிலேன் இருக்கிலேன்-தங்கியிரேன் தங்கியிரேன். எ-று.

குறைவு இல்லா நிறைவு - எக்காலும் ஒருதன்மையாயுள்ள நிறைவு- படிந்து மூழ்கி துளைந்து என்றது தான் ரூன்ரூமைக்கு. உள்ளுறை. சிலேடைவகையா லுட்கருத்தை வெளிப்படுப்பது.

3 இருநில மாதி நாத
மீறதா மிவை கடந்த
பெருநில மாய தூய
பேரொளிப் பிழம்பாய் நின்றும்
கருதரு மகண்டா னந்தக்
கடவுணின் காட்சி காண
வருகவென் றழைத்தா லன்றி
வாழ்வுண்டோ வஞ்ச னேற்கே.

இ-ள். இரு நிலம் ஆதி-பெரிய சிருதுவி தத்துவ முதல், நாதம் ஈறது ஆம்-நாததத்துவ மிறுதியாகவுள்ள, இவை - இவற்றை, கடந்த - கடந்து நின்ற, பெரு நிலம் ஆய-பெருநிலமாகிய, தூய-பரிசுத்தமான, பேரொளிப் பிழம்பாய் நின்றும் - பெரிதாகிய ஒளித்திரளா யிருப்பினும், கருது அரும்-நினைத்த லரிதாகிய, அகண்டானந்தம் - அகண்ட சுகத்தைத் தருகின்ற, கடவுள்-கடவுளே, நின் காட்சி காண - உன் காட்சிகண் டெய்தற்பொருட்டு, வருகவென்று அழைத்தாலன்றி - வாவென்றென்னை யழைத்தா லல்லது, வஞ்சனேற்கு-வஞ்சனுகிய எனக்கு, வாழ்வுஉண்டோ-இன்பவாழ்வுளதோ, (இல்லை). எ-று.

நீபிருதுவிமுதல் நாததத்துவமீருகிய தத்துவத்தொகுதியைக்கடந்து நின்ருளிரும் பேரொளிப் பிழம்பாயினும் என்னை வாவென்றதை கூவி யாண்டருளினல்லது எனக்கு இன்பவாழ் வுளதாமோ என்பது கருத்து.

4 வஞ்சனை யழுக்கா றாதி
வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மேன்மேல்
நெக்குநெக் குருகப் பண்ணி
அஞ்சலி செய்யுங் கையு
மருவிநீர் விழியு மாகத்
தஞ்சமென் றிரங்கிக் காக்கத
தற்பரா பர முனக்கே.

இ - ள். தற்பரா - தற்பரனே, வஞ்சனை - கபடமும், அழுக்காறு ஆதி - பொருமைமுதலிய குணங்களே, வைத்திடும் - இடப்பட்டிருக்கிற, பாண்டம் ஆன - பாத்திரமாகிய, நெஞ்சனை - மனத்தை யுடையவனுன

என்னை, வலிதின்-பலாத்காரமாக, மேன்மேல் - மேலுமேலும், நெக்கு நெக்கு-நெகிழ்ந்து நெகிழ்ந்து, உருகப்பண்ணி-உருகும்படிசெய்து, அஞ் சலி செய்யும் கையும்-கூப்புங்கையும், அருவி நீர் விழியும் ஆக-அருவியாறு போல நீர் பாயும் கண்களுமாகப்பண்ணி, தஞ்சம் என்று இரங்கி - நாமே யாதாரமென் றிரங்கி, காக்க-காப்பாற்ற, உனக்கேபரம் - உனக்கே பார மாகும். எ-று.

வஞ்சனை பொருமை முதலியவைகட் கிடனாயிருக்கும் என்மன முரு கப்பண்ணி என்னைக் காத்தல் உன் கடன்மையாம் என்பதாம்.

5 உனக்குநா னடித்தொண் டாகி
யுன்னடிக் கன்பு செய்ய
எனக்குநீ தோற்றி யஞ்சே
லென்னுநா ளெந்த நாளோ
மனக்கிலே சங்க ரேர்ந்த
மாதவர் கிரண்டற் றேங்குந்
தனக்குநே ரில்ல வொன்றே
சச்சிதா னந்த வாழ்வே.

இ-ள். மனக்கிலேசங்கள் தீர்ந்த-மலினமாகுலங்கள் நீங்கப்பெற்ற, மாதவர்க்கு-பெரிய தபோதனர்க்கு, இரண்டு அற்று ஓங்கும்-இரண்டென்ற லற் றேங்கிய, தனக்கு நேர் இல்லா-தனக்குச சமானமான வஸ்துவில் லாத, ஒன்றே ஒப்பற்ற பொருளே, சசசிதானந்த வாழ்வே - சசசிதானந்த ரூபமாகிய வாழ்வே, உனக்கு-தேவரீருக்கு, நான்-அடியேன், அடித்தொண் டாகி-அடித்தொண்டனாகி, உன் அடிக்கு-உன் திருவடிகளுக்கு, அன்பு செய்ய-அன்புசெய்யும்படி, எனக்கு-அடியேனுக்கு, நீதோற்றி-நீவெளிப்பட் டுத் தோன்றி, அஞ்சேல்-பயப்படாதே, என்னும் நாள்-என்று சொல்லுகிற நாள், எந்த நாள்-எந்நாளோ. எ-று.

அடித்தொண்டு-பழமையாகிய தொண்டு. நான் உன் திருவடிகளுக் கன்புசெய்யும்படி நீ வெளிப்பட வந்து என்னை அஞ்சே லென்பது எக்கா லமோ என்பதாம்.

6 வாழ்வென வயங்கி யென்னை
வசஞ்செய்து மருட்டும் பாழ்ந்த
ஊழ்வினைப் பகுதி கெட்டிங்
குன்னையுங் கிட்டு வேலை
தாழ்வெனுஞ் சமய நீங்கித்
தமையுணர்ந் தோர்கட் கெல்லாம்

சூழ்வெளிப் பொருளே முக்கட்
சோதியே யமரரேறே.

இ-ள். தாழ்வு என்னும் - (அறிஞர்) தாழ்வென்று மதிக்கிற, சமயம் நீங்கி-சமயப் பற்றுவிட்டு, தமை யுணர்ந்தோர்கட்கு-தமது சொரூபத்தை யறிந்தவர்களுக்கு, எல்லாம்-எல்லாவகையானும், சூழ் - ஆராயப்படுகின்ற, வெளிப்பொருளே-வெள்ளிடைப்பொருளா யுள்ளவனே, முக்கண் சோதியே-மூன்று கண்களையுடைய தேஜோராசியே, அமரர் ஏறே-தேவாதிதேவனே, வாழ்வு என வயங்கி - வாழ்க்கையென்று விளங்கி, என்னை வசம் செய்து - என்னை வசிகரித்து, மருட்டும்-பிரமிக்கச் செய்கிற, பாழ்த்த-பாழாகிய, ஊழ்வினைப் பகுதிகெட்டு-ஊழ்வினைப் பகுப்பு நசித்து, இங்கு-இப்பிறப்பிற்றானே, உன்னையும் கிட்டுவேனே-உன்னையும் அடையப்பெறுவேனே. எ-று.

சமயங்களெல்லாம் உண்மை, இதுவோ அதுவோவென்று மயங்குதற் கேதுவாதலால், தாழ்வெனுஞ் சமயம் என்றார். ஊழ்வினையற்று இப்பிறவியிற்றானே உன்னையடையப் பெறுவேனே என்பதாம்.

7 ஏறுவாம் பரியா வாடை
யிருங்கலை யுரியா வெண்ணும்
நாறுநற் சாந்த நீறு
நஞ்சமே யமுதாக் கொண்ட
கூறுருங் குணத்தோ யுன்றன்
குரைகழல் குறுகி னல்லால்
ஆறுமோ தாப சோபம்
அகலுமோ வல்ல ருனே.

இ-ள். ஏறு-இடபம், வாம் பரி ஆ-தாவிச் செல்லும் குதிரையாகவும், இரு கலை உரி-பெரிய மானினது தோல், ஆடை ஆ - உடையாகவும், நீறு-திருவெண்ணீறு, என்றும் நாறும் - எக்காலும் பரிமளியாநின்ற, நல் சாந்தம் ஆ - நல்ல சந்தனமாகவும், நஞ்சமே - விடமே, அமுது ஆ - அமுதாகவும், கொண்ட - உகந்தருளின, கூறு அரு - சொல்லுதலருமையாகிய, குணத்தோய் - மங்கள குணங்களையுடையவனே, உன் தன்-உனது, குரை கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளை, குறுகின் அல்லால்-அடைந்தால் தவிர்வதன்றி, தாப சோபம் - (எனக்கு) முத்தாபத்தாலுண்டானவிடாய், ஆறுமோ - தணியுமோ, அல்லல் - துன்பமானது, அகலுமோ-நீங்குமோ. எ-று.

ஏறு முதலியவற்றை போக்யமாகக்கொண்டதற்குக் காரணம் மங்களனாதலால், "ஏறுவாம் பரியாவாடை யிருங்கலை யுரியாவெண்ணும்

நாலுநற் சாந்தநீரு நஞ்சமே அமுதாக்கொண்ட கூறருங் குணத்தோய்" என்றார். நான் உன் திருவடிகளே யடைந்தாலன்றி எனக்குண்டாயிருக் கிற முத்தாபவிடாய் தணியுமோ என்பதாம். முத்தாபம்-ஆதியாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தைவிகம் என்பன.

8 தானமுந் தவமும் யோகத்
தன்மையு முணரா வென்பால்
ஞானமுந் தெவிட்டா வின்ப
நன்மையு நல்கு வாயோ
பானலங் கவர்ந்த தீஞ்சொற்
பச்சிளங் கிள்ளை காண
வானவ ரிறைஞ்ச மன்றுள்
வயங்கிய நடத்தி னோனே.

இ-ள். பானலம் கவர்ந்த-பாலினது சுவையைக் கவர்ந்துகொண்ட, தீ சொல்-மதுரமாகிய சொல்லையுடைய, பச்சிளங்கிள்ளை - பசுமையாகிய இளங்கிளி போல்பவளாகிய உமாதேவியானவள், காண-கண்டுகளிக்கவும், வானவர் இறைஞ்ச-தேவர்கள் வணங்கவும், மன்றுள் - பொற்சபையில், வயங்கிய-விளங்கிய, நடத்தினோனே - நடனத்தையுடையவனே, தானமும்-கொடையையும், தவமும் தவத்தையும், உணரா-அறியாத, என்பால்-என்னிடத்தில், ஞானமும்-ஞானத்தையும், தெவிட்டா-தெவிட்டாத, இன்பம்-சுகமாகிய, நன்மையும் - நன்மையையும், நல்குவாயோ - கிருபைசெய்வாயோ. எ-று.

தானம் என்றது கொடையினேற்றத்தை. தவம் என்றது தவத்தானுளவாகின்ற இம்மைமறுமைப் பயன்களே. பச்சிளங்கிள்ளை-நிறத்தானும் மொழியானும் வந்த உவமையாகுபெயர். "பசைப் பசுங்கொடி" யென்றார் மேலோரும். பசைசை இளங்கிள்ளை யெனற்பாலது பச்சிளங் கிள்ளை யென நின்றது. "பசுந்திர முற்றெழுக" எனச செய்யுளினும், பச்சரிசி என வழக்கினும் இவ்வாறு வருதல் காண்க. பொற்சபையில் நடிப்பவனே, எனக்குஞானாநந்தங்களைக் கிருபை செய்வாயோ என்பதாம்.

9 நடத்தியிவ் வுலகை யெல்லாம
நாதநீ நிறைந்த தன்மை
திடத்துட னறிந்தா னந்தத்
தெள்ளமு தருந்தி டாதே
விடத்திர ளனைய காம
வேட்கையி லழுந்தி மாயைச்
சடத்தினை மெய்யென் றெண்ணித்
தளரவோ தனிய னேனே.

இ-ள். நாத-இறைவனே, இவ்வுலகையெல்லாம்-இந்த லோகங்களையெல்லாம், கடத்தி-இயங்குவித்து, நீ நிறைந்த தன்மை - (அவைகளெல்லாவற்றுள்ளும்) நீ நிறைந்திருக்குந் தன்மையை, திடத்துடன் அறிந்து-சலியாமையோடு நின்றறிந்து, ஆனந்தம்-பேரின்பமாகிய, தெள் அமுது அருந்திடாதே-தெளிவாகிய அமுதத்தையுண்ணுமலே, விடத்திரள் அனைய-விஷத்திரளையொத்த, காம வேட்கையில் அழுந்தி-காமவிருப்பமாகிய படுகுழியில் முழுகி, மாயை சடத்தினை-பொய்யுடம்பை, மெய்யென்றுஎண்ணி-மெய்யென்று நினைத்து, தனியனேன்-தனிமையாகிய நான், தளரவோ-தளர்ச்சியையடையவோ எ-று.

நீ நிறைந்த தன்மை அறிந்து, ஆனந்தத் தெள்ளமுதருந்திடாதே, என்றமையால், இறைவனது சர்வ வியாபகத்தை யுணர்ந்த மாத்திரையானே பேரின்பந் தானே கிடைக்குமென்றதாயிற்று. திடத்துடன் என்றது அஞ்ஞான சந்தேக விபரீதங்களால் தளராமையை. அமுதருந்துதல் விடம் வருத்தாதென்றற்கு, அமுதருந்திடாதே விடத்திரளனைய காமவேட்கையிலழுந்தி என்றார். மெய்யென மேல் வருதலால், மாயை பொய்யெனப்பட்டது. அழுந்தியென்றதனால், காமவேட்கையைப் படுகுழியாக்கியுரைக்கலாயிற்று. நான் உனது சர்வ வியாபகத்வத்தை யறிந்து, நிரதிசயாநந்தாமிர்தத்தைப் பருகாது, விஷரூபமாகிய காமக்கடலிலழுந்தித்தளர்வது தகவோ என்பதாம்.

10 தனிவளர் பொருளே மாறுத்
தண்ணருங் கருணை பூத்த
இனியகற் பகமே முக்க
ணெந்தையே நினக்கன் பின்றி
நனிபெருங் குடிலங் காட்டு
நயனவேற் கரிய கூந்தல்
வனிதையர் மயக்கி லாழ்ந்து
வருந்தவோ வம்ப னேனே.

இ-ள். தனி வளர் பொருளே - ஒப்பற வளர்ந்த பொருளே, மாறு - நீங்காத, தண் - குளிர்ச்சி பொருந்திய, அரு - கிடைத்தற் கரிய, கருணை பூத்த - கருணை யாகிய மலரைப் பூத்த, இனிய கற்பகமே-கண மனங்களுக் கினிமையைத தருகின்ற கற்பகத் தருவே, முக்கண் எந்தையே-மூன்று கண்களையுடைய என் தந்தையே, வம்பனேன் - வீணனாகிய நான், நினக் கன்பு இன்றி - உன்னிடத் தன்பில்லாமல், நனி பெருங் குடிலம் காட்டும் - மிகப் பெருங் கொடுமையைச செய்கின்ற, நயனவேல்-விழிகளாகிய வேல்களையும், கரிய கூந்தல்-கரிய கூந்தலையு

மூடைய, வனிதையர் மயக்கில் மாதர் மயக்க மாகிய படுகுழியில், ஆழ்ந்து-அழுந்தி, வருந்தவோ-வருத்தப் படவோ. எ-று.

சயனத்துக்கு நனிபெருங் குடிலமாவது ஆடவரை மிக வருத்துதல். இது, "விடங்கர லயிற்கண்ணி" "காய் கினவேல்" என்றற்றொடக்கத்தன வற்றுற்காண்க. சுயம்பு வாதலால், தனிவளர் பொருளே எனவும், தனி வளர் பொருளாயினும் கருணை யின்றுயின் எவர்க்கென்ன பயனென்பதை விலக்கற்கு, தண் அருங்கருணை பூத்த எனவும், கருணை யொன்றனையே பூத்தலால் எல்லாப் பொருள்களு மெய்துமோ வென்னுமாசங்கை யொழித்து எல்லாப் பொருள்களு மெய்துவிக்கு மென்பார் இனிய கற்பகமே எனவும், அன்பர்கள் வேண்டுமவை யின்னவெனக் கண்ணோரப் போதுமான கண்ணுடைய னென்பார் முக்கணெந்தையே எனவும் கூறினர். இத் தன்மையனை நீயிருக்க, வம்பனே னுதலால், வனிதையர் மயக்கிலாழ்ந்து வருந்துகின்றேன், அங்ஙனம் வருந்துதல் தகுமோ என்பது கருத்து.

சிவன் செயல்.

1 சிவன்செய லாலே யாதும்
வருமெனத் தேறே னுனும்
அவந்தரு நினைவை யெல்லா
மகற்றிலே னுசை வெள்ளம்
கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக்
கட்டிலே யகப்பட் டையோ
பவந்தனை யீட்டி யீட்டிப்
பதைக்கின்றேன் பாவி யேனே.

இ-ள். யாதும்-எதுவும், சிவன் செயலாலே-சிவன் செயலால், வரும் என-வருமென்று, தேறேன் - தெளியேன், நானும்-நான்தானும், அவம் தரும் நினைவை யெல்லாம - வீணன எண்ணங்களோ யெல்லாம், அகற்றிலேன் - நீக்கிலேன், ஆசைவெள்ளம் - ஆசைப் பெருக்கானது, கவர்ந்து கொண்டு இழுப்ப என்னைக் கோத்துக் கொண்டிழுக்க, அந்தக் கட்டிலே அகப்பட்டு-அந்தப்பிணிப்பி னுள்ளடங்கி, ஐயோ-அந்தோ, பவம் தன்னை ஈட்டிஈட்டி-பாவத்தைசசம்பாதித்துச சம்பாதித்து, பாவியேன்-பாபிஷ்டனாகிய நான், பதைக்கின்றேன் பதையாநின்றேன், எ-று.

சிவன் செயலாலே யாதும் வருமெனத் தேறவேணுமின், அவந்தரு நினைவகற்றுதல் முதலாயின வுளவாகும், அத்தேற்ற மில்லே னுதலால் பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் என்பது கருத்து.

2 பாவியே னினியென் செய்கேன்
பரமனே பணிந்துன் பாதம்
சேவியேன் விழிநீர் மல்கச்
சிவசிவ வென்று தேம்பி
ஆவியே நிறைய வந்த
வமுதமே யென்னே னந்தோ
சாவிபோழ் சமயத் தாழ்ந்து
சகத்திடைத் தவிக்கின் றேனே.

இ-ள். பாவியேன் - பாவியாகிய நான், இனியென் செய்கேன்-இனி யென் செயக்கடவேன், பரமனே-மேலோனே, உன்பாதம் பணிந்து-உன் திருவடிகளை வணங்கி, சேவியேன் - தரிசனஞ் செய்யேன், விழி-கண் களில், நீர்மல்க-நீர் நிறைய, சிவசிவ என்று-சிவசிவ வென்று உச்சரித்து, தேம்பி-வாடி, ஆவியே-உயிரே, நிறையவந்த அமுதமே-பூர்ணமாக வந்த அமிர்தமே, என்னேன்-என்று துதியேன், அந்தோ-ஐயோ, சாவிபோம்-பாழ்பட்டுப் போகின்ற, சமயத்து - சமயப்படுகுழியில், ஆழ்ந்து-அழுந்தி, சகத்திடை-உலகின்கண், தவிக்கின்றேன்-இளையா நிற்கிறேன், எ-று.

ஆவி-தடாகம், அமுதம்-நீர், தடாகம் நிறையவந்தநீரே எனசசொன்ன யங்காணக. பரமனே, பாவியாகிய நான் உன் திருவடியைத் தொழுதல் செயயேன், விழிநீர் சிந்தகின்று சிவசிவ வென்று துதியேன், பாழாகிய சமயப்படுகுழியிலாழ்ந்து இவ்வுலகில் தவிக்கிறேன், இனியெப்படி உய் வேன் என்பதாம். நான் எனவொரு சொல்வருவித்து, பாவியேன் என் பதற்கு நினையேன் என்றுரைத் தலுமாம்.

3 இடைந்திடைந் தேங்கி மெய்புள கிப்ப
வெழுந்தெழுந் தையநின் சரணம்
அடைந்தன னினிநீ கைவிடே லுனக்கே
யபயமென் றஞ்சலி செய்துள்
உடைந்துடைந் தெழுது சித்திரப் பாவை
யொத்துநா னசைவற நிற்பத்
தொடர்ந்துநீ யெனையாட் கொள்ளுநா ளென்றே
சோதியே யாதிநா யகனே.

இ-ள். சோதியே - தேஜோராசியே, ஆதிநாயகனே - ஆதியாகிய முதல்வனே, இடைந்து இடைந்து - விலகி விலகி, எங்கி - அழுது, மெய் புளகிப்ப - சரீரம் புளகிக்க, எழுந்து எழுந்து - பலகாலெழுந்து, ஐய-அழ

குள்ள ஆகிய, நின்சரணம் உன்திருவடிகளே, அடைந்தனன்-சேர்ந்தேன், இனி நீ கைவிடேல்-இனி நீகைவிடாதே, உனக்கே அபயம்என்று-உனக்கே அபயம் என்று விண்ணப்பஞ்செய்து, அஞ்சலிசெய்து-கும்பிட்டு,உள்உடைந்து உடைந்து-மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, எழுது-எழுதின, சித்திரப் பாவை ஒத்து-சித்திரப்பிரதிமை போன்று, நான் அசைவு அறநிற்ப-நான் அசைவற நிற்கும்படி, நீ என்னே தொடர்ந்து-நீயென்னைவிடாதுபற்றி, ஆட் கொள்ளும் நாள்-அடிமை கொள்ளும்நன்னாள், என்றோ-எந்நாளோ. எ-று.

ஐய என்பதை விளியாக்கி யுரைப்பினு மமையும். அசைவறநிற்றல்-சும்மாவிருத்தல். உன்திருவடியை யடைந்தேன், நீ என்னையாட்கொள்ளும் நாள் எந்நாளோ என்பதாம்.

4 ஆதியாய் நடுவா யந்தமாய்ப் பந்தம்
யாவுமற் றகம்புற நிறைந்த
சோதியாய்ச் சுகமா யிருந்தவெம் பெருமான்
ரொண்டனேன் சுகத்திலே யிருக்கப்
போதியா வண்ணங் கைவிடன் முறையோ
புன்மையே னென்செய்கேன் மனமோ
வாதியா நின்ற தன்றியும் புலன்சேர்
வாயிலோ தீயினுங் கொடிதே.

இ-ள். ஆதி ஆய்-முதலாகி, நடு ஆய்-இடையாகி, அந்தம் ஆய்-கடையாகி, பந்தம்யாவும் அற்று-பிறவிப்பிணிப்புக்க ளெல்லாம் ஒரு சேரநீங்கி, அகம்புறம் நிறைந்த-அகத்தும் புறத்தும் நிறைந்த, சோதியாய்-ஒளிப்பிழம்பாய், சுகமாய்-ஆனந்த ரூபமாகி, இருந்த-இருந்த, எம்பெருமான்-எம்மிறைவனே, தொண்டனேன்-அடிமையாகிய நான், சுகத்திலே யிருக்க-இன்பநிலையிலிருக்கும்படி, போதியாவண்ணம்-போதியாதலிலம், கைவிடல்-கைவிடுதல், முறையோ-முறைமையோ,புன்மையேன்-புன்மையையுடையேன், என்செய்கேன்-என்செயக்கடவேன், மனமோ-மனதோ, வாதியாநின்றது-வருத்தாநின்றது, அன்றியும்-அல்லாமலும், புலன் சேர்வாயிலோ-விஷயங்கள் சேர்தற்குரிய பொறியோ, தீயினும் கொடிதே-நெருப்பினும் கொடியதே. எ-று.

"பொறிவாயிலைந் தவித்தான்" என்றார் மேலோரும். ஆதி மத்யாந்த ரஹிதனே, அடியேன் உன்னின்ப நிலையிலிருக்கும்படி போதியாதுகை விடுதல் உனக்கு முறைமையாமோ என்பதாம்.

5 வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை யிர்த்துவெங் காமத்

தீயிலே வெதுப்பி யுயிரொடுக் கின்னச்
சிந்தைநைக் குருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன்
முயினுங் கருணையா மன்னுள்
நாயகமாகி யொளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே.

இ-ள். தாயினும் - தாயைப்பார்க்கினும், கருணை ஆம்-கருணை செய்கின்ற, மன்னுள்-பொற்சபையில், நாயகம் ஆகி-இறைவனாகி, ஒளிவிடும்-ஒளி செய்கின்ற, மணியே - மாணிக்கமே, நாதனே - முதல்வனே, ஞானவா ரிதியே-ஞானக்கடலே, வாயில் ஓர் ஐந்தில்-பொறிகளாகிய வோரைந்து வழிகளில், புலன் என்னும வேடர்வந்து - ஐம்புலன்களென்கிற வேடுவர் வந்து, என்னை ஈர்த்து-என்னை யிழுத்து, வெம்காமத்தீயிலே வெதுப்பி-வெவ்விய காமநெருப்பினுல் சுட்டு, உயிரொடும் தின்ன - பிராணனுடன் உண்ண, சிந்தை நைந்து-மனம் நைந்து, உருகி-இளகி, மெய் மறந்து-சரீரத்தை மறந்து, தாய் இல்லா சேய்போல்-தாயற்ற குழந்தையைப்போல, அலைந்து அலைப்பட்டேன்-திரிந்து வருந்தினேன். எ-று.

தாயினுங்கருணையாம் மணியே என இயையும். இவ்வாறு அன்றி, கருணை ஆ-எனப்பதம்பிரித்து, கருணைருபமாக, எனப்பொரு ளுரைப்பினு மாம் மணிக்குப்பொன் பொருத்தப் பொருளாதலால் மன்று எனபதற்குப் பொற்சபை யெனப் பொருளுரைக்கலாயிற்று.

6 ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடு
நாட்டமே நாட்டத்து ணிறைநத
வானமே யெனக்கு வந்துவந் தோங்கு
மார்க்கமே மருளர்தா மறியா
மோனமே முதலே முத்திநல் விதமே
முடிவிலா வின்பமே செய்யுந்
தானமே தவமே நின்னைநா னினைந்தேன்
தடியனேன் றனைமறப் பதற்கே.

இ-ள். ஞானமேவடிவு ஆய்-அறிவே யுருவமாகி, தேடுவார் தேடும்-தேடுவோர் தேடுகின்ற, நாட்டமே - தேடப்படுபொருளே, நாட்டத்துள் நிறைந்த - என்கண்ணில் நிறைந்த, வானமே - பரமாகாயமே, எனக்கு-அடியேனுக்கு, வந்து வந்து ஓங்கும் மார்க்கமே-வந்து வந்து உயர்ந்து தோன்றுகின்ற நெறியே, மருளர்தாம் அறியா மோனமே-மருளையுடையார் உணராத மோன நிலையே, முதலே-தலைவனே, முத்திநல் வித்தே-மோக்ஷ வீடுக்குக் காரணமாகிய நல்லவிதையே, முடிவு இல்லா

இன்பமே - முடிவற்ற ஆனந்தமே, செய்யும்-(யாவரும் தமது இம்மை டமைப்பயன் கருதிச) செய்கின்ற, தானமே-ஈகையே, தவமே-தபஸ்ஸே, தமியனேன் தன்னை மறப்பதற்கு-என்னை நான்மறந்து விடுதற்பொருட்டு நான் நின்னை நினைந்தேன்-நானுன்னைச சிந்தனை செய்தேன். எ-று.

தானத்துக்கு இம்மைப் பயன்புகழ், மறுமைப்பயன் சுவர்க்காதி பதங்கள். என்னை மறக்க உன்னை நினைந்தேனென்பது கருத்து.

7 மறமலி யுலக வாழ்க்கையே வேண்டும்
வந்துநின் னன்பர்தம் பணியாம்
அறமது கிடக்கி னன்றியா னந்த
வற்புத நிட்டையி னிதித்தம்
துறவது வேண்டு மெளனியா யெனக்குத்
தூயகல் லருடரி னின்னம்
பிறவியும் வேண்டும் யானென திறக்கப்
பெற்றவர் பெற்றிடும் பேறே.

இள். நின் அன்பர் தம்பணி ஆம் அறம்-உன்னடியாரது பணிவிடை யாகிய மேலான தருமம், வந்து கிடைக்கின்-வந்துகிடைக்கப் பெறுவேமாயின், மறம்மலி-பாவம் நிறைந்த, உலக வாழ்க்கையே வேண்டும்-பிரபஞ்ச வாழ்வே யெனக்கு வேண்டும், அன்றி-அல்லாதவிடத்து, ஆனந்தம்-இன்பத்தைத்தருகின்ற, அப்புதம்-அதிசயமான, நிட்டையின் நிமித்தம்-நிஷ்டையின் பொருட்டு, துறவதுவேண்டும்-துறவுவேண்டும், மௌனி ஆய்-மௌன குருவாகிவந்து, எனக்கு-அடியேனுக்கு, தூய - பரிசுத்தமான, நல் அருள் தரின்-சிறந்த அருளாத தருவதாயிருப்பின், இன்னம்-இனிமேலும், பிறவியும் வேண்டும்-ஜன்மங்களும் வேண்டும், யான் எனது-யான் என்பவற்றுக் குக்காரணங்களான அகங்கார மமகாரங்கள், இறக்கப் பெற்றவர்-இறக்கப் பெற்றவர்கள், பெற்றிடும்-அடைகின்ற, பேறே-இலாபமே. எ-று.

அன்பர் பணிகிடைப்பின், உலக வாழ்க்கை வேண்டும், அல்லாத பக்ஷத்தில் துறவுவேண்டும், மௌன குருவாகிவந்து அருள்செயவதாயிருப்பின், எனக்கு இனிமேலும் பிறவிவேண்டும் என்பது கருத்து. அறமது துறவது என்பவற்றுள் அது பகுதிப்பொருள் விகுதி "இறவிலெப்பதமும் பெறவேண்டிலே னென்றும் பிறவி வேண்டுவ னின்றிருப்பணி செயப் பெறினே" என்றார் பிறரும்.

8 பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே
பெருகிய கருணைவா ரிதியே
நற்றவத் தினையே யானந்தக் கடலே
ஞாதரு ஞானஜ் யங்கள்

அற்றவர்க் கருத நட்புடைக் கலப்பே
யனேகமாய் நின்னடிக் கன்பு
கற்றதுங் கேள்வி கேட்டது நின்னைக்
கண்டிடும் பொருட்டன்றே காணே.

இ-ள். பெற்றவர் - தத்துவ ஞானத்தைப் பெற்றவர்கள், பெற்ற-அடைந்த, பெரு-பெரிய, தவக்குன்றே - தவமலையே, பெருகிய - பெருக் கெடுத்த, கருணைவாரிதியே - கருணைக்கடலே, நல்தவத் துணையே-நல்ல தவத்துக்குதவி செய்வோனே, ஆனந்தக்கடலே-இன்பசாகரமே, ஞாதுரு ஞான ஞேயங்கள் அற்றவர்க்கு - ஞாதுரு ஞானம் ஞேயம் என்னு மிவைக ளற்றவர்களுக்கு, அருதநட்புஉடை-நீங்காதநிஷ்களத்தையுடைய, கலப்பே-கூட்டுறவே, அனேகமாய் கற்றதும் கேள்விகேட்டதும்-வெகு முகமாகக் கல்விகற்றதும் கேள்வி கேட்டதும், நின்அடிக்கு அன்பு - உன்திருவடிக் கன்புசெய்து, நின்னைக் கண்டிடும் பொருட்டு அன்றே - உன்னைக்காணும் பொருட்டல்லவா எ-று.

அன்பு என்பதனேடு செய்து என்னுஞ்சொல்பெய்துரைக்கப்பட்டது. இது இசையெசசம். சொல்லெசச மெனினுமாம். ஞாதுரு-காண்பான், ஞானம்-காட்சி, ஞேயம்-காட்சிப்பொருள், இவற்றை வடநூலார் த்ரிபுடி யென்பர். நான் கற்ற கல்விகளும் கேட்ட கேள்விகளும் உன் திருவடிக் கன்புசெய்து உன்னைப்பெறும் பொருட்டன்றே வென்பதாம்.

9 அன்றுநால் வருக்கு மொளிநெறி காட்டு
மன்புடைச் சோதியே செம்பொன்
மன்றுண்முக் கண்ணுங் காளகண் டமுமாய்
வயங்கிய வானமே யென்னுள்
துன்றுகூ ரிருளைத் துரந்திடு மதியே
துன்பமு மின்பமு மாகி
நின்றவா தனையைக் கடந்தவர் நினைவே
நேசமே நின்பரம் யாமே.

இ ள். அன்று - அந்காளில், நாலமருக்கும் - ஸநகாதி நால்வருக் கும, ஒளி நெறிகாட்டும் - தேஜோ மார்க்கத்தைக் காட்டிய, அன்புடை சோதியே - அன்பையுடைய தேஜோ ராசியே, செம்பொன் மன்றுள்-சொம்பொற் சபையில், முக்கண்ணும் மூன்றுகண்களும், காளகண்டமும் ஆய்-காளகண்டமுமாகி, வயங்கிய - விளங்கிய, வானமே - பரமாகாயமே, என்னுள் துன்று - என்னுட் செறிந்த, கூர் இருளை - மிகுந்த அஞ்ஞான விருளை, துரந்திடும் - ஓட்டுகின்ற, மதியே - பூர்ணசந்திரனே, துன்ப மும் இன்பமும் ஆகிநின்ற வாதனையை - துக்கமும் சுகமுமாகி நின்றவாச

னகனே, கடந்தவர் - கடந்துநின்ற அறிஞரது, நினைவே-எண்ணமே, நேச மே-அன்புருவே, யான்-நான், நின்பரம்-என்பசுபதி, எ-று.

காளம் - விஷம், விஷகண்ட மென்றபடி. கருமையுமாதலால் நீல கண்ட மெனினுமாம். மதி-அறிவுமாம். கடவுளே நான் உன் அடைக்கலப் பொருள் என்பதாம்.

10 யானெனல் காணேன் பூரண நிரைவில்
யாதினு மிருந்தபே ரொளிநீ
தானென நிற்குஞ் சமத்துற வெண்ணத்
தன்னவ னுக்கவுந் தகுங்காண்
வானென வயங்கி யொன்றிரண் டென்னு
மார்க்கமா நெறிதந்து மாறுத்
தேனென ருசித்து ளன்பரைக்கலந்த
செல்வமே சிற்பர சிவமே

இ-ள்- வான் எனவயங்கி - கைம்மாறு கருதாத மேகத்தைப் போல விளங்கி, ஒன்று இரண்டு என்னு - ஒன்றிரண்டென்று சொல்லப்படாத, மார்க்கம் ஆம் நெறிதந்து - மார்க்கமாகிய நன்னெறியை யருள்செய்து, மாறு - ஒழுக்கிடையறாத, தேன் என - தேனைப்போல, ருசித்து - சுவை யைத்தந்து, அன்பரை-அன்பர்களை, உள்கலந்த - உள்ளே கலந்து நின்ற, செல்வமே-ஐசுவரியமே, சிற்பரசிவமே - ஞானமயமாகிய மேலான சுபமே, பூரண நிறைவில் - உனதுசர்வ வியாபகத்தில், யான் எனல்காணேன்- யான் என்பதை யறிந்திலேன், யாதினும் - எப்பொருளினும், இருந்த பேர் ஒளி - தங்கிய பரஞ்சோதி, நீதான் எனநிற்கும் - நீயேயென்று சலிப்பற நிற்கின்ற, சமத்து-சமநிலையில், உற-பொருந்தும்படி, என்னை-அடியேனை, தன்னவன் ஆகவும்தகும் உன்னவனாகிக் கொள்ளவும் தகும். எ-று.

காண்-அசை. மாறு என்பதற்கு இளிமை நீங்காத எனினுமாம் கட வுளே, நீயே யெப்பொருள் களுள்ளும் வியாபித்து நிற்கின்றனை யென்னுஞ் சமபாவம் எனக்குண்டாகும்படி, என்னை உன்னெருண்ட னாகிக்கோடல் வேண்டும் என்பதாம்.

தன்னை யொருவர்.

1 தன்னை யொருவர்க் கறிவரி தாய்த்
தானே தானு யெங்குநிறைந்
துன்னற் கரிய பரவெளியா
யுலவா வமுதா யொளிவிளக்காய்

என்னுட் கலந்தா யானறியா
திருந்தா யிறைவா வினியேனும்
நின்னைப்பெறுமா றெனக்கருளா
நிலையைக் கொடுக்க நினையாயோ.

இ-ள். தன்னை ஒருவர்க்கு அறிவு அரிது ஆய் - தன்னை யொருவருக்கறித லருமையாகி, தானேதான் ஆய் - தானே தானுகி, எங்கும் நிறைந்து எங்கும் வியாபித்து, உன்னற்கு அரிய - நினைத்தற் கரிதாகிய, பரவெளி ஆய்-பராகாசமாகி, உலவா-அழியாமைக்குக் காரணமாகிய, அமுது ஆய்-அமிர்தமாகி, ஒளிவிளக்கு ஆய் - ஒளியை யுடைய தீபமாகி, என்னுள் கலந்தாய்-என் மனத்திற் கலந்திருந்தாய், (அப்படி யிருத்தலினும்) யான் அறியாது இருந்தாய் - ஞானறியாத வண்ணமிருந்தாய், இறைவா - இறைவனே, இனியேனும் - இனியாயினும், நின்னைப் பெறுமாறு - உன்னை யடையுமாறு, எனக்கு - அடியேனுக்கு, அருள் ஆம் நிலையைக் கொடுக்க-உன் திருவருளாகிய நிலைமையைக் கொடுக்க, நினையாயோ-நினைக்கமாட்டாயோ, எ-று.

தன்னை யொருவர்க் கறிவரிதாதல் முதல், அறியாதிருத்தலிறுதியாக வுரைத்தன லெல்லாம் இறைவனுக்கே பொருந்துமென்பார்; ' இறைவா ' என வீற்றில் விளித்தனர். எல்லாப்பொருள்களுக்கும் இறைவனே, இனியாயினும் எனக்கு உன் திருவரு ணிலையைக் கொடுக்க நினையாயோ என்பதாம்.

2 நினையு நினைவுக் கெட்டாத
நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்
வினையைக் கரைக்கும் பரமவின்ப
வெள்ளப் பெருக்கே னினதருளால்
மனவி புதல்வ ரன்னைபிதா
மாடு வீடென் றிடுமயக்கம்
தனையு மறந்திங் குனைமறவாத்
தன்மை வருமோ தமியேற்கே.

இ-ள். நினையும் நினைவுக்கு எட்டாத - கருதுகின்ற கருத்துக் கெட்டாத, நெறிபெற்று - மோன நெறியைப் பெற்று, உணர்ந்த - அந்நெறியா லுன்னையறிந்த, நெறியாளர்-சன்மார்க்கரது, வினையை - வினைகளை, கரைக்கும் - கரைத்து மெல்லமெல்ல அழிக்கின்ற, பரமம் - மேலான, இன்ப வெள்ளப் பெருக்கே-ஆநந்த ப்ரவாஹத்தின் மிகுதியே, நினது அருளால்-உன் திருவருளால், மனவி - பாரியை, புதல்வர்-புத்திரர், அன்னை பிதா-

தாய் தந்தையர், மாடு-பசுக்கள், வீடு-மனை, என்றிடும் மயக்கம் தன்னை யும் மறந்து-என்று சொல்லி அவர்களிடத் தன்பினால் மயங்கும் மயக்கத் தையு மறந்து, இங்கு-இவ்விடத்து, உன்னை மறவாதன்மை - உன்னை மற வாத குணம். தமியேற்கு வருமோ-இழிவினை லொப்பற்ற வெனக் குண்டாகுமோ. எ-று.

யாற்றி னிருகரையை நீர்ப்பெருக்கு மெல்ல மெல்லக் கரைத்தழிக்கு மாறுபோல, இறைவன் அன்பரது இருவினையை மெல்ல மெல்லக்கரைத்து அழித்தலால், நினைய நினைவுக் கெட்டாத நெறி பெற்றுணர்ந்த நெறியா ளர் வினையைக் கரைக்கும் பரமவின்ப வெள்ளப்பெருக்கே என்றார். எனக்கு மனவி மக்களிடத்தன்பு நீங்கி, உன்னை மறவாமையாகிய குணமுண்டாமோ என்பதாம்.

3 வரும்போ மென்னு மிருநிலைமை
மன்னு தொருதன் மைத்தாகிக்
கரும்போ தேனே முக்கனியோ
வென்ன வென்னுட் கலந்தாலம்
தரும்பே ரின்பப் பொருளேநின்
றன்னை நினைந்து நெக்குருகேன்
இரும்போ கல்லோ மரமோவென்
னிதய மியாதென் றறியேனே.

இ-ள். வரும்போம் என்னும்-வரும்போம் என்கிற, இருநிலைமை மன்னுது-இருநிலையைப் பொருந்தாமல், ஒருதன்மைத்து ஆகி-ஒரு தன்மையை யுடையதாகி, கரும்போ-கருப்பஞ்சாரே, தேனே-மதுவோ, முக்கனியோ-முக்கனிகளோ, என்ன-என்று சொல்லும் வண்ணம், என்னுள் கலந்து-என்மனதிற் சேர்ந்து, நலம்தரும்-நன்மையைத் தருகின்ற, பேரின்பப் பொருளே-பேரானந்த வஸ்துவே, நின் தன்னை நினைந்து - உன்னை நினை ந்து, நெக்கு-நெகிழ்ந்து, உருகேன்-உருகிலேன், (ஆதலால்) என் இதயம்-என்னுடைய இதயமானது, இரும்போ - இரும்புதானே, கல்லோ - கல் தானே, மரமோ-மரந்தானே, யாது என்று அறியேன்-இவற்றுள் யாதென் றெடுத்துரைக்க அறிந்திலேன். எ-று.

யாதென்று-செயவென எச்சத்திரிபு. பேரின்பப் பொருளே, உன்னை நினைந்துருகாமையால், என்மனம் இரும்போ, கல்லோ, மரமோ, இவற் றுள் எதனுலியன்றதோ என்பதாம்.

4 அறியுந்தரமோ நானுன்னை
அறிவுக் கறிவாய் நிற்கையினால்

பிறியுந் தரமோ நீயென்னைப்
பெம்மா னேபே ரின்பமதாய்ச்
செறியும் பொருணீ நின்னையன்றிச்
செறியாப் பொருணான் பெறும்பேற்றை
நெறிநின் றுழுக விசாரித்தால்
நினக்கோ வில்லை யெனக்காமே.

இ-ள். அறிவுக்கு அறிவு ஆய் நிற்கையினால்-உணர்வுக்குணர்வாய் நிற்கையால், நான் உன்னை அறியும்தரமாமோ - நானுன்னை யறியுந்தரமோ, பெம்மானே-எம்பெருமானே, பேரின்பமது ஆய்-பேரானந்தமாகி, செறியும் பொருள்நீ-நிறைந்து நிற்கும் வஸ்து நீயாதலால், நீயென்னை பிறியும்தரமோ-நீயென்னைப் பிரியுந்தரமாமோ, நின்னை அன்றி-உன்னையல்லது, செறியாப் பொருள் நான்-வேறிடத்துசேர்ந்து நில்லாதபொருளாகிய நான், பெறும் பேற்றை-அடையும் பிரயோஜனத்தை, நெறிநின்று - உரிய நெறிக்கணின்று, ஒழுகவிசாரித்தால் - முழுதும் விசாரணை செய்தால், நினைக்கோ இல்லை-உனக்கோவில்லை, எனக்கு ஆம்-எனக்கேயாகும், எ-று.

இதற்கு இவ்வாறன்றி, நான் உன்னை அறியுந்தரமோ, அறிவுக்கறிவாய் நிற்கையினால் நீயென்னைப் பிறியுந்தரமோ, பேரின்பமதாய்ச் செறியும் பொருள்நீ, நின்னையன்றிச செறியாப்பொருள் நான், எனப்பிரித்து, இணக்கிப் பொருளுரைத்தலும் கூடும்.

5 எனதென் பதும்பொய் யாவென்னல்பொய்
யெல்லா மிறந்த விடங்காட்டும்
நினதென் பதுமபொய் நீயெனல்பொய்
நிற்கு நிலைக்கே நேசித்தேன்
மனதென் பதுமோ வெவ்வசமாய்
வாரா தைய நின்னருளோ
தனதென் பதிக்கு மிடங்காணேன்
தமியே னெவ்வா றுய்வேனே.

இ-ள். எனது என்பதும் பொய் - எனதென்று விவகரித்தலும் பொய், யான் எனல் பொய்-யாவென்று விவகரித்தலும் பொய், எல்லாம் இறந்த இடம் காட்டும - எல்லா விவகாரங்களு மற்ற விடத்தைக் காட்டுகின்ற, நினது என்பதும்பொய் நின்னதென்று விவகரித்தலும் பொய், நீ எனல் பொய்-நீயென்று விவகரித்தல்பொய், (ஆதலால்) நிற்கும் நிலைக்கே நேசித்தேன்-(இவைகள் ஒழிந்து) நிற்கும்நிலைக்கே யன்புவைத்தேன், மனது என்பதுமோ -மனமென்று சொல்லப்படும் பொருளுமோ, என் வசமாய்

வாராது-என் வசப்பட்டு வராது, ஐய-ஐயனே, நினது அருளோ-உனது திருவருளோ, தனது என்பதற்கும்-தன்னதென்று சொல்வதற்கும், இடகாணேன்-இடங்கண்டிலேன், தமியேன் - தனியேன், எவ்வாறு உவேன்-எவ்விதமாய்ப் பிழைப்பேன். எ-று.

உய்தல்-எக்காலு மொருதன்மையாய் நித்யவாழ்வு பெற்றுவாழ்தல் என் மனம் என்வசப்படாமல் பலவழியானுங் கலங்குவதனால், நான் எவ்வாறு உய்வேன் என்பதாம்.

6 உய்யும் படிக்குன் றிருக்கருணை
யொன்றைக் கொடுத்தா லுடையாய்பாழ்ம்
பொய்யு மவாவு மழுக்காறும்
புடைபட் டோடு நன்னெறியா
மெய்யு மறிவு பெறும்பேறும்
விளங்கு மெனக்கு னடியார்பாற்
செய்யும் பணியுங் கைகூடும்
சிந்தைத் துயரந் தீர்ந்திடுமே.

இ-ள். உய்யும்படிக்கு-பிழைக்கும்வண்ணம், உன் திருக்கருணை ஒன்றைக்கொடுத்தால்-உன் திருவருளொன்றனைமாத்திரமே கொடுத்தனையாயின், உடையாய்-எல்லாப்பொருள்களையு முடையவனே, பாழ்பொய்யும்-(பொருள் காரணமாயுளதாகும்) பாழாகிய அசத்தியமும், அவாவும்-ஆசையும், அழுக்காறும் - (அதுகிடையாவிடத்துளதாகும்) பொறாமையும்-புடைபட்டு ஓடும்-புடைபெயர்ந்தோடி யொழியும், நல்நெறி ஆம்-நன்மார்க்கமுளதாதற் கேதுவாகிய, மெய்யும்-சத்தியமும், அறிவு பெறும்பேறும் அறிவினாற்பெறும் பிரயோஜனமும், விளங்கும-பிரகாசிக்கும எனக்கு-யடியேனுக்கு, உன் அடியார்பால்செய்யும்-உன்னடியவரிடத்தில் செய்யும் தொண்டாகிய, பணியும்-பணிவிடையும், கைகூடும்-கைவசப்படும, சிந்தை துயரம-மனோவியாகுலம், தீர்ந்திடும்-தீர்ந்துபோம். எ-று.

நன்னெறி ஆம் என நிறுத்தி-நன்மார்க்க முளதாகும் என்றுரைத்து முடிப்பினுமாம். உன் திருவருள் எனக்குக் கிடைக்குமாயின், நான் எல்லாச் சித்திகளையும் பெற்று மனத்துயரமும் நீங்கப்பெறுவேன் என்பதாம்.

7 சிந்தைத் துயரென் றிருபாவி
சினந்து சினந்து பேர்முயங்க
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்

எந்தப் படியுன் னருள்வாய்க்கு
மெனக்கெப் படிநீ யருள்செய்வாய்
பந்தத் துயரற் றவர்க்கெளிய
பரமா னந்தப் பழம்பொருளே.

இ-ள். பந்தத்துயர் அற்றவர்க்கு-பிறவிப்பிணிப்பா லுளதாம் துன்ப மற்றவர்கட்கு, எளிய-எளியனாகிய, பரமானந்தப்பழம்பொருளே-மேலான இன்பத்தைத் தருகின்ற புராதனப்பொருளே, சிந்தைதுயர் என்றஒருபாவி-மனோதுக்கமென்கிற ஒருபாவி, சினந்து சினந்து கோவித்துக்கோவித்து, போர் முயங்க-போரைசெய்ய, நிந்தைக்கு இடம் ஆய்-நிந்தனைக்கிடமாகி, சகவாழ்வை - (நிலையற்ற) பிரபஞ்சவாழ்க்கையை, நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்-நிலையுளதென் றறிந்தே அதனிடத்துப் பற்றுளேனாய் நிற் கிறேன், உன் அருள்-உன் திருவருள், எந்தப்படிவாய்ககும் எப்படிகிடைக் கும், எனக்கு - அடியேனுக்கு, நீ எப்படி அருள்செய்வாய்-நீ யெவ்வாறு கிருபைபண்ணுவாய். எ-று.

துயர் என்றொரு பாவி, என்பதில், பெயரெச்சத்தகரந் தொகுத்தல்-கடவுளே, பிரபஞ்சவாழ்க்கையை மெய்யெனக் கொண்டுழலும் எனக்கு, உன் திருவருள் கிடைப்பதெப்படி என்பதாம்

8 பொருளைப் பூவைப் பூவையரைப்
பொருளென் றெண்ணு மொருபாவி
இருளைத் துரந்திட் டொளிநெறியை
யென்னுட் பதிப்ப தென்றுகொலோ
தெருளத் தெருள வன்பர்நெஞ்சந்
நித்தித் தூருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே
யறிவா னந்தத் தாரமுதே.

இ-ள். தெருள தெருள-தெளியத்தெளிய, அன்பர் நெஞ்சம்-அன்பர் மனத்தின்கண், நித்தித்து-இனித்து, உருக-உருகும்படி, தெவிட்டாத அருளை-தெவிட்டாத அருள்மழையை, பொழியும் - சொரிகின்ற, குண முகிலே-குணமேகமே, அறிவானந்தத்து-ஞானானந்தமாகிய, ஆர்அமுதே-அரிய அமிர்தமே, பொருளை-திரவியத்தையும், பூவை-பூமியையும், பூவை யரை-மாதரையும, பொருள் என்று எண்ணும் - நிலபுடைப் பொருள்க ளென்று நினைக்கின்ற, ஒருபாவி இருளை - ஒருபாவியாகிய அஞ்ஞானவிரு ட்டை, துரந்திட்டு-துரத்திவிட்டு, ஒளிநெறியை - ஒளியுடையச சன்மார்க் கத்தை, என்னுள்பதிப்பது-என் மனத்திற்பதியசெய்வது, என்றுகொல்-என்னாளோ (அறியேன்) எ-று.

பூவை-மொழியான் வந்தவுவமையாகு பெயர். பொருள், பூ, பூவையர் என்பவற்றை, பொன்னிலமாதர் என்றுர் பிறரும். அறிவானந்தத்து என்பதில், அத்து அல்வழிசசாரியை. கடவுளே, பொன்முதலியவைகளே இவ்வுள்ளனவாக நினைக்கின்ற எனது அஞ்ஞானவிருளைத் துரத்தி, உன் ஒளியுடைய சன்மார்க்கத்தை என் மனத்திற் பதியசசெய்வது எந்நாளோ என்பதாம்.

9 ஆரா வமிர்தம் விரும்பினர்க
ளறிய விடத்தை யமிர்தாக்கும்
பேரா னந்தச் சித்தனெனும்
பெரியோ யாவிக் குரியோய்கேள
காரார் கிரக வலைபினிடைக்
கட்டுண் டிருந்த களைகளெல்லாம்
ஊரா லொருநாள் கையுணவேற்
றுண்டா லெனக்கிங் கொழிந்திடுமே.

இ-ள். ஆரா அமிர்தம் விரும்பினர்கள் - தேவர்கள், அறிய-உன் ஏற்றத்தை அறியும்படி, விடத்தை-நஞ்சை, அமிர்து ஆக்கும்-அமிர்த மாக்கிய, பேரானந்தச சித்தன் என்னும - பேரானந்தச சித்தன் என்கிற, பெரியோய்-பெரியோனே, ஆவிக்கு உரியோய்-உயிர்க் குரியவனே, கேள்-கேட்பாயாக, கார்ஆர் - கருமையார்ந்த, கிரகவலையினிடை- சமுசாரவலையின் கண், கட்டுண்டு இருந்த-கட்டுப்பட்டிருந்த, களைகள் எல்லாம் - விடாய்களெல்லாம், ஊரால் - ஊர் தோறும், ஒரு நாள் - ஒவ்வொருநாளாக, கை உணவு ஏற்று உண்டால்-கைப்பிசசை யேற்றுண்பேனுயின், இங்கு - இவ்விடத்து, எனக்கு ஒழிதிடும்-எனக் கொழிந்துபோம். எ-று.

தெவிட்டா வமுதம் விரும்பினவர்கள் தேவர்களாதலால், அப்பெயர் அவர்கட்காயிற்று. பேரானந்தசசித்தன் என்பது, நஞ்சை யமுதாகவுண்டமையா லுண்டாகிய பேரின்பத்தை பொருந்திய மனதையுடையான் எனவும், பேரிஞல் ஆநந்தச சித்தன் எனவும், பொருள்படுதலுங் காண்க. சித்தன்-ஒன்றை யொன்றுகவு யதிசயத்தை விளைப்போன். அது இவ்விடத்து விடத்தை யமிர்தாகவினமை. கார் ஆர் என்பதற்குப் பெருமை நிறைந்த என்றலும் பொருந்தும். குடும்பத் துன்பங்களெல்லாம், ஊர்தோறும் பிச்சையேற் றுண்பேனுயின் என்னைவிட்டு ஒழிந்துபோம் என்பதாம்.

10 எனக்கென் றிருந்த வுடல்பொருளும்
யானு நினவென் றிந்தவண்ணம்
அனைத்து மிருந்து மிலதாக
வருளாய் நில்லா தழிவழக்காய்

மனத்துட் பிகுந்து மயங்கவுமென்
மதிகுழட் களங்கம் வந்ததென்னே
தனக்கொன வுவமை யறநிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே.

இ-ள். தனக்கு ஒன்று உவமை அற நிறைந்த-தனக்கோ ருவமை யில்லாத வண்ணம் நிறைந்த, தனியே - தனிமைப்பொருளே, தன்னந் தனி முதலே - தன்னந்தனியாகிய முதற்பொருளே, எனக்கென் றிருந்த-எனக் கென்று நம்பி யிருந்த, உடல்பொருளும் - உடலும் பொருளும், யானும்-தானும், நின என்று-என்னுடையன வென்று, ஈந்தவண்ணம் - கொடுத்த படி, அனைத்தும் இருந்தும்-எல்லாமிருந்தும், இலவாக - இல்லாதனவாக, அருளாய் நில்லாது-அருள்வடிவாய் நிற்காமல், அழிவழக்காய் - கெடுவழக் காகி, மனத்துள் புகுந்து-மனத்திற் பிரவேசித்து, மயங்கவும் - கலக்கவும், என்மதிக்குள்-என்னறிவுக்குள், களங்கம் வந்தது - களங்கம் வந்ததற்குக் காரணம், என்னே-யாதோ; (அறிகிலேன்)

உடல் பொருள் யான் என்றது-உடல்பொருளாவிகளே. அழிவழக்கு-தீர்வியாசகியம், தன்னந்தனி - அறத்தனிமை. கன்னங் கறுத்தகுழல், பெண்ணம் பெருத்தமுலை, சின்னஞ் சிறுத்தவிடை என்றற்றொடக்கத் தன்வுமிப்பொருள் கருதினவே. உடல் பொருள் ஆவி மூன்றினையும் உனக் குக் கொடுத்தும், இன்னமும் உன் திருவருணிலையில் நில்லாமையாகிய மயக்கம் எனக்குண்டானதற்குக் காரணம் யாதோ என்பதாம்.

ஆசையெனும்.

1 ஆசையெனும் பெருங்காற்றா டிலவம்பஞ் செனவுமன
தலையுங் காலம்
மோசம்வரு மிதனுலே கற்றதுங்கேட்ட துந்தூர்ந்து
முத்திக் கான
நேசமுறல் வாசமும்போய்ப் புலனியிற் கொடுமைபற்றி
நிற்ப ரந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசையின்றேற்
றெய்வ மூண்டோ.

இ-ள். ஆசையென்னும் பெருங்காற்றாடி - ஆசையாகிய பெருங் காற்றி லகப்பட்டு, இலவம பஞ்சு எனவும் - இலவம் பஞ்சு அலைவதுபோல வும், மனது அலையும் காலம் - மனமானது அலையுங் காலத்தில், மோசம் வரும் -மோசம் நேரிடும், இதனுலே-இதனால், கற்றதும் கேட்டதும் தூர் ந்து - கற்ற கல்விகளும் கேட்ட கேள்விகளும் செறுக்கப்பட்டு, முத்தி

க்கு ஆன நேசமும்-மோக்ஷவிருப்பமும், நல் வாசமும் - குருகுல வாசம் முதலிய நல்லவாசங்களும், போம்-நீங்கி, புலன் ஆய்-ஐம்புலவடிவாகி, இல் கொடுமைபற்றி - குடும்பபாரக் கொடுமைபால் தொடரப்பட்டு, நிற்பர்- (அதை யறுத்தகல வழியிலராய் அதனிடத்தே) தங்கியிருப்பார்கள், (ஆத லால்) தேசுபழுத்து-ஒளிமிகுந்து, அருள்பழுத்த-அருள்மிகுந்த, பராபரமே-பராத்பரமே, நிராசை இன்றேல் - அவாவறுதி, (ஒருவனுக்கு) இல்லையா யின், (அவனுக்கு) தெய்வம் உண்டோ-தெய்வமுமுள்ளதோ, எ-று. .

ஆசை யென்றது மனைவி மக்கள் முதலாயினரிடத்தசை செய்யும் மிகு விருப்பம். பஞ்சு எல்லாப்பொருள்களினும் நொய்து, அதினும் இலவம் பஞ்சு மிகவும் நொய்து, அது சிறு காற்றுக்கே எதிர்நில்லா தலைவ தியற் கையாயிருக்க, பெறுங் காற்றுக்கு என்னபாடெடாது? அதுபோல மனமா னது ஆசைவழியி லகப்பட்டுழல்வதனால் கல்வி கேள்விகளுந் தேர்ந்து, மோக்ஷவிருப்பமும், குருகுலவாசமுதலிய நல்ல சஹவாசங்களும் நீங்கி, ஐம்புல வடிவாகிக் குடும்பபாரக் கொடுங்குழியில் வீழ்ந்து வருந்துவர். ஆதலால், ஒருவனுக்கு நிராசையுண்டானலன்றித் தெய்வவுண்மை விளங் காதென்பது கருத்து. பெருங்காற்று-சண்டமாருதம். புலன்வழிப்பட் டென்னது, புலன் ஆய் என்றமையால், புலம் வேறு மனம்வேறு என்று தோன்றுவண்ணம் ஒன்றி அவற்றி னுருவமாய் நிற்றல் பெற்றும். நிரா சையே தெய்வமென்பது இதனாற் கூறப்பட்டது.

"அற்றது பற்றெனிலுறறது வீடே" எனவும்,
"பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅதவர்க்கு"—எனவும்,

"தந்தைதாய் தன்னுடன் றோன்றினுர்புத்திரர் தார மென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினையே
வெந்தநீ றாடியா ராதியார் சோதியார் வேத கீதர்
எந்தையா ரூர்தொழு தய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே" எனவும்,

"பழகி னல்வரும் பண்டுள சுற்றமும்
விழவி டாவிடின் வேண்டிய தெய்தாமே
திகழ்கொள் சேறையுட் செந்நெறி மேவிய
அழக னருளாஞ்சுவ தென்னுக்கே"—எனவும்.

"அருத்தமும் மனையாளொடு மக்களும்
பொருத்தமில்லை பொல்லாதது போகட்டும்
கருத்தன்கண்ணுத லண்ணல் காட்டுப்பள்ளித்
திருத்தன் சேவடியைசென்று சேர்மினே"—எனவும்.

"பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும்
பண்டை யார் நல்ல பெண்டிரும்
நிதியு மிம்மனை வாழும் வாழ்க்கை
நினைப் பொழி மடநெஞ்சமே
மதியஞ் சேர்சடைக் கங்கையானிட
மகிழ மல்லிகை சண்பகம்
புதிய பூமலர்க் தெல்லிஞறும்
புறம்ப யற்தொழப் போதுமே." எனவும்,

"தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு வித்திவகையும்
யாமா ரெமதார் பாசமா ரென்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடு மவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்க ளுள்வான் பொன்னடிக்கே"—
எனவும்,

"திருவடி பிடித்து வெருவரல்விட்டு
மக்களு மனையு மொக்கலுந்திருவும்
பொருளென நினையா துன்னருளினை நினைந்து"—எனவும்
"வளைபட் டகைமா தொடுமக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூரு முங்கிரியும்
தொளைபட் டுருவத்தொடும் வேலவனே"—எனவும்,

"கொண்ட பெண்டீர் மக்களுற்றூர் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லாற் காதன் மற்றியாது மில்லை
எண் டிசையுங் கீழுமேலு முற்றவு முண்டபிரான்
தொண்டரோ மாயுய்யி னல்லாலில்லை கண்டீர் தூணையே"—எனவும்,

மண்ணினுந் தனத்தினு மனைக்கு வாய்த்தநற்
பெண்ணினு மகவினும் பெரியபேரினும்
துண்ணென விழைவினைத் துறந்தவாயரே
விண்ணினு மின்புடன் விளங்கிமேவுவார்"—எனவும்,

தாரதன மிகுமென்னிற் றளையாகு மப்பாசந் தளைத்துக்கொண்டால்
ஆரதனை யறுத்தகலும விருகுடையா ரறிவிவா ராசைவிஞ்சிக்
கூரிதய மப்போகத்து முன்றுழக்குங் கொடுந்துயரைக் குறித்தபோதே
நீரதையா மறிஞருக்கு விரத்தியுள தாய்சிதத் தெளியுமன்றே"—என
வும்.

"உடம்பு மனவிமக வுற்றோ ரேர்கேள்
அடைந்ததனம் வீடடிமை காணி—தொடர்ந்த விலை
என்னவெனுஞ் சொன்னினவு போனு லிறையருளால்
மன்னிய வனைப் பெறுமான் மா"—எனவும்,

நாடுநகர் வீடுடையா டாய்தந்தை நட்புமக்கள்
மாடுகுலம் பொன்னுடம்பின் வாதனைகள்—கூடத்
தொடுத்தவலைக் கண்ணித் தொடக்கிதை யிப்போது
விடப்பெறுவா ரென்பிறப்பார் மேல்."—எனவும்,

அறிபவற்றுசை யறிலதுதானேய வித்தையு மனமு மாண்டதுவாம்
பொறிபயிலாசை தன்பமாம் நிராசை புகலரு முத்தியாமின்பம்
பிறிவருதன்து முயற்சியா லுண்டாம் பேதையருண் டெனுமவித்தை
செறிதரு பொய்யாய் காம்மாத்திரமாய்ச சித்தெனத் தேர்ந்திடினிலதாம்"

எனவும் வருவன வற்றாலும் நிராசையே தெய்வமென்பது விசதம்.

2 இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட் டருள்செ
வேசற் றேதான் [யென
புரப்பான்ற னருணெடி யிருப்பதுபோ லெங்குநிறை
பொருளே கேளாய்
மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட் டிரங்கெ
மௌனத் தோடந் [னவே
தரப்பான்மை யருணிறைவி லிருப்பதுவோ பராபரமே
சகச நிட்டை.

இ-ள். அங்கு-அவ்விடத்து, இரப்பான் ஒருவன் அவன்-யாசகனாகிய ஒருவனென்னும் அவன், வேண்டுவ - வேண்டுமவற்றை, கேட்டு - செவியேற்று, அருள்செய் என - கிருபைசெய்வாயென்று, ஏசற்று-பழிப்பற்று, புரப்பான்-ரக்ஷிப்பவனுடைய, அருள்-கிருபையை, நாடியிருப்பதுபோல்-நோக்கி நிற்பதுபோல, எங்கும் நிறைபொருளே-எபவிடத்தும் நீகமின்றி நிறைந்தலஸ்துவே, கேளாய் - கேட்பாயாக, மரப்பான்மை நெஞ்சினன் யான் - மரத்தின்றன்மை யமைந்த மனத்தினை யுடையநான், வேண்டுவ கேட்டு இரங்கு என-விரும்பு மவற்றைத் நிருசசெவி சாததியிரங்கி யருள் வாயென்று, மௌனத்தோடு-மௌன நிலையுடன், அந்தரப்பான்மை - ஆகாயத் தின்றன்மை யமைந்த, அருள் நிறைவில் - உன்திருவருட்பூரண நிலையில், இருப்பதுவோ-இருப்பதாலோ, பராபரமே - பராத்பர வஸ்துவே, சகசநிட்டை-எனக்கு சஹஜஸ்திவ்ட்டையென்று சொல்லப்படுவது. எ-று.

மரப்பான்மை-வன்மைக் கெடுத்துக் காட்டுவதோருவமை. இரப்பாளன் நகையாளனது அருளே நாடியிருப்பதுபோல, உன்திருவருளே நாடி, அத்திருவரு ணிறைவி லிருப்பதுவோ எனக்குச சகசகிட்டை யென்பது கருத்து.

3 சாட்டையிற் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவா னிறையென வறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறவருட் செயலி னிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே.

இ-ள். நெஞ்சமே - மனமே, சாட்டையின் - சாட்டையினு லாட்டப் பட்ட, பம்பரசாலம் போல்-பம்பரத தொகுதிகள்போல, எல்லாம்-எல்லா வுயிர்களையும், இறை - இறைவன். ஆட்டுவான் என - ஆட்டுவானென்று, அறிந்து - ஐயந்திரிபறத் தக்க பிரமாணங்களைக் கொண்டுணர்ந்து, தேட்டம் ஒன்று அற-தேடப்படும் பொருளொன் றில்லாதவகை, அருள்செயலில் நிற்றியேல் - திருவருட் செய்கைக் குட்பட்டு நிற்பையாயின், வீட்டு அறம் துறவு அறம் இரண்டும்-இல்லறம் துறவறம் என்று சொல்லப்பட்ட இரண்டறங்களும், மேன்மையே-மேன்மையை யுடையனவே. எ-று.

நிற்றியேல் என்பது நிற்றலருமை தோன்ற நின்றது. திருவருள்வயப் பட்டவர்க்குத் தேட வேண்டுவதோர் பொருளின் றுதலால், "தேட்ட மொன்றற வருட்செயலி னிற்றியேல்" என்றார். அருட்செயலி னிற்றியேல் வீட்டறந்துறவற மிரண்டு மேன்மையே என்றதனால், அருட்செயலி னில்லாவிடின், அவ்விரண்டும் தாழ்மையே, என்ற வாறாயிற்று. பம்பரமாட்டுவோன், பம்பரம், சாட்டை, இவைமுறையே இறைவனுக்கும், உயிர்களுக்கும், இருவினைகட்கும் உவமைப் பொருள்கள். ஐயம் - சந்தேகம். அது சுற்றியோ மகளே என்பது. கிரிபு விபரீத வுணர்ச்சி. அது பழுதையைப் பாம்பென்பது. "இருவினைப் பாசக் கயிற்றின்வழி, ஆட்டுவிப்பானு மொருவனுண்டே" எனவும், "ஓங்குவிண்ணோர் நாடே யிடைமருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால், விடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே, என்றும், மேலோரும் பணித்தனர்.

4 தன்னெஞ்ச நினைப்பொழியா தறிவிலிநான் ஞானமெனுந்
தன்மை பேச
உன்னெஞ்ச மகிழ்ந்தொருசொல் லுரைத்தனையே யதனை
யுருகே னையா [யுன்னி
வன்னெஞ்சோ விரங்காத மரநெஞ்சோ விருப்பு
நெஞ்சோ வைராமா

கன்னெஞ்சோ வலதுமண்ணுங் கட்டிநெஞ்சோ வெனது
நெஞ்சங் கருதிற்றிலனே

இ-ள். தன்நெஞ்சம் நினைப்பொழியாத - மனமானது தன்கணுள்ள எண்ணங்கள் நீங்காத, அறிவிலி நான்-அறிவிலியாகிய நான், ஞானம் என்னும் தன்மைபேச-ஞானமென்னுந் தன்மையை எடுத்துப் பேசும்படி, உன் நெஞ்சம் மகிழ்ந்து உனதுள்ள மகிழ்ந்து, ஒருசொல் உரைத்தனையே-ஒரு மொழி பகர்ந்தனையே. அதனை உன்னி உருகேன் - அதை நினைத்துருக மாட்டேன், (ஆதலால்) ஐயா-ஐயனே, எனது நெஞ்சம் - என்மனமானது, கருங்கின்-நினைத்துப் பார்க்குமிடத்து, வல் நெஞ்சோ - வன்மனமோ, இரங்கத-இரக்கமில்லாத, மரநெஞ்சோ - மரமனமோ, இருப்பு நெஞ்சோ-இரும்பு மனமோ, வைரமானகல் நெஞ்சோ - வயிரம் பற்றிய கல்மனமோ, (அறிந்திலேன்) எ-று.

அறிவுடையார் ஞானத் தன்மையை யெடுத்துப் பேசுதற்குரியரே யன்றி, அறிவிலியாகிய நான் பேசுதற்குரிய னல்லேன் என்றதாயிற்று. எங்ஙனமாயினும், ஆட்படுந் தன்மையில்லாத என்னை, ஒருமொழியுணர்த்தி உனக்குரிய ஞக்கினையே, அந்தப்பெருங் கருணையை நினைந்தருகாமையால் என்னெஞ்சமித்தன்மைத்தெனத் தன்மன வன்மையையும இறைவனதுகருணை மிகுதியையும் பற்றி யிடுபட்டார்.

"வெள்ளத்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனகேகேட்டு வேட்ட நெஞ்சமாயப்
பள்ளத்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்கிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளத்தா னின்றுகெடி யளவு நெஞ்சா
யுருகாதா ரிடம்பெல்லாங் கண்ணு ணண்ணு
வெள்ளத்தான் பாயாத வினைந்தங் கில்லாத
கண்ணினீரை [illegible] வென்னுரைதேறிலாரும்,

வாழ்க சோபனமே வாழிநல் லன்பர்கள்
சூழ வருதரு தேடரற்றழுஞ் சோபனமே
ஆழி யிபாலரு ணன்மலர்த்தாள்
ஏழை நெஞ்சிலெற்ற வின்புறுஞ் சோபனமே.

இ-ள், சோபனம் வாழி வாழி - காலபரியந்தம் சோபனமானது வாழி வாழி, (அது யாதெனின்) நல் அனபர்கள் சூழவந்து-மாசற்றவன் புடையார் சூழ்மாறு வன்னிடத நெழுந்தருளி, அருள் எனனுட் சூரியை யில்

லாத வென்னே யுரியனைக்கியருளினை, தோற்றமும் - மௌன குருவுரு வெளிப்பாகும், சோபனம் - சோபனமாகுக ஆழிபோல் அருள் - கடல் போன்ற அருளையுடைய, ஐயன்-அருளிறையின, மௌனத்தால் - மௌன முத்திரையால் எழுயென பெற்ற-எளியேன் அடைந்த, இன்பமும்-நிரதிசயா நந்தமும், சோபனம்-சோபனமாகுக. எ-று.

நிரதிசயம்-தனக்கு மேலானதோர் பொருளின்மை. இறைவனது திருவருட் பெருக்கத்தை யறிவுறுத்தற்கு, ஆழிபோலருள் என்றார். சோபனம்-சுபம். நன்மை-மாசின்மை.

6 கொடுக்கின் றேர்கள்பாற் குறைவையா
தியாவெனுங் குதர்க்கம்
விடுக்கின் றேர்கள்பாற் பிரிகிலா
தள்ளன்பு விடாதே
அடுக்கின் றேர்களுக் கிரங்கிடுக்
தண்டமிழ் மலங்கல்
தொடுக்கின் றேர்களைச் சோதியா
தகுபரஞ் சோதி.

இ-ள். தண்தமிழ் அலங்கல் - தண்ணிய தமிழ்ச்சொல் மாலைகளை, தொடுக்கின்றேர்களை-தொடுத்தலை கூட்டுகின்ற அன்பர்களை, சோதியாதது-சோதனை செய்யாததாகிய, பரஞ்சோதி பரஞ்சுடரானது, கொடுக்கின் றோர்களைபால்-கொடையாளர்பாலிடத்து, குறைவையாது - ஒரு குறைவையும் வைக்காது, யான் என்னும் குதர்க்கம்-யான் என்கிற குதர்க்கத்தை, விடுக கின்றேர்கள்பால் விடுப்பவரிடத்து நின்றும். பிரிகிலாது - நீங்காது, உள் ளன்பு விடாது அடுக்கின்றோர்களுக்கு-உளனன்பு நீங்காமல் நெருங்கியிருப்பவர் களுக்கு, இரங்கிடும்-இரங்கியருளும். எ-று.

தண்டமிழ்ப் பாமாலைகளைச் சூட்டுவாரிடத்துப் பிழை பாராட்டாத இயற்கையையுடைய விறைவன் வரையாது கொடுக்கும் உதாரிகளுக்குக் குறைசெய்யான், யான் என்னும் அகங்காரத்தை விட்டவரை விடான், உள்ளன்போடு அடுத்தவரை பிரியாதிருப்பவன் என்பதுகருத்து. உள் ளன்பு விடாதே யடுக்கின் றோர்களுக் கிரங்கிடும் என்பதற் குதாரணம்.

மேனலி வகற மைத்தனே சற்பக
மாகுகனல் புனல்மூன்றும்
தானையடைத்தவா வுறுமையுற் சிதழுச்
சாகுமா யிரத்தாரும்

அனைய சீரறு மனைந்தவாக கருள்செய்வா
னகன்றவாக் கருள்செய்யான
இனைய குற்றவக ளெவர்குறை மாகுமென்
றெணணி யிறிவாயே—என்றுத் தொடக்கத்தன.

7 உலக மாயையி லேயெளி யேன்றனை
யுழல விட்டனை யேயுடை யாயருள்
இலகு பேரின்ப வீட்டினி லென்னையும்
இருத்தி வைப்பதெக் காலஞ்சொ லாயெழில்
திலக வாணுதற் பைந்தொடி கண்ணினை
தேக்க நாடகஞ் செய்தடி யார்க்கெலாம்
அலகி லாவினை தீர்க்கத் துசகட்டுமை
அப்ப னேபரு ளானந்தச் சோதியே.

இ-ள. எழில்-அழகுள்ள, திலகம்-பொட்டணிந்த வாணுதல் - ஒளி பொருந்திய நெற்றியையும, கை தொடி - பசியவளையலையு முடைய மாதேவியின், கண் இணைதேக்க-இருகண்கள் நிறையும்படி, நாடகம் செயது-நிருத்தஞ்செய்து, அடியார்க்கு எல்லாம் - அடியவாகட் கெல்லாம், அலகு இல்லா-அளவற்ற, வினைதிர்க்க - கர்மங்களை யொழித்தறுக்க, துசம் கட்டும்-கொடி கட்டுகின்ற, அப்பனே-தந்தையே, அருள் ஆனந்த சோதியே-அருளானந்தங்களையுடைய சுடரே, எளியேன்றனை - ஏழையேனை, உலக மாயையிலே-பிரபஞ்ச மாயையில், உழலவிட்டனையே - அலைய விட்டாயே, அருள் இலகு உன்திருவருளால் விளங்குகின்ற, பேர் இன்பவீட்டினில் - பேரானந்தத்தைத்தருகின்ற மோக்ஷநிலத்தில், என்னையும் - (உனக்காட் படுந் தன்மையில்லாத) என்னையும், இருத்திவைப்பது-இருக்கச்செய்வது, எக்காலம்-எந்நாள், சொல்லாய்-பேசுவாயாக. எ-று.

அப்பன் என்பதற்கு-உபகாரன் என்பது பொருள். கடவுளே,என்னை உலகமாயையில் உழலவிட்டாயே, இனியெக்காலம் உனது பேரின்பவீட்டினில் இருத்திவைப்பாயோ, என்பது கருத்து.

8 முன்னிலைச் சுட்டொழிதியெனப் பலகாலு நெஞ்சேநான்
மொழிந்தே னேநின்
தன்னிலையைக் காட்டாதே யென்னை யொன்றுஞ் சூட்டாதே
சரஞ்சூன் போந்த

அகநிலையே நிலைபெறுத லில்லையேல் சித்திமுத்தி
யனைத்துந தோணமும்
கன்னிலையே தன்றியிலை சுகமென்றே சுகர்முதலோர்
நாடி னரே.

இ-ள். நெஞ்சே-மனமே, முன்னிலைசுட்டு ஒழிதி என-முன்னிலையாகச் சுட்டுதலை யொழிவா யாகவென்று, பல்காலும-பலதரமும், நான் மொழிந்தேனே-நான் சொன்னேனே, நின்றன் நிலையைக் காட்டாது-உனது நிலையைக் காட்டாமலும், என்னை ஒன்முச்சுட்டாது-என்னை யொரு பொருளாக வையாமலும், நான்சரண் போந்த-நான்சரண் புகுந்த, அக நிலையே-அத்தநிலையே, நிலை-கன்னிலையாகும் (எனல்வன்) அத்தநிலையிலை-அத்த நிலையிற்றானே, சித்திமுத்தி அனைத்தும தோன்றும்-சித்திமுத்திகளெல்லா முளவாகும், ஈது அன்றி கன்னிலை இல்லை-இதையன்றிவேறு கல்ல நிலையில்லை, சுகம்-இதுவே நினபநிலையம், என்றே-என்று ஆராய்ந்து தறிந்தே, சுகர் முதலோர நாடினர்-சுகர் முதலானோர் இந்தநிலையை விரும்பினர்கள். எ-று.

முன்னிலைசுட்டு-எதிரிட்டறிதல். உன்னிலையு மென்னிலையு மொருங்கொழிய யாரெதெனுகி புயதநிலையே கன்னிலையென்பார், நின்றன் னிலையைக் காட்டாதெ யென்னை யொன்றுசு சூட்டாதே சரணென்போந்த வத்நிலை யிலை என்றார். சித்தி-அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், என்பன அவைபுறையே, அறச்சிறிதாதலும், அறப்பெரிதாதலும் ஏனலுடல் கண்டிப்பின்றிகண்டிப்புள்ளவற்றை யருவவல்லதலும், கொடாதாதலும், வேண்டுவனகடைதலும், நிறையுளதாதலும், ஆட்சியுளதாதலும், எல்லாம் தன்வசமாகவல்லதாதலுமாம்.

9 அத்துவிதம் பெறும்பேறென் றறியாமல் யானெனும்பே
யகந்தை யோடு
மத்தமதி யினர்போல மனங்கிடப்ப வின்னமின்னம்
வருந்து வேனோ
சுத்தபரி பூரணமாய் நின்மலமா யகண்டிதமாய்ச்
சொரூப மானந்த
சத்திகலிவ் காதலணை தன்மயமா யருள்பழுத்துத்
தழைத்த வொன்றே.

இ-ள். சுத்த பரிபூரணமாய்-சுத்த நிலையாகிய பரிபூர்ணமாகி, நின் மலமாய்-நிர்மலமாகி, அகண்டிதமாய்-கண்டிக்கப்படாததாகி, சொரூபா

நந்தச சதிதிகள் நீங்காதவண்ணம் தன்மயமாய் - சேர்ந்தபொருந்த சத்திகள் விலகாதபடி தன்மயமாகி, அருள் பழுத்து - அருள் கனிந்து, தழைத்த-செழித்த, ஒன்றே - ஒப்பற்றபொருளே, பெறும்பேறு - விரும்பியடையத் தகுகபேறு, அத்துவிதம் என்று - அத்வைதமென்று, அறியாமல்-ஆராய்ந் தணராமல், யான் என்னும்-நான்என்கிற, பேய் அகந்தையோடு - பேய்த் தன்மையாகிய அகங்காரத்தோடுகூடி, மத்தம் மதியினர்போல-உன்மத் தகுகொண்டவர்போல, மனம்கிடப்ப-மனமானது விடயசேற்றிலழுந்திக் கிடகக, இன்னம் இன்னம் வருந்துவேனை - மேலும் மேலும் வருந்து வேனை. எ-று.

சொரூபானந்த சதிதிகள் - ஆத்மாகுதத்துக கேதுவாகிய சத்திகள். கடவுளே. அத்துவிதநிலையை தன்னிலையென்றுணராமல் யான் என்னும் அகங்காரத் தோடுகூடி, உன்மத்தர்போல, மனமானது விடய சேற்றி லழுந்திக்கிடகக, யான் மேலுமேலும் துன்பமடையவோ என்பதுகருத்து.

10 தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ
சஞ்சல மதிதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலால்
மற்றொரு துணைகாணேனால்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே
யாதியே யடியர்சுதம
சிந்தை மேவிய தாயுமா னவனெனுஞ்
சிரகிரிப் பெருமானே.

இ-ள். அந்தம் ஆதியும்-முடியடிகளும, அளப்பு அருசோதியே-அளத்த லரிதாயிருந்த சுடர்ப்பிழம்பே. ஆதியே - முதல்வனே, அடியார் சிந்தை மேவிய - அடியவர் மனத்தில் நிலைபெற்ற, தாயுமானவன் என்னும் - தாயு மானவன் என்றுசொல்லப்படுகிற, சிரகிரிப் பெருமானே-சிராமலை மேவிய சிவபெருமானே, தந்தைதாயும் நீ-தந்தை தாய்களும் நீயே, என் உயிர்த் துணையும் நீ-என்னுயிரித் துணைவனும் நீயே, சஞ்சலம் தீர்க்க-என் மோக சலநங்களை நீக்குதற்காக, வந்த-நானிருகரு நிடந்தேடிவந்த, தேசிகவடி வும் நீ-ஆசாரியமூர்தருமும் நீயே, உனை அல்லால்-உன்னையன்றி, மற்றொரு துணைகாணேன்-வேறொரு துணையைக கண்டிலேன். எ-று

அந்தமாதியு மளப்பருஞ் சோதி என்றது தெடியோர்கள் நான்முகன் நிலமகழ்ந்தும் விட்புலம் பறந்து மறியாத அடிமுடிகளை யுடைய சோண சைலத்தை. அன்றி, யாவராலும முடியிது அடியிது என்றறியப்படாத ஒளிப்பிழம்பு எனினுமாம். தாயுமானவன்-மாதருபூதேசுவரன்.

11 காதி லேலையை வரைந்துமேற் குமிழையுங்
கறுவிவேள் கருநீலப்
போது போன்றிடுங் கண்ணியர் மயக்கிலைப்
போதுமே தளராமல்
மாது காதலி பங்கனே யபங்கனே
மாடமா ளிகைசூழும்
சேது மேவிய ராமநா யகன்றனைச்
சிந்தைசெய் மடநெஞ்சே.

இ-ள். மடநெஞ்சே-அறியாமையோடுகூடிய நெஞ்சமே, காதில் தோலையை-காதிலணிந்த பொன்னோலையை, வரைந்து-சிலுகிட்டு, மேல் குமிழையும் கறுவி - மேற்புறத்துள்ள குமிழும் பூவினையுஞ்சினந்து, வேள்-மன்மதனது, கருநீலப்போது போன்றிடும் - கருநீலப் பூவினையொத்திருக்கின்ற, கண்ணியர்-கண்களையுடைய மாதரது, மயக்கில்-மயக்கத்தில் அகப்பட்டு, எப்போதும் தளராமல்-எப்பொழுதுந் தளராசசியடையாமல், மாது காதலி பங்கனை-ஆசை நாயகியாகிய உமாதேவியைப்பாகத்திலுடையவனை, அபங்கனை-நாசமில்லாதவனை, மாடமாளிகை சூழும் - மாடமாளிகைகள் சூழ்ந்திருக்கிற, ராமநாயகன்றனை - ராமநாதனை, சிந்தைசெய் - சிந்தனைசெய்வாய். எ-று.

" திருபெருக குழையிட்ட பொன்னோலையின் வாகியே " என்ற பெரியோர் கூற்றைக்களைகணைக்கொண்டு தோலை என்றதற்குப்பொன்னோலையென்று பொருளுரைகாகலாயிற்று. குமிழ்-நாசி. நீலம் மன்மதன் பஞ்சபாணங்களிலொன்றுதலால், வேள்கருநீலப்போது என்றார். உயிர்க்கிறுதி பயப்பதனைக்காணின் யாவர்தாம் மயங்கித்தளரார், ஆதலினன்றே, இவர், வேள் கருநீலப்போது போன்றிடுங்கண்ணியர் மயககிலைப்போதுமே தளராமல் என்றதூஉமென்க. குழையைச சிலுகிட்டு" எனமேலோர்கூறலால், வரைந்து, என இவரும் கூறுவாராயினர். சிலுகிடல்-தொளைத்தல். மாது காதலிபங்கனை என்பதற்கு மலைவளர் காதலிபங்கன் எனினுமாம். காதலியாத லானன்றே பங்களித்தானென்க.

12 அண்டமூமாய்ப் பிண்டமூமா யளவிலாத
வாருயிருக் கோருயிரா யமர்ந்தா யானுல்
கண்டவரார் கேட்டவரா ருன்னுலுன்னைக்
காண்பதல்லா லென்னறிவாற் காணப் போமோ
வண்டுளப மணிமார்பன் புதல்வனேடு
மனைவியொடுங் குடிபிருந்து வணங்கிப் போற்றும்

புண்டரிக புரத்தினிலே தாந்தமெனவே
போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே.

இ-ள். வண்துளப மணிமார்பன் வளப்பமாகிய துளசி மாலையையணிந்த மார்பையுடையவிட்டுணு, புதல்வனோடு-புத்திரனோடும், மனைவியோடும்-மனையாட்டியோடும், குடியிருந்து-குடியாயிருந்துகொண்டு, வணங்கி போற்றும்-வணங்கித்துதிக்கின்ற, புண்டரிகபுரத்தினில்-புண்டரிகபுரத்தில், தாதாந்தமெனவே போதாந்தநடம்புரியும்-தாதாந்தமெனவே போதாந்த நடனத்தைசெய்கின்ற, புனிதவாழ்வே-பரிசுத்தவாழ்வே, அண்டமும்ஆய் பிண்டமும் ஆய அண்டபிண்டங்களுமாகி, அளவு இல்லாத-அளவுசெய்தலருமையாகிய, ஓர் உயிருக்கு-நிறைந்த வுயிர்களுக்கு, ஓர்உயிராய்-ஒப்பற்ற வுயிருமாகி, அமர்ந்தாடலால்-நீயமர்ந் திருப்பையாயின், கண்டவர் ஆர்-உன்னைக் கண்டார்யாவர், கேட்டவர் ஆர-கேட்டார் யாவர், உன்னல்உன்னைக் காண்பது அல்லால்-உன்னலுன்னைக் காண்பதன்றி, என் அறிவால்-என்னறிவைக் கொண்டு. காணப்போமோ-காணலாகுமோ. எ-று.

தாதாந்த மெனவே போதாந்த நடம்புரியும் என்றது தாதகித்தலத்தின் முடிவாயுள்ள மகாதீதத்தில் சுட்டுணர்வுக்கெட்டாத நடனஞ்செய்தலே.

"அவனருளாலே யவன்றாள் வணங்கி" என மேலோர் கூறலான் 'உன்னலுன்னைக் காண்பதல்லா லென்னறிவாற காணப்போமோ' என்றார். துளபம் மணி' எனப்பிரித்து, துளசிமாலையையும்கௌஸ்துபமணியையும் தரித்த எனவுரைத்தலுமாம். புண்டரிகம்-புலி. வியாக்ரபாத ரவணங்கின வுறாதலால் இதற்குப் புண்டரிக புரமெனப் பெயரவந்தது. பலியூர் என்பதும் இக்காரணம் பற்றியேவந்தது அன்றி விராட்புருடனது இருதய கமலஸ்தான மென்னலும் பொருந்தும.

13 பொறியிற் செறியைம் புலக்கணியைப்
புரந்திக் கவராற் புகுந்திழுத்து
மறுகிச் சுழலு மனக்குரங்கு
மாளா வாளா விரும்பேனை
அறிவுக் கறிவாய்ப் பூரணமா
யகண்டா னந்த மயமாகிப்
பிறிவற் றிருக்கும் பெருங்கருணைப்
பெம்மா னேயெம் பெருமானே.

இ-ள். அறிவுக்கு அறிவு ஆய்-உணர்வுக குணர்வாகி, பூரணமாய-நிறைவாகி, அகண்ட ஆனந்தமயம் ஆகி-கண்டிக்கப்படாத சுகரூபமாகி, பிறிவு அற்று இருக்கும் - நீக்கமற்றிருக்கிற, பெருங்கருணை - பெருங்கருணையையுடைய, பெம்மானே - பெருமானே, எம்பெருமானே - எம்மிறைவனே,

பொறியில் செறி-பொறிகளிற் றாகுகிற. ஐம்பலக்கணியை - ஐம்பலன்க ளாகிய கனிகளை. புத்திக்கவரால் பருந்து இழுத்து-புத்தியாகிய மரகதப் பில் எறியிழுத்து, மறுகிசசுழலு-மயங்கிசசுழல்கின்ற, மனக்குரங்குமாள-மனமாகிய குரங்கு மடியுமடி, வாளா இருப்பேனே - சும்மா இருப பேனே. எ-று.

அறிவிற்றும் உள்ளீடாயிருந்து அறியுந் தன்மையைக் கொடுப்பவன் இறைவனுதலால், அறிவுக் கறிவாய என்றார், சுமமாவிருத்தல்-நிசசலமா யிருத்தல். "பொன்போல விலகுமனம சஞ்சலத்தாற் குரங்காம்" என மேலோர் கூறலால், இவரும் மறுகிசசுழலு மனக்குரங்கு என்றார். இறை வனே, என்மனம் தானைவற்றிருக்கும்படி சும்மாவிருக்கப் பெறுகேனே என்பது கருத்து.

14 உரைபுணர் விறந்து தம்மை யுணர்பவ ருணர்வி னூடே
சரையிலா வின்ப வெள்ளங் காட்டிடு முகிலே மாறுப்
பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே நின்னைப் பற்றித்
திரையிலா நீர்போற் சித்தந் தெளிவனே சிறிய னேனே.

இ-ள். உரை உணர்வு இறந்து-சொல்லும் அசசொற்களுக்குக் கருவி யாகிய உணர்சசியும் நீறகபபெற்று, தம்மை உணர்பவர்-தம்மையுணர்வா ராகிய அறிஞரது, உணர்வினூடே-அறிவினுள்ளே, கரை இல்லா - கரை யற்ற. இன்ப வெள்ளம் காட்டிடும்-ஆநந்த பெருக்கைக் காட்டுகின்ற, முகிலே-மேகமே, மாறு-நீங்காத, பரை என்னும்-பரையென்று சொல்லப் படுகிற, கிரணம் சூழ்ந்த-கிரணம் சூழப்பெற்ற, பானுவே-சூரியனே, நின் னைப்பற்றி-உனனைப்பற்றி, திரை இல்லா நீர்போல்-அலையில்லாத கடல் போல, சிறியனேன் - சிறியேன், சித்தம் தெளிவனே - மனத் தெளி வடையனோ? எ-று

முகில் என்றது கைம்மாறு கருதாது உபகரித்தலைக்கி. கிரணமில் லாத பானுவினிலை யாமாறுபோலப் பலனில்லா விடைவனில்லை யென் பார, மாறுப் பரையெனுங் கிரணஞ் சூழ்ந்தபானுவே யென்றார. நீர் இவ விடத்துக் கடலுக்காயிறறு பெறற்பாலும் அலைவரும்படி தாவாதிருத்தலை யாகலின். வட நூலாரும் நிலைதரச் சமாதியென்பர்.

15 கேவல சகல நின்றுக் கீழ்ழுரி மேலா யெய்திரும்
மேவிய வருவின் கர்ணப் மேலி _ மேலா னென்பம்
தாவிட மின்பா நீதத தனிபிடை யிருத்தி வைத்த
— தேவெனு மௌனி நீர்போற் சேவடி சித்தை செய்வாம்.

இ-ள். சேவலசகலம் இன்றி-மறப்பு நினைப்புக்களின்றி, கீழொடுமே லாய்-கீழொடுமேலாகி, எங்கும் பேதிய - எவ்விடத்தும் பொருந்திய, அரு ளின்கண் ஆய்-அருட்கண்ணுகி பேரி - அநுபவன் பொருந்தவும், இன்பம் மேலாய்தாவிட - அதிக மேலிட்டுச் சுறக்கவும், இன்பாதீதத்தணியிடை-ஆநந்தாதீதமாகிய தணியிடத்தில், இருதாளிணைவைத்த-என்னையிருத்திவைத்த; தேவன்னும் தெய்வமென்கிறது. மௌனகுரு-மௌனகுருவின், செம்பொன்-செம்பொற்கழலணிய. சேவடி - திருவடிகளை, சிந்தைசெய்வாம்-சிந்தணை பண்ணுவோம். எ-று.

செம்பொன் என்பதற்கு செம்பொன்போன்ற என்னலுமாம். இன்பா தீதத் தணியிடை யிருத்திவைத்த மௌனகுருவின் சேவடியைச சிந்திப் போம் என்பது கருத்து.

16 கேற்றுளா ரின்று மாளா நின்றன ரதனைக் கண்டும்
போற்றிலே னின்னை யந்தோ போக்கினேன் வீணைகாலம்
ஆற்றிலே னகண்டானந்த வண்ணமே யளவின் மாயைச்
சேற்றிலே யின்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே.

இ-ள். கேற்று உள்ளார்-கேற்றுளராயினர், இன்றுமாளா நின்றனர்-இன்று இலரா மாறுமடியாதிருப்பர், அதனை - அவ்வகையாகிய நிலையாமை யைக்கண்டு வைத்தும். நின்னை - சாசுவதருகியவன்னை, போற்றிலேன்-வணங்கிலேனை, அந்தோ-ஐயோ, காலமும்வீணேபோகினேன் - காலத்தை வீணுகவே கழித்தேனை. ஆற்றிலேன் - (இனியிவ்விடமாகவோ) சகிக்கிலேனை, அகண்டானந்தம-அகண்டமாகிய சுகத்தையுடையதாகுகின்ற, அண்ணலே-பெரி யோனே, சிறியனேனை-சிறுமியன், அளவு இல்-அளவு இல்லாத, மாயைச்சேறதிலே-மாயையாகிய அளற்றிலே வீழ்ந்து-அழுந்தி, திளைக்கவோ-இன்னமுந்துன்பதுக்கு உட்படுவிக்கவோ.

"நெருநலுள னொருநாணினை யின்றில்லையெனுமாறு போலுநிலை வாழ்க்கை" எனவும், "நேற்றிருந்தானென்னு மெவரு மிருப்பரால்" எனவும், பெரியோர் கூறுதலுங்காண்க. சிறியனேனை அளற்றிலே சேற்றிலே வீழ்ந்து திளைத்தல் அசுத்தமென்றாயிற்று. நேற்றிருந்தார் இன்றிலரால் கண்டும் உனைநேப் போற்றிலேனை, பிழைவாறு யாதிருத்தல், இன்னமும் அளவற்ற மாயையாகிய சேற்றில் கண்ணீர்த்தழுந்திக் துன்புறுகவோ வானறிந்திலேன என்பது கருத்து.

17 போத மென்பதி னிலதெனுமாயை மனத்தைவெளாய் பிரளாமே
தீதி லாவிளாக கெடுதகிரு பேடவுற் சிக்கா
தாத லாலறி வாய்நின்ற விடகதறி யாமை
ஏது மில்லியென் றறாயிரான் கருதிடே னிப்பாவம்

இ-ள். போதம் என்பதே அறிவென்று சொல்லப்படுவதே. விளக்கு ஒளியும்-தீபத்தையொக்கும். அவிழாத அகக்கண்ணாளரே. பொய் இருள் அம் பொய்யாகிய இருளாகியவாக்கும், நீது இல்லா குற்ற மில்லாத, விளக்கு வடித்து-தீபத்தை ஏற்றி, கொண்டு, இருள் தேடவும்-இருளைத் தேடினாலும், கிக்காது-கிடைக்காது, புதலால் - ஆகையால், அறிவாய் நின்றவிடத்து-ஞானமயமாய் நின்றவிடத்தில், அறியாமை - அஞ்ஞானமானது, எதும் இல்லையென்று-சிறி தாயில்லையென்று, எம்பிரான் சுருதியே-எமதினைவனு லருளிசெய்யப்பட்ட வேதங்களே, இயம்பும்-கூறுகிற்கும். எ-று.

விளக்குக்குத் தீது இண்மையாவது கெய் திரி தூண்டுகோல் முதலி யவை குறையாதிருத்தல். "விளக்குப் புகவிருண்மாயுந் தாகரு" என்றா மேலோரும். விளக்குக்கெதிரில் இருள் நில்லாததுபோல, ஞானத்துக் கெதிரில் அஞ்ஞானம் நில்லாதென்பது கருத்து.

18 சுருதி யேகிவாக மங்களே யுங்களாறு சொல்லுமை
ஒருத னிப்பொரு ளளவையீ தென்னவா யுண்டோ
பொருதி ரைக்கட லுண்மணி லெண்ணினும் புகலக்
கருத வெட்டிடா நிறைபொரு ளளவைபார் காண்பார்

இ-ள். சுருதியே ஏகவாகமங்களே. சிவாகமங்களோ சைவாகமங்களே; உக கரானே சொல்லுமாறு-உய்ச ரால் பிரதிபாதிக்கப்படுகிற. ஒரு தனிப்பொருளா அளவை-ருந் தனிப்பிரமாணமானது அளவுபடாதது, எது எண்ணு-இது முன்னைய தனிப்பொருளாகுமென்று சொல்ல. வாய உண்டோ-வாகாதன்றோ, பொருதி ரைக்கடல் கரையை மோதியழிக்கிற அலைகளையுடைய கடலிலுள்ள, நுண்மணல் எண்ணினும்-நுண்ணிய மணலை எண்ணினாலு மெந்நாளையேற்படுத திருந்தாலும், புகலகருத-இத்தனையைக்கொண்டு சொல்லவும் மனத்தி னால் நினைக்கவும் எட்டாதாகையால், நிறைபொருள் அளவை-பரிபூரணப் பொருளினளவை யார்காண்பார்-யாவர்காணவல்லார். எ-று

சுருதி இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பது ஒரு வழக்கிலுள்ள பெயரைக் குறிக்கும். சுருதிகளோ சிவாகமங்களே, உயிர்களாற பிரதிபாதிக்கப்படுகிற இறைவனது அளவையை யாவர்காணவல்லார் என பது கருத்து.

19 நின்னை போன்றன வகிலமென் றறிந்துமெய்ப் பொருளாம்
உனையே போன்றநற் பரமபொரு ளில்லையென் றேர்ந்து
பொன்னை போன்றநின் பாதங்கொண் டுன்பணி பொருக
என்னை போன்றுளர் வேறையர் யாவரே [தா

இ-ள். அகிலம்-பிரபஞ்சங்கள், நின்னேப்போன்றன என்று அறிந்து (நிலையாமையால்) நின்னலையொத்தன வென்றுணர்ந்து, மெய்பொருள் ஆம்-உண்மைப் பொருளாகிய, உன்னேப்போன்ற - உன்னேயொத்த, கல் பரம்பொருள்-நன்மையைத் தருகின்ற மேலான பொருள், இல்லையென்று-உணர்ந்து-இல்லை யென்றுறாய்ந்ததிகத, பொன்னேப்போன்ற-பொன்போலச் சிறந்த, நின்போதகங்கொண்டி-யீயருளிய ஞானத்தைக்கொண்டு, உன்பணி பொருந்தா - உன்திருத் தொண்டைப் பொருந்தாத, என்னேப்போன்று உள்ள-என்னே யொத்துள்ள, ஏழையர்-அறிவிலிகள், ஐய-ஐயனே, இங்கு ஈதோ-இவ்வுலகத்தில் யாவர் (ஒருவருமிலர்.) எ-று.

ஓதல்-அளவைகளால் ஞராய்தல். பிரபஞ்சம்-பஞ்சபூதங்களானகிய பௌதிகத்திரள் "நினனினிலையிலமன்னுயிராக்கைகள்" என்பதற்கேற்ப இவரும் நின்னேப போன்றனவகிலம், எனறார். பிரபஞ்சம், போன்ற பொய்ப் பொருளுமில்லை, நிறைவனேப்போன்ற மெய்ப்பொருளுமில்லை யென்பது கருத்து.

20 தாயுந் தந்தையு மெனக்குற வாவதுஞ் சாற்றின்
ஆயு நீயுநின் னருளுநின் னடியரு மன்றே
பேய னேன்றிரு வடியிணைத் தாமரை பிடித்தேன்
நாய னேயெனை யாளுடை முக்கண நாயனே.

இ-ள். தாயும் - அன்னையும், தந்தையும் - பிதாவும், எனக்கு உறவு ஆவதும் - எனக்குச சுற்றமாவதும், சாறறின் - சொல்லுமிடத்தில், ஆயும்-அறிஞராலாராயப்படுகின்ற, நீயும்-நீயும், நின் அருளும்-உன் திருவருளும், நின் அடியரும்-உன்னடியாரும், அன்றே-அல்லவோ, பேயனேன்-பேயை யொப்பேன், திருவடி-உன் திருவடியாகிய, இணைத்தாமரை பிடித்தேன்-இரண்டு தாமரைமலர்களேப் பற்றினேன், நாயனே-நாதனே, என்னே ஆள் உடை-என்னே யடிமையாகவுடைய, முக்கண் நாயனே-மூன்று கண்களே யுடைய தலைவனே. எ-று.

இறைவன் தந்தையாகவும், திருவருட்சத்தி தாயாகவும், அடியார் உறவினராகவும் கொள்க. "விடையதனிறையே தாதை மறறவன் பான மின்னெமதன்னை" என்றார் பிறரும். ஐய-தாய் எனினுமாம். தாமரை திருவடியிணை யென்றது, திருவடியிணைத் தாமரையென்றது அடித்தன் மை குறைத்து தாமரைத் தன்மை மிக்கிருத்தலானென்க.

21 காந்தமனை யெதிர்காணிற் கருந்தாது செல்லுமதுக்
காந்தத் தொன்றே
தேய்ந்தவிட மெங்கேதா னங்கேதான் சலிப்பறிவு
மிருக்கு மாபோல்

சாந்தபதப் பரம்பொருளே பற்றுபொரு ளிருக்குமத்தாற்
சலிக்குஞ் சித்தம்
வாய்ந்தபொரு ளில்லையெனிற் பேசாமை நின்றநிலை
வாய்க்கு மன்றே.

இ-ள். காந்தமதை - காந்தத்தை, எதிர்காணின் - எதிரிற்கண்டால், இருந்தாது-இரும்பானது, செல்லும்-அதனிடைச சென்றுவிழும், அக்காந்தத்து ஒன்றுது - அந்தக் காந்தத்தோடு பொருந்தாமல், எய்ந்த இடம் எங்கே-ஒழிந்துநின்ற இடமெங்கே, அங்கே-அவ்விடத்தில், சலிப்பறவும் இருக்குமாபோல் - சலந மில்லாதிருக்கு மாறுபோல, சாந்தபதம் பரம் பொருளே-சாந்தபதமாகிய பரவஸ்துவே, பற்றபொருள் - பற்றுதற்குரிய பொருள், இருக்குமத்தால் - இருப்பதனால், சித்தம சலிக்கும்-மனமசையாநிற்கும், வாய்ந்த பொருள் இல்லையெனின் - பொருந்திய பொருள் இல்லையாயின், பேசாமை நின்றநிலை - பேசாதுநின்ற நிலை, வாய்க்கும் - கிடைக்கும். எ-று.

தாது உலோகம். காணின் - இலக்கணை. மனத்துககு விடயததின் எதிரீடிண்மையாற் சலியாநின்றது அவ்வெதிரீ டின்றுயின் அசைவற்றுநிற்கும் என்பதாம் "செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்குங் காந்தசிலை மலை முன்னிரும்புகள் சேட்டிக்குமாபோல்" என்றார் பிறரும்.

22 பொற்பு றுங்கருத் தேயக மாயதிற் பொருந்தக்
கற்பின் மங்கைய ரெனவிழி கதவுபோற் கவினச்
சொற்ப னத்தினுஞ் சோர்வின்றி யிருந்தநான் சோர்ந்து
நிற்ப தற்கிந்த வினைவந்த வாறென்கொ னிமலா.

இ-ள். நிமலா - நிர்மலனே, கற்பின்மங்கையர் என - கற்பினையுடைய மகளிர்போல, பொறபு றுறும்கருததே - அழகுமிக்க கருத்தே, அகமாய்-வீடாக, பொருந்த-பொருந்தவும், விழி-கண்கள், கதவுபோல் கவின-கதவு போல அழகு செய்யவும், சொற்பனத்தினும்-கனவினும், சோர்வு இன்றி இருந்தநான் - சோாவில்லாம லிருந்தநான், சோர்ந்துநிற்பதற்கு-சோர்ந்து நிற்குமாறு, இந்த வினைவந்த ஆறு என்-இந்தக்காமம் உண்டான விதம் யாது. எ-று.

நிர்மலனே, உன்னையடுத்த எனக்கு இந்தக்கர்மம் வரலாமோ என்பது கருத்து.

23 வந்தவா றிந்த வினைவழி யிதுவென மதிக்கத்
தந்தவா றுண்டோ வுளிருணர் விலையன்றித் தமியேன்
நொந்த வாறுகண் டிரங்கவு மிலகற்ற நூலால்
எந்த வாறினித் தற்பரா வய்குவே னேழை.

இ-ள். வந்தவாறு-வந்தவிதம், இந்தவினைவழி இது என-இந்தக்கர்ம மார்க்கமாகிய இதுவென்று, மதிகெ-மதிதளர்ந்தற்ற குரிய, உள்ளுணர்வு தந்தவாறு உன்றோ-உள்ளுணர்ச்சியைத் கொடுத்த தண்டோ, இல்லை-இல்லை அன்றி-அல்லாமலும், தாயேன்-அடியேன், தொந்தவாறுகண்டு-வருந்தினபடியைக கண்டு, இரங்கவும் இல்லை-இரங்கியருளவுமில்லை, தற்பரா-தற்பரனே, ஏழை-அறிவிலியாகிய நான், கற்றநூலால் கற்ற தூலுணர்ச்சியால், எந்தவாறு - எந்தவகை, இனி உய்குவேன் - இனிபிழைப்பேன். எ-று.

நீயுள்ளுணர்ச்சியைக் கொடாவிடின், நூலுணர்ச்சியால் அடியேனுய்கிலே னென்பதாம்.

24 சொல்லாலும் பொருளாலு மளவையாலும்
தொடரவொண்ணு வருணெறியைத் தொடர்ந்துநாடி
நல்லார்க ளவையகத்தே யிருக்கவைத்தாய்
நன்னர் நெஞ்சந் தன்னலமு நணுகுவேனே
இல்லாளி யாயுலகோ டியிரையின்றிட்
டெண்ணரிய யோகினுக்கு மிவனே யென்னக்
கல்லாலின் கீழிருந்த செக்கர் மேனிக்
கற்பகமே பராபரமே கயிலை வாழ்வே.

இ-ள். இல்லாளியாய்-குடும்பஸ்தனுய், உலகோடு-உலகங்களோடு, உயிரை அவற்றிலுள்ள உயிர்களையும், ஈன்றிட்டு-தோன்றுவித்து, எண்ணரிய - நினைத்தலருமையாகிய, யோகினுக்கு - யோக மார்க்கத்துக்கும், இவனே என்ன-இவனே சிறந்தவனென்று சொல்லும்படி, கல்லாலின்கீழ் இருந்த-கல்லாலமரத்தினடியில வீற்றிருந்த, செக்கர் மேனி-செந்நிறமுள்ள, கற்பகமே கற்பகமரமே, பராபரமே-பராத்பரவஸ்துவே, கையே வாழ்வே-கையேயில்வாழுகின்றவனே, சொல்லாலும்-சப்தத்தாலும், பொருளாலும் - அர்த்தத்தாலும், அளவையாலும் - அளவைகளாலும், தொடரவொண்ணு பற்றக்கூடாத, அருள் நெறியை-அருள் வழியை, தொடர்ந்து நாடி-பற்றிநாடி, நல்லார்கள் அவையகத்தே-நல்லோர்சபையின்கண், இருக்கவைத்தாய்-இருக்கவைத்தலே, நன்னர் நெஞ்சம் தன் நலமும் - நல்ல மனத்தினது பேற்றையும், நணுகுவேனே அடைவேனே. எ-று.

அடியாரா நினைப்பவை யாவு மொருங்கெளிதலால் கற்பகம் எனவும், விண்ணுலகத்துக் கற்பகதரை வேறுபடுகக், கலலாலின் கீழிருந்த செக்கர் மேனிக்கற்பகமே எனவும் கூறினார்.

25 | சாக்கிரமா நுதலினிற் றிரியம பத்தும்
சகதாதி வசனாதி வாயு பத்தும
நீக்கமிலுங் தக்காரணம புருட னோடு
நின்றதுமுப் பாழினது நிலவுகண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயு பதத்தும்
அடுத்தனசத் தாதிவச னாதி யாக
நோக்குகர ணம்புருட னுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே

இ-ள். இந்திரியம்பத்தும்-ஞானேந்திரியக்கரும், சத்தாதி வசனாதி(பத்தும்) - சத்தாதி வசனாதிகளாகிய விடயங்களபத்தும், வாயு பத்தும்-வாயுக்கள்பத்தும், நீக்கம் இல்-நீங்காதலில்லாத, அந்தக்கரணம் - அந்தக்கரணங்கள் நான்கும், புருடனோடு-ஆன்மாவோடு, மூப்பான் றுரி-மூப்பத்தைந்தும், நுதலினில் நின்றது-இல்லாடத்தில்நின்ற அவஸ்த்தை, சாக்கிரம்-சாகிரா வஸ்தையாகவும, நிலவும-விளங்குகின்ற, கண்டத்து கண்டத்தில், ஆகிய-உண்டாக்கப்பட்டிருக்கிற, சொப்பன மதனில்-ஸ்வப்னாவஸ்தையில், வாயுபத்தும்-தசவாயுக்களும், அடுத்தன அடுத்திருப்பனவாகிய, சத்தாதிவசனாதியாக-சத்தாதிவசனாதிகளாகியதசவிஷயங்களாக, நோக்குபார்க்கப்படுகிற, கரணம்புருடனுடனேகூட-அந்தக்கரணங்கள் நான்கும் ஆன்மாவோடு கூடிநிற்க, இருபதைந்து-இருபத்தைந்து தத்துவங்களாகவும், நுண்ணியோர்-நுண்ணறிவினர் (சொல்லலாகிற்பர்). எ-று.

இந்திரியம பத்தாவன-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரிய மைந்தும, வாக்கு பாதம பாணி பாயு உபஸ்தம் என்னும் கர்மேந்திரியங்க ளைந்துமாம. சத்தாதி வசனாதிகளாகிய விடயங்கள் பத்தாவன-சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்கள், ஆகிய ஞானேந்திரிய விடயங்கள் ஐந்தும, வசன, கமன, தான, விஸர்ஜன, ஆனந்தங்களாகிய காமேந்திரிய விடயங்கள ஐந்துமாம. வாயு பத்தாவன-பிராணன, அபானன், சமானன், உதானன, வியானன், நாகன், கூர்மன், கிருகரன, தேவதத்தன், தனஞ்சயன் என்பன. அந்தக்கரணம நான்காவன-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

26 சூழ்த்தியித யந்தனிற்பி றாணஞ் சித்தம்
சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்
வழுத்தியநா பியிற்றுரியம் பிரர்ண னோடு
மன்னுபுரு டனுங்கூ டையைய்தா நிற்கும

அழுத்திடு முழலந்தன்னிற் றுரியா தீதம்
அதனிடையே புருடனென்றி யமரு ஞானம்
பழுத்திடும்பக் குவரறிவு வாவத்தை யைநிற
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசதானே.

இள். இதயம் தன்னில்-இதயஸ்தானத்தில், சுழுத்தி-சுழுத்தியவஸ்த்தை யுளதாம் (அவஸ்தைகளில் நிற்குங்கருவிகள்) பிராணம்-பிராணவாயு, சித்தம்-சித்தம், சொலலரிய-சொல்லுதற் கரிதாகிய, புருடனுடன்-ஆன்மாவோடு, மூன்றதாகும மூன்றாகும், வழுத்திய - சொல்லப்பட்ட, நாபியில்-நாபீஸ்தானத்தில், துரியம - துரியாவஸ்த்தையுளதாம், (அவஸ்தைகளில்) பிராணனெனு-பிராணவாயுவோடு. மன்னு-நிலைபெற்ற, புருடனும்-ஆன்மாவும், கூட-கூடவே வியாபகமாயிற்கும்-பிரகாசியாயிற்கும். அழுத்திடும் மூலத்தன்னில்-அழுத்துதற்குரிய குதஸ்தானத்தில், துரியாதீதம்-துரியாதீதாவஸ்தையுளதாம், அதனிடை-அதனிடத்தில், புருடன் - ஆன்மா. ஒன்றி அமருமை-தனித்து அமர்ந்திருக்குமை, (இவ்வாறு) அவத்தை ஐந்தில்-பஞ்சாவஸ்தைகளிலும பாகுபெற பாகமாக, கருவி நிற்கும்பரிசு-கருவிநிறுக்குந்தன்மையை, ஞானம்பழுத்திடும பகருவர் அறிவா - ஞானம்முதிர்ந்த பக்குவிகள் அறிவார்கள், எ-று

இந்த அவஸ்த்தா பஞ்சகத்திற் கருவிகள்நிறுகும் தன்மையை ஞானிகள் அறிவார்களேயன்றி மற்றையர் அறியார் என்பதாம்.

27 இடத்தைக் காத்திட்ட சுவாவெனப் புன்புலா லிறைச்சிச்
சடத்தைக் காத்திட்ட நாயினே னுன்னன்பர் தயங்கும்
மடத்தைக் காத்திட்ட சேடத்தால் விசேடமாய் வாழ
விடத்தைக் காத்திட்ட கண்டதேசாய் கின்னருள் வேண்டும்

இ-ள். இடத்தை-(பரமாணது) இடத்தை, காத்திட்ட-காத்திருந்த. சுவா எனநாய்போல, புன்புலால இறைச்சி-புல்லிய புலால் நாற்றம் வீசுகின்ற மாமிசத்தை லாகபப்பட்ட. சடத்தை-சரீரத்தை. காத்திட்ட காத்திருந்த, நாயினேன்-நாயேன், உன் அன்பர் தயங்கும-உன்னடியார்கள் தஞ்சநிக்கிற, மடத்தை-மடத்தினை காத்திட்ட-காத்திருந்து, சேடத்தால்-பரிகல சேஷத்தால், விசேடமாய் வாழ-பெருமைபெற்று வாழ்வதற்கு, விடத்தைக காத்திட்ட கண்டதேசாய்-விஷத்தைத் தடுத்திருத்தின திருமிடற்றை யுடையாய், நின் அருளை வேண்டும - உனதிருபாவி சேஷம் அடியேனுக்கு வேண்டுமை எ-று

தயங்குதல் - விளங்குதல் எனினுமாம். மடம் - முறிவாவாசம. உன் அன்பா என்றமையால் தாம அன்பரல்லாதவை பிறப்பிடம். படவே, அன்பனல்லாத நாணும் உன்னருள் வேண்டுமென்றால் பொருததமன்றே

யினின், அற்றன்று, அபோக்யமான நஞ்சை, போக்யமாகக் கொண்டீர், அன்பனல்லாத எனக்கும் அருள்புரிதல் பொருத்தமேயென்னும் பொருள் போதரலானென்க.

28 வாத னேப்பழக் கத்திலென் மனமந்த மனத்தால்
ஓத வந்திடு மூரையுரைப் படிதொழி லுளவாம்
ஏத மம்மன மாயையென் றிடிற்கண்ட வெல்லாம்
ஆத ரஞ்செயாப் பொய்யதற் கையமுண் டாமோ.

இ-ள். வாதனைப் பழக்கத்திலுல் மனம்-வாசனைப் பழக்கத்தால் மன மூளதாகும், ஓத-சொல்ல நீடத்து, அந்தமனத்தால்-அந்த மனத்திலுல், உரைவந்திடும்-சொல்லுண்டாம். உரைப்படி-சொல்லின்படியே, தொழில் உள ஆம்-தொழிலுண்டாம், ஏதம் அம்மனம்-குற்றத்தையுடைய அந்தமன மானது மாயை என்றிடின் மாயையென்று அறிஞராற்சொல்லப் படுமா யின், கண்ட எல்லாம் - காணப்பட்டன வெல்லாம், ஆதரம்செய்யா-விரும் பத்தகாத, பொய் மித்தையேயாம். அதற்கு-அப்படி சொல்வதற்கு, ஐயம் உண்டாமோ-சந்தேகமும் ஒருவர்க்குளதாமோ. எ-று.

மாயாப்ர பஞ்சமெல்லாம் மநோவிகாரமே யென்றற்கு ஏவ வு கூறினர். மனத்தின்வழியது சொல், சொலலின் வழியது தொழில என்ப தாம். "தோன்றின மறையும்" எனமேலோர் கூறலால், கண்டவெல்லாம ஆதரஞ்செயாப் பொய், என்றார்.

29 ஐய வாதனைப் பழக்கமே மனதினை வதுதான்
வைய மீதினிற் பரம்பரை யாதினு மருவும்
மெய்யி னின்றெழுவிர் பெரியவர் சார்வுற்று விளங்கிப்
பொய்ய தென்பதை யொருவிமெய் யுணருதல் போதம்.

இ-ள். ஐய - ஐயனே, வாதனைப் பழக்கமே மனதினை வு - வாசனைப் பழகமே மனத்தினெண்ணங்கள், அதுதான் - அவவாசனைப்பழக்கமே, வையம்மீதினில் - உலகத்தில், பரம்பரை - பாரம்பரியமாயத் தொடாகது வருவது. யாதினும மருவும் - எல்லாப் பொருள்களுள்ளும் வியாபித்திருக் கிற, மெய்யில் - உண்மைப் பொருணிலையில், தினறு-நிலைத்து, (அதனல்) ஒளிர் - பிரகாசிக்கிற, பெரியவர் - பெரியோர்களுடைய, சார்வு உற்று விளங்கி சார்பையடைந்து விளகி பொய்ய தென்பதை ஒருவி - பொய் யென்று சொல்லப்பட்டவற்றை நீகி, மெய் உணருதல் யதார்த்தத்தை யறி தலே, போதம்-அறிவு. எ-று.

ஆயினும் மருவும் எனுமிடத்தில் எட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றது, அந்தப் பாடத்தகது, பாரம் பரியமேயாயினும எனப்பொரு ளுரைத்துக் கொள்க. கனவுள்ளளவும் பயிர்செழியா வாறுபோல பொய்யுள்ளவும்

மெய் செழியாதாதலால், பொய்ய தென்பதை யொருவி மெய்யுணருதல் என்றார். "ஐயறிவறிந்தவை யடங்கினர்களேனும், மெய்யறி விலாதவர்கள் வீடதுபெறுரே" என்றார் மேலோரும்

30 குலமி லான்குணங் குறி யான் குறைவிலான் கொடிதாம்
புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
மிலமி லான்மைந்தர் மனைவியில் லானெவ னவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே.

இ-ள். (முற்பாட்டில் பெரியவர் என்றார், அவர்க்கிலக்கணம் இப்பாட்டிற் கூறுகின்றார்,) குலமில்லான் - குலமில்லாதவனும், குணம் குறி இல்லான்-குணங்குறிகளில்லாதவனும், குறைவு இல்லான் - தாழ்வில்லாதவனும், கொடிது ஆம்புலம் இல்லான் - கொடிதாகிய விஷயப்பற்றில்லாதவனும், தனக்கு என்ன-தனக்கென்று, ஓர்பற்று இல்லான் ஒரு ஆதாரமில்லாதவனும், பொருந்தும் இல்லம் இல்லான்-பொருந்துகின்ற வீடில்லாதவனும், மைந்தர்மனைவி இல்லான் - புத்ரகளத்ரர்களில்லாதவனும், எவன்-யாவன், அவன் - அவனே, சஞ்சலம் இல்லான்-சலரமற்றவனும், முத்தி தரும் பரசிவன்-மோக்ஷத்தைத் தருதற்குரிய பரமசிவனும் ஆவன், எனத் தகும்-என்று சொல்லத்தகும். எ று.

'நரன்சுரன் ஞானியாமென்பது நன்றல - பிரமமே ஞானியாம்' என மேலோர் கூறலான், இவரும் ஞானியை, பரசிவன் எனத்தகும் என்றார்.

31 கடத்தை மண்ணென வுடைந்தபோ தோவிருதக் கருமச்
சடத்தைப் பொய்யென லிறந்தபோ தோசொலத் தருமம்
விடத்தை நல்லமி தாவுண்டு பொற்பொது வெளிக்கே
நடத்தைக் காட்டியெவ் வுயிரையு நடப்பிக்கு நலத்தோய்.

இ-ள். விடத்தை நஞ்சை, நல் அமிர்து ஆ உண்டு-சிறந்த அமிர்தமாகக கொண்டுண்டு, பொன்பொது வெளிக்கு - பொன்னம்பலமாகிய வெளியில், நடத்தைக்காட்டி - நடநஞ்செய்து, எவ்வுயிரையும்-எல்லாவுயிர்களையும், நடிப்பிக்கும்-ஆட்டுகின்ற, நலத்தோய் - உபகார சீலமாகிய நன்மையை யுடையவனே. கடதை - மட்குடத்தை, உடைந்த போதோ-உடைந்த பொழுதிற்றானே, மண் எனசொலத் தருமம் - மண்ணென்று சொல்லத் தருமமாகும், இந்தக் கருமசடதையை இந்த வினையத்தான் வந்த சரீரத்தை. இறந்தபோதோ-இறந்த பொழுதிற்றானே, பொய்யெனச சொல்லத்தருமம்-பொய்யென்று சொல்லத் தருமமாகும். எ-று.

குடம் நியாதிருக்கச செய்தே மண்ணென்றல் போல, இசசரீரமும் நியாதிருக்கச செய்தே பொய்யெனலா மென்பது கருத்து. ஒருவிபத்தில் நின்று மீண்டவன் உள்ளக்களிப்பாற் கூத்தாட லியற்கையன்றே. இறைவனும் இறுதிபயக்கு நஞ்சையுண்டு அமிர்தாகஇக் கொண்ட களிபபாற் கூத தாடினனென்க. இறைவன் உயிருக் குயிராதலால், அவன்நடிக்க எல்லாவுயிர்களும் நடியாநின்றன வென்றற்கு, நடத்தைக்காட்டி யெவ்வுயிரையு நடிப்பிக்கு நலத்தோய் என்றார். தீமையாகிய இறப்பை யொழித்தலால் அமிர்தநல் என்னும் விசேடணத்தோடு கூடிநின்றது பொதுநடம் என்றது இறைவன் சிதாகாயத்தினின்று பஞ்சக்கிருத்யங்களையும் நிகழ்வித்தலே

32 நானெனவு நீயெனவு மிருதன்மை நாடாம
னடுவே சும்மா
தானமரு நிலையெனவே சத்தியஞ்சத் தியமெனநீ
தமிய னேற்கு
மோனகுரு வாகியுங்கை காட்டினையே திரும்பவுநான்
மூளாத்துத் தோன்றி
மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே பரந்தேனே
வஞ்ச னேனே.

இ-ன். நான் எனவும் - நானென்றும், நீ எனவும்-நீயென்றும், இரு தன்மை நாடாமல் - இருவேறு வகையாகப் பிரித்துணராமல், நடுவே-இடையாக, சும்மாதான அமருந்நிலை இதுவே - சும்மாவிருக்கின்ற நிலையாகிய இதுவே. சத்தியம் சத்தியம் என-உண்மை யுண்மை யென்று, நீ - நீ, தமியனேற்கு - தமியேனுக்கு, மோனகுரு ஆகியும் - மௌன குருவாகியும வந்து, கைகாட்டினையே-கையமைத்து உண்மை நிலையைக் காட்டினையே, (அவ்வாறாகியும) திரும்பவும்-மீட்டும், நான்மூளாதுத் தோன்றி - நான் அழகுரிதது வெளிபபட்டு, மானதமார்க்கம் புரிந்து - மானஸ மார்க்கத்தையே விரும்பி, இங்கு இவ்விடதது, அலைந்தேனே - திரிந்தேனே, பரந்தேனே வீணாகளிற் பரவினேனே, வஞ்சனேன்-பாவியேனாதலால். எ-று

மானதமார்க்கம் - மனமபோன தெறியேபோதல். நீ மௌனகுருவாகிவந்து, அபேதமாய்ச சும்மாவிருத்தலே உண்மை நிலையென்று கையமைத்தும, நான்பாவி யாதலால், இன்னமும எண்மனம் செல்லும்வழியே செல்லாநின்றேன் என்பது கருத்து.

33 தன்மயஞ சுபாவஞ சுத்தந் தண்ணருள் வடிவஞ சாந்தம்
மின்மய மான வண்ட வெளியுரு வான பூர்த்தி
என்மய மெனக்குக் காட்டா தெதீனையப கரிக்க வந்த
சின்மய மகண்டா காரா தசஷிணை திக்க மூர்த்தம்.

இ-ள். தகஷிணதிக்க மூர்த்தம்-தகஷிணா மூர்த்தமானது, தன்மயம்-தன்மயமும், சுபாவம் - சுபாவமும். சுத்தம் - சுத்தமும், தண் அருள் வடிவம்-குளிர்ந்த அருளுருவமும், சாந்தம்-சாந்தமும், மின்மயமான-மின்னுருவான, ஆண்டவெளி-ஆண்டவெளியில், உருவான-உருவாகின்ற, பூர்த்தி-நிறைவும், என்மயம் என்னுருவத்தை, எனக்குக்காட்டாது - எனக்குக் காட்டாமல், என்னை அபகரிக்கவந்த-என்னைக் கவரவந்த, சின்மயம் - ஞானரூபமும், அகண்டாகாரம்-அகண்டாகாரமும் ஆம். எ-று.

என்மயம் என்றது ப்ரகருதி வயப்பட்டிழலும் அஞ்ஞான ரூபத்தை. எல்லாந் தானே பாயிருத்தலால் தன்மயம் என்றும், செயற்கையற்று இயற்கையாயே யிருத்தலால் சுபாவம் என்றும், உயிர்களின் மலவழுக்கைப் போக்குதலால் சுத்தமென்றும், கிருபாரூபமா யிருத்தலால் தண்ணருள் வடிவம் என்றும் முத்தாபக் கோடை தணிந்து விசிராந்தி யடைதற்கிடமா யிருத்தலால், சாந்தம் என்றும், சிதாகாயத்தில் தேஜோ ரூபமாய் விளங்கலால் மின்மயமான வண்ட வெளியுருவான பூர்த்தி என்றும், சீவ போதத்தையறக் கெடுத்தலால் என்மயமெனக்குக் காட்டாதெனை யபகரிக்க வந்த சின்மயம என்றும், கண்டிக்கப் படாதிருத்தலால் அகண்டாகாரம் என்றுங் கூறினர்.

34 சிற்ற ரும்பன சிற்றறி வாளனே தெளிந்தால்
மற்ற ரும்பென மலரெனப் பேரறி வாகிக்
கற்ற ரும்பிய கேள்வியான் மதித்திடக் கதிச்சீர்
முற்ற ரும்பிய மௌனியாய்ப் பரத்திடை முளைப்பான்.

இ-ள். சிற்றரும்பு அன்ன - சிற்றரும்பையொத்த, சிற்றறிவாளனே தெளிந்தால்-சிற்றறிவனாகிய ஜீவனே தெளிவனாயின், மற்று அரும்பு என-பேரரும்பு போலவும், மலர் என-மலர்போலவும், பேர் அறிவு ஆகி-பேரறிவையுடையனாகி, கற்று - கற்பிக்க வேண்டி மறிவு நூல்களைக்கற்று, அரும்பிய கேள்வியால் - உண்டாகிய கேள்விகளால், மதித்திட-யாவரும் மதிக்கும்படி, கதிசீர் முற்ற அரும்பிய-நற்கதிக்குரிய சீரிய குணங்களெல்லாம் ஊறினாகிய, மௌனி ஆய்-மௌன நிலையையுடையவனாகி, பரத்திடை முளைப்பான்-மோக்ஷ நிலத்தில் முளைப்பான். எ-று.

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்-வரனென்னும் வைப்புக் கோர்வித்து" என்றார் மேலோரும். இஞ்சிஜ்ஞனே மெய்யறிவால் சர்வஜ்ஞனாவனென்பதாம்.

35 மபர்க்ஷ சிந்தனே தெளிவென விருநெறி வகுப்பால்
நயக்கு மொன்றன்பா லொன்றிலை யெனனல வழக்கே

இயக்க முற்றிடு மயக்கத்திற் றெளிவுற லினிதாம்
பயக்க வல்லதோர் தெளிவுடை யவர்க்கெய்தல் பண்போ.

இ-ள். மயக்கு கின்றனை (என)-மயக்கப்பட்ட மனமெனவும், தெளிவு என-அந்த மனத்தெளிவு எனவும், இருநெறி வகுப்பால்-இரண்டு மார்க்கத் தின் பிரிவினால், நயக்கும்-விரும்பப்பட்ட, ஒன்றன்பால் - ஒன்றினிடத்து, ஒன்று இல்லையெனல் - ஒன்றில்லையென்று சொல்லுதல், நல்வழக்கே-நல் வழக்கேயாம், இயக்கம் உற்றிடும் மயக்கத்தின்-சஞ்சரிக்கிற மயக்கத்தி னும், தெளிவுறல் இனிது ஆம் - தெளிவடைதல் இனிதாகும், பயக்கவல் லது-பயன்படுதல் வல்லதாகிய, ஓர் தெளிவுடையவர்க்கு-ஒப்பற்ற தெளி வினையுடையவர்க்கு, எய்தல் - மயக்கம் வந்து சேருந்துதல், பண்போ-குணமாமோ, எ-று.

மயக்கமும் தெளிவும் ஒன்றற்கொன்று முரணுடைப் பொருள்களாத லால், தெளிவுடையாரிடத்து மயக்க முண்டாதல் பொருத்தமன் றென்ப தாம்.

36 அருள்வடி வேழு மூர்த்த
மவைகள்சோ பாந மென்றே
சுருதிசொல் லியவாற் றூலே
தொழுநதெய்வ மெல்லா மொன்றே
மருளெனக் கில்லை முன்பின்
வருநெறிக் கிவ்வ ழக்குத்
தெருளின்முன் னில்லையா முன்னைச்
சேர்ந்தியான் தெளிகின் றேனே.

இ-ள். அருள்வடிவு எழுமூர்த்தம் (என்று)-உன்னருளுருவானது எழு மூர்த்தமா யிருக்குமென் றும, அவைகள் - அந்த மூர்த்தங்கள், சோபாநம் என்று-(உன்னை யடைதற்குப்) படிகளாமென்றும், சுருதிசொல்லிய ஆற் றூலே-வேதங்கள் சொன்ன பிரகாரத்தாலே, தொழும் தெய்வம் எல்லாம் ஒன்றே-(எசசமயத்தாரும்) தொழுகின்ற கடவுள் ஒருவனே, முன்பின்வரு நெறிக்கு-முன்னும் பின்னும் வந்ததும் வரப்போவதுமாகிய வழிக்கு, எனக்கு மருள் இல்லை எனக்கு மயக்கமில்லை, தெருளின்-தெளிவாக, முன்னிலை ஆம் உன்னை-எனக்குப் பிரத்தியக்ஷமாகிய நின்னை, சேர்ந்து - அடைந்து, இவ்வழக்கு-இந்தவழக்கை, யான் தெளிகின்றேன் - நான் தெளியாநின் றேன். எ-று.

எழுமூர்த்தம்-எழுருவங்கள். அவை, திருமால், இந்திரன், பிரமன், உபமன்யு, சூரியன், நந்தி, முருகன் என்னு மிவ்வேழுருவங்கள். இவ்வாறன்றி, சதாசிவன், அநந்தன், சீகண்டன், அம்பிகை, கந்தர், திருமால், பிரமன், இவர்களுருவங்களென்றுங கூறுப. அபௌருஷேயமாய், நித்யநிர்த்தோஷங்களாய, எல்லாச சமயத்தார்க்கும் த்ருடதர ப்ரமாணங்களாயிருக்கிற வேதங்கள் சொல்லுகையால் தெய்வமொன்றே, எனக்கு இவ்விஷயத்தில் மயக்கமில்லை யென்பார், சுருதிசொல்லிய வாற்றாலே தொழுந்தெய்வமெல்லாமொன்றே மருளெனகில்லை யென்றார். முன் பின் என்பன இறந்த காலத்தையும் எதிர்காலத்தையுஞ் சுட்டிநின்றன. தெருளுடையாரைச் சேர்ந்தாருந் தெளிவுடையராதல் திண்ணமாதலால், தெருளின் முன்னிலையா முன்னைசசேர்ந்தி யான் றெளிகின்றேனே என்றார்.

37 எத்தனைப் பிறப்போ வெத்தனை யிறப்போ
வெளியனேற் கிதுவரை யமைத்த
தத்தனை யெல்லா மறிந்தநீ யறிவை
யறிவிலி யறிகிலே னந்தோ
சித்தமும் வாக்குந் தேகமு நினவே
சென்மமு மினியெனு லாற்று
வைத்திடங் கென்னை நின்னடிக் குடியா
மறைமுடி யிருந்தவான் பொருளே.

அ-ள். எளியனேற்கு - எளியேனுக்கு, இதுவரை அமைத்தது - இதுவரையி லமைக்கப்பட்டது, எத்தனைப் பிறப்போ-எத்தனை ஜந்மமோ, எத்தனை இறப்போ-எத்தனை மரணமோ, அத்தனை - அவ்வளவை, எல்லாம் அறிந்த நீ அறிவை-சர்வஜ்ஞனான நீ யறிவாய், அறிவிலி-அறிவற்ற நான், அறிகிலேன் - அறியுமாற்றலிலேன், அந்தோ-ஐயோ, சித்தமும்-மனமும், வாக்கும்-வாக்கும், தேகமும்-காயமும், நினவே-உன்னுடையனவே, சென்மமும்-பிறப்பும், இனி என்னுல் ஆற்று - இனியென்னுல் சகிக்கமுடியாது, (ஆதலால்) இங்கு-இவ்விடத்து, என்னை-அடியேனை, நின்அடிகுடி ஆவைத்திடு-உன்னடிமைக் குடியாக வைத்தருளுவாய், மறைமுடி இருந்த-வேதத்தின் சிரசில் தங்கியிருந்த, வான்பொருளே-மேலான வஸ்துவே. எ-று.

வேதமுடிப்பொருளே, இது காறும் எனக்குண்டாகிய ஜந்ந மரணங்களுக் கெல்லையில்லை, இனிய வையாற்றகிலேன், என் மநோவாக்காயங்களும் உன்னுடையனவே, ஆதலால், என்னை உன்னடிமைக் குடியாக வைத்தருளல் வேண்டும் என்பதாம்.

38 வான்பொரு ளாகி யெங்குநீ யிருப்ப
வநதனைக் கொடுத்துநீ யாகா
தேன்பொருள் போலக் கிடக்கின்றேன் முன்னை
யிருவினை வாதனை யன்றே
தின்பொரு ளான வமிர்தமே நின்னை
சிந்தையிற் பாவனை செய்யும
நான்பொரு ளானை னல்லனல் லரசே
நானிறந திருப்பது நாட்டம்.

இ-ள். வான் பொருள் ஆகி-மேலான பொருளாகி, எங்கும் நீ இருப்ப-எவ்விடத்தும்நீ யிருக்கசெயதே, வந்து என்னைக்கொடுத்து வந்துஎன்னை யுனக்குக் கொடுத்து, நீ யாகாது-யீயாய் விடாமல், பொருள்போல - ஜடப் பொருள்போல, என் கிடக்கின்றேன்-என் கிடவாகின்றேன், (இவ்வாறு கிடத்தற்குக் காரணம்) - முன்னை இருவினைவாதனை அன்றே-முன்செயத இருவினைகளின் வாசனை யல்லவா, தின்பொருள் ஆன அமிர்தமே-பருகற் குரிய பொருளாகிய அமிர்தமே, நின்னை-உன்னை, சிந்தையில்-மனத்தில், பாவனை செய்யும் - பாவனை பண்ணுகின்ற, நான் - அடியேன், பொருள் ஆனேன்-உரு பொருட்டன்மை யுடையே னுயினேன், நல்ல நல் அரசே-மிகவும் நல்ல அரசே, நான் இறந்திருப்பது-நானற்றிருப்பதே, நாட்டம்-என்னல் விரும்பப்படுவது. எ-று.

சர்வவியாபகனுய் நீ யிருக்கவும். அதனை யுணர்ந்து, என்னையுனக்குக் கொடுத்து உன்னி லொடுங்காமல் ஜடப்பொருள்போல யாதுக்குக்கிடவா நின்றேன், அவ்வா றிருத்தற்குக் காரணம் இருவினை வாசனை யல்லவா, ஆயினும் நானென்பதற் றிருத்தலின்கண்ணே எனக்குநோக்கு என்பதாம். என்னைக் கொடுத்தது நீராகாது என்றது சீவபோத மிழந்து சிவபோதமாய் நில்லாமையை.

39 நாட்டமூன் றுடைய செந்நிற மணியே
நடுவுறு நாயக விளக்கே
கோட்டமில் குணத்தோர்க் கெளியநிர்க் குணமே
கோதிலா வமிர்தமே நின்னை
வாட்டமி னெஞ்சங் கிண்ணமாச் சேர்த்து
வாய்மடுத் தருந்தின னுங்கே
பாட்டளி நறவ முண்டயர்ந தறுபோற்
பற்றயர்ந் திருப்பதெந் நாளோ.

இ-ள். நாட்டம் மூன்று உடைய - மூன்று கண்களையுடைய, செந்நிறம் மணியே-செந்நிறமுள்ள மாணிக்கமே, நடுவுறு நாயக விளக்கே எல்

லாப் பொருள்களுக்கும் இடையே விளங்குகின்ற பெருந் தேமே, கோட்டம் இல் குணதேதார்க்கு - குற்றமற்ற குணத்தையுடைய அறிஞர்க்கு, எளிய-எளியனாய்த் தோன்றுகின்ற, நிர்க்குணமே - நிர்க்குணவஸ்துவே, கோது இல்லா-குற்றமில்லாத, அமிர்தமே - அமிழ்தே, நின்னை - உன்னை, வாட்டம் இல்-வாடுதலில்லாத, நெஞ்சம் - மனம், கிணணம் சேர்த்து-கிண்ணமாகப் பொருத்தி, வாய்மடித்து அருந்தினன்-வாய்வைத்துப்பருகி, ஆங்கே-அவ்வாறே, பாட்டு அளி-இசைப்பாட்டைப் பாடுகின்ற வண்டுகள், கறவம் உண்டு அயர்ந்ததுபோல்-தேனுண்டயர்ந்தாற்போல, பற்று அயர்ந்து-இருப்பது-பற்றறுதலற்று இருப்பது, எக்காலோ-எக்காலமோ. எ-று.

பற்றயாத் திருத்தல்-பரவசப்பட்டிருத்தல். சுற்றில் அமிர்தமே யென்றதனால், நெஞ்சம் கிண்ணமாச சேர்த்து வாய்மடித் தருந்துதற் குரிபதாயிற்று. இறத்தற்குரிய அமரருண்ணுமதை யமிதமென்றல் அடாதென்றற்கு இறவாப்பதக தருதற்குரிய இறைவனைக கோதிலா வமிதம் எனறார.

40 என்னுடை யுயிரே யென்னுளத் தறிவே
யென்னுடை யன்பெனு நெறியாய்
கன்னன்முக் கனிதேன் கண்டமிர் தென்னக்
கலந்தெனை மேவிடக் கருணை
மன்னிய வுறவே யுன்னை நான் பிரியா
வண்ணமென் மனமெனுங் கருவி
தன்னது வழியற் றென்னுழைக் கிடப்பத்
தண்ணருள் வரமது வேண்டுமை.

இ-ள். என்னுடை யுயிரே-என துயிரே, என் உள்ளத்து அறிவே-என் மனத்தின் கண்ணதாகிய வுணர்வே, என்னுடை அன்பு என்னுஞ்செறியாய்-என தன்பென்கிற நெறியையுடையவனே, கன்னல்-கருப்பஞ்சாறும், முக்கனி-முகனிகளும், தேன்-தேனும், கண்டு கற்கண்டும் அமிர்தமும், என்ன-போல, என்னை கலந்தெனை மேவிட-என்னை கூடியாய், கருணை மன்னிய வுறவே-கிருபை நிலைபெற்ற வுறவே, உன்னை நான் பிரியாவண்ணம்-உன்னை நான் பிரியாவகை, என் மனம் என்னும் கருவி - என மனமென்கிற சாதனமானது, தன்னது வழி அறறு-தன் நெறிவிட்டு, எனனுழை கிடப்ப-என்னிடத்துத் தங்கிக்கிடக்க, தண்ணருள் வரம்வேண்டும்-தண்ணிய உனது அருள் வரமெனக்கு வேண்டுவது. எ-று.

வான்பொருள் எனபது முதல் இம மூன்று பாட்டினும் இறைவனே அமிர்தம் என்றார், தம்மை யழியாப் பதத்தத்தளிபோன் என்பது தோன்ற. என மனமானது என் வயப்பட்டிருக்க வுனவாம் பெறவேண்டுகிறேன் என்பது கருத்து

எனக்கெனச் செயல்.

1 எனக்கெ னச்செயல் வேறிலை யாவுமிங் கொருநின்
தனக்கெ னத்தகு மூடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்த கத்துள வழுக்கெலா மாற்றியெம் பிரானீ
நினைத்த தெப்படி யப்படி யருளுத னீதம்.

இ-ள். எனக்கு என - எனக்கென்றுசொல்ல, வேறுசெயல் இல்லை - வேறு செய்கையில்லை, யாவும்-எல்லாம், இங்கு-இவ்விடத்தில், ஒரு - ஒப் பற்ற, நின்தனக்கு எனத்தகும்-உனக்கே யுரிவனவென்று சொல்லத்தகும், (ஆதலால்) உடல் பொருள் ஆவியும் தந்தேன்-உடல் பொருளாவிகளாகிய மூன்றினையு முனக்குக் கொடுத்தேன், மனத்து அகத்து உள்ள-என் மனத் திலுள்ள, அழுக்கு எல்லாம் மாற்றி-களங்கமெல்லாம் நீக்கி, எம்பிரான்-எம்பெருமானே, நீ நினைத்தது எப்படி-நீ கருதினது எவ்வாறோ, அப்படி-அவ்வாறே, அருளுதல்-கிருபைசெய்தல், நீதம்-நீதியாகும். எ-று.

எம்பிரானே, எனக்கென வொரு செயலுமில்லை யாதலால் என்னு டல் பொருளாவிகளே யுனக்குக் கொடுத்தேன், என் மனமாசகற்றி உன் திருவுளப்படி நடத்துதல் உனக்கு நீதியாம் என்பது கருத்து.

2 உளவு றிந்தெலா நின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவி லானந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வண மமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையிங் காரொடும் புகலுவேன் தக்கோய்.

இ-ள். உளவு அறிந்து - உன் உட்கிடையை யுணர்ந்து, எல்லாம் நின் செயல் ஆம் என உணர்ந்தோர்க்கு - எல்லாமுன்செயலாமென் றறிந்தவர் கட்கு, அளவு இல்-அளவற்ற, ஆனந்தம் அளித்தனை-இன்பத்தைக் கொடுத் தாய், அறிவு இல்லா-அறிவற்ற, புன்மை-அற்பத்தன்மையும், களவு-திருட் டுத்தனமுமுள்ள, நாயினேற்கு-நாயேனுக்கு, இவ்வண்ணம் அமைத்தனை-இவ்வாறு அமைத்தாய், கருத்து-என் மனமானது, தளரும் தன்மை-தளர் கின்ற தன்மையை, தக்கோய்-தருதியுடையோனே, இங்கு - இவ்விடத்து, ஆரொடும் புகலுவேன்-ஆரோடு சொல்லிக்கொள்வேன். எ-று.

உன்னுளவறிந்த அறிஞருக்கு இன்பமருளினை, அறியாமையுள்ள எனக்குத் துன்பமருளினை, என் மனந்தளரும் நிலையை யாரோடு சொல்லி யாற்றுவேன் என்பது கருத்து.

3 என்னைத் தானின்ன வண்ணமென் றறிகிலா வேழை
தன்னைத் தானறிந் திடவருள் புரிதியேற் றக்கோய்

பின்னைத் தானின்ற னருள்பெற்ற மாதவப் பெரியோர்
தின்னைத் தானிக ராரென வாழ்த்துவர் நெறியால்.

இ-ள். என்னை இன்னவண்ணம் என்று அறிகிலா-என்னை இன்னதன்மையே னென்றறியு மாற்றலில்லாத, எழை - எளியேன், தன்னைத்தான் அறிந்திட-தன்னைத்தா னுணருமாறு, அருள்புரிதியேல்-அருள்செய்வையாயின், தக்கோய்-தகுதியுடையானே, பின்னை-பிறகு, நின்றன்அருள்பெற்றி உன் திருபையைப்பெற்ற, மாதவம் பெரியோர் - மாதவர்களாகிய பெரியோர்கள், நெறியால்-முறையினால், நின்னை நிகர்-உன்னை நிகர்வார், ஆர் என-யாவரென்று, வாழ்த்துவர்-புகழ்வார்கள். எ-று.

என்னை யின்னனென் றுணராத அறிவிலேனை, என் சிறுமை நோக்காதருள்செய்வையாயின், உன்திருவருள்பெற்றமாதவர், உன்னைக்கருணையால் நிகர்ப்பவர் யாவரென்று உன்னைக் கீர்த்தித்துக் கொண்டாடுவார்கள் என்பது கருத்து. தன்னை யென்றது ஈண்டு முன்னிலைக்கண்ணது.

4 ஏத மின்றித்தன் னடியிணைக் கன்புதா னீட்டும்
காத லன்பர்க்குக் கதிநிலை யிதெனக் காட்டும்
போத நித்திய புண்ணிய வெண்ணரும் புவன
நாத தற்பர நானெவ்வா றுய்குவே னவிலாய்.

இ-ள். ஏதம் இன்றி-குற்றமில்லாமல், தன் அடியிணைக்கு-உன்திருவடிகளுக்கு, அன்பு ஈட்டும்-அன்பைச் செய்கின்ற, காதல் அன்பர்க்கு-ஆசையையுடைய அன்பர்களுக்கு, கதிநிலை முத்திநிலையானது, ஈது எனக்காட்டும்-இதுவென்றுகாட்டுகின்ற, போத-முற்றறிவனே, நித்திய-சாசுவதனே, புண்ணிய புண்ணியவானே, எண் அரு-எண்ணுதலருமையாகிய, புவனம்-புவனங்களுக்கு, நாத-இறைவனே, தற்பர - தற்பரனே, நான் எவ்வாறு உய்குவேன்-நான் எவ்விதம் பிழைப்பேன், நவிலாய்-சொல்லாய். எ-று.

உன் திருவடிக்கண் அன்பு செய்வார்க்கு முத்திநிலை யிதுவென்று காட்டுகின்ற சர்வஜ்ஞனே, அவ்வாறு அன்பு செய்யாத நான் எப்படி பிழைப்பேன் என்பதாம்.

5 வேத மெத்தனை யத்தனை சிரத்திலும் விளங்கும்
பாத நித்திய பரம்பர நிரந்தர பரம
நாத தற்பர சிற்பர வடிவமாய் நடிக்கும்
நீத நிர்க்குண நினையன்றி யொன்றுநா னினையேன்.

இ-ள். வேதம் எத்தனை-வேதமென்பன எத்தனை, அத்தனை சிரத்திலும்-அத்தனை வேதங்களின் முடிகளிலும், விளங்கும் - பிரகாசியாநின்ற,

பாத-திருவடிகளையுடையவனே, நித்திய-சாசுவதனே, பரம்பர-பரம்பனே, நிரந்தர-என்றுமுள்ளவனே, பரம-மேலானவனே, நாத-நாயகனே, தற்பர-தற்பரனே, சிற்பரவடிவமாய்-சிற்பரவடிவாகி, நடிக்கும்-நடிக்கின்ற, நீத-நீதியையுடையவனே, நிர்க்குண-நிர்க்குணனே, நின்னே அன்றி-உன்னேயல்லது, ஒன்றும்-வேறொன்றையும், நான் நினேயேன்-நான் நினேக்கமாட்டேன். எ-று.

வேதமுடியில் விளங்கும் பதனே, உன்னே யன்றி நான் வேறொரு பொருளேயும் நினேயேன் என்பதாம்.

6 நெறிக டாம்பல பலவுமா யந்தந்த நெறிக்காம்
செறியுந் தெய்வமும் பலபல வாகவுஞ் செறிந்தால்
அறியுந் தன்மையிங் காருனே யறிவினு லறிந்தோர்
பிறியுந் தன்மையில் லாவகை கலக்கின்ற பெரியோய்.

இ-ள். நெறிகள் தாம் பலபலவும் ஆய்-மார்க்கங்கள் அநேகமாய், அந்தந்த நெறிக்கு ஆம்-அந்தந்த மார்க்கங்களுக்கு கிணங்கிய, செறியும் தெய்வமும்-மிக்க தெய்வங்களும், பலபல ஆகவும்-அநேகமாகவும், செறிந்தால்-நிறைந்திருப்பையாயின், இங்கு இவ்வுலகில், உன்னே அறியும் தன்மை-உன்னே யுணருந்தன்மையர், ஆர்-யாவர், அறிவினுல் அறிந்தோர்-அறிவினுலறிந்தோர்கள், பிறியும் தன்மை இல்லாவகை-நீங்கும் வகையில்லாதபடி, கலக்கின்ற-அவர்களேக் கூடுகின்ற, பெரியோய்-பெரியோனே. எ-று.

தன்மை தன்மையுடையாரை யுணர்த்திநின்றது. அறிவினுல் உன்னேயறிந்தோர்களேப் பிரிவறக் கலக்கின்ற பெரியோனே, சமயமார்க்கங்கள் அநேகமாகவும் அவைகட்குரிய தெய்வங்கள் அநேகமாகவும் நீயே யிருப்பின், உன்னேயறியுந் தரத்தினர் யாவர் என்பதாம்.

7 பெரிய வண்டங்க ளெத்தனே யமைத்தவிற் பிறங்கும்
உரிய பல்லுயி ரெத்தனே யமைத்தவைக் குறுதி
வருவ தெத்தனே யமைத்தனே யமைத்தருள் வளர்க்கும்
அரிய தத்துவ வெனக்கிந்த வண்ணமே னமைத்தாய்.

இ-ள். பெரிய அண்டங்கள் எத்தனே அமைத்து-பெரியனவாகிய அண்டங்கள் எத்தனே வகுத்து, அவில் பிறங்கும்-அவற்றுள் விளங்குகின்ற, உரிய பல் உயிர் எத்தனே அமைத்து-உரியனவாகிய பலவகைப்பட்ட வுயிர்கள் எத்தனேவகுத்து, அவைக்கு உறுதிவருவ-அவைகட்குறுதி பயப்பனவாகிய பொருள்கள், எத்தனே அமைத்தனே-எத்தனே வகுத்தாய், அமைத்து-இவ்வாறு வகுத்து, அருள்வளர்க்கும்-(அவற்றின் மேல்) திருவருளைப் பெருக்குகிற, அரிய தத்துவ-அரிதாகிய அண்மை

பொருளா யிருப்பவனே, எனக்கு-அடியேனுக்கு, இத்தவண்ணம்-இத்தப் பிரகாரம், என் அமைத்தாய்-என் அமைத்தனை. எ-று.

அண்டங்கள் என்ற பன்மை சகல அண்டங்களையும் உணர்த்தி நின்றது. உயிர்கள் என்றது இயங்கு திணை நிலைத்திணை யென்பவற்றை. இவற்றை வடநூலார் சரம் அசரம் என்பர். அவைக்கு உறுதிவருவ என்றது அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை. இவற்றை வடநூலார் புருஷார்த்த சதுஷ்டயம் என்பர். இவற்றை இருவகை யுயிர்களுக்கு ஏற்ற பெற்றி யியைத்துக்கொள்க. இத்த வண்ணம் என்றது உன்னருளின்றி வருந்துகிற இந்த நிலையன்றபடி. இங்ஙனமாகவும் அடியேன் என்றூர் உயிர்கள் அநாதியே யிறைவற்கடிமைகளா யிருத்தலேக்கி அண்டமுத லியவைகளே வகுத்து அவற்றை யருளினூற் காக்கின்ற நீ என்மீது கிருபை யில்லாதிருத்தல் அவ் வுயிர்களில் நான் ஒருவனல்லேனென்று கருதியோ என்பது கருத்து.

8 கணமே தேனுங்கின் காரணந் தன்னையே கருதி
உணரு மாதவர்க் கானந்த முதவினை யொன்றும்
குணமி லாதபொய் வஞ்சனுக் கெந்தைநிர்க் குணமா
மணமு லாமலர்ப் பதந்தரின் யாருனை மறுப்பார்.

இ-ன். கணமதேனும்-க்ஷணகாலமாயினும், நின்காரணந் தன்னையே-உன் சர்வ காரணத்வத்தையே, கருத்தின்-மனத்திலுல், உணரும்-அறிகிற, மாதவர்க்கு-பெரிய தவத்தினர்க்கு, ஆநந்தம் உதவினை - இன்பத்தைக் கொடுத்தாய், ஒன்றும் குணம் இல்லாத-சிறிதும் குணமில்லாத, பொய்வஞ் சனுக்கு-பொய்வஞ்சகங்களே யுடையேனுக்கு, எந்தை - எந்தையே, நிர்க் குண-நிர்க்குணனே, மாமணம் உலாம்-பெரிய மணந்தங்கிய, மலர்-தாமரை மலர்போன்ற, பதம்-திருவடிகளே, தரின்-கொடுத்தனையாயின், உன்னை மறுப்பார்யார்-உன்னைத் தடுக்கவல்லார் யார். எ-று.

காரணம்-யாவைக்கும் யாவர்க்கு முதலாந் தன்மை. கருத்தின்என்ற ஐந்தனுருபு மூன்றாவதன் கருவிப் பொருளில் வந்தது. இறைவனது சர்வ காரணத்வத்தை யுணர்தல் பெரிய தவப்பேறு பெற்றவர்க் கன்றி யேனையர்க் கருமையென்பது தோன்ற, உணரும் என்றதை யடித்து மாத வர் என்றூர். பொய் வஞ்சன் என்றது பொய்யையும் வஞ்சத்தையுமுடை யன் என்றபடி. மாமணம் என்றது அன்பர் முதலாயினர் சாத்துமலாமண மன்றி இயற்கை மணத்தை. தந்தை புதல்வர்க்குத் தரும் பொருளைத் தடுப்பவர் உலகி லொருவருமில்லை யாதலால், எந்தை தரின் யாருனைமறு ப்பார் என்றூர். மாதவர்க்கு அருள்செய்ததுபோல எனக்கும் அருள்செய் தால், சுதந்திரஞ்செய்ய வுன்னைத் தடுப்பவர யாவர் என்பது கருத்து.

9 கன்னல் முக்கனி கண்டேதன் சருக்கரை கலந்த
தென்ன முத்தியிற் கலந்தவர்க் கின்பமா யிருக்கும்
நன்ன லத்ததின் னற்பதந் துணையென நம்பச்
சொன்னவர்க்கெனு லாங்கைம்மாறில்லையென் சொல்வேன்

இ-ள். கன்னல்-கருப்பஞ்சாறும், முக்கனி-முக்கனிகளும், கண்டு-கற்கண்டும், தேன்-தேனும், சருக்கரை-சர்க்கரையும், கலந்தது என்ன கலந்தாற்போல, முத்தியில் கலந்தவர்க்கு-முத்திநிலையிற் கூடினவர்களுக்கு, இன்பமாயிருக்கும்-சுகரூபமாயிருக்கிற, நல் நலத்த-சிறந்தஅழகையுடைய, தின்-உனது, நல்பதம்-நல்ல திருவடியே, துணை என நம்ப-துணையென்று நம்பும்படி, சொன்னவர்க்கு-சொல்லிய சதாசாரியருக்கு, என்னுல் ஆம்-என்னுற்செய்யவியல்வதாகிய, கைம்மாறு இல்லை பிரத்யுபகாரம் இல்லை, என்சொல்வேன்-அவரது அருட்டன்மையை என்சொல்லவல்லேன். எ-று.

முத்தி-மோக்ஷம், அது சர்வசங்க பரித்யாகத்தின்மேலது. சதாசாரியர் என்றது,

"குட்டித் திரட்கரடி யாரழுகக் கோன்குதித்துக்
கட்டிப் புதைந்த கதையாகும்—துட்டமலப்
பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றுப் பேதையர்க்குப்
புத்திபோற் காட்டும் பொருள்."—என்னும், ஒழிவி லொடுக்கச் செய்யுளில் சொல்லப்படுவோனையொழித்து, அடுத்த நன்மாணவகரைச் சந்தே தீக்ஷை முதலியவற்றுற் புனிதராக்கி, வீட்டை விக்கவல்லாரை. நற்பதம் என்றுர் இன்பமாயிருத்தலான். "நற்றுள்" என்றுர் தெய்வப்புலமைப் பெருநாவலரும். உனது நல்லதிருவடியே யுறுதிப் பொருளென் றருளிச்செய்த சதாசாரியருக்கு அடியேன் செய்யலாம்மைம் மாறு இல்லை யென்பது கருத்து.

10 தந்தை தாய்தமர் மகவெனு மவையெலாஞ் சகத்தில்
பந்த மாமென்றே யருமறை வாயினுற் பகர்ந்த
எந்தை நீயெனை யின்னமவ் வல்லதி லிருத்தின்
சிந்தை தான்றெளிந் தெவ்வண முய்வணஞ் செப்பாய்.

இ-ள். தந்தை பிதா, தாய்-மாதா, தமர்-உறவினர், மகவு-புத்திரன், என்னும்-என்று சொல்லப்படுகிற, அவையெல்லாம்-அவைகளெல்லாம், சகத்தில் உலகத்தில், பந்தம் ஆம் என்றே-தளையாகுமென்றே, அருமறை வாயினுல்-அருமையாகிய வேதங்களே யருளிச்செய்த திருவாக்கினுல், பகர்ந்த-சொல்லியருளிய, எந்தை-எமது தந்தையாகிய, நீ-நீ, என்னை அடியேனை, இன்னம்-இன்னமும், அ அல்லலில் இருத்தின்-

அந்தத் துன்பத்தில் இருக்கச்செய்தால், சிந்தை தெளிந்து - மனந்தெளிந்து, உய்வண்ணம் - உய்யும்வகை, எவ்வண்ணம் - எவ்வகை, செப்பாய்- சொல்வாய். எ-று.

அருமறைவாயினுல் என்பதற்கு அரியமறையாகிய வாக்கினுல் என்றுரை கூறினு மமையும். 'தந்தை தாய் தமர்மகவெனுமவை யெலாம் சகத்திற் பந்தமாம்' என்றது. "தாரதனமிகு மென்னிற் றனையாகும்" என்றற்றொடக்கத் தனவாகிய மேலோர் திருவாக்குகளே யடியொற்றியென்க. தந்தை தாய் முதலியன பந்தமென் றருளிச்செய்த நீயே என்னை அதிற் கட்டுண்டு கிடக்கத் திருவுளம்பற்றினையாயின், அடியேன் மனந்தெளிந்து எவ்வாறு உய்வேன் என்பது கருத்து.

11 தூய்யன் றண்ணருள் வடிவினன் பொறுமையாற் றுலங்கும்
மெய்ய னென்றுனை யையனே யடைந்தனன் மெத்த
நொய்ய னுண்ணிய வறிவில னென்றைநூ றாக்கும் [லாய்.
பொய்ய னென்றெனைப் புறம்விடி னென்செய்வேன் புக

இ-ள். தூய்யன்-பரிசுத்தன், தண் அருள் வடிவினன் - குளிர்ந்த அருளுருவாயிருப்பவன், பொறுமையால்-க்ஷமையோடு, துலங்கும் - விளங்குகின்ற, மெய்யன்-மெய்மையன், என்று-என்று துணிந்து, ஐயனே - இறைவனே, உன்னை அடைந்தனன்-உன்னை யடைந்தேன், மெத்தநொய்யன்-மிகவும் அற்பன், நுண்ணிய அறிவு இலன்-நுட்பமாகிய அறிவிலாதவன், ஒன்றை நூறு ஆக்கும் பொய்யன்-ஒன்றை நூறாக்குகின்ற பொய்மையன், என்று-என்றுணர்ந்து, என்னை புறம்விடின் - என்னைப் புறமே விட்டுவிட்டால், என்செய்வேன்-என்செயக்கடவேன், புகலாய்-சொல்வாய். எ-று.

அபாவமே ரூபமாயினும் ஒன்று பலவாகச்செய்யு மாற்றல் பொய்க்குள தென்பார், ஒன்றை நூறாக்கும் பொய்யன் என்றார். அது பிரபஞ்சத் தோற்றத்தானே விசதம். நீ தூய்யன், அருள்வடிவினன், பொறுமையோடு விளங்கும் மெய்யன், அடியேன் நொய்யேன், மருள்வடிவினேன், அறிவின்மையோடு பொய்யையுமுடையேன், என்னை நீ கைவிடின், யான் எவ்வண்ணம் உய்வேன் என்பது கருத்து.

12 ஒன்ற தாய்ப்பல வாயுபிர்த் திரட்கெலா முறுதி
என்ற தாயென்று முள்ளதா யெவற்றினு மிசைய
நின்ற தாய்நிலை நின்றிடு மறிஞுவென் னெஞ்சம்
மன்ற தாயின்ப வுருக்கொடு நடித்திடின் வாழ்வேன்.

இ-ள். ஒன்றதாய்-ஒன்றுகி, பல ஆய் - பலவாகி, உயிர்த்திரட்கு எல்லாம்-உயிர்த்தொகுதிக்கெல்லாம், உறுதி என்றதாய்-உறுதியென்றுசொல்லப்பட்டதாய், என்றும் உள்ளதாய்-என்றுமுள்ளதாகி, எவற்றினும்-எவ்வகைப்பட்ட பொருள்களுள்ளும், இசைய நின்றதாய்-பொருந்த நின்றதாகி, நிலைநின்றிடும்-சாசுவதமாயிருக்கிற, அறிஞ-முற்றறிவனே, என் நெஞ்சம்-என் மனமானது, மன்றதாய்-திருச்சிற்றம்பலமாகக்கொண்டு, இன்ப உருக்கோடு-சுகவடிவுதாங்கி, நடித்திடின்-நடிப்பையாயின், வாழ்வேன்-பிழைப்பேன். எ-று.

ன்று முதலாகநின்ற முற்றறிவனே, நீ என் மனத்தைத் திருச்சிற்றம்பலமாகக்கொண்டு ஆநந்தரூபமாய் நின்று நடிப்பையாயின், அடியேன் உய்வேன் என்பதாம். ஒன்றதாய் என்றதனால் ஏகத்வமும் பலவாய் என்றதனால் அநேகத்வமும், உயிர்த்திரட்கெலா முறுதி என்றதாய் என்றதனால் சர்வஜீவாதாரத்வமும், என்று முள்ளதாய் என்றதனால் சாசுவதத்வமும், எவற்றினு மிசையநின்றதாய் என்றதனால் சர்வாந்தர்யாமித்வமும், நிலைநின்றிடும் என்றதனால் சர்வ வ்யாபகத்வமும், அறிஞ என்றதனால் சர்வஜ்ஞத்வமும், என்னெஞ்சம் மன்றதாய் என்றதனால் தோஷ போக்யத்வமும், இன்பவுருக்கொடு என்றதனால் சுகரூபக்ரஹணமும் விளங்கா நின்றன.

13 தனியி ருந்தருட் சகசமே பொருந்திடத் தமியேற்
கினியி ரங்குதல் கடனிது சமயமெண் ணிதயக்
கனிவு மப்படி யாயின தாதலாற் கருணைப்
புனித நீயறி யாததொன் றுள்ளதோ புகலாய்.

இ-ள். தனி இருந்து-ஏகாந்தமாயிருந்து, அருள்-உன் திருவருளுதவியால், சகசமே பொருந்திட - சகசநிஷ்டையையே பொருந்துமாறு, தமியேற்கு-தனியேனுக்கு, இனி இரங்குதல்கடன்-இனி யிரங்கி யருளுதல் உன்கடன்மையாம், இதுசமயம்-இதுதான் சமயம், என் இதயக்கனிவும் அப்படியாயினது-என்னிதயத்தின் கனிவு மவ்வாறேயாயிற்று, ஆதலால்-ஆகையால், கருணைப்புனித-கருணை மூர்த்தியாகிய பரிசுத்தனே, நீ அறியாதது ஒன்று உள்ளதோ - நீ யறியாததொரு பொருளுண்டோ, புகலாய்-சொல்லாய். எ-று.

தனி யிருத்தல், "பஞ்சகோசங்கடந்து பாழையுந் தள்ளி யுள்ளிற் கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்தப் பிரமமென்னும் நெஞ்சமு நழுவி யொன்றாய் நிற்குநிலை. சகச நிஷ்டை அருளுதவியானன்றி யடையப்படாதென அதினருமைதோன்ற அருள் சகசமே பொருந்திட என்றார். நீ யன்றி யுதவுவார் வேறொருவ ரிலர் என்றற்கு தமியேற்கு எனவும்.

இப்பிறவி தப்பிஞல் என்னுய் முடியுமோ வென்றற்கு இதுசமயம் எனவும், கருணையும் பாரிசுத்தியமும் இன்றுபோது இரங்குதல் கூடாதாதலாலும் கருணைப் புனித இனி இரங்குதல் கடன் எனவும், இறைவன் முற்றறிவு ஞதலால், நீ யறியாத தொன்றுள்ளதோ எனவும் கூறினர். சர்வஜ்ஞனே உன் திருவருளால் அடியேன் சகசசிவ்ட்டை யடையுமாறு நீயிரங்கி யருளல்வேண்டும் என்பது கருத்து.

14 திருந்து சேவடித் தாமரைக் கன்புதான் செய்யப்
பொருந்து நாணல்ல புண்ணியஞ் செய்யுநாள் பொருந்தா
திருந்த நாள்வெகு தீவினை யிழைத்தநா ளென்றுல்
அருந்த வாவுனைப் பொருந்துநா ளெந்தநா ளடிமை.

இ-ள். திருந்து-திருத்தமாகிய, சேர்-சிறப்படைந்த, அடித்தாமரைக்கு-திருவடித் தாமரைகளுக்கு, அன்புதான் செய்யப் பொருந்தும் நாள்-அன்பு செய்யப் பொருந்தியநாள், நல்ல புண்ணியம் செய்யும்நாள்-நல்ல புண்ணியம் செய்யும் நாளாகும், பொருந்தாது இருந்த நாள் - அன்புசெய்யப் பொருந்தாமலிருந்த நாள், வெகு தீவினை இழைத்தநாள் - வெகுபாவஞ் செய்த நாளாகும், என்றுல்-என்று சொல்லுமிடத்து, அருந்தவா-அருந்தவ வருவத்தை யுடையவனே, அடிமை - அடியேன், உன்னை பொருந்துநாள் எந்தநாள்-உன்னை யடையுநாள் எந்தநாள். எ-று.

உன் திருவடிகட் கன்டசெய்யும் நாள் நல்ல நாள் அன்புசெய்யாத நாள் தீயநாள் என்பது கருத்து. அருந்தவாவுனை யென்பற்கு, அருமையாகிய அழியாத உன்னை யென்றுரைப்பினு மமையும்.

15 பின்னு முன்னுமாய் நடுவுமா யாவினும் பெரிய
தென்னுந் தன்மையா யெவ்வுயிர்த் திரளையு மியக்கி
மன்னுந் தண்ணருள் வடிவமே யுனக்கன்பு வைத்தும்
தன்னு மின்னலேன் யானெனு மகந்தையேன் சொல்லாய்

இ-ள். பின்னும் முன்னும் ஆய்-பின்னுமுன்னுமாகி, நடுவும் ஆய்-நடுவுமாகி, யாவினும்-எல்லாப் பொருள்களிலும், பெரியது என்னும் தன்மையாய் - பெரியதென்னுந் தன்மையுள்ளதாகி, எவ்வுயிர்த்திரளையும்-எவ்வகைப்பட்ட வுயிர்த்தொகுதியையும், இயக்கி - இயங்குவித்து, மன்னும்-நிலைபெற்றிருக்கிற, தண் அருள்வடிவமே - குளிர்ந்த அருளுருவமே, உனக்கு அன்புவைத்தும் - உன்னிடத் தன்புசெய்தும், தன்னும்-பிறுகியான, இன்னல் என்-துன்பம்யாதுக்கு, யான் என்னும் அகந்தை என்-நான் என்னும் அகங்காரம் யாதுக்கு. சொல்லாய்-கூறுய். எ று.

ஆதிமத்யாந்த ரூபமா யிருப்பவனே, பெரியோனே, உயிர்த்தொகுதியை இயங்குவிப்போனே, அருளே திருவுருவமாகக் கொண்டவனே,

நான் உன்னிடத் தன்புசெய்த பின்னும் என்னிடத்துத் துன்பமும் அகங் காரமும் இருத்தல் அடாது என்பதுகருத்து, "ஈசற்கியாம்வைத்தவன் பினதன்றவன் வாங்கிய வெம்பாசத்தின்" என்றார் மேலோரும்.

16 மின்னே யன்னபொய் வாழ்க்கையே நிலையென மெய்யாம்
உன்னே நான்மறந் தெவ்வண முய்வண முரையாய்
முன்னே வல்வினே வேரற முடித்தென்று முடியாத்
தன்னைத் தன்னடி யார்க்கருள் புரிந்திடுந் தக்கோய்.

இ-ள். முன்னே வல்வினைவேர் அறமுடித்து-பூர்வஞ்செய்தவலிய பாப த்தின் மூலமற நாசம்பண்ணி, என்றும் முடியா-என்றும் நசியாத, தன்னை-உன்னை, தன் அடியார்க்கு-உன்னடியவர்க்கு, அருள்புரிந்திடும்-அருள்செய் என்ற, தக்கோய்-நடுநிலையுள்ளவனே, மின்னே அன்ன-மின்னலையொத்த, பொய்வாழ்க்கையே-பொய்வாழ்வையே, நிலையென-நிலையென்று, மெய் யும்-உண்மையாகிய, உன்னை-உன்னை, நான்மறந்து-நான் மறத்துவிட்டு, உய்வணம்-பிழைக்கும்வகை, எவ்வண்ணம்-எவ்வகை, உரையாய்-சொல் லாய். எ-று.

தன்னையென்ற படர்க்கை இவ்விடத்து முன்னிலைப் பொருளது. "பாவநாசாவுன் பாதமே" என்றமே லோர் திருவாக்கை யனுசரித்து முன்னே வல்வினைவேர் அறமுடித்து எனவும், அடைந்தாரைப் பாபவிமோ சகராக்கித் தன்னையு மவர்களுக்கு ஆரமுதாயூட்டுதல் தக்கார்க்கன்றி இய லாதென்றற்கு, முன்னே வல்வினே வேரறமுடித்து என்று முடியாத்தன் னைத் தன்னடியார்க் கருள்புரிந்திடுந் தக்கோய் எனவும் கூறினர். பொய் வாழ்க்கை நம்பி மெய்யாகிய வுன்னை மறந்து நான் எவ்வாறு உய்வேன் என்பது கருத்து.

17 எம்ப ராபர வெம்முயிர்த் துணைவவென் றிறைஞ்சும்
உம்ப ரிம்பர்க்கு முளக்கணே நடிக்கின்ற யுன்றன்
அம்பொன் மாமலர்ப் பதத்தையே துணையென வடிமை
நம்பி னேனினிப் பிறப்பதெக் காலமோ நவிலாய்.

இ-ள். எம்பராபர - எம்முடைய பராபரனே, எம் உயிர்த்துணைவ - எம்முயிர்த்துணைவனே, என்று இறைஞ்சும் - என்று வணங்குகின்ற, உம் பர் இம்பர்க்கும் - அவ்வுலகத்தார்க்கும் இவ்வுலகத்தார்க்கும், உளக்கணே - அவரவரிதயத்தின் கண்ணே, நடிக்கின்ற-நடிக்கின்றனை, உன்றன்-உன் னுடைய, அம் - அழகிய, பொன் - பொன்போன்ற, மா - பெருமை பொருந்திய, மலர் - தாமரைமலர்போன்ற, பதத்தையே-திருவடியையே, துணை என - துணையென்று, அடிமை - அடியேன், நம்பினேன் - நம்பி

யிருக்கிறேன், இனிபுரப்பது-இனிக் காத்தருள்வது, எக்காலமோ-எந்தக் காலமோ, நவிலாய்-சொல்வாய். எ-று.

இறைவனே, மண்ணுலகத்தார் விண்ணுலகத்தார் என்னு மிருதிறத்தார்க்கும் அவரவ ரிதயத்தின்கண்ணே கடியாகின்றன யாதலால், உன் திருவடியே துணையென நம்பியிருக்கிற என்னையும் காத்தருளல்வேண்டும் என்பது கருத்து.

18 பாடி யாடிநின் றிரங்கிநின் பதமலர் முடிமேல்
சூடி வாழ்ந்தன ரமலநின் னடியர்யான் றொழும்பன்
நாடி யேயிந்த வுலகத்தை மெய்யென நம்பித்
தேடி னேன்வெறுந் தீமையே யென்னினிச் செய்வேன்.

இ-ள். பாடி-பாடுதல்செய்து, ஆடி - ஆடுதல்செய்து, நின்று இரங்கி-ரு முழுது, நின்பதமலர்-உன் திருவடிமலரை, முடிமேல்சூடி - சிரசிற்றரித்து, நின்னடியார்-உன்னடியார், அமல-பரிசுத்தனே, வாழ்ந்தனர்-நித்திய வாழ்வை யடைந்தார்கள், தொழும்பன்-தொண்டனாகிய நான், இந்த உலகத்தைநாடி - இந்தவுலகத்தை விரும்பி, மெய் என நம்பி - உண்மை யென்று நம்பி. வெறுந்தீமையே தேடினேன்-வெறும்பாவத்தையே யீட்டினேன், இனி என்செய்வேன்-இனி யென்னசெய்வேன். எ-று.

உன்னடியார் பாடுதல் முதலியவைசெய்து உன் திருவடியை முடிமேற் றரித்து மெய்வாழ்வடைந்தனர், அடியேன் இந்த வுலகத்தை நம்பிப் பாவத்தையே யீட்டிவைத்தேன், இனி யுய்வதற்கு வழி என்செய்யவல்லேன் என்பது கருத்து.

19 களவு வஞ்சனை காமமென் றிவையெலாங் காட்டும்
அளவு மாயைபிங் காரெனக் கமைத்தன ரையா
உளவி லேயெனக் குள்ளவா றுனர்த்தினுன் னடிமை
வளரு மாமதி போன்மதி தன்றி வாழ்வேன்.

இ-ள். களவு-சோரத்வம், வஞ்சனை-கபடம், காமம்-காமம், என்ற இவை எல்லாம் காட்டும் அளவு - என்ற இவற்றையெல்லாம் காட்டு மளவினையுடைய, மாயை-மாயையை, இங்கு-இவ்விடத்து, எனக்கு அமைத்தனர் ஆர்-எனக்கமைத்தவர் யாவர், ஐயா-ஐயனே, உளவிலேயெனக்குள்ளவாறு-உள்ளபடி, எனக்கு உணர்த்தின் - எனக்குநிலைப்பையாயின், உன் அடிமை-உன்னடியேன், மதிதளர்வு இன்றி-மதிதளர்தல் இல்லாமல், வளரும் மாமதிபோல் வாழ்வேன்-விருத்தியடையா நின்ற பெரியசந்திரன் போல வாழ்ந்திருப்பேன். எ-று.

களவு மு[illegible]
தவர் யாவர், அ[illegible]
பூர்வபக்ஷத்துச்
தாம்.

[illegible]தாற்றுவிக்கு மாயையை எனக்கு அமைத்
[illegible]தை எனக்குள்ளபடி யறிவுறுத்தினையாயின்,
[illegible]பால் அறிவு வளரப்பெற்று வாழ்வேன் என்ப

20 வான நா [illegible]வர் நாயக வளங்கூர்
ஞான நா [illegible]றை நாயக நலஞ்சேர்
மோன நா [illegible]உக் கன்பின்றி முற்றும்
தீன னெகட [illegible]வென்செய்வேன் செப்பாய்

இ-ள். வானநாயக-[illegible]துக் கிறைவனே, வான[illegible]நாயக-அவ்
வுலகத்துள்ளார்க் கிறைவனே, [illegible]வளம் கூர்-வளம்மிகுந்த [illegible]னநாயக-
ஞானத்துக் கதிபனே, நான்மறை[illegible]நாயக - நான்குவேதங்[illegible]ழு
வனே, நலம் சேர்-நன்மைசேர்ந்த, மோனநாயக-மௌனநி[illegible]
நின் அடிக்கு-உன் திருவடிகளுக்கு, அன்பு [illegible]றின்றி-அன்பு [illegible]ரம
முற்றும்-முழுதும், தீனனெய்-எழையாகி, அகம்வாடவே[illegible]வே
என்செய்வேன்-என்செயக்கடவேன், செப்பாய்-செய

வானம் முதலானவைகட்கு நாயகனே, அடியே[illegible]ருவடிகள்
கன்புசெய்யாமல் ஏழையாய் வாடுதல்தகுமோ வென்[illegible]ர.

21 ஏத மற்றவர்க் கின்பமே பொழிகின்[illegible]ப
பாத கக்கருங் கன்மனங் கோயிலா[illegible]பரி து
சூத கத்தனெ யாதினு மிச்சைமே[illegible]ந் மம்
வாத னேக்கிட மாயினே னெவ்[illegible]ரழ்வேன்.

இ-ள். ஏதம் அற்றவர்க்கு-குற்றமற்[illegible]இன்பமே பொழிகின்ற-
ஆநந்தத்தையே பொழிகின்[illegible]றை[illegible]றவனே, பாதகக் கருங்கல்
மனம்-பாவவுருவாகிய கருங்[illegible]மா[illegible]கோயிலாப்பரித்து - கோயி
லாகவிரும்பி, சூது அகத்த[illegible]கிடமாகிய மனத்தை யுடையவ
னெய், யாதினும்-எப்பொருளான மே[illegible], இச்சைமேல் தோன்றும்-விருப்
பம் மிகுதியாய்த் தோன்றுகின்ற, வாதனேக்கு-லோகவாசனைக்கு, இடம்
ஆயினேன்-இடமாய் இருக்கின்றேன், எவ்வண்ணம் வாழ்வேன்-எவ்விதம்
வாழ்வேன். எ-று.

குற்றமற்றவர்கட்கு ஆநந்தமழையைப் பொழிகின்ற இறைவனே,இச்
சையவத்தனெய், லோகவாசனைக் கிடமாயினேன். எங்ஙனம் உய்வேன்என்
பது கருத்து.

22 தெளிவொ டுகையோ வறிகிலா னறிவிலான் சிறிதும்
அளியி லானிவன் றிருவருட் கயலென வறிந்தோ
எளிய னுக்கினை யென்செய்வே னென்செய்வே னெல்லா
வொளியு மாய்நிறை வெளியுமா யார்வுமா மூரவோய்.

இ-ள். எல்லா ஒளியும் ஆய் - ஒளியுடைப்பொருள்க ளெல்லாமாகியும், நிறைவெளியும்ஆய்-அவைநிறைந்து விளங்கும் வெளியுமாகியும், யாவும்ஆம் மற்றுறல்லாய் பொருளாகளு மாகாநின்ற, உரவோய்-அறிவுருவனே, தெளிவொடு-பொய்யிது மெய்யிது வென்னுந் தெளிவோடு, உகையோ-கொடையோ, அறிகிலான்-உணர்கிலான், அறிவு இலான்-அறிவிலாதவன், சிறிதும் அளியிலான்-கொஞ்சமும் கிருபையில்லாதவன், இவன் திருவருட்கு அயல் என அறிந்தோ-இவன் திருவருளுக்குப் புறமென் றுணர்ந்தோ, எளியன் ஆக்கினை-ஏழையாக்கினாய், என்செய்வேன் என்செய்வேன் - என்செயக் கடவேன் என்செயக்கடவேன். எ-று.

இறைவனே, தெளிவு முதலானவை யில்லாதவன் ஆதலால் இவன் திருவருட்கயலென் றறிந்தோ என்னை யேழையாக்கினாய், நீயே யிங்ஙனம் செய்யின், அடியேன் என்செய்ய வல்லேன் என்பது கருத்து.

23 கண்ணி னுண்மணி யென்னவே தொழுமன்பர் கருத்துள்
நண நுகி னின்றநின் னருளெனக் கெந்தநா ணணுகும்
மண்ணும் விண்ணுமற் றுள்ளன பூதமு மாறுப்
பெண்ணு மாணுமா யல்லவாய் நிற்கின்ற பெரியோய்.

இ-ள். மண்ணும் விண்ணும் - பூமியும் ஆகாயமும், மற்றுள்ளன பூதமும்-வேறுள்ளனவாகிய பூதங்களும், மாறு-நீங்காத, பெண்ணும் ஆணும் ஆய்-பெண்ணும் ஆணுமாகி, அல்ல ஆய் நிற்கின்ற - அவையல்லனவுமாகி நிற்கிற, பெரியோய் - பெரியோனே, கண்ணின்உள் - கண்ணுக்குள்ளே, மணிஎன்ன - மணியென்னலாம்படி, தொழும்அன்பர்கருத்துள் - வணங்குகின்ற அன்பரது மனத்தில், நண்ணுகின்ற-பொருந்துகின்ற, நின் அருள்-உன்னருளானது, எனக்கு-அடியேனுக்கு, எந்தநாள் நணுகும்-எந்தக்காலம் வந்துபொருந்தும். எ-று.

இறைவனே, அன்பர் கருத்திற் பொருந்துகின்ற உன் திருவருள் எனக்கு எக்காலம் வாய்க்கும் என்பதாம்.

24 சகமெ லாந்தனி புரந்தினை தகவுடைத் தக்கோர்
அகமெ லாநிறைத் தானந்த மாயினை யளவில்
மகமெ லாம்புரிந் தோரைவாழ் வித்தனை மாறு
இகமெ லாமெனைப் பிறந்திடச் செய்ததே யென்தாய்.

இ-ள். சகம் எல்லாம் - எல்லாவுலகங்களையும், தனிபுரந்தனை-பொது வறக்காத்தனை, தகவு உடை-தகுதியையுடைய, தக்கோர் - மேலோர்க்கு டைய, அகம்எல்லாம் நிறைந்து-மனமெல்லாம்நிறைந்து, ஆநந்த இன்பவுருவாயிருந்தனை, அளவு இல் - அளவற்ற, மகம் எல்லா - யாகங் எல்லா வற்றையும், புரிந்தோரை-செய்தவர்களை, வாழ்வித்தனை செய்தனை, மாறு-நீங்காமல், என்னை-அடியேனை, இகம் எல்ல - ல கங்களிலெல்லாம், பிறந்திடச்செய்தது-ஜந்மிக்கச்செய்தது, எ - ி எந்தாய்-எந்தையே. எ-று.

எல்லா வுலகங்களையும் காத்தல் முதலியவையுடையோ - யார்க்கு அளவுகடந்த இன்பத்தை யருளிச்செய்து. என்னை - தும் பிறக்கச்செய்ததற்குக் காரணம் யாதோ அறிகிலேன்

25 ஏய்ந்த நல்லருள் பெற்றவர்க் கேவலா யெ - ப
வாய்ந்த பேரன்பு வளர்க்கவுங் கருணீ வ - ி
ஆய்ந்த மாமறை யெத்தனை யத்தனை யறிவ - [ர்
தோய்ந்தபேர்கட்குந் தோன்றிலாத் தோ - யே

இ-ள். ஏய்ந்த-பொருந்திய, நல்அருள் பெற்றவர்க் - ருளை பெற்றவர்களுக்கு, எளியேன்-ஏழையேன், எவலாய்-ஏ - ாய்த் - வாய்ப்பாகிய, பேர் அன்புவளர்க்கவும் - பேரன்பைப் - ாறும், நீ கருணைவளர்ப்பாய் - நீகிருபையைப் பெருக்கவேண் - ஆராயப் பட்ட, மா-பெரிய, மறை எத்தனை - வேதங்களெத் - தனை-அத் தனையும், அறிவால் தோய்ந்த பேர்கட்கும்-ஞானத்த - ப்பெற்ற வர்களுக்கும், தோன்றிலா - காணப்படாத, தோன் - பரியோனே கிய, தூயோய்-பரிசுத்தனே. எ-று.

இறைவனே, உன்னருள் பெற்றவர்கட்கு எ - எளியேன் உன்மீது அன்பை வளர்க்கும்படி நீ கருணைசெய்ய - ன்பதாம்.

26 தக்க நின்னருட் கேள்வியோ சிறிதிவ் - யேன்
மிக்க தெய்வமே நின்னின்ப வெள்ள - ன்
ஒக்க முய்ந்தை மகவெனும் பாசக் - [தேன்.
தக்க வெள்ளத்தி லாழ்கின்றே னெ - ணிர்

இ - ள். தக்க - தகுதியாகிய, நின் - உனது - திருவருளைப் பற்றிய, கேள்வியோசிறிது இன்றி - கேள்வியோ கொஞ்சமுமில்லாமல், தமியேன் - தனியனேன், மிக்கதெய்வமே - மேலானதெய்வமே, நின்- உனது, இன்பவெள்ளத்தில் - ஆநந்தப் பெருக்கில், வீழ்ந்தை - முழுகாத வனுய், ஒக்கல் - உறவினர், தாய்தந்தை-தாய்தந்தையர், மகவு-புதல்வன், என்னும்-என்கிற, பாசக்கட்டினை - பாசத்தையுடன் - தக்கவெள்ளத்

கில், துன்பப்பெருக்கில், ஆழ்கின்றேன்-மூழ்காநின்றேன், என் செய்வான் துணிந்தேன்-என்செய்யத் துணிந்தேன். எ-று.

இறைவனே, உன்னருட்கேள்வி சிறிதின்றி உன்னின்பவெள்ளத்தில் மூழ்கிலேன், தாய்தந்தை முதலாகிய பாசம்பிணிப்புடன் துக்கசாகரத்தழுந்தா ர்றேன் என்பதாம்.

ம்பு நிந்திடும் பாவியேற் கருணீல பதியத்
நெ யும்படித் தயவுசெய் தருள்வதே தருமம்
ம்பு நிந்திடார்க் கானந்த வதிர்த்தத்தை யளிக்க
கொ டத்துவத் திரையெறி கடலெனு நலத்தோய்.

ம்புநிந்திடார்க்கு-வீணைகாரியத்தைச் செய்யாதவர்க்கு, தை அளிக்க-ஆநந்தாதிர்த்தத்தைக் கொடுக்க, நவம்கொள்- ண்ட, தத்துவம்-தத்துவமாகிய, திரைஎறி-அலைகளைவீசு ணும்-கடலென்று சொல்லப்பட்ட, நலத்தோய்-நன்மை பவம்புரிந்திடும்-பாவத்தைச்செய்கிற, பாவியேற்கு-பாவி யாகிய என ; அருள்நிலபதிய உன் திருவருணிலபதியும் பொருட்டு, தவம்செய்யு படி - தவத்தைச் செய்யும்வண்ணம், தயவுசெய்தருள்வதே-தயைசெய்த நளலே, தருமம்-தர்மமாகும். எ-று.

இறைவனே பாவத்தையேசெய்கிற எனக்கு அருணிலபதியும்படி, தவம் புரியமாறு கிருபைசெய்வதே தருமம் என்பது கருத்து.

28 உற்று ணர்ந்தெலா நீயல தில்லையென் றுனையே
பற்று கின்றன ரெந்தைதின் னடியர்யான் பாவி
முற்று மாயமாஞ் சகத்தையே மெய்யென முதலுன்
அற்றி ருந்திடத் தொழில்செய்வான் றனிகி ரானேன்.

இ-ள். தின் அடியர்-உன்னடியார், உற்றுணர்ந்து-ஆராய்ந்தறிந்து, எல்லாம்-எல்லாப்பொருள்களும், நீ அல்லது - நீயேயாயிருப்பதன்றி, இல்லை என்று-வேறுபொருளில்லையென்று துணிந்து, எந்தை - எந்தையே, உன்னையே பற்றுகின்றனர் - உன்னையே பற்றுகின்றார்கள், யான்பாவி-நான் பாவி, முற்றும்மாயம் ஆம்-முழுதும் பொய்யாகிய, சகத்தையே - உலகத்தையே, மெய் என-மெய்யென்றுகொண்டு, முதல்தான் அற்று இருந்திட-முதலேயற்றொழிய, தொழில்செய்வான் தன்னை-தொழில் செய்பவனை, நிகர் ஆனேன்-நிகர்ப்பவனானேன். எ-று.

எந்தையே, உன்னடியர், எல்லாம்நீயேயென்றாராய்ந்தறிந்து, உன்னையே பற்றுகின்றனர், பாவியாகிய நான்முழுதும் பொய்யாகிய சகத்தையே மெய்யென்று நம்பி, முதலறத்தொழில் செய்வான்போல் வீணனானேன் என்பதாம்.

மண்டலத்தின்.

1 மண்டலத்தின் மிசையொருவன் செய்த வித்தை
யகோவெனவும் வாரணுதி
அண்டமவை யடுக்கடுக்கா யந்தரத்தி னிறுத்துமவ
தானம் போல
எண்டருகல் லகிலாண்ட கோடியைத்தன் னரு
ளிலக வைத்துக்
கொண்டுநின்ற வற்புதத்தை யெவராலு நிச்சய
கூடா வொன்றை.

இ-ள். மண்டலத்தின் மிசை - மண்ணுலகின்மீது; [illegible]ய்த
வித்தை-ஒருவன் செய்த விச்சையானது, அகோ எனவு [illegible]கரம்
என்று சொல்லவும், வாரணுதி அண்டமவை-கோழிமுதல [illegible]முட்
டைகளை, அடுக்கடுக்காய்-அடுக்கடுக்காக, அந்தரத்தில்-ஆ[illegible]நிறுத்
தும்-நிறுத்துகின்ற, அவதானம்போல-சாமர்த்தியம்போல, [illegible]-எண்
ணிக் கையைத்தருகின்ற, நல்-சிறந்த, அகிலாண்டகோடி[illegible]ாண்ட
கோடிகளை, தன் அருள்வெளியில்-தன்திருவருளாகிய ஆ[illegible]ுலக-
விளங்கும்படி, வைத்துக்கொண்டுநின்ற-வைத்துக்கொண்[illegible], அற்பு
தத்தை - ஆச்சரியகரமான வஸ்துவை, நிச்சயிக்கக்கூட[illegible]ன்மைத்
தென்று இலக்கணவகையால் துணியக்கூடாத, [illegible]ஒப்பற்ற
பொருளை. எ-று.

இதுமுதல் எட்டுப்பாட்டும் குளகம். குளகம்-ப[illegible]ாருவினை
கொண்டுமுடிவது. மண்டலம்-மண்ணுகிய இடம். அ[illegible]ப்பிடைச்
சொல். கோழிமுதலியவற்றின்முட்டைகளை ஒருமாய[illegible]வன்ஆகாய
த்தில் நிற்கும்படிசெய்கிற சதுரதைபோல, இறைவன் [illegible]காடிகளைத்
தன்திருவருளாகிய ஆகாயத்தில் நிற்கும்படி செய்யவ[illegible]ன்பது கரு
த்து.

2 ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங் கடந்தேழாம்
யோக பூமி
நின்றுதெளிந் தவர்பேசா மௌனகியா யத்தைநிறை
நிறைவைத் தன்னை
யன்றியொருபொருளிலதா வெப்பொருட்குந்தான்முதலா
யசல மாகி
யென்றுமுள்ள வின்பத்தைத் தன்னென்ற சாந்தபத
வியற்கை தன்னை.

இ-ள் ஒன்றுஇரண்டு ஆய்விவகரிக்கும் ஒன்றிரண்டென்று விவகரிக்கிற, விவகாரம்-விசுகாரத்தை, கடந்து-தாண்டி, ஏழாம் யோகபூமியின்று-ஏழாகிய ஞானபூமிகளில் நிலைத்து, தெளிந்தவர்-தெளிந்தோர்கள், பேசா-பேசாமைக்குக் காரணமாகிய, மௌநநியாயத்தை-மௌநநீதியை, நிறை நிறைவை - முழுநிறைவை, தன்னை அன்றி - தன்னையல்லது, ஒருபொருள் இலது ஆ-ஒருபொருளில்லாததாக, எப்பொருட்கும் - எல்லாப் பொருள்களுக்கும், தான்முதல் ஆய்-தானெருமுதற்பொருளாகி, அசலம் ஆகி-சலியாததாகி, என்றும் உள்ள-எக்காலத்தும் நிசியாதிருக்கிற, இன்பத்தை-ஆநந்தத்தை, தண்ணென்ற குளிர்ந்த, சாந்தபத இயற்கை தன்னை-சாந்தபதமென்கிற இயற்கைப்பொருளை. எ-று.

சலம்-சலித்தல்.

பதமூன்றுங் கடந்தவர்க்கு மேலான ஞானபதப்
பரிசு காட்டிச்
சதமாகி நிராலம்ப சாகூடியதா யாரம்பத்
தன்மை யாகி
விந்தியாவுங் கடந்தவித்தை யெனுமிருளைக் கீண்டெழுந்து
விமல மாகி
மதமாறுங் காணுத வானந்த சாகரத்தை
மௌன வாழ்வை.

இ-ள். பதம்மூன்றும் கடந்தவர்க்கு - முப்பதங்களையுங் கடந்தவர்களுக்கு, மேலான - மேன்மையாகிய, ஞானபதப்பரிசுகாட்டி - ஞானபதத்தின் தன்மையைக்காட்டி, சதம் ஆகி - நிலையாகி, நிராலம்ப சாகூடியதாய்-பற்றுக்கோடில்லாததாகிய சாகூடியதமாகி, ஆரம்பத்தன்மை ஆகி-ஆதியாந் தன்மையுடையதாகி, விதம்யாவும் கடந்து - எல்லாவிதங்களையுந்தாண்டி, அவித்தை என்னும்-அஞ்ஞானமென்கிற இருளை -அந்தகாரத்தை - கீண்டு எழுந்து - கிழித்தெழுந்து, விமலம் ஆகி - மலரஹிதமாகி, மதம் ஆறும்-ஷண்மதங்களும், காணுத-காணக்கூடாத, ஆநந்த சாகரத்தை - இன்பக் கடலை, மௌநவாழ்வை-மௌநவாழ்க்கையை எ-று.

பதமூன்றும் என்றது, சரியை கிரியை யோகம் என்னும் முப்பதங்களை.

4 வாழ்வனைத்துந் தந்தவின்ப மாகடலை நல்லமிர்தை
மணியைப் பொன்னை
தாழ்வறவென் னுளத்திருந்த தத்துவத்தை யத்துவித
சாரந் தன்னைச் [பின்பச்
சூழ்பெரும்பே ரொளியையொளி பரந்தபர வெளியை
சுகத்தை மாரு

தேழுலகுங் கலந்தின்ரு ய் நாளேயா யென்னுமா
மியற்கை தன்னே.

இ-ள். வாழ்வு அனேத்தும்தந்த-எல்லா - வாழ்வுகளேயுந்தந்தருளின, இன்பமாகடலே பேரின்பக்கடலே, நல் அமிர்தை - சிறந்த அமிர்தத்தை மணியை-மாணிக்கத்தை, பொன்னே-சுவர்ணத்தை, தாழ்வு அற-இழிவு நீங்க, என் உள்ளத்து இருந்த-என் மனத்தின் கண்வீற்றிருந்த, தத்துவத்தை-உண்மைப்பொருளே,அத்துவிதசாரம்தன்னே-அத்வைகசாரத்தை சூழ்-வளேந்த, பெரும்பேர் ஒளியை-மிகவும் பெரிதாகிய வெ[illegible], ஒ[illegible] பரந்த-ஒளிபரவிய, பரவெளியை-பரமாகாயத்தை, இன்பச்சு[illegible] பேர நந்தத்தை, மாறுது-நீங்காது, எழ் உலகும்கலந்து-எழுலக[illegible] வியா பித்து, இன்று ஆய்-இன்ருகி, நாளே ஆய்-நாளேயாகி, என்[illegible] என்னு மாகின்ற, இயற்கை தன்னே-இயற்கையை. எ-று.

5 தன்னேயறிந் தவர்தம்மைத் தானேகச் செய்த
சமத்தை லோகம்
மின்னேநிகர்த் திடவழியாச் சொருபான ந்
வேத மாதி
யென்னேயறி வரிதென்னச் சமயகோ டிகள
விடைய ருத
பொன்னேவிரித் திடுமுலகத் தும்பருமிம்
புனித மெய்யை.

இ-ள். தன்னே அறிந்தவர்தம்மை - தன்னேயுணர[illegible] ள, தா[illegible] ஆக செய்தருளும்-தானேகச் செய்தருள்கின்ற, சமத்[illegible] நிலேயை லோகம் மின்னேநிகர்த்திட-உலகம் மின்னலேயொத்த[illegible] அழியா-நி யாத. சொருபாகந்தச்சுடரை - சொருபாகத்தச்சோதி [illegible] தம் ஆதி- வேதம் முதலியவை. என்னே அறிவு அரிது என்ன-[illegible] றிதலரிது மென்னவும், சமயகோடிகள்-பலசமயங்களும், இடைய-நடையவும். இடை யருத-அவற்றினுள்ளிடையருது வியாபித்துநின்ற, பொன்னேவிரித்திடு உலகத்து-பொன்னுலகத்திலுள்ள. உம்பரும்-தேவர்களும், இம்பரும்-இ வுலகத்தாரும், பரவும்-துதிக்கின்ற, புனிதமெய்யை பரிசுத்தமாகியமெய் பொருளே. எ-று.

என்னே என்பதனேவினேயாக்கி யுரைப்பினும். பொன்னே எனநிறுத்தி விரித்திடும் உலகத்து என்பதற்கு, விரிக்கப்பட்டவுலகத்தில் எனவுரைப் பினும் அமையும். கோடி என்றது இவ்விடத்துத் தனக்குரிய எண்ணுப்

பொருளே யுணர்த்தாது பலவென்னும் பொருளையுணர்த்துகின்றன, "அக்க மொருகோடி பெறுவற்றாணிக்குமரி" என்றார் பிறரும்.

6 பரவரிய டாசிவமா யதுவெனலாம் நானெனலாய்ப்
பாச சாலம்
விரவிநின்ற விசித்திரத்தை யையப்பதத் தினிதிருந்த
விவேகத் தன்னே
யிரவுபக னினைப்புமறப் பெனுந்தாந்த மறியார்க
ளிதயம் வெதச்
சிரமெனவாழ் பராபரத்தை யானந்த நீங்காத
சிதாகா சத்தை.

இ-ள். பரவு அரிய-துதித்தற்கரிய; பரசிவமாய் - பரசிவமாகி, அது எனல் ஆய் - அதுவென்றுசொல்லலாகி, நான் எனல் ஆய் - நானென்று சொல்லலாகி, பாசசாலம்-பாசக்கூட்டத்தோடு, விரவிநின்ற-கலந்து நின்ற, விசித்திரத்தை - விசித்திரபத்தை, ஐக்யபதத்து - ஐக்யபதத்தில், இனிது இருந்த - இனிதாயிருந்த, விவேகம்தன்னே - ஞான வடிவை, இரவுபகல் - இராப்பகல்கள், நினைப்புமறப்பு - நினைப்பு மறப்புக்கள், என்னும் - என்று சொல்லப்படுகிற, தொந்தம்-தொடர்பை, அறியார்கள் - அறியாதவர்களுடைய, இதயம்-இதயமே, வேதசிரம் என - வேதமுடிவென்றுகொண்டு, வாழ்-அதனிடத்து வாழ்கின்ற, பராபரத்தை - பராத்பரவஸ்துவை, ஆநந்தம் நீங்காத-இன்பம்நீங்காத, சிதாகாசத்தை-ஞானாகாயத்தை, எ-று.

ஐக்யம்-ஏகத்வம், ஏகம்-ஒன்று. ஐக்யம் என்றது ஜீவபரங்களொன்று பட்டிருக்குநிலையை.

7 அத்துவித வனுபவத்தை யனந்தமறை யின்னமின்ன
மறியே மென்னும்
நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத் தன்னருளா
னினைவுக் குள்ளே
வைத்துவைத்துப் பார்ப்பவரைத் தானதெ வெந்நாளும்
வளர்த்துக் காக்குஞ்
சித்திணமாத் தரிவனியை யண்மையமா மனத்துத்
தெய்வந் தன்னே.

இ-ள். அத்துவித அநுபவத்தை - அத்வைதாநுபவத்தை, அநந்தமறை-முடிவற்ற வேதங்கள், இன்னம் இன்னம் இன்னும் இன்னும், அறியேம் என்னும்-அறியோமென்றற்குரிய, நித்தியத்தை - சாசுவதவஸ்துவை, நிராமயத்தை - பரமமயிபொருளை, நிர்குணத்தை - நிர்க்குணவஸ்துவை; தன்

அருளால்-தனதருளால், நினைவுக்குள்ளே-கருத்தினிடத்தே, வைத்துவைத்துப் பார்ப்பவரை-வைத்துவைத்து நோக்குவாரை, தான் ஆக - தானேயாகும்படி, எந்நாளும் வளர்த்து-எக்காலும் விருத்தி யடைவித்து, காக்கும்-ரக்ஷிக்கிற, சிற்பரனே - சிற்பொருளே, மா - பெரிய, தூ - பரிசுத்தமாகிய, வெளியை-ஆகாயத்தை, தன்மயம் ஆம்-தன்மயமாகிய, ஆநந்தத் தெய்வத் தன்னை-இன்பத்தைக் கொடுக்கின்ற தெய்வத்தை. எ-று.

ஆதயம்-நோய். நிராமயம்-நோயின்மை. நிர்க்குணம் - குணமின்மை. சித்து-ஞானம். மாத்தூவெளி-சிதாகாசம்.

8 தன்னிலே தானுக நினைந்துகனிந் தனிழ்ந்துசுக
சமாதி யாகப்
பொன்னிலே பணிபோலு மாயைதரு மனமேயுன்
புரைக ளூர்ந்தா [வா
யென்னிலே யான்பிழைப்பே னெனக்கினியா ருன்போல்
நில்லை யில்லை
யுன்னிலோ திருவருளுக் கொப்பாவா யென்னுயிர்க்கோ
ருறவு மாவாய்.

இ - ள். தன்னிலே தானுகநினைந்து - தன்னிலேதான் லயிக்கும்படி நினைந்து; கனிந்து அவிழ்ந்து-முதிர்ந்தவிழ்ந்து, சுகசமாதி ஆக - சுகத்தைத்தருகின்ற சமாதியுண்டாக, பொன்னிலே பணிபோலும் - பொன்னில் ஆபரணமுண்டானாற்போல, மாயைதரும்-மாயையினால்தரப்பட்ட, மனமே நெஞ்சே, உன்புரைகள்தீர்ந்தாய் என்னின்-உன்குற்றங்களினின்று நீங்கினையாயின், யான்பிழைப்பேன்-நான் உஜ்ஜீவிப்பேன், இனி-இனி, எனக்கு-எனக்கு, உன் போல்வார்யார் - உன்னை யொப்பவர்யாவர், இல்லை இல்லை-(ஒருவரும்) இல்லை இல்லை, உன்னிலோ - நினைத்துப்பார்த்தாலோ; திரு அருளுக்கு ஒப்பு ஆவாய் - திருவருளுக்குச் சமானமாவாய், என் உயிர்க்கு-என் உயிருக்கு, ஓர் உறவும் ஆவாய்-ஒப்பற்ற உறவுமாவாய். எ-று.

9 உறவுடலை யெடுத்தவரிற் பிரமாதி யேனுமுனை
யொழிந்து தள்ளற்
கறவுமறி தரிதன்றே விகபரமு முன்னையன்றி
யாவ துண்டோ
வறிதிலுன்னை யசத்தென்னல் வழக்கன்று சத்தெனவும்
தாழ்த்து மேனென்
சிறுமைகெடப் பெருமையினின் செம்மதே யத்தினிலீ
செல்லல் வேண்டும்

இ-ள். உற - மிகவும், உடலை எடுத்தவரில் - உடம்பெடுத்தவர்களுக் குள்ளே, பிரமாதியேனும்-பிரமாதியாலுலும், உன்னை ஒழிந்து - உன்னை நீங்கி,தள்ளற்கு-காலங்கழித்தற்கு, அறவும்-மிகவும், அரிது அரிது அன்றே- அருமையாகு மல்லவா, இகபரமும் - இகபரசித்திகளும், உன்னை அன்றி- உன்னையல்லது, ஆவது உண்டோ-கை கூடுவ துளதோ, வறிதில்-வீணே, உன்னை அசத்து என்னல் - உன்னை அசத்தென்று சொல்லுதல், வழக்கு அன்று-விவகாரமல்ல, சத்து எனவும் வாழ்த்துவேன்-சத்தென்றும் வாழ் த்தாநிற்பேன், என் சிறுமைகெட-என்தாழ்வுதீர, பெருமையின்-பெருமை யோடு, நின்செம்மதேயத்து-உன்ஜந்மபூமிக்கு, இனிச் செல்லல்வேண்டும்- இனி நீ போதல்வேண்டும். எ-று.

ஜந்மபூமிக்குச் செல்லல்வேண்டும் என்றது இறந் தொழியவேண்டும் என்றபடி. பிரமாதிகளாலும் உன்னை வெல்லமுடியாது, இகபரசித்திகளும் உன்னை யன்றிப்பலியா, ஆதலால், உன்னைச் சத்தென்று வாழ்த்துவேன், நீயிறந்தொழிய வேண்டுமென்பது கருத்து.

10 வேண்டியநா ளென்னேடும் பழகியநீ யெனைப்பிரிந்த
விசாரத் தாலே
மாண்டுகிடக் கினுமந்த வெல்லையையும் பூரணமா
வணக்கஞ் செய்வே
னுண்டகுரு மௌனிதன்னு லியானெனதற் றவனருளு
னுவேன் பூவிற் [லென்
காண்டகவெண் சித்திமுத்தி யெனக்குண்டா முன்னு
கவலை தீர்வேன்.

இ-ள். வேண்டிய நாள்-அநேகநாள், என்னேடும் பழகியநீ-என்னோடு பழகியிருந்தநீ, என்னைப் பிரிந்தவிசாரத்தாலே-என்னைப் பிரிந்த வியசனத் தாலே, மாண்டுகிடக்கினும் - மடிந்துகிடந்தாலும், அந்த எல்லையையும்- அந்த இடத்தையும், பூரணமா வணக்கம் செய்வேன்-பூர்த்தியாய் வணக்கு வேன், ஆண்ட-என்னையாண்டருளின, குருமௌனிதன்னுல்-மௌனகுருவி னுல், யான் எனது அற்று - யான் எனது என்பது அற்று, அவன் அருள்- அவனதருளே, நான் ஆவேன்-நானாய்விடுவேன், பூவில்-உலகத்தில், காண் தக-யாவரும் காணலாம்படி, எண்சித்தி-அஷ்டசித்திகளும், முத்தி-மோக்ஷ மும், எனக்கு உண்டாம்-எனக்குளதாகும், உன்னுல்-உன்னாலே, என்கவலை தீர்வேன்-என் வியசநந்தீர்வேன். எ-று.

நீ மாண்டொழியினும், நாம் பழகினபழக்கவாசனையால் நீமாண்டுகிட க்கிற எல்லையையும் தொழுவேன்,மௌனகுருவின் அருளால் அருளுருவாய் விடுவேன், அஷ்டசித்திகளையு மெய்துவேன், உன்னால் என் கவலையொழி வேன், என்பது கருத்து.

11 தீராத வென்செனன வழக்கெல்லாந் தீருமிந்தச்
செனனத் தேதாடே
யாரேனு மறிவரிய சீவன்முத்தி யுண்டாகு
மையவையோ
காரேனுங் கற்பகப்பூங் காவேனு முனக்குவமை
காட்டப்போமோ
பாராதி யாகவெழு மண்டலத்தி னின்மகிமை
பகர லாமோ.

இ-ள். தீராத-ஒழியாத, என் செனனவழக்குஎல்லாம்-என் ஜந்ம வினை காரங்களெல்லாம், இந்த செனனத்தோடேதீரும்-இந்த ஜந்மத்தோடு ஒழிந்துபோம், யாரேனும்-யாவராயினும், அறிவு அரிய - அறிதலருமையாகிய சீவன்முத்தி உண்டாகும்-சீவன்முத்தியும் உண்டாகும், ஐய-ஐயா, ஐயோ-அச்தோ, காரேனும்-மேகமாயினும், கற்பகப்பூங்காவேனும் - கற்பகப் பூஞ் சோலையாயினும், உனக்கு உவமை காட்டப்போமோ - உனக்கு உவமைப் பொருள்களாக எடுத்துச் சொல்லலாமோ. பார் ஆதியாக-பூமி முதலாகவுள்ள, எழு மண்டலத்தில்-சப்தலோகங்களிலும், நின்மகிமை பகரலாமோ. உன் பெருமையைச் சொல்லுதல் ஒரு வார்க்கையுமோ. எ-று.

அறுதல் என் ஜந்மவினைகாரம்யாவும் இந்த ஜந்மத்தோடு அற்றொழியும் ஜீவன்முத்தியும் உண்டாகும், மேக முதலானவைகளும் ஔதார்யத்தால் உனக்குச் சமானமாமோ, உன்மகிமை எழுலகத்தாலுஞ் சொல்லிமுடியுமோ என்பதாம்.

பரமபுனி.

பாயப் புலிநின மான்கன்றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக் கேயிலக் காலிவீண வைத்தனையோ
தீயைப் படிவதுத் தாலுகன் றேற்சென் பெருங்கருணை
தாயைக் கடுவார்க் கருள்கச்சி தாணுத் தற்பரமே.

இ - ன். பாய் - பாய்கின்ற, அப்புலிமுன்னம் - அப்புலிக்கெதிரில், மான்-மானினத்து, கன்றைக்காட்டும்படி-தன்கன்றைக் காட்டுதல் போல, ஆலிமாயை - பிரபஞ்சமாயையாகிய, பெரும்படைக்கே - பெரிய ஆயுதத் தற்கே, இலக்காக - இலக்காமாக, என்னை வைத்தனையோ - என்னை வைத்தாயோ, நீ எப்படி வருத்தினும்-நீயெவ்வாறுவருத்தினும். தன்றே - நல்லதே, நின்பெருங்கருணை - உனது பேரருளே. அடியார்க்கு - உன் அடியார்களுக்கு, தாய் நீதான் - தாய்போன்று. அருள் - அருள் செய்யாநின்ற, சசிதாநந்த தற்பரமே - அஸ்திபாதி ப்ரியரூபமாகிய தற்பரவஸ்துவே.

புலியாயும்போது மானைத் தன்கன்றைக்காட்டுதல் இயற்கையாதலால் இவ்வாறுகூறினர். இறைவனே புலியாயும்போது மானைத் தன் கன்றை அதற்கு உணவாகத்தருதல்போல், மாயைக்கு என்னை லக்ஷ்யமாகக் கொண்டோ, நீயெப்படிவகுப்பினும் நன்றே என்பது கருத்து. "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானேவதற்கு நாயகமே" என்னும் திருவாசகமும்.

2 தற்பர மாஞ்சிற் பரமாகி மன்றுத் தனினடித்து
நிற்பரம் போருகன் மால்பணி நீதிரென் னெஞ்சகமாங்
கற்பகத் தங்கு கரைந்திட வானெத்த காட்சிகல்கும்
பொற்பர மாயென் விணைக்கருந் தாதைப்பொடிசெய்ததே.

இ-ள். அம்போருகன்-பிரமனும், மால்-திருமாலும், பணி-வணங்கத் தக்க, நீதம்-நீதியையுடையவர், தற்பரம் ஆம் சிற்பரம் ஆகி-தற்பரமாகிய சிற்பரமாகி, மன்றம்தனில்-அம்பலத்தில், நடித்துநிற்பர்-திருநடனஞ்செய்து நிற்பர், (அத்தன்மையர்) என்னெஞ்சகமாம்கல்-என் மனமாகிய கல்லானது, பரத்தாங்கு-பரவிஞ்சுபோல, கரைந்திட-உருகிநிற்க, வான் ஒத்தகாட்சிகல்கும்-மேன்மைபொருந்திய காட்சியைக் கொடுக்கின்ற, பொற்பு அரம் ஆய்-அழகாகியஅரமாகிய, என்வினை-என்றீவினையாகிய, கருந்தாதை-இரும்பை, பொடிசெய்தது-பொடியாக்கினது, எ-று.

இறைவன் என்வினையாகிய இரும்பைப் பொடியாக்கும் அரத்தையொப்பான் என்பது கருத்து.

3 செய்புந் தவஞ்சற்று மில்லாத நானுன் றிருவடிக்கே
கொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பினின் முடிக் கதிர்திருகி
உய்யும் படிக்கருள் செய்வையன் றேபுலி யூரத்தனே.

இ-ள். புலியூர் - புலியுரின் கண்ணனைழுந்தருளியிருக்கிற. அத்தனே-எமது தந்தையே, செய்யும்தவம்-செய்தற்குரிய தவமானது, சற்றும் இல்லாத-சிறிதுமில்லாத, நான்-அடியேன், உன்திருவடிக்கு-உன் திருவடியின் மேல், கொய்யும்-பறிக்கப்படுகின்ற, புதுமலர்-நின்மலரைத்தூவி, மெய்யன்பர் குழாத்துடனே-மெய்யடியார் கூட்டத்தோடு (கூடி), கையும்-கைகளையும், சிரமிசைகூப்பி-தலைமேல் குவித்து, நின் முடி-நின்று ஆகந்தரத்தைச்செய்து, கதிர்திருகி-மனங்கசிந்து மெய்யுருகி, உய்யும் படிக்கு-உஜ்ஜீவிக்கும்படிக்கு, அருள்செய்வை-திருவைசெய்வது, என்றே-என்றாலோ, எ-று.

செய்யுந்தவஞ் சற்றுமில்லாமையே, நான் உன்றிருவடிக்கே கொய்யும் புதுமலரிட்டு மெய்யன்பர் குழாத்துடனே கையுஞ் சிரமிசைகூப்பி நின்று டிக்க சிந்துருகி உய்யும்படிக் கருள்செய்வதென்றே என்றிரங்குதற்குக் காரணமாயிற்று. எங்ஙனேனா என்பதில் ஓகாரம் இரக்கமும் அருமையுந் தோன்றநின்றது. புதுமலரிடுதல் முதல் கசிந்துருகுதலீறாகிய செயல்கள் அதற்குக் கருவிகளென்பதூஉம் அருள்செய்வதென்றே என்றமையால் அவையும் அவனருளின்றிக் கைவராவென்பதூஉம் போதரும். அதுவு மவனதின்னருளே" எனவும், "அவனருளாலே யவன்றாள்வணங்கி" எனவும், அருள்கைவந்த அறிஞர் கூறலுங்காண்க.

4 அத்தனைச் சிற்றம் பலவனை யென்னுயி ராகிநின்ற
சுத்தனைச் சுத்த வெளியா னவனைச் சுகவடிவாம்
நித்தனை நித்த நிராதார மாகிய நின்மலனை
எத்தனை காள்செல்லு மோமன மேகண் டிறைஞ்சுதற்கே.

இ-ள், மனமே-நெஞ்சமே, அத்தனை-எமது தந்தையை, சிற்றம்பல வனை-சிதாகாயத்தில் பொதுநடஞ்செய்வோனை, என் உயிர் ஆகிநின்ற சுத் தனை-என்னுயிராய் நின்ற பாரிசுத்யமுடையவனை, சுத்தவெளி ஆனவனை - வெறுவெளியானவனை, சுகவடிவு ஆம்நித்தனை-சுகரூபமாகிய சாசுவதனை, நித்தம் நிராதாரம் ஆகிய நின்மலனை-என்றும் நிராதாரமாயிருக்கின்ற மல ரஹிதனை, கண்டு இறைஞ்சுதற்கு - கண்ணுரக்கண்டு மெய்யாரவணங்கு தற்கு, எத்தனை காள்செல்லுமோ-எத்தனை காலங்கழியுமோ, (நீ சொல்வா யாக) எ-று.

யான் என்பது இவ்விடத்து அறிவுருவாகிய ஆன்மாவைக்குறிக்கின்ற மையால் என் உயிர் என்றது அறிவுக்கறிவாகிய பரமான்மாவை.

5 கண்டார் புளத்தினிற் காலூன்றிப் பெய்யுங் கருணைமுகி
லண்டார் புரத்திக்கு மன்பர்வினைக்கும சனிதன்னைக் [லாம்
கொண்டாடி னர்முனங் கூத்தாடு மத்தன்றன் கோலமெல்
விண்டலம்மா வொன்றுங்காணுது வெட்டவெறுவெளியே.

இ-ள். கண்டார் உள்ளத்தினில் - தன்னையுள்ளவாறு கண்டவர்க ளுடைய மனங்களில், காலூன்றி-அடியூன்றி, கருணைபெய்யும் - கருணை வர்ஷத்தைப் பொழிகின்ற, முகில் - மேகம், அண்டார் - பகைவராகிய திரிபுரவாசிகளாகிய மலைகளுக்கும், அன்பர்வினைக்கும் - அடியார் வினை களாகிய மலைகளுக்கும், அசனி-இடியேறு, தன்னைகொண்டாடினர் முன் னம் - தன்னைக்கொண்டாடின வர்களுக்கெதிரில், கூத்தாடும் - கூத்தாடு கின்ற, மத்தன்-உன்மத்தன், கோலம் எல்லாம் - (அவன்) கோலங்களே யெல்லாம், விண்டால்-வெளியிட்டுச்சொல்லலாமென்றால், ஒன்றும்காணுது-

சிறிதுங் காணப்படாது, வெட்டவெறுவெளியே-(காணப்படுவது) வெட்ட வெறுவெளிதான், அம்மா-ஆச்சரியம். எ-று.

அசனியென மேல்வந்தமையால் அண்டார்புரத்தையும் அன்பர்வினையையும் மலைகளாக்கி யுரைக்கலாயிற்று. யாவராயினுங் கொண்டாடலேயுகந்து கூத்தாடுவோனுதலால் மத்தனென்று பிரித்துரைக்கலாயிற்று. கூத்தாடும் அத்தன் எனப் பிரித்துரைப்பினுமாம்.

6 வெளியான நீயென் மனவெளி யூடு விரவினையா
வெளியாருங் கண்ணு மிரவியும் போனின் றுலாவுவண்கா
ணெளியாருங்கொன்றைச் சடையாடவம்புலி யாடக்கங்கைத்
துளியாட மன்று ணடமாடு முக்கட் சுடர்க்கொழுந்தே.

இ-ள். வெளியானந்-சிதாகாசரூபமானநீ, என்மன வெளியூடுவிரவின்-என்மநாகாசத்திற் கலந்தால், ஐயா - ஐயனே, ஒளிஆரும் கண்ணும்-ஒரு பொருத்திய விழியும், இரவியும்-சூரியனும், போல் - போல, நின்று உலாவுவண்-நிலைபெற்றுலாவுவேண், அளி ஆரும் (தேன்விருப்பத்தால்) வண்டுகள் நிறைந்த, கொன்றை-கொன்றைமலர்களையணிந்த, சடைஆட-சடையாடவும், அம்புலி ஆட - அச்சடையி லணிந்திருக்கிற சந்திரகண்ட மாடவும், கங்கை-கங்கையின், துளி ஆட-துளிகள் ஆடவும், மன்றுள் - சிற்சபையில், நடம்ஆடும்-நடநமாடுகின்ற, முக்கண் - மூன்றுகண்களையுடைய, சுடர்கொழுந்தே-தேஜோரூவாலேயே. எ-று.

முக்கண் சுடர்க்கொழுந்து என்பதற்கு, மூன்றுகண்களாக முச்சுடரைக்கொண்ட வேதமுடிவே யென்றுரைப்பினுமமையும். முச்சுடர்-சோம சூர்யாக்கிகள். இறைவனுடன் எல்லா மாடுமென்பதாயிற்று. "கருவூரனுக்கா, மான்சாயச்செய்கை மழுவலஞ்சாயனந்த கொன்றைத் தேன்சாய நல்ல திருமுடிசாய்த்த சிவக்கொழுந்தே" என்றார் மேலோரும்.

7 கொழுந்தா துறைமலர்க் கோதையர் மோகக் குரைகடலி
லழுந்தாத வண்ணநின் பாதப் புணைதந் தருள்வதென்றே
வெழுந்தா தாவுசெ யெம்பெரு மானென் றிறைஞ்சி விண்ணோர்
தொழுந்தாதை யேவெண் பொடிபூத்த மேனிச் சுகப்பொருளே

இ-ள். விண்ணோர்-தேவர்கள், எழுந்து-எழுந்துநின்று, எம்பெருமான்-எம்மிறைனே, ஆதாவுசெய்-எங்களுக்கோராதரவுண்டாக்கு, என்று-என்று வாயினற்றுதித்து, இறைஞ்சிதொழுந்-வணங்கித்தொழுதற்குரிய, தாதையே-எமதுதந்தையே, வெண்பொடிபூத்த-திருவெண்ணீறுபூத்த, மேனி-திருமேனியுடைய, சுகப்பொருளே ஆநந்தைகவஸ்துவே, கொழு-செழிய, தாது உறை - மகரந்தம்பொருந்திய, மலர்க்கோதையர் - மலர்மாலைகளையணிந்த

மாதர்க்ஞடைய, மோகம்-மோஹமாகிய, ஞரைகடலில்- ஆரவாரத்தோடு கூடிய சமுத்திரத்தில், அழுந்தாதவண்ணம்-அமிழாதபடி, நின்பாதப்புணை- உன் திருவடியாகிய மரக்கலத்தை, தந்தருள்வது என்றோ - கொடுத்தருளுவது எக்காலமோ (அறிகிலேன்). எ-று.

இறைவனடியை யடையாதார்க்கு மோகசகடல் கடத்தலருமையா மென்பார், கொழுந்தாதுறை மலர்கோதையர் மோகக்ஞரை கடலிலமுந்தா தவண்ண நின்பாதப்புணை தந்தருள்வதென்றோ. என்றார், "பிறவிப்பெருங் கடனீந்துவர் நீத்தார்நினைவுடை தேராதார்" என்றார் மேலோரும். கடல் கடக்கப் புணையமையாதாதலால். புணைபிண்டி மரக்கலத்தின்மேலது.

8 சகமாகு ஞானந் திருமேனி யாகல்ல தொண்டர்தங்க
ளகமே பொற் கோயி லெனமகிழ்ந் தேதமர்ந்து ளாடியகற்
பகமேயுன் பொன்னடி நீழல்கண் டாலன்றிப் பாவிக்கிந்தச்
சகபாயை யானவ ருங்கோடை நீங்குந் திறமிலேயே-

இ-ள். சகம்ஆகும்-சகமுதய மாதற்குக் காரணமாகிய, ஞானம்-ஞான மே, திருமேனி ஆம்-திருமேனியாகக் கொண்ட, கல்லதொண்டர் தங்கள்- சிறந்த தொண்டர்க்ஞடைய, அகமே - மனமே, பொற்கோயில் எனமகிழ்ந்து-பொற்கோயிலாகக் கொண்மகிழ்ந்து, மன்றுள்-அம்பலத்தில், ஆடிய- கூத்தாடின, கற்பகமே-கற்பகவிருக்ஷமே, உன்பொன்னடி நீழல் கண்டால் அன்றி-உன்திருவடி நிழலைக்கண்டாலல்லது, பாவிக்கு - பாவியாகிய எனக்கு, இந்த சகமாயை ஆன-இந்த ப்ரபஞ்சமாயையாகிய, அருகோடை- நீக்குதற்கரிய கோடையான்து, நீங்கும்திறம் இல்லை - நீங்கும் வகையில்லை. எ-று.

அம்பலவாணனே, பாவியேன் உன்பொன்னடி நிழலையடைந்தாலன்றி, உனக்கு இந்தப் பிரபஞ்சமாயையாகிய கடுங்கோடை நீங்கும் வகையில்லை என்பது கருத்து.

9 நீங்கா துயிருக் குயிராகி நின்ற நினையறிந்தே
தூங்காமற் றூங்கினல் லாதே யெனக்குச் சகமுமுண்டோ
வோங்கார மாமைக் தெழுத்தாற் புவனத்தை யுண்டெண்
பாங்கா கடத்தும் பொருளே யகண்ட பரசிவமே. [ணிப்

இ-ள். ஓங்காரம் ஆம் - ப்ரணவஸ்வரூபமாகிய, ஐந்து எழுத்தால் - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தால், புவனத்தை உண்டெண்ணி-புவனங்களையுண்டாக்கி, பாங்கு ஆ - முறையாக, கடத்தும் - அவைகளை கடத்துகின்ற, பொருளே- வஸ்துவே, அகண்டபரசிவமே - அகண்டாகார பரசிவமே, நீங்காது - நீங்காமல், உயிருக்குயிர் ஆகிநின்ற-உயிர்க்குயிராயிருக்கிற, நின்னை அறிந்து- உன்னையுணர்ந்து, தூங்காமல் தூங்கின் அல்லாது - தூங்காமல் தூங்கினை

லன்றி, எனக்கு-அடியேனுக்கு, சுகமும் உண்டோ - நிரதிசய சுகமுண்டா குமோ. எ-று.

ப்ரணவமே பஞ்சாக்ஷரத்துக்கு மூலமென்பார் ஓங்காரமா மைக்தெழுத்து என்றார். நாங்காமற் றாங்குதல்-நனவிற் சுழுத்திநிலையை யடைந்திருத்தல். அது, "வினவிற்பரத்தை யறிவுறுதற்கவத்தை புலன்வினைமாறியே நனவிற் சுழுத்திநிலவரினப் பொருட்டி கழுநலனுகவே" என்னும் மேலோர் வாக்கானு முணர்க.

10 சிவமாதி நான்முகக் கோவந்த மாமறை செப்புகின்ற
நவமாயி லங்கிய வொன்றே யிரண்டற்ற நன்மைபெறு
தவமே தருமைம்புலப்பொறிக் கேயென்னறிவுபொல்லாப்
பவமே விளக்கவென்றேவெளி மானைப்பாய்ந்ததுவே.

இ-ள். சிவம்-மங்களகரம், ஆதி - முதற்பொருள், (என்று) நான்முகக் கோ-பிரமனும், அந்த - அந்த, நான்மறை - நான்குவேதங்களும், செப்புகின்ற-புகழ்ந்து சொல்லுகின்ற, நவம்ஆய் இலங்கிய-புதுமையாய் விளங்காகின்ற, ஒன்றே-ஒப்பற்றபொருளே, இரண்டு அற்ற நன்மைபெறுது - அத்விதீயமாகிய நலத்தையடையாமல், அவமேதரும் - பயனின்மையையே கொடுக்கின்ற, ஐம்புலப்பொறிக்கே-ஐம்பொறிப்புலன்களில், என் அறிவு-என்மனமானது, பொல்லா-கொடிதாகிய, பவமேவிளக்க என்றே-பிறவியையே விளைவித்தற் கென்றதாலே, வெளிமான் என - வெளிமானைப் போல, பாய்ந்தது-தாவிக்குதித்தது. எ-று.

சிவமாதி என ஒன்றுகவைத்து, சிவமாதியவாக எனப்பொருளுரைத்தலுமாம். பெருமை சொல்லற்கரிதாமென்பார் அந்த என்றெழுந்தார். வேதங்களுக்குப் பெருமையாவது-வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன் கண்டது என்னும்பெருமை. இரண்டற்ற நன்மை-அத்வைதாநந்தம், "காட்சிக் கெட்டாதொன்றிற் கவ்வையறவடைகின்றாய்" எனமேலோரு மிவ்வாற கூறுதல்காண்க, ஐம்பொறிப்புலன்கள்-ஐம்பொறிகள் வாயிலாக வரும் விடயங்கள், ஐம்பொறி முன்பின்னுகமாற்றியும் உருபைப் பிரித்துஞ் சேர்த்தும் பொருட்கிணங்க வுரைக்கலாயிற்று. அறிவு - இவ்விடத்து மனத்தை யுணர்த்நிற்று. வெளிமான் ஒருமான்விசேடம், அது தாவுதற்கெழுலில் வல்லது "மரைபோற்றிசிவாரை யகனெஞ்சமே" எனப் பிறருங் கூறினர்.

11 ஆறைத் திலங்கு சமயங்க ளாறுக்கு மாற்கடலாய்
வீறிப் பரந்த பரமான வானந்த வெள்ளமொன்று
தேறித் தெளிந்து நிலைபெற்ற மாதவர் சித்தத்திலே
யூறிப் பரந்தண்ட கோடியெல் லாநின் றுலாவியதே.

இ-ள். ஆறு ஒத்திலங்கு-ஆதிகளோ யொத்துவிளங்குகின்ற, சமயங்கள் ஆறுக்கும்-ஆறுசமயங்களுக்கும், ஆழ்கடலாய் - ஆழ்ந்தகடலுக்கு நிகராய், வீறிபரந்த-விஞ்சிப்பரவிய, பரமான - மேலான, ஆநந்தவெள்ளம் ஒன்று-ஆநந்தப் பெருக்கொன்று, தேறிதெளிந்து - தேறிதெளிந்து, நிலைபெற்ற-நிலையையடைந்த, மாதவர்சித்தத்திலே - பெருந்தவத்தினரது ஹ்ருதயத்திலே, ஊறி பரந்து-கசிந்து பரவி, அண்டகோடியெல்லாம்-அண்டகோடிகளிலெல்லாம், நின்று உலாவியது-நின்றுவியாபித்தது. எ-று.

சமயங்களெல்லாம், தன் னுண்மையை நோக்குமிடத்து, நிஷ்ப்ரயோஜநங்களாய்ச் சென்றொடுங்கு மிடமாதலால், ஆறுத்திலங்கு சமயங்களாறுக்கு மாழ்கடலாய் என்றார். தேறுதல் - சாத்திரங்களாற்றெளிதல். தெளிதல்-ஆசாரியனாலும் சுவாநுபவத்தாலும் தெளிதல்.

12 நடக்கினு மோடினு நிற்கினும் வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினுஞ் செவ்வி திருக்கினு நல்லருட் கேள்வியிலே
தொடக்குமென் னெஞ்ச மனமற்ற பூரணத் தொட்டிக்கு
முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே.

இ-ள். நடக்கினும்-நடந்தாலும், ஓடினும்-ஓடினாலும், நிற்கினும்-நின்றாலும், வேறு ஒருநாட்டம் இன்றிகிடக்கினும்-வேறொரு கருத்தின்றிக் கிடந்தாலும், செவ்விது இருக்கினும் - செவ்விதாக இருந்தாலும், நல் அருட் கேள்வியில்-சிறந்த திருவருட்கேள்வியில், என் நெஞ்சம்தொடக்கும்-என் மனமானது கட்டுண்ணுதிற்கும், யான்-நான் என்றாலோ, மனமற்ற பூரணத் தொட்டிக்குள்ளே முடக்குவன் - மனமிறந்த பூரணமாகிய தொட்டியில் முடக்கிக்கொள்வேன், பரமாநந்த நித்திரைமூடிடும் - பேரின்ப வுறக்கமானது என்னை வந்து மூடிக்கொள்ளும். எ-று.

"நின்று பிருந்துகிடந்து நடந்துநினை, என்றுஞ் சிவன்முனிணை', என்னுமேலோர் திருவாக்குகளோ யடியொற்றி, நடக்கினு மோடினுநிற்கினும் வேறொரு நாட்டமின்றிக் கிடக்கினுஞ் செவ்விதிருக்கினு நல்லருட் கேள்வியிலே தொடக்குமென்னெஞ்சம் என்றார். மனமற்ற பூரணத்தொட்டில் என்றது." உள்ளத்தழிவி லடக்குந்தேனை.

13 எண்ணுத லெண்ணிய நெஞ்சே துயரோழி யென்னிரண்டு
கண்ணே யுறங்குக வென்னுணை முக்கட் கருணைப்பிரான்
தண்ணரு ளருணை மௌனத்தி னுன்முத்தி சாதிக்கலாம்
நண்ணுத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே.

இ-ள். எண்ணுதது எண்ணியநெஞ்சே - எண்ணவொண்ணுத வெண்ணுங்காலெல்லாம் எண்ணினமனமே, துயர் ஒரு - துன்பத்தை நீக்குவா

யாக, என் இரண்டு கண்ணே-என்னிரண்டுகண்களே, உறங்குக-உறங்குவீர்களாக, என் ஆணை-என்மீது ஆணை, முக்கண்-மூன்றுகண்களையுடைய, கருணைப்பிரான்-கருணைசமுத்திரமாகிய பெருமானது, தண் ஆர்கருணை-தட்பத்தினையுடைய கருணையால் நமக்குளதாகிய, மௌனத்திலால் - மௌனநிலையிலால், முத்திசாதிக்கலாம்-முத்திநெறியைச் சாதிக்கலாம், நண்ணுதது ஒன்று இல்லை-கிடையாத தொருபொருளில்லை, எல்லாநலமும்நமக்குள-எல்லா நன்மைகளும் நமக்குளவாம். எ-று.

என்மனமே, உன் நுபரம்நீங்கு, என்கண்களே உறங்குக, முக்கட்பிரானது திருவருளால் முத்திமுதலாகிய எல்லாப் பேறுகளையும் அடையலாம் என்பது கருத்து.

14 நானென் றொருமுத லுண்டென்ற நான்றலை நாணவென்னுட்
டானென் றொருமுதல் பூரண மாகத் தலைப்பட்டொப்பி
வானந்தந் தந்தென் னறிவையெல் லாமுண்டவசகல்கி
மோனந் தனைவிலைத் தாலினி யாது மொழிகுவதே.

இ-ள். நான் என்றி ஒருமுதல் உண்டு என்ற - நானென்றொருமுதற் பொருளுளது என்றகங்கரித்துத்திரிந்த, நான்-நான், றலைநாண-தலைவளைக்க, என்னுள்-என்மனத்துக்குள்ளே, தான் என்று ஒருமுதல் - தானென் றொரு முதற்பொருள், பூரணமாகதலைப்பட்டி-நிறைவாகக்கலந்து, ஒப்பில் ஆனந்தம்தந்து-ஒப்பற்ற ஆனந்தத்தைக்கொடுத்து, என் அறிவையெல்லாம் உண்டி-என்னறிவு முழுமையுமுட்கொண்டு, அவசம்கல்கி - பரவசத்தைக் கொடுத்து, மோனந்தனைவிலைத்தால்-மௌனநிலையை யெனக்குக் கிருபை செய்ததாலால், இனியாது மொழிகுவது-இனியென் சொல்வது. எ-று.

நான் என்று அகங்கரித்துத்திரிந்த நான் தலைவளைக்கும்படி பூரணப் பொருள் என்மனத்திற்கலந்து ஒப்பற்ற இன்பத்தைக்கொடுத்து என்னறிவு முழுதையும் ஆக்ரமித்துக்கொண்டு பரவசத்தை யெனக்குக்கொடுத்து மோநநிலையையும் எனக்குக் கொடுத்ததாலால், யான் சொல்லத்தகுவது யாது என்பதாம்.

15 தானந் தவஞ்சற்று மில்லாத நானுண்மை தானறிந்து
மோனம் பொருளெனக் கண்டிடச் சற்குரு மோனனுமாய்த்
தீனன் றனக்கிங் கிரங்கியே யெவினிச் சிறந்தைக்கென்றுபாய்
மானந்தந் தானல்ல வோபர மேசச்சி தானந்தமே.

இ-ள். தானம்தவம் சற்றும் இல்லாத-கொடைதவம் சிறிதுமில்லாத, நான்-நான், உண்மைதான் அறிந்து-யதார்த்தத்தை யுணர்ந்து, மோனம்-

மௌனநிலையே, பொருள் எனக்கண் உடல்-மெய்யன்றணருமாறு, சற்குரு மோனனுமாய்-மௌனசத்குருவாகி, தின்னனக்கு-எளியேனுக்கு, இங்கு-இவ்விடத்து, இரங்கினையே இரங்கியருளினையே, இனி இனி, சிந்தைக்கு-என்மனத்துக்கு, என்றும்-எக்காலமும், ஆனந்தந்தான் அல்லவோ - இன்பமேயன்றோவுள்ளது, பரமே-மேலானபொருளே, சச்சிதானந்தமே-சச்சிதானந்தப்பொருளே. எ-று.

சச்சிதானந்த வஸ்துவே, தானம்முதலியவை சிறிதுமில்லாத தான் உண்மையையறிந்து மௌனநிலையே நன்னிலையெனக் காணுமாறு மௌன சற்குருவாகிவந்து எளியனேற்கிரங்கி யருளினை இனியெனக்குள்ளது இன்பமேயன்றே என்பதாம்.

16 எனக்கோர் சுதந்தர மில்லையப் பாவெனக் கெய்ப்பில்வைப் பாய், மனக்கோ தகற்றும்பரம்பொரு ளேயென்னை வாழ்வித்திட, னினக்கே பரமின்னை நீங்காத பூரண நீள்கருணை, தனக்கே பரமினிச் சும்மா விருக்கத் தகுமென்றுமே.

இ-ள். எனக்கு-அடியேனுக்கு, ஓர் சுதந்தரம் இல்லை-ஒருஸ்தவந்த்ரம் இல்லை, அப்பா-அப்பனே, எனக்கு-அடியேனுக்கு, எய்ப்பில்வைப்பு ஆய்-எய்ப்பில்வைப்பாகி, மனக்கோ-மனக்களங்கத்தை, அகற்றும்-நீக்குகின்ற, பரம்பொருளே-மேலானவஸ்துவே, என்னை வாழ்வித்திடல்-என்னை வாழ்விப்பது, நினக்கே பரம்-உனக்கே பரமாகும், (இல்லை) நின்னை நீங்காத உன்னைவிட்டுநீங்காத, பூரணம்-பூர்ணமாகிய, நீள்கருணை தனக்கே-பெருங்கருணைக்கே, பரம்-பாரமாகும், (ஆதலால்) இனி என்றும்-இனியெக்காலத்தும், சும்மாஇருக்கத்தகும்-(எனக்கு) சும்மாவிருத்தலேதகுதியாகும். எ-று.

எய்த்தல் - இளைத்தல். வைப்பு-நிக்ஷேபம், என்னை வாழ்வித்திடல் உன் கருணைக்குக்கடன்மை, சும்மா இருத்தல் எனக்குக்கடன்மை என்பது கருத்து.

17 இடம்பெறு வீடுதின் னர்சேய் சகமு மிருதியு முடம்பைவிட் டாருயிர் போம்போது கூடியுடன்வருமோ மடம்பெறு மாயை மனமே யினியிங்கு வாமவுனி திடம்பெற வைத்தமௌனஞ் சகாயந் தெரிந்துகொள்ளே

இ-ள். இடம்பெறுவீடு விசாலமானவீடு, தின்னர்-மாதர்கள், சேய்-புத்திரன், சகமும்-பிரபஞ்சம் ஆகிய எல்லாமும், இருதியும் - பெரியதிரவியமும், ஆர்உயிர்-அரியவுயிர், உடம்பைவிட்டுபோம்போது - சரீரத்தைவிட்டுப் போகுங்காலத்தில், கூடி - சேர்ந்து, உடன்வருமோ - நம்மோடு

வருமோ. மடம்பெறுமாயை மனமே - மடமைபெற்ற மாயாரூபமாகிய நெஞ்சே, இனி இவருவா இனி யிவ்விடத்துவா, மவுனி - மௌனகுருவான வர், திடம்பெறவைத்த-நாம்திடம்பெறும்வகையமைத்த, மௌனம்-மௌன நிலையே, சகாயம் - நமக்கு அப்பொழுது உதவியாவது, தெரிந்துகொள். அறிந்துகொள்வாயாக. எ-று.

மனமே, உடம்பைவிட்டு உயிர் நீங்குங்காலத்தில் வீடுமுதலியவை கூடச்செல்லுமோ, செல்லா, ஆகையால், மௌனகுரு நாம்திடப்பட அமைத்த மௌனநிலையே நமக்குதவியாவதென்று அறிந்துகொள்வாயாக என்ட தாம்.

18 நாற்றச் சடலத்தை யொன்பது வாச னடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத்தொடக்கறையை
யாற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

இ-ள். நாற்றம் சடலத்தை-துர்க்கந்தத்தின் நெருக்கத்தை, ஒன்பது வாசல் நடைமனையை - நவத்வாரங்களையுடைய நடைவீட்டை, சோற்றுப் பசையினை-சோற்றுப்பசையை, மும்மல பாண்டத்தொடக்கு அறையை-மும்மலபாண்ட சம்பந்தமுள்ள சிறுவீட்டை, ஆற்றுப்பெருக்கு அன்ன-நதிப்பெருக்கையொத்த, கன்மப்பெருக்கை - கர்மப்ரவாஹத்தை, அடர்-நெருங்கிய, கிருமி-புழுக்களையுடைய, சேற்றை-சேற்றினை, துணையென்ற-சஹாயமென்றெண்ணியிருந்த, நாய்க்கும்-நாயினைப்போலும், கதிசேர்வது-சத்கதியையடைவது, உண்டோ-உளதோ. எ-று

அருவருப்பான இத்தவுடம்பைத் துணையென்று நம்பியிருந்த எனக்கும் நற்கதிப்பேறுண்டோ என்பதாம்.

19 பொய்யா ருலக நிலையல்ல கானற் புனலெனவே
மெய்யா வறிந்தென்ன வென்னு லிதனை விடப்படுமோ
கையான் மவுனந் தெரித்தேகல் லாணிழற் கண்ணிருந்த
வையாவப் பாவென் னரசேமுக் கண்ணுடை யாரமுதே.

இ-ள். பொய் ஆர் உலகம் பொய்நிறைந்தவுலகமானது, நிலை அல்ல-நிலைபேறுடையதன்று, கானல்புனல் - கானற்சலம்போலப் பொய்யாய்ப் போவதாம், எனை-என்று, மெய் ஆ-உண்மையாக, அறிந்துஎன்ன - உணர்ந்தால்தான் என்ன, என்னுல் - என்னலே, இதனை விடப்படுமோ - இதை விடக்கூடுமோ, கையால் - சின்முத்திரைக்கையால், மவுனம் தெரித்து-மௌனநிலையுணர்த்தி, கல்லால்நிழற்கண் இருந்த - கல்லாலின் நீழலில்

எழுத்தருளியிருந்த, ஐயா-ஐயனே, அப்பா - அப்பனே, என் அரசே - என் னரசே, மூக்கண் ணுடை-மூன்று கண்களையுடைய, ஆர் அமுதே - அரிய அமிர்தமே. எ-று.

இவ்வுலகம் கானற்சலம்போலப் பொய்யென்றறிந்திருப்பினும், உன் திருவருளிலன்றி என்னுளித்தனைவிட வெவாண் ணுமோவென்பது கருத்து.

20 ஆரா வமுதென மோனம் வகித்துக்கல் லானிழற்கீழ்ப்
பேரா துநால்வ ருடன்வாழ்முக் கண்ணுடைப் பேரரசே
நீரா யுருகவுள் ளன்புதந் தேசுக நிட்டையைநீ
தாரா விடினென் பெருமூச்சுத் தானத் தனைஞ்சயனே.

இ-ள். ஆரா அமுது என-திகவிட்டாத அமிர்தம்போல, மோனம் வகித்து - மௌனமுத்திரையைத்தாங்கி, கல்லால்நிழற்கீழ் - கல்லாலின்நீழலின் கீழ், பேராது-நீங்காமல், நால்வருடன்வாழ், ஸநகாதிநால்வரோடும் வசிக்கின்ற, முக்கண் உடை-மூன்றுகண்களையுடைய, பேர்அரசே-பேரரசனே, நீராய் உருக-நீராயுருகும்வண்ணம், உள் அன்புதந்து - மநோ ப்ரீதியைக் கொடுத்து, சகநிட்டையை-இன்பநிஷ்டையை, நீதாராவிடின் நீகொடாவிடின், என்பெருமூச்சுத்தான்-என் நெட்டுயிர்ப்பே, அத்தனஞ்சயன் அத்தனஞ்சய வாயுவாய் முடியும். எ-று.

வாயுபத்தனுள், தனஞ்சயவாய உயிர்க்கிறும் உடம்பைவிக்கித் தலை நிறுத்தகல்லது. என் பெருமூச்சுத்தான் அத்தனஞ்சயன் என்றது நான் இறந்துபடுவேனென்பதாம். எனக்கு உன்மேல் அன்பு பெருகப்பண்ணி, சகநிஷ்டையைக் கொடாவிடின், நான் இறந்துபடுவேன் என்பதுகருத்து.

21 வாயுண்டு வாழ்த்த மவுனஞ்செய் போது மவுனவருட்
டாயுண்டு சேயென்ன வென்னைப் புறக்கச் சதானந்தமா
நீயுண்டு நின்னைச் சரண்புக நானுண்டென் நெஞ்சமையா
தீயுண் டிருந்த மெழுகல வோகதி சேர்வதற்கே.

இ-ள். வாழ்த்த உன்னை வாழ்த்துதற்கு, வாய் உண்டு - வாயுள்ளது, மவுனம்செய்போது-மௌநநிலையை யநுஷ்டிக்கும்போது, மவுன அருள் தாய் உண்டு - (அதைமுற்றுவிக்க) மௌநமாகிய அருட்டாயுண்டு, சேய் என்ன-பிள்ளையைப்போல, என்னைப்புறக்க - என்னைக்காப்பாற்ற, சதாநந்தம் ஆம் நீ உண்டு - சதாநந்தமாகிய நீயுண்டு, நின்னைச்சரண்புக - நின்னைச் சரணடைதற்கு, நான் உண்டு-நானுண்டு, ஐயா - ஐயனே, கதிசேர்வதற்கு-நற்கதியடையும்பொருட்டு, என்நெஞ்சம் - என்மனமானது, தீயுண்டிருந்த-தீயிலெல்வதுப்பப்பட்ட, மெழுகு அல்லவோ-மெழுகாமல்லவோ. எ-று.

உன்னைத் துதிக்கவாயுண்டு, மௌனநிலையை முற்றுவிக்கத் திருவருட்டாயுண்டு, என்னை மகனைப்போலெண்ணிக் காப்பாற்றுதற்கு நீயுண்டு, உன்னைச் சரணடைய நான் உண்டு, சற்கதியையடைதற்கு என்னெஞ்சம் ஒருப்பைச்சேர்ந்த மெழுகுபோலுருகா நின்றதன்றே என்பதாம்

22 கல்லா லெறிந்துங்கை வில்லா லடித்துங் கனிமதுரச்
சொல்லாற் றுதித்துநற் பச்சிலை தூவியுந் தொண்டரின
மெல்லாம் பிழைத்த னரன்பற்ற நானினிவே தஞ் செய்வேன்
கொல்லா விரதியர் கோரின்ற முக்கட் குருமணியே.

இ-ள். கொல்லாவிரதியர் கோரின்ற-கொல்லாமையாகிய விரதத்தையுடையோர்களுக்குப் பிரத்தியக்ஷமாய்நின்ற, முக்கண் - மூன்றுகண்களையுடைய, குருமணியே-நிறம்பொருந்திய மாணிக்கமே, கல்லால் எறிந்தும்-கல்லினாலெறிந்தும், கைவில்லால் அடித்தும் - கைவில்லினாலடித்தும், கனிமதுரச்சொல்லால் துதித்தும்-பழுத்திருந்த மதுரத்தையுடைய தமிழ்ச்சொன்மாலைகளால் தோத்திரம் பண்ணியும், நற்பச்சிலைதூவியும் - சிறந்தபச்சிலைகளாகிய தூவியும், தொண்டர் இனம் எல்லாம்-தொண்டர் குழாமெல்லாம், பிழைத்தனர்-உஜ்ஜீவித்தார்கள், அன்பன் நற்றாள் - அன்பில்லாதநான், இனி எதுசெய்வேன் இனியாது செய்துபிழைக்கக்கடவேன். எ-று.

கல்லால் எறிந்தவர்-சாக்கியநாயனார், கைவில்லாலடித்தவன்-அருச்சுனன், கனிமதுரச்சொல்லாற் றுதித்தவர்-மூவர் முதலாயினோர், நற்பச்சிலைதூவினோர்-ஒன்வையார் முதலாயினோர். தமிழ்என்பதற்கு இனிமையென்பது பொருளாதலால், கனிமதுரச்சொல் என்றதற்குத் தமிழ்ச் சொல்லென்றுரையுரைக்கப்பட்டது. பசைபயிலை என்பதுபச்சிலையெனநின்றது, இதனை, "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி, மெச்சிக்கிவபதங்கொடுப்பவரென்" பச்சதிரமுற்றெழுக "பச்சிளங்கொடி" என்றற் றொடக்கத்தான்றோற் பிரயோகங்களானுமுணர்க. அன்பர்தமது அன்பதிகுறைபால் கல்லெறிதல் முதலாயினவற்றைச் செய்துபிழைத்தார்கள். அன்பில்லாத நான் யாது செய்து பிழைப்பேன் என்பதாம்.

23 முன்னிலைச் சுட்டொழிவஞ்சே கின்போதமூக்கிலேபோ
பின்னிலைச் சன்மம் பிறக்குங்கண் டாயிந்தப் பேய்த்தனை
நன்னிலை யேகில்லை தானே தனிச்சச்சி தானந்தமாமேன்
கன்னிலை வாய்க்குமென் சித்தியுங் காணுங் கதல்லவே.

இ-ள். நெஞ்சே-மனமே, முன்னிலைசுட்டு ஒழி-முன்னிலைச்சுட்டையொழிப்பாயாக, நின்போதம் மூக்கில் - உன்போதம் தலையெடுக்கின், ஐயோ-அச்சோ, பின்னிலை-பிறகே, சன்மம்பிறக்கும் - ஜன்மங்களுண்டா

கும், இந்தப் பேய்த்தனம் என்-இந்தப்பேய்த் தன்மையாதுக்கு, தன்னிலே யேநில்-தன்னிலையிற்றானே நிற்பாய், தானே-தானே, தனி-ஒப்பற்ற, சச்சிதாநந்தமாம் - சச்சிதாநந்தமாகிய, நல்நிலைவாய்க்கும் - நன்னிலையானது கிடைக்கும், எண் சித்தியும்காணும்-அஷ்டசித்திகளுமுண்டாம், (ஆயினும் அவ்வாறுசித்தித்தல் இறைவனது திருவருளாலேயன்றி) நமது அல்ல-நமது முயற்சியளவினன்று. எ-று.

தற்போத விழவுண்டாகாவிடின், ஜநநமரணாதிக ளொழியாவென்ப தனைநெஞ்சே நின்போதமுணர்க்கில் பின்னிலைச்சன்மம்பிலக்கும் என்பதனால் வற்புறுத்தினர், "சங்கற்பநாசத்தாலெளிதாக மனநாசத்தானே யெய்தும்-அங்குற்ற மனமிறக்கிற் சநநமரணங்களெனு மரமுமாயும்" என்றுர் மேலோரும். மனமே, முன்னிலைச்சுட்டொழியாவிடின், ஜந்மபரம்பரைகள் விளையும். உண்ணுண்மை நிலையில் நீ நிற்பையாயின் எண்ணிலைகைகூடும், அட்டமாசித்திகளும் வாய்க்கும் என்பது கருத்து.

24 சொல்லான் மவுன மயலைமென்றே சொல்லிச் சொல்
லிக்கொண்ட, தல்லான் மனமறப் பூரண நிட்டையிற் றாழ்ந்
ததுண்டோ, கல்லாத மூட னினியென்செய் வேன்சகற்
காரணமாம், வல்லாள னான மவுன சதானந்த மாகடலே.

இ-ள். சகத்காரணம் ஆம்-சகத்துக்கு மூலமாகிய, வல்லாளன் ஆன-சர்வசக்திமானுகிய, மௌந சதாநந்தமாகடலே - மௌந சதாநந்தமாகிய பெருங்கடலே, சொல்லால் - சொல்லினால், மவுனம் மவுனம் என்றே - மௌநம் மௌநம் என்றே, சொல்லிச் சொல்லிக்கொண்டது அல்லால்-பலகால் சொல்லிக்கொண்டதன்றி, மனம்அற-மனமிறக்க, பூரணநிட்டையில்-பூர்ணநிஷ்டையாகிய கடலில், ஆழ்ந்தது உண்டோ-நான்மூழ்கினதுண்டோ, கல்லாதமூடன்-(அதற்குக் காரணமாகிய கல்வியை) கல்லாத மூடனேன், இனி என்செய்வேன்-இனி யென்செயக்கடவேன். எ-று.

ஜகத்காரணனே, டான், மௌநம்மௌநம் என்று வாக்கினால் சொல்லிக்கொண்டிருந்ததன்றி, மனமிறக்கப் பூரணநிஷ்டையில் பதிந்ததுண்டோ என்பதாம்.

25 ஆரண மாகம மெல்லா முரைத்த வருண்மவுன
காரண மூலங்கல் லாலடிக் கேயுண்டு காணப்பெற்றுற்
பாரணங் கோடு சுழனெஞ்ச மாகிய பாதரச
மாரண மாய்விடு மெண்சித்தி முத்தியும் வாய்த்திடுமே.

இ-ள். ஆணம் வேதங்கள், ஆகமம்-தந்திரங்கள் ஆகிய, எல்லாம்-எல்லாவற்றையும். உரைத்த-சொல்லியருளிய, அருள்-கிருபையுள்ள, மௌனம்-மௌனநிலையையும். காரணம்-ஜகத்காரணத்வத்தை (உடைய), மூலம்-முதற்பொருள், கல்லால் அடிகள் உண்டி - கல்லால மரத்தினடியின் கண்ணே யுளது. (அதனை) காணப்பெறாமல் - காணக் கிடைக்காதலால், பார்-அணங்கோடு-பிரபஞ்ச வாசனையோடு கூடிய துன்பத்துடன் கூடி, சுழல்-சுழலா நின்ற, நெஞ்சம் நீடி-மனமானது, பாதாசம் - பாதாசமானது, மாமணம் ஆய் விடும்-மடிந்தொழியும். எண் சித்தி-அஷ்டமா சித்திகளும், முத்தியும்-மோக்ஷமும், வாய்த்திடும்-கிடைக்கும். எ-று.

பார் அணங்கோடு என்பதற்கு, நிலம் மாதர் என்பவற்றின் அவாவோடு கூடி என்றுரைப்பினுமாம். கல்லாலி னீழலி லெழுந்தருளியிருக்கிற ஜகத்காரணனைக் காணப்பெறுவோமாயின், மனமாகிய பாதாசம் மடியும், மடிந்தால் எல்லாச சித்திகளும் முத்தியும் கிடைக்கும் என்பது கருத்து. ரசம்மடிந்தால் எல்லாலோகங்களையும் வேதிக்கலாமென்பது ரசவாதியர்மதம். இதனாலன்றே ரசவாதமென்று வழங்குவதூஉமென்க. இவ் வாசிரியரும் "வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்" என்றார்.

26 சித்த மவுனி வடபான் மவுனிகந் தீபகுண்ட
சுதத மவுனி யெனுமூவ ருக்குந் தொழும்புசெய்து
சத்த மவுனமு தன்மூன்று மௌனமுந் தான்படைத்தே
னித்த மவுனமல் லாலறி யேன்மற்றை நிட்டைகளே.

இ-ள். சித்த மவுனி-சித்தமவுனி, வடபானமவுனி - வடபான் மவுனி, நம் தீபகுண்ட சுததமவுனி-நமது தீபகுண்ட சுத்தமவுனி, என்னும் மூவருக்குமெ-னன்று சொல்லப்பட்ட மூவருக்கும, தொழும்பு செய்து, தொண்டு செய்து, சதத மவுன முதல்-சதத மவுன முதலாகிய, மூன்று மௌனமும் தான படைத்தேன்-மூன்று மௌனநிலையும் பெற்றேன், நித்த மவுனம அல்லால்-சதாமௌனமன்றி, மற்றை நிட்டைகள் அறியேன்-வேறு நிட்டைகளறிந்திலேன. எ-று.

சித்த மவுனமுதல் மூன்று மௌனமு மென்றது திரிகரணங்களும் அசைவற நிற்றலை.

27 கண்ணே னினதரு ளெவ்வரு ளாய்நின்று காண்பதெல்லா
மூண்டே யதுவு னினதாக்கி னேனுவட் டாதவின்ப
மொண்டே யருநதி பிளைப்பாறி னேனல்ல முத்திபெற்றுக்
கொண்டேன் பராபர மேயெனக் கேதுக் குறைவில்லையே.

இ-ள். எனது அருள்கண்டேன்-உன் திருவருளைத் தரிசித்தேன், அவ் வருளாய் நின்ற-அவ்வருளருவால் நின்று, காண்பதெல்லாம் உண்டே-காண்பது முழுது முளதே, அதுவும்-அதையும், எனது ஆக்கினேன்-உன்னதாக்கிவிட்டேன், உவட்டாத-தெவிட்டாத, இன்பம்-ஆநந்த வெள்ளத்தை மொண்டு அருந்தி-முகந்துபருகி, இளைப்பு ஆறினேன்-மெலிவு தீர்ந்தேன்; நல்ல முத்திபெற்றுக்கொண்டேன் - சிறந்த மோக்ஷத்தைப் பெற்றுக் கொண்டேன், பராபரமே-பராபரப்பொருளே, எனக்கு - அடியேனுக்கு இனி-இனி, எதுங் குறைவு இல்லை-சிறிதுங் குறைவில்லை. எ-று.

இறைவனே, உன் திருவருளைத் தரிசித்து என் மெலிவுநீங்கினேன். முத்தியையும் ஒரு தலையாக அடைவேன், இனி யெனக்கோர் குறையு மில்லை யென்பது கருத்து

28 மேற்கொண்ட வாயுவுங் கீழ்ப்பட மூலத்து வெந்தழலைச்
சூற்கொண்ட மேக மெனவூமை நின்று சொரிவதையென்
னுற்கண்ட தன்று மௌனோப தேசி யளிக்கையினிற்
பாற்கண்டு கொண்டனன் மேலை யமிர்தம் பருகுவனே.

இ-ள். மேற்கொண்ட வாயுவும்-மேற்பட்ட வாயுவும், கீழ்ப்பட-கீழாக, மூலத்து - மூலாதாரத்திலுள்ள, வெந் தழலை - வெவ்விய அக்கினியை, சூல் கொண்ட மேகம் என - கருப்பங்கொண்ட மேகம்போல, ஊமை நின்று சொரிவதை-ஊமையானவன் நின்று பொழிதலை, என்னுள் கண்டதன்று-என்னுள் கண்டுகொண்டதல்ல, மௌனோபதேசி அளிக்கையில் - மௌனோபதேசி அருள்செயுதலால், இப்பால்-இவ்விடத்தில், கண்டுகொண்டனன்-கண்டுகொண்டேன், மேலை இனிமேல், அமிர்தம் பருகுவன் அமிர்தத்தைப் பருகுவேன். எ-று.

29 சொல்லாற் பிறட்பொரு ளாற்பிறட் டாப்பரஞ் சோதி
நின்னை, வல்லாளர் கண்ட வழிகண்டி லேன்கண்ட மார்க்கத்தி
னுரை, செல்லாதென் சிந்தை நடுவே கிடந்து திகைத்து
விம்மி,பல்லான தும்பக லானதும் வாய்விட் டரற்றுவனே

இ-ள். சொல்லால்-சொல்லினாலும், தொடர் பொருளால்-அசைசொல்லைத் தொடர்ந்து நிற்கிற பொருளினாலும், தொடரா-பற்றப்படாத, பரஞ்சோதி பரஞ்சோதியை நின்னை - உன்னை வல்லாளர் கண்டவழி கண்டிலேன்-வல்லாளர் கண்டுகொண்ட மார்க்கத்தைக் கண்டேனில்லை, சகமார்க்கத்திலும்-பிரபஞ்சமார்க்கத்திலும், என் சிந்தைசெல்லாது - என்மனஞ் செல்லாது, நடுவேகிடந்து திகைத்து விம்மி-இடையே வீழ்ந்து திகைத்து விம்மி, அல்லானதும் பகலானதும்-அல்லும் பகலும், வாய்விட்டு அரற்றுவன்-வாய்விட்டு அலறுவேன். எ-று.

சொல்லாலும் பொருளாலும் தொடரவொண்ணாத பரஞ்சோதியே, அறிஞர்கள் உன்னைக் கண்டுகொண்ட வழியையும் கண்டிலேன், பிரபஞ்ச மார்க்கத்தினும் என்மனம் செல்லவில்லை, நடுவேகிடந்து தவிக்கின்றேன் என்பதாம்.

31 அறியாத வென்னை யறிவாயு நீயென்ற கம்புறமும
பிறியாது றிவித்த பேரறி வாஞ்சுத்தப் பேரொளியோ
குறியாத வானந்தக் கோவோ வமுதருள் குண்டலியோ
சிறியேன் படுந்துயர் கண்டு கல்லானிழல் சேர்ந்ததுவே

இ-ள். அறியாத-யாவராலு மறியக்கூடாத என்னை-என்னை, அறிவா யம் நீ எனது-அறிகின்றவனும் நீயேயென்று, அகம் புறமும் பிறியாது உள் நும புறமும் நீங்காதிருந்து, அறிவித்த - உணர்த்தின; பேர் அறிவு ஆம்- பேரறிவாகிய, சுத்த பேரொளியோ-சுத்தமாகிய பெருஞ் சோதியோ, குறி யாத-நினைக்க கூடாத; ஆனந்தக கோவோ - இன்பத்தைத் தருகின்ற இறைவனே, அமுத அருள குண்டலியோ-அமிர்தத்தை யருள்செய்கின்ற குண்டலிசத்தியோ, சிறியேன் படுந் துயர்கண்டு சிறியேன் படுந் துன்பத் தைப்பார்த்து, கல்லால் நிழல்சேர்ந்தது-கல்லாலினீழலையடைந்தது. எ-று.

சிறியேன் படுந் துனபத்தைக் கண்டு கல்லாலினீழலில் எழுந்தருளி யிருந்தது பெருஞ்சோதியோ, இன்பத்தைத் தருகிற இறைவனே, குண் டலிசத்தியோ என்பது கருத்து.

31 எல்லா முதவு முனையொன்றிற் பாவனை யேனுஞ்செய்து
புல்லா யினுமொரு பச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி
நில்லேனல் யோக நெறியுஞ்செ யேனரு னீதியொன்றுங்
கல்லேனெவ் வாறு பரமே பரகதி காண்பதுவே.

இ-ள். எல்லாம்-எல்லாவற்றையும், உதவும் வரையாது கொடுக்கினற, உன்னை-உன்னை, ஒன்றில்-ஒரு விகாரஹ ரூபத்தில், பாவனையேனுமசெய்து- பாவனையாயினும் பண்ணி, புல்லாயினும்-புல்லையாயினும், ஒரு பசிலையா யினும் - ஒரு பசிலையையாயினும், போட்டு - தூவி, இறைஞ்சி நில்லேன்- வணங்கி நில்லேன், நல்-சிறந்த, யோகநெறியும் செய்யேன்-யோகமார்க்கத் தையும் அநுஷ்டியேன், அருள் நீதி ஒன்றும் கல்லேன்-திருவருளோப்பற்றிய நீதி நூல்களு ளொன்றையாயினும் கற்றறியேன், பரமே - பரம்பொருளே, எவ்வாறு - எவ்வகை, பரகதி காண்பது - பரகதியைநான் கண்டு கொள் வது. எ-று.

புல் பசிலை முதலியவற்றைகுறிப் பிடுருள்வோருதலால், "புல்லா யினுமொரு பசிலையாயினும்" எனறார, "பத்த சத்தத்தி லமுருகுகு முத்

தப் பதங்கொடுக்கும் பித்தா" எனவும், "பசசிலேயடியுமபத்தர்க்கிரங்கி மெசசிச சிவபத வீடருள்பவனே" எனவும், கூறுமாற்றாலு முணர்க. பரம் பொருளே, சர்வாதீதப்ரதாதாவாகிய உன்னை ஒன்றிலிருப்பதாகப் பாவித்துப் புல்லாயினும் பசசிலேயாயினும் தூயவணங்கி நிற்கிலேன், யோகமும் பயின்றிலேன், உன்திருவருணோக்கி சிறிதும் கற்கிலேன், இவ்வாறுயான் எவ்வாறு பரகதியைக கண்டுகொள்வது என்பதாம்.

32 ஒன்றுங் தெரிந்திட வில்லையென் னுள்ளத் தொருவவெனக்
கென்றுங் தெரிந்த விவையவை கேளிர வும்பகலுங்
குன்றுங் குழியும் வனமு மலையுங் குரைகடலு
மன்று மனையு மனமாதி தத்துவ மாயபுமே

இள். என் உள்ளத்து ஒருவ - என்மனத்தின் கண்ணுள்ள ஒப்பற்றவனே, எனக்கு-அடியேனுக்கு, ஒன்றும் தெரிந்திடவில்லை-உன்னைக்குறித்த மார்க்கங்களுள் ஒன்றையினும் தெரியவில்லை, என்றும்-எப்பொழுதும். தெரிந்த-தெரிந்திருப்பன. இவை-இவைகளே, அவைகேள் - அவற்றைகேள்; இரவும் பகலும-இராத்திரிகாலமும் பகற்காலமும், குன்றும் - சிறுமலையும், குழியும்-குளமும், வனமும்-காடும் மலையும்-பெருமலையும், குரை கடலும்-ஒலிக்கின்ற கடலும், மன்றும்-அம்பலமும, மனையும் - வீடும, மனமாதி தத்துவமாயையே-மனமுதலிய தத்துவத் தொகுதியாகிய மாயாகாரியங்களுமே. எ-று.

என்மனத்திற குடிகொண்டிருகுமு ஒபபறறவனே, அடியேனுககு உனவிடயமாகிய காரியங்களுள் ஒன்றையினும் தெரிந்திலது, தெரிந்தனவெலலாம இராப்பகல் முதலான மாயாகாரியங்களே என்பதாம்.

33 பழுதுண்டு பாவையா மோக விகாரப் பரவையிடை
விழுகின்ற பாவிக்குந் தன்றாட் புணையை வியந்தளித்தான்,
மொழுகின்ற வன்ப ருளங்களி கூரத் துலங்குமன்று
ளெழுகின்ற வாணருக் கூத்தனென் கண்மணி யென்னப்பனே

இள். தொழுகின்ற அன்பர்-வணங்குகின்ற அன்பரது, உள்ளம்-மனமானது, களிகூர-களிப்புமிகும்படி, துலங்கும் - விளங்குகின்ற, மன்றுள் எழுகின்ற-அம்பலத்திற காணப்படுகின்ற, ஆனந்தக்கூத்தன்-ஆனந்த நர்த்தம் பண்ணுவோன், என் கண்மணி என் கண்மணியை யொப்பான், என் அப்பன்-என் தந்தை, பழுதுண்டு-பழுதுபட்டு, பாவையர்-மாதரது, மோக விகாரப் பரவையிடை-காமவிகார சமுத்திரத்தில், விழுகின்ற பாவிக்கும்-வீழ்ந்தழுந்தப்புகும் பாவியேனுக்கும், தன் தாள்புணையை-தன் திருவடியாகிய மரக்கலத்தை, வியந்து அளித்தான் அதிசயித்துத் தந்தான். எ-று.

தண்ணடையார் மணங்கமழ்கத்தில்லையம்பலத்துள் நடிக்கும் என்தந்தை யானவன், மாதரது காமக்கடலில் வழுந்திநகிடக்கும் எனக்கும், அந்தக் கடலைகடந்து மோக்ஷதீரத்தை யடையமாறு தன் திருவடிப்புணையைத் தந்தருளினன். இவனது பெருங்கருணை யிருந்தவாறென்னே யென்பதாம்.

34 அழுக்கார்ந்த நெஞ்சடை யேனுக்கை யாகின் னருள்வழுவா
னிழுக்காகு மென்றெண்ணி யோவிரங்காத வியல்புகண்டாய்
முழுக்காத லாகி விழிநீர் பெருக்கிய முத்தரெனுங்
குழுக்காண நின்று நடமாடுந் தில்லைக் கொழுஞ்சுடரே.

இ-ள். முழுக்காதல் ஆகி-முழு அன்புள்ளவராகளாகி, விழிநீர்பெருக்கிய கண்ணீர் பெருகிய, முத்தர் என்னும்-முத்தரென்கிற, குழு-இனம், காண-சேவிக்க, நின்று நடம் ஆடும் நின்று நடமாடுகின்ற, தில்லை-தில்லையின் கண்ணதாகிய, கொழுஞ்சுடரே - செழுஞ்சுடரே, ஐயா - ஐயனே, அழுக்கு ஆர்ந்த-கலங்கம நிறைந்த, நெஞ்ச உடையேனுக்கு-மனமுடையேற்கு, நின்னருள் வழுங்கின்-உன்னருளைத்தரின், இழுக்கு ஆகும் என்று எண்ணியோ - குற்றமாமென்று நினைத்தோ, இரக்காத இயல்பு-(என்னிடத்து) நீ இரக்கஞ்செய்யாத இயற்கை எது.

பேரன்புள்ள அடியவர்கண்டு களிகருமபடி தில்லையம்பலத்தில் நடிப்பவனே, களங்கமாகிய மனத்தை யுடையேனுக்கு உன்னருள் வழங்கல் குற்றமாமென்று திருவுளத்தடைத்தோ, என்னிடத்திரக்கஞ்செய்யாதிருப்பது என்பது கருத்து.

35 ஆலம்படைத்த விழியார்கண் மால்கொண்டவர் செயிர்த்திர
சாலம் படைத்துத் தளர்ந்தனையே யென்றுந் தண்ணருள்கூர்
கோலம் படைத்துக்கல் லாலடிக் கீழ்வைகுங் கோவுக்கன்
பாங், காலம்படைக்கத் தவம்படை யாதென்கொல் கன்
னெஞ்சமே.

இ-ள். கல்நெஞ்சமே-கல்லையொத்த வன்னெஞ்சமே, ஆலம்படைத்தநஞ்சம்பொருந்திய, விழியார்கள்-கண்களையுடைய மாதர்கள்மேல், மால் கொண்டு - ஆசைகொண்டு, அவர் செய் அவர்கள் செய்கிற, இந்திரசாலம் படைத்து - இந்திரசாலத்துக்குள்ளாகி, தளர்ந்தனையே - தளர்ச்சியடைந்தாயே, என்றும்-எப்போதும், தண அருள்கூர் தண்ணிய அருள்மிகுந்த, கோலம் படைத்து-திருவுருவைப் படைத்து, கல்லால் அடிக்கீழ்வைகும்-கல்லாலினடிக்கண் எழுந்தருளியிருக்கிற, கோவுக்கு-இறைவனுக்கு, அன்பு

-அன்புசெயும்படியான காலம பாடைக்க-காலத்தைப்பாடைக்க, தவம் டியாதது-தவஞ்செய்பாமைக்குக் காரணம், என்-யாது. எ-று.

ஆலம்போனற என்னுது ஆலம்படைத்த எனறது அதன கொடுமை குறியை வற்புறுத்தற்கு. கொடுமையாவது ஆடவரை வருதுதல். அது வேலைத்தலை மானன்ன நோக்கியர நோக்கின வலையிற்பட்டு மலைத்தலை தலை" எனவும், "முழுதுயில் வேறகண்ணியரெனனு மூரித்தழன்முழு குமிழுதனேயேனை" எனவும், "காய்சினகேலனனதின்னியல் கண்ணினை வேலகலந்து வீசினபோதுள்ளாரினிழ்நதார்" எனவும், "கூற்றமோகண்ணுறு மினையோ" எனவும், வரும மேலோர் திருவாககானுணர்க. மனமே மாதர் கள் செய்யுமாயத்திலகப்பட்டு வருந்தத் தவம்செயதனை யன்றி, கலவலி னீழலிலெழுந்தருளிய இறைவன் திருவடிகளு அனபுசெய்யத் தவஞ்செய் தனை யில்லையே என்பது கருத்து.

26 சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா
மம்மா நிரந்தரஞ் சொலலவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பியென் பேதமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேனகா தோவென் விதிவசமே.

இ-ள், சும்மா இருக்க - சும்மாவிருக்கின், சுகம் சுகம் என்று-சுகமுண் டாம் சுகமுண்டாம் என்று, சுருதியெல்லாம்-வேதங்களெல்லாம், அம்மா-ஆசசரியம், நிரந்தரம்-சதாகாலமும், சொல்லவும் சொல்லாநிற்கவும், கேட் டும்-கேட்டிருந்தும், அறிவு இன்றியே-மெய்யுணர்வில்லாமையானே, பெம் மான் எம்பெருமானுகிய, மௌனி மொழியையும் தப்பி - மௌன குருவின் வாக்கையுங்கடந்து, என்பேதமையால்-என்ன நிவீனத்தால், வெம்-வெவ் வீய, மாயக்காட்டில்-மாயாடவியில், அலைந்தேன், அந்தோ-ஐயோ, என் விதிவசமே (இது) என் விதிவசந்தானே. எ-று.

சும்மா இருத்தலே சுகம் என்று வேதங்கள் சொல்லக்கேட்டும், அந் நிலையில் நிற்றறகரிய மெய்யுணர் வின்மையால், மௌன குருவின் மொழி யையுங் கடந்து மாயைக்காட்டில் மயங்கித்திரிந்தேன், இது என் விதி வசமோ என்பது கருத்து.

47 தினமே செலச்செல வாழ்நாளு நீங்கச் செகத்திருள்சொற்
பனமே யெனவெளி கண்டே யிருக்கவும் பாசபந்த
வினமே துணையென் றிருந்தே நமன்வரி னென்செய்குவோர்
மனமேநம் போலவுண் டோசுத்த மூடரிவ் வையகத்தே.

இ-ள். தினம் செல்ல செல்ல-நாள் கழியக் கழிய, வாழ்நாளும் மெய்க-ஆயுளுந் தொலைய, செகத்து இருள்-பிரபஞ்ச விருளானது, சொற்பனமே எனக்-கனவேயென்று சொல்லும்படி, வெளி - வெளிப்படையாகக் கண்டேயிருக்கவும் - பார்த்திருந்தும், பாசபந்த இனமே-பாசபந்தக் கூட்டமே, துணை என்று இருந்தோம்-சகாயமென்று நினைத்திருந்தோம், நமன் வரின்-காலன் வந்தால், என்செய்குவோம்-என்செய்யக்கடவோம், மனமே-நெஞ்சமே, நம்போல-நம்மைப்போல, சுத்தமூடர்-முழுமூடர். இவ்வையத்தில் உண்டோ-இவ்வுலகத்திலுண்டோ. எ-று.

மனமே நாட்செல்ல நாட்செல்ல பிரபஞ்ச வாழ்வானது கனவுபோலப் பொய்யாய் விடுவதைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டிருந்தும், பாசக்கூட்டுலகப்பட்டழுலாகின்ற உறவினரே துணையென்றிருந்துவிட்டோம். இனிக் காலன் வருங்கால் என்செய்யக்கடவோம் என்பது கருத்து.

38 கடலெத் தனைமலை யெத்தனை யத்தனை கன்மமதற்
குடலெத் தனையத் தனைகட னுண்மண லொக்கு மிந்தச்
சடலதனை நான்விடு முன்னே யுனைவந்து சாரவிருட்
படலத்தை மாற்றப் படாதோ நிறைந்த பராபரமே.

இ-ள். கடல் எத்தனை மலை எத்தனை கடல்களெத்தனைப்பரப்புள்ள மலைகளெத்தனைப்பெருமையுள்ளன, அத்தனைகன்மம்-ஆவணவினையது கன்மம், அதற்கு-அக்கன்மத்துக் கீடாயளவாகின்ற, உடல் சரீரங்கள், எத்தனை-எத்தனை, அத்தனை-அவ்வளவினை, கடல்-கடலின்கண ணுண்டாயிருக்கிற, நுண் மணல ஒகும்-நுண்ணியமணல் ஒத்திருக்கும், (ஆதலால்) இந்த சடலத்தை-இத்தசசரீரத்தை, நான்விடுமுன்னே-நான் விட்டு நீங்குதற்கு முன்னமே, உன்னை வந்து சார-உன்னைவந்தடையும்படி, இருள்படலத்தை-இருட்கூட்டத்தை, மாற்றப்படாதோ-என்னிடத்து இனியும் நீக்கப்படாதோ, நிறைந்த பராபரமே - எங்கும் வியாபித்திருக்கின்ற பராபரமே. எ-று.

இறைவனே, அளவற்ற பிறவிகளிற் பிறந்து வருந்தின அடியேன் இந்த வுடலைவிட்டு நீங்குவதற்கு முன்பே உன்னைவந் தடையும்படி என் அஜ்ஞானாந்தகாரத்தை நீக்கியருளலாகாதோ என்பது கருத்து.

39 நினையு நினைவு நினையன்றி யில்லை நினைத்திடுங்கால்
வினையென் றொருமுத னின்னையல் லாது விளைவதுண்டோ
தனையுந்தெளிந்துன்னைச்சார்ந்தோர்களுள்ளச்செந்தாமரையா
னையும்பொன் மன்றமு மின்புநிந் சோதி யணிவிளக்கே

இ-ள். தன்னையும் தெளிந்து-தம்மையுந்தெளிந்து,உன்னை சார்ந்தோர் கள்-உன்னை யாசிரயித்தவாகளுடைய, உள்ளம்-மனமாகிய. செந்தாமரை ஆம் மனையும்-செந்தாமரையென்கிற வீட்டினிடத்தும், பொன் மன்றமும்-பொற்சபையினிடத்தும், நின்று ஆடும்-நின்று நடனம் பண்ணுகிற, சோதி-பிரகாசமுள்ள, மணிவிளக்கே-ரத்நதீபமே, நினையும் நினையும்-நினைக்கின்ற நினைப்பும், நின்னை அன்றி இல்லை-உன்னையல்ல திலை, நினைத்திடுகால்-நினைக்குமிடத்து, வினை என்ற ஒருமுதல்-கர்மமென்கிற ஒருமுதற்பொருள். நின்னை அல்லாது - உன்னையன்றி, விளைவது உண்டோ - முளைப்ப துண்டோ. எ-று.

அன்பர்களுடைய மனதாமரையினும் பொன்னம்பலத்தினும் நின்று நடிக்கின்ற ரத்ந தீபமே, நான நினைக்கின்ற நினைப்பு உன்னையன்றியில்லை யென்னுமிடத்து, உன்னை யறியாமல் எனக்கொரு சீமையுண்டாகுமோ என்பது கருத்து.

40 உள்ளத் தையுமிங் கெனையுநின் கையினி லொப்புவித் துங்
கள்ளத்தைச் செய்யும் வினையால்வருந்தக் கணக்கு முண்டோ
பள்ளத்தில் வீழும் புனல்போற் படிந்துன் பரமவின்ப
வெள்ளதின் மூழ்கினர்க் கேயெளி தாந்தில்லை வித்தகனே.

இ-ள். பள்ளத்தில் வீழும்-பள்ளத்திற் பாய்ந்து செல்லுகின்ற, புனல் போல்-நீர்போல, படிந்து-அமைந்து, உன் பரம இன்பவெள்ளத்தில்-உன பரமானந்த சாகரத்தில், மூழ்கினர்க்கே - அழுந்தினவர்களுக்கே, எளிது ஆம்-எளியனாகின்ற திலைலை வித்தகனே-திலலையின்மேவிய ஞானமயனே, உள்ளத்தையும்-மனதையுமு, இங்கு-இவ்விடத்து, என்னையும்-அடியேனை யும். நின்கையினில் ஒப்புவித்ததும் உன்கையிலொப்புவித்தும். (இன்னமும்) கள்ளதைசெய்யும வினையால்-வஞ்சனையைசெய்யும் கர்மத்தினால்,வரு ந்த-துன்பமடைய கணக்கும் உண்டோ-கணக்கு முளதோ. எ-று.

என்னையும எனமனதையும் உன்கையினில் ஒப்பவித்தும் காமவயத் தனாய் வருந்துதல் எனகுரித்தாமோ என்பதாம்.

41 சன்மம் பொருந்து மடநெஞ்ச மேகொடுங் காலர்வாதா
லுள்ளன் பவர்கட்குண் டோவில்லை யேயுல கின்றவன்னை
வெள்ளம் பொருந்து மலரடி காணமன் றாடுமின்ப
வெள்ளச்சிற் பாதப் புணையே யல்லாற்கதி வேறில்லையே.

இ-ள். சன்மம் பொருந்தும - சபடமபொருந்திய, மடநெஞ்சமே-அறியாணமையுள்ள மனமே கொடுங்காலர் வந்தால் - கொடிய யமபடர்

வந்தால், அவர்கட்கு - அவர்களுக்கு, உள்ளன்பு உண்டோ - அகத்தன் புளதோ, இல்லையே - இல்லையன்றே, உலகு ஈன்ற அன்னை-உலகத்தைப் பெற்ற தாய், வள்ளம் பொருந்தும் - தெப்பணத்தைப்போலப் பொருந்தித் தோன்றுகிற, மலர்-தாமரைமலர்போன்ற, அடி-திருவடியை, காண-தரிசிக்கும்படி, மன்று-அம்பலத்தில், ஆடுமை-நடிக்கின்ற, இன்பவெள்ளம்-ஆனந்தக்கடலாகிய இறைவனது, செம்பாதம்-சேவடியாகிய, புணையேயல்லால்-மரக்கலமேயன்றி, வேறுகதியில்லை-வேறுபுகலிடமில்லை. எ-று.

மனமே. கொடிய சாலர்வந்தால், அவர்களுக்கு உள்ளன்புண்டோ இல்லை, நமது பிறவிக்கடலைக் கடப்பதற்கு இறைவனது திருவடியே மரக்கலமாம் ஆதலால் அதுவே நமக்குப் பகலிடம் என்பது கருத்து.

42 தன்மயமான சுபாவத்தின் மென்னத தலைப்படுங்கான்
மின்மயமான சகம்பா தூரைத்தென் வெளியி லுய்த்த
சின்மய முத்திரைக் கையேமெய் யாகத் தெளிந்த நெஞ்சே
நின்மய மென்மய மெல்லா நிறைந்த நிராமயமே

இ-ள். தன்மயம் ஆன சுபாவத்தில் - தன்மயமான இயற்கையில், மெள்ள தலைப்படுங்கால்-மெல்லக் கலக்குமிடத்து, மின்மயம் ஆன-மின்னலினியற்கையமைந்த, சகம்-உலகம், யாது உரைத்தது என்-என்சொன்னதெனின், வெளியில் உய்த்த-வெளிப்பாடையாகத் தந்த, சின்மயமுத்திரைக் கையே சின்முத்திரைகையே மெய்யாக-உண்மையாக, தெளிந்தநெஞ்சே-தெளிந்த மனமே. நின்மயம் என்மயம் எல்லாம் உன்னுருவம் என்னுருவமாகிய எல்லாமும். நிறைந்த நிராமயமே - பூர்ணமான நிராமய பொருளே எ-று.

தன்மயமாகிய இயற்கையிற் பொருந்திநில் சம்முருவாகவெனல்லாம் பூர்ணமாகிய நிராமயப்பொருளி னுருவமே யென்பது கருத்து.

43 ஆயுங் கலையுஞ் சுருதியுங் காண்டற் கரியவிணை
தோயும் படிக்குக் கருணைசெ யாவாய்க வான்பொருளே
தாயும் பிதாவுக தமருக குருவுந் தனிமுதலு
நீயும் பரையுமென் றேறுபுனாக நினைந்து நிற்பனே.

இ-ள். ஆயும்-ஆராயப்படுகிற, கலையும் - கலைகளும், சுருதியும்-வேதங்களும், காணடற்கு அரிய உன்னை-காண்பதற்கரிதாகிய உன்னை, தோயும் படிக்கு-வந்தடையும்படிக்கு, கருணை செய்வாய் கிருபைபுரிவாய், சுகவான பொருளே-ஆனந்த ரூபமாகிய மேலான பொருளே, தாயும் மாதாவும், பிதாவும்-தந்தையும், தமரும்-உறவினரும், குருவும் ஆசாரியனும், தனி-ஒப்பற்ற, முதலும்-முதற்பொருளும். நீயும்பரையுமெனறே-நீயும்பராசக்தியுமென்றே, உணர்ந்தேன்-அறிந்தேன், இத நிசமா மீமே இது மெய்யோ எ-று

இறைவனே, உன்னையும் பிராட்டியையும் தந்தை தாயராக அறிந்து உறுதியாய நம்பி யிருக்கின்றேன், ஆதலால், அடியேன், வேதங்களுக்கு மெட்டாத வுன்னைவந் தடையும்படி கருணை செய்யவேண்டும் என்பது கருத்து.

44 அல்லும் பகலு முனக்கே யபய மபயமென்று
சொல்லுஞ்சொலின்னந் தெரிந்ததன்றே துதிப்பார்கண்மனச்
சல்லுங் கரைக்கு மெளனுவனது கருணை யென்பார்
செல்லும் பொழுதல்ல வோசெல்லு வேனந்தச சிற்சுகத்தே

இ-ள். அல்லும் பகலும்-இரவும் பகலும், உனக்கே அபயம் அபயம் என்று-உனக்கே யபயமபயம் என்று, சொல்லும் சொல்-ஞான சொல்லும் சொல்லானது, இன்னம தெரிந்தது அன்றே - இன்னமும கேட்க வில்லையோ, துதிப்பார்கள் - துதிப்பவர்களுடைய, மனகல்லும-நெஞ்ச மாகிய கல்லையும். கரைக்கும் - உருக்குகின்ற, மௌனு - மௌனகுருவே, உனது கருணை-உன் கிருபையானது, என்பால்-என்னிடத்து, செல்லும பொழுதல்லவோ - வியாபிககும போதல்லவோ, அந்த சிற்சுகத்து அந்த ஞானந்தத்தில், செல்லுவேன்-புகுவேன். எ-று.

மௌனகுருவே. இரவும் பகலும் உனக்கே அபயமென்று அடியேன் சொல்லுஞ் சொலலானது இன்னமும உன்செவி கேட்கவில்லையோ! உன் கருணை யென்னிடத துண்டானலல்லவோ அந்த ஞானானந்தம் எனக்குண டாம எனபது கருத்து

45 எல்லாஞ சிவன்செய லென்றறிந் தாலவ னின்னருளே
யல்லாற் புகலிடம் வேறுமுண் டோவது வேநிலையா
நிலையான் றுற்றி பேற்குக் கதியுண்டிந் நீணிலத்திற்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தால தெனன புகனெஞ்சமே.

இ-ள். எல்லாம-டவும். சிவன் செயல் என்று அறிந்தால்-சிவன்செய லென்றுணரநதால் அவன - அவனது இன-இனிய, அருளே அல்லால்-அருளேயனறி, பகல இடம்-புகுதறகுரிய இடம் வேறும உண்டோ-மற்று முளதோ, அதுவேநிலை ஆநில்லாய - அதுவே நிலையாக நிறகக்கடவாய், (அப்படி நிறபையாயின்) தமியேற்கு-தனியேனுககு. உன்னல் கதி உண்டு-உன்னல் சறகதியுளது, இ ஈள் நிலத்தில்-இநதப்பெரிய வுலகில், பொல்லா மயக்கத்தில்-தீமையாகிய மயககதில், ஆழ்ந்தால-அழுநதினதினால், ஆவது-உண்டாவதாகிய பிரயோஜநம. என்ன-யாது, நெஞ்சமே-மனமே, புகல்-சொல்வாயாக. எ-று.

மனமே, எல்லாம் சிவன்செயலென் றுணர்ந்தால், அவனது இனிய அருளேயல்லது நமக்குப் புகலிடம் வேறுண்டோ இலலேபாதலால், அந்த நிலையிற்றானே நிற்பையாயின் உனதுல் எனக்கு சந்தியுணடி. இதைவிட்டு இந்தப் பிரபஞ்ச மாயையிலழுந்தி என்ன ஆதிபமடைந்தா யென்பது கருத்து.

46 ஒளியே யொளியி னுணாவே யுணாவி னுவகை பொங்குங்
களியே களிச்சுங் கருததே கருத்தைக் கவளங் கொண்ட
வெளியே வெளியின் விளாசுக மேசுசா வீறுகண்டுந [னே.
தெளியேன் தெளிந்த வடைப்போற்றி டேனென்ன செய்குவ

இ-ள். ஒளியே - தேஜஸ்ஸே, ஒளியின் உணர்வே - ஒளியையுடைய அறிவே, உணாவின்-அறிவினிடத்து, உவகை பொங்கும் - சந்தோஷம் பெருகாகின்ற, களியே-களிப்பே, களிக்கும் கருத்தே-களிகின்றகருத்தே, கருத்தைக் கவளம்கொண்ட கருத்தினை விழுங்கின, வெளியே - சிதாகாயமே. வெளியின்-அவவாகாயத்தில், விளா-உண்டாகிற, சுகமே-இன்பமே, சுகர் வீறு கண்டும்-சுகரது பெருமையைக் கண்டும், தெளியேன்-தெளிந்திலன், தெளிந்தவரை போற்றிடேன்-தெளிந்தவர்களை வணங்கதஞ்செய்யேன், என்னசெய்குவன் (இனி உஜ்ஜீவனத்திற்கு விரகு) யாது செய்வேன், எ-று.

பரஞ்சோதியே, சுகமுனிவரது விரக்தி மகிமையை யறிந்திருந்தும் தெளிவடைந்திலேன், தெளிந்தவரை வணங்குதலுஞ் செய்திலேன், இனி உய்வதற்குரிய வுபாயம் யாது செய்வேன் என்பது கருத்து.

47 மறக்கின்ற தன்மை பிறத்தலொப் பாகு மனமதொன் றிற்
பிறக்கின்ற தன்மை பிறத்தலொப் பாகுமிப் பேய்ப்பிறவி
இறக்கின்ற வெல்லைக் களவில்லை யேயிந்த சன்மவல்லல்
துறக்கின்ற நாளெந்த நாள்பரா மேநின் றொழும்பனுக்கே.

இ-ள். மறக்கின்ற தன்மை-மறக்கும் தன்மை, இறத்தல் ஒப்பாகும்-இறத்தலுக்கு நிகராகும், மனம் ஒன்றில்பிறக்கின்ற தன்மை-மனமானது ஒன்றில் பற்றுந்தன்மை, பிறத்தல் ஒப்பாகும் பிறத்தலுக்கு நிகராகும், இப் பேய் பிறவி-இந்தப் பேய்ப்பிறவிகள், இறக்கின்ற எல்லைக்கு-கழிகின்ற வெல்லைகளு, அளவில்லையே-வரம்பில்லையே, இந்த சன்மம் அல்லல்-இந்தப் பிறவித்துன்பததை, துறக்கின்ற நாள்-விட்டு நீங்குங்காலம், பரமே-பரம்பொருளே, நின் தொழும்பனுக்கு-உனது திருவடி சேர்ணுகு, வருத நாள்-எந்தகாலம். (அறிந்திலேனை) எ று.

பரமனே, மறப்பு நினைப்புகள் இறப்பப் பிறபுகளுக்குச சமாகமாகும் உனை தொண்டனாகிய நான், இதுப பிறவித்துன்பங்களோ யொழிக்குங் காலம் எந்தகாலமோ வென்பது தெரிகதது.

8 காட்டிய வருதச் சாணமு மாயையிற் காயமெனு
மூட்டிய மேகமு நான வியகுத துறையிதனு
ணீட்டிய நான்றனக் கென்றே றறிவற்ற நானிவற்றைக்
கூட்டிநின் முட்டினை யேபர மேகல்ல கூத்திதுவே.

இ-ள். காட்டிய-வகுதது காட்டப்பட்ட, அததகசாணமும்-அததக சாணங்களும், மாயை-மாயாகாரியமாகிய, இக்காயம் எனறு மூட்டியமேகால மும-இத்தச சரீரமென்று பெயாமூட்டப்பெறற வருயும, நானு இயலுக பல விதமாக இயலுகா நிற்க, துறை இதனுள்-பல துறைகளையுடைய இதற் குள்ளே, காட்டிய-நிலைபெறுத்தப்பட்ட, நான்-காமே, தனககு என்று ஓர் அறிவு அற்ற நான்-தனகெனென்று ஒருணர்வில்லாத நான், இவற்றை-இவை களையெல்லாம, கூட்டி-ஒனறுசசேரத்து, நின்று ஆட்டினையே-நினறு ஆடு வித்தனையே, பரமே-பரமபொருளே, இது நலல கூதமே - உனககு இது நலல கூததாயிருககினறதோ. எ-று.

பரமனே எனகெனனு ஓரறிவில்லாத எனனை, மாயா காரிய மாகிய இதச சரீரததிற் சேரதது நடிப்பிகக்கின்றனையே, இது உனக்கு நலல்கூத் தாயிருக்கினறதோ வென்பதாம்.

4ஓ பொல்லாத மாமரக கடமன மேமையினை போலடித்த
வெல்லாவறறையும்பற்றி கொண்டனினையேயென்னை நின் மையமா
நில்லா யருளெவெளி நீகானிற் பேனரு ணிட்டையொரு
சொல்லாற் பதிந்து பரிபூர ணானகத தோய்குவனே.

இ-ள். பொல்லாத-தீமையாகிய, மா-பெரிய, மர்க்கடமனமே-குரங்கு நெஞ்சமே, என்னைப்போல் என்னைப் பற்றிக்கொண்டாற்போலவே, அடு த்த எல்லாவறறையும பறறிகொண்டனினையே-அடுதத எல்லாவற்றையும பற்றிகொண்டாயே, என்னை-இதுவென்ன நீ அருள்வெளி-நீஅருள்வெளி யில், நின்மயம் ஆகிலலாய் தனமயமாகநில்லாய், நான்-நான், அருள் நிட்டை-திருவருணிட்டையை, ஒரு சொல்லால் பதிந்து - (ஆசாரியன் சொல்லு கின்ற) ஒருமொழியால் பதியப்பெற்று, பரிபூரானந்தம் தோய்குவன்-பரி பூர்ண சுகததில முழுகுவேன். எ-று.

மனமே, என்னைப் பற்றிகொண்டாற்போல எல்லாப் பொருள்களை யும் பற்றிகொண்டனையே, நீ அருள் வெளியில் நிற்பாயாயின், நான்

ஆசார்யபக்தியால் அருளிச்செய்த கூடி பரிபூர்ண சுகக்கடலில் முழுகுவேன் என்பதாம்.

50 வாராய்நெஞ் சேயுன்றன் துன்மார்க்கம் யாவையும் வைத்துக்கட்டுங், காரா யடிக்கடி சூற்றுகின் றாயுன் னவளமதிக் கோரா யிரம்புத்தி சொன்னே னுமோர்கில் யோகெடுவாய்; பாரா யுனைகொல்லு வேன் வெல்லு வேனருட் பாங்கு கொண்டே.

இள். நெஞ்சே-மனமே, வாராய்-வருவாயாக, உன்றன் துன்மார்க்கம் யாவையும்-உன கெட்டவழிகளெல்லாவற்றையும், வைத்துக்கட்டு-கட்டிவை. இங்கு-இவ்விடத்தினின்று, ஆராய-நன்னெறியை யாராய்வாயாக, அடிக்கடி சூறறுகின்றாய்-அடிக்கடி சுழலாகின்றாய, உன் அவலமதிக்கு-உன் சபலபுத்திகரு, ஓ ஆயிரம் புத்திசொன்னேனும் - ஓராயிரம் புத்திகளைச சொல்லினும், ஓர்கில ஆராயில், ஓ கெடுவாய் - ஆ கெடுவாய், பாராய்-பார்ப்பாயாக, உன்னை உனனை, அருள் பாங்குகொண்டு-திருவருட் பாங்கினால் கொல்லுவேன்-கொலைசெய்வேன், வெலலுவேன்-(அன்றி) வென்றடக்குதலையாயினும் செய்வேன் எ-று

. கொல்லுவேன் என்றதற்கேற்ப, பாங்கு என்பதற்குக் கட்டாரி யெனப் பொருளுரைப்பினுமாம். மனமே, உன் துர்மார்க்க சஞ்சாரத்தை விட்டு சுமார்க்கத்துக்குவா. பலகால் உனக்குப் புத்திசொன்னேனும் கேட்டிலை, உன்னைத் திருவருணிலையைக்கொண்டு வெல்லுவேன் எனபது கருத்து.

"சுகற்ப நாசத்தா லெளிதாக மனநாசந் தானே யெய்தும்
அங்குற்ற மனமிறக்கிற் சுகமர ணங்களெனு மரமு மாயும்[ர்நெஞ்சம்
இங்கிப்பாலெனைத் திருடுங் கள்ளனைக்கண் டேன்கண்டே னிவன்பே
பொங்குற்றவிவனலே நெடுநாளெஞ்தேனின்று பொன்று விப்பேன்"
என்னூர் பிறரும்.

51 மாதத்தி லேயொரு திங்களுண் டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை யேவெறும் புன்மைநெஞ்சே,
வேதத்தி லேதர்க்க வாதத்தி லேவிளங் காதுவிந்து
நாதத்தி லேயடங் காதநத வான்பொரு ணுடிக்கொள்ளே.

இள். மாதத்திலே ஒருமாதத்தில், ஒரு திங்கள்-ஒரு சந்திரன், உண்டாகி மடிவதை-தோன்றி யொடுங்குவதை. நின் போதத்திலே-உன் அறிவினிடத்து, சற்றும வைதிலையே - சிறிதும் வைதிலையே, வெறும் புன்மைநெஞ்சே-சுத்த இழிவாகிய மனமே,வேதத்திலே-வேதங்களுள்ளும், தர்க்கவாதத்திலே-தர்க்கவாதங்களுள்ளும், விளங்காது-விளங்காதது (ஏது),

வித்து ஈதத்திலே ஆடக்காது-வீசாது ஈதங்களுள்ளு மடங்காதது (எது), அந்த வான்பொருள்-அந்த மேலான பொருளை, ஈடிக்கொள் - ஆராய்ந்து பற்றிக்கொள்வாய் எ-று.

52 எங்கும் வியாபித்த துணர்வா யுனக்கென் னிதயத்துள்ளே
தங்குந் துயரந் தெரியாத வண்ணந் தடைசெய்தார்
அங்கங் குழைந்துள் ளுருகுமன் பாளர்க் கணைகடந்து
பொங்குங் கருணைக் கடலே சம்பூரண போதத்தனே,

இ-ள். அகமம குழைந்து-சரீரம வாடி, உள உருகும-உணமுருகுகின்ற, அன்பாளர்க்கு-அன்பாகளுக்கு, அணைகடந்துபொங்கும் - வரம்பு கடந்து பொங்குகின்ற, கருணைக்கடலே-கருணை சமுத்திரமே, சமபூரண போதத தனே-பரிபூர்ண ஞானத்தை யுடையவனே, எங்கும வியாபித்துணர்வாய்-நீ யெவ்விடத்தும் நிறைந்து எல்லாவற்றையு முணராகின்றாய், (அவ்வாறாக) என் இதயம் தகதக துயரம்-என்னிருதயத்தில் நிலைபெறற்றுனபட், தெரியாதவண்ணம் (உனக்குத்) தெரியாதவகை, தடைசெய்தது ஆர்-மறைத்தது யார் எ-று.

இறைவனே, நீ யெங்கும் வியாபித்து எல்லாவற்றையு முணரவல்லை; அங்ஙனமாக, என் னிதயத்துன்பத்தை யுணராமைக்குக காரண மென்னை வென்பது கருத்து

53 வையக மாதர் சுகத்தையும் பொன்னையு மாயைமல
மெய்யையு மெய்யென்று நின்னடி யார்தம் விவேகத்தையு
மையமில் வீட்டையு மெய் நூலை யும்பொய்ய தாகவெண்
ணும்,பொய்யர்தந் நட்பை விடுவதென் றோபரி பூரணமே.

இ-ள். வையகம்-உலகில், மாதர் சுகத்தையும்-பெண்டி ரின்பத்தை யும், பொன்னையும் பொருளையும, மாயை-மாயாகாரியமாகிய, மலம்-அழுக் குள்ள, மெய்யையும்-உடம்பையும், மெய்யென்று-உண்மையென்று, நின் அடியார்தம் விவேகதையும - உன்னடியார்களுடைய விவேகத்தையும், ஐயம் இல் வீட்டையும் சந்தேகமில்லாத மோகூத்தையும், மெய்நூலையும்-உண்மைநூல்களையும், பொய்யதாக எண்ணுமை - பொய்யாக வெண்ணுகின்ற, பொய்யாதம் நட்பை-பொயயரது சிநேகதை, விடுவது விட்டொழிவது, என்றோ எந்தக்காலமோ, பரிபூரணமே-பரிபூர்ணமே எ-று.

பரிபூர்ண வஸ்துவே, மாதர சுகமுதலியவற்றை மெய்யென்றும், உன்னடியாரது விவேக முதலியவற்றைப் பொய் யென்றும் எண்ணுகின்ற பொய்யர் நட்பைவிட் டொழிவது எந்தகாலமோ வன்பது கருத்து.

54 அளியுங் கனியொத் தருவினை யாளெனக் தயர்வுறுவேன்
தெளியும் படிக்குப் பரிபாக காலமுஞ் சித்திக்குமோ
வொளியுங் கருணையு மாறுத வின்பமு மோருருவாய்
வெளிவந் தடியர் களிக்கின் றருளும் விழுப்பொருளே.

இள் ஒளியும் புகழும். கருணையும் - கிருபையும். மாறுத இன்பமும்-நீங்காத இன்பமும். ஓர் உரு ஆய் ஒருருவமாகி, வெளிவந்து-வெளிப்பட்டு, அடியர்களிக்க - அடியார்கள களிக்கும்படி, நின்று ஆடிய-நின்று கூத்தாடுகின்ற, விழுப்பொருளே-மேம்பொருளே, அருவினையால்-வெல்லுதற் கரிதாகிய காமத்தினால். அளியும் கனி ஒத்து ஒத்து-கனிந்த கனிபோன்று நொந்து, அயர்வுறுவேன்-அயர்வடைகின்ற நான், தெளியும்படிக்கு-தெளியும வண்ணம் பரிபாக காலமும்-பரிபகருவகாலமும், சித்திக்குமோ-எனக்குக கிடைக்குமோ, எ-று.

இறைவனே, கனிந்த கனிபோல வினையால் நைந்து வருந்துவேனாகிய நான், தெளிவடையத்தக்க பரிபக்குவ காலமும் வாய்க்குமோ வென்பது கருத்து.

55 அடையார் புரஞ்செற்ற தேவேநின்பொன்னடிக்கன்புசற்றும்
படையாத வென்னைப் படைத்திந்தப் பாரிற் படர்ந்தவினைத்
தடையாற் றளையிட்டு நெஞ்சம்புண் ணாகத் தளரவைத்தா
யுடையா யுடைய படியின்றி யான்செய்த தொன்றிலையே.

இ-ன். அடையார் - பகைஞருடைய, புரம் - மும்பரங்களை, செற்ற-அழித்த, தேவே-தேவனே. நின்பொன்னடிக்கு-உன்திருவடிக்கு, அன்பு-அன்பை, சற்றும் படையாத என்னை-சிறிதும் படைக்காதவென்னை, இந்த பாரில் படைத்து-இவ்வுலகில் பிறவுண்டாக்கி, படர்ந்த பழைய, வினைதடையால் - காமமாகிய விலங்கினால், தளையிட்டு - தளைபூட்டி, நெஞ்சம் மனமானது, புண்ணாக புணைய, தளரவைத்தாய்-தளரவைத்தனை, உடையாய்-உடையவனாகிய நீ, உடையபடி அன்றி-உடைத்தாக் தன்மையன்றி, யான செய்தது-நான் செய்தது, ஒன்று இல்லை-ஒன்றுமில்லை. எ-று.

இறைவனே, உன் திருவடிகளன்பு சிறிதுமில்லாத என்னை இந்தப் பிரபஞ்சத்திற் படைத்தது. வினைத் தளையாற்றளைத்தது. மனம் புண்பட்டுத் தளரவைத்தனை, ஆகலால் உன்செயலே யன்றி என்செயல் யாதுமில்லை யென்பது கருத்து.

56 ஆடுங் கறங்குந் திரிகையும் போல வலைந்தலைந்து
காடுங் கரையுந் திரிவதல் லானின் கருணைவந்து
கூடும் படிக்குத் தவமுய லாத கொடியரெமன்
தேடும் பொழுதென்ன செய்வார் பரானந்த சிற்சுடரே.

இ-ள். பரானந்த சிற்சுடரே-மேலாகிய இன்பதத்தைத் தருகிற ஞான தீபமே, ஆடும்-அலைகின்ற, கறங்கும்-காற்றடிவையும், திரிகையும்போல-சூலால சக்கரத்தையும போன்று, அலைந்து அலைந்து - திரிந்து திரிந்து, காடும் கரையும திரிவது அல்லால் - காட்டினும கரையினுந் திரிவதன்றி, நின்கருணை - உன்கிருபை வந்து கூடும்படிக்கு-வந்து அடையும்படிக்கு, தவம் முயலாத கொடியர் - தவத்தை முயன்று செய்யாத கொடியோர், எமன் தேடும்பொழுது-பஞ்ச தேதும்காலத்தில், என்ன செயவார்-என்ன செய்யக்கடவர். எ-று.

இறைவனே, கறங்கு திரிகைகளை யொத்துழலாநின்ற பாவிகள். யம படர் வந்து தம்மைத் தேடிப்பிடிக்கும்போது யாது செய்வா என்பதாம்.

57 சுற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில்கற்றுச் சிற்றின்பத் தூடு சுழலினென்னுங்
குற்றங் குறைந்து குணமே லிடுமன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்புகண் டாய்சுத்த மூடரெஞ்சே.

இ-ள். சுத்தமூடரெஞ்சே - சுத்தமூடமனமே, சுற்றும்-பலநூல்களைக் கற்றும், பலபல கேள்விகள் கேட்டும-பற்பல கேள்விகளைக் கேட்டும், கறங்கு என-காற்றடியைப்போல, சுற்றுமதொழில் கற்று சுழலும் தொழிலைக்கற்று, சிற்றினபத்தூடு சுழலின்-சிற்றின்பத்திற் சுழலாதிற்பின், என் ஆம்-என்ன பயனுண்டாம, குற்றம் குறைந்து - தோஷங்கள் குறைந்து, குணம் மேலிடும-குணம் மேற்படுகின்ற, அன்பர் கூட்டத்தையே-அன்பர் குழுவினையே, முற்றும துணையென நம்ப முழுதுந துணையென்று நமபு வாயாக, எ-று.

மனமே பல நூல்களைக்கற்றும். பல கேள்விகளைக்கேட்டும், கறங்கு போலச சுழலுந் தொழில் கற்றுஞ்சிற்றின்பததில் அழுந்துவதனால், என்ன பிரயோஜநம, ஒன்று மில்லையாதலால். அன்பர் கூட்டத்தையே முழுதும் துணையென்று நமபியிரு என்பதாம.

5 ஈயென நாயென வேறில்லை யென்னு நினைவருளத்
தாயென மோன குருநாகி வந்து தடுத்தடிமைச்
சேயெனக் காத்தனை யேபர மேநின் றிருவருளுக்
கேயென்ன செய்யுங்கைம் மாறுள தோசுத்த வேழையனே.

இ-ள். நீ என-நீ யென்றும், நான் என - நானென்றும், வேறு இல்லை என்னும் நினைவு-வேறில்லையென்கிற நினைப்பை, அருள்-எனக்குக் கிருபை செய்யும்பொருட்டு, தாய் என-தாயைப்போல, மோகருருவுகி வந்து மௌன குருவாகி வந்து, கடித்து - (வேறுவிடயத்திற் செல்லாது) தடுத்து, அடிமைச சேய் என - அடிமைக் குழந்தைபோல, காத்தனேயே - காத்தருளினேயே, பரமே-பரமபொருளே, நின திருவருளுக்கு - உன திருவருட்கு, சுத்த ஏழையன்-சுத்த எளியேன், செய்யும கைம்மாறு-செய்தற்குரிய ப்ரத்யுபகாரம், உளதோ-உண்டோ, என்ன - (உளதாயின்) அது என்ன சொல்வாயாக. எ-று.

பரனே, நீ நானென்னும் வேற்றுமை யில்லை யென்கிற நினைவை யெனக் கருள்செய்தற் பொருட்டுத் தாய்போல மௌனகுருவாய் வந்து என்னைத் தடுத்தாட்கொண்டு, அடிமைக் குழந்தைபோலக் காத்தருளினேயே. உன் திருவருளுக்கு என்ன கைம்மாறு செய்வேன் என்பதாம்

59 ஆத்திரம் வந்தவர் போலலை யாம லரோகநிட
காத்திர தந்தெண்ணை யேயன்னை போலுங் கருணைவைத்திம்
மாத்திர முன்னின் றுணர்த்தினை யேமௌன னுவினிநான்
சாத்திரஞ் சொன்ன படியிய மாதியுஞ் சாதிபபனே.

இ-ள். ஆத்திரம் வந்தவர்போல் - ஆதரமுண்டானவர்போல, அலையாமல்-அலையாதிருக்கும் வண்ணம், ரோகம்-பிணியில்லாத, நிடகாத்திரம் தந்து-திருட சரீரத்தைக் கொடுத்து. எனனை-எனனை, அன்னைபோலுங் கருணைவைத்த தாயைப்போலக கருணைசெயது, இம்மாத்திரம்-இம்மட்டாயினும. முன் நின்று - ப்ரத்யக்ஷமாய் நின்று, உணர்த்தினேயே-அறிவுறுத்தினேயே, மௌனா-மௌனகுருவே, இனி-இனி, நான் - அடியேன், சாத்திரம் சொனனபடி-சாதரஞ் சொனனவணணம்-நியமாதியும்-இயமம் முதலிய எணவகை யோக வுறுப்புக்களையும், சாதிபபன்-செயது முடிபேன். எ று.

ஆத்திரம - விரைவு மௌனகுருவே, நீ பிரதக்ஷ மாய எழுநதருளி எனக் கறிவுறுத்த வேண்டியவற்றை யறிவுறுத்தினையே, இனி அடியேன், சாதரம் சொன்னபடி இயமாதிகளையும் செயது முடிப்பேன் என்பது கருத்து.

உடல்பொய்யுறவு.

1 உடல்பொய் யுறவாயி னுண்மை யுறவாகச்
கடவாரார் தண்ணருளே கண்டாய்—நிடமுடனே
உற்றுப்பார் மோன னெருசொல்லே புண்ணைகன்முப்
பற்றிப்பார் மற்றெல்லாம் பார்.

இ-ள். உடல்-உடம்பே, பொய்யுறவு ஆயின்-பொய்யுறவானால், உண்மை உறவு ஆகக்கடவார் ஆர்-மெய்யுறவாகக் கடவர் யாவர், தண் அருளே-தண்ணிய திருவருளே, திடமுடனே-திடத்துடன், உற்றுப்பார்- உற்றுப் பார்ப்பாயாக, மோனன்-மௌநகுருவின், ஒருசொல்லே - ஒருமொழியே, உண்மை-மெய்யாம், நன்று ஆ-நன்றாக, பற்றிப்பார் - பற்றிப்பார்ப்பாயாக, மற்ற எல்லாம்-மற்றவைகளெல்லாம், பாழ்-பொய்யாம். எ-று.

மனமே சர்வதேச சர்வகால சர்வாவஸ்த்தைகளிலும் நம்மைவிட்டு நீங்காத இந்தச சரீரமே நமகுப் பொய்யறவா யொழிந்தால், இனி மெய்யுறவாக்கடவார் யார் ஒருவருமில்லை, ஆகையால், நமகு மெய்யுறவாவது திருவருளே, மௌநகுரு அருளிசசெய்த ஒரு மொழியே மெய். மறறவைடாவும் பொய்யென்பது கருத்து.

2 பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கா லப்பரதத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய்—நேராக
நிற்குந திருவருளி னெஞ்சேயா நிற்பதல்லாற்
கற்குநெறி யாதினிமேற் காண்.

இ-ள். பார் ஆதி பூதம் எல்லாம் - பிருதுவி முதலிய பூதங்கள்யாவும், பார்க்குங்கால்-பார்க்குமிடத்தி, அப்பரத்தின் - அந்தப் பரம்பொருளினது, சீர் ஆக-சிறந்த வடிவமாக, நிற்கும் திறம்-நிறகும் விதத்தை, கண்டாய்-கண்டனை, (ஆதலால்) நெஞ்சே - மனமே, யாம்-நாம், நேராக நிற்கும்-நேராய் நிற்கிற, திருவருளில-திருவருணிலையில், நிற்பது அல்லால்-நிற்பதனறி, இனிமேல்-இனிமேல, கற்கும் நெறி யாது - கற்கவேண்டிய மார்க்கம் யாது. எ-று.

மனமே. பிருதுவி முதலிய பூதங்கள் யாவும ஆராயுமிடத்து, அநதப் பரமபொருளி னுருவாயிருத்தலேக கணடனை யாதலால், திருவருணிலையில் நிறபதன்றி, இனி நமகுக் கறக அடுப்பது வேணினண்பதாம்.

3 மெய்யான தன்மை விளங்கிலுல் யாகமேலும்ம
பொய்யான தனமை பொருந்துமோ—வையாவே
மன்னு நிராசையின்னம் வந்தலல வுன்னடிமை
யெனனுர்ல் லெய்துமா றெனை.

இ-ள மெய்யாள தனமை விளங்கிலுல் - உண்மையாந்தன்மை விளங்கினுல். யாகரு ஏலும - யாவாகாயினும. பொய்யான தன்மை பொருந்துமோ - பொய்யாந்தனமை பொருந்துமோ, ஐயாவே - ஐயனே, மன்னும்-நிலேபேறுடைய, நிராசை-அவா வறுதி, இன்னம் வந்தது அல்ல-இன்னமு முண்டானதில்லே, (அகுகனமாக) உன் அடிறை என்னும்

நிலை - உன்னடியனென்கிற நிலையை, எய்தாமாறு என் - அடையும் வழி யாது. எ-று.

யாவர்க்காயினும் மெய் விளங்கினால் பொய் நிலைகுமோ, அடியேனுக்கு நிராசை யின்னம் உண்டாக வில்லையே, உன்னடியன் யான் என்னும் நிலை யெனக்கு எப்படியுண்டாகு மென்பதாம்.

4 அறியாமை மேலிட் டறிவின்றி நிற்குங்
குறியேற் கறிவென்ற கோலம்—வறிதேயா
நீயுணர்த்த நானுணரு நேசத்தா லோவறிவென்
றேயெனக்கோர் நாமமிட்டதே.

இ-ள். அறியாமை மேலிட்டு-அறிவின்மை மேற்பட்டு, அறிவு இன்றி நிற்கும் - அறிவற்று நிற்கிற, குறியேற்கு - சிறியேனுக்கு, அறிவு என்ற கோலம்-அறிவு என்கிற ரூபம், வறிதே ஆம்-வீணாயாகும், நீ உணர்த்த நீ என்னுண்ணின் றறிவிக்க, நான் உணரும் நேசத்தாலோ-நானறியு மன் பினாலோ, எனக்கு-அடியேனுக்கு, அறிவு என்று ஓர் நாமம் இட்டது-அறி வென்றொரு பெயரிட்டது. எ-று.

அறியாமையே யதிகரித்து நிற்கிற எனக்கு அறிவென்னு முருவம் பொய்யாம், ஆயினும், நீ யுள்ளிருந் தறிவிக்க நானறிதலினாலோ, எனக்கு அறிவென்றொரு பெயரிட்டது என்பதாம்.

5 ஏதுக்குச் சும்மா விருமனமே யென்றுனக்குப்
போதித்த வுண்மையெங்கே போகவிட்டாய்—வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னையுன்
புந்தியென்ன போதமென்ன போ.

இ-ள். ஏதுக்கு - (நீ யலகின்றது) எற்றுக்கு, சும்மா இருமனமே யென்று-சும்மாவிரு நெஞ்சமே யென்று, உனக்கு போதித்த உண்மை-உனக்குப் போதித்த உண்மைநிலையை, எங்கே போகவிட்டாய் - எங்கே போகவிட்டனை, வாதுக்கு வந்து எதிர்த்த - வாதுசெய்யவந் தெதிர்த்த, மல்லரைப்போல் - மல்லரைப்போல, வாதாடினையே-வாது செய்தனையே, உன் புந்தி யென்ன - உன் புத்திதானென்ன, போதம் என்ன - அறிவுதா னென்ன, போ-ஒழிவாயாக. எ-று.

மனமே, சும்மாவிரு என்று நான் உனக்குப் போதித்த வுண்மையை எங்கே தொலைவிட்டாய், எதிர்த்த மல்லரைப்போல என்னோடு வாது செய் கின்றனையே, உன் புத்தி மதிகளென்ன னென்பதாம்.

6 சகமனைத்தும் பொய்யெனவே தானுனர்ந்தாற் றூக்க
சுகமனைத்தும் பொய்யனமேற் மீசரா — நிகரதனும

விட்டுப் பிரியாத மேலான வத்துவிதக்
கட்டுக்கு ளாவதென்றே காண்

இள். சகம் அனைத்தும் - பிரபஞ்சமெல்லாம், பொய்யென உணர்ந்தால்-மித்தையென்றறிந்தால், துக்க சுகம அனைத்தும் - துன்பவின்பங்களெல்லாம், பொய் அன்றே-பொய்யா மல்லவோ, சோராது-தளராமல், இகபரத்தும-இகபரங்களிலும், விட்டுப்பிரியாத-விட்டுநீங்காத, மேலான-மேன்மையாகிய, அத்துவிதம் - அத்துவிதமென்கிற, கட்டுகருள் ஆவது-கட்டுக்குட்படுவது, என்றே-எக்காலமோ. எ று.

பிரபஞ்சமெல்லாம் பொயயென் றறிந்தால் சுகதுக்கங்கள் யாவும் பொய்யாமல்லவோ, ஆதலால், அத்துவிதகட்டுக்குட்படுகிற்பது எக்காலமோ என்பதாம்.

கற்கண்டோ தேதேனோ கனிரசமோ பாலோவென்
சொற்கண்டா தேதெதனா லான் சொல்லுவேன்—விற்கண்ட
வான மதிகாண மௌனிமௌ னத்தளித்த
தானமதில் ஊறு மமிர்தம்.

இள். விற்கண்ட-ஒளிபெற்ற, வானமதி - சிதாகாயத்திலுள்ள சந்திரமண்டலத்தை, காண - பார்க்குமபடி, மௌனி-மௌனகுரு, மௌனதது அளித்த-மௌனாகங்லியாற றிருபைசெயத, தானமதில்-இடத்தில், ஊறும்-சுரக்கின்ற, அமிர்தம் - அமிர்தமானது, கற்கண்டோ - கற்கண்டுதானோ, தேனோ-தேகுரோ, கனிரசமோ-முக்கனிகளின் சாறுதானோ, பாலோ-பாலுதானோ, எனசொற்கு அண்டாது-என் சொல்லுகுகடங்காது, எது எனா னான்சொலலுவேன்-(இவற்றுள்) யாதென்று நான்சொலலவல்லேன். எ-று.

சிதாகாயத்திலுள்ள சந்திரனிடத்துச சுரக்கின்ற அமிர்தமானது கற்கண்டுமுதலிய மதுரவஸ்துக்களுள் யாதென்றுசொல்லுவேன் என்பதாம்.

8 கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினே மேவினர்கட் கன்றேதான்
பொய்யாம பிறப்பிறப்புப் போம.

இ-ள். கேட்டலுடனே - சிரவணத்தோடு, சிந்தித்தல் - மநநம், கேடு இல்லா வெதிரியில்லாத, மெய்த்தெளிவால்-உண்மையாகிய நிதித்யாசநம் இவைகளால், வாட்டம் அறு - துன்பம் நீங்காத, உற்பவ நோய் - பிறவிப் பிணி, மாறுமோ-நீங்குமோ, நாட்டம் உற்று-ஆராய்சசி பொருந்தி, மெய் ஆன - உண்மையாகிய, நிட்டையினை - நிஷ்டையை, மேவினர்கட் கன்

மே-பொருந்தினவர்களுக் கல்லவோ, பொய ஆம் - பொய்யாகிய, பிறப்பு இறப்பு போம்-உற்பததி நாசங்கள் இல்லாதொழியும். எ-று.

சிரவண மகந நிதித்யாசநங்களாற பிறவிப்பிணி நீங்காது, உண்மையாகிய நிஷ்டையைப் பொருந்தினவாகளுக்கு நீங்கும் என்பதாம்.

9 மாயாச கத்தை மதியாதார் மண்முதலா
யேயான தத்துவத்தி லெய்துவரோ—நேயானு
பூதிநிலை நிற்கப் பொருதுவர்க ளன்னவர்த
நீதியையே யோர்மனமே நீ.

இ ள். மாயா சகத்தை-மாயாகாரியமாகிய பிரபஞ்சத்தை, மதியாதார்-ஒருபொருளாக மதியாதவர்கள், மண் முதலாய் ஆன - பிருதுவிமுதலாகவுள்ள, தத்துவத்தில்-தத்துவக் குப்பையில், எய்துவரோ-பொருந்துவரோ, நேயம்-அன்புருவமான, அநுபூதி நிலைநிற்கப் பொருந்துவர்கள் - அநுபூதி நிலையில் நிற்கப் பொருந்துவார்கள், (ஆதலால்) அன்னவர் தம் நீதியையே-அவரது நீதியையே, நீ ஓர்-நீ அறி, மனமே-நெஞ்சமே. எ-று.

மனமே, பிரபஞ்சத்தை ஒரு பொருளாக மதியாதவர்கள் பிருதுவி முதலிய தத்துவக்குப்பையிற் பொருந்துவரோ, பொருந்தார், அநுபூதிநிலையில் நிற்பர், ஆதலால் அவர்களுடைய நீதியையே நீ யாராய்வாயாக என்பதாம்.

10 இகமுழுதும் பொய்யெனவே யேய்ந்துணர்ந்தா லாங்கே
மிகவளர வந்தவருண் மெய்யே—பகநெகிழப்
பாரீ ரொருசொற் படியே யனுபவத்தைச்
சேரீ ரதுவே திறம்.

இ ள். இக முழுதும்-இவ்வுலகமுழுமையும், பொய் யெனவே-மித்தையென்றே, எய்ந்து உணர்ந்தால்-பொருந்தி யறிந்தால், ஆங்கே-அப்பொழுதே, மிகவும் பெருக்கமடையும்படி வந்த, அருள்-திருவருள், மெய்யே-உண்மையேயாம், அகம் நெகிழப் பாரீர்-மனமுருகப் பாருங்கள், ஒரு சொல் படியே ஒரு மொழிப்படியே, அநுபவத்தைச சேரீர்-அநுபவத்தைப் பொருந்துங்கள், அதுவே-அப்படி செய்தல், திறம்-உறுதியாவது. எ-று.

இவ்வுலக முழுதும் மித்தையென்றறிந்தால், அப்பொழுதே திருவருள் மெய்யாக விளங்கும், ஆதலால், மன நெகிழப் பாருங்கள், ஆசாரியனது ஒரு மொழிப்படியே அநுபவத்தை யடையுங்கள், அப்படி செய்வதே உங்களுக் குருதியாவது எனபதாம்

11 ஆரணங ளாகமங்க ளியாவுமே யானந்த
பூரணமே யுண்மைப் பொருளென்னுங்—காரணத்தை
ஓராயோ வுள்ளுள்ளே யுற்றுணர்ந்தவ் வுண்மையினைப்
பாராயோ நெஞ்சே பகர்.

இ-ள். ஆரணங்கள் - வேதங்கள். ஆகமங்கள் - ஆகமங்கள் (ஆகிய), யாவும்-எல்லாம், ஆனந்த பூரணமே-இன்ப நிறைவே, உண்மைப் பொருள் என்னும் - உண்மைப்பொருளென்று சொல்லுகிற, காரணத்தை-ஹேதுவை, ஓராயோ-ஆராய்ச்சி செய்யாயோ, உள்ளுள்ளே உற்றுணர்ந்து உள்ளிற்குள்ளேதானே உற்றறிந்து, அவவுண்மையினை-அந்தமெய்யை, பாராயோ-பார்க்கமாட்டாயோ, நெஞ்சே பகர்-மனமே சொல்வாயாக எ-று.

மனமே, வேதாகமங்களெல்லாம ஆனந்த பூரணமே மெய்ப்பொருளென்று ஏகண்டமாய்ச சொல்வதை ஆராய்ந்தடங்குவா யென்பதாம்.

12 நேராயம் மௌனநிலை நில்லாமல் வாய்பேசி
யாரா யலையுந்தீர்நீ ராகெடுவீர்—தேதீர்
திரையுந் திரையுநதிச் சென்னியினை நாவாற்
கரையுங் கரையுமனக் கல்.

இ-ள். நேராய்-நேராக, அம்மௌனநிலை நில்லாமல்-அந்த மௌன நிலையில் நிற்காமல், வாய் பேசி-வாயினாற் பேசிக்கொண்டு, தீர் நீங்கள், ஆராய் அலைந்தீர்-யாராக நினைந்தலைந்தீர்கள், ஆகெடுவீர்-ஐயோ கெடுவீர்காள், தேதீர்-தெளியுங்கள், திரையும் திரையும்-அலைகள் பலகால் திரைந்துவீழுகின்ற, நதி சென்னியினை-கங்கைச சடையினை, நாவால் - நாவினால், கரையும்-செபித்து உருகுங்கள், (அப்படி செய்தால்) மனக்கல்-நெஞ்சமாகிய கல்லானது, கரையும்-உருகும். எ-று.

முமுட்சுக்களே, மௌனநிலையில் நில்லாமல் நீங்கள் வீணாக என் அலைகிறீர்கள், கங்காதரனைப் பலகால் துதித்துருகுங்கள், உங்கள் மனக்கல்லுருகும் என்பதாம்.

13 அற்ப மனமே யகிலவாழ் வத்தனையுஞ் [யொன்,
சொற்பநங்கண் டாயுண்மை சொன்னேனுன் — கற்பனை
யில்லா விடத்தே யெனைசும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோர் கவி.

இ-ள். அற்ப மனமே - அறபமாகிய நெஞ்சமே, அகில வாழ்வு அத்தனையும - பிரபஞ்ச வாழ்வெல்லாம், சொற்பனம் - கனவேயாம், நான் உண்மைசொன்னேன் - நான் யதார்த்தத்தைச சொல்லிவிட்டேன், கற்பனை ஒன்று இல்லா இடத்து-கற்பனை சிறிதுமில்லாத இடத்தில், என்னை

என்னே சும்மாவைத்திருக்க-சும்மாவைத்திருக்க, நீ ஓர் கவி கல்லாய்-நீஒரு கவியைக கற்பாயாக. எ-று.

மனமே, பிரபஞ்சவாழக்கையானது சொப்பனம்போலப் பொய்யாம், ஆதலால, கறபனையற்ற இடத்தில் என்னைச சுமமா இருததிவைப்பதற்கு ஒரு மொழியைக கற்பாயாக என்பதாம்.

14 ஏதுந் திருவருளி னிச்சையா மென்றென்றெப்
போதுமெ பொருந்தும் புனிதர்பாற்—நீதுநெறி
செல்லுமோ செல்லாதே செல்லுமிட மின்பமலாற்
சொல்லுமோ வேதத் தொனி.

இ-ள். ஏதும-யாதும், திருவருளின் இசசை ஆம் என்று என்று-திருவருளின் சங்கறபமே யாமென்று, எப்போதும் பொருந்தும - எப்பொழுதும அமைநதிருகக்ற, புனிதர்பால்-பரிசுத்தர்களிடத்தில், நீதுநெறிசெலலுமோ-நீய நெறி செல்வதோ, செல்லாதே-செல்லாதன்றோ, செலலுமஇடம-செல்லுமிடமானது, இன்பமஅல்லால் ஆநதமனறி, வேதத்தொனி சொல்லுமோ-வேத வொலி (வேரொன்றைச) சொல்லுமோ. எ-று.

எல்லா திருவருளேயென் றமைந்திருக்கும் பரிசுத்தர்களிடத்தில் நீ நெறிகள் செல்லா என்பதாம்.

15 கல்லேறுஞ் சில்லேறுங் கட்டியே றும்போலச்
சொல்லேறப் பாழ்த்த துளைச்செவிகொண்—டல்லேறு
நெஞசனென நிற்கவைத்தாய் நீதியோ தற்பரமே
வஞ்சனல்லே னீயே மதி.

இ-ள். கல்லேறும் - கல்லெறிதலையும், சில் ஏறும்-ஓடு எறிதலையும், கட்டி யேறும்-மண்ணைகட்டி யெறிதலையும, போல-ஒததிருகக, சொல் ஏற-பலவகைச சொற்களேறுதலால், பாழ்த்த - பாழான, துளைசெவி கொணடு-செவித்தொளைகொண்டு, அல்ஏறு-அஞ்ஞான இருளேறிய,நெஞ்சன் என-மனததையுடையா னிவனென்று உண்மைநிலை கண்டோசொல்லும்படி, நிற்க வைததாய்-என்னை நிற்கச செய்தனை, நீதியோ-இதுவுனககு நீதியாமோ, தற்பரனே-தறபரவஸ்துவே, வஞ்சன் அல்லேன்-வஞ்சக னல்லேன், நீயே மதி-நீயே மதித்தறிவாய். எ-று.

தற்பரனே, பல கேள்விகள் கேட்டுக் கலக்கமடைந்த மனத்தினியுடையா னிவனென்று என்னை உண்மைநெறியினர் சொல்ல வைத்தாய், இது உனக்கு-நீதியோ வென்பதாம

16 அப்பொருளு மான்மாவு மாணைநூல் சொன்னபடி
தப்பிலாச் சிததொன்றுஞ சாதியினு—லெப்படியுந்

தேரிற் றுவிதஞ சிவாகமமே சொல்லுநிட்டை
யாருமிடத தததுவித மாம்.

இ-ள். அப்பொருளும்-அந்தப் பரம்பொருளும்.ஆன்மாவும-ஆன்மவஸ்துவும், ஆரண நூல் சொன்னபடி-வேதநூல் சொன்ன பிரகாரம். சாதியினால்-சாதியால், தபபு இல்லா சித்து ஒன்று ஆம்-குறைவற்றசித்து ஆகிய ஒருபொருளேயாம், எப்படியும-எவவிதத்தினாலும, தேரின்-ஆராய்ந்தால, சிவாகமம் துவிதம சொல்லும்-சிவாகமங்கள துவிதததையே சொல்லும், நிட்டை ஆரு மிடத்து-நிஷ்டை கூடுமிடத்தில், அததுவிதம் ஆம்-அத்துவிதமாகும். எ-று.

சீவபரங்கள் சித்தென்னுஞ் சாதியால் ஒன்றேயாம் என்பதாம்

17 வேத முதலாய் விளங்குஞ் சிவவடிவாம்
போத நிலையிற் பொருந்தாம—லேதமிகு
மோகாதி யல்லிலே மூழ்கினையே நெஞ்சேயித்
தேகாதி மெய்யோ தெளி.

இ-ள். வேத முதலாய-வேதமுதலாகி, விளங்கும்-விளங்குகின்ற, சிவவடிவ ஆம்-சிவரூபமாகிய, போத நிலையில் பொருந்தாமல் - ஞானநிலையிற் பொருந்தியிராமல், ஏதம மிகும்-குற்றம் பெருகுகின்ற, மோகாதி அல்லலிலே-மோகமுதலியதுன்பங்களில்; மூழ்கினையே-அழுந்தினையே,நெஞ்சே-மனமே, இததேகாதி-இந்தத் தேகாதிகள், மெய்யோ-மெய்யாமோ,தெளி-தெளிவாயாக. எ-று.

மனமே, வேத முதலாக விளங்குகின்ற சிவரூபமாகிய போத நிலையிற் பொருந்தியிராமல, மோகசாரத்தில் அழுந்தினை, இந்தத் தேகாதிகள் மெய்யோ என்பதாம்.

18 நோக்கற் கரிதான நுண்ணியவான் மோனநிலை
தாக்கற் குபாயஞ் சமைத்தபிரான்—காக்குமுயி
ரத்தனைக்கு நானடிமை யாதலினல் யானெனதென்
றித்தனைக்கும் பேசவிட மில்

இ-ள். நோக்கற்கு அரிது ஆன-பாராதற் கருமையான, நுண்ணிய-நுட்பமான, வான்-மேலாகிய, மோன நிலை தாகசற்கு - மௌனநிலையைப் பற்றுதற்கு, உபாயம் சமைத்தபிரான்-உபாயம் அமைத்த எம்பெருமான், காக்கும உயிர அத்தனைக்கும் - காக்கின்ற வுயிர்க ளெல்லாவற்றுக்கும், நான் அடிமை ஆதலினல்-நான் அடிமை யாகையால், யான்எனது என்று-நான் என்னது எனறு, இததனைககும்-இவவாவகைக்கு, பேச-பேசுதற்கு, இடம் இல்-இடமில்லை எ-று.

மோனநிலை யெனக்குண்டாம் வண்ணம் உபாயஞ்செய்த இறைவன் காக்கின்ற வுயிர்களெல்லா மற்றுக்கும் நான் அடிமையாதலால், நான் எனது என்பதற்குச் சிறிதும் இடமில்லை யென்பதாம்.

19 ஒன்றுமற நில்லென் றுணர்த்தியநம் மோனகுரு
தன்றுணைத்தா ணீழி தாமவாழ்க—வென்றென்றே
திக்கனைத்தும் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரு மின்பக் கனி.

இ-ள். ஒன்றும் அற-ஒருவிகற்பமுமின்றி, நில் என்று உணர்த்திய-நில்லென்றறிவுறுத்தின, நம்-நம்முடைய, மோனகுரு - மௌனகுருவினது, துணைத்தாள்-இரண்டு திருவடிகள், நீழி வாழ்க-நீழி வாழக்கடவன, என்று என்றே-என்று சொல்லியே, திக்கு அனைத்தும் - திசைகளெல்லா வற்றினும், கைகுவிக்கும்-கைகூப்பி வணங்குகிற, சின்மயா ஆம் தன்மையர்க்கே-சின்மயராகிய தன்மையையுடையவர்களே, இன்பக்கனி-(நிராதிசய) சுகக்கனியானது, கைக்குவரும்-கைக்குக்கிடைக்கும். எ-று.

சிறிதும் விகற்பமில்லாமல் நிற்பாயாகவென்று என்னையறிவுறுத்தின நம்மோனகுருவினது திருவடி வாழ்கவென்று எல்லாத் திசைகளிலுங் கைகுவிக்கும் அன்பர்களுக்கே இன்பக்கனியானது கைக்குக் கிடைக்கும் என்பதாம்.

20 மனத்தாலும் வாக்காலு மன்னவொண்ணு மோன
வினத்தாரே நல்ல வினத்தார்—கனத்தபுகழ்
கொண்டவரு மன்னவரே கூறரிய மூத்திநெறி
கண்டவரு மன்னவரே காண்.

இ-ள். மனத்தாலும் - மனத்தினாலும், வாக்காலும் - வாக்கினாலும், மன்னவொண்ணு - நிலைக்கக்கூடாத, மோனம் - மௌன நிலையையுடைய, இனத்தாரே-கூட்டத்தாரே, நல்ல இனத்தார்-நல்ல கூட்டத்தார், கனத்த புகழ் கொண்டவரும்-பெரும்புகழைக கொண்டவரும், அன்னவரே-அத்தன்மையரே, கூறு அரிய - சொல்லுதலருமையாகிய, மூத்திநெறி கண்டவரும் - மோக்ஷமார்க்கத்தைக் கண்டவரும், அன்னவரே - அத்தன்மையரே. எ-று.

மனோவாக்குக்களுக் கெட்டாத மௌன ஸமாஜத்தாரே சிறந்தவர் என்பதாம்.

21 கண்ணெளியே மோனக் கரும்பே கவலையறப் [ணிடவுன்
பண்ணெளிக்கு முள்ளொளியாம் பான்மையினை — நண்ணி
சித்த மிரங்கிலதென் சித்தந தெளியாவே
றித்தனைக்கு மாதரவு மில்.

இ-ள். கண்ணொளியே - கண்ணுக்குள் ஒளியே, மோனக் கரும்பே - மௌனக் கருப்பஞ் சுவையே, மறைப்பண் கடலே - மறைப்பண்ணுகின்ற, ஒண்கருமம் உள் ஒளி ஆய - எண்ணப்படுகின்ற - ஒளிக்குள் - ஒளியாகிய தன்மையை, கண்ணிடை - நான் பொருந்துமாறு, உன்சித்தம் இரங்கிலது - உன்சித்தமிரங்கவில்லை, என்சித்தம் தெளியா - என்மனந்தெளியாது, வேறு இத்தனைக்கும் - உன்னையன்றி வேறுக இதனைக்கும், ஆதரவும் இல் - ஆதரவுமில்லை. எ - று.

இறைவனே, ஒளிக்கும் ஒளியாகிய தன்மையைப் பொருந்துமாறு உன் சித்தமிரங்கி யருளல் வேண்டும், உன்னையன்றி வேறோர் ஆதரவில்லை யென்பதாம்.

22 அறியாமை சாரி னதுவா யறிவா
றெறியான போததுவாய் நிற்குங்—குறியாற்
சதசத தருளுணர்த்தத் தானுணரா நின்ற
விதமுற றறிவெனும்பேர் மெய்

இ-ள். அறியாமை சாரின்-அறியாமை பொருந்தினால, அது ஆய்-அவ வறியாமையேயாகி, அறிவு ஆமெறி ஆனபோது - அறிவாகிய நெறிபை யடைந்தபோது, அது ஆய் நிற்கும - அவ்வறிவாகவே நிற்கும், குறியால்-பெயரினால், சதசத்து அசதத்து-சதது அசததென்று, அருள் உணாதத-திரு வருளறிவிக்க தான் உணரா நின்ற-தான் அறியா நின்ற, விதம் உற்று-விதத்தைப் பொருந்தி, அறிவு என்னும் பேர் மெய் - அறிவெனுகிற பேர் மெய்யாம். எ - று.

அறியாமை சாரின் அதின் மயமாம் அறிவு சாரின் அதின் மயமாயும் இருத்தலால் சதசதத்தை யுணரமாட்டாது, திருவருளுணர்த்த வுணரும் விதத்தைப் பொருந்தி அறிவு என்னும் பெயர் நிலை பெறும்.

23 சூரிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
சாலென்று மேனிநமபாற காட்டா—தருளென்று
கைகூ யாகே யானந்தங் கண்டுகொள லாமலது
மெய்கண்டவாக்கிற் கென்ன கிடைக்கும்.

இ-ள். சூரிங்க - திருவருளானது சூரியுங்க சங்கமம் ஆக கொண்ட-சூரியுங்க ஜங்கமங்களாகக கொண்ட, திருமேனி-தன் யதாரத்தஸ்வரூபத்தை, சரு ஒன்று மேனி சம்பால் காட்டாது எனன-கருப்பசாரமுள்ள வருவத்தையுடைய சமகருக் காட்டாது என்று, கண்டவர்க்கே-உண்மையை யறிந்தவர்களுக்கே, ஆனந்தம் கண்டுகொளல் ஆம் இன்பம் கண்டு கொள்ளல் கூடும், அல்லது கொண்டவர்க்கு-அதன்றி வேறு எண்ணங்

கொண்டவர்களுக்கு; இந்த என்ன கிடைக்கும் - இவ்வீடத் தென்ன கிடைக்கும். எ-று.

குரு-ஆசாரியன, லிங்கம்-லிங்கரூபமாகிய இறைவனது விக்ரஹம், ஜங்கமம்-இயங்கியற்பொருள், இறைவன குருலிங்க ஜங்கமமகனாயிருக்கும் உண்மை பரிபாகிகளுக்கன்றித்தெரிந்து இன்பமடைதல் கூடாதென்பதாம்.

24 புலியி னதளுடையான் பூதப் படையான்
பலியிரந்து மெல்லாம் பறிப்பான்—மலிபுனல்சேர்
பொன்முடியான் முக்கட் புனிதன் சரண்புகுந்தோர்க்
கென்முடியா தேது மூளதே.

இள். புலியின் அதள் உடையான் - புலித்தோலையுடையவன், பூதப் படையான் பூதப்படையையுடையவன், பலியிரந்தும் - பலியேற்றும், எல்லாம் பறிப்பான்-எல்லாவற்றையும் பரிதாதுக்கொள்வான்; மலிபுனல்சேர்-நிறைந்த நீரையுடைய கங்காநதிசேர்ந்த, பொன்முடியான் - திருமுடியையுடையவன, முக்கண் புனிதன் - மூன்று கணகளையுடைய பரிசுத்தன், (அவனது) சரண்புகுந்தோரகு சரணமடைந்தவர்களுக்கு, என்முடியாது-எந்தக் காரியந்தான் முடியாது, எதும் உளதே (முடியாத காரியம்) சிறிது முண்டோ. எ-று

இறைவனைச சரணடைந்தார்க்கு முடியாத காரியம ஒன்றுமில்லை யென்பதாம். முடியென்றது சடையை.

25 சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
யல்லும் பகலு மரற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்க ணுமில்லை யென்பரந்தோ
மோனமய மான முறை.

இ-ள். சொல்லுக்கு அடங்கா - வாக்குக் கடங்காத, சுகப்பொருளை-சுகரூபமான வஸ்துவை, நாம் என-நாமென்று, அல்லும பகலும-இரவும் பகலும, அரற்றுவது என - இரைவதென்ன. நல்ல சிவ - நல்ல சுபரமாகிய, ஞானமயம் பெறறோர்கள் - ஞானரூபத்தைப் பெறறவர்கள, நாம் இல்லையென்பர் - நாமில்லை யென்பார்கள, அந்தோ - ஐயோ, (இது வன்றோ) மோனமயம் ஆனமுறை-மௌனரூபமான முறையாம். எ-று.

நல்ல என நிறுத்தி, சிவஞானமயம பெற்றோர்கள் என்றுரைத்தலுமாம. அவாங்மானஸகோசரமாகிய பரம்பொருளை நாமென்றும் அரற்று ஞானியர் நாமென்ப தில்லையென்பர, அதுவன்றோ மௌனரூபமான முறைமையென்பதாம.

26 ஐயா வருணகிரி யப்பா வுனைப்போல
மெய்யாக வோர்சொல் விளம்பினர்யார்—வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றூர் தன்னையாய் மூக்கணெந்தை
நாற்றிசைக்குங் கைகாட்டி னன்.

இ-ள். ஐயா-ஐயனே, அருணகிரி - சோணசலத்திலெழுந்தருளியிருக்கிற, அப்பா-அப்பனே, உன்னைப்போல-உன்னைப்போல, மெய்யாக-உண்மையாக, ஓர் சொல்-ஒரு மொழியை, விளம்பினர் யார்-சொன்னவர் யார், வையகத்தோர்-உலகத்தார், சாற்று அரிது என்று-சொல்லுதலருமையாகுமென்று, ஏசற்றூர்-இசைத்தார்கள், தன்னையாய்-தன்னைத்தானே நிகர்த்தவனே, மூக்கண் எந்தை-மூன்றுகண்களையுடைய எமது தந்தை, நாற்றிசைக்கும் கைகாட்டினன் - நாற்றிசையிலுள்ளார்க்கும் கைகாட்டியருளினன். எ-று.

நாற்றிசைக்கும் என்பதற்குச் சதகாதியர் நால்வர் பக்கலிலும் என்று சைத்தலுமாம். அருணகிரியப்பா, முக்கணெந்தைகைகாட்டுதலா னுணர்த்தின பொருளை நீயொரு மொழியா னுணர்த்தினையே, உன்னை நிகர்ப்பவர் யாவர் என்பதாம.

27 காதற்றுப் போனமுறி கட்டிவைத்தா லாவதுண்டோ
தீதற்ற காயமுமசை செய்கையே—போதமாய்
நிற்பரல்லா லிச்சகத்தி னேரார்க ணேர்ந்திடினுந்
தற்பரமாக் கண்டிருப்பார் தாம்.

இ-ள். காது அற்றுப்போன-காதற்றுப்போன, முறி-எழுதுமுறியை, கட்டிவைத்தால்-கட்டிவைத்ததனால், ஆவது உண்டோ-உண்டாவதோர் பயனுளதோ, (இல்லை) தீது அற்ற காயமும்-(பிணிமுதலிய) குற்றமற்ற சரீரமும், அசசெய்கையே - அச்சத்தன்மையுள்ளதே யாகும் (ஆதலால்) போதமாய் நிற்பர் அல்லால்-(அறிஞர்) ஞானவடிவாய் நிற்பரேயன்றி, இச்சகத்தில்-இவ்வுலக வியாபாரத்தில், நேரார்கள்-பொருந்தார்கள், நேர்ந்திடினும்-பொருந்தினும், தற்பரம் ஆகண்டிருப்பார் (அதனை) தற்பரமாகவே பார்த்திருப்பார்கள். எ-று.

காதற்றமுறிபோல இவ்வுடம்புயனற்றதாதலால் அறிஞர் ஞானரூபமாய் நிற்பா என்பதாம்.

28 வெள்ளங் குலாவுசடை வெள்ளக் கருணையினன்
கள்ளங் குலாவுவஞ்சக் கள்ளனே—னுள்ளத்தி
லில்ல னெனினு மன்னவன்ற னெங்கும் வியாபகத்தா
னல்லனென்னுஞ் சொல்ல வழக்காம்.

இ-ள். வெள்ளம் குலாவு - கங்கை தங்கிய, சடை - சடாபாரத்தை யுடைய, வெள்ளக் கருணையினன்-கருணைசமுத்திரமாகிய இறைவன், கள்ளம் குலாவு-கபடம் பொருந்திய, வஞ்சக் கள்ளனேன்-வஞ்சனையுள்ளகள்வனே னது, உள்ளத்தில்-மனத்தில், இல்லன் என்றால் இலனென்றால், அன்ன வன் தான்-அவனே, எங்கும்-எவ்விடத்தும், வியாபகததான் அல்லன் என் றும்-வியாபித்தலையுடைய னல்லனென்றும், சொல்ல சொல்லுதற்கு, வழ கு ஆம்-ஒரு வழக்குளதாகும். எ-று.

இறைவன் என்மனத்திலிலனென்றால் அவனது சர்வவியாகத்துக்குப் பழுதுண்டா மென்பதாம்.

29 தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்
வைத்தவருண் மௌன வள்ளலேயே—நித்தமன்பு
பூணக் கருதுநெஞ்சு போற்றக் கரமெழும்புங்
காணற் துடிக்குமிரு கண்.

இ-ள். தத்துவப் பேயோடே-தத்துவங்களாகிய பேய்களுடன், தலை யடித்துக்கொள்ளாமல்-தலைமோதிக்கொள்ளாத வண்ணம், அருள்வைத்த-அருள் புரிந்த, மௌன வள்ளலேயே-மௌனோதாரனேயே. நித்தம்-நாடோ றும், அன்பு பூண-அன்பு செய்ய, நெஞ்சு கருதும்-என்மனம் நினைக்கும், போற்ற அஞ்சலி பண்ண, கரம் எழும்பும்-கைகளுயரும், காண-சேவிக்க, இரு கண் துடிக்கும்-இரு கண்களும் பதைக்கும். எ-று.

மௌனநிலையை யெனக் கறிவுறுத்தின இறைவனுக்கு அன்புசெய்ய என் மனம்விரும்பும், அஞ்சலிக்கக் கைகளுயரும், காணக் கண்பதைக்கும் என்பதாம்.

30 தொல்லைவினைக் கீடாய்ச் சுழல்கின்ற நானெருவன்
எல்லையிலா நின்கருணை யெய்துவதே—வல்லவனே
மோன குருவே முழுதினையுங் காணுணர்ந்த
ஞான குருவே நவில்

இள். தொல்லைவினைக்கு ஈடு ஆய-பழவினைக் கிடுதிறையாய், சுழல் கின்ற நான் ஒருவன்-திரிகின்ற நானெருவனும், எல்லை இல்லா-அளவில் லாத, நின் கருணை உன் கிருபையை, எய்துவதே-அடைவதே, வல்லவன் ஆம்-எல்லாம் வல்லவனுகிய, மோனகுருவே-மௌனாசாரியனே, முழுதினை யும் தான் உணர்ந்த - எல்லாவற்றையுந்தானே யறிந்த, ஞான குருவே-ஞானத்தையுடைய ஆசாரியனே, நவில்-சொல்வாயாக. எ-று.

இறைவனே, கர்மாநு குணமாகச சுழலாநின்ற நான் உன்கருணைக் குரிய ஞவேமேனு என்பதாம்.

31 மூன்றுகண்ணு முத்தொழிலா மும்முதலா மூவுலகுந்
தோன்றச் கருணைபொழி தோன்றலே—யீன்றவன்னை
தன்னைப்போ லன்பு தழைத்தோ பொருதெய்வ
முன்னைப்போ லுண்டோ வுரை

இ-ள். மூன்று கண்ணு-முக்கண்ணனே, முத்தொழிலா-முத்தொழிலை யுடையவனே, மும்முதலா - மும்முதலாயுள்ளவனே. மூவுலகும்தோன்ற-மூன்றுலகங்களு முண்டாம்படி, கருணைபொழி-கருணைமழைபொழிகின்ற, தோன்றலே-பெரியோனே. ஈன்ற அன்னை தன்னைப்போல் - பெற்றதாய் போல, அன்பு தழைத்தோய்-அன்பு மிக்கோனே, உன்னைப்போல் ஒரு தெய்வம் உண்டோ-உன்னைப்போல வொருதெய்வமுளதோ,உரை-சொல் வாய். எ-று.

மூன்று கண்களாவன-சோம சூரியாக்கினிகள். முத்தொழில்களா வன-திருட்டி, திதி, சங்காரங்கள். மும்முதல் என்றது மும்மூர்த்திகளை. இவர்கள் ஜகத்பதஸ்திதி லயங்களுக்கு முதல்வர்களாதலால் இவர் களுக்கு இப்பெயருண்டாயிற்று. மூவுலகு-ஸ்வர்க்க மதிய பாதாளங் கள். இறைவனே, உன்னைபோ லொரு தெய்வமுண்டோ என்பதாம்

32 நேசிக்குஞ சிநதை நினைவுக்கு ளுன்னைவைத்துப்
பூசிக்குந தானிறைநத பூரணமா—யோசித்து
நின்றதலைவன் மோனு நிருவிகற்ப நிட்டைநிலை
யென்றுவரு மோவறியே னே.

இ-ள். நேசிக்கும்-விசுவாசிக்கின்ற, சிந்தை-என்மனமானது, நினைவுக் குள்-எண்ணத்தில். உன்னை வைத்துப் பூசிக்கும்-உன்னைவைத்துப் பூசியா நிற்கும், தான்-தானே, நிறைந்த-நிறைவுற்று, பூரணம் ஆய்யோசித்து நின் றது அல்லால்-நன்றாக ஆலோசித்து நின்றதே யன்றி, மோனு-மௌனகு ருவே, நிருவிகற்ப நிட்டை நிலை-நிருவிகற்ப நிஷ்டை நிலையானது,என்று வருமோ-எப்பொழு தண்டாமோ, அறியேன்-உணர்ந்திலேன். எ-று.

இறைவனே, எனமனமானது உன்னைதன்னிடதிருத்திப் பூசித்த லும், உன்னிலையைப் பற்றி யாலோசித்தலும் செய்வதன்றி, நிர்விகற்ப சமாதியை யடைந்திலதே யென்பதாம்.

33 அறிவி னறியாமை பற்றறிவாய் நின்று
பிறிவறவா னந்தமயம பெற்றுக்—குறியவிழ்ந்தா
லன்றைக் குடல்வேண்டே னுயாவிவ் வாக்கையையே
யென்றைக்கும வேண்டுவனே யான்.

இ-ள். அறிவின் வறியாமை அற்று-அறிவோடறியாமையற்று, அறிவாய் நின்று - அறிவுருவாய் நின்று, பிறிது அற - நீக்கமற, ஆகந்தமயம் பெற்று-ஆகந்த வடிவமடைத்து, நூறி அவிழ்த்தால் - நினைவொடுங்கினால், அன்றைக்கு - அப்பொழுது, உடல வேண்டேன்-சரீரமெடுத்தலை விரும்பேன், (அபபடியல்லாதவிடத்து) ஐயா-ஐயனே, என்றைக்கும்-எப்பொழுதும், இவ்வாகையையே-இந்தச சரீரத்தையே, யான் வேண்டுவன்-நான் விரும்புவேன் எ-று

இறைவனே, அறிவறியாமைக ளறற, அறிவுருவாகிய நினறு, ஆகந்த ரூபமடைந்து, நினைவொடுங்கினால், அன்றைகுச சரீரத்தை விரும்பேன் அதுவரையும சரீரம வேண்டும் எனபதாம.

34 உடலைப் பழித்திங் குணவுங் கெடாமல்
விடவிடவே நாடுவரோ மெய்ப்பைப்—படபடென
வேண்டுவே னிகதவுடன் மெய்யுணரா பபொய்யனை
ணண்டநீ தானே யறி.

இ-ள். உடலைப் பழித்து - உடம்பை நிந்தித்து, இங்கு - இவ்விடத்து, உணவும் கொடாமல் - உணவையுந் தராமல், மெய்யை விடவிடவே நாடுவரோ - உடம்பைவிட்டு நீங்குதற்கே விரும்புவார்களோ, (விரும்பார்கள் ஆதலால்) படபடென - விரைவாய், இந்த வுடலை-இந்த வுடம்பை, மெய் உணரா-உண்மையை யறியாத, பொய்யன் நான் - பொய்யனாகிய நான், வேண்டுவேன் - விரும்பா நின்றேன், ஆண்ட நீதானே அறி - (இதனை) என்னை யாண்டருளின நீதானே யறிவாயாக. எ-று.

அறிஞர்கள் இந்த வுடம்பைகொண்டு முத்தியடைய வேண்டுதலால் இதனை வருத்தார், தானும் அவவாறே, இவவெண்ணம நீயறியாதது என்றபதாம்.

35. அறியாயோ வென்னையுநீ யாண்டநீ சுத்த
வெறியால் மயங்கவுமேன் விட்டாய்—நெறிமயங்கித்
தூன்றுஞ் செடியுங் குறுகுமோ வைபாலே
கன்றுகெட்டாற் முயருகே காண்.

இ-ள். நீ என்னையும் அறியாயோ-நீ யென்னையு மறிந்திலையோ, ஆண்ட நீ-என்னை யாண்டருளின நீ, சுத்த வெறியால்-சுத்த வெறியினால், மயங்கவும்-நான மயகுறும வண்ணமாகவும், ஏன் விட்டாய-ஏனை கைவிட்டாய, ஐயாவே-ஐயனே. கன்றுகெட்டால் - கன்றுமறைந்தால், அருகே தாய்-அருகேயிருக்கிற தாய்ப்பசுவானது, நெறி மயங்கி-வழி தெரிகி, தூன்றும்-தூனாகினையும், செடியும்-செடிகளையும், குறுகுமோ-அணுகுமோ. எ-று.

தாய்ப் பசுவானது தன் கன்று மறைந்தால் அதனையே தேடிக்கண்டு கொள்வதன்றிக் குன்றையுஞ் செடியையும் அணுகாது. அதுபோல, என் னிலைமையையறிந்த நீ, உன்னை நீங்கி மயங்கும்படி என்னை யேன் கைவிட் டாய் என்பதாம்.

36 ஏதுக் குடற்சுமைகொண் டேனிருந்தே னையனே
யாதிக்க மோன வருட்டாயே—சோதியா
மன்ன நிருவிகற்ப வானந்த நிட்டையிலே
பின்னமற நில்லாத பின்.

இ-ள். ஐயனே-ஐயாவே, ஆதிக்கம் - மேன்மையையுடைய, மோனம்-மௌனநிலையைத் தருகின்ற, அருள் தாயே-கருணையுள்ள மாதாவே,சோதி ஆம்-தேஜோமயமாகிய, மன்ன-இறைவனே, நிருவிகற்பம்-நிர் விகல்பமா கிய, ஆனந்த நிஷ்டையிலே-சுகநிஷ்டையில், பின்னம் அற நில்லாத பின்-பிரிவற நில்லாதபோது, ஏதுக்கு - எதின்பொருட்டாக, உடல்சுமை கொண்டு-உடற்பாரந் தாங்கி, என் இருந்தேன் - என்ன பயனை யடைய இருந்தேன். எ-று.

ஐயனே, நிர்விகற்ப நிஷ்டையை யடையாமல், இவ்வுடற் சுமையை யென்ன பயனடையும் பொருட்டுச் சுமந்து திரியாநின்றேன் என்பதாம்.

37 பின்னு முடற்சுமையாப் பேசும் வழக்கதனு
லென்னபல னுமுற் றிருந்தோமே—யன்னதனு
லானந்தந் தானே தானுகு மெம்மையனே
யேனிந்தத் துன்ப மினி.

இ-ள். பின்னும்-மேலும், உடல் சுமை ஆ பேசும் வழக்கதனால்-உடம் பைச சுமையாகப் பேசுகின்ற வழககத்தினால், என்ன பலன்-என்னபயனை, நாம் உற்றிருந்தோம-நாமடைந்திருந்தோம், அன்னதனால்-அத்தன்மைத் தாகிய வுடலினால், ஆனந்தம் - சுகமானது, தானே தான் ஆகும்-தானே தான் உண்டாகும், இனி இந்தத் துன்பம் என் - இனி யிந்தத் துக்கம் யாதுக்கு. எ-று.

உடம்பை நிந்திப்பதில் பயனில்லை. இவ்வுடம்பே முத்திக்குச சாதக மாம் என்பது கருத்து

38 துன்பக் கடலிற் றுளைந்தெல்லாந தீர்ந்ததே
யின்பக் கடலி லிருமென்ன—வன்பிற்
கரைநது கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைநதுவரு மானந் தமே.

இ - ள். துன்பக்கடலில் - துக்கசாகரத்தில், துளைந்தது எல்லாம் தீர்ந்தது - அழுந்தின துக்கமெல்லாந் தீர்ந்தது, இன்பக்கடலில்-சுகசாகரத்

த்தில், இரும் என்ன-இருங்கோளென்று உலகினர்க்கு அறிவுறுத்தி, அன் பன்-அன்பிஞல், கரைந்து கரைந்து உருகி-சரீரம் மிக வாடி மனங்கசிந்து, கண்ணருவி காட்ட - கண்ணருவிகாட்டின், ஆனந்தம் - இன்பமானது, விரைந்துவரும்-விரைவிலுண்டாகும். எ-று

தூக்கம் நீங்கிற்று இனிச சுகமாயிருங்கோளென்று உலகத்தார்க்குப் போதித்துத் தானும் அன்பிஞல் மனங்கரைந்து கண்ணீரை அருவியாம் போலக் காட்டினுல், ஆனந்த மேலீடு விரைவி லுண்டாமென்பதாம்.

39 கரைந்துக கரைந்துருகிக் கண்ணீரா ருக
விரைந்தே நிருவிகற்ப மெய்த—நிரந்தரமு
நின்னையே சிந்திக்க நீகொடுத்தாய் மோனுநா
னென்னைமுழு துங்கொடுத்தே னே.

இ-ள் கரைந்து கரைந்து - உடல்மிக மெலிந்து, உருகி - மன்நெகிழ் ந்து, கண்ணீர் ஆறுஆக - கண்ணீர் ஆறுபோலப்பெருகவும், விரைந்து-விரைவாய், நிருவிகற்பம் எய்த-நிர்விகற்ப நிஷ்டையை யடையவும், நிரந் தரமும்-சதாகாலமும், நின்னையே சிந்திக்க உன்னையே சிந்திக்கவும், நீ கொடுத்தாய் நீதயை செய்தாய், மோனு-மௌனாசாரியனே, நான் என்னை முழுதும் கொடுத்தேன்-நான் என்னை முற்றுங்கொடுத்தேன். எ-று.

என்னை முழுதுங் கொடுத்தேன் என்றது சிவபோதமிழந்து சிவபோத மாய் நிற்றலே. நிருவிகற்ப நிஷ்டையை யடையவும் உன்னையே நினைக்க வும் என்னுட லுயிர்களைக் கொடுத்தருளினை, அதற்குப் பிரதியாக என்னை யுனக்குக் கொடுத்தேன் என்பதாம்.

40 அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தாற்
கல்லு முருகாதோ கன்னெஞ்சே—பெரல்லாத
தப்புவழி யேனினைந்தாய் சந்ததமு நீயிறந்த
வெய்ப்பிலே யானந்த மே.

இ-ள். அல்லும் பகலும்-இரவும் பகலும், பேரன்புடனே தானிருந் தால-பேரன்புடனிருந்தால், கல்லும் உருகாதோ - கல்லும உருகிப் போ காதா, கல்நெஞ்சே-கல் மனமே, பெரல்லாத-தீமையான, தப்புவழி-தப்பு வழியை, என் நினைந்தாய் - ஏன் நினைந்தனை, சந்ததமும் - சதாகாலமும், நீ இறந்த எய்ப்பிலே - நீ யிறந்த ஓவாதிக்க நிலையிற்றனே, ஆனந்தம்-சுகமுண்டு. எ-று.

மனமே, அல்லும் பகலும் பேரன்போ டிருப்பின், கல்லுங் கரையும், அதைவிட்டுத் தீநெறியையே னினைந்தாய். நீ யிறந்துநின்ற ஓதிக்க நிலை யிற்றனே ஆனந்த முதிக்கும் என்பதாம்.

41 கொடுத்தேனே யென்னைக் கொடுத்தவுட னின்ப
மடுத்தேனே நீடுழி வாழ்நாளே—படுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே சன்மவல்ல
லிற்றேனே யேழை யடியேன்.

இ-ள். ஏழை அடியேன்-அறிவிலியாகிய அடியனேன், கொடுத்தேன் என்னை-என்னைக்கொடுத்தேன், கொடுத்தவுடன்-கொடுத்தவுடனே, இன்பம் மடுத்தேன் - இன்பத்தைப் பொருந்தினேன், நீடுழிவாழ்நாள் அடுத்தேன்-பல்லூழிக்காலம் வாழ்நாளடுத்தேன், பெற்றேன் - பெறவேண்டியதைப் பெற்றேன், பெற்றுப் பிழைத்தேன்-பெற்று உஜ்ஜீவித்தேன், சன்ம அல்லல் இற்றேன்-பிறவித்துன்பமற்றொழிந்தேன். எ-று.

ஏழையடியேன், என்னை யுனக்குக கொடுத்தவுடன் பிறவித்துன்ப மொழிந்தேன் என்பதாம.

42 பெற்றேரும் பிறவாமை பேசாமை யாயிருக்கக்
கற்றோ மெனவுரைக்கக் காரியமென்—சற்றேனு
நீக்கற்ற வின்ப நிலைபெருநாதி யேசற்று
வாக்கற்றுற் பேசுமோ வாய்

இ-ள். பிறவாமை பெற்றோரும் - பிறவாமையாகிய பெரும்பேற்றை யடைந்தோரும், பேசாமையா யிருக்ககற்றோரும் - மௌனமாயிருக்கக்கற்ற, என் உரைகள-என்றசொல்ல, காரியம் என காரியமென்ன, சற்றேனும்-சிறிதாயினும், நீக்கற்ற-பிரிவற்ற, இன்பநிலை பொருந்தி-சுகநிலையையடைந்து, ஏசற்று-பழியறற்று, வாகு அற்றால்-வார்த்தைக்கு மூல மற்றுப்போ, னால், வாய்பேசுமோ-வாயானது தானே பேசுமா. எ-று.

வார்த்தைக்கு மூலம் மனம். பிறவாமையையடைந்தோர் மௌனமா யிருக்கக்கற்றோமென்பதில் என்னபயன். அவருடைய நிலையையடைந்து அதிலழுந்திவிட்டால, வாய்பேசுமோ என்பதாம். "அறிந்ததலை வாயடங்குமவ் வளவே யன்றித் தெரிந்திடுமோ வீயே தெளி" என்றார் பிறரும.

43 காலன் றனையுதைத்தான் காமன தனையெரித்தான்
பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை—ஞாலமெச்சப்
பின்னே நடக்கவிட்டான் பேரருளோ நாடாதாக
கென்னே நடக்கை யினி

இள். காலன்தனை உதைத்தான் - யமனை யுதைத்தவனும். காமன் தனை எரித்தான் - மன்மதனை யெரித்தவனும், பாலன் பசிக்கு இரங்கி - பாலகனுடைய பசிகிரக்கமுற்று, பால் கடலை க்ஷீர சாகரத்தை, பின்னே நடக்கவிட்டான் - பின்னே செல்லவிட்டவனுமாகிய இறைவனது,

பேர் அருளே நாடாதார்க்கு - பெரிதாகிய அருளே விரும்பாதவர்க்கு, இனி என் நடக்கை-இனிவேறென்ன நல்லொழுக்கமுளது. எ-று.

பாலன என்றது உபமந்யுவை. இவர் கௌதமரிஷிக்குப் புதல்வர். 'பாலக ஞர்கன்று பாறகட லீந்திட்ட கோலசடையர்க்கே யுந்தீபற' என்றார் மேலோரும்.

44 விண்ணருவி மேனமேல் விளங்குவபோ லேயிரண்டு
கண்ணருவி வெள்ளமொடு கைகூப்பி த—தண்ணமிர்த
வெள்ளமே யானநத வெற்பே யெனத்தொழுவோர்
உள்ளமே ஞான வொளி.

இ-ள். விண அருவி மேல் மேல விளங்குவபோலே-ஆகாயப்பெருக்கு மேன்மேல் விளங்குவன போல, இரண்டு கண அருவி வெள்ளமொடு-இரண்டு கண்களில் அருவிப்பெருக்கு—ன், கை கூப்பி - கைகுவித்து, தண் அமிர்த வெள்ளமே-தண்ணிய அமுதப்பெருக்கே, ஆநந்த வெற்பே-ஆநந்தமலையே, என-என்று வாக்கினாற்சொல்லி, தொழுவோர் - காயத்தால் வணங்குவோர்களுடைய, உள்ளமே - மனமே, ஞான ஒளி - ஞானச் சுடராம். எ-று.

மழைத்தாரைபோல கண்ணீர்த்தாரை யொழுகக் கைகூப்பி நின்று, அமிர்தப்பிரவாஹமே, ஆநந்த மலையே என்று இறைவனை வணங்குவோர்களுடைய மனமே ஞானசுடராம் என்பது கருத்து.

45 பிள்ளை மதிச் செஞ்சடையான் பேசாப் பெருமையினன்
கள்ளவிழும் பூங்கொன்றைக் கண்ணியா—னுள்ளபடி
கல்லாலின் கீழிருந்து கற்பித்தா னேர்வசன
மெல்லாரு மீடேற வே.

இ-ள். பிள்ளை மதி-பாலசந்திரனை யணிந்த, செஞ்சடையான்-செஞ்சடையையுடையவன் எவன், பேசா பெருமையின்-புகழ்ந்து பேசுதற்கரிய பெருமையையுடையவன் எவன், கள் அவிழும்-தேனைஒழுகி மலர்கின்ற, கொன்றைப்பூ கண்ணியான் - கொன்றைமலர மாலையைதரித்தவன் எவன், (அவன) எல்லாரும் ஈடேறவே யாவரும கடைத்தேறும்பொருட்டாகவே, கல்லாலின் கீழ் இருந்து - கல்லாலி னிழலி லெழுந்தருளியிருந்து, உள்ள படி-யதார்த்தமாக, ஓர் வசனம் கற்பித்தான் ஒரு மொழியைக் கற்பித்தருளினன்- எ று.

சந்த்ரசேகரன், கல்லாலின்கீழ் தக்ஷிணமூர்த்தியா யெழுந்தருளி யிருந்து, யாவரு மீடேறும்படி ஒரு மொழியைச சொல்லாமற் சொல்லியருளினன் என்பதாம் சொல்லாமற் சொன்னமை 'பேசாப்பெருமையினன்' என்பதனாற் பெறப்பட்டது

46 புலனைந்துந் தானே பொருமயங்கிச் சிந்தை
யலமந் தழலு மடிமை—நலமிகுந்த
சித்தான மோன சிவனேநின் சேவடிக்கே
பித்தாலு முண்டோ பிறப்பு

இ-ள். புலன் ஐந்தும்-சப்தாதிவிடயங்களைந்தும், தாமே பொர-தாமே மிக்கு தாக்குதலால், சிந்தைமயங்கி - மனமயங்கி, அலமந்து உழலும்-மிகவும் சுழலப்பெற்ற, அடிமை-அடியேன், நலம் மிகுந்த - நன்மை மிகுந்த, சித்து ஆன - ஞானமயமான, மோன சிவனே - மௌனநிலையையுணர்த்து நின்ற சிவனே, நின் சேவடிக்கே-உன் திருவடிக்கே, பித்து ஆலும்-பித்தேறப்பெற்றால், பிறப்பு உண்டோ-பிறவியுண்டோ. எ-று.

இஃறவனே, உன் திருவடிக்கே பித்தாலும், பிறகு எனக்குப் பிறவியுண்டோ வென்பதாம்.

47 நிறைகுடந்தா னீர்கொளுமோ நிச்சயமா மோன
முறையுணர்ந்தார் யாதை முயல்வார்—பிறையணிந்த
மிக்ககை லாயமலை வித்தகனே வேதியனே
செக்கரணி மேனியனே செப்பு.

இ-ள். நிறைகுடம்-நிறைகுடமானது, நீர் கொளுமோ-நீரைக் கொள்ளுமோ, நிசயம் ஆம்-உறுதியாகிய, மோனமுறை உணர்ந்தார்-மௌனநிலையின் முறைமையை அறிந்தவர்கள், யாதை முயல்வார் - எதை முயல்வார்கள், பிறை அணிந்த-பிறையைத் தரித்த, மிக்க - மேலான, கைலாயமலை-கைலாயமலையின்கண் எழுந்தருளியிருக்கின்ற, வித்தகனே-ஞானநிறைவுள்ளவனே. வேதியனே-வேத ப்ரதிபாத்யனே, செக்கர் அணி மேனியனே-செம்மைநிறமுள்ள திருமேனியை யுடையானே, செப்பு-சொல்லு. எ-று.

சந்திரசேகரனுகிய கைலாசபதியே! நிறைகுடம் நீர் கொள்ளாதது போல, க்ருதக்ருதயராயிருப்பவர் வேறொன்றை முயலார் என்பதாம்.

48 துங்கமழு மானுடையாய் சூலப் படையுடையாய்
திங்களணி செஞ்சடையாய் சேவுடையாய்—மங்கையொரு
பாலுடையாய் செங்கட் பணியாயென் சென்னியின்மேற்
காலுடையாம் நீயே கதி.

இ-ள். துங்கம் - பரிசுத்தமான, மழுமான் உடையாய் - மழுவையு மானையும உடையவனே, சூலப்படை உடையாய் - சூலாயுதத்தை யுடையவனே, திங்கள் அணி சந்திரகண்டத்தையணிந்த, செஞ்சடையாய்-செஞ்சடையை யுடையானே, சே உடையாய் - இடபவாகனத்தை யுடையவ

னே, மங்கை-உமாதேவியை, ஒருபால் உடையாய் ஒரு பாகத்தில் உடையானே, செங்கண் பணியாய்-செவந்த கண்களையுடையசர்ப்பாபரணத்தையுடையவனே, என்சென்னியின்மேல்-என்சிரசின்மீது வைத்தருளிய, கால் உடையாய்-திருவடியையுடையனே, நீயே கதி-நீயேபுகலிடம். எ-று.

மழுமான் முதலியவற்றையுடையானே, நீயே அடியேனுக்குப் புகலிடம் என்பது கருத்து

49 இனிய கருணைமுகி லெம்பிரான் முக்கட்
கனியமிர்த வாரியின்பக் கட்டி—தனிமுதல்வ
னித்தன் பரம னிமலனிறை வாய்நிறைந்த
சுத்தனமக் கென்றுந் துணை

இ-ள். இனிய-இனிதான, கருணை முகில்-கருணை மழையைப்பொழிகின்ற மேகம், எம்பிரான்-எம்பெருமான், முக்கண் கனி-மூன்று கண்ணுள்ள கனி, அமிர்தவாரி-அமுதசாகரம், இன்பக்கட்டி-இன்பத்தைத் தருகின்ற கருப்புக்கட்டி, தனிமுதல்வன்-ஒப்பற்ற முதல்வன், நித்தன்-சாசுவதன், பரமன்-மேலானவன், நிமலன், நிறைவாய் நிறைந்த - பூர்ணமாக நிறைந்த, சுத்தன்-பரிசுத்தன், (இத்தன்மைகளையுடைய இறைவனே) நமக்கு-எங்களுக்கு, என்றும் துணை-எக்காலுந்துணையாகக்கடவான். எ-று.

கருணைவர்ஷம் பொழியு முக்கட்பிரானே நமக்கு எக்காலத்துந் துணையாயிருப்பவன் என்பதாம்.

50 நீதியாய்க் கல்லாலி னீழலின்கீ ழேபிருந்து
போதியா வுண்மையெலாம் போதித்தா—னேதில்
சனகாதி யாய தவத்தோர்க்கு ஞான
தினகரனு மௌன சிவன்.

இ-ள். ஞான தினகரன் ஆம் - ஞான சூரியனுமாய, மௌனசிவன்-மௌனநிலையையுணர்த்துஞ் சிவபிரான், நீதியாய்-நீதியை யுடையவனாகி, கல்லாலின்-கல்லாலமரத்தின், நீழலின் கீழே யிருந்து - நிழலிலெழுந்தருளியிருந்து, ஏதம் இல் - குற்றமில்லாத, சனகாதி ஆய தவத்தோர்க்கு-சனகாதிகளாய தபோதனர்கட்கு, போதியா-போதிக்கக்கூடாத, உண்மையெல்லாம் - யதார்த்தங்களையெல்லாம, போதித்தான் - போதித்தருளினான். எ-று.

எதனில் என்பது எதில் என நின்றது.

ஞானசூரியனாகிய சிவபெருமான் கல்லால நிழலிலிருந்து சனகாதியராகிய பெருந்தவத்தினர்க்கு, போதியாத வுண்மைப்பொருள்களை யெல்லாம் போதித்தருளினன் என்பதாம்.

51 தேகச் செயலுணர்ந் தெய்தையுட னேகுழையில்
யோகநிலை ஞானிகளுக் கொப்புவதோ—மோகநிலை
யல்லலிலே வாழ்வாரோ வப்பனே நீயற்ற
வெல்லையிலே சும்மா விரு

இ-ள். தேகசசெயல்தானும்-சரீரசசெய்கையும், சிந்தையுடனே குழைபில்-மனத்தோடொழிந்தால், யோகநிலை - யோகநிலையானது, ஞானிகளுக்கு ஒப்புவதோ-ஞானிகளுக்கு ஒததிருப்பதோ, (அவர்கள்) மோகநிலை-மோகநிலையாகிய, அல்லலிலே-துன்பத்தில், வாழவாரோ - வாழந்திருப்பாரோ, அப்பனே-அப்பா, நீ அற்ற எல்லையிலே-நீ யென்பதற்றஇடத்தில், சும்மா இரு-சும்மாவிருக்ககடவாய். எ-று.

மனமே, ஞானியர்க்கு யோகநிலை ஒவ்வுமோ, ஒவவாது ஆதலால், நீயிறந்த வெல்லையிலே சும்மாவிருக்கக்கடவை யென்பதாம்.

52 சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா யோகமினி யேனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண் டாங்கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ.

இ-ள். கன்ம நிட்டா-கர்மநிஷ்டையையுடையவனே, சிறுபிள்ளாய்-சிறுவனே, நீ-நீ, சும்மா இருக்க-சும்மாவிருக்கின். சுகம் உதயம் ஆகுமே சுகோதயமுண்டாகுமே, இம் மாயாயோகம் இனி யேன் அடா-இந்தமாயாகாரியமாகிய யோக மேதுக்கேடா, தம் அறிவின் சுட்டாலே ஆகுமோ-தம்முடைய அறிவின் சுட்டுதலாலே சுகோதயமுண்டாகுமோ, சொல்ல வேண்டாம் - அதைக்குறிதது வற்புறுத்திச சொல்ல வேண்டிற்றிலேம். எ-று.

கர்மநிஷ்டையையுடைய சிறுபிள்ளாய், அறிவினாற் சுட்டாது சும்மாவிருத்தின் சுகோதயமாமே, என் சுட்டியறின் றலைகிறுயென்பதாம்.

53 நீயற்ற வந்நிலையே நிட்டையதி னீயிலையோ
வாயற் றவனே மயங்காதே—போயற்
றிருந்தாலு நீபோகா யென்றுமுள்ளாய் சும்மா
வருந்தாதே யின்பமுண்டு வா.

இ-ள் நீ அற்ற-நீ யிறந்த, அந்நிலையே-அந்தநிலையே, நிட்டை-நிஷ்டை அதில்-அதில், நீயிலையோ - நீயில்லையோ, வாய் அற்றவனே - வாயில்லாத வனே, மயங்காதே-மயங்கவேண்டாம், போய் அற்று இருந்தாலும் - சென் றற்றிருப்பினும், நீ போகாய் - நீபோகமாட்டாய், என்றும் உள்ளாய் - என் றும் உளை, சும்மா வருந்தாதே-சும்மா வருத்தப்படாதே, இன்பம் உண்டு-சுகம் உண்டு, வா-வருவாயாக. எ-று.

வாயற்றவன்-மௌன நிலையுள்ளவன். நீயிறந்துநின்ற நிலையே நிஷ்டை, அதில் நீயுண்டு, தருந்தாதிரு, சுகமின்பமுண்டு, வருவாயாக என்பதாம்.

54 வாவாவென் றின்பம் வரவழைக்குங் கண்ணீரோ
டாவாவென் றேயழுத வப்பனே—நீவாடா
வெல்லா நமக்கெனவே யீந்தனையே யீந்தபடி
நில்லா யதுவே நிலை.

இ-ள் வாவாவென்று - வாவாவென்று, இன்பம் வரவழைக்கும் - சுக த்தை வருவிக்கின்ற, கண்ணீரோடு கண்ணீருடன், ஆவா என்று அழுத-ஐயோவென்றழுத, அப்பனே-அப்பா, நீ வாட-நீ வருவாயேடா, எல்லாம்-யாவும், நமக்கு எனவே ஈந்தனையே-நமக்கென்றே கொடுத்துவிட்டாயே, ஈந்தபடி-கொடுத்தபடி, நில்லாய்-நிற்பாயாக, அதுவே நிலை-அதுவே யுனக குறுதியான நிலை. எ-று.

இன்பத்தையுண்டாக்குங் கண்ணீரோடு நின்று ஆவாவென்றழுத அப்பனே, நீ வாடா, எல்லாப்பொருள்களையும் நமக்கென்றே கொடுத்தனை பன்றே, கொடுத்தபடியே அந்நிலையிற்றானே நிற்பாயாக என்பதாம்.

55 நில்லாப்பொருளை நினையாதே நின்னையுள்ளோர்
சொல்லாப் பொருட்டிரளைச் சொல்லாதே—கல்லாத
சிந்தை குழந்தைசுகஞ் சேரக் குருவருளால்
வந்தவழி நல்ல வழி

இ-ள். நில்லாப்பொருளை நினையாதே - நிலையில்லனவாகிய பொருள் களை நினைக்காதே, நின்னை உள்ளோர்-உன்னை யுள்ளிட்டோர், சொல்லா-சொல்லத்தக்கதாக, பொருள் திரளை சொல்லாதே-பொருட்டொகுதியைச சொல்லாதே, கல்லாத சிந்தைகுழைந்து - உறுதிப்பொருளைக், கல்லாத மனமானது உருகப்பெற்று, சுகம்சேர-சுகத்தையடைய, குருஅருளால்-அருளினறையின் கருணையால், வந்தவழி-வந்த நெறியே, நல்லவழி-நல்ல நெறியாகும். எ-று.

நிலையில்லாத பொருளை நினையாதே, உன்போலியர் சொல்லத்தகாத வார்த்தைகளைச சொல்லாதே, மனமுருகி இன்பத்தையடையும்படி, குரு வருளால் உண்டாகிய வழியே நல்வழியென்பதாம்.

56 வழியிதெதென்று மல்லா வழியிதென்றுஞ் சொல்லிற்
பழிபழியா நல்லருளாற் பார்த்தோர்—மொழியுனக்கே
யேற்றிருக்கச் சொன்னவன்றே யெங்கும் பெருவெளியாம்
பார்த்தவிட மெல்லாநீ பார்.

இ-ள். வழி இது என்றும்-இது நன்னெறியென்றும், அல்லா வழி இது வென்றும்-இது தீநெறியென்றும், சொல்லின்-சொன்னால், பழி பழியாம்-பழித்தற்குரிய பழியாகும், நல் அருளால் பார்த்து-மேன்மையான கருணை யால் நோக்கி, ஓர்மொழி-ஒருமொழியை, உனக்கு ஏற்றிருக்க - உனக்குப் பொருத்தமாயிருக்க, சொன்ன அன்றே-சொன்ன அன்றைக்கே, எங்கும் பெருவெளி ஆம்-எவ்விடத்தும் பெருவெளியாகும், பார்த்த இடம் எல் லாம் - முன்னே நீ பார்த்த இடங்களை யெல்லாம், நீபார் - இப்போது நீபார். எ-று.

உன்னைக் கிருபையால் நோக்கி ஒருமொழியைச சொன்னபோதே எங்கும பெருவெளியாகும், ஆதலால் நல்லவழியிது தீயவழி யிதுவெனல் தகுதியன்று என்பதாம்.

57 பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்
போலாருந் துறக்கை யரிதரிது—நேரே [போ
மனத்துறவு மப்படியே மாணு விவற்றி
லுனக்கிசைத வாறுன்றே யோர்.

இ-ள். பார் அனைத்தும்-பிரபஞ்சமெல்லாம், பொய்யெனவே-மித்தை யென்றே பட்டினத்துப் பிள்ளையைப்போல் - பட்டினத்தடிகள்போல, ஆரும்-எவரும், துறகைக-துறத்தல், அரிது அரிது-அருமை அருமை,நேரே நேராக, மனத்துறவும் அப்படியே-அகத்துறவு மப்படியே, மாணு-மாணவ கனே, இவற்றில் இவற்றுள், உனககு இசைந்த ஆறு ஒன்றே-உனக்கிசைந் தவா றொன்றனையே, ஓர்-ஆராய்ந்து கைக்கொள்வாயாக. எ று.

பட்டினத்துப்பிள்ளை அகத்துறவு புறத்துறவு என்னும் இரண்டினுஞ் சிறந்தவர், அவ்விரண்டனுள் உனக்கிசைந்ததாகிய ஒன்றனையே கைக் கொள்வாயாக என்பதாம். ஒன்று கைகூடின் மற்றொன்றும் கைகூடிற் றென்றதாயிற்று.

58 ஓராம லேயொருகா லுன்னும ளுள்ளொளியைப்
பாராம ளுள்ளபடி பார்த்திருந்தால்—வாராதோ
பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளத்
தத்திக் கரைபுரண்டு தான்.

இ-ள். ஓராமல்-ஆராயாமலும், ஒருகால் உன்னுமல்-ஒருகால் நினையாமலும், உள் ஒளியை - உள்ளொளியினை, பாராமல் - நோக்காமலும், உள்ளபடி பார்த்திருந்தால் - யதார்த்தமாக நோக்கிக்கொண்டிருந்தால், ஆனந்த வெள்ளம்-இன்பப்பெருக்கானது, தத்தி-தாவி, கரைபுரண்டு-கரைகடந்து எழுந்து-மேலெழுந்து, பத்துத்திசையும் பரந்து-பத்துத்திக்கினும் பரவி வாராதோ-வராதோ. எ-று.

ஒன்றனை யாராய்தல் முதலியவற்றைச் செய்யாது சும்மா விருந்தால் ஆனந்தம் தானே யுண்டாகும் என்பதாம்.

59 தானை தன்மைவந்து தாக்கிஞ லவ்விடத்தே
வானதி மாயை வழங்காவோ—ஞானமேகள்
உன்னுள்ளே தோன்ரு வுறவாகி நின்றதென
வென்னுள்ளே யென்று மிரு.

இ-ள். தான் ஆன தன்மைவந்து தாக்கினால்-தானுகிய தன்மைவந்து பொருந்தினால், அவ்விடத்தே-அவ்விடத்திற்ருனே, வானதிமாயை-ஆகாச முதலிய மாயாகாரியங்கள், வழங்காவோ-நடையாடாவோ, ஞானமே-ஞான வானே, கேள்-கேட்பாய், உன்னுள்ளே-உனகருள்ளே, தோன்ரு வுறவு ஆகி நின்றது என-தோன்ரு வுறவாய் நின்றதுபோல, என்னுள்ளே-எனக்குள்ளே, என்றும் இரு என்றும் சும்மா இருப்பாயாக. எ-று.

தான் என்னும் அகங்காரம் தலையெடுத்தால், பிருதிவியாதிமாயாகாரியங்கள் நடையாடும் ஆதலால் உன்னுள்ளே நானடங்கி யிருந்ததுபோல, என்னுளளே நீயடங்கியிரு என்பதாம்.

60 என்னையுன்னை யின்னதிது வென்னுமை னிற்குநிலை
தன்னையரு ளென்ற தருணத்தி—லன்னைபெற்ற
பிள்ளைக்குஞ் சொல்லாத பெற்றிகண்டா யையனே
யுள்ளத்தி னுள்ளே யுணர்.

இ-ள். ஐயனே - ஐயா, என்னை உன்னை - என்னையும் உன்னையும், இன்னது இது என்னுமல - இன்னதிதுவென்று சுட்டாமல், நிற்கும் நிலை தன்னை-நிற்கும் நிலையை, அருள் என்ற தருணத்தில்-அருள்செய்யவேண்டு மென்றசமயத்தில், அன்னை-தாயானவள், பெற்றபிள்ளைக்கும்-தான்பெற்ற

பிள்ளைக்கும், சொல்லாத-சொல்லக்கூடாத, பெற்றி-தன்மையை உள்ளத்தினுள்ளே-மனதுக்குள்ளே, உணர-அறிவாயாக.

என்னையும் உன்னையும் வேறுபடுத்துணராமல் நிற்கும் நிலையை யருள் செய்யவேண்டுமென்ற சமயத்தில், உண்டாகிய இன்பம், தாயானவள் தன் பெற்றபிள்ளைக்கும் சொல்லப்படாத தன்மைத்தென்பதாம்.

61 சொன்னவர்தா நிட்டை தொகுத்திரார் நிட்டையிலே
மன்னினவர் போதியார் மாளெனன்—றன்னுள்
விருப்பாகக் கைகாட்டி மிக்க வடநீழ
லிருப்பா னிருவிகற்பத் தே.

இ-ள். சொன்னவர்தாம் - பேசினவர்கள்தாம், நிட்டை தொகுத்து இரார் - நிட்டையில் தொகுக்கப்பட்டிருக்கமாட்டாகள், நிட்டையிலே மன்னினவர்-நிஷ்டையில் படிந்தவர்கள, போதியார்-போதிக்கமாட்டாகன், மா பெரிய, மௌனன் மௌனநிலையையுணர்த்து மிறைவன், தன்னுள விருப்பாக - தன்னுள்ளன்பு காரணமாக, கைகாட்டி - கைகாட்டாநின்று, மிக்க வடநீழல்-மேலான கல்லாலின் நீழலில், நிருவிகற்பதேயிருப்பான-நிருவிகற்ப சமாதியி லிருப்பன். எ-று.

பேசுவோர நிஷ்டையில் நிலையார், நிஷ்டாபரர் பேசார,' இதற்குச சாக்ஷியாக, மஹாமௌநதேசிகன் அருத்தார்மேல் விருப்பத்தோடு கை காட்டி வடநிழலி லிருகின்றன், எனபதாம்.

62 இரத நிருவிகற்பத் தெற்றை யிருக்கைநிட்டை
சிற்றதற் றேறாய் செகமீனத்தும்—வரதனிதாடாப்
பாடுகெட வன்றோவார் பாத்திரத்துக் காடல்லா
லாடுவதே ஞட்டி மவன்.

இ-ள். இரத நிருவிகற்பத்து - இரத நிருவிகற்ப சமாதியில், எற்றை நிட்டை இருக்க எமது தற்றை நிஷ்டைகூடியிருக்க, நீ சிறுதை தேறாய்-நீமனந்தெளியாய், செகம அனைத்தும் - பிர ஞ்சமெல்லாம், வரத - உணடான, தொடர்ப்பாடு - சமபாதமானது, கெட அன்றோ-நசித்தற்பொருட்டல்லவோ, ஓர் பாத்திரத்து ஆடல்-ஒரு பாத்திரத்துக்காடுதல், அல்லால்-அல்லாக்கால், ஆடுவது என்-ஆடுவதுயாதகுகு, அவன் ஆட்டும்-அவனாட்டுகிறன். எ-று.

63 அவனே பாழு மவனே குருவு
மவனே யகில மனைத்து—மவனேதா
மானவமே சொன்ன லவமே குருவெனக்கு
ஞானவனுய் நிற்பதெந்த நாள்.

இ-ள். அவனே பரமும்-பரமு மவனே, குருவும் அவனே-ஆசாரியனும் அவனே, அகிலம அனைத்தும் அவனே-பிரபஞ்சமெல்லாம் அவனே, அவனே தாம ஆனவரே - அவனே தாமானவராகமே, சொன்னால்-சொல்லுமிடத்து, அவரே-அவர்களே, எனககு குரு - எனக்கு ஆசாரிபா, நான் அவன் ஆய் நிற்பது நான் அவனாகி நிற்குங்காலம, எந்த நாள-எந்தக்காலம். எ-று.

64 நாளவந்கள் போகாம னூடோறு நந்தமையே
யாளவந்தா தாளின்கீ ழாட்புகுந்தாய—மீளவுன்னைக்
காட்டாம னிறகுங் கருத்தறிந்தா னெஞ்சேயுன்
னுட்டானு மோபில்லை யால்.

இ-ள். நாள அவங்கள் போகாமல் - நாட்கள் வீண்காரியங்களிற் கழியாமல, நாள்தோறும - தினந்தோறும், நம் தமையே-நம்மையே, ஆளவந்தார்-ஆளவந்த அருளிறையினது, தாளின்கீழ-திருவடியின்கீழ், ஆட் புகுந்தாய்-அடிமைபுகுந்தனே, மீள-மறுபடியும், உனனே காட்டாமல் நிற்கும் கருதது அறிந்தால்-உன்னைத் தோற்றுவியாமல் நிற்குங் கருத்தையறிந்தனே யாயின், நெஞ்சே-மனமே, நான் உன் ஆள்தான-நான் உன்னடிமைதான், ஐயம் இல்லை-சந்தேகமில்லை. எ-று.

மனமே, நமது வாணாள் வீணளாய்க் கழியாமல் நம்மை யாட்கொளவந்த அருளிறையின் திருவடிகளீழ் அடிமை புகுந்தாய், இனி உன்னைக் காட்டாமல் நிற்குங கருத்தையும் அறிவையாயின, நான் உன்னடிமையே, இதிற் சந்தேகமில்லை யென்பதாம்.

65 யான்ரு னெனலறலே யுன்பகிட்டை யென்றருணைக்
கோன்ரு னுரைத்தமொழி கொள்ளாயோ—தோன்றி
யிழுக்கடித்தாய் நெஞ்சேநீ யென்கலைகள் சோர
வழுக்கடிக்கும் வண்ணார்போ லாய்.

இ-ள். யான்தான் எனல் அறலே - யான்தான் என்பது அற்றொழிகையே, இன்பகிட்டை என்று - சுகவிஷ்டையென்று, அருணைக்கோன் தான் உரைத்தமொழி - அருணகிரிநாதன் சொன்னசொல்லை, கொள்ளாயோ-உட்கொள்ளாயோ, தோன்றி-உண்டாகி, நெஞ்சே-மனமே, என் கலைகள் சோர-என் கலைகள் சோரும்படி, அழுக்கடிக்கும்- அழுக்கொழிக்க அடிக்கின்ற, வண்ணார்போலாய் வண்ணரையொத்து, நீ இழுக்கடித்தாய்-நீ என்னை யிழுக்கடித்தனை. எ-று.

மனமே, யான்தானென்ப தற்றிருந்தலே சுகவிஷ்டை யென்று அருணகிரிநாதர் அருளிசெயத மொழியைக் கொள்ளாயோ, வண்ணார்

போன்று என்கலைகள் சோர இழுக்கடித்தாய் என்பதாம் கலை - ஆடை, நூலறிவு.

66 எங்குஞ் சிவமே யிரண்டற்று நிற்கினெஞ்சே
தங்குஞ் சுகநீ சலியாதே—யங்கிங்கென்
றெண்ணுதே பாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணுதே யானுன் பரம்.

இ-ள். இரண்டு அற்று நிற்கின்-இரண்டற்றி நின்றால், எங்கும் சிவமே-சிவவிடத்துஞ் சிவசொரூபமே, நெஞ்சே-மனமே, சுகம்தங்கும்-இன்பந்தங்கும், நீசலியாதே நீ சலிக்காதே, அங்கு இங்கு என்று எண்ணுதே - அவவிடத் துள்ளது இவவிடத் தில்லையென்று நினையாதே, பாழில்-வீணாக, இறந்து பிறந்து-இறந்தும் பிறந்தும், உழலப்பண்ணுதே - உழலசெய்யாதே, யான் உன்பரம்-நான் உன்னடைக்கலம் எ-று.

மனமே, எவ்விடத்தினும் வியாபித்து நிற்பது சிவசொரூபமே, நமக்குச்சுகம் வாய்க்கும், நீ சலிக்கவேண்டாம், அங்குண்டு இங்கில்லையென்று நினைக்காதே, இறந்தும் பிறந்தும் உழலும் படிப்பண்ண வேண்டாம், நான உன் அடைக்கலம் என்பதாம்.

67 மெய்யைப்பொய் யென்றிடவு மெய்யனையாய் பொய்ந்நெ
ஞ்சே, பொய்யைத்தான் மெய்யெனவும் போகுமோ—
வையமறத், தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையே
லானந்த, மென்மயமு நின்மயமு மே

இ-ள். மெய்யை பொய்யென்றிடவும்-சரீரத்தைப் பொய்யென்றுநான் சொல்லவும், மெய் அனையா - மெய்யைப் பொருந்தாத, பொய் நெஞ்சே-பொய் மனமே, பொய்யைத்தான் - பொய்யைத்தானே, மெய்யெனவும் போகுமோ-மெய்யென்று சொல்லவுந் தகுமோ, ஐயம் அற-சந்தேகமில்லாமல், தன்மயத்தை - தண்மயப் பொருளை, மெய்யெனவே சார்ந்தனையேல்-மெய்யென்றே யடைவாயானால், என்மயமும் நின்மயமுமே என்னுருவும் உன்னுருவுமே, ஆனந்தம்-சுகரூபமாம். எ-று.

மனமே, மெய்யைப் பொய்யென்றும் பொய்யை மெய்யென்றும் சொல்லத்தகுமோ, சந்தேகம் ஒழியும் வண்ணம், தன்மயத்தை மெய்யென்று துணிந்து அதனை யடைந்தனையாயின், என்னுருவமும் உன்னுருவமும் ஆனந்த வுருவமேயாம் என்பதாம்.

68 பூங்கா வனநிழலும் புத்தமுதுஞ் சாந்தபதம்
வாங்காத வானநத மாமழையு —நீங்காவாஞ்
சொல்லிறந்து மாண்டவர்போற் றாமௌன பூமியினு
னில்லையென நின்ற விடம்.

இ-ள். சொல் இறந்த மாண்டவர்போல்-சொல்லற்று மாண்டவர் போல, தூ-பரிசுத்தமாகிய, மௌனபூமியில்-மௌன நிலயத்தில், நான் இல்லையென-நானில்லையென்று, நின்ற இடம்-நின்ற விடத்தில், பூங்கா வன நிழலும்-கற்பகப் பூங்காவனத்தின நிழலும், புதமுதும்-புதிய அமிர் தமும், சாந்தபதம் வாங்காத-சாந்தசப்தம நீங்காத, ஆனந்தமாமழையும்-பேரின்ப மழையும், நீங்கா ஆம்-நீங்காதிருப்பனவாம். எ-று.

நான் என்பதற்றுமௌனபூமியில் நின்றவர்களுக்குஇந்திரபதமும் முத்தியும் வாயக்குமென்பது கருத்து.

69 இடங்நான நல்லபொரு ளின்பமெனக் கேவ
லடங்காக் கருவியனைத்து—முடனுதவ
மந்தார தாருவென வந்து மவுனகுரு
தந்தானோர் சொற்கொண்டு தான்.

இ-ள். எனக்கு இடம்கானம்-எனக்கு இடம் காடாகவும், நல்ல-நல்லி னவாகிய, பொருள் இன்பம எவல்-பொருள் சுகம் ஏவல் (இவைகள்),அட ங்கா-அடங்காத, கருவி அனைத்தும்-கருவிக ளெல்லாமுமாகவும், உடன் உதவ-உடனே யருளுதற்காக, மவுனகுரு-மௌனகுருவானவன், மந்தார தாரு என வந்து-மந்தார விருக்ஷத்தைப் போலவந்து, ஓர் சொல்கொண்டு தான்-ஒருமொழியைக் கொண்டே, தந்தான்-தந்தருளினன். எ-று.

மௌனகுருவானவர் எழுந்தருளி, எனக்கு இடம் பொருளேவல்களைக் கிருபை செய்தார் என்பது கருத்து. மந்தாரம்-பஞ்ச தருக்களிலொன்று. "அணிபடையோர் நண்ணெரு நாலொன்பதாமவ சேவலு நண்ணும்" என்ரூர் பட்டணத்தடிகளும்.

70 தானந் தவஞானஞ் சாற்றரிய சித்திமுத்தி
யானவையெல் லாந்தாமே யாகுமே—மோனகுரு
சொன்னவொரு சொல்லாற் சுகமா யிருமனமே
யின்ன மயக்கமுனக் கேன்.

இ-ள். தானம்-கொடையும், தவம்-தவமும், ஞானம் ஞானமும்.சாற்று அரிய-சொல்லுதலரிய, சித்தி முத்தி ஆனவை-சித்திமுக்திகளானவைகளு மாகிய, எல்லாம்-யாவும், தாமே ஆகும - தாமே யுண்டாம், மோனகுரு சொன்ன-மௌன குருசொல்லிய, ஒரு சொல்லால்-ஒரு சொல்லினல், மனமே-நெஞ்சே, சுகமாய் இரு-சுகமாயிரு, இன்னம்-இன்னமும், உனக்கு-உனக்கு, மயக்கம் என் மயக்கம் யாதுக்கு. எ-று.

மனமே, மௌனகுரு சொன்ன ஒருமொழியைக் கொண்டு சும்மாஇரு ப்பையாயின் தானம் தவம் முதலிய எல்லாம் உனக்குண்டாம் என்பது கருத்து.

71 உன்னை யுடலை யுறுபொருளைத் தாவெனவே
யென்னை யடிமைக ளிருத்தினன்—சொன்னவொரு
சொல்லை மறவாமற் றோய்ந்தாலொ ருசெயுன்னு
லில்லை பிறப்பதெனக் கே

இ-ள் உன்னை-ஆவியாகிய வுன்னையும், உடலை-உடலையும், உறுபொருளை இந்த ஆவியாக் கைகட்கு மறுமை யிம்மைகட்குவேண்டுமெனகைக் கோடற்குரிய பொருளையும், தா என - தாவென்றேற் றுக்கொணடு, என்னை-என்னை, அடிமைகளு இருத்தினன் - தொண்டுக்காக வைத்துக் கொண்ட அருளிறை சொன்ன ஒருசொல்லை-சொல்லிய ஒருமொழியை, மறவாமல் தோய்ந்தால்-மறவாது நுசந்திப்பை யாலல், நெஞ்சே-மனமே, உன்னுல்-உன்னுலே, எனக்கு-எனக்கு, பிறப்பது இல்லை-பிறத்தற்றொழில் இல்லை. எ-று

நெஞ்சமே, உடல்பொரு ளாவிகளை யேற்றுக்கொணடு என்னை யடிமைகொண்ட அருளிறையாவன் சொன்ன வொருமொழியை மறவாது நுசந்திப்பையாயின், உன்னுல் எனக்குப் பிறக்குந் தொழிலொழிவும் என்பதாம்.

72 எனச்கு முனக்கு முறவில்லை யெனத்தேர்ந்து
நினைக்க வரிதான வின்பநிட்டை—தனைக்கொடுத்தே
யாசான் மவுனி யளிதாவெனஞ் சேயுனையோர்
காசா மதியேனுன் கான்.

இ-ள். எனகும் உனக்கும்-எனக்கும் உனக்கும், உறவு இல்லையென-உறவாந்தன்மை யில்லையென்று, தேர்ந்து-தெளிந்து, நினைக்க அரிது ஆன-நினைத்தற்கரிதாகிய, இன்ப நிட்டைதனை - சுகநிஷ்டையை, ஆசான் மௌனி-மௌனகுருவானவர், கொடுத்து அளித்தான் கொடுத்தருளினுன், (ஆதலால்) நெஞ்சே-மனமே, உன்னை-உன்னை, நான்-நான், ஓர்காசு ஆமதியேன் ஒருகாசாக மதிக்கமாட்டேன். எ று.

நெஞ்சே, எனக்கும் உனகும் உறவாந் தன்மையில்லையென்றுநினைத்தற்கரிய சுகநிஷ்டையை மௌனகுரு எனக்குக் கிருபைசெய்தார் ஆதலால், உன்னை ஒருகாசாக மதிக்கமாட்டேன் என்பதாம்.

73 ஆனந்த மோனகுரு வாமெனவே யென்னறிவின்
மோனந் தனக்கிசைய மூற்றியதால்—நீறணுந்து
சொல்லெல்லா மோனந் தொழிலா கியுமோன
மெல்லாநன் மோன வடிவே.

இ-ள் மோனகுரு - மௌன குருவானவர், ஆனந்தம் ஆம் எனவே - ஆனந்த முண்டாமென்ற மாத்திரையானே, என் அறிவில்-என்னறி

வினிடத்து மோனந்தனக்கு இசைய-மௌனநிலைக் கிணங்க, முற்றியது-முடிந்தது, (என்னெனின்) தேன உரது சொல்லெல்லாம மோனம தேன் போல ருசிகஇற சொறகளெல்லாம மோனரூபமே, தொழிலாதியும் மோனம - செயல் முதலானவைகளும மோன ரூபமே, எல்லாம் - மற்றுள்ளனயாவும், மோனவடிவே-மோன ரூபமே. எ-று.

மௌன குருவானவர், என்னறிவுக் கிணஙகச சுகமுண்டாமென்று சொல்லி அவ்வாறே முடிவுபெற்றமையால், என்சொல் முதலிய யாவும் மௌன ரூபமேயாயின என்பதாம்.

74 எல்லாமே மோனநிறை வெய்துதலா லெவ்விடத்து
நல்லார்கண் மோனநிலை நாடினர்—பொலலாத
நானெனவிங் கொன்றை நடுவே முளைக்கவிட்டிங்
கேனலைநதேன் மோன குருவே.

இ-ள். எல்லாமே - எல்லாப் பொருள்களுமே, மோன நிறைவு எய்துதலால் - மௌன பூர்த்தியை யடைதலால், நல்லார்கள் - நல்லவர்கள், எவ்விடத்தும்-எவ்விடத்தினும், மோனநிலை நாடினர் - மௌனநிலையை விரும்பினர்கள், பொலலாத நான என - பொல்லாத நானென்று, இங்கு - இவ்விடத்து, ஒனறை-ஒன்றினை, நடுவே முளைக்கவிட்டு - இடையே முளைக்கவிட்டு இடையே முளைக்கவிட்டு, இங்கு - இவ்வுலகில், என் அலைந்தேன்-யாதுகாரணமாகத திரிந்தேன், மோனகுருவே-மௌன குருவே. எ-று.

மௌனகுருவே, நல்லோர்கள் எல்லாப் பொருள்களும் மௌனபூர்த்தியை யடைதலால், எவ்விடத்தும் மௌன நிலையையே சிறந்ததாக நாடினர்கள், நானெனறுவனும் நான் என்றகஙகரித்து எனதிரிதபயனிலியானேன் என்பதாம்.

75 மோன குருவளித்த மோனமே யானந்த
ஞான வருளுமது நானும—வானதி
னின்ற நிலையுமது நெஞ்சப் பிறபபுமது
வென்றறிந்தே னைனந்த மே.

இ-ள். மோனகுரு அளிதத - மௌனகுரு அருளிசெய்த, மோனமே-மௌன நிலையே, ஆனந்தம் - ஆனந்தமாகும், (என்னெனின்) ஞான அருளும் அது - ஞானததைத் தருகின்ற திருவருளு மதுவே, நானும அதுநானும் அதுவே, வான் நிகின்ற நிலையும் அது - ஆகாயமுதலியவை நிற்றற்கிடமாயிருப்பதும் அதுவே, நெஞ்சப்பிறப்பும அது மனம் பிறத்தற் கிடமாயிருப்பதும அதுவே, என்று அறிந்தேன் எனறுணர்ந்தேன், (உணர்ந்தபின்) ஆனந்தமே எல்லாம் ஆனத ரூபமாகவே தோன்றுகின்றன. எ-று.

மௌனகுரு பிரசாதித்த மௌன நிலையே சுகரூபமாகும், என்னை னின், ஞானவருளும், அதனை யடைதற்குரிய நானும், ஆகாய முதலியவை நிற்பதற்கிடமும், மனப்பிறப்புக்குக் காரணமாயிருப்பதுவும் அதுவே யாத லால் என்பது கருத்து.

76 அறிந்த வறிவெல்லா மறிவன்றி யில்லை
மறிந்த மனமற்ற மவுனஞ்—செறிந்திடவே
நாட்டினு ளூந்த நாட்டிற் குடிவாழ்க்கை
கூட்டினன் மோன குரு

இ-ள். அறிந்த அறிவு எல்லாம் - அறியப்பட்ட அறிபொருள்களெல் லாம், அறிவு அன்றிஇல்லை - அறிவையன்றி வேறுகவில்லை, மறிந்த-திரும் பின, மனம் அற்ற - மனமிறந்த, மவுனம் - மௌன நிலையானது, செறிந் திட - பொருந்த, மோனகுரு - மௌன குருவானவன், நாட்டினுள் - என் மனத்தினிலேபெறச செய்தான், ஆனந்த நாட்டில் - இன்பமென்னும் நாட் டின்கண், வாழ்க்கைகுடி - வாழ்சிக் குடியாக, கூட்டினன் என்னைசேர்த் தான். எ-று.

மௌன குருவானவர் என்னை ஆனந்த நாட்டில் குடித்தனக் காரனாக செய்துவிட்டார், இனி நானறிந்த பொருள்களெல்லாம் என்னறிவினிடத் தனவே யென்பதாம்.

77 குருவாகித் தண்ணருளைக் கூறுமுன்னே மோன
வுருநீ டுயிர்பொருளு மொக்கத்—தருதியென
வாங்கினையே வேறுமுண்மை வைத்திடவுங் கேட்டிடவு
மீங்கொருவ ருண்டோ வினி.

இ-ள். குரு ஆகி - ஆசாரியனாகி, தண்ணருளைக் கூறுமுன்னே-தட்ப மாகிய அருணிலையைச சொலவதற்கு முனனே, மோன - மௌனகுருவே, உரு-உடலையும் நீடு உயிர் - சாசுவதமான வுயிரையும், பொருளும் - பொரு ளையும், ஒக்க - ஒருசேர, தருதி என - தருவாயென்று, வாங்கினையே-வாங் கிக்கொண்டனையே, வேறும் - மற்றும், உண்மை வைத்திடவும - உண்மை யைப் போதிக்கவும், கேட்டிடவும்-கேட்கவும், ஈங்கு இவ்விடத்தில், இனி ஒருவர் உண்டோ-இனி யொருவர உளரோ. எ-று.

மௌன குருவே, நீ எனக்கு ஆசாரியனாகிவந்து அருணிலையைப் போ திக்கு முன்பே, உடல் பொருளாவிகளோடு தாவென்று வாங்கிக் கொண்ட னையே, இனி உண்மையைச சொல்லவும் என்னிடத்துக் கேட்டுவாங்கவும் இவ்வுலகத்தில் ஒருவர் உளரோ என்பதாம்.

78 இனிய கருப்புவட்டை யென்னுளி லிட்டா
னனியிரத மாறுதி நானுங்—தனியிருக்கப்

பெற்றிலேன் மோனம் பிறந்தவன்றே மோனமல்லாற்
கற்றிலே னேதும் கதி.

இள் இனிய-இனியதாகி, ருப்புவட்டை - கருப்பு வெல்லத்தை என் நாவில் இட்டால்-என்நாவில் வைத்தால், நனி-மிகவும், இரதம்-இரதமானது, மாறு உ-நீங்காது, மாறுபடாதும், தனியிருநுக மோனம் பெற்றிலேன் - தனிமையாயிருக்க மோனத்தைப் பெற்றிலேன், பிறந்த அன்றே ஜனித்த அன்றே, மோனம் அல்லால்-மோனமல்லது, ஏதும்-யாதும், கதி புகலாதற்குரியதை, கற்றிலேன்-கற்றேனில்லை எ-று.

79 ஏதுக்குஞ் சும்மா விருநீ யெனவுரைத்த
சூதுக்கோ தோன்றுத் துணையாகிப்—போதித்து
நின்றதற்கோ வென்னையா நீக்கிப் பிரியாமற்
கொன்றதற்கோ பேசாக் குறி

இ-ள். ஏதுக்கும்-யாதுக்கும், நீசும்மா இரு எனவுரைத்த-நீ சும்மா இரு வென்று சொன்ன, சூதுக்கோ - வஞ்சனைகோ, தோன்றுத் துணை ஆகி போதித்து நின்றதற்கோ-தோன்றுத துணையாய் போதித்து நின்றதற்கோ, என்னையா - என்னையனே, நீக்கி-நீங்கச்செய்து, பிரியாமல - பிரிகாமல், கொன்றதற்கோ-கொன்றதறுதற்கோ, பேசாகுறி-பேசாதிருக்கு மடையாளம். எ-று.

80 குறியுங் குணமுமறக் கூடாத கூட்டத்
தறிவறிவாய் நின்றுவிட வாங்கே—பிறிவறவு
சும்மா விருத்திச் சுகங்கொடுத்த மோன நின்பாற்
கைம்மாறு நாளெழுதல் காண்.

இ-ள். குறியும்-அடையாளமும், குணமும்-குணமும், அற இல்லாமல், கூடாத கூட்டத்து-கூடாத கூட்டத்தில், அறிவு அறிவு ஆய நின்றுவிட-என்னறிவானது அறிவுருவாகவே நின்றுவிடவே, ஆங்கே-அப்பொழுதே, பிறிவு அறவும்-நீக்கமறவும், சும்மா இருத்தி-சும்மா இருக்கச்செய்து, சுகம் கொடுத்த-இன்பத்தை - தந்த, மோன-மௌனகுருவே, நின்பால்-உன்னிடத்து, கைம்மாறு-நான் செய்யவேண்டிய பிரதிபகாரம், நான் எழுதல்-நாளெழுதலாம். எ-று.

குறிகுணங்களில்லாமல், கூடாத கூட்டாகிய என் சீவபோதம் உன் சிவபோதமாய் விட்டதாதலின், யானையாகிய சும்மா இருக்கச் செய்து இன்பத்தைத் தந்தருளின மௌனகுருவே, நான் என்பது அறவெழுதலே உனக்கு நான செய்தறுரிய கைமமாறும் என்பது கருத்து.

81 நான்று னெனுமயக்க நண்ணுறுகா லென்னுரிலை
வான்று னெனநிறைய மாட்டாய்நீ—யூன்றுமல்

வைத்தமவு னத்தாலே மாயை மணிமிற்து
துய்த்து விடு ஞான சுகமே.

இ-ள். மானை நான் என்னும் மயக்கம் கண் ணுடையால்-நான் தான் என் கிற மயக்கம் பொருந்தியிடாது, என் ஞானை-எனது பிரணமாக, வான் என-ஆகாயத்தைப்போல, நீ மனை யாட்டாய் - நீ பூரணமாக மாட்டாய், ஊனை முமல வைத்த-ஒன்றிலும் பதியாதவாறு, மவுன தாலே - மௌன நிலையாலே, மாயைமனம்-மாயா ரூபமாகிய மனமே, நிற்றல் - நீ ஒடுங்கி. ஞானசுகம் துய்த்தறவிடு-ஞானாகாரத்தை யடைவி. எ-று.

மனமே, நான் தான் என்கிற மயக்கத்தைப் பொருந்தினையாயின் நீ பூர்ணமாக மாட்டாய், நீயொன்றினும் பதியாமல் அருவில்லாத மௌன நிலையிலே ஒடுங்கி ஞானாகாரத்தை யடைவிப்பாயாக என்பதாம்.

82 ஞானநெறிக் கேற்றகுரு கண்ணிய சித்திமுத்தி
தானமு தருமந தழைத்தகுரு—மானமொடு
தாயினையும் வந்தென்னைத் தந்தகுரு வெவ்விதமை
நேயமில னென வாழுங் குரு

இ-ள். ஞான நெறிக்கு-ஞான மார்க்கத்துக்கு, ஏற்ற குரு தகுதியாகிய குருவும், கண் ணிய-பொருந்துதற்கரிய, சித்தி முத்தி-சித்தி முத்திகளும், தானம் தருமம்-தான தர்மங்களும், தழைத்த குரு-செழித்த குருவும், மான மொடு-பெருமையோடு, தாயினும் வந்த - தாய்போலவும் வந்து, என் னைத் தந்தகுரு-என்னை ஈன்றகுருவும் (யாமெனின்), என நின்றை - என் மனமே, நேயில் மன-திருவருளாகிய வாக்கை, வாழுமகுரு-வாழ்கின்ற மௌன குருவேயாம். எ-று.

மௌன குருவே ஞானமார்க்கத்துக்குத் தக்கருவும், சித்தி முத்தி களை யடைதற்குரிய குருவும் தான தருமங்கள் செழித்தற் கிடமா யிருக்கும் குருவும் தாய்போல் வந்தெடுத்தருளி எனை ஈன்ற குருவும் ஆவன் என்பதாம்.

83 சித்தாடு சடமுஞ் சிவத்தைவிட் டில்லெனிற்
றித்தர்ப் பரமகுரு நேசத்தாற்—சுத்தநிலை
பெற்றேமே கெடுமோ பெரும்பயிரைச் சாரவரம்பு
கற்றே புகுமே மோனக் கரு.

இ-ள். பெருமை மனமே, சித்தும் சடமும் - சித்துப்பொருளும் சடப் பொருளும், சிவத்தைவிட்-சிவத்தையன்றி, இல்லை யென்ற-இல்லையென்று சொன்ன, நித்தன் - நித்தியருகிய, பரமகுரு நேசத்தால் - பரமாசாரி யனது நேசத்தினால், சுத்தநிலை பெற்றோம்-பரிசுத்தமான நிலையையடைந்

தோம், பெரும்பிறவி சாராமல்-பெரும்பிறவியைச் சேராமல், மோனக்கரு கற்றோம்-மௌன நிலையாகிய வித்தையைக் கற்றுக்கொண்டோம். எ-று.

சித்துப்பொருள்-உயிருள் பொருள், சடப்பொருள்-உயிரில் பொருள். மனமே, சித்துப்பொருளும் சடப்பொருளும் சிவத்தையன்றி வேறாக வில்லையென்று சொன்ன குருவிசுவாசத்தால் சுத்தநிலையை யடைந்தோம், பிறவியைச் சேராதவண்ணம் மௌனவித்தையைக் கற்றோம் என்பதாம்.

எசற்றவத்தில்.

1 எசற்ற வத்திலே யெந்தைபரி பூரணமாய்
மாசற்ற வானந்த வாரி வழங்கிடுமே
பூசற் சுழல்போ லுலகெறி வாசனையாற்
பாசத்துட் செல்லாதே பல்காலும் பாழ்நெஞ்சே.

இள். எசு அற்ற-பழிப்பில்லாத, அத்திலையே - அந்த மோனநிலையிலேயே, எந்தை-எமது பரமபிதா, பரிபூரணமாய் - பரிபூரணமாகி, மாசு அற்ற-குற்றமில்லாத, ஆனந்தவாரி வழங்கிடும்-இன்பப் பெருக்கைத் தருகின்றவன், பூசல் சுழல்போல்-ஊசற் கயிற்றின் நிலையில்லாமைபோல, உலகெறி வாசனையால்-பிரபஞ்ச மார்க்கத்தின் வாசனையினால், பல்காலும்-பலதரமும், பாசத்துள் செல்லாதே-பாசத்தினுட் புகாதே, பாழ் நெஞ்சே-பாழான மனமே. எ-று.

எசறவு-ஒடுக்கம். எசற்ற அத்திலை-கருவிகளொடுங்கப்பெற்ற அந்த மோனநிலை. பழிப்பு - கருவிகளோடு கூடியின்ற தனுகரணாதிய நிலைமை. மனமே, மோனநிலையிலிருந்தால் இறைவன் இன்பத்தைத் தருவன், ஆதலால், இதைவிடுத்துப் பிரபஞ்சமார்க்கத்திற் செல்லாதே யென்பதாம்.

2 பாழாகி யண்டப் பரப்பையெல்லாம் வாய்மடுத்து
மாழாழி யின்பத் தழுந்தப் படியாயோ [ல்
தாழாயோ வெந்தையருட் டாட்கிழ்க்கெஞ்சே யெனைப்போ
வாழாது வாழ்ந்தழிபா வண்ண மிருப்பாயே.

இ-ள். பாழாகி-பாழ்பட்டு, அண்டப் பரப்பை யெல்லாம்-மேலான விஸ்தீர்ணத்தை யெல்லாம், வாய் மடுத்தும் உட் கொண்டும். ஆழ்-ஆழ்ந்த, ஆழி இன்பத்து - இன்பக்கடலில், அழுந்த - ஆழ்க, படியாயோ - கல்லாயோ, நெஞ்சே-மனமே, எந்தை-எமது பரம பிதாவின், அருள் தாள் கீழ்-திருவருளுருவாகிய திருவடியின் கீழ், தாழாயோ-வணங்காயோ, (அப்படித் தாழ்வை யாயின்), என்னைப்போல-என்னைப்போல, வாழாது வாழ்ந்து-

வாழாமல் வாழ்ந்து, அழியா வண்ணம் இருப்பாய்-அழியாம லிருக்கக் கட வாய். எ-று.

மனமே, இன்பக்கடலி லழுந்தக்கல், இறைவனது திருவடியை வண கு, இவ்வாறு செவ்வையாயின், என்றும் அழியாநிலையி லிருக்கக்கடவை யென்பதாம்.

3 இருப்பா யிருந்திடப்பே ரின்பவெளிக் கேகமக்குக்
குருப்பார்வை யல்லாமற் கூடக் கிடைத்திடுமோ
வருட்பாய் நமக்காக வாளவந்தார் பொன்னடிக்கீழ்
மருட்பேயர் போலிருக்க வாகண்டாய் வஞ்சநெஞ்சே.

இ-ள். இருப்பாய்-இருப்பாயாக, இருந்திட - இருந்திதற்கு, நமக்கு-நீங்கட்கு, குருப்பார்வை யல்லாமல்-குரு கடாக்ஷ நிலலாமல், பேரின்ப வெளிக்கு கூட கிடைத்திடுமோ-பேராநந்த வெளியைப் பொருந்தக்கிடை க்குமோ, நமக்காக-நம்பொருட்டு, அருள்பாய்-அருளாவிரித்து, ஆளவந்தார்-நம்மைத் தடுத்தாட்கொளளவந்த இறைவரது, பொன் அடிக்கீழ்-திருவடி யின் கீழ், மருள்-மருள் கொண்ட, பேயாபோல் இருக்க-பேயர் போலே யிருத்தற்கு-வஞ்ச நெஞ்சே வா-வஞ்ச மனமே வருவாயாக. எ-று.

மனமே, பேரின்ப வெளியிலிருத்தற்கு, நமக்குக்குருகடாக்ஷம் வேண் டும், ஆதலால், நம்மை யாட்கொள்ளவந்த அருளிறைவின் திருவடிக்கீழ் அமைந்து, பேயக் கோட்பட்டார்போல் உன்மத்தமாயிருக்க வருவாயாக என்பதாம்.

4 வஞ்சமோ பண்டையுள வாதனையா னீயலைந்து
கொஞ்சமுற்ற யுன்னைக் குறைசொல்ல வாயுமுண்டோ
வஞ்சலஞ்ச லெனல்நிரங்கு மானந்த மாக்கடற்கீழ்
நெஞ்சமே யென்போல் நியழுந்த வாராயோ.

இள் வஞ்சமோ வஞ்சகமோ, பண்டை உள்ள வாதனையால்-முன னுள்ளவாசனையால், நீ அலைந்து நீ திரிந்து, கொஞ்சம் உற்றாய்-சிறுமையை யடைந்தாய். உன்னைக் குறைசொல்ல-உன்னைக் குறை கூற, வாயும் உண் டோ-வாயுளதோ, அஞ்சல அஞ்சல் என்று-பயப்படாதே பயப்படாதே யென்று, இரங்கும்-இரங்குகின்ற, ஆனந்தமாகடற்கீழ்-பேராநந்தக்கடலில், நெஞ்சமே-மனமே, என் போல எனைப்போல, நீ அழுந்த வாராயோ-நீ மூழ்க வாராயோ. எ-று.

மனமே, உன்னிடத்து வஞ்சனையில்லை, பூர்வகர்ம வாசனையால் யலைந்து தாழ்வடைந்தாய், உன்னைக் குறைகூற என்க்கு வாயுமுண்டோ

அஞ்சே லென்றிரங்கியருள்கின்ற ஆநந்தகடவுளுருவமாகிய இறைவனிடத்து, இடையறாத அன்பு செய்வா யென்பதாம்.

5 வாரா வாவாய் வடகிழற்கீழ் வீற்றிருந்த
பூராய மெமைமப் புலப்படுத்த வேண்டிபன்றே
வோராயோ நெஞ்சே யுருகாயோ வுற்றிருந்து
பாராயோ வவ்வுருவைப் பார்க்கநிறை வாய்விடுமே.

இ-ள். வரா வரவு ஆய்-வரத்தகாத வரவாகி, வடகிழல்கீழ்வீற்றிருந்த கல்லாலின் நீழலிலெழுந்தருளிவிருந்த, பூராயம்-வரலாறு, நம்மை-நம்மை புலப்படுத்த வேண்டி அன்றே-அறிவுறுத்த வேண்டி யல்லவா, நெஞ்சே மனமே, ஓராயோ-இதனை நீ யறியாயோ, உருகாயோ-உருக மாட்டாயோ உற்றிருந்து பாராயோ-உற்றிருந்து நோக்காயோ, அவ்வுருவைப் பார்க்க அந்தப் பூரணரூபத்தைப் பார்க்கின், நிறைவு ஆய்விடும் - பூரணமாகி விடும். எ-று.

மனமே, இறைவன் கல்லாலின் நீழலில் வீற்றிருந்தது நம்மை யறிவுறுத்த வேண்டியல்லவா. அதனை நீ யுற்றுப் பார்த்தனையாயின், நமக்கு எல்லாக் காரியங்களும் முற்றுப்பெறும் என்பதாம்.

6 வாயாதோ வின்பவெள்ளம் வந்துன் வழியாகப்
பாயாதோ நானுன் பயிராய்ப் பிழையேனே
வோயாம லுன்னி யுருகுநெஞ்சே யங்நிலைக்கே
தாயான மோனனருள் சந்திக்க வந்திடுமே.

இ-ள். நெஞ்சே-மனமே, இன்ப வெள்ளம் வாயாதோ-சுகப் பெருக்குக் கிடைக்காதோ, உன் வழியாக வந்து பாயாதோ-உன் வழியைப் பற்றி வந்து பரவாதோ, நானும் (அதை யெதில் பார்த்திருந்த) நானும், பயிர் ஆய் பிழையேனே-பயிராகப் பிழைக்க மாட்டேனே, ஓயாமல்-இடையறாமல், உன்னி-நினைத்து, உருகு-கரைவா யாக, அந்நிலைக்கே-அந்த நிலைக்கே, மோனன் அருள் - மௌன குருவின் கிருபையானது, சந்திக்க வந்திடும்-நாம் சந்திக்கக் கிடைக்கும். எ-று.

மனமே, நீ யிடையறாமற் கரைந்துருகு, இன்பங்கிடைக்கும். மோன குருவின் அருளுமுண்டாகும் என்பதாம்.

7 வந்த வரவை மறந்துலகாய் வாழ்ந்தகன்ம
பந்தமுற வுண்ணப் படிப்பிக்கக் கற்றவர்யா
ரிந்தமதி யேனுனக்கிங் கென்மதிகே ளென்னுளே
சந்ததநெஞ் சேபரத்திற் சாரினின்ப மூண்டாமே.

இ-ள். நெஞ்சே - மனமே, வந்த வரவை மறந்து நாம் வந்த வரவின் காரணத்தை மறந்து, உலகு ஆய் வாழ்ந்து-பிரபஞ்ச ரூபமாய் வாழ்ந்து,

கன்ம பந்தம் உற-கர்மப் பிணிப்பைப் பொருந்த, உன்னை படிப்பிக்க கற்ற வர் யார்-உன்னைப் படிப்பிக்கக் கற்றவர் யாவர். உனக்கு இந்தமதி என்-உனக்கு இந்தப் புத்தி யேன், என் மதி கேள் என் புத்தியைக்கேள், என் னிலே-என்னைக் கொண்டே, சந்ததம் - சதா காலமும், பரத்தில் சாரின்-பரம் பொருளி னிடத்திற் சேர்வையாயின், இன்பம் உண்டாம்-சுக முண் டாம். எ-று.

மனமே, வந்தகாரியத்தை மறந்து பிரபஞ்சரூபமாய், கர்மபந்தத்தி ற் பிணிக்கப்பட்டு வருந்தும்படி யுனக்குக் கற்பித்தது யார், இதைவிடு து, சதாகாலமும் பரத்திற் சிந்தைசெலுத்தினால், சுகமுண்டாகும் என்ட தாம்.

8 இன்பமய மாயுலக மெல்லாம் புழைப்பதற்குன்
னன்புநிலை யென்பா ரலுவுகினை யன்றியுண்டோ
வுன்புலத்தை யோரினருட் பொப்பாவாய் நெஞ்சேநீ
தென்புலத்தா ரோடிருந்து செய்பூசை கொண்டருளே.

இ-ள். நெஞ்சே-மனமே, இன்ப மயமாய் - சுக ரூபமாகி, உலகம் எல் லாம்-பிரபஞ்ச மெல்லாம், பிழைப்பதற்கு-உஜ் ஜீவிப்பதற்கு, உன் அன்ப நிலை என்பார்-உன் அன்பே காரண மென்பார்கள், அதுவும்-அந்த அன்ப நிலையும், நின்னை அன்றி உண்டோ-உன்னை யல்ல தாளதோ, உன்புலத்தை ஓரின் உன்னுளவை யாராய்ந்தால், அருட்கு ஒப்பு ஆவாய்-திரு வருளுக் குச் சமானமாவாய், நீ-நீ, தென் புலத்தாரோடு இருந்து-தென் புலத்தாரு னிருந்து, செய் பூசை-என்னுற் செய்யப் படுவதாகிய பூசனையை, கொண் டருள்-ஏற்றருள்வாயாக. எ-று.

மனமே, உலகமெல்லாம் உஜ்ஜீவித்தற்கு உன்னன்பே காரணம். திருவருட்குச் சமானமாவாய், நீ என் தென்புலத்தாரோடு கூடியிருந் யான் செய்யும் பூசனையே யேற்பாயாக என்பதாம். தென்புலத்தார்-பி ரார் அவரோடிருந்து செய்பூசைகொண்டருள் என்றமையால், நீ யிறந் படவேண்டுமென்று ராயிற்று.

9 அருளேயோரா லயமா வானந்த மாயிருந்த
பொருளோடி யாணிருக்கப் போயொளித்த நெஞ்சேநீ
மருடீர் முயற்கோடோ வான்மலரோ பேய்த்தேரோ
விருடீர நீயுறைந்த தெவ்விடமோ காணேனே.

இ-ள். அருளே - திருவருளே, ஓர் ஆலயம் ஆ - ஓராலயமாக, ஆந் தமாய் இருந்த - சுக ரூபமாயிருந்த, பொருளோடு - பரம் பொருளே கூடி, யான் இருக்க - நானிருக்க, போய் ஒளித்த - போய் மறைந்த, நெ சே - மனமே, நீ - நீ, மருள் தீர் - மயக்கமற்ற, முயல்கோடே - முய

கொம்போ, வான் மலரோ-ஆகாயத் தாமரை மலரோ, பேய்த் தேரோ-கானற் சலமோ, இருள் நீர-எல்லுடைய அஞ்ஞானாந்தகாரம் நீங்கின வளவில், நீ உதைத்து-நீ போயத் தங்கினது, எவ்விடமோ - எந்த இடமோ, காணேன்-அதனை யான் அறிந்திலேன் என்று.

அருட்கோயிற் சடபுரை கூடமாயிருக்க நீ யொளித்துக்கொண்டனை, அப்பாசு, உன்னுரு, முயற்கொம்பு முதலியவற்றை யொத்திருந்தது, என்னிகரை கெட்டகாலிலே நீ யோடி யொளித்துகொண்டனை எவ்விடத்தோ, அறிந்திலேன் என்பதாம்.

10 எவ்விடத்தும் பூரணமா மெந்தைபிரான் றண்ணருளே
யவ்விடத்தே யுன்னைநெஞ்சே யாராயிற் கண்டிலனே
யவ்விடத்து மாயையிலே மாண்டனையோ வவ்விடமுஞ்
செவ்விடமே நீயுஞ் சென்னமற்று வாழியவே.

இ-ள். எவ்விடத்தும்-எவ்விடத்திலும், பூரணம் ஆம் - நிறைவாயிருக்கிற, எந்தை பிரான்-எந்தையாகிய உபகாரசீலனது, தண் அருளே-தண்ணிய திருவருளே, அவ்விடத்தே - அவவிடத்திலே, நெஞ்சே - மனமே, உன்னை ஆராயின-உன்னை ஆராயுமிடத்தே, கண்டிலன்-கண்டிலேன், அவவிடத்து-அந்த இடத்தில், மாயையிலே மாண்டனையோ-மாயையிலே மடிந்தாயோ, அவ்விடமும் செவ்விடமே-அந்த இடமும் செவ்வையாகிய இடந்தான், நீயும் சென்னம் அற்று வாழிய-நீயும் பிறப்பற்றுவாழக்கடவாய்.எ-று.

மனமே, எவ்விடத்தும் இறைவனது பரிபூர்ண ரூபமே வியாபித்திருப்பது, அந்த நிலையில் உன்னைக் கண்டிலேன், மாயையால் மடிந்தாயோ, அப்படி உன்னுருத் தோற்றுதபடியிருந்த விடமும் உன் பிறவிக் கேட்டுக் கேதுவாகிய இடமே யென்பதாம்.

காரிக்கையார்.

1 காடுங் கரையு மனக்குரங்கு
கால்விட் டோட வதன்பிறகே
யோடுந் தொழிலாற் பயனுவதோ
வொன்றுப் பலவா யுயிர்க்குயிரா
யாடுங் கருணைப் பரஞ்சோதியே
யருளைப் பெருதற் கன்பு நிலை
தேடும் பருவ மிதுகண்டீர்
சேர வாருஞ் சகத்தீரே.

இ-ள். மனக் குரங்கு-மனமாகிய குரங்கு, காடும் கரையும்-காட்டினும் மேட்டினும், கால்விட்டு ஓட - கால் வீசி யோடாதிருக்க, அதன் பிறகே-அதின் பின்னே, ஓடும் தொழிலால் ஓடும் தொழிலினால், பயன் உளதோ-பிரயோஜந முண்டோ, (இல்லையே) ஒன்று ஆய் - ஒன்றாகி, பல ஆய்-பல வாகி, உயிர்க்கு உயிர் ஆய் உயிருக் குயிராய், ஆடும் நடிக்கின்ற, கருணைப் பரஞ்சோதி-கருணைப் பரஞ்சுடரினது, அருளைப் பெறுதற்கு, அருளைப் பெறும்பொருட்டு, அன்பு நிலை-அன்பு நிலையை, நீடும் தேடற் குரிய, பருவம்-சமயம், இது-இது தான், (ஆதலால்) சகத்தீரே-உலகத் தீரே, சேர வாரும்-ஒரு சேர வாருங்கள். எ-று.

உலகத் துள்ளவர்களே, மனம்போன விடங்களிலெல்லாம் அதன் பிறகே யோடுவதனாற் பயனில்லை, இறைவனது திருவருளைப் பெறுதைக் குக் காரணமாகிய அன்புசெய்தற்குரிய தருணம் இதுவே, ஆதலால் நீங்கள் ஒருமிக்கக்கூடி வாருங்கள் என்பதாம்.

2 சைவ சமய மேசமயஞ்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
காட்டு மிதநற் கருத்தைவிட்டுப்
பொய்வந் தழுந்துஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் சகத்தீரே.

இ-ள். சைவ சமயமே சமயம் பல சமயங்களுள்ளும் சைவ சமயமொன் றுமே சற்சமயம், (ஏனெனில்) சமயாதீதப் பழம்பொருளை - சமயங்களுக் கெட்டாத அநாதி வஸ்துவை, கைவந்திட - கைவச மாம்படி, மன்றுள்-பொற்சபையில், வெளிநடம்-வெளிப் படையாக காட்டா நிற்கும், இந்தக் கருத்தை விட்டு-இந்த அபிப்பிராயத்தை விட்டு, பொய்வந்து உழலும்-பொய் மேலிட்டுழலுகின்ற, சமய நெறி - சமய மார்க்கங் களில், புகுதவேண்டாம்-நுழைய வேண்டாம், முத்திதரும்-மோக்ஷத்தைக் கொடுக்கின்ற, தெய்வ சபையை-தெய்வத் தன்மை பொருந்திய சபையை, காண்பதற்கு-தரிசிப்பதற்கு, சேர வாரும்-ஒரு சேரவாருங்கள். எ-று.

உலகத்துள்ளவர்களே, சமயாதீதப்பொருளை வெளிப்படையாகக் காட்டவல்லது சைவசமயமாதலால், அதுவே சற்சமயம் என்பதாம்.

3 காக முறவு கலந்துண்ணக்
கண்டூ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடைக்குதையோ
வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே.

இ-ள். காகம்-காகமானது, உறவு கலந்து உண்ண கண்டூர்-தன் இன மாகிய காகங்களோடு கலந்து (கிடைத்ததைப்) புசிக்கக் கண்டூர்கள்;(அவ் வாறு நாமும் கலந்துண்ணல் கடன்மை யாதலால்) அகண்ட ஆகாரம் அகண்ட ரூபத்தையுடைய, சிவபோகம் என்னும் - சிவானுபவம் என்கிற பேரின்ப வெள்ளம் - பேரானந்தப் பெருக்கானது, பொங்கி ததும்பிப் பொங்கி வழிந்து, பூரணமாய்-நிறைவாகி, ஏக வுருவாய்-ஏக ரூபமாகி, கிடைக்குது-(எளிதிற் கொள்ளக்) கிடவாகின்றது, ஐயோ-அந்தோ, நாம் இனி இன்புற்றிட-நாம் இனியாயினும் சுகமடைதற் பொருட்டு, எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்கு-நாம் எடுத்த இந்த மானுட சரீரம் விழுமுன்னே (அந்தப் பேரின்ப வெள்ளத்தை) பருகுதற்கு, செகதீரே-உலகத் தீரே, சேரவாரும்-ஒருசேர வாருங்கள். எ-று.

உலகத்தாரே, ஒருபொருள்கிடைத்தால் அதைத்தனியேயுண்ணுமல் இனத்தோடு கூடியுண்ணுங் காகம்போல, சிவபோகத்தை நாமெல்லாருங்கூடி யுண்ண வாருங்கள் என்பதாம்.

எடுத்ததேகம்.

கட்டளைக்கலிப்பா.

1 எடுத்த தேகம்பொ ருளாவி மூன்றுநீ
யெனக்கொன் றில்லை யெனமோன நன்னெறி
கொடுத்த போதகொ டுத்ததன் றேபினுங்
குளறி நாமென்று கூத்தாட மாயையை
விடுத்த வாறுங்கண் ணீரொடு கம்பலை
விலகு மாறுமென் வேட்கைப்ர வாகத்தைத்
தடுத்த வாறும் புகலாய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே.

இ-ள். எடுத்த தேகம்-எடுத்த (இந்த மானுட) தேகம், பொருள்-பொருள், ஆவி-உயிர், மூன்றும்-ஆகிய இம்மூன்றும், நீ - நீயே, எனக்கு ஒன்று

இல்லே என - எனக்கு ஒன்று மில்லேயென்று சொல்லி, மோனநல்லறி கொடுத்தபோது மௌன நிலேயாகிய சன்மார்க்கத்தை நீயெனக்குத் தந்தருளினபொழுது, கொடுத்தது அன்றே - நான் உனக்குக் கொடுத்துவிட்டதல்லவா, பின்னும்-மீட்டும், நான் என்றுகுளறி கூத்தாட-நான் என்று குழறிக் கூத்தாடும்படி, மாயையை விடுத்தவாறும்-மாயையை யேவினதற்குக் காரணத்தையும். கண்ணீரொடு கம்பலே விலகுமாறும்-கண்ணீருடன் கம்பலே விலகுதற்குக காரணத்தையும், என் வேட்கைப்பிரவாகத்தை - என் ஆசை வெள்ளத்தை, தடுத்த வாறும்-தடை செய்ததற்குக் காரணத்தை யும், புகலாய்-சொல்லாய், சிரகிரி - சிரகிரியி லெழுந்தருளிய, தாயுமான சுவாமி மூர்த்தியே-மாத்ரு பூதேசுவரனென்று சொல்லப்படுகிற கருணேயிற் சிறந்த உருவமே. எ-று.

மாத்ரு பூதேசுவரனே, நீ மௌன நிலேயை யருள்செய்த காலத்தில், நான் உடல் பொருளாவிகளே உனக்குக்கொடுத்து விட்டேன்லவா அதனுலாக. மீட்டும் மாயைவயப்பட்டு நானென்று குழறுதல் முதலியவற்றைச் செய்துழலா நின்றேன் என்பதாம்.

2 நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின்
னூலிற் சொன்ன முறையிய மாதிநான்
றேயும் வண்ண மெனேக்காக்குங் காவலுந்
தொழும்பு கொள்ளுஞ் சுவாமியுநீகண்டா
யோயுஞ் சன்ம மினியஞ்ச லஞ்சலென்
றுலகங் கண்டு தொழுவோ ருருவிலே
தாயுந் தந்தையு மாகிநிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே.

இ-ள். நோயும்-வியாதியும், வெம்-வெவ்விய, கலிப்பேயும்-தரித்திரமிய பிசாசமும், தொடர - தொடர்தலால், நின் நூலில் சொன்னமுறை உன்னுலாகிய வேதாகமங்களில் சொல்லிய முறையாக, இயமாதி-இயமாதிகளே, நான் தேயும் வண்ணம்-நான் பொருந்துமாறு, என்னேக் காக்குங் காவலும்-என்னே (வேறு விடயங்களிற் செலலாது தடுத்துக்) காக்கின்ற காவலும், தொழும்பு கொள்ளும் சுவாமியும் - என்னே யடிமை கொள்ளுஞ் சுவாமியும், நீ-நீயே, சன்மம் ஒயும்-பிறவி யொழிந்துபோம, இனி அஞ்சல் அஞ்சல் என்று-இனி அஞ்சாதே அஞ்சாதே யென்று சொல்லி, உலகம் கண்டுதொழ-உலகத்தார் பார்த்து வணங்கும்படி, ஓர் உருவிலே-ஓர் வடிவிற்றானே, தாயும் தந்தையும் ஆகிநிரகிரித் - தாயும் தந்தையு மானவனே, நிரகிரித் தாயுமான-தயாபர மூர்த்தியே. எ-று.

மாத்ரு பூதேசுவரனே, வேதாகமோக்தமாக இயமாதிகளே நான் தேயும் வண்ணம் என்னேக் காக்குங்காவலும் எனக்குக் கடவுளும் நீயே, [illegible]

பிறவி யொழியுமென்று சொல்லி, அச்சந்தீர்த்து, உலகு கண்டு தொழுப்படி ஒருருவத்தில் தாயுந் தந்தையு மாய்வந்து சேவை சாதித்தருளினே யென்பதாம்.

முகமெலாம்.

1 முகமெ லாங்கணீர் முத்தரும் பிடச்செங்கை முகிழ்ப்ப
வகமெ லாங்குழைந் தானந்த மாகநல் லறிஞ
ரிகமெ லாந்தவ மிழைக்கின்ற ரென்செய்கோ வேழை
சகமெ லாம்பெற நல்லரு ளுதரமாச் சமைந்தாய்.

இ-ள் முகம் எல்லாம்-முகம் முழுமையும், கண்ணீர் முத்து அரும்பிட-கண்ணீராகிய முத்துக்க ளுதிர்ந்திட, செங்கை முகிழ்ப்ப-செங்கைகள் கூம்ப, அகம் எல்லாம் குழைந்து-மனமெல்லா முருகி, ஆனந்தமாக-இன்பமய மாதற்பொருட்டு நல் அறிஞர் சிறந்த அறிஞர்கள், இகம் எல்லாம் தவம் இழைக்கின்றார்-இக முழுதுந் தவம் செய்கிறார்கள், ஏழை-எளியனேன், என் செய்கோ-என் செய்வேனே, சகம் எலாம் பெற-உலகங்களெயெல்லாம் பெறுதற்காக, நல் அருள் சிறந்த அருளே, உதரம் ஆசமைந் தாய்-திருவயிறுகச் சமைந்தவனே. எ-று.

அருளாகிய திருவயிற்றினின்று, உலகத்துயிர்களாகியகுழந்தைகளைத் தோற்றுவித்தவனே, அறிஞர், உண்ணிடத்தன்புசெய்து தவமிழையாநிற்க, நான் யாதொரு சற்காரியமுஞ் செய்யாதிருக்கின்றேன், எவ்வாறு பிழைப்பேன் என்பதாம்.

திடமுறவே.

கொச்சகக்கலிப்பா.

திடமுறவே நின்னருளைச் சேர்த்தென்னைக் காத்தாள்க
கடனுனக்கென் றெண்ணிநின்னைக் கைகுவித்தே னானலேனை
வடைவுகெட்ட பாழ்மாயை யாழியிலே யின்னமல்லற்
படமுடியா தென்னைவிப்பற்றே பராபரமே.

இ-ள். திடம் உற-திடம்பொருந்த, நின் அருளைச்சேர்த்து-உன்னருளைக்கூட்டி, என்னைக் காத்து ஆள-என்னைக் காத்துரகூடிக்க, உனக்குநடன் என்று எண்ணி-உனக்குக் கடனென்று நினைத்து, நின்னை-உன்னை, கைகுவித்தேன்-கைகூப்பி வணங்கினேன், நான் அல்லலேனை-யானல்லேனை, அடைவுகெட்ட-முறைகெட்ட, பாழ்-பாழான, மாயை ஆழியிலே-மாயசாகரத்தில் லமிழ்ந்து, இன்னம்-இன்னமும், அல்லல்பட முடியாது-துன்பப்பட முடியாது, என் ஆவிபற்றே-என்னுயிர்க்கோ ராதாரமே, பராபரமே. எ-று.

கடவுளே உறுதியாக உன்னருளிற்கூட்டி என்னைக் காத்தருள்வதே உன் கடனென்று நினைத்து உன்னைக் கைகூப்பி வணங்கினேன், வணங்கியும், மாயைக்கடலில் இன்னம் முழ்கிவருந்த என்னால் முடியாதென்பதாம்.

2 ஆராமை கண்டிங் கருட்குருவாய் நீயொருகால்
வாராயோ வந்து வருத்தமெல்லாந் தீராயோ
பூராய மாகவருட் பூரணத்தி லண்டமுதற்
பாராதி வைத்த பதியே பராபரமே.

இ-ள். ஆராமைகண்டு-என் தரியாமையைப் பார்த்து, இங்கு-இவ்விடத்து, அருட்குருவாய்-அருட்குருவாகி, நீ ஒருகால் வாராயோ-நீ ஒருதரம் வராயோ, வந்து-வந்து, வருத்தம் எல்லாம்-என் துன்பத்தை யெல்லாம், தீராயோ-ஒழியாயோ, பூராயமாக-புராதனமாக, அருட்பூரணத்தில்-திருவருணிறைவில், அண்டமுதல்-உலகங்கட்கு முதற்காரணமாகிய, பார் ஆதி-பிருதிவி முதலாயே பஞ்ச மஹா பூதங்களை, வைத்த-வகுத்து வைத்த, பதியே-இறைவனே, பராபரமே. எ று.

கடவுளே, என்னுற்றமையைக் கண்டு, நீ அருட்குருவாகிவந்து என் துன்பமெல்லாம் ஒழியும்படி கிருபைபுரியாயோ என்பதாம்.

3 வாழாது வாழுனை வந்தடைந்தோர் எல்லாரு
மாழாழி யென்னவரு ளாறு மழுக்காற்றே
டேழா யெனவுலக மேசுமினி நானொருவன்
பாழாகா வாறுமுகம் பார்நீ பராபரமே.

இ-ள் வாழாது-அநித்தியவாழ்வு வாழாமல், வாழ-நித்தியவாழ்வுபெற்று வாழ, உன்னை வந்து அடைந்தோர் எல்லாரும்-உன்னை வந்தடுத்தவர்களெல்லாரும், ஆழ்-ஆழ்ந்த, ஆழி என்ன-கடலைப்போல, அருள் ஆறு-அருளருவமானார்கள், அழுக்காற்றே டு-பொறுமையோடு கூடிய, ஏழாய்-அறிவிலீ, என-என்று, உலகம் எசும் உலகம் பழித்தற்குரிய, நான் ஒருவன்-நானொருவனும், இனி பாழ் ஆகாவாறு-இனிப்பாழ் படாவண்ணம், நீ முகம்பார்-நீ என்முகம் பார்த்திரங்கு, பராபரமே. எ-று.

கடவுளே, உன்னை வந்தடைந்தோரெல்லாரும் உன் னருளருவமானார்கள், நானொருவனும் பாழ்படாவண்ணம் என் முகம்பார்த் திரங்க வேண்டும் என்பதாம்.

4 உள்ளத்தி னுள்ளே யொளித்தென்னை யாட்டுகின்ற
கள்ளக் கருணையை யான் காணுந் தரமாமோ

வெள்ளத்தை மாற்றி விடக்குண்பார் நஞ்சூட்டும்
பள்ளத்தின் மீன்போற் பதைத்தேன் பராபரமே.

இ-ள். உள்ளத்தினுள்ளே ஒளித்து-என் மனத்தினுள்ளே மறைந்து, என்னை ஆட்டுகின்ற-என்னை சுடிப்பிக்கிற, கள்ளக் கருணையை - வஞ்சக் கருணையை, யான் காணும் தரம் ஆமோ - நான் காணுந் தரமாகுமோ, விடக்கு உண்பார்-ஊனுண்பவரால், வெள்ளத்தை மாற்றி-(இறைத்தல் முதலிய வற்றால்) நீரை வடியச்செய்து, நஞ்சு ஊட்டும் - விஷமூட்டப் பெற்ற, பள்ளத்தில்-சிறு குட்டையிலுள்ள, மீன்போல்-மீன்களைப்போல, பதைத்தேன்-துடித்தேன், பராபரமே. எ-று.

கடவுளே, என்மனத்தின்கண் மறைந்திருந்து என்னை யாட்டுகின்ற உன் கருணாதிசயத்தை யான் காண வல்லேனோ, விஷமூட்டப்பட்ட சிறு பள்ளத்திலுள்ள மீன்போலப் பதையா நின்றேன் என்பதாம்.

5 வாவிக் கமலமலர் வண்டாய்த் துவண்டுதுவண்
டாவிக்கு ணின்றவுனக் கன்புவைத்தார்க் கஞ்சலென்பாய்
பூவிற்கும்வான்கடையிற் புல்விற்பார் போலவொன்றைப்
பாவிக்க மாட்டேன் பதியே பராபரமே.

இ-ள். வாவி-தடாகத்திலுள்ள, கமலமலர்வண்டு ஆய்-தாமரைமலரில் வண்டுபோலாகி, துவண்டு துவண்டு - நிவண்டு நிவண்டு, ஆவிக்கு உள் நின்ற - உயிருக்குள்ளே நிலைத்திருக்கிற, உனக்கு-உன்மேல், அன்புவைத் தார்க்கு-அன்புவைத்த தொண்டர்களுக்கு, அஞ்சல் என்பாய்-அஞ்சன்மின் என்பாய், பூவிற்கும்-புஷ்பம் விற்கிற, வான்கடையில்-சிறந்த கடையில், புல் விற்போர்போல-புல் விற்பாரைப்போல, ஒன்றை - (உன்னையன்றி) வேறொரு பொருளை, பாவிக்கமாட்டேன் - பாவனை பண்ணமாட்டேன், பதியே-இறைவனே, பராபரமே. எ-று.

கடவுளே, தாமரைப்பூவில் வண்டுபோலத்துவண்டு துவண்டு, உயிர்க் குயிராய் நிற்குமுன்னை யஞ்சலிசெய்பு மன்பர்க்கு அஞ்சலென்பாய், நான், பூவிற்குங்கடையில் புல்விற்பார்போல, உன்னையன்றி வேறு தெய்வத்தை நினைப்பதுஞ் செய்யேன் என்பதாம்.

6 விண்ணூறு வெற்பின் விழுந்தாங் கெனமார்பிற்
கண்ணூறு பாய்ச்சிடுமென் காதல் வெள்ளங் கண்டிலையோ
தண்ணூறு சாந்தபதத் தற்பரமே நால்வேதப்
பண்ணூறு மின்பப் பதியே பராபரமே.

இ-ள். விண் ஆறு-ஆகாய கங்கை, வெற்பின்-மலையாகிய, ஆங்கு-அவ் விடத்து, விழுந்தென-விழுந்தாற்போல, மார்பில்-மார்பின்மீது, கண்ணூறு-கண்ணீர் நதியை, பாய்ச்சிடும்-பாய்ச்சுகின்ற, என் காதல் வெள்ளம்-என்

ஞசைப் பெருக்கை, கண்டிலேயோ-பார்த்திலேயோ, தண்ணாறு-தட்பமே மிகுதியாய்த் தோற்றுகிற, சாந்தபதம்-சாந்தபதத்தையுடைய, தற்பரமே-தற்பரவஸ்துவே, நால்வேதப்பண்-நான்கு வேதப்பண்களுள்ளும், நாறும்-பிரகாசிக்கிற, இன்பம் - சுகரூபமாகிய, பதியே - இறைவனே, பராபரமே. எ-று.

கடவுளே, ஆகாய கங்கை மலைமேல் விழுந்தாற்போல, மார்பின்மீது கண்ணீராற்றைப் பெருகச்செய்கிற என்னுசை வெள்ளத்தைப் பார்த்திலேயோ என்பதாம்.

7 கூடியநின் சீரடியார் கூட்டமென்றே வாய்க்குமென
வாடியவென் னெஞ்சமுக வாட்டமுநீ கண்டிலேயோ
தேடியநின் சீரருளைத் திக்கனைத்துங் கைகுவித்துப்
பாடியநான் கண்டாய் பதியே பராபரமே.

இ-ள். கூடிய-சேர்ந்த, நின்சீர் அடியார்-உன் சிறந்த அடியார்களது, கூட்டம்-கூட்டமானது, என்று வாய்க்குமோ என-எப்பொழுது கிடைக்குமோவென்று, வாடிய-வாடின, என் நெஞ்சும்-என் மனத்தையும், முக வாட்டமும் - முகவாட்டத்தையும், நீ கண்டிலேயோ - நீ பார்த்திலேயோ, தேடிய-அறிஞரால் தேடப்பட்ட, நின்சீர் அருள்-உனது சிறந்த அருளைக் குறித்து, திக்கு அனைத்தும்-திசைகளெல்லாவற்றிலும், கைகுவித்து-கை கூப்பி, பாடிய நான் - துதித்த நானுக்கும், பதியே - முதல்வனே, பராபரமே. எ-று.

கடவுளே, உன்னடியார் கூட்டம் என்று வாய்க்குமென்று வாடின என் மனவாட்டத்தையும் முகவாட்டத்தையும் நீபார்த்திலேயோ, எல்லாத் திசைகளிலும் உன்னருளை நாடிக் கைகுவித்துத் துதியா நின்றேன் என்பதாம்.

8 நெஞ்சத்தி னுடே நினைவாய் நினைவூடு
மஞ்சலென வாழுமென தாவித் துணைநீயே
சஞ்சலமாற் றினையினிமேற் முய்க்குபசா ரம்புகன்று
பஞ்சரிக்க நானர் பதியே பராபரமே.

இ-ள். நெஞ்சத்தினுடே நினைவு ஆய் - மனத்தினுள்ளே நினைவாகி, நினைவூடும்-நினைவினுள்ளும், அஞ்சல் என-பயப்படாதே யென்னுநின்று, வாழும்-வாழ்கின்ற, எனது ஆவித்துணை-என்னுயிர்த்துணையாகிய, நீயே-நீதானே, சஞ்சலம் மாற்றினை என் மனோசலனத்தை நீக்கினாய், இனிமேல்-இனிமேல், தாய்க்கு தாயாகிய எனக்கு, உபசாரம் புகன்று - உபசாரஞ் சொல்லி, பஞ்சரிக்க-கெஞ்ச, நான் ஆர்-நான் யார், பதியே-தலைவனே, பராபரமே- எ-று.

கடவுளே, நினைவுக்குள் நினைவாயிருந்து, அஞ்சல் என்றருள்செய்கிற் என்னுயிர்த்துணையாகிய நீ, என் மனோசலங்களை நீக்கியருளினை. தாயாகியவுனக்கு உபகாரஞ்சொல்ல நான் யார் என்பதாம்.

9 புத்திநெறி யாகவுனைப் போற்றிப் பலகாலும்
முத்திநெறி வேண்டாத மூடனே னுகெடுவேன்
சித்திநெறிக் கென்கடவேன் சீரடியார்க் கேவல்செய்யும்
பத்திநெறிக் கேனுமுகம் பார்நீ பராபரமே.

இ-ள். புத்திநெறியாக-புத்தி வழியாக, உன்னைப் பலகாலும்போற்றி, உன்னைப் பலதரமும்துதித்து, முத்திநெறிவேண்டாத-முத்திமார்க்கத்தை விரும்பாத, மூடனேன்-மூடனாகிய நான், நுகெடுவேன்-ஐயோகெடுவேன், சித்திநெறிக்கு என் கடவேன்-சித்தி மார்க்கத்துக்கு என் செய்யக்கடவேன், சீர் அடியார்க்கு-உன் சிறந்த அடியார்களுக்கு, ஏவல் செய்யும்-ஏவல் செய்தற்குரிய, பத்திநெறிக்கேனும்-பத்திமார்க்கம் எனக்குச்சித்தித்தற் பொருட்டாயினும், நீ முகம்பார்-நீ யென்முகம்பார், பராபரமே. எ-று.

கடவுளே, புத்திவழியாக உன்னைப் பலகாலும் துதித்து, முத்திநெறியை விரும்பாத மூடனாகிய நான், சித்திசேயடையும் வழிக்கு என் செயக்கடவேன், உன்னடியார்க்கு ஏவல்செய்கின்ற பத்திமார்க்கம் எனக்கமையும் வண்ணமாயினும் என் முகம் பார்க்கவேண்டும் என்பதாம்.

10 கண்டறியேன் கேட்டறியேன் காட்டுநினை யேயிதயங்
கொண்டறியேன் முத்தி குறிக்குந் தரமுமுண்டோ
தொண்டறியாப் பேதைதமையேன் சொல்வேனின் றெறன்
பண்டறிவாய் நீயே பகராய் பராபரமே. [மையெல்லாம்

இ-ள் கண்டறியேன்-கண்டறிந்திலேன், கேட்டறியேன்-கேட்டறிந்திலேன், காட்டும் நினையே - (எல்லாப்பொருள்களையும் பகுத்து) உணர்த்துகின்ற உன்னையே, இதயம்கொண்டு அறியேன்-இருதயத்தில் வைத்தறிந்திலேன், முத்தி குறிக்கும் தரமும் உண்டோ - (இப்படிப்பட்ட எனக்கு) முத்தியை நினைக்கும்யோக்கியதையாயினு முளதோ, தொண்டு அறியாஅடிமைத் திறமறியாத, பேதைதமையேன்-அறிவின்மையை யுடையேன் நின் தொன்மையெல்லாம் சொல்லேன்-உன் பழமையெல்லாம் சொல்லியறியேன். பண்டு அறிவாய் (இயற்றையெல்லாம்) முன்னமே யுணர்வாயாகிய, நீயே பகராய்-நீயே சொல்லாய், பராபரமே. எ-று.

கடவுளே, உன்னைக் கண்டுமிலேன், இதயத்தில் அமைத்துமிலேன், இப்படிப்பட்ட எனக்கு முத்தியை நினைத்தற்காயினும் தகுதியுண்டோ,

உன்னடிமைத் திறமறியாத பேதையேன், உன் பழமையெல்லாம் சொல்லி யறியேன்; முன்னமே நீ யுணர்வாயாதலால் என்பதாம்.

தன்னை.

1 தன்னை யறியத் தனதருளாற் றுணர்த்து
மன்னைப் பொருளெனவே வாழாமற் பாழ்நெஞ்சே
பொன்னைப் புவியைமடப் பூவையரை மெய்யெனவே
யென்னைக் கவர்ந்திழுத்திட் டென்னபலன் கண்டாயே.

இ-ள். தன்னை அறிய-தன்னை யுணர, தனது அருளால்-தன்திருவரு ளால், தான் உணர்த்தும்-தானே யுணர்த்துகின்ற, மன்னை-இறைவனை, பொருள் எனவாழாமல்-உறுதிப் பொருளென்றுவாழாமல், பாழ்நெஞ்சே-பாழ் மனமே, பொன்னை-பொன்னையும், புவியை-நிலத்தையும், மடப்பூவை யரை-இளமை பொருந்தியமாதரையும், மெய்யென-மெய்யென்றுகொண்டு, என்னை-என்னை, கவர்ந்து இழுத்திட்டு-பற்றியிழுத்திட்டு, என்ன பலன் கண்டாய்-என்ன பயனையடைந்தாய். எ-று.

மனமே, தன்னையுணருமாறு தன்னருளால் நமக்கறிவுறுத்துகின்ற இறைவனைவாழ்த்தி வாழாமல், பொன் மண் பெண் என்பவைகளை மெய் யென்று நம்பி, என்னை யவ்விடங்களில் இழுத்துப்போய், நீ யென்ன பய னடைந்தனை யென்பதாம்.

ஆக்குவை.

---

1 ஆக்குவை மாயையாவு நொடிதனி லதனைமாள
நீக்குவை நீக்கமில்லா நினைப்பொடு மறப்புமாற்றிப்
போக்கொடு வரவுமின்றிப் புனிதநல் லருளானந்தந்
தாக்கவுஞ் செய்வாயன்றே சச்சிதானந்தவாழ்வே.

இ-ள். மாயையாவும்-மாயைக ளெல்லாவற்றையும், ஆக்குவை-உண் டாக்குவாய், அதனை-அம்மாயையை, நொடிதனில்-நொடிப்பொழுதில், மாளநீக்குவை-ஒழிய நீக்கிவிடுவாய், நீக்கம் இல்லா-நீங்குதலில்லாத, நினைப் பொடு-நினைப்புடன், மறப்பும்-மறப்பையும், மாற்றி ஒழித்து-போக்கொடு வரவும் இன்றி போக்குடன் வரவும் இல்லாமல், புனிதம்-பரிசுத்தமாகிய, நல்-சிறந்த, அருள் ஆனந்தம்-அருளானந்தத்தை, தாக்கவும் செய்வாய் அன்றே-அடையவுஞ் செய்பவன் நீயல்லவா, சச்சிதானந்த வாழ்வே-அஸ்தி பாதி ப்ரியவாழ்க்கையே. எ-று.

சச்சிதானந்தப்பொருளே, மாயாகாரியமாகிய பிரபஞ்ச முழுதையும் படைத்துக்காத்தழிக்கவல்லை, போக்கொடு வரவற்ற அருளானந்தத்தைத் தரவுஞ் செய்வோன் நீயல்லையோ என்பதாம்.

கற்புறுசிநீதை.

1 கற்புறு சிந்தைமாதர் கணவரை யன்றிவேறோர்
நிற்புறத் தவரைநாடார் யாங்களு மின்பவாழ்வுந்
தற்பொறி யாகநல்குந் தலைவனின் னலதோர்தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணைனந்தவாழ்வே.

இ-ள். கற்பு உறு சிந்தை மாதர்-கற்பு மிகுந்தமனத்தையுடைய மாதர்கள், கணவரை அன்றி-தம் கணவரை நாடுதலன்றி, வேறு-அந்நியமாகிய, ஓர் இல்புறத்தவரை - ஒரு அயல் வீட்டாரை, நாடார்-நாடார்கள், (அது போல) யாங்களும்-நாங்களும், இன்ப வாழ்வும்-சுகவாழ்க்கையையும், தற் பொறி ஆக நல்கும்-தன் செல்வமாகத் தந்தருள்கின்ற, தலைவ-முதல்வனே, நின்னலது - உன்னையன்றி, ஓர் தெய்வம்-மற்றொரு தெய்வத்தை, பொற்பு உற - யாம் பொலிவடைதற் பொருட்டு, கருதோம் - நாடோம்; பூரணைநந்த வாழ்வே-பரிபூரண சுகத்தையே நிவாழிடமாகக்கொண்டி அதனிடத்து வாழ்வோனே. எ-று.

கடவுளே, கற்புடைமாதர், தங்கணவரையன்றி அயலாரை நாடாதது போல, யாங்கள் உன்னையன்றி வேறு தெய்வத்தைக் கருதோம் என்பதாம்.

2 முருந்திள நகையார்பார முலைமுகந் தழுவிச் செவ்வாய்
விருந்தமிர் தெனவருந்தி வெறியாட்டுக் காளாய்நாளு
மிருந்தலோ காயதப்பே ரினத்தனு யிருந்தவேழை
பொருந்தவுங் கதிமேலுண்டோ பூரணைனந்தவாழ்வே.

இ-ள். முருந்து-மயிலிறகினடிபோன்ற, இளநகையார்-சிறிய பல்வரிசையையுடையமாதரது, பாரம்-பெரிய, முலைமுகம்-முலைமுகட்டை, தழுவி-தழுவிக்கொண்டு, செவ்வாய்-செவந்த அதராமிர்தத்தை, விருந்து-விருந்தாகக்கொடுக்கப்பட்ட, அமிர்தஎன-தேவாமிர்தம்போலக்கருதி, அருந்தி-பாநம்பண்ணி, வெறியாட்டுக்கு ஆள் ஆய்-வெறியாடலுக் காளாகி, நாளும் இருந்த-நாடோறு மிருந்த, லோகாயதப்பேர் - உலோகாயதம் என்னும் பேர்பூண்ட, இனத்தனுய் இருந்த ஏழை-கூட்டத்தானுயிருந்த அறிவிலியாகிய நான். மேல்கதிபொருந்தவும் இனியொருகால் நற்கதியடையவும், உண்டோ-விரகுண்டோ, பூரணைனந்த வாழ்வே. எ-று.

கடவுளே, மாதர் மயக்கிலகப்பட்டு, லோகாயதனுக் கினமாயிருக்கிற எனக்கு நற்கதியுண்டோ, என்பதாம்.

3 தீதெலா மொன்றும் வன்மை செறிந்திடப் படலம்போர்த்த
பாதகச் சிந்தைபெற்ற பதகனுன் பாதநீழ
லாதர வடையவுள்ளன் பருள்கிலை யாயின்மற்றியார்
போதனை செய்யவல்லார் பூரணனந்தவாழ்வே.

இ-ள். தீது எல்லாம்-தீமைகள் யாவும், ஒன்று ஆம் வண்மைசெறிந்து-ஒன்றாகக் கூடியிருந்தாற்போன்ற காடிந்யம் பொருந்தி, இருள்படலம் போர்த்த-அஞ்ஞாநாந்தகாரச் செறிவினால் மூடப்பெற்ற, பாதகச் சிந்தை பெற்ற-பாபசித்தனையுள்ள, பதகன்-பாபியாகிய நான், உன் பாதநீழல்-உன் திருவடி நிழலை, ஆதரவு அடைய-ஆதாரமாக அடைய, உள்ளன்பு அருள் கிலையாயின்-உள்ளன்பைத் தந்தருளாயானால், போதனைசெய்ய வல்லார்-(என்பாவந்தொலையப்) போதிக்க வல்லார், மற்று யார்-வேறு யாவர், பூரண. எ-று.

கடவுளே, தீமைகள் யாவும் ஒன்றுபட்டிறண்டாற்போன்ற மனத்தை யுடையேன், உன்திருவடி நீழலையடையும் வண்ணம் உள்ளன்பை யருள் செய்திலையாயின், வேறு யாவர் என்பாவந்தொலையப் போதிக்கவல்லார் என்பதாம்.

4 நாதனே நாதாதீத நண்பனே நடுவாய்நின்ற
நீதனைக் கலந்துநிற்க நெஞ்சமே நீவாவென்றுல்
வாதனை பெருக்கியென்னை வசஞ்செய்து மனந்துன்மார்க்க
போதனை செய்தனன்றே பூரண னந்தவாழ்வே.

இ-ள். நாதனே-இறைவனே, நாத அதீத-நாத தத்துவத்துக்கு மேட்டாத, நண்பனே-அன்பர்க்கன்பனே, நடுவாய்நின்ற நீதனை-பஞ்சகிருத்தியங்களுக்கும் பொதுவாயிருக்கிற நீதிமானை, கலந்து நிற்க-கூடிநிற்க, நெஞ்சமே-மனமே, நீவா என்றுல-நீ வருகவென்றால், மனம் - என்மனமானது, வாதனை பெருக்கி - உலக வாசனையைப் பெருகச்செய்து, என்னை வசம் செய்து-என்னை வசிகரித்து, துன்மார்க்க போதனை செய்தல்-துன்மார்க்க போதனை செய்வது, நன்றே-நன்மையோ, பூரணனந்த. எ-று.

கடவுளே, இறைவனைக்கூடவாவென்றதைத்தால், என் மனம் அதற்கிசையாமல், உலகவாசனையில், என்னை யிழுத்துச்சென்று நீநெறியை யுபதேசித்து என்னை நிலைக்கப்பண்ணுதல் அழகோ என்பதாம்.

5 எண்ணிய வெண்ணமெல்லா மிறப்புமேற் பிறப்புக்காசை
பண்ணியென் னறிவையெல்லாம் பாழாக்கி யெனைப்பாழாக்
குந், திண்ணிய வினையைக்கொன்று சிறியனை யுய்யக்கொண்
டாற், புண்ணிய நினக்கேயன்றே பூரண னந்தவாழ்வே.

இ-ள். எண்ணிய எண்ணம் எல்லாம்-நான் எண்ணிய நல்லெண்ணங் கள் யாவையும், இறப்புமேல் பிறப்புக்கு ஆசைபண்ணி-இறப்புக்கும் மேல் வரக் கடவதாகிய பிறப்புக்குமேவிருப்பமாகச்செய்து, என் அறிவையெல் லாம் பாழாக்கி-என்னறிவு முழுதும் பாழ்படுத்தி, என்னைப்பாழ் ஆக்கும்-என்னையும் பாழாக்குகின்ற, திண்ணிய வினையை-வல்வினையை, கொன்று-கெடுத்து, சிறியனை உய்யக்கொண்டால் - சிறியேனை யுய்விக்க எற்றுக் கொண்டால், புண்ணியம்-அந்தப்புண்ணியம், நினக்கே அன்றே-உனக்கே யல்லவா, பூரண, எ-று.

கடவுளே, என்னறிவையும் என்னையும் பாழாக்குகின்ற வினையைக் கெடுத்துச் சிறியேனை உய்யக் கொண்டனையாயின், அதனாலுளதாகும் புண்ணியம் உனக்கே பண்டாமல்லவா என்பதாம்.

6 பத்திநீ பத்திக்கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர்சித்தித் திறமுநீ திறமார்மோன
முத்திநீ முத்திக்கான முதலுநீ முதன்மையான
புத்திநீ யெனக்கொன்றுண்டோ பூரண னந்தவாழ்வே.

இ-ள். பத்தி நீ-பக்திரூபமாயிருப்பவனும் நீயே, பத்திக்கு ஆனபல னும் நீ-பக்திக்குரிய பல ரூபமாயிருப்பவனும் நீயே, பலவாசொல்லும் சித்தி நீ-பலவகையாகச் சொல்லப்படுகிற சித்திகளும் நீயே, சித்தர் சித்தித்திற மும் நீ-சித்தாது சித்திவகைகளும் நீயே, திறம் ஆர் மோன முத்தி நீ உறுதி யாகிய மோனமுத்தியும் நீயே, முத்திக்கு ஆன முத்தியை யுதவுதற்குரிய, முதலும் நீ முதல்வனும் நீயே, முதன்மையான புத்தி நீ-முதன்மையாகிய அறிவும் நீயே, எனக்கு ஒன்று உண்டோ-எனக்கென்றொரு பொருளுள தோ. எ-று.

கடவுளே, பத்திமுதலிய எல்லாம் நீயேயா யிருக்கச்செய்தே, எனக் கென வொருபொருளுண்டோ என்பதாம்.

7 தாயினு மினிய நின்னைச் சரணென வடைந்த நாயேன்
பேயினுங் கடையனாகிப் பிதற்றுதல் செய்தனன்றே
தீயிடை மெழுகாய் நொந்தேன் தெளிவிலேன் வீணேகால
ம், போயின தாற்றகில்லேன் பூரண னந்தவாழ்வே.

இ-ள். தாயினும் இனிய நின்னை-தாயினு மினியனை வுன்னை, சரண் என அடைந்த நாயேன் - அடைக்கலமாக அடைந்த நாயினேன், பேயி னும் கடையன் ஆகி - பேயினு மிழிந்தவனாகி, பிதற்றுதல் செய்தல்-பிதற்றுவது, நன்றே-நன்மையோ, தீயிடை மெழுகு ஆய் நொந்தேன்-செந்தழலின் மெழுகுபோலவுருகினேன், தெளிவிலேன்-தெளிவிலாதேன், காலம் வீணே போயினது ஆற்றகில் லேன்-காலம் பயனற்றொழிந்ததைப் பற்றித் தரியேன், பூரண. எ-று.

கடவுளே, தாயினுமினியனை வுன்னைச் சரண்புருந்த நான் பேயினு மிழிந்தேனுகிப் பிதற்றித்திரிதலழகாமோ, அழலிலிட்ட மெழுகுபோலு ருகி நொந்தேன், அன்றியும், காலம்வீணே கழிந்ததைக்குறித்து ஆற்றகில் லேன் என்பதாம்.

மலைவளர்காதலி.

1 பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிரமலுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதுருண்டு
காயசித் திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மைமின் னுளிற்
கருத்தொன்று முண்டாகுமே
னதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்தவொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூ தனன்றங்கையே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே.

(இ-ள். நதி உண்ட கடல் என-பல நதிகளையும் உட்கொண்ட கடல் போல, சமயத்தை உண்ட - பல சமயங்களையு முட்கொண்ட, பரம் - மே லான, ஞான ஆனந்த ஒளியே - ஞானுனந்தச்சுடரே, நாதாந்த ரூபமே - நாத தத்துவத்தின் முடிவாகிய வுருவே, வேதாந்த மோனமே - வேதமுடி வில் விளங்குகிற மௌனநிலையே, நான் என்னும் அகந்தை தீர்த்து-நானெ ன்னு மகங்காரத்தைப் போக்கி, என் மதி உண்ட-என்னறிவை விழுங்கிய, மதி ஆன - அறிவுருவமாகிய, மதிவதனவல்லியே - பூர்ண சந்திரனுக்கு நிகரான முகத்தையுடைய கொடிபோல்வாளே, மது சூதனன் தங்கையே-திருமாறுக்குத் திருத்தங்கையே, வரைராஜனுக்கு - மலையரையனுக்கு, இரு கண்மணியாய் உதித்த- இரண்டு கண்மணிபோலத் தோன்றிய, மலை வளர் காதலிப் பெண் உமையே, கறை உண்ட கண்டர்பால்-விடமுண்ட கண்டரிடத்து அமர்ந்த, அம்மை-அன்னையே, நின் தாளில் - உன் திரு வடியினிடத்தில், கருத்து ஒன்றும் உண்டாகுமேல் - நினைப்பொன்றுமே

யுளதாயின், பதி உண்டு-கல்லிடமுண்டு, நிதி உண்டு-செல்வமுண்டு, புத்திரர்கள்-புத்திரரும், மித்திரர்கள்-மித்திரரும். பக்கம்-உறவினரும், உண்டு. உண்டு, எக்காலமும்-எப்போதும், பலிசு உண்டு-திறமை உண்டு, தவிசு உண்டு-நல்ல சயனமுண்டு, திட்டாந்தமாக-த்ருஷ்டாந்தமாக, யமபடர் என்னும் திமிரம் அணுகா-யமதூதர் என்கிற இருள் அணுகாத, கதிஉண்டு-சிறந்தகதியுண்டு, ஞானம் ஆம் கதிர் உண்டு-ஞானமாகிய சூரியனுண்டு, சதுர் உண்டு-சதுரதையுண்டு, காயசித்திகளும் உண்டு-பல்வேறு வகையான காயசித்திகளும் உண்டு. எ-று.

இருளொளி கட்குப்போல, யமபடர்க்கும் ஞானத்துக்கும் பகையுண்மைதோன்ற, "யமபடரெனுந் திமிரமணுகாக் கதியுண்டு, ஞானமாங்கதிருண்டு" என்றார். மதுசூதனன்-மதுவென்பவனைக் கொன்றவன். தவிசுஆசனமெனினுமாம், மலைவளர் காதலி-தேவைநகரி லெழுந்தருளி யிருக்கின்ற தேவியார் திருப்பெயர். மலைவளர் காதலிப் பெண்ணுமையே, எனக்கு உன்திருவடி மேலன்பொன்று முளதாயின், பதிமுதலிய எல்லா முண்டா மென்பதாம்.

2 தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையி லேநடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியிலேமேற்
பூரித்த முலையிலே நின்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற வன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞெயத்தி லேயுனிருதாண்
மட்டிலே மனதுசெல நினதருளு மருள்வையோ
வளமருவு தேவைபரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே.

இ-ள். வலியமடமாதர்-வன்மையாகிய மடப்பத்தையுடைய மாதரது, தெட்டிலே-வஞ்சகத்திலும், வாய் வெட்டிலே-வாயின் வெட்டு வார்த்தையிலும், சிற்றிடையிலே-சிறிய இடையிலும், நடையிலே-நடையிலும், சேல் ஒத்த விழியிலே-சேல்போன்ற கண்களிலும், பால் ஒத்தமொழியிலே-பால் போன்ற இன்சொல்லிலும், சிறுபிறை நுதல் கீற்றிலே-சிறு பிறைபோன்ற

நெற்றி வகிரிலும், பொட்டிலே-அதிலிட்ட பொட்டிலும், அவர்கட்டு பட்டிலே-அவ ரணிந்திருக்கும் பட்டாடையிலும், புனைகந்த பொடியிலே-பூசப் பட்ட பரிமளப் பொடியிலும், அடியிலே-பாதங்களிலும், மேல்-மேலிடத்து, பூரித்த மூலையிலே-இறுமாந்த மூலைகளிலும், நிற்கின்ற நிலையிலே-நிற்கிற நிலையிலும், புந்தியினே நுழையவிட்டு-புத்தியைப் புகவிட்டு, நெட்டிலே அலையாமல் - (மனம்) போனபோக்கிலே யுழலாமல், அறிவிலே-ஞானமார்க்கத்திலும், பொறையிலே-பொறுமையிலும், நின் அடியர் கூட்டத்திலே-உன்தொண்டர் குழாத்திலும், நிலைபெற்ற அன்பிலே-நிலைபெற்ற அன்பிலும், மலைவு அற்ற-மயக்கமற்ற, மெய்ஞ்ஞான நேயத்திலே-உண்மைஞான நேசத்திலும், உன் இருதாள் மட்டிலே-உன்னிரண்டு திருவடியினளவிலும், மனதுசெல்ல-என் மனஞ்செல்லும்படி, கினது அருளும் அருள்வையோ-உன்னருளையுந் தந்தருள்வையோ, வளம் மருவு - வளம்பொருந்திய, தேவை அரசே-தேவைநகர்க்கரசியே, வரைராஜ. எ-று.

மலைவளர் காதலிப்பெணுமையே, என்மனத்தை மாதர் வஞ்சனைமுதலியவற்றில் செலுத்தாமல் ஞானமார்க்க முதலியவற்றிற் செலுத்துமாறு அருள்புரியவேண்டும் என்பதாம்.

வாய்ச்சொல் முதலியவற்றுல் நூடவரைவயப்படுத்துதற்குக் காரணம் வஞ்சனையாதலால், தெட்டு என அதனை முதற்கட் கூறினர். வாய்விட்டு-ஆடவர் சொற்களைக் கண்டித்துப்பேசுதல். இன்னதுபோலுஞ் சிற்றிடையென்னுது சிற்றிடை யென வாளா கூறினமையால், சிறுமையின் இறுதியெல்லையளவுங் கொள்ளப்படும். இதனை ''எம்மையா ருடையா ளிட்டிடையின் றின்னி'' ''அகல்கின்ற வல்குற் றடமது கொங்கை யவையவநீ-புகல்கின்ற தென்னெஞ்சு கண்டே யிடை'' ''பொட்டணி யானுதல் போயிறும் பொய்பொ லிடையெனப்பூ-ணிட்டணியான்'' எனப் பல்லாற்றுணும் புனைந்துரைக்கு மேலோர் கூற்றுனு முணர்க. நடை - அன்னப் பேட்டின் நடைபோலும் நடை. இதனை, ''ஓங்குதெய்வ மருவளர் மாலையோர்வல்லியி ருெல்கி யனநடைவரய்த்து'' ''சூன்முதிர் தள்ளுநடைப் பெடைக் கிற்றுனைச் சேவல் செய்வான்-றேன்முதிர் வேழத்தின் மென்பூக்குதர் செம்மலூரன்'' பேட்டினை மடவ நடைபயில் பிடியை ''அன்னஞ் சிலம்பு நடையிளமானே'' என்றற் ருெடக்கத்தனவற்ருற் காண்க. சேலொத்த விழி - சேல்போல மிளிரும் கண். மிளர்தல் - வலமிடமாகப் பிறழ்தல். இதனை, ''செழுநீர்த் தடத்துக் கயன்மிளிர்ந் தாலெறப்ச் சேயரிக்கண், அழுநீர் துளும்ப வலமரு கின்றன'' ''வேல்போ னிறம் படைத்து வீரவாள் போலிரண்டு-சேல்போற் கயல்போற் றிசைபரந்து'' ''கயலோ நும கண்கள்'' ''அங்கயற்கண்ணி'' என்றற் ருெடக்கத்

தனவற்றினும் உணர்க. பாலொத்தமொழி-பாலின் சுவைபோலுஞ் சுவை யினையுடைய மொழி இதனை, பாலூறு தேன்வாய்ப்படிறீ கடைதிறவாய்" "பாலேய் மொழியினள்" என்றற் றொடக்கத்தனவற்றினும் உணர்க. சிறுபிறை நுதல் பூர்வபக்கத் தட்டமி சந்திரன்போலும் நெற்றி, இது, "பூருவபக்கத் தட்ட மிவிதுவைப்போலொளிர்நுதலினள்" என்றற்றொடக் கத்தனவற்றினு முணர்க. பொட்டு - "திக்காப்புள், ஒட்டுக்கு ளாவதுபோ லுள்ள பணக்காரர்க ளுன் பொட்டுக்கு ளாகவென்று பொட்டிட்டாள்" என்றபடி ஆடவரை வசிகரித்தற்பொருட்டு நெற்றியி லிடுந்திலகம்.

பூரித்த முலை - "புலியூரம் பலவர்க்குற்ற பத்தியர்போலப்பிணத்திறு மாந்த பயோதரத்து" "இருப்பைவிட் டயனுர் நெடிதுகாட் டவஞ்செய் திருகையுஞ் சிந்தையும் வருந்திச், செருப்பயின் றிறந்த மதனனைச்சுட்டத் திருமுடி வேண்டுமென் றியானை, மருப்பையும் கும்பத் தலத்தையுஞ் சக்ர வாகத்தையும் வடகனகப், பொருப்பையும் படைத்துத் தெளிந்தபின் படைத்த புளகித பூரண முலையாள்" என்றபடி இறுமாந்த முலை. நிற்கி ன்ற நிலை-இவ்வாறுள அவயவ வொப்பனையோடு ஆடவருடைய கண் மனங்களைக் கவர்தற் குரித்தாய் நிற்கிற நிலை. தெட்டிலே வலிய என வியைத்து, வஞ்சித்தலில் வலிய என வுரைப்பினு மமையும். தெட்டுதல் முதலியவற்றினும், மாதர் எனப் பன்மையாற் கூறினமையாலும் இது பெருட்பெண்டிரை நோக்கினதாகத் தோன்றுகின்றது.

3 பூதமுத லாகவே காதபரி யந்தமும்
பொய்யென் றெனைக்காட்டியென்
போதத்தி னடுவாகி யடியீறு மில்லாத
போதபூ ரணவெளிக்கு
ளேதுமற நில்லென் றுபாயமாய் வைத்துநினை
வெல்லாஞ்செய் வல்லசித்தா
மின்பவுரு வைத்தந்த வன்னையே நின்னையே
யெனியே மறந்துய்வனே
வேதமுத லானநல் லாகமத் தன்மையை
விளக்குமுட் கண்ணிலார்க்கு
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
வீறுவா தம்புகலும்வாய்
வாதகோ யாளர்க்கு மெட்டாத முக்கணுடை
யாமருந் துக்கமிர்தமே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே.

இ-ள். பூதமுதலாக - பிருதிவியாதி பூதமுதலாக, நாதபரியந்தமும்-நாததத்துவம் வரைக்கும், பொய்யென்று - பொய்யாமென்று, என்னைக் காட்டி-என்னை யறிவுறுத்தி, என்போதத்தின் கடவாகி-என்னறி வினிடையாகி, அடியீறும் இல்லாத-ஆதியந்தங்களில்லாத,போதபூரணவெளிக்குள்-ஞானபூர்ணமாகிய சிதாகாயத்தில், எதும் அறநில் என்று-ஒன்றுமற நிற்பாயென்று, உபாயமாவைத்து-உபாயமாகவைத்து, நினைவுஎல்லாம்-எண்ணங்களெல்லாம், செய்வல்ல-பலிக்கச் செய்யவல்ல, சித்தாம்-ஞானமாகிய, இன்பவுருவைத்தந்த - சுகவடிவைத் தந்தருளிய, அன்னையே - தாயே, நின்னையே-உன்னையே, எளியேன்-ஏழையேன், மறந்து உய்வனோ-மறந்துய்வேனோ, வேதம் முதலான-வேதமுதலாகிய, நல்லாகமத்தன்மையை-நல்லாகமத்தன்மையை, விளக்கும் - விளக்கிக்காட்டுகிற, உள் கண் இல்லார்க்கும்-அகக்கண்ணில்லாதார்க்கும், மிக்க-மேலான, நின் மகிமையை-உன்பெருமையை, கேளாத செவிடர்க்கும் - கேட்கர்த செவிடர்கட்கும், வீறுவாதம் புகலும் வாய்-விஞ்சியவாதம் பேசுகின்ற வாயையுடைய, வாத நோயாளர்க்கும்-வாதநோயாளிகட்கும், எட்டாத-எட்டப்படாத, முக்கண் உடை-மூன்று கண்களையுடைய, மாமருந்துக்கு-பெரிய அமிர்தத்துக்கு, அமிர்தமே-அமிழ்தாயிருப்பவளே, வரைராஜ. எ-று.

மலைவளர் காதலிப் பெண்ணுமையே, பிருதுவிமுதல் நாத தத்துவ மீறுயுள்ளவைகள் பொய்யென்று என்னை யறுவுறுத்தி, என்னறிவிற் கறிவாகி, சிதாகாயத்திற் றங்குகவென் றுபாயங் கற்பித்து, எல்லாம் வல்ல ஞானாநந்தவுருவைத் தந்த அன்னையே,இவ்வாறு சர்வோபகார பூதையான்வுன்னை, ஏழையேன் மறந்து, வேறோராற்றுன் உய்யும் விரகுளேனோவென்பதாம்.

"ஆறுறையு நீத்த தன்மேனிலே" என்ற ஆன்றோர் திருவாக்குக் கிணங்க, 'பூதமுதலாகவே நாதபரியந்தமும் பொய்யென்றெனைக் காட்டி' யென்றார்.

4 மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்யெலா முள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தங் கலிவாயில் வாசமாய்
வேதனைக ளுறவேதனோர்
குடியிட்ட வெவ்வினையை யேவினுன் பாவிநான்
தொடரிட்ட தொழில்களெல்லாம்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
றொண்டர்பணி செய்வதென்றோ

வடியிட்ட செந்தமிழி னருமையிட் டாருரி
லரிவையோர் பரவை வாயில்
அம்மட்டு மடியிட்டு நடைநடந் தருளடிக
ளடியே துமுடியே தென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே
வளமருவு தேவை யரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே.

இ-ள். மிடியிட்ட வாழ்க்கையால் - வறுமையாகிய வாழ்க்கையினால், உப்பு இட்ட கலம் எனவும் - உப்புவைத்த மட்கலம் போலவும், மெய்யெலாம் உள் உடைந்து-சரீரமெல்லாம் உள்ளுடைந்து, வீறிட்டசெல்வர்-மிகுந்த செல்வரது, தலைவாசல் வாசமாய் தலைவாயிலே வாசஸ்த்தாக மாகக் கொண்டு, வேதனைகள் உற-வேதனைகளே யடைய, வேதனும் - பிரமனும், துடியிட்ட வெவ்வினையை-பதைத்தற்குரியவெவ்வினைகளை, ஏவிணன்-ஏவிவிட்டான், பாவிநான்-பாவியாகிய நான், தொடரிட்டதொழில்களெல்லாம் தொடங்கினதொழில்கள்யாவும், துண்டிட்ட-துண்டிக்கப்பட்ட, சாண்சும்பியின் பொருட்டாயது-சாண்வயிற்றினளவாயினமே, (இதைவிடுத்து) உன் தொண்டர்பணிசெய்வது என்றோ - உன்னடியார் பணிசெய்வ தெக்காலமோ, அடியிட்ட செந்தமிழின் அருமையிட்ட-பழமையாகிய செந்தமிழின் அருமையைக் குறித்து ஆருரில்-திருவாரூரின்கண், அரிவை-அரிவையாகிய, ஓர் பரவை ஒப்பற்ற பரவையென்பாளது, வாயில் - தலைவாயிலாகிய, அம்மட்டும்-அதுவரைக்கும், அடியிட்டு-திருவடிகளூன்றி, நடை நடந்தருள்-நடைநடந்தருளிய, அடிகள்-இறைவரது, அடி ஈது-மூலமிது, முடி ஈது-ஈறு இது, எனஎன்று வடியிட்ட, தெளிவித்த, மறை-வேதங்களே, பேசு - பேசுகின்ற, பசிளங்கிள்ளையே - பசிளங்கிளியே, வளம் மருவு தேவை அரசே-வளம்பொருந்திய தேவைநகர்க்கரசியே, வரைராஜ.எ-று.

செந்தமிழி னருமையிட்டு, என்றது, சுந்தரமூர்த்தியின் செந்தமிழ்ப் பாடல்களின் அருமையைக் குறித்து என்றபடி.

மலைவளர் காதலிப் பெண்ணுமையே, யான் மருடங்கிச் செய்யுந் தொழில்கள் யாவும் சாண்வயிற்றின் பொருட்டேயாம். இதை விடுத்து உன்னடியர் பணிசெய்வ தெக்காலமோ வென்பதாம்

"பூணும் பணிக்கல்ல பொன்னுக்குந் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டிக
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர்சற்றல்ல வே..." என்னுஞ் பட்டினத்தடிகளும்.

உப்பிட்ட மட்கலம் மேலுக்கு நன்கு தோன்றினும், உட்புறத்து உளுத்துப் பொடியா யுதிர நிற்பதுபோல, இத்தச் சரீரமும் மேலுக்கு நன்கு தோன்றினும் உள்ளிடம் மநோதுக்கம் முதலியவற்றால் சிதைந்து நிற்கு மாதலால், உப்பிட்ட கலமெனவு மெய்யெலா முள்ளுடைந்து என்றார். 'பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை' என்றார் மேலோரும். "செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந் தினமும், பல்லினைக்காட்டிப் பரதவியாமல்" என்றதற் கேற்ப, "வீறிட்ட செல்வர்த் தலைவாசல் வாசமாய் வேதனைக ளுற" என்றார்.

5 பூரணி புராதனி சுமங்கலி சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புஷ்பமிசை வீற்றி ருக்கும்
காரணி மநாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
வகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசு
மாநந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யபசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தபலே
வளர்காத லிப்பெ ணுமையே.

இ-ள். பூரணி (என்று) - பூரணியென்றும், புராதனி (என்று) - புராதனியென்றும், சுமங்கலி (என்று)-சுமங்கலியென்றும், சுதந்தரி(என்று)-ஸ்வதந்த்ரியென்றும், புராந்தகி (என்று) - புராந்தகியென்றும், த்ரியம்பகி (என்று) - த்ரியம்பகி யென்றும், எழில் - அழகுள்ள, புங்கவி (என்று)-புங்கவியென்றும், விளங்கு - விளங்குகின்ற, சிவசங்கரி (என்று) - சிவசங்கரி யென்றும், சஹஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும் - ஸஹஸ்ரதளங்களுள்ள தாமரைமலரில் வீற்றிருக்கிற, காரணி(என்று)-காரணியென்றும், மநாதீத நாயகி(என்று)-மனத்துக்கெட்டாத இறைவியென்றும்,குணாதீதம்-குணங்களற்ற,நாதாந்த சத்தி (என்று)-நாதாந்த சத்தியென்றும், உன்நாமமே உச்சரித்திடும்-உன் திருநாமங்களையே யுச்சரிக்கின்ற,அடியர் நாமமே-அடியார்களுடைய திருநாமங்களையே, நான் உச்சரிக்கவசமோ - நானுச்சரிக்கவல்லேனோ, ஆர் அணிசடை-ஆத்திமலர் மாலையையணிந்த சடையையுடைய

கடவுள்-சிவபிரான், ஆரணி எனப்புகழ - வேதமுதல்வியென்று துதிக்க, அகிலாண்ட கோடி யீன்ற-அண்டகோடிகளெல்லாவுயிரையு மீன்றருளிய, அன்னையே-தாயே, பின்னையும்-(அப்படி எலலாவுலகங்களையு,மீன்றருளிய) பின்னும், கன்னியென-பாலையென்று, மறைபேசும் - வேதங்கள் துதிக்கின்ற, ஆகந்த ரூபம் மயிலே - சுகரூபமாகிய மயில்போல்வாளே, வார் அணியும்-கச்சையலங்கரிக்கின்ற. இரு கொங்கை மாதர் - இரண்டு ஸ்தனபாரங்களி னழகையும், மகிழ்-மகிழ்ச்சியையுமுடைய, கங்கை புகழ்-கங்கையால் புகழப்பெற்ற. வளமருவு தேவை யரசே, வரைராஜ எ-று.

ஓர் அணி சடை-அழகு நிறைந்த சடையெனினுமாம். வார் அணியும்-கச்சைத் தரித்த எனினும் பொருந்தும்.

மலைவளர்காதலிப் பெண்ணுமையே, பூரணி முதலியவாகிய உன் திருநாமங்களை யுச்சரிக்கின்ற உன்னடியார் திருநாமத்தை அடியேன் உச்சரிக்கவசமாமோ என்பதாம்

பூரணி முதலிய திருநாமங்கள் இறைவனைப்பற்றி இறைவிக்கு முன்வாதலால் இவ்வாறு கூறினர். பூரணி-சர்வவியாபிகி. புராதகி-பழையோள். சுமங்கலை-சுமங்கலியை இது, "வெதரஞ்சகன் மால்புரந்தான் வேகசண்டகு பேரனை. டாதி யெண்டிசை பாலர் பெயன்றவு மாதியந்தமிலாதோர், நாதர் பொன்றில நேரன் மங்கல நாணுறுக்கிற மாதலால்" என்பதனு லினிது விளங்கும். சுதந்திரி-தன் வயத்தி. புராந்தகி - திரிபுர நாசகி. த்ரியம்பகி-முக்கண்ணி. புங்கவி தேவத்வ பூர்த்தி யுள்ளவள். சங்கரி-சுகத்தையுண்டாக்குபவள். சஹஸ்ரதள புஷ்பம் - ஆயிர மிதழ்களுள்ள தாமரை மலர். இதனை வடநூலார் ஸஹஸ்ராரகமலம் என்பர். இது, மூலாதாரம், சுவாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞேயம் என்னும் ஆறுதாரங்களுக்கு மேலுள்ளது. இது,

"மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு
முதுகளம்விற் புருவநடு மொழிவதாறு
ஞாலமுமென் புனலுமனற் பிழம்புங் காலு
நாதமுறு பெருவெளியு மனமுமாக
மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட் டப்பான்
மென்கமலத் தாயிரத்தோட் டருண பீடத்
தாலவிடம் பருகியதன் மகிழ்நரோடு
மானந்த முறும்பொருளோ யறியலாமே."—என்பதனு லினிது விளங்கும். புஷ்பமிசை வீற்றிருக்கும் நாரணி-சிரத்திலே ஆயிரம் இதழுடனே கூடியிருக்கும் நாமரையின் நடுவே வீற்றிருக்கின்ற ஞான மகிழ்சியையுடைய மின்போன்ற குண்டலி சத்தி, தன்னுடைய இரண்டொதகமலங்களிலும் உள்ளிருந்து ஊறிப் புறப்படும் அமுதம் உள்ளண்ணத்தின் வழியே நா நுனியைச் செலுத்திப் பருகுதலால் உடலிலே பரந்து எழுபத்

தீராயிர நாடிகளையும் நினைப்ப, அதன்பின்பு கும்பித்த வாயுவை நேசிப்ப, அதனால், மீண்டு அவ்விடங்களையெல்லாம் அடைவிலே விட்டுக் கீழ் இறங்கி, தான் முன்னிருந்த பழைய மூலாதாரத்திலே, ஒளியையுடைய பாம்பு போல உடல்வளைத்து, மேற்கொண்டிருக்கிற படத்தையுடையதாய், நாடோறும், மையையுடைய கயல்போன்ற கண்ணினால் யோகநித்திரைசெய் சத்தி. இது,

தாளினைக் கமல மூறித் தருமமிழ் துடல மூழ்க
மீளவப் பதங்கள் யாவும் விட்டுமூற் பழைய்மூலம்
வாளர வென்ன வாகம் வளைத்துயர் பணத்தி னேடு
நாளுமைக் கயற்கண் டுஞ்சு ஞானவா னந்த மின்னே."—என்பதனாலினிது விளங்கும். மூலாதாரம் முதலிய ஆறாக்குக், குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி என்பன முறையே யிடகலைகளாம். இவற்றின் விரிவெல்லாம் யோக நூல்களிற் காண்க.

6 பாகமோ பெறவுனைப் பாடவறி யேன்மல
பரிபாகம் வரவு மனதிற்
பண்புமோ சற்றுமிலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாப ரூப
தேகமோ திடமில்லை ஞானமோ கனவிலுஞ்
சிந்தியேன் பே ரின்பமோ
சேரவென் ருற்கள்ள மனதுமோ மெத்தவுஞ்
சிந்திக்கு தென் செய்குவேன்
மோகமோ மதமோகு ரோதமோ லோபமோ
மூற்றுமாற் சரிய மோதான்
மூறியிட் டெனைக்கொள்ளு நிதியமோ தேடவெனின்
மூசுவரி வண்டு போல
மாகமோ டவும்வல்ல னெனையாள வல்லையோ
வளமருவு தேவ பரசே
வரராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே.

இ-ள். உன்னை-உன்னை, பாகம் பெறப் பாட அறியேன்-பாகமையப் பாட வறிந்திலேன், மலபரிபாகம் வரவும் - மலபரிபாக முண்டாதற்கும் மனதில் பண்புமோ சற்றும் இலை - மனதில் சற்றுணமும் சிறிதுமில்லை, நியமமோ செய்திட-நியமம் பண்ணவென்றாலோ, பாவியேன் - பாபிஷ்டனாகிய எனது, பாபரூப தேகமோ - பாவவடிவாகிய தேகமோ, திடம் இல்லை-த்ருடமில்லை, ஞானமோ - ஞானத்தையென்றாலோ, கனவிலும் சிந்தியேன்-கனவிலும் நினையேன், பேரின்பம் சேர என்றாலோ - பேரா

னநதத்தை யடையவென்றுலோ, கள்ள மனதும்-கள்ளமனமும், மெத்தவும் சிந்திக்குது-மிகவுஞ் சிந்திக்கிறது, என்செய்குவேன்-நான் என்செயக் கடவேன், மோகமோ-மோகமொன்றேயோ, மதமோ-மதமொன்றேயோ, குரோதமோ-குரோதமொன்றேயோ, லோபமோ - லோபமொன்றேயோ, முற்றும் மாற்சரியமோ-முற்றுப்பெற்ற மாற்சரிய மொன்றேயோ, (இவைகள் யாவும்) முறியிட்டு என்னைக்கொள்ளும் - முறியெழுதி யென்னைக் கொள்ளா நின்றன, நிதியமோ தேடவெனின் - பொருள் தேட வென்றுலோ, மூசு (பல மலரினும்) மொய்க்கு மியல்புள்ள, வரிவண்டுபோல-கீற்றமைந்த வண்டுபோல, மாகம் ஓடவும் வல்லன் - ஆகாயத்திலோடவும் வல்லேன், என்னை ஆளவல்லீயோ - (இப்படிப்பட்ட) என்னையாளு மாற்றலுடையையோ, வளமருவு தேவையரசே, வரைராஜ. எ-று.

மலைவளர்காதலிப் பெண்ணுமையே, உன்னைப் பாகம்பெறப்பாடுதல் முதலியவை செய்யவறியேன், ஆதலால் என்னை உய்விக்கும்பொருட்டு உன் பெருங்கருணை காரணமாக ஆண்டருள வல்லீயோ என்பதாம்.

7 தூனேறு தூசுபோல் வினையேறு மெய்யெனுந்
தொக்கினுட் சிக்கி நாளுஞ்
சுழலேறு காற்றினிடை யழலேறு பஞ்செனச்
சூறையிட் டறிவை யெல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றி
னட்பேற வுள்ளு டைந்து
நயனங்க ளற்றதோ ருரோறு போலவே
நானிலந் தனி லலையவோ
வேளேறு தந்திரையக் கனதந்தி யுடன்வென்று
விரையேறு மாலை சூடி
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறையுற
வெருட்டிய கருங் கூந்தலாய்
வாளேறு கண்ணியே விடையேறு மெம்பிரான்
மனதுக் கிசைந்த மயிலே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே.

இ-ள். தூள் ஏறு - துகளேறப்பெற்ற, தூசுபோல - வஸ்திரம்போல, வினை ஏறு-கர்மங்களேறப்பெற்ற, மெய் என்னும்-சரீரமென்கிற, தொக்கினுள் தோற்பையுள்ளே, சிக்கி அகப்பட்டு, நாளும்-நாடோறும், சுழல் ஏறு காற்றினிடை-சுழற்காற்றி லகப்பட்ட, அழல் ஏற பஞ்சு என-தெருப்புப்பட்ட பஞ்சுபோலப் பறக்கும்படி, அறிவையெல்லாம் சூறையிட்டு-அறிவை முற்றுஞ் சூறையாடி, நாள் ஏற நாள் ஏற-தினங்கள் செல்லச்செல்ல, வார்

த்திகம் என்னும்-மூப்பு என்கிற, கூற்றின்-யமனது, நட்பு ஏற-மிகுகம் அதிகரிக்க, உள்ளுடைந்து-மனங்கலங்கி, நயனங்கள் அற்றது-கண்களற்ற தாகிய, ஓர் ஊர் ஏறுபோலவே-ஒரு ஊர்ப்பன்றிபோலவே, நான்-யான், நிலந்தனில்-பூமியினிடத்து, அலையவோ - திரிய (உனக்குத் திருவுளந்தானே), வேள் ஏறு தந்தியை-மன்மதனேறி நடத்தும் யானையை, கனதந்தி புடன் வென்று - மேகங்களாகிய யானைகளோடு வென்று, விரையேறு தாலை சூடி-பரிமளம் விஞ்சிய மலர்மாலைகளைத்தரித்து, விண் ஏறு மேகங்கள்-ஆகாயத்திலேறிச் சஞ்சரிக்கிற மேகங்கள், வெற்பு ஏறி மறைவுற-மலை மேலேறி மறைய, வெருட்டிய-அச்சுறுத்திய, கருங்கூந்தலாய்-கரிய கூந்தலையுடையாளே, வாள் ஏறு கண்ணியே-வாளின்றன்மை மிக்க கண்களை புடையாளே, விடையேறு எம்பிரான் மனதுக்கு இசைந்த மயிலை-இடப மூருமெம்பெருமானது திருவுளத்துக்கிசைந்த மயூரமே, வரைராஜ. எ-று.

வேளேறு தந்தி-இருள். இது ''இருண்மால் களிறும்'' என்பதனனும், 'கங்குல் களிறு' என்பதனனு முணர்க. வாள் ஏறு கண்ணி என்பதற்கு, ஒளிமிகுந்த கண்களையுடையாள் எனினு மமையும். கனபந்தி எனவும் பாடம். இதற்கு மேகவரிசை யென்பது பொருள்.

மலைவளர்காதலிப் பெண்ணுமையே, வினைப்போகமாகிய சரீரத்தின் கட்பட்டு, படாதனபட்டு, இறுதிக்காலத்தில் கூற்றுவன் வருவனென் றஞ்சி உள்ளங்கலங்கிக் கண்கெட்ட வூர்ப்பன்றிபோல நானலையவோ என்பதாம்.

8 பூதமொடு பழகிவள ரிந்திய மாம்பேய்கள்
புந்திமுத லான பேய்கள்
போரா டுகோபாதி ராகூசப் பேய்களென்
போதத்தை யூடு ழிந்து
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தானி வல்ல லெல்லாம்
வீறும் படிக்குனது மௌனமந் த்ராதிக்ய
வித்தையை வியந் தருள்வையோ
நாதவடி வாகிய மகாமந்த்ர ரூபியே
நாதாந்த வெட்ட வெளியே
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே
ஞானவா னந்த மயிலே
வாதமிடு பரசமயம் பாவுக்கு மூணர்வரிய
மகிமைபெறு பெரிய பொருளே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே.

இ-ள். பூதமொடு பழகிவளர்-பூதங்களோடு பழகிவளர்கின்ற, இந்திரியம் ஆம் பேய்கள்-இந்திரியங்களாகிய பேய்கள், புந்திமுதலான பேய்கள்-புத்திமுதலாகிய பேய்கள், போராடு-போராடுகின்ற, கோபாதி ராக்ஷசப் பேய்கள்-கோபம் முதலாகிய ராக்ஷசப்பேய்கள, (ஆகிய இவைகள்) என் போதத்தை ஊடு அழித்து-என்னறிவை யுள்ளழித்து, வேதனை வளர்த்திட-துன்பத்தை விருத்திசெய்யும்படி, சதுர்வேத வஞ்சன் விதித்தான்-பிரமன் வகுத்தான், இவ்வல்லல் எல்லாம்-இத்துன்பங்களெல்லாம், வீழும் படிக்கு-நசிக்கும்படிக்கு, உனது-உன்னுடைய, மௌன மந்த்ரம்-மௌனமாகிய, ஆதிக்ய வித்தையை - மேன்மையாகிய வித்தையை, வியந்து அருள்வையோ-மனமகிழ்ந்தருளிச் செய்வையோ, நாதவடிவாகிய-நாதரூபமாகிய, மஹாமந்த்ரரூபியே-மஹாமந்த்ரரூபமுள்ளவளே, நாதாந்த வெட்ட வெளியே - நாதாந்தமாகிய வெறுவெளியே, நற்சமயமான பயிர்-(சைவம் என்கிற) சற்சமயமாகிய பயிர், தழையவருமேகமே - செழிக்கவருகின்ற மேகமே, ஞான ஆனந்த மயிலே-ஞானானந்தங்களையுடைய மயிலே, வாதம் இடு-தர்க்கவாதஞ்செய்கிற, பரசமயம் யாவுக்கும்-இதரசமயங்க ளெல்லாவற்றுக்கும், உணர்வு அரிய-அறிதலருமையாகிய, மகிமைபெறு-மேன்மை பெற்ற, பெரிய பொருளே-பெரிய வஸ்துவே, வரைராஜ. எ-று.

"சைவசமயமே சமயம்" என்பதனால், நற்சமயம் என்றதற்குச் சைவ சமயம் என்றுரைக்கலாயிற்று. வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன் விதித்தான் என்றது, அவனது கல்வியறிவிற் குரிய அஹங்காரம் முதலிய நற்குணங்களினாலென்றற்கு. சதுர்வேத அஞ்சன் எனப்பிரித்து, நான்கு வேதங்களையும் அஞ்னவாகனத்தையு முடையவன் என வுரைத்தலும் பொருந்தும்.

மலைவளர்காதலிப் பெண்ணுமையே, இந்திரியப்பேய்கள் முதலியவை என்னறிவைக்கெடுத்து வேதனையை விருத்தியடைவிக்கும்படிப் பிரமனு யே வஞ்சகன் விதித்தனன், இவ்வேதனைக ளெல்லாம் நிர்மூலமாம்படி, உனது மௌனமந்த்ர வித்தையை, மனமகிழ்ந்து எனக் கருள்புரிவையோ என்பதாம்.

அகிலாண்ட நாயகி.

1 வட்ட மிட்டொளிர்பி ராண வாயுவெனு
நிகள மோடுகம னஞ்செயு
மனமெ னும்பெரிய மத்த யானையைவென்
வசம டக்கிடின்மு மண்டலத்
திட்ட முற்றவள ராஜ யோகமிவன்
யோக மென்றறிஞர் புகழவே

யேழை யேனுலகி னீடு வாழ்வனினி
யிங்கி தற்குமனு மானமோ
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுக யோகமும்
பார காவியக விர்வ நான்மறை
பாராய ணஞ்செய்மதி யூகமும்
அட்ட சித்தியுக லன்ப ருக்கருள
விருது கட்டியபொ னன்னமே
அண்ட கோடிபுகழ் காவை வாழுமகி
லாண்ட நாயகியெ னம்மையே.

இ-ள். வட்டமிட்டு ஒளிர்-வட்டமிட்டுப் பிரகாசிக்கிற, பிராணவாயு என்னும்-ப்ராணவாயுவென்கிற, நிகளமோடு-விலங்குடன், கமனம்செய்யும்-கடக்கின்ற, மனம் என்னும்-மனமென்கிற, பெரிய மத்தயானையை-பெரிய மதயானையை, என்வச அடக்கிடின்-என் வசத்தில் அடங்கும்படி செய்தால், மும்மண்டலத்து-மூன்றுலகங்களிலும், இட்டமுற்ற-விரும்பத் தகுதியான, வளம் - வளம்பொருந்திய, ராஜயோகம் - ராஜயோகமே, இவன் யோகம் என்று-இவனது யோகமென்று, அறிஞர்புகழ்-அறிஞர்புகழும்படி, எழையேன்-எளியேன், உலகில் நீடுவாழ்வன்-உலகில் நெடுங்காலம் வாழ்வேன், இனி-இனி, இங்கு இதற்கும் அனுமானமோ - இவ்விடத்து இதற்கும் அனுமானந்தானே, பட்டவர்த்தனர் பராவு-பட்டவர்த்தகர் துதிக்கத்தக்க, சக்ரதர பாக்யமான-சக்ரவர்த்தித்வமென்கிற பாக்கியமாகிய, சுக யோகமும்-சுபயோகத்தையும், பாரகாவிய கவித்வம்-பெருங்காவிய கவித்வத்தையும், நான்மறை-நான்குவேதங்களை, பாராயணஞ்செய்-பாராயணஞ் செய்யும்படியான, மதியுகமும்-மதியூகப்பத்தையும், அட்டசித்தியும்-அட்டமாசித்திகளையும், நல்லன்பருக்கு அருள-நல்லடியார்க்கருள்செய்ய, விருது கட்டிய-விருது கட்டிக்கொண்ட, பொன் அன்னமே - ஸ்வர்ண ஹம்ஸம் போல்பவளே, அண்டகோடி புகழ்-அண்டகோடிகள் புகழ்கின்ற, காவை வாழும்-திருவானைக்காவில் வாழ்கின்ற, அகிலாண்ட நாயகி - அகிலாண்ட நாயகியென்னும்திருநாமம்பெற்ற, என் அம்மையே-என்தாயே. எ-று.

அகிலாண்டநாயகியே, வாயுமனங்கள் என்வயப்படும்வண்ணம் அருள் புரிவையாயின், மூன்றுலகங்களும் புகழ யான் இனிது வாழ்வேன் என்பதாம்.

பெரியநாயகி-விருத்தம்.

1 காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி
கன்மப் புனற்கு ளூறுங்
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்
காயத்து ளுனை யிருத்திச்
சோற்றைச் சுமத்திநீ பங்கித்து வைக்கத்
துருத்திக்குண் மதுவென்னவே
துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேனருட்
டோயநீ பாய்ச்சல் செய்து
நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப் பட்டியு
நமனை தீப்பூடு மணுகாமன் முன்னின்று
நாடுசிவ போக மான
பேற்றைப் பகுத்தருளி யெனையாள வல்லீயோ
பெரியவகி லாண்ட கோடி
பெற்றநா யகிபெரிய கபிலைமா நகர்மருவு
பெரியநா யகி யம்மையே.

இ-ள் காற்றைப் பிடித்து-வாயுவைபிடித்து, மட்கரகத்து-மட்கலயத்தில், அடைத்தபடி-அடைத்தது போல, கன்மப் புனற்குள் ளூறும்-கர்மமாகிய நீரில் ஊறிக்கொண்டிருக்கிற, கடைகெட்ட - இழிந்த, நவவாயில் பெற்ற-ஒன்பது வாயில்களையுடைய, பசு மட்கலம்-பச்சை மண்பாத்திரம் போன்ற, காயத்துள்-தேகத்தினுள்ளே, என்னை யிருத்தி-என்னை யிருக்கச் செய்து, சோற்றைசுமத்தி-அன்னத்தையேற்றி, நீபங்கித்து வைக்க-நீ கட்டிவைக்க, துருத்திக்குள் மதுவென்ன-துருத்தியிலடைத்துவைத்த கள்ளைப் போல, துள்ளித் துடித்து - துள்ளிப்பதைத்து, என்ன பேறு பெற்றேன்-என்ன லாபமடைந்தேன், (ஒன்றுமில்லையாதலால்) நீ அருள தோயம் பாய்ச்சல் செய்து-நீ உன் திருவருளாகிய நீரைப்பாய்ச்சி, நாற்றைப்பதித்தனை-நாறு பதித்தார்போல, ஞானம் ஆம்பயிரதனை நாட்டி ஞானமாகிய பயிரை நட்டு, புலன்-புலன்களாகிய, பட்டியும்-பட்டிமாடுகளும், நமன் ஆனையமன் என்றுசொல்லப்படுகிற, தீப்பூடும்-தீப்பூதும், அணுகாமல் - சேராமல், முன்னின்று-எதிரில்நின்று, நாடு-விரும்புதற்குரிய, சிவபோகம் ஆனபேற்றை-சிவானுபவமாகிய பலனை, பகுத்தருளி பகிர்ந்தருளி, என்னை ஆள வல்லையோ-என்னையாண்டருளவல்லீயோ, பெரிய - பெரியதாகிய, அகிலாண்ட கோடி-அகிலாண்டகோடிகளை, பெற்ற நாயகி - ஈன்றருளிய இறைவியே!

பெரிய-பெரிய, கபிலமாகர் மருவு-கபிலமாகரில் எழுந்தருளியிருக்கிற, பெரிய நாயகி அம்மையே-பெரியநாயகி யம்மையே எ-று.

பெரியநாயகியம்மையே, சரீரத்துள் என்னை யிருத்திவைக்க, திருத்தி யிற் கள்ளைப்போலத் துள்ளித்துடித்து என்ன பயனடைந்தேன், உன்னரு ளாகிய நீர் பாய்ச்சி, சிவானுபவ விளைவையெனக்குப் பகிர்ந்தருளி, என்னைக் காக்கவல்லையோவென்பதாம்.

தந்தை தாய்.

1 தந்தையாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை
சகமனைத்து மெளனியரு டழைத்த போதே
யிந்திரசா லங்கனவு கான னீரா
யிருந்ததுவே யிவ்வியற்கை யென்னே யென்னே.

இ-ள். தந்தைதாய் - தந்தைதாயார், மகவு - பிள்ளை, மனை-மனையாள், வாழ்க்கை- (இவர்களோடு கூடிவாழும்) வாழ்வு, யாக்கை-சரீரம், சகம்-இந்தப் பிரபஞ்சம், (ஆகிய) அனைத்தும் - எல்லாம், மௌனி அருள் தழைத்த போதே-மௌன குருவினது அருள் செழித்தபோதே, இந்திரசாலம் (ஆய்) இந்திரசாலம்போலவும், கனவு (ஆய்)-கனவுபோலவும், கானல் நீர் ஆய்-கானற் சலம்போலவும், இருந்ததுவே-இருந்தே, இவ்வியற்கை-இந்தச் சுபாவம், என்னே என்னே-யாதே யாதே எ-று.

மௌனகுருவின் அருள் என்னிடத்துத் தழைத்தபோதே, தந்தை தாய் முதலாக விவகரிக்கப்படுகிற பிரபஞ்சமுழுதும், இந்திரசால முதலியவை போலப் பொய்யாயொழித்ததென்பதாம்.

2 என்னைநான் கொடுக்கவொருப் பட்ட கால
மியாதிருந்தென தெதுபோயென் னென்னை நீங்கா
வன்னைபோ லருள்பொழியுங் கருணைவாரி
யானந்தப் பெருமுகிலே யரசே சொல்லாய்.

இ-ள். என்னை-என்னையே, நான்கொடுக்க-நான்கொடுத்தற்கு, ஒருப் பட்டகாலம்-இசைந்தகாலத்தில், யாது இருந்து என்-எதுவிருந்தாலென்ன, எது போய் என்-எதுபோனலென்ன, என்னை நீங்கா-என்னைவிட்டுப் பிரியாத, அன்னைபோல்-தாயைப்போல, அருள்பொழியும்-அருள் மழையைச் சொரிகின்ற, கருணைவாரி-கருணைசமுத்திரமே, ஆனந்தப்பெருமுகிலே-இன்பப்பெருமேகமே, அரசே-அதிராசனே, சொல்லாய் சொல்வாயாக. எ-று.

எல்லாப் பொருள்களையும் இருவகைக்கிழமையான் ஆளவல்லதானே யற்றொழிற் காலத்து, அப்பொருள்கள் இருந்ததென்ன போயென்ன என்

பார், என்னேநான் கொடுக்க வொருப்பட்ட காலம் யாதிருந்தென் னெது போயென் என்றார். இறைவனே, என்னையே நான்கொடுக்க விசைந்த காலத்தில், எது இருந்தால்தா னென்ன எது போனால்தானென்ன என்ப தாம்.

3 அரசேநின் றிருக்கருணை யல்லா தொன்றை
யறியாத சிறியேனு னதனுன் முத்திக்
கரைசேரும் படிக்குனருட் புணையைக் கூட்டுங்
கைப்பிடியே கடைப்பிடியாக் கருத்துட் கண்டேன்.

இ-ள். அரசே - அரசனே, நான் - யான், நின் திருக்கருணை அல் லாது-உன் திருவருளே யன்றி, ஒன்றை அறியாத - வேறொருபொருளையு மறியாத, சிறியேன் சிறியனேன், அதனால் - ஆதலால், முத்திகரை சேரும் படிக்கு-முத்தியாகிய கரையை யடையும்வண்ணம், உன் அருள் புணையை-உன் திருவருளாகிய மரக்கலத்தை, கூட்டும்-இடைக்கச்செய்கின்ற, கைப் பிடியே - உன் கைப்பிடியே, கடைப்பிடி ஆ - கருமமுடிக்கும் துணிவாக, கருத்துள் கொண்டேன்-மனத்துட்கொண்டேன். எ-று.

4 கண்டேனிங் கென்னையுமென் றனையு நீங்காக்
கருணையுநின் றன்னையுநான் கண்டேன் கண்டேன்
விண்டேனென் றெனைப்புறம்பாத் தள்ளவேண்டாம்
விண்டதுநின் னருக்களிப்பின் வியப்பா லன்றே.

இ-ள். இங்கு-இவ்விடத்து, என்னையும் கண்டேன் - என்னையும்பார்த் தேன், என்தனையும் நீங்கா கருணையும்-என்னையும் நீங்காத கருணையையும், நின் தன்னையும் - உன்னையும், நான் கண்டேன் கண்டேன் - நான்பார்த் தேன் பார்த்தேன், (ஆனால்) விண்டேன் என்று-வெளிப்படச் சொன்னே னென்று, என்னைப் புறம்பு ஆ தள்ளவேண்டாம்-என்னை வெளியிற்றள்ள வேண்டாம், விண்டதும் - நான் சொன்னதும், நின் அருள் களிப்பின் - உன் திருவருட் களிப்பாலுளதாகிய, வியப்பால் அன்றே - அதிசயத்தா லல்லவோ. எ-று.

5 ஓவென்ற சுத்தவெளி யொன்றே நின்றிங்
குயிரையெல்லாம் வம்மினென வுவட்டாவின்பத்
தேவென்ற நீகலந்து கலந்து முத்தி
சேர்த்தனையேற் குறைவாமோ செகவிலாசம்.

இ-ள். ஓ என்ற-ஓவென்று கொண்டாடத்தக்க, சுத்தவெளி ஒன்றே நின்று-வேறுவெளி யொன்றின்கண்ணேநின்று, இங்கு உயிரையெல்லாம்-இவ்விடத்துள்ள வுயிர்களே யெல்லாம், வம்மின் என - வாருங்களென்று அழைத்து, உவட்டா இன்பம் - தெவிட்டாத ஆனந்தத்தைத் தருகிற,

தே என்ற-தெய்வமென்று சொல்லப்படுகிற, நீ கலந்து கலந்து - நீ கூடி கூடி, முத்தி சேர்த்தனையேல்-மோக்ஷத்திற் சேர்த்தனையாயின், செகவிலாசம் குறைவு ஆமோ-பிரபஞ்சலீலை குறைவுபடுமோ. எ-று.

6 செகத்தையெல்லா மணுவளவுஞ் சிதரு வண்ணஞ்
சேர்த்தணுவில் வைப்பையணுத் திரளை யெல்லா
மகத்துவமாப் பிரமாண்ட மாகச் செய்யும்
வல்லவா நீநினைந்த வாறை யெல்லாம்.

இ-ள். செகத்தையெல்லாம்-பிரபஞ்சத்தை யெல்லாம், அணுவளவும்-அணுபரிமாணமாயினும், சிதருவண்ணம்-சிதருதலைவகை, அணுவில்சேர்த்து வைப்பை - அணுவினிடத்துச் சேர்த்துவைப்பாய், அணுத்திரளை யெல்லாம் - அணுக்கூட்டங்களையெல்லாம், மகத்துவமா - பெருமையுள்ளனவாகத் தோன்ற, பிரமாண்டம் ஆகச்செய்யும் - ப்ரம்மாண்டமாகப் பண்ணுகின்ற, வல்லவா-சர்வசக்தனே, எல்லாம்-யாவும், நீ நினைந்த ஆறை-நீ சங்கற்பித்தபடியே. எ-று.

7 சொல்லாலே வாய்துடிப்ப தல்லா னெஞ்சந்
துடித்திருக ணீரருவி சொரியத் தேம்பிக்
கல்லாலே யிருந்தநெஞ்சுங் கல்லான் முக்கட்
கனியேநெக் குருகிடவுங் காண்பேன் கொல்லோ.

இ-ள். சொல்லாலே - சொற்களாலே, வாய் துடிப்பதல்லால் - வாய் பதைப்பதன்றி, நெஞ்சம் துடித்து-மனம்பதைத்து, இருகண்-இரண்டுகண்களும், நீர்-நீரை, அருவிசொரிய-அருவிபோலப்பொழிய, தேம்பி-வாடி, கல்லால்-கல்லாலின் நீழலி லெழுந்தருளியிருக்கிற, முக்கண் கனியே-மூன்று கண்களையுடைய பரமே, கல்லால் வ்ய் இருந்த நெஞ்சும்-கல்லானேயியன்றிருந்த மனமும், நெக்கு-நெகிழ்ந்து, உருகிடவும் காண்பேனோ-உருகவுங் காண்பேனோ. எ-று.

பெற்றவட்கே.

1 பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறுப்பேதை யறிவானோ பேரா னந்த
முற்றவர்க்கே கண்ணீர்கம் பலையுண் டாகு
முறுதவரே கன்னெஞ்ச மூடையாவார்.

இ-ள். அந்த வருத்தம்-அந்தக் (கருவுயிர்க்கும்) துன்பம், பெற்ற வட்கே தெரியும்-ஈன்றவளுக்கே தெரியும், பிள்ளைபெறுப்பேதை அறிவானோ பிள்ளைபெறாத பேதைப்பெண் அறிவானோ. (அறியாள் அதுபோல)

பேரானந்தம் உற்றவர்க்கே - பேரின்பமடைந்தவர் களுக்கே, கண்ணீர்கம் பலை உண்டாகும் - கண்ணீர் கம்பலைக ளுளவாகும், உறுதவரே - அடை யாதவரே, கல்நெஞ்சம் உடையர்ஆவார்-கன்னெஞ்சையுடையவர்களாவார் கள். எ-று.

2 ஆவாவென் றழுதுதொழுங் கையராகி
யப்பனே யானந்த வடிகளேநீ
வாவாவென் றவர்க்கருளுங் கருணை யெந்தாய்
வன்னெஞ்சர்க் கிரங்குவதெவ் வாறு நீயே.

இ-ள். ஆவா என்று அழுது-ஐயோவென்றழுது, தொழும் கையர்ஆகி வணங்குகிற கைகளையுடையவர்களாகி, அப்பனே-ஐயனே, ஆனந்த அடி களே-இன்பத்தைத் தருகின்ற சுவாமியே, நீ வாவா என்றவர்க்கு-நீ வாவா வென் றழைத்தவர்களுக்கு, அருளும்-அருள் செய்கிற, கருணை எந்தாய்-கருணையுடைய எந்தையே, நீ-நீ, வன்னெஞ்சர்க்கு-வலிய நெஞ்சினையுடை யார்க்கு, இரங்குவது-இரங்கியருள்வது, எவ்வாறு-எவ்விதம். எ-று.

3 நீயேயிங் கெளியேங்குந் தாக மோக
நினைவூடே நின்றுணர்த்தி நிகழ்த்தலாலே
பேயேற்குந் தனக்கெனவோ ரன்பு முண்டோ
பெம்மானே யின்னமன்பு பெருகப் பாராய்.

இ-ள். நினைவூடே நின்று உணர்த்தி நிகழ்த்தலாலே-நினைவின் கண் ணே நின் றறிவுறுத்தி நடத்துகையாலே, எளியேற்கும் - எளியேனுக்கும், தாகமோகம்-தாகமோகருபமாயுள்ளவன், நீயே-நீயே, பேயேற்கும் - பேய னேனுக்கும், தனக்கு என-தனக்கென்று, ஓர் அன்பும் உண்டோ-ஒரு அன் புமுளதோ, பெம்மானே-பெருமானே, இன்னம் இன்னமும், அன்பு பெரு கப்பாராய்-அன்புவளரப் பாராய். எ று.

4 பாராயோ யென்னுயர மெல்லா மையா
பகருமுன்னே தெரியாதே நா பாவி யேன்முன்
வாராயோ வின்னமொரு காலு ஞலு
மலர்க்காலென் சென்னியிசை வைத்தி டாயோ.

இ-ள். என் துயரம் எல்லாம்-என் துக்கங்களையெல்லாம், பாராயோ-பார்க்கமாட்டாயோ, ஐயா - ஐயனே, பகருமுன்னே-சொல்வதற்கு முன் பே, தெரியாதே - தெரியாதா, பாவியேன்முன்-பாவியாகிய என்னெதி ரில், இன்னம் ஒருகால் ஞலும் - இன்னம் ஒருதரமாவது, வாராயோ-வரமாட்டாயோ, மலர் - தாமரைமலர்போன்ற, கால் திருவடிகளை, என் சென்னி யிசை வைத்திட்டாயோ-என்சிரசின்மேல் வைக்கமாட்டாயோ.

5 வைத்திடுங்கா லேப்பிடித்துக் கண்ணின் மார்பில் [டிச்
வைத்தணைத்துக் கொண்டுகையால் வளைத்துக் கட்
சித்தமிசைப் புகவிருத்திப் பிடித்துக் கொண்டு
தியக்கமற வின்பசுகஞ் சேர்வ தென்றே.

இ-ள். வைத்திடும் காலேப்பிடித்து (அப்படி என் சிரசின் மீது) வை
கின்ற திருவடிகளேப்பிடித்து, கண்ணில்-கண்களிலும், மார்பில் - மார்பி
லும் வைத்து, அணைத்துக்கொண்டு-வைத்துத் தழுவிக்கொண்டு, கையால்
வளைத்துக் கட்டி-கையிலுல் வளைத்துக்கட்டி, சித்தமிசைப் புக இருத்தி-
சிரஞ்சின்மீது பொருந்த விருத்தி, பிடித்துக்கொண்டு-பற்றிக்கொண்டு,
தியக்கம் அற - மயக்கமில்லாமல். இன்ப சுகம்-பேரின்பத்தை, சேர்வது
என்றே-அடைவது எக்காலமோ.எ-று.

6 சேராமற் சிற்றினத்தைப் பிரித்தெந்நாளும்
திருவடிப்பே ரினத்துடனே சேராவண்ண
மாராக நானலைந்தே னரசே நீதா
னறிந்திருந்து மாயையிலே னழுந்த வைத்தாய்.

இ-ள். சிற்றினத்தை-சிற்றினத்தாரை, சேராமல் பிரித்து - சேராமல்
வேறுபடுத்தி, எந்நாளும்-எக்காலமும், திருவடிப் பேரினத்துடனே-திரு
வடியையடைந்த பேரினத்தாரோடு, சேராவண்ணம் - கூடாதவகை, ஆர்
ஆகான் அலைந்தேன்-என்னையாராக நினைத்தான் அலைந்தேன், அரசே-
அரசனே, நீதான் அறிந்திருந்தும்-நீதானே யறிந்திருந்தும், என்-யாதுக்கு,
மாயையில் அழுந்தவைத்தாய்-மாயையில் மூழ்க வைத்தாய். .எ-று.

7 வைத்தபொரு ளுடலாவி மூன்று நின்கை
வசமெனவே யாகொடுக்க வாங்கிக் கொண்டு
சித்தமிசைப் புகுந்ததுதான் மெய்யோ பொய்யோ
சிறியேற்கிங் குளவுரையாய் திகையா வண்ணம்.

இ-ள். வைத்த-தேடிவைத்த, பொருள்-பொருளும், உடல்-உடலும்,
ஆவி-ஆவியும் ஆகிய, மூன்றும்-மூன்றனையும், நின்கைவசம் என-உன்கை
யடையென்று, யான் கொடுக்க-நான்கொடுக்க, வாங்கிக்கொண்டு-ஏற்றுங்
கொண்டு, சித்தமிசை-என்மனதிடத்தில், புகுந்ததுதான் - பிரவேசித்தது
தான், மெய்யோ பொய்யோ-உண்மையோ அபத்தமோ, இங்கு-இவ்விடத்
தில், திகையாவண்ணம்-மனம் மயங்காவண்ணம், சிறியேற்கு - சிறியேனுக்
கு, உளவு உரையாய்-உட்கிடையைப் பேசு, எ-று.

8 திகையாதோ வெந்நாளும் பேரா னந்தத்
தெள்ளமுத முதவாமற் றிவலே காட்டி
வகையாக வலக்கழித்தா யுண்டு டித்து
வாழ்ந்தேனு னிரண்டுகான் மாடு போலே.

இ-ள். திகையாதோ-திகையாதா, எந்நாளும்-எக்காலமும், பேரானந்தத்தெள் அமுதம் உதவாமல்-பேரின்பமாகிய தெளிந்த அமிர்தத்தைக் கொடாமல், திவலே காட்டி - துளிகாட்டி, வகையாக - வகைவகையாக, அலக்கழித்தாய் - அலையவைத்தாய், நான் இரண்டுகால் மாடுபோலே நானிருகால்மாடுபோல, உண்டு உடுத்துவாழ்ந்தேன் உண்டும் உடுத்தும் வாழ்த்திருந்தேன். எ-று.

9 மாடுமக்கள் சிற்றிடையார் செம்பொ னுடை
வைத்தகன தனமேடை மாட கூடம்
வீடுமென்பாற் றொடர்ச்சியோ விடை விடாமன்
மிக்ககதி வீடன்றே விளங்கல் வேண்டும்.

இ-ள். மாடு-மாடு, மக்கள்-பிள்ளைகள், சிற்றிடையார்-மாதர்கள், செம்பொன்-உயர்ந்தபொன், ஆடை-வஸ்திரம், வைத்த - ஈட்டிவைத்த, கனதனம்-பெரியதனம், மேடை-மேடை, மாட கூடம்,- மாளிகை சாலைகள், வீடும் என்பால்-விட்டோடுகிற என்னிடத்தில், தொடர்ச்சியோ-தொடர்ச்சியையுடையனவோ, இடைவிடாமல்-இடையீடின்றி, மிக்ககதி-மேன்மையாகிய கதியென்று சொல்லப்படுகிற, வீடு அன்றே - மோக்ஷமல்லவா, விளங்கல் வேண்டும்-பிரகாசித்தல் வேண்டும். எ-று.

10 விளங்கவெனக் குள்ளுள்ளே விளங்கா நின்ற
வேதகமே போதகமே விமல வாழ்வே
களங்கரகி தப்பொருளே வென்னே நீங்காக்
கண்ணுதலே நாதாந்தக் காட்சிப் பேறே.

இ-ள். விளங்க-தெரியும்படி, எனக்கு உள்ளுள்ளே விளங்காநின்ற-எனக்கு உள்ளுள்ளே பிரகாசியாநின்ற, வேதகமே-வேதகப் பொருளே, போதகமே-சூசித்துணரும்பொருளே, விமலவாழ்வே-நிர்மலவாழ்க்கையே, களங்கரகிதப்பொருளே-களங்கமற்ற வஸ்துவே, என்னே நீங்கா-என்னைப் பிரியாத, கண்ணுதலே-நெற்றிக்கண்ணனே, நாதாந்தம் - நாதத்துவத்தின் முடிவில், காட்சி-காட்சிப்பொருளாகிய, பேறே-லாபமே. எ-று.

11 நாதமே நாதாந்த வெளியே சுத்த
ஞாதுருவே ஞானமே ஞேயமே நல்

வேதமே வேதமுடி வான மோன
வித்தேயிங் கென்னையினி விட்டி டாதே.

இ-ன். நாதமே - நாதரூபமே, நாதாந்த வெளியே - நாதமுடிவாகிய வெளியே, சுத்த ஞாதுருவே-சுத்தமான ஞாதுருவே, ஞானமே-ஞானமே, ஞேயமே-ஞேயமே, நல்வேதமே - சிறந்தவேதமே, வேதமுடிவான-வேத முடிவாகிய, மோன வித்தே-மௌன பீஜமே, இங்கு-இவ்விடத்து, என்னை-என்னை, இனி விட்டிடாதே-இனிக்கைவிட்டு விடாதே. எ-று.

கல்லாலின்.

1 கல்லாலி னீழறனி லொருநால் வர்க்குங்
கடவுணீ யுணர்த்துவதுங் கைகாட் டென்றுற்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்பு பற்றிக் கடல்கடக்குந் துணிபே யன்றே.

இ-ள். கல்லாலின் நீழறனில்-கல்லாலின் நிழலில் வீற்றிருந்து, ஒரு நால்வர்க்கும் - சனகாதிகளாகிய ஒருநால்வருக்கும், கடவுள் நீ உணர்த்துவதும்-கடவுளாகிய நீ யறிவுறுத்தியதும், கைகாட்டு என்றுய்-கைகாட்டாலேயாமாயின் (அது) சொல்லாலே சொல்லப்படுமோ-சொல்லாற் சொல்லப்படுவதோ, சொல்லும் தன்மை-சொல்லுந்தன்மையானது, துரும்புபற்றிக் கடல் கடல் கடக்கும் துணிபேயன்றே-துரும்பைத் தோணியாகப் பற்றிக் கொண்டு கடலைக் கடந்து செல்லுந் துணிவினை நிகர்த்ததல்லவா. எ-று.

கடவுள் நீ என்பதைக் கடவுளே நீயெனப் பிரித்துரைத்தலுமாம். கடவுள்-எல்லாவற்றையுங் கடந்தலையுடையான். கைகாட்டல் சும்மாவிரு வெனக் கையமைத்தல். சொல்லுந்தன்மை துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபேயன்றே என்றமையால், கைகாட்டல் மரக்கலம் பற்றிக்கடல் கடத்தல் என்பது பெறப்படும்.

2 அன்றேவா மோவெனவுஞ் சமய கோடி
யத்தனையும் வெவ்வேறு யாற்ற நேரே
நின்றுயே நினைப்பெறுமா றெவ்வா றுன்கே
நின்னருள்கொண் டறிவதல்லா னெறிவே றுண்டோ.

இ - ள். அன்றே வாமோ எனவும் - (பொருள் இது) அல்லவோ வாமோ என்றும், சமயகோடி அத்தனையும்-சமயகோடிகள் யாவும், வெவ் வேறுய் அரற்ற - வேறு வேறுய் நின்றார்ற்றும்படி, நேரே நின்றுயே - (அவரவர் கொள்கைக் கிசைய) நேரே நின்றனையே, நினைப்பெறும் ஆறு எவ்வாறு-உன்னைப் பெறும்வழி யெவ்வழி, உன்கே - அவ்விடத்து, நின்

அருள்கொண்டு-உன்னருளைக் கொண்டே, அறிவது அல்லால் - உணர்வ தன்றி, நெறி-அறியு நெறி, வேறு உண்டோ-வேறுளதோ. எ-று.

3 நெறிபார்க்கி னின்னையன்றி யகிலம் வேறே
நிலநீர்தீக் கால்வானு நீய லாத
குறியாது மில்லையென்றால் யாங்கள் வேறே
கோதையொரு கூறுடையாய் கூறாய் கூறாய்.

இ-ள். நெறிபார்க்கின் - முறையாகப் பார்த்தால், நின்னை அன்றி. உன்னை யல்லது, அகிலம் வேறே-உலகம் வேறே, நிலம்-பூமியும், நீர் நீரும், தீ-நெருப்பும்.கால்.காற்றும், வானும்-ஆகாயமும், நீ அல்லாதகுறியா தும் இல்லையென்றால்-நீ யல்லாத அடையாளம் சிறிதும் இல்லையென்றால் யாங்கள் வேறே-நாங்கள் வேறு தூமோ, கோதை உமாதேவியை, ஒருகூறு உடையாய்-ஒருபாகத்தினுடையானே, கூறாய் கூறாய்-சொல்லாய் சொல் லாய். எ று.

வானும் என்ற வும்மை நில நீர் தீக்கால் களுக்கும் கூட்டியுரைக்கட பட்டது.

4 கூறிய வைம்பூதச் சுமையைத் தாங்கிக்
குணமிலா மனமெனும்பேயக் குரங்கின் பின்னே
மாறுத கவலையுடன் சுழல வென்னை
வைத்தனையே பரமேநின் மகிமை நன்றே.

இ-ள். கூறு ஆய-பாகிக்கப்பட்டனவாகிய, ஐம்பூதம்-பஞ்சபூதங்களா லாக்கப்பட்ட, சுமையை உடற்சுமையை, தாங்கி சுமந்து, குணம் இல்லா-குணமற்ற, மனம் என்னும்-மனமென்கிற, பேய்க்குரங்கின் பின்னே-பேய் கொண்ட குரங்கின்பின் சென்றடைந்து, மாறுத கவலையுடன் நீங்காத கவலை யோடு, சுழல-சுழலும்படி, என்னை வைத்தனையே-என்னை வைத்தாயே, பரமே-பரம்பொருளே, நின் மகிமை நன்று-உன் பெருமை அழகிது. எ-று.

கூறிய வைம்பூதம்-பஞ்சீகரிக்கப்பட்ட பஞ்சபூதம். இதன் விரிவெல் லாம் "ஐந்து பூதமும் பத்தாக்கி யிற்பாதி நந்நான் காக்கி-வந்தனதூல பூதம்" என்னுந் தொடக்கத் தான்றோர் திருவாக்குக்களா னுணர்க. குரங் கே சலந மிக்குளதாக, பேய்க்குரங்கு என மனத்தையெடுத் தோதியது, அதினும் அதிக சலநமுள்ளது இம்மனமென்பதை வலியுறுத்தற்கு.

இது "திரிகையிலாயிரவெல்லாழிமண்விண்டருதிரபாத்
திரிகையிலாயிரவாகந்தாடகிசெரிமதிகாத்
திரிகையிலாயிரமங்குமைந்தாசெந்திலாயொருகால்
திரிகையிலாயிரக்கோடிசுற்றேறுந்திருத்துளமே." என்றற் றொ

5 நன்றெனவுந் தீதெனவு மெனக்கிங் குண்டோ
நானுகி நீயிருந்த நியாயஞ் சற்றே
யின்றெனக்கு வெளியாரு லெல்லாம் வல்ல
விறைவாநின் னடியருட னிருந்து வாழ்வேன்.

இ-ள். நன்று எனவும் - நன்மையென்றும், தீது எனவும்-தீமையென்றும், எனக்கு இங்கு உண்டோ-எனக்கிவ்வுலகத்திலுளதோ, நீ நான் ஆகி இருந்த நியாயம்-நீயே நானுயிருந்த நியாயமானது, இன்று - இப்பொழுது, எனக்கு-எனக்கு, சற்று வெளி ஆனல்-சிறிது வெளியாயின், எல்லாம்வல்ல இறைவா-எல்லாம் செய்யவல்ல இறைவனே, நின் அடியருடன் இருந்து-உன்னடியாரோடுகூடியிருந்து, வாழ்வேன்-சுகஜீவியாய் வாழுவேன். எ-று.

6 வாழ்வெனவுந் தாழ்வெனவு மிரண்டாப் பேசும்
வையகத்தார் கற்பனையா மயக்கமான
பாழ்வலியைக் கிழித்துதறிச் செயல்போய் வாழப்
பரமேநின் னுனக்தப் பார்வை யெங்கே.

இ-ள். வாழ்வு எனவும்-வாழ்வென்றும், தாழ்வு எனவும் - தாழ்வென்றும், இரண்டு ஆ பேசும்-இரண்டாகப் பேசுகிற, வையகத்தார்-உலகத்தாரது, கற்பனை ஆம்-கற்பனையென்கிற, மயக்கம் ஆன-மயக்கமாகிய, பாழ் வலையை-பாழாகிய வலையை, கிழித்து உதறி - கிழித்துதறிவிட்டு, செயல் போய்வாழ-செயல் அற்று வாழ்வதற்கு பரமே-பரவஸ்துவே, நின்-உனது, ஆநந்தப் பார்வை எங்கே-ஆநந்த நோக்கமெங்கே. எ-று.

7 எங்கேயெங் கேயருளென் றெழுமயி ரந்தா
னேழையிவ னெனவுமெண்ணி யிச்சை கூரு
மங்கேயங் கேயெளிவந் தென்னே யாண்ட
வாரமுதே யுனைக்காண்பா னலந்துபோனேன்.

இ-ள். ஏழை இவன் - ஏழையாகிய இவன், அருள் எங்கே எங்கே என்று-அருள் எவ்விடத்தது எவ்விடத்தது என்று, எம்மை இரந்தான் எனவும் எண்ணி-எம்மை யாசித்தானென்றும் நினைத்து, இச்சை கூரும்-யான் விரும்புகிற, அங்கே அங்கே-அவ்வவ்விடங்களிலெல்லாம், எளிவந்து-எளிதில் வந்து, என்னே யாண்ட-என்னே யாட்கொண்ட, ஆர் அமுதே-அரிய அமிர்தமே, உன்னை காண்பான் - உன்னைக் காணும்பொருட்டு, அலந்து போனேன்-துன்பப்பட்டுப்போனேன் எ-று.

8 போனநாட் கிரங்குவதே தொழிலா யிங்நன்
பொருந்துநா ளத்தனையும் போக்கி னேனென்

ஞானநா யகனேநின் மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கு நாளெந் நாளோ.

இ-ள். போன நாட்கு - கழிந்த நாள்களைக் குறித்து, இரங்குவதே இரங்கலே, தொழில் ஆ-தொழிலாகக்கொண்டு, இங்ஙன்-இவ்வாறு, பொருந்தும் நாள் அத்தனையும் - பொருந்துகின்ற நாள்க ளெல்லாவற்றையும், போக்கினேன் - கழித்துவிட்டேன், என் ஞான நாயகனே - என் ஞானத் தலைவா, நின்-உனது, மோன ஞான நாட்டம்-மௌனஞான நோக்கத்தை, உற்று-அடைந்து, வாழ்ந்திருக்கும் நாள் - வாழ்ந்திருக்கும் நாள், எந்நாளோ-எந்தகாளோ. எ-று.

9 நாட்பட்ட கமலமென்ன விதய மேவு
நறுந்தேனே துன்மார்க்க நாரிமார்கண்
வாட்பட்ட காயமிதக் காய மென்றே
வன்கூற்று முயிர்பிடிக்க வருமந் நீதி.

இ - ள். நாள்பட்ட கமலம் என்ன - அன்றலர்ந்த கமலம்போல (எண்ணி), இதயம் மேவும் - என்னிதயத்திற் பொருந்திய, நறு தேனே நறுவியதேனே, துன்மார்க்கம்-தீநெறியுள்ள, நாரிமார் - மாதர்களுடைய, கண்-கண்களாகிய, வாள்பட்டகாயம் - வாள்பட்ட சரீரம், இத்தக்காயம்-இந்தச் சரீரம், வல் கூற்றும்-வலியயமனும், உயிர் பிடிக்க வரும் அந்நீதி-உயிர் கவரவருகிற அந்த நியாயம், என்றே-எக்காலமோ. எ-று.

10 நீதியெங்கே மறையெங்கே மண்விண்ணெங்கே
நித்தியரா மவர்களெங்கே நெறிதப் பாத
சாதியெங்கே யொழுக்கமெங்கே யாங்க ளெங்கே
தற்பரநீ பின்னுமொன்றைச் சமைப்ப தாலுல்.

இ-ள். தற்பர-தற்பரனே; நீ - நீயே, பின்னும் ஒன்றைச் சமைப்பது ஆலுல்-வேறு மொன்றைச் சமைப்பதாயின், நீதி எங்கே-நியாய மெங்கே, மறை எங்கே - வேதங்களெங்கே, மண் விண் எங்கே-பூமியுந் விண்ணுங்க ளெங்கே, நித்தியர் ஆம் அவர்களெங்கே-நித்தியராகிய அவர்களெங்கே, நெறி தப்பாத சாதி எங்கே நெறி வழுவாத சாதி யெங்கே, ஒழுக்கம் எங்கே-ஆசாரம் எங்கே, யாங்க ளெங்கே-நாங்கள் எங்கே. எ-று.

11 ஆனலும் யானெனதிங் கற்ற வெல்லை
யதுபோது மதுகதிதா னல்லவென்று
போனலும் யான்போவ னல்லான் மோன
புண்ணியனே வேறுமொரு பொருளை நாடேன்.

இள். ஆனாலும்-ஆயினும், இங்கு - இவ்விடத்து, யான் எனது அற்ற எல்லை-யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களற்ற இடமாகிய, அது போதும்-அது சாலும், அது-அவ்விடம், கதிதான் அல்ல என்று போனாலும் - கதியல்லவென் றொழிந்தாலும், யான் போவன் அல்லால் - நான் போவேனல்லது, மோன புண்ணியனே - மௌனநிலையை யறிவுறுத்தும் புண்ணிய சீலனே, வேறும் ஒரு பொருளோ நாடேன்-வேறுமோர் பொருளோ நிரும்பேன். எ-று.

12 பொருளேகின் பூரணமே லிட்ட காலம்
போக்குவர வுண்டோதற் போத முண்டோ
விருடானுண் டோவல்லலால் வெளிதா னுண்டோ
வின்பமுண்டோ துன்பமுண்டோ யாமங் குண்டோ.

இ-ள். பொருளே வஸ்துவே, நின் பூரணம்-உனது நிறைவு, மேலிட்ட காலம்-அதிகரித்த காலத்தில், போக்கு வரவு உண்டோ - போக்கு வரவுகளுளவோ, தற்போதம் உண்டோ-தற்போத முளதோ, இருள்தான் உண்டோ-அந்தகாரந்தா னுளதோ, அல்லால்-அன்றி, வெளிதான் உண்டோ-ஒளிதானுளதோ, இன்பம் உண்டோ - சுகமுளதோ, துன்பம் உண்டோ-துக்கமுளதோ, யாம் அங்கு உண்டோ-நாங்கள் அவ்விடத்துளேமோ எ-று

13 உண்டோநீ படைத்தவுயிர்த் திரளி லென்போ
லொருபாவி தேகாதி யுலகம் பொய்யாக்
கண்டேயு மெள்ளளவு துறவு மின்றிக்
காகினிக்கு ளலைந்தவரார் காட்டாய் தேவே.

இ-ள். நீ படைத்த - நீயுண்டாக்கின, உயிர்த்திரளில்-உயிர்த்தொகுதியில், என்போல் ஒருபாவி உண்டோ-என்போல ஒரு பாபிஷ்டன் உளனோ, தேகாதி உலகம்-தேகாதி ரூபமாகிய உலகமானது, பொய் ஆ-பொய்யாயிருக்க, கண்டேயும்-பார்த்திருந்தும், எள் அளவு-எட்டுணையாகிய, துறவும் இன்றி-துறவும் இல்லாமல், காகினிக்குள்-உலகத்துள், அலைந்தவர்-அலைந்தவர்கள், ஆர்-யாவர், காட்டாய்-காட்டுவாய், தேவே-கடவுளே. எ-று.

14 தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட்
செங்கரும்பே மொழிக்கு மொழி தித்திப்பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொன் முற்று மோதா.

இ-ள். தேவர் எல்லாம் - தேவர்களெல்லாரும், தொழ - வணங்கலால், சிவந்த - செவந்த, செந்தாள் - செவ்வி சீர் பாதங்களையும், முக்

கண்-மூன்று கண்களையுமுடைய, செங்கரும்பே-செம்மையாகிய கரும்பே, மொழிக்கு மொழி-சொல்லுக்குச்சொல், தித்திப்பு ஆக-இனிதாக, மூவர் சொல்லும்-மூவர்பாடிய, தமிழ்-செந்தமிழ்ப்பாடல்களை, கேட்கும் திருச் செவிக்கு-கேட்கின்ற திருச்செவிகளுக்கு, கூடனேன் புலம்பிய சொல்-கூடாஞ்சிய யான் புலம்பிய சொற்கள், முற்றுமோ - எற்கப்பெறுவனவோ.

மூவராவார்-அப்பர், சுந்தரர், சம்பந்தர்எனப்படுவார். அப்பரைத் திரு நாவுக்கரசு எனவும் வாகீசர் எனவுங் கூறுவர். இம்மூவர் தமிழ் இறைவரது திருச்செவிக்கு இனிமையைத்தரும் என்பதனை, "மூவர் தமிழ்க்குருகரன்" எனவும், "ஒழித்திடும் பவப்பகை விரைந ்துள்ளமேயோது மூதுணர்வோர் முற்-பழிச்சு பாடலே யரற்கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலும்" எனவும் கூறிய அறிஞர் திருவாக்குக்களா னுணர்க. அவ்வாறு இறைவரது திருச்செவிக் கின்றமிழ் கூறியதே, "அரவக லல்குலார்பாலாசைநீத் தவர்க் கேவீடு-தருவமென்னவளவில் வேதஞ்சாற்றியதலேயன்றன்னேப்-பரவைதன் புலவிதீர்ப்பான்கழுதுகண்படுக்கும் பாலு-ளிரவினிற்றூறுகொண்டோன்" எனவும், "தொடர்ந்தாளு மையர் திருவெங்கை வாணரச் சுந்தரர் சொற்-கடந்தாலும்," எனவும் கூறிய ஆறுபோதல் முதலியவைகட்குக் காரண மென்க.

15 முற்றுமோ வெனக்கினியா னந்த வாழ்வு
மூதறிவுக் கினியாய்நின் முளரித் தாளிற்
பற்றுமோ சற்றுமில்லே யையோ வையோ
பாவிபடுங் கட்கலக்கம் பார்த்தி லாயோ.

இ-ள். எனக்கு - சிற்றறிவினனாகிய எனக்கு, இனி - இனி, ஆனந்த வாழ்வு முற்றுமோ-சுகவாழ்வு கிடைக்குமோ, மூதறிவுக்கு-அறிஞரது பேர றிவுக்கு, இனியாய்-இனிமையைத் தருவோய்,நின்-உனது, முளரி-தாமரை மலர்போன்ற, தாளில்-திருவடிகளில்,பற்றுமோ சற்றும் இல்லே-அன்புமோ சிறிதுமில்லே, ஐயோ ஐயோ-அந்தோ அந்தோ, பாவிபடும் கண்கலக்கம்-பாவியேன் படுகின்ற கண்கலக்கத்தை, பார்த்திலாயோ - பார்த்திலேயோ.

இறைவனது திருவடித் தாமரைப் பற்றிலாதார்க்கு, ஆனந்தவாழ்வு கிடைத்தலருமையாதலால், நின் முளரித்தாளிற் பற்றுமோ சற்றுமில்லே, எனக்கு இனி ஆனந்தவாழ்வு முற்றுமோ என்றார்.

16 பார்த்தனெவல் லாமழியு மதனுற் கட்டிப்
பாராதே பார்த்திருக்கப் பரமே மோன

மூர்த்திவடி வாயுணர்த்துங் கைகாட் டுண்மை
மூற்றியென தல்லல்வினை முடிவ தென்றே.

இ-ள். பார்த்தன் எல்லாம் அழியும்-கண்டன யாவும் அழியா நிற்கும், அதனால்-ஆதலால், சுட்டிப்பாராதே பாரத்திருக்க-சுட்டிப்பாராமல் பார்த் திருக்க, பரமே - பரம்பொருளே, மோன மூர்த்தி வடிவாய் உணர்த்தும்-மௌனகுரு ரூபமாகிவந் தறிவுறுத்திய, கைகாட்டி உண்மை-கைகாட்டலின் உண்மையானது, மூற்றி-மூற்றுப்பெற்று, எனது அல்லல் வினை - எனது துன்பத்திற் கேதுவாகிய கர்மங்கள், முடிவது-முடிவுபெறுவது, என்றே-எக்காலமோ. எ-று.

17 என்றுளீ யன்றுளம்யா மென்ப தென்னை
யிதுநிற்க வெல்லாந்தா மில்லையென்றே
பொன்றிடச்செய் வல்லவனீ யெமைப்படைக்கும்
பொற்புடையா யென்னினது பொருந்தி டாதே.

இ-ன். நீஎன்று உளை-நீ யென்று உள்ளாய், அன்று யாம் உளம்-அன்று நாங்களும் உள்ளோம், என்பது என்னை-என்று சொல்லுவது என்ன, இது நிற்க-இது கிடக்க, எல்லாம் தாம் - எல்லாப்பொருள்களுமே, இல்லை யென்றே - இல்லையாமாறே, பொன்றிடச் செய் வல்லவன் நீ நசித்திடச் செய்தலில் வல்லவன் ஆகிய நீயே, எம்மைப் படைக்கும் பொற்பு உடை யாய் என்னின்-எங்களைப் படைக்கின்ற பொலிவினை யுடையையென்றால், அது பொருந்திடாதே-அது பொருந்திடாதோ.

18 பொருந்துசக மனைத்தினையும் பொய்பொய் யென்று
புகன்றபடி மெய்யென்றே போதரூபத்
திருந்தபடி யென்றிருப்ப தன்றே யன்றே
வெம்பெருமான் யான்கவலை யெய்தாக் காலம்.

இ-ள். பொருந்து சகம் அனைத்தினையும்-பொருந்திய பிரபஞ்ச மெல் லாவற்றையும், பொய் பொய் என்று புகன்றபடி - பொய் பொய் என்று சொன்னபடி, மெய் என்றே-உண்மை யென்றே, போத ரூபத்து - ஞான ரூபத்துடன், இருந்தபடி-இருந்தவண்ணம், என்று இருப்பது - எக்கால மிருப்பது, அன்றே அன்றே அக்காலத்திலே யல்லவோ, எம்பெருமான் எம்பெருமானே, யான் - நான், கவலை எய்தாக் காலம் - துன்பமடையாத காலம். எ-று.

19 காலமே காலமொரு மூன்றுங் காட்டுங்
காரணமே காரணகா ரியங்க ளில்லாக்
கோலமே யெனைவாவா வென்று கூவிக்
குறைவறநின் னருள்கொடுத்தாற் குறைவோ சொற்

இ-ள். காலமே-காலமே, காலம் ஒரு மூன்றும் காட்டும் - முக்காலங் களையும் காட்டுகின்ற, காரணமே-காரணமே, காரண காரியங்கள் இல்லா-காரண காரியற்க ளற்ற, கோலமே - உருவே, என்னை - என்னை, வாவா என்று கூவி-வாவா என்றழைத்து, குறைவு அற-குறைவு நீங்க, நின் அருள் கொடுத்தால்-உன்னருளைத் தந்தால், குறைவோ-குறைவாமோ, சொல்லாய்-சொல்வாய். எ-று.

20 சொல்லாய தொகுதியெல்லாங் கடந்து நின்ற
சொரூபானந் தச்சுடரே தொண்ட னேனைக்
கல்லாகப் படைத்தாலு மெத்த நன்றே
கரணமுட னுறவு கலக்க மாட்டேன்.

இ-ள். சொல் ஆய தொகுதி யெல்லாம்-சொற்கூட்டத்தையெல்லாம், கடந்துநின்ற-தாண்டி நின்ற, சொரூபானந்தச் சுடரே - சொரூபானந்தச் சோதியே, தொண்டனேனை-அடிமையாகிய என்னை, கல்லாகப் படைத் தாலும்-கல்லாக வகுத்தாலும், மெத்த நன்றே - மிகவும் நல்லதே, நான்-நான், கரணமுடன்-கரணங்களோடு, உறவு கலக்கமாட்டேன் - சிநேகிக்க மாட்டேன். எ-று.

21 கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்
கடவுளுனைக் காணவே காய மாதி
புலங்காணர் நானொருவன் ஞானம் பேசிப்
பொய்க்கூடு காத்ததென்ன புதுமை கண்டாய்.

இ-ள். கலங்காத நெஞ்சு உடைய-கலங்கா மனத்தையுடைய, ஞான தீரர்-ஞான தீரர்கள், கடவுள்-கடவுளே, உன்னைக் காணவே - உன்னைக் காணும்பொருட்டே, காயம் ஆதி - உடல் முதலானவைகளின், புலம் காணர்-இடங்காணுதவர்க ளானார்கள், நான் ஒருவன் - யானொருத்தன், ஞானம் பேசி-வாசாஞானம்பேசி, பொய்க்கூடு காத்தது - பொய்யுடலைக் காத்திருந்தது, என்ன புதுமை-என்ன நூதனம். எ-று.

காயமாதி என்றது உடல் பொருள் ஆவிகளை.

22 கண்டிலேயோ யான்படும்பா டெல்லா மூன்று
கண்ணிருந்துந் தெரியாதோ கசிந்துள் ளன்பர்
தொண்டரடித் தொண்ட னன்றே கருணைநீங்காச்
சுத்தபரி பூரணமாஞ் சோதி நாதா.

இ-ள். யான் படும்பாடு எல்லாம்-நான் படும் துன்பத்தை யெல்லாம், மூன்று கண் இருந்தும் - மூன்று கண்கள் உனக்கிருந்தும், கண்டிலேயோ-பார்த்திலையோ, தெரியாதோ-அன்றி உன் பூர்ண ஞானத்திற்குக் கோசரி யாதோ, கசிந்து-உருகி, உள் அன்பு ஊர்-உள்ளன்பு நிறைந்த, தொண்டர்-

தொண்டர்களுக்கு, அடித்தொண்டன் அன்றே-திருவடித் தொண்டனே னல்லவோ, கருணை நீங்கா-கிருபை நீங்காத, சுத்தபரிபூரணம் ஆம் - சுத்த பரிபூர்ணமாகிய, சோதி நாதா-தேஜஸ்ஸையுடைய இறைவனே. எ-று.

23 சோதியா யிருட்பிழம்பைச் சூறை யாடுந்
தூவெளியே யெனைத் தொடர்ந்து தொடர்ந்தெந்நா [ளும்
வாதியா நின்றவினைப் பகையை வென்ற
வாழ்வேயிங் குனைப்பிரிந்து மயங்கு கின்றேன்.

இ-ள். சோதியாய்-தேஜஸ்ஸாகி, இருள்பிழம்பை-இருட் கூட்டத்தை, சூறை ஆடும்-கொள்ளையிட்ட, தூவெளியே-பரிசுத்தமான ஆகாயமே, என் னைத் தொடர்ந்து தொடர்ந்து-என்னைப் பற்றிப்பற்றி, எந்நாளும்-எக்கால மும், வாதியாநின்ற-வருத்தா நின்ற, வினைப்பகையை வென்ற-கர்ம சத்ரு வைச் செயித்த, வாழ்வே-பெருவாழ்வே, உன்னைப்பிரிந்து-உன்னைவிட்டு, இங்கு மயங்குகின்றேன்-இவ்விடத்து மயங்காநின்றேன். எ-று.

24 மயக்குறுமென் மனமணுகாப் பாதைகாட்டி
வல்வினையைப் பறித்தனையே வாழ்வே நானென்
செயக்கடவேன் செயலெல்லா நினதே யென்று
செங்கைகுவிப் பேனல்லாற் செயல்வே றில்லை.

இ-ள். மயக்குறும்-மயங்கச் செய்கின்ற, என் மனம் அணுகா - என் மனம் பொருந்தாத, பாதை காட்டி-வழிகாட்டி, வல் வினையைப் பறித் தனையே-வலிய கர்மங்களை வேரறக் களைந்தாயே, வாழ்வே-பெருவாழ்வே, நான் என்னசெய்யக் கடவேன், யான் என்னசெய்யக்கடவேன் செயல் எல்லாம் - செய்கைகளெல்லாம், நினதே என்று-உனதேயாம் என்று, செங் கை குவிப்பேன் அல்லால்-செவந்த கைகளைக் கூப்புவேனன்றி, செயல்-செய்கை, வேறு இல்லை - மற்றொன்றில்லை. எ-று.

25 வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லான்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியி னத்திரள் போல் வயங்கிற் றம்மா.

இ - ள். வேறுபடும் - ஒன்றற்கொன்று வேறுபடுகின்ற, சமயம் எல் லாம் - சமயங்களிலெல்லாம், புகுந்து பார்க்கின் - நுழைந்து பார்த்தால், விளங்கு - விளங்காநின்ற, பரம்பொருளே - பரவஸ்துவே, நின் விளையா ட்டு அல்லால் - உன் திருவிளையாட்டே யன்றி, மாறுபடுங்கருத்து இல்லை-

மாறுபடும் கருத்து இல்லையாகும், முடிவு இல்-முடிவற்ற, மோனவானிதியில்-மௌனசாகரத்தில், நதித்திரள்போல் - நதியினம்போல, வயங்கிற்று-விளங்கிற்று. எ-று.

26 அம்மாவீ தசியந்தா னன்றே வன்றே
வகண்டநிலே யாக்கியென்னே யறிவாம் வண்ணஞ்
சும்மாவே யிருக்கவைத்தா யையா வாங்கே
சுகமயமா யிருப்பதல்லாற் சொல்வா னென்னே.

இ-ள். அம்மா-ஆச்சரியம், ஈது-இது, அதிசயந்தான் அன்றே அன்றே, அதிசயமே யல்லவோ அல்லவோ; அகண்டநிலே ஆக்கி-அகண்ட நிலையுண்டாக்கி, என்னே-என்னே, அறிவு ஆம் வண்ணம்-அறிவுமயமாகும் வண்ணம், சும்மாவே இருக்கவைத்தாய் - சும்மாவேயிருக்கும்படி வைத்தனை, ஆங்கே-அவ்விடத்தே, சுகமயமாய் இருப்பது அல்லால்-சுகரூபமாயிருப்பதல்லது, சொல்வான் என்-சொல்லுதலுக் குரியதாகு. எ-று.

27 என்னேநான் பிறந்துழல வந்த வாறிங்
கெனக் கெனவோர் செயலிலேயே யேழையேன்பான்
முன்னேசெய் வினேயெனவும் பின்னே வந்து
மூளும்வினே யெனவும்வர முறையே னெந்தாய்.

இ-ள். இங்கு-இவ்விடத்து, நான் பிறந்து உழல - நான் ஜன்மித்துழலும்படி, வந்த ஆறு என்-வந்தபிரகாரம்யாது, எனக்கு என-எனக்கென்று, ஓர், செயல் இலேயே - ஒருசெயலும் இல்லையே, ஏழையேன்பால் - ஏழையாகிய என்னிடத்து, முன்னே செய்வினே யெனவும்-பூர்வமேசெய்தவினேயென்றும், பின்னே வந்து மூளும் வினேயெனவும் பின்வந்து பற்றுகின்ற வினேயென்றும், வர-சொல்லப்பட்டு வருகைக்கு, முறை என் - முறைமை யுண்டு, எந்தாய்-எந்தையே. எ-று.

28 தாயான தண்ணருளே நிரம்ப வைத்துத்
தமியேனேப் புரவாமற் றள்ளித் தள்ளிப்
போயான தென்கொலையா வேக தேசம்
பூரணத்துக் குண்டோதான் புகலல் வேண்டும்.

இ-ள். தாய் ஆனை-எனக்கு மாத்ருஸ்தாநமான, தண் அருளே-தண்ணிய அருளே, நிரம்பவைத்து-நிறையவைத்து, தமியேனேப் புரவாமல்-தனியேனைக் காவாமல், தள்ளித் தள்ளிப்போய்-தள்ளித் தள்ளிச்சென்று, (அதனால்) ஆனது - உண்டான பிரயோஜநம், என்-யாது, ஐயா-ஐயனே, பூரணத்துக்கு-உனதுபூரணவருவத்துக்கு, ஏகதேசம் உண்டோ-ஏகதேசம் உளதோ, புகலல் வேண்டும்-சொல்லவேண்டும், எ-று.

29 புகலரிய நின்விளையாட டென்னை யெத்தாய்
புன்மையறி வுடையவென்னைப் பொருளாப் பண்ணி
யிகல்விளைக்கு மலமாயை கன்மத் தூடே
யிடருறவுஞ் செய்தனையே யிரக்க மீதோ.

இ-ள். புகல் அரிய-சொல்லுதற்கரிய, நின் விளையாட்டு-உன்திருவிளையாடல், என்னை-யாதே, எத்தாய் - எந்தையே, புன்மை அறிவு உடைய என்னை-அற்பமாகிய அறிவையுடைய என்னை, பொருள் ஆ பண்ணி-ஒரு பொருளாகச்செய்து, இகல் விளைக்கும் - போர்விளைக்கின்ற, மலமாயை கன்மத்தூடே-மலமாயா கர்மங்களினிடையே யகப்பட்டு, இடர் உறவும் செய்தனையே - துக்கமடையவும் பண்ணினையே, இரக்கம்-உனக்கு உயிர்களின் மீதுள்ள இரக்கமானது, ஈதோ-இதுதானே. எ-று.

30 இரக்கமொடு பொறையீத லறிவா சார
மில்லேனல்லோர்க ளீட்டங் கண்டாற்
கரக்குமியல் புடையேன்பாழ் நெஞ்ச மெந்தாய்
கருந்தாதோ வல்லுருக்கோ கரிய கல்லோ.

இ-ள். இரக்கமொடு-இரக்கத்துடன், பொறை-பொறுமை, ஈதல்-கொடை, அறிவு-ஞானம், ஆசாரம்-ஒழுக்கம், இல்லேன்-இல்லாதவனாகிய, நான். நான், நல்லோர்கள் ஈட்டம் கண்டால்-நல்லோர்களுடைய கூட்டத்தைப் பார்த்தால், கரக்கும்-ஒளிக்கின்ற, இயல்பு உடையேன் - இயற்கையுடையேன், பாழ்நெஞ்சம் (என்) பாழ்மனமானது, எந்தாய்-எந்தையே, கருந்தாதோ-இரும்போ, வல் உருக்கோ-வலியவருக்குத்தானே, கரியகல்லோ-கருங்கல்லோ. எ-று.

பராபரக்கண்ணி.

இதன் பொழிப்புரை.

1 சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதற்
பாராதி யாண்ட பதியே பராபரமே.

சிறப்பமைந்த தெய்வத்தன்மை பொருந்திய திருவருளென்னும் பூமி முதலாக நிலவுலகமுதலாகிய பூமிகளை யாண்டருளிய இறைவனே. எ-று.

திருவருளாம் பூமி யென்றதனால், பாராதிகளும் பூமிகளாக்கி யுரைக்கப்பட்டன. நிலவுலகமுதலாகிய பூமிகள்-சுவர்க்க, மத்திய, பாதாளங்கள். அன்றி, நிலமுதல் நாதமீறாகிய முப்பத்தாறு தத்துவங்களாகிய பூமிகளை

ன்னலுமாம். பராபரம்-பெருமையுடையா ரெல்லாருள்ளும் பெருமையுடை யோன். பரம் மோக்ஷமாதலால், மோக்ஷப்ரதனை பெரியோன் எனினும்; மோக்ஷநிலத்திலுள்ள பரமான்மா எனினுமாம்.

2 கண்ணுரக் கண்டோர் கருப்பொருள்கா ணுமலருள்
விண்ணுறடிருந்த வின்பவெற்பே பராபரமே.

பொ-ரை. கண்ணுரச் சேவித்தோர் பிறவி யென்னும் பொருளைக் காணுதமைந்து நித்தியராய் வாழ்தற்பொருட்டு, கருணுகாசத்தில் நின்று பெற்றிருந்த ஆனந்த மலையே. எ-று.

சலநமற் றிருத்தலால் மலையென்றார். "அருணிதி தரவரு மானந்த மலையே" என்றார் திருவாத வூரடிகளும்.

3 சிந்தித்தவெல்லா மென்சிந்தை யறிந்தேயுதவ
வந்தகருணை மழையே பராபரமே.

பொ-ரை. கருதிய பொருள்களையெல்லாம் என் கருத்தறிந் தருள் செய்யும்பொருட்டு எழுந்தருளிவந்த தயாவர்ஷமே. எ-று.

எல்லாப் பொருள்களையுங் கொடுக்க வல்லது மழையாதலால், சிந்தித்தவெல்லாம் என் சிந்தையறிந்தேயுதவ வந்தகருணை மழையே யென்றார்.

4 ஆராவமுதே யரசே யானந்த வெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே.

பொ-ரை. தெவிட்டாத அமிர்தமே, மோக்ஷநிலத்துக் கரசனே, சுகப் பெருக்கா லுண்டாகிய பெருநதியே, மௌனப்ரவாஹமே. எ-று.

அமுது என்றார் இறவாமைக்குக் காரணமாயிருத்தலால். அரசெனப் பொதுப்படக் கூறினும், மோக்ஷம் அவனுட்சியாதலால் மோக்ஷநிலத்துக் கரசனென்றுரைக்கப்பட்டது.

5 ஆரறிவாரென்ன வனந்தமறை யோலமிடும்
பேரறிவே யின்பப்பெருக்கே பராபரமே.

பொ-ரை. உன்னை யறியவல்லார் யாவரென்று முடிவில்லனவாகிய வேதங்கள் முழங்குகின்ற பெரிய ஞானமே, ஆநந்தப்ரவாஹமே. எ-று.

பேரறிவு-பரமான்மா. இறைவனைப்போல நித்திய நிர்த்தோஷங்களா யுள்ள வேதங்கள் தாமறியமாட்டாமையால் பிறர் யாரறிய வல்லரென்னுங் கருத்தை யுட்கொண்டு அனந்தமறை ஆரறிவாரென்ன வோலமிடும் என்றார்.

6 உரையிறந்த வன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரையிறந்த வின்பக் கடலே பராபரமே

பொ-ரை. பேச்சற்ற அன்பரது மனத்தின்கண்பேரொளியாய்ப்பெருகிக் கரையில்லாது நிலைபெற்ற சுகக்கடலே, எ-று.

பேச்சற்ற அன்பர்-மௌன நிலையையுடைய அன்பர்.

எத்திக்குந் தானுகியென்னிதயத் தேயூறித்
தித்திக்கு மானந்தத் தேனே பராபரமே.

பொ-ரை. எந்தத்திக்கினையுற்றுநோக்கினும் அந்தத் திக்குகடோறுந் தன்னாய் நிற்றலுமன்றி, என்னிருதயத்துஞ்சுரந்து இனிக்கின்ற இன்தேனே, எ-று.

எத்திக்கும் என்றது பத்துத்திக்கினையும். அவை கிழக்கு முதலிய எட்டுத்திசையும், பூமியும் ஆகாயமும். "பத்துத்திக்கும் பணிநுதற்கட்டிருவாளன்" என்றார் கபிலதேவரும். உள்ளும் புறத்தும் தித்திக்குந்தேனென்றதனைக் கூறியது நாவொன்றற்கே சுவை பயக்குந்தேனை யொழித்தற்கு.

8 திக்கொடு கீழ்மேலுந் திருவருளாம் பொற் பறிந்தோர்
கைக்குள்வர் நெல்லிக் கனியே பராபரமே.

பொ-ரை. எட்டுத் திசைகளோடு, பூமி ஆகாயங்களினும் உன் திருவருள் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்குந் திறத்தை யறிந்த அறிஞரது கையினிடத்து விளங்குகின்ற நெல்லிப் பழமே, எ-று.

கீழ், மேல்-பண்பாகு பெயர்கள்.

9 முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தே யென்னுள்ளத் தெளிவே பராபரமே.

பொ-ரை. முத்தே, பவளமே, நெருங்கிய பசுமையாகிய பொன்னொளியே, அறிவே, என்மனத் தெளிவே, எ-று.

நீறணிமேனிய ஞதலால் முத்தென்றும், "பவளத் தடங்குன்று எனவும்" "முக்கட் பவளமலை" எனவும் பிறர் கூறுதலானும், இறைவன் திருமேனி செந்நிறமாதலானும் பவளமென்றும், "பொன்பணைத் தன்ன விறை" எனத் திருவாதவூரடிகள் கூறுதலானும், பிறவிடங்களிற் கூறப்படுதலானும், மொய்த்தபசும்பொற்சுடர் என்றும், இங்ஙனம் பிரித்தறிதற்குக் கருவியாகிய அறிவுருவாயிருத்தலாற சித்தென்றும், மனத்தெளிவுக்கு அறிவு கருவியாதலால் என்னுள்ளத் தெளிவே யென்றும் கூறினர். உயர்பொருள்களுள் சிறந்தனவாகிய முத்து, பவளம், பசும்பொன்முதலிய

ாருள்களாகவும், அறிவுமுதலிய தற்சிழமைப் பொருளொன்னலுமாம். இரத்தினவகையில் முத்துச் சிறந்ததற்கட் கூறப்பட்டது.

10 கண்ணே கருத்தே யென்கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே யானந்த வியப்பே பராபரமே.

பொ-ரை. (புறப்பொரு ளுணர்ச்சிக்குக் கருவியாகிய) நேத்திரமே. (அகப்பொரு ளுணர்ச்சிக்கு கருவியாகிய) மனமே (எனக்கு எண்ணியெண்ணியாங் குதவுதலால்,) கற்பகமரமே, என் அறிவு நிறைந்த சிதாகாயமே ஆனந்தத்தை யுதவுதலாகிய ஆச்சரியத்தை யுடையவனே. எ-று.

11 வாக்காய் மனதாய் மனவாக் கிறந்தவர்பாற்
றாக்காதே தாக்குந் தனியே பராபரமே.

பொ-ரை. வாக்காகி, மனமாகி, வாக்குமனமிறக்கப் பெற்றவரிடத்தில் பொருந்தாது பொருந்தும் தனிமைப்பொருளே. எ-று.

12 பார்த்தவிட மெல்லாம் பரவெளியாய்த் தோன்றவொரு
வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே.

பொ-ரை. நோக்கின விடங்களெல்லாம் பராகாயமாகித் தோன்றும் பொருட்டு, எனக்கு ஒருமொழியை யறிவுறுத்தவந்த மானுஷ ரூபமே.

மநு-மந்திரமாதலால், மந்திரரூபமே யென்னலுமாம்.

13 வானந்த மண்ணினந்தம் வைத்துவைத்துப்பார்க்கவெனக்
கானந்தந் தந்த வரதே பராபரமே.

பொ-ரை. ஆகாய முடிவாகவும், பூமி முடிவாகவும் வைத்து வைத்துப் பார்க்கும்படி, எனக் கின்பங்கொடுத்த அரசனே. எ-று.

அவரோஹணக்ரமமாகவும் ஆரோஹணக்ரமமாகவும் என்பார், வானந்த மண்ணினந்தம் என்றார்.

14 அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
வின்பப் பெருக்கே யிறையே பராபரமே.

பொ-ரை. அன்பை பிருவித்து என்னரிய வுயிரைக் காக்கவந்த ஆனந்தப் பெருக்கே, இறையனே. எ-று.

அரிய வுயிர் என்றது மானுடப்பிறவியை.

15 வானமெல்லாங் கொண்ட மௌனமணிப் பெட்டகத்துக்
கானபணி யான வணியே பராபரமே.

பொ - ரை. ஆகாயத்தை முழுதுந் தன்னிடத் தடக்கிக் கொண்ட மௌனநிலையாகிய அழகியபெட்டகத்தில்வைத்தற்குரிய ஆபரணமே.எ-று.

இறைவன் தங்குதற் குரியதாதலால், மௌனநிலையை மணிப்பெட்ட மென்றார்.

16 ஓடுமிரு நிதியு மொன்றுகக் கண்டவர்க
ணூடும்பொருளான நட்பே பராபரமே.

பொ-ரை. ஓட்டையும் பெரிய திரவியத்தையும் ஒன்றென நோக்கிய அறிஞர்கள் தேடும் பொருளாகிய நண்பே. எ-று.

"ஓடும் பொன்னும்" என்றார் பிறரும்.

17 சித்தநினைவுஞ் செயுஞ் செயலு நீயெனவா
ழுத்தமர்கட் கான வுறவே பராபரமே.

பொ-ரை. மனநினைவும், அந்நினைவின்படி செய்யுஞ் செய்கையும் நீயே யென் றுறுதிகொண்டு வாழ்கின்ற உத்தமர்களுக்குத் தகுதியான சுற்றமே. எ-று.

செய்கை நிகழ்வது நினைவின் வழியாதலால், சித்த நினைவும் செயுஞ் செயலுமென்றார்.

18 போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே.

பொ-ரை. போதாந்தத்தையுடைய புண்ணியவான்கள், போற்றி சய போற்றி, என்று தோத்திரம் பண்ணுகிற, வேதாந்தமாகிய வீட்டிலேறிய தீபமே. எ-று.

போதாந்த-ஞானக்கொழுந்து. வேதாந்த வீட்டில் விளக்கு ஒருசொல்.

19 முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே.

பொ-ரை. முத்தர்களுக்கு முடிவிடமாகிய மோக்ஷவீதியில் விளையுகின்ற உன் திருவடித் தாமரையை வணங்குகின்ற அன்பர்பொருட்டே, சித்தாந்த வீதியி லெழுந்தருளுகிற தெய்வமே. எ-று.

20 ஈனந் தருமுடல மென்னதியா னென்பதற
வானந்தம் வேண்டி யலந்தேன் பராபரமே

பொ-ரை. இழிவைத் தருகின்ற சரீரத்தை, எனது யான் என மமகரித்தும் அகங்கரித்தும் பேசுதல் அற்றொழிதற்பொருட்டு, உன்னைப் பெறுகையா லுண்டாகிற சுகத்தை விரும்பி, கிடைக்கப் பெறுமையால் துன்பமடைந்தேன். எ-று.

21 என்புருகி நெஞ்சழிகிக் கரைந்துகரைந்
தன்புருவாய் நிற்க வலந்தேன் பராபரமே.

பொ-ரை. எலும்புருகப்பெற்று, மனங்கரைந்து, உருகியுருகி, அன்புருவமாகி நிற்கைக்குத் துன்பமடைந்தேன். எ-று.

வன்மையாகிய என்புருகுத லருமையென்பது தோன்ற, அலந்தேன் என்றார்.

22 சுத்த வறிவாய்ச் சுகம்பொருந்தி னல்லாலென்
சித்தந் தெளியா தென்செய்வேன் பராபரமே.

பொ-ரை பரிசுத்தமாகிய அறிவுருவாகி, நித்தியானந்தத்தை யடைந்தாலன்றி, என் சித்தம் தெளியாது, இதற்கு, யான் என்செயக்கடவேன்.

23 மாரு வனுபூதி வாய்க்கினல்லா லென்மயக்கந்
தேரு தென் செய்வேன் சிவமே பராபரமே.

பொ-ரை. இடையீடில்லாத சுகானுபவம் கிடைத்தாலன்றி, என்மனமயக்கந் தெளியாது, இதற்கு யான் என்செயக்கடவேன் பரமசிவமே.எ-று

சுபம் கிடைத்தாலன்றி மனமயக்கமாகிய அசுபம் தீராதாதலால், சிவமே, மாருவனுபூதி வாய்க்கினல்லால் என்மனமயக்கந் தேறுது என்றார்.

24 தாகமறிந் தின்ப நிட்டை தாராயெலா கெடுவேன்
றேகம் விழுந்திடி னென்செய்வேன் பராபரமே.

பொ-ரை. எனக் குண்டாயிருக்கிற மோக்ஷதாகத்தை நீயுணர்ந்து சுகநிஷ்டையைக் கொடாயாயின், ஐயோ கெடுவேன், இவ்வருமையாகிய மானுஷசரீரம் நசித்துவிடின், பின்னர் யான் என்செயக்கடவேன். எ-று.

தாகமுண்டாதற்குக் காரணம் தாபத்ரயாக்நியா லுளதாகிய வெப்பம்

25 அப்பாவென் னெய்ப்பில்வைப்பே யாற்றுகிலேன்போற்றி
யென்று, செப்புவதல்லால் வேறென் செய்வேன்பரா
பரமே.

பொ-ரை. அப்பனே, எனக்கு உற்றிடத்துதவும் நிதேபமே, பிறவி வெப்பத்தைச் சகிக்கிலேன், (இதனைத் தணித்தல் வேண்டும்) அதன் பொருட்டு உனக்கு நமஸ்காரம் என்று வாயினாற் சொல்லுதலன்றி, வேறு என்ன செயற்கரிய செயல்களைச் செய்யவல்லேன். எ-று.

செயற்கரிய செயல்கள்-இயம நியமாதிகள்.

26 உற்றறியு மென்னறிவு மூட்கருவி போற்சவிமாண்
டுற்றுமின்பந் தந்திலையே யையா பராபரமே.

பொ-ரை. (பொறிகளே வாயில்களாகப்) பொருந்திப் புலன்களே யறியு மென்னறிவும் உட்கருவிகள் ஒளிமழுங்கினாற்போல ஒளி மழுங்கு அறநெறித் தும், இன்னமும் எனக்குச் சுகத்தைக் கொடுத்தாயில்லையே, ஐயனே. எ-று

27 சொல்லா லடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கி
னல்லா லென்றுக மறுமோ பராபரமே.

பொ-ரை. சொல்லச் சுருங்காத ஆநந்த சாகரத்தில் வாய்மடுத்துப் பருகினலன்றி, எனக்குண்டாயிருக்கிற மோகதாகம் அற்றொழியுமோ.

28 பாராயோ வென்னேமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

பொ-ரை. என்னே முகம் பாராயோ, ஒருகால் பார்த்து என் வியசன த்தைத் தீராயோ, நீ வாய்திறந்து சொல்லுவாயாக. எ-று.

29 ஓயாதோ யென்கவலை யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.

பொ-ரை. என் கவலை யொழியாதோ, என் மனத்தின்கண்ணே இன் பப் பெருக்குப் பெருகிப் பாயாதோ, ஐயனே, சொல்லுவாயாக. எ-று.

30 ஓகோ வுனைப்பிரிந்தா ருள்ளங்கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.

பொ-ரை. ஓகோ, என்னைப் பிரிந்தவரது மனம் நெருப்பிலிட்ட பாகுதானே, அன்றி மெழுகுதானே, சொல்லுவாயாக. எ-று.

பாகோ மெழுகோ என்றதனால், அவற்றினு மிக்குருகுகின்ற தென் பது கருத்து.

31 கூர்த்தவறி வத்தனையுங் கொள்ளைகொடுத் துன்னருளைப்
பார்த்தவனு னென்னேமுகம் பாராய் பராபரமே.

பொ-ரை. நான் நுண்ணிய அறிவு முழுதும் கொள்ளையாகக்கொடு த்து, உன் திருவருட் பேற்றை யெதிர்பார்த்தவன் ஆதலால், என்முகம் பார்த்தருளல் வேண்டும். எ-று.

அறிவைக் கொள்ளைகொடுத்தலாவது சிவபோதத்தைச் சிவபோத முண்ணக் கொடுத்தல்.

32 கடலமுதே தேனே யென்கண்ணே கவலைப்
படமுடியா தென்னேமுகம் பார்நீ பராபரமே.

பொ-ரை. பாற்கடலிற் பிறந்த அமிர்தமே, தேனே, என்கண்ணே, என் கவலையானது அநுபவித்து முடிவுபெறாது, ஆதலால், என்னே நீமுகம் பார்த்தருளல் வேண்டும். எ-று.

என்று மிறவாமை பயத்தலால் அமுதே யென்றும், நவிலுந்தோறும் நா மனங்கட்குச் சுவைபயத்தலால் தேனே யென்றும், இது நற்பொருள் இது தீப்பொருள் எனப் பகுத் துணர்த்தலால், கண்ணேயென்றும் கூறினர்.

33 உள்ளமறிவா யுழப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

பொ-ரை. என் மனக்கருத்தை யுணர்வாய், நான் துன்பமுழுத்தலை யுணர்வாய், நீ யென்னே யேற்றருளாது தள்ளிவிடுவையாயின், அறிவிலி யாகிய நான் மிக வருந்துவேன். எ-று.

தள்ளிவிடினும் மீட்டு மடையுநெறி யுணராது வருந்துகின்ற எழை தவிப்பேன் என்றார்.

34 கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிறங்கு வாய்கருணை யெந்தாய் பராபரமே.

பொ-ரை. இளங்கன்றின்பொருட்டு, ஈன்றணிமையையுடைய பசுவானது கருணைபிறந்து மனமுருகி யிரங்குதல்போல, கருணையுடைய என் பரமபிதாவே, நீ என் பொருட்டு என்று இரங்கியருள்வாய். எ-று.

கருணை யெந்தாய் என்றமையால், கருணை பசுவிற்குங் கூட்டியுரைக்கப்பட்டது.

35 எண்ணுத வெண்ணமெலா மெண்ணியெண்ணி யேழை
நெஞ்சம், புண்ணுகச்செய்தனிப்போதும்பராபரமே

பொ-ரை. எண்ணக்கூடாத எண்ணங்களே யெல்லாம் எண்ணி யெணி, எழையேனது மனமானது, புண்படச்செய்தது' இனியமையும்.

36 ஆழித் துரும்பெனவே யங்குமிங்கு முன்னடிமை
பாழிற்றிரிவதென்ன பாவம் பராபரமே.

பொ-ரை. உன்னடிமையாகிய நான், கடலிடைப்பட்ட திரணம் போல, அங்குமிங்குமாக வீணி லலைவது என்ன பாவப்பயன். எ-று

அங்கும் இங்கும் என்றது, எண்ணரிய பிறவிக ளெடுத்தெடுத்து சுவர்க்கநகரங்களி லுழல்வதை நோக்கி.

37 கற்றவறிவா லுனே நான்கண்டவன்போற் கூத்தாடிற்
குற்றமென்றென் நெஞ்சே கொதிக்கும் பராபரமே.

பொ-ரை. கல்விகற்ற அறிவினல், நான் உன்னைக்கண்டவன் போல நடித்தால், அந்நடித்தல் குற்றமென்று கொண்டு என் மனமே கொதிக்கின்றது. எ-று.

38 ஐயோ வினைக்காண்பா ரைசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாய்ப் புகலாய் பராபரமே.

பொ-ரை. ஐயோ, உன்னைக் காணும்பொருட்டு நான் ஆசைகொண்ட தெல்லாம் பொய்தானே, பொய்யாயின், வெளிப்படையாகச் சொல்லு வாயாக. எ-று.

39 துன்பக்கண் ணீரிற் றுளைந்தேதற் குன்னைந்த
வின்பக்கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே.

பொ-ரை. துன்பத்தினால் ஒழுகுகின்ற கண்ணீரிற் படிந்த எனக்கு, உனது நிரதிசய சுகத்தினை லுளதாகும் இன்பக்கண்ணீர் ஒழுகுவது எந்தநாளோ. எ-று.

சோகபாஷ்ப மொழிந்து ஆநந்தபாஷ்பம் பொழிவது எந்தநாளோ என்பதாம்.

40 வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா றுளாறு
நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான் பராபரமே.

பொ-ரை. வஞ்சனையையும் பொய்யையும் உள்ளேபொதிந்து வைத்து பொறாமை யுடையேனுகித் தடுமாறுகின்ற மனத்தையுடைய எனக்கும் நன்மார்க்கமுளதோ. எ-று-

வஞ்சனையையும் பொய்யையும் உள்ளே பொதித்துவையாது அழுக் காற்றை யொழித்த மனத்தினையுடையோர்க் கன்றி யெனப் பொருள்படு தலால். நெஞ்சனுக்கும் என்னு மும்மை யிறந்தது தழீஇயது நெறி முத்தி நெறி "முத்தி நெறி யறியாத மூர்க்கரோடு முயல்வேனோ" என்றார் கிளவாதஞரடிகளும்.

41 பாசம்போய் நின்றவர்போற் பாராட்டி யானலு
மோசம்போனே னுன் முறையோ பராபரமே.

பொ-ரை. பாசத்தோ யற்று நின்றவர் போல நடித்தும், நான் மே போனேன், இது முறையோ. எ-று.

முறையோ என்றது முறையீடாயினுமாம்.

42 நன்றறியேன் றீதறியே னெனன்று நின்றவனை
சென்றறியே னினைழை யென்னே பராபரமே.

பொ-ரை. நன்மையறியேன், தீமையறியேன், நான் என்று அகங் கரித்து நின்றவன் யார் என்றறியேன், ஆதலால் நான் அறிவில்லாதவன், இதற்குக் காரணமென்னேனு, எ-று.

43 இன்று புதிதன்றே யெளியேன் படுந்துயர
மொன்று மறியாயோ வுரையாய் பராபரமே.

பொ-ரை. எளியேன் படுந்துன்பம் இன்று புதிதல்லவே, இதனை நீ சிறிது முணர்ந்திலையோ, சொல்லாய். எ-று.

இந்தத்துன்பத்தை ஜந்மபரம்பரையாய்த்துய்த்து வருகின்றேனென் பது கருத்து.

44 எத்தனைதான் சன்மமெடுத் தெத்தனைநான் பட்டதுய
ரத்தனையு நீ யறிந்த தன்றே பராபரமே.

பொ-ரை. நான் எடுத்த ஜந்மங்களெத்தனை, அவைகளில் நான் பவித்ததுன்பங்களெத்தனை, அத்தனையும் நீ யறிந்ததல்லவோ. எ-று.

45 இந்தநாட் சற்று மிரங்கிலையேற் காலன்வரு
மந்தநாட் காக்கவல்லா ரார்காண் பராபரமே.

பொ-ரை. இன்று சிறிதும் என் மீதிரக்கஞ் செய்திலையாயின், காலன் வருமன்று, என்னைக் காத்தருளவல்லார் யாவருளர். எ-று.

காண் என்பதை முன்னிலையுரை யசையிடைச்சொல்லாகக் கொள் ளாது, நீயே தேடிப்பார் என்னும் பொருளதாகக் கோடலுமாம்.

46 உற்றுற்று நாடி யுளமருண்ட பாவியைநீ
சற்றிரங்கி யாளத் தகாதோ பராபரமே.

பொ-ரை. உற்றுப்பார்த்து உன்னைக் காணப் பெறுமையால், மன மருண்ட பாவியேனை, நீ சிறிதிரக்கஞ் செய்தாளத்தகாதோ. எ-று.

47 எள்ளளவு நின்னையிட வில்லா வெனைமயக்கிற்
றள்ளுதலா லென்னபலன் சாற்றுய்பராபரமே.

பொ-ரை. எள்ளளவாயினும் உன்னையன்றி வேறு துணையில்லாத என்னை, மீட்டும் பிறவிமயக்கமாகிய படுபள்ளத்தில் தள்ளுகையால், உனக் குண்டாகும் பயன்யாது, சொல்வாய். எ-று

48 பாடிப் படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ
தேடியெனை யடிமை சேர்த்தாய் பராபரமே.

பொ-ரை உலகின்கண்ணே உன்னைப் பாடிப்படித்துப் பாராட்டி நிற்கவோ, என்னை யடிமையாகத் தேடிச்சேர்த்தாய். எ-று

49 சொன்னத்தைச் சொல்வதல்லாற் சொல்லறவென் சொல்
லறுதிக், கென்னத்தைச் சொல்வே னெளியேன்பரா
பரமே.

பொ-ரை. முதியோர் சொன்னதைச் சொல்லுவதன்றி சொல்லுதலற்றொழிய, என் சொல்முடிவுக்கு என்சொல்லவல்லேன் எழையேன் எ-று.

50 சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருப்பதற்கே
யல்லும் பகலுமெனக் காசை பராபரமே.

பொ-ரை. சொல்லுஞ் சொல்லும், அசைசொல்லின்பொருளும் ஒழிந்து சும்மா விருப்பதற்கே, இரவும் பகலும் எனக்காசையுண்டு. எ-று.

51 நேசநிருவிகற்ப நிட்டை யல்லா லுன்னடிமைக்
காசையுண்டோ நீயறியா தன்றே பராபரமே.

பொ-ரை. நிருவிகற்பசமாதியில் நேசமுண்டல்லது, உன்னடியேனுக்கு பிறிதொன்றின்மேல் ஆசையுண்டோ, இது நீயுணராத தல்லவே. எ-று.

52 துச்சனென வேண்டா மித்தொல்லுலகி லல்லல்வண்டா
லச்சமிக வுடையே னையா பராபரமே.

பொ-ரை. என்னை அற்பனென்று நினைத்தல்வேண்டாம், இத்தப் பழைய வுலகத்திலுள்ள துன்பங்களைக்கண்டால் அவை கட்கு மிகவும் அஞ்சுதலுடையேன், ஐயனே, எ-று.

படைக்கப்பட்டு நெடு நாளாயினமையால் தொல்லுலகு என்றார்.

53 கண்ணுவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே.

பொ-ரை. என்னேத்திரம் போல்பவரேயாயினும் உன்னைக்கைகூப்பி வணங்காதாராயின், அந்த மண்ணுவார் சிநேகத்தை, நான்ஒருபொருளாக மதிக்கமாட்டேன், எ-று.

"கரவாது வந்தியுங் சுண்ணன்னுர்" என நட்பிற் சிறந்தோரைப் நாவலர் கூறுதலுங்காண்க.

54 கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென்னிச்சைபராபரமே.

பொ-ரை. கொல்லாவிரதமானது பூமண்டலமுழுதும் விருத்தியடைய எல்லாருக்கும் அதனேற்றத்தை யெடுத்துச்சொல்லுதற்கே எனக்கு விருப்பமுள்ளது, எ-று.

கு-பூமி, வலயம்-மண்டலம்.

55 எத்தாற் பிழைப்பேனே வெந்தையே நின்னருட்கே
பித்தானேன் மெத்தவுநான் பேதை பராபரமே.

பொ-ரை. என் தந்தையே, எந்த வுபாயத்திஞல் உஜ்ஜீவிப்பேனே (அறியேன்) உன்னருட்பேற்றுக்கே பித்தஞயினேன், நான் மிகவும் அறிவிலேன். எ-று.

என்னைக் கைவிடுதல் தக்கதன்று என்பதாம்.

56 வாயினுற் பேசா மௌனத்தை வைத்திருந்துந்
தாயிலார் போனுன் றளர்ந்தேன் பராபரமே.

பொ-ரை. வாயைக்கொண்டு பேசாததாகிய மௌனநிலையை யெகுரித்தாக்கி வைத்திருந்தும், தாயில்லாத புதல்வர் தளர்தல்போல நி தளர்ந்தேன் (இது தகுமோ.) எ-று.

58 அன்னையிலாச் சேய்போல லக்கணுற்றேன் கண்ணுர
வென்னகத்திற் றுய்போ லிருக்கும் பராபரமே.

பொ-ரை. தாயிலாப் பிள்ளைபோலத் துயரமடைந்தேன், கண்ணுர என்மனத்தில் தாய்போலிருக்கும் பராபரமே. எ-று.

58 உற்றுநினைக்கிற் றுயரமுள்ளுள்ளெ செந்தியாய்ப்
பற்றநொந்தே னென்னைமுகம் பார்நீ பராபரமே.

பொ-ரை. உற்று நோக்கி யெண்ணினுல் துயரமானது உள்ளத்தினுள்ளே, செந்தீயைப்போலப் பற்றியெரிதலால் நொந்தேன், என்னை, நீ முகம்பார். எ-று.

உள்-பெயரும் ஏழனுருபும்.

59 பொய்யனிவனென்றுமெள்ளப்போதிப்பார்சொற்கேட்டுக்
கைவிடவும் வேண்டாமென் கண்ணே பராபரமே.

பொ-ரை. இவன் பொய்யனென்று, பையப்போதிப்பவரது சொல்லைச் செவியேற்று, நீ என்னைக் கைவிடவேண்டாம், என் கண்போல் வானே. எ-று.

60 எண்ணமறிந்தே யிளைப்பறிந்தே யேழை யுய்யும்
வண்ணந் திருக்கருணை வையாய் பராபரமே.

பொ-ரை. என்னெண்ணத்தை யுணர்ந்து, என் மெலிவையுணர்ந்து, ஏழையேன் உய்யுமாறுதிருக் கருணைவைத்தல்வேண்டும். எ-று.

61 காட்டாதே யென்னையொன்றி ஞட்டியித மகிதங்
காட்டாதே யெல்லாநீ கண்டாய் பராபரமே.

பொ-ரை. என்னை ஒரு பொருளில் நாட்டவேண்டாம், நாட்டி, அதன் கண்ணுள்ள நன்மை தீமைகளைக் காட்டாதே, எல்லாப் பொருள்களும் நீயே. எ-று.

கண்டாய்-அசை.

62 உன்னை நினைந்து னின்னிறைவி னுள்ளே யுலாவுமென்னை
யன்னை வயிற் றின்ன மடைக்காதே பராபரமே.

பொ-ரை. உன்னை நினைந்து, உன்னிறைவுக்குள்ளே புலாவுகின்ற என்னை, இன்னமும் தாய்வயிற்றிலடைக்க வேண்டாம். எ-று.

63 பரமுனக்கென் றெண்ணும் பழக்கமே மாறு
வரமெனக்குத் தந்தருளென் வாழ்வே பராபரமே.

பொ-ரை. என்னைக் காத்தருளல் உனக்குப் பரம் என்றெண்ணுகின்ற பழக்கத்தையே, கெடாதவரமாக எனக்குத் தந்தருளல் வேண்டும், என் வாழ்ச்சிக்குக் காரணனே. எ-று.

64 வந்தித்து நின்னை மறவாக் கடனைகச்
சிந்திக்க நின்னதருள் செய்யாய் பராபரமே.

பொ-ரை, உன்னை வந்தித்து, மறவாமையைக் கடன்மையாகக்கொண்டு உன்னையே சிந்திக்க, உன்னருள் செய்தல்வேண்டும். எ-று.

65 எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுனின்
றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.

பொ-ரை. எவ்வகைப்பட்ட சிற்றுயிர்களையும், என்னரிய வுயிர்போல நினைத்து, அவை கட்கிரங்குமாறு, உன் தெய்வத்தன்மை யமைந்த அருளாகிய கருணையைச் செய்தல் வேண்டும். எ-று.

எவ்வுயிரும் என்றது ஓரறிவுயிரும் என்றபடி.

66 வெட்டவெளிப்பேதையன்யான்வேறுக டொன்றறியேன்
சிட்டருடன் சேரனந்த தெண்டன் பராபரமே.

பொ-ரை. நான் வெளிப்படையாகிய அறிவிலி, வேறு கபடமார்க்கங்களைச் சிறிதுமறிந்திலேன், (ஆதலால்நான் உய்யுமாறு) உன்னடியாருடன் சேர்ப்பாய், (அதன்பொருட்டு) உனக்கு அனேகமான தெண்டன் சமர்ப்பிக்கிறேன். எ-று.

67 இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே.

பொ-ரை- இராப்பகல்களற்றவிடத்திருத்தலாகிய சகாந்த யோகம் எனக்குண்டாகவும் என்மீது உன்திருக்கருணைவைத்தல் வேண்டும், எ-று.

68 மால்காட்டிச் சிந்தை மயங்காம னின்றுசுகக்
கால்காட்டி வாங்காதே கண்டாய் பராபரமே.

பொ-ரை. எனக்கு ஆசைகாட்டி, அந்நிலையினின்று நான் மயங்கா வண்ணம் சுகாரம் பஞ்செய்து, நீங்காதே, எ று.

69 எப்பொருளு நீயெனவே யெண்ணிநான் றேறுன்றுத
வைப்பையழி யாநிலையா வையாய் பராபரமே.

பொ-ரை. எவ்வகைப்பட்ட பொருள்களும் நீ யென்றே நினைந்து நான் என்பது தலை யெடாத ஞானபூமியை எனக்கு அழியா நிலையாக வைத்தல்வேண்டும், எ-று.

ஞானபூமி ஏழுவகைப்படும், அவையாவன - சுபேச்சை, விசாரணை தநுமாநசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்பன-இவற்றினிலக்கணமெல்லாம் பெருநூல்களிற்காண்க, எ-று.

70 சும்மா விருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே.

பொ-ரை. சும்மா இருப்பதே சுட்டுதலற்ற பூர்ண நிலையென்று, எம்மாலறியப்படுதற் கெளிதாகுமோ, எ-று.

சும்மாவிருத்தல்-அகப்புறக்கருவிகளலையாதிருத்தல்.

71 முன்னெடு பின்பக்க முடியடிநாப் பண்ணறுநின்
றன்னெடு நானிற்ப தென்றே சாற்றுய் பராபரமே.

பொ-ரை. முன், பின், இருபாரிசம், முடி, அடி, நடு, என்னுமிக்கூறு நிலைகள் அற்றொழியுமாறு, நான் உன்னோடு ஒன்றுபட்டு நிற்பது எங்ஙனோ, சொல்வாய், எ-று.

சீவன் சிவத்தோடொன்றுங் காலத்து இக்கூறுபாடுகள் தோன்றுவாதலால் இவ்வாறு கூறினர்.

72 மைவ்வண்ணந் தீர்ந்த மௌனிசொன்ன தெவ்வண்ண
மவ்வண்ண நிட்டை யருளாய் பராபரமே.

பொ-ரை. அஞ்ஞான விருள் நீங்கிய மௌனகுரு சொன்னது எவ்வண்ணமோ, அவ்வண்ணமாகிய நிஷ்டையை அருள்செய்யாய், எ-று.

73 ஸித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே.

பொ-ரை. விதையையாதாரமாகக் கொண்டல்லது எப்பொருளும் வீளைதலுண்டோ, இல்லையன்றே, அதுபோல, உன்திருவருளென்கிற ஞானத்தைக் கொண்டல்லது நாங்கள் உளமாவேமோ, சொல்வாய், எ-று.

74 ஆங்கார மற்றுன் னறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே.

பொ-ரை. அகங்காரம் நீங்கி, உன்விஷய ஞானரூபமான அன்பருக்கே உறங்காவுறக்க மோங்காநிற்கும், எ று

"தூங்காமற்றூங்கி" என்றுர்பிறரும்.

75 சிந்தையவிழ்ந் தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே யின்பநிலை வாய்க்கும் பராபரமே.

பொ-ரை. மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, ஞானமயமாகிய வுன்றிரு வடி நிழலின் கண் வந்தடைந்தவர்க்கே ஆநந்த நிலைகிடைக்கும், எ-று.

76 சொல்லாடா வூமரைப்போற் சொல்லிறந்து நீயாகி
னல்லா லெனக்குமுத்தி யாமோ பராபரமே.

பொ-ரை. பேசாதவூமரைப்போலப் பேச்சற்று, நான் நீயாயினல்லது, எனக்கு முத்தியுளதாமோ, எ-று,

77 பேச்சாகா மோனம் பிறவா முளைத்தலென்றற்
காச்சார்சு மேற்பய னுண்டாமோ பராபரமே.

பொ-ரை. பேச்சற்ற மோநநிலையானது தோன்றி வீளைந்தலென்றற்கேதுவாயிற்று, ஆதலால், இனி அதன் பயனுயிய முத்தியுமெனக் குண்டாகும், ஐயமின்று, எ-று.

78 கெட்டியென் றுன்னன்பர்மலங் கெட்டபர்ந்தோர் பூரணமாந், தொட்டிலுக்குட் சேய்போற் றுயின்ருர் பராபரமே.

பொ-ரை. கெட்டிக்காரர் என்று உலகாற்சொல்லப்பட்ட உன்னன்பர், மும்மல சம்பந்தம் நசிக்கப்பெற்று, அயர்ந்து, ஒப்பற்ற பூரண நிலையாகிய தொட்டிலுக்குள்ளே, துணித்தொட்டிலிற்றூயிலுஞ் சிறுர் போலத்துயின்ருர்கள், எ-று.

79 காட்டவரு விருக்கக் காணு திருண்மலத்து
நாட்ட மெனக் குவர னன்றே பராபரமே.

பொ-ரை. காட்டுதற்கு உன்திருவருளிருக்க, அதனை முன்னிட்டுக் காணும்ல், இருளுருவாகிய மலநாட்டம் எனக்குளதாதல் கண்ணையோ எ-று.

80 எத்தன்மைக் குற்ற மியற்றிடினுந் தாய்பொறுக்கு
மத்தன்மை நின்னருளு மன்றே பராபரமே.

பொ-ரை. எத்தன்மையதாகிய பெருங்குற்றத்தைப்பாலர் செய்தாலும், அதனைத்தாயானவள் பொறுத்துக்கொள்வாள், உன்திருவருளும் (எம்போலியரது குற்றம் பொறுத்தற்கு) அத்தன்மையதல்லவோ. எ-று.

81 எத்தனையோ தேர்ந்தாலு மென்னுலே யின்பமுண்டோ
சித்துருவே யின்பச் சிவமே பராபரமே.

பொ-ரை. எத்தனை தேர்ச்சியடைந்தாலும் என்னுல் எனக்குள்ள தோரின்பமுளதோ, அறிவுருவமே, சுகத்தைத்தருகின்ற பரமசிவமே. எ-று.

82 மண்ணெடுவிண் காட்டி மறைந்துமறை யாவருளைக்
கண்ணெடு கண்ணுக வென்றுகாண்பேன்பராபரமே

பொ-ரை. பூமியோடு ஆகாயத்தைக்காட்டி, மறைந்து மறையாதிருக்கிற உன்திருவருளைக் கண்ணெடு கூடிய கண்ணெளிபோல எந்நாள் காணப்பெறுவேன். எ-று.

83 பஞ்சரித்து நின்னைப் பலகா லிரந்ததெல்லா
மஞ்சலெனும் பொருட்டே யன்றே பராபரமே.

பொ-ரை. என்னிழிதன்மை காட்டிப்பலகாலு முன்னே நானிரந்ததெல்லாம், என்னை அஞ்சாதே யென்று நீ சொல்லியருளற் பொருட்டேயல்லவோ. எ-று.

84 எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிரா
யங்கங் கிருப்பது நீ யன்றே பராபரமே.

பொ-ரை. எவ்வெவ்விடங்களிற் பார்த்தாலும், அவ்வவ்விடங்களில் வேறுகைப் பட்டவுயிர்களுள்ளும் அவ்வவ்வுயிர்களாயிருப்பது நீ யல்லவோ. எ-று.

85 அனேத்தையுமாய் நின்றுயே யான்வேறே நின்னை
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே.

பொ-ரை. எல்லாப் பொருள்களும் நீயேயாகி நின்றனையே, அங்ஙனமாக, நான் வேறுகி நின்று, உன்னை நினைக்கும் வழியெப்படி, சொல்லாய் எ-று.

86 நின்போதத் தாலே நினைப்புமறப்பு மென்று
ண்போத மெங்கே யியம்பாய் பராபரமே.

பொ-ரை. நினைப்பும் மறப்புமாகிய யாவும் உன்போதத்தாலே நிகழ்வனவாயின், என்போத மெங்கேயுளது, சொல்லாய். எ-று.

போதம் - அறிவு.

87 ஒன்றைநினைந் தொன்றைமறந் தோடுமன மெல்லாநீ
யென்றறிந்தா லெங்கே யியங்கும் பராபரமே.

பொ-ரை. ஒன்றை நினைந்தும் ஒன்றை மறந்தும் ஓடா நின்றமன மானது, எல்லாப் பொருள்களும் நீயே யென்றறிந்த தாயின், எவ்விடத்தே சஞ்சரிக்கும். எ-று.

88 கொழுந்தில் வயிரமெனக் கோதறவுள் ளன்பி
லழுந்து மவர்க்கே சுகமுண்டாகும் பராபரமே.

பொ-ரை. கொழுந்தினிடத்து வயிர மடங்கியிருத்தல் போலக் குற்றம்நீங்க, உள்ளன் பினிடத்தழுந்தியிருப்பவர்க்கே ஆநந்த முண்டாகும், எ-று.

89 பற்றும் பயிர்க்குப்படர் கொழுந்து போற்பருவம்
பெற்றவர்க்கே நின்னருடான் பேறும் பராபரமே.

பொ-ரை. பற்றியேறும் வினைவுக்குப் படர்கின்ற கொழுந்து போலப், பருவமடைந்தவர்க்கே, உன்திருவருள் பயன்படும், எ-று.

90 யோகியர்க்கே ஞான மொழுங்காம் பேரன்பான
தாகியரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே.

பொ-ரை. யோகியர்க்கே ஞானமடைதல் உசிதமாகும், பெரியஅன்பினரான மோகத்தாக முள்ளவர்களும், முற்பிறப்பில் யோகஞ் சாதித்தடைந்தோராம், எ-று.

91 அல்லும் பகலு மறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் பராபரமே.

பொ-ரை. அல்லும் பகலும் அறிவுருவாகி நின்றவர்கட்கு, சொல்லுஞ் சொல்லினது பொருளுஞ் சுமையாகும், எ-று.

பேசார்களென்பது கருத்து,

92 எச்சிலென்று பூவை யிகழ்ந்தோர்க் குனப்போற்றப்
பச்சிலையுங் கிள்ளப் படுமோ பராபரமே.

பொ-ரை. எச்சிலாய் விட்டதென்று பூவையிகந்தவர்கட்கு, உன்னை யர்ச்சித்து வணங்கப் பச்சிலையையுங் கிள்ளல் தகுதியாமோ, எ-று.

எச்சிலென்று பூவையிகழ்தலாவது - வண்டினெச்சிலென்றெள்ளல்,

93 அந்தக் கரண மடங்கப் துறப்பதுவே
யெந்தத் துறவினுநன் றெந்தாய் பராபரமே.

பொ-ரை. மனமாதியந்தக் கரண்ங்கள் ஒடுங்கும்படி துறத்தலே, எவ் வகைப்பட்ட பொருள்களேத் துறத்தலினும் நன்மையாம், எந்தையே. எ-று.

94 தன்னே யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே.

பொ-ரை. தன்னே யின்னனென்றுணர்ந்தால், தலைவன்மேற்பற்றுண் டாதலன்றி, மற்றொருபற்று முளதாமோ, சொல்லாய். எ-று.

"தன்னேயுந் தனக்காதாரத் தலைவனேயுங் கண்டானேல், பின்னையத் தலைவன்றானே பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்" என்றார் பிறரும்.

95 அன்பாற்கரைந்து கண்ணீ ராறுகண்ட புண்ணியருக்
குன்பால்வர வழிதா னுண்டோ பராபரமே.

பொ-ரை. அன்பினுலுருகி, தமது கண்ணீராற்றைக்கண்ட புண்ணிய வான்களுக்கு, உன்னிடத்து வருதற்கு வழியுண்டோ. எ-று.

கண்ணீராறு தடுக்கு மாதலால், வழிதானுண்டோ என்றார்.

96 தன்னே யறிந்தருளே தாரகமா நிற்பதுவே
யுன்னே யறிதற்கு பாயம் பராபரமே.

பொ-ரை. தன்னேயறிந்து, திருவருளே தாரக மாகக்கொண்டு, அத் திருவருள் நிலையில் நிற்றலே, உன்னேயறிதற்குரிய வுபாயமாகும். எ-று.

97 கற்றகலே யானிலைதான் காணுமோ காண்பவெல்லா
மற்றவிடத் தேவெளியா மன்றே பராபரமே.

பொ-ரை. கற்ற கலைகளினுணர்ச்சியாற் பொருணிலே வெளியாமோ, காணப்படுவனவெல்லாம் அற்றொழிந்த விடத்தல்லவோ வெளியாகும். எ-று.

98 கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுண்டோ நின்னருளாம்
விண்மூடி னெல்லாம் வெளியாம் பராபரமே.

பொ-ரை. கண் மூடியும் கண் விழித்தும் பொருளேக்காணலுண்டோ, நின் திருவருளாகிய ஆகாயங் கவிந்து கொண்டால், யாவும் வெளியாகும். எ-று.

99 நேரே நின்தருளென் னெஞ்சைக் கவரிலென்றும்
பாரேன் சுகமும் படைப்பேன் பராபரமே.

பொ-ரை. உன்திருவருளானது, நேராக என்மனத்தைக் கவர்ந்து கொண்டால், வேறொருபொருளையும் பார்க்கமாட்டேன், ஆநந்தத்தையு மடைவேன், எ-று.

100 வான்காண வேண்டின் மலையேற லொக்குமுன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே.

பொ-ரை. உன்னை நான்காணும் பொருட்டும் பாவனை செய்கின்ற தன்மையானது, ஆகாயத்தைக் காணவிரும்பினேன் மலையேறுதலை நிகர்க்கும், எ-று.

பயன் படாதென்பது கருத்து.

101 வாதனைவிட் டெண்ணருளின் மன்னினல்லால் வேறுமொரு
சாதனைதா னுண்டோ நீ சாற்றாய் பராபரமே.

பொ-ரை. மூவகை வாசனைகளை விட்டு உன்திருவருளினிடத்துப் பொருந்தினலன்றி, வீடுபேற்றுக்கு வேறுமொரு சாதனமுமுண்டோ, நீ சொல்லாய், எ-று.

102 பாரகமும் விண்ணகமும் பற்றுக நிற்பதருட்
டாரகத்தைப் பற்றியன்றே சாற்றாய் பராபரமே.

பொ-ரை. மண்ணகமும் விண்ணகமும்தமக்குத் தாரகமாகப்பற்றிநிற் பது, உன்திருவருளாகியதாரகத்தைப் பற்றியல்லவோ, சொல்லாய், எ-று.

தாரகம் - ஆதாரம்.

103 விளக்குந்த னிலையையும் வேறென்னுள் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே.

பொ-ரை. உன்னைச் சலனமறச் சீவனென்று சொல்பவர், விளக்கை யும் தகளியையும் வெவ்வேறு பொருள்களென்று சொல்லார்கள், எ-று.

104 பாராதி நீயாப் பகர்ந்தா லகமெனவு
மாராயுஞ் சீவனுநீ யாங்காண் பராபரமே.

பொ-ரை. பிருதிவிமுதலியவைகளை நீயாகச்சொல்லுமிடத்து, அகம் என்றும் ஆராயப்படும் சீவனும் நீயேயாகும், எ-று.

105 பொய்யைப் பொய்யென்றறியவும் போதத்துக் காதரவுன்
மெய்யருளே யன்றே விளம்பாய் பராபரமே.

பொ-ரை. பொய்ப்பொருளை உள்ளவாறு பொய்ப்பொருளே யாமென் றறியும் அறிவினுக்கு ஆதாரவாயிருப்பது, உன்மெய்யருளே யல்லவோ, சொல்வாயாக, எ-று.

106 வருவான்வந் தேனெனல் போன்மன்னியழி யுஞ்சகத்தைத்
தெரிவாக வில்லையென்ற தீரம் பராபரமே.

பொ-ரை. நிலையாகக்காணப்பட்டழியுஞ் சகத்தைத்தெளிவாக இல்லை யென்றதீரம், இனிவருவா னொருவன் தணிவுபற்றிவந்தே னென்றலை யொக்கும், எ-று.

107 மாயா சகமிலையேன் மற்றெனக்கோர் பற்றுமிலை
நீயேநா னென்றுவந்து நிற்பேன் பராபரமே.

பொ-ரை. மாயாப் பிரபஞ்சமில்லையாயின், எனக்கு வேறுமொருபற்று மில்லையாம், ஆகவே, நீயேநானென்று வந்துநிற்பேன், எ-று.

108 வானுதி நீயெனவே வைத்தமறை யென்னையுநீ
தானுகச் சொல்லாதோ சாற்றுய் பராபரமே.

பொ-ரை. ஆகாய முதலியவற்றை நீயென்றே சொல்லிவைத்தவேதம் என்னையும் நீ யாகவே சொல்லாதோ, நீ சொல்வாய், எ-று.

109 வெள்ளக் கருணைமத வேழமா நின்னருட்கென்
கள்ளக் கருத்தேக வளம் பராபரமே.

பொ-ரை. கருணை மதத்தையுடைய மதயானையாகிய உன் திருவருளுக்கு, என் வஞ்சகத்தையுடைய மனமேக வளமாகும், எ-று.

110 வண்டாய்த் துவண்டு மௌனமல ரணைமேற்
கொண்டார்க்கோ வின்பங் கொடுப்பாய் பராபரமே.

பொ-ரை. வண்டுபோலத்துவண்டு, மௌனமாகிய புஷ்பசயனத்தின் மேலேறினவர்களுக்கேயோ, நீ சுகங்கொடுப்பாய், எ-று.

ஏனையர்க்குக் கொடாயோ வென்பது கருத்து.

111 மாயைமுத லாம்வினைநீ மன்னுயிர்நீ மன்னுயிர்தேர்ந்
தாயுமறி வானதுநீ யன்றே பராபரமே.

பொ-ரை. மாயை முதலாகிய வினைக்கருவிகளும் நீ, அவைகளாற் சூழ்ப்பட்டு நிலைபெற்றிருக்கு முயிர்களும் நீ, நிலைபெற்றவுயிர்கள் மாயை கடந்து தெளிந்து ஆராயுமறிவாயிருப்பதும் நீ யல்லாவோ, எ-று.

112 என்னறிவும் யானுமென தென்பதுவு மாமிவைக
ணின்னவையே யன்றே நிகழ்த்தாய் பராபரமே.

பொ-ரை. என்னறிவும், நானும், என தென்பதும், ஆகிய இவையாவும், உன்னுடையனவே யாமன்றே, சொல்லாய், எ-று.

113 பாரறியா தண்டப் பரப்பறியா தன்பெருமை
யாரறிவார் நானேயறிவேன் பராபரமே.

பொ-ரை. மண்ணுலகமறியாது, விண்ணுலகப் பரப்பறியாது, (அப்படிப்பட்ட) உன்பெருமையை, யாவரறியவல்லார், ஒருவருமில்லை, (அங்ஙனமாக) நானே அறியவல்லேன், எ-று.

114 அண்டமனைத் திலுமாயப்பாலுக் கப்பாலுங்
கொண்டநின்னை யாரறிந்து கொள்வார் பராபரமே.

பொ-ரை. எல்லா அண்டங்களுக் குள்ளாகி யிருப்பதுமன்றி, அவற்றிற்குப் புறமான இடங்களையும், பரிபூர்ண வியாப்தியால் ஆக்ரமித்திருக்கின்ற உன்னை, யாவர் அறிந்து கொள்ளவல்லார், எ-று.

115 ஒப்புயர் வொன்றின்றி யொளிபுகா மோனவட்டக்
கப்பலுக்காம் வான்பொருளே கண்டாய் பராபரமே.

பொ-ரை. சமாநாதி கரஹிதமாய் சத்தமற்ற மௌநநிலையாகிய, விருத்தவடிவாகிய மரக்கலத்துக் கேற்ற மேலாகிய சரக்கு நீ எ-று.

116 என்போ லெளியவரு மெங்கெங்கும் பார்த்தாலு
முன்போல் வலியவரு முண்டோ பராபரமே.

பொ-ரை. எவ்வெவ்விடங்களில் ஆராய்ந்து பார்த்தாலும், என்னைப் போல எளியவர்களும், உன்னைப்போல வலியவர்களும் உண்டோ, எ-று.

117 பார்க்கினண்ட பிண்டப் பரப்பனைத்து நின்செயலே
யார்க்குஞ் செயலிலையே யையா பராபரமே.

பொ-ரை. ஆராய்ந்து பார்த்தால், அண்டபிண்ட விரிவெல்லாம் உன் செய்யின் காரியமாக வேயிருக்கின்றது, வேறொருவர்க்கும் ஒரு செயலுமில்லை ஐயனே, எ-று.

118 ஒன்றே பலவேயுருவே யருவேயோ
வென்றே யழைப்பதுன்னை யென்று பராபரமே.

பொ-ரை. ஒரு பொருளா யிருப்பவனே, பல பொருள்களாயிருப்பவனே, உருவமாயிருப்பவனே, அருவமாயிருப்பவனே, ஓ வென்று முறையிட்டு உன்னை யழைப்பது எந்நாளோ, எ-று.

119 செப்புவதெல்லாஞ் செபநான் சிந்திப்ப தெல்லாநின்
னெப்பிறி யானமென வோர்ந்தேன் பராபரமே.

பொ-ரை. நான் பேசுவனயாவும் உன் செபமெனவும், நான் சிந்திப்பனயாவும் உன்தியானமெனவும், ஆராய்ந்தறிந்து கொண்டேன், எ-று.

120 ஆரிருந் தென்னுர்போ யென்னரமுதா நின்னருளின்
சீரிருந்தா லுய்வேன் சிவமே பராபரமே.

பொ-ரை. ஆரிருந்தாலென்னலாபம், ஆர் போனால் என்ன நஷ்டம் (ஒன்றுமில்லை) அரிய அமிர்தமாகிய உன் திருவருளின் பலமிருந்தால் நான் பிழைப்பேன், மக்களாரேனே. எ-று.

அமுது பிழைப்பிக்கு மருந்தாதலால், 'அமுதாகின்னருளின் சீரிருந்தாலுய்வேன்' என்றார்;

121 வஞ்சகமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கு
மஞ்சியுனை யடைந்தே னையா பராபரமே.

பொ-ரை. கபடத்தையுடைய இயமனது வேதனைக்கும், வலியபிறவி வேதனைக்கும் (ஆற்றாது) அஞ்சி, (அவைகளை நீக்கிக் காக்கவல்ல) உன்னைத் தஞ்சமடைந்தேன், ஐயனே, எ-று.

122 எந்தப்படி யுன்னிதய மிருந்த தெமக்
கந்தப்படி வருவ தன்றே பராபரமே.

பொ-ரை. உன் திருவுள்ள மெவ்வாறுயிருந்ததோ, அவ்வாறுயன்றே, எமக்கு இன்பதுன்பங்களுண்டாவது, எ-று.

123 எந்தெந்த நாளு மெனைப்பிரியா தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்டவருட் டேவ பராபரமே.

பொ-ரை. எக்காலத்தும் என்னை விட்டு நீங்காமல், என்னுயிர்க்குயிராய், என்மனத்தினைக் குடியாகக் கொண்டிருந்த, அருட்டெய்வமே, எ-று.

எக்காலத்தும் என்றது இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூக்கால த்தை,

124 அஞ்சலஞ்ச லென்றடிமைக் கப்போதைக் கப்போதே
நெஞ்சி லுணர்த்து நிறைவே பராபரமே.

பொ-ரை. உன் தொண்டனாகிய எனக்கு, அப்போதைக்கப்போது, ___படாதே பயப்படாதே யென்று, என் மனத்திலிருந்தறிவிக்கின்ற பரிபூர்ணமே, எ-று.

125 என்னையுன் றன்கைக்களித்தார் யாவரென்னை யான்கொடுத்துப், பின்னையுன்னைப்பெற்றநலம்பேசென்பராபரமே.

பொ-ரை. என்னை உன்கையிற் பிடித்துக் கொடுத்தவர்யாவர், என்னை நானே கொடுத்து, பிறகு, உன்னை நானடைந்த பேற்றை எடுத்துப்பேச வலியிலேன், எ-று.

126 வாய்பேசா வூமையென வைக்கவென்றே நீமௌனத்
தாயாக வுந்தருளைத் தந்தாய் பராபரமே.

பொ-ரை. வாய் பேசாதவுமை யென்று, கண்டோர் சொல்லும்படி என்னை மௌனநிலையில் வைப்பதற் கென்றுதானே, நீ மௌனத்தாயாய் வந்து, என்திருவருளை யெனக்குத் தந்தனை, எ-று.

127 தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்
கென்னைக்கொண் டென்ன பலனெந்தாய் பராபரமே.

பொ-ரை. அறப் பெரியவுன்னை எனக்குக் கொடுத்து, அறச்சிறிய என்னைத் தடுத் தாட்கொண்ட உன்திருவருளுக்கு, என்னால் என்னபயன், எந்தையே, எ-று.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென்றன்னைச் சங்கராவார் கொலோ சதுரர்" என்னும் திருவாத வூரடிகளும்.

128 மார்க்கண்டர்க்காக மறலிபட்ட பாட்டை யுன்னிப்
பார்க்கினன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே.

பொ-ரை. மார்க்கண்ட முனிவர் பொருட்டுவந்த இயமன் பட்ட பாட்டை ஆலோசித்துப் பார்த்தால், உன்னடியார்க்கு என்னபயமுண்டு, எ-று.

இயமன் பட்டபாடு - இறைவன் திருவடியாலுதையுண்டு மூர்ச்சித்து விழுந்தமை.

129 சுட்டியுணர் தாமற் றூரியநிலை யாய்வெளியில்
விட்டநின்னை யாரே வியப்பேன் பராபரமே.

பொ-ரை. ஒன்றை யெதிரிட்டறியாவகை, தூரிய நிலையாகிய பரமாகாயத்தில் என்னைக் கொண்டுபோய் விடுத்த வுன்னை, நானே புகழ வல்லேன், எ-று.

"நானே என்னும் ஓகாரம் எதிர்மறையாதலால் அறிஞர் புகழவல்லார் என்பது கருத்து.

130 சூதொன்று மின்றியென்னைச் சும்மா விருக்கவைத்தா
யீதொன்றும் போதாதோ வின்பம் பராபரமே.

பொ-ரை. கபடங்கள் சிறிது மில்லாமல் என்னைச் சும்மா இருக்கும்படி வைத்தனை, இன்பங் கொடுப்பதாகிய இது ஒன்றுமே எனக்கமையாதோ, எ-று.

131 வாயொன்றும் பேசா மௌனியாய் வந்தாண்ட
தேயொன்றும் போதாதோ வின்பம் பராபரமே.

பொ-ரை. சிறிதும் வாய் பேசாத மௌனகுருவாகி நீ எழுந்தருளி, என்னை யாண்டதொன்றுமே எனக்கின்பங்கொடுக்க அமையாதோ, எ-று.

132 என்று மிருந்தபடிக் கென்னை யெனக்களித்த
தொன்றும் போதாதோ வுரையாய் பராபரமே.

பொ-ரை. எக்காலத்தும் நானிருந்தபடிக்கு என்னை யெனக்களித்த தாகிய ஒன்றுமே யமையாதோ, (இன்னும் நீ யெனக்குச் செய்யவேண்டிய வுதவிகளுமுளவோ) சொல்வாய், எ-று.

என்னை யெனக்களித்த தென்றது, தன்னைவிட யங்களுக் கிரையா காமல் தடுத்து, தன்னைத் தானே யநுபவித்தலாகிய ஆத்மாநுபவத்தை.

133 எண்டிசைகீழ் மேலான மெல்லாம் பெருவெளியாக்
கண்டவிடத் தென்னையுநான் கண்டேன் பராபரமே.

பொ-ரை. எட்டுத்திசைகளும் பூமியும் ஆகாயமுமாகிய எல்லாம் பெரு வெளியாகக் கண்ட இடத்தில், என்னையும் நான்கண்டேன், எ-று.

134 பித்தனையே தும்மறியாப் பேதையனை யாண்டவனக்
கெத்தனைதான் றெண்ட னிடுவேன் பராபரமே.

பொ - ரை. பித்தனும் ஒன்றுமறியாத அவிவேகியுமாகிய என்னை யாண்ட ருளியவனக்கு, நான் எத்தனை தென்டன் சமர்ப்பிப்பேன், எ-று.

எத்தனை தெண்டனிட்டாலும் நீ செய்த வுதவிக்குக் கைம்மாறுகா தென்பது கருத்து.

135 தாயார்கர்ப்பத் தூடனமுந் தண்ணீருந் தந்தருளு
நேயவுனை யாரே நினையார் பராபரமே.

பொ-ரை. தாய் வயிற்றினுள்ளும், அந்தபாநங்களையும் தந்தாண்ட நேயனே, உன்னை நினையாதவர் யாவரோ (ஒருவருமில்லை.) எ-று.

136 விரிந்த மனமொடுங்கும் வேளையிரு ளகப்
பரந்த வருள்வாழி பதியே பராபரமே.

பொ-ரை. பரந்தமனமடங்குவியும் வேளையில், நானென்று முந்திவந்து பரந்தவுன் திருவருள்வாழக்கடவது, இறைவனே, எ-று.

137 சிந்தனைபோய் நானெனல்போய்த் தேக்கவின்ப மாமழை
யை, வந்துபொழிந் தினிதே வாழி பராபரமே.

பொ - ரை. சிந்தித்தலற்று, நானென்பதற்று, நிறைவை யடையும் வண்ணம் வந்து, பெரிதாகிய இன்பமழையைச் சொரிந்தாய், ஆதலால், நீவாழக்கடவை, எ-று.

138 தந்தேனே யோர்வசனந் தந்தபடிக் கின்பமுமாய்
வந்தேனே யென்றனிதே வாழி பராபரமே.

பொ-ரை. ஒருமொழியைப் போதித்தேனே, போதித்தவண்ணமே சுகரூபமாகிவந்தேனே, என்று திருவாய் மலர்ந்தருளினை, ஆதலால், நீ வாழக்கடவை, எ-று.

139 மண்ணும்விண்ணும் வந்து வணங்காவோ நின்னருளைக்
கண்ணுறவுட் கட்டவரைக் கண்டாற் பராபரமே.

பொ-ரை. உன்திருவருளே, மனக்கண்ணிற்பொருந்தவுள்ளே கண்டுய்ந்த அன்பர்களைக் கண்டால், மண்ணுலகும் விண்ணுலகும் வந்து வணங்கமாட்டாவோ, எ-று.

140 என்றுங் கருணை பெற்றவின்பத் தபோதனர் சொல்
சென்றசென்ற திக்கனைத்துஞ் செல்லும் பராபரமே.

பொ-ரை. உன்திருவருளைப் பெற்ற சுகரூபிகளாகிய தபோநிதிகளுடையவாய் மொழியானது, எக்காலத்தும், போயின போயின திசைகளிலெல்லாம் செல்லும், எ-று.

141 ஆடுவதும் பாடுவது மானந்தமாக நின்னைத்
தேடுவது நின்னன்பர் செய்கை பராபரமே.

பொ-ரை. ஆடுதலும் பாடுதலும் சந்தோஷமாக வுன்னைத் தேடித்திரிவதும் உன் தொண்டரது செய்கை, எ-று.

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலையென்புருகிப்-பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்-சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலிபிணைநெஞ்சே-தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன்றறியேனே" என்றூர் திருவாதவூரடிகளும்

142 பொங்கியகின் றண்ணருளைப் புட்கலமாப் பெற்றவர்க்
கெங்கழுந்தென் ஞாயி றியம்பாய் பராபரமே.

பொ-ரை. பொங்கிப் ரவஹித்த உன் தண்ணிய அருளைப்பூர்ணமாகப் பெற்றவர்களுக்கு, சூரியன் கிழக்குத்திக்கில் உதித்தலொழிந்து, எத்தத்திக்கில் உதித்தால் தான் என்னபயம் கொல்வாய், எ-று.

"இங்கிப் பரிசேயெமக் கெங்கோனல் குதியேல் - எங்கெழிலென் ஞாயிறெமக்கு" என்றூர் திருவாதவூரடிகளும்.

143 பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே.

பொ-ரை. பாலகர், பேயர் பித்தர், ஆகிய இவர்களுடைய குணத்தையடைந்திருப்பதே, ஒழுக்க மிகுந்தஞானிகளுடைய செய்கை, எ-று.

144 உண்டுடுத்துப் பூண்டிங் குலகத்தார் போற்றிரியுந்
தொண்டர்வினை யாட்டே சுகந்தாண பராபரமே.

பொ-ரை. உண்டும் உடுத்தும் பூண்டும் இந்தப்பிரபஞ்சத்தார்போல இவ்விடத்து நடித்துத்திரிகின்ற தொண்டரது லீலையே, எமக்கு இன்பந் தருவதாயிரா நின்றது, எ-று.

உண்ணல் அந்நபானாதிகளையெனவும், உடுத்தல் நூலாடைமுதலியவற்றை யெனவும், பூணல் ஆபரணாதிகளை யெனவும், உரைத்துக்கொள்க.

145 கங்குல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
யெங்கு மொருவழியே யெந்தாய்பராபரமே.

பொ-ரை. இராப்பகல் களில்லாமல் சதோதயமாய் நின்றபேரறிவினையுடையார் கண்ட நெறி, எவ்விடத்தாயினும் ஒருநெறியே, எந்தையே, எ-று.

காட்சி-அறிவு, அது "மாசறுகாட்சியவர்" என்னுந் திருக்குறளானு முணர்க.

146 காயநிலை யல்லவென்று காண்பா ருறங்குவரோ
தூயவருட் பற்றுத தொடர்வார் பராபரமே.

பொ-ரை. சரீரமானது நிலையற்ற தென்று அநுபவமாகக் காண்பவர் உறங்குவார்களோ (உறங்கார்) (மற்றென்னையெனின்,) பரிசுத்தமாகிய ஞானருளே பற்றுக் கோடாகக்கொண்டு தொடர்வார், எ-று.

147 அப்புமுப்பும் போன்ற வயிக்யபரா னந்தர்தமக்
கொப்புவமை சொல்லவும் வாயுண்டோ பராபரமே.

பொ-ரை. நீரும் அதனிடத்துக் கரைந்தொன்று பட்ட உப்பும் போலச் சிவபோகத் தொன்றுபட்டமேலான ஆநந்தத்தை யுடையவர்களுக்குச் சமாநமாக வுவமித்துச் சொல்லுதற்கும் வாயுண்டோ, எ-று.

148 சித்தந் தெளிந்து சிவமாநே ரெல்லோர்க்குங்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே.

பொ-ரை. மனந்தெளிந்து சிவரூபமாகிய அறிஞரெல்லார்க்கும், நான் கொத்தடிமையான குடியாவேன், எ-று.

149 தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே.

பொ-ரை. தம்முயிர்போலவே யெவ்வுயிருமாமென்றெண்ணி, தண்ணிய அருள்மிகுந்த செவ்வியநடையையுடையவருக்கு, எக்காலத்து ஏவல் செய்யக்கடவேன், எ-று.

150 விண்ணுக்கும் விண்ணுகி மேவுமுனைக் கியான்பூசை
மண்ணிலிற்கு மாறு பகராய் பராபரமே.

பொ-ரை. ஆகாயத்துக்கும் ஆகாயமாகிப் பொருந்து கின்றவுனக்கு நான் பூசை பண்ணிலிற்கும் வழியை எனக்குச் சொல்லியருளாய், எ-று.

151 நெஞ்சகமே கோயினினைவே சுகந்தமன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

பொ-ரை. என் மனமே கோயிலாகவும், என் சிந்தனையே பரிமள திரவியமாகவும், என்னன் பேதிருமஞ்சன நீராகவும் கொண்டு, யான் செய் யும் பூசையை ஏற்றுக்கொள்ளவாராய், எ-று.

152 கெட்டவழி யாணவப்பேய் கீழாக மேலான
சிட்டருனைப் பூசை செய்வார் பராபரமே.

பொ-ரை. துர்மார்க்கத்தையுடைய ஆணவப்பேயானது தாழும்படி, மேலாகிய சிஷ்டர்கள், உன்னைப் பூசைசெய்வார்கள், எ-று.

153 கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பிற் றேகம் விழுமோ பராபரமே.

பொ-ரை. வாயுவைத்தடித்து மூலநெருப்பைச் சந்திரமண்டலத்தின் மேலெழுப்பினால், இந்தச்சரீரம் பொன்றிவிழுமோ, எ-று.

154 பஞ்சசுத்தி செய்துனின்னைப் பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.

பொ-ரை. பஞ்ச சுத்திபண்ணி, உன்னைப்பாவனை பண்ணிப் பூசை செய்தால், மேலாகிய ஞானம் பிரகாசிக்கும், எ-று.

155 அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

பொ-ரை. உன் தொண்டாகிய திருத்தொண்டைச் செய்வதற்கு என்னையடிமையாக்கி விட்டு விட்டால், ஆநந்த நிலையானது தானேவந்துவாய்க்கும், எ-று.

156 மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

பொ-ரை. மூர்த்தி தலம் தீர்த்தம் என்னு மிவற்றைக்கிரமமாக ஆரம் பித்தவர்களுக்கு, ஒரு மொழிசொல்வதற்கு, சதாசாரியரும் வந்துவாய்ப் பர், எ-று.

157 விரும்புஞ் சரியையுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றே பராபரமே.

பொ-ரை. விரும்பப்பட்ட சரியை முதலாக மெய்ஞ்ஞான மிறுதியாக வுள்ள நான்குபாதங்களும், அரும்பு, மலர், காய், கனிகளைப்போன்றன வல்லவோ, எ-று.

158 தானந் தவந்தருமஞ் சந்ததமுஞ் செய்வர்சிவ
ஞானந் தனையணைய நல்லோர் பராபரமே.

பொ-ரை. நல்லோர், சிவஞானத்தையடையும் பொருட்டு, தானம் தவம் தருமம் என்பவற்றைச் சதாகாலமுஞ் செய்வார்கள், எ-று.

159 சொன்னத்தைச் சொல்லித் துடிக்கின்ற வாணவப்பேய்க்
கின்னல் வருவதெந்நா ளெந்தாய் பராபரமே.

பொ-ரை. சொன்னதையே சொல்லிப்பதைக்கின்ற ஆணவப் பேய்க் குத்துன்பம் உண்டாவது எக்காலமோ, எந்தையே, எ-று.

துன்பம் உண்டாவது-அறிவுண்டாவது.

160 இன்றே விருவினைவந் தேறியது நானென்றே
வன்றே விளைந்ததன்றே வாற்றேன் பராபரமே.

பொ-ரை. இருவினை வந்து எறியது இன்றுதானே, நான் எப்பொழுது உளனாயினேனே, அப்பொழுதே யுண்டான தல்லவோ, இவ்விருவினைகளுக்கு நான் ஆற்றமாட்டேன், எ-று.

161 எண்ணமுந்தா னின்னைவிடவில்லையென்றல் யான்முனமே
பண்ணவினை யேது பகராய் பராபரமே.

பொ-ரை. உன்னை யன்றிமனமும் இல்லையாயின், யான், முற்பிறப்புக்களில் பண்ணுதற்குக் கருமமேது, சொல்வாய், எ-று.

162 என்னையின்ன தென்றறியா வேழைக்கு மாகெடுவே
முன்னைவினை கூடன் முறையோ பராபரமே.

பொ-ரை. என்னை இன்ன பொருளென்றுணராத அறிவிலேற்கும் ஐயோ கெடுவேன், பூர்வகன்மம் வந்து பொருந்துதல் முறையாமோ, எ-று.

163 அறியாநான் செய்வினையை யையாநீ கூட்டுங்
குறியே தெனக்குளவு கூறாய் பராபரமே.

பொ-ரை. நன்மை தீமைகளைப் பகுத்துணர அறியாத நான் செய்யுங் கருமங்களை, ஐயனே, நீ சேர்க்குங் குறியிடம்யாது, எனக்கு உளவு சொல்லக்கடவாய், எ-று.

164 என்னைக் கெடுக்க விசைந்தவிரு வினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே.

பொ-ரை. என்னைக் கெடுக்க வொருப்பட்ட இருவினைப்பிணையைக் கெடுத்தருள உனக்குத்தகாதோ, எ-று.

165 வல்லமையே காட்டுகின்ற மாமாயை நானெருவ
னில்லையெனி னெங்கே யிருக்கும் பராபரமே.

பொ-ரை. தனது சாமர்த்தியத்தையே காட்டுகின்ற பெரியமாயை யானது, நானெருவனில்லையாயின், எவ்விடத்திருக்கும், எ-று.

தனது முழுவல்லமையும் என்னிடத்துக் காட்டுகின்ற தென்பதாம்.

166 மூக்குணத்தா லெல்லா மூலைக்கப் பிரகிருதிக்
கிக்குணதீதை நல்கியதா ரெந்தாய் பராபரமே.

பொ-ரை. மூக்குணங்களால் எல்லாப் பொருள்களும் உண்டாகும் படி, மூலப்பகுதிக்கு இத்தக் குணவிசேடத்தைக் கொடுத்தது யார், எந்தையே, எ-று.

167 ஆற்றப் படாது துன்பமையவென்னு லென்மனது
தேற்றப் படாதினியென் செய்வேன் பராபரமே.

பொ-ரை. ஐயனே, துன்பம் என்னால் சகிக்கப்படாததாயிருக்கின்றது, என்மனமானது தெளிவிக்கப்படாததாயிருக்கின்றது, இனி என் செயக்கடவேன், எ-று.

168 பூராய மாய்மனதைப் போக்கவறியாமலேயோ
ஆரா யலைந்தே னரசே பராபரமே.

பொ-ரை. வசலாற்று முறையாய் மனத்தை நசிப்பிக்க அறியாமல் ஐயோ, நான் யாவருக்கு என்னை நினைத்து அலைந்தேன், அரசனே, எ-று.

169 சினமிறக்கக் கற்றுலுஞ் சித்தியெல்லாம் பெற்றுலு
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.

பொ-ரை. கோவம் நசிக்க அப்பியாசித்தாலும், சித்திகளெல்லாவற்றையும் அடைந்தாலும், மனம் நசிக்கும்படி அப்பியாசியாதவர்களுக்கு பேச்சிருந்தென்னலாபம், எ-று.

170 வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போற் பாழ்த்தமன
மேதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே.

பொ-ரை. சண்டை செய்ய வந்தெதிர்த்த மல்லர்களைப்போல, பாழான மனமானது, என்ன லாபமடையக் கூத்தாடுகின்றது, எந்தையே, எ-று.

171 சூதாடு வார்போற் றுவண்டு துவண்டுமனம்
வாதாடி னென்னபலன் வாய்க்கும் பராபரமே.

பொ-ரை. சூதாடுவோர்களைப்போல, மனந்தளர்ந்துதளர்ந்து, வாதாடினால், அதற்கு என்ன பயனுண்டாகும், எ-று.

172 கொள்ளித் தேள்கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனந் துள்ளுவதென் கண்டோ பராபரமே.

பொ-ரை. கொள்ளித் தேள்கொட்ட, அதனால்,பதைக்கின்றபேய்க்குரங்குபோல, வஞ்சகத்தையுடையமனமானதுதுள்ளுவது என்னகருதியோ, எ-று.

கொள்ளித் தேள்-கொட்டினால் நெருப்புக்கொள்ளிபோல் எரியச்செய்வதாகிய தேள்.

173 வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப் பார்த்திருந்தாற், சிந்தையித மகிதஞ்சேரும் பராபரமே.

பொ-ரை. வந்த சமாசாரத்தையும் போன சமாசாரத்தையும் வைத்துவைத்து நோக்கிக்கொண்டிருந்தால், மனமானது, நன்மை தீமைகளைப் பொருந்தும், எ-று.

175 ஏறுமயிர்ப் பாலமூணர் விந்தவிட யங்களெருப்
பாறெனவு நன்ரு வறிந்தேன் பராபரமே.

பொ-ரை. அறிவானது, எறிநடக்கின்ற மயிரினாற் செய்தவாரதியென்றும், இந்த விடயங்கள் நெருப்பாறு என்றும், நன்ருகத் தெரிந்துகொண்டேன், எ-று.

இந்த விடயங்கள்-இந்த ஐம்பொறிகளால் அநுபவிக்கப்பட்ட விடங்கள்.

175 பொறிவழியே யேழை பொறியா யுழல்வதுநின்
னறிவின் விதித்தவிதி யாமோ பராபரமே.

பொ-ரை. ஐம்பொறிகளின் வழியாகி, அறிவற்ற நான், சிற்றணுவாகிபலவது, உன் சர்வஜ்ஞத்வத்தால் நியமித்த நியமமாகுமோ, எ-று.

176 பாசசா லங்களெல்லாம் பற்றுவிட ஞானவைவாள்
வீசுநா ளெந்நாள் விளம்பாய் பராபரமே.

பொ-ரை. பாசக் கூட்டங்களெல்லாம் பற்றற்றொழியும்படி, ஞானமாகிய கூர்வாளை வீசுகின்ற நாள் எந்தநாளோ, சொல்லாய், எ-று.

177 ஏந்த வுடலேனு மெடுத்தவுட னல்லதென்று
சிந்தைசெய வுந்தீற்றுஞ் செப்பாய் பராபரமே.

பொ-ரை. எந்தச் சரீரத்தினும் இப்போதெடுத்த இம்மானுட சரீரம் கல்லதென்று சிந்திக் கவந்த என் நற்றிறத்திற்குக் காரணமின்ன தென்று சொல்லாய், எ-று.

178 பொய்யெல்லா மொன்றுப் பொருத்திவைத்த பொய்யுடலே
மெய்யென்றுன் மெய்யாய் விடுமோ பராபரமே.

பொ-ரை. பொய்ப் பொருள்களெல்லாவற்றையும் ஒன்றுகத்திரட்டி அவற்றைக் கொண்டு பொருத்திவைத்திருக்கிற பொய்யுடம்பை, மெய்ப் பொருளென்று சொன்னால், மெய்ப்பொருளாகிவிடுமோ, எ-று.

179 மின்னனைய பொய்யுடலே மெய்யென்று நம்பியையோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

பொ-ரை. மின்னலேயொத்த பொய்யுடம்பை மெய்யென்று நம்பி, அந்தோ, உன்னைமறந்தொழிதல், எனக்கு நல்லமார்க்க மாகுமோ, எ-று.

180 நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற்
கித்தனைதான் றுன்பமுண்டோ வென்னைபராபரமே.

பொ-ரை. நிலைபேறுகிறிது மில்லாத நீர்க்குமிழிபோன்ற சரீரத்துக்கு இவ்வளவு துக்கங்களுளவாதல் தகுமோ, இது என்ன அநீதி, எ-று.

181 தேகமிறு மென்றுசடர் தேம்புவதென் னித்திரையி
னாகமறிந் தாற்பயந்தா னுண்டோ பராபரமே.

பொ-ரை. உடம் பழியுமென்று அவிவேகிகள் துக்கிப்பது யாதுக்கு, நித்திரைக் காலத்தில் நடக்குஞ் செய்தியை உய்த்துணர்ந்தால், பயமுண்டாமோ, எ-று.

182 ஏதைச் சுமையா வெடுப்பா ரெடுத்தவுடற்
சேதமுறின் யாதுபின்னே செல்லும் பராபரமே.

பொ-ரை. எடுத்த சரீரம் அழியுமாயின், பிறகு, எந்தச் சரீரத்தைச் சுமையாக எடுப்பார்கள், அதன் பின், என்ன காரியம் செல்லும், எ-று.

183 தோற்பாவை நாலாட் சுமையாகுஞ் சீவனென்றிங்
கார்ப்பா லெடுத்தவெவ ராலே பராபரமே.

பொ-ரை. தோலினாற் செய்த பிரதிமையாகிய இந்தவுடம்பு நாலாட் பாரமாகுங், சீவனென்றும், இவ்விடத்தில் ஆரவாரத் தோடு எடுக்கப் பட்டது யாவரால், எ-று.

184 ஞாலத்தை மெய்யெனவே நம்பிநம்பிநாளுமென்றன்
காலத்தைப் போக்கியென்ன கண்டேன் பராபரமே.

பொ-ரை. உலகத்தை மெய்யென்றே நம்பி நம்பி, நாள் தோறும்என் காலத்தைக் கழித்து என்ன பயனையடைந்தேன், எ-று.

185 பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாசனைநின்
மெய்யருளின் மூழ்கின் விடுங்காண் பராபரமே.

பொ-ரை. பொய்யுலக வாழ்வாகிய புலைச்சேரியின் வாசனையானது உன் மெய்யாகிய திருவருட்கடலில் முழுகினால் விட்டொழியும், எ-று.

186 நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூல் போதும் பராபரமே.

பொ-ரை. ஆகாயத்திலேறுதற்கு நூலேணியும் நூலின் பொருட்டு பருத்தியும் வைப்பவர்போல, கருவி நூல்களும் வீட்டு நூல்களும் அமையும், எ-று.

187 சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றையொக்கு
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே.

பொ-ரை. நிலைபேறுள்ள சாஸ்திர ஞான நெறிகள், மிகச் சிறியகுழந்தைகள் சமைத்த மணற் சோற்றை யொத்துப் பயனற்றனவாகும், எ-று.

மணற்சோறு உண்ண வுதவாமையால் பயனற்றதாயிற்று, அதுபோலவே சாஸ்திர ஞானமும் பயனற்றதென்பது கருத்து,

188 வாசக ஞானத்தால் வருமோ சுகம்பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே.

பொ-ரை. வாசகஞானத்தால் சுகமுண்டாமோ, உண்டாகாது ஆகையால் பாழாகிய வாசாஞானப் போர் என்றொழியுமோ, அறியேன், நீயே அருள்செய்யவேண்டும், எ-று.

189 கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளி
னூட்டமின்றி வாய்பேச னன்றே பராபரமே.

பொ-ரை. கேட்டதையே சொல்லும் கிளிப்பிள்ளைபோல, உன்திருவருளில் விருப்பமின்றி, வாய் பேசுதல் நன்மையாமோ, எ-று.

190 வெளியா யருளில் விரவுமன்பர் தேக
மொளியாய்ப் பிறங்கியது முண்டோ பராபரமே.

பொ-ரை. வெளியாகி, உன்திருவருளிற் கலக்கின்ற உன்னன்பர்களுடைய சரீரங்கள் ஒளியாகி விளங்கினது முளதோ. எ-று.

191 காலமொரு மூன்றுங் கருத்திலுணர்ந் தாலுமதை
ஞாலந் தனக்குரையார் நல்லோர் பராபரமே

பொ-ரை. நல்லோர்கள், முக்காலச்செய்திகளையும் தமது கருத்திலுணர்ந்திருப்பினும், அதனை, உலகத்தாருக்குச் சொல்லமாட்டார்கள், எ-று.

192 கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே.

பொ-ரை. கொல்லாமையாகிய விரதமொன்றை மேற்கொண்டவர்களே நல்லவர்கள், அவரையொழிந்த மற்றையோர்கள் யாவரோ அவர்போ சொல்ல அறியேன், எ-று.

பொல்லாரைப் பொல்லாரென்றலும் பாவமாதலால் யாரோ அறியேன் என்றார். இது 'தீயாரைக்காண்பதுவுந் தீதே' என்னும் ஔவை வெண்பாவானும் உணர்க, எ-று.

193 இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தைவழி
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே.

பொ-ரை. பொய்யாகிய காரியத்தை விரும்பி, மனம் போனவழியே போகாதிருத்தல் நல்லோர்களுடைய காரியம், எ-று.

194 எதுவந்து மேதொழிந்து மென்னதியா னென்னுங்கள்
போதகிலே கண்ட புலத்தோர் பராபரமே.

பொ-ரை. ஞானநிலையைக்கண்ட அறிஞர்கள், எது வந்தாலும் எது போனாலும் அவற்றைப்பற்றி, என்னது யான் என்று மமகரித்தும் அகங்கரித்தும் பேசார்கள், எ-று.

195 ஆயிரஞ் சொன்னாலு மறியாத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடிற் பிழைகாண் பராபரமே.

பொ-ரை. ஆயிரஞ்சொல்லினும், விவேகமில்லாத வஞ்சக மனத்தையுடைய பேயருடன் சேர்ந்தால், அச்சேர்தல் குற்றமேயாம், எ-று.

196 மாயமயக் கொழிந்தார் மற்றொன்றை நாடுவரோ
நேயவரு ணிலையி னிற்பார் பராபரமே.

பொ-ரை. மாயையினாலுண்டாகின்ற மயக்கத்தை நீங்கினவர்கள், வேறொருபொருளை விரும்புவார்களோ, விரும்பார்கள், மற்றென்னினின், அன்புமயமாகிய திருவருணிலையில் நிலைபெற்றிருப்பார்கள், எ-று.

197 நித்திரையிற் செத்தபிண நேருமுடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.

பொ-ரை. உறங்குங் காலத்தில் செத்த பிணத்துக்குச் சமானமாயிருக்கிற சரீரத்தின்மேல் விருப்பம்வையாத சுத்தாத்மாக்களே நல்லதுறவினர்.

198 ஏங்கெஞ்ச மேனுமிரங்குமே நின்னருட்குக்
கண்ணெஞ்சரு ளூளரோ காட்டாப் பராபரமே.

பொ-ரை. உன்திருவருளின் பொருட்டு, எப்படிப்பட்ட மனமாயி னும் உருகும், அவ்வாறு உருகாத கல்லை யொத்த வன்மனத்தை யுடை யோரும் உளரோ, உளராகார், உளராயின், நீயேகாட்டாய், எ-று.

199 மந்தவறி வாகியின்பம் வாயாதிருந் தலைந்தாற்
சிந்தைமயங் காதோவென் செய்வேன் பராபரமே.

பொ-ரை. மந்தஞான முடையேனுகி, சுகம் இடையாமலிருந்து அலை வேனுயின், என்மனம் திகையாதோ, இத்திகைப்பை மாற்றுதற்கு நான் என்னவுபாயம் செய்யக்கடவேன், எ-று.

200 தேடினேன் றிக்கினேத்துந் தெண்டனிட்டேன் சிந்தை
நைந்து, வாடினே னென்மயக்க மாற்றுய்பராபரமே.

பொ-ரை. உன்னைப் பெறவேண்டித் திசைகளெல்லாவற்றினும் தேடி னேன், தேடிக்காணுமையால், திசைநோக்கி நமஸ்கரித்தேன், அவ்வாறு நமஸ்கரித்தும் உன்னைக் காணப்பெருமையால் மனம்நொந்து வாடினேன், அவ்வாட்டத்தாலுண்டாகிய என்மயக்கத்தை நீக்கியருளாய், எ-று.

201 மடிமையெனு மொன்றை மறுத்தன்றே வென்னை
யடிமைகொளல் வேண்டு மரசே பராபரமே.

பொ-ரை. சோம்பலென்னும் ஒருபொருளைத் தடித்தல்லவோ, என்னை யடிமை கொள்ளவேண்டும், ஞானராஜனே, எ-று.

202 காலர்பயந் தீரவின்பக் காற்கபய மென்றெழுந்த
மாலைவளர்த் தனையே வாழி பராபரமே.

பொ-ரை. காலதூதர்களுடைய பயமானது நீங்கும்படி, சுகத்தைக் கொடுக்கின்ற உன்திருவடிக்கு அபயம்என்று வாயாற்சொல்லி, மனத்தின் கண் அதிகரித்த ஆசையை விருத்தியடைவித்தனையே, நீ வாழ்வாயாக,

203 நீர்ப்புற் புதமாய் நினைவருட்கே நின்றழியப்
பார்ப்பதல்லால்வே றுமொன்றைப்பா ரேன்பராபரமே

பொ-ரை. என்மனமானது உன் திருவருளின் பொருட்டு நீர்க்குமிழி போல் நின்றழியப் பார்த்தல் செய்யேனல்லது வேறொரு பொருளையும் பாரேன், எ-று.

204 நீர்க்குமிழி போலென் னினைவுவெளி யாய்க்கரையப்
பார்க்குமிட மெல்லாமென் பார்வை பராபரமே.

பொ-ரை. என் மனமானது நீர்க்குமிழியையொத்து வெளிப்பட்டு உடனே உன்திருவருள் வெள்ளத்திற்கரைந்து கலக்கும்படி, நோக்கு மிடங்கள்தோறும் என்நோக்கம, எ-று.

205 ஆடியோய் பம்பரம்போ லாசையுட னெங்குமுனைத்
தேடியோய் கின்றேனென் செய்வேன் பராபரமே.

பொ-ரை. ஆடி ஓய்ந்த பம்பரம்போல, அன்போடு உன்னை எவ்விடத்தும் தேடிக்காணப் பெறுமையால், ஓய்கின்றேன், வேறு என்ன காரியம் செய்யக்கடவேன். எ-று.

206 வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னுர் கண்களிக்கு
நாதாந்த மோனநலமே பராபரமே

பொ-ரை. வேதாந்தமும் சித்தாந்தமும் ஒன்றற்கொன்று வேறுபட்டன வென்று சொல்லாமல் சமரசமாகக்கண்ட அறிஞரது கண்களித்தற்குரிய, நாதத்துவத்தினிறுதியில் விளங்குகின்ற மௌனசுகமே. எ-று.

207 ஆனந்தமான நின்னையன்றி யொன்றையுண்ணுத
மோனந் தமியேற்கு முத்தி பராபரமே.

பொ-ரை. சுகரூபமான வுன்னையல்லது வேறுபொருளை நினையாத மௌனநிலையே, தனியேற்கு மோக்ஷம், எ-று.

208 ஏதுக்குமுன்னை விடவில்லையென்ரு லென்கருத்தைச்
சோதிக்கவேண்டா நான்சொன்னேன் பராபரமே.

பொ-ரை. யாதொரு காரியத்துக்கும் உன்னையன்றி எனக்கு வேறு துணையில்லை யென்று நான் விண்ணப்பம் பண்ணிக்கொண்டால், என்மனத்தைச் சோதனைசெய்யவேண்டாம், நான் சொல்லிவிட்டேன், எ-று

209 முத்தியிலுந் தேகமிசை மூவிதமாஞ் சித்திபெற்ரோ
ரெத்தனைபேரென் றுரைப்ப தெந்தாய் பராபரமே

பொ-ரை. முத்திக்காலத்தும் சரீரத்தினிடத்தில் மூன்று விதமாகிய சித்தியையடைந்தவர், எத்தனைபேர் என்று அளவிட்டுச் சொல்லுவது, எந்தையே. எ-று.

அளவிடக்கூடாதென்பதாம்.

210 நீயன்றி நானுர் நினைவாரென் னெஞ்சகமார்
தாயன்றிச் சூலுமுண்டோ சாற்ரும் பராபரமே

பொ-ரை நீயல்லது நான்யார், எண்ணம்யார், என்மனம்யார், தாயன்றிச்சூலுமுளதோ, சொல்லாய் எ-று.

"நானு ரென்னுள்ள மார் ஞானங்களாரென்னை யாரறிவார்" என்று திருவாதவூரடிகளும் பணித்தார்.

211 அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடநீ
யெங்குமேனே னென்றதென்னே பராபரமே.

பொ-ரை. தேகமே உனதுருவமாகிய சுகர் அழைக்க, நீ எவ்விடத்தும் ஏன் ஏன் என்றது என்ன ஆச்சரியம், எ-று.

212 கொள்ளவெள்ளத் தண்ணருண் மேற்கொண்டு சுழித்
தார்த்திழுத்தால், கள்ளமனக்கப்ப லெங்கேகாணும்
பராபரமே.

பொ-ரை. தண்ணிய வுன்திருவருளாகிய பெருவெள்ளமானது மேற்கொண்டு சுழித்து ஒலித்து இழுத்துக்கொண்டு சென்றால், வஞ்சக மனமாகிய மரக்கலமானது எவ்விடத்துத் தோன்றும். எ-று.

அருட்பெரு வெள்ளத்தில் அழுந்தி விடும் என்பதாம்.

213 எக்கலையுங் கற்றுணர்ந்தோ மென்றவர்க்குஞ் சம்மதஞ்
சொல், வக்கணையா லின்பம்வருமோ பராபரமே.

பொ-ரை. எவ்வகைப் பட்டநூல்களையும் கற்று, அவற்றின் பொருள்களை உள்ளவாறு அறிந்திருக்கின்றே மென்று அகங்கரித்து, கேட்பவர்யாவர்க்கும் தக்க சமாதானம் சொல்லுகின்ற வக்கணையினால், சுகம் வாய்க்குமோ. எ-று.

உள்ளவாறு உணர்ந்தலாவது-ஐயம் திரிபு அறவுணர்தல், ஐயம் சந்தேகம்-குற்றியோமகனே என்பது. திரிபு-ஒன்றை யொன்றாகவுணர்தல் அது பழுதையைப்பாம் பென்பது.

214 கல்லெறியப்பாசு கலைந்துநன்னீர் காணுநல்லோர்
சொல்லுணரின் ஞானம்வந்துதோன்றும்பராபரமே.

பொ-ரை. கல்லெயறிந்தால், மூடியிருந்த பாசியானது கலைந்து, அதனால் மூடப்பட்டிருந்த நல்ல நீரானது தோன்றும், அதுபோல, நல்லோர்களுடைய சொற்களின் பொருளையாராய்ந் தறிந்தால், ஞானம் வந்துவாய்க்கும், எ-று.

நல்லோர்சொல் ஞானத்தையுண்டாக்கும் என்பது, "அருளுடையோரைத் தவத்திற் குணத்திலருளிலன்பில்-இருளறு சொல்லினுங் காணத்தகும்" என்னும் பட்டணத்தடிகள் திருவாக்காலும் இனிதுவிளங்கும்.

215 நின்னை யுணர்ந்தோர் கடமைநிந்தித்த பேயறிஞ
ரென்னகதி பெறுவா ரெந்தாய் பராபரமே.

பொ-ரை. உன்னையுள்ள வாறுணர்ந்தவர்களை, நிந்தித்த பேயறிவையுடையோர், என்னதுர்க்கதியை யடைவரோ, எந்தையே, எ-று.

216 என்னதியா னென்னலற்றே ரெங்கிருந்து பார்க்கினுநின்
சன்னதியா நீ பெரியசாமி பராபரமே.

பொ-ரை. எனது யான் என்றுசொல்லுதலாகிய மமகார அகங்காரங் களே யொழித்த அறிஞர், எவ்விடத்து நின்று பார்த்தாலும், அவ்விடங்கள் எல்லாம் உன் சன்னிதியாக அவர்களுக்குத் தோன்றும், அந்தச்சன்னிதியில் நீயே மேலான தெய்வமாகத் தோன்றுவை, எ-று.

217 சோற்றுத்துருத்திச் சுமைசுமப்பக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்தலைந்தேன் கண்டாய் பராபரமே.

பொ-ரை. சோற்றுத்துருத்தியாகிய உடற்சுமையைச் சுமக்கும்பொரு ட்டு, கண்பிதுங்கும்படி, காற்றைத் தடைப்படுத்தித்திரிந்தேன், எ-று.

218 உள்ளபடி யொன்றையுறைக்கி னவர்க்குள்ளுறவாய்க்
கள்ளமின்றி யன்பாய்க்களிப்பேன் பராபரமே.

பொ-ரை. ஒருபொருளே ஒருவர் உள்ளவாறு சொன்னால், அவர்க்கு, உட்சுற்றமாகி, வஞ்சகமில்லாமல் அன்போடு சந்தோஷிப்பேன், எ-று.

219 அடுத்தவியல்பாக வொன்றையான் பகர்வதல்லாற்
றொடுத்ததொன்றை யான்வேண்டிச் சொல்லேன்பரா பராமே.

பொ-ரை. தகுந்த இயற்கையாக ஒரு பொருளே நான் சொல்லுவ தன்றி, நான் சம்மந்தப்பட்ட ஒன்றைப்பற்றி, பக்ஷபாதமாய் நான் பேச மாட்டேன், எ-று.

220 உள்ளமறி யாதொருவரொன்றை யுன்னிப்பேசிலேயோ
துள்ளியிளங்கன்றுப்போற் துடிப்பேன் பராபரமே.

பொ-ரை. என்மனக்கருத்தையுணராமல், ஒருவர் ஒன்றை நினைத்துப் பேசினாரயின், அந்தோ, இளங்கன்று போலத்துள்ளித்துடிப்பேன், எ-று.

221 எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

பொ-ரை. யாவரும் சுகம் பெற்றிருக்க நினைப்பதேயன்றி, நான்வேறு பொருளைநினைக்க அறியேன், எ-று.

222 மூன்றுண் மெய்ஞ்ஞான முனிவர்தவ மீட்டுதல்போ
லிந்நாளிற்காண வெனக்கிச்சை பராபரமே.

பொ-ரை. முற்காலத்தில், மெய்ஞ்ஞானத்தையுடைய முனிவர், தவப் பொருளைச் சேகரித்தல்போல, இக்காலத்தில் சேகரித்தலைக் காணவே ண்டுமென்று எனக்கு விருப்பமுண்டு, எ-று.

223 கன்ம மென்பதெல்லாங் கரிசறவே மெய்ஞ்ஞான
தன்ம நிலைசார்ந்த தன்பர்தன்மை பராபரமே.

பொ-ரை. கர்மமென்று சொல்லப் பட்டவையாவும் பற்றற, மெய்ஞ் ஞானமாகிய தர்மநிலையையடைந்தது, அண்பர் குணம், எ-று.

224 கண்டுயிலாதென் னறிவின்கண் ணூடே காட்சிபெற
மண்டியபேரொளி நீ வாழி பராபரமே.

பொ-ரை. கண்ணுறங்காத என்னறிவினிடத்தே கண்டு களிக்க மிகவும் விளங்கிய பேரொளி நீயாகையால் நீ வாழக்கடவை, எ-று.

225 நானெனதன்மை யென்றுநாடாம லுடனின்ப
வானுகிர்ன்றனை நீவாழி பராபரமே.

பொ-ரை. நானென்கிற தன்மையை எப்பொழுதும் விரும்பாமல், உன்னைவிரும்ப, சுகவெளியாய்நின்றனையாதலால், நீ வாழக்கடவை, எ-று.

226 அகத்தூட ணுவணுவா யண்டமெல்லாந் தானுய்
மகத்தாகி நின்றனை நீவாழி பராபரமே.

பொ-ரை. அணுவுக்குள்ளே யணுவாகி, அண்டங்களெல்லாம் தானேயாகி, மகத்தாகி, நின்றனையாதலால், நீவாழக்கடவை, எ-று.

227 காரகமாங் கர்ப்பவற்றைக் கண்ணூடு மென்கண்ணே
வாரம்வைத்துக் காத்தனை நீவாழி பராபரமே.

பொ-ரை. அந்த காரத்துக்கிடமாயிருக்கிற கருப்பமாகிய வீட்டின் கண்ணும், என்னிடத்தே அன்புவைத்துக் காப்பாற்றினாய், ஆதலால் நீ வாழக்கடவை, எ-று.

228 புறந்தோர் தந்தேசமென்பார் பூமியைப்போராடி
யிறந்தோருந் தம்மதென்பா ரென்னே பராபரமே.

பொ-ரை. பூமியை யாண்டவர்கள், அதனைத் தமது தேசமென்பார்கள், போர்செய்து மடிந்தவர்களும் அதனைத் தமது தேசமென்பார்கள், என்ன அறியாமையின் காரியம் இது, எ-று.

229 மூர்த்தியெல்லாம்வாழி யெங்கண்மோனகுரு வாழியருள்
வார்த்தையொன்றும் வாழியன்பர்வாழி பராபரமே.

பொ-ரை. மூர்த்திகள் யாவும் வாழ்க, எங்கள் மௌனகுருவாழ்க, அருள் வார்த்தை ஒன்றும் வாழ்க, அன்பர்களும் வாழ்க, எ-று.

230 சொல்லும்பொருளுந் தொடராவருணிறைவிற்
செல்லும்படிக்கரு ணீசெய்தாய் பராபரமே.

பொ-ரை. சொல்லும், சொற்பொருளும், தொடர்ந்து பற்றக்கூடாத திருவருட் பூர்த்தியில் செல்லும்படிக்கு, நீ யருள் செய்தனை, எ-று.

231 இற்றைவரைக் குள்ளாக வெண்ணரிய சித்திமுத்தி
பெற்றவர்க ளெத்தனைபேர் பேசாய் பராபரமே.

பொ-ரை. இந்நாளளவுக்குள்ளே, நினைத்தற் கரியசித்தி முத்திகளை யடைந்தோர்கள் எத்தனைபேர், சொல்வாயாக, எ-று.

232 நாடுநகரு நிசாஞ்சட்டிய பாளயமு
மீடுசெயுமோ முடிவிலெந்தாய் பராபரமே.

பொ-ரை. நாடும், நகரமும், அடையாளங் குறித்த பாளயமும், முடிவுக் காலத்தில் பெருமையைக் கொடுக்குமோ, என்தையே. எ-று.
பாளயம் - படை.

233 தேடுந்திரவியமுஞ் சேர்ந்தமணிப் பெட்டகமுங்
கூடவருந் துணையோகூறாய் பராபரமே.

பொ-ரை. தேடப்படுகிற திரவியமும், சேர்க்கப்பட்ட ரத்நப் பெட்டகமும், போங்காலத்தில், கூடவரத்தக்க துணைகளோ, சொல்வாய். எ-று.

234 தேடாததேட்டினரே செங்கைத்துலாக் கோல்போல்
வாடாச்சமநிலையில் வாழ்வார் பராபரமே.

பொ-ரை. தேடப்படாத திருவருட் செல்வத்தை யுடையவர்களே, வணிகரது செவ்விய கையினிடத்துள்ள துலாக்கோல்போல, வருந்தாத சமநிலையில் வாழ்வார்கள, எ-று.

235 நீராய்க்கரிந் துருகிநெட்டுயிர்த்து நின்றேனைப்
பாராததென் னுபகாராய் பராபரமே.

பொ-ரை. நீரைப்போலக் கரிந்துருகி, பெருமூச்சு விட்டு நின்ற என்னை, கடைக்கண்பாராமைக்குக் காரணமென்னையோ, சொல்வாய் எ-று.

236 உள்ளபொரு ளாவியுடன் மூன்றுமன்றேதான்
கொள்ளைகொண்டநீ யென்குறைதீர் பராபரமே.

பொ-ரை. என்னிடத்துள்ளபொருள் உயிர் உடம்பு என்கிற மூன்றையும் அந்நாளே கொள்ளைகொண்ட நீ, அதற்குப் பிரதியாக, என் குறைகளைத் தீர்க்கவேண்டும், எ-று.

237 ஆழ்ந்தாயே யில்வுலகிலல்ல லெல்லாந் தீர்ந்தருளால்
வாழ்ந்தாயே யென்றனை நீவாழி பராபரமே.

பொ-ரை. இப்பிரபஞ்ச வாழ்க்கையாகிய கடலில் முழுகினேயே, இப் போது பிறவித்துன்பங்களெல்லாம் நீங்கி, என்கருணையினால் வாழ்ந் தனேயே, என்று திருவாய் மலர்ந்தருளினேயாதலால், நீவாழி, எ-று.

238 தாரா வருளேயெல்லாந் தந்தனேயு நின்னருளின்
வாராயோ வென்றனேநீ வாழி பராபரமே.

பொ-ரை. தரக்கூடாத அருள்முழுதும் தந்து, என்னேயும், உன்திருவ ளினால் வாராயோவென்று கூவினே ஆதலால், நீ வாழக்கடவை, எ-று.

239 ஆசையுன்மீ தல்லா லருளறிய வேறுமொன்றிற்
பாசமவையே னின்கருணைப் பாங்காற் பராபரமே.

பொ-ரை. உன்திருவருட்பாங்கினால், உன்மீது ஆசைவைப்பதல்லது உன் திருவருளறிய, மற்று மொருபொருளில் விருப்பம் வையேன், எ-று.

240 ஆதியந்த நீகுருவா யாண்டதல்லா னின்னேயன்றிப்
போதனேயு முண்டோ புகலாய் பராபரமே.

பொ-ரை. ஆக்யக்தமாய் நீ குருமூர்த்தமாகிவந்து என்னே யாண்ட தன்றி, உன்னே யல்லது எனக்கு வேருமொரு போதனேயுமுளதோ, சொல்வாய், எ-று.

241 தானுக வந்து தடுத்தாண் டேனே பின்ப
வானுகச் செய்தவின்ப வானே பராபரமே.

பொ-ரை. யாதொரு முயற்சியுமின்றி யிருக்கச் செய்தே உன்பெருங் கருணையே ஹேதுவாக நீ தானே குருமூர்த்தமாக யெழுந்தருளி, என்னே விஷய ப்ரவணனுய்ப் பிறவித் துன்பங்களுக்குக் காளாகாவகை தடுத் தாண்டு, சுகரூபியாக்கின சுகரூபியே, எ று.

242 பற்றற் றிருக்கநெறி பற்றிற் கடன்மலையுஞ்
சுற்ற நினேக்குமனஞ் சொன்னேன் பராபரமே.

பொ-ரை. நான்தொடர் பற்றிருத்தற்குக் காரணமாகிய கன்னெறி யைத் தொடர்ந்தால், என்மனமானது, கடலினும் மலையினும் சுற்றித்திரிய நினேக்கின்றது, அச்செய்தியை, உன் சந்நிதியில் விண்ணப்பம் பண்ணிக் கொண்டேன், எ-று.

அம்மனத்தைத் தடுத்து என்னேயாண்டருளல் வேண்டுமென்பதாம், 'திரிகையிலாயிர வெல்லாழி மண்விண்டரு சிரபாத்-திரிகையிலாயிர வாந ந்த நாடகசேரிமகோத்-திரிகையிலாயிர மிக்குமைந்தா செந்திலா யொரு கால்-திரிகையிலாயிரக் கோடி சுற்றேடுத்திருத்துளமே" என்றூர் பிறரும்.

243 படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தை
துடிப்பற்றுர்க் கன்றே சுகங்தான் பராபரமே.

பொ-ரை. படித்தலுமற்று, கேட்டலுமற்று, ஒன்றைப் பற்றலு மற்று மனப்பதைப்புமற்று நின்றவர்க் கல்லவோ ஆநந்த முண்டாவது, எ-று.

244 சத்தாகி நின்றோர் சடங்களி லிங்கமென
வைத்தாரு முண்டேயென் வாழ்வே பராபரமே.

பொ-ரை. சத்துருவாகி நின்றவர்களுடைய உடம்புகளே, லிங்கரூப மாக வைத்தவர்களும் உளரோ, என்வாழ்வே, எ-று.

245 சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தா ருடற்றீபம்
வைத்தகர்ப்பூ ரம்போல் வயங்கும் பராபரமே.

பொ-ரை. மனமானது நிருவிகற்ப சமாதியையடையப் பெற்றோர் களுடைய சரீரங்கள், தீபத்திலிட்ட கர்ப்பூரம்போலப் பிரகாசிக்கும், எ-று.

246 ஆதிகா லத்திலெனை யாண்டனையே யிப்பானீ
போதியெனி னெங்கேநான் போவேன்பராபரமே.

பொ-ரை. பூர்வகாலத்திலேயே என்னை யாண்டருளினையே இப்பொ ழுது நீ யகன்றுபோவென்றால், நான் எங்கேபோவேன், எ-று.

நான் சென்றடையக் கடவார் ஒருவரு மில்லையென்பதாம்.

247 நாவழுத்துஞ் சொன்மலரோ நாளுதிக்கும் பொன்மலரோ
தேவையுனக் கின்னதென்று செப்பாய் பராபரமே.

பொ-ரை. அன்பரது நாவினால் வழுத்தப்பட்டுளவாகின்ற சொல்மலர் களோ, நாள்தோறும் அலர்கின்ற அழகிய நால்வகை மலர்களோ, உனக்கு இன்னவை வேண்டுமென்று சொல்வாய், எ-று.

248 கன்னறரும் பாகாய்க் கருப்புவட்டாய்க் கற்கண்டா
யின்னமுதா யென்னு ளிருந்தாய் பராபரமே.

பொ-ரை கருப்பஞ்சாற்றுற் காய்ச்சிய பாகுபோன்றும், கருப்பு வெல் லம் போன்றும், கற்கண்டுபோன்றும், இனிய அமிர்தம் போன்றும் என் மனத்தின்கண் ணிருந்தாய், எ-று.

249 சிற்பரமே தற்பரமே தெய்வச்சுருதி சொன்ன
அற்புதமே யன்பே யறிவே பராபரமே.

பொ-ரை. சிற்பரமே, தற்பரமே, தெய்விகமானவேதங்களால் சொல் லப்பட்ட அற்புதமே, அன்பே, அறிவே, எ-று.

250 அறிவிப்பா னியென்று லம்புலன் கடந்தக்
நெறிநிற்பார் யாரே நினைந்தாய் பராபரமே.

பொ-ரை. உள்ளிருந்து உணர்த்துவோன் நீயாஞல், ஐந்தாசைகளை யும் வென்று, அந்த மேலான ஞானநெறியில் நிற்பவர் யாவரோ, நீயே சொல்வாய். எ-று.

ஐந்தாசைகள்-சப்தாதிகள்.

251 அந்தக் கரணமெனு மாகாத பேய்களெனை
வந்து பிடித்தாட்ட வழக்கோ பராபரமே.

பொ-ரை. அந்தக்கரணமென்கிற பொல்லாத பேய்கள் வந்து என் னைப் பிடித்தாட்ட வழக்குண்டோ, எ-று.

252 ஐவரொடுங்கூடாம லந்தரங்க சேவைதந்த
தெய்வ வறிவே சிவமே பராபரமே.

பொ-ரை. ஐவரோடு சேராதவகை, எனக்கு அந்தரங்க சேவையைக் கொடுத்த தெய்விகமான ஞானமே, சிவமே. எ-று.

253 அருளாகி நின்றசுக மாகாம லேயோ
இருளாகி நிற்க வியல்போ பராபரமே.

பொ-ரை. அருள் வடிவமாயிருக்கிற ஆனந்த ரூபமாகாமல், அந்தோ இருளுருவாகி நிற்றல் எனக்குப் பொருத்தமாகுமோ. எ-று.

254 அன்பரெல்லா மின்ப மருந்திடவும் யானொருவன்
துன்புறுத னன்றோநீ சொல்லாய் பராபரமே.

பொ-ரை. உன்னடியா ரெல்லாரும் சுகத்தை யநுபவிக்கவும், நானொ ருவனுமே துக்கத்தை யநுபவித்தல் உனக்கழகுதானே, நீ சொல்வாய்.

255 சந்ததமு நின்கருணை சாற்றுவதல் லால்வேறு
சிந்தையறி யேனுன்றன் சித்தம் பராபரமே.

பொ-ரை. சதாகாலமும் உன் கருணைப்ரபாவத்தை வியந்துரைத்த லன்றி, மற்றொரு காரியத்தைச் சிந்தையாலுஞ் சிந்தித்தறியேன், இதற்கு மேல் உன் திருவுளம், எ-று.

256 நானெனைக்குளறு நாட்டத்தா லென்னைவிட்டுப்
போனலு முன்னைவிட்டுப் போகேன் பராபரமே.

பொ-ரை. நான் நான் என்று குழறுகின்ற நோக்கத்தினால், நீ யென் னை விட்டு நீங்கினலும், நான் உன்னைவிட்டு நீங்கேன், எ-று.

257 இக்காயம் பொய்யென்றே ரீட்டத் தினக்கபயம்
புக்காதா ருண்டோ புகலாய் பராபரமே.

பொ-ரை. இந்தச் சரீரம் பொய்யென்றவர்களுடைய கூட்டத்துள், உனக்கு அபயம் புகாதாருளரோ, சொல்வாய், எ-று.

258 தாணுதல் பூரணமே சாருமிட முண்டியிரும்
வாணுதியு மொழுங்காய் மன்னும் பராபரமே.

பொ-ரை. உயிர்களினும் அவைகளின் தோற்றத்துக்குக் காரணமாகிய ஆகாயமுதலிய பூதங்களினும் கிரமமாக நிலைபெற்றிருக்கும் இறைவனே தானே தாணுதலாகிய உன்பரிபூர்ண நிலையே எனக்குச் சார்தற்குரிய இடமாயுள்ளது, எ-று.

259 உன்னுமனங் கர்ப்பூர வுண்டைபோ லேகரைய
மின்னுமா னந்த விளக்கே பராபரமே.

பொ-ரை. நினைக்கின்ற மனமானது கர்ப்பூரவுருண்டைபோலக் கரைந்து போம்படி, மின்னுகின்ற, ஆநந்த தீபமே, எ-று.

260 நாட்பட் டலைந்த நடுக்கமெலாந் தீரவுனக்
காட்பட்டுந் தன்பமெனக் காமோ பராபரமே.

பொ-ரை. நெடுநாளாயலைந்த நடுக்கங்கள் யாவும் நீங்க நான் உனக்கு ஆளாகியும், எனக்குத் தன்பங்கள் உண்டாகலாமோ, எ-று.

261 பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங்கா திருந்தா
லாவிக் குறுதுணையா ரையா பராபரமே.

பொ-ரை. பாவியாகிய நான் படுகின்ற கண்கலக்கத்தைக் கண்டும் நீயிரங்காதிருந்தால், என்னுயிருக்கு, உற்றதுணையாவார்யாவரோ, ஐயனே.

262 நின்னிறைவே தாரகமாய் நின்றுசுக மெய்தாம
லென்னிறைவே பாவித்தே னென்னே பராபரமே

பொ-ரை. உன்பரிபூர்ணத்தையே ஆதாரமாகக்கொண்டு நின்று, பமடையாமல், என் பூர்ணவத்தையே நினைத்தேன், இது என்ன அநீதம். எ-று.

263 நின்னைச் சரண்புகுந்தா னீகாக்கல் வேண்டுமல்லா
லென்னைப் புறம்விடுத லென்னே பராபரமே.

பொ-ரை. உன்னைச் சரணமடைந்தால் நீ பென்னைக் காக்கவேண்டுமல்லது. என்னை உன் காவலுக்குப் புறத்தில் விடுதல் என்ன அநீதி, எ-று.

264 மாறுத துன்பமெல்லாம் வந்துரைத்தா னின்செவியி
லேறுத வாறே தியம்பாய் பராபரமே.

பொ-ரை. நீங்காத என் துக்கங்களையெல்லாம் உன் சந்நிதியில் வந்து விண்ணப்பம் பண்ணினால், உன் திருச்செவிக் கேறுதவிதமென் சொல்வாய், எ-று.

265 விஞ்சுபுலப் பாடனைத்தும் வீறுதுன்பஞ் செய்யவந்த
அஞ்சுபுல வேடருக்கு மாற்றேன் பராபரமே.

பொ-ரை. மிகுந்த ஞானத்தின் பெருமையை யெல்லாம் மிக்க துன்ப ரூபமாக்கவந்த ஐம்புலன்களாகியவேடர்களுக்கும் ஆற்றமாட்டேன், எ-று.

266 கன்னங் கரியநிறக் காமாதி ராக்ஷசப்பேய்க்
கென்னையிலக் காகவைத்த தென்னே பராபரமே.

பொ-ரை. மிகவும் இருண்ட நிறத்தினையுடைய காமாதிகளாகியராக்ஷஸப்பேய்களுக்கு, என்னை லக்ஷ்யமாக வைத்தது என்ன அநியாயம், எ-று.

காமாதிகள்-காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மத்ஸரம், என்பன. இதனை அரிஷட்வர்க்க மென்பர் வடநூலார்.

267 சித்திநெறி கேட்டல் செகமயக்கஞ் சன்மமற
முத்திநெறி கேட்டன் முறைகாண் பராபரமே.

பொ-ரை. சித்திமார்க்கத்தைக் கேட்டுக் கொள்ளுதல் உலகமயக்க மாம், பிறவி அற்றொழிதற் பொருட்டு, முத்திமார்க்கத்தைக் கேட்டுக் கொள்ளுதல் தக்க முறைமையாம், எ-று.

268 சிந்தை சிதையச் சிதையாத வானந்த
மெந்த வகையாலேவந் தெய்தும் பராபரமே.

பொ-ரை. மனம் நசிக்க, நசியாத ஆனந்தமானது, எந்தவிதத்தினால் வந்து எனக்கு லபிக்கும், எ-று.

269 கூர்த்தவறி வாலறியக் கூடா தெனக்குரவன்
தேர்த்தபடி தானே தெரிந்தேன் பராபரமே.

பொ-ரை. நுண்ணிய அறிவினால் அறியக் கூடாதென்று, ஆசாரியன் தெளிவித்தவண்ணமே தெரிந்துகொண்டேன், எ-று.

270 பத்த ராருந்தும் பரமசுகம் யானருந்த
எத்தனைநாள் செல்லு மியம்பாய் பராபரமே.

பொ-ரை. உண்ணடியார் அநுபவிக்கின்ற மேலாகிய சுகத்தை நான் அநுபவிக்க எத்தனை நாள் செல்லும், சொல்வாய், எ-று.

271 தீரத்தி ஞற்றுறவு சேராம லிவ்வுலகிற்
பாரத் தனம்பேசல் பண்போ பராபரமே.

பொ-ரை. தைரியத்தினால் துறவுமார்க்கத்தை யடையாமல், இவ்வுலகத்தில் பெருந்தன்மை பேசிக்கொள்ளுதல் குணமாகுமோ, எ-று.

272 இந்த வெளியினையுண்டேப்பமிடப் பேரறிவாத்
தந்தவெளிக் கேவெளியாய்ச சார்ந்தேன் பராபரமே.

பொ-ரை. இந்தப் பூதாகாயத்தையுண்டு எப்பமிடும்படி, பெரிதாகிய ஞானகாயத்திற்றானே, வெளிப்படையாய்ச் சார்ந்தேன், எ-று.

273 உணர்த்து முளேநாடா துணர்ந்தவையேநாடி
யிணக்குறுமென்னேழமைதானென்னேபராபரமே

பொ-ரை. உணர்த்தாநின்ற உன்னே நாடாமல், உணர்த்தப்பட்டவை களேயேநாடி, அவைகளோடு இணங்கிவாழ்கின்ற என்னறிவின்மை தானிருந்தபடியென், எ-று.

274 உண்டுபோ லின்று முலகைத் திரமெனவுட்
கொண்டுநான் பெற்றபயன் கூறுப் பராபரமே.

பொ-ரை. இருப்பதுபோலத் தோன்றி இல்லாததாய் முடிகின்ற உலகத்தை, நிலையுள்ள தென்றுநினைத்து, நானடைந்த பயனைச் சொல்வாய்.

275 உள்ளபடி யாதுமென வுற்றுணர்ந்தே னக்கணமே
கள்ளமனம் போனவழி காணேன் பராபரமே.

பொ-ரை. எல்லாம் உள்ளபடியே நிகழுமென்று ஆராய்ந்தறிந்தேன், அந்த க்ஷணத்திலேயே, வஞ்சகமனமானது போனவழியையுங் கண்டிலேன், எ-று.

276 சித்தமவுனஞ் செயல்வாக் கெலா மவுனஞ்
சுத்தமவுன மென்பாற் றோன்றிற் பராபரமே.

பொ-ரை. என்னிடத்துச் சுத்தமௌன முளதாயின், என்மன மானது மௌனம், செய்கை வாக்கு எல்லாம் மௌனம், எ-று.

செயல் - காயம். சுத்தமௌன முளதாயின் மநோவாக் காயங்களியாவும் மௌன மென்பதாம்.

277 எண்ணில்பல கோடியுயி ரெத்தனேயோ வத்தனேக்குங்
கண்ணிற் கலந்தவருட் கண்ணே பராபரமே.

பொ-ரை. எண்ணிறந்த பலகோடிவகைப் பட்ட சீவராசிகள் எத்தனேயோ, அத்தனேக்கும், கண்ணுக்குக் கலந்திருந்த அருட்கண்ணே, எ-று.

278 எனக்கினியா ருன்போலு மில்லையென்றுல் யானு
முனக்கினியா னுகா வுளவேன் பராபரமே.

பொ-ரை. உன்போலும் எனக்கு இனியவர் இல்லையாயின், நானும் உனக்கு இனியவனுகாத உளவுயாது, எ-று

279 அண்டபிண்டங் காணே னகமும் புறமுமொன்றுக்
கண்டவென்னே நீகலந்த காலம் பராபரமே.

பொ-ரை. உள்ளும் புறமும் ஒன்றுகக்கண்ட என்னே நீ கலந்த காலத்தில் அண்ட பிண்டங்களாக் கண்டிலேன், எ-று.

280 எத்தனையோ கோடி யெடுத்தெடுத்துச் சொன்னலுஞ்
சித்த மிரங்கிலையென் செய்வேன் பராபரமே.

பொ-ரை. எத்தனை கோடிவிதமாக எடுத்தெடுத்து முறையிட்டாலும் உன்சித்தமிரங்கவில்லையே, இனியான் என்செயக்கடவேன், எ-று.

281 அன்றந்த நால்வருக்கு மற்புதமா நீயுரைத்த
தொன்றந்த வார்த்தையெனக் குண்டோ பராபரமே.

பொ-ரை. அந்நாளில் அந்த நால்வருக்கும் ஆச்சரிய கரமாக நீ யருளிச்செய்ததாகிய ஒருமொழி எனக்கு முண்டோ, எ-று.

நால்வர்-சநகாதியர்.

282 அப்பனென்று மன்னையென்று மாரியனென் றும்மூனையே
செப்புவது முன்னிலையின் சீர்காண் பராபரமே.

பொ-ரை. தந்தையெனவும், தாய் எனவும் ஆசாரியனெனவும், உன்னையே பலவாருகச் சொல்லுவதும், உனது நிலையினது சிறப்பாய் முடியும், எ-று.

283 கட்டுங் கனமுமந்தக் காலர்வரும் போதெதிர்த்து
வெட்டுந் தளமோ விளம்பாய் பராபரமே.

பொ-ரை. சனக்கட்டும், பெருமையும், அந்த யமபடர்வருங்காலத்தில் அவர்களையெதிர்த்து வெட்டுகின்ற படையாகுமோ, எ-று.

284 பேசாத மோனநிலை பெற்றன்றே நின்னருளாம்
வாசரம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே.

பொ-ரை. பேசாத மௌனநிலையை யடைந்தால்லவோ, உன்னருளாகிய வாசாம கோசரம் கிடைக்கும், எ-று.

வாசாமகோசரம் வாசாம் அகோசரம் எனப்பிரியும், வாக்கிஞலறியப்படாதது என்பதுபொருள்.

285 கற்றலுங் கேட்டாலுங் காயமழி யாதசித்தி
பெற்றலு மின்பமுண்டோ பேசாய் பராபரமே.

பொ-ரை. கல்விகற்றலும், கேள்விகேட்டாலும், சரீரம் நசிக்காத சித்தி யடைந்தாலும், சுகமுளதோ, சொல்லாய், எ-று.

காயமழியாத சித்தியைக் காயசித்தியென்பர்.

286 கண்டவடி வெல்லாங் கரைக்கின்ற வஞ்சனம்போ
லண்டமெல்லா நின்னருளே யன்றே பராபராமே.

பொ-ரை. தான்தீண்டின வருவெல்லாவற்றையும்கரைக்கின்ற அஞ்சனம்போல, அண்டங்கள் யாவும் நின்னருளருவமே யல்லவோ, எ-று.

287 தன்செயலா லொன்றுமிலே தானென்று ஞன்பாவி
நின்செயலாய் நில்லாநினைவேன் பராபரமே.

பொ-ரை. என்செயலால் ஒன்று மில்லையென்றல், பாவியாகிய நான், உன் செயலாய் நில்லாத நினைவு என்னே, எ-று.

288 கொலைகளவு கட்காமங் கோபம்விட்டா லன்றே
மலையிலக்கா தின்னருடான் வாய்க்கும் பராபரமே.

பொ-ரை. கொலையையும், களவையும், கள்ளுண்டலையும், காமத்தையும், கோபத்தையும், விட்டாலல்லவோ, உன்னருள்மலையிலக்காகக் கிடைக்கும், எ-று.

289 தன்னே யறியாது சகந்தானு யிருந்துவிட்டா
லுன்னே யறியவரு ளுண்டோ பராபரமே.

பொ - ரை. தன்னே யுணராமல் உலகமே தானுயிருந்துவிட்டால், உன்னே யுணர்தற்குக் கருவியாகிய அருள் உள்ளதோ, எ று.

290 ஒன்றிரண் டென்றுன்னு வுணர்வுகொடுத்துள்ளபடி
யென்றுமென்னே வையா யிறையே பராபரமே.

பொ-ரை. ஒன்று இரண்டு என்று நினையாத அறிவைத்தந்து, எக்காலத்தும் உள்ளபடி என்னே வைக்கவேண்டும், இறைவனே, எ-று.

291 கருதுமடி யார்களுளங் காணவெளி யாகுந்
தரியநிறை வான சுகமே பராபரமே.

பொ - ரை. நினைக்கின்ற அடியார்களுடைய மனமானது காணும் படிவெளியாகின்ற தரிய பூமியில் நிறைந்திருக்கின்ற ஆநந்தமே, எ-று.

292 பொய்குவித்த நெஞ்சனருட் பொற்பறிந்து திக்கனைத்துங்
கைகுவித்து நிற்பதெந்தக் காலம் பராபரமே.

பொ - ரை. பொய்நிரண்ட மனத்தினேன், உன்திருவருளின் மேன்மையை யறிந்து, திசைகளெல்லா வற்றிலும் கைகூப்பி நிற்பது எந்தக் காலமோ, எ-று.

293 அத்துவித மான வயிக்ய வனுபவமே
சுத்தநிலே யந்நிலையார் சொல்வார் பராபரமே.

பொ-ரை. அத்து விதமாகிய ஐக்யாநுபவமே சுத்தநிலை, அந்த நிலையின் பெருமையை யாவர் சொல்லவல்லார், எ-று.

294 வைத்தசுவ ரலம்பின் மண்போமோ மாயையினேர்க்
கெத்தனேபோதித்து மென்னு மெய்தாய் பராபரமே.

பொ-ரை. வைத்த சுவரைக்கழுவிஞல் மண்போய்விடுமோ, போகாது, அதுபோல, மாயையி லகப்பட்டுழல்வார்க்கு எவ்வளவு போதித்தாலும் என்ன பிரயோஜநம், எந்தையே, எ-று.

சுவரே மண்ணுதலால், "மண்போமோ" என்ருர்.

295 பூட்டற்றுத் தேகமற்றுப் போகுமுன்னே நின்னருளைக்
காட்டத் தகாதோவென் கண்ணே பராபரமே.

பொ-ரை. பொருத்துக்களற்றுச் சரீரம் அழிவதற்கு முன்னமே, உன்னருளைக் காட்டத்தகாதோ, என்கண்ணே, எ-று.

296 சொல்லிற் பதர்களைந்து சொன்முடிவு காணுதார்
நெல்லிற் பதர்போல நிற்பார் பராபரமே.

பொ-ரை. சொற்களில் பதராகிய சொற்களை நீக்கி, சொல்லின் முடிவினை யறியாதவர், நெல்லிலுள்ள பதர்போலப் பயனற்றவர்களாய் நிற்பார், எ-று,

சொல்லிற் பதர்-பயனற்றசொல்.

297 அழுக்காற்று னெஞ்ச மழுங்கியபுன் மாக்க
ளிழுக்காற்று லின்பநல மெய்தார் பராபரமே.

பொ-ரை. பொருமையால் மனம் வருந்திய கீழ்மக்கள், தமது துர்மார்க்கத்தால் சுகமாகிய நன்மையை யடையார்கள், எ-று.

298 தேகாதி பொய்யெனவே தேர்ந்தவுப சாந்தருக்கு
மோகாதி யுண்டோ மொழியாய் பராபரமே.

பொ-ரை. தேகம்முதலியவை பொய்யென்று தெளிந்த உபசாந்தர்களுக்கு மோகம் முதலியவை உளவாமோ, சொல்லாய், எ-று.

தேகாதி யென்றது, தருகரண புவன போகங்களை, மோகாதி யென்றது, அரிஷட்வர்க்கத்தை.

299 சாதனையெல் லாமவிழத் தற்போதங் காட்டாதோர்
போதனைநீ நல்குவதெப் போதோ பராபரமே.

பொ-ரை. சாதனங்களெல்லாம் ஒழிய, தற்போதம் தலையெடுக்காத வகை, ஒருபோதிப்பை எனக்கு நீயருளிச் செய்வது எந்தக்காலமோ, எ-று

300 ஒன்றுமறி யாவிருளா மூள்ளம் படைத்தவெனக்
கென்று கதிவருவ தெந்தாய் பராபரமே.

பொ-ரை. ஒன்றையு முணராத இருளுருவமாகிய மனத்தையுடைய எனக்கு, நற்கதி யுண்டாவது எந்தக்காலம், எந்தையே, எ-று.

301 சிந்திக்குந் தோறுமென்னுட் சிற்சுகமா யூற்றூறிப்
புந்திக்கு ளின்றவருட் பொற்பே பராபரமே.

பொ-ரை. நினைக்குந்தோறும், என்னுள்ளே, ஞானசுகமாய் ஊற்றுச் சுரந்து, என் புத்திக்குள்ளே நிலைத்திருந்த அருட்பொலிவே, எ-று.

302 என்று மடைந்தோர்கட் கிரங்கார் குறிப்பனைத்துங்
கன்றை யுதைகாலி கதைகாண் பராபரமே.

பொ-ரை. எக்காலத்தும் தம்மை யாசிரயித்தவர்களுக்கு இரங்காதவர்களுடைய நினைவெல்லாம், அணுகும் கன்றை அணுகவொட்டாமல் உதைக்கின்ற பசுக்கூட்டத்தின் கதையை நிகர்க்கும், எ-று.

303 குற்றங் குறையக் குணமே லிடவருளை
யுற்றவரேயாவிக் குறவாம் பராபரமே.

பொ-ரை. தீமைகள்குறைய, நன்மைகள்மேலிட, உன்னருளை யடைந்தவர்களே, என்னுடைய பந்துக்கள், எ-று.

304 ஒருமையால் வாய்க்குமுண்மைக் கோரனந்த நூல்கோடி
பேருரையாற் பேசிலென்ன பேறும் பராபரமே.

பொ-ரை. ஒரு மொழியாற் கிடைக்கும் உண்மைப் பொருளின் பொருட்டு, ஒப்பற்ற, அளவில்லாத சாத்திரத் தொகுதிகளை, பெரிய வுரைகளோடு படித்தாலும் என்னபயனுண்டாம், எ-று.

305 சொல்லுஞ் சமயநெறிச் சுற்றுக்கு ளேசுழலு
மல்லலொழிவ தென்றைக் கையா பராபரமே.

பொ-ரை. சொல்லப்பட்ட சமயமார்க்கமாகிய சுற்றுக்குள் அகப்பட்டுச் சுழலாநின்ற துன்பமானது என்னைவிட்டு நீங்குவது என்று, ஐயனே!

306 பிடித்ததையே தாபிக்கும் பேராண வத்தை
யடித்துத் துரத்தவல்லா ரார்காண் பராபரமே.

பொ-ரை. தான் பிடித்ததையே திரப்படுத்துகின்ற பெரிய ஆணவத்தை, அடித்துத் துரத்தவல்லவர் யாவர், ஒருவருமில்லை, எ-று.

307 நேசத்தா னின்னை நினைக்குநினை வுடையார்
ஆசைக் கடலி லழுந்தார் பராபரமே.

பொ-ரை. அன்பினால் உன்னை நினைக்கின்ற மனத்தையுடையவர், ஆசையாகிய கடலில் அமிழார், எ-று.

308 கள்ளாது கட்டுணவுங் காரியமோ காணுருசொல்
தொள்ளாது தோலுமன்றே கூறுய் பராபரமே

பொ-ரை. திருடாமல் கட்டுப்படவும் வேலையோ, நான் ஒருமொழி யைக் கொள்ளாத குற்றமல்லவோ, சொல்லாய், எ-று.

309 சென்றவிட மெல்லாந் திருவருளே தாரகமாய்
நின்றவர்க்கே யானந்த நிட்டை பராபரமே.

பொ-ரை. போன இடமெல்லாம் திருவருளே ஆதாரமாகக்கொண்டு நின்றவர்க்கே, ஆநந்தத்துக்குக் காரணமாகிய நிஷ்டையுள்ளது, எ-று.

310 நீட்சி குறுகிலிலா நித்யசுகா ரம்பசக
சாகூியா முன்னேவந்து சார்ந்தேன் பராபரமே.

பொ-ரை. நீட்டலும் குறுக்கலு மில்லாத சாசுவதமாகியசுகத்தொடக் கத்துக்கு ஹேதுவாகிய லோகசாகூியாயிருக்கிற வுன்னே வந்தடைந்தேன் எ-று.

311 வாஞதி தத்துவமாய் மன்னிநின்ற காரணநீ
நாஞகி நிற்பதெந்த நாளோ பராபரமே.

பொ-ரை. ஆகாயமுதலிய தத்துவங்களாய் நிலைபெற்று நின்ற சர்வ காரணனே, நீயே நான் ஆகிநிற்பது எந்தக்காலமோ, எ-று.

312 காட்டத்தி லங்கி கடையவந்தா லென்னவுன்னும்
நாட்டத்தி னூடுவந்த நட்பே பராபரமே.

பொ-ரை. கடைதலால், விறகி னின்று நெருப்புண்டானதுபோல, வுன்கின்ற நினைவினிடத்துண்டாகிய என்னுயிர்த் துணையே, எ-று.

313 நித்திரையாய்த் தானே நினைவயர்ந்தா னித்தநித்தஞ்
செத்ததழைப் பானதெங்கள் செய்கை பராபரமே.

பொ-ரை. நித்திரைசெய்து தானே நினைவுமறந்தால், நாள்தோறும், எங்கள் செய்கை, செத்தபிழைப்பாய் விட்டது, எ-று.

314 இன்பநிட்டை யெய்தாமல் யாதெனினுஞ் சென்றுமனங்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம் பராபரமே.

பொ-ரை. சுகநிஷ்டையை யடையாமல், மனமானது யாதொரு பொருளினும் சென்றழுந்தித்துக்கமடைதல் வலியபிறவித்துன்பம், எ-று.

315 பொய்யகல மெய்யான போதநிலை கண்டோர்க்கோ
ரையமிலை யையமிலை யையா பராபரமே.

பொ-ரை. பொய் நீங்கும்படி உண்மையாகிய ஞானநிலையைக் கண்ட வர்களுக்கு, ஒரு சந்தேகமில்லை ஒருசந்தேகமில்லை, ஐயனே, எ-று.

316 மந்திரத்தை யுன்னி மயங்கா தெனக்கினியோர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ பராபரமே.

பொ - ரை. மந்திரத்தை நினைத்து மயங்காமல், எனக்கு, இனி ஒ உபாயத்தைக் கற்பிக்கத்தகாதோ, எ-று.

317 விண்கருணை பூத்தென்ன மேவியுயிர்க் குயிராய்த்
தண்கருணை தோன்றவரு டாய்நீ பராபரமே.

பொ-ரை. ஆகாயமானது கருணையைப் பூத்தாற்போல, உயிர்க்கு ராய்ப் பொருந்தி, தண்ணிய கிருபைதோன்ற அருள்செய்கின்ற தாய்நீயே.

318 தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்ற
னின்மயமா யெல்லா நிகழும் பராபரமே.

பொ-ரை. தன்மயமாய் நின்ற நிலைதானே தானாகி நின்றால், எல்லா உன்னுருவமாகவே நிகழும், எ-று.

319 எங்கி யிடையுநெஞ்ச வேழையைநீ வாவென்றே
பாங்குபெறச் செய்வதுன்மேற் பாரம் பராபரமே.

பொ - ரை. எக்கத்தை யடைந்துசாகின்ற மனத்தையுடைய எ யேனை, நீவாவென்றழைத்துச் சீர்பெறச்செய்வது உன்மீதுள்ள பாரம கும், எ-று.

320 ஆண்டநின்னை நீங்கா வடிமைகள்யா மாணவத்தைப்
பூண்டதென்ன கன்மம் புகலாய் பராபரமே.

பொ-ரை. ஆண்டவனே, உன்னை நீங்காத அடிமைகள் நாங்கள், அ படியிருக்க, நாங்கள் அகங்காரத்தை ஆபரணமாகப் பூண்டிருப்பதற்கு காரணம் என்ன கர்மமோ, சொல்வாய், எ-று.

321 எங்கணுநீ யென்று மிருந்தபடி யெய்தாம
லங்குமிங்கு மென்றலைய லாமோ பராபரமே.

பொ - ரை. எவ்விடத்தும் நீ நிறைந்திருக்கிறாயென்றால், ஒருவர படியே உன்னையடையாமல், அங்குள்ளது இங்குள்ளது என்று அலை வொண்ணுமோ, எ-று.

322 கற்குமது வுண்டு களித்ததல்லா னின்னருளி
னிற்குமது தந்ததுண்டோ நீதான் பராபரமே.

பொ-ரை. கல்வியாகிய தேனைப்பருகிக் களித்ததல்லாமல் நீ தான் உன் திருவருளில் நிற்றல் என்னுந் தேனைக் கொடுத்த துண்டோ, எ-று.

323 அண்டபகி ரண்ட மறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டாற் கதியாம் பராபரமே.

பொ-ரை. அண்ட பகிரண்டங்களெல்லாம் அழியாத உன்னுருவை சேவித்தவரைச் சேவித்தால் மோக்ஷமுண்டாகும், எ-று.

324 கலக்கமுற நெஞ்சைக் கலக்கித் திரும்பத்
தலக்குபவ னீயலேயோ சொல்லாய் பராபரமே.

பொ-ரை. கலக்க மடையும்படி மனத்தைக் கலங்கப்பண்ணி, மறுப டியும் தெளியப்பண்ணுவோன் நீ யல்லவோ, சொல்லாய், எ-று.

325 சிந்தையு மென்போலச் செயலற் றடங்கிவிட்டால்
வந்ததெலா நின்செயலா வாழ்வேன் பராபரமே.

பொ-ரை. மனமும் என்னைப்போலச் செய்கையற்று ஒடுங்கி விட் டால், நேரிட்டதெல்லாம் உன் செயலாகவே பாவித்து வாழ்ந்திருப்பேன்.

326 பந்தமிலாந் தீரப் பரஞ்சோதி நீகுருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே.

பொ-ரை. பரஞ்சோதியே, என் பிறவிப்பிணிப்பு அவிழும்படி நீ குரு வுருவாய் வந்த வடிவத்தை நான் மறக்கமாட்டேன், எ-று.

327 தானந்த மான சகச நிருவிகற்ப
வானந்த நிட்டையரு ளோயா பராபரமே.

பொ-ரை. தானே முடிவாயிருந்த சகச நிருவிகற்ப ஆநந்த நிஷ்டை யை அருள் செய்யவேண்டும், ஐயனே, எ-று.

328 அல்லலெல்லாந்தீரவெனக்கானந்தமாகவொரு பராபரமே.
சொல்லியென்பால் வைத்ததையென் சொல்வேன்

பொ-ரை. துன்பமெல்லா மொழியும்படி, எனக்கு இன்பமுண்டாக, மொழியை யெனக்குக் கிருபைசெய்ததைப்பற்றி என் சொல்லிப் புகழ் வேன், எ-று.

329 சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்றவுன்னைத்
தந்தவுனக் கென்னையுநான் றந்தேன் பராபரமே.

பொ-ரை. மனமயக்கந் தீரும்படி சித்துருவாய் நின்றவுன்னை எனக் குக்கொடுத்த வுனக்கு, நான் என்னையும் கொடுத்தேன், எ-று.

330 மைகாட்டு மாயை மயக்கமற நீகுருவாய்
கைகாட்ட வுங்கனவு கண்டேன் பராபரமே.

பொ-ரை. இருளுருவாகிய மாயா மயக்க மொழிய நீ குருவடிவாய் எழுந்தருளிவந்து, கைகாட்டவும் சொப்பநங் கண்டேன், எ-று.

கைகாட்டல்-சும்மாவிரு என்று கையமைத்தல்.

331 மால்வைத்த சிந்தை மயக்கறவென் சென்னிமிசை
கால்வைக்க வுங்கனவு கண்டேன் பராபரமே.

பொ-ரை. ஆசைவைத்த மனமயக்கம் அற, என் சிரசின்மீது உன் திருவடியை வைக்கவும் சொப்பநம் கண்டேன், எ-று.

332 மண்ணுன மாயையெல்லா மாண்டுவெளி யாகவிரு
கண்ணுர வுங்கனவு கண்டேன் பராபரமே.

பொ-ரை. மண்ணுகிய மாயை முழுதும் மடிந்து வெளியாக, இரண்டு கண்களாரக் கனவுகண்டேன், எ-று.

333 மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையாலென்
கண்ணீர் துடைக்கவுநான் கண்டேன் பராபரமே.

பொ-ரை. பிரபஞ்சமாயையாலே மயங்காமல், உன்கையால், என் கண்ணீரைத் துடைக்கவும் நான் கனவுகண்டேன், எ-று.

334 உள்ளதுணரா வுணர்விலிமா பாவி யென்றே
மெள்ளமெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே.

பொ-ரை. யதார்த்தத்தையறியாத அறிவில்லாத மஹா பாபியென்று தாமே என்னை மெள்ளமெள்ளக் கைசோரவிட்டனை, எ-று.

335 எல்லா நினதுசெய லென்றெண்ணு மெண்ணமுநீ
அல்லா லெனக்குளதோ வையா பராபரமே.

பொ-ரை. எல்லாம் உன்செயலே யென்று நினைக்கின்ற நினைவும் நீயேயன்றி, எனக்கென்று ஒரு எண்ணமுமுண்டோ, ஐயனே, எ-று.

336 பந்த மயக்கிருக்கப் பற்றுழிந்தே னென்றுளறு
மிந்தமயக்க மெனக்கேன் பராபரமே.

பொ-ரை. பிறவிப்பிணிப்பின் மயக்கமிருக்க, பற்றுவிட்டேன் என்று உளறுகின்ற இந்தமயக்கம் எனக்கு என், எ-று.

337 காட்சியெல்லாங் கண்ணேவிடக் கண்டதுண்டோ யாதுணு
கு, மாட்சியுன தருளே யன்றே பராபரமே.

பொ-ரை. கண்ணேயொழியக் காட்சிகள் யாவுமுளவோ, இல்லையே அதுபோல, எல்லாவற்றுக்கும் உன்திருவருளே ஆட்சியாமல்லவோ.

ஆட்சி - உரிமை.

338 எட்டுத் திசையுமொன்று யின்பமாய் நின்றவுன்னை
விட்டுப் பிரியவிடம் வேறே பராபரமே.

பொ-ரை. எட்டுத் திசைகளிலும் ஒன்றுகி இன்பவுருவாய் நிலைபெற் றிருந்த உன்னை, விட்டுப் பிரிதற்கு, எனக்குவேறு இடம் உளதோ

339 பிறியா துயிர்க்குயிராய்ப் பின்னமற வோங்குஞ்
செறிவே யறிவே சிவமே பராபரமே.

பொ-ரை. நீங்காமல், உயிர்க்குயிராகி, கண்டிக்கப்படாமல் நின்று அடர்த்தியே, அறிவே, சிவமே, எ-று.

340 ஏதேது சொன்னலு மெள்ளளவு நீயிரங்காச்
சூதேத னெனக்குளவு சொல்லாய் பராபரமே.

பொ-ரை. என்னென்ன சொன்னலும் எள்ளத்தனையும் நீ யிரக்கஞ் செய்யாத கபடம்யாது, எனக்கு உளவுசொல்லாய், எ-று.

341 கற்பனையாப் பாடுகின்றேன் கண்ணீருங் கம்பலையும்
சொற்பனத்துங் காணேனென் சொல்வேன் பராபரமே

பொ-ரை. கற்பனையாய்ப் பாடுகின்றேன், கண்ணீரும் கம்பலையும் என்சொப்பனத்தினுங் கண்டிலேன், இத்தத்தீவினையை யென்னென்று சொல்வேன், எ-று.

342 வன்பொன்று நீங்கா மனதிறப்ப மாறுப்பே
ரன்பொன்றும் போதுமெனக் கையா பராபரமே.

பொ-ரை. வன்மையைச் சிறிதும் நீங்காத மனமிறக்க உன்னிடத்து நீங்காத பேரன்பொன்றுமே எனக்கமையும், ஐயனே, எ-று.

343 ஏதுந் தெரியா வெளியேனை வாவெனகின்
போதநிலை காட்டிற் பொறுதோ பராபரமே.

பொ-ரை. ஒன்றுமறியாத எளியேனை வாவென்றழைத்து, உன்ஞான நிலையைக் காட்டினல், அது என்னல் தாங்கமுடியாதோ, எ-று.

344 ஓராம லெல்லா மொழிந்தேற்குன் றெய்வவரு
டாரா திருக்கத் தகுமோ பராபரமே.

பொ-ரை. எல்லாவற்றையும் ஆராயாமல்ஒழிந்த எனக்கு, உனதுதெய்வகமானகிருபையைச் செய்யாதிருத்தல், அது உனக்குத்தகுமோ, எ-று.

345 மோனந்தருஞான மூட்டியெனக் குவட்டா
வானந்த வாழ்க்கை யருளாய் பராபரமே.

பொ-ரை. எனக்கு மோனநிலையைத் தருகின்ற ஞானத்தையுண்டாக்கி, தெவிட்டாத இன்பவாழ்க்கையைக் கொடுத்தருளாய், எ-று.

346 வாடுமுகங் கண்டென்னை வாடாம லேகாத்த
நீடுங் கருணை நிறைவே பராபரமே.

பொ-ரை. வாடுகின்ற முகத்தைப்பார்த்து என்னை வாடாமல் காத்தருளிய பெருங்கருணை நிறைவே, எ-று.

347 புந்தியினு னின்னடியைப் போற்றுகின்ற மெய்யடியார்
சிந்தை யிறப்போகின் றியானம் பராபரமே.

பொ-ரை. உன் திருவடியை மனத்தினுல் வணங்குகின்ற மெய்யன்பு [illegible] மனமிறப்போ உனதுதியானம், எ-று.

348 உனக்குவமை யாக்கருணை யுள்ளவரும் வண்மைக்
கெனக்குவமை யானவ்வரு மில்லை பராபரமே.

பொ-ரை. கருணையில் உனக்கு உவமையாயுள்ளவரும், வண்மையில் எனக்கு உவமையாயுள்ளவரும் இல்லை, எ-று.

349 தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போ லெவ்விடத்து
நீயிருந்து நான்றளர்ந்து நின்றேன் பராபரமே.

பொ-ரை. தாயிருந்தும் பிள்ளை தவித்தாற்போல, எவ்விடத்தும் நீ பிருந்தும் நான் மனந்தளர்ந்து நின்றேன், எ-று.

350 வாயாற் கிணறுகெட்ட வாறேபோல் வாய்பேசிப்
பேயாளர்க் கின்பமுண்டோ பேசாய் பராபரமே.

பொ-ரை. கிணறு தன்வாயிலுலே தூர்ந்தவிதம் போல வாசாஞான மம் பேசிப் பேய்கொண்டார்க்குச் சுகமுண்டோ, எ-று.

351 பாவமென்ரு லேதும் பயமின்றிச் செய்யவிந்தச்
சீவனுக்கார் போதந் தெரித்தார் பராபரமே.

பொ-ரை. பாவமென்ருலோ சிறிதும் பயமில்லாமல் செய்வதற்கு, இந்தச் சீவனுக்கு ஞானம் போதித்தவர்யாவர், எ-று.

352 இன்ப நிருவிகற்ப மின்றேதா வன்றெனிலோ
துன்பம் பொறுப்பரிது சொன்னேன் பராபரமே.

பொ-ரை. இன்பத்தைக் கொடுக்கிறநிருவிகற்பசமாதி நிஷ்டையை இப்பொழுதே கிருபைசெய், அல்லவென்ருலோ, துன்பம் பொறுத்தல் எனக்கு அருமையாகும், எ-று.

353 கற்குநில கற்ருற் கருவியவி ழாதருளாய்
நிற்குநில கற்பதுவே நீதம் பராபரமே.

பொ-ரை. கற்கத்தகுந்த நிலையைக்கற்ருல் கருவிகொடுக்காது, அருளுருவாய் நிற்கும் நிலையைக் கற்பதுவே நீதியாகும், எ-று.

354 காச்சச் சுடர்விடும்பாற் கட்டிபோ னின்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

பொ-ரை. காய்ச்சுதலால் களிம்பற்று ஒளிவிடுகின்ற பொன்கட்டி கிர்மலமாகப் பேச்சற்றிருப்பவரே மீண்டும் பிறவாதவர், எ-று.

355 பற்றெழிந்து சிந்தைப் பதைப்பொழிக்துதானேதா
னற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே.

பொ-ரை. இருவகைப் பற்றுமொழிந்து, மனப்பதைப்புமொழிந்து, தானேதான் என்பது மொழிந்து நிற்றலே, எனக்கு என்றைக்கு அமைப் பாய், எ-று.

356 உருவெளிதான் வாதவூ னத்தமர்க்கல் லாலினமுங்
குருவழிகின் றுர்க்குமுண்டோ கூறுய் பராபரமே.

பொ-ரை. நீ உருவு வெளிப்பாடாய் எழுந்தருளிவந்தது வாதவூர் உத் தமர்க்கே யன்றி, இன்னமும் குருவின்பணிவிடை வழியில் நின்றவர்க்கும் உண்டோ, சொல்லாய், எ-று.

357 தேகமியா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
யாகுநெறி நல்லநெறி யையா பராபரமே.

பொ-ரை. சரீரம் யாதாயினும் ஒரு சித்தியையடைய, சீவன் முத்தி யையடைகின்ற மார்க்கமே நல்லமார்க்கம், ஐயனே, எ-று.

358 உலகநெறி போற்சடல மோயவுயிர்முத்தி
யிலகுமெனல் பந்த வியல்போ பராபரமே.

பொ-ரை. பிரபஞ்சமார்க்கம்போல, உடல்பிரிய, ஆன்மா முத்திதேக மாய் விளங்குமென்று சொல்லுதல் பிறவிப்பிணிப்பின் சுபாவந்தானே.

359 பரமாப் பரவெளியாப் பார்ப்பதல்லான் மற்றெவர்க்குந்
திரமேது மில்லைநன்றுத் தேர்ந்தேன் பராபரமே.

பொ-ரை. பரமாகவும் பரவெளியாகவும் பார்ப்பதல்லது, யாவர்க்கும் வேறு உறுதி சிறிதுமில்லை, அதனை நன்றுகத் தெளிந்துகொண்டேன்.

360 தேடுவே ணின்னருளைத் தேடிமுன்னே யெய்தினட
மாடுவே ணைந்த மாவேன் பராபரமே.

பொ-ரை. உன் திருவருளைத் தேடாநிற்பேன், தேடிமுன்னமே, உன் திருவருள் கிடைத்தால், நடனமாடுவேன், இன்பமயவாவேன், எ-று.

361 உள்ளங் குழையவுடல் குழைய வுள்ளிருந்த
கள்ளங் குழையவென்று காண்பேன் பராபரமே.

பொ-ரை. மனங்குழையவும், சரீரங்குழையவும், மனத்திருந்த வஞ்ச கங் குழையவும் என்றைக்குக் காணப்பெறுவேன், எ-று.

362 பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாலினெல்லாம்
வெட்ட வெளியாக விளங்கும் பராபரமே.

பொ-ரை. பட்டப் பகல்போலப் பாழாகிய மனமிறந்தால், விரும்பு வன வெல்லாம் வெட்டவெளியாக விளக்கும், எ-று.

363 பார்க்கினணுப்போற்கிடந்த பாழ்ஞ்சிந்தைமாளிலென்னே
யார்க்குச் சரியிடலா மையா பராபரமே.

பொ-ரை. பார்க்குமிடத்து அணுவைப்போல நுண்ணிதாகக்கிடந்த பாழ்மனமானது இறந்தால், என்னேயாருக்கு உவமை சொல்லலாம், ஐயனே, எ-று.

364 பாட்டுக்கோ வன்பினுக்கோ பத்திக்கோ வன்பர்தங்க
ணீட்டுக்கெல் லாங்குறுகி நின்றுய் பராபரமே.

பொ-ரை. அன்பர்களுடைய பாடலுக்கு மாத்திரமோ, அன்புக்கு மாத்திரமோ, பத்திக்குமாத்திரமோ, இவ்வாறு ஒவ்வொன்றுக்குமேயல்ல, அவர்களுடைய நீட்சிக் கெல்லாம் குறுக்கமடைத்து நின்றுய், எ-று.

365 முத்தாந்த வித்தே மூலைக்குறில மாயெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே..

பொ-ரை. முத்திமுடிவாகிய சர்வகாரணமே, (அந்தமுத்தி) மூலைக் கத்தக்க பூமியாயெழுந்த சித்தாந்த மார்க்கத்தின் மேன்மையே, எ-று.

366 உன்னு வெளியா யுறங்காத பேருணர்வா
யென்னுவிக் குள்ளே யிருந்தாய் பராபரமே.

பொ-ரை. நினைக்கக்கூடாத ஆகாயமாய், உறங்காத பேரறிவாய், என்னுயிருக்குள்ளே யிருந்தாய், எ-று.

367 தத்துவமெல் லாமகன்ற தன்மையர்க்குச் சின்மயமா
நித்தமுத்த சுத்த நிறைவே பராபரமே.

பொ-ரை. தத்துவங்களெல்லாம் நீங்கின தன்மையையுடையவர்களுக்கு, ஞானமயமாகிய சாசுவதனே, முத்தனே, சுத்தபூரணமே, எ-று.

368 உள்ளக் கொதிப்பகல வுள்ளுள்ளே யானந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும் பராபரமே.

பொ-ரை. என்மனக் கொதிப்பு நீங்கும்படி, என்மனத்தினுள்ளே இன்ப வெள்ளத்தில் மலர்கின்றமலராகிய உன்கருணையெனக்கு வேண்டும், எ-று.

369 என்னைப் புரப்பதரு ளின்கடனு மென்கடனு
நின்னிற் பணியறவே நிற்கை பராபரமே.

பொ-ரை. என்னைக் காப்பது உன்திருவருளுக்குக் கடன்மையாம், உன் திருப்பணியில் யிகுதியும் நிற்கை என் கடன்மையாகும், எ-று.

370 தானேயா னன்னிலையைத் தந்தவரு ளானந்த
வானே மனுநீதவாழ்வே பராபரமே.

பொ-ரை. நீதானே யாகின்ற நல்லநிலையை எனக்குக் கொடுத்த அருளாநந்த ஆகாயமே, மனத்துக்கெட்டாத வாழ்வே, எ-று.

371 மண்ணுதி பூதமெல்லாம் வைத்திருந்த நின்னிறைவைக்
கண்ணுரக் கண்டு களித்தேன் பராபரமே.

பொ - ரை. மண்முதலிய பூதங்களையெல்லாம் உள்ளே தங்கும்படி வைத்திருந்த உன் பரிபூர்ணநிலையைக் கண்ணுரக்கண்டுகளித்தேன், எ-று.

372 அறியாமை யீதென் றறிவித்த வன்றேதான்
பிறியா வருணிலையும் பெற்றேன் பராபரமே.

பொ-ரை. அறியாமையின் சொரூபம் இது வென்று எனக்கு அறிவித்த அன்றே, என்னைவிட்டு நீங்காத உன்திருவருளின்கண் யான் நிற்கும் நிலையையும் அடைந்தேன், எ-று.

373 தீதெனவு நன்றெனவுந் தேர்ந்துநான் றேர்ந்தபடி
யேது நடக்கவொட்டா தென்னே பராபரமே.

பொ-ரை. இது தீமையென்றும், இது நன்மையென்றும் தெளிந்து, நான் தெளிந்த வண்ணம், நடக்கவொட்டாது, இதற்கு ஏதுவென்ன.

374 கண்டவறி வகண்டா காரமென மெய்யறிவிற்
கொண்டவர்க்கே முத்தி கொடுப்பாய் பராபரமே.

பொ-ரை. கண்ட காட்சியானது அகண்டரூபமென்று உண்மை யறிவிற் கொண்டவர்களுக்கே முத்தியைக் கொடுப்பாய். எ-று.

375 ஈருக வல்வினைநா னென்னும் பின்பசுகம்
பேரும் படிக்கடிமை பெற்றேன் பராபரமே.

பொ-ரை. வலிய வினைகள் முடிவாகும்படி, நான் என்று அகங்காரியா
), பேராநந்தமே பிரயோஜநமாகும்படிக்கு, உன் அடிமைத்திறத்தை நான்டைந்தேன், எ-று.

376 பெற்ற ரனுபூதி பேசாத மோனநிலை
கற்ற ருனைப்பிரியார் கண்டாய் பராபரமே.

பொ-ரை. சுவாநு பூதிநிலையைப் பெற்றவர்களும், பேசாத மௌந நிலையைக் கற்றவர்களும் உன்னைப் பிரியமாட்டார்கள், எ-று.

377 நீயேநா னென்று நினைப்பு மறப்புமறத்
தாயே நினையவரு டந்தாய் பராபரமே.

பொ-ரை. நீயே நான் என்று நினைப்பும் மறப்பும் இல்லாதொழியும்படி, தாயினது அருள்போன்ற அருளை எனக்குத் தந்தனை, எ-று.

378 சஞ்சலமற் றெல்லாநீ தானென் றுணர்ந்தேனென்
னஞ்சலியுங் கொள்ளா யரசே பராபரமே.

பொ-ரை. சலநமற்று, எல்லாப்பொருளும் நீயேயென்றறிந்துகொண் டேன், எனது அஞ்சலியையும் ஏற்றுக் கொள்ளவேண்டும், இறைவனே.

379 பூதமுத லுதவரை பொய்யென்ற மெய்யரெல்லாங்
காதலித்த வின்பக் கடலே பராபரமே.

பொ-ரை. பிருதுவிமுதலாகிய பூதங்கள் முதலாக சாதாக்கியம் வரைக்குமாகவுள்ள தத்துவங்களெல்லாம் பொய்யென்றுணர்ந்த மெய்யறி வினையுடையோர் விரும்பின ஆநந்தசாகரமே, எ-று.

380 வாக்குமன மொன்றுபட்ட வார்த்தையல்லால் வெவ்
வேறுரைப், போக்குடைய வார்த்தை பொருந்தேன்
பராபரமே.

பொ-ரை. வாக்கு மனமும் ஒருதன்மைப்பட்ட வார்த்தையை யன்றி, வெவ்வேறுரைப் போதனையுடைய வார்த்தையைப் பேசமனம் பொருந் தேன், யான், எ-று.

381 வன்மையின்றி யெல்லா மதித்துணர்வாய்க்கா கெடுவேன்
தன்மையொன்றுந் தோயாத் தடையோ பராபரமே.

பொ - ரை. மனவன்மையில்லாமல் எல்லாவற்றையும் திருவுளத்த டைத் தறியவல்லவுனக்கு, என்பால் எழுந்தருள, ஐயோ கெடுவேன் என க்கு நற்குணம் சிறிதும் பொருந்தாமை தடையாயிற்றே, எ-று.

382 பத்தர்சித்தர் வாழிபரி பக்குவர்கள் வாழிசெங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே.

பொ-ரை. பத்தர்களும் சித்தர்களும் வாழ்க, பரிபாக மடைந்தவ கள் வாழ்க, செங்கோல்பிடித்த அரசர்கள்வாழ்க, ஆசாரியன்வாழ்க, எ-று

383 கல்லாதே னுனதுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே.

பொ - ரை. நான் கற்கவேண்டிய வீட்டு நூல்களைக் கல்லாதவனா லும், அவற்றைக் கற்று உன்னையுள்ளபடி யறிந்த மெய்யன்பரது சொல் லைத் துணையாகக்கொண்டு உன்னைப்பற்றினேன், எ-று.

384 சொல்லிறப்பச் சற்குருவாய்த் தோன்றிச் சுகங்கொடுத்த
நல்லவர்க்கே கொத்தடிமை நான்காணேன் பராபரமே.

பொ-ரை. பேச்சிறக்கும்படி, சீசதாசாரியனுய் வெளிப்பட்டு, இன்பங் கொடுத்த நல்லவார்த்தைக்கே நான் கொத்தடிமை யானேன், எ-று.

385 முத்திக்கு வித்தான மோனக் கரும்புவழி
தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே.

பொ-ரை. மோக்ஷத்துக் காரணமான மௌநநிலையென்ற கரும்பி னிடத்தில், இனிக்கும்படி யுண்டான தேனே, எ-று.

386 நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ
சுத்தவரு ணிலைநீ சொல்லாய் பராபரமே.

பொ-ரை. நித்திரையும் பாழாகிய நினைவும் இறந்துநிற்பதுதானோபரி சுத்தமான உன்திருவருளில் நிற்கும்நிலை, நீ சொல்வாய், எ-று.

387 மண்ணு மறிகடலு மற்றுளவு மெல்லாமூன்
கண்ணி லிருக்கவுநான் கண்டேன் பராபரமே.

பொ-ரை. பூமியும், அலைகள் மடங்குகின்ற கடலும், மற்றுமுள்ள பொருள்களும் ஆகிய எல்லாம், உன்திருவரு ணோக்கத்திலிருக்கவும் நான் பார்த்தேன், எ-று.

388 பூட்டிவைத்து வஞ்சப் பொறிவழியே யென்றனைநீ
யாட்டுகின்ற தேதோ வறியேன் பராபரமே.

பொ-ரை. கட்டிவைத்து, வஞ்சகமான ஐம்போறிகளின் வழியே என்னை நீயாட்டி விப்பதற்குக் காரணம் யாதோ, அறியேன், எ-று.

389 பொய்யுணர்வா யிந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையு முளதோ பராபரமே.

பொ-ரை. பொய்யுணர்ச்சி யுடையேனாய், இந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன், எனக்குப் பிழைக்கும் விதமும் உண்டோ, எ-று.

பைங்கிளிக்கண்ணி.

அந்தமுட னாதியளவாம லென்னறிவிற்
சுந்தரவான் சோதி துலங்குமோ பைங்கிளியே.

பொ-ரை. முடிவோடு முதலும் அளவிடப்படாமல், அழகிய மேலான சோதிரூபம் என்னறிவினிடத்து விளங்குமோ, சொல்லாய் பசுங் கிளியே, எ-று.

2 அகமேவு மண்ணலுக்கென் னல்லலெல்லாஞ் சொல்லிச்
சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே.

பொ-ரை. என் மனத்தின்கண் பொருந்தியிருக்கிற இறைவனுக்கு, கிளியாகிய நீ போய், என் துன்பத்தையெல்லாம் சொல்லி, எனக்கு இன் பத்தைப் பெற்றுவந்து கொடுப்பாயாக, எ-று.

3 ஆவிக்கு ளாவியெனு மற்புதனுர் சிற்சுகந்தான்
பாவிக்குங் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே.

பொ-ரை. உயிர்க்குயிர் என்று சொல்லப்படுகிற அற்புத மூர்த்தியாகிய கடவுளது ஞானசுகம், இந்தப்பாவியாகிய எனக்கும் கிடைக்குமோ, நீ சொல்லாய், எ-று.

4 ஆறுமறி யாமலெனை யந்தரங்க மாகவந்து
சேரும்படியிறைக்குச் செப்பிவா பைங்கிளியே.

பொ-ரை. யாருமறியாத வண்ணம், ரகசியமாய் வந்து என்னை யணையும்படி என் தலைவனுக்கு நீ சொல்லி வருவாயாக, எ-று,

5 ஆறுன கண்ணீர்க்கென் னங்கபங்க மானதையுங் கிளியே.
கூறுத தென்னை குதலைமொழிப் பைங்கிளியே.

பொ-ரை. ஆறுபோலப் பெருகிய என்கண்ணீரின் அளவுக்கு, என் தேகம் வருந்தின வருத்தத்தையும் நீசொல்லாத தென்னையோ, மழலைச் சொல்லையுடைய பசுங்கிளியே, எ-று.

6 இன்பவருள வாடையழுக் கேறுமெமக் கண்ணல்சுத்த
வம்பரமா மாடை யளிப்பானை பைங்கிளியே.

பொ-ரை. ஆடை அழுக்கேறப்பெற்ற எமக்குச் சுகத்தைக் கொடுக்கும் பொருட்டு, எம்மிறைவன், பரிசுத்தமான ஆகாயமாகிய ஆடையைக் கொடுப்பானை, நீ சொல்லாய், எ-று.

7 உன்னுமலொன்றிரண்டென் றோராமல் யீட்டுநெறி
சொன்னுர் வரவும்வகை சொல்லாய்நீ பைங்கிளியே.

பொ-ரை. நினையாமலும் ஒன்று இரண்டு என்று ஆராயாமலும் முத்தி நெறியை யெமக்கறிவுறுத்தின இறைவர், எம்மிடத்தில் வரும்படியாகவும் ஒரு உபாயத்தை நீ சொல்லக்கடவை, எ-று.

8 ஊருமிலார் பேருமிலா ருற்றுர்பெற் றுருடனே
யாருமிலா ரென்னை யறிவாரோ பைங்கிளியே.

பொ-ரை. தமக்கென ஓர் ஊரில்லாதவர், ஒருபெயரில்லாதவர், உற்றூர் பெற்றுருடனே யாரும் இல்லாதவர், இப்படிப்பட்டவர், என்னையறியக் கடவரோ, எ-று.

9 ஊரைப்பா ராமலெனைக் குள்ளகத்து நாயகனுர்
சீரைப்பார்த் தாற்கருணைசெய்வாரோ பைங்கிளியே.

பொ-ரை. ஊரைநோக்காமல், என் உள்ளத்தின்கண்ணுள்ள இறைவரது சீரைநோக்கிஞல் கருணைசெய்வரோ, நீ சொல்லாய், எ-று.

10 என்று விடியு மிறைவாவோ வென்றென்று
நின்ற நிலையெல்லா நிகழ்த்தாய்நீ பைங்கிளியே.

பொ-ரை. இறைவனே, எமக்கு எக்காலம் விடியும் என்று பலகாற் சொல்லி, நான் விரைந்து நின்றநிலைமுழுதும், இறைவனுக்கு நீசொல்வாய் எ-று.

11 எந்த மடலூடு மெழுதா விறைவடிவைச்
சிந்தை மடலா வெழுதிச் சேர்ப்பேனே பைங்கிளியே

பொ-ரை. எந்த ஏட்டிலும் எழுதவொண்ணுத எம்மிறைவரது உருவத்தை, என் உள்ளவாகிய ஏட்டில் எழுதிச் சேர்ப்பேனே, எ-று.

12 கண்ணுண்மணி போலின்பங்காட்டி யெனைப்பிரிந்த
திண்ணியரு மின்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே

பொ-ரை. கண்ணினுள்ளிருக்கிற மணிபோல, இன்பங்காட்டி என்னைப் பிரிந்த வன்மனத்தையுடையவரும், இன்னம் வந்து சேர்வாரோ.

13 எடார் மலர்சூடே னெம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே.

பொ-ரை. இதழ்களோடு கூடிய மலர்களே முடியேன், எம்மிறைவரது திருவடியாகிய வாடாத மலர் எம்முடிக்குக் கிடைக்குமோ, எ-று.

14 கல்லேன் மலரேன் கனிந்தவன்பே பூசையென்ற
நல்லோர் பொல்லாவெனையுநாடுவரோ பைங்கிளியே.

பொ-ரை. கல்யாதுக்கு, அதின்மேலிடும் மலர்யாதுக்கு, பழுத்த அன்பே பூசை என்று சொன்ன நல்லோர், பொல்லாதவனாகிய என்னையும் நாடுவாரோ, எ-று.

கல்-கற்சிலை.

15 கண்டதனைக் கண்டு கலக்கந் தவிரெனவே
விண்டபெரு மானையுநான் மேவுவனே பைங்கிளியே.

பொ-ரை. எல்லாம் படைத்த இறை நிலையைப் பார்த்து மனக்கலக்கத்தை நீங்குவாய் என்றுசொன்ன இறைவனையும்யான் இன்னும் ஒருகால் கலக்கப் பெறுவேனே, எ-று.

16 காணுத காட்சி கருத்துவந்து காணுமல்
வீணுள் கழித்து மெலிவேனே பைங்கிளியே.

பொ-ரை. காணக் கூடாத இறைவரது காட்சியை மனங்களித்துக் காணப்பெறுமல், எம்முடைய நாட்களே வீணுகக்கழித்துமெலிவேனே.

17 காந்த மிரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னவருள்
வேந்த னெனையிழித்து மேவுவனே பைங்கிளியே.

பொ-ரை. இரும்பைக் காந்தமானது பற்றியிழுத்தாற்போல, இரு பைக் கரசஞகிய இறைவன் எம்மைப் பற்றியிழுத்துக் கலப்பாஞே, எ-று.

18 காதலால் வாடினதுங் கண்டனையே யெம்மிறைவர்
போதரவாயின்பம் புகிப்பேஞே பைங்கிளியே.

பொ-ரை. நான் ஆசையால் வாடினதையும் பார்த்தாயன்றே, எம்மி றைவர் வருகையால் இன்பத்தை யநுபவிப்பேஞே எ-று.

19 கிட்டிக்கொண் டன்பருண்மை கேளாப் பலவடிகொள்
பட்டிக்கு மின்பமுண்டோ சொல்லாய்நீபைங்கிளியே

பொ-ரை. நெருங்கி, அன்புடையாரது உண்மைமொழியைக் கேளா மல், பல அடிகளை யேற்கின்ற பட்டிக்கடாவை யொத்த எனக்கும் இன் பம் உளதோ, நீ சொல்வாய், எ-று.

20 கிட்டுராய் நெஞ்சிற் கிளவார் தழுவவென்று
னெட்டே ராவரவர் நேசவென்னே பைங்கிளியே.

பொ-ரை சமீபமான ஊரினராய் என்மனதில் விளங்குவார், தழுவ வேண்டு மென்று நினைத்து முயன்றால், நெடுந்தூரமான ஊரினராய் விடு வார். அவரது நட்பிருந்தவாறு என், எ-று.

21 கூறுங் குணமுமில்லாக் கொள்கையினு ரென்கவலை
யாறும் படிக்கு மணைவாரோ பைங்கிளியே.

பொ-ரை. ஒருவகுப்பும் குணமும் இல்லாத கொள்கையை யுடைய இறைவர், என்துன்பத் தணியும்படி, என்னைத்தழுவுவரோ, எ-று.

22 சின்னஞ் சிறியேன்றன் சிந்தைகவர்ந் தாரிறைவர்
தன்னந் தனியே தவிப்பேஞே பைங்கிளியே.

பொ-ரை. இறைவர், மிகவும் சிறியேஞகிய எனது மனத்தைக் கவர ந்து கொண்டார், இனி நான் மிகத்தனியனாயிருந்து தவிப்பேஞே, எ-று.

23 சிந்தைமருவித் தெளிவித் தெனையாள
வந்தகுருநாதனருள் வாய்க்குமோ பைங்கிளியே.

பொ-ரை. என்மனத்திற் பொருந்தியிருந்து, அந்தமனத்தைச் தெளி யப்படித்தி, என்னை ஆளவந்த குருநாதனது கிருபை இன்னும் ஒரு கால் கிடைக்குமோ, எ-று.

24 சொல்லிறந்து நின்ற சுகரூபப் பெம்மானை
யல்லும் பகலு மணைவேஞே பைங்கிளியே.

பொ-ரை. பேச்சற்று நின்ற ஆநந்தவடிவத்தையுடைய பெருமானை அல்லும் பகலும் இடையறாமல் தழுவப் பெறுவேஞே, எ-று.

25. தற்போதத் தாலே, தலைகீழ தாகவைய
னற்போத வின்புவர நாட்செலுமோ பைங்கிளியே.

பொ - ரை. தற்போதத்திலுல் நான் தலைகீழாய்நடத்தலால், இறை வனது நல்ல ஞானாநந்த முண்டாக நாள்கள் செல்லுமோ. எ - று.

26. தன்னையறியுந் தருணந் தனிற் றலைவ [கிளியே.
ரென்னையணை யாதவண்ணை மெங்கொளித்தார் பைங்

பொ - ரை. தன்னை நான் அறியுஞ் சமயத்தில், இறைவர், என்னைத் தழுவாத வண்ணம் எவ்விடத்தில் ஒளித்துக் கொண்டார். எ - று

27. தாங்கரியமையலெல்லாந்தந்தெனிட்டின்னருளாம், பாங்
கியைச்சேர்ந்தாரிறைக்குப்பண்போசொலேபைங்கிளியே.

பொ - ரை. தாங்கக் கூடாத ஆசையை யெல்லாம் கொடுத்து, என்னை விட்டு தன்னிய அருளாகியதேழியை யணைந்தார், இப்படிச்செய்வது, இவரது இறைமைக் குணமாமோ, சொல்லாய். எ-று.

அருள் - அருட்சத்தி.

28. தாவியதோர் மர்க்கடமாந் தன்மைவிட்டே யண்ணலிடத்,
தேவியம்போனிற்கினெனை யுள்குவரோ பைங்கிளியே.

பொ - ரை. தாவு மியர்க்கையுள்ள குரங்குக் குணம் போன்ற குணத் தைவிட்டு, இறைவரிடத்து, சித்திரம்போல அசைவற நிற்பின், என்னை நினைப்பரோ. எ - று.

29. தீராக் கருவழக்கைத் தீர்வையிட்டங் கென்னையினிப்,
பாரேறு தாண்டானைப் பற்றுவனே பைங்கிளியே.

பொ - ரை. ஒழியாத பிறவி வழக்கத்தைத் தீர்த்து, என்னை, இனி அப்பிறவி வழக்கைக் கொண்டு பூமியிற் பிரவேசியாத வண்ணம் என்னை யாண்டருளினவனைச் சென்று பற்றுவேனே. எ - று.

30. தூங்கிவிழித் தென்னபயன் றூங்காமற் றூங்கிற்கும்
பாங்குகண்டாலன்றேபலன்காண்பேன் பைங்கிளியே.

பொ - ரை. உறங்கி விழித்தலால் என்னபயன், ஒரு பயனுமில்லை யாதலால், உறங்காதுறங்கி நிற்கும் நெறியைக் கண்டாலல்லவோ பயன் அடைவேன். எ - று.

தூங்காமற் றூங்குதலாவது-நனவிற்சுழுத்திநிலையையடைந்திருத்தல். "தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம்" என்றுபட்டணத்தடிகளார்.

31. தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
வெல்லையிலா வின்பமய மெய்துவனே பைங்கிளியே.

பொ - ரை அநாதியாய்த் தொடர்ந்து வருகிற மனோதுக்கங்களை நீக்கி, இடையறுதலில்லையற்ற சுகரூபத்தையடையப் பெறுவேனே எ - று.

32. நன்னெஞ்சத்தன்பரெல்லா நாதரைச்சேர்ந்தின்பணைந்தார்,
வன்னெஞ்சதாலேநான்வாழ்விழந்தேன்பைங்கிளியே.

பொ - ரை. நன்மனத்தை யுடைய அன்பர்களெல்லாம், இறைவரை யணைந்துசுகம் பெற்றார்கள். நானோ, வன்மனத்தாலே, பேராநந்த வாழ்க்கையை யிழந்து விட்டேன். எ - று.

33. நானே கருதின்வர நாடார் சும்மாவிருந்தாற்
றானே யணைவரவர் தன்மையென்னே பைங்கிளியே.

பொ - ரை. நானே நினைத்தால், வரவொருப்படார், சும்மா இருந்தால், தானே வந்து என்னை யணைவர், ஆதலால், அவ்விறை வரது குணமிருந்தவாறென்னே. எ - று.

34. நீர்க்குமிழி போன்றவுட னிற்கையிலே ராசவதஞ்
சேர்க்க வறியாமற் றிகைப்பேனே பைங்கிளியே.

பொ - ரை. நிலையாமையால் நீர்க்குமிழிபோன்ற வுடம்பானது நிற்கும் பொழுதே, நிலையுடைப் பொருளாகிய மோக்ஷசாம் ராஜ்யத்தைச் சேகரிக்க அறியாமல், திகைப்பேனே. எ - று.

35. நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வே றென்றணையார்,
வஞ்சகத்தா ரல்லரவர் மார்க்கமென்னே பைங்கிளியே.

பொ - ரை. என் மனத்தின்கண்ணே வாழ்கின்றவர், யான் நினைத்தால், வேறென்று எண்ணித் தழுவார், ஆனால், அவர் வஞ்சகத்தை யுடைய ரல்லர், அவரது கொள்கை என்னையோ. எ - று.

36. பன்முத்தி ரைச்சமயம் பாழ்படக்கல் லாலடிவாழ்,
சின்முத்திரையரசைச் சேர்வேனே பைங்கிளியே.

பொ - ரை. பலமுத்திரைகளை யுடைய சமயங்கள் யாவும் பாழாம்படி, கல்லாலின் அடியிலெழுந் தருளியிருக்கிற சின் முத்திரையையுடைய இறைவனைச் சேர்வேனே எ - று.

முத்திரை - குறி

37. பச்சைகண்ட நாட்டிற் பறக்குமுனைப் போற்பறந்தே,
னிச்சையெல்லா மண்ணற் கியம்பிவா பைங்கிளியே.

பொ - ரை. பச்சையாகிய சோலைகாணப்படுகின்றநாட்டில் பறந்து செல்கின்ற உன்னைப்போல இறைவரையடையவிரைகின்றேன், ஆதலால் என்விருப்பத்தையெல்லாம் இறைவருக்குச்சொல்லித் திரும்பிவருவாயாக-

38. பாசபந்தஞ் செய்ததுன்பம் பாராம லெம்மிறைவ
ராசைதந்த துன்பமதற் காற்றேனுன் பைங்கிளியே.

பொ-ரை. பாசப்பிணிப்பு எனக்குண்டாக்கின துன்பத்தை நோக்காமல், எம்மிறைவர்மேல் வைத்த விருப்பமானது எனக்கு உண்டாகிய துன்பத்துக்குச் சகியேன். எ - று.

39. பாராசை யற்றிறையைப் பற்றநான் பற்றிநின்ற
பூராய மெல்லாம் புகன்றுவா பைங்கிளியே.

பொ-ரை. மண்ணாசை நீங்கி, இறைவனைப் பற்றற நான் பற்றி நின்ற வரலாற்றை யெல்லாம் சொல்லிவா. எ - று.

40. பேதைப் பருவத்தே பின்றொடர்ந்ததன் பக்குவமுஞ்
சோதித்த வண்ணல்வந்து தோய்வாரோ பைங்கிளியே.

பொ-ரை. பேதைப் பருவத்திறமுமே பின்தொடர்ந்து, என்பக்குவத்தையும் சோதனைசெய்த இறைவர் வந்து என்னைக்கூடுவரோ. எ - று.

41. பைம்பயிரை நாடுமுன்போற் பார்பூத்த பைங்கொடிசேர்,
செம்பயிரை நாடித் திகைத்தேனுன் பைங்கிளியே.

பொ - ரை. பசுமையாகிய பயிரை நாடுகின்ற உன்னைப்போல, உலகங்களையெல்லாம் ஈன்ற பசிய கொடிபோன்ற வுமாதேவி சேர்ப்பெற்ற செம்பயிராகிய சிவபெருமானை நாடி நான் திகைத்தேன் எ - று.

42. பொய்க்கூடு கொண்டு புலம்புவனை வெம்மிறைவர்,
மெய்க்கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே.

பொ-ரை. பொய்க் கூடாகிய சரீரத்தைச் சுமந்து புலம்புவேனை, எம்மிறைவரது உண்மை நிலையாகிய சச்சிதானந்தியிற்போய்ச சொல்லிவா.

உண்மைநிலை - அழியா நிலையாகிய சிவபதம்

43. பொய்ப்பணி வேண்டேனைப் பொருட்படுத்தி யண்ணலென்
பான், மெய்ப்பணியுந்தந்தாருகான்மேவுவனைப்பைங்கிளியே.

பொ – ரை. பொய்த் தொண்டை விரும்பாத என்னை ஒருபொருளாக்கி இறைவர், தமது மெய்த்தொண்டையும் எனக்குக் கிருபைசெய்து, இன்னும் ஒருகால் என்னைக் கூடுவரோ. எ - று

44. மண்ணுறங்கும் விண்ணுறங்கு மற்றுளவெ லாமுறங்குங்
கண்ணுறங்கே னெம்மிறைவர் காதலாற் பைங்கிளியே.

பொ – ரை. மண்ணுலகம் நித்திரைசெய்யும், விண்ணுலகம் நித்திரை செய்யும், மற்றுமுள்ள உலகங்களும் அவற்றின்கண் ணுள்ள பொருள்

களும் ஆகிய எல்லாமும் நித்திரை செய்யும், எம்பிறைவர்மீதுவைத்த விருப்பத்தால் நான் ஒருவனுமே கண்ணுறங்காதிருக்கிறேன். எ - று.

45. மட்டுப்படாத மயக்கமெல்லாந் தீரவென்னை [கிளியே.
வெட்டவெளி வீட்டி லண்ணல் மேவுவதே பைங்

பொ - ரை. அளவுபடாத மயக்கம் நீங்கும்படி இறைவர், வெறு வெளியாகிய வீட்டில் என்னைக் கூடுவரோ. எ - று.

46. மாலை வளர்த்தென்னை வளர்த்திறைவர் பன்னெறியாம்,
பாலை வனத்தில்விட்ட பாவமென்ன பைங்கிளியே.

பொ - ரை ஆசையை விருத்திசெய்து, அவ்வாசைக்கு இருப்பிட மாகிய என்னை வளர்த்து, இறைவர், பலசமய நெறியாகிய பாலை வனத்தில் விட்டதற்குக் காரணமாக நான் செய்த பாவமென்னையோ. எ-று.

47. மெய்யினெய் மாற்றவுழுத மெத்தவண்டெம் மண்ணறந்த
மையலெய் தீர்க்க மருந்துமுண்டோ பைங்கிளியே.

பொ-ரை. உடம்பின் கண் உண்டாகிற பிணியை நீக்குதற் குரிய மருந்துகள் அநேகமுண்டு, எம்பிறைவர் உண்டாக்கிய ஆசைப்பிணியை நீக்குதற் குரிய மருந்தும் உளதோ. எ-று.

48. மேவுபஞ்ச வண்ணமுற்றுய் வீண்சிறையா லல்லலுற்றுய்,
பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துவா பைங்கிளியே

பொ ரை. பொருந்திய ஐவகை நிறங்களையுடைத்தாய், ஆயினும் எங்களால்கூட்டில் அடைக்கப்பட்டிருக்கிற பயனற்றசிறையினால் துன்ப மடைந்தாய், இனி அச்சிறையினின்றும் வெளியில்விடுகின்றேன், உன்விருப் பப்படி சுகமாகப்போய்ப் பாவியாகிய எனது இழிவாகிய நிலையை இறைவருக் குச் சொல்லிவா எ-று.

49. வாய்திறவா வண்ணமெனை வைத்தாண்டார்க் கென்றுயரை
நீதிறவாச் சொல்லி னிரமாங்காண் பைங்கிளியே.

பொ-ரை. வாய்திறவாத வகையாக என்னை மோகநிலையிலிருத்தி ஆண்ட இறைவருக்கு, என் துக்கத்தை, நீ வெளிப்படையாகச் சொன்னால், அவருக்குநிசமாகும். எ-று.

50) வாட்டப் படாத மவுனவின்பங் கையாலே
காட்டிக் கொடுத்தானைக் காண்டோறு பைங்கிளியே.

பொ-ரை. வாட்டமடையாமைக்குக் காரணமாகிய மவுன சுகத்தை, கையாற் காட்டிக் கொடுத்தவனை நான் காணப் பெறுவேனோ. எ-று

51. வாரா வரவாக வந்தருளு மோனருக்கென்
பேராசை யெல்லாம்போய்ப் பேசிவா பைங்கிளியே.

பொ - ரை வரப்படாத வரவாக வந்தருளின மோகருருவுக்கு, எனது பேராமுழுதும் நீ சென்று சொல்லிவா. எ - று.

52. விண்ணவர்தம்பாலமுதம் வேப்பங்காயாகவென்பாற், பண்
ணியதம்மண்ணன்மயல்பார்த்தாயோபைங்கிளியே.

பொ - ரை தேவர்களிடத்துள்ள அமுதமானது எனக்கு வேப்பங் காய்போலக் கைக்கும்படிச் செய்தது எம்பிறைவர் மேல்வைத்த விருப்ப மாம், இதனை நீ பார்த்தாயோ. எ - று.

53. விண்ணுள்வளரி யடங்கி வேறற்ற தென்னவருட்
கண்ணு ளடங்கிடவுங் காண்பேனே பைங்கிளியே.

பொ - ரை. ஆகாயத்தின் கண்வாயு அடங்கி வேற்றுமையற்று நின் றிற்போல, நான் இறைவரது அருட்கண்ணில் அடங்கி வேற்றுமை யற்று நிற்கவுங் காண்பேனே. எ - று.

54. விண்ணூர் நிலவுதவழ் மேடையிலெல் லாருமுற [கிளியே.
மண்ணுனை வீட்டிலென்னை வைத்ததென்னே பைங்

பொ - ரை. ஆகாயத்தை யளாவிய சந்திரிகை தவழ்கின்ற மேடை யின் மீது அன்பர் எல்லாரும் இருக்க, என்னையுருவமே மாத்திரம், மண் ணுகிய வீட்டில் வைத்ததற்குக் காரணம் யாதோ. எ - று.

நிலவுதழ் மேடையென்றது, சந்திரமண்டலத்தின் ஒளியாகியஆயிர த்தெட்டிதழ்களோடு கூடிய கமலத்தை. இது ஆறுதாரங்களுக்கும் மேற் பட்டிருப்பது. இதனை வடநூலார் சஹஸ்ரார கமலம் என்பர்.

55. உள்ளத்தினுள்ளே யொளிந்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளலறிந்தாலெனக்குவாயுமுண்டோபைங்கிளியே

பொ - ரை. மனத்தின்கண் மறைந்திருந்து என்கள்ளத்தையெல்லாம் இறைவர் அறிந்தால், எனக்குப் பேசுதற்கு ஒருவாய் என்பதும் உளதோ.

56. ஆகத்தை நீங்குமுன்னே யாவித் துணைவரைநான்
முகத்தின் வண்ணந் தழுவவேனே பைங்கிளியே.

பொ - ரை. இத்தவுடம்பை விட்டு நீங்குதற்கு முன்னே, என்னு யிர்த்துணைவரை, நான் என் ஆசைப் பெருக்கத்தின்படி யணையப் பெறு வேனே. எ - று.

57. தானே சுபாவந் தலைப்பட நின்றுன்ஞான
வானனவரும் வருவாரோ பைங்கிளியே.

பொ - ரை. தான் என்னுஞ் சுபாபமே தலைப்பட்டு நின்ருல், ஞாநா காசமே யுருவாக வுடைய இறைவரும் என்னிடத்துக்கு எழுந்தருளு வரோ. எ - று.

58. கள்ளத் தலைவ ரவர் கைகாட்டிப் பேசாம
ஒள்ளத்தில் வந்த வுபாயமென்னே பைங்கிளியே.

பொ - ரை. கள்ள நாயகராகிய அவர், கைகாட்டிப் பேசாமலே, என் மனத்தின் கண் எழுந்தருளின உபாயம் என்னேயோ. எ று.

வெளிப்படையாய் வார்த்தைசொல்லாமல் கையினல் ஜாடைசெய்த மையாலும், அந்த ஜாடைக்கிணங்கித் தழுவச் சென்ருல் அகப்படாமல் விரைந்துவந்து மனதிலொளித்தமையாலும் கள்ளத்தலைவர் என்ருர்.

எந்நாட்கண்ணி.

தெய்வவணக்கம்.

1. கீர்பூத்த வேணி நிலவெறிப்ப மன்ருடுங்
காற்பூத்த கண்டணையான் காணுநா ளெந்நாளோ.

பொ - ரை. கங்கை தங்கிய சடாபாரத்தில் சந்திரிகை வீசும்படி, அம் பலத்தில் நிருத்தம் செய்கின்ற கருங்கண்டனை, யான் கண்டுகளிக் நும் நாள் எந்நாளோ, அறியேன். எ - று

2. பொன்னுரு மன்றுண் மணிப்பூவைவிழி வண்டுசுற்று
மென்ன ரழுதினல மிச்சிப்ப தெந்நாளோ.

பொ - ரை. பொற்சபையின் கண் நீலநிறம் பொருந்திய பூவை போல் வானாகிய உமாதேவியின் கண்களாகிய வண்டுகள் சுற்றி மொய்க்கப் பெற்ற என் அரிய அமிர்தம் போன்ற சிவபெருமானது சுகத்தை, யான் விரும்புவது எந்நாளோ. எ - று.

பூவை - நாகணவாய்ப்புள், (மயினு) இதனிறப்பண்பினலும் மொழியி னலும் உவமையாயிற்று.

3. நீக்கிமலக் கட்டறுத்து நேரேவெளியி லெம்மைத்
தூக்கிவைக்குந் தாளைத் தொழுதிடுநா ளெந்நாளோ.

பொ - ரை மும்மலக் கட்டை நீக்கியறுத்து, வெள்ளிடையில் நே ராக எங்களைத் தூக்கிவைக்கின்ற திருவடிகளை வணங்கும் நாள் எந் நாளோ. எ - று.

4. கருமுகங்காட் டாமலென்றுங் கர்ப்பூரம் வீசுந்
திருமுகமே நோக்கித் திருக்கறுப்ப தெந்நாளோ.

போ-ரை பிறவியானது முகங்காட்டா தொழியும்படி என்றும் கர்ப்பூரமணம் வீசுகின்ன இவ்வுறவரது திருமுகத்தையே நோக்கி, என்மனே விகாரங்களெல்லாம் சேதிப்பது எந்த நாளோ.

5. வெஞ்சே லெனுமவிழியார் வேட்கைநஞ்சுக் கஞ்சினரை
யஞ்சே லெனுங்கைக் கபயமென்ப தெந்நாளோ.

போ-ரை ஈருப்பத்தைத்தருகிற சேல் மீன் என்று சொல்லத்தகுந்த கண்களையுடைய மாதரது ஆசையாகிய நெஞ்சத்துக்கு அஞ்சினவர்களே, அஞ்சவேண்டாம் என்றமைக்குங் கையினுக்கு, நான் அபயம் என்று சொல்லப்பெறுவது எந்நாளோ. எ-று.

6. ஆறுசமயத்து மதுவதுவாய் நின்றிலங்கும்
வீறுபரை திருத்தாண் மேவுநா ளெந்நாளோ.

போ-ரை ஆறு சமயங்களுள்ளும், அவ்வச்சமய தெய்வங்களாய் நின்று விளங்குகின்ற, மேலாகிய பராசத்தியினது திருவடியைப் பொருந்தும் நாள் எந்தநாளோ. எ-று.

7 பச்சைநிற மாய்ச்சிவந்த பாகங் கலந்துலகை
யிச்சையுட னீன்றுளா யாங்காண்ப தெந்நாளோ.

போ-ரை. பச்சை நிறமுள்ளவளாய், சிவபெருமானது சிவந்தபாகம் கலந்து, உலகங்களை இச்சையோடு பெற்ற உமாதேவியை, நாம் காண்பது எந்தநாளோ. எ-று

8. ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடி வாமடியைப் போற்றுநா ளெந்நாளோ.

போ-ரை முதல் முடிவுகளைக் காட்டாமல், அகண்டாகாரமாய் நின்று அறிவுறுத்துகின்ற ஞானரூபமாகிய பராசத்தியின் திருவடியை வணங்குவது எந்தநாளோ. எ-று.

9. கங்கை நிலவுசடைக் காட்டானைத் தந்தையெனும் [ளோ.
புங்கவெண்கோட் டானைபதம் புந்திவைப்ப தெந்நா

கங்கை நிலைபெற்ற சடாடவியையுடைய சிவபெருமானை, தந்தையென்றழைக்கிற, உயர்வாகிய வெண்கொம்பினையுடைய யானைமுகத்தோனாகிய விநாயகக்களவுளின் திருவடியை எமது மனத்தின் கண் ஊன்றுவது எந்நாளோ. எ-று.

10. அஞ்சுமுகங் காட்டாம லாறுமுகங் காட்டவந்த [ளோ
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நா

நான் அச்சம்தோன்றுகின்ற முகத்தைக்காட்டாமல், தமது ஆறுமுகங்களையெமக்குக் காட்டவந்த பிள்ளையாருடைய, (அன்பருக்கு)

செவ்வியஅடைக்கல ஸ்தானமாகிய திருவடித்தாமரையை எமதுமனத்தில் வைப்பது எந்தநாளோ. எ-று.

11. தந்தையிரு தாடிணைத்துத் தம்பிரான் ருள்சேர்ந்த
வெந்தையிரு தாளிணைக்கே யின்புறுவ தெந்நாளோ.

பொ-ரை. தந்தையின் இரண்டு கால்களையும் வெட்டி, இறைவனது திருவடியையடைந்த. எமது தந்தையாகிய சண்டேசுர நாயனாது திருவடியிணையை யடைந்து இன்பமுறுவது எந்தநாளோ. எ-று.

பிராமண குலதிலகராகிய சண்டேசுர நாயனார் ஓர்நாள் பசுக்களை மேய்க்க ஓட்டிக்கொண்டுபோகும் இடையன் தன்னைமுட்டிய ஓர் பசுவைத் தடியாலடிக்கக் கண்டு, மனம்பொறாது அப்பசுமந்தைக்குரிய அந்தணர் சம்மதம்பெற்று ஆன்றுமுதல் தாமே அப்பசுக்களை மேய்த்துவந்தனர். அது முதல் பசுக்களெல்லாம் பெருகி அதிகமாகப்பால்சொரிய, நாயனார் மனங்களித்துத் தாம் பசுமேய்த்துவந்த மண்ணியாற்றங்கரையில் ஆத்திமரத்தின் கீழ் மணலினால்சிவலிங்கப்பெருமானைப்பிரதிஷ்டைசெய்துபசுவின்பாலால் திருமஞ்சனஞ்செய்து துதித்துவந்தனர். இதை உணர்ந்த அவர்தந்தையார் நாயனார் நிலையறியாது, சிறுபிள்ளைத்தன்மையால் பாலைக்கறந்து மணலில் ஊற்றிவிடுகிறார் என்றுநினைத்துத் திருமஞ்சனப் பாற்குடங்களைக் காலாலிடறிச்சிந்திஞர். அதைக்கண்டநாயனார் மனம்பொறாமல், அருகிலிருந்த கோலால் அவர்காலிலெறிய, அதுவே மழுவாய்த் தந்தையின் இரண்டுகால்களையும் தறிக்க, மண்மேல் அலறி வீழ்ந்தனர். வீழ்ந்ததுகண்டும், நாயனார் மனக்கலக்கமின்றிச் சிவாசசனை புரிந்துகொண்டிருக்கப் பரமசிவன் ரிஷபவாகனத்தின்மேல் பார்வதிசமேதரா யெழுந்தருளிக் காட்சிகொடுத்தருள, நாயனரும் சிவபதமடைந்தனர்.

தருமபுரீன் வணக்கம்.

1. தூய்யகர மலராற் சொல்லாமற் சொன்னவுண்மை
யையஞக்கல் லாலரசை யாமணைவ தெந்நாளோ.

பொ-ரை. பரிசுத்தமாகிய கைத்தாமரையால், சொல்லாமற்சொன்னவுண்மை நிலையையுடைய ஐயனே, கல்லாலினிழலில் எழுந்தருளியிருந்த அரசனே, யாம் அடையப்பெறுவது எந்தநாளோ. எ-று.

2. சிந்தையினுக் கெட்டாத சிற்சுகத்தைக் காட்டவல்ல
நந்தியடிக் கீழ்க்குடியாய் நாமணைவ தெந்நாளோ.

பொ-ரை. மனத்துக்கெட்டாத ஞானாநந்தத்தைக் காட்டவல்ல நந்தியின் திருவடியின் கீழ்க்குடியாய் நாம் அடைவது எந்தநாளோ.

3. எந்தை சனற்குமர ஞதியெமை யாட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்த்துநா ளெந்நாளோ.

பொ-ரை. எந்தையாகிய சனற்குமாரர் முதலாக, எம்மை ஆட் கொள்ளும் பொருட்டு வந்த தபோநிதிகளைத் துதிப்பது எந்நாளோ. ஏறு ஆதி என்றமையால் அவர்மாணாக்கர் சத்தியஞான தரிசினிகளும், அவர் மாணாக்கர் பரஞ்சோதிமுனிவரும் அமையும்.

4. பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ.

பொ-ரை. பொய்க்காட்சியார் காணாத பரிசுத்த நிலையென்கிற அத்துவித மார்க்கத்தையுடைய, மெய்கண்டதேவரது அருளைப் பொருந்துவது எந்நாளோ. எ-று.

5. பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை [ளோ.
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நா

பொ-ரை. சிவஞானசித்தியாரின் ஓர்விருத்தத்தின் பாதியிலேயே இந்தவுலகம் பயனற்றதாய்த் தோன்றும்படி, உண்மைஞானத்தைச் சாதித்து நின்ற சகலாகம பண்டிதரென்னும் காரணப்பெயர்பூண்ட அருணந்தி சிவாசாரியரது திருவடியை வணங்குவது எந்நாளோ.எ-று.

"பாரிலுள்ள நூலெல்லாம் பார்ப்பானேன் சித்தியிலே, ஓர்விருத்தப் பாதிபோதும்" என்னும் மேலோர்வாக்கானுமுணர்க.

6. சிற்றம் பலமென்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமூலக் கூறுநா ளெந்நாளோ.

பொ-ரை. சிற்றம்பலத்தில் நிலைபெற்ற ஞானசொரூபராகிய, தில்லைக்கொற்றங்குடி மூதல்வர்க்கு ஆசாரியராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியரைப்புகழ்வது எந்நாளோ. எ-று.

7. குறைவிலருண் ஞானமுதல் கொற்றங் குடியடிக [ளோ.
ணறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நா

பொ-ரை. குறைவற்ற அருள்ஞானங்களுக்கு மூலமாகிய கொற்றங்குடியடிகளது தேன்மணங்கமழ் கிடைத்தாகிய தாமரைமலர் போலுந்திருவடி கட்கன்பு செய்தலைப் பெற்று நாமிருப்பது எந்நாளோ. எ-று.

கொற்றங்குடியடிகள் உமாபதி சிவாசாரியர். தய்ய என்பது முதல் குறைவிலருள் என்பதீறாகவுள்ள இவ்வேழுபாட்டானும் முறையே, ஸ்ரீகண்டபரமேச்சுரரையும்; நந்திகேச்சுரரையும், சனற்குமாரரையும், சத்திய

ஞானதரிசனிகளையும், பரஞ்சோதி மாமுனிவரையும், மெய்கண்ட தேவரையும் அருணந்தி சிவாசாரியரையும், மறைஞானசம்பந்த சிவாசாரியரையும், கொற்றங்குடி உமாபதி சிவசாரியரையும் துதித்தார், மூன்றும்பாட்டில் சநற்குமாரரும் ஆதி என்றதனால் சத்தியஞான தரிசனிகளும், பரஞ்சோதி மாமுனிவரும் அடங்கியிருத்தல் காண்க.

8. நாளவங்கள் போகாம னன்னெறியைக்காட்டியெமை
யாளவந்த கோலங்கட் கன்புவைப்ப தெந்நாளோ.

பொ-ரை. எம்முடைய வாழ்நாட்கள் வீணாட்களாய்க் கழியாமல் நன்னெறியைக் காட்டி, எங்களை ஆட்கொண்டருளவந்த திருக்கோலங்களுக்கு அன்பு வைப்பது எந்தநாளோ. எ-று.

திருக்கோலங்கள் என்றது மற்றையடியாரை.

9. என்னறிவை யுள்ளடக்கி யென்போல் வருமவுனி
தன்னறிவுக் குள்ளேநான் சாருநா ளெந்நாளோ.

பொ-ரை. என்னறிவை விடயங்களிற் செல்லாது எனக்குள்ளடக்கிக்கொண்டு, என்போல மாறுபடவுருக்கொண்டுவந்தமவுனதேசிகனது அறிவுக்குள்ளே நான் பொருந்துவது எந்தநாளோ. எ-று.

10. ஆறுளொன்றை நாடினதற் காறுமுண்டா மென்றெமக்குக்
கூறு மவுனியருள் கூடுநா ளெந்நாளோ.

பொ-ரை. ஆறுசமயங்களுள் ஒன்றை நாடியிடத்து, அதற்குவழியுமுண்டாகும் என்று எமக்குச சொல்லியருளிய மவுனதேசிகனது அருள் கிடைப்பது எந்தநாளோ. எ-று.

எந்தச் சமயமாயினும் அதற்கும் ஒருவழியுண்டென்பது கருத்து.

11. நில்லாம னின்றருளே நேரேபா ரென்றவொரு
சொல்லான் மவுனியரு டோற்றுநா ளெந்நாளோ.

பொ-ரை. நில்லாமல் நின்று, திருவருளே நேராக நோக்கக்கடவையென்ற ஒரு மொழியினால், மவுன குருவினது திருபை வெளிப்படுவது எந்தநாளோ. எ-று

நில்லாமல் நிற்றலாவது - தானென்று நில்லாமல் திருவருளே முன்னிட்டு நிற்றல்.

12. வைதிகமாஞ் சைவ மவுனிமவு னத்தளித்த
மெய்திகழ்ந்தென் னல்லல் விடியுநா ளெந்நாளோ.

பொ - ரை. வைதிகமாகிய சைவநெறியையுடைய மௌனகுரு, மௌனநிலையினுணர்த்திய உண்மைப்பொருள் விளங்கி, என்துன்பங் கள் தொலையும் நாள் எந்தநாளோ. எ - று.

13. வாக்கு மனமற்ற மவுனிமவு னத்தருளே
தாக்கவுமென் னல்லலெல்லாந் தட்டழிவதெந்நாளோ.

பொ - ரை. சொல்லும் மனமும் அற்றொழிந்த மௌனகுருவினது மௌனநிலையினுல், திருவருள்வந்து தாக்கினவளவில், என்துன்பங்கள் முழுதும் நிலைமாறுவது எந்தநாளோ, எ - று.

அடியார் வணக்கம்

1. வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் றிருஞான
சம்பந் தனையருளாற் சாருநா ளெந்நாளோ.

பொ - ரை. வெவ்விய பிறவிக்கட்டை யொழித்து உலகத்தைக் காப் பாற்றுகின்ற இறைவரது இவ்வருணத்தின் கண் சம்பந்தத்தையுடைமை யால் வந்ததிருஞான சம்பந்தன் என்னும் திருநாமத்தையுடையவனை, திரு வருள் துணையாகக்கொண்டு, அடையும் நாள் எந்தநாளோ. எ - று.

2. எரின் சிவபோக மிங்கிவற்கே யென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ.

பொ - ரை. அழகிய சிவபோகம் இவ்விடத்தில் இவனுக்கே உரிய தென்றுசொல்ல, உழவாரங்கொண்ட செந்தாமரைமலர்போன்ற திருக்க ரங்களையுடைய திருநாவுக்கரசுசுவாமிகளின் திருவடியின்கண் அன்புவைப் பது எந்தநாளோ. எ - று.

உழவாரம் - புல்முதலியவற்றைக்களையுங் கருவி. இவர் சிவாலயங்கள் தோறுஞ் சென்று, அவ்விடங்களில் அடர்ந்திருக்கும் புல்முதலிய வற்றைக் களையும் பொருட்டுத் தமது திருக்கரத்தில் இக்கருவியை யுடையராயிருந்த தனுல், இவரை உழவாரங் கொள்செங்கையர் என்றார்.

3. பித்தரிறை யென்றறிந்து பேதைபாற் றூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ.

பொ - ரை. இறைவர் பித்தரென்றறிந்து, பரவையாகிய ஒரு பெண் ணினிடத்தில் தூதாக அனுப்பின, தமிழ்வல்லாராகிய சுந்தரமூர்த்திகளின் உண்மை நிலையைப் புகழ்வது எந்தநாளோ.

4. போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூ ரையனன்பை வாழ்சிப்ப தெந்நாளோ.

பொ - ரை. நாட்டார்யாவரும் போதவூர் இன்னதென்றுணரும் படி, புத்தரைவாதில் ஜயித்த, திருவாதவூரின் கண் அவதரித்த, ஐயஞ்சிய மாணிக்கவாசக சுவாமிகளின் அன்பின் நிலையை இச்சிப்பது எந்நாளோ.

போதவூர் - அறிவாகியவூர்.

5. ஒட்டுடன்பற் றின்றி யுலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ.

பொ - ரை ஒட்டுப்பற்றுக்கள் இல்லாமல் உலகவின்பத்தைவிட்டுத் துறந்த, பேரின்பச் செல்வத்தையுடைய, பட்டினத்தார், பத்திரகிரியார், இவர்களுடைய குணத்தையறிவது எந்நாளோ. எ - று.

6. கண்டதுபொய் யென்றகண்டா காரசிவ மெய்யெனவே
விண்டசிவ வாக்கியர்தாண் மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. கண்டது பொய்யென்றும் அகண்டரூபமாகிய சிவம் மெய்யென்றும் சொல்லியருளிய சிவவாக்கியரது திருவடியைப் பொருந்தும் நாள் எந்நாளோ. எ - று.

கண்டது-காணப்படுவதாகிய பிரபஞ்சம்.

7. சக்கர வர்த்தி தவராச யோகியெனு
மிக்கதிரு மூலனருண் மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. தவத்தையுடைய ராஜயோகிகளுள் சக்கரவர்த்தியென்று புகழத்தகுந்த, மேலாகிய திருமூலரது அருளைப் பொருந்தும் நாள் எந்நாளோ. எ - று.

8. கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
வெந்தை யருணகிரி யிருக்குநா ளெந்நாளோ.

பொ - ரை கந்தரது பிரசாதத்தைப்பெற்று, கந்தரனுபூதி யென்னும் பிரபந்தம் செய்தருளின, எமது தந்தையாகிய அருணகிரிநாதரது அருளை நாடியிருக்கும் நாள் எந்நாளோ. எ - று.

9. எண்ணரிய சித்த ரிமையோர் முதலான
பண்ணவர்கள் பத்தரருள் பாலிப்ப தெந்நாளோ.

பொ - ரை அளவிடற்கரிதாகிய சித்தர், தேவர்கள் முதலான மேலோர்கள், பத்தர்கள், ஆகிய எல்லாரும் என்மீது அருள்பாலிப்பது எந்நாளோ. எ - று

பாலித்தல் - வழங்கல்.

யாக்கையைப்பழித்தல்.

1. சுக்கிலமு நீருஞ் சொரிமலமு நாறுமுடற்
புக்குழலும் வாழ்ஞையினிப் போதுமென்ப தெந்நாளோ.

பொ - ரை. சுக்கிலமும், பலவகையாகிய நீர்களும், பொழிகின்ற மலமும் நாறுகின்ற, இந்தச் சரீரத்திற் புகுந்து உழலவேண்டுமென்கிற ஆசையானது இனிமாயும் என்று நான்சொல்லுவது எந்தநாளோ. எ-று.

சுக்கிலம் - விந்து. நீர் - உதிர நீர் முதலியன.

2. நீர்க்குமிழி பூணைமைத்து நின்றுலவு நில்லாமெய்
பார்க்கு மிடத்திதன்மேற் பற்றுவை தெந்நாளோ.

பொ - ரை. உண்மையைப்பார்க்கு மிடத்தில், நீர்க்குமிழியானது பூண்கட்டப்பட்டு நின்றுலவ, இச்சரீரம் நில்லாது ஆதலால், இதன்மே லுள்ள பற்றொழிவது எந்தநாளோ. எ - று

நீர்க்குமிழியினும் நிலையற்ற து இந்தசரீரமென்பது கருத்து

3. காக்கைநரி செந்நாய் கழுகொருநான் கூடியுண்டு
தேக்குவிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ.

பொ - ரை. காக்கை, நரி, செந்நாய், கழுகு. ஆகிய இவைகள் ஒரு நான் சேர்ந்து உண்டு எப்பமிதற்குரிய விருந்தாகின்ற வுடம்பைச் சீ யென்று வெறுத்துரைப்பது எந்தநாளோ. எ - று.

4. செங்கிருமி யாதி செவித்தசெண்ம பூமியினை
யிங்கெனுட லென்னு மிழுக் கொழிவு தெந்நாளோ

பொ - ரை. செவந்த புழுக்கள் முதலியன பிறந்த ஜந்மபூமியை இவ்விடத்தில், என்னுடம் பென்னுங் குற்றம் நீங்குவது எந்தநாளோ எ-று.

5. தத்துவர் தொண்ணூற்றுவர் தாமாய்வா ழிந்நாட்டைப்
பித்தனு னென்னும் பிதற்றொழிவு தெந்நாளோ.

பொ - ரை தொண்ணூற்றுறு தத்துவங்கள் என்று சொல்லப்பட் டவர்கள் தாமாகவே கூடிவாழ்ந்திருக்கும் இந்தச்சரீரமாகிய நாட்டை-பித்த னாகிய நான், நான் என்கிற பிதற்றுதல் ஒழிவது எந்தநாளோ எ - று.

தத்துவங்கள் தொண்ணூற்றுறுவன:—பூதங்கள்:—பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், ஆக ரு. ஞானேந்திரியங்கள்:— சுரோத்திரம் துவக்கு, சக்ஷு, ஜிங்குவை, கிராணம், ஆக ரு. தன்மாத்திரைகள்:—சப் தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆக ரு. கருமேந்திரியங்கள்:—வாக்கு பாதம், பாணி, பாயு, உபஸ்தம், ஆக ரு. அந்தக்கரணங்கள்:—மனம், புத்தி

அலங்காரம், சித்தம், ஆக ரு. ஆக ஆத்துமதத்துவம், உரு. இதற்கு ஆத்து மதத்துவமென்றும், அசுத்ததத்துவமென்றும், போக்கிய காண்டமென்றும் பெயர் வித்தியாதத்துவங்கள்:—காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை, ஆக எ. இதற்கு வித்தியாதத்துவமென்றும், சுசதாசுத்த தத்துவமென்றும், போககாண்டமென்றும், பெயர். சிவதத்துவங்கள்:— சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம், ஆக நி இதற்குச் சிவ தத்துவமென்றும், சுத்ததத்துவமென்றும், பிரோககாண்டமென்றும்பெயர். இவை கூசு-ம் உண்ணிலைக்கருவிகள்.

பிருதுவியின்கூறு:—மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை, ஆக நி. அப்புவின்:— ஓகநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை, ஆக நி. தேயு வின்கூறு:— ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பு, ஆக நி. வாயுவின்கூறு:—ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல், ஆக நி. ஆகாசத்தின்கூறு:—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், ஆக நி. ஆகப்பூதகாரியம் உநி. தசவாயுக்களாவன:—பிராணன், அபானன், உதா னன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், ஆக ம. தசநாடிகளாவன:—இடை, பிங்கலை, சுழுமுனை, காந் தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருஷன், குரு, சங்கினி, ஆக ம. வச ரூதிகளாவன:—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், ஆக நி. வாக்குகளாவன, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, ஆக ரு. குணங்க ளாவன:—சத்துவம், ரசசு, தமசு, ஆக கூ. அகங்காரங்களாவன:—தைச சாகங்காரம், வைகாரிகாகங்காரம், பௌதாதிகாகங்காரம், ஆக கூ. இவை கூ - ம் புறநிலைக்கருவிகள்.

6. ஊனென்றி நாத னுணர்த்துமதை விட்டறிவே
னானென்ற பாவிதலை நாணுநா ளெந்நாளோ.

பொ - ரை. இறைவர் உடம்பின் கண்ணே பொருந்தி அறிவிப்பதை மறந்து விட்டு, நான் அறிவேன் என்று சொன்ன பாவியாகிய நான், தலைகுனிவது எந்தநாளோ. எ - று

7. வேலையிலா வேதன் விதித்தவிந்த்ர சாலவுடன்
மாலையிலா பாச மயக்கொழிவ தெந்நாளோ.

பொ - ரை. வேலையற்ற பிரமன் வகுத்த இந்திரசாலம் போன்ற சரீரத்தொகுதிகளின் தொழில் மயக்கம் ஒழிவது எந்தநாளோ. எ - று.

8. ஆழ்ந்து நினைக்கி னரோசிகமா மிவ்வுடலில்
வாழ்ந்து பெறும் பேற்றை மதிக்குநா ளெந்நாளே.

பொ - ரை. ஆழ்ந்து நினைத்தால் அருவருப்பாகிய இந்தச் சரீரத்தில் வாழ்ந்து, பெறற்குரிய மோக்ஷலாபத்தை மதிக்கும் நாள் எந்தநாளோ.எ-று

9. மும்மலச்சே முன முழுக்கும்பி பாகமெனு
மிம்மலக்கா யத்து ளிகழ்ச்சிவைப்ப தெந்நாளோ.

பொ-ரை. மும்மலமாகிய சேற்றினுலுண்டாகிய, முழுக்கும் பீபாகம் என்று சொல்லப்படுகிற, இந்த மலசரீரத்தில் வெறுப்பை வைப்பது எந்த நாளோ. எ-று.

கும்பீபாகம்-ஓர் நரகம்.

10. நாற்றமிகக் காட்டு நவவாயில் பெற்றபசுஞ்
சோற்றுத் துருத்தி சுமையென்ப தெந்நாளோ.

பொ-ரை. துர்க்கந்தம் மிகவும் வீசுகிற ஒன்பது வாயில்களுள்ள, பசுமையாகிய சோற்றுத்துருத்தியைச் சுமையென்று சொல்லுவது எந்த நாளோ. எ-று.

11. உருவிருப்ப வுள்ளேதா னூறு மலக்கேணி
யருவருப்புவாழ்க்கையைக்கண் டஞ்சுநா ளெந்நாளோ

பொ-ரை. உருவம் இருந்தபடியேயிருக்க, உள்ளேதானே சுரக்கின்ற மலக்கேணியோடு கூடிய, அருவருப்பாகிய வாழ்வைக்கண்டு அஞ்சும் நாள் எந்தநாளோ. எ-று.

மாதரைப்பழித்தல்.

1. மெய்வீசு நாற்றமெல்லா மிக்கமஞ்ச ளான்மறைத்துப்
பொய்வீசும் வாயார் புலையொழிவ தெந்நாளோ.

பொ-ரை. தமது சரீரம் வீசுகிற துர்க்கந்தத்தையெல்லாம், மிக்க மஞ்சளால் மூடி, பொய்மணக்கின்ற வாயினையுடைய மாதரது நீச சம்பந்தத்தை யொழிப்பது எந்தநாளோ. எ-று.

2. திண்ணியநெஞ் சப்பறவை சிக்கக் குழற்காட்டிற்
கண்ணிவைப்போர் மாயங் கடக்குநா ளெந்நாளோ.

பொ-ரை. திடமான மனமென்கிற பறவையானது அகப்படும்படி, கூந்தலாகிய காட்டின்கண், கண்ணிவைப்போராகிய மாதரது மாயத்தைக் கடக்கும்நாள் எந்தநாளோ. எ-று

கண்ணி-வலை, பூமாலை.

3. கண்டுமொழி பேசிமனங் கண்டுகொண்டு கைவியாக்
கொண்டுவிடு மாளர்பொய்க் கூத்தொழிவ தெந்நாளோ

பொ-ரை. பார்த்து, வார்த்தைசொல்லி, கருத்தையறிந்துகொண்டு, எம்மைக் கைவிலையாகக்கொண்டுவிடும் மாதர்களுடைய பொய்க்கூத்தை விட்டு நீங்குவது எந்தநாளோ. எ-று.

4. காமனைவா வென்றிருண்ட கண்வலையை வீசுமின்னர்
நாமமறந் தருளை நண்ணுநா ளெந்நாளோ.

பொ-ரை. மன்மதனை வாவென்றழைத்து, இருண்ட கண்களாகிய வலைகளை வீசி யகப்படுத்துகிற மாதரது பெயரை மறந்து, திருவருளையடையும்நாள் எந்தநாளோ. எ-று.

5. கண்களில் வெண்பூளை கரப்பக் கருமைபிட்ட
பெண்கண்மய றப்பிப் பிழைக்குநா ளெந்நாளோ.

பொ-ரை. கண்களிலுள்ள வெள்ளிய பூளை மறையும்படி, அக்கண்களுக்குக் கரிய மையெழுதின பெண்களுடைய மயக்கத்தினின்றும் தப்பிப்பிழைக்கும் நாள் எந்தநாளோ. எ-று.

6. வீங்கித் தளர்ந்து விழுமுலையார் மேல்வீழ்ந்து
தூங்குமதன் சோம்பைத் துடைக்குநா ளெந்நாளோ.

பொ-ரை. பருத்துத் தொங்கு மியற்கையுள்ள ஸ்தனங்களையுடைய மாதர்கள் மேல்வீழ்ந்து தூங்குகின்ற மன்மத சம்பந்தமாகிய சோம்பலைப் போக்கும் நாள் எந்தநாளோ.எ-று.

7. கச்சிருக்குங் கொங்கை கரும்பிருக்கு மின்மாற்றம்
வைச்சிருக்கு மாதர் மயக்கெ ழிவ தெந்நாளோ.

பொ-ரை கச்சணிந்த கொங்கைகளையும், கரும்பின் சுவைபோன்ற இன்சொல்லையும் தம்மிடத்து வைத்திருக்கின்ற மாதரது மயக்கத்தை நீங்குவது எந்தநாளோ. எ-று.

8. பச்சென்ற கொங்கைப் பசப்பியர்பா ழானமய
னச்சென் றறிந்தருளை நண்ணுநா ளெந்நாளோ.

பொ-ரை. பசுமையாகிய கொங்கைகளால் ஆடவரை மயக்கி வசப்படித்து மாதரது, பாழாகிய மயக்கம் விஷமென்றுணர்ந்து, திருவருளையடைவது எந்தநாளோ எ-று.

9. உந்திச் சுழியா லுளத்தைச் சுழித்தகன
தந்தித் தனத்தார் தமைமறப்ப தெந்நாளோ.

பொ-ரை நாபியாகிய நீர்ச்சுழியினால் மனத்தைச் சுழித்திழுத்த பெரிய யானை மத்தகத்தை யொத்த ஸ்தனங்களையுடைய மாதரை மறப்பது எந்தநாளோ எ-று

10. தட்டிவைத்த தோலை கொய்தகத்திற் சிந்தையெல்லாங்
கட்டிவைக்கு மாயமின்னர் கட்டழிவ தெந்நாளோ.

பொ - ரை. தட்டுக்களமைந்த சேலையின் சொய்சகத்தில், ஆடவர் களுடைய மனத்தையெல்லாம் கட்டிவைக்கும் மாயத்தில்வல்ல மாதரது கட்டுக்குலைவது எந்தநாளோ. எ - று.

11. ஆழாழி யென்ன அளவுபடா வஞ்சநெஞ்சப்
பாழான மாதர்மயற் பற்றொழிவ தெந்நாளோ.

பொ - ரை. ஆழ்ந்த கடல்போல அளவிடப்படாத வஞ்சகமனத்தை யுடைய, பாழான பெண்களுடைய ஆசைப்பற்று விட்டு நீங்குவது எந்த நாளோ. எ - று.

12. தூயபனித் திங்கள் சுடுவதெனப் பித்தேற்று
மாய மடவார் மயக்கொழிவ தெந்நாளோ.

பொ - ரை. வெண்மையாகிய குளிர்ச்சி பொருந்திய சந்திரன் சுடு கின்றது என்று பித்தேற்றுகிற, மாயத்தையுடைய மாதரது மயக்கத்தை ஒழிவது எந்தநாளோ. எ - று.

13. ஏழைக் குறும்புசெயு மேந்திழையார் மோகமெனும்
பாழைக் கடந்து பயிராவ தெந்நாளோ.

பொ-ரை. ஏழைக்குறும்புபண்ணுகின்ற மாதர்களுடைய மோகம் என் கிறபாழ்நிலத்தைத்தாண்டி, நான் விருத்தியடைவது எந்தநாளோ. எ -று.

14. விண்டு மொழிகுளறி வேட்கைமது மொண்டுதருந்
தொண்டியர்கள்கட்கடையிற்சுற்றொழிவதெந்நாளோ.

பொ - ரை வெளிப்படையாய் மொழிதடுமாறி, ஆசையாகிய கள்ளை மொண்டு தருகின்ற வேசையர்களது கடைக்கண்ணில் அகப்பட்டுச் சுழல் வதைவிட்டு நீங்குவது எந்தநாளோ. எ - று.

15. மெய்யிற் சிவம்பிறக்க மேவுமின்பம் போன்மாதர்
பொய்யிலின்பின் றென்று பொருந்தாநா ளெந்நாளோ.

பொ - ரை. உண்மையிற் சிவமுண்டாக, அதனாலுண்டாகிற இன் பம்போல, மாதருடைய பொய்யினிடத்தில் இன்பம் இல்லையென்று அதைப்பொருந்தாத நாள் எந்தநாளோ. எ - று.

தத்துவ முறைமை.

1. ஐம்பூதத் தாலே யலக்கழிந்த தோஷமற
வெம்பூதி நாதனரு ளெய்துநா ளெந்நாளோ

பொ - ரை. பஞ்சபூதங்களாலாகிய சரீரத்தோடுகூடி அலைந்து வருந்தின தோஷங்கள் நீங்கும்படி, எமது பூதநாதனாகிய சிவபெருமானது அருளையடையும் நாள் எந்தநாளோ. எ - று.

2. சத்தமுத லாம்புலனிற் சஞ்சரித்த கள்வரொணும்
பித்தர் பயந்தீர்ந்து பிழைக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. சத்தம் முதலாகிய விஷயங்களில்சஞ்சரித்தஐம்பொறிக் கள்வர் என்கிற பித்தரது பயந்தீர்ந்து உய்யும் நாள் எந்தநாளோ. எ - று.

3. நாளும் பொறிவழியை நாடாத வண்ணமெமை
யாளும் பொறியா லருள்வருவ தெந்நாளோ.

பொ - ரை. நாள்தோறும் பொறிவழியை நாடாவகையாகத்தடுத்து எங்களை ரக்ஷிக்கிற அறிவினால், திருவருள் உண்டாவது எந்தநாளோ.

4. வாக்காதி யானகன்ம மாயைதம்பால் வீண்காலம்
போக்காம லுண்மை பொருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை. வாக்குமுதலாகிய கன்மேந்திரியத்தாலுண்டாகிய மாயை யினிடத்தில் வீண்காலம் போக்காமல், உண்மையைப் பொருந்தும் நாள் எந்தநாளோ. எ - று.

5. மனமான வானரக்கைம் மாலையா காம
லெனையா ளடிகளடி யெய்துநா ளெந்நாளோ.

பொ - ரை. மனமென்கிற குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை போலாகாமல், என்னை யாள்கின்ற சுவாமிகளுடைய திருவடியை யடையும் நாள் எந்தநாளோ. எ - று

6. வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ.

பொ - ரை. வேட்டையாடுகின்ற ஐம்புலப் புலையர் வந்து பொருந் தாதவண்ணம், மனமாகிய காட்டைத் திருத்திக் கரைகாண்பது எந்த நாளோ. எ - று.

7. உந்துபிறப் பிறப்பை யுற்றுவிடா தெந்தையருள்
வந்து பிறக்க மனமிறப்ப தெந்நாளோ.

பொ - ரை. இருவினைகள் செலுத்துகின்ற பிறப்பிறப்புக்களையடைந் திடாவண்ணம், எமது தந்தையாகிய கடவுளின் அருள்தோன்றும் பொ ருட்டுமனமிறப்பது எந்தநாளோ. எ - று.

8. புத்தியெனுந் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை
யொத்துவிடா தெந்தையரு ளோங்குநா ளெந்நாளோ

பொ - ரை. புத்தியென்கிற படப்பொறிகளையுடைய பாம்பினது வாயிற் பட்ட தவளையை யொத்துவிடாமல், எமது தந்தையாகிய கடவு ளின் அருளானது ஓங்கும் நாள் எந்தநாளோ. எ - று.

9. ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பா
யேங்காம லெந்தையரு ளெய்துநா ளெந்நாளோ.

பொ - ரை. ஆங்காரம் என்கிற மதயானை வாயிற் சிக்கின கரும்பை யொத்து எக்கங்கொள்ளாமல், எமது தந்தையாகிய கடவுளின் அருள் வந்து வாய்க்கும் நாள் எந்நாளோ. எ - று.

10. சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளி னிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. சித்தமென்கிற, பெரிய அலைகளோடு கூடிய கடலில் வீழ்ந்து அலைகின்ற துரும்புபோல நாள்தோறும் அலையாமல், அருளினது நிலையில் நிற்கும் நாள் எந்நாளோ. எ - று.

11. வித்தியா தத்துவங்க ளேழும் வெருண்டோடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநா ளெந்நாளோ.

பொ - ரை. வித்தியாதத்துவங்கள் ஏழும்வெருண்டு ஓடும்படி, சுத்த பரபோகத்தை யநுபவிக்கும் நாள் எந்நாளோ. எ - று.

வித்தியாதத்துவங்கள் தொண்ணூற்றுறுதத்துவங்களுள் அடங்கியிருத்தல் காண்க. சுத்தபரபோகம் - பரிசுத்தமாகிய சிவானுபவம்.

12. சுத்தவித்தை யேமுதலாத் தோன்றுமோ ரைந்துவகைத்
தத்துவத்தை நீங்கியருள் சாருநா ளெந்நாளோ.

பொ-ரை. சுத்தவித்தை முதலாகவுண்டாகிய ஒரு ஐவகைத் தத்துவங்களையுங் கடந்து திருவருளையடையும் நாள் எந்நாளோ. எ - று.

சுத்தவித்தை முதலாகிய ஐவகைத் தத்துவங்களாவனவற்றையும் ஷை தத்துவங்களுட் காண்க.

13. பொல்லாத காமப் புலைத்தொழிலி லென்னறிவு
செல்லாம னன்னெறியிற் சேருநா ளெந்நாளோ.

பொ-ரை. தீமையாகிய காமம் என்கிற நீசத்தொழிலில் என்னறிவு செல்லாதவகை, நன்மார்க்கத்திற் சேரும் நாள் எந்நாளோ. எ - று.

14. அடிகளடிக் கீழ்க்குடியா யாம்வாழா வண்ணங்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூறுழிவ தெந்நாளோ.

பொ - ரை. கடவுள் திருவடிக் கீழ்க்குடியாய் நாம்வாழாதவகை, எம்மைக் குடிகெடுக்குமியல் புள்ள பாழாகிய சோம்பலின் கூறுபாட்டை வீட்டு நீங்குவது எந்நாளோ. எ - று.

15. ஆனபுறக் கருவி யாறுபத்து மற்றுளவும்
போனவழி யுங்கூடப் புன்மூளைப்ப தெந்நாளோ.

பொ - ரை. உண்டாயிருக்கிற புறக்கருவிகளறுபதும் மற்றுள்ளனவும் போனவழியினும் அவைமீளாவகையாகப் புல் அடர்ச்சியாய் மூளைப்பது எந்நாளோ. எ - று.

16. அந்தகனுக் கெங்குமிரு ளானவா ருவறிவில்
வந்தவிருள் வேலை வடியுநா ளெந்நாளோ.

பொ - ரை. குருடனுக்கு எல்லாவிடத்தும் இருளேயாயிருத்தல் போல, என்னறிவினிடத்துண்டாகிய அஞ்ஞானவிருளாகிய கடல் வற்றுவது எந்தநாளோ. எ - று.

17. புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமல நீங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. அற்பமாகிய மலசம்பந்தத்தையடைந்து மலபோதத்தையடைவது நீங்கி, நிர்மலத்தன்மையை யடைந்து, மலசம்பந்தம் அற்றொழிவது எந்தநாளோ. எ - று.

மலபோதம் - மும்மலசம்பந்தமாகிய ஞானம்.

18. கண்டுகண்டுந் தேறுக் கலக்கமெல்லாந் தீர்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. பார்த்துப் பார்த்தும் தெளிவடையாதிருக்கிற மனக்கலக்கமெல்லாம் தீரும்வகை, பழமையாகிய வினைகளின் வேரைப்பறித்தெறிவது எந்தநாளோ. எ - று.

19. பைங்கூழ் வினைதான் படுசாவி யாகவெமக்
கெங்கோன் கிரணவெயி லெய்துநா ளெந்நாளோ.

பொ - ரை. இருவினையாகியபயிர், மிக்க சாவியாக, எங்களுக்கு,எம்மிறைவனது கிரணமாகிய வெயிலானது கிடைக்கும் நாள் எந்தநாளோ.

20. குறித்தவித மாதியாற் கூடும் வினையெல்லாம்
வறுத்தவித்தாம் வண்ணமருள் வந்திடுநா ளெந்நாளோ

பொ - ரை. நினைத்த விதம் முதலியவற்றால் வரும்வினைகள் எல்லாவற்றையும் வறுத்தவித்தாகச்செய்யும் வண்ணம் திருவருளுண்டாகும் நாள் எந்தநாளோ. எ - று.

வறுத்தவித்து முளையாததுபோலவினைகள் விளையாவென்பதுகருத்து.

21. சஞ்சிதமே யாதி சரக்கான மூச்சேறும்
வெந்தபொரி யாகவருண் மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. சஞ்சிதம் முதலாகிய சரக்குகள் என்கிற மூவகைச்சேறும் வெந்தபொரியாகப் போம்படி, திருவருளைப் பொருந்தும் நாள் எந்தநாளோ. எ - று.

சஞ்சிதம் முதலாகிய என்றது சஞ்சித ஆகாமிய பிராரத்தங்களை.

22. தேகமுத லுன்காத் திரண்டொன்றாய் நின்றிலகு
மோகமிகு மாயை முடியுநா ளெந்நாளோ.

பொ - ரை. தேகமுதலாக நால்வகையாய் விரிந்து பிறகு திரண்டு ஏகமாகி நின்று விளங்குகின்ற, மோகம் மிகுகின்ற மாயாவிலாசம் முடிவு பெறுவது எந்தநாளோ. எ - று.

தேகம் முதலாக என்றது தநுகரணபுவநபோகங்களை.

23. சத்த முதலாத் தழைத்திங் கெமக்குணர்த்துஞ்
சுத்தமா மாயை தொடக்கறுவ தெந்நாளோ.

பொ - ரை. சத்தம் முதலாக ஓங்கி, இவ்விடத்தில் எமக்கு அறிவுறுத்துகிறபெரிய சுத்தமாயையின் சம்பந்தம் அற்றொழிவது எந்தநாளோ.எ-று

24. எம்மை வினையை யிறையையெம்பாற் காட்டாத
வம்மை திரோதை யகலுநா ளெந்நாளோ.

பொ - ரை. எம்மையும், வினைகளையும், இறைவனையும் எம்மிடத்துக் காட்டாது மறைக்கின்ற தாயாகிய திரோதாயிசத்தி என்னைவிட்டு நீங்கப் பெறுவது எந்நாளோ. எ - று.

திரோதாயிசத்தி-மறைக்குஞ்சத்தி.

25 நித்திரையாய் வந்து நினைவழிக்குங் கேவலமாஞ்
சத்துருவை வெல்லுஞ் சமர்த்தறிவு தெந்நாளோ.

பொ - ரை. நித்திரையுருவாய் வந்து நினைவைக் கெடுக்கிற, கேவலாவஸ்த்தையாகிய சத்துருவை வெல்லும்படியான சாமர்த்தியத்தை யறிவது எந்நாளோ. எ - று

கேவலாவஸ்த்தை-மறப்பு.

26. சன்னல்பின்ன லான சகலமெனுங் குப்பையிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநா ளெந்நாளோ.

பொ - ரை. சன்னல் பின்னலாகக் கிடக்கிற சகலாவஸ்த்தையாகிய குப்பையில், மூலகாரணனாகிய கடவுள் ஞானக்கினியை மூள்விப்பது எந்தநாளோ. எ - று

27. மாயா விகார மலமொழிசுத் தாவத்தை
தேயா வருளைத் தொடருநா ளெந்நாளோ

பொ - ரை. மாயாவிகார மலத்தையொழிக்கின்ற சுத்தாவஸ்த்தையையடைந்து, அருளைப் பின்பற்றிச் செல்வது எந்தநாளோ. எ - று.

சுத்தாவஸ்த்தையாவன-இருவினையொப்பு மலபரிபாகம் முதலாயின.

தன்னுண்மை.

1. உடம்பறியு மென்னுமந்த வூழலெல்லாந் தீரத்
திடம்பெறவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ

பொ - ரை. உடம்பானது உணரும்என்கிற அந்தரக வேதனைகளெல் லாம் நீங்கும்படி, உறுதியாக எங்களை நாங்கள் தெரிசிப்பது எந்நாளோ.

2. செம்மை யறிவாலறிந்து தேகாதிக் குள்ளிசைந்த
யெம்மைப் புலப்படவே யாமறிவ தெந்நாளோ.

பொ - ரை. செவ்விய அறிவினாலறிந்து, தேகாதிகளுக்குள்ளே பொ ருந்தியிருக்கிற எங்களை வெளிப்படையாய் நாங்கள் அறிவது எந்நாளோ.

3. தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான் சுமந்த
சித்துருவா மெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ.

பொ - ரை. தத்துவமாகிய பாழ்பட்ட சடரூபத்தைத் தாங்கிநிற்கிற சித்துருவாகிய எங்களை நாங்கள் தெரிசிப்பது எந்நாளோ. எ - று.

4. பஞ்சப் பொறியையுயி ரென்னுமந்தப் பஞ்சமறச்
செஞ்செவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ.

பொ - ரை. ஐம்பொறிகளை உயிர்என்கிற அந்தச் சிறுமை நீங்க, செவ் வையாய் எங்களைநாங்கள் தெரிசிப்பது எந்நாளோ. எ - று.

5. அந்தக் கரணமுயி ராமென்ற வந்தரங்க
சிந்தையழிய வெம்மைத் தேர்ந்தறிவ தெந்நாளோ.

பொ - ரை அந்தக்கரணமே உயிர் என்கிற அந்தரங்க சிந்தையானது கெட, எங்களைநாங்கள் தெளிந்தறிவது எந்நாளோ.

6. மூக்குணத்தைச் சீவனென்னு மூடத்தை விட்டருளா
லக்கணமே யெம்மை யறிந்துகொள்வ தெந்நாளோ.

பொ - ரை. மூக்குணத்தையே சீவன் என்கிற மூடத்தனத்தை விட்டு, அருளால், அந்தக்ஷணமே எங்களை நாங்கள் அறிந்துகொள்வது எந்நாளோ. எ - று.

7. காலையுயிரென்னுங் கலதிகள்சொற் கேளாமற்
சீலமூட னெம்மைத் தெளிந்துகொள்வ தெந்நாளோ.

பொ – ரை. காற்றையே சீவனென்கிற மூடேவிகள் சொல்லைக் கே ளாமல், கல்லொழுக்கத்தால் எங்களை நாங்கள் தெளிந்து கொள்வது எந்த நாளோ. எ-று.

8. வான்கெடுத்துத் தேடு மதிகேடர் போலவெமை
நாங்கெடுத்துத் தேடாம னன்கறிவ தெந்நாளோ.

பொ – ரை. ஆகாயத்தை மறைத்துத் தேடும் அறிவீனர்கள் போல, எங்களை நாங்களே கெடுத்துத் தேடாதிருக்கும்படி, நாங்கள் நன்னெறியை யறிவது எந்நாளோ. எ - று.

அருளியல்பு.

1. ஈனந் தருநா டிதுநமக்கு வேண்டாமென்
ரூனந்த நாட்டி லவதரிப்ப தெந்நாளோ.

பொ - ரை. இழிவைக் கொடுக்கின்ற தேசமாகிய இது எங்களுக்கு வேண்டிய தில்லையென்று இகழ்ந்து, ஆநந்தத்தைக் கொடுக்கின்ற திருவருளாகிய நாட்டில், அவதரிப்பது எந்தநாளோ. எ - று.

2. பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளா
மெய்க்காட்சி யாம்புவன மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. பொய்ஞ்ஞானமாகிய புவநத்தை நீங்கி, திருவருளாகிய உண்மையறிவென்கிற புவநத்தைப் பொருந்துவது எந்தநாளோ. எ - று.

புவநம்-உலகம்.

3. ஆதியந்தங் காட்டாம லம்பரம்போ லெங்நிறைந்த
நீதி லருட்கடலைச் சேருநா ளெந்நாளோ.

பொ - ரை. முதலிறுதிகளில்லாமல் ஆகாயம் போல நிறைந்த குற்ற மற்ற அருட்கடலையடையும் நாள் எந்தநாளோ. எ - று.

4. எட்டுத் திசைக்கீழ்மே லெங்கும் பெருகிவரும்
வெட்டவெளிவிண் ணூற்றின்மெய்தோய்வதெந்நாளோ.

பொ - ரை. அஷ்ட திக்குகள், கீழ், மேல், என்கிற எவ்விடத்தும் பெருகிவருகிற வெறு வெளியாகிய ஆகாய கங்கையில் என்சரீரம் படிவது எந்தநாளோ. எ - று.

5. சூதாள மென்று சுருதியெல்லா மோலமிடு
மீதாள மானவெற்பை மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. இரகசியமான இடமென்று வேதங்கள் யாவும் முறையிடுகின்ற, மேலாகிய இடமென்கிற மலையைப் பொருந்தும் நாள் எந்தநாளோ.

6. வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்பகலத் தண்ணருளாய்
வந்துபொழி கின்ற மழைகாண்ப தெந்நாளோ.

பொ - ரை. வெந்து, வெப்பம் பொறுக்காமல் வெடிக்கிற என்மன வெப்பம் தணியும்படி, தண்ணிய அருளருவாய் வந்து சொரிகின்ற மழையைக்காண்பது எந்தநாளோ. எ - று.

வெப்பம் தணிவது மழையிலாதலால் இவ்வாறு கூறினர்.

7. சூரியர்கள் சந்திரர்க டோன்றுச் சுயஞ்சோதிப்
பூரணதே யத்திற் பொருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை. சூரிய சந்திரர்கள் எதிராக வுதிக்காத சுயஞ் சோதியையுடைய பூரணநாட்டில் பொருந்தும் நாள் எந்தநாளோ. எ - று.

8. கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீரவருட்
டென்றல்வந்து வீசுவெளி சேருநா ளெந்நாளோ.

பொ - ரை. புழுங்குகிற மனவெப்பத்தினாலுண்டாகிற கலக்கங்கள் யாவும் நீங்கும்படி, அருளாகிய தென்றற் காற்றுவந்து வீசுகிற வெற்றிடத்தைச் சேரும்நாள் எந்தநாளோ. எ - று.

9. கட்டுநமன் செங்கோல் கடாவடிக்குங் கோலாக
வெட்டவெளிப் பொருளே மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை பாசத்தாற் பிணிக்கிற இயமனது செங்கோல், எருமைக் கடாவோட்டுங் கோலாகும்படி, வெறு வெளியிற் பொருந்தியிருக்கும் வஸ்துவைப்பொருந்தும் நாள் எந்தநாளோ எ - று.

எருமைக்கடா-யமனதுவாகனம். இயமனது செங்கோல் என்மீது செல்லாதென்பது கருத்து.

10. சாலக் கபாடத் தடைதீர வெம்பெருமா
னேலக்க மண்டபத்து ளோடுநா ளெந்நாளோ.

பொ - ரை. மாயாவிலாசக் கதவாகிய தடை நீங்கும்படி, எம்பெருமானது திருவோலக்க மண்டபத்துள்ளே ஓடும் நாள் எந்தநாளோ. எ - று.

11. விண்ணவன்ரு ளென்னும் விரிநிலா மண்டபத்தில்
தண்ணீ ரருந்தித் தளர்வொழிவ தெந்நாளோ.

பொ - ரை. கடவுளின்திருவடி என்கிற விரிந்த நிலாமண்டபத்தில், ஆநந்தமாகிய தண்ணீர்பருகி, பிறவித்தளர்ச்சி நீங்குவது எந்தநாளோ

12. வெய்யபுவி பார்த்து விழித்திருந்த வல்லலறத்
துய்ய வருளிற் றுயிலுநா ளெந்நாளோ.

பொ - ரை. கொடுமையாகிய புவனத்தைப் பார்த்து வீழித்திருந்த துன்பம் நீங்கும்படி பரிசுத்தமாகிய திருவருளினிடத்துத் தூங்குவது எந்தநாளோ. எ - று.

விழித்திருந்த துன்பம் தூங்கினு லொழியுமாதலால் இவ்வாறுகூறினர்.

13. வெய்ய பிறவிவெயில் வெப்பமெலாம் விட்டகல
வையனடி நீழ லணையுநா ளெந்நாளோ.

பொ - ரை கொடிய பிறவிவெயிலின் வெப்பமெல்லாம் விட்டொழியும்படி, இறைவனது திருவடி நிழலையடைவது எந்நாளோ எ - று.

14. வாதைப் பிறவி வலைகடலை நீந்தவையன்
பாதப் புணையிணையைப் பற்றுநா ளெந்நாளோ.

பொ - ரை. வேதனையை உண்டாக்குகின்ற பிறவியாகிய வளைந்த கடலை நீந்தும்படி, இறைவனது திருவடியாகிய மரக்கலத்தைப் பற்றும் நாள் எந்தநாளோ. எ - று.

15. ஈனமில்லா மெய்ப்பொருளே இம்மையிலே காணவெளி
ஞானமெனு மஞ்சனத்தை நான்பெறுவதெந்நாளோ.

பொ - ரை. இழிவற்ற உண்மைப் பொருளே இம்மையிலே பார்க்கும்படி வெளிப்படையாக, அறிவென்னும் அஞ்சனத்தை நான் பெறுவது எந்தநாளோ எ - று.

அஞ்சனம்-புதையல் முதலியவற்றைக் கண்டெடுக்கும்படி கண்ணுக்குப் புலப்படுத்துவ தோர் மை.

16. எல்லா மிறந்தவிடத் தெந்தைநிறை வாம்வடிவைப்
புல்லாமற் புல்லிப் புணருநா ளெந்நாளோ.

பொ - ரை. எல்லாவற்றையுங் கடந்த இடத்தில், எமது தந்தையின் பரிபூர்ணரூபத்தை, பொருந்தாமற் பொருந்தித் தழுவும்நாள் எந்நாளோ.

பொருந்தாமற் பொருந்துதல் - தற்போதத்தாலன்றித் திருவருளே முன்னிட்டுப் பொருந்துதல்.

17. சடத்துளுயிர் போலெமக்குத் தானுயிராய் ஞானம்
நடத்துமுறை கண்டுபணி நாம்விடுவ தெந்நாளோ.

பொ - ரை. உடலில் உயிர்போல் எங்களுக்கு உயிராகி, ஞானத்தை நடத்தும் முறைமையைக்கண்டு, நாங்கள், தொழில்கள் எல்லாவற்றையும் விடுவது எந்தநாளோ. எ - று.

18. எக்கணுமாந் துன்ப விருட்கடலை விட்டருளாம்
மிக்ககரை யேறி வெளிப்படுவ தெந்நாளோ.

பொ - ரை. எவ்விடத்தும் நிறைந்திருக்கிற துன்பமாகிய இருட்கடலை விட்டு, திருவருளாகிய மேலாகிய கரையிலேறி வெளிப்படுவது எந்த நாளோ. எ - று.

பொருளியல்பு.

1. கைவிளக்கின் பின்னேபோய்க்காண்பார்போன்மெய்ஞ்ஞான,
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்பதெந்நாளோ.

பொ - ரை. கைவிளக்கின் பின்னே சென்று வேண்டிய பொருளைக் காண்பவர்போல, உண்மைஞானமாகிய மெய்விளக்கின் பின்னேசென்று உண்மைப் பொருளைக் காண்பது எந்தநாளோ. எ - று.

2. கேடில்பசு பாசமெல்லாங் கீழ்ப்படவுந் தானேமே
லாடுஞ் சுகப்பொருளுக் கன்புறுவ தெந்நாளோ.

பொ - ரை. அழிவற்ற பசு பாசம் என்கிற எல்லாம் கீழ்ப்படவும் மேலே நடிக்கிற ஆநந்தப்பொருளின் பொருட்டு அன்பு பொருந்துவது எந்தநாளோ. எ - று.

3. ஆணவத்தை நீக்கி யறிவூடே ஐவகையாக்
காணவத்தைக் கப்பாலைக் காணுநா ளெந்நாளோ.

பொ - ரை. ஆணவமலத்தை நீக்கி, அறிவினிடத்தே, ஐந்துவகையாகக்காணப்பட்ட பஞ்சாவஸ்த்தைகளுக்கும் அப்பாற்பட்ட பொருளைக் காண்கின்ற நாள் எந்தநாளோ.

பஞ்சாவஸ்த்தைகளாவன - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன.

4. நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப்
போக்குவர வற்ற பொருளினைவ தெந்நாளோ.

பொ - ரை நீக்கவும் நீங்காத, நினைக்கவும் மறக்கவும் கூடாத, போக்குவரவற்ற பொருள்வந்து நம்மிடத்துப்பொருந்துவது எந்தநாளோ.

5. அண்டருக்கு மெய்ப்பில்வைப்பா மாரமுதை யென்னகத்திற்,
கண்டுகொண்டு நின்று களிக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. தேவர்களுக்கும் உற்றிடத்துதவும் பொருளாகிய அரிய அமிர்தத்தை, என்னுள்ளே கண்டுகொண்டு நின்று களிக்கின்ற நாள் எந்தநாளோ. எ - று.

6. காட்டுந் திருவருளே கண்ணுகக் கொண்டுபர
வீட்டின்ப மெய்ப்பொருளே மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. எல்லாப் பொருள்களையும் புலப்படுத்துகின்ற திருவருளே கருவியாகக்கொண்டு மேலாகிய மோக்ஷசுகத்தைக் கொடுக்கின்ற உண்மைப் பொருளையடைவது எந்தநாளோ. எ - று.

7. நானென தன்மை நழுவியே யெவ்வுயிர்க்குந்
தானென உண்மைதனைச் சாருநா ளெந்நாளோ.

பொ - ரை. நான் என்கிற அகங்காரகுணம் நழுவப்பெற்று, எவ்வகைப்பட்ட சீவர்களுக்கும் ஆதாரம் தானேயாயிருக்கிற மெய்ப்பொருளையடையும் நாள் எந்தநாளோ. எ - று.

8. சிந்தை மறந்து திருவருளாய் நிற்பவர்பால்
வந்தபொரு ளெம்மையுந்தான் வாழ்விப்பதெந்நாளோ.

பொ - ரை. நினைப்பொழிந்து திருவருள் மயமாய் நிற்கும் அறிஞரிடத்து வந்தபொருள் எங்களையும் வாழ்விக்கும் நாள் எந்நாளோ. எ-று.

9. எள்ளுக்கு ளெண்ணெயைப்போ லெங்கும்வி யாபகமா
யுள்ளவொன்றை யுள்ளபடி யோருநா ளெந்நாளோ.

பொ - ரை. எள்ளுக்குள்ளே எண்ணெய் வியாபித்திருப்பதுபோல, எவ்விடத்தும் வியாபகமாயுள்ள ஒரு பொருளை உள்ளபடி யறியும் நாள் எந்நாளோ. எ - று.

10. அருவுருவ மெல்லா மகன்ற துவாயான
பொருளெமக்கு வந்து புலப்படுவ தெந்நாளோ.

பொ - ரை அருவம் உருவம் என்கிற எல்லாம் நீங்கி, அது வென்னும் தற்பதப்பொருளானது எமக்குவந்து புலப்படுவது எந்நாளோ.

11. ஆரணமுங் காணு வகண்டிதா காரபரி
பூரணம்வந்தெம்மைப் பொருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை. வேதங்களும் காணக்கூடாத, அகண்டரூபமான பரிபூரணப் பொருள் வந்து எம்மைப்பொருந்துவது எந்நாளோ. எ - று.

12. சத்தொடு சித்தாகித் தயங்கியவா னந்தபரி
சுத்த வகண்டசிவந் தோன்றுநா ளெந்நாளோ.

பொ - ரை. சத்தும் சித்துமாகி விளங்குகின்ற, ஆனந்த மயமான பரிசுத்தத்தன்மை யுள்ள அகண்டசிவம் வெளிப்படும் நாள் எந்நாளோ. எ-று.

13. எங்கெங்கும் பார்த்தாலு மின்புருவாய் நீக்கமின்றித்
தங்குந் தனிப்பொருளைச் சாருநா ளெந்நாளோ.

பொ - ரை. எவ்வெவ்விடங்களிற் பார்த்தாலும் சுகரூபமாகி நீங்குதலில்லாமல் நிலைபெற்றிருக்கிற ஒப்பற்ற பொருளையடையும்நாள் எந்நாளோ.

14. அடிமுடிகாட் டாதசுத்த வப்பர மாஞ் சோதிக்
கடுவெளிவந் தென்னைக் கலக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. முதலிறுதிகளில்லாத சுத்தாகாசமாகிய தேஜோராசியென்கிற கடுவெளிவந்து என்னைப் பொருந்தும் நாள் எந்நாளோ எ-று.

கடுவெளி - வெறுவெளி.

15. ஒன்றனையுங் காட்டா வளத்திருளைச் சூறையிட்டு
நின்றபரஞ் சோதியுட னிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. ஒரு பொருளையுந் தோன்ற வொட்டாமல் மறைக்கின்ற மனத் திருளாகிய அஞ்ஞானத்தைச் சூறையாடி நின்ற பரஞ்சோதியோடு சேர்ந்து நிற்கும் நாள் எந்நாளோ. எ - று.

16. எந்தச் சமய மிசைந்தமறி வூடறிவாய்
வந்தபொரு ளேபொருளா வாஞ்சிப்ப தெந்நாளோ.

பொ - ரை. எந்தெந்தச்சமயங்களோடு இசைந்திருந்தாலும் அறிவுக் கறிவாய்த் தோன்றும் பொருளேயே உறுதிப் பொருளாகத் துணிந்து அதனையடைய இச்சிப்பது எந்தநாளோ. எ - று.

17. எவ்வாறிங் குற்றுணர்ந்தார் யாவரவர் தமக்கே
யவ்வாறாய் நின்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ.

பொ - ரை. இவ்விடத்தில் எவ்வாற்றானும் ஆராய்ந் தறிந்தவர் யாவரோ, அவர்களுக்கே, அவர்கள் விரும்பின வாறுதித் தோன்றிய பொருளின்மேல் அன்புவைப்பது எந்தநாளோ. எ - று.

18. பெண்ணு ணலியெனவும் பேசாம லென்னறிவின்
கண்ணுறவே நின்றவொன்றைக் காணுநாளெந்நாளோ.

பொ - ரை பெண் ஆண் அலி என்று பேசவொண்ணுமல், என்னறி வினிடத்தே நிலைத்திருந்த ஒரு பொருளைக்காணும் நாள் எந்நாளோ. எ-று.

அலி - பேடி.

19. நினைப்பு மறப்புமற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா வென்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ.

பொ-ரை. நினைத்தலும் மறத்தலும் ஒழியவே, அவ்விடத்து நின்ற பரஞ்சோதியை, வெளிப்படையாய் என்னறிவினிடத்துச் சந்திக்கப் பெறுவது எந்தநாளோ.

ஆநந்த வியல்பு.

1. பேச்சுமூச் சில்லாத பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணுமை னிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. பேச்சு மூச்சற்ற பேராநந்த சாகரத்தை யடைந்து, நீச்சுநிலை தோன்றுமல் நிற்கிற நாள் எந்தநாளோ. எ - று.

2. சித்தந் தெளிந்தோர் தெளிவிற் றெளிவான
சுத்த சுகக்கடலுட் டோயுநா ளெந்நாளோ.

பொ - ரை. மனந்தெளிந்தவரது தெளிவினிடத்துத் தெளிந்த பொருளான பரிசுத்த இன்பக்கடலுள்மூழ்கும் நாள் எந்தநாளோ. எ-று.

3. சிற்றின்ப முண்டிழ் சிதையவனந் தங்கடல்போன்
முற்றின்ப வெள்ளமெமை மூடுநா ளெந்நாளோ.

பொ - ரை. சிற்றின்பத்தை யநுபவித்த ஆழ்வினை கெடும்படி, அநேகம் கடல்களைப்போலப் பெருகுகின்ற இன்பக்கடலானது எங்களை மூடிக்கொள்வது எந்தநாளோ. எ - று.

4. எல்லையிற்பே ரின்பமய மெப்படியென் றோர்தமக்குச்
சொல்லறியா வூமர்கள்போற் சொல்லுநாளெந்நாளோ.

பொ - ரை. வரம்பு கடந்த பேரானந்தரூபம் எவ்வாறிருப்பதென்று வினவினோர்க்கு, மறுமொழி சொல்லத்தெரியாத ஊமைகள்போல இங்கிதத்தால் சொல்லும் நாள் எந்தநாளோ. எ - று.

இங்கிதம் - குறிப்பு

5. அண்டரண்ட கோடி யணைத்து முகாந்த வெள்ளம்
கொண்டதெனப் பேரின்பங் கூடுநா ளெந்நாளோ.

பொ - ரை. தேவாண்ட கோடிகளெல்லாம், ஊழிப்பெருக்குக் கவர்ந்தாற்போலப் பேரின்பவெள்ளம் வந்து எம்மை மூடுவது எந்நாளோ. எ - று.

6. ஆதியந்த மில்தாத வாதிய நாதியெனுஞ்
சோதியின்பத் தூடே தூளியுநா ளெந்நாளோ.

பொ - ரை. அடிமுடிகளற்ற ஆதி அநாதியென்னும் விவகாரங்களுக்கிடமாயிருக்கிறசுயஞ்சோதியாகியசுகக்கடலுள்முழுகுவதுஎந்நாளோ.எ-று.

7. சாலோக மாதி சவிக்கியமும் விட்டநம்பான்
மேலான ஞானவின்ப மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. சாலோகம் முதலிய சுகங்களையும்வெறுத்து நீக்கின எம்மிடத்து மேலாகிய ஞான சுகம் பொருந்தும் நாள் எந்நாளோ. எ - று.

சாலோகம் முதலியனவாவன, சாலோகம், சாமீபம், சாரூபம், என்பன.

8. கற்பரத்தி னுள்ளேயுஞ் சாலோக மாதியெனும்
பொற்பறிந்தா னந்தம் பொருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை. தற்பரம்பொருளினுள்ளும் சாலோகம் முதலியவை யுண்டென்னுங் கருத்தையுணர்ந்து சுகமடைவது எந்தநாளோ. எ - று.

9. உள்ளத்தி னுள்ளேதா னூறுஞ் சிவாநந்த
வெள்ளந் தூளந்து விடாய்தீர்வ தெந்நாளோ.

பொ - ரை. மனத்தினுள்ளே சுரக்கின்ற சிவாநந்தக் கடலில்முழுகிப் பிறவி வெப்பத்தாலுண்டாகிய விடாய் நீங்கப்பெறுவது எந்நாளோ. எ-று.

10. கன்னலுடன் முக்கனியுங் கற்கண்டுஞ் சீனியுமாய்
மன்னுமின்ப வாரமுதை வாய்மடுப்ப தெந்நாளோ.

பொ - ரை. கருப்பஞ் சாற்றுடன் முக்கனிகளும் கற்கண்டும் சீனி சர்க்கரையும்போல நிலைபெற்றிருக்கிற ஆனந்தஹேதுவான அரிய அமிர்தத்தை வாய்மடுத்துப் பருகுவது எந்தநாளோ. எ - று.

11. மண்ணுல குழன்ற மயக்கமெல்லாந் தீர்ந்திடவும்
விண்ணுல டெழுந்தசுக மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை. மண்ணுலகத்திற் சுழன்ற மயக்கமெல்லாம் நீங்கும் படி சிதாகாயத்திலுண்டாகிய பேரின்பத்தைப் பொருந்தும் நாள் எந்த நாளோ. எ - று.

12. கானற் சலம் போன்ற கட்டுழலைப் பொய்தீர
வானமுதவாவி மருவுநா ளெந்நாளோ.

பொ - ரை. கானல் நீர்போன்ற உலகப் பொய்நீங்க, மேலாகிய அமிர்த தடாகத்தைப் பொருந்துவது எந்தநாளோ. எ - று.

கட்டு உழலை - பிறவியாகிய கட்டில் அகப்பட்டு உழல்வது, அதாவது உலகம்.

13. தீங்கரும்பென் முலினியா தின்று லினிப்பனபோற்
பாங்குறும்பே ரின்பம் படைக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. இனிய கரும்பென்று சொன்னுல் இனிக்காமல், தின் றுல் இனிக்கும் கரும்புகள்போல, அநுபவத்தில் இனிமையைத் தருகிற பேராநந்தத்தைப் படைக்கும் நாள் எந்தநாளோ. எ - று.

14. புண்ணிய பாவங்கள் பொருந்தாமெய் யன்பரெல்லாம்
நண்ணியபே ரின்பசுகம் நாமணைவ தெந்நாளோ.

பொ - ரை புண்ணிய பாவங்களைப் பொருந்தாத மெய்யடியாரெல்லா ரும் அடைந்தபேராநந்த சௌக்கியத்தை நாம்அடைவதுஎந்நாளோ. எ-று

அன்புநிலைமை.

1. தக்கரவி கண்ட சரோருகம்போ லென்னிதய
மிக்கவருள் கண்டு விகசிப்ப தெந்நாளோ.

பொ - ரை. தனக்கிதமாகிய சூரியனைக்கண்ட தாமரை மலர்வது போல, என் இருதயமானது மேலாகிய திருவருளைக் கண்டு மலர்வது எந்தநாளோ. எ - று.

2. வானமுகில் கண்ட மயூரபக்ஷி போலவையன்
ஞானநடங் கண்டு நடிக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. ஆகாயத்தில் மேகத்தைக் கண்டமயில்கள் நடிப்பது போல, இறைவனது ஞான நடநத்தைக்கண்டு நடிப்பது எந்நாளோ. எ-று.

3. சந்திரனை நாடுஞ் சகோரபக்ஷி போலறிவில்
வந்தபரஞ் சோதியையாம் வாஞ்சிப்ப தெந்நாளோ.

பொ - ரை. சந்திரனையே விரும்புகின்ற சகோரப்பறவைபோல, அறிவினிடத்துத் தோன்றிய பரஞ்சோதியை யாம் விரும்புவது எந்நாளோ.

4. குத்திரமெய்ப் புற்றகத்துக் குண்டலிப்பாம் பொன்றூட்டுஞ்
சித்தனையென் கண்ணுற் றெரிசிப்ப தெந்நாளோ.

பொ - ரை. வஞ்சகம் பொதிந்த சரீரமாகிய புற்றினிடத்துள்ள குண்டலிசக்தியாகிய பாம் பொன்றினையாட்டுகின்ற சித்தனை, என்கண்களாற் சேவிப்பது எந்நாளோ. எ - று

குண்டலி சத்தி இன்னதென்பதை 85 ஆம் பக்கத்திற்காண்க.

5. அந்தரத்தே நின்றூடு மானந்தக் கூத்தனுக்கென்
சிந்தைதிறை கொடுத்துச் சேவிப்ப தெந்நாளோ.

பொ - ரை. சிதாகாயத்தின கண்ணே நின்று நடிக்கிற ஆநந்தக் கூத்தனுக்கு, என் மனத்தைத் திறையாகக் கொடுத்துச் சேவித்து நிற்பது எந்நாளோ. எ - று.

6. கள்ளனிவ னென்றுமெள்ளக் கைவிடுதல் காரியமோ
வள்ளலே யென்று வருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை இவன் கள்வனென்று மெதுவாகக் கைவிடுதல் உன்காரியமாமோ, உதாசீலனே யென்று வருந்தும் நாள் எந்நாளோ. எ - று.

7. விண்ணோடர் காணு விமலா பரஞ்சோதி
யண்ணுவா வாவென் றரற்றுநா ளெந்நாளோ.

பொ - ரை. தேவர்களும் காணக் கூடாத விமலனே, பரஞ்சோதியே ஐயனே, வாக்கடவை வாக்கடவை யென்று இரையும் நாள் எந்நாளோ.

8. ஏதேது செய்தாலு மென்பணிபோய் நின்பணியா
மாதேவா வென்று வருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை எந்தெந்தத் தொழிலைச் செய்தாலும், என்தொழில் போய் உன்தொழிலாயே முடிகின்றது, ஆதலால், மஹாதேவா, என்னிடத்திற்கு எழுந்தருள்வாயென்று வருந்தும் நாள் எந்நாளோ. எ - று

9. பண்டுங்கா ணேனென் பழம்பொருளே யின்றுமுனைக்
கண்டுங்கா ணேனெனவுங் கைகுவிப்ப தெந்நாளோ.

பொ - ரை. அநாதிவஸ்துவே, உன்னை நான் முன்னுங்கண்டிலேன், இன்றும் கண்டிலேன், என்று சொல்லியும் கைகூப்புவது எந்நாளோ.எ-று.

10. பொங்கேத மான புழுக்கமெல்லாந் தீரவின்ப
மெங்கே யெங்கேயென் றிரங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. அதிகரித்த குற்றங்களாலுண்டாகிய மனவருத்தமெல்லாம் நீங்கும்படி, சுகம் எங்கே எங்கே யென்று இரங்கும் நாள் எந்நாளோ

11. கடலின்மடை கண்டதுபோற் கண்ணீரா ருக
உடல்வெதும்பி மூர்ச்சித் தருகுநா ளெந்நாளோ.

பொ - ரை. கடலில் மடைதிறந்தாற்போல, கண்ணீர் ஆறுபோலப் பெருக, சரீரம் வெதும்பி மூர்ச்சித்து, மனம் உருகுகின்ற நாள் எந்நாளோ.

12. புலர்ந்தேன் முகஞ்சருகாய்ப் போனேனிற் காண
வலந்தேனென் றேங்கி யழுங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. முகம்வாடினேன், உடல் சருகாயுலர்ந்தேன், உன்னை சேவிக்கும் பொருட்டி அலமந்தேன் என்று சொல்லி, இரங்கிவருந்தும் நாள் எந்தநாளோ. எ - று.

13. புண்ணீர்மை யாளர் புலம்புமா போற்புலம்பிக்
கண்ணீருங் கம்பலையுங் காட்டுநா ளெந்நாளோ.

பொ - ரை தொழுநோயாளர் புலம்புவது போலப் புலம்பி, கண்ணீரையும் துயரத்தையும் காட்டும் நாள் எந்தநாளோ. எ - று.

தொழுநோய் - குட்டநோய்

14. போற்றேனென் றுனுமென்னைப் புந்திசெய்யும்வே தனைக்கிங்
காற்றேனுற் றேனென் றரற்றுநா ளெந்நாளோ.

பொ - ரை உன்னை வணங்கேனுயினும், என்னை என் புத்தி செய்யும் வருத்தத்துக்கு, இவ்விடத்தில், சகியேன் சகியேன் என்று அரற்றும் நாள் எந்தநாளோ. எ - று.

15. பொய்மூடங்கும் பூமிசில பொட்டலறப் பூங்கமலன்
கைமூடங்க நான்சநந்தக் கட்டழிவ தெந்நாளோ.

பொ - ரை. பொய்தங்கிய உலகம் பொட்டலா யொழியவும், பிரமனது கையானது வேலைபற்று முடங்கிக் கிடக்கவும், நான் பிறவிப் பிணிப்பு அறப் பெறுவது எந்தநாளோ. எ - று.

பொட்டல் - வெற்றிடம்.

16. கற்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாம
னற்குணத்தார் கைகோத்து நான்றிரிவ தெந்நாளோ.

பொ - ரை. கல்லையொத்தவன்மையை யுடைய வஞ்சனைக் காரர்களுடைய கையைக் கோவாமல், நற்குணத்தாரது கையைக் கோத்துக் கொண்டு நான் திரிவது எந்தநாளோ. எ - று.

17. துட்டனைமா மாயைச் சுழனீக்கி யந்தரமே
விட்டனையோ வென்று வியக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. துஷ்டனுகிய என்னை, பெரியமாயையாகிய சுழலில் நின்று நீக்கி, சிதாகாயத்தினிடையே விட்டாயோ வென்று, உன்னைத் துதிக்கும் நாள் எந்தநாளோ. எ - று.

அன்பர்நேறி.

1. அத்துவா வெல்லா மடங்கச்சோ தித்தபடிச்
சித்துருவாய் நின்றூர் தெளிவறிவ தெந்நாளோ.

பொ-ரை. அத்துவாக்களே யெல்லாம் முழுதும் சோதித்தவண்ணம் சித்துருவாகிநின்றஅறிஞரது தெளிந்த நிலையைநாணுணர்வது எந்தநாளோ.

அத்துவாவெல்லாம் என்றது ஆறு அத்துவாக்களே. அவை மந்திரம், பதம், அக்கரம், புவநம், தத்துவம், கலை என்பன.

2. மூச்சற்றுச் சிந்தை மூயற்சியற்று மூதறிவாய்ப்,
பேச்சற்றூர் பெற்றவொன்றைப் பெற்றிடுநா ளெந்நாளோ.

பொ - ரை மூச்சற்று, மனத்தின் முயற்சியற்று, பேரறிவுடையராகி, பேச்சற்ற அறிஞர் பெற்ற ஒப்பற்றமுத்தியை நான் பெற்றிடும் நாள் எந்தநாளோ. எ - று.

3. கோட்டாலை யான குணமிறந்த நிர்க்குணத்தோர்
தேட்டாலே தேடுபொருள் சேருநா ளெந்நாளோ.

பொ - ரை. தன்பத்துக் கேதுவான குணமற்ற நிர்க்குணத்தினர் தேடவேண்டு மென்னும் விருப்பத்தால் தேடும் பொருள் நமக்குக் கிடைப்பது எந்தநாளோ. எ - று.

4. கெடுத்தே பசுத்துவத்தைக் கேடிலா வானந்த
மடுத்தோரடுத்தபொருட்கார்வம்வைப்பதெந்நாளோ.

பொ - ரை. பசுத் தன்மையை யழித்து, அழிவில்லாத ஆனந்தத்தை யடுத்தவர்கள் அடைந்த பொருளையடைதற் பொருட்டு, அதனிடத்தில் நான் விருப்பம் வைப்பது எந்தநாளோ. எ - று.

பசு - சீவன்.

5. கற்கண்டா லோடுகின்ற காக்கைபோற் பொய்ம்மாயச்
சொற்கண்டாலோடுமன்பர்தோய்வறிவதெந்நாளோ.

பொ - ரை. கல்லைக்கண்டால் ஓடுகிறகாகம்போல, பொய்யாகிய மாயச் சொல்லைக்கண்டால் ஓடுகின்ற உன்அன்பரது கூட்டரவின் நலத்தை நானறிந்து கொள்வது எந்தநாளோ. எ - று.

கூட்டரவு - சம்பந்தம்.

6. மெய்த்தகுலங் கல்விபுனை வேடமெல்லா மோடவிட்ட
சித்தரொன்றுஞ் சேராச் செயலறிவ தெந்நாளோ.

பொ - ரை. உண்மையாகிய குலம், கல்வி, அலங்கரிக்கப்பட்டவேடம், இவை யெல்லாம் நீக்கின மனத்தை யுடையோர், ஒன்றிலும் தோயாதிருக்குஞ் செயலை நாணுணர்ந்து கொள்வது எந்தநாளோ. எ - று,

7. குற்றச் சமயக் குறும்படர்ந்து தற்போத
மற்றவர்கட் கற்றபொருட் கன்புவைப்பதெந்நாளோ.

பொ - ரை. குற்றத்தை யுண்டாக்குகிற சமயக் கெடுதிகளைக் கெடுத்து, தற்போத மற்றவர்களுக் கென்று அறுதியிடப் பட்ட பொருளின் மேல் யாம் அன்புவைப்பது எந்தநாளோ. எ - று

தற்போதம் சீவ அறிவு.

8. தர்க்கமிட்டுப் பாழாஞ் சமயக்கு தர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ.

பொ-ரை. தர்க்கம பேசிப்பாழாகிற சமயக் குதர்க்கங்களையொழிந்து நிற்போர் கண்டமார்க்கத்தின் சேர்மையை யாம் அடைவது எந்தநாளோ.

9. வீறியவே தாந்தமுதன் மிக்கக லாந்தவரை
யாறுமுணர்ந்தோருணர்வுக்கன்புவைப்பதெந்நாளோ.

பொ - ரை. மேலாகிய வேதாந்தம்முதல் மிகுந்தகலாந்தம் வரைக்கு மாகவுள்ள ஆறு அந்தங்களையு முணர்ந்தோர்களுடைய உணர்ச்சியின் பொருட்டு யாம் அன்புவைப்பது எந்தநாளோ எ - று

வேதாந்த முதலிய ஆறும் 12 - ஆம் பக்கத்தில் காண்க.

10. கண்டவிட மெல்லாங் கடவுண்மய மென்றறிந்து,
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சிற் கொண்டிருப்பதெந்நாளோ.

பொ - ரை. பார்த்த விடமெல்லாம் பரமனுருவமே யென்றுணர்ந்து கொண்ட மனத்தினை யுடையவரது நேசத்தை என்மனத்திற் கொண்டிருப்பது எந்தநாளோ. எ - று.

11. பாக்கியங்க ளெல்லாம் பழுத்து மனம்பழுத்தோர்
நோக்குந் திருக்கூ ட்டை நோக்குநா ளெந்நாளோ.

பொ - ரை. எல்லாப் பாக்கியங்களும் பெற்று மனமடக்கினவர்கள் நோக்குகின்ற திருக்கூட்டத்தை நான் நோக்குகின்ற நாள் எந்தநாளோ. எ-று.

12. எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

பொ - ரை. எந்தவுயிர்களும் தன்னுயிர்போல நினைக்கின்ற தபோதனர்களது செவ்வியவுணர்ச்சியை விரும்பி, அதன்பொருட்டு நான் விருப்பம் வைப்பது எந்தநாளோ. எ - று.

* அறிஞருரை.

1. இருநிலனுய்த் தீயாகி யென்ற திருப்பாட்டின்
பெருநிலையைக் கண்டணைந்துபேச்சறுவதெந்நாளோ.

போ - ரை. "இருநிலனுய்த்தீயாகி" என்று சொன்ன திருப்பாட்டினது பெரிய நிலையைக்கண்டு, அதனிடத்துப் பொருந்தி, நான் பேச்சற்று நிற்பது எந்தநாளோ. எ - று.

2. அற்றவர்கட் கற்றசிவ னுமென்ற வத்துவித
முற்றுமொழி கண்டருளின் மூழ்குநா ளெந்நாளோ.

போ - ரை. "அற்றவர் கட்கற்ற சிவனும்" என்று சொன்ன அத்துவித முழுச்சொல்லைக்கண்டு, நான் அருட்கடலில் மூழ்குநாள் எந்தநாளோ.

3. தானென்னை முன்படைத்தா னென்ற தகவுரையை
நானென்னு வுண்மைபெற்று நாமுணர்வதெந்நாளோ.

போ - ரை. "தானென்னை முன்படைத்தான்" என்று சொன்ன தகுதியான சொல்லின் பொருளை, நான் என்று அகங்காரித்துப் பேசாத வுண்மை நிலையைப் பெற்று யாம் அறிவது எந்தநாளோ. எ - று.

4. னன்னுடைய தோழனுமா யென்றதிருப் பாட்டி
னன்னெறியைக் கண்டுரிமைநாஞ்செய்வதெந்நாளோ.

போ - ரை "என்னுடைய தோழனுமாய்" என்று சொன்ன திருப்பாடலின் நன்மார்க கத்தைக்கண்டு, நாம் அதனிடத்துரிமை பாராட்டுவது எந்தநாளோ. எ - று.

5. ஆருடனே சேருமறி வென்ற வவ்வுரையைத்
தேருமம்படிக் கருடான் சேருநா ளெந்நாளோ.

போ - ரை. "ஆருடனே சேருமறிவு" என்று சொல்லிய அசைசொற் பொருளைத் தெளியும்படிக்கு, திருவருள் என்னைச் சேர்வது எந்தநாளோ.

6. உன்னிலுன்னு மென்ற வுறுமொழியா லென்னிதயந்
தன்னிலுன்னி நன்னெறியைச் சாருநா ளெந்நாளோ.

போ - ரை. "உன்னிலுன்னும்" என்று சொல்லிய மேலாகிய மொழியினால், என்னிருதயத்தில் நினைத்து நன்மார்க்கத்தை யடையும் நாள் எந்தநாளோ. எ - று.

7. நினைப்பறவே தானினைந்தே னென்ற நிலைநாடி
யனைத்துமா மப்பொருளி லாழுநா ளெந்நாளோ.

---

* இந்தப்பதினொன்கு கண்ணிகளிலும் ஆசிரியர் எடுத்துக் காட்டிய மோற்கோள்களை, உரையுடன், இப்புத்தகமுடிவில் சேர்த்துவெளியிடுவோம்.

பொ - ரை "நினைப்பறவேதானினைந்தேன்" என்று சொல்லிய நிலையை நாடி எல்லாப்பொருளுந் தானேயாய்நின்ற அத்தப்பொருளினிடத்து நான் அழுந்தும் நாள் எந்தநாளோ. எ - று.

8. சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுகி
நின்றுவிடு மென்றநெறி நிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. "சென்று சென்றேயணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றுகி நின்று விடும்" என்று சொல்லிய மார்க்கத்தில் யான்நிற்கும் நாள் எந்தநாளோ. எ - று.

9. ஆதியந்த மில்லா வரியபரஞ் சோதியென்ற
நீதிமொழி கண்டதுவாய் நிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. "ஆதியந்த மில்லா" அரிபரஞ்சோதி, என்றுசொல்லிய நீதிமொழிகண்டு, அப்பொருளாகவே நான்நிற்கும் நாள் எந்தநாளோ.

10. பிறிதொன்றி லாசையின்றிப் பெற்றிருந் தேனென்ற
நெறியுடையான் சொல்லினிலே நிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. "பிறிதொன்றி லாசையின்றிப் பெற்றிருந்தேன்"என்று சொன்ன நெறியுண்டய வண்ணது சொல்லில், நான் நிலைநிற்கும் நாள் எந்தநாளோ. எ - று.

11. திரையற்ற நீர்போற் றெளிய வெனத்தேர்ந்த
உரைபற்றி யுற்றங் கொடுங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. "திரையற்ற நீர்போற்றெளிய"என்று சொல்லித் தெளிவித்த சொல்லைப்பற்றிப் பொருந்தி, அதனிடத்து நான் ஒடுங்கும் நாள் எந்தநாளோ. எ - று.

12. அறியா வறிவி லவிழ்ந்தேற வென்ற
நெறியாமுறையுணர்ந்து நிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. "அறியாவறிவிலவிழ்ந்தேற" என்று சொல்லிய நல்ல நெறிக்கேதுவாகிய சொற்பொருளையறிந்து நான்நிற்கும் நாள் எந்தநாளோ

13. எனக்குணீ யென்று மியற்கையாப் பின்னு
முனக்குளே னென்ற வுறுதிகொள்வ தெந்நாளோ.

பொ - ரை. "எனக்குணீயென்று மியற்கையாப் பின்னு முனக்குளேன்" என்றுசொன்ன உறுதிமொழியையான்மனங்கொள்வதுஎந்தநாளோ.

14. அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன வுண்மையினையோருநாளெந்நாளோ.

பொ - ரை. "அறிவை யறிவதுவே யாகும் பொருள்" என்று உறுதியாய்ச் சொன்ன வுண்மை நிலையை யாராய்ந்தறிவது எந்தநாளோ. எ - று.

நிற்குநிலை.

1. பண்ணினிசை போலப் பரமன்பா னின்றதிற
மெண்ணியரு ளாகி யிருக்குநா ளெந்நாளோ.

போ - ரை. பண்ணுடனே கூடிய இசைபோல், வேறுபாடில்லாமல் இறைவனிடத்துக் கலந்திருக்குந் திறத்தை யாலோசித்து, நான் அருள்வடி வாகியிருக்கும் நாள் எந்தநாளோ. எ - று.

2. அறிவோ டறியாமை யற்றறிவி னூடே
குறியி லறிவுவந்து கூடுநா ளெந்நாளோ.

போ - ரை நினைப்பு மறப்புக்களற்ற பரஞானத்தினிடத்துக் குறி யாக, என் அறிவு வந்து சேரும் நாள் எந்தநாளோ. எ - று.

3 சொல்லான் மனத்தாற் றொடராச் சம்பூரணத்தி
னில்லா நிலையாய் நிலைநிற்ப தெந்நாளோ.

போ - ரை. சொல்லினலும் மனத்தினலும் தொடர வொண்ணாத பரிபூரண நிலையில், நில்லா நிலையாய், நான் நிலைநிற்பது எந்தநாளோ. எ-று.

நில்லாநிலையாய் நிலைநிற்பதாவது - தற்போதத்தை முன்னிடாது திரு வருளே முன்னிட்டு நிற்றல்.

4. செங்கதிரின் முன்மதியந் தேசடங்கி நின்றிடல்போ
லங்கணனார் தாளி லடங்குநா ளெந்நாளோ.

போ - ரை. சூரியனுக்கு முன்னே சந்திரன் ஒளிமழுங்கி நின்றிடல் போல, இறைவனது திருவடி நிழலில்நான் அடங்கிநிற்பது எந்தநாளோ.

5. வானூ டடங்கும் வளிபோல வின்புருவாங்
கோனூ டடங்குங் குறிப்பறிவ தெந்நாளோ.

போ - ரை. ஆகாயத்தில் அடங்குகின்ற காற்றைப்போல, சுகரூபமா கிய இறைவனிடத்தில் நான் அடங்கும்படியான குறிப்பை யுணர்வது எந்தநாளோ. எ - று.

ஆகாயமும் காற்றும் அபேதமாயிருத்தல்போல இறைவனும் நானும் அபேதமாயிருக்கவேண்டும் என்பதாம்.

6 செப்பரிய தண்கருணைச் சிற்சுகனார் பூரணத்தி
லப்பினிடை யுப்பா யணையுநா ளெந்நாளோ.

போ - ரை. சொல்லுதற் கரிய தண்ணியகருணையோடு கூடிய ஞான னந்தத்தையுடைய இறைவனது பரிபூரணநிலையில், நீரிற்கலந்த உப்புப் போல நான் கலப்பது எந்தநாளோ. எ - று.

இறைவற்கு ஞாநாந்தங்களில்பாதலால் இவ்வாறு கூறினர். அப்பி னிடையுப்பாய் என்றார் மேற்பாட்டிற்போல அபேதத்தை யுணர்த்தற்கு.

7. தூயவறி வான சுகரூப சோதிதன்பாற்
நீயினிரும் பென்னத் திகழுநா ளெந்நாளோ.

பொ - ரை. பரிசுத்த அறிவாகிய ஆநந்தரூபத்தையுடைய தேஜசி னிடத்தில், கெருப்பில் இரும்புகலந்தாற்போல நான் கலந்து விளங்கு வது எந்தநாளோ. எ - று.

8. தீதணையாக் கர்ப்பூர தீபமென நானகண்ட
சோதியுட னென்றித் துரிசறுவ தெந்நாளோ.

பொ - ரை. கெடுதியணுகாத கர்ப்பூரமும் தீபமும்போல, நான் அகண் டவொளியோடுபொருந்தி, குற்றத்தினின்று நீங்குவது எந்தநாளோ. எ-று.

தீதணையாமை - காற்று முதலிய வற்றாற் சலியாமை.

9. ஆராருங் காணுத வற்புதனர் பொற்படிக்கீழ்
நீரார் நிழல்போ னிலாவுநா ளெந்நாளோ.

பொ - ரை. எவ்வெவரும் காணவொண்ணுத அற்புதமூர்த்தியின் திருவடியின் கீழ், நற்குணமமைந்த நிழல்போல நான் நிலைபெறுவது எந்த நாளோ எ - று.

அற்புதம் - ஆச்சரியசரம்.

10. எட்டத் தொலையாத வெந்தைபிரான் சந்நிதியில்
பட்டப் பகல்விளக்காய்ப் பண்புறுவ தெந்நாளோ.

பொ - ரை. கலியாணகுணங்கள் மனத்தினால் எட்டமுடியாத எந் தை பெருமானது சந்நிதியில், பட்டப்பகலி லேறறிய தீபம்போல நான் விளங்குவது எந்தநாளோ. எ - று.

பட்டப்பகல் விளக்கு - ஒளிமழுங்கி நிற்றல்போல, இறைவன் சந்நிதி யில் நான் ஒளிமழுங்கி நிற்க வேண்டுமென்பதாம்.

11. கருப்புவட்டா வாய்மடுத்துக் கண்டார்நாப் போல
விருப்புவட்டா வின்புருவை மேவுநா ளெந்நாளோ.

பொ - ரை கருப்பு வெல்லத்தை வாயிலூலுண்டு அதன் சுவையைக் கண்டாரது நாவுவப்பால, விருப்புமாறுத சுகரூபத்தை நான் பொருதும் நாள் எந்தநாளோ. எ - று.

12. துச்சப் புலனற் சுழலாமற் றண்ணருளா
லுச்சிக் கதிர்ப்படிக மொவ்வுநா ளெந்நாளோ.

பொ - ரை. அற்பமாயிய விஷய விருப்பத்தாற் சுழலாமல், தண் ணியதிருவருளால், உச்சிக் காலத்துச் சூரியனுக் கெதிரிலிட்ட படிகத்தை நான் ஒத்திருக்கும் நாள் எந்தநாளோ. எ - று.

உச்சிக்கதிர்ப் படிகம் கெருப்பைக்கக்கி அடுத்தபொருள்களைத் தீப்பது போல, சப்தாதி விஷயங்களை நான் தீர்க்கவேண்டுமென்பதாம்.

13. இம்மா நிலத்தி லிருந்தபடி யேயிருந்து
சும்மா வருளைத் தொடருநா ளெந்நாளோ.

பொ - ரை. நான் இவ்வுலகத்தில், இருந்தபடியேயிருந்து, சும்மா திருவருளைத் தொடரும் நாள் எந்நாளோ. எ - று.

இருந்தபடியே யிருத்தலாவது - முயற்சியற்றிருத்தல்.

14. தானவனுந் தன்மையெய்தித் தண்டமென வண்டமெங்கும்
ஞானமத யானை நடத்துநா ளெந்நாளோ.

பொ - ரை. தான் அவனுகிய தன்மையையடைந்து, உலகமெல்லாம் செல்வழியாகக் கொண்டு, ஞானமாகிய மதயானையை நான்நடத்தும நாள் எந்நாளோ. எ - று.

தண்டம் - யானைசெல்வழி.

15. ஒன்றிரண்டு மில்லதுவா யொன்றிரண்டு மூள்ளதுவாய்
நின்ற சமத்தினிலை நேர்பெறுவ தெந்நாளோ.

பொ - ரை. ஒன்றிரண்டென்பன இல்லாததாகி, ஒன்றிரண்டென் பனவுள்ளதாகி, நின்றசமநிலையை நான் சேரயடைவது எந்நாளோ எ-று

16. பாசமக லாமற் பதியிற் கலவாமன்
மாசில் சமத்துமுத்தி வாய்க்குநா ளெந்நாளோ.

பொ - ரை. பாசம் நீங்கமலும் பதியோடு கலக்காமலும் இருக்கிற எனக்கு, குற்றமில்லாத சமநிலையிலுண்டாவதாகிய முத்திகிடைக்கும நாள் எந்நாளோ. எ - று.

சமநிலை யாவது - இருவினையொப்பு. பாசம் - பசுபதிகளின் ஒற்றுமை கெட அவற்றினிடை நிறகும் தடை.

17. சிற்றறிவு மெள்ளச் சிதைந்தெம்மான் பேரறிவை
யுற்றறியா வண்ணமறிந் தோங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. சிற்றுணர்வு மெதுவாக அழியப்பெற்று எம்பிறைவனது பேரறவைப் பொருந்தி, அறியாத வகையாயறிந்து நான் விருத்தியடை யும் நாள் எந்நாளோ. எ - று

18. தந்திரத்தை மந்திரத்தைச் சாரினவை யாமறிவென்
றெந்தையுணர் வேவடிவா வெய்துநா ளெந்நாளோ.

பொ - ரை. தந்திரத்தையும் மந்திரத்தையும் சார்ந்தால் அறிவுக்குக் குற்ற மூண்டாகும் என்று, எமது தந்தையாகிய கடவுளின் அறிவே என் உருவாக நான் பொருந்தும் நாள் எந்நாளோ. எ - று.

19. போக்குவர வற்றவெளி போனிறைந்த போதநிலை
நீக்கமறக் கூடி நினைப்பறுவ தெந்நாளோ.

பொ – ரை. போக்கு வரவில்லாத ஆகாயம் போல நிறைந்த ஞான நிலையை நீங்குதலில்லாமல சேர்ந்து நான் நினைப்பு அற்றொழிவது எந்த நாளோ. எ – று.

20. காண்பானுங் காட்டுவதுங் காட்சியுமாய் நின்றவந்த
வீண்பாவம் போயதுவாய் மேவுநா ளெந்நாளோ.

பொ – ரை. காண்பவனும், காட்டப்படுபொருளும், காட்சியும் ஆகி நின்ற அந்த வீணுகிய நினைப்பு நீங்கி, அதுவாகவே பொருந்தும் நாள் எந்தநாளோ. எ – று.

அது – தற்பதப் பொருளாகிய பரம்.

21. வாடாதே நானுவாய் மாயாதே யெங்கோவை
நாடாதே நாடி நலம்பெறுவ தெந்நாளோ.

பொ – ரை. வாடாமலும், நானுவிதமாய்க் கெடாமலும், எம்மிறை வனை நாடாமல் நாடி, நான் நன்மையைப் பெறுவது எந்தநாளோ. எ – று.

22. ஆடலையே காட்டியென தாடலொழித் தாண்டான்பொற்
றாடலைமேற் சூடித் தழைக்குநா ளெந்நாளோ.

பொ – ரை. தனது நடநத்தைக் காட்டி எனது ஆடலையொழித்து ஆண்டருளிய இறைவனது திருவடியை எனது சிரசின்மேல் தரித்து நான் ஓங்கும் நாள் எந்தநாளோ. எ – று.

ஆடலிரண்டனுள் பின்னது மனோலயநம்.

23. மேலொடுகீ ழில்லாத வித்தகனுர் தம்முடனே
பாலொடுநீர் போற்கலந்து பண்புறுவ தெந்நாளோ.

பொ – ரை. மேலுங் கீழுமில்லாத ஞான சொரூபனோடு, பாலுடன் சேர்ந்த நீர்போலக் கலந்து நான் உயர் குணத்தை யடைவது எந்தநாளோ.

பண்பு – ஆநந்தகுணம்.

24. அறியா தறிந்தமையா லண்ணலேநா மாகக்
குறியாத வண்ணங் குறிக்குநா ளெந்நாளோ.

பொ – ரை. எம்மையாண்டருளிய பெரியோனை அறியாமலறிந்து நாமாக நினையாத வண்ணம் நினைக்கும் நாள் எந்தநாளோ. எ – று

25. ஓராமன் மந்திரமு மூன்று மனம்பரனைப்
பாராமற் பார்த்துப் பழகுநா ளெந்நாளோ.

பொ – ரை ஆராயாமலும், மந்திரத்தை நினையாமலும் நம்மிறை வனைப்பாராமற் பார்த்து நாம் அவனோடு பழகும் நாள் எந்தநாளோ. எ–று

26. ஊன்பற்று மென்னே டுறவுபற்றும் பூரணன்பால்
வான்பற்றுங் கண்போன் மருவுநா ளெந்நாளோ.

பொ - ரை. உடம்பையே உறுதிப்பொருளாகப் பற்றுகிற என்னுடன் உறவாடுகின்ற பூர்ணனிடத்து, ஆகாயத்தைப்பற்றுகிற கண்போல நான் பொருந்தும் நாள் எந்தநாளோ. எ - று

27. ஆண்டான் மௌனி யளித்த வறிவா லறிவைத்
தூண்டாமற் றூண்டித் துலங்குநா ளெந்நாளோ.

பொ - ரை ஆண்டவனுகிய மௌனிகொடுத்தருளிய அறிவாகிய தூண்டுகோலால் என்னறிவாகிய தீபத்தைத் தூண்டாமல் தூண்டிநான் விளங்கும் நாள் எந்தநாளோ. எ - று.

28. ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ.

பொ - ரை நான் ஆணவத்துடன் இரண்டறக்கலந்தாற்போல மெய்ஞ்ஞானத்தையுடைய இறைவனுடன் இரண்டறக்கலக்கும் நாள் எந்தநாளோ. எ - று.

அத்துவிதம் - அபேதம்.

நிலையிற்நீதோர் கூடுதற்குபாயம்.

1. கன்மநெறி தப்பிற் கடுநரகென் றெந்நாளும்
நன்மைதரு ஞானநெறி நானணைவ தெந்நாளோ.

பொ - ரை. செய்கருமங்கள் வழிதவறினால், தவறினவர்களுக்குக் கடுமையான நரகங்களுளவாமென்று நினைத்து, எக்காலமும் நலத்தையே செய்கிற ஞானமார்க்கத்தை நான் அடைவது எந்தநாளோ. எ - று.

2. ஞானநெறி தானே நழுவிடினு மூப்பதத்து
ளானமுத்தி நல்குமென வன்புறுவ தெந்நாளோ.

பொ - ரை. ஞானமார்க்க மொன்றுமே நழுவிவிட்டாலும், மற்ற மூன்று பாதங்களால் சீவர்களுக்கிதமாகிய முத்தி கிடைக்குமென்று, அவற்றில் அன்பு மிகுவது எந்தநாளோ. எ - று.

மூப்பதம் - சரியை கிரியை யோகங்கள். இவை யுண்டாயிருப்பின், ஞானமும் சோபானக்கிரமமாய்க் கைகூடுமென்பதாம். சோபானம்-படி.

3. பன்மார்க்க மான பலவடிபட் டேனுமொரு
சொன்மார்க்கங் கண்டு துலங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. பலவழிகளாகிய பல அடிபட்டவனுகிய நானும், ஒரு சொல்வழியைக் கண்டு விளங்கும் நாள் எந்தநாளோ. எ - று.

ஒரு சொன்மார்க்கம் - ஒருமொழியால் உண்டாகும் நன்னெறி. அதாவது ஞானநெறி.

4. அத்துவித மென்ற அன்னியச்சொற் கண்டுணர்ந்து
சுத்தசி வத்தைத் தொடருநா ளெந்நாளோ.

பொ - ரை. அத்து வித மென்கிற வேறுசொல்லைக் கண்டறிந்து, சுத்த சிவத்தைப் பற்றும் நாள் எந்தநாளோ. எ - று.

இதுவரையில் துவிதநெறியி லிருந்தேனென்பது கருத்து. சுத்தசிவம்-பரிசுத்தமாகிய பரம்பொருள்.

5. கேட்டன்முத னான்காலே கேடிலா நாற்பதமும்
வாட்ட மற்றவெனக்கு வாய்க்குநா ளெந்நாளோ.

பொ - ரை. கேட்டல் முதலாகிய நான்கினையும், கெடுதியில்லாத நான்கு பதங்களும் துன்பமற எனக்குக் கிடைக்கும் நாள் எந்தநாளோ.

கேட்டல்-முதல்நான்காவன. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், சுவானுபவம் என்பன.

6. என்னதியா னென்பதற வெவ்விடமு மெண்ணுசான்
சன்னிதியாக் கண்டுநிட்டை சாதிப்ப தெந்நாளோ.

பொ - ரை. எனது யான்என்பது அற்றொழியும்படி, எவிடத்தையும் எனது குருநாதன் சன்னிதியாகக்கண்டு நான் நிஷ்டை சாதிப்பது எந்தநாளோ. எ - று.

7. நாம்பிரம மென்ரு னடுவேயொன் றுண்டாமா
றேம்பியெல்லா மொன்ரும்த் திகழுநா ளெந்நாளோ.

பொ - ரை. நாமே பிரமம் என்றுசொன்னல் நடுவே ஒன்று உண்டாகுமாதலால், எல்லாம்ஒன்றும் நிறைந்துவிளங்குவது எந்தநாளோ எ-று.

ஒன்று - அகங்காரம்.

8. முச்சகமே யாதி முழுதுமகண் டாகார
சச்சிதா னந்தசிவந் தானென்ப தெந்நாளோ.

பொ - ரை மூன்றுலோகம் முதலாக முற்றும், அகண்டரூப சச்சிதானந்த சிவமே யென்பது எந்தநாளோ எ - று.

மூன்று லோகங்களாவன - சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்பன.

9. எவ்வடிவும் பூரணமா மெந்தையுரு வென்றிசைந்த
அவ்வடிவுக் குள்ளே யடங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. எவ்வுருவமும்,பூரணமாகிய எந்தையின் உருவமே யென்றிசைந்த அவ்வுருவத்துக்குள்ளே நான் ஒடுங்கும் நாள் எந்நாளோ.

10. சிந்தித்த தெல்லாஞ் சிவபூ ரணமாக
வந்தித்து வாழ்த்தி வணங்குநா ளெந்நாளோ.

பொ - ரை. நான் நினைத்தெல்லாம் சிவத்தினது பூர்ண நிலையாகக் கொண்டு அதனைத் துதித்து வாழ்த்தி வணங்குகிற நாள் எந்நாளோ.

11. தாங்கியபார் விண்ணுதி தானேஞா லுக்கினியா
யோங்குமி யோகவுணர் வுற்றிடுநா ளெந்நாளோ.

பொ - ரை. சேடனால் சுமக்கப்பட்ட பூமி, மேலுலகு முதலியன தனக்குத்தானே ஞாலுக்கினியாய்த் தழைக்கிற யோகவுணர்ச்சி எனக்குப் பொருந்தும் நாள் எந்நாளோ. எ - று.

12. ஆசனமூர்த் தங்களற வகண்டா காரசிவ
பூசைசெய வாசை பொருந்துநா ளெந்நாளோ.

பொ - ரை. ஆசனமும் மூர்த்தங்களும் இல்லாதொழிய அகண்டாகாரமாகிய சிவபூசைசெய்ய எனக்கு விருப்பமுண்டாகும்நாள் எந்நாளோ.

13. அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளே
நெஞ்செழுத்தி யொன்றுகி நிற்குநா ளெந்நாளோ.

பொ - ரை. பஞ்சாக்ஷரத்தின் உண்மையாகிய அந்தப்பொருளே நான் என்மனத்திற் பதித்து அதனோடு ஒன்றுகி நிற்கும் நாள் எந்நாளோ.

14. அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரான் றன்னடிமை
யெவ்வுயிரு மென்றுபணி யாஞ்செய்வ தெந்நாளோ.

பொ - ரை. அகரவுயிர் மற்றெல்லாவெழுத்தும் தானேயாய் நிற்றல் போல, எவ்வுயிரும் தானேயான இறைவனது அடிமைகளே எல்லாவுயிர்களுமென்று துணிந்து, யாம் அவன் பணிவிடைசெய்வது எந்நாளோ.எ-று.

அகரவுயிர் எல்லாவெழுத்துக்களிலும் வியாபித்துநிற்றல்போல,இறைவன் எல்லா வுயிர்களிலும் வியாபித்திருக்கிறானென்பதாம்.

15. தேசிகர் கோனை திறன்மவுனி நந்தமக்கு
வாசி கொடுக்க மகிழுநா ளெந்நாளோ.

பொ - ரை. குருராஜனை வெற்றிபொருந்திய மௌனி நமக்கு வாசி கொடுக்க நாம் மகிழ்ச்சியடைவது எந்தநாளோ. எ - று.

வாசி - குதிரை, மேன்மை, வாசிகொடுத்தல் - வாயுதாரணைகைகூடச் செய்தல்.

16. குருலிங்க சங்கமாக் கொண்ட திருமேனி
யருண்மயமென் றன்புற் றருள்பெறுவ தெந்நாளோ.

பொ - ரை. குருலிங்க சங்கமங்களாகக் கொண்ட திருமேனிகள் அருள்வடிவே யென்று நிச்சயித்து அவற்றின்கண் அன்பு மிகுந்து, திருவருளைப் பெறுவது எந்தநாளோ. எ - று.

குரு - ஆசாரியன், லிங்கம் - விக்கிரக ரூபமாகிய சிவம், சங்கமம் - பத்தர்கூழாம்.

காணாபேரே வெண்கண்ணி.

1. சிந்திக்குந் தோறுந் தெவிட்டா வமுதேயென்
புந்திக்கு ளீதான் பொருந்திடவுங் காண்பேனே.

பொ - ரை. நினைக்குந்தோறும் தெவிட்டாத அமிர்தமே, என் புத்திக்குள்ளே வந்து பொருந்தியிருக்கவும் நான் காணப்பெறுவேனே.

2. கேவலத்தி னின்கிடந்து கீழ்ப்படா தின்பவருட்
காவலன்பா லொன்றிக் கலந்திடவுங் காண்பேனே.

பொ - ரை. கேவலாவத்தையில் நான் கிடந்து தாழ்வடையாதவண்ணம், சுகத்தைத்தருகிற அருளிறையினிடத்திற் கலந்தொன்றுகவும் காணப்பெறுவேனே. எ - று.

கேவலம் - மறப்பு.

3. துரியங் கடந்தவொன்றே தூவெளி யாய்நின்ற
பெரியநிறை வேயுனைநான் பெற்றிடவுங் காண்பேனே.

பொ - ரை. துரியபதத்தைக் கடந்த ஒப்பற்ற பொருளே, பரிசுத்தகாயமாய் நின்ற பெரிய பூரணமே, உன்னைநான் பெறவும் காண்பேனே.

துரியபதம் 4-ம் பக்கத்திற் காண்க.

4. மாசற்ற அன்பர்நெஞ்சே மாறுத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் றேசினையுங் காண்பேனே.

பொ - ரை. குற்றமில்லாத அன்பர்மனமே நீங்காத பெட்டியாகக் கொண்டு, அதனிடத்துத் தங்கிய ஒளிமிகுந்த மாணிக்கமே, உன்னொளியையும் நான் காணப் பெறுவேனே. எ - று.

5. மாயா விகார மலமகல வெந்தைபிரா
னேயா னுபூதி நிலைபெறவுங் காண்பேனே.

பொ - ரை. மாயா விகாரமாகிய மலினம் நீங்கும்படி எந்தைபெரு மானது நேயானுபூதி நிலையை யடையவுங் காண்பேனே. எ - று.

நேயம் - அன்பு. அநுபூதி - அநுபவம்.

6. பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனே.

பொ - ரை. பொய்யுலகமும், பொய்யுறவினரும், பொய்யுடம்பும் பொய்யென்று நிச்சயித்து, மெய்யனே, உன்னை மெய்யென்று துணிந்து, இந்தச் சரீரத்தோடும் உன்னைக் காண்பேனே. எ - று.

7. வாலற்ற பட்டமென மாயா மனப்படலங்
காலற்று வீழவுமுக் கண்ணுடையாய்காண்பேனே.

பொ - ரை. வாலற்றுவீழ்ந்த காற்றடிபோல, மாயையாகிய மனோ மாலிந்யம் அடியற்று விழுந்திடவும், மூன்று கண்களையுடையவனே, நான் காண்பேனே. எ - று.

மனோமாலிந்யம் - மனக்களங்கம்.

8. உள்ளும் புறம்பு மொருபடித்தாய் நின்றுசுகங்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனே.

பொ - ரை உள்ளிலும் வெளியிலும் ஒருதன்மையாய் நின்று, சுக மடையும்படிக்கு, இறைவனே, நீ என்னைச் சேரவும் காண்பேனே. எ -று.

9. காட்டுகின்ற முக்கட் கரும்பே கனியேயென்
ஆட்டமெல்லாந் தீரவுன தாடலையுங் காண்பேனே.

பொ - ரை. தோன்றுகின்ற முக்கண்கரும்பே, கனியே, என் ஆடல் எல்லாம் நீங்கும்படி, உனது ஆடலையும் காண்பேனே. எ - று.

கண் - கணு.

10. தூங்காமற் றூங்கிச் சுகப்பெருமா னின்னிறைவி
னீங்காம னிற்கும் நிலைபெறவுங் காண்பேனே.

பொ - ரை. சிவபெருமானே, உறங்காதுறங்கி, உன் பரிபூர்ணநிலை யில் நான் நீங்காது நிற்கிற நிலையை யடையவும் காண்பேனே. எ - று.

11. வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூ ரேறேநின் பொன்னடியுங் காண்பேனே.

பொ - ரை. திருவாதவூரடிகளை மிகுந்த கிருபையினால் விழுங்கிய ஞான தேசத்துக் கிறைவனே, உன் திருவடியையும் காண்பேனே. எ-று

விழுங்கியது - சிதம்பரத்தில் தன்னுடன் கலக்கச்செய்தது.

12. சாட்டையிலாப் பம்பரம்போ லாடுஞ் சடசால
நாட்டமற வெந்தைசுத்த ஞானவெளி காண்பேனே.

போ - ரை. சாட்டையில்லாத பம்பரம்போல, ஆடுகிற சரீரத்தொகுதியின் விருப்பமொழிய, எமது தந்தையின், சுத்த ஞானகாயத்தைக் காண்பேனே. எ - று.

சாட்டையில்லாப் பம்பரம்போலாடுஞ் சடசாலம் என்றது, சாட்டையின்வேகம் அடங்கியாடும் பம்பரம்போல ஞானப்பொலிவின்றிச் சஞ்சரிக்கிற சரீரத்தொகுதியை.

13. மன்னுடும் வாழ்வே மரகதஞ்சேர் மாணிக்கக்
குன்றேநின் றுட்கீழ்க் குடிபெறவுங் காண்பேனே.

போ - ரை. அம்பலத்தில் நடிக்கின்ற எமது வாழ்க்கையே மரகதம் சேர்ந்த மாணிக்கமலையே, உன் திருவடியின்கீழ்க் குடியாயிருக்கவும் காண்பேனே. எ - று.

மரகதம் - உமாதேவி, மாணிக்கக் குன்று - சிவபெருமான்.

14. பொய்யென் றறிந்துமெமைப் போகவொட்டா தையவிந்த
வையங் கனமயக்க மாற்றிடவுங் காண்பேனே.

போ - ரை. ஐயனே, இந்தவுலகத்தின் பெரியமயக்கம் உலகத்தைப் பொய்யென்றுணர்ந்தும், எங்களை மேற்கதிக்குப் போகவொட்டாது, ஆசையால், இதனை நீக்கிடவும் காண்பேனே. எ - று.

15. தாயினு நல்லதயாளுவே நின்னை யுன்னித்
தீயின்மெழுகொத்துருகுஞ் சிந்தைவரக்காண்பேனே.

போ - ரை தாயைப்பார்க்கிலும் நல்லதயாளுவே, உன்னை நினைத்து நெருப்பிலிட்டமெழுகைப் போலவுருகாநின்ற மனம் எனக்குண்டாகவும் காண்பேனே. எ - று.

16. என்செயினு மென்பெறினு மென்னிறைவா வேழையன்யா
னின்செயலென் றுன்னு நினைவுவரக் காண்பேனே.

போ - ரை. என்னசெய்தாலும், அச்செயலுக் கேற்க என்ன அடைந்தாலும் என்தலைவனே, அறிவிலேனாகிய நான், அவற்றையெல்லாம் உன் செயலென்று நினைக்கிற நினைவு எனக்குண்டாகக் காண்பேனே. எ - று.

17. எள்ளத் தனையு மிரக்கமிலா வன்பாவி
யுள்ளத்து மெந்தை புலாவிடவுங் காண்பேனே.

போ - ரை. எள்ளளவாயினும் இரக்கமில்லாத வலிய பாவியாகிய எமது மனத்தினும் எமது தந்தை உலாவிடவும் காண்பேனே. எ - று.

வஞ்சகத்துக் காலயமாம் வல்வினையே னுகெடுவே
னெஞ்சகத்தி லேயாநீ நேர்பெறவுங் காண்பேனே.

பொ - ரை வஞ்சனைகளுக்கு ஆலயமாகிய வலிய வினைகளையுடையேன், ஐயோகெடுவேன், எனது நெஞ்சினுள், ஐயனே, நீ நேராகவரப் பெறவும் காண்பேனே. எ-று.

19. தொல்லைப் பிறவித் துயர்கெடவு. மெந்தைபிரான்
மல்லற் கருணை வழங்கிடவுங் காண்பேனே.

பொ -ரை. பழமையாகிய பிறவித்துன்பம் கெட்டொழியவும் எந்தை பெருமான், தனது வளமாகிய கருணையை அருள்செய்யவும் காண்பேனே.

20. வாளாருங் கண்ணுர் மயற்கடலி லாழ்ந்தேன்சற்
ருளாக வெந்தை அருள்செயவுங் காண்பேனே.

பொ - ரை வாள்போன்ற கண்களையுடைய மாதரது ஆசைக்கடலில் அழுந்தினேன், அடியேன். உன்திருவடிக்கு அடிமையாகும்படி நீ கிருபை செய்யவும் காண்பேனே எ - று.

21. பஞ்சாப் பறக்கும்நெஞ்சப் பாவியைநீ கூவியையா
அஞ்சாதே யென்றின் னருள்செயவுங் காண்பேனே.

பொ - ரை. பஞ்சுபோலப் பறக்கின்ற மனத்தையுடைய பாவியேனை நீ வலிய அழைத்து, ஐயனே, அகப்படாதே யென்று, உன் இனியகிருபை செய்யவும் காண்பேனே எ - று

22. ஆடுகறங் காகி யலமந்து ழன்றுமனம்
வாடுமெனை யையாநீ வாவெனவுங் காண்பேனே.

பொ - ரை சுழலாகின்ற காற்றடியை யொத்து அலைந்துழன்று மனம் வாடுகின்ற என்னை, ஐயனே, நீ வாவென்றழைக்கவும் காண்பேனே. எ-று

23. சிட்டர்க் கெளிய சிவனேயோ தீவினையேன்
மட்டற்ற வாசை மயக்கறவுங் காண்பேனே.

பொ - ரை. அடியார்க் கெளியனாகிய சிவபெருமானே, ஓ, தீவினையேனாகிய நான், எல்லையில்லாத ஆசையின் மயக்கமற்றொழியவும் காண்பேனே. எ - று.

24. உண்ணின் றுணர்த்து மூலப்பிலா வொன்றேநின்
தண்ணென்ற சாந்தவருள் சார்ந்திடவுங் காண்பேனே.

பொ - ரை. எனக்குள்ளே இருந்தறிவிக்கிற அழிவற்ற தனிப்பொருளே, உன்குளிர்ந்த சாந்தத்தோடுகூடிய அருளைச் சார்ந்திடவும் காண்பேனே. எ -று.

25. ஓடுங் கருத்தொடுங்க வுள்ளுணர்வு தோன்றநினைக்
கூடும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனே.

பொ - ரை. பலவழிகளாக வோடுகின்ற மனமொடுங்கவும், உள்ளுணர்வு தோன்றவும், உன்னைக் கூடும்படிக்கு, இறைவனே, நீ கூட்டவும் காண்பேனே. எ - று.

26. வாக்கான் மனத்தான் மதிப்பரியாய் நின்னருளே
நோக்காம னேக்கிறிற்கு நுண்ணறிவு காண்பேனே.

பொ - ரை வாக்கினாலும் மனத்தினாலும் மதித்துணர அரியவனே, உன்னருளைப் பாராமற் பார்க்கின்ற நுண்ணிய அறிவும் எனக்குண்டாகக் காண்பேனே. எ - று.

27. இவ்வுடம்பு நீங்குமுனே யெந்தாய்கே ளின்னருளா
லவ்வுடம்புக் குள்ளே யவதரிக்கக் காண்பேனே.

பொ - ரை. நான் இந்தச்சரீரம் விடுமுன்னே, எந்தையே, கேட்பாயாக, உன்னருளாகிய அந்தவுடம்புக்குள்ளே பிறக்கவும் காண்பேனே.எ-று

அவ்வுடம் புக்குள்ளே யவதரித்தல் - அவ்வுடம்பி லொன்றுதல்.

28. நித்தமா யொன்றுய் நிரஞ்சனமாய் நிர்க்குணமாஞ்
சுத்தவெளி நீவெளியாய்த் தோன்றிடவுங் காண்பேனே.

பொ - ரை. நித்தியமாயும், ஒன்றுயும், நிரஞ்சனமாயும், நிர்க்குணமாயுமிருக்கிற சுத்தவெளியாகிய நீ வெளிப்படையாய் என்னெதிரே தோன்றவுங் காண்பேனே. எ - று.

நிரஞ்சனம் - களங்கமின்மை.

29. கண்ணிறைந்த மோனக் கருத்தேயென் கண்ணேயென்
னுண்ணிறைந்த மாயை யொழிந்திடவுங்காண்பேனே

பொ - ரை. கண்களில் நிறைந்த மோனக்கருத்தே, என்கண்ணே, என்மனத்தில் நிறைந்த மாயையானது நீங்கிடவும் நான் காண்பேனே.எ-று,

30. அத்தா விமலா வருளாளா வானந்த
சித்தா வெனக்குனருள் செய்திடவுங் காண்பேனே.

பொ - ரை. அத்தனே, விமலனே, அருளாளனே, ஆனந்த சித்தனே, எனக்கு உன்னருளை செய்யவும் நான் காண்பேனே. எ - று.

31. வீணே பிறந்திறந்து வேசற்றே னுசையறக்
காணே னிறைநின் கருணைபெறக் காண்பேனே.

பொ - ரை பயனின்றியே பிறந்தும் இறந்தும் விடாய்த்தேன், ஆசையொழியக் காண்கிலேன், சிறிதேனும், உன் கருணையை நான் பெறக் காண்பேனே. எ - று.

32. சட்டையொத்த விவ்வுடலைத் தள்ளுமுன்னே நான்சகச
நிட்டையைப் பெற்றையா நிருவிகற்பங்காண்பேனே.

பொ - ரை. சட்டைபோன்ற இந்தச் சரீரத்தைக் கீழே வீழ்த்து முன்னே, நான் சகச நிஷ்டையை யடைந்து, ஐயனே, நிருவிகற்ப சமாதியையுக் காண்பேனே. எ - று.

சகச நிஷ்டை - சதாநிஷ்டை. நிருவிகற்பம் - வேறு பாடற்றது.

33. எல்லாந் தெரியு மிறைவாவென் னல்ல லெல்லாஞ்
சொல்லாமு னீதான் றொகுத்திரங்கக் காண்பேனே.

பொ - ரை. எல்லாவற்றையு மறிகின்ற இறைவனே, என் துன்பத்தையெல்லாம் சொல்லாமுன்னே, நீயே யிரங்கியருளக் காண்பேனே. எ-று

34. அண்டபகி ரண்ட மனைத்து மொருபடித்தாக்
கண்டவர்கள் கண்டதிருக்காட்சியையுங்காண்பேனே.

பொ - ரை. அண்டபகி ரண்டங்களெல்லாம் ஒரு தன்மையதாகக் கண்டவர்கள், கண்ட உன் திருக்காட்சியையுங் காண்பேனே. எ - று.

காட்சி - தரிசனம்.

35. ஊனிருந்த காய முடனிருப்ப வெந்தைதின்பால்
வானிருந்த தென்னவுநான் வந்திருக்கக்காண்பேனே

பொ - ரை. மாமிசம்பொருந்திய சரீரத்தோடிருக்கச் செய்தே, எந்தையே, உன்னிடத்து மேன்மையமைந்திருத்தல்போல நான் வந்து உன்னிடத் தமைந்திருக்கவும் காண்பேனே. எ - று.

36. தினையத் தினையுந் தெளிதறியாப் பாவியே
னினைவிற் பரம்பொருளே நேர்பெறவுங் காண்பேனே.

பொ - ரை தினையளவாயினும் தெளிவில்லாத பாவியேனது தினைவின்கண் பரம்பொருளாகிய நீ, நேர்படவுங் காண்பேனே எ - று.

37. தன்பமெனுந் திட்டினைத்துஞ் சூறையிட வையாவே
யின்பவெள்ளம் வந்திங் கெதிர்ப்படவுங் காண்பேனே

பொ - ரை தக்கமெய்கிற மேன்மைகளெல்லாம் வாரிக்கொண்டு போம்படி, ஐயனே, சூறப்பெருக்கு வந்து இவ்விடத்தில் எதிர்ப்படவும் நான் காண்பேனே. எ - று.

ஆகாதோவென்கண்ணி.

1. கல்லாத நெஞ்சங் கரைந்துருக வெத்தொழிற்கும்
வல்லாய் நின்னின்பம் வழங்கினு லாகாதோ.

பொ - ரை. கல்லாத மனமானது கரைந்துருகும்படி, எத்தொழிலினும் வல்லவனே, உன் சுகத்தை எனக்குக் கொடுத்தால் ஆகாதோ எ - று.

2. என்னை யறிய வெனக்கறிவாய் நின்றருளின்
றன்னை யறிந்தின்பநலஞ் சாரவைத்தா லாகாதோ.

பொ-ரை. என்னையின்னவென்று நான் அறியும்பொருட்டு, எனக்கறிவாகி நின்றருளிய உன்னை யறிந்து, இன்பநலத்தை நான் சேரவைத்தா லாகாதோ. எ - று.

3. பொய்ம்மயமே யான புரைதீர வெந்தையின்ப
மெய்ம்மயம்வந் தென்னை விழுங்கவைத்தா லாகாதோ.

பொ - ரை. பொய்யுருவான குற்றம் நீங்க, எந்தையே, உனது மெய்யுருவம் வந்து என்னை விழுங்கச்செய்தால் ஆகாதோ. எ - று.

4. மட்டிலாச் சிற்சுகமாம் வாழ்வேநின் னின்பமயம்
சிட்டர்போல்யானருந்தித்தேக்கதைத்தா லாகாதோ.

பொ - ரை. எல்லையில்லாத ஞானசுகமாகிய வாழ்க்கையே, உனது ஆநந்த ரூபத்தை, உன்னன்பர்போல நான் அனுபவித்துத் தேக்கும்படிச் செய்தால் ஆகாதோ. எ - று

5. அத்தாகின் பொற்ரு ளடிக்கே யனுதினமும்
பித்தாகி யின்பம் பெருகவைத்தா லாகாதோ.

பொ - ரை ஐயனே, உன்திருவடியின் கீழிருத்தற்கே, நான் தோறும் பித்தேறச்செய்து, எனக்குச் சுகம் பெருகவைத்தால் ஆகாதோ. எ - று.

6. மெல்லியலார் மோக விழற்கிறைப்பே னையாநின்
னெல்லையிலா னந்தநல மிச்சித்தா லாகாதோ.

பொ - ரை. மாதர்களுடைய மோகமாகிய விழற்புல்லைப் பயிராக்கும் பொருட்டு என்னறிவாகிய நீரை இறைப்பவனாகிய நான், ஐயனே, உனது எல்லையில்லாத இன்பநலத்தை விரும்பினால் ஆகாதோ எ - று.

7. சுட்டழகா யெண்ணுமனஞ் சூறையிட்டா னந்தமயக்
கட்டழகா நின்னைக் கலக்கவைத்தா லாகாலோ.

பொ - ரை. சுட்டதலையே அழகாகநினைக்கிற மனத்தைச் சூறையாடி, ஆநந்தரூபமாகிய கட்டழகனே, நான் உன்னைக் கலக்கவைத்தால் ஆகாதோ. எ - று.

சுட்டு என்பதின் விவரத்தை 300-ஆம் பக்கத்திற்காண்க.

8. சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே
ஆதியே நின்னை யறியவைத்தா லாகாதோ.

பொ - ரை. சோதியே, கெடாத இன்புருவமே, பரிசுத்தாகாயமே, முதலே, நான் உன்னை யுணரவைத்தால் ஆகாதோ. எ - று.

9. நேசஞ் சிறிதுமிலே னின்மலனே நின்னடிக்கே
வாசஞ் செயவிரங்கி வாவென்ரு லாகாதோ.

பொ - ரை. அன்பு சிறிதுமில்லேன், நிர்மலனே, உன் திருவடியின் கீழே வசிக்கும்படி, இரங்கியருளி, என்னை வாவென்றழைத்தால்ஆகாதோ.

10. என்னறிவுக் குள்ளே யிருந்ததுபோ லையாவே
நின்னறிவி னின்னுடன்யா னிற்கவைத்தா லாகாதோ.

பொ - ரை. என்னுணர்வுக் குள்ளே நீ யிருந்ததுபோல, ஐயனே, உன்னுணர்வுக்குள்ளே உன்னோடு நான் ஒன்றி நிற்கும்படிச் செய்தால் ஆகாதோ. எ - று.

11. ஆதிப் பிரானேயென் னல்ல லிருளகலச்
சோதிப்ர காசமயந் தோன்றுவித்தா லாகாதோ.

பொ - ரை. ஆதிப்பெருமானே, எனது துன்பத்திற்குக் காரணமான அஞ்ஞானவிருள் நீங்கும்படி, சுயஞ்சோதி சொரூபம் எனக்குத் தோன்றும் படிச் செய்தால் ஆகாதோ எ - று.

12. ஆசைச் சுழற்கடலி லாழாம லையாநின்
நேசப் புணைத்தா ணிருத்தினு லாகாதோ.

பொ - ரை. ஆசையாகிய சுழல்களையுடைய பிறவிக்கடலில் அழுந்தாமல், ஐயனே, நேசித்தற்குரிய உன் திருவடியாகிய மரக்கலத்தை நானடைய நிறுத்தினால் ஆகாதோ எ - று

13. பாசநிக ளங்களெல்லாம் பஞ்சாகச் செஞ்சவே
யீசவெனை வாவென்றி ரங்கினு லாகாதோ.

பொ - ரை. பாசவிலங்குகளெல்லாம செவ்வையே பஞ்சாய்ப்பறக்க, ஈசனே, என்னை வாவென்றழைத்து இரங்கியருளினால் ஆகாதோ. எ - று

14. ஓயாவுள் ளன்பா யுருகிவாய் விட்டரற்றிச்
சேயாகியெந்தைநின்னைச் சேரவைத்தா லாகாதோ.

பொ - ரை. இடையறாத உள்ளன்பையுடையேனும், மனங்கரைந்து வாய்திறந்தலறி, குழந்தை போன்று, எந்தையே, உன்னைநான் சேரும் படிச செய்தால் ஆகாதோ. எ - று.

15. ஆதியாம் வாழ்வா யகண்டி தமாய் நின்றபரஞ்
சோதிநீயென்னைத்தொழும்பனென்று லாகாதோ.

பொ - ரை. முதல்வாழ்வாகி, பிரிக்கப் படாததாகி நின்ற மேலாகிய சோதியே, நீ என்னை உன் தொண்டன் என்றால் ஆகாதோ. எ - று.

16. விண்ணுரைக் கண்ட விழிபோற் பரஞ்சோதி
கண்ணுரை நின்னிறைவைக் காணவைத்தா லாகாதோ.

பொ - ரை. ஆகாயத்தை நிறையப்பார்த்த கண்போல, பரஞ்சோதியே, என் கண்ணுரை உனது பரிபூரண வியாபகத்தை நான் காணவைத்தால் ஆகாதோ. எ - று.

17. சேராமற் சேர்ந்துநின்று சின்மயனே நின்மயத்தைப்
பாராமற் பாரெனநீ பகுதம்வைத்தா லாகாதோ.

பொ - ரை. கூடாமல் கூடிநின்று, உன்னுருவத்தை நோக்காமல் நோக்கென்று, ஞானசொரூபனே, நீ என்மீது பகுதம்வைத்தால் ஆகாதோ.

18. கண்ணுடி போலவெல்லாங் காட்டுந் திருவருளே
உண்ணுடி யையா வுருகவைத்தா லாகாதோ.

பொ - ரை. எல்லாப்பொருள்களையும் கண்ணுடி காட்டுவதுபோலக் காட்டுகிற திருவருளே, ஐயனே, நான் என்மனதால் நோக்கி யுருகச்செய்தால் ஆகாதோ. எ - று.

19. மூலவிருள் காலுவாங்க மூதறிவு தோன்றவருட்
கோலம்வெளி யாகவெந்தை கூடுவித்தா லாகாதோ.

பொ - ரை. பிறவிக்கு மூலமாகிய அஞ்ஞானவிருள் வேரற்றுப்போகவும், பேரறிவுண்டாகவும், திருவருட்கோலம் வெளிப்படவும், எந்தையே, நீ சேர்வித்தால் ஆகாதோ. எ - று

20. சாற்றரிய வின்பவெள்ளந் தாக்குமதி னீழலாக்கி
யூற்றமுழு மென்னவதி லுண்மைமொன்று லாகாதோ.

பொ - ரை. சொல்லரிய இன்பப்பெருக்குத்தோற்றுவதில் நீ தோன்றினால், ஊற்றமுண்டாமென்று எனக்கு அதின் உண்மை வெளியிட்டால் ஆகாதோ. எ - று.

ஊற்றம் - கெடுதி. தான் என்று விவகரிக்கவேண்டியதை நீ யெனக் கூறினர். சிவாநந்தத்தை யெதிரிட்டறிதல் கூடாதென்பது கருத்து.

21. கையுங் குவித்திரண்டு கண்ணருவி பெய்யவரு
ளோயின்றுட் கீழ யடிமைநின்று லாகாதோ.

பொ - ரை. கைகளையுங்கூப்பி இரண்டுகண்களும் அருவிகள்போல நீரைப்பொழிய அருள்செய்கின்ற ஐயனே, உன்திருவடியின்கீழ அடியேன் நின்றால் ஆகாதோ. எ - று.

இல்லையோவென்கண்ணி.

1. ஏதுந் தெரியா தெனைமறைத்த வல்லிருளை
நாதநீ நீக்கவொரு ஞான விளக்கில்லையோ.

பொ - ரை. யாதொரு பொருளுந் தோன்றவொட்டாமல் என்னை மறைத்த வலிய அஞ்ஞானவிருளை, நாதனே, நீ விலக்குதற்கு உன்னிடத்தில் ஒப்பற்ற ஞானதீபம் இல்லையோ. எ - று.

2 பணியற்று நின்று பதைப்பறவென் கண்ணுண்
மணியொத்த சோதியின்ப வாரி யெனக்கில்லையோ.

பொ - ரை தொழில்கள் யாவுமொழித்து நின்று சலநமற, என் கண்மணிபோன்ற சோதியே, இன்பப்பெருக்கு எனக்குக் கிடைப்பதில்லையோ.

3. எம்மா லறிவதற வெம்பெருமான் யாதுமின்றிச்
சும்மாவிருக்கவொரு சூத்திரந்தானில்லையோ.

பொ - ரை. எம்பெருமானே, எங்களால் அறியப்படுத லொழிந்து யாதொரு முயற்சியுமில்லாமல் சும்மா இருக்கும்படி ஒரு உபாயந்தானில்லையோ. எ - று.

4 நாய்க்குங்கடையாரனேனுதாகின்னின்பமயம்
வாய்க்கும்படியினியோர்மந்திரந்தானில்லையோ.

பொ - ரை. நாயகனே, அடியேன் நாயினும் இழிந்தவன் ஆனேன், உன் சுகரூபம் எனக்குக் கிடைக்கும்படி ஒரு மந்திரமுமில்லையோ. எ - று.

5 ஊனுக நிற்கு முணர்வைமறந் தையாநீ
தானுக நிற்கவொரு தந்திரந் தானில்லையோ.

பொ - ரை. ஐயனே, உடம்பேதானுக நீனைக்கிற ஞானத்தைமறந்து, நான் நீயேயாகி நிற்பதற்கு ஒரு உபாயமாயினுமில்லையோ எ - று.

6. அல்லும்பகலுமகண்டவடிவேயுனைநான்
புல்லும்படியெனக்கோர்போதனைதானில்லையோ.

பொ - ரை. அகண்டரூபமே, இரவினும் பகலினும் நீக்கமில்லாமல் உன்னை நான் தழுவும்படி எனக்கு ஓர் போதிப்பும் இல்லையோ. எ - று.

வேண்டாவோ வென்கண்ணி.

1. கண்டவடிவெல்லாமின் காட்சியென்றேகுவித்துப்
பண்டுபின்றும்மின்றவென்னைப்பார்த்திரங்கவேண்டாவோ.

பொ - ரை. கண்ட வுருவங்கள் யாவும் உன்தரிசனமே யென்று கை கூப்பி முன்னும் இப்போதும் அந்த நிலையிலே நின்ற என்னைப்பார்த்து இரங்கியருள வேண்டாவோ. எ - று.

2. வாதனையோ டாடு மனப் பாம்பு மாயவொரு
போதனை தந்தையா புலப்படுத்த வேண்டாவோ.

பொ - ரை. ஐயனே, விஷயவாசனையோடு கூடி யாடுகின்ற மன மெனனும் சர்ப்பம்மடிய எனக்கு உன்திருமந்திரத்தைப்போதித்து அதனை எனக்கு அறிவுறுத்த வேண்டாவோ எ - று.

3. தன்னை யறியத் தனியறிவாய் நின்றருளு
நின்னையறிந் தென்னறிவை நீங்கிநிற்க வேண்டாவோ.

பொ - ரை. தன்னை யறியும்பொருட்டு ஒப்பற்ற அறிவாய் நின்றருள் செய்கிற உன்னை யறிந்து, என்னறிவை யொழித்து நிற்கவேண்டாவோ.

4. அள்ளக் குறையாவ கண்டிதா னந்தமென்னும்
வெள்ளமெனக்கையாவெளிப்படுத்த வேண்டாவோ.

பொ - ரை. முகக்கக்குறையாத அகண்டானந்த மென்கிற வெள்ளத்தை, ஐயனே, எனக்கு வெளிப்படுத்த வேண்டாவோ. எ - று.

அகண்ட ஆனந்தம் - அளவுபடுத்தப்படாத இன்பம்.

5. அண்டனே யண்ட ரமுதேயென் னுருயிரே
தொண்டனேற் கின்பந் தொகுத்திரங்க வேண்டாவோ.

பொ - ரை. தேவனே, தேவாமிர்தமே, என் அரியவுயிரே, உன் தொழும்பனுகிய எனக்கு இன்பங்கொடுத்து இரங்க வேண்டாவோ. எ-று.

6. பாராதே நின்று பதையாதே சும்மாதான்
வாராயெனவும் வழிகாட்ட வேண்டாவோ.

பொ - ரை. எதிரிட்டுப்பாராதே, நின்றுதுடியாதே, சும்மாவருவாய், என்று நீ எனக்கு முத்தி நெறியைக் காட்ட வேண்டாவோ. எ - று.

நல்லறிவேயென்கண்ணி.

1. எண்ணிறைந்தமேன்மைபடைத்தெவ்வுயிர்க்குமவ்வுயிராய்
கண்ணிறைந்த சோதியைநாங் காணவா நல்லறிவே.

பொ - ரை. அன்பரது மநோரதங்களெல்லாம் நிறைத்த மேன்மையைப் பொருந்தி, எவ்வகைப்பட்ட ஜீவராசிகளுக்கும் அவ்வவ்வுயிர்களாய், அவற்றின் கண் நிறைந்து நிற்கிற ஒளியை, யாம்பார்க்க எனது நற்புத்தியே, நீ வருவாயாக. எ - று.

2. சித்தான நாமென் சடத்தைநா மென்னவென் றுஞ்
சத்தான வுண்மைதனைச் சாரவா நல்லறிவே.

பொ - ரை. சித்தாகிய நாம், சடத்தை நாம் என்று சொல்வதற்குக் காரணம் யாது என்று (விசாரித்து அதனையொழித்து) எக்காலத்தும் சத்தாயிருக்கிற உண்மைப் பொருளையடைய நல்லறிவே நீ வருவாயாக. எ - று.

3. அங்குமிங்கு மெங்குநிறை யற்புதனுர் பொற்பறிந்து
பங்கயத்துள்வண்டாய்ப்பயன்பெறவா நல்லறிவே.

பொ - ரை. அவ்விடத்து இவ்விடத்தும் எவ்விடத்தும் நிறைந்திருக்கிற அற்புத மூர்த்தியின் மேன்மையையறிந்து, தாமரைமலரில் வண்டுபோலப் பயனடையநற்புத்தியே நீ வருவாயாக. எ - று.

4. கான்றசோறென்ன விந்தக்காகினிவாழ்வத்தனையும்
தோன்ற வருள்வெளியிற் றோன்றவா நல்லறிவே.

பொ - ரை. காக்கின சோறுபோல, இந்தவுலகவாழ்க்கை முழுதும் அருவருப்பாய்த் தோன்றும்படி திருவருளாகிய வெளியின்கண் தோன்றுமாறு நற்புத்தியே நீ வருவாயாக. எ - று.

பலவகைக்கண்ணி.

1. என்னரசே கேட்டிலையோ வென்செயலோ வேதுமிலை
தன்னரசு நாடாகித் தத்துவங்கூத் தாடியதே.

பொ - ரை. என்னிறைவனே, என்தொழிலென்பது சிறிதுமில்லை, தத்துவங்கள் யாவும் என்னுடம்பைத் தன்னரசு நாடாகக்கொண்டு நடநஞ் செய்ததை நீ கேட்டறிந்தாயில்லையோ. எ - று.

2. பண்டொருகா னின்பாற் பழக்கமுண்டோ வெந்தைநினைக்
கண்டொருகாற் போற்றக் கருத்துங் கருதியதே.

பொ - ரை. எந்தையே ஒருகால் உன்னைக்கண்டு வணங்க என் மனம் நினைந்தது, அதனால், பூர்வம் ஒருகால் உன்னிடத்தில் அதற்குப் பழக்கமுண்டோ நீ சொல்லாய். எ - று.

வேறு.

3. கண்டனவே காணுமன்றிக் காணவோ காணவென்
கொண்டறிவே னெந்தைநினைக் கூடுங் குறிப்பினையே.

பொ - ரை. பார்த்தனவே தோன்றுவ தன்றிப் பார்க்காதனவோ, சோன்று, அங்ஙனமாக, எந்தையே, உன்னையடையும் நிதானத்தை இது வரையில் அறியாத நான் இப்போது யாதுகொண்டறியக்கடவேன். எ-று

4. கல்லா லடியில்வளர் கற்பகமே யென்னளவோ
பொல்லா வினைக்குப் பொருத்தந்தான் சொல்லாயே.

பொ - ரை. கல்லாலின் மூலத்தில் தழைத்தகற்பகத்தருவே, பொல்லாதவினைகளுக்கு என்னிடந்தான் பொருத்தமோ, வேறிடமில்லையோ நீ சொல்லாய். எ - று.

5. தப்பிதமொன் றின்றியது தானுக நிற்கவுண்மை
செப்பியது மல்லாலென் சென்னியது தொட்டனையே.

பொ - ரை. தவறு ஒன்றுமில்லாமல், அதுவே தானுகிநிற்கும்படி, எனக்கு ஒரு உண்மைமொழி சொன்னது 'எல்லாம் குருவடிவாய் வந்து என் சிரசையுந் தீண்டினையே. எ - று.

சிரசைத் தீண்டுதலை ஹஸ்தமஸ்தக சம்யோகம் என்பவர் வடநூலார்

6. மாசான நெஞ்சனிவன் வஞ்சனென்றே வாய்திறந்து
பேசா மௌனம் பெருமான் படைத்ததுவே

வேறு.

பொ - ரை. மலினமுள்ள மனத்தையுடையவனுகிய இவன் வஞ்சகன் என்று தானே, எம்பெருமானே, நீ பேசாமையாகிய மௌனநிலையை யடைந்தது. எ - று.

7. கற்பதெல்லாங் கற்றேமுக் கண்ணுடையாய் நின்பணியாய்
நிற்பதுகற் றன்றே நிருவிகற்ப மாவதுவே.

பொ - ரை. மூன்றுகண்களையுடையவனே, கற்கவேண்டி மவற்றை யெல்லாம் கற்றுளேம்) ஆயினும் உன் பணியின்கண் நிற்பதைக் கற்றலன்றே நிருவிகற்ப மடைவது எ - று.

8. முன்னளவில் கன்ம முயன்று னிவனென்றே
வென்னளவி லெந்தா யிரங்கா திருந்ததுவே

பொ - ரை. இவன் முற்காலத்தில் அளவற்ற தீவினைகளே முயன்று செய்தான் என்று திருவுளம்பற்றியோ என்னிடத்தில் இரக்கஞ்செய்யா திருந்தது, எந்தையே. எ - று.

வேறு.

9. நெஞ்சகம்வே றுகி நினைக்கூட வெண்ணுகின்ற
வஞ்சகனுக் கின்பமெந்தாய் வாய்க்குமா றெவ்வாறே.

பொ - ரை. மனம் வேறுபட்டு, உன்னைக் கலக்கவெண்ணுகிற வஞ்சகனுகிய எனக்கு, எந்தையே, இன்பங்கிடைக்கும்வழி யெப்படி. எ - று.

மனம் வேறுபடாதிருப்பினன்றே இன்பங் கிடைக்கும் என்பது கருத்து.

வேறு.

10. பள்ளங்க டோறும் பரந்தபுனல் போலுலகி
லுள்ளம் பரந்தா லுடையாயென் செய்வேனே

பொ-ரை. உடையவனே, பள்ளத்தாக்குகளிலெல்லாம் பரவிய நீர் போல உலகவியாபாரத்தின்மீண் என் மனம் பரவினால் உன் திருவருளுதவியின்றி நான் யாதுசெய்வேன். எ - று.

11. முன்னினைக்கப் பின்மறைக்கு மூடவிரு ளாகெடவே
னென்னினைக்க வென்மறக்க வெந்தை பெருமானே.

பொ - ரை. எந்தைபெருமானே, முன்னே நினைத்தால் அதனை உடனே மறைக்கிறது மூடத்தன்மையாகிய அஞ்ஞானவிருள். ஆதலால், நான் என்னகாரியத்தை நினைப்பேன் என்னகாரியத்தை மறப்பேன். எ - று.

12. வல்லாளா மோனநின் வான்கருணை யென்னிடத்தே
இல்லாதே போனதெனை வெவ்வண்ண மும்வேனே.

பொ - ரை. சர்வ வல்லமையுள்ளவனே, மௌனநிலையையுடையவனே, உனது மேலாகிய கருணை என்னிடத்தில்லா தொழிந்தால், நான் எவ்வாறு பிழைப்பேன். எ - று.

வான் கருணை - மேகம் போலக்கைம்மாறு கருதாத கருணை என்றலும் பொருந்தும்.

வேறு.

13. வாக்கு மனமு மவுனமுற வெந்தைநின்னை
நோக்கு மவுனமிந்த நூலறிவி லுண்டாமோ.

பொ - ரை. எந்தையே, வாக்கும் மனமும் மௌனநிலையை யடையும் படி உன்னையே நோக்கிநிற்கிற மௌனநிலையானது, இந்தச் சாஸ்திரஞானத்திலுண்டாகுமோ. எ - று.

அநுபவ ஞானத்தாலுண்டாகு மென்பது கருத்து.

14. ஒன்றுப்ப் பலவா யுலகமெங்கு நீயேயாய்
நின்றுயை யாவெனீ நீங்கற் கெளிதாமோ.

பொ - ரை. ஐயனே, உலகமுழுதிலும், ஒன்றுயும் பலவாயும் நீயேயாகி நின்றனை, ஆதலால், நீ என்னை நீங்குதற்கு எளிதாகுமோ. எ - று.

நீங்கின், உனது சருவவியாபகத்துக்குப் பழுதாமென்பது கருத்து.

15. ஆவித்துணையே யருமருந்தே யென்றனீ
கூவியழைத்தின்பங் கொடுத்தாற் குறைவாமோ.

பொ - ரை. உயிர்த்துணையே, அரிய தேவாமிர்தமே, என்னை நீ வலிய அழைத்து, இன்பத்தைத் தந்தால் உனக்குக் குறையுண்டாகுமோ. எ - று.

16. எத்தனையோ நின்விளையாட் டெந்தாய்கே ளிவ்வளவென்
றத்தனையு மென்னு லறியுந் தறமாமோ.

பொ - ரை. எந்தையே, கேட்பாயாக, உன் திருவிளையாடல்கள் எவ்வளவோ வுள்ளன, அவ்வளவும், இத்தனையென்று என்னால் அறியப் படும் தரத்தனவோ. எ - று.

17. தேடுவார் தேடுஞ் சிவனேயோ நின்றிருத்தாள்
கூடுவான் பட்டதுயர் கூறற் கெளிதாமோ.

பொ - ரை. தேடுதற்குரியரால் தேடப்படுகிற சிவனே, ஓ, உன்திரு வடியைக் கூடுவதற்கு நான் பட்டதுன்பம் சொல்லற்கு எளிதாகுமோ. எ - று

தேடுவார் - இருவினை யொப்பும், மலபரிபாகமும் வாய்ந்தவர்.

வேறு.

18. பற்றினதைப் பற்றுமெந்தாய் பற்றுவிட்டாற் கேவலத்தி
லுற்றுவிடு நெஞ்சமுனை யொன்றிநிற்ப தெப்படியோ

பொ - ரை. எந்தையே, என்மனமானது, பிடித்ததையேபிடிக்கும், பிடிப்பை விட்டால், கேவலாவஸ்தையைப் பொருந்தும், இவைகளை யொழித்து, அம்மனமானது உன்னைப் பொருந்தி நிற்பது எவ்வாறோ. எ - று.

19. ஒப்பிலா வொன்றேநின் உண்மையொன்றுங் காட்டாமற்
பொய்ப்புவியை மெய்போற் புதுக்கிவைத்ததென்னையோ.

பொ - ரை. ஒப்பற்ற ஒருபொருளே, உன்னுண்மை நிலையைச் சிறிதுங் காட்டாமல், பொய்யுலகத்தை மெய்போலப் புதுக்கிவைத்தது என்னையோ. எ - று.

20. காலால் வழிதடவுங் காலத்தே கண்முளைத்தாற்
போலே யெனதறிவிற் போந்தறிவாய் நில்லாயோ.

பொ - ரை. காலைக் கொண்டுவழிதடவும் காலத்தில், கண்ணுண்டாஞற்போல, என்னறிவினிடத்தே தோன்றி அறிவுருவாய்நிற்கமாட்டாயோ.

21. தன்னரசு நாடாஞ் சடசால பூமிமிசை
யென்னரசே யென்னை யிறையாக நாட்டினையோ.

பொ - ரை. என்னிறைவனே, தன்னரசு நாடாகிய சடசால பூமியின்மேல், என்னை யிறைவனாக்கி வைத்தனையோ. எ - று.

வேறு.

22. திங்களமுதாகின் றிருவாக்கை விட்டரசே
பொங்கு விடமுனைய பொய்ந்நூல் புலம்புவனை.

பொ - ரை. சந்திரனிடத்துள்ள அமுதம் போன்ற உனது திருவாக்கை விட்டு, இறைவனே, அதிகரித்த விஷத்தை யொத்த பொய்ச்சாத்திரங்களைக்கற்றுப் புலம்புவேனை. எ - று.

திங்கள் - இறைவனது திருமுகமண்டலத்துக்கு உவமம். திங்களமுத - சந்திரனை யணிந்த அமுதமயனே என இறைவனை விளிப்பினுமாம்.

23. உன்னவுன்ன வென்னையெடுத் துள்விழுங்கு நின்னிறைவை
இன்னமின்னங் காணுமெலந்தாய் சுழல்வேனே.

பொ - ரை. நினைக்க நினைக்க, என்னையெடுத்து உள்ளே பொருந்த விழுங்குகிற உன் பூர்ணநிலையை இன்னமுங்காணுமல், எந்தையே, சுழல் வேனே. எ - று.

24. ஆரா வமுதனைய வானந்த வாரியென்பாற்
பூரா மலையாநீ தள்ளிவிட வந்ததென்னே

பொ - ரை ஐயனே, தெவிட்டாத அமுதம் போன்ற ஆநந்த சாகரத்தை எனக்குக் கொடுக்காமல், நீ என்னைத் தள்ளிவிடும்படி நேரிட்டதற்குக் காரணம் யாதோ. எ - று.

நின்றநிலை.

1. நின்றநிலையேநிலையாவைத்தானந்த
நிலதானெனிருவிகற்பநிலையுமாகி
என்றுமழியாதநின்பவெள்ளந்தேக்கி
இருக்கவெனைத்தொடர்ந்துதொடர்ந்திழுக்குமந்தோ.

பொ - ரை. கண் நின்ற நிலையையே நன்னிலையாகவைத்த ஆநந்த நிலையே,நிருவிகற்ப நிலையுமாகி, எக்காலத்தும் அழியாத சுகவெள்ளத்தைத் தேக்கெறிந்திருக்கும்படி, என்னைப் பற்றிப் பற்றியிழுக்கின்றது. எ - று.

2. இருக்காதிமறைமுடிவஞ்சிவாகமாதி
இதயமுங்கைகாட்டெனவேயிதயத்துள்ளே
ஒருக்காலையுணர்ந்தவர்கட்கெக்காலுந்தான்
ஒழியாதவின்பவெள்ளமுலவாகிற்கும்.

பொ - ரை. இருக்குமுதலிய வேதாந்தப்பொருளும், சிவாகமம் முதலானவைகளுடைய சித்தாந்தப்பொருளும், கைகாட்டி என்றே, ஒருமிக்க அறிந்த அறிஞருக்கு, எக்காலத்தும் நீங்காத ஆநந்தப் பெருக்குப் பெருகாநிற்கும். எ - று.

கைக்காட்டு - சையமைத்தல்.

3. சுற்றுதுங்கேட்டதுந்தானேயேதுச்சகக்
கடபடமென்றுருட்டுதற்கோகல்லாலெம்மான்
குற்றமறக்கைகாட்டுங்குருத்தைக்கண்டு
குணங்குறியற்றின்பநிட்டைகூடவன்றே.

பொ - ரை. சற்றகல்வியும் கேட்ட கேள்வியும் எதன் பொருட்டு, கடம் என்றும் படம் என்றும் தர்க்கம் பேசிப்பிதற்றுதற்குத்தானே, கல்லாலினிழலிலெழுந்தருளிய எம்பெருமான், நமது பிழைகளெல்லாம் ஒருங்கே நசிக்கும்படி, கைகாட்டின கருத்தை யுணர்ந்து, குணங்குறிகளை நீக்கி, சுகநிஷ்டை யடைதற்கல்லவோ. எ - று.

பாடுகின்றபனுவல்.

1. பாடுகின்ற பனுவலோர்க டேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றி லாடுகின்ற வழகனே.

பொ - ரை. பாடப் பட்டசாஸ்திரஞான மூள்ளவர்கள், அந்த ஞானத்துக்குப் பயன் நீயாதலால், அவர்களால் தேடப்படுகிற செல்வமே, யாவரும் விரும்புகின்ற சிற்சபையில் நிருத்தஞ் செய்கின்ற அழகனே. எ-று.

2. அத்தனென்ற நின்னையே பத்திசெய்து பனுவலால்
பித்தனின்று பேசவே வைத்ததென்ன வாரமே.

பொ - ரை. எல்லாருக்கும் பரமபிதாவாகிய உன்னையே பத்தி பண்ணி, பித்தனாகியநான், நூல்களாற் புகழ்ந்து பேசும்படி என்னை வைத்ததற்குக் காரணம் என்ன அன்பின் மிகுதியோ, அறிகிலேன். எ - று.

3 சிந்தையன்பு சேரவே நைந்துநின்னை நாடினேன்
வந்துவந்து நின்பமே தந்திரங்கு தாணுவே.

பொ - ரை. மனத்தின் கண் அன்புமிக, அதுகாரணமாக, நைந்து, உன்னை விரும்பினேன், ஆதலால், சிவனே, என்னிடத்துப் பலமுறை வந்து, சுகம் தந்து, இரங்கியருளல்வேண்டும்

4. அண்டரண்டம் யாவும்நீ கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகனீர் கண்டநெஞ்சு கரையுமே.

பொ - ரை. அண்டங்களிலுள்ளவர்களும், அவர்களுக் கிருப்பிடமாகிய அண்டங்களும் ஆகிய எல்லாம் நீ கொண்டு நின்றகோலமேயாகத் தொழும்பர்கள்கண்டு, ஆநந்த மிகுதியால் பொழியாநின்ற கண்ணீரைக் கண்ட என்மனம் உருகா நிற்கும். எ - று

5. அன்னைபோல வருண்மிகுத்து மன்னுஞான வரதனே
என்னையே எனக்களித்த, நின்னையா னினைவனே.

பொ - ரை. தாய்போலக் கிருபைமிகுந்து நிலைபெற்றிருக்கிற ஞானக்கொடையாளனே, என்னையே எனக்குக்கிருபைசெய்த உன்னை நானும், நினைக்கக் கடவேன். எ - று.

நின்னையென்றது - ஆன்மாவை.

ஆநந்தக்களிப்பு.

1. ஆதியனாதியுமாகி-எனக்கானந்தமாயறிவாய்நின்றிலங்குஞ், சோதிமவுனியாய்த்தோன்றி - அவன், சொல்லாத வார்த் தையைச் சொன்னண்டி தோழி—சங்கர சங்கர சம்பு.

இ - ள். ஆதிஅநாதியும் ஆகி-எல்லாவற்றிற்கும் தான்முதலாகி தனக் கொருமுத லில்லாததாகி, எனக்கு - என்னளவிலும், ஆநந்தம் ஆய் - சுகத் தைக் கொடுப்பவனாகி, நின்று இலங்கும் - நின்று விளங்குகின்ற, சோதி - தேஜோராசியாகிய இறைவன், மௌனியாய்த் தோன்றி - மௌன தேசிகனாயெழுந்தருளி, அவன் - அவ்விறைவன், சொல்லாத வார்த்தை யை - வாயினாற் சொல்லக் கூடாத வார்த்தையை, சொன்னண்டி - கை காட்டி உணர்த்தினனடி, தோழீ - ஹேசகீ, சங்கர எ - று.

2. சொன்னசொல்லேதென்றுசொல்வேன்- என்னைச்சூதாய்த் தனிக்கவேசும்மாவிருத்தி, முன்னிலை யேதுமில்லாதே-சுக, முற்றச்செய்தேயென்னைப்பற்றிக்கொண்டாண்டி—சங்கர சங் கர சம்பு.

இ - ள். சொன்னசொல் - சொன்னசொல்லை, எது என்று சொல் வேன்-யாதென்று சொல்லுவேன், என்னை - அடியேனை, சூதாய் - கபட மாக, தனிக்க-தனிமையாக, சும்மா இருத்தி-சும்மா இருக்கச்செய்து, முன் னிலை எதும் இல்லாதே-முன்னிலைச் சுட்டொன்று மில்லாமலே, சுகம் முற் றச்செய்து - ஆநந்தம் மேலிடச்செய்து, என்னைப்பற்றிக் கொண்டாண்டி - என்னைக் கவர்ந்து கொண்டானடி. சங்கர. எ - று.

3. பற்றியபற்றறவுள்ளே - தன்னைப் பற்றச்சொன்னன்பற்றிப் பார்த்தவிடத்தே, பெற்றதையேதென்று சொல்வேன்-சற் றும்,பேசாதகாரியம்பேசினன்தோழி—சங்கரசங்கர சம்பு.

இ - ள். பற்றிய பற்று அற - பற்றின பற்றுக்கள் இல்லாமல், உள்ளே - உள்ளதானே, தன்னைப்பற்றச் சொன்னன் - தன்னையே ஆ தாரமாகப் பற்றும்படி சொல்லினன், பற்றிப்பார்த்த இடத்து - அவ்வாறு பற்றி நோக்கினவிடத்தில், பெற்றதை - நான் அடைந்த பேற்றை, எது என்று சொல்வேன் - யாதென்று சொல்லமாட்டேன், சற்றும் - சிறி தும், பேசாத - பேசத்தகாத, காரியம்-காரியத்தை, பேசினன்-பேசினன், தோழி-ஹேசகீ, சங்கர. எ - று.

4. பேசாவிடும்பைகள்பேசிச்- சுத்தப்பேயங்கமாகிப்பிதற்றித் திரிந்தேன், ஆசாபிசாசைத்துரத்தி- ஐய னடியிணைக்கீழே யடக்கிக்கொண்டாண்டி—சங்கர சங்கர சம்பு.

இ - ள். பேசா இடும்பைகள் பேசி – பேசத்தகாத துன்பத்துக் கேது வான வார்த்தைகளைப்பேசி, சுத்தப்பேய் அங்கம் ஆகி - சுத்தப்பேயுடம் பாகி, பிதற்றித்திரிந்தேன் - உளறித்திரிந்தேன், (அப்படியிருக்கும்போது) ஆசாபிசாசைத்துரத்தி - ஆசையாகிய பேயையோட்டி, ஐயன் - இறைவன், அடியிணைக்கீழே - தன்திருவடியிணையின்கீழே, அடக்கிக் கொண்டாண்டி- ஒடுக்கிக் கொண்டானடி சங்கர. எ - று.

5. அடக்கிப்புலனைப் பிரித்தே-அவ ணகியமேனியி லன்பை வளர்த்தேன், மடக்கிக்கொண்டானென்னைத்தன்னுட்- சற் றும் வாய்பேசா வண்ண மரபுஞ்செய் தாண்டி — சங்கர சங்கரசம்பு.

இ -ள் அடக்கி-ஒடுக்கி, புலனைப்பிரித்து-ஐம்புலன்களைவேறுபிரித்து- அவன் ஆகியமேனியில் - அவனது ஹிதமான திருமேனியின்கண், அன்பை வளர்த்தேன் - அன்பைப் பெருக்கினேன், (அப்படிப் பெருக்கினவுடனே) என்னை - அடியேனை, தன்னுள்மடக்கிக் கொண்டான். தனக்குள்ளே யொடுக்கிக்கொண்டு, சற்றும், சிறிதும், வாய்பேசாவண்ணம் - வாய்பேசாத வகை, மரபும் செய்தாண்டி-உபாயத்தையும் செய்தானடி, சங்கர. எ - று.

6. மரபைக்கெடுத்தனன் கெட்டேன்-இதைவாய்விட்டுச்சொல் லிடின் வாழ்வெனக் கில்லை, கரவுபுருஷனு மல்லன் - என் னைக், காக்குந்தலைமைக்கடவுள்காண் மின்னே—சங்கர சங் கர சம்பு.

இ - ள். மரபைக்கெடுத்தனன்-முறைமையையழித்தான், கெட்டேன் ஆகெடுவேன், இதை - இதனை, வாய்விட்டுச் சொல்லிடின் - வாய்திறந்து சொன்னால், எனக்கு வாழ்வு இல்லை - எனக்குச் சுகவாழ்க்கை யில்லை யாகும், கரவு புருஷனும் அல்லன் - (அவன்) சோரனாயகனும் அல்லன், (மற்றென்னெனின்) என்னைக்காக்கும் - என்னைக் காக்கின்ற, தலைமைக் கடவுள் - முதன்மையையுடைய தெய்வமேயாவன் சங்கர. எ - று.

7. கடலின்மடைவிண்டதென்னஇரு கண்களுமானந்தக் கண் ணீர்சொரிய, உடலும்புளகிதமாக- என துள்ளமுருகவுபா யஞ்செய்தாண்டி — சங்கர சங்கர சம்பு.

இ - ள். கடலின் மடைவிண்டது என்ன - கடலின் மடைதிறந்தாற் போல, இருகண்களும் - இரண்டுகண்களும், ஆநந்தக் கண்ணீர் சொரிய - இன்பக் கண்ணீரைப்பொழியவும், உடலும் புளகிதம் ஆக - உடம்பும் புளக மரும்பவும், எனது உள்ளம் உருக-என்மனமுருகவும், உபாயம் செய்தாண்டி உபாயம் பண்ணினனடி, சங்கர. எ - று.

8. உள்ளது மில்லது மாய்முன்-உணர்வது வாயுன்னுளங்கண் டதெல்லாம், தள்ளெனச்சொல்லியென் னையன்- என்னைத், தானுக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி—சங்கர சங் கர சம்பு.

இ - ள். உள்ளதும் இல்லதும் ஆய் - உள்பொருளும் இல்பொருளு மாகி, முன் உணர்வது ஆய் - எதிரேகண்டறியத் தக்கபொருளுமாகி, உன் உள்ளம் கண்டது எல்லாம் - உன்மனத்திலுல் பார்க்கப்பட்ட பொருள்க ளெல்லாவற்றையும், தள் எனச்சொல்லி - தள்ளென்று சொல்லி, என் ஐயன் - என்னிறைவன், என்னை - அடியேனை, தான் ஆக்கிக் கொண்ட - தானேயாகச் செய்து கொண்ட, சமர்த்தைப்பார் - வல்லமையைப்பார், தோழீ-ஹேசகீ, சங்கர. எ - று.

9. பாராதிபூதம்நீயல்லை-உன்னிப் பாரிந்திரியங்கரணம்நீயல்லை, யாராயுணர்வுநீ யென்றுன்- ஐய னன்பாபுரைத்தசொல் லா னந்தந் தோழி—சங்கர சங்கர சம்பு.

இ - ள். பார் ஆதிபூதம் - பிருதுவிமுதலிய பஞ்சபூதங்களும், நீ அல்லை - நீயாகாய், உன்னிப்பார் - யோசித்துப்பார், இந்திரியம் - ஞ்ஞிரி யங்களும், கரணம்—கரணங்களும், நீ அல்லை - நீயாகாய், ஆராய் - (இவற்றை யெல்லாம்) ஆராய்ந்தறிகின்ற, உணர்வு - அறிவே, நீ என்றுன் - நீயென்று சொல்லினன், ஐயன் - இறைவன், அன்பாய் உரைத்தசொல் — அன்போடு சொன்னசொல், ஆநந்தம் - இன்பமாயிருக்கிறது, தோழீ. எ - று.

10. அன்பருக்கன்பான மெய்யன்- ஐயனானந்தமோனனருட்கு ருநாதன், தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத் தானறிந்தேன்மனந்தானிறந்தேனே—சங்கர சங்கர சம்பு.

இ - ள். அன்பருக்கு - தன்னிடத்தன்புள்ளாரிடத்து, அன்பு ஆன மெய்யன் - அன்பு செய்கிற வண்மையன்; ஐயன் - தலைவன், ஆநந்தமோ னன்-இன்பத்துக்குக் காரணமாகிய மௌநநிலையினன், அருள் குரு நாதன்- கிருபையுள்ள குருதேசிகன், தன்பாதம் சென்னியில் வைத்தான்-தன் திரு வடியை என் சிரசின் மீது சூட்டினனே, (சூட்டவே) என்னைத்தானறிந் தேன் - என்னை நானறிந்து கொண்டேன், (அறிந்துகொள்ளவே) மனம் தான் இறந்தேன் - மனமிறக்கப்பெற்றேன். எ - று.

11. இறப்பும் பிறப்பும்பொருந்த-எனக்,கெவ்வணம்வந்ததென் றெண்ணியான்பார்க்கில், மறப்பு நினைப்புமாய்நின்ற-வஞ்ச, மாயாமனத்தால் வளர்ந்ததுதோழி—சங்கர சங்கர சம்பு.

இ - ள். இறப்பும் பிறப்பும் பொருந்த - சாதலும் பிறத்தலும் என் னையடைய, எனக்கு எவ்வண்ணம் வந்தது என்று - எனக்கு எப்படியுண் டாயினவென்று, யான் எண்ணிப்பார்க்கில் - நான் ஆலோசித்துப் பார்க்கு மிடத்தில், மறப்பும் நினைப்பும் ஆய் நின்ற - கேவலசகலரூபமாய் நின்ற, வஞ்சம் மாயாமனத்தால் - வஞ்சனையுள்ளதும் மாயாகாரியமுமாகிய மனத் தினால், வளர்ந்தது - விருத்தியடைந்தது, தோழீ. எ - று.

12. மனதேகல் லாலெனக் கன்றே - தெய்வ மவுன குருவாகி வந்துகை காட்டி, எனதாம் பணியற மாற்றி - அவ, னின் னருள் வெள்ளத் திருத்திவைத் தாண்டி — சங்கர சங்கர சம்பு.

இ - ள். எனக்கு - அடியேனுக்கு, மனது — மனம், கல்லால் அன்றே - கல்லினால் சமைக்கப்பட்டிருப்பதல்லவோ, (அப்படியிருக்க) தெய்வம் - தெய்வத்தன்மையமைந்த, மௌனகுருவாகி . மௌனதேசிகனாகி, வந்து - எழுந்தருளி, கைகாட்டி-கைக்குறிகாட்டி, எனது ஆம்பணி-எனதா கியசெயலை, அறமாற்றி-முற்றுமில்லாமல் நீக்கி, அவன் - அவ்விறைவனது, இன் அருள் வெள்ளத்து - இனிய அருட்கடலில், இருத்திவைத்தாண்டி - அமிழ்த்திவைத்தானடி, சங்கர. எ - று.

13. அருளா லெவையும்பா ரென்றான் - அத்தை, யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன், இருளான பொருள் கண்டதல்லால் - கண்ட, என்னையும்கண்டில னென்னேடி தோழி—சங்கர சங்கர சம்பு.

இ - ள் அருளால் - திருவருளே முன்னிட்டு, எவையும் - எப்பொ ருளையும், பார் என்றான் - நோக்கென்று சொன்னான், அதை அறியாதே - அதனுண்மையையுணராமலே, என்னறிவாலே சுட்டிப் பார்த்தேன் - என் னறிவினால் எதிரிட்டு நோக்கினேன், (நோக்கினவிடத்து) இருளானபொ ருள் - இருள் என்கிற பதார்த்தத்தை, கண்டது கல்லால் - பார்த்ததே யன்றி, கண்ட - (அவ்விருளைப்) பார்த்த, என்னையும் கண்டிலன்-என்னையும் அவ்விடத்துப்பார்த்திலேன், என்னேடி-இது என்ன புதுமையடி. எ - று.

14. என்னையுந் தன்னையும் வேறு - உள்ளத்தெண்ணுத வண்ண மிரண்டற நிற்கச், செய்ததை மோவொரு சொல்லே- அந்தச் சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்லுவேன்- சங்கர சங்கர சம்பு.

இ - ள். என்னையும் தன்னையும் வேறு ஆ - என்னையும் தன்னையும் வெவ்வேறாக, உள்ளத்து எண்ணுதவண்ணம் - மனதில் நினையாதவகை, இரண்டுமறநிற்க - இரண்டென்பதற்றொழிய நிற்கும்படி, சொன்னதுமோ - சொன்னமொழியுமோ, ஒருசொல்லே - ஒருமொழியே, அந்தச்சொல்லால் - அந்த ஒருமொழியினால், விளைந்த - உண்டாகிய, சுகத்தை - இன்பத்தை, என்சொல்வேன் - என்னென்றுரைப்பேன் எ - று.

15. விளையுஞ் சிவானந்த பூமி - அந்த வெட்ட வெளிநண்ணித் துட்டவிருளாங், களையைக் களைந்துபின் பார்த்தேன் - ஐயன், களையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி - சங்கரசங்கர சம்பு.

இ - ள். விளையும் - (இன்பம்) விளையத்தக்க, சிவானந்தபூமி - சிவானந்தபூமியாகிய, அந்தவெட்டவெளி ரண்ணி - அந்தவெறவெளியைப் பொருந்தி, துட்ட இருள் ஆம் - கெட்ட இருள் என்கிற, களைகளைந்து - களையைப்பறித்தெறிந்து, பின் பார்த்தேன் - பிறகு நோக்கினேன், (நோக்கின விடத்தில்) ஐயன் களை அன்றி - இறைவனது அழகையேயன்றி, வேறு ஒன்றும் கண்டிலன் - வேறொருபொருளையும் கண்டிலேன், தோழீ. எ - று.

16. கண்டார் நகைப்புயிர் வாழ்க்கை - இரு, கண்காண நீங்கவுங் கண்டோந் துயிருன், கொண்டார்போற் போனலும் போகும் - இதிற் குணமேது நலமேது கூறாய்நீ தோழி—சங்கர சங்கர சம்பு.

இ - ள். உயிர்வாழ்க்கை - (உடம்பின்கண்) உயிர்வாழ்ந்திருக்கும் வாழ்க்கையானது, கண்டார்நகைப்பு - பார்த்தோர்நகைத்தற் கிடமாம், (ஏனெனில்) இருகண்காண - நம்முடைய இருகண்களும் பார்க்க, நீங்கவும் கண்டோம் - (உயிர்உடம்பைவிட்டு) நீங்கிப்போகவும் பார்த்தோம், தூயில்கொண்டார்போல் போனலும் போகும் - உறங்குவார்போலிருந்து நீங்கினும் நீங்கும், இதில் - இவ்வுயிர்வாழ்க்கையில், குணம் ஏது - நல்லதீர்மையாது, நலம் ஏது - நன்மையாது, நீ கூறாய் - நீ சொல்லாய், தோழீ. எ - று.

17. நலமேது மறியாதவென்னைச் - சுத்த நாதாந்த மோனமா நாட்டந்தந் தேசஞ் சலமேது மில்லாம லெல்லாஞ் - வல்லான், குளாலென் றலைமீது தாக்கினன் தோழி—சங்கர சங்கர சம்பு.

இ - ள் நலம் ஏதும் அறியாத - என்னை - நன்மைசிறிது முணராத என்னை, சுத்தம் - பரிசுத்தமாகிய, நாதாந்தமோனம் ஆம் - நாதமுடிவென்கிறமோன நிலையாகிய, நாட்டம் தந்து - நோக்கத்தைக் கொடுத்து, சஞ்சலம் ஏதும் இல்லாமல் - சலனம் சிறிதுமில்லாமல், எல்லாம் வல்லான் -

சர்வசக்தனுகிய இறைவன், தாளால் - தன்திருவடியால், என்தலை மீது தாக்கினன் - என் சிரத்தின்மேல் பரிசித்தான், தோழீ. எ - று.

தாளால் தாக்கினன் என்றது - திருவடி தீக்ஷையை.

18. தாக்குநல் லானந்த சோதி-அணு, தன்னிற் சிறியவெனைத் தன்னருளாற், போக்குவரவற்றிருக்குஞ் - சுத்த, பூரண மாக்கினன் புதுமைகாண் மின்னே — சங்கர சங்கர சம்பு.

இ - ள். தாக்கும் - பரிசிக்கிற, நல்-சிறந்த, ஆநந்தம் - இன்பஹேது வாகிய, சோதி - ஒளியுருவாகிய கடவுள், அணுதன்னிற் சிறிய என்னை - அணுவினுஞ் சிறியேனுகிய என்னை, தன் அருளால் - தன்கிருபையினல், போக்குவரவு அற்றிருக்கும்-போதல் வருதல் என்பவையற்றிருக்கிற, சுத்த பூரணம் ஆக்கினன் - முழுப்பூர்ணநிலையிலிருக்கப் பண்ணினன், புதுமை - ஆச்சரியம், மின்னே - பெண்ணே. எ - று.

19. ஆக்கியளித்துத் துடைக்குந் - தொழி லத்தனை வைத்து மெள்ளத்தனையேனும், தாக்கற நிற்குஞ்சமர்த்தன்- உள்ள சாக்ஷியைச் சிந்திக்கத் தக்கது தோழி-சங்கரசங்கர சம்பு.

இ - ள். ஆக்கி - சிருஷ்டிசெய்து, அளித்து - காத்து, துடைக்கும் - அழிக்கிற, தொழில் அத்தனைவைத்தும் - தொழிலனைத்தும் தன்னிடத்தில் வைத்திருந்தும், எள் அத்தனையேனும் - எள்ளளவாயினும், தாக்கு அற நிற்கும் சமர்த்தன் - (அவற்றோடு) பற்று அறநிற்கும் சாமர்த்தியமுடைய வன், உள்ள - அவன் இருக்கிற, சாக்ஷியை சர்வசாட்சிரூபத்தை, சிந்திக்கத்தக்கது - நினைக்கத்தக்கது, தோழீ. எ - று.

தாக்கு - சம்பந்தம்.

20. சிந்தை பிறந்தது மாங்கே-அந்தச், சிந்தையிறந்து தெளிந்ததுமாங்கே, எந்த நிலைகளு மாங்கே -கண்ட, யான்ரு னிரண்டற் றிருந்ததுமாங்கே—சங்கர சங்கர சம்பு.

இ - ள். சிந்தை பிறந்ததும் ஆங்கே - மனம் பிறந்ததும் அவ்விடத்தே, அந்தச் சிந்தை - அந்தமனம், இறந்து தெளிந்ததும் ஆங்கே - நசிக்க என்னறிவு தெளிவடைந்ததும் அவ்விடத்தே, எந்தநிலைகளும் ஆங்கே-எந்த நிலைகளும் அவ்விடத்தே, கண்ட - பார்த்த, யான்தான் - நான்தான், இரண்டு அற்று இருந்ததும் ஆங்கே - இரண்டொழிந்து நின்றதும் அவ்வி டத்தே. எ - று.

21. ஆங்கென்று மீங்கென்று முண்டோ-சச்சி, தானந்தசோதி யகண்டவடிவாய், ஓங்கிநிறைந்தது கண்டாற் - பின்ன, ரொன்றென் றிரண்டென் றுரைத்திடலாமோ - சங்கர சங்கர சம்பு.

இ - ள். ஆங்கு என்றும் ஈங்கு என்றும் உண்டோ - அவ்விடத்தென்றும் இவ்விடத்தென்றுமுளதோ. சச்சிதானந்த சோதி - சச்சிதானந்தவொளி அகண்டவடிவாய் - அகண்டரூபமாகி, ஓங்கி நிறைந்தது கண்டால் - உயர்ந்து பரிபூர்ணமாகியிருப்பதைப் பார்த்தால், பின்னர் - அதன்பிறகு, ஒன்று என்று - ஒன்றென்றும், இரண்டு என்று - இரண்டு என்றும், உரைத்திடலாமோ - சொல்லலாமோ எ - று.

22. என்று மழியுநிக் காயம் - இத்தை, யேதுக்குமெய்யென் றிருந்தீ ருலகீர், ஒன்றுமறியாத நீரோ - யம, னேலவந் தாற்சொல்ல வுத்தா முண்டோ — சங்கர சங்கர சம்பு.

இ - ள். இக்காயம் - இந்தச்சரீரம், என்றும் அழியும் - எப்பொழுதும் அழிந்து போகுமியல்புடையதேயாம், இத்தை - இதனை, எதுக்கு-என்ன காரணமாக, மெய்யென்று இருந்தீர் - உண்மை யென்று நினைத்திருந்தீர்கள், உலகீர் - உலகத்தாரே, ஒன்றும் அறியாதநீரோ - ஒன்றையுமுணராத நீங்களோ, யமன் ஓலைவந்தால் - யமனது ஓலைவந்ததானால், சொல்ல - அதற்குவகைசொல்ல, உத்தரம் உண்டோ - மறுமொழியுள்ளதோ.

23. உண்டோ நமைப்போல வஞ்சர் - மல,மூழித்தும்பு மூட லெமெய்யென்று,கொண்டோ பிழைப்பதிங் கையோ-அருட், கோலத்தை மெய்யென்று கொள்ள வேண்டாவோ — சங்கர சங்கர சம்பு.

இ - ள். நம்மைப்போலவஞ்சர் உண்டோ - நம்மைப் போலவஞ்சகர்கள் உளரோ, மலம் ஊறி தும்பும் - மலஞ்சுரந்து துளும்புகிற, உடலசரீரத்தை, மெய்யென்று கொண்டோ - உண்மையென்று கொண்டு தானே, இங்குபிழைப்பது - இவ்விடத்துப்பிழைப்பது, ஐயோ - அந்தோ, அருட்கோலத்தை - திருவருட்கோலத்தை, மெய்யென்று கொள்ளவேண்டாவோ - உண்மையென்று கொள்ளவேண்டாவோ. எ - று.

24. வேண்டா விருப்பும் வெறுப்பும்-அந்த, வில்லங்கத்தாலே விளையுஞ் சனனம், ஆண்டான் உரைத்த படியே - சற்று மசையா திருந்துகொள் அறிவாகிநெஞ்சே—சங்கர சங்கர சம்பு.

இ - ள். விருப்பும் வெறுப்பும் - ஆசையும் நிராசையும், வேண்டா - வேண்டப்படா, அந்த வில்லங்கத்தாலே - அந்த அநர்த்தத்தினாலே, சனனம் விளையும் - பிறவியுண்டாகும், (ஆதலால் அவைகளைவிடுத்து) ஆண்டான் உரைத்தபடியே - ஆண்டவன் சொன்னவண்ணமாகவே, சற்றும் - சிறிதும், அசையாது - சலிக்காமல், அறிவு ஆகி இருந்துகொள் - அறிவுருவமாகியிருந்து கொள்ளாய், நெஞ்சே - மனமே. எ - று.

25. அறிவாரு மில்லையோ வையோ - என்னை, யாரென்றறியாத வங்கதேசத்தில், வறிதேகாமத்தீவிற் சிக்கி-உள்ள, வான் பொருடோற்கவோ வந்தேனென் தோழி - சங்கர சங்கர சம்பு.

இ - ள். அறிவாரும் இல்லையோ - உணர்வாரும் இல்லையோ, ஐயோ-அந்தோ, என்னை - என்னை, யார் என்று அறியாத - யாவரென்றுணராத, அங்கதேசத்தில்-சரீரமாகிய தேசத்தில், வறிதே-பயனில்லாமலே காமத்தீவில் சிக்கி-காமமாகிய தீவினிலகப்பட்டு, உள்ள - என்னிடத்துள்ள, வான் பொருள்-மேலாகியஞானநிதியை தோற்கவோ-இழக்கவோ, நான்வந்தேன்-யான்வந்தேன், தோழீ. எ - று.

26. வந்தவரவை மறந்து-மிக்க, மாதர்பொன்பூமி மயக்கத்திலாழும், இந்தமயக்கை யறுக்க - எனக், கெந்தைமெய்ஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான் - சங்கர சங்கர சம்பு.

இ - ள். வந்தவரைமறந்து - வந்த வரத்தை மறந்து, மிக்க - மிகுதியாகிய, மாதர் - மாதருடையவும், பொன் - பொன்னினுடையவும், பூமி - பூமியினுடையவும், மயக்கத்தில் - மயக்கமாகியகடலில், ஆழும் - அழுந்துகிற, இந்தமயக்கை அறுக்க - இந்தமயக்கத்தைச்சேதிக்க, எனக்கு - என்றனுக்கு, எந்தை - எந்தையாகிய இறைவன், மெய்ஞ்ஞானம் - உண்மைஞானமாகிய, எழில்வாள் - அழகியவாளை, கொடுத்தான் - தந்தருளினன். எ - று.

27. வாளாருங் கண்ணியர் மோகம்-யம, வாதைக்கனலே வளர்க்குமெய் யென்றே, வேளானவனுமெய்விட்டான் - என்னின், மிக்கோர் துறக்கை விதியன்றே தோழி - சங்கர சங்கர சம்பு.

இ - ள். வாள் ஆரும் கண்ணியர் - வாள்போலும் கண்களையுடைய மாதரது, மோகம் - ஆசையானது, யமவாதை - யமவேதனையென்கிற, கனலே - அக்கினியை, வளர்க்கும் - விருத்திபண்ணும், மெய்யென்றே - இதுசத்தியமென்றே, வேள் ஆனவனும் - மன்மதனும், மெய்விட்டான் என்னின்-சரீரத்தை விட்டானென்னுமிடத்து, மிக்கோர் - மேலோர், துறக்கை - அதனைவிடுதல், விதி அன்றே - விதியல்லவோ, தோழீ. எ - று.

28 விதிக்கும் பிரபஞ்ச மெல்லாஞ் - சுத்த வெயின்மஞ்சளென்னவே வேதாகமங்கள், மதிக்கு மதனை மதியார் - அவர், மார்க்கந் துன்மார்க்கஞ் சன்மார்க்கமோ மானே - சங்கர சங்கர சம்பு.

இ - ன். விதிக்கும் - சிருஷ்டிக்கப்படுகிற, பிரபஞ்சம் எல்லாம் - பிரபஞ்சமுழுதும், சுத்தவெயில் மஞ்சள் என்னவே - கடுவெயிலிலிட்ட மஞ்சளென்றே, வேதாகமங்கள் - வேதம் ஆகமம் என்னுமிவைகள், மதிக்கும் அதனை - மதிப்பதை, மதியார் - மதியாதவர்களாகிய, அவர் - அவர்களுடைய, மார்க்கம் - நெறியானது, துன்மார்க்கம் - தீ நெறியே யாம், சன்மார்க்கமோ - நன்னெறியாமோ (நீசொல்லாய்) மானே - பெண்ணே, எ - று.

வெயிலில் இட்ட மஞ்சள் சிறிதும் ஒளிசெய்யாதுபோல, இவர் தீநெறியும் விளங்காதென்பதாம்.

29. துன்மார்க்க மாதர் மயக்கம் - மனத் தூயர்க்குப் பற்றுது சொன்னேன் சனகன், தன்மார்க்கநீதிதிட்டாந்தம்-அவன், றுனந்தமான சதானந்த னன்றே - சங்கர சங்கர சம்பு.

இ - ன். துன்மார்க்கம் - தீநெறியையுடைய, மாதர்மயக்கம் - பெண் கள்மையல், மனம்தூயர்க்கு - மனத்தூய்மையுடையோரை, பற்றுது - தொடராது, சொன்னேன் - சொல்லிவிட்டேன், (இதற்கு) சனகன்தன் - ஜநகமஹாராஜனது, நீதிமார்க்கம்-நீதிநெறியே, திட்டாந்தம் - திருஷ்டாந் தமாகும், அவன் தான் - அவன்றான், அந்தம் ஆன-முடிவான, சதாநந்தன் அன்றே - இடையறாத இன்பத்தையுடையவனல்லவா. எ - று.

சுகர் முதலியோரது சந்தேகத்தை நீக்கினவருதலால், சநகனே இல் லறஞானியரிற் சிறந்தவனாக மதித்தெடுத்துரைத்தார்.

30. அன்றென்று மாமென்று மூண்டோ - உனக், கானந்தம் வேண்டி னறிவாகிச் சற்றேற, நின்றுற் றறியு மெனவே - மறை, நீதியெம் மாதி நிகழ்த்தினன் றோழி-சங்சகர சங்கர சம்பு.

இ - ள். அன்று என்றும் - அல்லவென்றும், ஆம் என்றும் - ஆகு மென்றும், உண்டோ - உளதோ, உனக்கு ஆனந்தம் வேண்டின் - உனக்கு இன்பம் வேண்டியிருந்தால், அறிவுஆகி - அறிவுருவமாகி, சற்றே நின்றுல் - சற்று நிற்பையாயின், தெரியும் எனவே - தெரியலாமென்றே, மறை நீதி - வேதநீதிகளே, எம்ஆதி - எமதுமுதல்வன், நிகழ்த்தினன்-எனக்குச் சொன் னான், தோழீ - ஹேசகீ, சங்கர. எ - று.

அகவல்.

திருவருண் ஞானஞ் சிறந்தருள் கொழிக்கும்
குருவடி வான குறைவிலா நிறைவே
நின்ற வொன்றே நின்மல வடிவே
குன்றுப் பொருளே குணப்பெருங் கடலே
ஆதியு மந்தமு மானந்த மயமாஞ்
சோதியே சத்தே தொலைவிலர் முதலே
சீர்மலி தெய்வத் திருவரு ளதனற்
பார்முத லண்டப் பரப்பெலா நிறுவி
அண்டச முதலா மெண்டரு நால்வகை
ஏழு பிறவியிற் சூழா தோங்கும்
அனந்த யோனியி னினம்பெற மல்க
அணுமுத லசல மான வாக்கையுங்
கணமுத லளவிற் கற்ப காலமுங்
கன்மப் பகுதித் தொன்மைக் கீடா
இமைப்பொழு தேனுந் தமக்கென வறிவிலா
ஏழை யுயிர்த்திரள் வாழ வமைத்தனை
எவ்வுடலெடுத்தா ரவ்வுடல் வாழ்க்கை
இன்ப மெனவே துன்ப மிலையெனப்
பிரியா வண்ணம் மூரிமையின் வளர்க்க
ஆதர வாகக் காதலு மமைத்திட்(டு)
ஒளக மின்றியே தேக நானென
அறிவு போலறி யாமை யியக்கிக்
காலமுங் கன்மமும் கட்டுங் காட்டியே
மேலு நரகமு மேதகு சுவர்க்கமும்
மாறற வகுத்தனை யேலும் வண்ணம்
அமையாக் காதலிற் சமய கோடி
அறம்பொரு ளாதி திறம்படு நிலையிற்
குருவா யுணர்த்தி யொருவர்போ லனைவருந்
தத்த நிலையே முத்தி முடிவென
வாத தர்க்கமும் போத நூல்களும்
நிறைவிற் காட்டியே குறைவின்றி வயங்க
அங்கங்கு நின்றனை யெங்கு மாகிச்
சமயாதீதத் தன்மை யாகி
இன்மையோர் முதலிய யாவரு முனிவருந்
தம்மைக் கெடுத்திட் டெம்மை யாளென
ஏசற் றிருக்க மாசற்ற ஞான
நலமுங் காட்டினை ஞானமி லேற்கு
நிலையுங் காட்டுத லின்னருட் கடனே

இ - ள். திருவருள் ஞானம் சிறந்து - திருவருள் ஞானம் மிகுந்து, அருள்கொழிக்கும் - அருளைப்பொழிகின்ற, குருவடிவான - குருமூர்த்த மாயெழுந்தருளிய, குறைவு இல்லாநிறைவே - குறைவற்ற பரிபூர்ணமே, நின்ற ஒன்றே - அழிடாத ஒருபொருளே, நின்மல வடிவே - மலமற்ற உருவே, குன்றுபொருளே - ஒருகாலும் குறையாத வஸ்துவே, பெரு குணக்கடலே - பெரிதாகிய நற்குணக்கடலே, ஆதியும் அந்தமும் - முதலி னும் இறுதியினும், ஆனந்தமயம் ஆம் - இன்பவுருவான, சோதியே - தே ஜோராசியே, சத்தே - உண்மையே, தொலைவு இல்லாமுதலே - அழிதல் இல்லாத முதற்பொருளே, சீர்மலி - சிறப்புமிக்க, தெய்வம் - தெய்வத் தன்மையுள்ள, திருவருளதனால் - திருவருளினால், பார்முதல் - பூமி முத லாகிய, அண்டப்பரப்பு எல்லாம் - அண்டவிஸ்தீரணத்தை யெல்லாம், நிறுவி - நிலைநிறுத்தி, அண்டசமுதலாம் - அண்டஜமுதலாகிய, எண் தரும் - எண்ணலளவையைத்தந்த, நால்வகை - நான்குவகையாகத்தோன் றுவனவாகிய, ஏழுபிறவியில் - ஏழுபிறப்பில், தாழாது - தங்கியிராமல் ஓங்கும் - அதிகரித்த, அநந்தயோனியின் - முடிவற்றயோனிகளின், இனம் பெறமல்க - இனத்தையடையவும் நிறையவும், கணம்முதல் அளவின் - க்ஷணம்முதலாகிய அளவினைக்கொண்ட, கற்பகாலமும் - கற்பகாலத்தள வும், கன்மப்பகுதி - வினைப்பகுதியின், தொன்மைக்கு ஈடா - பழமைக் கேற்ப, இமைப்பொழுதேனும் - இமைப்பொழுதாயினும், தமக்கு என - தமக்கென்று, அறிவு இல்லா - சுயஅறிவில்லாத, ஏழைஉயிர்த்திரள் - ஏழைகளாகிய ஜீவராசிகள், வாழ - வாழும்படி, அமைத்தனை - அமைத் திருக்கிறாய், எவ்வுடல் எடுத்தார் - எந்தச் சரீரத்தை எடுத்தவர்கள், அவ்வுடல் வாழ்க்கை - அவ்வுடலோடு கூடி வாழும் வாழ்க்கையை, இன் பம் எனவே - சுகமென்று நினைத்தே, துன்பம் இல்லையென - துக்கமில்லை யென்று, பிரியாவண்ணம் - நீங்காவகை, உரிமையின் வளர்க்க - உரி மையோடுவளர்க்க, ஆதரவாக - ஆதரவாய், காதலும் அமைத்திட்டு - ஆசையையும் அமைத்து, ஊகம் இன்றியே - யுக்தியில்லாமலே, தேகம் நான் என - சரீரம் நான் என்று, அறிவுபோல் - ஞானத்தைப்போல அறியாமை இயக்கி - அஞ்ஞானத்தை விளங்கப்பண்ணி, கால்லமும் - காலப் பாகுபாட்டையும், கன்மமும் - வினைப்பாகுபாட்டையும், கட்டும் - அவற் றிற்குரிய நியமத்தையும், காட்டி - காண்பித்து, மேலும் - இன்னமும், நரகமும் - (அவற்றின்பயனுருவாயமைந்த) நரக விசேடங்களையும், மேத குசுவர்க்கமும் - மேன்மைபொருந்திய சுவர்க்க விசேடத்தையும், ஏலும் வண்ணம் - பொருந்தும்வகை, மால் அறவகுத்தனை - மயக்கமறவகுத்தரு ளினை, அமையாகாதலின் - அடங்காத் ஆசையையுடைய, சமயகோடி - சமயத்தொகுதிகளின் உண்மையையும், அறம் பொருள் ஆதி - தர்மார்த்

தம் முதலியவைகளேயும், திறம்படுநிலையின் - உறுதியாகிய நிலைமையால், குருவாயுணர்த்தி - ஆசாரியனுகிவந்து அறிவுறுத்தி, ஒருவர்போல் - ஒருவரைப்போல, அனைவரும் - எல்லாரும், தத்தம் நிலையே - தங்கள் தங்கள் நிலைகளே, முத்திமுடிவுஎன - முத்திமுடிவென்று, வாததர்க்கமும் - தர்க்கவாதங்களும், போதநூல்களும் - அறிவுநூல்களும், நிறைவிற்காட்டி - பூரணமாகக்காட்டி, குறைவு இன்றிவயங்க - குறைவறவிளங்கும்படி, அங்கங்கு நின்றனை - அவ்வவ்விடங்களில் நின்றருளி, எங்கும் ஆகி - எவ்விடத்தும் வியாபித்து, சமயாதீதத்தன்மையாகி - சமயாதீத குணத்தையுடையையாகி, இமையோர் முதல் யாவரும் - தேவர்முதலான யாவரும், முனிவரும் - முனிவர்களும், தம்மைக்கொடுத்திட்டு-தங்களைச் சமர்ப்பித்து,எம்மை ஆள்என - எங்களையாள வேண்டுமென்று, ஏசற்றிருக்க - இளைத்திருக்க, (அவர்களுக்கு) மாசு அற்ற - குற்றமற்ற, ஞானநலமும் காட்டினை-ஞானநிலையாகிய நன்மையையும் காட்டினையும், ஞானம் இல்லேற்கு - ஞானமில்லாதவனுகிய எனக்கு, நிலையும் - என்பரிபாகத்துக்குத்தக்க நிலையையும், காட்டுதல் - காட்டியருளுதல் நின் அருள் கடன் - உன் திருவருளுக்குக் கடன்மையாகும். எ - று.

வஞ்ஞணம்.

அருவென் பனவுமன்றி உருவென் பனவுமன்றி
அகமும் புறமுமின்றி முறைபிற ழாது
குறியுங் குணமுமன்றி நிறைவுங் குறைவுமன்றி
மறையொன் றெனவிளம்ப விமலம தாகி
அசலம் பெறவுயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சபலஞ் சபலமென்று ளறிவினர் காண
ஞானவெளியிடைமேவுமுயிராய், (ஹ)

இ - ள். அருவென்பனவும் அன்றி - அருவங்கள் என்று சொல்லப்படுவனவும் அல்லாமல், உரு என்பனவும் அன்றி - உருவங்கள் என்று சொல்லப்படுவனவும் அல்லாமல், அகமும் புறமும் அன்றி - உள்ளும் வெளியும் அல்லாமல், முறைபிறழாது - கிரமம் தப்பாமல், குறியும் குணமும் அன்றி - இன்ன அடையாளம் இன்னகுணம் என்பதுமில்லாமல், நிறையும் குறைவும் அன்றி-நிறைதலும் குறைதலுமில்லாமல், மறை - வேதங்கள், ஒன்று என விளம்ப - ஒருபொருளென்று சொல்ல, விமலம் ஆகி - நிர்மலமாகி, அசலம்பெற உயர்ந்து - சலனமில்லாமல் ஓங்கி, விபுலம் பெறவளர்ந்து - விசாலமுண்டாகவளர்ந்து, சபலம் சபலம் என்று - நன்மையாகியபேறு நன்மையாகியபேறு என்று, உள் - நினைக்கின்ற, அறிவி

னர் - அறிஞர்கள், காண - காணும்படி, ஞானவெளிஇடை-சிதாகாயத்தினிடத்தில், மேவும் - பொருந்துகின்ற, உயிர் ஆய் - பிராணனுகி. எ - று.

அனலொன் றிடவெரிந்து புகைமண் டிடுவதன்று
புனலொன் றிடவமிழ்ந்து மடிவில தூதை
சருவும் பொழுதுயர்ந்து சலனம் படுவதன்று
சமர்கொண் டழிவதன்றெ ரியல்பின தாகும்
அவனென் பதுவுமன்றி அவளென்பதுவுமன்றி
அதுவென் பதுவுமன்றி எழில்கொடு லாவும்
ஆருநிலையறியாதபடியே, (வ)

இ - ள். அனல் ஒன்றிட - நெருப்புப்பற்ற, எரிந்து - எரியாநின்று, புகைமண்டிடுவது அன்று - புகையிருவது அல்ல, புனல் ஒன்றிட - நீர் பெருக, அமிழ்ந்து - அதனுள்ளழுந்தி, மடிவு இல்லது - அழிதல் இல்லாதது, ஊதைசருவும்பொழுது-காற்று வீசும்பொழுது, உயர்ந்து - மேலெழுந்து, சலனம்படுவது அன்று - அசைவுண்டாவது அல்ல, சமர்கொண்டு அழிவது அன்று - யுத்தத்தினுல் அழிவது அல்ல, ஒரு இயல்பினது ஆகும்-ஒரு இயற்கையுள்ளதாகும், அவன் என்பதுவும் அன்றி - அவன் என்பதுவுமல்லாமல், அவள் என்பதும் அன்றி - அவளென்பதுவுமல்லாமல், அது என்பதுவும் அன்றி - அது என்பதுவும் அல்லாமல், ஆரும் - எவரும், நிலை அறியாதபடி - நிலைமையை அறியாவண்ணம், எழில்கொடு-அழகுகொண்டு, உலாவும் - சஞ்சரிக்கும். எ - று.

இருளென் பதுவுமன்றி ஒளியென் பதுவுமன்றி
எவையுந் தனுளடங்க வொருமுத லாகும்
உளதென் பதுவுமன்றி இலதென் பதுவுமன்றி
உலகந் தொழவிருந்த வயன்முத லோர்கள்
எவருங் கவலைகொண்டு சமயங்களில் விழுந்து
சழலும் பொழுதிரங்கி அருள்செயு மாறு
கூறரியசகமாயையறவே, (வஞ)

இ - ள் இருள் என்பதுவும் அன்றி-இருள் என்பதுவும் அல்லாமல், ஒளிஎன்பதுவும் அன்றி-ஒளிஎன்பதுவும் அல்லாமல், எவையும் - எவ்வகைப்பட்ட பொருள்களும், தன் உள் அடங்க - தன்னுள்ளே ஒடுங்க, ஒரு முதல் ஆகும் - ஒப்பற்றமுதற்பொருள் ஆகும், உளது என்பதுவும் அன்றி-உள்ளது என்பதும் அல்லாமல், இலது என்பதுவும் அன்றி - இல்லது என்பதும் அல்லாமல், உலகம் தொழ இருந்த - உலகங்களெல்லாம் வணங்கும்படி இருந்த, அயன்முதலோர்கள் - பிரமன் முதலானோர்கள், எவரும் - யா

வரும், கவலைகொண்டு - துன்பங்கொண்டு, சமயங்களில் வீழ்ந்து-சமயநெறிகளாகிய குழிகளில் வீழ்ந்து, சுழலும்பொழுது - சுற்றும்போது, இரங்கி-இரக்கஞ்செய்து, அருள்செய்யும் ஆறு-கிருபைபண்ணும் வகை, கூறுஅரிய-சொல்லுதற்கரிய, சகம்மாயை - பிரபஞ்சமாயையானது, அற - நீங்கும்படி,

எனதென் பதையிகழ்ந்த அறிவின் றிரளினின்று
மறிவொன் றெனவிளங்கு முபயம தாக
அறியுந் தரமுமன்று பிறியுந் தரமுமன்று
அசரஞ் சரமிரண்டி லொருபடி யாகி
எதுசந் ததநிறைந்த தெதுசிந் தனையிறந்த
தெதுமங் களசுபங்கொள் சுகவடி வாகும்
யாதுபரமதைநாடியறிநீ, (இ)

இ - ள். எனது என்பதை இகழ்ந்த - எனது என்னும் மமகாரத்தை வெறுத்த, அறிவின் திரளில் நின்றும் - அறிவின் கூட்டத்தில் நின்றும், அறிவுஒன்று என - ஞானம் ஒன்றேஎன்று, விளங்கும் - பிரகாசிக்கின்ற, உபயம் அது ஆக - இரண்டாக, அறியும் தரமும் அன்று - அறியும் தன்மையையுடையதும் அல்ல, பிறியும் தரமும் அன்று - நீங்கும் தன்மையையுடையதும் அல்ல, அரசம் சரம் இரண்டின் - அசரம்சரம் என்னும் இரண்டனுள்ளும், ஒருபடியாகி - ஒரு தன்மைத்தாகி, சந்ததம் - சதாகாலமும், நிறைந்தது - நிறைந்திருப்பது, எது - எந்தப்பொருள், சிந்தனை இறந்தது எது - மனம் இறந்தபொருள்எது, மங்கள சுபம்கொள் - மிகுந்த சுபத்தைக்கொண்ட, சுகவடிவு ஆகும் - ஆனந்தரூபமாகிறது, யாது - எது, (இப்படிப்பட்ட குணங்களையுடையதாகிய) யாது - எது, பரம் - பரம்பொருளோ, அதை - அந்தப்பொருளை, நீ நாடிஅறி - நீ விரும்பி உணரக்கடவாய்.

பருவங் குலவுகின்ற மடமங்கை யர்தொடங்கு
கபடந் தனில்விழுந்து கெடுநினை வாகி
வலையின் புடைமறிந்த மறியென்ற வசமுண்டு
வசனந் திறமுமின்றி அவரித ழூறல்
பருகுந் தொழிலிணங்கி யிரவும் பகலுமின்சொல்
பருகும் படிதுணிந்து குழலழ காக
மாலைவகை பலசூடியுடனே, (இஈ)

இ -ள் பருவம் குலவுகின்ற - மங்கைப் பருவத்திலில் விளங்குகிற, மடமங்கையர் தொடங்கு - இளம் பெண்கள் ஆரம்பிக்கின்ற, கபடந்தனில் விழுந்து - வஞ்சகமார்க்கத்தில் விழுந்து, கெடுநினைவு ஆகி - கெட்ட எண்

ணத்தையுடையையாகி, வலையின் புடைமறித்த - வலையினிடத்தகப்படுத் தப்பட்ட, மறிஎன்று - மான்போன்று, அவசமுண்டு - பரவசப்பட்டு, வசநந்திரமும் இன்றி - மொழியில் உறுதியில்லாமல், அவர் - அந்தப்பெண் களுடைய, இதழ் ஊறல் - அதரசாமிர்தத்தை, பருகுந்தொழில் - உண் ணுந்தொழிலுக்கு, இணங்கி - இசைந்து, இரவும் பகலும் - அல்லும் பக லும், இன்சொல் - அவரது மதுரவசநாமிர்தத்தை, பருகும்படி, தணிந்து - பானம் பண்ணநிச்சயித்து, குழல் அழகு ஆக - அவரது கூந்தலுக்கு அழ குண்டாம்டி, பலமாலைகைசூடி - பலமலர்மாலை வகைகளைத் தரித்து, உடனே - உடனே. எ - று.

பதுமந் தனையிசைந்த முலையென் றதையுகந்து
வரிவண் டெனவுழன்று கலிலென வாடுஞ்
சிறுகிண் கிணிசிலம்பு பூணதண்டை கண்முழங்கும்
ஒலிநன் றெனமகிழ்ந்து செவிகொள நாசி
பசுமஞ் சளின்வியந்த மணமுந் திடமுகந்து
பவமிஞ் சிடவிறைஞ்சி வரிசையி னூடு
காலின்மிசைமுடிசூடி மயலாய், (ஹ)

இ - ள். பதுமம் தனையிசைந்த - தாமரையரும்பை யொத்த - முலை என்று - ஸ்தனமென்று, அதை இகந்து - அதனைவிரும்பி, வரிவண்டு என - ரேகைகளையுடைய வண்டுபோல, உழன்று - அதைச்சூழ்ந்து அலைந்து, கலில் என ஆடும் - கலில் என்று ஒலிக்கும்படி அசைந்தாடுகிற, சிறுகிண்கிணி - சிறிய கிண்கிணிகளும், சிலம்பு - சிலம்புகளும், பூண - அலங்காரிக்கப்பட்ட தண்டைகள் - தண்டைகளும், முழங்கும் - சத்திக்கிற, ஒலி - தொனி, நன்று என்ன - இன்பமென, மகிழ்ந்து - களிகூர்ந்து, செவிகொள - செவி யேற்க, நாசி - மூக்கானது, பசுமஞ்சளின் - பசுமையாகிய மஞ்சளினது, வியந்த - புகழத்தக்க, மணமும் - பரிமளத்தையும், திடம் - அதின் உறுதி யையும், உகந்து - விரும்பி, பவம் மிஞ்சிட - பாவம் அதிகரிக்க, இறைஞ்சி - வணங்கி, வரிசையினூடு - வரிசையாய், காலின்மிசை - அவர்களுடைய காலின்மீது, முடிசூடி - சிரம் வைத்து, மயல் ஆய் - மயக்கங்கொண்டு. எ - று

மருளுந் தெருளும்வந்து கதியென் பதைமறந்து
மதனன் சலதிபொங்க விரணமதான
அளிபுண் டனவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சுரதஞ் சுகமிதென்று பரவசமாகி
மருவுந் தொழின்மிகுந்து தினமுந் தினமும்விஞ்சி
வளரும் பிறை குறைந்த படிமதி சோர
வானமதெனமேனி திரையாய், (ஹஹ)

இ - ள். மருளும் தெருளும்வந்து - மயக்கமும் தெளிவுமுண்டாகி, கதியென்பதைமறந்து - நற்கதியென்பதை மறந்து, மதனன்சலதிபொங்க-காமக்கடல்பொங்க, இணைமதான - ரணமாகிய, அளிபுண்தன்னை - அளிந்தபுண்ணை, வளைந்து - சூழ்ந்து, வீரல்கொண்டு-வீரலினால், உற அளைந்து-மிகவும் பரிசித்து, சுரதம் இது - புணர்ச்சியாகிய இது, சுகம் என்று-இன்பமென்று, பரவசம் ஆகி - பரவசப்பட்டு, மருவும் தொழில்மிகுந்து - புணருந்தொழில் அதிகப்பட்டு, தினமும் தினமும்-நாள்தோறும், விஞ்சிவளரும் மிஞ்சிவிருத்தியடைகின்ற, பிறை - சுதிரன், குறைந்தபடி - கலைகுறைந்தாற்போல, மதிசோர - அறிவு சோர்வடைய, மேனி - சரீரம், வானரம் என - குரங்கின் சரீரம் என்னலாம்படி, திரை ஆய் - திரைந்து.

வயதும் படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வரலுஞ் செயலழிந்து ளிருமலு மாகி
அனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் கலைகளின்று சரியென நாடி
மனையின் புறவிருந்த வினமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன்வரும் வேளை
ஏதுதுணை பழிகாரமனமே. (க)

இ - ள். வயதும்பட-வயசும் முதிர்ந்துவர, பிணியும்-(அடங்கிக்கிடந்த) வியாதிகளும், எழுந்து-மேலெழுந்து, திமிதிமி என்று வரலும்-திமிதிமி என்று உற்சாகத்தோடு வருதலும், செயல் அழிந்து - செய்கையற்று, உள் - உள்ளே, இருமலும் ஆகி - இருமலும் உண்டாகி, அன்னமும் செல்லுதல் இன்றி - அன்னமிரங்குதலும் இல்லாமல், விழியும் சுடர்கள் இன்று - கண்களும் ஒளியுடையன அல்ல, முகமும் கலைகள் இன்று - முகத்திலும் அழகில்லை, சரிஎனநாடி - முடிவுதானென்று ஆலோசித்து, மனை - மனைவியும், இன்பு உற இருந்த இனமும் - சுகமுண்டானபோது அநுபவிக்க இருந்த சுற்றமும், குலைகுலைந்து-கட்டுக்குலைந்து, கலகம்செய்ய - பேரொலிசெய்ய, இருண்டயமன் - கருநிறத்தையுடைய கூற்றுவன், வரும்வேளை-நம்மைநாடிவருங்காலத்தில், துணை ஏது-நமக்குத்துணையாய் நின்று காக்கக்கடவது யாது, பழிகாரமனமே-எனக்குப்பழியையுண்டாக்குகிற நெஞ்சமே. எ - று

தாயுமானசுவாமிகள்பாடல்

மூலமும் உரையும்

முற்றிற்று.

அருள்வாக்கிய அகவல்.

இது தாயுமானசுவாமிகளுடைய

மாணக்கராகிய

அ ரு ணை ய ரென் ப வர்

மேற்படி சுவாமிகளைத் துதிசெய்தது.

திருவளர் கருணைச் சிவானந்த பூரண
மொருவரு மறியா வொருதனிச் சித்து
நவந்தரு பேதமாய் நாடக நடித்துற்
பவந்தனை நீக்கிப் பரிந்தருள் பராபரங்
கண்ணுங் கருத்துங் கதிரொளி போல
நண்ணிட வெனக்கு நல்கிய நன்மை
யொன்றுரைப் பலவா யொப்பிலா மோனக்
குன்றுரைப் நிறைந்த குணப்பெருங் குன்ற
மண்ணையும் புனலையும் வளியையும் கனலையும்
விண்ணையும் படைத்த வித்தில்லா வித்து
பந்த மனைத்தையும் பாழ்பட நூறியென்
சிந்தையுட் புகுந்த செழுஞ்சுடர்ச் சோதி
விள்ளொணு ஞானம் விளங்கிய மேலோர்
கொள்ளாகொண் டுண்ணக் குறைவிலா நிறைவு
தாட்டா மரைமலர்த் தாணினைப் பவர்க்குக்
காட்டா வின்பங் காட்டிய கதிநிலை
வாக்கான் மனத்தான் மதித்திட வரிதென
நோக்கா திருக்க நோக்கிய நோக்க
மாதியா யறிவா யகண்டமா யகண்ட
சோதியாய் விரிந்து துலங்கிய தோற்றம்
பரவெளி தன்னிற் பதிந்தவென் னுளத்தின்
விரவி விரவி மேற்கொளும் வெள்ளஞ்
சுட்டுக் கடங்காச் சோதி யடியார்
மட்டுக் கடங்கும் வான்பெருங் கருணை
யெல்லைக் கடங்கா வேகப் பெருவெளி
தில்லைப் பொதுவிற் றிருநடத் தெய்வம்

வாதவூ ரெந்தையை வரிசையாய் விழுங்கும்
போதவூர் மேவு கர்ப்பூர விளக்கு
சுகரை யகண்டத்துத் தூவெளி யெல்லாந்
திகழவே காட்டுஞ் சின்மய சாக்ஷி
செழுந்தமி ழுப்பரைச் சிவலிங்க மாகி
விழுங்கிய ஞான வித்தக வேழ
மெழிறரு பட்டினத் திறைவரை யென்று
மழிவிலா விலிங்க மாக்கிய வநாதி
சாந்த பூமி தண்ணருள் வெள்ள
மார்ந்த நீழ லசையாக் கசனம்
பரவுபார் நெஞ்சிற் பரவிய மாட்சி
யிரவுபக லற்ற வேகாந்தக் காட்சி
யாட்சிபோ லிருக்கு மகிலந் தனக்குச்
சாக்ஷியா யிருக்குந் தாரகத் தனிமுதல்
ஆணும் பெண்ணு மலியுமல் லாததோர்
தாணுவாய் நின்ற சத்தாந தனிச்சுடர்
எள்ளு மெண்ணெயு மெப்படி யப்படி
யுள்ளும் புறம்பு மூலாவிய வொருபொருள்
அளவிலா மதந்தொறு மவரவர் பொருளென
வுளநிறைந் திருக்கு மொருபொற் பணிதி
துள்ளு மனப்பேய் துடிக்கத் தறிக்கக்
கொள்ளு மோனவாள் கொடுத்திடு மரசு
பெரிய பேறு பேசாப் பெருமை
யரிய வுரிமை யளவிலா வளவு
துரிய நிறைவு தோன்று வதீதம்
விரியுநல் லன்பு விளைத்திடும் விளைவு
தீராப் பிணியாஞ் செனன மறுக்க
வாரா வரவாய் வந்த சஞ்சீவி
ஆலைக் கரும்புபா கமுதக் கட்டிநீள்
சோலைக் கனிபலாச் சுளைகத லிக்கனி
பாங்குறு மாங்கனி பாறேன் சருக்கரை
யோங்குகற் கண்டுசேர்த் தொன்றாய்க் கூட்டி
அருந்திய ரசமென வறிஞர் சமாதியிற்
பொருந்திய வின்பம் பொழிசிற்சு கோதய

மெங்கணு கிறைந்த வியல்பினை யெனக்குச்
செங்கையால் விளங்கத் தெரித்தமெய்த் தேசிகன்
தன்னையறி வித்துத் தற்பர மாகி
யென்னுளத் திருந்தரு ளேக நாயகன்
அடிமுடி யில்லா அரும்பொரு டனக்கு
மூடி யடி யிதுவென மொழிந்திடு முதல்வன்
மெய்யலான் மற்றவை மெய்யல வெல்லாம்
பொய்யென வறியெனப் புன்னகை புரிந்தோன்
அருளும் பொருளு மபேதமா யிருந்து
மிருதிற னென்னு மியலுமுண் டென்றோன்
அருளுனக் குண்டேலருளும் வெளிப்படும்
பொருண்மயந் தானே பொருந்துமென் றுரைத்தோன்
சத்தசத் திரண்டு தன்மையுந் தானே
யொத்தலாற் சதசத் துனக்கென வுரைத்தோன்
ஆணவ மருவிடி னருளுரு தென்னக்
காணரு நேர்மையாற் காணவே யுரைத்தோன்
சென்மமுள் ளளவுந் தீரா திழுக்கும்
கன்னம் விடாதெனக் காட்டிய வள்ளல்
உளதில தெனவு மூறுதலான் மாயை
வளமில தெனவும் வகுத்தினி துரைத்தோன்
இல்லறத் திருந்து மிதய மடக்கிய
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்
துறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கென்
றறவகை யறியா னஞ்ஞானி யென்றோன்
இறவா மனந்தா னிறக்க வுணர்த்திப்
பிறவா வரந்தரும் பேரறி வாளன்
அத்தன தருளா லனைத்தையு மியக்குஞ்
சுத்தமா மாயையின் றோற்றமென் றுரைத்தோன்
இருண்மல மகல விசைந்ததி லழுத்தும்
பொருளருட் டிரோதைப் பொற்பெனப் புகன்றோன்
வீறு சிவமூதல் விளம்பிய படியே
யாறு மனுதியென் றறிஞருக் குரைப்போன்
கொல்லா விரதங் குவலயத் தோர்க
ளெல்லாம் பெறுமினென் றியம்பிய தயாகிதி
தருமமுந் தானமுந் தவமும் புரிபவர்க்
குரிமையா யவரோ டுறவு கலப்பவன்
தன்னுயிர் போலத் தரணியின் மருவிய
மன்னுயி ரனைத்தையும் வளர்த்திடும் வேந்தன்
களவுவஞ் சனைகள்செய் கருமிக டமக்குந்

தெளிவுவந் தறவருள் செய்திடுந் திறத்தோன்
தான்பெறும் பேறு சகமெலாம் பெறவே
வான்பெருங் கருணை வழங்கிய மாரி
தஞ்சமென் றடைந்த தாபதர் தம்மை
யஞ்சலென் றருளு மறிஞர் சிகாமணி
சிவகோ டிகளுஞ் சித்தர்கோ டிகளும்
யாவரும் புகழ யாவையு முணர்ந்தோன்
யானென தென்னு விறைவனெம் பெருமான்
ரூனவ ஞகிய தலைவனெங் கோமா
னருண கிரியார்க் காறு முகன்சொலும்
பொருணல மல்லது பொருளென மதியான்
பூத முதலாப் பொலிச்திடு காத
பேதமுங் கடந்த பெருந்தகை மூர்த்தி
மூலா தாரமும் முதலாயுள்ள
மேலா தாரமும் வெறுவெளி கண்டவன்
மண்ட மூன்றிலு மன்னிய வுருவிலுங்
கண்டவை யத்திலுங் கடவுளாய் நின்றோன்
பகர்சம யத்தொறும் பரமே யிருந்து
சகாடம் புரியுந் தொழிலெனச் சொன்னேன்
பேதவ பேத பேதா பேத
போத மிதுவெனப் புகன்றிடும் புண்ணிய
னதுநா னெனவே யாற்றிடு மனுபவஞ்
சதுர்வே தாந்தத் தண்மையென் றுரைத்தோ
னல்லும் பகலு மறிவா னோர்க்குச்
சொல்லும் பொருளுஞ் சுமையெனச் சொன்னேன்
சுதனே குருவாஞ் சுவாமிநா யகற்கெனி
னதிக மெய்ஞ்ஞான மல்லவோ வென்றே
னேசயோ கத்துரு நிருபரெல் லாந்தொழு
மீசாஜயோ கத்திறை யீசாஜயோ கத்தான்
பொறுமை தெளிவு புனித வாசார
மறுவிலா வண்மை வார மியற்கை
தண்ணம்மர் சாந்தந் தயங்கிய கீர்த்தி
யெண்ணெண் கலைபயி னிலையிலாக் கல்வி
நல்லு விரக்க நடுநிலை சத்திய
மில்லே யென்னு மெவர்க்குந் தருங்கொடை
நற்குண னெல்லா நண்ணிய பெருந்தகை
சிற்குண வாரி திருவருட் செல்வன்

கரமே லெடுத்துக் கருத்துற வணங்கிப்
பரமே யுனக்குப் பரமெனப் பகர்ந்தோ
ஞலடி மேவு மரசினை யடித்தே
சீலமெய்ஞ் ஞானந் தெளிந்தன னென்னவுஞ்
சித்த மௌனி திடசித்த மாக
வைத்த நிலையின் வளர்ந்தன னெனவு
மூலன் மரபின் முளைத்த மௌனிதன்
பாலன்யா னெனவும் பரிவொடும் பகர்ந்தோன்
வடமொழி யியற்கையின் மகிமையை யுணர்ந்து
திடமுற மும்பொருட் டிறத்தையுந் தெளிந்து
கண்டமு தென்னக் கனிரச மென்னத்
தண்டமிழ் மாரி தன்னைப் பொழிந்து
சித்தியு முத்தியுஞ் சிறந்தருள் கொழிக்கு
நித்திய நிரஞ்சன நிராலம்ப நிறைவைப்
பாடியு நாடியும் பணிந்தெழுந் தன்பா
லாடியு மரற்றியு மகங்குழை வெய்தியு
முடலங் குழையு வுரோமஞ் சிலிர்ப்பப்
படபடென் றுள்ளம் பதைத்துப் பதைத்துப்
பாங்குறு நெட்டுயிர்ப் பாகிப் பரதவித்
தேங்கி யேங்கி யிரங்கி யிரங்கி
யோய்ந்த பம்பரம்போ லொடுங்கியே சிறிது
மேய்ந்த விழிக ளிமைப்பது மின்றிச்
சோர்ந்து சோர்ந்து துவண்டு துவண்டுமெய்
யார்ந்த வன்போ டவசமுற் றடிக்கடி
யுண்ணெக் குறவே யுருகியே சற்றுத்
தண்ணமர் மொழியுந் தழுதழுத் திடவே
யுள்ளும் புறம்பு மொருமித் திருகி
வெள்ள நீர்போல் விழிநீர் பெருக்கிக்
கன்று பசுவைக் கருதிக் கதறிச்
சென்றுசென் றோடித் திகைப்பது போல
வெண்புநெக் குடைய விருகரங் குவித்துப்
புன்புலால் யாக்கை பொருந்தா தினியென
வுணர்ந்துணர்ந் தன்பா யுவகைமேற் கொண்டினிக்
கணம்பிரி யேனெனக் கருதியே குறித்துத்
திருவுரு வெல்லாந் திருநீ றிலங்க
விருகர நளின மியன்முடி குவித்துப்
பூரண சந்திரன் போலொளி காட்டுக்

காரண வதனங் கவின்குறு வெயர்வுற
வீளநிலா வெனவே யிலங்கிய சிறுநகை
தளதள வென்னத் தயங்கி யெழில்பெற
வித்தன்மை யெல்லா மிசைந்து மிவனருள்
சித்தெனச் சிவகதி தேர்ந்தவ ருரைப்பப்
பாத்திர மாடப் பரிவுட னுடிச்
சாத்திரங் காட்டித் தயவுசெய் தருளும்
வல்லவ னெனவே மன்னுயிர்க் காக
வெல்லுலயி லன்ப னிவனென வீளங்கி
மீனவுலகத் தியற்கை பொய் யென்றே
ஞானநூன் மெய்யென நவின்றினி திருந்திக்
கேவல சகலங் கீழ்ப்பட மேலாய்
மேவருஞ் சுத்த மெய்யினை நல்க
வருளே வுருவுகொண் டவனியில் வந்த
பொருளே யிவனெனப் பொலிந்திடும் புனிதன்
சைவஞ் சிவனுடன் சம்பந்த மென்பது
மெய்வளர் ஞானம் விளங்குமென் றிசைத்தோன்
கதிர்விழி யொளியுறக் கலத்தல்சித் தாந்த
விதிமுறை யாமென விளம்பிய மேலோன்
முடிவினி லாகம முறைமையி னுண்மையை
யடியரைக் குறித்துரைத் தருளிய வண்ணல்
சிதம்பர நேர்மை திறமா வுரைத்திறை
பதம்பர வெனப்பகர் பரமமெய்ஞ் ஞானி
முத்திபஞ் சாக்கிர முறைமையி லயிக்கியஞ்
சத்திய மிதுவெனச் சார்ந்த்வர்க் குரைத்தோ
னஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென
னெஞ்செழுத் தியருரு நீதி மாதவ
னெல்லா நிறைந்த வீறைவன் செயலெனக்
கல்லா வெனக்குங் கருணைசெய் கடவுள்
குருவரு ளாலே கூடுவ தல்லாற்
றிருவரு ளுருதெனத் தெரிந்திடவுரைத் தோன்
குருவரு வருளெனக் கொண்டபின் குறையாப்
பொருண்மய மாமெனப் புகன்றிடு போத
னெந்தமூர்த் திகளோ டெழிற்குரு வடிவெனச்
சிந்தையிற் றியக்கறத் தேர்ந்தவர்க் குரைத்தோன்
சதாசிவ மென்றபேர் தான்படைத் ததுதா
னெதாவதே பொருளென் றறிந்தெடுத் துரைத்தோன்

கல்லானே கன்னல் கவர்ந்திடச் செய்தவ
னெல்லாம் வல்லசித் தெம்மிறை யென்றே
னெவ்வுயிர் தோறு மிறைமே வியதிறஞ்
செவ்விய பிரம்படி செப்பிடு மென்றே
னெவ்வண மெவரெவ ரிசைத்தன ரவரவர்க்
கவ்வண மாவனெம் மானென வறைந்தோ
னொருபாண னுக்கே யொருசிவ னுட்படின்
வருமடி யார்திறம் வழுத்தொணு தென்றேன்
சிவனடி யாரைச் சிவனெனக் காண்பவ
னெவனவன் சிவனே யென்றெடுத் துரைத்தோன்
விருப்பு வெறுப்பினே வேரறப் பறித்துக்
கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோ
னிருசொல் லுரையா தியானின்ப மெய்த
வொருசொல் லுரைத்த வுயர்குண பூதர
னத்துவா மார்க்க மாறையு மகற்றித்
தத்துவா தீதத் தன்மையைத் தந்தோன்
றிருமகண் மருவிய திகழ்வள மறைசையில்
வருமுணர் வாளன் மருளிலா மனத்தா
னெண்ணிய வெண்ணமெல் லாந்தெரிந் தெனக்குத்
தண்ணருள் செய்தவன் முயு மானவ
னொருமொழி பகர்ந்த வுதவியா லவன்ற
னிருபத மும்போ திறைஞ்சிவாழ்த் துவனே.

மூற்றிற்று.

சென்னை சூஊ, ஸன் ஆப் இந்தியா பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.